பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய

சில்லரைக்கோர்வை.



P. N. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

வித்தியா ரத்நாகரம் பிரஸ்,

சென்னை.

இதன் விலை] 1935. [ரூபா 8-0

அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது ாதெனில், பதினெண்சித்தர்கள் பாடிய வைத்திய சில் ைக்கோர்வை என்னும் இந்நூலை பலர் அச்சிட்டிருப் து யாவருக்கும் தெரிந்திருக்கலாம். அதில் அநேக ிழைகளும் விளங்காமலும் சொற்கள் மாறியும் குற்றங் றைகளும் அநேகம் இருந்ததை நன்கு கவனித்து தற்கேற்ற அட்டவணைகளும் ஏற்படுத்தி வைத்தியர் ளுக்கு நன்கு விளங்கும்படி புதிதாக அச்சிட்டு வெளிப் டுத்தியிருக்கிறது.

அட்டவணை.

பக்கம்.

பக்கம்.

சில்லரைக்கோர்வை அட்டவணை முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள் பாடிய

வைத்திய

சில்லரைக்கோர்வை.

விநாயகர் ஸ்தோத்திரம்.

ஆனைமுகவன்பாதம் முருகன்பாதம்
அத்தியுரித்திடைதரித்த அய்யர்பாதம்
வானையுமையாள்பாதம் மால்தன்பாதம்
வயிரவர்தன்பாதம் மஹாலட்சுமிபாதம்
சானனையநாதாக்கள் ரிஷிகள்பாதம்
கமலத்திவ்வீற்றிருக்கும் வாணிபாதம்
கோனனையமுருமுனிதன் பாதம்போற்றி
கூறுகிறேன்பதினெண்பேர் கோர்வைதானே.

தேவர்சபையானவர்கள் சூழ்ந்திருக்குநாளில்
திருநடனகலைமாது வதனமதிதிலக
ஆவலுடன்தேரையருங் கமலமுனியாரும்
அகமகிழஅனைவர்களும் மிகநலமதாக

நாவதனுல்புகன்றதிவை நரர்கள்பிழைப்பாக
நயனவொருபெரியோர்கள் நாதனருளாலே
காவலணிஅகண்டபரி பூரணங்கைக்கொண்டு
கலைஞானந்தெளிந்துணர்ந்த சித்தர்தானே. 1

நந்தீஸ்வரர் பாடல்.

சித்தர்கள்பாடிய தொண்டிச்சிந்து.

காரணமனோன்மணியைக்-கருத்தில்வைத்து, கவன முடன்றொழுது போற்றியேதான், ஆரணத்திலுள்ள வனுக்குள் - தேககுணத்தை, ஐந்துவிதசொற்படியே தேர்ந்துரைசெய்வேன், வாரணத்தின் செய்கையது போல் - துகைவகையாய், வாழ்த்துதலுண்டாகநிதம் ஆழ்ந்தகருத்தாய், பூரணத்திற்றேர்ந்தகுருவாய்-நந்தீச ரிதோபுகன்றிடுவேன் நாடித்தெரிந்திடவே. 2

தெரியவேதானுரைக்கிறேன் - வாதாதிபனை, தேர்ந் துகொண்டுபண்டிதர்கள் நேர்ந்துசெய்யே, பிரியமாய் கையைதொடுக்கில் - மூன்றுவிரலில், பிரபலித்தோர் நரம்புயோர்க்கனவோடும், சரிவரயில்லையாகில் - பிசகென் று, சார்வார்களேபெரியோர் நாட்டமுடனே, அறியவே காக்கையைப்போலே-துள்ளிகுதித்து, ஆகாரமுமற்று மூர்க்கநடையானவன்றே. 3

அகத்தியமகாமுனிவர் பாடல்.

நடைதனில்வேகமுடனே-கதரியேதான், நட்டனைக ளாய்சிதறிபொட்டெனவேதான், தடையில்லாவட்டை பாம்பைப்போல்-நெளிநெளிந்து, தத்திதத்திசுழித்தி டும் மத்திபமாய், பண்டியெனுவேகம்போல-தொடுத்து நின்ற, பாகமதைக்கண்டுகொள்வீர்தேகநிலையில், விடை சொல்லப்போமோதான்-வகஸ்தியர், விற்பனவிவேகந் தெளிந்துரைத்தனனே. 4

மச்சமுனிவர் பாடல்.

தெளியவேதானுறைக்கிறேன் - அன்னமதுபோல், துள்ளிதுள்ளிசாயலுடன் மெள்ளநடையாய், நடிவில் லாப்படியேதான்-அசனநாடி, நகைத்துப்படபடென்று மிகமுடுக்கி, விழியதுமஞ்சள்வர்ணமாம் - பொசிந்திருக் கும், வித்தைமிகுத்தேவினவாய் மெத்தப்பிரட்டும், களிப்பிலாதிருக்குமென்றே - மச்சமுனிவர், காட்டினு ரிதுவிதம் பாட்டிசைதனிலே. 5

பிடிநாக்கீசர் பாடல்.

இசைந்துமுடக்குஞ்சுழிக்கும் - கைகால்மிகவே, ஏற் கனவேதான்கறுக்கும் மேனிகளெல்லாம், வசமில்லாக் குணமாக-சாம்பல்பூர்த்து,வடைத்திடும்நாசியதுயெடுத் துலர்ந்து, திசைதனிலுள்ளபேர்கள் - சாஸ்திரத்தை,

தினந்தினமும்படித்துமனதில்வைத்து, நிசம்தாய்கற்றுணரவே-பிடிநாக்கீசர், நேர்ந்தபடிபாங்குடனே தேர்ந்திடச்சொன்னேன். 6

தன்வந்திரியார் பாடல்.

பாங்குடனேசொல்வதைநீங்கள்-நிலையாய், பத்திவிசுவாசமுடன் யுக்தியாய்க்கேட்பீர், ஏங்கியேகண்ணைத்திறந்து - முழித்திருப்பான், ஏட்டில்வரைந் தேபுகலுட்டினிலுண்டோ, தாங்குவரோ இப்புவியாளர்-இரவலர்தன், தத்வபதம்போற்றிடுவோம்மெத்தவினவாய், சாங்கோபாங்கமதாய்- தயவாய், தன்வந்திரியார்உரைத்திடுகுணங்கள் தோணிதற்கென்றே. 7

புலத்தியர் பாடல்.

தோணுதற்குதவாதராஜன் - பலாபலத்தை, சொல்லுதற்குவெல்லுதற்கு பேர்களுண்டோ, காணுதற்கு ஞானக்கண்ணினால் - கருத்துணர்ந்தோர், கண்டவர்கள் விண்டிலர்கள் மண்டலத்திலே, ஆணவத்தை நீக்கிச் சுயம்பில் - முப்பாழ்கடந்து, ஆசைவைத்துஞாபகமாய் பூசைகள்செய்வாய், வேணுமென்ற புலத்தியரும்-விபரீதமாய், வேதமுறைநற்குணச்சொல்நாடியதென்றே.

புசுண்டமூர்த்தி பாடல்.

குணம்பெறவேபித்தராசனின்-வயணமதை, குறிப்புடன்சாற்றுகின்றேன் விரிவுடனே, மனமதைதிட்ட

வட்டமாய் - நிலைப்படுத்தி, மணிமந்திர அவிழ்மதனை பணிந்துசெய்வீர், தனமதுதந்துதொழுவார் - வைத்தியர்க்கு, தத்துவமுங்கைபரீட்சை மெத்தவும்வேணும், இனமுள்ளயூகையுடனே - புசுண்டமூர்த்தி, வர்த்திதை யடுத்துணா தேர்ந்துரைத்ததே. 9

கருவூரார் பாடல்.

தேர்ந்திடச் சொல்கிறேன்கேள் - ஐயருட, திருவடிப்பாதச்செயல் கிருபையினல், சார்ந்திடுமுன்விரலின் கீழ் - நடுவில்தொட்டால், சரசம்போல்பட்டுபட்டுவிரலடிக்கும், ஆர்ந்திடஆனைகுந்தியின் - பட்டணத்தின், வரசனில்லாநடைதை யரசாளுகைசெய்யும், நேர்ந்திடும் பேய்க்காற்றலைபோல் - கருவூரார், நிற்குமென்றுபித்தமென கற்பித்ததென்றே. 10

திருமூலர் பாடல்.

என்றவித வூனிலாகாக்கை - யெழும்புமாப்போல், யேத்தியேதான்தொங்கிதொங்கி சுத்துமானைப்போல், நன்றதுபோல்துள்ளுமெள்ளவே-உலாவுகின்ற, நாட்டமதைச்சொல்லரிது பூட்டகமென்பர், கன்றிதமாவெல்லயெவர்க்கும்-வெகுகடினம், காரியத்தைப்பின்புகல பாரிதமென்போல், ஒன்றினுக்குவொன்றுபேதமாம் - திருமூலர், யுண்டநடையான திசைநன்மையாய்சொன்னேன்

சட்டமுனியார் பாடல்.

கடக்கையிலே தேரையைப்போலே-கள்ளமதுற்ற, நட்டணைகளாகவேதான்வீட்டில்போய்விழும், திடக்கை யில்லாமல்வெகுவாய் - நாவரண்டு, தேறுதலில்லாமல் கண்ணை சொருகியேமூடும், மடமதுபோலவெருண்டு- கண்புகைச்சல், மருண்டதுசூழ்ந்துகொண்டு யிருண்டி ருக்கும், இடமெனுஞ்சரீரமதில் - நீரில்லாமல், உலரு மென சட்டமுனி விளம்பினனே. 12

ரோமரிஷியார் பாடல்.

உலர்ந்திடும் மேனிகளெல்லாம் - பிணங்கியேதான், உள்ளங்கையானதிலேகிள்ளிப்பார்க்கினும், பலனில்லா செய்கையினவாய்-சரீரத்தில், பண்புடனேநீரில்லாமல் அன்பற்றினிற்கும், பெலனதுசெய்குறிகளும்-கண்ணு லேயுற்று, பேசுகின்றவாய்மொழியைநேசமாய்கண்டு, கலனிதுவென்றுவறிந்து-ரோமரிஷியார், கட்டுத்தேன் மிக்கவேதான் விட்டுரைத்திதே. 13

விட்டுரைப்போய்பித்தகுணத்தால் - பலந்தை, வெ டுத்துயெழுந்து சொல்வான் படுத்திடாமல், நட்டுவனு ரால்பாட்டில்படித்து-கட்டுதிட்டஞ், சொல்லினபடியே பண்டிதர்கள், கர்த்தனிடபாதமதை-மெத்தவும், போற்

றிதொட்டுவிடுசித்தரவிழ்தங், கொங்கணரும்-தொடர்ச்சியாய், மிகசொன்னேனடவுடனே. 14

போகர் பாடல்.

மிகசொன்னேன்பித்தகுணத்தை-வினவியே, விரித்திதைப்பேசிடுவோர் தெரிந்திடவே, செகத்தினில் மாயோர்கள்-நாடிதனை, செப்பமுடன் பாடிவைத்தார் தப்பிதமில்லை, அகத்தினின்கெருவம்விட்டு-கவனித்து, அவரவர்சொன்னநூலைதவத்துடனே, சுகந்தருமெனப்படிப்பீர்-போகரும், சுருதியனுபோகமாய்கருதினேனே. 15

பிர்மமுனி பாடல்.

கருதிடக்கேழ்ப்பீர்கள் - சிலேஷ்டுமத்தின், காரியத்தையின்னதென்று வீரியமாக, பொருத்திடரெண்டுவிரல்பின்-மூன்றணிவிரல், பொங்கமுடனேபடிக்குஞ்சங்கையுடனே, தெரிந்திடப்போகாது-இதின்குணம், செப்புவரோயிப்புவியில் வொப்பனையாக, விருதுகட்டியே நடக்க-பிர்மனி, விந்தையுடன் சொல்லினனே மைந்தர்கள்முன்னே. 16

சுந்தரர் பாடல்.

முன்னமேயறியவேணும் - சிலேஷ்டுமந்தான், முடுக்கியே ஆஸ்பதமாய் படிந்துநிற்கும், நன்னயமாயோடுமிது-நவிலிதுகேள், நாட்டியபெலண்போல்துடித்துகாட்டி

கொடிக்கும், கன்னக்காரன்மெத்தகள்ளன்காண் - இவ னுடைய, காரணத்தைசொல்லரிதுஆணத்திலே, வன் னமுள்ள பட்டம்பகல்போல் - சுந்தரர், வழிநடைதீப் பொறிபோலாடுமனதென்றேன். 17

இராமதேர் பாடல்.

என்றபடிதுள்ளிதுடிப்பான் - இவன்மெத்த, இணங் கிடா திருடன்காண் குணத்திலே, ஒன்றிமன்கெருட னென்பார்-கள்ளத்தனமாய், ஒதுங்குவானே பதுங்கி பிதங்கிடாமல், நின்றவித மிப்படியென்று - தெளிந்த வுடன், நீங்கள்கற்றுகொள்வீரிதை பாங்குடனேதான், கன்றிதமாயோசித்துப்பார்ப்பீர் - இராமதேவர், காணு விதமென்னதென தோணுதலுற்றேன். 18

தேரையர் பாடல்.

தோணுமிருபேரிலிவனும்-சடத்தில்வண்டன், தொ டர்ந்து பிடிக்கவென்றால் கடந்திவர்கள், வேணுமென் றிவனைகலமாய்-பிடித்துக்கொள்ள, வேண்டுவாரார்தூண் டுவரார் ஆண்டுகொள்வரோ, காணவேதான்மறைந்து கொள்வான்-கள்ளம்பு, குடன்கட்டுக்கிசையாத குலன் மட்டுக்கடங்கான், கோணுதலாய் பேதகஞ்செய்வான்- றேரையர்தான், கோதகச் சேவித்தலத வோதினனே யான். 19

கபிலமுனிவர் பாடல்.

செய்ததுமேற்சிரசிற்றுனும் - தீயதுபற்றி, செலுத்தியேகன்னிபற்றி வலித்திருப்பான், எய்துவான்கொப்பப்பனிபோல்-வேர்வையிட்டு, ஏற்றியேசொரிந்துவிழிமாற்றி, விழிப்பானதுகனத்து-மெய்நடுங்கி, மிரண்டிரண்டுமேலதாய் படுத்தெழுந்து, பொய்யல்லவேயிந்தவிதங்கள் - செகத்தோர்க்கெல்லாம், போன்றுநிற்கும் நாடிதனை ஆண்டுத்தானே. 20

இதுவுமது.

ஆண்டவகையின்னதெனவே - யறிந்துணர்ந்தோம், அம்மாவெனவேஅலரி கம்மிகுரலும், வேண்டினும் விடுவேனே-குடலின், பின்னிவிகடிக்கேதான் வலித்து சகடஞ்செய்வான், தீண்டிபிடித்தேயிழுக்கவும் - ஒருவருண்டோ, திகைக்கநடுங்கியேதான் பகைத்திடுவான், மீண்டதொருயீசன்வடியை-நமஸ்கரித்து, மிக்கவேகமலமுனி மங்களஞ்சொல்லினன். 21

பதினெண்சித்தர் பாடல்

முற்றிற்று.



உ

கடவுள் துணை.

அகஸ்தியமகாமுனிவர்

வைத்திய

சில்லரைக்கோர்வை.

முதலாவது,

கர்ப்பக்கோள்-26.

எண்சீரடி யாசிரியவிருத்தம்.

சீரான பராபரத்திற் பரமாய்நின்று திரிபுவனந் தாக்கியவை யாளாய்நின்ற, பேரான வஸ்துவெனும் விமலர்பாதம் பேணியே நமஸ்கரித்துப் பிரியமாக, நேரான பலசாஸ்திரத்தைப்பாட நினைந்து முந்நூல் விதித்தபடி நேர்மையோடு, சூரான மதிமாயைத் தொழிலைநீக்கிச் சொல்லுகிறேன் கர்ப்பக்கோள் யிருபத்தாறே. 1

பாலக்கிரக குணக்குறியு மருந்தும்மந்திர யந்திரமும், காலக்கருப்பும் நீர்சொரிதல் கட்டுங்குளிச வேருடனே, கோலக் குளிகை யெண்ணெய்தனைக் குணத்தின்படியே சொல்வதற்கு, சீலக்குருவாம் விநாயகனுர் சித்தித்தோர்சஞ் சீவியென்றே. 2

பெண்கள் தோயாப்புழுவுக்கு அவுஷதம்.

மீராமல்துாரமிலாப் பெண்களுக்கு
வேலிப்பருத்திச்சா றருந்தத்தீரும்
கூறுதது துளையுங் குப்பைமேனிக்
கொட்டைகொட்டையாய்க்கிடக்குங்குளத்துப்
எருமைப்புன்னைக்கா யளவுகூட்டி [பாசி
யிதனுடனேசர்க்கரையுங் கலந்துகொண்டு
போராகமூன்றுநா ளருந்தும்போது
புறப்படுமேசெங்குருதிச் சிவப்பதாமே. 3

ஆண்பிள்ளைகள் விந்து தடைப்பட்டால் அவுஷதம்.

தாமென்ற ஆண்கட்டுத் தடையாய்ப் போனால் சங்கம்வேர் நீர்முள்ளி விரையுங்கூட்டிப், போமென்ற சோதிதனைச் சுட்டசாம்பல் புகலாலம் விழுதுடனே முத்தக்காசு, ஆமென்ற ஆவின்பால் தன்னாலாட்டி யத னுடனே சர்க்கரையுங் கலந்துகொள்ள, ஏமென்ற இந் திரியங் கலிதமாகும் இஷ்டமுட னனுபோக மிசைந்து பண்ணே. 4

மலட்டுச்சின்ன விகற்பங் கூறுகின்றார்.

இசைந்ததொரு பெண்மலடு எங்குமில்லை எதி லுலே மலடான சேதிகேளு, அசைந்திருக்கும் பேயா

லும் பித்தத்தாலும் அடிவயிறு நொந்துவரும் வாயுவா லும், பிசைந்தகர்ப்பப் புழுவாலும் கிரகத்தாலும் பிணி யாலு மேகவை சூரியாலும், துசங்கெட்டக் கலவி யிறைற் பூவொதுங்கித் துலங்காமற் பிள்ளையில்லை சொல்லக்கேளே. 5

கர்ப்பத்துக்கு அவுஷதம்.

கேளுநீ கர்ப்பந்தான் வாழ்வதற்குக் கெடியான தோர்நாளுங் கள்ளியின்வேர், ஆளவே யதையரைத்து புன்னைக்காய்போல் ஆவெண்ணெய் பாக்களவு கலந்து கொண்டு, நீளவே குளித்தமுதல் மூன்றுநாளும் நினை வாக வேயருந்தக் கர்ப்பமுண்டாம், கொள்ளவே பத்தி யந்தான் புளிபுகையும் உப்புங் கொள்ளாமல் ஆவின் பாற் சோறுமுண்ணே. 6

கர்ப்பத்துக்கு வேறுமருந்து.

உண்ணவே வேப்பலகு சிந்தில்தண்டு உயர்முத் தக் காசுடனே யொக்கக்கூட்டி, கண்ணவே சாறுரியும் நெய்யுழக்குக் கலந்ததனைக் கொதிப்பித்துக் காலைமாலை, திண்ணவே குளித்தமுதல் மூன்றுநாளுந் திடமாக அருந்திவரக் கர்ப்பமுண்டாம், எண்ணவே சீந்தில் வேர் நாளுங்கள்ளி இதமாக வேரரைத்துப் பாலில் தாக்கே. 7

தாக்குவாய்ப் பெருங்காய மிந்துப்போடு தவறாம லேபுளியம் பரணிகூட்டி, ஆக்கமுடன் கற்றாழை வேர் தன் சாற்றால் அரைத்துநீ யுருட்டுவாய் புன்னைக்காய் போல், ஏற்கவே குளித்தமுதல் மூன்றுநாளும் இதமாக வேயருந்தக் கர்ப்பமுண்டாம், கேட்கவே வாயு அறும் பூச்சுவீழுங் கெடியான தோஷவிஷக் கிரகம் போமே. 8

கர்ப்பத்திற்கு வேறுமருந்து.

விஷப்பாலை வெட்பாலை வாலுழுவை கடுக்காய் வேண்டுநெல்லித் தான்றிக்காய் கொன்றைப்பட்டை, நிசமான கொடிவேலி இந்திசுக்கு நிறையாக வகை மூன்று கழஞ்சுகூட்டி, அசப்பான பிரமிச்சா றுவின் பாலும் அப்பனே வகைக்குயிரு நாழிகூட்டி, பிசகாமல் முன்பருந்து சாற்றரைத்து பின்னையுமே யாவிநெய் நாழிகூட்டே. 9

நாழிநெய் யுடன்மருந் தெல்லாங்கூட்டி நன்றாகக் கொதிப்பித்து மெழுகுபோலே, தாழியாங் கலசத்துள் வடித்துக்கொண்டு தவறாமல் முழுக்குவந்த மூன்றுநாளும், ஊழியாம் இருபோது கரண்டியுண்ண உத்தமம் கர்ப்பமுண்டா முறுதியாகும், காளியெனுஞ்

சாமுண்டிப் பிசாசுநோய்கள் கடந்தோடும் பத்தியம்நீ கண்டுகொள்ளே. 10

கற்பக்கோள்.

பாரப்பா பெண்மலடாங் கற்பக்கோளின் பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு, ஆரப்பா ஆண்மலடே யாகுமல்லாமல் அப்பனே பெண்மலடு யாருமில்லை, நேரப்பா தவமிருந்தும் பொருளீயீந்தும் நேராக வில்லையது சூலையாலே, வேரப்பா தேவதையே ஏழாங்கற்பம் விரித்து நன்றாய்ப் புகலுகிறேன் விரும்பிக்கேளே. 11

கருக்குழியின் ஆறுவிபாதியுங் கூறுகின்றார்.

புகலுகிறேன் முதற்றரந்தான் மலடியென்றப் பூவைக்குக் கருக்குழிதான் விளக்கமற்று, அகலுகிறேன் அகலாமற் பாசம்பற்றி யடைந்திருந்தால் விந்தங்கே யணுகாதப்பா, நிகலுகிறேன் மறுதரந்தான் கருக்குழியில் வாயு நிறைந்திருந்தால் விந்தங்கே நோராதப்பா, தகலுகிறேன் பின்னுமங்கு கருக்குழியில்மூடி தசைவளர்ந்தால் விந்தங்கே தான்செல்லாதே. 12

செல்லாது நாலாவ தப்பாகேளு சிறியவட் கருக்குழியிற் புழுதான்சேரில், செல்லாது ஐந்தாவதப்பா

கேளு சொரிந்தங்கே கருக்குழியில் சேரிக்கட்டி, செல் லாது ஆறுவதப்பாகேளு செப்புகிறேன் கருக்குழி தான் மதர்த்திருந்தால், செல்லாத அவையாறு வியாதியாகுஞ் சென்றபின் விரோதமே மாகுங்காணே. 13

கருக்குழி விளக்கமற்று பாசம்பற்றிய முதல் வியாதி யின் குணமும், அதற்கு அவுஷதமுங் கூறுகின்றார்.

காணப்பா இவைவிபரம் விரித்துச் சொல்வோங் காரி கைக்குப் புணர்வேளைத் தலைதானொந்தால், கோணப்பா கருக்குழியிற் பாசம்பற்றிக் கொண்டதென்று தான தற்குச் சாந்திசெய்வாய், பூணப்பா கோழியுடப் பித்து தானும் புகழான பருத்திவிரைப் பருப்போடொக்க, தோணப்பா வவள்குளித்த வன்றுதொட்டுச் சொல் லுகிறேன் மூன்றுநா ளரைத்துக்கொள்ளே. 14

கருக்குழியில் வாயுவினாலாகிய இரண்டாம் வியாதியின் குணமும், அதற்கு அவுஷதமுங் கூறுகின்றார்.

கேளப்பா இம்மருந்தை யோனிக்குள் தேய்த்துக் கெடியான புருஷனையும் புணரச்சொல்லி, நாளப்பா இப்படியே மூன்றுநாட்செய்ய நலமான பாசமற்றுக் கர்ப்பமுண்டாம், ஆளப்பாபுணர்வேளை யுடம்புநொந்தா

லப்பனே வாயுநிறைந் திருக்குதென்று, வாளப்பா பெருங்காயம் நல்லெண்ணெய் வார்த்து மத்தித்து யோனிக்குப் பூசச்சொல்லே. 15

கருக்குழியில் சதைவளர்ந்த மூன்றும் வியாதியின் குணமும், அதற்கு அவுஷதமுங் கூறுகின்றார்.

பூசியே மூன்றுநாள் புணர்ந்தானாகிற் புதல்வருண்டு மூன்றாவ தப்பாகேளு, கூசியே புணர்வேளை யவட்குத் தானுங் குறையாமல் நெஞ்சுவலி பிடித்துதானால், தாசியே யோனியெல்லாஞ் சுருக்கிக்கொள்ளுந் தசைவளர்ந் திருக்குதெனத் திப்பிலிபூரம், மாசியே கோழியுடப் பித்துஞ் சேர்த்து வாட்டியே யோனிக்குள் தடவச் சொல்லே. 16

கருக்குழியிற் புழுசேர்ந்த நான்காம் வியாதியின் குணமும் அதற்கு அவுஷதமுங் கூறுகின்றார்.

தடவியே மூன்றுநாட் புணர்ந்தானாகில் தப்பாது பிள்ளையுண்டாம் நாலாங்காட்சி, அடவியே புணர்வேளை முதுகுநொந்தால் அவட்கங்கே கிருமிநிறைந் திருக்குதென்றும், விடவியே இந்துப்பு அரிதாரங்காயம் வெந்நீரில் மூன்றுகணந் தூக்கியாட்டி, படவியே மூன்று தினம் யோனிக்குள் தேய்த்துப் படுத்திடவே பிள்ளையுண்டாம் பண்புதானே. 17

2

கருக்குழியி லிரத்தமூடிய ஐந்தாம் வியாதியின் குண
மும், அதற்கு அவுஷதமுங் கூறுகின்றார்.

தானென்ற ஐந்தாவ தப்பாகேளு தழுவயிலே கெண்டக்கால் வலித்துதானல், வாவென்ற சொரியவட் கருக்குழியைமூடி மறைந்திருக்கு தென்றறிந்து மைந்தா நீயும், பானென்ற கடுக்காயும் பஞ்சதாரை பச்சைபூரம் புழுகும் ஆட்டிவாங்கி, மாரென்ற வவள்குளித்த மூன்று நாளும் மாதுண்ண உள்ளுக்குக் கொடுத்திடாயே. 18

யோனியிற் பூசுமருந்தும், கருக்குழி மதத்திருக்கும்
ஆறும் வியாதியின் குணமும், அதற்கு அவுஷதமும்.

கொடுத்திடவே பிள்ளையுண்டாங் குறைதானில்லைக் கூறக்கேள் யோனிக்கு மருந்துகூட்டு, நடுத்திடவே குங்குமப்பூ அதிமதுரந்தானும் நற்சீரகத்துடனே மூன்றுங்கூட்டி, படுத்திடவே யோனிக்குப் பூசிக்கொண்டு பாயலில் புணர்ந்திடவே கர்ப்பமுண்டாம், எடுத்திடவே ஆறுவதப்பாகேளு ஏப்பமிட்டால் புணர்வேளை மதர்த்துதென்னே. 19

மதர்த்துமே கொழுத்திருக்கு தென்றுதானும், வாகான சவர்க்காரங் கடுக்காய்ச்சாரம், சதைத்திவைகட் சமனாக அரைத்துவாங்கித் தடவியே புணர்ந்திடவு

மூன்றுநாளும், பிதத்துமெத்த கர்ப்பமுண்டாம் ஏழாங் காட்சிப் பேயாலும் பிதிராலும் பிழைத்தாலுண்டு, சுதத்துமினிச் சாந்தியொன்று சூட்சமாகச் சொல்லு கிறேன் நன்ருகக் கேளுகேளே. 20

சாந்தி கூறுகின்ருர்.

கேளப்பா சூதயிலே மாதளையினிலையுங் கெடியான கஸ்தூரி மஞ்சள் தானும், நாளப்பா அரைத்துநன்ருய்ப் பாதமுதல்சிரசு நயமாக மேல்நோக்கி தடவச்சொல்லி, வேளப்பா புருஷனைதா னுதிக்கச்செய்து விபரமுடன் கீழ்நோக்கிப் பார்க்கச்சொல்லி, வாறப்பா மருந்தெல் லாந் தூற்றிவாரி மாயிலையி லெல்லாந்தான் வாங்கிக் கொள்ளே. 21

வாங்கியதோர் மருந்ததனை அவன்முன்னேகாட்டி மைந்தனே வாசலிலே புதைத்துவைத்துப், பாங்கிவ ளைக் குளிப்பிவித்துப் புடவைநல்லப் பண்பான அகி லுடனே சாம்பிராணி கந்தம், தேங்கியதோர் தேக மெல்லாம் புதைத்துநன்ருய்த் தினமொன்று மூன்று தரம் புதைத்தபோது, ஏங்கியதோர் தேவதையும் பூதப்பிரேதம் ஏவலொடு பிசாசுவகை யெல்லாம் போமே. 22

மருந்து எடைபாகங் கூறுகின்றார்.

போதுமப்பா மருந்துவகை யோனிக்குட்பூச பூட்டு இறே னெடைபாகம் பிரித்துக்கேளு, ஆகுமப்பா வகை யொன்று பணஎடைதானென்று ஆண்பிள்ளைக் கவ் வண்ண மரைத்துப்பூச, ஏகுமப்பா பெண்ணுக்கு பண யெடைதான் ஐந்து எடுப்படுங்காண் வியாதிமுதல் விரோதமெல்லாம், பாகுமப்பா மலடில்லைப் பிள்ளை யுண்டாம் பாடினேன் கர்ப்பத்தின் கோளைத்தானே.

பத்தியங் கூறுகின்றார்.

தானென்ற பத்தியஞ் சூக்ஷத்திற் சொல்வேன் சாதக மாய்க் கட்டியதோர் உப்புமாகும், வேனென்றப் புளி யாரை சீயக்கொழுந்து மேலான நெல்லிக்காய் அரிநெல் லிக்காய், தேனென்ற வெள்ளாடு துயல்ஆமையாகுந் திரமான ஊர்க்குருவி காடைமானும், பானென்ற மறை யாகும் சுறுமீனாகும் பண்பான கெளிற்றுமீன் மிளகு மாமே. 24

ஆமப்பா சர்க்கரைதேன் சிறுகீரையாகும் ஆவின் பால் நெய்யாகும் சிறுபயராகும், ஆமப்பா துவரை யொடு பொன்னாங்காணி அவரைக்காய் தூதுவேளை சமூலமாகும், ஆமப்பா தித்தித்த தெல்லாமாகும்

ஆகாத கைப்பாகா புளிதுவர்ப்பாகா, ஆமப்பா பழ வகைக ளெல்லாமாகும் ஆத்தாட்குப் பூசித்த மதுவு மாமே. 25

மதுவாகும் குளிர்ந்தஜலங் கிட்டஆகா மைந்தனே கொதித்தண்ணீர் மிகவுநன்று, சதுவாகும் வேதமுறை ரண்டுசொன்னேன் சத்தியந்தான் இந்தநூல் சார்ந்து பாரே, அதுவாகு மிதுவாகு மென்றேயெண்ணி அலைந் தலைந்துத் திரியாமல் சுழியைநோக்கிப், பொதுவாக நினைவுகொண்டு இருப்பாராகில்புத்திசித்தி பத்திமுதல் புனிதமாமே. 26

அகஸ்தியர் கர்ப்பக்கோள்-26

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

இரண்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்

பிண்டோற்பத்தி.

கலி வெண்பா.

அத்திபுரத்தோனிடத்தி லமர்ந்தஉமையாளீன்ற
சத்திக்கணபதியின் றாள்போற்றி-எத்திசையுங்
கெர்ப்பமின்னாருக்குக் கிளைத்தபிணிதான்தீர
கற்பமதாங்கிரியைக் கண்டுரைப்பேன்-உற்பத்தி
திங்கள்முதல்கர்ப்பஞ் சிறுவலியாய்த்தான்வலிக்கில்
எங்கள்மறைப்பூசந் திலாமிச்சு-மங்கைநன்னீர்
வார்க்கரைத்துஅடுப்பில் மார்க்கமாகவேகொடுக்க
சேர்த்திரண்டாமாதஞ் சிறுகினால்-மாற்றிக்கொள்
தக்கோலம்தாமரையின் தன்பூவும்நீரரைத்து
அக்காலமேகொடுநீ ஆவின்பாலில்-எக்காலம்
மூனாந்திங்கள்தன்னில் முறுக்கிவயிறூளைக்கில்
வாணிமலர்செங்கழுநீர் வண்கிழங்கு-பேணி
பாலிலரைத்துக்கொடுக்கப் பாவையர்க்குக்கர்ப்பம்
காலில்வலித்தூரத்தம் நாடினால்-சூலியர்க்கு

நெய்தல்கிழங்குநொச்சில் நீர்வார்த்ததனை
உய்தபசும்பாலில் உண்ணவே-ஐந்தாம்
மாதம்வலிக்கில் வரும்ஆம்பலின்பூவும்
வேதமறைய விலாமிச்சுவேரும்-போத
நீர்வார்த்தரைத்து நிட்செயாம்பாலிற்கொடுக்க
கூர்ஆறில்கர்ப்பக் குடலழன்று-நேரே
சுற்றிக்குடல்வலித்துச் சுழன்றுமேநீர்சுருக்கில்
பற்றிஇதற்கும்மருந்து பகரக்கேள்-உற்ற
திப்பிலியுமுந்திரிகை சேர்ந்தநெய்தல்கிழங்கு
அப்பிலரைத்தும் பாலிலேயருந்த-ஒப்பில்லா
ஏழில்வலிக்கில் இலாமிச்சம்சந்தனமும்
வாழுந்தக்கோலம் வகைமூன்று-சூழும்
கோவினிடபாலில் கொடுக்களட்டாமாதம்
பாவைகைகால் அயரும்பசிக்கன்னந்-தேவை
இல்லைதானின்னம் இதற்குமறைப்பூவும்
தொல்லைநெய்தல்கிழங்கும் நொந்தித்து-நல்ஆவின்
பாலிலதைகொடுக்கப் பாவைநவமாதம்
சூலின்வலிக்காணில் அரசந்தோலும்-கோவி
மருதந்தோல்நீரில் வாகாகவேயரைத்து
கருத்தாய்ஆவின்பால் கண்டுகொடு-பருக்கப்

பத்தாகுமாதமதில் பாவைவயிறுளொக்கில்
எத்தாகும்சர்க்கரை யிலுப்பைப்பூ-சித்தாக
நீரிலரைத்துப்பாலில் நினைவாகத்தானருந்த
பேருமத்தித்தோர்க்கும் பேசுவேன்-கூறும்

வயிற்றிற்பிள்ளை மறித்துப்போனால் விழுமருந்து.

அறிந்துநிக்குமிழ்வேர் அரைத்துக்கரைத்து
விரைந்துகுடிக்கப்பிள்ளை வீழுமே-வகையில்
அரசனூர்உரைத் தறிந்துமுனிதானுரைத்த
திறமாகுமென்றிதனைச் செப்பு. 2

உருத்தரிக்கு மிலக்கணங் கூறுகின்றார்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

ஆகநாள்வந்துவிட்ட ஐந்துநாள்கடுகுபோலாம்
போகஈரைந்தாநாளில் பொருந்தியமுட்டைபோலாம்
ஏகமாதத்தில்பிண்டம் இரண்டினில்மார்புமட்டாம்
பாகமாய்மூன்றுந்திங்கள் பகர்உந்திமட்டுந்தாமே. 3

மட்டுடன்காலாந்திங்கள் வளர்ந்திடும்பாதமெங்கும்
கட்டுடன்ஐந்தாமாதம் கருதுபூரணமாம்யாறில்
தட்டுடன்எலும்புஜீவன் தலைமயிர்நரம்புயேழாம்
எட்டுடனறிவாய்வொன்ப தியல்சம்பிரவிதானே. 4

மாதாபிதாவால் பிள்ளைகளுக்கு வரும்நோய்கள் கூறுகின்றார்.

பிறந்தநாள் பிள்ளைக்குந் தானேதந்தாம் பிதாவாலே சிசுவுக்கு மேலேதோன்றும், சிறந்தபிணி மாந்தகணங் கரப்பன்தோஷம் தீதான அக்ரங்கள் கிரந்தியுண்டாம், அறந்தழைத்து மருத்துவச்சி யாலேதீரும் அதுவன்றி மருந்தறிவர் அதனால்தீரும், திறந்தெரிந்து பார்த்து விடுஞ் சிறுபிள்ளைக்குஞ் சீராக வருநோய்கள் செப்பக் கேளே. 5

செங்கிரந்தி கருங்கிரந்தி செவ்வாப்புத்தான் தீயான கரப்பானும் அரையிற்காணும், அங்கமெலாஞ் செவ் வாப்புச் சிவந்துகாணும் அதுவன்றிக் கருங்கிரந்தி தொண்டைக்கட்டும், பிங்கிரகம் பேய்த்தோஷம் பக்ஷி தோஷம் பின்னும்வெகு ரோகங்கள் பிரித்துச்சொல்லி, அங்கரித்து குழந்தைபிணி யறிந்துதீர்க்க ஆராலு மாகா தென் றரன்சொன்னாரே. 6

சொல்லுகின்ற குழவிக்குக் கரப்பானேது தோஷ மென்ற வினையேது மாந்தமேது, கொல்லுகின்ற கண மேது அக்கரங்களேது கூறும்வை சூரியென்றக் குளற லேது, புல்லுகின்ற தாயாலே புணர்ந்து மெல்ல பூங் கொடி படர்ந்ததுபோல் படர்ந்துதிப்பால், கொல்லு

இன்ற கரப்பானும் கர்ப்பமேகம் கோதுற்ற தோஷ மெல்லாம் முலைப்பால்சூடே. 7

சூடான மாந்தமெல்லாந் தாய்ப்பால்மந்தம் தொகை யான கணங்களெல்லாங் கர்ப்பச்சூடு, பீடான அக்க ரங்கள் எல்லாந்தாயும் பிதாயிருவர் புணர்ச்சியினால் எழுந்தசூடு, பாடான வைசூரி யெல்லாம் அறுபோகத் தால் படர்ந்துதிக்க வினையெல்லாங் கர்மத்தாலே, காடான வகைபோலே சொன்னதற்குக் கண்டுவருந் தோற்றமினி கழறுவேனே. 8

குழந்தைகளை
நோய்கள் வாதிக்கும் நாள்கூறுகின்றார்.

கழறான கரப்பான்தான் பிறவிநோக்கிக் கண்டமுதல் நாள்தொடங்கித் திங்கள்மூன்று, புழறான குழவிகளை வதைக்குங்காலம் புணர்ந்தபல தோஷமெல்லாந் திங் கள்மூன்று, பழறான நாள்தொடங்கி வருஷம்ஒன்று பதைபதைக்கக் குழவிகளை வதைக்குங்காலம், சிழ றான மாந்தமெல்லாம் வருஷந்தொட்டுச் செறிமூன்று வருஷமட்டும் வதைக்குமென்னே. 9

என்னவே கனமூன்று வருஷம்தொட்டு ஏழாண்டு மட்டுக்கும் இறக்குங்காலம், பன்னவே அக்கரங்கள் ஏழாண்டுதொட்டு பகர்முப்ப தாண்டுமட்டும் படருங்

காலம், உன்னவே வைசூரிய ரோகமெல்லாம் உயிர் பிரியுங் காலமட்டும் உரித்துதானென், றின்னவே முன்னூரில் முனிவர்சொன்ன இயல்புகண் டின்னூலில் சொன்னதாமே. 10

பிள்ளை பிறந்தவுடன் சீறிச்சீறியழுதல், விக்கல், பொருமலுக்கு மருந்து.

தீருமே திங்கள்சென்று பிள்ளைபெற்றால் சீறியழும் பாலகர்க்கு மருந்துகேளு, கூறுடனே சிறுதேக்கு திப்பிலியுங்கூட்டிக் குறுகவே பொடிசெய்தே ஆவினெய்யில், வேறுபட கொங்கைபிள்ளை யுண்ணும்போது விக்கல்போம் பொருமலுடன் விஷமும்போகும், பாருடனே திப்பிலிரோ கணியுங்கூட்டிப் பருவமுடன் நெய்குழைத்து தனத்தில்பூசே. 11

பிள்ளைக்கு வயிறுவீங்கினால், குடித்தபாலெதிரிட்டால், கொட்டாவிவிட்டால் மருந்து.

பூசுவாய் பிள்ளையுட வயிருவீங்கில் பொடிமதுரங் காடியரைப் பூசத்தீரும், கூசியே குடித்தபா லெதிர்த்திட்டாலுங் கொட்டாவி விட்டாலுங் கூறக்கேளு, பாசமுள்ள வெள்ளுள்ளி அசமதாகம் பரிவுடனே கியாழம் வைத்து பருகத்தீரும், தோஷங்கண் டெச்சமிலை யுண்ணுதாகிற் றுலங்கவே அதிமதுரம் பொடியதாக்கே. 12

பிள்ளைக்கு வயிறுநொந்தழுதால், மலங்கட்டினால் மருந்து.

பொடியாகப் பால்அரைத்து முலைக்கண்பூசிப் பிள்ளை
ஸ்தனம் உண்ணவே போகுநோயும், துடியாச்செய்
வயிறுநொந்து அழுததானால் துலங்குபுன்னை சிறுதேக்
குக் கோஷ்டங்கொண்டு, வடிவாக நீர்அரைத்துக் காய்
ச்சியேதான் மைந்தன்வயிற் றில்பூசநோயுந்தீரும், அடி
வயறு நொந்துமலங் கட்டுமாகில் அதிமதுரம் பிசித்
துளிர் சர்க்கரையும் அரையே. 13

பிள்ளைக்கு சிறுநீர் இறங்காவிட்டால், தோஷங் கண்டால், மருந்தும், குளிசமும்.

அரைத்துநெய்யில் புகட்டிடவே மலமிறங்கும் அது
வல்லால் நீரிறங்க எலிப்புழுக்கை, உரைத்திடுவாய்
வெள்ளரிக்காய் விரையுங்கூட்டி யுகந்தரைத்து அடி
வயற்றில் பூசவேதான், நிரைத்திடவே நீரிறங்கும்
பாலுமுண்ணும் நினைவாக மஞ்சள் துத்தி வேருங்
கொண்டு, [illegible]த்திடுவாய் மஞ்சள்நூல் குளிசங்கட்
டில் பறக்குமே தோஷமுடன் பலநோய்தானே. 14

எட்டுவித தோஷகுணங் கூறுகின்றார்.

செங்கிரந்தி, கருங்கிரந்தி, பக்ஷிதோஷம், பறவை தோஷக் குணம்.

செங்கிரந்திதேகஞ் சிவப்பாங் கருங்கிரந்தி
பொங்கி மிடறுகட்டிப் போகுமே-நங்காய்கேள்
பேய்ப்போலே சீறியழும் பிறந்தபட்சி யின்தோஷம்
நீர்ப்பரவை தோஷத்தை நேர். 15

புள்ளுத்தோஷம், கர்ப்பம் அழிந்ததோஷம், குளிதோஷ குணம்.

நோய் திடுக்கிடுமே நின்றபுள் ளுத்தோஷம்
வாராய்க் கழியும்பச்சை வாறுபோல்-நோராய்
அளிதோஷங் கால்பின்னும் ஆகுமதுவாந்திக்
குளிதோஷம் ஆமென்றே கூறு. 16

தேரைத்தோஷம், முட்டுத்தோஷம், பெண்தோஷக் குணம்.

கூறுமதுதேரைக் குணந்தேகந் தான்வற்றும்
மாறுமுட்டுத்தோஷ முலைமறக்கும்-வீருடனே
பெண்தோஷந் தான்மயக்கும் பேராகுமெட்டும்
நண்பாகுந் தோஷத்தை நாடு. 17

எண்வகை மாந்தகுணம் கூறுகின்றார்.

மாந்தம், செரியாமாந்தம், தலைமாந்தம்,
போர்மாந்த குணம்.

நாடுதனில்மாந்தம் நன்றாய்வயிறுபோம்
தேடுசெரியாமாந்தம் தேசிகன்—ஓடகடு
மாக்கரைத்தாப்போல வலிப்பாந்தலைமாந்தம்
காக்கப்போர்மாந்தத்தைக் காண். 18

கட்டுமாந்தம், விஷமாந்தம், நீர்மாந்தகுணம்.

காணவயிர்போகும் கட்டுமதுமந்தம்
வானம்போலுப்பி மலம்போகா-தூன
விஷமாந்தம் மெய்விரைக்கும் மேலேமிகவெதுப்பும்
இசையாய்நீர் மாந்தம் இயல்பு. 19

கழிமாந்தக் குணம்.

இயம்புவதுமேனி யெங்குங் குளிர்ந்திருக்கும்
நியம்புகழி மாந்தத்தின் சேதிகேள்-சொயம்பி
பலவிதமாய்தான்கழியும் பார்க்கிலிவைஎட்டும்
உலகிலிது வெவ்வேறுரை. 20

ஆக மாந்தம்—8.

எண்வகை கணங் கூறுகின்றார்.

கணம், மஹாகணம், கழிகணம், சுழிகணக் குணம்.

உகையாய்க் கணங்காயும் உண்மைமஹா கணந்தான்
நிறையாய் உதடுவெடி நேருமே-குறைசேர்
கழிகணந்தான் வயிறுபோம் காணவிலா விரண்டுஞ்
சுழிகண மெனவே சொல். 21

வரட்கணம், நீர்க்கணம், முக்குக்கணம், மூலகணம்.

சொல்லால் வரட்கணந்தான் சுயமஸ்தி யில்நிற்கும்
செல்லாய்நீர்க் கணம்வேர்வைச் செய்யும்-நல்லாய்
முக்குக்கணமுக்கும் மூலகணஞ் சிதரத்தம்
தக்கும் அடிதள்ளுந் தான். 22

ஆமகணம், ஆமசன்னி, ஊதுகாமாலை, மஞ்சட்காமாலை.

தானலரும்ஆமகணம் [illegible]பலே ஆமசன்னி
ஊனமுற நெற்றியி[illegible]யுண்டாம்-தேனேகேள்
காமாலை ஊதும் கருதுமஞ்சட் காமாலை
மாமூத்திர மஞ்சள்நிற மாகும். 23

இனி இவைகளை தனித்தனி விளக்குவதும் கிரந்தி வருவிதமுங் கூறுகின்றார்.

எல்லாங்கிரந்தி யெழும்வாதம்பித்தம்
பொல்லாதசேஷ்மத்தால் பொங்கிவிடும்-வில்லாள்

நீள்புருவத்தானே நிறைந்துசெயற்கரப்பான்
ஏழ்புவியோர்க்கென்றே இயம்பு. 24

செங் கிரந்தியின் குணம்.

பிள்ளைப்பிறந்த வுடனழுதுப் பிறக்குமிடறு தனைக் கட்டி, மெள்ளப்பூனைக் குரல்போன்று விடாமலேநீர் யீறாதித், துள்ளிக்கையால் சிவப்பேறிச் சும்மாய்க் கிடக்கும் ஏதென்னில், கள்ளமான செங்கிரந்திக் கருத் தாயிதனைக்கண்டு கொள்ளே. 25

செங்கிரந்திக்குமருந்தும் குளிப்பாட்டவு மருந்து.

கோரோசினைத்தான் முலைப்பாலில் கொடுக்கக் கற் பூரவள்ளியிலை, நேரோடுள்ளி தனைநறுக்கி நிகருங் குன்றி மணியிலையின், சாறுமருந்த முருக்கயிலைத் தான் சாறருந்த செங்கிரந்தி, தீரும் செம்முள் ளியினிலையைத் தினமும்நீரில் குளிப்பாட்டே. 26

கருங் கிரந்தியின் குணம்.

முழங்க வழுது முலையுண்ணு மூர்ச்சையாகும் உடல் வெதும்பு, கொழுங்கண் திறவா வாய்வரட்சி கொண்டே அதரங் கறுப்பேறும், அழுங்கி அலரும் குரல்கம்மும் அதிகமாக வயிறாதும், புழுங்கும் வலிக்குங் கருங்கிரந் திப் பொல்லாதெனவும் புகன்றனவே. 27

கருங்கிரந்திக்கு மருந்து.

ஓணன்ரத்தம் காளவாய னுகந்தபாலுந் தான்கொடுக்க, மூணுகரிய கத்தபத்தின் மூத்தி ரவுரிச்சாறு சமன், நாணுவசம்பு முள்ளியுமாய் நறுக்கி ஏரண்டெண்ணெயுடன், ஆனுலெரித்துக் கொடுத்திடுநீ யாறும் காய கிரந்தியதே. 28

கருங்கிரந்திக்கு எண்ணெயும், குளிப்பாட்டவும்.

நெய்யுடனே விளக்கெண்ணெய் நல்லெண்ணெய் கூட்டி நீடுஞ்சங் கிலைச்சாறு சமனாய்விட்டுத், தியாமல் கடுகுந்தான் நீரரைத்துத் தீதில்லா ரவியில்வடித் தே யெடுத்துப், பையவொரு பணவெடைதா னுட்கொடுத்துப் பாங்குடனே மேலெங்குந் தடவிவைத்துச், செய்ய முள் ளிக்கிரந்தி நாயகம்நீர்ப் போட்டுத் தினமுமே குளிப்பாட்டத் தீருமென்றே. 29

கருங்கிரந்திக்கு எண்ணெய் உள்ளுக்கும் மேலுக்கும் பூச.

மூக்கரை சாரமணை முடக்கொத்தான் செந்நெருஞ்சில் முத்தெருக்கஞ் செவியினுடன் ஓரிதாழ்தாமரையும், ஆக்கமுடன் ஈருள்ளி மயிலிறகுகூட்டி ஆமணக்கெண்ணெயில் எரித்துள் கொடுபின்பு, தாக்கிமேல் பூசி விட வந்தவலிநிற்கும் தாயையும் பத்தியம் சமசம்ஙவக்

கப், பூக்குமமுங்குடல்மடமா உமைக்கரன் புகன்ற புக ழுரையு மிதுவாகும் புவியிலுள்ளவர்க்கே. 30

பன்னிரண்டு கிரந்திக்கும் பதினெட்டுச் சூலைக்கும் எண்ணெய்.

அண்டபகி ரண்டமுதல் கொண்டுமனு விண்டுதொழ ஆமணக் கெண்ணெயதுசேர், அடவான தேங்காயைத் திருகிமுன் பாலெயெடு அவிர்செம் பரித்திசார்சேர், கண்டதொரு பாண்டங் கலந்தடுப் பேற்றியே காய்ச்சி வடி எண்ணெயதிலே, கற்கம்இனி வர்க்கமெடு சுமக் கதுகிராம்புடன் கனிவாயுகந்த ஏலம், கொண்டசிறு திப்பிலிச் சண்டமாருதபூரங் குன்றுமிளகுப் பொடியதாய், குறையாமலிவ்வகைக் கேவிறுகனெடை கூட்டி விடும் எண்ணெயதிலே, இரண்டுபடி ஒருசங்கு தந்த குழவிக்கீய ஏகுநோ யானவகைகேள், ஈரறுகிரந்தியும் அறுமூன்று சூலையும் ஏங்கியோ டிப்போகுமே. 31

தீராத அசாத்திய கருங்கிரந்தியின்குணம்.

பாரேநீ கருங்கிரந்திக் குணமேதென்றால் பனிபோ லேசீறியமும் முலையுண்ணாது, ஆரேதான் முறித்து உடலும்விம்மும் அரியனுவரட்சியுடன் கண்விழிக்கும், வாரேதான் வளர்முகமும் வாடிக்காணும் வல்லினையாய் குக்கிப்புழு விளையும்பாவம், மாரேதான் மைந்தன்ஐந்து நாளில்சாவும் மகாகொடியக் கருங்கிரந்தி யுரைத்தோம் நாமே. 32

முற்றிற்று.

கடவுள் துணை.

மூன்றுவது,

அகஸ்திய மகாமுனிவர்

தர்க்கசங்கிரகம்-16.

சீர்பொருந்துஞ் சாஸ்திரமு மருந்துவைப்புந்
தெய்வீகமானபொரு ளதுவுஞ்சொல்லி
ஏர்பொருந்து மெழுத்தாணி அம்மிலை
இயல்பானகருவிமுதற் கூரைச்செப்பி
கூர்பொருந்துஞ் சாஸ்திரத்தைச் சொன்னாராகுற்
குருவாகுமவருடனே யெதிர்க்கவேண்டாந்
தார்பொருந்துஞ் சாஸ்திரங்கள் சொல்லாவிட்டாற்
சண்டாளப்பயலுடைய பையைவாங்கே. 1

பகையாதே யோகியுட னெதிர்க்கவேண்டாம்
பதினாறுபிணிநீக்கி இந்தநூலை
குறையாம லுரைத்ததிலே விருதுவாங்கி
கொள்ளவேயவருடைய கிருபம்போனாய்
நிலையாகி சீஷராய் வந்தாரானால்
நேர்மையாம்விருதுமஸ்த பாகஞ்சொல்லி
துரையாக நூலுரைத்து வைப்புஞ்சொல்லி
சூக்ஷமுய்யுமன தறிந்து சொல்லுவீரே. 2

நாருசம் பிடித்தகைத்து வகையைச்சொல்லு
நன்றாகஇடதுகையி னேலைச்சொல்லு
ஓராம லூன்றினதற் குண்மைசொல்லு
ஒட்டிமுறிந்தெடுத்தெழுத்தின் ரூபஞ்சொல்லு
கூறாத வூமையென்ற பேர்தானேது
குருவருளாலடிமுடியுந் தெரிந்துசொல்லு
நேராக நின்றெழுத்தின் நிலையைச்சொல்லு
நிச்சயமாயரியென்ற பொருளைச்சொல்லே. 3

நாராசம்பிடித்தகையான் ஞானமூர்த்தி
நன்றுதீதிடதுகையி னிலைச்சத்தி
ஓராமலூன்றினதே உண்மைஞானம்
ஒட்டிமுறிந்தெடுத்தெழுத்தின் வடிவுலிங்கம்
கூறாதவூமையது விராட்டுவாகும்
குருவடியைப்பணிந்தவர்க்கடிமுடியுந்தோற்றும்
நேராகநின்றெழுத்தே வடிவாகாரம்
நிச்சயமாமரியென்னும் பொருளும்நீயே. 4

குளிர்ந்திருக்குமம்மிக்குப் பேர்தானேது
குணமானகுளவியதின் பேர்தானேது
தெளிந்தபிடிவிறற்றனக்குப் பேர்தானேது
தேகமுருமருந்துபத்துந் தெளிந்துசொல்லு

நளிந்திருந்தசெப்பேது அடைப்பதேது
நான்முகத்தோன்வகுத்தவகை சொல்லுசொல்லு
மொழிந்துரையும் பண்டிதரேயிந்தநூலை
மோசம்வராதின்னதென்று மொழிந்திடீரே. 5

குளிர்ந்திருக்குமம்மியது சத்தியாகுங்
குணமானகுளவியது லிங்கமாச்சு
தெளிந்தரைக்கும் விரலைந்தும்பஞ்சபூதந்
தேகமுறுமருந்தெல்லாஞ் சிவமேயாகும்
நளிந்திருக்குஞ்செப்புமுவ லடைப்புகாணும்
நாதருடசிரசதுவுங் கபாடமாச்சு
மொழிந்துரைத்தபண்டிதர்க்கு நூல்கொடுத்து
முறைதவறுதின்னதென்று மொழிவீர்தானே. 6

பிடித்துரைத்துங்கல்தனக்குப் பேர்தானேது
பிரமூலதேவதையின் பேர்தானேது
அடுத்திருந்தமூலைப்பால்தன் பேர்தானேது
அணிவிரலும்பெருவிரலு மறிந்துசொல்லு
தடித்திருந்தபையேது கயர்தானேது
தவராமற்சாஸ்திரங்கள் தானேசொல்லி
படித்தறியும்பண்டிதரே யிந்தநூலைப்
பழுதுவராதின்னதென்று பகர்ந்திடீரே. 7

பிடித்துரைக்குங்கல்லுக்குப் பேர்தான்மாயோன்
பிரமூல்தேவதையா னீசானியனுகும்
மடித்திருந்தமூலைப்பாலே யமிர்தமாகு
மணிவிரலும்பெருவிரலு மரன்சத்தியாகும்
தடித்திருந்தபையதுவுங் கயிலேயென்பார்
தவராமல்சாஸ்திரத்தின் பயனறிந்து
படித்தறியும்பண்டிதரே யிந்தநூலேப்
பழுதறவேசொல்லியபின் பையைவாங்கே. 8

உரைக்கின்ற செந்தூரமானதேது
உத்தரசகெந்தியுவ ரானதேது
அரைக்கின்றமண்ணுமுதற் சிலேயேது
அதினடுவேகுப்பிமுதற் சலாகைக்கோலும்
நிறைக்கின்ற அடுப்புமுதற் றீபமேது
நெளியாதமண்ணேது தாளியேது
வரைக்கடங்காப்பண்டிதரே யிந்தநூலை
வகைபிரித்துயின்னதென்று வழுத்துவீரே. 9

உரைக்கின்றசெந்தூரஞ் சிவமேயாகு
முத்தரசகெந்தியுயர் மூவராகும்
அரைக்கின்றமண்ணுமுதல் சிலேசத்தி
அடைகுப்பிசலாகைமுதல் மேருவாகும்

நிறைக்கின்ற தீயடுப்பு தடவாலாகும்
நெகிழாதமண் ணுமொரு வேதமாகும்
வரைக்கடங்காத்தாளியது ஆழியாச்சு
வகைசொன்னபண்டிதர்க்கு மருந்தையீயே. 10

பொற்பணியாய்ச்சமைந்தசெப்புப் பேர்தானேது
பொரியானவெள்ளியுட செப்பைச்சொல்லும்
நற்பணியாய்ச்சமைந்தவங்கச் செப்புமென்ன
நலம்பெரியசாஸ்திரத்தை நன்றாய்ச்சொல்லு
தற்பணியாய்ப்போகாமற் றறிந்துப்பார்த்துச்
சகலநூலின்சாரம் பார்த்துச்சொல்லு
நற்பணியும்பண்டிதரே யிந்தநூலை
நலமாகவாய்திறந்து நவிலுவீரே. 11

பொற்பணியாய்ச்சமைந்தசெப்பு அரன்றன்தேவி
பொரியானவெள்ளியென்றால் வேதன்பாரி
நற்பணியாய்ச்சமைந்தவங்க மீசன்வந்து
நலம்பெரியசாஸ்திரங்கள் பரத்தின்வேதம்
தற்பணியாய்ப் போகாமலிந்தநூலை
சாத்தியேவிருதுதனை வாங்கிக்கொள்ளு
நற்பணியும்பண்டிதரே தெரியாவிட்டால்
நலமாகச்சீஷனாய்ப் பணிந்துவாங்கே. 12

அஞ்சுருவாயெடுத்ததொரு பஞ்சலோகம்
அப்போதுசெப்பேது யறிந்துசொல்லு
கஞ்சமொடு தாம்பூரலோகஞ்சொல்லு
கருவானபித்தளை திருவுஞ்சொல்லு
வெஞ்சமறசாத்திரங்க ளெடுத்துப்பேசு
வேதாந்தசித்தாந்த மிரண்டுஞ்சொல்லு
நஞ்சகத்தும் பண்டிதரேயிந்த நூலை
நன்றாநீயுன்னுடைய விருதுவாங்கே. 13

அஞ்சுருவா யெடுத்ததொருபஞ்சலோக
மமைத்திருந்தசெப்புக்குப் பேரைக்கேளு
கஞ்சமடா ஆகாசம்செப்புவன்னி
கருவானலோகமே வாயுமாகும்
வெஞ்சமறபித்தளைதான் பிரிதிவாகும்
வேதாந்தத்திருவென்று லப்புவென்றும்
நஞ்சகத்தும்பண்டிதரே யிந்த நூலை
நாட்டோர்க்கு இன்னதென்றுநவிலுவீரே. 14

தஞ்சமென்றஆகாச நிறத்தைச்சொல்லு
கருஞ்செம்புநிறத்தினுட வடிவைச்சொல்லு
வஞ்சமென்றலோகத்தில் வாய்வைச்சொல்லு
வருதாழைபிரிதிவுக்கு நிறத்தைச்சொல்லு

வெஞ்சலென்ற திருவுகளு மப்பின்னுறும்
விதமானநிறத்தையெல்லாம் விளங்கப்பார்த்து
உஞ்சாமலெடுத்துரைக்கும் வயித்தியரேநீயு
மொவ்வொன்ருயின்னதென்று வுரைத்திடீரே. 15

வாதுரைக்கும்வைத்தியரே சொல்லக்கேளு
வைத்தியர்க்குத்தலைமூன்று கண்கள்மூன்று
நீதமுடன்சாரமொடு திரேகமாறு
நிலவரமாய்ப்பாதைபத்து நாலுண்டென்பார்
ஆதரவாய்க்கண்டுவந்தோன் வயித்தியனுவா
னல்லாமற்செய்துவிட்டால் மட்டையாவான்
றேசமெல்லாமனிதரையு மவனேகொல்வான்
செத்தசவம்போலவுஞ்செய் மருந்துபொய்யே. 16

அகஸ்தியர் தர்க்க சங்கிரகம்-16

முற்றிற்று.

கடவுள் துணை.

நான்காவது,

அகஸ்தியமகாமுனிவர்

வைத்தியசாகரம்-41.

கணபதிதுதி.

வெண்பா.

சொல்லியவைத்தியசார சுருக்கமாய்நாற்பத்தொன்றில்
அல்லும்பகலுமே மறிவுணர-நல்ல
குணமதியாம்பூரணத்திற் கூடியேவாழும்
கணபதியின்பாதமலர் காப்பு.

மருந்துகொடுக்கக் கூடாதபேர்கள்.

அன்னியதாரத் தாசைகொள் கோள்வஞ்சனை கஞ்சா கள்ளுலொப்பி லுண்போன்றீமை, துன்னிய சூனியக்காரன் சண்டைக்காரன் துரும்புகிள்ளி விருந்துண்பான் திருடன்துஷ்டன், குன்னியநித் திரைமிகுந்தோன் கொடாதலோபி குணமில்லான் மாபாவி பெருத்தவஞ்சன், பன்னியபண் டிதர்பகைஞன் செவிடனூமை பாசுபத மறியானைப் பார்க்கொணதே. 1

முன் பணம் வாங்கிக்கொண்டு வைத்தியஞ் செய்யவும்
கைக்கூலி கைகூப்புக் களவின்கூலி கபடமனமும்
மாதர் வேசிகூலி, மெய்க்கூலி கண்கூலி வித்தைக்கூலி
யாபாரக்கூலி மிகவுடையான்கூலி, ஒப்பரிய பிணிதீர்க்கு
மொருவன்கூலி, ஓதுவிக்கு முபாத்தியா யன்றன்கூலி,
அப்போதைக் கப்போதே வாங்காராகில் ஆர்பெறுவா
ரார்தருவா ரமணிமீதே. 2

துஷ்டர்களுக்கு மூன்றுஞ்சொல்லக்கூடாது.

மந்திரமும் வாகடமும் பழையநூலும் வருவிக்கும்
பெரியோரே வளமைகேளீர், தந்திரமாய்க் காந்தமுக
மூசிபற்றுந் தன்மையது போற்றொடர்ந்து தரிப்பா
ராகில், சுந்தரமாம் புகழுடைய குலமானாலுந் துஷ்டர்
களுக் கிம்மூன்றுஞ் சொன்னாராகில், அந்தரமாய் எழு
நரகி லழுந்திப்பின்னு மறிவிலார் சண்டாள ராவர்பாரே.

இந்நான்குவகைக்கும் அறியாமல் வைத்தியஞ்
செய்பவர்களுக்கு நரகம் வரும்.

பார்க்கின்ற சோதிட பிராயகாலம் பகரும்விப கார
மொடு பிராயச்சித்தம், ஏற்கும்வைத் தியமிவைகள்
நான்கும் வல்லோர் இதன்வழியே சிகிச்சைசெய்து
செய்வாராகில், ஆர்க்குமேதோஷமில்லை யிவைகளையோ
அறியாதார் சாஸ்திரவல் லவர்கள்போல, தீர்க்கமறி

பிடியாகச் செய்வாராகில் சிவபிர மத்திவதை சேர்வா ரென்றே. 4

கண்கள்-3, தலைகள்-4, முகங்கள்-5, கைகள்-6, சரீரங் கள்-8, கால்கள்-10, இந்த ஆறுவித குணங்களறி யா ரோகிகளைக் கொன்றதனால் நரகமடைவார்.

வாதகுறி வைத்தியரே சொல்லக்கேளீர் வாகாகக் கண்மூன்று தலைகணான்கு, நீதமுடன் முகங்களைந்து கைகளாறு நிலைசரீரங்களெட்டு கால்கள்பத்து, வீத மிதன் பயனறிந்தார் வியாதிதீர்ப்பார் விதமறியார் மானி டரைப் பழியேசெய்வார், சேதமாஞ் செய்மருந்து பலித்திடாது செத்தபின்பு தீநரகிற் சேருவாரே. 5

கண் தலை கை சரீரம் கால் பிண்டநிலை விபரங்கள்.

மருந்துசுத்தி குணம்கண்டு கண்கள் மூன்றும் வாத பித்த சிலேஷ்மதொந்தந் தலைகள் நான்காம், அருந்து மறு சுவையறிதல் கைகளாறும் அஷ்டவிதக் குறியறி தல் சரீரமெட்டாம், இருந்ததச நாடிதச வாய்விரண் டும் இதமாகப் பார்த்திடிற் கால்கள்பத்தாம், பொருந் தியதோர் பிண்டநிலை முகங்களைந்தாம் பொதிகைமலை யகஸ்தியனார் புகன்றவாறே. 6

வாகடத்தின் பயனறியார் நாடிகாணார் வளர்கையைப் பிடித்திழுத்து வார்த்தைசொல்வார், ஆகடியமாகவே

நல்லோர்தம்மை அசாத்தியநோ யோவென்று அறைந்துபோவார், பேர்க்கிடக்கப் பேர்சொல்வார் தீர்க்கமாட்டார், ஒகோகோ வைத்தியர்தா மென்றுசொல்வார்க்கொருக்காலு மோக்ஷமில்லை நரகந்தானே. 7

அச்சமற வைத்தியரே நோயுள்ளோர்க்கு அசாத்தியமுஞ் சாத்தியமு மறிந்துநன்றாய்ப், பட்சமறக் குறிகுணமெய்ப் பரீக்ஷைபார்த்து பரிகார மாய்மருந்து பகராராகில், தச்சமறக் கிளைகுலங்கள் வேறாடற்றுத் தரணிதனில் வெகுபாவந் தலைமேற்கொண்டு, இச்சைபெற வெழுநரகி லழுந்திப்பின்னும் ஈடேற்ற மில்லாமலிருப்பர்தானே. 8

தரணிதனி லவுஷத்தின் சுத்திகண்டு தகமைபெற நோயாளி சரீரம்பார்த்து, கரநியா சனவகையுங் கண்டு பின்னுங் கைப்பரீக்ஷை மெய்ப்பரீக்ஷை கருதுங்காடி, திரங்கரில் குருமுகமாய்ப் புத்தியாகித் தெளிந்தோர்கள் யோசனையுஞ் செய்திகேட்டு, முரணியினு லிந்தவகை செய்யாராகில் மூவேழு சுற்றமும்வே ரற்றுப்போமே.

கருத்துறவே வாதிமகன் வைத்தியஞ் செய்யில் கசடற்வே நோயாளி குருவாயெண்ணி, கருத்துறவே மருந்ததற்குப் பத்திவேணுங் கைகண்ட வைத்தியரை யறிந்துநன்றாய், கருத்துறவே மனதுவர நடக்கவே

னுங் கழுதைதனையைப்போ லிருந்தவர்க்குப் பலியாதொன்றுங், கருத்துறவே யிவையறியச் சித்தர்தானும் காட்டினு ரவர்மனம்போல் நடந்துக்கொள்ளே. 10

நடந்துகொள்ளும் நோயாளி ராஜாவாக நாட்டினுலவர்க்கங்கே மருந்தூறுது, தொடர்ந்துமே யவரிடத்திற் பத்திவைத்தால் துரும்பாகப் போகுமடா நோய்களேது, அடர்ந்துபோ யவர்வாசல் காத்தாரானல் அக்கினியிற் பஞ்சதுபோல் நோய்கள்போகும், சடந்தனக்கு நோய்வந்தால் குருவேயென்பார் சாதுரியமாய்த்தீர்த்தால் தம்பியாமே. 11

தம்பியென்பார் நோயெல்லாந் தீர்ந்தபின்பு தாய் தந்தை குருவென்பார் தீருமுன்னே, வெம்பியொரு ரோகங்கள் தீர்ந்தபின்பு வேணவுப சாரம்பின் னுகெட்டென்பார், கும்பியே சோதித்துமிக வுள்ளம்வாட குருவான வைத்தியர்தன் மனதுநொந்தால், சம்பியே முகம்வாடித் தான்வாரார்கள் சாற்றினே னிவையறிந்து மருந்துவாங்கே. 12

வஞ்சமற்று ரென்றபிணி யாளர்தம்மை மகவதிலும் பதின்மடங்கு மருந்துசெய்யில், நெஞ்சில் நோயாளியின் பணிநிதானம் நிறுத்துமந்த வைத்தியர்க்கு நிதிகொடாமல், பஞ்சைமொழி பகருமரும் பாவியோரைப்

பாழ்நரகி லழுத்தியெமன் பாசத்தாலே, அஞ்செழுந் தேயடுத்துத் தள்வானென்று அகஸ்தியரு முந்நூலி லருள்செய்தாரே. 13

பிண்டவுற்பத்தி.

கேளப்பா மனமான வாயுகூடி கெடியான சித்தமும் காயம்பொங்கி, வேளப்பா ஆங்கார சிகாரமிஞ்சி மேவு தற்குப் பெண்மேலே மோகமாகும், நாளப்பா ஐந்துக் கும் பலமேதென்றால் நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, தாளப்பா மனதோடே வியானனன்று தனியானரத்தத்தி லபானன்றானே. 14

தானென்ற விந்துவினிற் சமானன்கூடும் தனியான சித்தமதில் வியானனின்றும், கானென்ற ஆங்கார மூர்ச்சியோடே கலந்துநிற்கும் உதானனப்பா கண்டு கொள்ளு, வேனென்ற பத்துமொன்றாய் மனதுங்கூடி மேவியவன் கலந்துவிந்து விழுகும்போது, மானென்ற மெளபாவ வசமேயாவான் மருவுகின்ற பெண்ணுக் கும் முறைதான்கேளே. 15

கரு தரிக்கும்விதம்.

முறையான பெண்ணுணும் மெளனமுற்றால் மோச மில்லை கருவங்கே தரிக்கும்பாரு, நிறையான வலத் தோடி லாணையாகும் நேராகயிடத்தோடிற் பெண்ணே

யாகும், உறையான கருப்பையில் சுக்கிலம்பாய வுத்த மனே சுரோணிதந்தா னுரைந்துகொள்ளும், கறையா கப் பாய்ந்தவெளி தமருபோலக் கழற்கொடிக்காய்ப் போற்றிரண்டு சிரசுமாமே. 16

ஆமப்பா சிரசோடே கையுங்காலும் அப்பனே தத்து வங்கள் நரம்புமூளை, ஓமப்பா அஸ்திமுத லுரோமத் தோடு உத்தமனே பதினொருவா சலுமேகாணும், காமப்பால் விழுந்தவழி சிரசினாலே கைமுறையாய்த் தாயுண்ட அன்னஞ்செல்லுஞ், சோமப்பா நடுமையத் தொப்புளாலே சென்றதெலா மலமாகக் கழியுந்தானே.

தானென்ற பதினொன்றாற் சடந்தான் முன்னே சாத கமா யெடுத்துவரு மலடெவ்வாறு, ஊனென்ற பெண் ணுக்கு மனதுவேறாய் உருமுற்ற மௌனமுன்னப் பாவத்தாலே, சானென்ற மலடாவாள் புருஷனுக்குங் கைமுறையா யிப்படிதான் கண்டுகொள்ளு, தேனென்ற மொழியாட்குப் பரனார்சொன்னார் செகமெலா மிப்படி தான் செனித்தவாறே. 18

தசவாயுக்களின் பெயர், பிராணவாயு இருப்பிடம்.

பிலத்துநிற்கும் பிராணனோ டபானன்வியானன் பிரி யாத வியானன்சமா னனோடுன்மன், நலத்துநின்ற நாக

னெழிற் றிருகரன்றானும் நற்றேவ தத்தனொடு தனஞ்
செயன் பத்தாகும், இலக்கமுடன் பிராணனிலை மூல
மதிற்றோன்றி யெழுந்துசிர சளவுமுட்டி யிருவின்
கீழாய், கலக்கமற நாசிவழி யோடும் ஈராறில் கடுகி
யெட்டு வுட்புகுந்து கழியுமோர்நான்கே. 19

அபானன் வியானன் சமானவாயுக்கள்.

உந்தியெனுந் தலத்தின்கீ ழபானனின்று உறுதி
மல சலங்களையுங் கழலச்செய்யும், விந்தையெழில் வியா
னன்தோ ளதனில்நின்று மிகக்களையுந் தவனமு முண்
டாகச் செய்யும், பித்தஉதா னன்செயலுண் டசனந்தன்
னைப் பெருநாடி நரம்புவழி யூட்டல்செய்யும், இந்த
வுடல் தனைவளர்க்குஞ் சமானன்தானு மியாவையுமே
மிஞ்சவொட்டா திருக்குமென்றே. 20

கூர்மன் நாகன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன்
வாயுக்கள்.

கூர்மனிரு விழியில்நிமைத் திடுமேநாகன் கொட்டாவி
விக்கலெனுங் கொடுமைசெய்யும், தீர்மைகிரு காதீட்டு
முடிக்கவைக்குந் தேவதத்தன் விழித்துமே சயனஞ்
செய்யும், பேர்மன்னுந் தனஞ்சயன்மேற் கிற்கிரண்
டாய்ப் பிளந்திடும்போ லதுவோடிப் போவதாகும்,

நேர்மையறிந் திடுவையினி நாடிபத்தின் நிலைமைதெரிந்
திடவிபர முரைசெய்வோமே. 21

தசநாடிகளின்பெயர்கள், சுழிமுனைநாடி
இடகலை பிங்கலை.

சுழிமுனையாம் இடகலைபின் கலைகாந்தாரி தூயத்த
சிங்குவலம் புடைபுருடன்குருனும், எழிற்குருவின் சங்
கினையோ உரைந்தாகநின்ற தசனாடிபத்தும் நிலைத்த
நாம, மொழிவதுகேள் சுழிமுனையென் பதுமூலத்தில்
முளைத்துநடு வெழுந்துசிர அளவும்நிற்கும், பிரிவழி
யார் சுழிமுனையின் கலைகள்தோன்றிப் பிறந்துயிரு நாசி
யிட மோடிநிற்கும். 22

காந்தாரி அத்தி சிங்குவை அலம்புடை புருடன்
குருநாடிகள்.

கண்டமதில் நின்றுகாந் தாரிநாவில் கரைத்தநீர்
பொசிபவுபா யங்கள்செய்யும், அண்டசெவி தனிலத்தி
சிங்குவைநின்று அவத்தையோர் நான்கினுக்கும் ஊமை
யென்னும், விண்டஅலம் புடைபுருடன் இருவழியில்
நின்று மெய்மறந்த போதுஅசை வாகிநிற்கும், கொண்
டகுரு நாடியீரலிலேபற்றிக் குடல்புரட்டி வாயில்நீர்
சுழற்றிநிற்கும். 23

சங்கினிநாடி விடையம், ஐந்தின்பெயர்கள் வனவிடையம்.

சங்கினியென் பதுநாபி குய்யப்பற்றித் தானிருக்கு மொன்றையுமே மிஞ்சொட்டாமல், அங்கும்அதி காரி யனோ டம்பைத்தொன்றும் அறிவித்தோம் வசனாதி யைந்துங்கேளாய், இங்குவச னங்கமனந் தானத்தோடு இருந்தஏழின் விதர்க்கம்ஆ னந்தம்ஐந்தில், பொங்குவச னாதியவன் வாக்கில்நின்று பொருந்தவசனத்தையவன் பிறப்பிப்பானே. 24

வியாதிகளை அஷ்டவித பரீக்ஷைகளாலும் நிச்சயித்தல்.

தரணியுள்ள வியாதிதனை யஷ்டாங்கத்தால் தானறிய வேண்டுமது யேதேதென்னில், திரணியதோர் நாடி கண்கள் சத்தத்தோடு தேகத்தி னதுபரிசம் வானம் நாக்கு, இரணமல மூத்திரமா மிவைகளெட்டும் இதம் படவே தான்பார்த்துக் குறிப்புக்கண்டு, பரனருளாற் பெரியோர்கள் பாதம்போற்றி பண்புதவராமற் பண் டிதஞ் செய்வீரே. 25

நாடிகள் நிற்குமிடங்களும், வாதநாடிநடையும்.

செய்கின்ற நாடிபெரு விரலின்மேலாய் திருந்திழை மூன் றங்குலத்தி னடுவதாகத், தைகின்ற கோதும்பை

யரிசிபோலச் சர்வம்ஷியா பித்திருக்கு மதுதான் கூறில், கையடியுங் காலடியும் நாடிநிற்குங் கன்னியருக் கிடப்புறமாங் கணவர்க்கங்கே, மைகின்ற வலப்புற மாம் வாதநாடி வந்துமுன்னே நடக்குமப்பால் வகை சொல்வேனே. 26

சொல்லுகின்ற பித்தநாடி தோற்றுமப்பால் தொ டர்ந்து சிலேட்டுமநாடி தோன்றுமப்பால், அல்லு நிறக் குழலாளே நாடிநின்றால் ஆச்சரிய நாடியென் றறிந்துசொல்லு, மல்லுகின்ற வாதத்தி னுடியங்கே வக்ரகதியாய்நடக்குந் தவளைபோல, நல்லுகின்ற மாமி யட்டை தொட்டிலாட்டல் நன்றாகயிப்படிதான் நடக்குந் தானே. 27

பயித்தியநாடிநடை சிலேட்டுமநாடிநடை வாதமும் பித்தமும் தொந்தித்த நாடிநடை.

நடக்கும் பயித்தியஞ் சவலைப்பிள்ளை யதுபோலும் நடனமயி லன்னம்போற் காகம்போலும், திடக்குஞ் சிலேட்டும நாடியது யிலங்கும் பட்சிசெய்ய புறூவூர்க் குருவி கோழிபோல, அடக்கமாய் நடக்குமது மயிலே சொன்னேன் அவ்வளவே வாதபயித் தியத்தின் தோற்றம், மடக்கின்ற காடைபோல் நடந்துபின்னை மஞ்ஞையென நடக்குமது மதித்துக்கூறே. 28

வாதசிலேட்டுமந் தொந்தித்தநாடி, அசீரணநாடி, மத்திரிதயநாடி, ஸ்திரீசங்கைநாடி, மலபந்தநாடி, சன்னுவாதநாடிகளின் வருகை.

கூறுகின்ற வாதசிலேட்டுமங்கூடில் கோழியட்டை யெனநடக்கும் அசீர்ணநாடி, தூறுகின்ற மத்திரி தயத்திநாடி தூங்குகின்ற காகநடை யென்றுசொல் வார், தேறுகின்ற ஸ்ரீசங்கை இப்படியாய்நின்று தீவிர மாய் நடக்குமல பந்தநாடி, ஊமையன்னம் போல்நடக் குஞ் சன்னிவாதம் உயர்நாடி விதிகளையு முறைக்கக் கேளே. 29

குடிலை சூட்சுமவாயு ஜன்னிவாதம் சங்கினி காந்தாரி நாடிகளினடைகளறிக.

உரைத்த விரகின்கட்டில் மூஞ்சூறு உலவுதல் போலே நடக்குங் குடிலைவாயு, விரைத்தெழுந்தே மாந்தமா யிருந்துபின்னும் விதமாக நடக்குமது சூட் சுமவாயு, புரைந்தரும் இவ்வகையின் சன்னிவாதம் பொருப்பாகக் குவிந்தமுலை போலுங்கொங்கை,முரைத் தெழுந்த சங்கினிதா காதாரிபின்னே முறைமை சாதம் நாடியென முனைவர்தாமே. 30

தேகங்களின் பரிசங்களும், நிறங்களும் வருங் குறியறிதல்.

முனைகின்ற தேகபரிசத்தைப் பார்க்கில் முன்வாதத் தேகிக்குச் சரீரஞ்சற்றே, அனைகின்ற உஷ்ணமாம் பயித்தியதேகிக் கதிகமுண்டா மப்பால் சீதளமாய் நிற்கும், சுனைகின்ற சிலேட்டுமந்தான் சூழ்ந்தேகிக்குத் தொந்தகுணம் பலவிதமாய் நிறந்தான்கூறில், பனை வாத தேகநிறங் கறுத்துநிற்கும் பயித்தியதேக நிற மஞ்சள் சிவப்பதாமே. 31

சப்தலட்சணம்.

தாமே சிலேட்டும தேகம் நிறம்வெளுப்பு தான் தொந்த தேகமிந்நாள் விதமாய்நிற்கும், மாமயிலே சத்த மது மறியவேண்டில் வாதரோகி சமதொனியாம் வார்த் தைபேசும், ஈமதுள்ள பித்தந்தா னுறக்கக்கூறும் இயம் பிடுஞ் சிலேட்டுமரோகிக் கீனச்சத்தம், நாமுரைத் தோம் தொந்தரோ கிக்குத்தானிந்த நால்விதமாய் மொழிந்தசத்தம் நயந்துகாணே. 32

காணுகின்ற வாதரோகிக்குக் கண்கள் கருநிறமாய் கொந்துமிகத் தண்ணீர்பாயும், பூணுகின்ற பித்தரோ கிக்குமஞ்சள் போலிருக்குஞ் சிவப்புநிறப் பொலிவு

தோன்றும், பேணுகின்ற சிலேட்டுமரோ கிக்குக்கண் கள் பீளைகட்டி வெளுத்திருக்குஞ் சன்னிவாதம், காணுகின்ற சிவப்புடைத்தாய் வந்துவீங்கி வந்திடுங் கா மாலையென வகுத்துச்சொல்லே. 33

வாதமலம் பித்தமலம் கபமலம் தொந்தமலம்
வாதச் சிறுநீர் நிறங்கள்.

வந்தமா வாதரோகிக்குத் தானும் மலமிருகிக் கட்டுப் பட்டுக் கருத்துத்தோன்றும், சுத்தபித்த ரோகிமல மஞ்சளாகில் சிவப்பாகில் சேர்ந்திருக்குஞ் சிலேட்டு மருக்கு, சொந்தமலம் வெளுத்திருக்கும் மலக்கட் டான தொந்தமலம் பலவிதமாய்த் தோன்றிக்காணும், விந்தமுள வாதரோகி சிறுநீர்தானும் வெளுத்திருக் கும் பயித்தியர்நீர் விதஞ்சொல்வேனே. 34

பயித்தியர் சிறுநீர் கபநீர் தொந்தநீர்
வாதரோக நாவு பித்தரோக நாவு நிறங்கள்.

விதமுள்ள பயித்தியர்தன் சிறுநீர்மஞ்சள் வித முடைத்தா யிருக்குமல்லால் சிவப்புத்தோன்றும், நுறையுள்ள சிலேட்டுமத்தோர் நீர்தான் மெத்த நுறைகலக்குந் தொந்தநீர்நால் விதமாய்க்காணும், கதை யுள்ள நாவினிறஞ் சொல்லில்வாதந் தோன்றினர்க்கு

வெடித்து முட்போற் கருத்திருக்கும், கதையுமல்ல சிவந்தாலும் பசித்தாலுந்தான் கணமுள்ள பயித்தியர் நாள் கணக்குத்தானே. 35

கபரோகநாவு ஜன்னிரோகநாவு தொந்தரோகநாவு.

தானமொடு வாய்வெளுத்து நீருண்டாகிற் முன்சிலே ட்டும நாவாகும் ஈரமற்ற, ஆனைமுட்போற் கறுக்கில் சன்னி ரோகநாவாய் அதமதொந்த நாநிறம்நால் வித மாய்த் தோன்றும், ஆனவிவ் வகையெட்டு மறிந்த பேரை அவனிதனிற் பண்டிதரா யறியச்செய்வார், ஈன மில்லாப் பொறியடக்கும் பெரியோரன்றி யெய்தாது யாவருக்கு மியம்புங்காலே. 36

தோஷக் குறியறிதல்.

பரவியவாதநாடி பக்கமேதுடியாவண்ணம், புரவிய புழுப்போலூர்ந்து புலன்கெட வதிர்ந்தே யோடில், சுர முறுமேழாநாளில் தோஷம்வந் தணுகிநாவை, யுலமுறப் பேசவொட்டா துளறியே குளறிநிற்கும். 37

மேற்படி தோஷந்தீர மயில்நெய்.

பேச்சது குளறிநின்று பெருகவன் மூச்சுமுண்டாம், ஆச்சுபன் னிரண்டுநாள்தா னப்படிகிடக்கிற்பின்பு, கூச் சீர மயிலினெய்யிற் குலவியசம்பு கூட்டித், தேச்சுமே லுள்ளுங்கொள்ளத் தோஷமுஞ் சிதைந்துபோமே. 38

வாதமெலிவு தோஷம்.

வாதமே மெலிந்துவிம்மி வரண்டது புரண்டுதத்தி,
தேசமா யரணைவால்போற் சிக்கியே துடித்துநிற்கில்,
வாதையே பெருகிமேலில் வந்திடுந் தோஷந்தானென்,
றோதினார் முன்னோரிந்த வுவமையைக் கண்டுசொல்லே.

சர்வாங்கவாத சன்னிக்குணம்.

கூரிட்ட வாதநாடி கோழிபோற் கிண்டிநின்றால், வா
ரிட்ட முலைநல்லாளே வாதமாஞ் சன்னியாகும், பேரி
ட்ட தெடுத்தெடுத்துப் பிலப்படுத் தியங்குமாகில், ஆறி
ட்ட தேகத்துண்டா மதுசரு வாங்கமாமே. 40

மேற்படி நோய்தீர மருந்து.

பதறிய வாதநாடி பாய்பரி போலேவோடிச் சிதறிய
மூன்றுநாளில் சேர்ந்திடுங் குதிரைவாலி, மதறியாய்த்
தொண்ணூற்றாறு நாழியில் மரிக்காவிட்டால், விதரியாய்
வேம்பினெண்ணெய் விஷமுஷ்டித் தைலங் கூட்டே. 41

அகஸ்தியர் வைத்தியசாகரம்-41

முற்றிற்று.

சிவமயம்.

ஐ ந் தா வ து,

அகஸ்தியமகாமுனிவர்

வை சூ ரி நூ ல் - 80.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பூரணமாய் நிறைந்துநின்ற சோதிபாதம் போற்றி செய்து உமைபதத்தைப் புகழ்ந்தங்கேத்தி, காரண மாய் நிருவாணிப் பாதம்போற்றிக் கருணைபெற்றக் கமலமுனி பாதம்போற்றி, ஆரணமாய் வல்லோர்கள் பாதம்போற்றி அழகாகவை சூரிவருங் குணமு மவிழ் தம், வாரணமாம் வரலாறு விரித்துச்சொல்வேன் வகைபெறவே கணபதியை மகிழ்ந்தங்கேத்தே. 1

ஏத்தியே போற்றிசெய்து பின்புகேளா யிதமான வைசூரி குருநோயென்று, போற்றியதோர் போடக மாய் அம்மையென்றும் புகழான நால்வகையாய்ப்பிறந்த ரோகம், சாற்றியதோர் சாத்தியங் கசாத்தியங்கூட தய வாக யவர்களு மறிந்துநன்றாய்ப், பார்த்திடுநீ வயற்றி னது பேரைக்கேட்கிற் பரிவாக விருநான்கு மூன்று மாமே. 2

ஆமென்ற வைசூரியது வருவதேது அழலான காரணந்தா னறியச்சொல்வோம், ஓமென்ற சரீரத்தில் வேகமிஞ்சி வெக்கையொடு திரேகமெல்லாஞ் சூடுக்கொண்டு, காமென்ற மூளையது கொதிப்புமீறிக் கனமான அஸ்தியதைத் துளைத்துக்கொண்டு, பாமென்ற பதினொரு ரோகந்தானும் பரிவாக திரேகத்திற் பிறந்தவாறே. 3

வாறான வைசூரியது கண்டபேரை வளமாக மற்றொருவர் கண்டபோதே, தேறாத * பயஞ்சனித் திருதயத்திற் றிறமில்லாக் கமலமதில் கொதிப்புண்டாக்கி, சீரானவகையுடனே ரோகங்காணுஞ் சேகரமாய்ச் சரீரத்திற் பற்றிக்கொள்ளும், மாறாமற் பதினொன்றின் பேரேதென்னில் வகையாகச் சொல்லுகிறேன் கேளுகேளே. 4

வைசூரியின் நாமங்கள்.

கேளப்பா பதினொன்றின் பேரைநன்றாய் கிருபையாம் பனைமுகரி பாலம்மையென்றும், வாளப்பா வரகுதரிக் கொள்ளம்மை யென்றும் வளமான கல்லுதரி கடுகம்மைகூட, தோளப்பா மிளகினுட னுடம்புரிதானுந் திறமானக் கரும்பனிச்சை வெந்தயமுமாகும்,

* பயஞ்சனித்து-பயம்பிறந்து.

பாளப்பா பாசிபயற் றம்மையோடு பதினொன்றின் பேரெனவே பகர்ந்திட்டோமே. 5

பனைமுகரியின் குணம்.

பகருவோம் இவற்றினுட குணத்தைக்கேளு பரிவான பனைமுகரி பரிட்சைதன்னை, நிகரான காய்ச்சலது மிதமாய்க்காயும் நேரான உடல் நடுக்குங் கண்சிவக்கும், பகராமல் * கண்ட † துண்டம் வீக்கங்காணும் பரிவானம் பெரும்பாடு காணுங்கண்டீர், செகமீதி லிதினாலே பித்தெடுக்குந் தேகத்தில் சன்னியது சேருங்காணே. 6

பாலம்மையின் குணம்.

காணப்பா பாலம்மை குணத்தைக்கேளு கடுகவே காச்சல்கண்ட மூன்றுநாளில், தோணப்பா சிரசி லன்றே 0 குருவேகாணுஞ் சொற்பெரிய உடம்பு கடுகடுப் புண்டாகும், பேணப்பா ஏழாநாள் நீரைகட்டி பிதமான ஒன்பதாநா ளிறங்குங்கண்டாய், ஆணப்பா பதினோரா நாளிற்றனே அடைவாக ஆரோக்கிய ஸ்நானஞ் செய்யே. 7

---

* கண்டம்-கழுத்திலும். † துண்டம்-மூக்கு.
சிரம்-தலை. 0 குரு-அம்மை.

மிளகம்மையின் குணம்.

செய்யப்பா மிளகினுட குணத்தைக்கேளு சிறப்பாகக் காச்சலது மிதமாய்க்காயும், மையப்பா வுடம்பெல்லாங் கடுப்பெடுத்து வளமான யிடுப்பதுவும் வணங்காதப்பா, மெய்யப்பா உடம்பெல்லாம் வீக்கங்காணும் மெலிவாக மூர்ச்சையது மிகவேகாணும், பொய்யப்பா வில்லையென்று சொன்னேம்பாரு புகழாக வேழாநாள் கொல்லுந்தானே. 8

வரகுதரி யம்மையின் குணம்.

தானென்ற வரகுதரி குணத்தைக்கேளு தய்வாகக் காய்ச்சலது நன்றாய்க்காயும், வானென்ற மூன்றுநாள் குருவேகாணும் வகையாக வாயாலே யுதிரங்காணும், தேனென்ற வேழாநாள் நீரைக்கட்டிச் சிறப்பாக பதினென்றி லிறங்குங்கண்டாய், மானென்ன நீர்தாரை ரத்தங்காணும் மக்களே யிதினுடைய மகிமையாமே.

கல்லுதரி யம்மையின் குணம்.

மகிமையென்ற கல்லுதரி குணத்தைக்கேளு வளமான காய்ச்சலது நன்றாய்க் காயும், செகமகிழ வாந்தி பண்ணும் பேதிகாணுஞ் சீராக மூன்றுநாள் சிரசிற்காணும், அகமகிழ சக்கின்கினி போலேகாணும் அழகான வேழாநாள் நீரைக்கட்டி, புகழாக பத்தாநா ளிறங்

குங் கண்டாய் புண்ணியனே பதினேழில் ஸ்நானஞ் செய்யே. 10

உப்புதரி அம்மையின் குணம்.

செய்யவே உப்புதரி குணத்தைக்கேளு செயலாகக் காச்சல்கண்ட மூன்றாம்நாளில், ஐயமாஞ் சிரசுதனிற் குருவேகாணு மழகான சரீரமெல்லா முப்புபோலாம், பையவே வைந்தாநாள் நீரைக்கட்டிப் பரிவாக வேழா நா ளிறங்குங்கண்டாய், நையவே பதினொன்றில் ஸ்நானஞ்செய்து நலமாக வமிழ்தமும் நன்றாய்ச் செய்யே.

கடுகம்மையின் குணம்.

செய்யப்பா கடுகம்மை குணத்தைக்கேளு சிறப்பாக காச்சல்கண்ட மூன்றுநாளில், வையப்பா சிரசுதனிற் கடுகுபோலே வளமாகக் குருவதுவும் வகையாய்க் காணும், மெய்யப்பா வுடம்பெல்லாம் வீக்கங்காணும் விளங்கவே மென்னிகட்டுங் குரலுங்கம்மும், ஐயப்பா சடுதியிலே பேதிகாணு மழகான கடுகம்மை உண்மை தானே. 12

கடும்பனிச்சை அம்மையின்குணம்.

தானென்றக் கரும்பனிச்சை குணத்தைக்கேளு தரியாமல் காய்ச்சல்கண்ட நாலாநாளில், சானென்ற சிரசுதனில் குருவேகாணுங் கைக்கடங்கா கடுப்பெடுத்

துக் கருக்குமேனி, வானென்ற குருவதுவு முன்னே வாங்கும் வளமாக பேதிகண்டு மூர்ச்சையாகும், கோனென்ற மலசலமுங் கட்டித்தானால் குறிப்பாக பதின்மூன்றி லிறங்குந்தானே. 13

கரும்பநிச்சை அசாத்தியகுணம்.

இறங்குமுன்னே வுடம்பெல்லாம் விறிந்துபோகு மிதமாகக் கிருமியதுண் டாகுங்கண்டீர், கறங்குபோல் பிறக்கினையு மில்லையப்பா கனமான சுவாசமது மேலே காணும், அரங்குபுகழ் நாளிருபத் தொன்றுசென்றால் அடவாக ஸ்நானமது வன்பாய்ச்செய்வாய் திறங்கமிடு கடவுள்செய லுண்டாகுமானால் திறமாகத் தீருமது திண்ணந்தானே. 14

வெந்தய அம்மையின்குணம்.

தானென்ற வெந்தயத்தின் குணத்தைக்கேளு தய வாகக் காய்ச்சல்கண்ட மூன்றுநாளில், கானென்ற சிரசுதனில் குருவேகாணுங் கண்டபின் யேழுநாள் குருவேகட்டி, வேனென்ற ஒன்பதிலே யிறக்குங் கண் டாய் விபரமாய்ப் பதினைந்தில் ஸ்நானஞ்செய்து, பானென்ற வுடம்பதுவும் லகுவேயாகும் பரிவான வெந்தியத் தின் பரிசுதானே. 15

பாசிப்பயறு அம்மையின் குணம்.

பரிசென்ற பாசிபயற் றம்மைதானும் பரிவாகக் காய்ச்சலிலே பித்தெடுத்து, தரிசென்ற மூன்றுநாள் குருவேகாணுந் தயவாகவேழாநாள் நீரைக்கட்டி, துரிசாக வொன்பதிலே யிறங்கும்பாரு சுகமாகப் பதினோந் தில் ஸ்நானஞ்செய்து, பிரியமுடன் சரீரமது பிலக்கும் நன்றாய்ப் பேரான நீர்மோருஞ் சாதங்கொள்ளே. 16

கொள்ளம்மையின் குணம்.

கொள்ளப்பா கொள்ளென்ற அம்மைதானுங் குறிப் பாகக் காய்ச்சல்கண்டு பித்தெடுக்கும், கள்ளென்ற சன் னியது கூடத்தோன்றுங் கனமான வலிப்பதுதான் காணுங்கண்டாய், விள்ளப்பா காய்ச்சல்கண்ட மூன்று நாளில் விபரமாய்க் குருவதுவுஞ் சிரசிற்காணும், மெள் ளப்பா இந்தவகை கண்டபோதே மேலான பதின் மூன்றி லிறங்குந்தானே. 17

தானென்ற பதினொன்றில் பேரைசொல்லித் தப் பாமலவைகளுட குணத்தைச் சொன்னேன், வேனென்ற விச்சிரிப்பு நீர்க்கொளுவன்றானும் விபரமாய்த் தவளைகுரு மூன்றின்பேரை, நானென்ற விவர்களுட குணத்தைச்சொல்லக் கடவுளிடப் பாதம்போற்றிக்

கருத்தில்வைத்து, தேனென்றமொழிபகருமாயிபாதஞ் சிந்தையுற்று மனதிலெண்ணித் தெரிவித்தேனே. 18

விச்சிரிப்பு அம்மையின் குணம்.

தெரிசித்தேன் விச்சிரிப்பின் குணத்தைக்கேளு திறமாகக் காய்ச்சல்கண்டு கண்சிவக்கும், பரிசித்தல் தலைவலி வாந்திபண்ணும் பாங்கமாய் மூன்றுநாள் சிரசிற் காணும், பெரிசித்தே தேகமெல்லா முமிபோற்காணும் பிலமாக வாரியிட்டே மறையுங்கண்டீர், அரிசித்தே யேழாநாள் ஸ்நானஞ் செய்து ஆனபின்பு வயிற்றுளைவு மாறுந்தானே. 19

நீர்கொள்ளுவன் அம்மையின் குணம்.

ஆகுமென்ற நீர்கொளுவன் குணத்தைக்கேளு அழகாகக் காய்ச்சல்கண்ட மூன்றுநாளில், வாகுமென்ற சங்குகளி போலேகாணும் வளமாக யேழாநா ளிறங்கிப் போகும், தாகுமென்ற வொன்பதிலேஸ்நானஞ்செய்து தயவாக தேகத்தைக் குளிர்ச்சிசெய்து, பாகுமென்ற பரமனையும் போற்றிசெய்து பண்பாகவாயிபதம் போற்றிசெய்யே. 20

தவளை அம்மையின் குணம்.

போற்றியே தவளையென்ற குருதானப்பா புகழாகக் காய்ச்சல்கண்டால் நடக்கொட்டாது, போற்றியே சூலை

யைப்போல் வலியேகாணும் போஜனஞ்செல்லாது தவி ரப்பண்ணும், சாத்திகமா யொன்பதா நாளானபின்பு தருகாமலிறக்குமது தப்பாதப்பா, ஆக்தியதோர் பதி ணென்றில் ஸ்நானஞ்செய்து அழகாகக் குருபதத்தை யறிந்தங்கேத்தே. 21

கரும்பநிச்சையாய் பிண்டோற்பத்தி ஆகா.

அறிந்தபின் யிவர்களுட குணந்தானப்பா அந்தந்த சரீரத்திற் கடுத்தவாளும், தெரிந்ததொரு குகைகுறி கள் தோன்றுமப்பா திறமானக் கரும்பனிச்சை விந் தைக்கொல்லும், பறிந்ததொரு கெர்ப்பத்தை யழியப் பண்ணும் பண்பாக அவர்களுக்குப் பிள்ளையில்லை, முறி ந்ததொரு இவர்களுட குணமுஞ்சொன்னேன் முறை மையுடன் மருந்துவகைச் சொல்லக்கேளே. 22

அம்மைகளுக்கு ஆள்காட்டிக் குருவிமுட்டை அவிழ்தம்.

கேளடா ஆள்காட்டிக் குருவிமுட்டைக் கிருபை யுடன் பார்த்தெடுத்துக் கொண்டுவந்து, ஆளடா சட்டி யிலே உடைத்துவூற்றி யழகானபுழுங்கலரிசி சம்பா வப்பா, வாளடாமுட்டைகரு நனையுமட்டும் வளமான அரிசியதை மிதமாய்ப்போட்டு, தாளடா வடுப்பேற்றிப்

பதமேபார்த்துப் தவிராமல் கருகாமல் பொரித்து வாங்கே. 23

வாங்கியே செப்பதனி லடைத்துக்கொண்டு வரிசை யாய்க் காய்ச்சல்கண்ட வுடனேநீதான், தாங்கியேபிட்டு கையி லரிசிகொட்டி தயவாக வலதுகையால் பிடியே யள்ளி, ஏங்கியேதிரியாம லுள்ளேகொள்ளே இதமாக வரிசிதொகை யானமட்டும், பாங்கியே வைசூரியது அதி கம்வாராப் பரிவான்தேகத்துக் கழிவேயில்லை. 24

இல்லையென்று வெகுநேரங் கொண்டால் போதும் இதமாக மருந்துவகை வேறேசொல்வேன், வல்ல மையா யிம்முறையைச் செய்தபேர்க்கு வைசூரியது அதிகமுமே வாராதப்பா, பல்லவமா யுலகிலுள் ளோர் பிழைக்கவென்றுப் பரிவாகப் பெரியோர்கள் செய்தமார்க்கம், நல்லதென்று வுலகத்தோர் செய்தால் தானே நமனுமே வாராது நவிலுவோமே. 25

பாதரக்ஷை குருபற்பம்.

நவிலுவோ மிவர்களுக்கு மருந்துகேளு நலமாகக் காய்ச்சல்கண்ட வுடனே நீதான், புவிதனிலே யழகான பாதரட்சைப் புகழாகச் சுட்டதனைப் பற்பமாக்கி, பவி லாக வொருகடிதான் வெந்நீர்தன்னில் பாகமாய்க் கொண்டுவிடு மூன்றுநேரம், தவிராமல் செய்தபின்பு

சொல்க்கேளு சாதகமாய்ப் பின்மருந்து மொழியக்கேளே. 26

மொழிந்ததொரு மருந்ததுவும் பாகத்தோடே முறைமையாய்ச் செய்துகொண்டால் கற்பம் நன்றாய், அழிந்ததொரு வைசூரியெலாங் குணமேயாகும் அழகான மருந்ததனை யன்பாய்க்கொள்ளு, கழிந்ததொரு கர்மங்கள் தீர்ந்தபின்பு சாதகமாய் ரோகமது நன்றாய்த் தீரும், தெளிந்ததொரு வாந்திபண்ணி பேதிகாணில் திறமாக * நஞ்சிநிலை பறித்தான்வேரே. 27

வைசூரியால் வாந்திபேதி கண்டவர்க்கு மருந்து.

வேராகக் கொண்டுவந்து விதமுடன் நரம்புநோக்கி
சீரான வெந்நீர்விட்டுத் திறமுட னரைத்துக்கொண்டு
வாராக வைசூரிகாய்ச்சல் வகையுடன் வந்தபோது
நேராக புன்னைக்காயளவு வெந்நீரினிற் கொள்ள நன்றே.

கொள்ளுவாய்க்காலமேதான் குணமுடன் வாந்திபேதி
மெள்ளவே காணுங்கண்டீர் விபரமாய் மத்தியானம்
தெள்ளவே கஞ்சிகாய்ச்சித் திறமுடன் கொண்டபின்பு
அள்ளவே மருந்துதானு மடவுடன் சொல்லக்கேளே.

சொல்லக்கேள் மறுநாள் தன்னில் துவக்கமாய்க் காலமேதான், புல்லக்கேள் புளியண்டத்திரி புகழ்கோழி

* நஞ்சிநிலை-நஞ்சுமுறித்தான்பாலை.

யவரைகூட, மெல்லப்பா ருள்ளிசேர்த்து விபரமாய்
வைத்துக்கொண்டு, அல்லநீராகாரத்தி லடவுடன்
பிசைந்துவாங்கே. 30

வாங்கியேபடிகாலாக வகைபடக் குடிக்கநன்றும்
ஏங்கியேதிரியவேண்டா மிம்முறை மூன்றுநேரம்
பாங்குடன்சாப்பிட்டேதான் பரிவுடன் சென்றபின்பு
தாங்கியேமருந்துதானுந் தயவுடனின்னங் கேளே. 31

கேளப்பாபின்புநீதான் கிளர் * பிராயிலையுங்கூட
நாளப்பாமூக்கிரட்டை நலமுள்ள வேருங்கூட்டி
தாளப்பாதவகியான முருங்கைதான் சமூலஞ்சேர்த்து
ஆளப்பாநீராகாரத் தடவுட னிறுத்துவாங்கே. 32

வாங்கியே படிகாலாக வளருஞ் சீரகமுஞ்சேர்த்து
தாங்கிபா ருள்ளிகூட்டி தனிமையாய்க்குடிக்க நன்றாய்
நீங்கியே மூன்றுநேரம் நேர்மையாய்க் கொண்டபின்பு
தாங்கியே மருந்துதானுந் தயவுட னின்னங்கேளே. 33

வைசூரியால்வந்த கிறுந்திக்கு மருந்து.

தயவுடன் வைசூரிதானுந் தாக்கியுட் கிறுந்திநின்றால்
நலமுடனிளநீர்தன்னை நலம்பெற சீவிப்போட்டு, திட

* பிராயிலை-பிராமிலை.

முடன் வெந்நீர்தன்னில் செயமுட னவிழ்த்துவாங்கி பயமுடன் கண்திறந்து பரிவுட னூற்றிக்கொள்ளே.

கொள்ளவே யிளநீர்குள்ளே கொடுத்திட மருந்து கேளாய், நள்ளவே தேற்றான்வித்து நவில்முத்தங் காசுங்கூட்டி, தெள்ளுசீரகந்தான் சேர்த்துத் திறமதா யரைத்துக்கொண்டு, கொள்ளவே வைசூரிதானுங் குணமுடன் கிறுந்தல் தீரும். 35

வள்ளலே யிதுவுஞ்செய்து வளர்கிடாரிச் சாணிப்பா லில், நள்ளவே * பூநாகந்தா னவின்றதோர் விராகனைத் தான், தெள்ளுசீரகமுஞ்சேர்த்து திறமதா யரைத்துக் கொண்டு, விள்ளவே யுள்ளேகொள்ள வெக்கையுட் காந்தல்தீரும். 36

தீரவே † கற்பக்கல்லைத் திறமதாய்ப் பலகால்வாங்கி, ஆரவே யுடைத்துக்கொண்டு வழங்குமான் கொம்புஞ் சேர்த்து, ஊரவே ‡ காண்டாமிருக முற்றதோர் மூன்று மூன்றாய்ச், சாரவே யறைத்துக்கொண்டு சாப்பிடக் கிறுந்தல்போமே. 37

* பூநாகம்-நாக்குப்பூச்சி.

† கற்பக்கல்-சுக்கான்கல்.

‡ காண்டாமிருகம்-காண்டாமிருகக்கொம்பு.

கிறுந்தலுக்கு மருந்து-வேறு.

போமென்ற மருந்ததுவுஞ் சொல்லக்கேளாய், புக ழானப் பிராயனிலையைப் புறித்துவந்து, ஓமென்ற புதுச்சட்டி தன்னிற்போட்டு வுற்றநீ ராகாரத்தாற் பிசரிவாங்கி, பாமென்ற கால்படிதா னுள்ளேகொண் டால் பண்பாகக் கிறுந்தினது நீரேகொள்ளும், தே மென்று மிரங்கியது லகுவேயாகுந், திறமான நோயது வுந் தீருந்தானே. 38

பேதிகண்டவர்களுக்கு மருந்து.

தானென்ற வைகூரியது சரியுமுன்னே தருகாமல் பேதியது கண்டதானால், ஊனென்ற * இச்சியுள இலை பரித்து வுறமாகச் சட்டியிலே உராய்ச்சிக்கொண்டு, நானென்ற நீராகாரம் விட்டுவாங்கி நினைவாக மூன்று தினங் கொண்டால்தீரும், கானென்ற சுக்கும்வேப்பீர்க் குங்கூட்டி கனமான விலாமிச்சம் வேருங்கூட்டே. 39

கூட்டியே முத்தமிட னிளவருப்பாய்க் குணமாக வறுத்ததனைக் கியாழஞ்செய்து, நாட்டியே கொடுக்க வதி சாரந்தீரும் நலமாக இன்னமொரு கிபாழஞ்சொல் வேன், ஆட்டியதோர் பொன்முசுட்டைக் கிராம்பு

* இச்சி-இச்சிமரம்.

தானும் அழகான வேப்பீர்க்கும் கியாழங்கொள்ளத் தாட்டிகமாய் பேதியது தீருங்கண்டாய்ச் சாதகமா யிம் மருந்தைச் சார்ந்துக்கொள்ளே. 40

பலசரக்குக் குடிநீர்.

கொள்ளவே பலசரக்குக் குடிநீர்தானுங் குணமாகச் சொல்லுகிறேங் கேளுநன்றாய், விள்ளவே ஆல்அத்தி வித்துதானும் விதமான அரசுடனே ஒதியுங்கூட்டி, மெள்ளவே இச்சிதுத்தி காசான்கூட மேலான சதிருடனே சுக்குமொன்றாய், அள்ளவே குடிநீராய்ச் செய்துகொண்டால் அதிசாரமுள்ளதெல்லா மகன்று போமே. 41

இரத்தக்கடுப்புக்கு மருந்து.

போமென்ற வைசூரி இரத்தக் கடுப்புக்கண்டால் புகழான காவலுட முட்டைப்பட்டை, ஆமென்று துவைத்தாவின் பாலில்சேர்த்து அழகாகப்பிழிந்துடனே வடியேகட்டி, காமென்றக் கால்படிதா னுள்ளே கொள்ளக் கடுப்பெடுத்த ரத்தமது கலங்கிப்போகும், தேமென்ற விம்மருந்து கொண்டபோதே திறமாகத் தீருமது தெரிந்துசெய்யே, 42

இதுவுமது.

செய்யவே வெண்ணத்தி வேரின்பட்டைத் திறமான ஈருள்ளிச் சீரகமுஞ்சேர்த்து, பையவேவெள்ளாட்டின்

பாலில்தானே பண்பாக வரைத்தருந்தக் கடுப்புந்தீரும், மெய்யவே ஈருள்ளி ஆவினெய்யில் விளங்கவே வேக வைத்துக் கொள்ளப்போகும், கையாரக் கண்டதிந்த மருந்தைக்கண்டால் கடல்கடந்து போகுமடா கடுப்புத் தானே. 43

அதிசாரத்திற்கு மருந்து.

தானென்ற வைசூரி யதிசாரங் கண்டால் அளவாக சீந்ததுதிக் காசுசுக்கு, தேனென்ற மேல்தோலைத் தள்ளிப்போட்டுத் திடமாகவேவறுத்துக்கியாழுங்கொள்ள, மானென்ற வதிசாரம் நிற்கும்பாரு மகிமையாய் மருந்து தான் மூன்றுநேரம், கானென்ற கியாழமது கொண்டால் தானே கலங்கியதி சாரமெல்லாங் கடலிற்போமே. 44

இதுவுமது.

போமென்ற * சிங்கிபற்பம் விராகனென்று, பூரான மான்கொம்புத் தண்ணீர்வாங்கிக், கானென்ற தண்ணீரிற் கலக்கிக்கொள்ளக் கழிச்சலதி சாரமுடன் கடுப்பும்போகும், வேமென்ற ஈருள்ளிச் சாறுங்கூட்டி விலங்கவே ஆவினெய்யில் விரவிக்கொள்ளத், தானென்ற கடுப்புடனே சீதரத்தம் தருகாமல் தீருமது தன்மைதானே. 45

* சிங்கிபற்பம்-மான்கொம்பு பற்பம்.

தொண்டைக்கம்மலுக்கு மருந்து.

தன்மையென்ற வைசூரியது *மென்னிக்கட்டி தரு காமல் சேத்துமந்தான் நெஞ்சில்நின்றால், வண்மை யென்ற கர்ப்பூரவள்ளிச்சாற்றில் வளமான கோரோ சினையுங் கூட்டியுண்ண, வெம்மையென்ற மொழியுண் டாய் கம்மல்தீரும் மெல்லியரே நீயிதனை விரும்பிச் செய்தால், கண்மையென்ற மாதளம்பூக் கியாழஞ்செ ய்து கருத்தேனுஞ் சம்பளச்சார் மூன்றுமொன்றே. ()

இதுவுமது.

ஒன்றாக மத்தித்துக் கொப்பளித்தால் ஓகோகோ மென்னிக்கட்டு வுடனேதீரும், நன்றாகக்கம்மலது வாங் கிப்போகும் நலமாக வுட்கொள்ள வாகாதப்பா,செண்டு மலர்க் கொங்கையரே யிந்தப்போக்கு செகத்திலிது வுச்சிதமாஞ் செய்துபாரு, மன்றாடி தேவியர்க்கு ஈசன் றானு மகிமையுட னுரைத்ததிது வாசியாமே. 47

சுரத்திற்கு கியாழம்.

ஆமென்ற சூரியது சுரமேகண்டால் அழகான வெலு மிச்சம் வேரின்பட்டை, சேமென்ற வேலமுடன் சீந்தி லாமிச்சந் திறமான பற்படகம் சந்தனமுமுத்தம், பாமென்ற வகையைந்தும் விராகன்வீதம் பண்பாகக்

* மென்னிக்கட்டி-தொண்டையைக்கட்டி.

கியாழஞ்செய் மூன்றுநேரம், வாமென்று குடித்திட வே சுரமுந்தீரும் வளமாக விம்மருந்தை வளமாய்ச் செய்யே. 48

செய்யடா வைசூரியத்தில் சுரமேகண்டால் திறமாக சொல்லுகிறேன் காமப்பூதான், பையவே விராகனுமோ வைந்தெடுத்து பாங்காகக் கியாழஞ்செய் தீருமெய் தான், மெய்யடா ஆவின்கோ ரோசினைக் காலாக விளங் கவே யதில்கரைத்து வுள்ளேகொள்ளு, நையடா சுரங் களெல்லாந் தீரும்பாரு நலமாகக் கிருந்தியது வெளி யிற்காணும். 49

மலக்கட்டிற்கு எண்ணெய்.

காணுமே வைசூரியிலே மலமேசிக்கில் கனமான தேகமுப்பிசமே காணும், தோணுமடா கியாழங்கள் கண்டபோது தொல்லுலகில் மருந்தொன்று சொல்லக் கேளு, ஆணுமடா ஈருள்ளி விராகனைந்து அழகான கற்கண்டு விராகனைந்து, பூணுமடா ஏரெண்டத் தெண் ணெய்தானும் புகழாகப் படிகாலி லரைத்துக்கொள்ளே.

கொள்ளவே மலசலங்கள் கட்டுவிட்டுக் குறிப்பாக வுப்பிசமும் குணமாய்ப்போகும், கள்ளமில்லா திரேக மதுக் குறுதியாகுங் கனமான மலசலங்க ளிறங்கு மப்பா, மெள்ளவே யிம்மருந்தை விரும்பிச்செய்து

மேலான பராபரத்தைத் தொழுதுபோற்றி. அள்ளவே யுமையாள்தன் பாதம்போற்றி அழகாக விம்மருந்தை யருள்செய்வீரே. 51

அருளான கலைக்கொம்பை யூறப்போட்டு வழகாகக் கழுவியதை யுலரவைத்துத், திரளான * வரத்தாலே ராவியேய்தான் தேர்ந்தபொலி பலமிரண்டு யெடுத்துக்கொண்டு, வருளான வெந்நீரைக் காய்ச்சிநன்றாய் மகிழ்வாகத் † தாளியிலே யூற்றிக்கொண்டு பொருளான மான்கொம்பின் பொடியைத்தானே புகழாகத் தண்ணீரி லூறப்போடே. 52

போட்டதண்ணீர் தனையிறுத்துத் தாகத்துக்குப் புகழாகக் கொடுத்துவரச் சொல்லக்கேளு, ஆட்டமிட்ட வைசூரியது லகுவாம் கண்டாய் அழகாக மூன்றுநாள் மறுதண்ணீர்செய், தேட்டமுடன் நோய்தீரும் பருவமட்டுந் திறமாக இந்தமுறை செய்துதீரு, வாட்டமில்லா நோய்தீருந் தப்பாதப்பா வாகாக யிம்முறையை வணங்கிச்செய்யே. 53

கண்ணுக்கொத்திடம்.

செய்யப்பா நேத்திரத்திற் கொத்திடமேகேளு திறமான சீரகம் பொட்டணமேகட்டி, ஐயப்பா முலைப்பா

* வரம்-அரம், † தாளி-பாலை.

லில் துவைத்துக்கொண்டு அழகான விழிதனி லொத் திடநன்ருகும், நலமான பொட்டணமாய்க் கட்டிக் கொண்டு, வையப்பா நீராகாரத்தில் தோய்த்து நன் ருய் வகையாக வொத்தவிழி விதனந்தீரும். 54

விழியில் குருவராமலிருக்க மருந்து.

தீருமடா விழியதனில் குருவராமல் செப்புகிறேன் மருந்தொன்று திறமாய்க்கேளும், ஆருமடா வைசூரி சுரங்காயும்போது வழகான 0 உள்ளிப்பூ வொன்று வாங்கே, பாருமடா மறுமனுடன் வாயாலென்று பத ராமலிருகண்ணி லூத்தத்தானே, காருமடா கண்தனி லே குருவராது கருத்தாக இம்முறையைக் கருதிக் கொள்ளே. 55

வாயில் நீர்தாரையில் காணுகிற ரத்தத்திற் கவுழ்தம்.

கொள்ளென்ற வைசூரியது கண்டபேர்க்குக் கொ டியதொரு வாயாலே ரத்தங்கக்கும், அள்ளென்ற நீரு டனேகூட அழகாக ரத்தமது காணுங்கண்டாய், விள் ளென்ற இம்முறைக்கு மருந்துதானே விபரமாய்ச் சொல்லுகிறேன் கேளுகேளு, தள்ளென்ற பூநாகமைந் தெடுத்து தவிராமற் கழுவிநன்று யெடுத்துக்கொ ண்டே. 56

---

0 உள்ளிப்பூ-வெங்காயப்பூ.

கொண்டதொரு நன்ருரி வேறுங்கூட்டிக் குறிப்பாக நரம்புதள்ளி மேல்தோல்போக்கி, அண்டதொரு விரா களிடை ரண்டெடுத்து வழகான முன்மருந்தோ டொக் கச்சேர்த்து, முண்டதொரு மான்கொம்பு சாந்து சேர்த்து முறைமையாய்க் கொம்பூருந் தண்ணீர்தன்னில். விண்டதொரு மருந்தெல்லாஞ் சேர்த்துத்தானே விபர மாய்க் கொண்டிடவே யுதிரம்போமே. 57

போமென்ற உதிரமது போகுநன்ருய்ப் புகழாக மூன்றுதினங் கொண்டாயானல், காமென்ற சந்நியது கடலிற்போகுங் கைக்கடங்கா தோஷமது கலங்கிப்போகும், தாமென்ற கிரந்தியது தீருங்கண்டீர் தளதளென மேலெழும்பி இறங்கும்பாரு, ஆமென்ற இம்மருந்தை யார்க்குச் சொன்னேம் அழகான சித்தருக்குச் சொன் னேங்கண்டீர். 58

சூலைக்கு மருந்து.

கண்டீரோ வைசூரியதில் சூலைகட்டில், கனமான வுவிழ்தமொன்று கழலக்கேளு, தெண்டிரையில் பழங் கூரை வைக்கோல் சேர்த்துத் திறமான வேம்பினிலைக் கூடக்கூட்டி, மண்டியவித் தொத்திட்டு வைத்துக் கட்ட மகிழ்வான சூலையது வாங்கிப்போகும், பண்டி

தரே இம்முறைமையை வைத்துமுட்டி பரிவாக வறுதினத்
தில் தீருந்தானே. 59

சூலைக்கு வேறு.

தானென்ற வேதுவொன்று சொல்லக்கேளு தயவா
கச் சொல்லுகிறேன் மனிதருக்காய், வானென்ற வட்ட
மிட்ட துத்திதானும் மகிழ்வாகச் சமூலமது வேக
வைத்து, நானென்ற ஒத்திட்டு வேதுவார்க்க நாளு
மொரு பதின்மூன்றில் சூலைவாங்கும், மானென்ற விழி
யணங்கேயிந்தப்போக்கைமகிமையில்லாப்பேர்களுக்கு
வுரைசெய்யாதே. 60

ஆறாதபுண்ணுக்கு மருந்து.

செய்யாத வைசூரியது புண்ணாராவிட்டால் திறமாக
மருந்தொன்று செப்பக்கேளு, கையாரமுத்தியது தான்
முத்தத்தேங்காயக் கனமாகத் திருகியந்தப் பூவை
வாங்கி, ஐயானப் புளியன்விரை மேற்றோல் தன்னை
அழகாகப் பொடிசெய்து பூவிற்சேர்த்து, மெய்யாகப்
பிசைந்துபிழி தைலம்வீழும் விபரமாய்த் தைலமதை
புண்ணிற்பூசே. 61

பூசவே புண்ணாறு மிதனைநன்றாய்ப் புகழாகச் செய்து
வர வீக்கம்போகும், நேசமாய் வைசூரியது சரிந்தே
ழாம்நாள் நினைவாக வரரோக்கிய ஸ்நானஞ்செய்ய, வாச

மாய்ச் சொல்லுகிறேன் கேளுநன்றாய் வகையான பருத் திப்பிஞ் சத்திப்பிஞ்சும், பாசமாய் சாதிக்காய்ச் சீரக மும்கூட்டிப் பரிவாக மோரிலரைத் துள்ளேகொள்ளே.

நலங்கிட்டு மூழ்க.

கொள்ளடா வேப்பிலையு மஞ்சள் தானுங் குணமான * மூதண்டங் கூடச்சேர்த்து, விள்ளடா மோர்விட்டு வரைத்துநன்றாய் மேலாக சிரசிற்கு தேய்த்துதானே, இள்ளடா வுடம்பெல்லாம் நலங்கேயிட்டுக் கிருபையாய் குளிர்ந்தசலந் தன்னைவார்ப்பாய், தள்ளடா இப்படியே மூன்றுநாள்தான் தயவாக வொன்றைவிட் டொருநாள் மூழ்கே. 63

மூழ்கியபின் வேப்பிலையு மஞ்சள் தானும் முசியாமல் தானரைத்துப் புண்ணிற்பூச, ஆழ்கியபின் தயிர்தேய்த் துத் தண்ணீர்வாரு அடவாக வொன்றை விட்டொரு நாள்மூழ்க, தேங்கியே தன் றேகமதின் பிணங்கள் போகுஞ் சங்கசிவா யின்னமொன்று திறமாக்கேளு, பாங்கியதோர் விளக்கெண்ணை நன்றாய்த்தேய்த்து பரி வாக † வுசிலையரப் பிட்டுமூழ்கே. 64

மூழ்கியபின் மோருஞ்சா தமுமேகொள்ளு முசியாம லிருள்ளிக் கூட்டியுண்ணு, ஆழ்கியபின் ஸ்நானஞ்செய்

* மூதண்டம்-அருகம் வேர். † உசிலை-சிக்கிராந்துள்.

நாளைத்தொட்டு அடராகவிப்படியே அசனங்கொள்ளு, தாழ்கியபின் தேகமது பிலக்கும்நன்றாய் தயவாக அசன மது நன்றாய்க்கொள்ளு, மாழ்கியபின் திரேகமது பில மேயாகும் முன்மதன்போல் திரேகமெல்லாங் குளிர்ச்சி யாமே. 65

வைசூரிகண்ட ஆறுமாதத்துக்குள் வியாதிவந்தால்.

ஆமென்ற வைசூரியது வந்தபேர்க்கு அழகாக சொல்லுகிறேன் விபரங்கேளு, தாமென்று ஆறுதிங் கள் செல்லுமட்டுஞ் சரீரத்தில் பிலனுமோ நன்றாயில்லை, வாமென்ற இதற்குள்ளே ரோகம்வந்தால் மகத்தான மருந்துதான் லகுவாய்ச்செய்வாய், தேமென்ற கடுங் கார வவிழ்தஞ்செய்தால் திரேகத்தில் பொல்லாப்புச் சேருங்காணே. 66

மறுமுள்ளு விபரம்.

காணப்பா வைசூரிவந்து தண்ணீர்விட்டால் கன்மான மருமுள்ளு வருவதேது, தோணப்பா வைசூரி கண்ட நாளைத் தொட்டுதுடங்கிய நாளொன்பதுக்குங் குருவே காணும், ஆணப்பா குருகண்ட நவதினத்தி லடவாக நீர்கொண்டு இறங்குங்கண்டாய், நாளப்பா இதங்குரு வில் தண்ணீர்விட்டால் நலமான மறுமுள்ளு காணுந் தானே. 67

தானென்ற மறுமுள்ளுஞ் காணும்போது தணலாகச் சரீரத்திற் சுரமேகாணும், மானென்ற வுடலதிலே மறு முள்ளுத்தான் வளமாகவேபுடைத்து ரணமுங்காணும், பானென்ற பலவகையாய்ப் புண்ணேகாணும் பரிவான சுரமதுவுந் தீரத்தானே, கானென்ற மருந்ததுவுஞ் சொல்லக்கேளு கடவுள்பதம் போற்றியே கேளுகேளு. 68

மறுமுள்ளுக்கியாழம் வேறு.

கேளப்பா சுரமுந்தீரக் கிருபையாய்க் கியாழம்சொல் வேன், வாளப்பா ஜாதிக்காயும் வளமான கருக்குமூலம், கேளப்பா கிராம்புகூடச் சீரகங்கூட்டிக்கொண்டு, நாளப்பா கியாழம்செய்து நலம்பெற இறுத்துவாங்கே. 69

வாங்கியக் கியாழந்தன்னில் வளர்நிம்பச்சாறுங்கூட்டி, ஓங்கியீருள்ளிச்சாறு முகந்துடன் கூடக்கூட்டி, பாங்குள்ள சட்டிக்காய்ந்து பரிவுடன் முரித்துவாங்கி, தீங்கில்லாத் தேனுஞ்சேர்த்துத் திறமுட னுள்ளுக்கீயே.

இரணத்துக்கு பூசுமருந்து.

ஈய்ந்திட்ட சுரமுந்தீரு மியல்புடன் இரணமுமாறும், வாய்ந்திடு மருந்துதானும் வகையுட னின்னங்கேளாய், பாய்ந்திட சூடன்றானும் பகர்வட்டத் துத்திச்சாற்றில், தேய்ந்திட மத்தித்தேதான் திருவிளக் கெண்ணைசேர்

த்து, சாய்ந்திட்ட ரணத்திற்பூச சகலபுண் ணுறுந்
தானே. 71

ஆரியவை சூரிவந்து வடுத்திடு மன்றேநீ தான், கூறிய
குதிரைலத்திப் புதிதாய்ப் பதினன்காக, தேறியே
யெடுத்துக்கொண்டு திறமதாய்ச் சட்டிதன்னில், பா
ரியத் தண்ணீர்விட்டுப் பாகமாய்க் கரைத்துவையே. 72

வைத்ததோர் தண்ணீர்தன்னை வகைபட சாமஞ்
சென்றால், கைத்ததோர் தெளிவிருத்துக் கனம்பெற
வுள்ளேகொள்ளு, மைத்ததோர் மருந்துக்கெல்லாம்
வகைபட இந்நீர்சேர்த்து, வைத்ததோர் மருந்தைச்
செய்தால் பலபலவை சூரியாமே. 73

ஆமென்ற லெத்தித்தானு மழகதா யன்றன்றைக்கு,
தாவென்ற புதிதாய்ச்சேர்த்து தயவாக வருந்துவீரா
கில், வாமென்ற வைசூரிவந்து வளர்ஸ்நானஞ் செய்யு
மட்டும், போமென்ற தாகத்துக்குப் பொருந்திய மரு
ந்துகேளே. 74

வைசூரிக்குப் பத்தியம்.

சேரும்பத் தியத்தைக்கேளு திறமாகச் சாதஞ்செ
ய்து, ஆறுமே யாறவைத்து வழுகுடன் மிளகுநீரும்,
காருமே வகையாய்ச்செய்துக் கணம்பெறக் கொள்ள
நன்றாம், பாருமே வைசூரிதானும் பரிவுட னிறக்கமாமே.

பரிவுட னிதந்தப்பாமல் பண்பதாய்ச் செய்துக் கொண்டு, நெறியுடன் சரிந்தபின்பு நீர்மோருஞ் சாதங் கொள்ளு, தரியதி காரமாகச் சாந்தமாம் பழமுமாகா, சரிபட வெலுமிச்சங்காய் சலம்பழ புளியுமாமே. 76

பத்தியத்திற்குப் பதார்த்தங்கள்.

ஆமென்ற நெல்லிக்காயாம் மறுபனை கற்கண்டாகும், கானென தகருவேம்பாகும் களங்குளக் கெளிற்றி வற் றல், தாமென்ற குரவைவற்றல் தளர்ப்பாசி பயறுமா கும், வேமென்ற வெள்ளாட்டின்வற்றல் விபரமாய்க் கூட்டலாமே. 77

பத்தியத்திற்கான புலால்வகை.

கூட்டலாங் காடையாகுங் குலாவுவெள் ளெலியுமா கும், நாட்டினி லுடும்பாகும் நல்லவூர்க் குருவியாகும், வாட்டமாய் வாளைக்கச்சல் வளரத்திப் பிஞ்சுமாகும், தேட்டமாஞ் சீனியான தெளிந்தகற் கண்டுமாமே. 78

ஆகாத பதார்த்தங்கள்.

ஆமென்ற இவையெல்லாங் கூட்டியுண்ணு அழகான மற்றொன்று மாகாதப்பா, வேமென்ற வாகாத வஸ்து வெல்லாம் விபரமாய்ச் சொல்லுகின்றேன் கேளுநன் றாய், தாமென்ற தேங்காயு மாங்காயுமாகா தருவான நல் லெண்ணெ யிலுப்பெண்ணெயாகா, வாமென்ற சோற்

ருவி நெல்லாவியாகா வளமான கொட்டைமுத் தாவி யாகா. 79

ஆகாது கரிகள்தா னவித்தவாடை வழகான பிண்ணு க்கு வாகாதப்பா, தோகையர்களாசையுட வாடைப்பட் டால்தொடுகுறியாய் குறிசூலைத் தோன்றும்பாரு, வேக மாய்க் கடுப்பெடுத்துக் காடுகட்டி விபரமாய்க் கைகாலை முடக்கும்பாரு, தாகமாய்க் குணங்கள்கண் டவிழ்தஞ் செய்தால் தப்பாது நோயதுவுஞ் சாந்தமாமே. 80

கண் பூவிற்கு மருந்து.

ஆமென்ற விழியதினிற் பூவேவந்தா லதற்குமொரு மருந்துதா னறையக்கேளு, ஏமென்ற பனங்குருத்தை கறுக்கியேதே னிதமாக நயனமதிற் பிழியத்தீரும், பா மென்ற முருங்கைப்பூ நெரிஞ்சிப்பூவும் பரிவான நந்தி வட்டப் பூவுங்கூட்டி, சேருமென்ற சீரகமுங் கூட்டிக் குத்தித் திறமாகப் பிழிந்திடத் தீருந்தானே. 81

தானென்ற வைசூரியத்தின் குணமுஞ்சொன்னேம் தருவான பத்தியவஞ்சனமுஞ் சொன்னேன், வானெ ன்ற மறுமுள்ளின் னிதானஞ்சொன்னேன் வளமான குருபற்பந்தெளிவாய்ச் சொன்னேன், தேனென்ற திரு வாக ரணத்தின் திறமாக மேற்பூசுஞ் சொன்னேன் பாரு, கானென்ற சித்தருக்கும் முலகத்தோற்குங் கருத் தாகச் சொல்லிவிட்டேன் வைசூரிமுற்றே. 82

முற்றிற்று.

சிவமயம்.

வைசூரி நூலினடக்கம்.

பெயர்.

வைசூரியின் நாமங்கள்
பனைமுகரியின் குணம்
பாலம்மையின் குணம்
மிளகம்மையின் குணம்
வரகுதரி அம்மையின் குண
கல்லுதரி அம்மையின் கு
உப்புதரி அம்மையின் குண
கடுகம்மையின் குணம்
கடும்பனிச்சை அம்மையின் குணம்
கரும்பனிச்சை அசாத்திய குணம்
வெந்தய அம்மையின் குண
பாசிபயற்றம்மையின் கு
கொள்ளம்மையின் குணம்
விசிரிப்பு அம்மையின் குண
நீர்கொளுவன் அம்மையின் குணம்
தவளை அம்மையின் குணம்
கரும்பனிச்சையால் பிண்டோற்பத்தி ஆகா அம்மைகளுக்கு ஆள்காட்டிக் குருவிமுட்டை ஔஷதம் பாதரட்சைக் குருபற்பம்
வைசூரியால் வாந்திபேதி கண்டபேர்க்கு மருந்து
வேறு.
வைசூரியால் வந்தக்கிறுந்திக்கு மருந்து
கிராந்தலுக்கு மருந்து
வேறு.
பேதிகண்டவர்களுக்கு பலசரக்குக்குடிநீர்
இரத்தக்கடுப்புக்குமருந்து
இதுவுமது.
அதிசாரத்திற்கு மருந்து

கடவுள் துணை.

ஆதியில் மானிடப் பிறப்புக்குமுன் விஷ்ணுவுக்கும், பிரமனுக்கும் தர்க்கம்வந்து பூலோகத்திற் கனுப்பின,

ஆ று வ து,

வியாதியின் வரலாறு.

ஆதியிலே பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் மகத்தான தர்க்கம்வந்த வகையேதென்றால், பாதிரிமலர் தரித்த வயன் பெரியோனென்றான் பதரியே மால்பெரியோ னென்றானப்பால், வீதிதனில் வந்திருவ ருத்தஞ்செய் தார் வேகமொடு பாணங்கள் சூலஞ் சக்கிரம், நீதியுள்ள கரத்தாலும் முட்டித்தாலும் நெடியவனு மாயவனும் போர் கொண்டிட்டாரே. 1

கொண்டபின்பு மிவர்களையே தணிக்கவீசன் கொடு மையுள்ள வியாதிகளை யுண்டுபண்ணி, சண்டமாருத மாக யிருவரு மேற்றாக்க சாரங்கனு மயனுமே சகிக்கா மற்றான், அண்டர்பிரா னடிபணிந்து போற்றியேற்றி அவர்களுமே தங்கள்பதிக் கேகினார்கள், தெண்ட னிட்டு வியாதிகளு மெமக்கேதென்ன தெரிவிப்பா னீசனுமே தெண்டிக்கத்தானே. 2

தெண்டிப்ப தியாதென்னில் தேவர்க்காக தெரிவித்தோம் நீங்கள்புவி தன்னிற்சென்று, அண்டவொண்ணு அசடர்சண் டாளரான அக்கிரமஞ்செய் தழிகின்ற கன்மிமீதில், கண்டிதமாய் வாட்டியே பசியைத் தீர்க்க காட்டினடிப்படியே சென்றுவாட்ட, சண்டர்களும் புவியிலுள்ள மாந்தர்தாமும் தான்பணிந்து முறையிட்டார் குருமுனியைத் தானே. 3

தானென்ற பொதியமுனி தன்மந்திரியோடு சங்கரன்பாற் சென்று அவரடியைப்போற்றி, மானென்ற மனிதர்களை வியாதிசூழ்ந்து மரணஞ்செய் திடும்வகைக்கு பயனேதென்ன, கோனென்ற குன்றுவல்லி கிருபைகூர்ந்து கும்பமுனி தன்மந்திரி கேளாய்நீங்கள், தானென்று குன்றுகா னகத்தில்வாழும் தற்பரத்தின் பச்சிலையுஞ் சமூலந்தானே. 4

தானேகேள் பலசரக்கு அதிலுண்டாகும் தனைக்கொண்டு நீங்கள்பல விதமாய்ச்செய்து, மானிடரைக் காப்பதுங்கள் மகிமையென்ன மனவுறுதிகொண்டுமேவகையாய்ச்செய்து, நானேதான் வியாதிதனை போக்கடித்து நலமாகக் கன்மத்தை நிவர்த்திசெய்து, தானேதான் மணிமந்திர அவிழ்தத்தாலே தான்போக்கி நூல்களையுஞ் சாற்றினேமே. 5

வியாதியின் வரலாறு முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஏழாவது,

அகஸ்தியமகாமுனிவர்

தீக்ஷை பாடல் - 5.

ஆதியந்தமேநிறைந்த தீக்ஷைமார்க்கம் அருள் செய்தேன் புத்திரனே சொல்லக்கேளு, சோதியந்தத் துள்ளிருக்குஞ் சுடரேபோற்றி சொல்லுகிறேன் அகாரமுடன் உகாரம்நோக்கி, வேதியென்ற கமலத்திற் பொருளேயாகும் வேதாந்தமுடிந்தா னெட்டிரண்டும், சாதியென்ற தீக்ஷையது வறிந்துபாரு சத்தியந்தா னுந்தனுக்குத் தருகுவாரே. 1

வாருகேளெட்டிரண்டு கூட்டவைத்தும் வந்துதடாவுந்தனுக்கு மகிழ்ந்துபாரு, கூறுகேளப்புடனே யுப்பும்போச்சு கொடியான சுருக்கமது காணப்போகா, நீறுகேன் தாளகத்தை மேவிப்பாரு நிலைத்துதடா தீக்ஷையது பத்துபங்கும், கேறுளொன்றிரண்டுஞ் செபித்தாயானு லாச்சரிய முகமெல்லா மதற்குள்ளாச்சே. 2

ஆச்சென்று பிண்டமது வண்டமெல்லாம் ஆச்சரியங் கண்மணியே யென்னசொல்வேன், வாச்சென்ற

வண்டத்தை நோக்கிப்பாரு வாருதிபோல் ரவிமதியுந் தோணுந்தோணும், நீச்சென்ற குருநிஷ்டைக்குள்ளே புக்கி நிலைத்துதடா காயமதில் ரூபமில்லை, ஆச்சென்று பாயமெல்லாந் துரவிற்புக்கி அடங்கிற்று பார்த்துக் கொள் ளுண்மைதானே. 3

தானென்ற விம்முறையை யறியலாச்சு தாயென் பார் தள்ளுதள்ளு, கோவென்றால் வருமோதான் குவிந்துபாரு கூறவொண்ணு விக்கருவைப் பேசலாகா, வானென்ற பெரியோரைக் கண்டுதேறு வணங்கியே வநுதினமு மகிழ்ச்சியாக, பானென்ற விப்பொருளை ஈசன்தானும் பார்வதிக்குத் தானுரைத்தார் பரீட்சை யென்றே. 4

என்றெனவே பொருளதுதா னிரவில்புக்கும் எடுத் துரைக்கப் போகாது வென்னசொல்வேன், கன்றென வே பொருளைந்துப பாட்டுக்குள்ளே நன்றாகத் தோ ணவே சொல்லிவிட்டேன், ஒன்றான பொருளதுதா னுற்றுப்பாரு ஓகோகோ யென்னசொல்வே னுகமை மெத்த, இன்றேதான் புதுமையா மைந்தெழுத்தைக் காணுர் இப்படியே ஒன்றுக்குட் களைந்துபாரே. 5

அகஸ்தியர் தீக்ஷை பாடல்-5

முற்றிற்று.

உ

சிவமயம்.

எட்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்

சோதிமணிசூஸ்திரம்–8.

காப்பு.

நல்லதொரு கணபதியின் பாதம்போற்றி
நவகோண மனோன்மணிதன் பாதம்போற்றி
அல்லலற் றவித்ததுகோண் குகன்றாள்போற்றி
அன்பத்தோ ரக்ஷரத் துடையோய்போற்றி.

சொல்லுகிறே னுந்தனுக்கு வகாரஉண்மை
சோதிமணி சூத்திரமோ ரெட்டுமப்பா
தெள்ளுமணி புலத்தியனே பேரானந்தம்
சித்தாந்த முறைமையெல்லாந் தெளியத்தானே.

நூல்.

திரிபுரைதான் வட்டத்துள் சிங்-அங்-அங்கென்று திரும்பவே ஐயுங்-கிலியும்-அங்கென்றோது, சரிதையொடு கிரியையது ஞானமப்பா தப்பாது-உங்-கிலியும் சவ்வென்றோது, பரிசமொடு பூரணத்தி லியங்கும் வாய்வு பார்க்கையிலே ஓம்சிவய வசியமென்றோது, அரிய

மடா துரியத்தி லப்புமுப்புஞ் சூட்டுகிறேன் பாறை யுப்பைச் சொல்கிறேனே. 1

சொல்லுகிறேன் பாறையுப்பை யெடுத்துக்கொண்டு சூக்ஷமாய்த்தாளகத்தி லறைத்துவைப்பா, வில்லைதான் பிடித்ததனை யோட்டில்வைத்து மேல்கீழுங்கவசமிட்டு வுப்பைப்பூசி, எல்லையிலாக் காட்டெருவில் முழப்புடந் தான் இயல்பாகப் போட்டுநீ யெடுத்துப்பாரு, சொல் லியதோர் தாளகத்தி லீயமெய்தும் சூக்ஷமாய்வாத வித்தை சொல்லுவேனே. 2

சொல்லுவேன் தாளகத்து லீயமானல் சுருக்கமாய் காரியந் தன்னிலூட்ட, வல்லமைதா னில்லையடா காரி யந்தான் மகத்தான பதினாறு மாற்றுமாகும், எல்லையற்ற வீசனுக்கு மெட்டமூலம் ஏகாக்ஷர-அும்-உம்-எம் மிரை யுநாட்டும், தொல்லையில்லை வாதமடா சுருக்கஞ்சொன் னேன் துறையோடே செய்தாக்காற் றுலங்குந்தானே.

தானென்ற வகாரத்துக் கெழுத்துஞ் சொன்னேன் தப்பாமற்கேளடா தேயுவைமூட்டு, மோனமுடன் மௌ வென்றும் ஆத்தாளென்றும் மூக்கோணவீடுதான் உகார மென்றும், பானென்ற நாகத்தை வாங்குவாங்கு பரி வாக தவம்பண்ணிப் பூரம்போடு, தேனென்ற வோங்

காரத் துள்ளேபுக்கு சிவயமசி யென்றுதான் திறந்திட் டேனே. 4

திறந்திட்டேன் காயத்திற் காதியென்ன சிவசிவா மதியமுத மதிகெட்டகல்பம், உரைத்திட்டேன் கல்ப மது நாளொன்றுக்கு உத்தமனே மஞ்சாடி களஞ்சி கூட்டு, யுரைத்திட்டே னிப்படியே செய்துவந்தால் யோகிக்கி வயதுசொல்ல முடியாதப்பா, வறைந்திட் டேனப்படியே யோகத்துக்கும் வாய்க்கடங்கா மௌ னத்துக் கவ்வும்பாரே. 5

அவ்வாகி உவ்வாகி அகாரமாகி ஐம்பத்தோ ரெழுத் திற்கு மாதியாகி, நவ்வாகி காலிரண்டுந் தன்னுள்ளாகி நடுவினின் றலிங்கமது வக்ஷரமுமாகி, உவ்வாகி யோர் கலையாய்த் தம்பமாகி ஓம்நமசிவாயமென்று வகையி லோது, நவ்வாகி சிவ்வாகி அவ்வுமாகி நாட்டுவாய் ஐயுங் கிலியை நாட்டுநாட்டே. 6

நாட்டடா சித்தரியை கீழ்மேலீரு நலமாக வுள்ளறை யில் சுழியும்போடு, ஊட்டடா மதியமுத மிறங்குமப்பா உண்டுண்டுயோகத்தி லுரைந்துநில்லு, பாட்டடா ஓம் நமசி வாயமென்றும் பதிவாக நின்றுஐயுங் கிலியுஞ்சொ ல்லி, கூட்டடாயோகத்துக் கிதுவேசித்து குண்டலி யைக் கண்டுகொண்டு குழியைப்பாரு. 7

குழியதே அகாரமே சிகாரமாச்சு குதமில்லா முத லெழுத்து மிதனுள்ளாச்சு, அழியாத பொருளதுதா னிதனுள்ளாச்சு அனைத்துயிர்க்கும் பிறப்பிறப்பு மித னுள்ளாச்சு, வழியாக விதுமூன்றுஞ் செய்தோர்சித்தர் வழியறியா மூடனென்ற கழுதைமாடு, ஒளியாகுஞ் சோதிமணி யிதுவேயாகும் உயர்வைத்த நாகமணி கிரீ டந்தானே. 8

அகஸ்தியர் சோதிமணி சூஸ்திரம்-8

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஒ ன் ப தா வ து,

அகஸ்தியமகாமுனிவர்

குருஜெயநீர்கெங்கை-60.

ஆதியென்ற பூரணமாங் கண்டத்துள்ளே ஆத்தாளை தொழுதுநின்று யைங்கரனைப்போற்றி, சோதியென்ற அறுநூறு பெருநூல்தன்னைச் சூத்திரத்தா னறுபதுக் குட் சுறுக்கிவைத்தேன், சேதியென்ற கருக்குருவும் வெளியதாகத் திறந்திட்டேன் கைபாக மருந்தின்பாகம், வீதியென்ற கெவுனத்தி ஞேட்டம்போல விளைந்தமணி யின்னூல்தான் சொல்லக்கேளே. 1

கேளப்பா குருஜெயநீர் வகையைக்கேளு கேசரம் போல் மறைத்துவைத்தார் சித்தரெல்லாம், வாளப்பா மறைப்பென்ன வென்றுகேட்டால் மகத்தான சவுக் கார மென்றேசொன்னூர், வேளப்பா யெரித்தசிவன் பாதந்தன்னை வெளியாகக் கருமறப்பைச் சொல்ல வேண்டாம், நாடப்பா நொடிக்குள்ளே செய்யும்வித்தை நன்றாகவசிநீர் படிதான்வாங்கே. 2

வாங்கப்பா இவருக்குக் கல்லுச்சுண்ணம் வாகான வெடியுப்பு படிகாற்சேரு, தாங்கப்பா ரோகநீர் படிதா

ஞென்று சவ்வீரம் நவாச்சாரஞ் சீனந்தானும், பாங்
கப்பா முக்கழஞ்சி மொன்ருய்ச்சேர்த்து பதராமல்
கலக்கியல்லோ தெளியவைத்து, வாங்கப்பா தெளி
வுள்ளே மூலப்புளிதானிட்டு வரிசையுடன் தெரிவித்
துக் காச்சுகாச்சே. 3

காய்ச்சியதோர் குழம்பினுள்ளே சிறுநீர்விட்டு கை
முறையாய் மூன்றுதிங்கள் காச்சிக்கொண்டு, பாச்சிய
தோர் துரைகளெல்லா மின்னீரிட்டால் படுமுன்னே
சரக்கெல்லா மாளுமாளும், காய்ச்சியதோர் குருசெய
நீர் மேருவில்விட்டுக் களங்கமறப் பூசைசெய்து சாபந்
தீர்த்துப், பாய்ச்சியதோர் குருஜெயநீ ராட்டங்களு
பரப்பிலே விருகாதே சொல்வேன்கேளே. 4

கேளடா மணிமணியா யுப்பைவாங்கிக் கெடியான
குருசெயநீர் விட்டூட்டி, நாளடா காய்ந்துதென்ரு
லோட்டில்வைத்து நன்ருகக் குக்கிடந்தான் போடு
போடு, தேளப்பா கொட்டுதல்போ லுப்புச்சுண்ணஞ்
செயமாச்சுச் சரக்கையெல்லாங் கொல்லுமப்பா, மாள
டா ஜெயநீர் தன்னை வைத்தாயானல் மகத்தான வித்தை
யிதி லாடும்பாரே. 5

பாரப்பா கரியுப்புச் சுண்ணம்நாலு பரிவானவீர
மொன்று லிங்கமொன்று, சேரப்பா கெந்தியொன்று

சூதமேழு திறமான குருஜெயநீர் விட்டுஆட்டி, வாரப்பா வெயில்முகத்திற் காய்ந்தபின்பு வருத்திடுவாய் மூன்றுநா ழிகைதான்மட்டும், கூரப்பா யென்றாலே சொல்லப்போமோ கோடிவித்தை நாழிகைக்குள் கூடுந்தானே. 6

தானென்ற கெந்தகத்தின் களங்குகேளு தாய்சொன்னாள் கெந்தகத்தே வாங்கிக்கொண்டு, வாளென்ற அயக்கரண்டி தனிலுருக்கி மைந்தனே மிளகுதக் காளிச்சாற்றில், மானென்ற சூட்சந்தான் சாய்த்தாயானால் மகத்தான களங்கமப்பா கோடிவித்தை, கோனென்ற களங்கொன்று ரெட்டிப்பு சூதங்கூட்டுவது வீரமொன்று சாரமொன்றே. 7

ஒன்றாகக் குருஜெயநீர் விட்டுஆட்டி யுலர்ந்தபின்பு வருத்திடு நாழிகைதானாலு, நன்றாகக் கெந்தகந்தானொடு மட்டும் நாவுண்டோ சொல்வதற்கு யென்றற்கூடா, குன்றாத செம்பகத்தி தன்னைக்கேளு கூறறிந்து அவுரியிலே கோடித்தள்ளி, வன்றாகப் பொரிகாரம் வீரத்தோடு மடையனுந்தான் சேர்த்தரைத்துப் பூசுபூசே.

பூசிமண் சட்டியில்வைத்துக் குக்கிடந்தான்போடு பொன்னாசும் செம்பூரல் வறந்துபோச்சு, ஆசியே காரமொடு வீரந்துத்தம் அழகான ளுபுருவி நெருஞ்சில்கூட்

டிப், பூசியே குக்கிடத்தில் செம்பின் றூறற்போச்சு
புனிதமாம் பரியென்ற வஸ்துவாச்சு, சாஸ்வதமாஞ்
செயநீரை பதனம்பண்ணு தளரவே வேதைக்கும்
புகழுண்டாமே. 9

ஆமப்பா லிங்கவித்தை சொல்லக்கேளு ஆச்சரிய
மதுவாகும் காரீயஞ்சூதம், தாமப்பா வெண்கார மொன்
ருய்க்கூட்டி சாதகமாய்க் குருஜெயநீர் விட்டுஆட்டி,
ஓமப்பா வகசித்து மண்ணுஞ்செய்து உப்பில்வைத்துச்
சாமமொன்று பொரித்தாயானல், வாமப்பா லிங்கமது
கட்டிப்போச்சி வாங்கப்பா நாலுலிங்கஞ் சூதங்கேளே.

கேளப்பா பாதிரசங் கெந்தியொன்று கெடியான
வீரமொன்று காரமொன்று, வேளப்பா செயநீர்தான்
விட்டுஆட்டி வெயில்முகத்திற் காய்ந்தபின்பு லிங்கத்
தாட்டு, நீளப்பா சத்தசாக ரம்போல்வித்தை நிமைக்
குமுன்னே செய்விக்கும் வேதைபோக்கு, நாளப்பா
சொல்லாதே கருக்குவழி சூட்சம் நன்முன மருந்தெல்
லாம் வாய்ப்புத்தானே. 11

தானுன ஞகவித்தைச் சொல்லக்கேளு தனிஞக
மொன்றுடனே சூதம்ரெட்டி, மானுன அரிதாரந் துரிசி
வெள்ளை மைந்தனே வெண்காரம் வீரங்கூட்டிக்,
கோனுன ஜெயநீரை விட்டுஆட்டி கொடியரவி முகத்

தில்வைத்து வுருகும்போது, பானுன னுகவித்தை யாடுமாடும் பண்பாகப் புலத்தியனே கண்டுகொள்ளே.

கண்டுசொல்ல ஆர்வல்லார் சித்தரன்றிக் காசினியி லுள்ளவர்க ளார்தான் காண்பார், விண்டுசொல்ல காரி யத் தகட்டைக்கேளு வெடியுப்பு அரிதாரம் வீரஞ் சூதம், பண்டுசொல்லப் பொரிகாரஞ் சேரக்கூட்ட பாங்கான குருசெயநீர் விட்டுஆட்டித், துண்டுசொல்லா ரவியில்வைத்து வறுத்துப்போடு துறைகோடி சூட்ச மெல்லாம் வெளிவிட்டேனே. 13

விட்டகுறை யுண்டானுல் நூல்வந் தெய்தும் வெளி யாரக் கருவெல்லாம் தோணும்பாரு, தொட்டகுறை யிதுதானே விதிமதியுங்காணும் சூஸ்திரந்தா னறு பதின்னூல் நாட்டார்க்கில்லை, முட்டமுறை யேதென் றுல் சூட்சமொன்று முனிவர்சித்தர் யிந்நூலை யொளித் தாரையா, தட்டகுறை பூரணந்தா னுதித்தாப்போல வளருமடா அறுநூறு முந்நூறுந்தானே. 14

தானென்ற திருநடனம் செய்தயீசன் தான்சொன்ன முறைசரக்கின் மைந்தாகேளு, தேனென்ற மொழி யுடையாள் பாதத்தாணை தேசத்தோர் தங்களுக்குக் கொடுக்கவேண்டாம், மானென்ற சிவகாமி யென்தாய்

பூசை வர்ச்சித்து யிந்நூலை வணங்கிப்பாரு, கோனெ
ன்ற வருள்வெளியாஞ் ஞானவாக்கும் குடியிருந்தாள்
மனோன்மணிதாய் கூறினாளே. 15

கூறினதோர் துரிசினுட ஆட்டைக்கேளு குன்று
போற் றுரிசுவொரு கட்டிவாங்கி, மாறியதோர் சிமிள்
புடைக்கா லரைத்துப்பூசி மைந்தனே சிறுபுடத்திற்
றவளநீராம், ஆறியதோர் வெண்கண்டா கொப்பூமுண்
டோ ஆச்சரியங் கோடான கோடிவித்தை, தேரியதோர்
வெண்கண்டா களஞ்சினாலு சேர்த்திடுவாய் சூதம்
ரெண்டு வீரமொன்றே. 16

ஒன்றாகுங் கெந்தியுடன் பாதிகாரம் ஒக்கவே குரு
ஜெயநீர் தன்னாலாட்டி, நன்றாகக் காய்ந்தபின்பு வறுத்
துப்போடு நான்சொல்லக் கூடாது வேதைப்போக்கு,
மன்றாகும் வெண்கண்ட ரிடைக்குரெட்டி பாய்ச்சுயிரத
மதுவீரமொன்று, மன்றாகுங் காயம் பற்பமொன்று
வார்த்தரைப்பாய் செயநீரால் வைத்துக்கொள்ளே. 17

கொள்ளவே செயநீரால் மாட்டுமாட்டு கோடான
கோடி தொந்தம் விள்ளொணாது, மெள்ளவே நாகத்
தின் கட்டுக்கேளு வெண்கண்டர் மால்தேவி காரச்சா
ரம், அள்ளவே குருஜெயநீர் விட்டுக்கொண்டு ஆட்டியே

னாகத்திற் பூசவைத்துக், குள்ளவே பத்தெருவிற் புடந்
தானஞ்சில் போவாமற் புகையடங்கி மாண்டுபோமே.

போமென்ற அரிதாயச் சிவப்புக்கேளு புகழ்ந்த
தொரு விஷ்ணுவின் மூலிமாட்டித், தாமென்ற மால்
தேவிக் கங்கிபூட்டிச் சார்வாகச் சிங்காடைப் புடந்தான்
போடு, ஆமென்ற தாரமது சிவப்புமெத்த ஆச்சரியம்
வேதைமுக மனந்தங்கோடி, ஓமென்ற கண்டருட சிவப்
புச்சொல்வேன் உவருப்பு வெண்காரங் கூடக்கூட்டே.

கூட்டியெல்லாஞ் செயநீரா லறைத்துக்கொண்டு
குறியான கைபாகத் துடன்வருக்க, மாட்டியெல்லா
மெடுத்துப்பார் சிவப்புமெத்த மைந்தனே கோடிவித்
தை ஆடுமப்பா, மேட்டியல்ல குருவென்ற செயநீரா
லே பிரபல்லிய குருக்குவழி வித்தைமார்க்கம், பூட்டி
யெல்லாம் வெளியாகச் சொன்னேன்பாரு புகழ்பெரிய
வெடியுப்பின் சுண்ணங்கேளே. 20

கேளப்பா வெடியுப்பு சீனம்நேராய் கெடியான குரு
செயநீர் விட்டுஆட்டி, நாளப்பா காயவிட்டு வறுத்தாயா
னால் நன்றான வெடியுப்பு சுண்ணமாச்சு, வாளப்பா சார
மிட்டுச் செயநீர்வைத்தால் மக்களே கோடானகோடி
வித்தை, தேளப்பா கொடுக்குபா ஷாணமார்க்கம்
திரஞ்சொல்வேன் திரஞ்சொல்வே நன்றாய்த்தானே.

தானென்ற அப்பிரேகம் வெடியுப்பு சீனஞ்சார மொடு வெண்காரம் மடைசன்காந்தம், வேனென்ற உரைப்பு ரோமநீரும் வீரமுடனென்றாக விரைந்து கூட்டி, வானென்ற ரவிமுகத்திற் காயவைத்து வரிசை யுடன் உப்பிலப்பா யெரித்துவாங்கே. 22

வாங்கவே தீபமொரு சாமமட்டும் மறுநாள்தான் கமலவன்னி சாமமொன்று, தாங்கவே ஆறவைத்துப் பாருநீதான் சாந்தம்போ லதுகட்டுந் தன்னைச்சொன் னேன், ஏங்கவே வேண்டாங்காண் வாதியென்றான் இந்தமுறை செய்தவனே யோகிஞானி, நீங்கவே வறு மையெல்லாந் தவருண்டேபோம் யெளிதான பாதை யடா இந்தநூலே. 23

இந்தநூல் சூத்திரந்தான் அறுபதப்பா இயம்பி னேன் கருக்குருவும் வெளியதாகும், முந்திநூ லறு நூறுஞ் செப்பினேன்பார் முனைபெற்ற திருவெல்லாம் பனிபோலாக, விந்தநூல் செய்பாங்கை பாகமெல்லாம் வெளியாச்சே யென்றுசித்தர் மெச்சிக்கொண்டு, அந்த நூல்போலல்ல வென்றுபேசி ஐயையோ யின்னூலை எளித்தார்காணே. 24

காணப்பா கோடிவித்தை செய்யும்நூலைக் கருவென்று லோகத்தார் விட்டார்சொன்னேன், பூணப்பா தினங்

தோறும் பூஜைசெய்து புகழ்ந்துவைத் தெடுத்தடக்கம் பண்ணிவைத்தார், தோணப்பா யின்னூலைச் சூத்திரந் தான்கிட்ட தொண்டுபண்ணி நடந்தாலும் கொடுக்க மாட்டார், பேணப்பா நூல்தன்னைக் கொடுத்தாயானால் போய்நரகில் விழுவதுண்மை பெருமைபோச்சே. 25

போச்சென்று யெண்ணாதே யிந்நூல்தான் கிட்டிற் புகழ்ந்தரச வாதியென்றும் ஞானியென்றும், ஆச்சென் றும் சொல்வதல்லால் வேறொன்றில்லை ஆச்சரிய மெத்த அறிவுண்டாகும், நீச்சென்ற தீட்சையுண்டா மவுன முண்டாம் நிலைத்ததொரு செயநீரும் பலபோக்குண் டாம், ஆச்சென்ற யித்தனையும் ஆர்தான்காண்பார் மகத் தான சூத்திரந்தான் வாய்த்தபேர்க்கே. 26

வாய்த்ததொரு பாஷாணம் போக்கைக்கேளு மகத் தான வித்தையப்பா சொல்லொணாது, ஏத்ததொரு ஊறலறச் சுண்ணநீரில் யெரித்துவிட லாகாதா மிசைந் தோர்சாமம், மேய்த்ததொரு லிங்கமுடன் மடைய சீனம் மிருதார்சிங்கியொடு அப்பிரகங்கூட்டி, காய்ந்த தொரு செயநீரை விட்டுஆட்டி கவுசித்த பாஷாணந் தனை புரித்துப்போடே. 27

போடப்பா யிருசீலை மண்ணுஞ்செய்து புகழான அடுப்பில்வைத்துச் சட்டிமூடி, சாடப்பா வளிம்புக்குச்

சீலைசெய்து தணலூட்டுச் சாமம்ரெண்டு தீபம்போல, கோடப்பா திரமான பாஷாணங்கட்டுங் கூடுகிறகுரு வேது யென்றுயானல், நாடப்பா சுற்றியெங்கு மலேந் தாலுந்தான் நல்லவெள்ளை பாஷாணம் யிதற்கொவ வாது. 28

ஒவ்வாது யென்றுசொன்ன வகையேதென்றால் உத் தமனே பாஷாண மொன்றுவாங்கி, கவ்வாது வெள்ளீ யம் மிரண்டுசேரு கனமானசூதமது நாலுங்கூட்டி, மவ் வாது வெண்கார மொன்றேயல்லாம் மாளவே யெருக் கம்பால் விட்டுஆட்டித், தவ்வாது வரைத்தெடுத்துப் பின்னுமாட்டி யகலமாய்ப் பில்லைதட்டி ரவிமுகத்தில் வையே. 29

வையப்பா அப்பிரேக மிருதார்சிங்கி வகையான சீன முடன் மூன்றுங்கூட்டி, எய்யப்பா கவசமாய்ப் பொதிந் துசீலை யியல்பாக செய்துவர்த்திச் சுண்ணமீதில், கை யப்பா சீனவுப்பு விட்டுஆட்டி கைமுறையாய் வுப்பிட் டுச் சண்ணமிட்டுத், தையப்பா நிர்த்தமிட்ட வாலே தனைப்போற்றிச் சாபமென்ற தீரவன்னி தன்னை மூட்டே. 30

மூட்டியிந்த மண்திறந்து பார்க்கும்போது உயிர் கூட்டி லடங்கினது சத்திமெத்தச் சூட்டியிந்தக் களங்க

தனைச் சொல்லப்போமோ சூட்சமெத்தக் கோடான
கோடிவித்தை, பூட்டியிந்தப் படியெல்லாம் வெளியாய்ச்
சொன்னேன் புகழ்ந்தரச வாதியென்று லின்னூல்பாரு,
காட்டியிந்த சாஸ்திரத்தைக் கொடுக்கவேண்டாங் கங்
கைதரித்தோனணைக் கடக்கப்போமே. 31

போமென்றேன் தனித்திருந்து யின்னூல்தன்னைப்
புகழ்ந்துமெச்சி வாசித்துக் கருக்களாய்ந்து, வானென்
றே னிதுவிட்டு ஈய்ந்தாயானல் வாய்புழுத்து நாயிருக்க
மரணமாகிச், சாவென்றேன் புத்தியுள்ளோன் விவேக
முள்ளோன் சாகாம லிருக்கவென்றுற் கொடுக்கமாட்
டார், கூவென்றேன் சாபமது போட்டதாலே கொடு
மையாய் சூட்சத்தி லொலித்தார்பாரே. 32

பானென்ற யிரும்பினுட் செம்புகேளு பரப்பிலே
விடுகாதே அடக்கிப்போடு, தானென்ற மடையன் அப்
பிரங்காந்தந் தாங்குவா யிடைசமனய் ரெங்குபாதி வா
னென்ற பழச்சாறு விட்டுஆட்டி மைந்தனே நெடுங்
கையுஞ் சில்லுங்கட்டி, தீனென்ற கெந்திரண்டு சார
மொன்று திறமான துரிசுடனே காரமொன்றே. 33

ஒன்றாகப் பொடிசெய்து குகையினுள்ளு முற்றசுர
பொடிமேலுந் தூவிக்கொண்டு, நன்றாகச் சில்லிட்டுச்
சீலைசெய்து நாற்பதே குறுக்கிடந்த ஞலுவாட்டுச்,

சென்றுக ஆற்றியெடு சுற்றியுள்ள செம்பாகு மிதிஞு
டைய ஆட்டோமெத்த, பன்றுகக் கோடிவித்தை யென்
ருளாத்தாள் பதித்திட்டேன் சாஸ்திரத்தில் பதித்திட்
டேனே. 34

பதித்தவித மின்னமொன்று சொல்லக்கேளு பாட்
டிலே விடுக்காதே சூட்சமைந்தா, விதித்தவித முன்கை
யில் நெரிஞ்சில் ரெண்டும் விரைந்துள்ளு மிட்டுசிக்கி
கேசரமுஞ் சேர்த்து, கதித்தவித முன்போலப் புடந்
தான்போடு கனகமொற்ற செம்பப்பா சொல்லொண்
ணுது, சதித்தவித மேதுனக்குச் செம்பைக்கண்டால்
சதாகோடி சங்கவித்தை வேதையாமே. 35

ஆமென்ற செம்புப்பு முன்னேர்புடத்தில் ஆச்சரி
யங்களெடுத்து ஆளக்கேளு, வேமென்ற களங்கொன்று
சூதம்ரெண்டு வீரமொன்று காரமொன்று ஒன்றுய்க்
கூட்டித், தாமென்ற குருச்செயநீர் விட்டுஆட்டித் தான்
வருக்க கோடிவித்தை தாண்டியாடும், வாமென்ற
தொழிலெவர்க்குஞ் சொல்லவேண்டாம் வாய்பேசா
திருந்துவிடு மவுனங்காணே. 36

காணவே யிம்முறைகள் செப்பும்போது காட்டாதே
ஒருத்தருக்குங் கைபாகந்தான், தோணவேபண்ணுமற்
கைமறப்புசெய்து சூஸ்திரந்தானிருக்குதென்று சொல்

லொண்ணாது, பேணவே கண்காணு தடக்கஞ்செய்து பிரபலிய வஸ்துண்டு மகிழ்ச்சிகூர்ந்து, வேணவே ஆதாரமேல் மூலஞ்சென்று பூரணியே காரணியே தாயேயென்னே. 37

என்னவே சதாநித்தம் மனத்தையூணி யேறடா அறிவங்கே பரத்தில்மீளும், வன்னவே காயசித்தியா குஞ்சொன்னேன், மகத்தான வித்தையெல்லாம் வளரும்பாரு, அன்னமே தேகத்துக் கூட்டியாட்ட அருள்தானே பொருளாகி யாட்டுவிப்பாய், முன்னமே சொன்னமுறை போக்கெல்லாம்பார் முட்டுகின்ற கைபாக முறையைப்பாரே. 38

பாருநீ துரிசியொரு சட்டிவாங்கிப் பண்பாக சிவந்து நின்ற பாலைமூடி, வேறுநீ அரைத்துருட்டி போதித்துக்கொண்டு மேலாகச் சீலைசெய்து எரித்தபோதில், சேருநீருபுடம்போட்டு யெடுத்துவாங்கச் சேர்த்திடாய் சூதம்ரெட்டி கெந்தியொன்று, வாருநீ பச்சிலைச்சார் விட்டுஆட்டி வருத்துவிடும் ஆயிரத்தெண் மாற்றுமாமே. 39

மாற்றான குருக்களங்கு தனக்கோடென்று மாயைனேடு சவ்வீரம் காரியபற்பம், பற்றான சாறுவிட்டு அரைத்துக்கூட்டி பதராமல் வருத்தரைத்து வுலர

வைத்துக், காற்றுண தாகாது செங்கல்லில் யிட்டுக் கை
முறையாய்ச் சாமமொன்று யெரித்துஆறக், கூத்தர்ன
வேதையப்பா அதிலேசூடங் கோடான கோடிதவன்
கூட்டுங்காணே. 40

கூடுமென்ற காரியஞ் சூதம்நேராய்க் கூட்டுபொன்
னன்பாக மடையன்வீரம், பாடுமென்ற கெந்தகமு மொ
ன்றாய்க்கூட்டிப் பதறாத குருசெயநீர் விட்டுஆட்டி,
ஓடுமென்ற ரவிபுடத்தில் வறுத்துப்போடு ஓகோகோ
அய்யன்தான் செய்தாயானால், ஆடுமென்ற சரக்கெல்லா
மிதனாலாட்டு ஆத்தாளைக் கோடித்தாற் கோடிதானே.

கோடியொடு சரமெழுகு வகையைக்கேளு குருசெய
நீர் விட்டுக் கரியுப்பைஆட்டி, ஞடியே குக்கிடத்திற்
சுண்ணமாகும் நன்றாக சுண்ணத்திற் காரசாரம், வாடி
யே திரியாதே களஞ்சியொன்று மைந்தனே சேர
வொன்றாய் நுணுக்கிக்கொண்டு, தேடியே பீங்கானிற்
செயநீர்விட்டுத் திரமான துரிசாறு களஞ்சியாட்டே.

ஆட்டியே பீங்கானில் வைத்துக்காய்ந்து ஐயனே
வறுத்தெடுத்து செயநீர்வாங்கி, ஆட்டியே கெந்தகத்
தை அரைத்துக்காய்ந்த அதைவறுத்துச் செயநீர்தா
னிறக்கிக்கொண்டு, மாட்டியே யிரத்தத்தில் விட்டு
ஆட்டி மைந்தனே வறுத்தெடுத்துப் பின்னுமாட்டி,

கூட்டியே வேதைக்குக் கோடாகோடிக் குடியான சர மெழுகின் கூத்தைக் காணே. 43

காணவே பாஷாணக் கட்டுக்கேளு கைப்பாக மார்க்க வழிக் கருவைத்தானும், பூணவே மணிநிமிளை துத்தந் தானும் பூனீறு அப்பிரகம் வங்கஞ்சிங்கி, தோணவே கர்ப்பூர சகலத்துச்சூடன் சுறுக்கான நவாச்சார மிணங் கன்சீனம், பேணவே குருசெயநீர் தன்னிலாட்டிப் பேசாதே சமபாகம் வெள்ளை தானே. 44

தானேகேள் கவிசித்துச் சீலைசெய்து சாமந்தாஉலர்ப் பில்வைத்து யெடுத்துப்போடு, உள்ளேகேள் உலர்ந் தெலும்பு போலேயாடும் உத்தமனே யிதின்சுருக்கு யெதுக்குமில்லை, மானேகேள் இந்தவித்தை ஆச்சரிய மாகும் மதியூகியறிவதுவே வாதியாவான், மானிலத் தில் மனிதருக்கு வழங்கவேண்டாம் மகத்தான பாஷா ணக் கட்டுத்தானே. 45

கட்டான பொரிக்காரங் கெந்தகஞ் சாரக்கலந்துநீ சமனாகக் கல்வத்திட்டு, மாட்டானகோரக்கர் மூலிச்சாற் றில் மெழுகதுபோ லரைத்துக் கவசஞ்செய்து, திட் டான மண்செய்து காயவைத்துத் திறமான தோரொரு விற் புடந்தான்போடு, பட்டானிறந்துரிசு நேராச்சூதம் பாங்காண வீரமுடன் கெந்திகூட்டே. 46

கூட்டியே வெண்காரம் ஒன்றாய்ச்சேர்த்து குருஜெய நீர் விட்டரைத்து வருத்துப்போடு, ஆட்டியே யிப்ப டித்தான் குருசெயநீர்விட்டு அப்பனே ஐந்துதரம் வறுத்தாயாகில், நாட்டியே துறைநன்றாங் கோடிவித் தை நன்றாக வேதையிலே கோடாகோடி, ஊட்டியே துரிசினுட ஆட்டைக்காணார் ஒகோகோ பார்த்தின்பங் காணலாமே. 47

காணலாம் பூமியிலே தோற்றமெல்லாம் கருவென்ற வித்தல்லோ ஆதிமூலம், பூணலா மனதுக்கு மதுவே மூலம் புரியவிட்ட மூன்றெழுத்து மேகவாதி, தோண லா மாகாச வெளியுட்சென்று செபமெனு மதியிரவி நடனமாடிப், பேணலாங் குருநிழலைத் தினந்தான் போற்றி பிடித்தவமு சித்தரென்ற பெருமைதானே.

பெருமையென்ற தாம்பரத்தின் பற்பங்கேளு பே சாதகருவிடையம் சொல்வான்மைந்தா, அருமையென்ற தாம்பரந்தான் களஞ்சிபாரு அதிற்பாதி காரீய மபிதர் தங்கூட்டி, தருமையென்ற வெண்காரம் வீரங்கெந்தி ஒன்றாகக் குருசெயநீர் விட்டரைத்தூட்டு, கருமை யென்ற குக்கிடத்தில் தவளநீறும் கனகமடா வெகு கோடி காட்சிபாரே. 49

காட்சியா மின்னமொரு தொழிலைக்கேளு கைபாகம் செய்பாகங் கருவைச்சொல்வேன், ஆட்சியாம் பொன்னி மிளை விரங்காரம் அந்திடைக்கு பொன்னென்ற வப்பி ரேகஞ்சேர்த்து, வாசியாங் குருசெயநீர் விட்டுஆட்டி மைந்தனே குக்கிடத்தில் மடையன்போலாம், பூச்சி யாம் வேட்டுவந்தான் வைத்தகுஞ்சுப் புதுமையொக் கும் நாகத்தின் போக்குத்தானே. 50

போக்கான வசீகரத்தின் சூட்சங்கேளு புகழ்பெரிய ஆவின்கோ ரோசினைகற்பூரம், வாக்கான கண்ணனுட மூலிவேரும் மகத்தான சந்தனமும் புனுகுங்கூட்டித், தாக்கான மந்திரமாம் ஓம் கிலீம்வசியகு சர்வமோகினி வாலா வென்றுபோடு, தாக்கான தில்லைநடம் ஆட்டுப் போலே கண்டதெல்லாந் தேடிநின்று கதறும்பாரே. ()

பாரப்பா கிறும்பொன்று கூடச்சேரில் பராவசியம் பாவசியம் மெட்டுமாடும், வாரப்பா செங்கழுனீர்ப் பூச் சார்விட்டு மயனம்போ லரைத்துலர்த்தி வைத்துக் கொண்டு, சேரப்பா மத்தியிலே திலர்தம்போடு திற மான வசிகரத்தின் சித்தியாச்சு, காரப்பா யிதைமறைத் துச் சொன்னார் சித்தர் கருவையெல்லா மின்னூலிற் கண்டிடாயே. 52

கண்டதொரு நூல்போல யென்னூல்தன்னைக்காசினி யோர்க் கொருநாளுங் கொடுக்கவேண்டாம், விண்ட தொரு கருக்களெல்லாஞ் சொல்லவேண்டாம் வெளியாக கனகமுறை காண்பிக்கவேண்டாம், பண்டதொருஞ் சிவ ஞானை குருவினானை பார்வதியாள் தன்னானை யிந்நூல் பலன்சொன்னேன், அண்டதொரு சீஷன்வந்து அடுத் தாலுந்தான் அருமையுள்ள சூஸ்திரத்தை யியம்பொண் ணாதே. 53

இயம்பவொண்ணா நாகமொன்று சூதம்ரெண்டு யித் துடனே சவ்வீரங் காரம்பாதி, நிரம்பவே பொன்னி னப் பிரகங்காலும் நீதியென்ற வன்னிகெற்ப மறை தான்பூட்டி, சுயம்பவே கெந்தகமுங் கால்தான்சேர்த் துத் துடியுள்ள குருஜெயநீர் விட்டுஆட்டி, கயமாவே வறுத்தெடுத்துப் பின்னும்ஆட்டிக் கைமுறையாய் முன் போலே பதனஞ்செய்யே. 54

செய்யப்பா நாகபற்பத் தாலேகோடி திறமான வித் தையெல்லா மாடிப்பாரு, மெய்யப்பா மார்க்கமெல்லாம் வெளியாச் சொன்னேன் விள்ளாதே யொருவருக்குங் குருமருந்துங், தையப்பா நித்தமிட்ட பரனைப்போ ற்றித் தாயான சிவகாமி பாதம்போற்றி, கையப்பா

பிரபல்லிய வித்தையெல்லாங் கண்டுணர்ந்து செய்த வனே காட்சித்தாமே. 55

தாமேதான் சாஸ்திரத்தை யார்கேட்டாலுந் தடை சொல்லி யனுப்பிவிடு சதாசிவன்றன்னாணை, வாமென்ற யிந்நூல்தான் கொடுத்துநீர்தான் வாசியுங்கோளென்று சொல்லி வகைசொல்லாதே, ஆமென்ற கருக்கலெல்லா முணர்ந்துக்கொண்டு அடக்கமாய்ச் செய்தொழிலின் அருமைபாரு, ஓமென்ற மௌனத்தின் செய்கை போலே ஓகோகோ அந்தவிதம் உற்றுப்பாரே. 56

உற்றுநின்ற ராசியிலே அமிர்தமுண்டு ஒளியாமற் கேசரத்தி னுயரயேறிப், பற்றிநின்ற இடைபின்சுழி முனைமுன்னொன்றால் பாய்மரமாம் வெளியகண்ட சோதி மூலம், வற்றிநின்ற அறிவுதனை மேலேநோக்கி அறிந்து பார் தேசிகனைப் புகழ்ந்துகொண்டு, சத்திநின்ற பாதத் தைச் சிந்தைசெய்து சதாநித்தம் பூரகத்தை சார்ந்து நோக்கே. 57

நோக்கவே,யிருள்வெளியாம் நடனந்தோணும் நுணு க்கமுள்ள யிமநாத முக்கங்காணும், பார்க்கவே மணி யோசை சங்கிஞ்ஞைசை பரமகுரு நாதர்நின்ற கைலை யங்கே, தாக்கவே மௌனத்தின் குளிகையங்கே தோண தெல்லாந் தோணுஞ் சொரூபந்தானே, கார்க்கவே யெங்

காளுங் கருணைபொங்கிக் கடாக்ஷித்த வாலையென்ற கருத்துமங்கே. 58

அங்கென்ற புரியஷ்ட மெழுத்துவாசி ஆதார மேல் மூலத் தடக்கமங்கே, பங்கென்ற மனம்புத்தி யாங்கார மூன்றும் பஞ்சவர்கள் ஒத்துநின்ற பதியுமங்கே, சங் கென்ற பத்மநிதிக் கடலாலேறித் தவசிருந்த குகை வீடு தலமுமங்கே, மங்கென்ற கேசரமு முள்ளஞான வழிமார்க்க முற்றுணர்ந்த வழிகாண்பாயே. 59

வழியான சுடர்கோடி காந்திமீறு மதியிரவி யொன் றான மார்க்கந்தோற்றுஞ், சுழியான முனைவிலுறைக் கமலமாது சூரியெனச் சாகிரநீ தனற்சுற்றியேறக், குழியான மௌனமு மொன்ருய்ப்பற்றிக் கூர்மைதரு மெய்ஞ்ஞானம் அதிகமுற்று, விழியான கண்டகண்ட சேதியெல்லாம் வெளியான சூத்திரத்தின் விபர முற்றே. 60

அகஸ்தியர் குருஜெய நீர்கெங்கை-60

முற்றிற்று.

சிவமயம்.

பத்தாவது,

அகஸ்தியமகாமுனிவர்

காவியச்சுருக்கம் - 1.

ஆதியந்த மாதார மகண்டநாதம்
அடுத்துநின்ற நிராதாரந் தூரத்துக்கப்பால்
சோதியந்த நகாரமடா பிரமன்வீடு
சுடரொளியாம் மகாரமடா மாலின்வீடு
நீதிபெரு ஞானமொழி சிகாரமப்பா
நிர்க்குணத்தின் ருத்திரனும் நிலைத்தார்பாரு
வாலையெனும் வகாரத்தில் மயேசன்றானும்
மனம்புத்தி அறிவுமதி விவேகமுள்ளோம்
சாதியெனு முயிர்வாழ்க்கை யகாரபீடம்
சதாசிவனுங் கொலுவிருந்தார் நிர்க்குணத்தின்
ஓதியந்தபெரியோர்கள் ஓம்-ந-ம-சி-வ-ய-மென்று
உற்பனமாய் ஸ்தம்பித்து ஒருநிலையாய்நின்றார்
சாருதியா மாயிரத்தைச் சுருக்கியானுஞ்
சடாக்ஷரப் பொருளாக்கி ஒன்றிற்சொன்னேங்
காருதிபோற் புலத்தியனே மைந்தாநீயும்
கடப்பிள்ளை யுந்தனுக்கு வாச்சுதப்பா

சீருலகத்திருந்தாலு மெய்ஞ்ஞானம்போலச்
சிக்காது வொருவருக்குஞ் சீஷாகேளு
மாதுபடபிள்ளையென்றால் விந்தைக்கூட்டி
மலையேறிக் குகைதனிலே கர்ப்பமுண்டு
ஊருபதி மனையாள்பெண் மாய்கைவிட்டு
ஒருமனதாய் ஞானவழி உண்டுதேரு
பாடுபடவேண்டாம்நீ சரிகைவிட்டு
பண்பான கிரிகையிலே பாடிப்பாடி
பேருபெற வேணுமென்றால் மௌனவாழ்க்கை
பெறவேணும் சிவயோகம் பெற்றால்மோக்ஷம்
வாருமென்ற வாயுமடா ஞானமப்பா
மைந்தனே ஒன்றல்லோ மகத்தாம்வித்தை
தாருமா றுகவல்லோ தீக்ஷைபெற்றாற்
சாராது ஒருநாளுஞ் சாபம்போட்டோம்
ஆறுவரை கடந்துசரா சரங்கள்தாண்டி
அருளினோம் ஆயிரத்தின் சுருக்கமுற்றே. 1

அகஸ்தியர் காவியச்சுருக்கம்-1

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

அகஸ்தியமகாமுனிவர்

குருநூல் முப்பூ-50.

காப்பு வெண்பா.

வானும் புவியு மதியுங் கதிரொளியும்
தேனுந் தெளிந்த சிவகுருவே-தானுந்தான்
நான்மறையு மாராய்ந்து நந்நூலா மைம்பதையும்
தானருளுங் குஞ்சரத்தின் தாள்.

நூல்

மயமான முப்பூவின் மார்க்கந்தன்னை வைத்தியத்தி லாக்கியே விரித்துச் சொல்வேன், ஜெயமான கணபதி யுங் கந்தன்றானும் சிவனோடே உமையாள் பார்வதியுங் கூட, நயமாக வெப்போது முன்னேநின்று நாடியே முப்பூவை நயந்துகேட்க, வயமாகச் சொல்லுகிறேன் ஐம்பதுக்குள் வைத்தியரே இப்பொருளை வணங்கிக் கேளே. 1

வணங்குவது ஆரையென்றாற் குருவின்பாதம் வாலை யொடு சிவன்பாதம் நிர்வாணிபாதம், வணங்குவது

யாரையென்றாற் கணபதியுங்கந்தன் வாகாகப் பூசிக்க வரிசையாகும், வணங்குவது ஐம்பத்துக்குள் முப்பூ வப்பா வாதத்துக்காகிறது வைத்தியத்துக்காகும், வணங்குவது ஐம்பதையும் வணங்கவேணும் வைத்தியத்துக் கிதுவுயிர்காண் வாதிகேளே. 2

வாதியென்ற விந்தமுறை யறியவேணும் வாதந்தானேதுசெய்ய வைத்தியமேதப்பா, ஆதியென்ற வைத்தியந்தான் பிர்மவித்தை ஆக்துமாவை ரட்சித்தா லவனேசித்தன், நீதியென்ற தர்மமது நினைக்கவேண்டும் நீணிலத்தி லுயிர்களுக்கு மிரங்கவேணும், ஏதியதோர் கன்மத்தில் தர்மமாதி உத்தமனே வைத்தியத்துக் குருதிகாணே. 3

உறுதியாம் ஒருநூற்றி யன்பதுக்குள் உரைத்ததொரு லோக மரணத்தைக்கேளு, உறுதியென்ற முப்பூவின் சுண்ணம்வேணும் உதவாட்டா லொன்றுமில்லை யுடைந்துநீறும், உறுதியென்ற ஐம்பதையும் விட்டபேர்க்கு உலகத்தில் வைத்தியந்தான் உண்டோயில்லை, உறுதியென்ற முப்பூவை நிறுத்திக்கொண்டு ஓகோகோ லோகமெல்லா மொக்கநீரே. 4

நீற்றுவகை யறிந்தவனே வைத்தியனாகும் நிலைத்ததொரு வாதியென்றால் நீற்றுவான்பார், சாற்றுகின்ற

முப்பூவை யறியவேணும் சாதகமாய்க் கைமுறைகள் தப்பாவண்ணம், பார்த்துரைத்து சுத்திமுறை காண வேணும் பருவமாய்க் குருமுடிக்கும் பாகம்வேணும், சாஸ்திரத்தின் முறையறிந்து குருவைசேர்ந்தால் தவ ருது பொருளொன்றுஞ் சார்ந்துபாரே. 5

பாரடா முன்னுரைத்த முப்பூவெல்லாம் பரிவான சித்தருக்குஞ் சிவயோகிக்கும், சேரடா வைம்பதுக்குள் சொன்னேன் முப்பூ ஜெகத்திலுள்ள மானிடற்குச் செய்யவேண்டி, வீரடா வேறுகொண்ட வுலுத்தருக்கு உறுதியாய்த் தேகமது பெலத்துப்போச்சு, ஆரடா வென்னைப்போற் சொல்லப்போரு ஆச்சரிய முப்பூவி னருமைபாரே. 6

பாரென்ற உவருப்பைக் கொண்டுவந்து பரிவாக சுத்தஜலந் தன்னிலிட்டு, சீருடனே கலக்கியே தெளிய வைத்து தெளிவாகக் காய்ச்சிநன்றாய் வற்றினுக்கால், நீரிலே மறுபடியும் விட்டுக்கிண்டி நிலையாகத் தெளிய வைத்து இறுத்துக்கொண்டு, வாரமுடன் காய்ச்சியே வற்றவைத்து வாகாக விப்படியே காயச்சுகாய்ச்சே. ()

காய்ச்சுகின்ற முறைக்கெல்லாஞ் சுத்தஜலம்விட்டு கலக்கியே தெளியவைத்து காய்ச்சுகாய்ச்சு, ஆச்சியந்த பூவதுதான் வெளுத்துப்போகும் அப்புகாரி யுப்பை

வாரிகொண்டு மானிடர்கள் சுட்டுமுப்பி லறைத்தே வைத்துவினி அறையக்கேளும், வாச்சதொரு மார்க்கங் கேளு பாச்சிந்தப் படிசுத்த ஜலத்தைவிட்டு பரிவாகத் தெளிவிறுத்துப் பத்துமுறை காய்ச்சே. 8

முறையாக நிலவுப்பைச் சொல்லக்கேளு மூதண்ட பிரமாவின் விந்தும்பின்னே, அறையான பூமியிட நாத மாச்சு ஆதியுப்பு சிவமென்று இதற்கேபேரு, மறை வாக வொளித்துவைத்தார் நூல்களெல்லாம் மார்க்க மெல்லாஞ் சொல்லுகிறேன் வரிசையாக, நிறையாக கல்லுப்பால் வளர்ந்ததப்பா நீற்றியே தின்பவர்க்கு சுண்ணும்பாச்சே. 9

சுண்ணமென்று லோகத்தார் சுட்டுநீற்றி சுலபமாக தாம்பூலம் தின்பார்கேளு, சுண்ணும்புக் கல்லென்று மிதற்கேபேரு சுந்தர விபூதியு மிதற்கேபேரு, எண்ண முள்ள சுண்ணமப்பா காரச்சுண்ணம் இயல்பான கல் லுப்பு சுண்ணமாச்சு, தண்ணியிலே போட்டவுடன் மீரிப்போச்சு சவுக்கார குழியாக்கி சார்ந்துபாரே. 10

சார்வாக விதைமறைத்தார் சித்தரெல்லாம் சமுசய ங்க ளில்லையப்பா வெளியாய்ச்சொன்னேன், சீரான கல்லுதான் துய்யவெள்ளை செகத்திலிந்த கல்லுதான் மெத்தவுண்டு, நீரான கல்லென்று மாகாதப்பா நிர்மல

மாம் வெள்ளைக்கல் பிரம்மகற்பம், ஆர்வாக வகையெடு
த்து அமுரிக்குள்ளே அப்பனே யுவர்மண்ணைக் கரை
த்துக்கொள்ளே. 11

கொள்ளவே யதிலிந்தக் கல்லைப்போட்டு குமுறவே
காய்ச்சிவிடு கட்டிப்போகும், வெள்ளையாய் சுண்ணக்கல்
கட்டிப்போச்சு வேதாந்தமூர்த்தியென்றிதற்கேபேரு,
கல்லென்ற கல்லதனை யண்டநீரால் கருவாக வறைத்
ததனை வில்லையாக்கி, உள்ளபடி சொல்லுகிறேன் உலையி
லூத உத்தமனே சுண்ணும்பா முறைத்துவூதே. 12

ஊதிடவே சுண்ணமுமாஞ் சலத்தைவாரு ஓகோ
கோ நீர்வற்றும் நீறிப்போகும், வாதிடவே பீங்கானில்
வைத்துநீற்று வளமாகஜலம்மேந்தி அதனில்விட்டு,
ஆகியா மண்டலமே வைத்தாயானல் மதன்மேலே உப்பு
வந்து படரும்பாரு, சோதியாமுப்பதனை விழித்துவா
ங்கி சுகமாகபலமொன்று தூக்கிக்கொள்ளே. 13

தூக்கியே வகையொன்று பலமொன்றுக சுகமாகச்
சூடனொரு பலமுங்கூட்டி, நோக்கியே அண்டநீர் விட்டு
ஆட்டி நுணுக்கமாய் வில்லைசெய்து ஊறவைத்து, தாக்
கியே யுலர்ந்தபின்பு ஓடுமூடி சாதகமாய்ச் சீலைமண்ணுஞ்
சாத்திக்கொண்டு, பாக்கியே முழப்புடத்தில் நீறிப்போ
கும் பண்பாக விதையெடுத்து பகரக்கேளே. 14

கேளப்பா வீரமொரு களஞ்சிகூட்டி கிருபையுள்ள புழுகதிலே களஞ்சிகூட்டி, நாளப்பா பூரமொருகளஞ்சி கூட்டி நாட்டிலுள்ள சம்பழச்சார் விட்டுஆட்டி, தாளப் பா வில்லைசெய்து ரவியிற்போட்டு சாதகமாய் முழப் புடத்திற் போட்டுவாங்கு, வேளப்பா சுண்ணமது கடுங் காரமாச்சு வெகுசுருக்குப் பூரீறு குருவிதென்றே. 15

குருவேதோ முறையேதோ வென்பார் மாண்பர் கூறியதோர் நூல்காணுர் குருட்டுவாதி, தகுவான முப் பூவை பாரார்மாண்பர் தாரணியில் மனிதர்களை மயக்கு வார்பார், பருவாக கல்லுப்பை யறியமாட்டார் உலுத்த ருக்கு வாதமது புண்டோவில்லை, தெருவோடே அலை கிறதோர் நாயைப்போலே சென்மித்த கசடருக்கு வாத மேதோ. 16

ஏதென்று போகாமற் சொல்லக்கேளு எடுத்ததொரு துறைக்கெல்லா மெளிதேயாகும், வாதென்ற பேர்க ளெல்லா மயங்கிப்போக வயித்தியத்தின் திறவுகோல் மார்மேலாணி, தூதென்ற செந்தூரம் வைப்புக்கெல் லாம் துடியான பூரீறு சொல்லிப்போட்டேன், காவெ ன்ற வுபதேசம் குருதான்சொல்வார் கைகண்ட குரு வாச்சு கருதிப்பாரே. 17

பாரப்பா விதிலேயோர் களஞ்சிவாங்கிப் பாச்சிய லோகத்தை நீற்றிப்போடு, வாரப்பா ஒருநூற்றின் ஐம்பதுக்குள் வைத்ததொரு மாலந்தான் முப்பூவாலே, சீரப்பா குருவைவிட்டுச் செந்தூரத்தால் சிவக்காது இவையில்லை ஜெயமாகாதே, ஊரப்பா விக்கருவை பொளிக்கவில்லை ஒருகோடி நூலுக்குள் ளிளித்தார் சித்தே. 18

சித்தாக வேணுமென்றால் இந்நூல்பாரு ஜெயமா மாகும் குருவரிய விந்நூல்பாரு, முத்தான முப்பூவுக் கிந்நூல்பாரு மூதண்ட வைத்தியத்துக் கிந்நூல்பாரு, பத்தாத வாதத்துக் கிந்நூல்பாரு பாரிலுள்ளோர்க் கிந் நூலைப் பகரவேண்டாம், ஒத்தாடும் சீஷனுக்கு ஒளிக்க வேண்டாம், உலகத்து மானிடருக் குரைக்கலாகா. 19

ஆகாத வழியினைத்தான் அடுக்கலாகா ஆருக்கு மிந் நூலைக் கொடுக்கவேண்டாம், பாகான முப்பூவை விடுக்க லாகா பாவிகட்குஞ் செந்தூரம் பகரவாகா, போக்கான கன்மத்தை நிவர்த்திசெய்து பூதலத்தில் வைத்தியஞ் செய் புண்யமாமே. 20

ஆமிந்த வகையெல்லாந் தெரியச்சொன்னேம் அப் பனே உறுக்கினத்தைச் சொல்லவில்லை, நாமிந்த வகை யெல்லாஞ் சொன்னேமப்பா நரசென்ம மானதெலாம்

மதிகசென்மம், ஓமிந்த சீவஜெந்தைச் சிவனார்நீற்றி உலகத்தி லுண்டாகித் திருடிச்செய்தார், வாமிந்த சித்துக்கள் நடக்கையாலே வந்துதடா நோய்களென்றே வறுமைதானே. 21

தானென்ற நோய்களினாற் செத்துப்போனால் தாரணியில் மனிதருண்டோ தாயேசொல்லுவாள், வானென்ற சிவனைக்கேள் மைந்தாவென்று வாயிசொல்ல மாதாவே நீயே சொல்லு, தேனென்ற மனோன்மணியாள் சிவனைக்கேட்டு செகத்திலே மனிதரைநீ சிருட்டி செய்தால், நோயென்று வியாதிகளை யுடனேவிட்டு நுணுக்கமுற்று மரணத்தா லுய்வதேதோ. 22

உய்வதினால் வெகுபாவமென்றுபோற்றி உமையவள்தா னவர்பாதம் பணிந்துகேட்க, செய்வதென்ன அவரவர்கள் கன்மத்தாலே தீவினைகளாலெடுத்த சடலத்தோர்கள், நைவினையா லுய்யாம லடியேனுக்கு நல்வாக்குத் தந்தருளி நல்கவேணு, மைவிழிசே ருமையாளே வுலகத்தோர்க்கு வைத்தியரே மருந்தொன்று வகை சொல்வோமே. 23

வகையான மூலிகையுங் காரசாரம் வளமான உபரசமும் பாஷணங்கள், தகையான நவரத்தினம் அஷ்டலோகம் தனிற்சீவ செந்துமுதல் தாணியோர்கள், வகை

யான நோய்கட்கு மருந்திதென்று மகத்தான மேக மெல்லா மாண்டுபோக, தகையாமற் றுயெனக்கு உப தேசித்தாள் சாற்றினேன் வயித்திய மிரண்டுலக்ஷங் காணே. 24

காணப்பா பத்து ஆயிரமுஞ் சொன்னேன் கனமான ஆயிரத்து ஐந்நூறுந்தான், பூணப்பா அறுநூறுமிருநூ ரோடு புகழாக மூன்றுபத்து வைந்துமாகத், தோ ணப்பா கன்ம சூஸ்திர முன்னூறு துரையான வைம்ப துக்குள் சுருக்கிப்போட்டேன், வீணப்பா மற்ற தெல்லா மிந்நூல்விட்டால் வேறான முப்பூவின் வீதி தானே. 25

வீதியாய்ச் சொல்லுகிறே னுருக்கினத்தை வெட்ட வெளியாகவுந்தான் விபரமாக, ஆதியாம் முப்பூவிற் காரங்கூட்டி அழகான காந்தத்தை யிடைக்கிடையே கூட்டி, பூதியாய் முலைப்பால் விட்டுஆட்டி புகழான குகைக்குள்ளே வைத்துமூடி, ஊதிதா னக்குகையி லுருக்கிநீற்று ஓகோகோ ஒருமணியா யுருகிப்போமே.

போமென்ற விரும்பினிட பொடியைவாங்கி புகழாக அந்திடைக்கி குருவைப்போட்டு, தாமப்பா முலைப்பா லால் சாமமாட்டி சாதகமாய் குகைக்குள் வைத்துமூடி, காமென்ற காக்குகையி லுருக்கியாட்டி நலமான ஒரு

மணியா நிற்கும்பாரு, வாவென்ற அப்பிரக நவநீதத்தை மாட்டியே யிடைக்கிடைமுன் மருந்து கூட்டே.

கூட்டியே முலைப்பாலாற் சாமமாட்டி குகைக்குள்ளே வாரியிட்டு மூடிக்கொண்டு, நாட்டியதோர் குகையிலிட்டுருக்கித்திரு நலமாக ஒருமணியாம் நாட்டிப்பாரு, மூட்டோடே வாங்கிவைத்து பின்புகேளு முனையான கெருடபச்சைக் கல்லுவாங்கி, ஆட்டியே குளிக்கல்லிற் பொடித்துக்கொண்டு அழகாக வந்திடைக்கு மருந்து கூட்டே. 28

மருந்தென்ன கருவதனைக் கூட்டிக்கொண்டு, வளமான முலைப்பாலி லாட்டியாட்டு, குருந்தென்ன குகையிலிட்டு சில்லுபோட்டு கூறுக யூதிடவே மணியுமாகும், விருந்தென்ன கன்னுரை வாங்கியேதான் விருதான குருக்கூட்டி விறைந்துஆட்டி, அருந்துகின்ற பாலாலே யாட்டித்திரு அப்பனே யுலையில்வைத்து மூட்டியூதே.

மூட்டியே யுறுக்கிடவே மணியுமாகும் மூதண்டசகஸ்திரமாம் வேதிகேளு, தாட்டியே யிடைக்கிடைதான் குருவைச்சேர்த்து சாதகமாய் முலைப்பாலா லாட்டித்திரு, ஆட்டியே குகையில்வைத்து மாட்டியூது அப்பனே ஒருமணியாய் நிற்கும்பாரு, தேட்டியே யடங்க

ணத்தைச் சேர்த்துக்கொண்டு திடமாக விடைக்கிடைத் தான் குருவைக்கூட்டே. 30

குருவதனை கூட்டியென்ன பொடித்துக்கொண்டு கூசாமல் முலைப்பாலை யிட்டுஆட்டி, திருவான குகை யில்வைத்து மூடிக்கொண்டு திறமாக ஆதிவிட்டு திரளு மட்டும், பருவமுடன் வகைபார்த்துக் குகைக்குளிட்டு பாங்காக மூன்றுமுறை குலிக்கியூது, பருவாக மணி யாக வாங்கிக்கொண்டு வளமான அண்டத்தோல் வாங் கிடாயே. 31

வாங்கியே சவ்வுதன்னைத் தள்ளிப்போட்டு மருந் தென்ன குருந்தென்னை யிடைக்கிடையேகூட்டி, வாங் கியே முலைப்பாலை விட்டுஆட்டி வளமாக குகையில் வைத்து வாங்கியூது, ஏங்கியே மணியாக விறங்கிப் போகும் இன்னமொரு சேதியுண்டு வியம்பக்கேளு, தூங்கியே திரியாதே சொல்லக்கேளு துடியான சங்கத னைப் பொடியாய்த் தூக்கே. 32

தூக்கியே யிடைக்கிடைதான் குருவைக்கூட்டி துலங் கவே முலைப்பாலை விட்டுஆட்டி, ஆச்சியே குகையில் வைத்து வுருக்கியாட்டு அப்பனே யொருமணியா யாகும்பாரு, நோக்கியே சலாசத்து சொல்லாகேளு நுணிக்கியே யிடைக்கிடைதான் குருவைப்போட்டு,

தாக்கிய முலைப்பாலை விட்டுஆட்டி சாதகமாய்க் குகை யில்வைத்து சார்வாயூதே. 33

சார்வாக வூதவொரு மணியாய்நிற்கும் சூதவான நவாரத்தின் சொல்லக்கேளு, ஆறுன வொன்பதையும் வெவ்வேறுக அந்தந்த விடைக்கிடைதான் குருவைக் காட்டி, பேராக வார்த்ததனைக் குகையில்வைத்து பெரு மைபட வூதிடவே மணியுமாகும், சார்வாக மனிதருட அஸ்திதன்னை கலந்ததனைப் பொடியாகி குருக்கிடை தான்காணே. 34

காணந்த விடைக்கிடைதான் முலைப்பால்விட்டு கலந் தரைத்துக் குகையில்வைத்து காடாயூது, பூணந்த தாக் குகையில் யுருக்கித்திரு புகழாக வொருமணியாய் நிற் கும்பாரு, தோணந்த கலையினிட கொம்பைவாங்கி சுக மாகசீவியதை தூக்கிக்கொண்டு, ஊணந்த விடைக்கிடை தான் குருவைவிட்டு உறைப்பாக முலைப்பாலா லாட்டி வாங்கே. 35

வாங்கியே குகையில்வைத்து உருக்கித்திரு வளமாகக் குகையிலுள்ளே கண்விட்டாடும், பாங்கியே ஆமையுடல் தன்னைவாங்கிப் பாங்காக விடித்ததனை நொருக்கிக்கொ ண்டு, தாங்கியே குருவதனைச் சமனுய்ச்சேர்த்து சார்

வாகமுலைப்பாலா லதனையாட்டி, நீங்கியே குகையிலிட்டு வுருக்கியூது நேராக வுருக்கினத்தின் நீதிகேளே. 36

நீதியா யுருக்கினத்தின் மணியையெல்லாம் நிசமாக விடைக்கிடைதான் கெந்திகூட்டி, சேதியா யுடைத்தத னைப் பொடியாய்ப்பண்ணி திட்டமா யரைத்திடுவாய் நாலுசாமம், ஆதியாய் வில்லைசெய்து வைத்துக்கொ ள்ளு அழகான பழச்சாற்று லாட்டித்திரு, வாதியாம் வந்தவனை வெளியாய்வைத்து வரிசையாய் மூன்றுநா ளாட்டிப்போடே. 37

போட்டதொரு வில்லதனை யோட்டிவைத்து புகழாக மேலோடு கொண்டுமூடி, நாட்டமாய் சீலைசெய்து கெஜ புடத்தில் நன்றாக செந்தூர முருகம்பூப்போல், பூட் டவே செப்பதனில் பதனஞ்செய்து புதுமையாய் தீரும் நோய் புகலக்கேளு, நீட்டவே யெந்தந்நோய்கள் குஷ்ட மது நினைவான அநுபான மறிந்துசெய்யே. 38

செய்யவே யிரும்பதனைத் தேனிற்கொள்ள செகத்தி லுள்ள பாண்டுவகை யெல்லாந்தீரும், மையகவே காந் தத்தைதேனிற்கொள்ள மகத்தான தாயுமொடு பாண்டு போகும், உய்பவே யுப்பாகஞ் சஞ்சீவியில் உகந்தாக்கால் நீரிழிவு மோடிப்போகும், நையவே கெருடனைத்தான் தேனிற்கொள்ள நாடாது கனமேகம் நாடிப்பாரே. 39

பாருநீ கன்னுரைக் கரையிற்கொள்ள பாரிலுள்ள ரோகமது சேத்துமந்தீரும், தேறவே சாஸ்திரவே பாவிற்கொள்ள திரேகத்தி லுள்ளநோய் சிதறிப்போகும், வாருநீ டங்கணத்தை யிஞ்சிசாற்றில் மருந்திடவே வாதசுரஞ் சன்னிபோகும், சீரான அண்டத்தை தூதுவேளையிற்கொள்ள க்ஷயமொடு காசமிளைப்பு தீரும் பிளை. 40

ஈளைபோஞ் சங்குசுன்னம் பனவெல்லத்தில் இட்டாக்கால் வாயுவெல்லா மிறந்துபோகும், வாளாகும் பித்தமெல்லா மாண்டுபோகும் மைந்தனே யநுபான மறிந்துசெய்தால், கானையாய் சலாசலத்துச் செந்தூரத்தைக் கடுக்காயிற் றின்றிடவே மகோதரங்கள், பேளையாம் பெருவயிறு நீராம்பல்போகும் பெரிதான ரத்தினத்தின் பெறுமைக்கேளே. 41

பெருமையுள்ள மாணிக்கஞ் சாதிக்காயிற்கொள்ள பெறும்பாடு யெலும்புருக்கி பிரிந்துபோகும், அருமையென்ற பச்சைதனை கற்கண்டிற்கொள்ள அஸ்திசுரம் வெட்டைமுத லகன்றுபோகும், தருமையென்ற வயிரத்தை சீனிற்கொள்ள சகலகழிச்சல் நீரிழிவு சாராதோடும், ஒருமையென்ற வைடூரியம் பாலிற்கொள்ள உள்வரட்சி கல்ரோகம் வோடிப்போமே. 42

போகுமே கோமேதகம் நெய்யிற்கொள்ள புகழான பிளையொடு செயரோகம்போம், வாகுசேர் கலைக்கோம் பைத் தேனிற்கொள்ள மைந்தனே கண்துலங்கு மயக் கந்தீரும், ஆகுமிந்த நீலத்தை திரிகடுகிற்கொள்ள ஆச் சரியக் குஷ்டமெல்லா மகன்றுபோகும், மோகமாமுத் தீனைத் தின்பாயானல் மூர்க்கமாந் தம்பனத்தின் முறை யைக்கேளே. 43

முறையான பவளத்தை முலைப்பாலிற்கொள்ள முக் கியமாந் திரேகமது வலுத்துப்போகும், வறையான பித்தமெல்லா மாய்ந்துபோகும் மகத்தான மேகமெல் லா மாண்டுபோகும், துறையான வப்பிரம ஞானியிற் கொள்ள துன்பஞ்செய்ய ரோகந் துலைந்துபோகும், துறையான கஸ்தூரி தின்பாயானல் சுரஞ்சன்னி யக ன்றுபோஞ் சுகமிதாமே. 44

சுகமான ஆமைசத்து தின்பாயானல் சோர்வில்லா சன்னியொடு சூலைதீரும், மகத்தான வகைக்கெல்லா மநுபானங்கள் அறிந்துகொண்டாக் காலகலும் நோய் கள், தவமான செந்தூர மினங்கள்தோறும் தான்கருக் காற் களஞ்சிதனைத் தாக்கிக்கொண்டு முதலான குருக் கல்லி லொக்கவிட்டு முலைப்பாலா லாட்டிவிடு சாமமொ ன்றே. 45

ஒன்ருன சாமமது அரைத்துவாங்கி உருட்டியேவிடு குன்றியிடை உலர்த்திக்கொண்டு, நன்ருகவேயரைத்து இஞ்சிசாற்றில் நலமாகக் கொண்டிடவே சன்னிதீரும், பண்டான வலியைந்தும் பரந்துபோகும் படுபாவியான சுரங் கண்ணில்காணு, உண்டான சேதியெல்லாஞ் சொல்லிப்போட்டேன் ஒழிக்கறியோ மொளிக்கயில்லை யுலகத்தோர்க்கே. 46

உலகத்தோர் பிழைக்கவென்று கருவைச் சொன்னேன் உறப்பாக வயித்தியத்தை யூணிச்சொன்னேன், நிலைகெட்ட மாந்தருக்கே சொன்னேனில்லை நிலைதவரா மனிதர்கட்கு நிகழ்த்தினேன்யான், வலைகட்டி மீன் பிடிக்கும் தன்மைபோல வையகத்தில் நோய்களுக்கு வலையிதாகும், சிலையுமொத்த தேகமடா மனிதர்திரேகம் செய்கையறி யாமலிவர் செத்தார்பாரே. 47

பாருநீ பலநூல்கள் நன்ருய்ப்பார்த்து பகர்ந்ததொரு நாடியெல்லாம் பகருவாயே, சேருநீ குணங்குறிகள் நன்ருய்ப்பார்த்து செயமான மருந்தினுட குணப்பாகங்கள், சேருநீ சாதகமுஞ் சாத்திரமுங்கண்டு செயமான நோயினுட குணமுஞ்செய்கை, வாருநீ கன்மத்தை நிவர்த்திசெய்து வளமாக முப்பூவின் மார்க்கஞ் செய்யே. 48

செய்யவே குருவதனை முடிக்கவேணும் செந்தூர மானதெல்லாஞ் செய்யவேணும், நையவே பிணியெல் லாந் தீர்க்கவேணும் நாட்டிலுள்ள பேர்களெல்லாம் வணங்கவேணும், துய்யவே தியானங்க ளுரைக்கவே ணும் துறையான பூசைமுறை யறியவேணும், பையவே கோபத்தை நீக்கவேணும் பண்டிதரே யிந்தமுறைப் பகருங்காலே. 49

காலான வயித்தியத்தை யுறுதியாக கைமுறைகள் தப்பாமற் கருவாய்ச்செய்தால், பாலான நிறமுடைய பிரமனுவான் பண்டிதரில் தன்வந்திரி பகவானுவான், சேலான மச்சமுநி யெண்ணூறும் பார்த்தால் சிந்தை யிலே களங்கமறச் சித்தனுவான், நாலானமணிபெற்று பிரமன்சொன்ன நலமுடைய முநிமொழிந்தார் நாடி முற்றே. 50

அகஸ்தியர் குருநூல் முப்பூ-50

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

பன்னிரண்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்

முப்பூ-30.

ஆதிபரா பரத்தினிட கிருபைபோற்றி அடிமுடியா மைங்கோளம் நந்திகாப்பு, நீதியாம் வாரணத்தின் முக வன்காப்பு, நிர்மலமாஞ் சதாசிவத்தின் வடிவேகாப்பு, பாதிமதி யணிந்தசிவன் பாதங்காப்பு பத்திமுத்தி சித்திவயி ரவனேகாப்பு, ஓதியதோர் வாணியின்றன் பாதங்காப்பு ஓங்கார மூலவட்டத் தொளிகாப்பாவே. 1

ஓங்கார மூலவட்டக் கணேசன்பாதம் ஒளிவெளியா மனோன்மணி நாதாக்கள்பாதம், நாங்கார சாரமதை மூன்றுபத்தில் நயங்காணும் புலத்தியனே ஞானமாலை, தெங்கார நாதவிந்தாற் சமைந்தசம்பு சிவமென்றுஞ் சத்தியென்றும் பேருமாச்சு, ஆங்கார மாணுவமு மடங் கிற்ருனல் அரகரா அடிமுடியுங் காப்புத்தானே. 2

காப்பான அடிமுடியும் நடுமூன்றுந்தான் கருக்காடு வெளிக்காடு ஒளிக்காடாகும், சாப்பான அளர்காட்டிற் குடிசைகட்டி சங்கையா யிருந்தவரைக் கண்டதுண் டாம், பூப்பாடு வாராது மாதுநாட்டம் பொங்கிவரும்

அப்புமுப்பு சரியாய்க்காணும், வாய்ப்பகட்டி னல்வரு மோ தசமாந்தீட்சை வந்தபடி குருமுடித்து வாதம் பாரே. 3

பாரப்பா குருமுடிக்குங் காலஞ்சொல்வேன் பங்கு னியும் சித்திரையும் மகரகும்பம், வேறப்பா வெடுப்ப தற்கு அந்தநாளில் வியன்படவே கதிர்தாண்டி மதிபி னிற்கும், சீரப்பா முதற்பக்ஷந் தசமியன்று திதிபார் த்து சாக்காக்கால் முடியுமென்று, ஊரப்பா ஆயிரத் தெட் டிதழாமென்று உச்சிமலை மீதிருந்து பூவை வாங்கே. 4

பூவான பூவிலொரு விபரங்கேளு பொங்கிவரும் பஞ்சவர்ணம் பாதுநாதம், நாவான தசையாமல் நிமை யாடாமல் நாலான கேசரியில் மனதையூணி, தாவான விடந்தேடி கண்டுபோற்றி சதுர்முகனு மாயவனுங் காணப்பாதம், மாவான மானனிரங் கொண்டோ ரெல் லாம் மவுனமனோன் மணியாகி வாழ்ந்திட்டாரே. 5

வாழ்ந்திட்ட அக்கினியும் வாய்வுங்கூடி வசமற்ற பூமி யின்கீ ழண்டமாச்சு, தாழ்ந்திட்ட அக்கினியும் வாய் வுங்கூடி சமரசமாய் நடுவான பிண்டமாச்சு, தாழ்ந்திட்ட விரண்டுக்கும்பிலமேதென்றால் தருவான மண்ணோடே

தண்ணீராச்சு, ஆழ்ந்திட்டுப் பார்த்தோனே ஆதிகாண்பான் அரியென்று ஸ்ரீயென்றும் நடுவின்பேரே. 6

நடுவான பூமியுட நாதம்வாங்கி நல்லவிந்து நீர்கரைத்து ரவியிற்போடு, விடுகாதே யிப்படியே பத்துமுறை காச்சு விந்துவிடநீராலே கட்டிப்போகும், விடுவானோ வாதிமகன் சிவத்தைத்தானும் விழியொளியாஞ் சத்தியென்ற பூரணத்தைமைந்தா, படுபாதிமூன்றிலொன்று சிவத்தைச்சேர்க்கபரிவான ரவிமதியி லுப்புண்டாச்சே.

உப்பான வுப்புக்கு நாமங்கேளு உமையுள்ள வெடியுப்பு வென்றும்பேரு, அப்பான மேகத்திற் பிறந்த வுப்பு அழக்காட்டிற் குடியிருப்போர்க் காணரில்லை, செப்பாத நாதகிரி கொதித்தேற சிவனைவெளி யாக்குமிந்த தேவியுப்பு, துப்பாக கர்ப்பமுள்ள மும்மாதவீடு துரியம்விட்டு அதீதவெளி காணுவாயே. 8

காணாது காணுமடா விந்தநூலில் கண்டவர்கள் சொல்வார்கள் வெளியிற்போடார், தோணாது பூரணத்தை தோற்றிவைக்கும் சொரூபமுள்ள ஆயிரத்தெண் சாஸ்திரத்தை, காணாது வொன்றுக்கும் காரசாரம் நஞ்சு கொண்டு செத்தவன்போற் சரக்கெல்லாஞ் சாமம், பேணாத வுலகத்தில் தசமாம்தீக்ஷை பேர்த்தபுத்தி யறிவதனாற் பேணிப்பாரே. 9

அறிவான பூரணமே ஆத்மவாகும் ஐந்துமூன்றும் மெட்டிரண்டும் கண்டபோதே, குறியான குறியவாய் மைந்தா சொன்னேன் கூடும்போ தேகமுன் யோகமா கும், சரியான பன்னிரண்டும் பதினாருள்ளே சத்திசிவ மிரண்டுமொன்றாய் நிற்குமப்பா, சரியான பரதேசி யிதுவேயாகும் பதியுடைய அமிர்தகலை பானமுண்ணே.

கலையான பதினாறில் நாலும்பாழாம் கண்டுதடா சூரி யன்றான் பனிரண்டில்நாலு, சிலையாகப் பிறந்ததிலே யெட்டுநின்று சோமகலை சூரியகலை யாயிற்றப்பா, அலை யான வாரியினா லமிர்தமண்ணு ஆதியென்றும் அந்த மென்றும் அமைந்தபிண்டம், வலையான சிவகலைதானே தென்றாக்கால் வாங்குவதும் விடுகுவதும் வழக்கந் தானே. 11

வழக்கமாய் சிங்குவையே மடித்துவைத்து வாய் மூடி ஞாலையுமே யறியொட்டாமல், முழக்கமாய் நாடி நரம் பசையாடாமல் மூலமுத லாறுதலஞ் சிரசேகண் டால், பழக்கமற்று நெற்றிஉச்ச மாகப்பிர்ம்மபுறம் பாகாவாசமதாம் சமாதிநில்லு, பழக்கமா யந்தமதை நெருக்கிடாமல் பார்த்திலது விருகண்ணும் ஆடாமல் நில்லே. 12

நில்லென்றால் வேதாந்தம் நிற்குமோசொல் நிர்மூட மடையருக்கு வருமோவாதம், சொல்லென்றால் பெரி யோர்கள் சொல்லுவாரோ சொக்கிமெள்ள பெயரவென் று லேறலாமோ, அல்லவென்ற வினையகற்றி நந்தி சொன்ன அறிவுதங்கு மனம்நிலைக்கும், ஆசானவாய் மல்லென்றுஞ் சண்டையிட்டு தர்க்கம்பேசும் வாய் வீணர் தங்களுடன் வாய்பேசாதே. 13

பேசாதே உலகத்தில் கர்ப்பங்கோடு பேச்சறிந்து பேசாமல் பழியேசெய்வான், கூசாமல் நூலிருந்தாற் கொடுங்கோ ளென்பான் கொடுக்காட்ட லந்தனூ னு னக்கே னென்பான், ஆசானை போலவவன் சரியாய்ச் சொல்வான் அகஸ்தியன்மே லாணையில்லை யென்று போடு, தேசாதி வழக்கமெலாம் பாஷாண்டிமெத்த சிவ ஞானை முப்பதையும் பதனம்பண்ணே. 14

முப்பதுபோல் வொருநூலும் சொல்லாதப்பா முன் சொன்ன வாதமிரு னூறும்பாரு, செப்பதுபோற் பாடி வைத்தேன் பனிரண்டின் சிவயோக நிகண்டிலே நூ றுஞ்சொன்னேன், ஒப்புவமை யில்லாத கலைக்கியானம் சொன்னேன் உத்தமரைக் கிட்டவைத்து வுண்மை கேளு, தப்புமொழி சொல்லவில்லை முப்பதிலே மைந் தா சகலகலைக் கியானமெல்லாம் பாடினேனே. 15

பாடினேன் கலைக்கியானம் பாடும்போது பரமசிவன் தன்னோடே ரிஷிகள்சொன்னார், நாடினே நானவரை பூசைபண்ணி நல்வசனங் கேட்டிந்த நூலைச்சொன்னேன், ஓடிநீர் சொல்வதென்ன வென்றுகேட்டால் உண்மைபெற்ற சித்தருக்கா மென்றதாலே, நாடினேன் தாய்சொல்லப் பாடிப்போட்டேன் நல்லோர்க ளிந்த நூல் விடுகாதென்னே. 16

விடுகாதே அண்டமதின் ஓட்டைவாங்கி மேற்கசிந்த கோரையைநீ வாங்கிப்போட்டு, உடுகாதே முப்பத்திரண்டுதீக்ஷைஉத்தமனே பஞ்சீகரண முடித்தபோது, நடுகாதே அடிமுடி நடுமூன்றுப்பும் நாதவிந்து பிண்டமென்ற பேருமாச்சு, சுடுகாதே நீர்நெருப்பு காற்றுமாச்சு சோமசூரியனக்கினி யென்றும்பாரே. 18

பேரான வழலைமுறை நன்றாய்க்கேளு பெரிதான அகாரமென்ற கல்லைவாங்கி, ஊரானகல்லுரலில் மாவதாக்கி உத்தமனே சுத்தஜலந் தன்னிற்போட்டு, சீராக் கரைத்திடுநீ மருநாளிற்றான் திருவையொற்ற ரவிமுகத்தில் உப்பதாகி, நேராக விந்தவண்ணம் பத்துமுறைகலக்க நேர்மையொத்த ரவிமுகத்தில் வைத்திடாயே. 18

வைத்திட்ட வுப்புக்கு நாமங்கேளு வாசமுற்ற பூநீ ரென் றிதற்குபேரு, மித்திணுப்பு வழலையென்று மிதற் கும்பேரு மேலான வுவர்ப்புப்புவென் றிதற்குப்பேரு, சுத்தியிட்ட லிங்கமென்றும் ஆதியென்றும் சுடரென் றும் அரனுப்பு வென்றும்பேரே. 19

பேரான உவர்க்கடுக்க லிங்கமென்றும் பெரிதான சிவரூபம் முடியென்றும்பேர், ஊரான வெள்ளைக்கல் என்றும்பேரு உருவான அகாரமென்றும் பேருமாச்சு, சாரான சரக்கென்றும் சாரமென்றும் தவருத்திர சன் மார்க்க கர்த்தாவென்றும், பேரான வாசியென்றும் மூல மென்றும் பெருமைநிற் றகாரமென்றும் பேருமாச்சே.

ஆச்சப்பா அரன்ரூபம் வெள்ளையாச்சு அவள்ரூபஞ் சிவப்பான வடிவமாச்சு, நீச்சப்பா வகனுப்பு நீலவர் ணம் நிலையான நடுவாச்சு வேறேயில்லை, முச்சப்பா நூமூன்று கவர்கள்கோடி மூடனே யொன்றல்ல மூன்றுமாச்சு, பேச்சப்பா சொல்லுகிறேன் சத்திநா மம் பெருமைதள்ள யிருந்ததென்றும் ரவியின்பேரே.

ரவியான நடுமூலஞ் சொல்லக்கேளு நாலான சிகார மென்றுஞ் சிவமாமென்றும், புவியான சிவனென்றும் பால்தயிராமென்றும் பொருளான கெங்கையென்றும் சயிலமென்றும், குவியான ஊசிநீர் செயநீரென்றும்

குருவான அப்பென்றும் சம்பளநீரென்றும் தவியான பிரணவத்தி நீரேயென்றும் சமுத்திரத்தி னறுவகை நீ ரென்றுபேரே. 22

பேரான சடதார அமிர்தமென்றும் பெரிதான அமுரிநீ ரென்றும்பேராம், ஊரான கண்ணீரு முண்ணுப்பா லென்றும் உலகமெல்லாம் படைத்தளித்த உமிநீரென்றும், வாரான ஆதியிட நாமங்கேளும் வளமையுள்ள வெடியுப்பு சத்தமென்றும், நேரான கமல மென்றும் சிப்பியென்றும் நிலையான ஆகாசப் பிறவி யாச்சே. 23

ஆச்சப்பா கும்பிக்கல் லென்றும்பேராம் அதிகார பாவையென்றும் ரவிதானென்றும், நீச்சப்பா வெள்ளைக்கல் கும்பமென்றும் நிலையான ஆனைக்கல் மௌன மென்றும், பேச்சப்பா வழலையென்றும் மௌனியென் றும் பிலமான ஆயிரத்தெண் கமலமென்றும், நீச் சப்பா காமப்பால் கானற்பாலென்றும் நெய்மஞ்சள் கருவென்றும் நடுவின்பேரே. 24

நடுவான ஆகாச கெர்ப்பமென்றும் நல்லதண்ணீர் பச்சையென்றும் கல்லுமென்றும், நடுவான மேக மென்றும் வன்னமென்றும் நஞ்சென்றும் பிஞ்சென் றும் ஊமையென்றும், வடுவில்லா காந்தியென்றும்

ஆதியென்றும் மாலென்றுஞ் சத்தியென்றும் சிவன் தானென்றும், துடுக்கென்றுங் குருவென்றும் பேரு மாச்சு சுகாதீத பூரணமென் றதற்குப்பேரே. 25

பேரான சத்தியுப்பு ஒன்றுகூட்டி பெருமையுள்ள விந்துப்பு அதற்குப்பாதி, சீரான சுழியுப்பு யிரண்டுங் கூட்டி சிவகங்கைவிட்டாட்டி சாமம்நாலு, நேராகக்கட் டியபின் வில்லைதட்டி நிலைத்ததொரு யெருவடுக்கி புடத் தைப்போடு, பாரான பரித்தகட்டில் பூசிக்காய்ச்சி பண்புடனே புடம்போடச் சுண்ணமாமே. 26

ஆமப்பா முப்பூவை ஏழுமுறைநீயும் அக்கினியிற் சுட்டெடுத்து ஆயிரத்தின்படியே, நாமப்பா சொல்லி வைத்த காவியத்தைப்போலே நாட்டிலே யின்னமொரு நூல்தானுண்டோ, வாமப்பா கொண்டவர்க்கே யெய் தும் மெய்தும் மறுஜெனன மெடுத்தாலும் அவர்க்கே யெய்தும், சோமப்பால் சூரியன்பால் கொள்வதற்கு சுளுவாக வின்னமொன்று சொல்கிறேனே. 27

சொல்லுகிறேன் பிருதிவுதான் கம்மியுப்பு சுருக்கான அப்புவல்லோ பாரையுப்பு, நல்லுகிறேன் அக்கினி தான் கல்லுப்பாகும் நாடுகின்ற வாயுவதே யிந்துப்பா கும், வெல்லுகிற ஆகாசம் வழலையுப்பு வேதாந்த மனோன்மணியா ளீன்றவுப்பு, கொல்லுகிறேன் சரக்கு

களின் யென்றுசொல்லி குரலைபரவி காத்திருந்து கூடி கொண்டாளே. 28

கொண்டவளை அம்பலத்தி லாட்டஞ்செய்து கூறி விட்டு மறுக்கூடு நடனஞ்செய்தால், கண்டதைநீ நீற்ற வென்றால் கனகச்சுண்ணம் களஞ்சிகா விடைக்கியெட்டு சாரஞ்சேரு, நின்றயிடைத் தன்னோராய் சாரஞ்சேர் த்து நிகரென்ற வெண்கருவா லைந்துவில்லை, சுண்டகநீ ரெண்டிடவே ரவியில்வைப்பாய் சுளுவாகப் புடமிடவே சுன்னமாமே. 29

ஆமப்பா யிதுநீற்றால், துருசுவெள்ளை அவ்வெள்ளை சுண்ணத்தால் ரசத்தேநீற்றி, ஓமப்பா பரித்தகட்டிற் பூசிப்பாரு ஓகோகோ சொர்னமது சுண்ணமாச்சு, நா மப்பா சொல்லுகிறோம் தாம்பரத்திற்கியே நாட்டோ ர்க்குப் பிழைப்பதற்கு வழியுமுண்டாம், காட்டப்பா வதையெடுத்து வெள்ளிக்கியே கனகமாங் கருமூன்று பத்தும்முற்றே. 30

அகஸ்தியர் முப்பூ-30

முற்றிற்று.

சிவமயம்.

பதின்மூன்றாவது,

அகஸ்தியமகாமுனிவர்

முப்புசூத்திரம் - 10.

பாரப்பா வாதியென்றால் பூசைவேணும் பாங்கான செபம்வேணும் நேமம்வேணும், நேரப்பா வாசியென்ற யோகம்வேணும் நோராகலக்ஷியத்தை நிறுத்தவேணும், ஆரப்பா சொல்வார்க ளிந்தநூலை அரிதான குருபதத் திற் காத்திருந்து, சாரப்பா சாஸ்திரஞ் சூஸ்திரமிரண் டும் சார்வாகப் பார்த்திருந்து வாதம்பாரே. 1

பாரப்பா வாதத்தி லக்ஷங்காப்பு பாடினே னதைச் சுருக்கி யிருநூறுக்குள், ஆரப்பா வழலைக்கு உறுதி மார்க்கம் அடைவாகச் சொல்லிவிட்டேன் முப்பூவைத் தான், நேரப்பா முன்னூற்றி லடக்கிவிட்டேன் நேர் மையா யெண்பதிலே நிசமாய்ப்போகும், ஆரப்பா அதி லடக்கம் பதினாறுக்குள் ஆச்சரியம் பதின்மூன்று பத் தும்பாரே. 2

பாரப்பா அவரங்கே சொன்னதெல்லாம் பரிவாகக் கண்டறிந்து முடிக்கவேணும், தீரப்பா மருக்கிடையுங் கிடையுங்கண்டு திரமாக செய்தக்கால் முப்பூவாகும்,

10

ஆரப்பா யென்னைப்போற் சொல்லப்போமூர் ஆச்சரிய மனிதருக்கு நோய்கள்தீர, யேறப்பா அண்டோட்டைச் சுத்திசெய்ய மேதினியிற் கற்சுண்ண மூன்றுங் கூட்டே. 3

கூட்டியே அமுரியுடன் கலக்கிக்கொண்டு குமுரவே காய்ச்சிவிடு சுத்தியாச்சு, ஆட்டியே படிகமொரு உப்புங் கூட்டி அழகாக காரமுடன் சாரங்கூட்டி, நீட்டியே வீர முடன் வெள்ளைகூட்டி நேராக சரியிடையாய் கூட்டிக் கொண்டு காட்டியே கல்வத்தி லிட்டுஆட்ட கலங்காதே வெள்ளெருக்கம் பாலுவாரே. 4

வார்த்துநீ யரைத்திடுவாய் மைபோலாக்கி வைக்கவே வில்லைசெய்து காயம்போடு, கோர்த்துநீ ஓட்டில்வைத்து ஓடுமூடி குமுறவே கெசபுடத்தில் நீறிப்போகும், பார்த்துநீ ஆலத்தை விட்டுஆட்டி பதையாமல் வில்லை செய்து ரவியிற்போடு, சாத்துநீ தட்டில்வைத்து வோடுமூடி சதிராக முன்போலே புடத்தைப்போடே.

போடப்பா சோடசத்திற்கு குருவுமாச்சு பொல்லாத பிள்ளைகட்கு சொல்லவேண்டாம், ஆடப்பா அண்டத்தில் சாரங்கூட்டி அப்பனே சலமாக்குஞ் சலத்தை விட்டு, தேடப்பா நாகத்தை யுருக்கிச்சாய்க்க திடமாக நாகமது கட்டிப்போகும், கேளப்பா செம்புவெள்ளை

களஞ்சிக்கித்தான் சுகமாக யெட்டிலொன்று தாக்கு தாக்கே. 6

தாக்கியே பார்த்தரக்கா லெழுகானும் தயவான வுங் கத்தை குத்திவூது, நோக்கிநீ யிதைக்கொண்டு சிலவு செய்து நுணுக்கமாய் முப்பூவை பிறகுபாரு, வாக்கிலே சோடசத்தால் முப்பூவாகும் அல்லாட்டா முப்பூவி லருமையில்லை, தூக்கியே யிதையெடுத்து வைத்துக் கொண்டு சுருக்கமுள்ள சொரிநீரு லெல்லாங்கூட்டே.

கூட்டையிலே தனித்தனியே வேதையாகும் கசட ருக்குச் சொல்லாதே காயம்பாழாம், நிஷ்டையிலே யிருந்துகொண்டு தியானம்பண்ணி நினைவுதப்பி நீயிருந் தா லெல்லாம்போகும், கட்டையிலே வாலையுட பூசை வேணுங் கண்மூக்கு மத்தியிலே கருதிப்பாரு, முட் டையிலே தலைகவிழ்த்து குனியவேணும் மூர்க்கமுள்ள முப்பூவின் முறைமைப்பாரே. 8

பார்க்கையிலே சட்டமுனி மகன்றுனப்பா பரிவாகக் கண்டறிந்து பார்த்துக்கொண்டான், சேர்க்கையிலே சுந் தரமும் திடமாய்க்கண்டான் செகத்திலுள்ள சித்தர் களும் அப்புரமேகண்டார், தாக்கையிலே சுயமான திரி கோணு ஜலத்தைக்குத்தி உண்மையாய் ஊசிடவே கட் டிப்போமே. 9

போமடா கரிவேட்டி லூதும்போது புகழாகக் கண்டு விட்டு ஆடும்ஆடும், ஆமடா நாலுப்பை கட்டிலூத நல்ல தொரு வயிரமது போலேஆடும்; நாமடா யாணுவத் தால் வெளியிற்போட்டேன் நாட்டாதே மனிதரென்ற கள்ளருக்கு, தாமடா யிதுவெல்லா மறிந்துகொண்டு தாரணியில் விள்ளாதே அடக்கமுற்றே. 10

அகஸ்தியர் முப்புசூஸ்திரம்-10

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினான்காவது,

அகஸ்தியமகாமுனிவர்

வைத்தியம் முன்னெண்பது.

நூல்விபரம்.

அரன்கயிலை விட்டுநான் தட்சணத்தில்வந்து வறைந்தகோடி சித்தர்முனி ரிஷிகளுமாய், பரந்ததொரு பொதிகைதனி லிருக்கும்போது பாடினநூல் வாதமொடு வைத்தியந்தா, னிரந்தரமாய் லக்ஷமிரண்டு லட்சம்பாடி நிறுத்தினபின் சூஸ்திரமாய்க் குறுக்கிப்பின்பு, சரந்தநோய்க்கு மருந்துவைக்கின் மந்திரசூட்ச மந்திர யெந்திர செபவோம சேமந்தானே. 1

தானென்ற சாஸ்திரங்க ளெல்லாஞ் சொன்னேன் தனிக்குப்பிச் செந்தூரஞ் சட்டிவைப்பும், யானென்ற நீற்றினமும் படமும்வசியம் பதங்கம்ரசகற்பூரத்தைலமொடு குளம்புங், கோனென்ற குளிகைநெய்யுஞ் சூரணமும் பொடியும் குலாவுகின்ற குருவழலைக் கூத்தாடினாற், தேனென்ற மருந்தெல்லாந் திரமாகுஞ்சித்தி தீர்க்கமாய்க் குருமுடிக்க வகையறிந்தானே. 2

வழலைக்குரு.

அறியாமற் பாடிவைத்த நூல்கடோறு மங்கங்கே வழலையுப் பநேகஞ்சொன்னோங், குறியான வெண்பதிந்த சூஸ்திரத்திற்பாரு குடிமுடிக்கள்வுநின்ற பட்டுமெரிப்பும்நன்றாய், நெறியாகப் பாடினநூற் கிடைத்த தென்றால் நீதிமான் குருமுடிப்பான் மருந்துஞ்சித்திப், பிறியாதே பங்குனிசித் திரையிரண்டிற் பிலத்த உவாவினையுமிடம் பார்த்துவாரே. 3

வாரிவந்து நாழிக்கெண் ணாழிநீர்தான் வரிசையாய்ப் பானைதனிற் கலக்கித்தேற்றி, சேரிறுத்து மறுபாண்டத் தடுப்பிலேற்றித் தீயெறித்து வற்றினபின் ரவியிற் காய்ச்சி, பரிவாகுந தேசிநீரில் முன்போற்காய்ச்சி, சீரறுத்துத் தானுவர்ப்புக்கு மூன்றுசுத்தி சேர்ந்தபுடமெத்தொழிலுஞ் சித்தியாமே. 4

சித்திக்கும் பல்லிக்கோட்டைக் கல்லைத்தட்டி சிறுமணியாய்ப் பறங்கியிட்டு வழுரிவிட்டுக், காய்ச்சிவத்தினபின்பனம் பாலைவிட்டுக் காய்ச்சிவலமாக ரவியுலர்த்தி கேசிநீரிற், சுத்தியா யாறினபின் கரியிலூதச் சுண்ணமுமா மொன்றுக்கு நால்வழுரிவார்த்து, பத்திரமாய்க் கலக்கிவைப்பாய் காரோட்டிற்றான் பதனமா யாருமதைக் காணொண்ணதே. 5

காணுமற் பட்சம்வைத்து தெளிவித்துக்கொண்டு காய்ச்சிவைத்த சிவ்வுப்பாங் காட்டலாகா, மாணுகேள் வெடியுப்பு வொன்றுக்குநாலு வற்றசலம் விட்டுவற்றக் காய்ச்சியபின், கோணுதே யொன்றுக்கு நாலுமுரிவிட்டும் குறுகினபின் ரேசிநீரி லப்படியேகாய்ச்சி, தாணை மூன்றுப்பும் வகைக்கு வொருபலமாய்த் தட்டிக்கொட்டித் தேசிநீர்விட் டுணக்கின்கேளே. 6

உணக்கிக் கல்வந்தனிலிட்டு வரைக்கக்கேளு உதமதாளிச் சாற்றைவிட்டு நன்றாயாட்டி, விணக்கிவில்லை யாய்ப்பிடித்து வுலரவைத்து மேல்கீழ்மோ ரைந்துச் சீலை சுற்றி, மணக்குவித்து மேல்வைத்துப் புடத்தைப் போடு மைந்தனேதீ யாறினபின் னெடுத்துவில்லைக், குணக்கறவே கல்வத்திட் டரைக்கக்கேளு கூறுகிறேம் வீரபுரங்காரஞ் சாரஞ்சேரே. 7

சேருநால் மருந்துகட்குக் களஞ்சிரெண்டாகி சீரான பூவிலிட்டுத் தூள்போலாட்டி, வாருவதில் வெடியுப்பு செயநீர்விட்டு வளமாக நாற்சாம மைபோலாட்டி, பாகு பதம் வருநேரம் வழித்துவில்லைப் பக்குவமாய்ப் பிடித் துலர்த்திப் பகரக்கேளு, காருகல்முன் சுண்ணத்தை கட்டியரைவாசி கையாலேசெப்பி நன்றாயுவர் பரப்பு மேலே. 8

பரப்பிலில்லை வைத்ததின்மே லுவர்ப்பூவிட்டு பார் மகனே சாட்டி சாட்டிச் சரம்புச் சுண்ணஞ்செய்து, நிர ப்பிமறு சட்டிமூடி சந்துவாய்க்கு நினைவாக மண்ணிரை த்து சீலைசெய்து, வரத்தீயாளடுப்பேற்றி யெரிக்கும் போது வாலையொடு வயிரவர்க்கு வஸ்துவைப்பூசி, துர த்திடுவாம் மற்றதெல்லாம் பேதனமாச்செய்து தூபம் போ லெரிகமலக டாக்கினியுளாகும். 9

ஆகினாற் சாமமுந்தா னலாவங்கே யெரித்து யாத்தா ளைப் பூசித்தடுப்பை விட்டிறக்கி, பாகுபெற சட்டிதிறந் தாரினபின்வில்லை பதனமா யெடுத்துப்பார் கண்ணால் நீதான், வாகுபெற முப்பூவின் குருவினுடைமார்க்கம் வையகத் திதையறிவார் கோடிக்கொன்று பேர்தான், தாகுபெற பெருநூலுஞ் சாஸ்திரமுஞ் சொன்னோர் தவறாது குருவழலை சூட்சமிந்த நூலே. 10

நூல் பெருமை.

குருவாக யெண்பதுமே சூஸ்திரமாய்ப்பாடிக் குகை யில்வைத்தோ மாமருந்தை காணுமற்றான், பெரிதான முனிரிஷிகள் பொதிகையிலேவந்து பேசிகம்போடிருக் கையிலே நூல்களைத்தான் கண்டார், தெரிவான சூத்தி ரந்தான் பார்த்துநன்றாயவர்க டெரிந்தெடுத்து சான் பின் வைத்து தெண்டனிட்டார், ரிஷிகளரிதான சூத்தி

ரந்தா னடியார்க்கீ விரகத்தீசர் நோய்தீரு மருந்திது தானுமே. 11

மருந்தென்ன வகைகளெல்லாங் குருவிலாவிட்டால் வாதமுதல் வைத்தியமும் பலியாதையா, சொரிந்தகுரு முனஞ்செய்தோங் கணக்கேயில்லை சூஸ்திரந்தா னெண் பதிலே குருதான்வாய்ப்பு, வருந்துகுரு செய்யாவிட் டால் மருந்தேயில்லை யவடங்கள் வருஞ்செய்த செந் தூரபற்பம், திருந்திவரு மருந்துகட்கங் குருதிக்கூடித் தானுற் றீருமே நோய்களெல்லாம் சித்தியாமே. 12

நூல் தொகைப்பெருமை.

சித்திக்கு மெனைப்பணிந்த முனிரிஷிகள்கையிற் றெரிந்தெடுத்த சாஸ்திரந்தான் பார்த்து மீய்ந்தோம், வெற்றிக்கும் நூல்களிது மதிகசூத்திரம் விதம்பலவாய் பாடிவைத்த வறுநூறென்று, பத்தியா முன்னூறும் நூற்றன்பதுந்தான் பகரக்கேள் முப்பத்தாறு பதினொ ன்றென்று, கொத்திதுதான் கொண்டமுன்னூல் பின் னூல் குவலயத்துக் கிதுபெரிது சொல்லக்கேளே. 13

எயிராகு மெண்பது நாற்பது கழலைமுப்பூ வுலகத்தி லன்பது மாயிரத்தை நூலரியமாட்டார், பயிராகும் நோய்க்கெல்லா மனிதர்க்கப்பா பகரறியார் கன்மந் தீர்த்து மருந்துகொள்ள, சதிராக நூல்பார்த்து குரு

முடித்துக்கொண்டாற் சண்டாள நோய்களெல்லாம் பறந்துபோகுந், திரிவார்கள் பூமியிலே நோய்தீர்ப்போ மென்று தீவினையா முன்கன்மந் தீர்க்கவறியாரே. 14

கன்ம நிவர்த்தி.

தீருதற்கு கன்மகாண்டமுறைத்தோ முன்போல் திற மாக பருதுபற்பஞ் செந்தூரங்கள்பாரு, கன்மந்தீர்ந்து நீமருந்து கொண்டாயானாற் பறந்துபோம் நோய்க ளென்று பாடினதெல்லாமற், சேருநீ சிவபூசை ஓம யெந்திரஞ் சக்கரஞ் சிதம்பரத்தி லஷ்டகன்மந் திருமந் திரத்திற், பருவாருமறியாத கன்மவகைசொன்னா ரரு மையிந்த வெண்பதுவே யயல்விடமுமாகா. 15

அயலொருவர்க் கீய்ந்ததினால் வருகுமெத்த நரக வாழ்வையென்று தாள்பணிந்தா லதன்மனதறிந்து நீயும், துயில்கன்மத்தி நிவர்த்திவகை சொல்வேனினி கேள், துடர்ந்திருக்கு நோயறிந்து துடங்கு ஜெயமோ மம், குயல்வாய்க்குஷ்டம் சுபங்குன்ம நீரிழிவுஞ் சூத க்கிராணி நீரடைப்புபாண்டு, மூலவாயு சுயல்வாயு வுருக்கண்ணிற்குந் தங்கடினந் தசவாயு காணவாக முன் செய்த வுயிர்கன்ம வினைதானே. 16

கன்மத்தால் வந்தவினை தீராதேவிட்டாற் காயமறிந் தேயியக்கிற் கன்மநோய்கள்வருஞ், ஜன்மத்தில் விந்து

விட்டு ஜெனித்தவர்களும் வாய்க்குஞ் சீக்கிரமாய் நிவர்த்திசெய்து சிகைக்ஷசெய்வாய்மருந்து, துன்மார்க்கர் பாவிகள்தான் சூஸ்திரத்தைப்பாரார் துன்மொகிபோலியா தூயவினைக்கீடாய்த், தன்மத்தாற் கன்மத்தை நிவர்த்திசெய்யக்கேளு தயாநிதியாங் குருவாய்த்தால் வருகாதெந்த நோயே. 17

எந்திரத்தின் தகடதுதான் றங்கமொடு தாம்பிரபீஜம் பரவவெள்ளீயம் காரீயமதிற் றட்டிச், செந்திசிவஞ் சிதம்பரத்தை தங்கத்திலெழுதி சித்தாகு மறுபத்து நாலையடையுள்ளே, சந்தவெள்ளி தாம்பரத்திலுள்ளன் பத்தொன்றெழுதி சர்வபுட்ப சயனத்தை தாக்கியுடையுள்ளே, மந்தாயத் தகடதனில் பாரணத்தையடைத்து நடுநாற்பது மூன்றடைக்து நேரே. 18

அடைத்தந்த யினங்கொண்டு பிரணவ பீசவட்சரத்தை யறைதோறும் பஞ்சாட்சரத்தை யடைத்தபின்பு, படைத்தசூலஞ் சத்திசிவ கணபதியு முருகன்பரமான் நந்திவெளி வயிரவன் றன்பீசந், திடத்துடனே ஹம் கிந்திரி சூலமிட்டு திரள்கன்ம தம்பதனம் உட்சாடனமாய் செபித்து, நட்த்தியிவை யாயிரமன்னூறு நன்றாக திருமந்திரஞ் திருமூலர் நூலே. 19

சொன்னமஞ்ச டேறுகப்புவும் வல்லடையுமடுக்கி சூழ் பொரியெள்ளுமிது சர்க்கரையுந் தேங்காய், நன்ன வுமே நவதானியம் நறுநெய்புட்பநெல்லும் நகரவெள்ளி சாம்பிராணி சூடன்வாவிலையும், வன்னகுரு வாடைகெந் தங் கும்பவஸ்தெற்பை வட்டநவகலசகஸ்திரமடி விரிப் புக்கெந்திர, மன்னவடை பாயசமும் பலகாரமும் பாலு மங்கே சொர்னபுஷ்ப மடக்காய்லைபழமே. 20

பழமுமஞ்சள் மரப்பொடியும் பரிவுபெறக் கூட்டி பாரு கன்மமுடக்கடித்துப் பரும்பெலியும் வல்தும், வளமாய்க்குரு வாய்ந்துதென்றால் வந்தகன்மந்தீரும் வாய்ப்பாவுச்சாடன மூலிகையுங் கருவு, முள்ள தாய் மிந்நூற்கழு பத்திரண்டிலேதான் மொழிந்த வுத்த தொருநல் வித்தையுரைத்தாற், றிருமூலரழகான செப மோமம் பூசையாயக் கிருஷ்ணத்தால் வசித் மந்திரவுச் சாடனத்தாற் போக்கே. 21

போக்கியபின் பிணியாளர்க்கு பூரிக்கும் பஞ்சொரிந் துப் பூதிசாத்திப் புகைசாம்பிராணி புகழான யெந்தி ரஞ்சூட்டி, தாக்கியகன்ம பேதன்யாயுச்சரித்து செபஞ் செய்து தருகாது மனையில் வரத்திற்சார்ந்த, வினைபயி லும் வாய்த்த குருவடிபணிந்து வஸ்திரமாடை பணங் கள்வைத்து முன்பிரட்சி யென்று வணங்கி, மனமுருகி

நோக்கி யினிமருந்து கொடுக்கச்செய்வாய் நூல்சூத்திர
மறுநூற்றில் நுழைந்துபார் மருந்தே. 22

மருந்து குட்டங் குறைநோய்மூல மெழுபத்தீ ராயி
ரம் வியாதிகட்குமாறு சூஸ்திரமதில் விபரம்பாரு,
பொருந்தவே யாயிரத்தன்னூ றிருநூற்றஞ்சிற் புகழ்
மிகுந்த பற்பஞ் செந்தூர மெல்லாநோய்க்கு, மருந்திற்
குறி விழுந்ததென்று லாகுமெந்த மருந்தறிவார் சாஸ்
திரத்தை யார்கையிலுங் கொடுத்தார், பெருந்தவங்கள்
செய்ததெல்லாம் பிணிநோய்கட் கீடாய் யினிநகரில்
வீழ்வரென்று பிலத்த சாமறைந்தோம். 23

அறிந்து மண்பெண் பொருள்போலு மாசையில்
லாற்கீந்தா லவன்வணங்கி குருவென்று ஆதரிப்பான்
தினமும், பிரித்தெழுப்பி யொருவருக்கும் நூல்கொ
டுக்கலாகா பெரும்பாவி கலியுகத்திற் சித்தாதிநூற்
சாஸ்திரங், குறித்தகுணம் வகைவிபரங் குருடரறி
வாரோ கூத்தாடிப் பார்வந்து பொருள்பறிக்கும்
பேய்க்குஞ், செறிந்தபொரு ளழிவதல்லார் சித்தாந்
தத்திருந்துஞ் சிவஞான பரவெளிகட்கு சிந்தை யறி
யாரே. 24

சித்தாந்த மறிந்தபின்பு வேதாந்தம் புகுந்தார் சிவன்
பாதங் கைலாயஞ் சேர்ந்தடைவா ரொடுக்கம், வத்தாத

வைத்தியமு மருந்து வைக்குந்தொழிலும் வருகுமந்திர மெந்திரமும் வழலைகுருமுடிக்கக், கொத்தான சாஸ்திர முஞ் சூஸ்திரமும்பார்த்து குணமாக பிணங்கள்செய நீர் திராவகமுரங்க, அத்தாகவ னூத்தொழிலும் வாய்த்த குருக்காணோ மறிந்தவர்க ளறியோமென் முர்க்கு முறையாரே. 25

லோக வாடை.

முறையாக வைத்தியங்கள் பார்க்கவேணுமானல் முழுப்பிணியா ளருடபேர் நாளுங்கேட்டு, பறையாதே யொருவர்க்கு பருத்தமூலியுண்டு பகரக்கேள்மாதம் முதல் வருமாதித்தவாரம், நிறையாகத் தொடவாடும் நரிமிரட்டிலோடும் நிலைத்தவற்றப் பிணிமரணம் நினைத்துமந்திரமோதிக், குறையாமல் வேர்பிடுங்கிக் கொண்டு வந்து நோய்கள் குஷ்டகுன்ம மெழுபத்தீ ராயிரத்துக் கெல்லா. 26

எல்லாநோய் போகவென்று மாணத்தை செபித்து இருக்குப்பிணி யாளருக்கு வெற்கையிலேகட்டி, பொல்லாநோயறிந்து மருந்துகொடுபின்பு புத்தியுள்ள வைத்தியருக்கு போதுமிந்தநூல்தான், வல்லான் சைவஷ்ட கன்ம மருபதுமந்திரம் வாய்த்தாக்கால் வருகுநோய் தீர்வதற்கு வுகைகளறிவார், சொல்வரர்க ளறிந்தபேர்

கள்சுருதி சூஸ்திரந்தொழிலை றுவங்குமுன்னூ லரைந்
ததிலுஞ் சொன்னதில்லைபாரே. 27

பாரினில்தான் குஷ்டங்குறைநோய்கள் பலபிணிகள்
பருகம்வாதி பித்தவிஷ நீர்புக்கிச்சூலவரி வரைப்பன்,
வாரியிடுங் கிரந்திபுண்கள் கரைப்பனெடு வெழுப்பு
வரைவரையாய்க் கிரிகை காய்விரியும் பண்ணுற் சதை
கள், நீரினல் விருவிருத்துணத் துணத்திமிர்ந்து விர
லுற்சைநிற்க நடக்கொட்டாது குஷ்டவிதி னிற்ற
றுரித், தானறிந் ததுநோக்கி மருந்துசெய்யப் போறு
ரரைந்தோங் கடைக்காண்ட மறுநூறுக் கிடைத்த
லாறுமே. 28

அறுநூற்றில் களசெந்தூரங் காலாந்தகெவுரி யழ
காதி சாஷாபூபணிசெந்தூரம், சருவநீலகண்டரச கற்
பூரக்குளபஞ் சார்வான சூரணமுஞ் சஞ்சீவியதாகும்,
பொறுவதிரும் நோய்பிணிபோம் புகட்டுசீக்கா மருந்
தை புத்தியுள்ளான் மருந்திருக்குமிட மறிந்துதேடி,
விருதாம மற்றமருந்தே தருந்தினலும் வீண்பொருள்
கருமோவதல்லால்விட் டகலானெகிழ்தம். 29

மூலமுளைக்கும் சயமுதலானதுக்கும்.

நெகிழ்தமாய் மருந்தொன்று நீசொல்லத்தேனு நிறுத்
திடுவாய் பட்டைபலம்பத்து நேலசாய்வாங்கி யுகிழ்த்

தகமாயரட்டுப் பால்தனிலேதட்டி யடுப்பேற்றி யெறித் துலர்த்திப் பின்னுவின்பாலில், தமிழ்தமா யெரிதுவட்டி ரவியுலர்ந்தபின்பு வாரியிட்டுக் கல்லுரலி லிடித்துத் தூள்போல, குமிழ்தமாய் வடிகட்டி சூரணித்துக் கொண்டு கூர்விரப்பங் கிழங்குடனே சித்ரமூலம்பாரே.

மூலமது நாகதாளி நறுநீண்டவேறு முழுத்த வாடுதீண்டாப்பாளை யவுரிவாதமடகிக், கோரல்லங் கோவையுட னிலப்பனையுங் கார்த்திகையுங் கூட்டு வகைப்பத்து வேலுங்குறுக்கத் தரித்துலர்த்தி, சால நிறை வகைக்குப்பல மிரண்டையுமாக கதைத்திடித்து வடிகட்டி சரக்குவகைகேளு, வாலமோமநறுகு மூல மிளகக் கிருவரத்தை வளருஞ் சேங்கொட்டை யறு வகைக்குப் பலமொன்றே. 31

ஒன்றாக யிடித்துவடி கட்டினபின்பட்டை யுலர்த்தி வேரிடித்த பொடிமூன்று மொன்றாய்விரவி, நன்றாகப் பரந்துசட்டி யடுப்பில்வைத்துக் காய்ந்தால் நறுநெய் யுள்ளே தடவிப் பின்புபொடியிட்டு வறுத்தாற், குன்றா கற் றீப்பிடித்து புகைத்தது போகலாகக் குணமாக மொடிசிவந்தபதம் பார்த்துயிறக்க, பன்றான வுரலிலிட் டுப் பிடித்தூள் பொடியைப் பத்திரமாய் மைந்திருந் தாற் பகரக்கேளு மறந்தே. 32

கேளுகுஷ்டஞ் சூலைப்புண் ணிரந்திகுறை நோய்கள்
கிளர்சுரைப்பன் படர்வெழுப்பு கறுப்புபற்றுவிரிவு,
வாழுமஷ்டகுன்ம வாயுஷ்வலிப்புசய மிளைப்புவருகும்
நவமூலம் பாரிமானந்த வாய்வுஞ் சூழல்நோய்க்குச்,
சூரணத்தை வெருகடிதா னெடுத்து சுகமாகத் தேனை
விட்டுருட்டிக் கிழிந்ததிலே தாளுந்தள, செந்தூரமும்
கற்பூரமும் மணந்தான்ற னிக்குமோடார கோரறிந்து
மஞ்சாடி லரைத்தே. 33

கெற்பத்துக்குள்ளுண்டான வியாதி.

நல்லமொழி லொன்றுசொல்லக்கேளு மலரடிகட்டிக்
கேளு நானிலத்தி லாருக்கும் நவிலரிது சூட்சம், வல்ல
மையா யனுபோகித்துக் கருங்குழிகள் விந்துவரை யர
வாய்த்தங்காமல் வாய்த்தபுழு கிறுமிசொல்ல, வருஞ்
சூசிகவாய்வு மாதசங்கைக் கூடிரெத்தங் கருக்குழிக்
குட்டரோணிதாமம் வாயுவுஞ், சொல்ல வொண்ணு
கெர்ப்பவாய்வு மூன்றுமொன்றாய்க் கூடிச்சுற்றி நின்
றுற் கருக்குழிக்குட் கிருமிப்புழுச் செனித்தே. 34

செனித்தபுழு கிருமியெலாம் கருக்குள் நின்று
சேர்ந்த மோகமதால் விந்து பனித்துளிபோ லிறங்கில்,
வனித்தகருவாசல்நின்று வரப்பிளந்து குடித்தால் வரு

ருமாத விடைகளெல்லா மலட்டுடலிற் றங்கிக், கனித்த மழைத் துளிபோலே யுடைசீலையில் நிற்குங்கட்டி நின்றமாதவிடை சுரோணிதத்தின் வாய்வாய்ருணித், தேகமுத்தி மாதசங்கைவரும் நாழிலுடைபற்றி வயற் றுவலி தூயதலையிலடியே. 35

தலைக்குநான் வயற்றுவலி தான்வருஞ் சூதகந்தனில் தேவர்க்கண்டு மாதச்சங்கையு மேதருகுந், துலைக்காத கெற்பவாயு வுற்றுடைகால் வடிவந்தோடும் துயரப்ப டும் வயத்துவலிச் சோரையும் பிணத்தருகி, நிலைக்காத வாய்வுகளுங் கிருமிகளுங்கூடி நிர்மூலப்புத்திரனுசம் நிரைத்த மலடாகு, மலைக்காதே மருந்துகொடு மாகதசங் கைதாழும் மருகின்ற பெண்தேகி நீரரையாம் படியே.

அரைப்படியாம் நீரையொருசட்டிதனில்விட்டு வான சம்பரைத் தந்தநீர்தனிலே கலக்கி, விரைத்தவெள் ளுள்ளியுட மேற்றோலைப்போக்கி, விழுந்துபட வரைத் தந்த சட்டிதனிற்கலக்கித், துறைகுறுவி லரைக்காற் களஞ்சித் தூளாய்ப் பொடித்தெடுத்து வடுப்பேற்றி நன்றாய்ச் சுருக்குக்கும்பானுல், வரைக்கவழி குளம்ப தனை வடைத்து வொன்றில்நீயும் வளர்மலடி மாத கச்சை வந்தவுடன் முழுகே. 37

முழுகிவந்தவுடன் குளம்பைத் தேசிகனி யளவாய் முழுங்கச்சொல்லி வாழையிலைப்போட்டு பிள்ளைவிளை வைத்து முழையிலேமேல் மலடிகுந்தியிரு, சீலைவளமாய்ப் புரத்தி லவிழ்த்துவைத்து யிருந்தால் கொழுகொழுத்து யோனியினுல்வடிவு, மாதசங்கை குத்திருமிபுகழ்கிருமி கூடுகூடாய்விழுகும் நழுகாமல் நாலைந்து நாழிகைதா னிருந்தால் நாட்சென்ற மலட்டுப்புழு விழுகுங்காணே.

காணவே மூன்றுதினம்விழுங்க யிந்தக் குழம்பைக் கண்டதொழி லிதுதான் கருதரிக்கும்பிள்ளை, பூணும் வலி வாயுவதுபோது மாதசங்கை புகலாதோ மூன்று மாதம் புகட்டுமே யிப்படிதான் வேணதொழி லெது செய்தும் விழுகாது கிறுமி, விழுகுமிந்தமருந்தால் வாயு வுஞ்சோரைக்கட்டுமருகுந், தோணவே மாதமாதமூன் றிற் கருத்தறிக்கும் பிள்ளையுயர்நீங்கி மலடியெல்லாம் பிள்ளைக்குப் பால்கொடுமே. 39

மலடிப் பால்கொடுக்க.

பிள்ளைக்குப் பால்சுரக்குகின்ற தந்திரத்தைக் கேளு பெருந் தாம்பிரம் வெள்ளித்தங்க மூன்றுமொன்றில், பிள்ளையுட கருக்குழிகள் விந்து சுரோணிதந் தங்க தம் பனத்தை தக்கெழுதி தனித்தமூலி கேளுமென்ன

மாரு தொனிக்கு, வெள்ளிவாரத்தன்று மீண்டு கதிருக்குமுன்னே மெழுகிநிறைநாழி யெள்ளரிசிசர்க்கரையுஞ், சாம்பிராணி தேங்காயிலை மிளகுமஞ்சள் பழந்தட்சணையும் வையே. 40

வைத்துப்பூ வர்ச்சனைசெய் தம்பனத்தையோதி வளர்மூலி வடக்கேபோற வேரைபச்சங்கெல்லி, கொத்துஞ் சாவல்பலி கொடுத்துக் கொண்டுவந்து வேரைக்குழாய்க் குள்ளிரண் டங்குலங் கூறுகிறோங்கேளு, முத்துமெத் திரம்பூசித்து சுருட்டியடை குழாய்க்குள் மூன்குழலுமிதுவும்வைத்து மோகனங்கொண் டோதிப், பெற்று வளர்ந் திருக்கவென்று பெண்கழுத்திற்கட்டப் பேதனமா யோடிப்போம் பிடித்திருந்த தெல்லாம். 41

இருந்தபேயும் பிசாசுகளு மெந்திரத்திற்றீரு மியல்பான மருந்துகொண்டாற் கிருமிவாய்வும் போகும், வருந்தமாத மூன்றதனில் வளர்கெர்ப்பத்திற்பிள்ளை வந்துசெனித் தேபிறக்கும் வகையிதுதான்பாரு, அருந்தவங்கள் செய்வார்க ளாலயங்கள் தோறும் அடிக்கடிதா னடந்துசென்று வளவறந்தபொருளை, பொருத்து சில வழித்தாலும் பிள்ளைக்கருக்குழிக்குட் புழுக்கிருமிவாய்வுகளை பிடிங்கெறியலாமே. 42

ஏறியேதா னுலையங்க டெரிசனையேசெய்து யெதா சத்தி பொருள்களையுஞ் செலவழித்தாராகிற், சீறியே வந்நோயும் பலபிணியுந்தீர்ந்து செகத்திலுள்ளோர் சிறி யாமற் பிள்ளையுமே பெறுவார், வேரினித்தான் சொல் லுகிறேன் தொழிலொன்றுகேளு விதியாளிவைத்தியற் காமிந்தனூலெண்பதுமே, ஆரரிவார்சிரசில்வரும்நோய் கள்செய்யும்வினையை யாகாகவறிந்தவர்க ளாருமில்லை தானே. 43

அஷ்டகுன்ம மெட்டுக்கும்.

இல்லையினி யஷ்டகுன்ம மெட்டெட்டுந்தீர யியம்பு கிறேன் முடக்கத்தான் சூரணமேசெய்து, தொல்லைதீர சாரணைவேர் முருங்கைசித்திரமூலஞ் சூரணமாய் செ ய்துகொண்டு வுள்ளித்தோற்போக்கி, மெள்ளவரைத் தேமிளகிற் பிரட்டியுணர்த்திடித்து மேலான பொடி யொன்று வகைக்குப் பலமொன்றாய்ச், சொல்லரியசோ மனுதி காயம்பலங்களாலுஞ் சூரணத்தோடேவிரவி சூட்சமுண்டுகேளே. 44

உண்டானசூரணத்திற் பஞ்சதாரைசேர்த்து யுடன் பொதுக்கினஞ்சி யேறண்டித்திற்குழைத்து, அண் டாதுகுன்மகு டோரிபணவிடைதா னன்செந்தூர மதை வணைத்துக்கொண்டாயானுற், பண்டானகுன்ம

மெட்டுப் பற்றுதசவாய்வும்பாரு பத்துகாளருந்தப் பற
ந்துபோகுஞ் சொன்னேன், சண்டாளற் கிம்முறையை
யுரைக்கவுமேவாகா சார்ந்தகுன்ம மெட்டையுந்தான்
றவிர்க்கவகைகேளே. 45

வகையான கருடக்கொடி பிடுங்குகின்றவாரம் வருக
திங்கள் வாரமதில் மெழுகிநிறைநாழி, துகையான
சோடசமு மஷ்டவர்க்கப்பெலியுந் தூபதீபங்களிட்டு
வேர்பிடுங்கிவந்து, தகையாதே தகடதனி லுட்சாட
ணத்தை யெழுதித் தகடும் வெருங்குழ்லடைத்து பூரிக்
கும்பஞ்சொரிந்து, பகையான குன்மமெட்டும் போக
வென்றுகையிற் பரிவாக பிறகுகொடி மருந்து குன்மம்
போமே. 46

மூலமொன்பதுக்கும்.

போகுமடா நவமூல மொன்பதுமேபோக புகட்டு
கிறேன் மாதமுர்த்தி வருங்குருவாரம், பாகுபெற வரச
னது வேர்வடகீழ்மூலைப் பரிந்தெடுக்கப் பூசைபெலி
யுட்சனமாய் கொடுத்து, வேகமாய் வேர்பிடிங்கி பிணி
யாளன் றன்னுடம் வித்தையாஞ் சிதம்பரத்தி லட்ச
மந்திரஞ்செபித்து, தாகுபெறக் குழலடைத்து வேர்
கையிலேகட்டித் தயவாக மருந்துகொடு நவமூலம்
போமே. 47

மூலமென்ற கிழங்கதுதா னொன்பதுமே கேளு
முழுப்பிரண்டை கார்த்திகையுங் கருணை கோரோசனை
யால்,மன்றவமுதவள்ளி நிலப்பனைமாதளையுமப்பையற
நறுமொன்பது மாவின்பாலிலவித் துத்தைகோ லவி
யுணர்த்தி யதையிடித்துப், பொடியாக்கிகூறும் விதை
பென்பதுண்டு கோவை மொசுமொசு ஆமென்ற வாகு
வத்தி மாதளை, மணிப்பிரண்டை யகத்தியுடன்மணத்த
காளி லொன்பதுதான் விதையே. 48

விதையான லொன்பதையும் வெதுப்பி நெய்ப்பிரட்டி
வேகமா யிடித்துவடிக் கட்டினபின்கேளு, தகையான
கடைச்சரக்கு கிரும்புபத்திரிகாயந் தக்கோலமாசிக்கா
யதிவிடையமோமந், திதையாதே திரிகடுகுஞ் சீரகம்
வாலுஞ்சேறு சீனமுந் திரிகைபேரித்தை யரத்தை,
வகையாக மருந்தையெல்லாம் வறுத்திடித்தபொடியை
வளாகிழங்கு பொடியுமதில் யித்தைபொடியுஞ் சேரே

பொடியென்ற கிழங்குவிதை வகைக்குப் பலமரை
தான்புகழான கடைசரக்கு வகைக்குக்களஞ்சரை தான்,
படியாக யிடித்துமொக்கப் பரந்தசட்டியடுப்பிற் பாலு
மிருநாழிவிட்டுப் பொடியைத் தூவியதனிற், பிடியாத
வண்ண மடிக்கடிதான்கிண்டி யறவத்தி மெழுகுபதம்

நெய்யுரிதான்விட்டு, பிடியான சர்க்கரையுங் கற்கண்டும் வகைக்குப்பல தத்பலனுகப் பெருகவிட்டுக்கிண்டே.

இட்டிடுவாய் முந்திரிகை பேரீத்தம்பின்னு மியல் பான வழலைகுரு களஞ்சிகூடயிட்டுச், சட்டிதனில் பிரி யாமல் மெழுகுபதமாகத் தானிறக்கி பீங்கானிற் றுன டைத்துத் தாய்க்குக், கெட்டியாய்ப் பூசைசெய்து கிரு பைசெய் யென்றுகேட்டு பிணியாளருக்கு நவமூலந் தீர்த்து, தீட்டுநீ லேகியத்தை களஞ்சியொன்று யெடுத் திரட்டிப் பவளபற்பம் பணவிடையுள் வையே. 51

வைத்துமெள்ள விழுங்கியபின் வென்னீ ரொரு முடர்தான் வாயிலிட்டு பத்துநாட்கொள்வோரில் மூல மெய்த்துப், பிரண்டோடி விடுமெல்லா நோயுந்திரு மெண்பதிலே மொழிந்துவிட்டோமே மூலிகட்டுச், சத்துமிதை வெளிவிடாதே தாய்ப்பதத்தைப்போற்று சாருமென்ற மருந்துகளும் நோய்களுமேதீரும், வித்து வானுகுமவ னென்பதுமே கிடைத்தால் வெளியிடாதே யஷ்டகன்ம மூலிகை பெறநானே. 52

எழுபத்தீராயிர நாடிநரம்பு.

நாளில் சிரசில்வரும் நரம்பதனைகேளு நாற்பத்தீரா யிரந்தான் கழுத்துக்கரைமேலே, தாளிலே தோள்

முதுகு நெஞ்சுகைகள் வயறுந் தனியிடுப்புக் கீழ்வயறு வீரண் கோசங்குதமேற், கீழிலே வருமிரங்கி நரம்பை யொட்டிப் பின்னிக்கேள் சரைமூலம் வரையிருபதி னரம்பு, தோளிலே துடைமுட்டுக் கரண்டை பாதவி நண்மேற் றெட்டுநரம்பு மூவாயிரமாச்சே. 53

ஆச்சுநரம் பெழுபத்திரா யிரமாகுடி யங்கே முடிச்சுப் பின்னுறச் சுருக்கும்நீட்டும், வாச்சுவலித் திருக் கட்டி வலித்து விரித்தோட வலிய சுமையே பிடிக்க வளர் நரம்பின்றுடம்பு, நாச்சுவினால் நாக்குருளும் காவிரல்கள் மடிப்பும் நடந்தோடி துடைமடங்கி யிடுப்பு களுநந் தசைப்பும், பேச்சுஞ்செவி சிரசுமுதற் பெருகாற் பாதம்வரைக்கும் பெரிதான நரம்பின்றொழில் பேசப்பெரிதாமே. 54

மூலரத்தத்துக்கு.

பெரிதான மூலரத்தக் கியாழமினிகேளு பெருமூலி மாதளையும் பருத்தியுட்பிஞ்சும், மரிதான வகத்தியர் துயரத்துடனேயான் சுரைசுண்டைக் கோவை யவை யின் பிஞ்சும், சரியாக வோர்நிரையா யிடித்துச்சட்டி லிட்டு சாதுரியந் தாணிக்காய் நெல்லிக்கடுக்காயும், பரிவான சாதிக்காய் கிராம்புபத்திரி வோமம்படரான வெந்தயமுந் திரிகடுகு மேலம். 55

நிலமிலங் கஞ்சடமாஞ் சிருருசானி யியல்பான அதி மதுரம் வாய்விளங்குஞ்சீரங், கோலங் கொத்தமலி யுட னறுக்குமூலம் வகைக்குறையா மற்களஞ்சி யொன்று வருத் துபிசிங்கூட, வரல்வடுப் பேற்றிசலமும் முன் ஞழிவிட்டுவைத்து நன்ருகக்கார்ப்படியாய் வண்டுகட் டிறுத்து, ஆவின்வெண் ணெயுந்தான்றேசிக் கனியள வாயதிலிட்டு வுருகினபின் ஞரியபின்கொள்ளே. 56

கொண்டுவரில் மூன்றுதினங் குறுக்கலைந்துக் கனிச் சற்கூடி நின்றமூல ரெத்தக்கடுப்புச் சீழ்மூலவாய்வா, லுண்டவன்னஞ் செரியாமலுடனே பலவிதமா உடனே வயிற்றுவலி யோருமிமுலமிரைச்சற், பண்டுகள்ள வா ய்வுகளுங் கிராணிவுக்கிர மும்பாழான மூலமுலைக் கொடி மூல முதலாய்க், கண்டவுடனேடிவிடுங் கியாழும்பற்பங் கொண்டாற் கசடில்லை தீர்ந்துவிடுங் காயம்வச்சிரதேகம்.

சோகை காமாலைக்கு.

தேகமதிற் பித்தம்மிஞ்சிச் சோகைமிக வாகித்திர ண்டுபித்தம் விஷநீரால் காமாலையாகி, பாகமதாய் சேர ரைவற்றி பாண்டுவதுவாகி பாழ்கிணற்றிற் பாசிபற்றும் வாறதுபோலாகி, தாகமதாய் கொண்டதெல்லா மதங் கேயுள்ளதங்கி தணித்துநின்று பின்கழியும் பலவித மாய்ச்சோகை, வேகமதா யிரம்வற்றி வெழுத்துழலுங்

கண்ணும் விச்சர்ப்பும் பசியடங்கிபின்பு மேனியது
சோகை. 58

சோகைகாமாலை பாண்டுபித்தம் விஷநீக்குஞ் சொல்லுகிறோம் வில்வத்தின் வடக்கே போகும்வேரை, பாகமதா யுட்சாடத்தால் வூசைபொலி கொடுத்து பண்பாக வேர்பிடுங்கி குழல்தனிலே யடைத்து, தாகமதாய்க்காமாலைபித்தஞ் கோகைக்காரர் தன்கையிலே கூட்டிபின்பு பேதமையேசெய்து, வேகமதாய் மருந்துகொடு காந்தமலோக மண்டூரம் விதம்பலது முண்டுகுருக் கூடினு
னன்றே, 59

நன்றாகுங் கரிசாலை லேகியத்தி லுள்ளே நாறுதினங் கொடுத்தால் நல்லரத்தறியே, பண்டாகுந் தேகமதிற் பாண்டு சோகைபித்தம் பாழான காமாலை பரந்தோடிப் போகுங், குன்றுமற் மாந்தலோக செந்தூரம் வைப்பார் கூறினேனுங் குருவழலைக் கூடினுலே நின்று, வேண்டாத விருதாவில் மருந்துகளைக் கொண்டார் வெறு
வீணர் பறிப்பதல்லால் வியாதியொழியாதே. 60

ஒழியுமப்பா வியாதியென்ற தெல்லாங்கேளு முத்தமனே சொல்லுகிறே மூறுதியாகப்பாரு, பழியான வியாதிவந்தாற் பேரும் காலைக்கேட்டு பாழான நோய்

களையு மறிந்துகொண்டுநீயும், வெளியாக அஷ்டகன்
மஞ் சிதம்பரத்தின் வியாதிகளுக்கே யதனுற் சொல்லு
கிறேன்கேளு, வழியாக மோகன வசீகர்தம்பனமு மார
ணமு மலைப்பு முட்சாடணமுமாமே. 61

வியாதிகளுக்கு மந்திரம்.

உட்சாடனமும் தம்பனமும் வியாதிகளுக்கெல்லா
மொழிவதற்கு மாரமும் பேதனம்மறிந்தா, லட்சரமுஞ்
சற்கரமு மவர்நாலுபேரு மவர்வியாதிக் கேற்கும்பேர்
கொண்டுவரநாளு, மச்சமுனி யென்னூற்றி லுரைத்த
லஷ்டகன்ம மாறுட்டமில்லை நாமுமாயிரத்தில் மொழிந்
தே, மெச்சதொழில் வியாதிகட்கு மருந்துகட்கு
வேகம் வியாதிமந்திரவாதி வயித்தியற்கு மெய்க்கும்.

எய்வதுதான் முன்செய்த தவத்தினுல் வியாதி எய்
துமே யிரப்பவர்க்கும் பரதேசிக்குஞ், சாஸ்திரங் கற்
றோர்க்குந் தெய்வமது சிவாலயத்துந் தேடும்பொரு
ளீயாதாற்றிருப்பவர் தம்பிரனியிலே தீர்ப்பான் வெகு
நோய்கள் கொய்வதுதா னுயிர்பிழைக்க வேணுமென்று
கூறினே முன்சென்மத்தில், கொடுத்தபலன் பலிக்கு
மவை இந்த கலியுகத்தி லாரறியப்போரா ரவராலே
மந்திரமும் வைத்தியமுந்தானே. 63

தானென்ற மந்திரமும் வைத்தியமுஞ் செய்தாற் றன்வயிறு பிழைப்பதல்லால் மற்றொருவர்க்கீயா, பா னென்றபாவிகட னீவிரக்கமில்லாமற் பாடும்பாடு பின் வருமென் றறியாமூடர், தேனென்ற பாடலிற் கற் றிரை வருதல்போல சிவஞான சாஸ்திரநூல் கற் றோர்க்கு மீய்ந்தால், வானென்ற வஷ்டகன்ம வைத் திய மந்திரமும் வரகும்பரோகிதம் பழிப்பும் வளர் கீர்த்தியுண்டாம். 64

மேகத்திகை.

உண்டானமேக மிருபத்தினாலு முத்தமனே வாதத் தில் மேகமதுநாலு, பண்டையன பித்தத்தில் மேகந் தாமுறு பகருகிறேன் சிலேற்பனத்தில் மேகமது பத்து, நன்றான குருநாடியின் மேகந்தானாலு நடத்தி விற்கும் நோய்களெல்லாம் வறிய பிணிகளும், கண் டாயோ தேகத்தில் நரம்பொன்றுக் கொன்றாய்க் கார் த்துநிற்கு மேகத்தா லெடுத்த திந்தநோயே. 65

எடுத்தகோ யெழுபத்தீராயிரத்துக்கெல்லா மெழுதி வைத்தோ மறுநூற்றில் தளசெந்தூரத்தான் மடுத் துரைக்குக் குருவாய்த்தா லவனேசித்தன் காணப்போ ரூர் கனதீத வித்தைதன்னை, தொடுத்துவைத்தால் மருந்ததுவே போதும்போதுந் தொல்லுலகில் நோய்க

னொன்றும் வாராதுநீகேள், படித்துவைத்த நூலுக ளும் பார்வையிட்டாலுந்தான் பதப்பா கங்கைத் தொழில்கள் கண்டறிந்தோன் சித்தன். 66

அறியார்கள் பூமியிலே மிலேச்சர் மெத்தவுண்டு யங்கங்கே சாஸ்திரத்தை யெழுதிவைத்துக்கொண்டு, குறியாகப் பார்த்தாலுங் கைவராதுங்களுக்கு காட்டை விடை பாகங்குப்பி, வைப்பெறிப்பினுஞ் சிறிதாக பாடிவைத்தநூல் முப்பத்தாறிற்சேர்ந்த நவரத்தின பூபதிசெந்தூரம், நெறியாக வைத்தவனே குருவா கும்பாரு நிறைந்த தனஞ் செந்தூரமாரு மறிவாரே.

ஆதுக்கும் வாயாது வழலைகுருமுடிக்க வறந்தவர்க்கு வாய்க்குமடா முப்பூவின்சுண்ண, முருக்கு ளறிவே னென்று பத்தியங்கள் செய்வா லுத்தருட பச்சைப் புங் கடைத்த லிங்கமன்றி, பேருக்கு மருந்தொன்றவர் கொடுப்பதல்லால் பிரமலபி யாருக்கு மறியார்நீபாரு, சீருக்குட் படுவதெல்லா மார்ந்து செய்யவேணுஞ் சீக்கி ரத்திற் காலனுயிர் கொடுபோனாற் போமே. 68

போவதல்லாற் பூமியிலே பிறந்தவுயி ரெல்லாம் போனசென்மஞ் செய்தகன்ம மிப்பிறவிக் கெய்து, மாவதில்லை யவர்கடத்தை நோய்வருகும்மவர்க்கல்லோ மணிமந்திரங்க ளவிழ்தங்களென்றும், பூவரச கெந்தி

நவ பாஷாணஞ்சாகும் பிணக்கினிட கினிப்புபோக்கி மருந்துகளாய்ச் செய்து, தாவுநோய் கண்டறிந்துதனே விலக்கமருந்து தப்பாமல் வைத்தவனே பண்டிதனு மாமே. 69

காசமெட்டுக்கும் பெயர்.

ஆகுமப்பா சிரசதனில் காசமெட்டுமுண்டு மதின் விபரஞ் சொல்லுகிறே மறிந்துநீகேளு, வாகுமப்பா வாதத்தின் காசமதுவென்று வருகுபித்தஞ் சிலேற் பனத்திற் காசமதிரண்டு, சாகும்பா க்ஷயகாசம்காச மிரத்தகாசமாகும், நோக்குமம்மா நீர்க்காச்சல் மெட்டு மிதற்குள்ளே நுழைந்துவிழ நீர்ச்சூளைப்பிசகுமாச்சே.

பிணிசமாம் விஷச்சூலை நீர்திரண்டு பித்தஞ்சிரசேறி மூக்கில் நீர்ச்சோரை யுண்டாய்ப்பாரு, முனியே சிலே ஷ்ட காசமாறு லொருங்காலு மாறுமற் சிரசிற்றுனேயக ளானி வைத்தாற்போற், சிரசிலொரு பக்கமாய மடித்து வுச்சி செவிகண்மூக்கு வரைக்குந் தோணிவைத், தேறி னுற்போற் சிரசிலுண்டாம் நோய்கள் துடர்ந்து வாயில் நாய்க்கலது பல்லில்விஷநீரே. 71

விஷநீர் கண்ணிலுண்டாந் தொண்ணூற்றுறு நோய் கள் விவம்பலவாய்நோய்கள் வந்துகுருடாகுங்கண்கள், சதியிலே பஞ்சவெட்டை மேகமது மாறுவான பித்தஞ்

சிரசிற்புக்கி யளவிறந்த நோய்கள், திசவாயு வாயுவா லெடுத்த நோய்கள் சூலைவிஷநீர்திரள் கரப்பன் சொரி சிரங்காந் தேகமெல்லாம் புண்ணும், நிசமாக குஷ்டங் குறைநோய்கள் வரும்பின்பு நீங்காமற் புண்வெடித்து குறையுங்கைகாலே. 72

காலமே கொள்ளுதற்கு மருந்துசொல்வோங் கேளு கடைக்காண்ட மறுநூற்றின் கலந்துபார்மருந்தை, சால வே சர்வக்கினியும் பதங்கரசங் குழம்புஞ் சஞ்சீவி தச தீக்ஷை பூபதியுமாகும், ஞாலமே சிரசினுள்ள நோய்க ளுந்தான்றீரும் நானிலத்தில் நீலகண்ட ரசக்கற்பூர மாகு, மேலவே மருந்துகள் தா னெங்கேயுண்டே பாரு இருக்குமிடமறிந்துகொண்டாற் குருவாய்த்தல்நன்றே.

நன்றாக முன்னுரைத்த பேர்களுமறிந்து நானிலத் தில் நோய்கள்வரும் பேர்கட் கெல்லாங் கேளு, கொண் டாடிடுவர் பிடுங்கிபூசைசெய்து குழலடைத்து யெந்தி ரத்தைக் குறிப்பாய்க் கட்டிக்கொண்டு, தீண்டாதேயில் லாத தீவினைத்தான் போக்கித் திரும்பவும் நோய்வா ராம லுட்சாடனம் பேதனஞ்செய்து, பாண்டாகும் வியாதிகட்கு மருந்துசெய்வார்பின்பு பறக்குமடா நோய் களெல்லாம் பற்றிநன்றாய்ப்பாரே. 74

பாடினதோர்சாஸ்திரந்தான் கோடாகோடிபண்பாறு வைத்தியத்தி லிரண்டு லட்சம்பாரு, கூடினதோர் வா தத்தில் சமதுவாகும் குலாவுநின்ற மாந்திரியமெண்ணு யிரந்தானுமுண்டு, பாடினதோர் வைத்தியத்திற் சுருக்கி நன்றாகக்கேளு மறுநூறுமாயி ரத்தன்னூரும் நன் றாய்த், தேடினதோர் கன்மகாண்டம் நன்றாய்பபாரு மூன்றும் தீர்க்கமடா நாற்பதுமன்பது மெண்பதும். ()

எண்பதிலே சொல்லிவைத்தோம் திறமாய்நீபாரு மெந்திரமும் வேறுகளும் பேர்நாளுங்கேட்டு, பண்புரு நோ யாளர்க்கு மருந்துசெய்யவேதான் பாருநீமுன் வந்த ஜென்மந்தீர்த்துக்கொண்டு, வம்பருக்குப் பூமி யிலே யறியாமூடருண்டு சண்டாளர்க்கீயாதே யிந்நூல் கடன்னே, யன்பருட கையிற்றான் கிட்டித்தென்றார்சூஸ் திர மறுநூறுமெண்பதுமே யானசித்திபாரே. 76

சித்திக்க வேணுமென்றால் குருமுடித்துக் கொண்டு செய்துபார் தொழிலெல்லாம் தீர்த்தமாகுஞ்சொன் னேம், பார்மகனே நல்லகுரு வந்துவாய்க்கும் எத்தி யவர் பாதத்தில் விழுந்துதொழுதங்கே, என்குருவே நாயேனை யாண்டுகொள்ளுமென்று, வைத்திருந்தா லவ ருன்மீது மனதுமிகமகிழ்ந்து வகைசொல்லி சாஸ்திர மெலா மீவார்காண்பாரே. 77

காணப்பா யெண்பதிலும் நாற்பதிலுஞ்சொன்னோங் கருவறிய வேணுமென்று லறுநூற்றைப்பாரு, வேண ப்பா யெண்பதுதான் மூன்றுசொன்னோமுன்பே வித விதமாயன்பதுதா னுலும்சொன்னோங்கூடப், பேணப் பாவறுநூறு மாறுநூல்கள்சொன்னோம், பிரித்துப்பார் நூருறுசொன்னோம்பிறகு, தோணப்பா பெருநூலே யல்லாவில்லைநூல்கள்தொழில் விபரமறிவதற்குவேறே போதும். 78

அறுநூறி லேதென்றுற் சொல்லக்கேளு மினித்தா னுயிரத்தைந்நூறுங் கன்மகாண்டமுன்னூறும், பேரு பெற்ற கடைக்காண்ட மறுநூறுதான்பாரு, நீருமப்பா செந்தூரய்முப்பத்தாறும், நிறுத்தினோம் வேணதுண்டு யிதுபோதும்நூலே. 79

நூலென்ற சித்தாந்தம் வேதாந்தமுதலாய் உண்மை யாய்ப் பாடிவைத்தோ மினிமேலில்லைபாரு, பாலென்ற தொன்னிலேபிறந்த நெய்யைப்போல பறிந்துபார் நூ லெல்லாம் பலவிதமாய்த்தோணு, மாலென்ற மரத்திலே விழுதோடுமாப்போ லறிந்தறிந்து நூலெல்லா மாராய் ந்துபாரு, காலென்ற கண்ணேக்கிக் குருமுனியானுரை த்த கருத்தறிந்தோர்க் கென்பதுவே காட்சிமுன்னூல் முற்றே. 80

முற்றிற்று.

சிவமயம்.

பதினைந்தாவது,

அகஸ்தியமகாமுனிவர்

வைத்தியம் பின்னெண்பது.

முன்னூ றெண்பதுவுஞ் சொன்னேன் முதலேகாப்பு மூலத்திலேநின்ற கணபதியைப்போற்றி, பின்னூ றெண்பதுவுஞ்சொல்ல ஆயிகாப்பு பேரானகுரு முருகன்காப்பு, அந்நாளிலீசனுப தேசத்தாலே அகஸ்திய னென்றெனக்குப் பேருமாச்சு, பொன்னான வாதத்தி லட்சங்காப்பு பூட்டினேன் பூரணசூஸ் திரத்திற்கானே.

பூரணநூ லாயிரத்திரு நூருஞ்சொன்னேன் பொருளான வாதத்துக் காதிநூல்தான், காரணமாம் வைத்தியத்தி லிரண்டுலட்சங் கைமுறையாம் பதினாறுங் கண்டுகொள்ளு, ஆரணமாய் பெருநூலைசுருக்கிச்சொன்னேன் ஆயிரத் திருநூறுமிதில் முடிவதாகுந், தாரணியில் வைத்தியத்துக் காதிநூலுந் தமிழினு லாயிரம்வெண்பா சாற்றினேனே. 2

சாற்றினே னறுனூற்றி லிரண்டுகொண்டந் தாய்செல்ல லவரன்சொல்லத் தானேபூவி, லேற்றினேன் மற்றனூ

விதுகளெல்லா மிதின்கீழே யாகுமல்லா றேற்றமில்லை, மாற்றினே னெண்பதிலே சுருக்கமாய்நான்கு வகை யறிய வேணுமென்று விந்நூற்றோடு, நீற்றினங்களுருக் கினங்கள் செந்தூரங்கள் நிலைப்பதற்கு வழிவிட்டால் நேற்படாதே. 3

நேராக வைத்தியனூ லநேகமுண்டு நிலைப்பத வற்க நூறு வெண்பதுபோலில்லை, சீரான அறுநூற்றில் மூந் நூல்நன்று தெளிவாக வெண்பதிலே பிந்நூல்நன்று, கூரான விந்தநூல் பின்னூலாகுங் கூறினே னிதை யெடுத்து மறைத்தார்சித்தர், பேரான தன்மத்தைக் குறித்துப்பின்னும் பெரியோர்கள் வெளிவிட்டார் பே ணிப்பாரே. 4

பாரப்பா புத்திரனே மச்சகேந்தி பாடுகிறேனெண் பதிலே சுளுவையெல்லாம், நேரப்பா நோய்போககன்ம காண்டம் நிறைப்படிக்கி யார்முடிப்பா ருலகத்தோர் கள், சீரப்பா மனிதரெல்லா மிராஜாவோசொல் திரவி யவா னுயிரத்தி லொருவனுண்டு, ஊரப்பா யெளியோ ருக்கு கிந்நூல்வேணு முயிர்கொடுக்கு மிந்நூலை வுரை செய்வேனே. 5

கன்ம நிவர்த்தி.

செய்வதென்ன பஞ்சபா தகத்தினாலே தீராத கன்ம வினை சேடத்திற்காணு, முய்வதற்கு மருந்துடனே சாந்திகொண்டு வுரைக்கிறேன் கடத்தினிலே ஓடும் நீரை, மேய்வதென்ன யெடுத்துவந்து சுத்தமான வீட திலே தெர்ப்பையிட்டு வைத்துக்கொண்டு, கொய்வ தென்ன வென்றாலுஞ் சங்கும்பாசிக் கோர்த்து நீர்க் குடத்தினுட வாயிற்சுத்தே. 6

சுத்தியே பசுமஞ்ச ளரைத்துவப்பி துளிரான மாங் குழையு மேலேவைத்து, பத்தியே தூபமொடு தீபங் காட்டி பகலவனு முதலேழு ளுைமங்கே, மத்தியானந் தனிலே கன்மரோகி மன்னவனே முன்னுக வைத்துக் கொண்டு, புத்தியாங் குடசலத்தில் முக்கோணமிட்டு போதிப்பாய்க் கோணத்திற் சிகரம் வைத்தோதே. 7

ஓதுவாய் கூவிளத்தின் பத்திரம்நூற்றெட்டு ஓங்கார முச்சரித்துக் குடநீர்க்குள்ளே, நீதியாய் முடிந்தபின்பு பாத்திரத்தினாலே நீரெடுத்தும் புரோட்சியாய்க் குட ஜலத்தை, பேதியா யொருமனதாய் சிரங்கைமூன்று பிணியாளிக்கப் பிரமைபோகும், நேத்தியா யருக்கன் முத லேழுநாளுந் தினமுமிந்தப் படியெடுத்துச் செய்ய நன்றே. 8

நன்றான நாலேழுஞ் செய்தாயானால் நாடாது கன்ம வினை நாட்டிலுந்தா, னென்றான மூலமிது வெளிவிடா தே ஓமந்தெற் பனஞ்செபங்க ளிதற்கீடல்ல, நன்றாகக் கன்மத்தை நிவர்த்திசெய்து நலமான வவிழ்தத்தை தானேகொள்ளு, குன்றாத மேகமது யிருபத்தொன் றுங் குடிபோக மருந்தொன்று கூறுவேனே. 9

சொர்ன அபிரேகச் செந்தூரம்.

கூறுவேன் அபிரேகச் செந்தூரமைந்து கொடிதான பவளபற்ப மிடையேகூட்டி, நீருமே பரிரேக்கு அபி ரேகத்திற்பாதிநிசமுள்ளரசபதங்கம்பவளம்நேராய்ச், சீருமே அயக்காந்தச் செந்தூரந்தான் சிறப்பாக அபி ரேகந் தனக்குநேராய், தாருமே கருவங்கம் ரேக்கிற் பாதி சாதகமாய் குமரிப்பால் விட்டுஆட்டே. 10

ஆட்டியே வில்லைதட்டி புடத்திற்போடு வப்பனே வட்டிருக்கு போலாமென்னே, நீட்டியே வில்லைக்குப் பாதிகெந்தி நேராக கெந்திரக்கிப் பாதிலிங்கம், மாட் டியே கல்வத்திற் குமரிச்சாறால் மாளுமட்டுந் தான ரைத்து வில்லைதட்டி, வாட்டியே ரவிதனிலே வுலர்ந்த பின்பு வாட்டோடிற் சீலைசெய்து புடத்தைப்போடே.

புடம்போட யேழுதிரம் சிவந்தநீறும் பொல்லாத மேகமெல்லாங் கடலோடிப்போந், திடமானவர்ணமது

குறைந்துநின்றாற் செயலிங்க மறைக்களஞ்சி சேர்த் துப்போடு, விஷம்போல வந்ததொரு மேகந்தீரும் விட் டோடிப் போகுமப்பா அனுபானங்கள், உடலறிந்து யமுர்தசஞ்சீவி லேகிய முண்ணவே அனுபான முறைத் திட்டோமே. 12

தாம்பிர பற்பம்.

உரைத்தசொர்ண அபிரேகமென்றும்பேரு வொடுங் காத சூலைகுன்ம வாய்வுக்கெல்லாங், கரைத்திட்ட தாம் பரத்தை சுத்திசெய்து கனமான குகையிலிட்டு உறுக் கும்போது, இரைக்கிறேன் தாளகமு மண்டத்தோடு எலுமிச்சம்பழச்சார்விட் டரைத்துவுண்டை, குரைக்கி றேன் குன்றுமணிபோலுருட்டி குறையாம லொரு பலந்தான் மூன்றுபலத்திற் றாக்கே. 13

தாக்கவே ஒவ்வொன்றாய்க் கொடுக்கவாங்கி தாம் பிரம் வெங்கலம்போற் றகர்ந்துகாணும், நீக்கவே பொடியாக்கி யுரைக்கும்போது, நீட்டுவாய் வீரமிரு களஞ்சிநீறு, தூக்கியே சேர்த்தரைப்பா யெருக்கம் பாலாற் றுடியங்க மூன்றுநாட் கழலில்வாட்டி, பூக்கவே வில்லைதட்டி யுலர்ந்தபின்பு புடம்போடு நூறெருவிற் பொருமிநீறும். 14

நீரான தாம்பிரத்தை கல்வத்திட்டு நேரிழையாள் முலைப்பாலா லரைப்பாய்சாமம், கூரானசங்கழுஞ்சி கூட்டியாட்டி குக்கிடத்திற் புடம்போட கொடியபாபந், தீராத நோயுண்டோ குன்மமெட்டும் சேர்ந்தபலரோக மெல்லாந் தீர்ந்துபோகும், காரான சுன்னச்சார் பிஞ்சு வாழைக் கனியினிட பத்தியம்பாற் களஞ்சியாமே. 15

அரையாப்புக் கட்டுமருந்து.

ஆகுமே முளகோடு வுப்புசுரு யாமணக்கெண்ணை யொடு நெய்யுமாகும், போகுமே யிம்மருந்து முப்பத்தாறிற் புகட்டினே னிதுபோலே சுளுகிராது, வேகுமே அரையாப்பு தீரவென்றால் வெள்ளைதனக் காசிடை தான் மெழுகிலூட்டி, ஏகுமே வில்லைதட்டி வெதுப்பிக் கட்ட யிருந்தயிடந் தெரியாம லேகும்பாரே. 16

முப்புச் சுண்ணம்.

பாரப்பா முன்னூலா லெண்பதுக்குட் பாடினேன் குருமுடிக்கும் பக்குவத்தை, சீறப்பா திறந்துதான் சொல்லவில்லை மூலந் திறந்தப்பா பாடினேன் பூநீர்வித்தை, கூரப்பா வதினாலே குற்றமென்று கொட்டினே னிந்நூல்பின் னெண்பதுக்குள், ஆரப்பா கண்டுசெய் வான் யோகியானு லறிந்துகொண்டு வழலையெடுத் தாடுவானே. 17

ஆடுவான் வழலைத்தொட்டே வாதியானு லதைவிட்டு மூதேவி யலைவானப்போ, வோடுவான் பூமியிலே முளைத்தபூண்டு வொவ்வொன்றாய் பார்த்துமன முருகி மாய்வான், கூடுவான்கடைசியிலே பிச்சைவாங்கி குடிப் பதல்லா நூல்களுக்குக் குற்றஞ்சொல்வான், சோடுதா னெடுத்தவனையடிக்கவென்றாற் றெடுகுறிபோற் றெட் டேறுங் கோட்டைக்கல்லே. 18

கல்லென்றால் வெள்ளைக்கல் நாதக்கல்லாங் கருங்கல் லுஞ் செங்கல்லுஞ் சுக்கான்கல்லு,சொல்லென்ற யானை யாம் வழலைக்கல்லாஞ் சோழனென்று மிரவியென்றுஞ் சொன்னேன், புல்லனே பாராது வாய்த்தக்கல்லிற் பூரக்கல்வீரக்கல் லிரண்டாய்நிற்கும், வில்லென்ற பூரக் கற் சத்திபாச்சு வீரக்கல்லுப்பாச்சு ஈசனுச்சே. 19

ஆச்சப்பாசத்திவிட்டா லாகாதுப்பு யப்பென்ற நீரா லே சுத்தியாச்சு, பேச்சப்பா யிருநூற்றிற் சொன்னே மானை பிண்டக்கல் வித்தைசெய்ய குருதான்வேணும், மூச்சப்பா பொருநூலா யிரமும்வேணு முறைதெரியு மில்லாட்டால் வழலைவித்தை, காச்சப்பா யின்னூலில் வெளியாய்ச்சொல்வேன் நாமென்ன மீனவேஷத்தைப் பாரே. 20

பாரப்பாயிந்துவிலே விளையும்பூவே பகற்கால மிரவி பட்டு சுண்ணமாகு, மூரப்பா அப்பூவிற் குறுணிவாரி வுத்தமனே ஜலத்தைவிட்டு தெளிவுவாங்கி, நீரப்பா காய்ச்சியபின் மறுதிரந்தா நிசமான சிறுநீர்விட் டிறுத் துக்கொண்டு, காரப்பா காய்ச்சியபின் தேசிநீரிற் கடந்த பின்பு குண்டநீர் தெளிவிற்காய்ச்சே. 21

காய்ச்சியபின் பிரமகற்சுண்ணம்பண்ணி கமரியுப்பு சுண்ணமுடன் மூன்றும் நேராய்த், தாட்சியேவாராமற் கரைத்துமொன்றாய் தணலிலிட்டு குளபருவந்தன்னிற், பாச்சிடுவாய் பாரையுப்பு சீனக்காரம் பாஷாண வீர மொடு சாரங்காரங், கூச்சமில்லை துருசோடுபொடித்துக் கொண்டு கொட்டுவா யிளகிநிற்குங் குளம்பிற்றனே.

குளம்பான மருந்தையெல்லாங் காற்றேட்டிவிட்டு கொடுரவியிற் றிங்களொன்று குணமா யனுபவித்து, களாம்பழ சாராயம்படி நாலுக்குட் டான்விட்டு கலக்கி வைப்பாய் ரவியிற்குள்ளே, விளம்பாமற் கலவுகொண்டு கடைந்துநின்ற வெயில்முகத்திற் பாரையிலே விசுறு வாயே. 23

இதுவுமது.

கூறுவேன் அபிரேக செந்தூரமைந்தா கொடிதான பவளபற்ப மிடையேகூட்டி, நீருமே பரிரேக்கு அப்

ரேகத்திற்குபாதி நிசமுள்ள ரசபதங்கம் பவளம்நே
ராய்ச், சீறுமே அயக்காந்தச் செந்தூரந்தான் சிறப்பாக
அபிரேகந் தனக்குநேராய்த், தாருமே கருவங்கம் ரேக்
கிற்பாதி சாதகமாய் குமரிப்பால் விட்டுஆட்டே. 24

ஆட்டியே வில்லைதட்டி புடத்திற்போடு வப்பனே
வட்டிருக்கு போலாமென்னே, நீட்டியே வில்லைக்குப்
பாலெகெந்தி நேராக கெந்திரக்கி பாதிலிங்கம், மாட்டியே
கல்வத்திற் குமரிச்சாற்றில் மாளுமட்டுந் தானரைத்து
வில்லைதட்டி, வாட்டியே ரவிதனிலே வுலர்ந்தபின்பு
வடவோட்டிற் சீலைசெய்து புடத்தைப்போடே. 25

புடம்போட யெழுதிரம் வந்தூறும் பொல்லாத
தேகமெல்லாங் கடலோடிப்போம், திடமான வர்ணமது
குறைந்துநின்றுற் செயலிங்க மதுரைக்களஞ்சி சேர்த்
துப்போடு, விஷம்போல வந்ததொரு மேகந்தீரும் விட்
டோடிப் போகுமப்பா அனுபானங்கேள், உடலறிந்து
முயர்த சஞ்சீவிலேகிய முண்ணவே அனுபான முறைத்
திட்டோமே. 26

உரைத்தசொர்ன அபிரேக மென்றும்பேரு ஓடுங்
காத சூலைகுன்ம வாய்வுக்கெல்லாங், கரைத்திட்ட தாம்
பரத்தை சுத்திசெய்து கனமான குகையிலிட்டுக் குமு
றும்போது, இறைக்கிறேன் தாளகமு மண்டத்தோடு

எலுமிச்சம் பழச்சார்விட் டரைத்துவுண்டை, குறைக் கிறேன் குன்றிமணி போலுருட்டி குறையாம லொரு பலந்தான் மூன்றுபலத்திற்குக்கே. 27

தாக்கவே ஒவ்வொன்றாய்க் கொடுக்கவாங்கி தாம்பூலம் வெங்கலம்போற் றகர்ந்துகாணும், நீக்கவே பொடிக்கி யரைக்கும்போது நீட்டுவாய் வீரமிரு களஞ்சி நீறு, தூக்கியே சேர்ந்தரைப்பா யொருக்கபாலாற் றுடியடக்க மூன்றுநாட் சுழல்வாட்டி, பூக்கவே வில்லைதட்டி யுலர்த்தபின்பு புடம்போடு னூறெருவிற் பொறுமிநீறும்.

நீறும் தாம்பரத்தை கல்வத்திலிட்டு நேரிழையாள் முலைப்பாலா லரைப்பாய்சாமங், கூறுன ரசங்கழஞ்சி கூட்டியாட்டி குக்குடத்திற் புடம்போடே கொடியபற் பங், தீராத நோயுண்டோ குன்மமெட்டுஞ் சேர்ந்தபல ரோகமெல்லாந் தீர்ந்துபோகுங், காரான கன்னற்சாற் பிஞ்சுவாழைக் கனியிலிட பத்தியம்பாற் கஞ்சியாமே.

ஆகுமே முளகோடு வுப்புசார யாமணக் கெண்ணெயொடு செய்யுமாகும், போகுமோ யிம்மருந்து முப்பத்தாரிற் புகட்டினே னிதுபோல சுளுவிராது, வேகுமே யரையாப்பு தீரவென்றால் வெள்ளைதனங் காசிடைதான் மெழுகிலூட்டே, யேகுமே வில்லைதட்டி வெதுவெதுப்பிக்கட்டி இருந்தவிடந் தெரியாம லேகும்பாரே. 30

வேறு.

விசிறியே பூப்போலே பொங்கிநிற்கும் விளைந்த வுப்பை பட்சமது மேலேசென்று, சேறவே யப்பூவில் பலந்தான்வாங்கி அந்திடைக்கி னோர்பாதி பூரம்வீர, முசறவே குருவண்டு களஞ்சிசேர்த்து வுத்தமனே கல்வத்தி லிட்டுக்கொண்டு, பிசரவே அறுவகைநீர் தன்னாலாட்டி பிடித்திடுவாய் வில்லையது பெறுமைதானே. 31

பெருமையென்ற சட்டியிலே களஞ்சிச் சுண்ணம் போராகபாதியிட்டு வில்லைவைத்து, அருமையென்றதின்மேலே சுண்ணங்கொட்டி அமுக்கியேசட்டி கவிழ்த்துமூடி, உருமையென்ற சீலமண் ணேழுஞ்செய்து உத்தமனே வெண்சாமம் தீயைமூட்டி, வருமையில்லா தீயைநீ மூட்டும்போது வயிரவற்கு மாயிக்கும் வணக்கஞ்செய்யே. 32

வணக்கஞ்செய் தாரவிட் டெடுத்துப்பாரு மல்லிகைப் பூப் போலிருக்கும் வழலைச்சுண்ணங், குணக்கமில்லா யிச்சுண்ணந் துருசுக்கப்பி கௌரிரவியிற் போட்டடித்து சுண்ணமாகு, மணக்கவே வாடைபட்டாற் சூதாரசன் மதிமயங்கிக் கட்டுமடா வாதவேனு, க்ஷணப்பொழுதிலுண்டுங் கோசபீசஞ் செயலறிந்த வாதிமகன் வயித்தியனுமே. 33

வைத்தியம் செய்யும் ஆதரவும்.

வைத்தியனே யானுக்கால் முப்பூவேனு மறந்து விட்டு செய்வதனுற் கிருபையென்ன, சத்தியமா முப சார வார்த்தை சொன்னுற் றம்தமக்கு வந்தநோய் தானேபோமே, பத்தினிலே நவலோக பாஷாணங் கணற்கண்டு பூதமையாலே பற்பஞ்செய்வீர், பயித்தி யமோ வுங்களுக்கு நோய்கள்போக பண்டிதரே கண்டி தமாய் பார்த்திடீரே. 34

பாராமல் செய்வதிலே தோஷந் தோஷம் பழயபுண் ணுளி வைத்தியனுகுமென்றே, கோராமலிருக்குந்தோ சாஸ்திரங்கடோறுங் குணமுள்ள ராசியென்ருர் பலிக் கும்நூல்கள், தேருமற் சொற்கேட்டுப் பரிகாரத்தைச் செய்வதிலே பழிபாவஞ் சிக்குஞ்சிக்கும், ஆருன வுல கத்தி லுயிரையெல்லாஞ் சொல்லுதற்கோ தலையெடுத் தாய் சுற்றனுமே. 35

இரசப்பதங்கம்.

சுற்றனும் நோய்தனக்கு ரசபதங்கம் சுருக்கவே புலத் தியனே தேர்ந்துகேளு, பார்த்துநீ தோண்டிரண்டு சம னுப்வாங்கி பருந்தோண்டிக் கறைவாசி யுப்பையிட்டு பாற்ருன கெந்தியொடு பற்பாடகமு மாஞ்சியொடு வெள்ளைப் பாஷாணம்நாலு, நீற்ருன வகைக்கியரைக்

களஞ்சிவீதம் நீயரைப்பாய் வெற்றிலைச்சார் விட்டு
ஆட்டே. 36

ஆட்டியே கல்வத்தி லெடுத்துக்கொண்டு யதையெ
டுத்து யகல்போல பிடித்துலர்த்தி, நாட்டியே ரெண்டு
பல ரசத்தைவிட்டு நற்பாண்ட வுப்பின்மேல் நடுவே
வைத்து, மீட்டியே வுப்புமேல் மறைத்துத்தூவி மேல்
சட்டி கவிழ்த்துயிடை சீலைசெய்து, தீட்டியே யடுப்பில்
வைத்து யெட்டுசாமந் தீயெரித்து ரவியிட்டுத் திறந்து
பாரே. 37

பாரேநீ மேல்தோண்டி பதங்கத்துள்ளே பதங்க
மது பற்றிநிற்கும் பதனமாக, ஆரவிட்டு பன்றியது
மயிரினால் வாங்கி யப்பனை பீங்கானி லடைத்துக்
கொண்டு, சாரவிட்ட பனவெல்லம் நல்லவெல்லஞ் சர்க்
கரை வாழைப்பழத்தி லுண்பீராகி, லூரைவிட்டு வோ
டிப்போம் நாளேழுக்கு ளுண்டான பாங்கிமுதல் சூலை
போமே. 38

சூலைபோம் வாயிலது கடித்ததானாற் றுடியானக் கரு
வேலம் பட்டைதண்ணீர், காலையிலும் மாலையிலும் வாயி
லூற்றி காரவே கொப்பளிக்க வீக்கந்தீரு, மூலமுந்தீர்
கடுப்புறத்த பிருந்துதானால் மூட்டுவாய்ப் பாற்குஞ்சி

யிளஞ்சூடான, பாலகனே மாதருட கைவேகத்தை யாராதே மூன்றுதினங்கள் பத்தியமாய்ப்பாரே. 39

அரிதாரபற்பம்.

பத்தியமா மரிதார பற்பஞ்சொல்வேன் பருங்கட்டி பாகவொரு பலமாய்வாங்கி, பத்தியமாஞ் சுண்ணும்புக் கல்லிற்சுத்தி தாழ்வில்லா யீரைந்து தாமேசெய்து, சுத்தியாய் வெடியுப்புச்சுண்ணம் வீரமுருவான பூநீறு சீனகாரம், வெற்றியாய் வெள்ளையொடு யெருக்கம்பா லால் மேலான கட்டிக்கிக் கவசஞ்செய்யே. 40

கவசமிட்ட சட்டிதனைக் காயவைத்துக் கனபூவரசம் பட்டையுட சாம்பற்குள்ளே, நிமிஷமிட்டு சீலமண் ணேழுஞ்செய்து நிலைவரமா யடுப்பேத்தி நினைவாய் முத்தி, தூபமிட்டு ஞற்சாம மெரிக்கநீறும் சிவசிவா அரியினுட தேவிறுதந், துவசங்கட்ட வேணுமப்பா மூலோகத்துள்ளே சுயரோகஞ் சுரமாதந் தான்கா ணேமே. 41

காணவே அரிதான பற்பந்தன்னை கனமான திரி கடுகு தேனிலுண்டால், நாணுமே சுரமீளக்கிரந்தி குஷ்டம் நலமில்லாப் பீனிசங்கள் விஷநீரெல்லாங், கோணுமே புகையிலையும்புளியுந்தள்ளு, கொண்டபின்பு

தலைமுழுகிக் கூட்டியுண்ணே, உண்ணவே சுரங்களுக்கு மாரனுக்கு மூதண்ட சுரக்கோடாலி யுரைக்கிறேன் கேள். 42

சு ர கோ டா லி.

விண்ணிலே போனவுயிர் மீளும்மீளும் வெள்ளை யென்று சூதமென்று சௌரியென்று, தண்ணவே மிள குடனே சேர்த்தரைத்து சாரமென்ற மத்தஞ்சார்க் கொம்பின்பாக, லெண்ணவே ஞற்சாம மரைத்துநன்று யுலர்ந்திடக் காயவைத்தெடுத்துக்கொண்டு, நண்ணவே மோர்காடி யிளநீர் தன்னி லாட்டிஞ லொன்றிற் சுரம் நாடாதே. 43

மாத்திரைகளின் பெயர்.

நாடாது மாத்திரையின் பேரேதென்று விரத்தின சபாபதி சிந்தாமணி சஞ்சீவி, வாடாத பகீரதியாம் அக்கினிகுமாரன் வாதராட்சதன் காமகேசரி ஆனந் தன், ஊடான திவையெல்லாம் அறுனூற்றுக்குளுரைத் திட்டேனின்னம்வெகு வுசிதமெல்லாம், பாடாமலிருக்க வில்லை நூல்கடோறும் பார்த்தறிந்தாற் பண்டிதமும் பலிக்குந்தானே. 44

வைத்தியர் அறியவேண்டிய விபரம்.

பலிப்பதற்கு வியாதியுள்ளோர் திரேகக்கூறும் பருத்தவுடல் மெலிந்தவுடனேயின்வாசி, சலிப்பில்லாபலிப் பின்கூறும் சலத்தின்வா சசாத்தியமுஞ் சாத்யாதியுந் தத்துவவாசி, வலிப்பில்லாத நித்திரையின்வாசி மங்கையர்க ளாசையின்மே லேமயக்கவாசி, பலிப்பில்லா கன்மதன்ம நாட்டக்கூறும் பார்த்தறிந்த பிறகுபார் மருந்தின்வாரே. 45

ஆரப்பா நாலுலட் சணமும்பாரு ஆள்பாரு நாள் பாரு குணமும்பாரு, நோய்பாரு தேசபே தங்கள்பாரு, நிலைபாரு கிரகவுச்சம் நீசம்பாரு, பேர்பாரு யிவனைநீ பிறகுபாரு போதிலே கீர்த்தியின் றன்மம்பாரு, வேர் பாரு தழைபாரு மிஞ்சினைக்கால் மெள்ளமெள்ள பற் பஞ்செந்தூரம் பாரே. 46

பாரப்பா வுலகத்திற் பெரியோருண்டு பகைக்காரர் மெத்தவுண்டு பாஷாண்டியுண்டு, தாரப்பா தாரங்கள் கண்டறிந்துசெய்ய தன்மம்வரு மதினாலே கீர்த்தியுண்டு, ஆரப்பா யாக்கடவஞ் செய்கின்றாலுங் கொடுக்கிற மருந்துகளிற் குற்றம்வேண்டாஞ், சீரப்பா கிருபை வைத்து மருந்துயீந்தாற் செய்தகன்மம் வரவரத்தீருந் தானே. 47

தானென்ற நோயாலே யெடுத்ததிரேகந் தன்னில வர் மாருதவு முயர்தானுச்சு, பூனென்ற சிலேத்பன மும் வாதபித்த பிடரிவுமி யாயிரங்கி கரத்தில்நிற்கும், ஊனென்ற நாடியத்து ஒன்றேயொன்று ஒன்றுயே மூன் ருகி அனேகமாச்சு, நானென்ற வாதமது தொந்த மாச்சு நன்ருன நாடியெல்லாந் தெளியநன்றே. 48

தெளிந்துபார் நாடியுதா ரணையின்போக்கு செப்பரிய நோய்போக்கும் சடத்தின்போக்கும், மொழிந்துபதி னுயிரத்தில் சொன்னேன் சொன்னேன் மூன்றுவித கன்மகாண்டங்கள் சொன்னேன், பொழிந்திடவே மணி நாலாயிர வெண்பாவில் போக்கொன்றுந் தப்பாதுபூரா யங்கேள், தெளிந்துகொள்ள யின்னமொரு யெண்ப துண்டு சிவசிவா வாதனூல் தெளிவுதானே. 49

தானென்ற யெண்பதில் வழலைமார்க்கம் சாதகமாய்ச் சவுகாரக் கெண்ணெய்வாங்க, தேனென்ன சருக்குரு வும் வெளியாய்ச் சொன்னேன் வெட்டவெளி யாகு மந்த னூலைப்பார்த்தால், கோனென்ற ரிஷிதேவர் முனி வர்சித்தர் கூடியேபொதிகையிலே வந்திருக்கும்போது, ஏனென்ற சாஸ்திரங்க ளெல்லாம்பார்த்து யெண்ப தையு மறைத்துவிட்டா ரெனைக்காணுமல். 50

Page number incorrect

காணுமல் போகாமல் வழலைச்சுண்ணம் கருவனி யாயிரத்திரு னூறும்பாரு, தோணுமல் சட்டைமுனி சொன்னமார்க்கம் சுத்துகிறேம் பலவகை தெரியச் சொன்னேம், பூணுமல் நந்தீசர் வெளியாய்ச்சொன்னூர் புதைத்தாரே மூலவர்க்கப் பிள்ளையெல்லாம், வீணைகச் சொல்லவில்லை மச்சகேந்திரன் வெடியுப்பு சேர்க்கும் வகை விளம்பினுரே. 51

சமயரோகம் வருதல்.

விளம்பினுர் சயரோகம் வருதல்கேளு விசையான தலத்தில் சூடுகொண்டு, தளம்பியே கபாலத்தில் முடி சாடி தாதுவெல்லாங் கலகலத்து ரெத்தம்வற்றி, உளம் பியே நீரெறிந்து சுரமுந்தோன்றி உளச்சலாடி பீனிச மும் நாக்குருசியற்று, கிளம்பியே யெட்டுவகை சயங்க ளாகி கீழாறு கொண்டுவிடும் இளப்புத்தானே. 52

சயகுலாந்த செந்தூரம்.

இளப்பான ரோகமது தீரவென்று வியம்புவேன் சயகுலாந்த செந்தூரந்தான், பிளப்பான ஆயிரத்தைன் னூல் சொன்னேன் பேச்செல்லா விந்தமுறை சயனிப் பாரு, உளப்பான மால்தேவி பலம்மொன்று உத்த மனே பூசினிக்காய் நீரிற்காய்ச்சி, சிலேப்பான தூளாங்

திர மாகத்தூக்கி செங்கிளுவை சாற்றிலே சுத்தி செய்யே. 53

செய்திடவே அரிதாரம் சமனுய்பூரம் சிலைகூட்டி யெருக்கம்பால் தன்னுலாட்டி, கொய்திடவே குகையி லிட்டு புடத்தைப்போட குலமெல்லாந் தான்புகைந்து சாம்பலாகும், செய்திடவே அந்திடைக்கி பவளம்நாரி யிவைசேர்த்து முன்போல புடத்தைப்போடு, நைந் திடவே வெந்துபோம் அவ்விடைக்கி லிங்கம் நாலி லொன்று தங்கமறை கெந்தியாலே. 54

கால்கூட்டி காந்தமறை பலமுஞ்சேர்த்து கனமான குமரிச்சார் முருக்கம்பூச்சார், கால்சேர்த்து புடம்போடு செந்தூரிக்கு கனகமாஞ் செந்தூரம் புடமைந்தாறல், கால்சேர்த்து குழாவிலே யடைத்துக்கொண்டு வாகான திரிகடுகு தேனிலுண்டு, பால்சேர்த்து பத்தியங்கொள் கருத்தாட்டின் பால் பத்துநாள் மருந்துண்ணப் பலிக் கும் நன்றே. 55

இருமல் க்ஷயத்துக்குக் கியாழம்.

நன்றான பாலிலே சிறுகாஞ்சோரி நலமான வேர் தட்டி போட்டுக்காய்ச்சி, குன்றுமல் இராத்திரிக்குக் கொள்ளச்சொல்லு குணமாகு மிருமல்முதல் சுரங்கள்

யாவுஞ், சென்றுகா மோறுகா மீனுமாகா செடகுறிப்பு பெலன்பார்த்து சேர்த்துவுண்ணு, வேண்டாத தாமரையின் பனிபருப்பை வெந்நீரில்கொண்டிடவே விக்கல்போமே. 56

விக்கலுக்கு.

விக்கல்போம் யின்னமொரு விவரங்கேளு விசையான மூலத்தில் கனல்தான்மீறி, வெக்கையாய்ச் சூடேறி மேகநீராய் மேற்கொண்டு சிரசுவரை கண்ணில்தானே, விசிக்கவேநீர்கலந்து வாதபித்தஞ் சிலேற்பன காசங்களினு லொளியோமங்கும், பக்கவே காய வெறி குத்துமாகும் பார்வையிலே தொண்ணூற்றுரு வியாதிபாரே. 57

பாரப்பா நேத்திரநோய் தொண்ணூற்றுறும் பகருகின்ற குணங்குறிகள் தீட்சையெல்லாம், நேரப்பா நேத்திரநூல் அன்னூற்றுக்குள் நிலவரமாய்ச் சொன்னே னதில்நோய்கள், ஆரப்பா மாத்திரைகள் நசிய மெத்த அவிழ்தங்கள் மைக்குளம்பு அபானசுத்தி, காரப்பா நரம்பரிந்து சுடுதல்கண்ணில் கருவிகொண்டு குத்துகிற கைசித்திரங்காணே. 58

சித்திரமா முபநயனம் வைத்துக்கட்டல் சிறப்பான ஆவியுற வடைகள்பூச, பத்திரமாய்ப் பத்தியங்கள்

கருமசாந்தி பார்ப்பதற் கசாத்தியமடா சாத்தியங்கள், இத்தனையுஞ் சொல்லிவைத்தே னந்நூற்றுக்கு னிதை யறிந்த வைத்தியனே யீசனாகும், பத்தியுள்ள புலத்தி யனே பச்சையான பூரமென்ற குளம்புதனை புகலு வேனே. 59

பூரக்குளம்பு.

ஓமென்ற வாளுலுவை குங்குமப்பூ உத்தமனே கிராம்பொன்று பூசமொன்று, ஆமென்ற சந்தனஞ் செண்பகப்பூ மப்பனே கோரோசனையும் லவுங்கப்பத் திரி, நானென்ற வெள்ளைச்சாரணையின்வேரும் நலமாக சரியிடையாய் சேர்த்துக்கொண்டு, ஏமென்ற வெள்ளி பற்பம் நாலுஞ்சேர்த்து விதமான கல்வத்தி லெத்தி யாட்டே. 60

ஆட்டுவாய் நால்சாமம் தேனுமிட்டு அப்பனே வளித் தவுடன் பரணிசேர்த்து, தீட்டுவாய் வெந்தயம்போல் கண்ணிற்பாதி தீராதகண்மயக்கங் காசம்போகும், நாட் டுவாய் தலைபிடியும்தீரும் நண்டுக்கால் பெருத்தகண் ணும் கற்கண்ணாகும், கூட்டுவாய் சிருசந்தனாதி மூழ் குங் கூத்தியார்க்கிடுமருந்து கூறுவேனே. 61

கூறுவேன் விந்துவுங் களஞ்சிவாங்கி கோவையுட பழத்துவிரை களஞ்சி சேர்த்து, தேறவே பேய்க்கரும்

பஞ் சாத்தாலாட்டி சிறுமணியா யுருட்டியதை வுலர வைத்து, மாறவே வெற்றிலைப்பாக் கருந்தும்போது மணியென்று தெரியாமல் மங்கைக்கீய்ந்தால், சேரவே வுனைப்பிரிய மாட்டாள்கன்னி தேகமது தெளிவதற்கு தேங்காய்ப்பாலே. 62

பல்வலிக்கியாழம்.

பாலென்றால் பச்சைப்பால் குடிக்கத்தீரும் பல் வலிக்கி மருந்தொன்று பகரக்கேளு, கோவென்ற நீர் முள்ளி விரையைவாங்கி கொட்டுவாய் பலம் பத்து பாண்டத்துள்ளே, சீலென்ற வசம்பு அரைபலமும் போட்டு தீயெரித்துப் பதக்குநீ ரெட்டொன்றாக்கி, மேலென்ற அந்திசந்தி கொப்பளிக்க வீக்கமொடு பல் வலியும் விட்டுப்போமே. 63

ஒருதலைவலிக்கு நசியம்.

விட்டுதடா ஒருதலைநோய் மண்டைக்குத்து விசை யான தலைவலிக்கு நசியங்கேளு, தட்டுபோல் சுக்குமிரு பலமேநாழி சலத்திலிட்டு நாழியாய் குறுகக்காய்ச்சி, தட்டிடப்போம் தேங்காய்நெய் யரைக்கால்விட்டு தாழ் வில்லா குங்குமப்பூ விருகன்போடு, எட்டிப்போம்நெய் வடித்து நசியமிட்டு இருந்தவிட மதனைவிட்டு யேகும் பாரே. 64

மேகனுக்கு பவளபற்பம்.

ஏகுமேமேகநீ யிருபதுக்கு யிதமான பவளபற்ப் மொன்று சொல்வேன், வாகுமே முயலெலும்பு சுட்டச் சாம்பல் மக்களே பலமொன்று குமரிப்பாலால், பாகு பெற வரைத்துருட்டிக் குகையாய்ப்பண்ணி பவளமது வொருபலமுங் கிரும்புமாஞ்சி, வேகுமே கால்களஞ்சி வீரஞ்சேர்த்து விசையான முயலிரத்தம் விட்டு ஆட்டே. 65

ஆட்டியே வில்லைதட்டிக் காயவைத்து அப்பனே குகையில்வைத்து சீலைசெய்து, நாட்டியே வைப்பதொரு புடைத்தைப்போடு நலமான பவளமது பற்பமாகும், கூட்டியே வமிர்தசக் கரையிற்கொள்ள கொடிதான மேகநீர் குடியோடிப்போம், மேட்டிலே விரைத்த விரைப் போலேயாச்சு மிலைசரக்கு நூல்கிடைத்ததும் வீணும்பாரே. 66

வீணாகப் போகாமல் நூலைப்பாரு வேண்டியே தவ சிருந்து பெற்றபிள்ளை, வாணுமலே மயக்கம்வந்த பிரளி நோய்க்கு மக்களே மருந்தொன்று வகையாய்க்கேளு, பாணுன அவுரியின்வேர் தேத்தான்ரெண்டு பலத்து டனே பிங்கனுட கொழுந்துகால்தான், காணுமற் பொடி

யாக அறிந்துகொண்டு கலையமிட்டு யேரண்டத் தெண் ணெய்வாரே. 67

ஏரண்டத் தெண்ணெயரைப் படியும்விட்டு யென் மக்காள் ரவிமுகத்தில் யெட்டுநாள்வை, கூரண்டத் தெண்ணெய்தனை வெதுப்பிக்கொண்டு குழந்தைகட் கிணைபிரளி சோகைமாந்தம், சாறென்ற யெண்ணெயது கரண்டிவீதந் தப்பாமற் கொண்டிடவேசொல்லக்கேளு, காருண்டமேகசலம் பெருங்காற்றுலே காணுமலோடு கின்ற படிபோலாமே. 68

அருக்கன்வேர் கிருதம்.

போமப்பா அருக்கன்வேர் கிருதநூலில் புகலவிலை யின்னூலிற் புகழ்ந்து சொல்வேன், நாமப்பா சொல்லு கிறேம் அருகின்மூலம் நன்றுக வொருதுலாம் நறுக் கிக்கொண்டு, வாமப்பா யிடித்ததனை பாண்டத்திலிட்டு வளமாக னூருபடி சலந்தான்விட்டு, ஓமப்பா நாலுபடி யாகக்காய்ச்சி உத்தமனே வடிகட்டி யிறுத்துக்கொண்டு, தாமப்பா ஆவினெய் நாழிவிட்டு தடையறவே மதுர மரை பலந்தானுமே. 69

பலமொன்று தாமரைசெங் கழுநீர்மூலம் பாச்சிமா யிரு களஞ்சி மைபோலாட்டி, பிலமென்ன மாதளையின்

பழச்சார்நாழி பிரளாமற் படிகலக்கி நெய்யில்விட்டு, சல மெல்லாம் வற்றுமட்டும் கமலம்போல தீயெரித்துப் பதம்பார்த்து யிரக்கிக்கொண்டு, சூலமென்ன மூலத் தின் அஸ்திசூடு கொடிதான கிரிச்சினங்கள் பிராணி போமே. 70

கிராணிபோம் பிரமியங்கள் கபாலச்சூடு கிறுகிறுப்பு தீருமடா பத்துநாளில், கிராணியாய்க் கொண்டுவர வெகுநோய்தீருஞ் சிவனுருஞ் சடமீதில் தரித்தகற்பம், பிராணிகளுக் காகயிந்த கிருதஞ்சொன்னேன் பிழைக்க வென்றால் செய்துண்டு பெரியோராவார், கிராணி யென்ற மாதர்களுஞ் சையோகத்தால் யிடுப்புளைவு கடுப்பு வலிமை யெல்லாம்போமே. 71

கிரந்திக்குப் புகை.

போமப்பா கிரந்திக்குப் புகைதானென்று புகழான சூதமொன்று களஞ்சிவாங்கி, வாமப்பா காரீயங்களஞ்சி வாங்கிசேர்த்து மாட்டிரண்டு மொன்றாய்ப் பொடியாய் செய்து, தாமப்பா யெருக்கம்வேர் கரியில்சேர்த்து தாழ்வில்லா மூன்றுதினம் புகைபிடிக்க, போமப்பா கிரந்தியோடு சூலைபோகும் துடியான மருந்தொன்று சொல்லக்கேளே. 72

திசைவாய்வுக்கு பேதியுண்டை.

சொல்லுகிறேன் பேதிக்கி வாய்வுபுத்திரன் சூத மொன்று லிங்கமொன்று காரமொன்று, வெல்லுகிறே ணிந்துப்பு கடுக்காய் ரோகணி வெள்ளைக் காக்கணம் வேறும் விராகனெட்டு, நல்பிரண்டைச் சாற்றாலே அரைப்பாய்சாமம், மல்லுகிறேன் கடலைபோ லுருட் டிக்கொண்டு வாகான யிஞ்சிச்சார் தன்னில்மாட்டே. ()

தன்னிலே ஒருவுண்டை வுண்பீரானல் சாதகமாய்ப் பேதியது தானேகாணும், வெந்நீரு விட்டாலும் பேதி யாகும் மிளகுநீர் விட்டசலம் வேண்டியுண்ணு, வுன் னியே வாய்வுகாம நீர்கோவை யுதிரத்தில் வுப்பிசமு மோடிப்போகும், கன்னிகையாம் பெண்களுக்குப் பெ ரும்பாடானல் கனமா மருந்தொன்று கண்டுபாரே. 74

கண்டுபார் ஆவரையின் கியாழமிட்டு கியாழத்தை வொருபடிநீர் கருத்தாய்வாங்கி, குண்டுசட்டி தன்னில் விட்டு வேடுகட்டிக் கணமான நற்சாலைமீனை வாங்கி, வாங்கியுண்டு போகாதபடி கஞ்சாயேலம் புத்துருக்கு நெய்வார்த்து அரைத்துக்கொண்டு, விண்டு போகாத படி கியாழம்போடு மேல்வைத்து புட்டவித்து வித மாய்த்தானே. 75

விதமாக ரெண்டு நாழிகைதான் வெந்தால் மேல்சட்டித் திறந்தெடுத்து மீனைவாங்கி, பதமாக மேல்கவசம் வாங்கிப்போடு பழமான சிலாம்புமுள்ளு கழற்றிமைந்தா, நிதமாக பத்துநாள் கொடுத்தாயானால் நில்லாத பெரும்பாடு நின்றுபோகுஞ், சதமான அந்தியிலே கியாழங்கொள்ளு தண்மையென்ற ஆவாரைக் கியாழந்தாமே. 76

தாம்பிரபற்பம்.

தானென்ற தாம்பர பற்பஞ் சொன்னேன் தகடாக துட்டதனை சுத்திசெய்து, கோவென்ற வெள்ளியொன்று வீரமொன்று கோழிமுட்டைத் தோலொன்று கல்வத்திட்டு, வாதென்ற யெருக்கம்பால் விட்டுஆட்டி வளமாக கவசமிட்டு துட்டுக்கேதா, ஊனென்ற சீலை மண் மூன்றுஞ்செய்து ஒருமுழத்தில் புளியமரம் வொன்றுவாங்கே. 77

வாங்கியதை நடுவாக வுழத்தரைச்சாண் பட்டுக்குள் கவசம் வைத்துமண் சீலைசெய்து, தாங்குபெறக் குழி வெட்டி கெசபுடத்தில் காச்சினால் தவளம்போல் பற்பமாகும், ஏங்கியே திரியாதே யிந்தபற்பம்யெட்டு வகை குன்ம முதலெல்லாம் போகும், பாங்குபெறத் திரி

கடுகு தேனும்வாழைப் பழத்திலிட பலத்தவினை பறக்கும்பாரே. 78

பாரப்பா நீற்றுவகை யறியவேணும் பாங்கான பழக்கமல்லோ தெரியவேணும், காரப்பா செபம்வேணுங் கன்மவினை தீர்ப்பதற்குக் கவுனம்வேணுஞ், சீரப்பா நூல்வேணுந் தைரியம்வேணுஞ் செய்பாகங் கைபாகந் தீட்சைவேணும், ஊரப்பா யேகமூலிகையின் போக்கு வுத்தமனே சொன்னேனா னிறுனூற்றைந்தே.

ஐந்தான நூலிலே பஸ்பஞ் சொன்னேன் அதற்கடுத்த குருமுறையை யறிந்தாயில்லை, மைந்தான மேகமது வருஷித்தாப்போல் வைத்தியநூல் ரெண்டுலட்சம் வளமாய்பார்த்து, துஞ்சாதே யேகமூலிகையின் போக்குச் சொன்னபடி யாடுதற்குக் கருவைச்சொல்வேன், கைத்தான பூநீறு வீரம்பூரம் காரமொன்று தாயுமொன்றே. 80

தாயுமொன்றுவெடியுப்பு தாரமொன்று தவளமென்ற வெள்ளையொன்று தானேகூட்டி, பாயுமென்ற யெருக்கம்பால் விட்டுஆட்டப் பற்பமென்ன வகைக்கெல்லாம் சேர்த்து, காயென்ற கவசமிட்டு சீலைசெய்து கனமான வோட்டிலிட்டு மண்ணுஞ்செய்து, தீயென்ற நூற்படிக்

கிப் புடத்தைப்போடு சிவசிவா யருறுற்றைந்து திரந்
தான்பாரே. 81

பூரணாதிலேகியம்.

திடமானபூரணாதி லேகியந்தான்
செப்புகிறேன் புலத்தியனே திடமாய்க்கேளு
நடமாடசடைக்கஞ்சா திரமாய்ப்பார்த்து
நன்றானபதினைந்து பலந்தானப்பா
குடமானபாண்டத்தி லிடித்துப்போடு
குளிர்ந்தசலம்பதினாறு படியும்விட்டு
விடமாகக்காய்ச்சியே யெட்டொன்றாக்கி
மேலானகியாழத்தை யிருத்திடாயே. 82

இருத்திட்டகியாழத்தில் தேங்காய்ப்பாலு
மிளகுநீருங்கருப்பஞ்சார் ஆவின்பாலு
மருத்திடாவகைக்குவொரு படிதான்விட்டு
வளமானஆவினெய் படிதான்வாரு
செரித்திட்டகமலம்போ லெரிக்கும்போது
திரண்டுவரும்பதத்திலே யிறக்கிக்கொண்டு
பருத்திட்டுஆலம்வித்து வாதவித்து
பருத்திவிரைபருப்புடனே ஆவாரைவித்தே. 83

வித்தானமுருங்கைவித்துப் பூனைக்காலி
விதமானவமிர்த சர்க்கரைக்கிழாம்பு

பத்தானசாதிக்காய் பத்திரியேலம்
பருமிளகுவால்மிளகு லவுங்கப்பத்திரி
மத்தானகோரோசனை கோஷ்டமாஞ்சி
வாலுளுவைசிறுநாகஞ் செண்பகப்பூ
சத்தானதிரிகடுகு திரிபலாதி
தாளிசமுஞ்சீரகமும் வெந்தியமுந்தானே. 84

வெந்தியமும்நிலப்பனவேர் பூமிக்காரம்
வெற்றிவேர்விலாமிச்சு முந்திரிபேரீத்து
சந்தேகமாய்நினையாதே சாரப்பருப்பு
சதிரானகுரோசானிக் கசகசாவும்
இந்தவகைக்கோர்களஞ்சும் வறுத்துத்தூளாய்
இருத்துமேவடிக்கட்டி வைத்துக்கொண்டு
முந்தியதோர்பனங்களுரெண்டுக்குள்ளே
முன்பதாம்பனவெல்லாம் நல்லவெல்லமாமே. 85

வெல்லவென்றவகையொன்று பலம்ரெண்டான
விடத்திலேகரைத்திடுவா யடுப்பிலேற்றி
சொல்லவென்றல்பாகுபதம் வருகும்போது
சூரணத்தைகொட்டிக்கொண்டு கெஞ்சாத்தூளும்
மல்லென்றுற்புடந்தீர்ந்த பொடியைச்சேர்த்தும்
வளமானபாகத்திலே, தூவிக்கொண்டு

வில்லென்றல்முன்னுரைத்த நெஞ்சாநெய்யை
விட்டிடுவாய்கால்படிதான் மிஞ்சிப்பாரே. 86

மிஞ்சாமல்தேனுமா காணிவிட்டு
வெள்ளைநிறக்கோழிமுட்டை ஐந்தவித்து
மஞ்சானவுட்கருவை வுதிர்த்துத்தூவு
வளர்பஞ்சதாரையைந்து பலமும்போடு
பஞ்சானமெழுகுபோ லெடுத்துபீங்கான்
பத்திரமாய்ச்சுண்டக்கா யளவுகொள்ள
நெஞ்சானயோகத்தை முடிக்கும்லேகியம்
நீட்டினல்மேகமெல்லாம் நீங்கிப்போமே. 87

நீங்குமேமூலமுதல் வாய்வுபித்தம்
நில்லாதுசுரமாரல் நின்றுபோகும்
பாகுபெறத்தேகமுமே காந்தியுண்டாம்
பாழிலேபோகாமல் விந்தைகட்டும்
தீங்கில்லாயிம்மருந்தை யோகத்துக்காய்
திடமாகவைத்தியநூ லெண்பதுக்குள்
ஆங்கமாம்பூரணாதி லேகியமும்சொன்னேன்
அறுநூற்றிற்காமகே சரியென்றேமே. 88

காமகேசரியுரைத்தேன் கண்டசேதி
கடைந்தொக்கவகை சொன்னேம்கற்பத்துக்கு

வாமபூசனைசொன்னேன் தீட்சைமார்க்கம்
வளமானவாதமிரு நூறுஞ்சொன்னேன்
க்ஷேமகமாம்நீதிதனம் அன்பதுவுஞ்சொன்னேன்
நிக்ஷயமாய்முப்பூவின் குருவுஞ்சொன்னேன்
நாமகளாய்வந்துயெந்தன் தாயார்சொல்ல
நன்றாகஞானமொரு பத்துநூறே. 89

ஞானமென்னயோகம்விட்டால் துறவுஞானம்
நாலைவிட்டால்யோகமென்ன மரணயோகம்
பானமென்னரசத்தைவிட்டால் சுரபானந்தான்
பகாரியார்நூலைவிட்டாற் பழிபாவந்தான்
கோலமென்னவழலைவிட்டாற் குடல்வாதந்தான்
குடல்வாதம்பேதமல்லால் குணமாகாது
காணமென்னயிந்தநாள் யெண்பதையுந்தொட்டால்
காசினியில்சிவயோகி காண்டமுற்றே. 90

அகஸ்தியர் வைத்தியம் பின்னெண்பது

முற்றிற்று.

சிவமயம்.

பதினோருவது,

அகஸ்தியமகாமுனிவர்

மதிவெண்பா-100.

சீர்திருத்தலின் வழிபடுகடவுள் வாழ்த்து

குறள்-வெண்பா.

பரமசற்குருபரன் பதமலர்ப்பாவிதுவுங்
கரலிகிதப்பிழை களைகுதற்பொருட்டே.

ஆதிசிவனுமையாட் கன்புடனேயன்றுரைத்த
சோதிமதிவெண்பாவைச் சொல்லுதற்கு-நீதியுள்ள
மாலைசிறுபெண்ணு மனோன்மணியைவாமம்வைத்த
காலையேறுஞ்சிவன்றாள் காப்பு. 1

காப்பானவைந்துகரன் கந்தவேண்முருகன்
வாய்ப்பாமலர்த்தாண் மனதில்வை-தேற்றித்
தவமுனிசித்தர்முதற் சாற்றியநூலெல்லா
நவமணியாமிந்நூலை நத்து. 2

மதியினியல்பு.

நத்தும்பொருளெல்லா நன்குணரநான்வெளியாய்ச்
சத்தியமாய்ச்சொல்லியவிச் சாஸ்திரத்தைப்-புத்தியுட

கற்றவர்க்குண்டாமலது காசினியிற்கற்றறியா
மற்றவர்க்குண்டாமோ மதி. 3

மதியானதுவந்தால் வாய்க்குமேஞானம்
தெதியாகயேகா மிதுகிட்டு-நிதியான
வாதம்வைத்தியமு மற்றுளதுஞ்சித்தியதாம்
போதபதிபதனைப் போற்று. 4

சோதிடத்தியல்பு.

போற்றுகின்றசோதிடங்கள் பொய்யாதொருநாளுஞ்
சாற்றலறியாதவர்க் கதுபொய்-நேர்த்தியுள்ள
வாசானைத்தேடியவர்பதத்திற் றெண்டுசெய்து
பேசானைப்போலே பிழை. 5

தவத்தினியல்பு.

பிழைக்கமதிகேளாய்ப் பேசேலொருவ
ருழைச்சென்றுநிட்டை யொழியேல்-விழைச்சென்று
பெண்டுபிள்ளைசுற்றமுதற் பேணுந்திரவியமும்
கண்டகனவென்றே கருது. 6

கருதினன்மாயைசற்றுங் காணுமநீங்கும்
விருதாவிலேமயங்கி வீழேல்-கருதாதா [லா
லாசைகொண்டிங்காரிருந்தா ரம்புவியின்வாழ்க்கையெல்
தோசைப்பிரட்டெனவே சொல். 7

சொல்லாதுநீங்கிற் றுணிந்தவர்க்கே யல்லாது
பொல்லாத மாயைவிட்டுப் போகாதே-சல்லாப
லீலையிலே தான்மயங்கி நின்றவுயிர் கெட்டுவிடும்
வாலைபவள் சொன்னாள் மதி. 8

மதியதனால் வாழ்ந்தோர் வெகுவாக மண்மேல்
விதியதனால் மாய்ந்தோர் வெகுவா-மதியதனால்
தந்தவர்க டாம்பிழைப்பார் சிக்கினரை மாய்கொல்லு
நேர்ந்தபடி மதியி னில். 9

நிலையாதுடலம் நில்லாத வாழ்வு
மலையாதே புத்தி மயங்காதே-கலையான
தேவிக் குகந்துரிமை செய்துநிதஞ் சித்தியதாம்
பாலிக்கு ஞானப் பதி. 10

பதியான மோகம் பரிதிமதியே
கெதியான வாழ்வென்று கிட்டிச்-சதியாக
நாட்பழக்கம்பண்ணி நவின்றவித மூலடங்கிற்
கேட்பதென்னக் கிட்டுமதே. 11

கிட்டுமேஞானங் கெதிபெறலாஞ் சாதகமாய்
விட்டுமேபோகாமல் மேற்கொள்ளு-தொட்டுவிட்டால்
விட்டகுறை யாகுமென்று மேலவர்கள்சொல்லுமந்த
திட்டமறி யீதே திடம். 12

திடமான சொல்லைத் தெருவிற்புலம்பே
லடமாக வுள்ளத் தடக்கு-கடவா
மதியைவெளியில்விடின் வாழ்வது மெய்மெய்யே
ரவியை வெளியைவிட நல்கு. 13

நல்குமோர் நாட்பழக்க நன்றாகச் சுத்திசெய்து
மல்குமோ மோரிதழை வாங்கி-யொல்கவ்
விதழான் மதியடைத் திருந்துசெப்பிராணாயக்
கதலாம றூற்றெட்டுங் காணும். 14

காணுமே பிராணாயங் கணக்காக காண்டொன்று
வேணுமே பின்பு பிரத்தியாகாரம்-தோணுமே
கும்பத்திலே நின்றாற் கொல்லாமற்போனான்
வம்பருக் கீதாமோ மதி. 15

மதியை ரவிவைத்து மனங்குவிந்து நின்றாற்
கெதியாஞ் சாயுச்சியம் பெறலாந்-துதியான [யாமோ
துண்டுவில்ல சொற்கமென சொன்னசொல்லும் பொய்
தாண்டவ சிற்சபை தானும். 16

தானவனாய் நீதான் றணித்தா லொடுக்கமதில்
வானவனாய் வானவர்க்குண் மன்னவனாந்-தேனவனாய்
கும்பகத்தி லாண்டொன்று கூடினார் சித்தனவ
னம்பரத்திலே யடக்கு வாய். 17

அடக்கின் மதியமிர்த மாறுபோற் காயுங்
கிடைக்குமோ வவ்வமிர்தங் கிட்டி-துடைக்குமே
பாசவினைக ளனைத்தையும் பஞ்சுபஞ்சாய்
மோசமில்லை முத்தி பெறற்கே. 18

முத்தியெனு மோர்பெரிய மோக்ஷகதி யுண்டாகுஞ்
சித்திபெறலாஞ் செடலம் வலுக்கும்-சத்தியமே
யாண்டு பத்துசென்று லவனிருடி யோகிசித்தன்
மாண்டதனு லென்ன மதி. 19

மதியைநிறுத்தி மகாயோகஞ் செய்து
கெதிமோக்ஷ நாம்பெறுவ தென்றன்-றெரியாத
மாசைக்கடலி லழுந்தாம லாங்கதனை
ரோசம்வைத்து ஞேக்குநர்போ ஞேக்கு. 20

நோக்குயர் சட்டமுனி ஞானமிரு நூறதனில்
வாக்குமனங்கொள்ளாமல் வாரியிட்டார்-பார்க்கவின்பங்
கேட்கவிம்ப மோகோ கெதிமோட்சமே கிடைத்து
வாழ்க்கைபெற்று பூமியில் வாழ்வாய். 21

வாழுழுபர் ஞானம் வாயாது வாய்க்குமெனில்
ருழுமுடலதுவுந் தாழாது-காம்பெருகிக்
கோடியுகமும் குருமணியாச் சிரசுகத்தில்
வாடிவிளையாம னின்று வாழ்வாய். 22

கற்பத்தினியல்பு.

வாழ்ந்து மனைவாயு வகப்பட்டுமேற் கற்பமுண்ணு
தாழ்ந்துபோகாது சடலம்வலுக்கும்-போழ்ந்தனுவே
ளான்றவோராண்டு மேயகாரம் கற்பமாம்தற்பி
னேன்ற வுகார மெடு. 23

எடுத்திடுவா யாண்டொன் றெடுத்தபின்மகாரந்
தொடுத்திடுவாய் யாண்டொன்றுசோர-தடுத்துநிற்கிற்
பாசவினைகள் பறக்குமீங் குன்னைவிட்டு
நேசம் வைத்திட்டா ராவிநேர். 24

நேர்ந்துகொண்டாண்டொன்று நின்றுநரைதிரைபோஞ்
சோர்ந்துகொண்டு போனவுடல் சோராது-சேர்ந்து
மதிரவியும் பாயாது மாவொளியுமங்காது
கெதிபெரும் வாழ்வே கிட்டிடும். 25

முப்புவினியல்பு.

கிட்டுமோ முப்புவது கிட்டாது கிட்டுமெனில்
கொட்டுமோ தேள்விடமுங்-கொட்டாது-பட்டதெனில்
மேற்பாடு பெற்றவர்கட் கெய்துமது மற்றவரிங்
கேன்பாடு பட்டிளைப் பாரே. 26

இளைப்பார் கருவறியா தீசனுரை கேட்கிற்
களைப்பா ரதைவெளியாய்க் காட்டின்-மலைப்பார்

பெண்குடியான் மூன்றுதிங்க ளாகிப்பெரிதுகெர்ப்பத்
தன்கொடியா முப்புவெனச் சாற்று. 27

சாற்றியதோர் முப்பதனிற் றன்கூட்டு வீரமுட
னேற்றியதோர் பூரம் புனுகுமதி-லேற்றி
ரவியினவநாளு நன்றாக வைக்கிற்
குவியமுப்புச் சுன்னமதாங் கூறு. 28

கூறுவேன் முப்பூவுங் கோதைமதக்கனியு
மாறுமகாரமென்ற மாங்கனியுந்-தேறு
முகார வுப்புகூட்டி யுடன் சோகாரச்
சிகாரவுஞ் சேர்ந்திடப் படும். 29

படுத்திடாக் கற்பவிதி பாடினேன் சோடை
யெடுத்திடிதுபோ லியம்பார்-தொடுத்ததனை
யாண்பத்துங் கொண்டா லவனே மகாசித்தன்
றண்டவத்தின் னின்ற சிவன் றன். 30

தானவனுய் நீயிருந்து சஞ்சரித் திவ்வுலகில்
வானவனுய் வாழ்ந்தறிய வானவர்க்குங்-கோனவனுஞ்
சித்துமகிமை செகச்சாலே கூத்தைவிட்டு
நித்தம் விளையாடுவைநீ நேசி. 31

மாந்திரீக வியல்பு.

நேசியப்பா மிவ்வுலகி ணோர்பிணிப் பேய்போக
வாசிப்பாம் பூருவமு மாதிநாள்-வாசிப்பா

உத்திரமதுகூடி யுடனே தனுசுழுவப்
பத்திரநெறி மிரட்டிப் பார். 32

பாரடா தூபமுடன் றீபம் பெலிகொடுத்து
நேரடாசாப நிவர்த்திசெய்துக்-கூரடா
வேர்வாங்கி வெள்ளிக் குளிசமதிற் றனடைத்துப்
பேர்வாங்கிக் கட்ட பிரியும். 33

பிரியுமே பேய்தான் பலமுள்ள நோயு
மறியவிடு நாளுக்குநாளே-நெறியாகக்
கெர்ப்பப்போர் பத்திக்குங் கிளைபெருகுஞ்-சஞ்சலம்
அர்ப்புதமாய் வாழு மறி. 34

அறியாய் நீயின்ன மொன்றுதி சிவனே
குறியாகச் சொன்ன குறிதா-னெறியாம்
வளர்பிறையி லாதினுள் வந்துபுநர்தம்
விளர்பிறை நுசுமுறச் சாற்று. 35

தேற்றியதோ ரிந்நாளிற் றனேசித்த மாமுட்டிப்
போற்றியதோர் வேர்வாங்கிப் பூட்டினு-நாட்டில்
விடமெனவு நஞ்செனவு மில்லைசற்றின்மீளும்
படமொடு நடிக்குமுயிர் பாழ். 36

பாழாகுமுன்னைக் கடிக்கவந்த பாம்பாகி
தேளாகிச் சில்விடமுஞ் சேராது-கேளான

தொன்றுமில்லைநீவாழ்ந்து காந்தவரையுள்ளமட்டு
நன்று சுகமாயிருப் பாய். 37

நாடுமோர்பில்லிமுதற் சூனியங்களுடாது
வாடவேதொட்டியமு மற்றுள்ளது-மோடவே
பூருவமுமாதித்த னுட்பொருந்த மூலமுட
னேருசிம்ப ராசியு மியம்பு. 38

இயம்புமோர்பேய்மிரட்டி வேரதனைவாங்கி
யெரும்புகந்தசெம்பி லடைத்து-வயம்பெறவே
கட்டினுற்பில்லிமுதற் சூனியமேவேரில்தன்
கொட்டினுலிறங்காதுபோற் கூறு. 39

கூறுங்குழந்தைகட்கு கூற்றுனதோஷமெல்லாஞ்
சேருமோவின்னமொன்று செப்பக்கேள்-சாந்தருமோர்
பூருவமுமாதிநாள் போதச்சுவாதியிலே
சேர்ந்தாலுங் கர்க்கடகந்தேடு. 40

தேடுமிந்தநாளிற் சிவரூபவிட்டுணுவாய்
நாடியவேர்வாங்கி நல்கினு-லோடிவிடுந்
தோஷகுணமெல்லாந் தொடாதுதுட்படுமால்
வாசனைக்கேயென்று மகிழ். 41

வாதவியல்பு.

மகிழ்ந்தவுலகமதில் வாதக்கருவை
நிகழ்ந்தறியாமை யானின்-றகமெலிந்தார்

முப்பூவைச்சேர்த்து முடிப்பதற்குத்தப்பிதங்க
ளெப்போதுமில்லை யியம்பு. 42

குருட்டுவாதிகளி னியல்பு.

இயம்பியதோர்சாத்திரத்திற் சொல்லியதாயாமன்
மயங்கியதிகெட்டவாற்றாற்-றியங்கிநின்று
தொட்டார்சரக்கையெல்லாஞ் சுட்டார்புகையைவிட்டு
கெட்டாருதிக்கண் கெட்டார். 43

கெட்டோமென்றுசாஸ்திரங்க டன்னைக்கிழித்தறிவாற்
கட்டவெண்ணியவெண்ணமுங் கட்டாதாற்-கெட்டுத்
தெருவிலேதான்புலம்பிச் செத்தவரோகோடி
யறிவிலாத வசடர். 44

அசடருலகத்தனந்த முண்டுசொன்னேன்
கசடறவேதள்ளிக்கடவா-விசையிடநாற்
சேராதேமோகங் கொலைகளவேசெய்திடுவார்
நேராதேவாய் நிகழ்த்தாதே. 45

நிகழ்த்திலுடல நில்லாதோர்நாளு
மகற்றியேவைத்தகல நிற்பா-யுகத்திலே
பேசினாற்கொல்லுமடா பேசட்டாலொன்றுமில்லை
தோசியடாவிவ்வுலகஞ் சொல். 46

சொல்லாமல்முன்னோர்க டேடிமலைகடொறு
நில்லாமலேன்போனார் நீநினைவாய்-கொல்லாமற்

கொல்லுமதற்கொஞ்சமதோ காலங்கலியதனல்
னில்லுமறெதான்றில்லை நிசம். 47

நிசமானகாலத்தி னேர்நிற்பர்சித்தர்
கசமானகாலமிதிங் காணார்-நிசமான
வக்காலமாயிரத்தி லொன்றுருகுங் கோடிக்கொன்
றிக்காலமென் றறி. 48

அறியார்போல்வஞ்ச மனந்தமுந்தான்செய்வார்
நெறியார்போனின்னையு நேசிப்பார்-நெறியறியார்
பித்துப்பிடித்துபலபேசும் பயல்களுடன்
சற்றுமிணங்காதே தான். 49

தானவனுய்நீதான் றனித்திருந்தாலொன்றுமில்லை
வானகமும்பூமி வழிப்படுமே-கோனவனு
யெவ்வுயிர்க்குந்தாயாகி யேழைபரதேசியைப்போற்
குவ்வுயிர்க்குணின்றநிலை கூறு. 50

வயித்தியத்தினியல்பு-கெந்தகபற்பம்.

கூறுவேன்மண்ணிற் கொடும்பிணிகடீர்ப்பதற்கிங்
கேருமோர்கெந்திக் கிணையுண்டோ-நீறுன
முப்புக்கவசமிட்டு மோதவைநீர்மேனெருப்பை
யப்பிக்கவச மறி. 51

அறிவாயேழ்சீலை யதுசெய்துலர்த்திக்
குறியாமொரு பலந்தான்-னெறியாக

மூவைந்தாம்பலமா மூடிப்புடமிடவே
யமைக்கிரண்டா மறி. 52

அறிந்ததனுற்குட்டம் பதினெட்டும்விட்டு
பிரிந்துதான்போகாதோ பித்தா-சொரிந்துநின்ற
மேகம்புகையாது வேறுள மற்றெல்லாமும்
வேகமாய்போமே விரும்பு. 53

தாளகபற்பம்.

விரும்புவாய்மாறேவி வேண்டிமுப்பூவை
யரும்பியவாய்நீரா லடைத்திட்-டரும்பிய
தேவிக்குத்தான் கவசஞ்செய்துகொண்டு மேற்சவ
மாவிற்றலரியரைத் தப்பு. 54

அப்பியபின்னு லந்துபல மெருவெடுத்
தொப்புற வாகப்புடந்தான் போடு-பற்பமதாய்
காசமென்றநோய் களெல்லாங் காணமலோடிவிடும்
வாசமென்ற ரத்தமுந்தான் மாறும். 55

மாறுமேகுன்மமுதல் வாய்வுமுதலெல்லாமுந்
தேறுமேதண்டலுஞ் சித்தியதாம்-வேறுமொரு
கற்பசித்துவேண்டுமோ காயங்கயிலாய
மற்பமிதென்றே யறி. 56

தாம்பிர பற்பம்.

அறிவாயேசெம்பு சல்லியந்தானந்தவல்லி
நெறியானமுப்புதனி னேர்ந்து-முறியாம
லஞ்சுபலமாமெருவிற் புடம்போடக்
கெஞ்சுமே நோய்களெல்லாங் கேள். 57

அயபற்பம்.

கேளுமிரும்பைக் கெடியாகக்கொண்டுடன்வந்
தாளுமிப்பூவையதிற் கவசித்-தாளு
மிலுப்பையரைப்பலத்தின் மீதிற்கவசமிட்டுச்
சலிப்பில்புடம்பத்தெருவாச் சாற்று. 58

சாற்றுவாய்பற்பந்தா னருந்திற்பாண்டுவகை
யேற்றவேபோகு மெடுபட்டு-நீற்றி
இரு பிருப்போன்றின்னு போவோன்பொன்தின்பன்
கரும்பின்மொழி யொன்னுள் கருது. 59

கருதார்மதியதனைக் காணுமல்விட்ட
விருதானமாய்கைதனில் வீழின்-விருதாவாய்ப்
பாசவினைமிகலால் வாசிப்பறந்தோடித்
தோசியுடனில்லாது சொல். 60

நாதநீரினியல்பு.

சொல்லுவேனுதநீர் சொற்பெரியபற்பமது
வெள்ளவேயுள்ளுருகி வேகுமோ-யல்லாற்போந்

தள்ளென் றுவித்துவது தங்குமெனிலவ்வுடலந்
தெள்ளுமணியாமென்றே செப்பு. 61

செப்புவேனுதமது திங்கள்பத்துமேகொண்டா
லப்பனேதேக மழியுமோ-வெப்போதுங்
கொல்லானமன்போனு னென்றாய்குடியிருப்ப
னெல்லாநீயாக விரு. 62

இருந்தாலுலகுதனி லெல்வுயிருநீபோய்ப்
பொருந்தாதோவட்டசித்தும் பொய்யா-வருந்தாமன்
மாதுகிருபை வழிப்படுமேலுன் றனக்கு
கேதுகுறையாமென் றியம்பு. 63

சல்லிவேரி னியல்பு.

இயம்பெரியசத்தி யடிவேர்கண்டாயே
தயங்காதுவங்க முருக்கிமயங்காதவ்
வேர்கொண்டுகிண்ட வெள்ளிபதினறு
கார்கொண்டகண்டன் கருத்து. 64

கருத்தறியாது கலங்கினார்மண்மேல்
மிழித்துநாட்சேர றறிந்தா-லொருத்தருக்குஞ்
சூதநீர்தங்கித் துடர்ந்தவேர்கொண்டுகிண்ட
மாதுநீரென்று மதி. 65

மதியாலவ்வேரை மடியில்வைத்துச்சென்று
லெதிராளோர்நில்லா திடைவா-சதிரா

மரவமடாதடங்கு நற்சபைமடங்குஞ்
சரபமதுதானடங்குந் தான். 66

தானென்றமரா்ீர் சலசித்தமுண்டாகு
மேனென்றமற்றதிற் கீடல்ல-கோனென்
றினமயங்கிப்பின்னே திரிபவர்களிம்மண்மேற்
சன்மமயங்கமாட்டாதோ தான். 67

தானென்றவேர்வாங்கச் சாற்றுவேன்பூர்வத்திற்
றேனென்றவாதிநாட் சேர்மூலம்-வாவென்ற
மேடமுந்தான்கூட வெடுத்துகுளிசமிடு
மூடர்தம்பாலிது மொழி. 68

மொழியுமிது தன்னை மோசம்வருஞ்சித்து
மழியுமுலக மழிக்கும்-வழிமிகுந்த
விந்தவேர்போல வெடுத்துரையார் சித்தர்களுஞ்
சொந்தவேரென்றிதனைச் சொல். 69

சொல்லுவேனிவ்வுலகிற் சொன்னாற்றலைதெரிக்கும்
வெல்லுமுடன்மடிந்து வீழுமே-வெல்லுகின்ற
சித்தாமறைத்த செடிபூண்டுதேடகிற்பா
நித்தமலைவார்தன் னெறி. 70

நெறியானதன்கருவை நேரறிவாராகிற்
குறியானவாதமுங் கூடாதோ-முறியாத

சல்லியவேரென்றிதன்பேர் சாற்றினவறியாரென்னின்
கொல்லிமலைச்சித்தரெனக் கூறு. 71

கூறுமஞ்சனங்கள் வசியமுதற்கொண்டு
மேறிடுமாண்மறைப்போ டெட்டுத்-தேறிய
விக்கருவைவிட்டா லில்லையிவ்வுலகமதி
லிக்கிருவை பாற்று யினி. 72

இனிதானசல்லியவே றென்றார்களந்தக்
கனியானவேர்பிடுங்கிக் கட்டிற்-கனியான
நோய்பிணிகள்பில்லிமுத லெல்லாந்தடிக்கண்ட
ளாழியில்விழுந்தோடுமென்றே நல்கு. 73

நல்கியமுப்பூவது நாதநீரல்லாது
வெல்லுகின்றமற்றொன் றுமிதில்காண்-டொல்புவியிற்
றோணுதேவர்க்குமது தோன்றினதோர்சித்தர்களாங்
காணுதுபோன்விலைக்கு கரு. 74

கருவானமூலமது காணுதுகாணுங்
குருவானமூல குண்டலிக்கு-ஞருவான
சிற்றண்டமென்றுமதைச் செப்பினுரொப்பில்சித்த
மற்றண்டமுண்டோ மதி. 75

மதியாலகாரமான துறதியாகாக்
கெதியாஞ்சிறுநீரேகிட்டாய்-பதியாம்

வசளையுடையநீர் வாங்கிப்பாச்சிற்சாக்கு
கசடறவேகட்டுமெனக் காட்டு. 76

காட்டுப்பேரண்டங் கபாலவோடல்லாமன்
மாட்டுமற்றுப்பிலது மாளாது-கேட்டிகொலோ
சித்திருந்தவுண்மை தெரியாதொருவர்க்கும்
கற்றறிந்தபேர்க்கல்லாது காண். 77

காணுங்குடத்துநீர் காணுமவனேசித்தன்
றோணுமோவவ்வுலகந் தோணாது-தோணக்கேள்
கன்னிப்பெண்ணுடான் கனத்தமகவீணுமுன்னே
புன்னியதண்ணீரெனத்தானோது. 78

ஓதுங்குளநீர் கொடிநஞ்சுமாவொடைந்துங்
கோதில்குருவாகக் கூடுமேல்-வாதுசொலி
வாதமுதற்சகல சித்தும்வயப்படுமால்
போதுநீயிக்கருவைப் போற்று. 79

போர்முகாம் புவிதனிலேகாணாது
காட்டவோவின்றபிள்ளை காட்டுபற்-றோற்றது
சித்திருந்தவுண்மையந்தச் சித்தருக்கேயல்லாமன்
மற்றவர்க்குண்டோ மதி. 80

மதிகெட்டமாடுகளாஞ் சாத்திரங்களாயர்
கதிகெட்டோர்தன்கருவைக் காணார்-பதிகெட்டுப்

பூமிமுழுதுந்தேடிப் புலம்பிச்செடிபூண்டுங்
காமியரைப்போலலேவர் காண். 81

காணுவமிர்தமது கன்னியுடைத்தன்குடத்த
தாணுகவண்டபிள்ளை யயராதோ-தோணரிது
கெட்டமதியுள்ளவர்க்குக் கிட்டாதுகிட்டாது
விட்டகுறைவந்தென்ன மேவும். 82

மேவுமெய்ஞ்ஞானம் விரும்பாதவர்க்குலகிற்
ருவுறுநற்சித்தி தழைக்குமோ-மேவுகின்ற
ஞானசித்திபெற்று லுடனேபெறற்கரிய
மோனசித்திமுத்திபெற லாம். 83

முத்தியெனுமோட்ச கதிவந்துமூண்டுநிற்கும்
பத்தியாய்தொட்டதெல்லாம் பலிக்குஞ்-சத்தியமே
ஞானநெறிகண்டபின்பு நாடுவாயெத்தொழிலும்
வானுமுலகும் வழிபடும். 84

ஞானசித்தியாவதற்கு யுத்திகூறல்.

வழிபடுமெய்ஞ்ஞானம் வாய்க்கும்வழிகேளாய்
சுழிலேயெனுமவ்விடங் கருத்தும்-விழிவைக்குஞ்
சாதகத்திலாண்டொன்று தப்பாமற்சாதிக்கிற்
பேதகமொன்றில்லைப் பிடி. 85

பிடித்துவருகையிலே பேசாதபேச்சை
யடித்துவிடுபாச மகற்றி-தொடுத்துநின்ற

வோரிதழைநீதமருக் குள்ளேசெலுத்தின்மதி
வாரிலயம்வாசி லயமாம். 86

வாசிலயம்வானகமும் வையகமுங்கொண்டாடுந்
தேசிகனிற்சூழ்வார் துரத்திவிடு-வாசிசென்ற
தண்டலெனிசுற்றிக் கும்பத்தடங்குமிது
நின்றசாதிக்கு நிலே. 87

நிலேயாமல்சாதித்த நேர்படுந்தாங்கற்ற
தலேயாலேயாங்கதுகை கூடா-தலேயாலே
தான்சுற்றிநின்முற் றவசுநிலேவேறுமதோ
வானகற்றநீகண்டு வாழ். 88

பேரின்பத்தின் பெருமை.

வாழுவதுபேரின்ப வாழ்வேயாமற்றுளவாழ்
தாழுநிலேயதனேச் சாற்றினர்-போழ்வெளியா
ஞானசித்தியாவருக்கு நற்கெதியிற்கூட்டத்திற்
பிளேயென்புத்தியா விளேயாதே. 89

இளேயாதேமாய்கை யிளேத்தக்காற்சொல்லும்
வளேயாதுவந்து வனேத்துக்-கிளேபோலும்
பெண்டுபிள்ளேசுற்றமுதற் பேணுந்திரவியமும்
கண்டதெல்லாம்பொய்பொய் கருது. 90

வைராக்கிய நிலை.

கருதுமாசாபாசங் கைகடப்படுதப்போ
துருவாவடுதப்போ துடலங்-திரிசயத்திற்
கண்டதெல்லாங் கனவாய் பொய்யாய்ப் பழங்கதையாய்
நின்றிடுமப்போதாகு நேர். 91

நேரேயறிந்தவர் நிராமயமாய்நின்றிடுவார்
சோரநின்றூர்மாயைச் சுழன்றுபார்-பாரதனில்
பாசவினையதனுற் பற்றுமிப்பாவிகளுக்
காசின்முத்தியுண்டோ வறி. 92

சித்திமுத்தி வேண்டுவோர்க்குக் குகைவாசம் வேண்டுமெனல்.

அறிவாயுதவத் தழுந்தாமலோடி
நெறியாய்மலைக்குகையு ணின்று-சரியாது
வாழ்ந்தவனேசித்தன் மகாசித்தர்தங்களுக்கு
வேந்துங்குழந்தைப்போ லிரு. 93

இருந்தாலுலகத்தி லேழைமதியாவா
ரிருந்தவர்தான்வாழ்ந்தா ரிருக்கே-யிருந்திருந்து
பாசவினையமிழ்த்திக் கொல்லுமடாபாசவினை
மோசமடாமுன்னோர் மொழி. 94

மொழிந்தாரேசித்தரெல்லா மோசமென்றுகாட்டி
யொழிந்தாருலகுக் கொதுங்கி-யொழிந்ததுகேள்

காமனைவென் றந்தக் கரணற் றுடுக்கையும்வென்
றேமனைவெல்லக்கருத் திதே. 95

கருத்தைநிறுத்தினபேர் காண்பார்மெய்ஞ்ஞான
மறுத்தொருவர்காண்பா ரோதயத்-தொருத்தரு
மொன்றுமுதவாதிங் கோருறவுநீர்கொள்ளேல்
கண்டநிலைமேலாய் கருது. 96

மனோலயம்.

கருதுமுலகத்திற் கலங்காதேநெஞ்சே
உறுதியாய்நிற்க வுரைப்பேன்-பரிதிச்
சாதியாய்சுழிமுனையிற் றுனின்றுமாயைக்
கசடறவேதான்கடக்க நில். 97

வாசிலயம்.

கடக்கநின்றுகொண்டு வாசியைத்தான்கட்ட
முடக்கஞ்சுழிமுனையி னிற்பா-யடக்கமுடன்
வாடியிளையாதேவையகந்தான் கொண்டமட்டும்
தேடியலையாப்பொருளாய்த் தேறு. 98

தேறுமுயர்முன்னோர்க ளெல்லவருஞ்சாத்திரத்துக்
கூறும்வினையம்வைத்துக் கூறினார்-தேறுவையே
லென்றைக்குமுன்னுட லிருக்கும்பார்கண்டறியா
டண்டர்பிரான்வாக்கீ தறி. 99

அறிவார்பொருளை யுணர்ந்தாரை யெல்லாம் போக்கி, நெறியாயஞானநிலை நின்று-குறியாத, நான்சொன்ன வெண்பாவை நத்துவையேன்முத்தியதா, மோனமவ் வெண்பா நூறுமுற்று. 100

வாழி விருத்தம்.

திங்களை முடித்தோன்வாழி தேவிதற்பரையும்வாழி, செங்கையில் வடிவேலேந்துஞ் சேவலங்கொடியோன் வாழி, சங்குசக்கரந்தரித்த சாமியுந்திருவும்வாழி, பங்கமில்லாமலச்சிற் பதித்தவர்வாழிவாழி.

அகஸ்தியர் மதிவெண்பா-100

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினேழாவது,

அகஸ்திய மகாமுனிவர்

சஞ்சீவியெண்ணெய்

மேகத்தெண்ணெய்-5.

பூரணமாய்ச்செப்புகிறேன் புலத்தியாகேள்
புகழ்பெரியநாதாக்கள் பாதம்போற்றி
காரணமாமேகத்துக் கெண்ணெய்கேளு
கருதுகிறேன்கடுக்காயு மிஞ்சிசுக்கு
சீரணமாஞ்சீரகம் நிலவேம்புப்பட்டை
சிறந்ததொருபறங்கிச்சக்கை மிளகுமாகும்
தாரணியில்வெந்தயமும் நெல்லிமுள்ளி
தப்பாமற்கோஷ்டமுட னதிமதுரஞ்சேரே. 1

சேரேநீதினுசுபல மொன்றுவாங்கு
சிற்றரண்டமெண்ணெய்படி யொன்றுகேளு
காரேநீகாராவின் பால்படியுமாகுங்
கற்றாழைச்சாறுபடி கலந்துவாரு
சீரேநீசெவ்வல்லி சாறுபடியொன்று
செவ்விளநீர்படியொன்று செயலாய்வாங்கு

பாரேநீவாளமது வகைமுக்கால்தான்
பாங்குடனேசரக்கெல்லா மரைத்துக்கொள்ளே. 2

கொள்ளவேயெண்ணெயுடன் குழப்பிக்கொண்டு
குணமுடனேமேற்கண்ட பாலுஞ்சாறுந்
தள்ளாமற்சட்டியிட்டு மடுப்பேற்றிக்கொள்ளு
தயவுடனேதீயெரித்துச் சுண்டக்காச்சு
மெள்ளவேமெழுகுபத மாகும்போது
மேனியுடனிறுத்துவிடு மெய்தான்சொன்னேன்
கள்ளமனதில்லாமல் வடுவனுக்கு
கருத்துடனே பூசிப்பாய்க்கருதுவோமே. 3

கருதுவாய்வுச்சிநல்லக் கரண்டியப்பா
கண்மணியேகாலையிலே மண்டலமேகொள்ள
மருகுவாயப்படியே மண்டலமேகொள்ள
மயங்குமடாமேகமென்ற யிருபத்தொன்றும்
பெரும்பாடுசூலையுடன் பாதவாதம்
பறக்குமடாஓகோகோ பாருபாரு
இருக்குமென்றயின்னும்வெகு ரோகமெல்லாம்
யென்சொல்வேனேகுமடா யின்னங்கேளே. 4

கேளப்பாபத்தியமோ புளிபுகையுமாகா
கெடியானபோகமுடன் கடுகுநல்லெண்ணெயாகா

சூளப்பாபூசினிக்கா யகத்திதள்ளு
  சுந்தரமேபூவுலகும் புகழவேதான்
நாளப்பாவுறுதியுடன் கொண்டபேர்க்கு
  நாடாதுபீடையென்ற கன்மம்போகும்
பாரப்பாவொன்றுமில்லை பகரக்கேளு
  பத்திமுத்திநித்தியமுஞ் சித்தியாமே. 5

அகஸ்தியர் சஞ்சீவியெண்ணெய்

மேகத்தெண்ணெய்-5

முற்றிற்று.

உ

சிவமயம்.

பதினெட்டாவது,

அகஸ்திய மகாமுனிவர்

குளிர்ச்சியெண்ணெய்—5.

உண்மையாயுரைக்கிறேன் புலத்தியாகேள்
உலகமதிற்பண்டிதர்க்கு வுதவியாக
வண்மையாய்ச்சர்வ மேகங்களும்
வளமானசித்தரண்டை யெண்ணெய்வாங்கு
பண்பாகபடியொன்று பாலகனேயாகும்
பருவமாய்வெள்ளருகு படிசாறுகும்
தண்மையுடன்குமரிச்சார் படியுமாகுந்
ததியுடனேஆவின்பால் படியுந்தாக்கே. 1

தாக்கவேவல்லாரை சார்படியுமாகுந்
தாளிச்சார்படியதனை வாங்குமைந்தா
ஆர்க்கவேஅத்திப்பால் படியுமாகும்
அதின்கூடபூவாரன் பட்டைச்சாறு
கார்க்கவேசாறுபடி காலதாகும்
கருத்துடனே முள்ளங்கிப்படிசாறுகும்
மார்க்கமுள்ளகோஷ்டமுடன் மதுரமாகும்
மகத்தானசரக்கினுட வகையுமாமே. 2

மாமேநீ திரிகடுகு சடாமாஞ்சியாகும்
மாறுமற்சீரகமோ டொக்கச்சேரு
ஆமேநீவெந்தயமுந் திப்பிலியுமாகும்
அன்பாகபரங்கிசக்கை ரோகணியுமப்பா
தாமேநீவால்மிளகு கடுக்காய்ப்பிஞ்சு
தயங்காமற்சிறுதேக்கு கூடவாங்கு
தாமேநீ தினுசுக்கு ஓர்பலமுங்கூட்டு
தானதிலேவாளமுடன் பலமும்வாங்கே. 3

வாங்கியேகடுகமதில் யிளநீரால்கேளு
மைந்தனேயதிற்போட்டு மைபோலாட்டி
பாங்கென்றமேற்கண்ட பாலுஞ்சோறும்
பந்தமுடனெண்ணெயுமே யொன்றாய்ச்சேர்த்து
சாங்கமதாய்மருந்தையெல்லா மதிற்குழப்பி
சட்டமாய்ப்பாண்டத்தில் விட்டுமைந்தா
சோங்கமுடன்தீயெரிக்க சுந்தரமேகேளு
சொற்பெரியமெழுகுபத மாகுந்தானே. 4

தானென்றமறுபாண்ட மிறுத்துக்கொள்ளு
தப்பாமல்நாளொன்றுக்குக் காற்கரண்டி
கானென்றகாலையிலே உள்ளுக்கொள்ள
கண்மணியேகடும் பத்தியங்களப்பா
பானென்றவுப்புமுதல் பதார்த்தங்கள்ளு
பாங்காகவறுத்ததொரு துவரையாகும்
வேனென்றவியாதியெல்லாம் விண்டுபோக
விருப்பமுடன்பண்டிதர்க்கு விளம்புறேனே. 5

உ

சிவமயம்.

பத்தொன்பதாவது,

அகஸ்தியமகாமுனிவர்

இதவும்

குளிர்ச்சியெண்ணெய் - 5.

பூரணமாயறுமுகவன் பாதம்போற்றி
புலத்தியனேதைலமது புகல்கின்றேன்கேள்
காரணமாய்க்காரெள்ளு எண்ணெய்வாங்கு
கற்றாழைசாறுபடி யொன்றுகேளு
வாரணமாயிளநீறு படிதானாகும்
வகையுடனேநெய்சிட்டி படிச்சாறாகுந்
தாரணியிலாவாரை படிசாறாகுந்
ததியுடனேகாணிச்சார் படியும்வாங்கே. 1

வாங்கியேஆவின்பால் படியுமாகும்
வாங்குவாய்சாம்பிராணிப் பலமிரண்டாம்
பாங்கமாய்பச்சிலி கிச்சிலிக்கிழங்கு
பண்புடனேமிளகுபலம் பண்பாய்ச்சேரு
தாங்கவேகலுவத்தி லிட்டுமைந்தா
தண்மையாம்போலே ஆட்டுவாய்நீ

சாங்கமாய்கண்டதொரு பாலுஞ்சோறுந்
தப்பாமலெண்ணெயுடன் குழப்பிக்கொள்ளே. 2

கொள்ளவேபாண்டத்தில் விட்டுமைந்தா
குணமுடனே அடுப்பேற்றித்தீயைமூட்டு
கள்ளமில்லாமெழுகுபத மாகுங்கண்டாய்
கசடறவேமறுபாண்ட மிறுத்துக்கொள்ளு
விள்ளவேயெட்டுநா ளிரண்டுவட்டம்
விருப்பமாய்த்தைலமது முழுகுவாய்நீ
துள்ளவேபனிரண்டுதலை முழுகிவந்தாற்
றலையுமென் றவியாதிதனை செப்புவேனே. 3

வேனென்றபத்தியமும் விரும்பவேண்டாம்
வெகுசுருக்காயோடுமடா மேகமெல்லாம்
மானென்றமயக்கமொடு பித்தம்போகும்
மாறுமேதலைக்குத்தல் கண்ணெரிச்சல்
கோனென்றரணங்களொடு சொரியும்போகுங்
கூறுகெட்டபடர்மேகங் குதித்தேயேகும்
ஏனென்றகரப்பன்முத லெரிவுகாந்தல்
யிருக்காதுவியாதியெல்லா மேகுந்தானே. 4

ஏகமாய்த்தைலமதை முழுகுவோர்க்கு
யெவ்வர்னம்பொன்மேனி பொன்வர்னமாகும்

போகமேயதிகமடா பலமுண்டாகும்
புண்ணியனேநேத்திரத்தின் குத்தல்போகும்
சேகரமாஞ்செவிநோயுஞ் செயலுமுண்டாந்
சிறப்பாகவசீகரமுஞ் செயலுமுண்டாந்
தாகமாய்ப்பண்டிதர்க்கு தயவுகூர்ந்து
தன்மையாயுரைத்திட்டேன் தானுமுற்றே. 5

அகஸ்தியர் குளிர்ச்சி யெண்ணெய்-5

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

இருபதாவது,

அகஸ்தியமகாமுனிவர்

மேகத்தெண்ணெய் - 14.

எண்ணெய்கேள்மிளகருணை வெள்ளைச்சாரணைவேர்
யிதமானமுந்திரிவேர் முருங்கைவேம்பு
தண்ணவேகுமரியொடு வல்லிசீந்தி
சலந்திரட்டிக்கரிசாலை பொன்னாங்காணி
விண்ணவேஅமுக்கிரு சங்கங்குப்பி
வெள்ளீன்றுநீர்ப்பூலா விழுதியோடு
திண்ணமாம்நிலைப்பனைவேர் அழிஞ்சிப்பட்டை
சிறுவிளாவெள்ளறுகு வல்லாரையாமே. 1

ஆவாரைமுடக்கத்தான் அகத்தியோடு
அப்பனைவகைக்கு பலந்தானிரண்டு
ஆரையாம்ஆவாரை சமூலங்கொண்டு
அழகாகநிறுத்திடுவாய் பலமோபத்து
சேரவேயொன்றாக யிடித்துநன்றாய்
சேர்த்துவொருதாளியிலே ஜலந்தான்கேளு
வேரையாஞ்சீரகம் பலந்தானெட்டு
வெந்தியமோபலந்தானு மெட்டுபோடே. 2

போட்டுமேஅுவைநன்ருய் கரைத்துக்கொண்டு
பொங்கமுடன்பதிருறுபடி ஜலந்தான்வாரு
ஆட்டியேவடுப்பேற்றி யாறப்போடு
அழகானகியாழந்தான் குறைவுகண்டு
தீட்டியேகுழந்தாய்நீ செப்பக்கேளு
சித்தரண்டமெண்ணேபடி யிரண்டுவாரு
காட்டியேயீருள்ளிச்சார் படியிரண்டுவாரு
காராவின்படியிரண்டு கல்ருரெட்டே. 3

எட்டாலகல்ருரு வஸ்திரகாயம்
இதமாகச்செய்ததிலே போடுபோடு
மட்டானராயபுரிச் சக்கரைதானெட்டு
வாகாகப்போட்டதிலே காச்சுகாச்சு
யிஷ்டமாம்பாலோடு கியாழம்வற்ற
யெண்ணெயதை மெழுகுபதமாகக்கிண்டி
தட்டியேகரகத்தோ டிரக்கியாற்றி
சாடியிட்டுமூடிதான் ரவிபுடமேவையே. 4

வைத்துமேபட்சமொன்றும் கழித்துவாங்கி
மைந்தனேநாளொன்றுக் கோர்கரண்டி
உற்றுமேதினந்தோறுங் கொண்டாயாகுல்
ஓடுகிறநோயைநீ யுற்றுக்கேளு

மெத்தவொருமேகங்க ளிரண்டுபத்து
  மேலானகிரந்தையரை யாப்புகுஷ்டம்
கத்தவொருஅஸ்திசுரம் அஸ்திவெட்டை
  கரப்பனொடுசிரங்குசொறி மேகம்போமே. 5

மேகமொடுநால்வகையாம் பிறகுமுங்கள்
  வெண்குஷ்டம்படர்தாமரை மேகவூரல்
மேகமாம்பித்தவாய்வு ஊஷ்ணவாய்வு
  மெய்யெரிவுகாலெரிவு காந்தல்போகும்
மேகமாம்வாயுவொடு அண்டவாதம்
  மெல்லியர்க்குகெர்ப்பநோ யேழுந்தீரும்
மேகமாமலடிக்குப் பிள்ளையுண்டாம்
  விருதானவைத்தியரே விரைந்துபாரே. 6

பாரேநீயெண்ணெய்க்கு பத்தியமேயில்லை
  பரிவானபெரியோர்க்குஞ் சிறியோர்க்குமாகும்
பாரேநீபுவிமீதில் மானிடர்க்கு
  பாங்குடனேவியாதிகண்டாற் குறியைப்பாரு
பாரேநீஇவர்களுக்கு யெண்ணெயீவாய்
  பாலகனேபொருளாசை நீவையாதே
பாரேநீபுலத்தியனே ஐயாகேளு
  பண்டிதங்களறிந்துநீ பகர்ந்திடாயே. 7

இதுவுமது.

சீராகபுலத்தியனே செப்பக்கேளு
சிவசிவாமேகத்துக் காதியெண்ணெய்
தாரானசித்தண்ட மெண்ணெய்படியொன்று
தார்குழலாள்முலைப்பா லரைப்படியுமாகும்
பேரானபுலத்தியனே பெருமைமெத்த
பேருலகிற்செப்பாதே பேணிப்பாரு
கூரானஅத்திப்பால் படியுமாகும்
குணமுடனேசாறுவகை கூறக்கேளே. 8

கேளப்பாவிழுதிச்சார் படியுமாகும்
கேடியானகுமரிச்சார் படியுமாகும்
வாளப்பாவல்லாரைச் சார்படியுமாகும்
வாங்குவாயிளநீரு படிதானப்பா
நாளப்பாநன்னாரிச்சார் படியுமாகும்
நறுந்தாளிசாறுபடி யரைதான்கேளு
சூளப்பாகுமட்டிச்சார் படியரையுமாகும்
சுந்தரமேசரக்குவகை செப்புவேனே. 9

செப்புகிறேன் திரிகடுகு திரிபலாதி
சிறப்பானசீரகமுங் கொத்தமல்லி
கொப்பிதமாய்கோஷ்டமுட னதிமதுரங்
கொண்டதொருகடுகுரோ கணியுங்கூட்டு

வப்பனே தினுசுக்கு வைந்துபலமுஞ்சேரு
யன்பாகவாளமிரு பலந்தான்வாங்கே. 10
வாங்கியேயிளநீரால் மைபோலாட்டி
வகையுடனேமேற்கொண்ட பாலுஞ்சாறும்
பாங்கமாயெண்ணெயுமே சேரவார்த்து
பாலகனேமருந்தையெல்லாங் குழப்பிக்கொண்டு
சிங்காரபாண்டத்தில் விட்டுமைந்தா
சிவசிவாவடுப்பேற்றி யெரிப்பாய்தானே. 11
தானென்றமறுபாண்ட மிறுத்துக்கொண்டு
தன்மமாந்தினமுச்சி கரண்டிதானும்
வேனென்றகாலையிலே உள்ளுக்குக்கொள்ளு
விரண்டோடேழுபத்து நாளதாகும்
கானென்றபுளிபுகையுந் தள்ளுதள்ளு
கடினமாம்போகத்தை நினைந்திடாதே
பானென்றபத்தியமோ யிச்சாபத்தியம்
பரிவாகும்வியாதிதனைப் பகருவேனே. 12
பகருவேன்கருமேக கருங்குஷ்டங்கள்
பாண்டுடனேவாதமென்ற பக்கசூலை
வேகமென்றபித்தமுடன் வாய்வுபோகும்
வெகுசுருக்குபடர்மேகஞ் சிரங்குபோகும்
வானென்றஉஷ்ணமு மற்றுப்போகும்

வப்பனேகெற்பநோ யெல்லாந்தீரும்
தோமென்றகாமாலை யெலும்புருக்கி
சுத்தமாய்பறக்குமடா குன்மம்போமே. 13

போமேதான்கூறுகெட்ட வியாதியெல்லாம்
பொல்லாதசன்னிவகை போகும்போகும்
தாமேநீகுணங்குறிகள் தானறிந்து
தாரணியிற்பண்டிதங்கள் செய்யவேணும்
வேதனைகள்செய்யாமல் முன்பின்னாக
விருப்பமாயவிழ்தங்க ளீயவேணும்
மாமதங்கள்பொழியுமப்பா மருங்குசொன்னேன்
மன்மதன்போலழகுண்டு மாபலமுமுண்டு
ஆமேதான்புலத்தியனே அறிவாய்ச்சொன்னேன்
அகண்டபரிபூரணமா யருளுவோமே. 14

அகஸ்தியர் மேகத்தெண்ணெய்-14

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

விஷ்ணுசக்கரம்.

ஆதிவிந்துசாதிலிங்க மானதொருணுபுரியும்
சோதிமூலாதாரமுந் துலங்குகாந்தமனோநிலை
நீதிநிம்பச்சாறுவிட்டு நேருங்குன்றிநேரிடை
பாதிமேனியாயிருந்த பாரளந்தசக்கரம்.

சக்கரத்திலோர்மணி தனித்திரிகடுகுடன்
மிக்கதேனிலிஞ்சிசாற்றில் நேருங்குன்றிநேரிடை
பக்கசூலைமிக்கவாயு பத்துமூன்றுசன்னியும்
மிக்ககோபமானதுந் தரிப்பதங்குமில்லையே.

விஷ்ணுசக்கரம்

முற்றிற்று.

சிவமயம்.

இருபத்தோராவது,

அ க ஸ் தி ய ம கா மு னி வ ர்

பூ ர ணச்

சந்திரோதயவாலை — 200.

மூச்சுவிடும்போதிருந்த ரசவாதப்பெண்
மோகணபூரணச்சந்திரோ தயத்தைப்பாரு
ஆச்சரியமாயிரத்தி னிருநூருய்ந்து
அரன்சொன்னாதிலிந்த யிருநூறுந்தான்
நீச்சமில்லை நிலையுமில்லை கறையுங்காணும்
நெடுந்தூரம்வறைக்கோடு மெளிதமில்லை
பேச்சரியஆயினுட பதத்தைப்போற்றி
பிதற்றுகின்றேன்குமரகுரு பாதங்காப்பே. 1

சாதிநிற லக்ஷணம்.

கார்ப்பதற்குக்குமரகுரு பரன்றுள்காப்பாம்
காரணபூரணசந்திரோ தயநூல்தன்னிற்
கோப்பறிந்துகுணமறிந்து சாதிநாலில்
குறியறிந்துசெயலறிந்து கூறக்கேளு
சேர்ப்பனத்திலீய்போலத் தியங்காமற்றுன்
செப்பினேன்ரசவாதம் சித்தர்க்கெல்லாம்

முப்பினையுமில்லைமுறப் படியதாகி
முப்பூவறிந்துபுடம்போட பழுக்குந்தானே. 2
பழுத்தகனிகொம்பினிலே யிருக்குமோசொல்
பத்தினியாள்வகைபெற்றாற் பலிக்குமோதான்
இழுத்துருட்டுவழியாதே லோகத்தோர்க்கே
யிழுத்தாலேமோசம்வரும் யிழுக்கார்பின்னே
கழுத்தொடியப்போகுதப்பா கண்டுசொன்னேம்
காரியக்கார்நரகின்வழி பற்றமாட்டார்
முழுத்தமோகன் பூரணச்சந்திரோதயத்தை
முறையாகப்புகலுவேன் முன்னேகேளு. 3
கேளப்பாயீசனுட கெங்கைபிள்ளை
கிளிப்பிள்ளைநிரஞ்செகப்பு யதரந்துப்பு
நாளப்பாயிரண்டாகும் யிதற்கின்னூறு
நலங்கையிலேபிரவிஞ்சை நாகரீகம்
வேளப்பாகொண்டபெண்தா னிதற்கீடல்ல
விமலனார்பாகப்பெண் ணேந்தாயப்பா
கேளப்பாயீடல்ல திருமால்தேவி
கிஞ்சுகவாய்சரஸ்வதிபெண் ணீடல்லதாமே. 4
தானனவதனமதி குழலுமேகந்
தங்கமிரத்தினத்தோத தட்டாமல்குலப்பா
மானனநெற்றிபிறை குமிழ்மூக்காகும்

வாளைரண்டிருதுடைதான் வரால்மீன்கெண்டை
தேனனமொழிகற்கண்டு முலைதிரண்டுருண்டு
திராசுதட்டுமிருப்பிடமு மாமையாகும்
ஆனனசித்தடியு முணர்வோர்க்கொஞ்சம்
மானனகலை நூலிடைய வராலியதாமே. 5

ஆலிலைமேற்பள்ளிகொண்டா னெழுந்துரோமம்
அரைக்கீரைவித்தெனலாம் தங்கத்தட்டில்
வேலையுங்கூர்மையடா பார்வைநோக்கல்
மெய்வாசம்கமகமென்ற மேலாம்வாசம்
பாலிலையும்ரசமிகுந்த மொழியாள்செங்கை
பதுமமலர்க்கந்தரமுங் கழுத்தேயாகும்
நாலிலையும்முதற்சாதி யிரண்டாஞ்சாதி
யிரண்டைவிட்டால் மூன்றினில்பேறுமாமே. 6

ஆமப்பாகடைச்சாதி தள்ளுதள்ளு
அடுத்தாலுமூத்தவள்தன் முகத்தில்நிற்பாள்
சோமப்பாவெளுக்காது கருகுவேகம்
சுருக்கில்லைபழுக்காது வேதையீயங்
காமப்பேய்பிடிக்குமப்பா நாலாஞ்சாதி
கன்மனதுஅனுபோகங் கடினமாகுஞ்
காமப்பேயப்பேயே யவள்கண்டாதி
சண்டாளிராட்சசத்தி கணமாம்பாரே. 7

பாரப்பாநாலுக்கு நால்தானாகும்
பண்பாகமூன்றினிலே முக்கால்பட்சம்
நேரப்பாநாலுக்கு யிரண்டுசேரில்
நெருக்கிடையாய்கலகமிடும் பக்கல்சேரும்
சேரப்பாமுதற்சாதி பெண்ணுக்கேதான்
சேருவதுயிரண்டன்றி மூன்றாகாதே
காரப்பாமூன்றுக்கு நாலுசேருங்
கடைசியிலேரெண்டுக்கு நாலாகாதே. 8

நாலாஞ்சாதிவிபரம்.

ஆகாதுஆணுக்கும் பெண்ணுக்குந்தான்
ஆதிதொடுத்தந்தமுத லன்பேயின்பம்
போகாதுவந்தந்த யினமேசேர்ந்தால்
புணர்ச்சிக்கயிச்சைவுண்டாம் பொல்லாப்பில்லை
வேகாதுசிந்தையுமே தடுமாறாது
மெலியாதுஒன்றுடனே யொன்றேசேரில்
சாகாதுவுயிருள்ள வரைக்குமப்பா
தாரணியிலொன்றுமுத லிரண்டும்பாரே. 9

இரண்டினிலேநடைகுறியுங் குணமுங்கண்டு
இராசவசியபிரம்மகுலத் திரமாம்நாலில்
தொண்டுபணிவிடைசெய்து காத்திருந்து
சொர்னமள்ளிகைகிரம்பத் துகையாயீந்து

தண்டுமுண்டுசெய்யாமல் பாரியாக
சம்மதமாய்முகூர்த்தமிட்டுத் தாலிகட்டி
கொண்டுவாவாய்த்துதென்றால் பின்னேசெய்யுங்
குணுகுணத்தைக்கண்டிலனே கூறக்கேளே. 10
கூறவென்னவாய்த்தேனைக் கொண்டாயானாற்
கூறுவதேன்கொண்டாட்ட மிதுபோலுண்டோ
பேறுபெற்றோன்நீயல்லால் நானுமில்லை
பேச்சரியவிட்டகுறைக்காரன்நீயே
ஏருவதுக்கேணிட்ட பணுப்போலாச்சு
ஈசனடிகண்டுகொள்ளு மிரவியாச்சு
தேருவதுயிம்மாதை ரவிபடாமல்
செப்பில்வைத்துதிரவியம்போல் வளர்த்திடாயே.

சாதிசேர்மானவிபரம்.

வளர்த்திடுவாயவட்குகந்த யுணவையூட்டி
வாரமொன்றில்மூன்றுவிசை யெண்ணெய்முழ்கி
இளம்பிறைதான்வளர்வதுபோல் வளரச்செய்து
இருதனமும்புளகாங்கிதங் கொள்ளவேதான்
நிழல்தனிலேயிருத்திவைத்துக் கதம்பம்பூசி
நித்திரைதான்மெத்தையின்மேற் றுயிலச்சொல்லு
பழந்தனிலேகதலியுட பழத்தினோடே
பசுவின்னெய்சேர்த்தூட்டிப் பருவம்பாரே. 12

நாதம்வாங்குகிறவிதம்.

பருவமின்னாளப்படியே மருவும்போதே
பஞ்சணைமேல்கைகலந்து பருவம்பாரு
திருகுமொன்றும்வாராது யிருபேருக்குஞ்
சொற்றவராதிருக்குநன்றாய் வாழும்போது
குருவாரியபூர்வபட்சம் பௌரணைநாளில்
கோதையரைப்புல்லியவள் குறியைப்பாரு
கருவாளிவுனக்காகச் சொல்வேன்கேளு
கதலிச்சாருடன்சாதிக்காய் கலந்துதாக்கே. 13

துரிசுசுண்ணம் பரிச்சுண்ணம்.

தாக்குவதுருதுவான யேழாநாளில்
தனபானம்பற்றிநீ தருணம்பார்த்து
பாக்கிலையுமருந்தியது படுத்துப்பாரு
படுக்குமுன்னேவாழையிலை விரித்துக்கொள்ளு
மூக்கிலையுஞ்செவிவெளியில் நாக்குநாவு
மோகனப்பெண்குறிகுடைந்து விரலைநீவி
நாக்கைவிட்டுமணிவருடி நடத்தும்போது
நாரிமின்னாள்காமப்பால் வடியும்பாரே. 14
வடிந்தபால்வாழையிலை யதனில்வைத்து
வராகனிடைதுருசிட்டு ரவியிற்போடு
விரிந்துவெய்யில்படும்போது சுண்ணமாச்சு

விஞ்சினத்தைலிங்கத்தின் மீதிற்பூசி
படிந்துரவேமெழுகாகும் மெழுகைவாங்கி
பரித்தகட்டிலப்பிட்டு சுண்ணமாச்சு
மிடித்துவிடுயிதற்கெல்லாஞ் சேர்மானத்தோடே
யேற்றிவிடுமென்னசொல்வேன் வாங்கிப்பாரே. 15

வாதியென்றுலிவ்வேதை செய்துபாரு
வராகனிடையிருந்ததுதான் துருசிச்சுண்ணம்
பேதியென்னலோகமெல்லாம் பேதியாகும்
பேச்சரியதுருசுநீர் குருவுமாச்சு
சாதியென்னயிதுசாதி யல்லாலுண்டோ
தவம்பெற்றபெரியோரைக் காருகாரு
ஆதியிலேவிட்டகுறைக் காரணால்
ஆருக்கும்விள்ளாதே யடிக்கிவையே. 16

வைத்தல்லோபூரணச் சந்திரோதயப்பால்
வாங்கியுண்டாற்போகருமே மகத்தாம்வித்தை
சித்தெல்லாங்கற்றறிந்தார் செகஜாலத்தில்
தேறினாரினார் மீறினாராங்
குற்றமொன்றுவாராது குமரிகாமம்
கொண்டவன்வுயிர்பிழைப்பான் மற்றோர்சாவார்
பித்தருமேயென்தாய்க்குப் பிரித்துச்சொன்னார்
பிரியமுடன்தாயெனக்குப் பேர்சொன்னாளே. 17

பேருரைச்சருக்கார பிண்டமென்பார்
பெண்ணடியாமூலமென்பார் கடலுப்பென்பார்
நீருறையாரமுரியென்பார் கல்லுப்பென்பார்
நிலப்பூமிநாதமென்பார் முப்பூவென்பார்
நேருறையாரதனைலே உலகத்தோர்கள்
நெறியற்ருர்கெதியற்ருர் நிலையற்ருரே
அத்தமென்ருலிதிற்காணும் வேறேயில்லை
அஷ்டசித்தியெட்டுவித் தையிலேயாடும். 18

முப்பூவின் விபரம்.

பத்தம்வைத்தாலிதுலபிக்கு மல்லாலில்லை
பாவிகட்குமிந்நூலைப் பகரவேண்டாம்
சித்தர்களேமுப்பூவி லொருபூசொன்னேன்
திரும்பியினியிருபூவும் விள்ளக்கேளு
கர்த்தாவின்மேலாணை பரன்மேலாணை
காங்கயனுமென்குருமே லாணையுண்டு
சத்தாங்கம்வந்தாலும் பொருள்விள்ளாதே
தண்டகப்பட்சணியின் சாரந்தானே. 19

2-வது முப்பூவின் விபரம்.

சாரமென்னமுப்பூவி லந்தப்பூவிள்ளார்
சத்தியவானனலுந் தரணிமீதில்
வாரமற்றுச்சொல்லிவிட்டே னதிலேகோடி

மகத்தானவித்தையெல்லா மாட்டும்பாரு
தூரமல்லகாதமல்ல கிட்டவல்ல
சொன்னாலுந்தலைதெரிக்குந் தோஷமப்பா
பாரமென்னவித்தையறு பத்தினாலும்
பலிக்குமடாமுதற்பூவிற் பலிக்கும்பாரே. 20

இரண்டாஞ்சாதி வேறு.

பண்ணிவிடுமாது நண்ணிவிடுசையோகம்
எண்ணியதுகாதம் வண்ணமதுபாரே. 21

வேறு.

பாரிரண்டுமாதுகுறி யிரண்டாஞ்சாதி
பவளம்போல்மெய்யதுவு மிருந்துதானால்
வீரன்தான்பலம்வாங்கி நாதஞ்சேரு
விருதுபெறவேணுமென்றால் ரவியிற்போடு
தூரமாயிருந்தநாள் மூன்றுநாளும்
தோகையரையனுசரித்து வுள்ளுக்குத்தான்
சீரகமுங்கூவிளத்தின் விரையுஞ்சேர்த்து
தின்றுவாவென்றுசொல்லி நாதம்வாங்கே. 22

வாங்குவதுமாதவிடை யானாளும்
மறுநாளுமற்றாநாள் மூன்றுநாளுந்
தூங்கிவிழித்தெழுந்திருக்கும் போதுமின்னார்
சுரோணிதப்பாலூரிவரும் சூட்சங்கண்டு

பீங்கானில்வாங்கிராப் பனியில்வைத்து
மற்றுநாள்சுரோணிதத்தை ரவியில்வைப்பாய்
ஏங்காதேமூன்றுநாள் சுரோணிதத்தை
யிரும்பானகரண்டியிலே யிறக்கிடாயே. 23

வேறு.

இறக்கியெரித்திடுவா யீருள்ளிச்சாரிட்டு
பிரக்கிமனேசிலைப் பேணிமதியதை
நிறைக்கிச்சார்யிடை நிறுத்ததிற்சேர்த்திடு
துரைக்குருவாமென்று சொன்னார்துருசிலே. 24

துரிசிலேமுன்பனி வைத்துச்சுரோணிதங்
குருவிலேகெந்தங் கூட்டியரைத்திடு
யெரியிலேயேழு யெழுப்பிட்டுப்பாரு
தெருவிலேகண்ட திரவியமாமே. 25

வீரச்சுண்ணம்.

திரவியமென்ன செம்பிலேகேந்திப்
புரவியைத்தாக்க பொன்மாத்திரட்டாம்
பிரவிபோற்காணு மிரதமுங்கூட்டிப்
பரவியவங்கம் பழுக்குந்துருசே. 26

பழுக்குமிரும்பு பத்தரைகாணும்
வெளுக்கும்வெள்ளீயம் விருந்துபன்னிரண்டு

அழுத்தகலைகற்கும்பித் தனைகேளப்பனே
முழுக்குமுக்கு முட்டையுஞ்சேரே. 27

சோராமிரவி யிருந்தசுரோணிதம்
மாராவமிர்த மதியோடிரவில்
சாராவீரம் அண்டவெள்ளைக்கருவுங்
கூராமிடுதெல்லாங் கூட்டியரைத்திடே. 28

அரைத்தமருந்தை யரைக்காசினளவிடை
திரட்டிரவியில் தேறியுலர்ந்தால்
வரட்டியிலொன்றில் வைத்துயெரியிட்டுத்
துரட்டநீரறி சுகம்பெறவையே. 29

வைத்தகுருவில் வரிதாரஞ்சேர்த்து
பித்தளைச்சல்லியிற் பிசறியுருக்கையில்
சத்தேகுருவைத் தாக்கிப்பின்பாரு
அத்தமுங்காணு மதுவயதொன்பதே. 30

வேறு.

ஒன்பதரைமாற்று மொன்பதும்போது
மின்பமுறும்போது துன்பமுறவேது. 31

வேறு.

ஊனென்றவேதைவிட்டா லுறவுமுண்டோ
உலகத்திலுள்ளவரோ செய்வோர்வேதை
மறைவென்னமைக்கெடுத்த துறையைச்சொல்வேன்

வாமத்தில்முன்சேர்த்த வீரக்கட்டி
இரவிகண்டசெந்தூரம் வீரக்கட்டி
யிறக்கிவைத்தபிண்டநெய்யா லாட்டிக்கொண்டு
அரவமற்றகாருரிமை யோட்டிற்பூசி
யடுப்பேற்றிஆவினெய்யால் விளக்கையேற்றே. 32

அஞ்சனமை.

விளக்குச்சாணகலஞ் சீலைநீளம்
விள்ளாதேரெண்டுசா ணிலையாந்தூசு
அழுக்கற்றவெள்ளீயச் சீலைக்குள்ளே
யறைக்களஞ்சிகுந்திருக்கும் பொடியைத்தூவி
முழுசுற்றுப்போலுருட்டி விளக்கையேற்றி
மூவிளக்குநெய்யெரிப்பாய் மூன்றுசாமம்
விளக்குமைப்பற்றும் புத்துப்போலேமண்டை
யோடுருகுமுருகுமுன்னே மையைவாங்கே. 33

வேறு.

மைவிழித்துவாதி கைதவத்திலூதி
ஐவருக்குமோதி மெய்விரித்தபூதி 34
பூமியிடுவேலை மோதியிடுவாலை
வீதிவருவானை ஆதியதிநாலை 35
நாளருக்கம்வேலை பாழிருக்குமூலை
சூழிருக்கவேலை வாழிருக்கவெட்டே 36

வெட்டெனப்பேசாதே பட்டணத்தேகாதே
அஷ்டகிரிமீதே திட்டெனவேயேறே 37
யேறுவதுபூதம் மாறுவதுகாதஞ்
சேருவதுயாகம் மாறுரசவாதஞ் 38
சாதநிதிவைப்பு பூதமுயர்சப்பு
நாதமிதுவைப்பு வேதமுறைசெப்பு 39

வேறு.

செப்பியமந்திரஞ் சிவாயநமோவென
ரிப்புவிமீதி லிருந்ததிரவியம்
வைப்பதுகோணம் வகைசொன்னேன்பாரு
கைப்பிள்ளைவாலை காமவிந்தாமே. 40

விந்தல்லோதோற்ற மேழுவகைசேலை
செந்தல்லோவிந்து சீவனமாச்சு
யிந்தல்லோராத்திரி யிருட்டும்வெளிச்சமும்
விந்தில்லாதில்லை விநாயகர்மூலமே. 41

மூலமல்லோவட்டம் விந்துவேமூலம்
கோலமல்லோவாமப் பெண்ணுங்கோலம்
காலமல்லோவெல்லும் காமத்தின்காலஞ்
சாலமல்லோயிந்திர சாலமதைப்பாரே. 42

பாரேதுமுனிமச்சன் பாடினதீட்சை
சீரேதுஞானதிட்டமொருநூறு

வாரேபகர்ந்து மறைப்பொருதாப்போல்
பாரேதிருமூலர் பாடியபாடலே. 43

பாடுவார்தந்திர மெண்ணாயிரத்தையுஞ்
சூடுவார்க்கல்லோ சுகாதீதமடங்கிடும்
நாடுவார்க்கல்லோ நருநீலகண்டம்
போடுவார்க்கென்ன பூட்டகந்தானே. 44

பூட்டைத்திறந்தாற் பூவையால்கிட்டும்
வேட்டைபலிக்கும் விதம்விதமாடும்
காட்டுக்கருவும் நமஸ்காரஞ்செய்யும்
காட்டுக்கெரித்த கனனிலாவொக்கும். 45

கருவென்னகன்னி வளருமீரேழில்
உருவென்னமஞ்சட் கருப்போலிருக்கும்
அருவென்னமாதளஞ் சாறூட்டிவளர்க்கும்
குருவென்னவாங்கி குக்குடமுட்டையே. 46

இரசமணி.

முட்டையில்வெள்ளைக் கருப்போக்கிமஞ்சளில்
நட்டுவார்நாமென்று நாரிமின்னுள்கறு
விட்டதில்தேவி விராகனிடையிட்டுப்
பட்டவல்லானை மன்பத்திரதமே. 47

இரதமேமுட்டையி விடுதுவாரத்தில்
பரிசமிட்டாற்போற் பாஷாணமெழுகிலை

சரசமோயில்லை தானடைசட்டியில்
விரசமாய்நரிவொட்டுச் சார்காற்படியே. 48

படிவிட்டுமுட்டை பதிப்பாயிச்சாருள்ளே
குடிகெட்டிடாமல் குமரிச்சாராழாக்கு
கடிகட்டும்வாரு வரக்கொடுகள்ளும்
மடிகட்டிவிட்டு வளரெரிமூட்டே. 49

மூட்டியபோது முட்டையவிந்தபின்
நாட்டியெடுத்திடு ரசமணிசோதிபோல்
ஓட்டியசிப்பியி லொளிமுத்தீதென
காட்டியபோது கண்கொள்ளலாமே. 50

கண்கொண்டமாமணி கட்டியசூதத்தை
பண்புடனேதான் பத்திரமாகவை
விண்டிடவேபீ விளம்பரகையினி
துண்படவாயினி லோதுஞ்சிவாவென்னே. 51

வேறு.

சிவசிவாமணியின்வேகம் சிவனுடவேகமாகுந்
தவமுள்ளோற்கெய்துமல்லால் தரணியில்கிட்டாதிந்த
நவமணிசிரசின்மீது நல்கிடநமனுமில்லை
பவம்வினைதுடைக்கும்பாரு பலனதிலனேகமாமே. 52

ஏகவேவசியமாறு மிகத்தினிற்றுலங்கியாடுஞ்
சாகவேயிடங்கிட்டாது தவமுள்ளயோகியாவாய்

மோகனமாதுசொல்வாள் மூட்டியகருவுமாடும்
வேகமாயெதிரில்வந்தால் வெட்டுவாய்நமசியன்றே. 53

மசிநசியென்றுமுன்னே வாக்கியதண்டுவேரை
யசிநசியவன்பேர்சொல்லி தகித்திடுசாவான்பாரு
நிசியினில்மாதர்மேலே நித்திரைசெய்யுமுன்னே
வசிவசிவருகவென்று மாதுடனுமங்கூறே. 54

கூறிடுமணியெடுத்து கோதையால்திசையைநோக்கி
ஆரிருந்தாலுமங்கே யணையெனவணையாள்பாரு
யேருவாளனுபோகத்தி லிரதியுமதனும்போலே
சீறுவாள்காமமீறிச் சேருவாள்பிரியாள்பாரே. 55

பாரிந்தமணியைக்கட்டிப் படைமாவின்மீதிலேதான்
பிரங்கிசுட்டுப்பாரு பிறகல்லோவருமைதோனும்
மாரென்றுமீய்ந்திடாதே வகஸ்தியநானும்நாம [தே.
வேறென்றுமிதற்கீடல்ல வெட்டுகுத்துமெதிர்நில்லா

நில்லாதுநவலோகத்தை நீட்டினால்பழுக்கும்வேதை
சொல்லாதேயஷ்டசித்தி சுருதியாங்கைக்குள்ளாக
எல்லாருமுன்னைத்தேடி யிரணியமீய்வார்பாரு
கல்லானதேவர்தாமுங் கைத்தொழவெடித்துபோமே.

போகமேமூவேளென்ற பூவைதன்னுதம்வாங்கி
வாகையின்சாராமூக்கு வடிகொண்டுமதுரம்சேர்த்து

தாகமாய்வுள்ளே தாக்கு தணுவையில்விந்துமூன்று
சேகரமாகவேநாம் செப்பிடுங்கணத்தில்வேண்டே. 58

சொக்குப்பொடி.

வேண்டியே மருந்திஞேடு வெடித்தவாய் தைலஞ் சேர்த்து, தூண்டிய நாதம்விந்திற் சொக்கிய மருந்து கேளு, பார்த்திந்த திகைப்பூடெட்டும் பாஷாணஞ் சுடலைக்கெஞ்சா, மாத்தென்ப திதற்கோயில்லை மாய மாம் பொடியிதென்பார். 59

ஆக்கிய தூளைநீதா னடக்கிடுகுடுக்கைசெப்பில்
தூக்கியசவ்வாதுசேர்த்து சொக்கியகார்க்காறுலும்
ஏய்க்கவேமுப்பூசார மிருக்கிறதைலஞ்சேர்த்து
ஞேக்கியகூறிப்போட நூதனந்துடருவாரே. 60

துடருவோர்மாடானுலுஞ் சூட்டியவாளானுலுந்
துடருவார்வெகுதூரத்தில் துலைந்தவரோடினுலும்
துடருவாருன்னைத்தேடி சேருவாருனக்குப்பின்னைத்
துடருவாயுருவில்மாதர் சூட்சமாங்குழந்தைதானே. 61

அஞ்சனமை.

நானெனுநாதவிந்து தயிலத்தாலுறுங்காமத்து
நாலையுஞ்சேர்த்துதாக்கு முடன்படும்வரிசைமின்னு
மானிலத்திருந்தமன்னர் வைத்தமாநிதியுங்காண
தானரவனிஞ்சிவித்து தகரைவித்துடனுமீதே. 62

இவடமாஞ்சுடலைமீதே வெரிகரியிறக்கிக்கொண்டு
அவடமேதுணையென்றந்த வளிஞ்சிலுநகரைவித்துங்
கசடமேசொல்லவிட்டு கரிமுகன்கரியுங்கூட்டி
எவடமேழுப்பூனுகத் திசைந்தமைபோட்டுப்பாரே. 63

போட்டுப்பார் பகலானாலும் பூவைபா லிரவானாலும், ஆட்டுப்பா ரிதுமையாட்டு வாண்மையுமாண்மையாகும், கூட்டுப்பார் தன்மையர்க்குங் கோனெனப் புதுமை கையாம், ஈட்டுப்பார் கிடாரந்தோணும் வெட்டுவதென் பேர் காணே. 64

வெட்டுண்டரணம்போலாக விந்தூருமல்குற்மையிற்
றட்டுண்டுகிடந்தமையை தாங்குவாருண்டோநாட்டிற்
கட்டுண்டாரடியுமுண்பார் காசினிமையல்லாமற்
பிட்டுண்பார்தன்னுநெஞ்சு பேதலித்திடுவார்பாரே. 65

ஆமென்பார்பரமோயென்பா ரதடமேதேரினாலே
காமப்பால்கன்னமென்பார் கடிதடயோனியூருஞ்
சோமப்பாலாயினுதந் தொடையடிவாழைஎன்பார்
ஆரப்பாவரியப்போரா ரகஸ்தியர்குருசொற்றனே. 66

குருவெனக்காகிவந்த குகன்றனையீன் றவீசன்
கருவெனக்குரைத்தாரிந்தக் கருவிலேமாற்றக்கேளு
கருகெனும்விந்துவாண னனங்கனும்காணுமற்றை
முருகனுங்காமரூபி முண்டைக்கண்ணுந்தைபித்தும். 67

புத்தியிலா தருத்தபூனை பெருமணி கருக்கனோந்துர், புத்தில்வா மூரந்தைசாரி பொடித்திடு மைபோலாகும், மித்தனை பாடஞ்செய்து விதைச்சேர்த்துத் திலர்தந் தீட்டி, யெத்திலே புனைந்திருக்க யெடுக்கலாம் பிறர் பெண்ணுமே. 68

நாளென்ன மருளூமத்தின் விரைபச்சை கண்டிடு வோம், நாளாமென்னதைலம் வாங்குவரைமற் றருந்தி னேடு, காகம்விழியுங்கல்லுங் கையான்சமர்த்திலாந்தை, யாமென வரிந்துகொண்டே யதற்கப்பாற் றிலதம் போடே. 69

போடென்று யீசன்றானும் பூட்டினு ருமைக்குமப் போ, நாடென்று வுமையாமன்னை நயனத்தைத் தூண் டிக்காட்டச், சாடென்று உலகத்தோர்க்குத் தான் சொன்ன வைதீகமார்க்கம், பாடென்று நினைக்கவேண் டாம் பட்டவன் பிழைப்பான் பாரே. 70

கருங்கோழி.

பிழைக்கவே கோழியொன்று பேசுவேனுலகத்தோர் க்கு, வளைக்கவே கோழியொன்று வால்வெள்ளை கருப்ப தாக, தழைக்கவே தன்னைப்பெற்ற தாயதுவகற்றும் போது, பிழைக்கவே விடாதேநீயு மெடுத்ததை வள ர்த்திடாயே. 71

அதுவதுகறுத்தகோழிபெட்டையாயிருக்கவேணும், அதுவுமே குடிக்கப்பண்ணி வைப்பதற்கிறையேதென்னில், எதுவுமே யெனைவையாதே யெத்திலேயொன்றே பூட்டி, பொதுவுமா யரிதாரத்தை பொசிப்புட னிறை யைவையே. 72

வைத்திட்டு திட்டம்பண்ணி வளர்த்திடுங் கோழி தன்னை, ஒற்றையிற் கூடுபோட்டு வொன்றொன் றடக்கி வைத்த, பத்திர மாகத்தானே பருவமாய் வளர்க்கும் போது, முத்தின பருவம் பார்த்து முற்றத்தில் விட்டு கட்டே. 73

கட்டினார் சாவல்கண்டு கன்னிமேல் பொலியுமட்டும், முட்டமா யினத்தோடேதான் முற்றத்தில் திரியும் போது, கொட்டையே சூலாம்நாளில் கோதுமெய்க் கோழிபேடை, விட்டையே நாடுமுட்டை விடுமப்போ கண்டுகொள்ளே. 74

கொள்ளென்று முன்னேவிட்ட குக்கிடந்தண்டம்வேரே, விள்ளென்று மூன்றுநாளில் விட்டுதே கோழி முட்டை, விள்ளவே நாலாம்நாளின் முட்டையும் வேறே வையே, தள்ளவே யைந்தாம்நாளும் தடையற வைத்துப்பாரே. 75

மஞ்சள் முட்டை.

வேறென்ன வப்பாலிட்ட முட்டைக ளெல்லாமென்று
ஞ், சேரவே யடக்கிவைப்பாய் வைத்தபின் சேதிகேளு,
கூறவே முன்னேவிட்ட குக்குடக் கருவிதன்னை, மாரவே
சவ்வீரத்தை வாங்குவாய் களஞ்சிதானே. 76

களஞ்சியாம் வீரத்தோடே கருவிட்டு வரைப்பாய்
சாமம், வளஞ்செய்து வழித்துவில்லை வட்டமாய் தட்
டிக்காய்ந்தால், உளஞ்செய்து காட்டையொன்று வுற்றது
சுண்ணமாகும், உளஞ்சதாம் பரத்துட் டொன்று யுரு
கையி லணுவாய்த் தாக்கே. 77

தாக்கவே யெட்டுமாற்று தப்பாது தரணியோர்க்கு,
மூக்கமாய் முன்னேயிட்ட முட்டையி னிறமேமஞ்சள்,
பார்க்கவே கருவில்ரெண்டும் பச்சையுஞ் சிவப்பதாகும்,
கார்க்கவேமுட்டைக்குள்ளே கன்னிமுன்கருவைவாரே.

வார்த்தபின் றுதம்விட்டு மன்னவன் கருவும்விட்டு,
தீர்க்கமாம் சரிபிரட்டி செடியுட னிலையரைத்து, பார்த்த
பேர் சிரிக்காவண்ணம் பகர்முட்டை வாயைமூடி, துற்ற
கஞ் செய்யாதே கீரைவித் துழக்குவாங்கே. 79

வீரசுண்ணக்கீரை.

வாங்கியேயரைத்துவுள்ளே மைந்தனேநாழிபோலும்
ஓங்கியேகுழியைக்கெல்லி வுழக்கிலேபாதிவித்தை

நீங்கியேகுழியிலிட்டு நிறுத்திடுதன்மேம்முட்டை
தாங்கியேபாதிவித்தை தட்டியேமுட்டைமூடே. 80
மூடுவாய்மணலைவிட்டு மூக்கினங்குழியின்மீது
நாடுவாய்தினமூன்றுக்கு நறைநிறைமூரிகொள்ளு
வாடுவாய்நாற்பதாநாள் மண்டலஞ்சென்றுதானற்
கூடுவாய்குழிதிறந்து குக்கிடமுட்டைபாரே. 81
பாரென்றுமாயாசித்தி பண்ணியகருவுமாச்சு
வீரென்றுசூரன்பாடும் விதவிதங்கண்ணிற்றோன்றும்
ஆரென்னசொல்லுவாரோ வவ்விதமாடச்செய்யும்
பேரென்னபஞ்சபட்சி யுருவம்பட்சணியென்பீரே. 82

பஞ்சபட்சணி.

என்பதுமுதற்சாமத்தி லிருந்துண்ணுவல்லூறேயாம்
அன்பதுரெண்டாஞ்சாம மலைந்திடுமாந்தையாகு
உண்பதுமூன்றாஞ்சாம மரசதுகாகமாகுந்
துன்புறுநாலாஞ்சாமந் தூங்கியேகோழியாமே. 83
ஆமெனிமஞ்சாஞ்சாம மசாத்தியமயிலைபோலாம்
காமனரிலையைக்கிள்ளிற் கடுகெனவெதிரிசாவான்
பூவனவாழுவைப்பு புலிங்கினலாசைசெல்வீர்
ஓமென்மேல்வல்லூராகு மோங்கியபெருமைமஞ்ஞை.
மஞ்ஞையைவிட்டாலாந்தை வருந்தியகாயப்பூடு
விந்தையையறிந்தாக்கால வித்தைகளெல்லாமாடும்

பிஞ்ஞுகன்வென்றப்பூடு பெண்ணடிமூடிவேரு
மஞ்ஞைஎன்றிருந்திடாதே மன்னத்தின்கருவிதாமே.

கருவென்ன வுண்டபட்சி கவர்ந்ததேகாமமாடு, முரு வென்ன மூரங்கும்பட்சி மோதவே பிசாசையோட்டு, பருவமாய் நடந்தபட்சி மூலியே வாதமாடும், குருவெ ன்ன காகபட்சி யரசெலாம் கொல்லச்செய்யும். 86

செய்யவே செத்தபட்சி செப்பிடு வித்தையாகு, மெய் யவே வேளையைந்து முருவமூலிகையுஞ் சேர்த்தால், ஐயையோ வித்தையென்ன வற்பமாங் கற்றோர்க்கையா, பொய்யல்ல பின்பிருந்த பூசையின் கருவைக்கேளே.

பூசையிற் காமப்பாலாம் பூவினில் வேறொன்றாகா, ஆசையாய் நீயுங்கொள்ளு வாண்டொன்றுக் குள்ளே யுன்னை, தேசிகனென்பார் மாந்தர் செய்தொழி லெல் லாஞ்சித்தி, மாசிலா முத்தியெய்து மச்சமா முனியென் பாரே. 88

மச்சரெண்ணூயிரத்தை வாசித்தாரிதுவுமெந்தன்
பச்சனிநூறுங்கூட்டி பார்த்தபேர் கருவைச்சொல்வார்
அச்சமில்லாதேயாடு மாயிரத்திருநூறுக்தான்
வச்சமில்லாதுநீதா னூலுள்ளோரடியைப்போற்றே.

போற்றுவாயெந்தன்பாடல் பூரணச்சந்திரவாலை
ஏத்தியேதண்டத்தாட்டு மின்னமும்நன்றாய்க்கேளு

கூற்றுவனெதிரில்வந்தாற் குதனையமறியாவண்ணஞ்
சாற்றுவார்யென்பேர்செப்பி சாற்றியநாமஞ்செப்பே.

செப்பியவித்தை.

செப்பியசெப்பைமூடி ஸ்ரீமசிகசியென்றேதான்
உப்பியஒருவேர்தள்ளி ஓமத்தில்வாமஞ்சொல்லி
செப்பையுமவனிருந்த திசையையும்நோக்கிப்பாரு
வயப்பட்சியிவைசெய்யாதே யண்டமாரணஞ்சுருக்கே.

ஸ்ரீகளுக்கும், மிருகங்களுக்கும், விஷத்துக்கும்.

சுருக்கடாவழைப்புவித்தை தோகையர்வருகவென்றால்
நெருக்கடாதிருந்தசெப்பை நீலியோகினிவாவென்று
உருக்கடாதுகைதானந்த வுத்தாயிநாமத்தோடு
சருக்கடாமகளார்நாமஞ் சாற்றிவாவென்றஓதே. 92

ஓதவேதிருகுகள்ளி வுப்பைமோதிரத்திற்போடு
மாதுதான்வருவாள்பாரு மலையில்வாழ்மிருகத்துக்கு
தீதருஞ்சூரியவேரை செப்பில்மோதிரமாய்வைத்து
ஆதிநாள்நாற்பதானு லதையுந்தான்கையிற்போடு. 93

போட்டகைகாட்டிலெந்த புருஷமாமிருகம்யாவும்
நாட்டமாம்பேரில்நாமம் நலங்கிடவருகில்சேரும் [தை
போட்டதேபோவென்றுக்கால் தொடுத்திடுமோதிரத்
காட்டவேபின்னுமேவுங் கழற்றினைசெப்பினுனே. 94

செப்பிலேநங்கைவேரை சிறிதுநான் ஒட்டில்வைத்து
செப்பதாங்குளிசம்பண்ணி தீயிடமசிநங்கென்றால்
செப்பவேவிடங்களெல்லாஞ் சீக்கிரமாண்டுபோகுஞ்
செப்பவேநங்கென்றோதி சிவஞ்செய்துவிஷகல்நாட்டே

நாட்டியசொல்லுக்கீழே நங்கைவேர்குளிசம்போட்டு
நாட்டியநாற்பதாளுள் நங்கென்றுலட்சமோதி
நாட்டினகல்லுதொட்டால் நறுக்கெனவிஷமேமீளும்
நாட்டினில்விஷமேயில்லை நமனில்லைஇல்லைதானே. 96

இல்லையேவிஷங்களேறி யிறந்திடும்பிரேதந்தன்னை
கல்லையேமுட்டித்தொட்டிற் கடுகெனவிஷங்களோடும்
பல்லரும்பூண்டுசெத்த படுவிஷமவசமானால்
எல்லையில்கொண்டேபோட வெழுந்திடுவான்பாரே. ()

பாரடாமூன்றுநாளில் பருவிடங்கொண்டால்மீளும்
பாரடாநாலாளிற் கறைவிடமெல்லாமீளும்
ஆரடாமைந்தாளிற் சில்விடமீண்டுபோகும்
ஊரடாவுயிருண்டானால் உடல்விஷங்காணுதோடே. 98

ஓடியவண்டவித்தை வுன்னியதெல்லாம்பார்த்து
தேடியயிரண்டாமண்ட வித்தையைசெப்பக்கேளு
நீடியகரும்பேரான நிறமதுக்கானநீலம்
சாடியேயிருக்குமுட்டை தனக்குசவ்வீரம்போடே.

கருத்தண்டம்.

வீரமாஞ்சினம்பூரம் விட்டடைச்சாணிகொண்டு
சாரமாம்விந்துவிட்டு சாணத்தாற்பொதிந்துகார
மாரமாம்ரவியிற்காய கதிரவன்பூதஞ்சேர்நாள்
பாரமாமச்சஞ்சிப்பி நீபதத்திருநீருக்கே. 100

ஆக்கியமுட்டைதன்னை யந்தநீருடனேசேரு
தாக்கியபின்னூர்கோவட் டண்ணிச்சேநீறுவிட்டு [போ
நோக்கியேபறைத்துருட்டி நுணுக்கமாய்த்தேங்காயைப்
லாக்கியேவுலர்த்திப்பின்னு மாவாரைவிரகுத்தீயே.

தீய்த்திடவுண்மைநீரிற் செப்பிலேவைத்துக்கொண்டு
சாய்த்திட்டசிதம்பரத்தைக் கக்கிஷமேழுநாளுஞ்
சாய்த்திடக்குகன்பேரான கண்முகநாற்பத்திரண்டு
வாய்த்திடநவகோணங்கள் வரைந்திந்தக்கன்மமாடே.

கன்மங்களாட்டிப்பாரு கைவல்யம்நிசமோபொய்யோ
வன்மமோதீபிடித்து மாடங்கள்வேகும்போது
தன்மமேநீற்றையள்ளி ஸ்தம்பனஞ்சென்றுவோதி
மன்மெனவீட்டிற்போடு பத்தித்தீயெரிந்துபோமே.

போனதீமீளவென்றூற் புதிற்றிருநீற்றையள்ளி
மோனமாம்முக்கோணத்தில் மூவிரண்டரையைவிட்டு
ஏனமாம்வீட்டிற்போடு யிடுகாடதாகவேகும்
மானமாமாதாகற்பை மயக்கவேநீற்றையள்ளே. 104

அள்ளியேநீற்றினுள்ளே வவணியங்காற்றுக்கீறி
வெள்ளியிற்பதியவேளைமென்னகைப்பேரைச்சொல்லி
கள்ளிநீவருகவென்று காமனைநோக்கும்போது
துள்ளியேயோடிநாடி தோகையுந்தொடருவாளே. 105

துடருவாளுமத்தஞ்சாறுந் துடிந்துகைபூட்டின்றாளு
மிடரில்லாநீரிற்சேர்த்து மிதத்திலேயெவட்காணுலும்
படரிதுவென்றிடாமற் பட்சிகளெதற்காணுலும்
திடமுடன்சீட்டிற்பூசி சேதியாயனுப்புவாயே. 106

அனுப்புவாயாளுக்குமே யணுவளவாகப்பூசி
தனுவுறனுவப்பும்போது சாத்திகஞ்சீட்டுசெய்து
அனுகுறையாமலேவா னட்சரம்பிசகான்பாரு
மனிதனுயுந்தன்சீட்டு வகைப்படிநடப்பான்பாரே. 107

நடத்தியகளரிக்கூட்டி நாடியேவாடும்போது, உளத்தியநீற்றைப்பூசி வுன்னுடல்மனிதர்க்கெல்லாங், கனத்திலே வெட்டப்போற கடும்பகைதொழிலாளுலுங், திடத்திலே செய்வானென்ன செப்புவாய் களரியெல்லாம்.

எல்லையாம்விடக்கல்நாட்டி யிருகமுன்னீற்றையள்ளி, தில்லையாம்பாலிற்றேய்த்துத் தீய்ந்தபின்னெதிரிமீதில், நெல்வினுடைள்ளிவீசு நிமிஷத்தில் மசிநங்கேற்று, கொல்லவே யெமன்வேறுண்டோ கூற்றுவனீறிதாமே. 109

நீறிலேவட்டமிட்டு நெருக்கென வாறுமூன்றில், கூற
தாய்க் கீறிக்கொண்டு குவலயத் தரசர்சேனை, மீறினால்
மசிநங்கென்று வீசுவாய்ப் படைமேல்நீற்றை, மாறுவா
னெதிரில்தோற்று வாங்குவா னோட்டந்தானே. 110

ஓடியேபடையடக்கு மொண்ணலாற் கோட்டையெல்
லாந், தேடியேமீறிப்போகுந் திருநீறுகண்டபோதே,
மோடியேசெய்யும்போது முச்சந்திநடுவோருக்கே, நாடி
யேநீறுகொண்டு நயமுடன் வரைந்திடாயே. 111

வரைந்தறுகோணமிட்டு வட்டமுக்கோணமிட்டு, வி
ரைந்தொருபணத்தைவைத்துவெளியிலேவானைநாட்டி,
திரைந்தொரு குத்தித்தீர்ந்த தேவர்பூங் கும்பமீது,
வரைந்தந்தமாதுவைநீ வைத்துருவேற்றிடாயே. 112

எத்திநீ யிருந்துகொண்டு எதிரியை எடுக்கச்சொல்லி,
தோற்றவன் போகாவண்ணந் துடுக்கதா யெடுக்கவந்
தால், கூற்றுவனீற்றைமாறி குறிப்பட னெரித்துநில்லு,
நீற்றிலேயெதைவிட்டாலுநிமிஷத்தில் அடிக்குமபாரே.

அடிப்பதுமாடனேவ லைந்நூறுபடையைத்தாக்கு, பி
டிப்பதுயமனுமேவல்பிடிக்குராங்குருவாய்வெல்லு, நடிப்
பதுகாளியேவல் நவின்றசொற்படியேகொல்லுந், துடிப்
பதுக்கெவர்விட்டாலுஞ் சூரையிட்டாடுந்தானே. 114

ஆடியபேரையெல்லா மவன்தள்ளிவருவானாகில், கூடியவாளைவிட்டு துணியென்றுபிடுங்கிவீச, நாடியகண்டதுண்டம் படுத்திடுமுடைவர்தானும், பாடியசடையின் மீதில் பட்சணிகருவைத்தானே. 115

தூக்கியேவாள்தம்பித்துச் சுருக்கதாய்வருவானாகில், தூக்கியகுத்துமீதில் சாம்பலையள்ளிப்போட்டு, தாக்கிய தரணிபேர்கள் சதாகோடித்திலுக்குள்ளே, தாக்கிய மன்வெளியிற் றன்மைப்போலவேஆண்டுபாரே. 116

சாடியே வெளிமுழக்கஞ் சட்டுபட்டென்று ஓசை, நாடியே சபையெல்லாந்தா னொடுங்குவார் பயப்படுந் தான், கூடியேமயானருத்ர கூட்டம்போற்கண்ணிற்றோனும்,வாடியேயெதிரிதானு மரணமாய்விழுவார்கேளே.

கேளடா வவன்சாகாமற் கிட்டினாற் குத்திக்குள்ளே, கேளடா ராமபாணம் குபீல்குபீ லென்றுசாடும், பாலடா போகாதப்பா படையெலாம் குரங்காய்த்தோனும், நாளடா வவனுந்தோர்ப்பா னம்படை வெற்றியாமே.

வெற்றியு மவனேயாகில் விருதுகள் பேசிக்கொண்டு, பற்றியே பணத்தைவாங்க பயமற்று வருவானாகில், தத்தியே நங்கென்றோதி தாக்கிடு குருவெண் ணீற்றை, முத்தியே காலன்வந்து முடிச்சாவு பிணமாவானே.119

மாளவே விதியில்லாமல் வந்தவன் பணத்தைவாங்கி, மீளவே பேரவானென்று வினவியே யதற்குமுன்னே, காளியே வாவென்றேத்தி கைதனிற் பணங்கொண்டப்பா,சூழவேபோடச்சொல்லிசுருக்கெனவுரைத்திடாயே.

உரைத்தசொல் வேருள்காளி உன்னிடகருவினால், திரைகடற் கப்பாற்செல்வான் தேசத்தார் காணத்தானே, வரைக்கண்ட வாலையுந்தன் வாயுரைப் படிசெய்விப்பாள், இரைச்சலாயெதிரியந்த நிமலியைக்கண்டாற்கேளே. 121

கண்டவனினைப்பானாகிற் கண்கெடுமவனுஞ்சாவான், விண்டவன்றுடர்ந்தால்நீயும் விபூதியையள்ளிவீசு,துண்டமாய்விழுவான்வேறே சோலிகளில்லைபாரு, வண்டமாநிகர்ச்சித்தப்பா வாயிரத்திருநூராமே. 122

நூறெனுங்கருமமெல்லாம் நொடியினில்வாட்டுமண்டம்
நூறெனும்பணத்தைக்கொண்டு நேக்கினதாளிதன்னை
நூறென்னவாவென்று நவிலவேயுந்தன்பக்கல்
நூறென்னவந்துசேர்ந்து நேக்கியேபணமீவானே. 123

ஈவதையாருங்காண்பார் இந்திரஜாலமென்பார்
மாய்ப்பட்டபேரைவா வென்றுசாம்பற்றூவிப்
பேய்வதைப்பட்டபேரும் பிணவாதைப்பட்டபேருஞ்
சாவதைப்பட்டபேருஞ்சாம்பலாய்ப்பிணைப்பார்காணே

காணவேமுன்னேசொன்னமோடிக்குக்கருவேவேணும்
தோணவேசாலமீதிற் சொன்னதுக்கிதுவேவேணும்
வீணல்லவண்டநீறு விருப்பொடுசுருதிகாணும்
ஆணுடன்பெண்ணுஞ்சேர்ந்தா லாடலாமருமைதானே.

அருமையா மிந்தநீற்றி லானைபோ லாகச்சீறி, பெருமையாய் நமசியென்று பெருவெறு சிகாரஞ்சேரில், யருமையோ வவன்சாகானே வக்கினி யாரிற்சேரில், உருமையின் மார்க்கப்போட்டு ஒருவொளி வொதுக்கி யோடா. 126

ஒதுக்கியே வரிவைவிட்டே னுலகத்திற் கொடுமை மெத்த, வதற்கிது சரியென்றுற்போ லரன்சொன்னு டாத்தாட்கப்பால், புதுக்கிநீ பிழைக்கச் சொன்னேன் பூதலத் திற்குச்சொன்னே, மதுக்குடி வெரியுமீறி மாளவே சொன்னேஞ் சொல்லே. 127

சொல்லிய துரையைவிட்டு திரும்பவோர் துரையைச் செய்து, சல்லிய நூறுபார்ப்பார் தண்டகக் கருவே தென்பார், பல்லியநிதம்பூத் தென்பார் பாம்பையுந் தொடியாரைவர், னெல்லிகை யிருக்கனெல்லிப் பஸ்ப மென நினைத்திட்டாளே. 128

நினைக்கவேவேண்டாமுட்டை நிகழ்த்தியவீரம்பூரம்
நினைக்கவேசீனகாரம் நிகழ்த்திடவண்டத்தெண்ணெய்

நினைக்கவேயறவுநஞ்சு நேர்கொண்டுவாயைமூடி
நினைக்கவேயளிஞ்சிவித்து வுளக்கெண்நினைத்திடாயே.

நினைக்கவேநாழிகொள்ளுங் கலசத்தில்நிறுத்தியண்ட
மலைக்கவேவேண்டாமிந்த வழிஞ்சியால்வாயைமூடி
மலைக்கவேதாளிக்குள்ளே வடித்துளையிட்டுவைப்பால்
துலைக்கவேகலசத்துக்குந் துணைவிடாதுளைக்குநேரே.

நேரெனுங் கலசவாயை நேர்பட வோட்டால்மூட,
மோரெனு மிடாவுக்குள்ளே வெளியிலா தெருவடிக்கி,
தூயன்வாய்க் கீழேதோன்றி தொகுத்தொரு கலசம்
வைத்து, சீர்பெற மிடாவுக்குள்ளே தீயிட்டு மேலே
போடே. 131

வெண்பா.

மூடியகுளித்தைலத்தோடே குமரிமுன்னாள்
கூடியளித்தைலஞ்சேர் விட்டாட்டி-நாடிகனிக்
கொம்பிலேயிருந்ததென்றே குறியிதுநாணுன்பாரு
செம்பிலேசென்றுற் சிவக்கும். 132

சிவக்குமேபிள்ளாய் திருவேகமாஞ்செயநீர்
சிவக்களிக்குந்தண்ணீர்க் குடமுடைத்தால்-தவத்திலே
எட்டெட்டறுபத்து நாலுசரக்கையுந்
தொட்டிட்டாலேமெழுகுஞ் சொல். 133

சொல்லடாமுட்டைச் சுகத்தையிலத்தோடேநீ
கொல்லடாதண்ணீர்க் குடத்துநீர்ப்-புல்லடா
வெள்ளியிலேயிட்டுப்பார் வேதைபதினுறுகுந்
துள்ளியெனவாகுமெனச் சொல். 134

எனச்சொல்வோனினத்தோ டெனச்சேர்ந்தால்வங்கந்
தனைக்கொல்லவேணுமொருதாபமோ-பனைப்பல
காரியத்தோடே கருத்துள்ளிவிட்டால்
வாரிநீர்வற்றும் வகை. 135

வகையென்னவெள்ளியது பதிதாஞென்றுக
துகையென்னபித்தளையிற் றுள்ளுவார்-நகையென்ன
பண்ணுதற்குவேறுபொன்னைபார்க்கணுமோ தட்டானை
நண்ணுதற்குவொன்பதரை நாடு. 136

நாடுமேலோகம் நவிற்றிருசெம்பாக
மோடுமெப்போ தொருவயலுந்-தேடுமே
இரும்பாகுஞ்செம்பை ஈசனெடுத்தலவோ
துரும்பாகுங்கைது ணுக்கினன். 137

துணுக்கிவெங்கலத்திற் பொன்னுக்கியென்குருவுஞ்
சாணுக்கியேவது தானுகும்-கோணு
குயிலிவந்துருக்கிடத்திற் கூண்டவிந்துமுப்பூவு
வயலிவிந்தில்வெள்ளீய மோடு. 138

ஆட்டிடவோவெள்ளி பதுமாற்றருபதின்கால்
கூட்டிடவேகாணுங் தூரிசினிலே-நாட்டிடவே
காடையோங்குநீர் காணுமேயன்னீரை
தேடியங்கேகிட்டுமோ செப்பு. 139

செப்பிலேநீலகண்டா திருநீற்றிருக்கையிலே
வைப்பில்வேறேதுகாண் மானிடரே-உப்பினிலே
யிட்டிருக்கிப்பார் யீசனார் தன்னாணை
பட்டிருக்கியாடும்படி. 140

படியுப்புகாட்டப் பருமணியாய்க்கோர்க்க
முடியுப்புமுப்பூ விதென்பார்-அடியுப்பை [ரைக்
யண்டமென்பார் தொட்டாட்ட வாதிதொடுத் தன்னவ
கண்டமென்பார் விண்டதுண்டோகாண். 141

கருமுட்டை.

காணவேமுணுங் கருங்கோழிமுட்டை
தோணவேகேளுமினிச் சொல்லுவேன்-நாணமேன்
முட்டைக்கருப்பாரு முட்டைக்கருவிரண்டு
தொட்டமஞ்சள்கருப்புஞ் சூடு. 142

சூடுமுட்டைக்குள்ளே சுந்தரியாள்கெந்தகத்தை
போடும்விராகனிடை போட்டபின்பு-கேடுகெட்ட
கள்ளிமேழுகாலடைந்து கள்ளிமுட்டையைதுளைத்து
உள்ளேவைத்துமூடடா யுகந்து. 143

உகந்ததும்நாற்பதுநா ளொருத்தாலேயேற்று
செகந்தனிலேவண்டந் திறந்துபா-றகந்தையோ
கெந்தமுட்கருவு கெட்டியாய்க்கட்டுபடுஞ்
சந்ததமேசென்னீரிற் சார். 144

சாரித்தரைத்துமைபோ ருனுருட்டிவில்லைதட்டி
பாரித்தசட்டியிலே மானுபுடம்-பூரிக்க
காயவைவில்லை கலசத்திற்போட்டிடும்பாற்
றீயிலேவைக்கச் சிவக்கும். 145

சிவக்கவேசெந்தூரஞ் செப்பிலிட்டுமப்பால்
துவங்குவாய்செம்புருக்க வப்படுவக்-களவில்
பாதியிடுசெந்தூரம் பட்டபொழுதுசெம்பு
சாதியிடுமொன்பதரைச் சொல்லு. 146

சொல்லவேகுட்டஞ் சொரிசிரங்குகாமாலை
கொல்லவந்த வஷ்டகுன்மமெல்லாம்-வெல்லமதிற்
கடுகளவேகொண்டாற் கரையறிந்தநோயெல்லாம்
படுமுனமேதூரப்போம் பார். 147

பாரீர்திரிகடுகிற் பாச்சிறுல்வாதமென்ப
தாராதாபாண்டு மாறுமேதா-யூரே
இருக்கின்றபண்டிதற்கு இன்னமொன்றுகைமருந்து
நரிக்குண்டுபண்ண வல்லோ நாடு. 148

நாடுநருநெய்யில் நலமுடனேயுண்டாலுஞ்
சூடுவருமோ மேகத்தோடுமே-பாடு
வருமோஇயமன் வருவானோநோயை
தருமோவயித்தியனே தான். 149

தான்றிக்கா தூளிலிட க்ஷயம்வருமோகொள்ளவுமே
மூன்றுக்குள்ளேபார் முகடேறத்-தான்றி
மாய்க்காய்போற்கடுக்காய் மாட்டினாற்றெண்ணூற்ரூறு
னேப்க்கப்போவாதோ நூல். 150

ஏங்காரபரக்கர் திருபொழுதுசீக்கிரத்தில்
வாங்கானசீனியிட்டு மண்டினால்-தேங்கிற்றே
மந்தாரகாசமுதல் வாய்வுக்ஷயபீனிசமும்
பிந்தாதோவஷ்டகுன்மம் பேசு. 151

பேசுமீருள்ளிபெருக்கஞ்சாற் றேடுகொண்டா
லாசுவருமோகற்ப நாராதோ-தேசத்
தறியாமற்கற்பார்க்குமோ வானந்தவாய்வும்
பறியுமோபட்டைப் பொடியில். 152

பட்டையேவெள்ளைப் பரங்கிவைப்புப்பாஷாணம்
கிட்டுமோகிட்டினா றகழிமேல்-கெட்டி
கதலிச்சாறூட்டி கடுகளவுசெந்தூர
முதலிப்பாயசுத்த மெழுகு. 153

சுத்தமெழுகானாற் சோகியென்னப்பாரும்
பித்தளையுஞ்செம்பும் பெருக்கமா-பித்தளையே
எள்ளத்தனைமெழுகை யிட்டுப்பார்மாற்றதிகம்
கொள்ளத்தகுமோ குறி. 154

குறியென்ன தாம்பரத்தை குடக்கரியில்வைத்து
வுருகையிலேஎள்ளளவும் வுண்ணினால்-மருகவெள்ளி
பத்தரைமாற்றுள்ளப் பாரிலோவுண்டோபார்த்
தந்தமாஞ்சென்றாலுந் தான். 155

சென்றாலுமிந்தவகை செப்பற்றிருவிழியாற்
கண்டாலுங்கொள்ளார் காசினியில்-விண்டான [த
மாயவித்தையீதென்பார் வறுமைவந்தாற் பெற்றெடுத்
தாயைவிற்பார்தன்பசிக்குந் தான். 156

பசிக்காதவித்தை பயில்வார்கள்நஞ்சை
பொசிப்பார்கள்வேண்டதுபோற் பொய்யை-ருசிக்காக
மண்ணையுண்டபிள்ளை மாதாவின்பாற்குடித்த
வெண்ணெயுண்டகாதை விளம்பு. 157

விளம்பவேநாலாம் விதையீன்றமுட்டை
குளம்புமேனிக்கொளுத்த வெள்ளை-உளப்புகுந்த
மஞ்சட்கருகசப்பு மாராதுயிந்தமுட்டை
நஞ்சைச்சுவைத்தற்கு நாதம். 158

இறக்கிவீரத்தை இல்லையென்றுபண்ணத்
துறக்கவடக்கவகைச் சொல்வேன்-பறக்குங்
கெருடன்முட்டைரெண்டுடனே கெட்டியாயிந்தப்
புருடமுட்டை யொன்றையுமோ பூட்டு. 159

பூட்டுவாய்மூன்றும் புறம்புறம்பாகக்
கூட்டுவாயொன்றிற் குளிர்காசம்-மூட்டுவாய்
பாஷாணமொன்றிலிடு பார்வதியாள்கெந்தகத்தைக்
கூயாமலொன்றிலிட்டுக் கொள். 160

கொள்ளவேமூன்று குழலுமெழுகாலெடுத்துக்
கள்ளிலொன்றிலிட்டு கடக்கரெண்டு-கிள்ளி
குளித்தைதலமொன்று கூசாமலொன்றை
வழிப்படாமையாகிவிட்டு வா. 161

வாடாமைகெந்தி வளர்பாஷாணத்தைதலஞ்
சூடாமணிக்கள்ளை சூதமுட்டை-யீடான
வெண்ணீறையெடுத்து மேல்வகைக்கட்கள்ளியிட்டு
யெண்ணியைந்தாநாளி லெடும். 162

எடுத்தமுட்டைனீரினி லிரட்டுக்காய்ந்தால்
அடுத்தயெரியீட் டலைப்பண்ணி-யுடுத்த
கரிமூலம்நிறைந்த சுட்டவெண்ணீற்றை
பரிசனமாய்வைப்பாய் பதனம். 163

பதனமடாமண்ணூளியின் பாம்பிருதலைமணியின்
இதமுடனேரெண்டையுமே நிறுத்து-சதமுடைய
பாண்டமிட்டுமூடி பாஷாணமுட்டைவைத்துக்
கூண்டுகுளித்தைதலங் கோது. 164

கோதுத்தைதலமொரு குப்பிதனிலடைத்துச்
சேதிசொல்லக்கேளு சிவகாமி-நாதமெனும்
கெந்தியிருந்த கெட்டியாயந்தநெஞ்சிற்
பொந்திலுள்ளேவைத்துப் பொதி. 165

பொதிந்துகட்டியேசிறகை பொக்கிபுலர்த்திப்
பதிந்ததுகட்டிதன்னுள்ளே பாவித்து-விரிந்த
முக்கவரிலேற்றி யெரிமூட்டிகரியதை
கொக்கரச்சார்மையைக் கூட்டு. 166

ஸ்ரீவசியம்.

கூட்டுதேன்கரியைக் கொக்கரைவாள்சாற்றால்
ஆட்டியரைமைபோ லாகுமே-நாட்டினிலே
விஷந்தீண்டிசெத்தால் விஷந்தானிம்மையைச்
சுகந்தீண்டிக்கண்ணிலிடுங் காண். 167

காணவேயோடுங் கடுவிஷங்களெல்லாம்
பூணவேவெண்ணீற்றைப் பூசினால்-காணவே
தைலமதைவுச்சியிலே தான்தேய்த்தாற்சேதம்
மயில்வருமோகண்டுமி தாமே. 168

திருமந்திரம்-வேறு.

தாமெனவேமையைச் சோமனிலேபூண
மாமணங்கள்போல ஜாமம்வருவாளே. 169

வருகஸ்ரீயென்று திருவுளவெண்ணீற்றை
இருமுறையில்வீச திரும்பமடிவாரோ. 170

மடிவெனும்பசாசு படிவெலாமுசாவி
அடகினில்கரியை வீடுதனிலேயும். 171

தீயெனயிக்காரம் பேயினிடமோதம்
மாயமும்வெண்ணீறும் தூயசமுதாயமே. 172

தாமிதமிருதே காமியுடபாலே
நேமியடையாலே சீமைவிடுவாயே. 173

வாயினிலேதீயை தீயினிலேவாயை
காயினிலேபூவை பூவினிலேகாயை. 174

காயைவினதீயை தீயவிடுசீயை
சீவவெளிமாயை கோயைவலிவாயே. 175

வலியெனவேகப்பல் புலியெனவேதப்ப
கிலியைகுடுகுப்ப மெலிவதுமெய்யாரே. 176

மெய்வசம்புவள்ளி செய்விஷத்துக்குள்ளே
ஐவிசங்குவேறே தெய்யவங்குளடே. 177

நாடியசிலர்கை ஓடிடவேவரவே
மேடிடவிலாவை யேடுபணிசேரே. 178

சேறுமதியாய வூழிகிலிவேலரைச்
சாருவிதியாரு மூறுவதுபாரே. 179

பாரிவிடுபேசி மேறெனுமேயோகி
காருமருபாகி தாருமாரித்தாயே. 180

மாரிழைபெய்ய ஏரிநிறைவேற
நீரினிலேநீரை பீறிவிடுவாயே. 181

வில்லிசெய்ய தொடுவில்லிகையைக்
கெடுமதிமெய்யோபொய்யோ சடுதியிலேகாணே. 182

காணவேசெய்மண்டை பூணவேமபனண்டை
கோணவேமுன்விண்ட பாணமெனக்கண்ட. 183

கைகண்வித்தை வைகுண்டமெத்தை
கையென்றமெத்தை ஐயென்றுபத்தே. 184

பத்தரிசரிவை மத்தரியநாவை
சித்தரியவெனவு மத்தரியவேசெய்யே. 185

செய்ப்பதனியூடே மைபதியைநாடே
மெய்பேசிவையாதே பொய்யிதுவோபாரே. 186

பாரண்டவிஞ்ஞை காரண்டநஞ்சை
யூரண்டமஞ்ஞை யேரண்டமாமே. 187

மாமரத்தின்காயை பூமரத்தின்பூவை
தீமரைக்குத்தீயை தாமரைகைவையே. 188

வையப்பமோடே கையப்பவாடை
எய்யப்பவாடை டையப்பியீடே. 189
ஈடெரிவுதேனை வாடெரிவுமீனை
கூடெரிவுதானே காடெரிவுதானே. 190
மீனைவைக்கப்பிச்சி மானைவைக்கவிசி
ஞானம்வைக்கயீதா மென்கவலைகேளே. 191
ஏனமதுகூட ஆனமதுவூடே
வானமதுசாட மோனமறனுமே. 192
நாடெங்குமெச்சி ஏடென்றுவச்ச
தேடென்றுவுச்ச மேடென்றுதச்ச. 193
தச்சதுபூரணச் சந்திரவாலை
மெச்சதுவென்குரு மேல்துணையாக. 194
வைச்சதுபங்க மாமலர்மீது
பொச்சுதுவாயிடை போய்விழுவாரே. 195
போய்விழுவாரவர் பொய்யுரைசெய்தோர்
நோய்விழுவாரிது நூல்வழிவாரார். 196
பாய்விழுவார்வசை பண்ணியதீயர்
நாயெனுமோகெடை நய்யகுருவாரே. 197
வாருரைசந்திர வாலைமெய்ந்நூலை
பேருரைசெய்த பெரியோரைநாடி. 198
சீருரைசெய்தொழில் தேருவார்சித்தர்
ஏருவார்திரு நூரிறைமுற்றே. 199

பூரணச்சந்திரோதயவாலை-200 முற்றிற்று.

சிவமயம்.

இருபத்திரெண்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்

வகாரமதிவெண்பா நூறு.

கலிவிருத்தம்.

திகடசக்கரச் செம்முகமைந்துளான்
சகடசக்கரத் தாமரைநாயகன்
அகடசக்கர வார்ந்தொழிலாங்கெழும்
விகடசக்கரன் மெய்ப்பதம்போற்றுவாம். 1

நாயகமென்றேயகத்தி ஞனினைத்தே னகத்தியனென்
வாயில்வழுவாதொழுக வந்தருளும்-பாயிர
மாயுரைத்தவகைநூறும் வகாரமதிவெண்பா
சேயுரைய விந்நூறுஞ் செப்பு. 2

செப்பினேனின்னூறுந் திரளடக்கமைம்பதுடன்
ஒப்புமதிவெண்பாநூ றோதினே-னிப்புவியில்
புத்தியுடையோர்க்கறிவாம் புகலவேயிவ்வெண்பா
சத்தியுரை கண்டவர்க்காந் தான். 3

தானறிவாராயிரத் தைந்நூற்றி னைம்பதனுள்
வானவிணைடைக்கலமாம்-வந்திற்றும்

கரைகாக்குங் கடல்மீனைக் காய்விழுக்காண் பூனை
திரைகாக்கும்வளமதுவாஞ் செப்பு. 4

செப்பும்வைப்புமொய்ப்பு மவைசெய்யநந்தீசர்
அப்புவைப்பக்காட்டினா ரடியவர்க்குத்- தப்பாமற்
கைப்புரட்டைகாட்டான் கண்விழித்தான்முந்நூறிற்
செப்புவைப்பேனென்றது செய். 5

செய்யானுரைத்துவைத்த திரள்கோடி நூல்தனிலுஞ்
செப்பாகமென்ற திறமே-மைமாயக்
காயைத்திணையந்தேனென் காவியத்திற்பரிபாஷைத்
தாயார்விண்டாளெந்தன் சார்பு. 6

சாரப்பொருளிதுவாந் தன்மையதுவாளிதுவாங்
காரப்பொடிபூசுங் காயம்-வாரத்
தாக்கிவிடுமாக்கிவிடுந் தன்சென்மமாட்சியறும்
வாக்கிலிடுமெச்சமென வை. 7

வையமயக்கிவிடும் வாம்புலிமாந்தூக்கிவிடும்
பையப்பையப்பூச்சொரியும் பாவமாம்-மெய்யாகும்
தைபல்துணையாகுந் தார்குழலாள்வாய்நீராஞ்
செய்யவிதின்கூறென் செப்பு. 8

செயலானநந்தீசன் செப்பியநற்சோடசத்தில்
வயல்விளையாம்முந்நூறும் வாய்த்தால்-பலனாகும்

வெப்புக்குடலுக்கு விரிகுடலாமுந்நூறுஞ்
செப்புக்குடல்கும்ப னென்வாய்செயம். 9

செய்யமதியமிர்தவெண்பா தித்திப்பாஞ்செஞ்சத்தி
லையமில்லைமதி லாய்ந்தோர்க்கு-மையங்
கூட்டுக்கடலுங் கொதிமலையுமாமதியும்
பூட்டுவங்கப்பெண்கொடியாள் பேசு. 10

பேசுவோங்கேள்மகனே புலத்தியாபூவுலகில்
மாவுமரிசிவென்ற மகிமையது-மாவான
னஞ்சமுளைப்பயிரால் வளர்ந்தேறிக்கதிர்நெல்லாய்
மஞ்சரிசிமாவென் றரி. 11

அரியரிசிமாவா மதுவிளைந்தவயல்மண்ணும்
பொரியமதிநேடாம் பொற்கொடியாய்-விரிவதென்ன
கட்டுக்கடல்வீரங் கயற்காய்பூவட்டநெடுந்
தட்டமங்கைச்சேவல்லிச் சாய். 12

சாயக்கடைபூவுஞ் சார்ந்தகமளின்பூவும்
வாயடக்கக்கன்னி வடியாளும்-நேய
கொட்டகரையோசை கொடிமடவாள்பூக்கையிலே
கட்டுவதுநான்வரக் காண். 13

காணக்கரிவாயாள் கண்டஞ்சிவப்புடையாள்
நாணமுயர்வாக்கும் வனிதையராம்-மோனங்

கொண்டகணவனில்லை கூடிக்கருத்தரிக்கும்
வண்டக்குழலாள்சூலை பார். 14

சூலையிலேமனிதருஞ் சுந்தரியாடன்னுருவாய்
காலையிலேமண்டுகங் காத்திருக்கும்-வாலையறி
கண்டெடுத்தாய்தேரைக் கடனீரிலுறவாகப்
பண்டுசெய்தபூசை பார். 15

பகரவொருபூமண்ணும் பச்சையருந்தாதியரும்
உவர்கலக்கக்கண்டா லோடுமே-துலரடக்கி
நெல்லரிசிதள்ளிவிடும் நோகவோட்டிவிட
வல்லியெனவந்ததப்பா வாழ்வு. 16

வாழ்பூதருங்ககன வட்டமிடும்புண்கட்டி
மூழ்கிவருஞ்சுந்தரத்தில் மூளாதே-தாழ்வாக
எட்டிக்குள்ளேவளர்த்தி யிட்டலடிதனிலேற்றில்
கட்டவகைகாணவெனக் காண். 17

காணுவதுகாரமண கலக்குஞ்செல்லத்திமுட்டை
பூணுவதுபூரமென்று புகட்டினல்-வீரம்போம்
கண்டுவிசாரத்தைக் காணவிடுவெண்சுடரைச்
சொன்னகுறிப்புலத்தியர் சொல். 18

சொல்லலறுமோமனது துய்யசபைபெண்ணேட்டம்
வெல்லவருமோநேயம் விண்டாலும-புல்லு

தன்பிறப்புமிறப்பு மிவைசார்ந்தாலறிவாகு
மென்பிறப்பையானறியே னியல்பு. 19

இயலிசைகூட்டவட்ட மிளங்கொடிக்குமாட்டாவோ
வயலிசையில்நீரும்பாயும் வாய்க்கால்-துயலாகும்
மண்ணடிக்குப்பானை மாவடிக்குந்தூணைப்
பெண்ணடிக்கும்பாமாலை பூட்டு. 20

பூட்டவொருகூட்டாகும் பேய்க்கரும்பாந்தித்திப்பும்
காட்டமதின்மாட்டுங் காணவே-பூட்டே
காய்க்குமேயிஞ்சிக்காய் கைப்பழக்கமஞ்சரக்காய்
வாய்க்குமறிவெண்பா வறி. 21

அறியமதியகமென்ற யானவெண்பாவிதுவாகும்
வறியமதியிதுவாக வாய்க்குமே-மதிப்பூன்றி
நொய்யநுகர்ந்துண்டால் நூறுகுமாதிமுதல்
வையமீதிலறிவ தரிது. 22

அறிந்தோமிவ்வெண்பாவி லடக்கினேனென்வாதகுறி
நெறியகன்றபூரணமும் நீடேட்டிக்-குருகியது
வஞ்சமிஞ்சுநெஞ்சகற்றி வாமியிருப்பிடமூலி
கொஞ்சுகிள்ளையாயுரைத்த குறி. 23

உரைத்தகுறிதப்பாது வூணுறவுமொன்றுணற்
குரைத்தகரைபங்குண்டா மெந்நாளும்-விரைத்தமுதல்

காணிக்கரைக்காணி காற்காணமாகக்
காணியரைக்காணியென் றறி. 24

என்றரைமுந்திரிக்கீ ழெடுத்தாடுமாவாரைக்கு
ஒன்றரைக்குகாமாவிரிப் பூட்டியவின்-சென்றரைய
முத்துக்கொருவிலையாம் மொய்குழலாளிருவிலையாம்
வைத்தசன்னிமூவிலையாள் மயம். 25

மயமானபூக்கொடியு மணலாடுசர்க்கரையும்
வயமானகாரிடைச்சி வாய்ப்புல்லும்-செயமாக
முட்டக்கரைகுயவன் மூட்டெறிந்தவெண்கலத்திற்
பட்டுவிடும்வெண்ணீறு பார். 26

பாரையடிக்கல்லு பாயுமண்பூக்குமுப்பு
வாரையடல்நீறும் வாய்ந்தாக்கால்-ஊரார்
ஒக்கவிடுமென்றுமுக்கா லொன்றுக்கவையாகும்
வைக்கதணன்மீறிவரு மண். 27

வருணமண்ணில்வாழுமங்கை வசந்தியென்றசெவ்வந்தி
பெருகுமண்டமுட்டிவிடப் பேணுமோ-நரிவாயில்
கண்டசிப்பிவோடாகுங் கானக்குரமகள்கை
வண்டுசிப்பிக்கால்லாம் வயம். 28

காலாங்கடகநீர்க் காட்டகத்திற்காயாம
நாலாம்வலைநூலாம் நாதமாம்-சேலாம்

வட்டகட்டபெட்டாகும் வாய்தீதாற்றுவர்க்கும்
முட்டவழிநெஞ்சமென்றே முன். 29

நெஞ்சமனமுறையும் நெற்கடையாமண்கரையும்
வஞ்சமில்லைசொல்லிவிட்டேன்வாயுவினாற்-பஞ்சமென்ற
பார்க்குளிதுபாழா மக்களாவாழ்கவென்று
ஆர்க்குள்ளொன்றானதிது வறி. 30

அறிவுடையவெள்ளை யறியானபிள்ளையென்று
தெருவில்விளையாடிவருஞ் சேயே-உரிமையுடன்
கைக்கிசைந்தசர்க்கரையைக் கடுவாய்க்கடையிலிட்டு
மொய்க்கவிரும்புவாய்னீ ருண். 31

உண்ணக்கல்லாகு முவர்மட்டம்நீராகும்
பண்ணத்தொழிலமைக்குப் பாலாகு-முண்ணும்
கோட்டுக்கடிவாளங் கொம்பனையாள்பிள்ளைதலை
ஊட்டுவெட்டவெளியா மியல்பு. 32

இயல்பவளமலையு மீராறுபன்னிரண்டும்
வயம்படுவக்காளை வாட்டினால்-இயல்பாக
பட்டமதயானை படுகுழிக்குள்ளாகும்
வெட்டவெளியிரவுபக லாம். 33

பகலானசூதம் பயில்வார்வெள்வங்கம்
நிகர்சாரவீரகரந் தப்பாது-இயலான

கொட்டமலைகொம்பும் கோதைவளர்பாரவட்டும்
முட்டவெட்டிமடிவாராம் முன். 34

முன்னைவிழுப்பாமடிப் பின்னைவிழிகாம்புமலை
தன்னைநடுவாக்கிவிடுந் தக்கவரே-யின்னமெண
கொம்புரத்தான்மங்கை குமுறமுலையிலகுந்
தம்பிறத்தான்தங்கநிறந் தாக்கு. 35

தாக்கிவிடுகாக்கடையின் தக்கரைக்காணிமா
தூக்கிவிடுமுத்திரைக்கீழ் சொல்லிவிட்டே-ணுக்கம்
வைக்கமலைமுந்நீரும் வாதமென்றசெயநீரு
மொக்கவரைகடநீரா மொன்று. 36

ஒன்றுமொக்கொண்டுமிடமூன்று மொக்கசாயிரண்டு
அன்றுமொக்கத்தள்ளிவிடு மதிலொன்று-பண்டாக
மிக்கதோரக்கவகைக் கெங்கைகனலிலிடும்
வைக்கவிதுவாகுமாங் காண். 37

காணப்புலத்தியா காமமனப்பூட்டுமொக்க
வானத்துறைதுரும்பு வந்தித்தால்-நாணமறும் [ச்
அக்கரைமாயிக்கரைப்பெண் ணரசிபிள்ளைக்கைக்கூட்ட
சக்கரைக்குநெய்கூட்டத் தான். 38

கூட்டத்தாரெட்டெட்டுங் குலாவிவரமெய்குறிகேள்
நாட்டமென்னவெண்கொழுந்தைநாடார்-வட்டமிடும்

வாய்கசப்பைமென்றுமிழ்ந்தால் மங்கைசிரிப்பாளவளை
மாய்க்கமதிகூட்டு வாய். 39

மதியிருந்தாலாடிவரு மனமிருந்தால்கூடிவிடுங்
கெதியிருந்தால்தப்பாது கிளத்தினேன்-சதியாரே
மாண்டமாக்கரியினுல் மாளுமக்கள்யாவருமென்
றுண்டாமதிவெண்பா சொல். 40

சொல்லுவடமொழியாய்ந்து துத்தமிட்டவாரடைக்கு
வில்லும்புமொக்கவிட்ட வெண்கலமேவல்லதங்க
ஓசையிடமாற்றுடு முரியுழக்குச்செவிடெனவே
வாசைகமலமாகு மெனவே. 41

மாகுமென்சித்தாமன் மாரியிட்டவட்டமிது
வாகுமெனக்கண்டோர்க்கு வாய்க்குமே-சாக
வேமானக்குதிரை வெட்டவெளிகட்டிவைக்கும்
மாகுமங்கைவாழ்வா மிது. 42

வாழ்வுதருசோணமலை வழங்கிவருமமுதகடல்
சூழவைக்குமாதாப்போல் சொல்லரிது-வேதம்
பாசுபடாவெள்ளைநிற மங்கைகண்டால்தங்கநிறம்
மாசுபடாமொழியிது வாம். 43

வாமியென்றமாமிதங்கை வந்தவழிகண்டறிந்து
தூசுவிடுசுண்ணக்கல் தொக்காகு-பேசரிது

மைக்கவமாய்ப்பதராம் மையமேன் தங்கியிடை
வைக்கச்சலமாகுமென் வாய். 44

வாயிடுநீரை வாழ்த்திவிடுமாளிகையில்
பாயிலிடும்பாகம் பார்த்துவிடு-ஞானமென
குப்பியடையாயடைக்குங் கூக்குரலுமில்லையடி
செப்புவாரிதுவென் றியம்பு. 45

இயம்பக்கடவாகு மெம்பெருமான்காணவென்ற
வயங்கசம்பத்தைகண்ட வாதுமே-குதம்பையிலே
சொல்லரிதுசொல்லரிது சோழவளநாட்டரிது
வில்லரிதுகல்லரிது வேதை. 46

வேதைக்குக்காரம் வியன்றகங்கைதொலைதூரம்
வாதைக்குப்பயன்றூரம் வாய்த்தாக்கால்-நாதன்
கண்டாடுமோசை தசையோடும்வாசி
கொண்டாடுமிடத்தொழிலே கூறு. 47

கூறுமடாமாதவிடாய் குறித்தலைப்பிண்டமென்றுஞ்
சீறுமண்டமுட்டையென்றுஞ் செப்பினே-னூல்மறை
ஓதிவைத்தவாசகத்திலுணர்வறியாச்சண்டிகட்கு[வாய்
மாதுவைக்குநூலின் மயம். 48

மயமாகும்பெண்கருவாம் மக்கள்தலைசோதனையாம்,
வயமானவிக்குறிகள் வாட்டிவைத்தேன்-துகைகாணு

மட்டமுதற்பச்சையிலே மாளுமோமாண்பருக்குக்
கட்டவகைதொழிலிதிலே காண். 49

காணவென்றுயின்னூற்றிற் கசடகற்றிக்காணவுனக்
கூனுவைத்தேன்கும்பனென்பேர் கொண்டாட-வானி
தக்கவளநாடிருக்குந் தாய்பிறந்தநாட்டிலறி
மிக்கபுலத்தீசன் முறை. 50

முறைமைக்களாவாம் மூத்தமகள்பெண்டாவாள்
தாரைமச்சான்மச்சினனுந் தம்பிக்கு-வுறையோடே
கூட்டினல்நல்லம்மான் கூட்டிவிட்டபேய்மாமி
காட்டில்விளையாகுமிந் நாடு. 51

நாடுமகள்பேத்தி நன்மனைக்குச்சக்களத்தி
வாடுமி[illegible]யாள்பிள்ளை வாய்த்தாக்கால்-பாடுபடு
முட்டு[illegible]ட்டசூளை முனைநடுவேயேவ
கட்டவைத்தபணப்பையாங் காண். 52

காணுதுமைத்துனர்க்குக் காணக்கண்ணீரொழுகு
காணுதுகாய்க்குமப்போர் நன்றுய்ப்பார்-ஊணுது
வெட்டியெறிவேலியிலே வேரறுந்தசாதிக்குக்
கொட்டிவிடுமாப்பிலேச்சார் கூட்டு. 53

கூட்டிகரையானைக் கூப்பிட்டுலக்கையிட்டு
வாட்டியிட்டுமாமியரை மயிராடப்-பூட்டறிந்து

கைத்தலைமேலோடுங் கைக்கடயம்சாத்திரவில்
மைக்கடமேல்மூட மாய். 54

மாயமாமதயானை வஞ்சகரைமண்ணையுண்ணும்
ஓயாததைப்பார்த் தோட்டிவிடு-வாயாலே
கட்டழகிவஞ்சகரைக் காலிலிடுதண்டைபட
வெட்டியெறிநால்மா விடு. 55

மாவிடக்கால்காணி வருமாகாணிமேலேறும்
யாவியிடமுக்காலும் பாய்ச்சிப்பார்-சாவில்லை
எண்காணியெட்டுமா யேகாதடங்கிவரும்
பாங்காகமாறிவை பாதி. 56

பாதிமதியாதியிடு பள்ளமனைபங்கினது
வாதியிடுவானறிந்து வாய்த்துப்போஞ்-சாதியில்லை
ஒக்கக்கலந்துண்ணு மோகோகோயுகமுடிந்து
பக்கமுறிவெட்டியே பார். 57

பார்க்கையிலேநாவாழும் பாலையிலேபூவாடும்
பூக்கையிலேசுழியாடும் போக்கில்லை-தூய்க்கருவில்
பாய்ந்துவிந்துதப்பாமற் பலித்தார்களைஈட்டும்
வாய்ந்தவாமிடுதன் றரி. 58

வென்றறிவோர்வித்தாகும் வெள்ளாட்டிகருவாகா[டிக்கு
பெண்டறிந்தோன்றுனறிவான்பேய்ப்பூவாம்ஒண்டொ

கட்டினபொன் தாலியிலே காய்ந்தகனிபழுக்காமல்
பட்டுதிர்ந்தென்ன பயன். 59

பயனறியாப்பாரிற் பார்க்கவடிவெட்டாது
நயனமில்லையார்க்குமென நானறிந்த-வயன்முழுது
வைகரைக்குக்கைக்கரையாம் வம்புழுஞ்சோலையறி
மைக்குறித்தகண்ணாள் மனம். 60

மனமாடுமப்புவியில் மாளாவடிவிட்டபுரைத்
திறமாட்க்கூட்டிவிடச் செங்கமறம்-நயமான
கொப்புக்குலாப்பூ கூகைக்குநாட்பூவாந்
தப்புக்குடிவாடியிடுந் தான். 61

தானமறைவண்ணாடுந் தாய்காட்டுமூணும்
பானுவொளிவளநாட்டிற் பாய்ந்தேதுஞ்-சாந்துவரை
தென்னாடுகோணாடு செய்வளநாட்டிவிது
என்னாடுமுண்டென் றியல். 62

உண்டகளிதொப்பையிடு மூட்டுகனிமேனியிடுங்
கொண்டகனியாகக் கும்பிக்கு-முண்டகனி
எம்புவிக்குமெம்பாகு மெங்கள்குருநாதரிட
சொற்படிக்குசுண்ணும்பு சொல். 63

சுண்ணும்பரையேறுஞ் சகந்தபிள்ளைகாலேறும்
வண்ணனிரண்டுமொக்க வாய்க்குமே-எந்நாளும்

நஞ்சக்கரைத்துஞ்சகட்டும் நன்றாட்டும்வெள்ளலறி
மிஞ்சியொடுகாணலிது வாம். 64

காணவுரையாடுங் ககனமெனத்தானுடும்
வானவிண்ணோர்தானே குமட்டாகும்-பூனையென்
யந்திரங்கியுண்டமிர்த வாய்த்துவராய்மீடிவிடும்
கந்தமிது ாமென்றே கருது. 65

தருதாலிப்பூவாடிக் கணைக்கட்டிக்கொண்டாடி
ஒருதாலிக்கிருதாலி யூட்டிவிட்டால்-கருதாலி
செங்கைவளைகுறைச்சலென செப்பாதேசெப்பாதே
யெங்குண்டுக்குறியென் றியம்பு. 66

குறியிட்டஓட்டகத்தில் குடக்குரைக்குத்தப்பாது
உறியிட்டுவற்றிவித ஓருழக்காஞ்-சரிவிட்டு
முக்காற்செவிடாகு முந்திரைக்கீழ்தப்பாது
வப்பாதியின்பெருமை யாடு. 67

ஆடித்திருக்காயு மாவணியின்மேற்றேரும்
மானபுரட்டாசி வைகறையும்-வானமுள
ஐப்பசியிற்முன்வெடிக்கு மாகுமற்றபின்னலேன்
கைப்பிசகால்நாடுமிது காண். 68

காணவருங்கார்த்திகையுங் கடுங்குளிராமார்கழியும்
நாணியொடுதைப்பூவாம் நாறுட்டும்-மாணிலத்தில்

மாசிலாமலர்பூவா மாதகுறிபங்குனியாம்
வாதமதுசித்திரையில் வை. 69

வைகாசியிலே வளநாட்டுக்கன்னிகையால்
மையமெனக்கண்டநீ மாதவிடாய்-மையமிட்டு
வெய்யகதிர்காட்டி வெங்கலப்பெண்தலைபூட்டி
ஐயமிட்டுவாழ வறி. 70

வாழிமலைபங்கயத்தி வாட்டிவரவழியேறும்
ஊழிபென்பதெல்லாம்போ மென்றோடும்-நாழிகொண்
வொக்கநெய்த்தன்னையிட்டு வொன்றிரண்டுசாரமிட்டு
வைக்ககதிரேறுமென வை. 71

வைத்தமணிமொய்த்தகடல் வாய்க்கவறுவீரன்
றைத்தநடமாடியிடுந் தப்பாது-மெத்தெனவே
கொம்பணையாடான்வாழ்வு குடியேறுகாய்க்குமென
எம்பிரான்பெண்டீ ரியல்பு. 72

பெண்டீரியலான பேய்க்கூத்தன்சொற்படிக்குக்
கண்டீரோவவன்விந்தாற் காயாகும்-வொண்டொடியாள்
காரமென்றவாணிச்சாற் சாரமதிலேறிவர
பூரமெனநாமறிந்த புல். 73

புல்லாகும்புகல வறியதோலாடும்
எல்லாமதிலாடு மெட்டெட்டுஞ்-சொல்லாகுங்

கரைகரைக்குந்தானேறி கரைவிடும்வாணிப்பூ
துறையறிந்தபுலத்தியனே சொல். 74

சொல்லமலைச்சோணமலை சுந்தரிப்பெண்வல்லிமலை
நல்லமலைநெஞ்சிமலை நாட்டிலுண்டு-கொல்லிமலை
குடகுமலைக்குதட்சணையிற் கும்பமலையென்மலைநேர்
சுடர்மலையாகுமெனச் சோதி. 75

சோதிமலைசார்ந்துவளர் சோழவளநாட்டிலுண்டு
ஆதியென்றபெண்குரும்பை யாதியுண்டு-சாதியது
வாந்தியதுமொக்கவுண்டு வங்கணங்கள்மெத்தவுண்டு
சாந்தியென்றசிறுபெண்தா யறி. 76

தாயறியாத்தந்தையரில் தாரமில்லைவானமில்லை
மாயப்பிறப்பில்லை மானமில்லை-தூய
வெட்டிகரைமீதிலிட வேண்டாநாள் தூணெடுக்க
பட்டத்துளிர்தானெடுக்கும் பால். 77

பால்சொரியும்பாரிலிடப் பட்டதுளிர்தானெடுக்கும்
மால்சொரிவான்பூமாரி மாநிலத்தில்-யார்கரித்து
வெண்டைவடமேனையென வெற்றிதருங்கண்டனுக்கு
கண்டவிடந்தாயாகுங் காண். 78

காணலாம்பொன்மேனி கங்கைமங்கைதன்வாழ்வில்
நாணமில்லைசுந்தரிப்பெண்நாட்டு-வானமுயர்

20

கோட்டிகரைசீலையிட்டுக் குப்பிசிறுநீரைவிட்டுத்
தாம்பியிண்டத்தோலையிடத் தாக்கு. 79

தாக்கசமர்க்களமாஞ் சன்னுசியாசனமாம்
வார்க்கணிவிஷமாம் வாய்ப்பாக்காந்-தூக்கமிக
யேக்கமிகக்கண்டறியா ளெம்மிடதலைப்பிள்ளை
மாய்க்கவிக்குறிசொன்னேனென் மனம். 80

மனமறிந்தால்மயமெரியு மண்ணுடும்பொன்னுடாங்
கனமிழிந்தாற்காணலாங் காய-யினவாக
பூவாகும்பிஞ்சாகும் மொக்காய்கனியாகும்
காயாடப்பூவுதிர்ந்த வாள். 81

வாளமலரையிட்டாம் வாய்விட்டாம்வாயாகும்
வாளாங்கரைகாணப் பாராது-தூளாகும்
வெண்சுடரிலோட்டமிடும் வையகத்திற்பூவாது
கொஞ்சுமில்பாண்டமனை கோடி. 82

கோடிவடவரையுங் குலாவுங்கமலக்கன்னி
ஓடிவடகிரிக்கு வுறவானல்-நாடியிது
ஒக்கமணல்பொன்முடி மோங்காரங்கண்டவெளி
தக்காயிரஞ் சரி. 83

சரியாடலாமுண்டால் தானந்தியாயிரத்தில்
உறியேறியாட்டலா மொன்றுகுந்-தெரிவேறுங்

சட்டைதணலாகாது காயுங்கிரணத்திற்
பட்டுவிக்கும்பச்சைமூலி பார். 84

பாரிலிதையார்காண்பார் பாலகனேபுலத்தீசா
நாரிகுத்தவள்மூலி நாமறிந்தோம்-ஊரிலுண்டு
குட்டவரைகோடாங் கும்பனென்போனுடாகும்
மட்டகுழல்மங்கைமணம் பூணு. 85

பூணவறிவேறுவதும் பூரணத்திலூருவதும்
நாணமதுநீக்குவதும் நாட்டிலுண்டு-தோண
நுண்ணறிவுகொண்டவனே நுகரப்பரிவாகுமென
ஒண்ணரிந்துவிட்டே னுவண். 86

வண்ணான் துறையழுக்கும் வாய்ந்தகளி ருறவும், பண்ணுமெனச் சிறுக்கி பாலடையு - மெண்ணுார் காட்டிவைக்கும் வெங்கலத்திற் கனகமென்ற மேசை யைப்போல், நாட்டிலிது மெத்தவுண்டு நவில். 87

நவிலவருகாந்தகிரி நயமான வெண்கிரியும், புவியிற் கண்ட பொன்கிரியும் பூட்டவே கவியிலொரு-காட்ட வில்லை யிப்பொருளைக் கடனீருறையாவிட்டாற், கூட்டு மச்சானுறவென்றே கூறு. 88

கூறுமரைக்கரையாங் குஞ்சரத்துக்கொன்றையாம்
வாறுவிட்டயெட்டரைக்கு வைப்பாகுஞ்-சேறு

மூட்டிக்கடைச்சீலையிட்டு முடிந்தேறுமங்கைவெள்ளை
நாட்டிவிடுசொன்ன நயம். 89

சொன்னமுறைதப்பாது சுந்தரானந்தவல்லி
என்னவரைகடற்கரையா மெப்போதும்-மன்னவனாய்
கோடிமுழக்கிவிடுங் கோலமலர்த்தாளாடும்
நாட்டவனார்கைப்பழக்கங் காண். 90

காந்தமலையுங் கடலுமுறவானால்
ஏந்துதனமுன்க் கியாதோ-காந்தமலர்
காட்டிலேபூக்குங் கானலிலேகாய்காய்க்கும்
நாட்டிலேநாமறிந்தோம் நயந்து. 91

நயந்தவடமேருவாமோ நாரணனார்பள்ளிகொண்ட
கயந்தகடத்தாரைக் கண்டறிந்தால்-நயமாகும்
வட்டமில்லைசட்டியப்பம் வைத்தவர்கெட்டாகும்
கட்டளையாம்நாட்டிலிது காண். 92

நாட்டிலேசுள்ளிகல்லை நவமானபாண்டமிட்டு
காட்டிவைத்தகதிராடுங் காமப்பூ-நாட்டி
வெட்டியெடுபூரணத்தில் வெட்டியெடுசாயமறை
கொட்டியவள்செம்பொன்னாங் குகை. 93

பொன்னாகுமென்னாளும் பொய்யுரையாய்ப்புலத்தீசர்
சன்யாசமென்றதொழிற் றப்பாகும்-கண்ணாளும்

பூட்டியுடை வெட்டவெளி பொய்யாகுஞ்சூதறியார்
நாட்டிலிதுமெத்தவுண்டு தள். 94

தள்ளிவிடுபொய்த்தொழிலைச் சார்ந்துவிடுமூலிகன்னி
யள்ளிவிடுவுப்பா னருங்கடலே-பள்ளியென
ஓதறிவாகுமென வுள்ளபடிபுலத்தீசா
மாதுமயமுப்பெனவே மகிழ். 95

மகிழ்ந்துமனம்வெளிவிண்டா மாட்சிவிடுங்காட்சியில்லை
யொழிந்துவிடுமெவ்வாழ்வு மோட்டிவிடுங்கருங்களந்தி
தப்பாதுதப்பாது தானாகிலமிழ்த்திவிடும் (ற்
எப்பாழாமுப்பாழ்மே லெறி. 96

பாழறிவான்பாலையுண்டு பயனறிவான்மவுனமுண்டு
காயறிவான்கனியுண்போன் காலையிலே-மாவாரை
சொற்றவறிவூணவன்று சதாசிவமேகண்டவெளி
மெத்தவறிவாமென் றிசை. 97

இசைகாட்டுவாள்மூலி யிளங்காட்டுங்கடலுப்பு
வசைகூட்டுசாரத்தில் வாதமென-தசையாட்டம்
வங்களரவைப்பூரம் வாய்ந்தவிந்துவீரமுடன்
மங்குலமழிக்குமது வாம். 98

மதுவானபானமுமே மடக்கவதுவாகுமெனக், கெதி
வேறேயில்லையுடன் கினிப்போம்-பொதுவாக, நாட்டி

விட்டேன் பேய்மக்கள் நாவடக்கிப் புத்திகொண்டாற்,
கூட்டிவைக்குமல்லோ குணம். 99

குணமாமதியன்பதனிற் கூட்டிவைத்தபாகமுறை
மணமாமறிந்தோர்க்கு மயமாகும்-வனமூலி
வேறில்லைவேறில்லை வித்தையுணர்மாண்பழிக்கு
நாரிலைக்காய்கரிகட்டை நயம். 100

நன்றேபுலத்தீசற் நாயகியாள் திருவடிக்கி
வயன்றசிறுபிள்ளையென வாழலாம்-நயந்த
மாற்றிவைக்கும்புத்தியறி மதியமுர்தமானவெண்பா
சாற்றிவைத்தமாலைமுற்றுஞ் சார். 101

அகஸ்தியர் வகாரமதிவெண்பா-100

முற்றிற்று.

கடவுள் துணை.

இருபத்திமூன்றாவது,

அகஸ்திய மகாமுனிவர்

தண்டகபக்ஷிணி - 134.

பூவதுவாசமாகும் பொருந்திய தண்டகத்தை
நாவதுயோடுந்தானே நடுவிணையிருந்தக்கேளு
போவதுவருவதாகும் பூரணங்காப்பதாகு
மாவதுகோடிவித்தை யானந்தங்காப்புத்தானே. 1

மண்ணதுவிண்ணுமாகி மானிலத்தோர்களெல்லா
மொண்ணதுபொருள்தானென்று வுற்பனவிலக்கமாக
கண்ணதுமெய்யுமாகி காரணமுடிவாய்நின்று
எண்ணுமித்தண்டகந்தா னியம்புதற்கரிகாப்பாமே. 2

திருமகட்சோதியாகுஞ் செந்தலவல்லிமாது
மருமகளவளைபத்தி மவுனத்தில்நந்திதோணக்
கருவதுநாமேசொல்வோங் கண்டத்தைவிட்டிடாதே
பருவமாமாதுகற்பப் பட்சிணியறிந்துகொள்ளே. 3

அறிந்துகொண் டென்னைத்தானே வந்தனரோதி காட்டி, அறிந்துகொண் டுன்னைப்போல யடக்கமா யொடுக்குங்காலே, அறிந்துகொண்டது போதகமாக பூரணநாடன்னை, அறிந்துகொண் டாரும் பார்க்க வானந்த சோதிதானே. 4

வேறு தண்டகம்.

உதித்தவெண்கரு மதித்தசெம்பாள்
துதித்தவுந்தியிற் பதித்தெழும்பாரே. 5

பண்டறிவித்தை யுண்டரிசத்தை
குண்டலிசத்தி மண்டலமுற்றே. 6

குத்தறிவித்தை சத்தறிசத்தை
பத்தறிபெட்டி லுள்ளதுமுற்றே. 7

முத்தினிற்செம்மை சத்தினில்நன்மை
பத்தினிநுண்மை யுத்தமறியே. 8

பட்டினிகெடவே விட்டிடுநடுவே
எட்டிடுவுடனே மட்டிடும்பாரே. 9

அக்கரைமீனை சக்கரைத்தேனை
நக்கிடமானிற் பக்குவமாமே. 10

முகமதுபுள்ளி யகமதுவல்லி
செகமதுசொல்லி பகலிருளாமே. 11

தலைக்குமேற்காலை முலைக்குமேற்பாலை
கலக்கியேகொள்ள மலைக்குமேலாமே. 12

கொழுமிஞ்சிகாயில் அழுமிஞ்சிச்சேரில்
வழுமிஞ்சிபுனலைத் தெளிமிஞ்சித்தெளியே. 13

கோட்டுமுலைமாது சூட்டுந்தலையேது
பாட்டிலிவட்சூது காட்டிமறைவாளே. 14

அஞ்சிலிவள்மிஞ்சி நெஞ்சிலவள்துஞ்சி
வஞ்சியிடைகொஞ்சி விஞ்ஞைசப்பயில்வாளே. 15

சொல்லறிந்துவோது வல்லமையுமாகும்
புல்லறுக்குசோதி யில்லமதிலாமே. 16

தேசிகருநீரை வாசிபதினாலே
வீசியெழுகாலை காசிநுனியாமே. 17

ஆதிமுதலோனை பாதிதருவானை
யூதியமுமாகுங் காதில்மொழிபேசே. 18

எந்தவழிபோவாய் வந்தவழிபாரு
அந்தமனையாதி சொந்தமனைதானே. 19

மனையாட்டிதனையே யிணையூட்டும்போது
தனையாட்டிநீயு மெனையூட்டிமேலே. 20

பாட்டினிலுமில்லை காட்டினிலுந்தொல்லை
நாட்டினிலுமில்லை வூட்டினதுமாமே. 21

பாத்திமையின்கண்ணை நாற்றிசையிலுன்னைத்
தோத்திரமும்பண்ணே மாத்ததிகம்பொன்னே. 22

தொழிற்செய்யும்விந்து பளிச்செனவந்து
ஒளிச்சதைநின்று விழிச்சதைப்பாரே. 23

தலையினில்விதியே வுலையினில்மெழுகே
அலைவதுமேது நிலையினிலறியே. 24

மந்திரமதுவே தந்திரமறியே
னுன்றிரந்தானே யெந்திரமறியே. 25

பண்டுளதிளமை வுண்டறிவளமை
தண்டலையடுமை கொண்டதுபதியே. 26

பதிமனதுளமே நதிபுனல்வளமே
ததிமிதுபழமே கெதியெனலாமே. 27

ஓதுவதுமுறையே மாதுதனதுளமே
கோதுபழுதிலையே நீதமதுபுனலே. 28

வேறுதவியிலையே கூறுமொழியறியே
ஆறுதினமதிலே தேறிமனதுறையே. 29

ஓடியிருகாலை வாடியெனவோது
பாடியவள்மாது தேடிவருவாளே. 30

கச்சணியுங்கொங்கை யிச்சையுடன்வருவாள்
பட்சணியேயென்று கெச்சையினில்வையே. 31

புத்தியுடன்மாது பத்தினியாளெனவே
சித்தினியுமாகி முத்தியருள்வாளே. 32

பாட்டில்நலம்பாடி மேட்டிமைகள்பேசி
நாட்டிநிதிதேடி வீட்டில்வருவாளே. 33

நாலுமறைவேதம் ஓலமிடுமாது
கோலம்பலவாகி நாலுமொழிவாளே. 34

போதகத்தின்சொல்லி நீதகத்தின்வல்லி
மாதுபுத்திசொல்லி நாதமுத்தியாமே. 35

தம்பலத்தின்பூச்சி செம்பருத்தபூவை
யும்பலத்தைவிட்டு வம்பலத்தில்நில்லே. 36

பச்சையநின்புகழை நச்சரவில்வாயில்
யிச்சையுடன்தடவி கெச்சையினிலேறே. 37

தொல்லைவினைதீர நல்லரவின்வாயிற்
புல்லறுகுயோதி தில்லைநடம்பாரே. 38

ஆடரவின்வாயில் ஓடுரசம்வாரு
நாடுநவலோகம் நீடுபுகழாமே. 39

வாலைசிறுமாது காலுமதிநூலு
மேலுமதையோது பாலுமதுவாமே. 40

மறைநாலுவேதங் குறையாதுபோதம்
முறையாதுநாதந் துறையாகும்பாரே. 41

அகத்தியனைப்பாரு சுகத்திலெனைச்சேரு
மகத்துவமுமாகு மலத்திலதுவாமே. 42

வேறு.

ஓடிவிளையாடுகிற காலினதுனாலே
தேடுபொருளாகுமது யேழினதுனாலே
வாடுவதுயேதுமிலை நாலினதுனாலே
ஆடுமதுவாதமுறை கோடியெனலாமே. 43

தாண்டிவிளையாடுமுறை யந்தமுறைபாரு
வண்டிமனையாளருகி லண்டிமொழியோது
கண்டுமலையாதேயிரு பண்டுருதியாகுந்
தொண்டுபுரிநுதவொளி கண்டுகதிரேறே. 44

சூதுகூபடுள்ளவழி மூன்றுவழியாகு
மாதுதனதுள்ளமதி தொன்றுவுரைமேலுங்
கோதுபழுதில்லையதில் வேதையதில்தோணும்
யேதுமொழியுள்ளறிவு மேலுபரமாமே. 45

வேறு.

போடுமதுபோது வோடுவதுகீழே
பாடியெடுவசிய மாடுமதுபாரே. 46

மேனியதின்சாரை தேனிலதுவாரே
வூனிலதுசேரே வானிலெழுமாமே. 47

போதுமதுபோது.

தேசிகனிரசமே வூசிதமாய்நிதமே
ரேசிதமாய்வழியே மாசிவெயில்போடே. 48

பார்மகளும்நாவில் ஓடுமெனமாவில்
தாமெனவுமாவ ளாமெனவும்பாரே. 49

அஞ்சதிலேநஞ்சு நஞ்சதிலேபிஞ்சு
நெஞ்சுருதியஞ்சு மஞ்சனுயர்போமே. 50

வள்ளிதிருவாளுள் வுள்ளமதிற்போளுள்
துள்ளிவிழுங்காலி லள்ளியுணர்வாமே. 51

குழியானசேரை வழிபாதையறியே
தெளிவானபேரை யொளியாமல்மறையே. 52

மறையுமதுபோது கறையுமதுதிலர்தம்
துறையுமிதுபான பறையுமிதுசபையே. 53

சபையதிலும்நடுவே யபயமிடும்போது
வுபயமறியாம லபயமிடுவாரே. 54

வேறு.

ஆடுகிறபூரணத்தி ளுட்டஞ்சூட்ச
மதிவிடையமாதுகுறி சருகுஞ்சொன்ளுேஞ்
சூடுகிறபூமலரின் வாசங்கண்டு
சூதுபலதொழிலாடி கொள்ளச்சொன்ளுேம்
பூடுசெடிவிருட்சமுதல் முளைத்துநின்று
புல்லறுகுசாகரத்தின் பொருளைச்சொன்ளுேம்
நாடுதனிற்கருவாளி நீயேயாளுல்
நச்சரவின்விஷம்போக்கி வமுர்தமுண்ணே. 55

வேறு.

மாதொருத்திமுத்தி காதிருகால்பொத்தி
வீதிதருசத்திச் சோதிமொழிவாளே. 56

நாகவடிமாடி போகயிடந்தேடி
தேகமதுவாடி பாகமறிவாளே. 57

எட்டுவிசைசொன்னேங் கட்டுநிறையளவே
நட்டுநடுவீதி விட்டகுறைபாரே. 58

கண்டறிநேமம் உண்டறிசத்தே
பண்டுடவித்தை தண்டலையாமே. 59

தண்டலையாரே விண்டுறையாதே
மண்டலமெட்டுங் கண்டுபயமாமே. 60

ஊமையின்வாயமுது நாமயதாகும்
கோமளையுமாது கோமுகமுமாமே. 61

கண்டுளகனியை வுண்டிடவாதி
சண்டனுமிலையே கொண்டுபுரிவாரே. 62

வேறு.

உண்டபலனுனக்குத்தான் கண்டுதேரு
உள்ளமதில்பட்சணியை யுள்ளேபாரு
கண்டுகொள்ளவுண்டுபார் தண்டகத்தின்
கருவிடையமருந்துகொள்ளத் தப்போயில்லை
சண்டாளன்கையாலே மாள்வதில்லை
மதியமுர்தமுண்டுவெளி யேறுவாயே
சதாகோடிசித்தநிலை க்ஷணத்தில்தோனும்
மண்டலங்கள்மூன்றுமரை க்ஷணத்தில்தானே.

வே று.

மதிவளர்தவறியே நிதிபெருகுவிதியே
திதியுமொருதினமே ததியுமிதைபறியே. 64

ஆதிதலைசோடே சோதிமயமாகி
மாதிளமையாகும் வீதிதனிலேறே. 65

ஏறுதலைசொல்லிக் கூறுமொழிதல்லி
ஆறுதலைவல்லி தாரமெனலாமே. 66

வம்புகளையறவே செம்புனலிநீரே
தம்புலனையறியே யும்பரறிவாரே. 67

பேரரிவைமாதர் ஆரறிவார்வூது
சீரரிவனுலு நேர்நிறையுமாமே. 68

வே று.

ஓடுகிறகாலமறிந்து வணையிற்றூங்கி
உற்பனமாஞ்சதாகோடி வித்தையாடி
பாடுகிறநாவறிந்து பாடிக்கொள்ள
பக்ஷிணியிலாடிநின்ற கருவைச்சொன்னேம்
ஆடுகிறதொழிலாளி நீயேயானல்
ஆடுதிருவாவடுதுறை யாட்டைக்கண்டு
கூடுகிறகாலறிவா யோடிக்கூடு
கோடிசித்து அரைட்சணத்திலாடுவாயே. 69

ஆடுவாயுனைக்கண்டு யென்னைக்கூட்டி
ஆச்சரியம்பட்சணியை கண்டுகொள்ள
தேடுவாரெங்கேயடா வரிவாருண்டோ
செகத்திலேயவனைக்கண்டா லுன்னைக்காண்பேன்
மாடேநீயறியாட்டாற் சும்மாபோடா
வையகத்திலலைந்துகெட்ட மாடேபோடா
காடேபோய்த்திரிந்தலைந்து போகவேண்டாங்
கருத்துள்வைத்துப் பட்சணியைப்பாருபாரே. 70

வேறு.

உண்ணுவதுகாம மெண்ணுவதுநேமம்
உன்னறிவையோதி சன்னிவெளியோரே. 71

கல்லுருகுஞ்செம்பு வல்லிருளில்நம்பு
புல்லறுகுதும்பு சொல்லிலதுவம்பு. 72

பூத்தமலரரும்பு யேத்தமுளகொம்பு
சேத்தபுனலத்தில் மாத்ததிகமாமே. 73

மீக்கிலாட்டைக்கண்டு தாய்க்குலாட்டையுண்டு
பேய்க்குளாட்டில்நின்று கூக்கிலாட்டைப்பாரே. 74

பாருக்குள்பரப்பை கூறுமொழிசிறப்பை
தேறிமனதிறப்பை தூறுதலமறியே. 75

தள்ளுகிறகாடே தெள்ளமுர்தமாகும்
எள்ளளவுபொய்யை விள்ளவில்லைநாமே. 76

கச்சணியுங்கொங்கை பட்சணியுமாவாள்
எச்சமுதலாவாள் கச்சுருகிப்பாரே. 77

தண்டையிடுகாலி லண்டர்பிரான்மாது
தெண்டனிடுவாரை தண்டலையுமாமே. 78

ஏகமனதாக போகமதைநீயும்
சாகமனதாகி போகமெனலாமே. 79

மங்கைமுதுகண்ணில் தங்கையொடுபிசைய
தங்கள்கதிர்சேரு மெங்கள்குலமாமே. 80

முகூர்த்தமொருநாளில் வருத்தமிருநாளில்
பகுத்தறிவுபாதம் நிகழ்த்திடும்வினையே. 81

பஞ்சவடிவாளை நெஞ்சில்நினைவேனை
தஞ்சமதுவாகிக் கெஞ்சிவருவாளே. 82

புல்லருகினூலே வல்லசுரர்மாள்வர்
சொல்லவரிதாகும் நல்லபதஞ்சேரே. 83

வீச்சிடுமயத்திற் பாச்சிடும்ரசத்தை
பேச்சிடுவிஷங்கள் போச்சென்றெனலாமே. 84

கொல்லிமலைமாது சொல்லுமொழியேது
வல்லியுனதாக மெள்ளவருவாளே. 85

வருவதுநீபாரு வுருவதுநீசேறு
கருவிதுவுமாகுந் தெருவில்விளையாடே. 86

புண்டரிகமாது கண்டுவிளையாடு
கொண்டவளுமாடு தொண்டுபுரிவாளே. 87

மாதமூதகண்ணீர் சோதிநிறமாகும்
சூதமதில்வாரு வாதமுறையாமே. 88

சொன்னகருவறியே சன்னபவமொழியே
பொன்னையதிர்நிசமே யென்னைவளைவசமே. 89

கச்சசுரக்கரியே மிச்சமிதுயிலையே
வச்சமிதுபொசியே மச்சுவிஷமிலையே. 90

தலைச்சுருளிவேரை விலையறியமாதே
உலையில்மெழுகாகி நிலையில்வருவாளே. 91

அரிராசிகன்னி நிரைராசியாவாள்
துரைராசிவேறு கருவாளியறியே. 92

காலையதில்பாலை வேளையதில்வாரு
கோளையவள்மாது வூளையிடுவாளே. 93

சோதினையுமாகு மாதிகருநாதம்
வாதிமகனைவாய் கோதுபழுதிலையே. 94

ஊமச்சினைப்பூசி தூமச்சிலையூட்டி
மானிலத்திலேற்றி காமுகத்தில்வையே. 95

வைத்திடுவள்மாது சுத்திதலைவீசுங்
கொத்தடுமையாகி முத்தமிடுவாளே. 96

வாரவூத்தின்முன்னே காரணத்தின்மண்ணே
பூரணத்திலென்னை மாரணத்தில்வாரே. 97

கலகமிடுமாது வலதழியுநீயும்
யுலையில்மெழுகாகி திலர்தமிடுபாரே. 98

வாடியிளநீரைக் கோடிதனில்வாரு
வோடியவள்மாது தேடிவருவாளே. 99

காச்சமரமுதிர பேச்சுரையின்பாக
பேச்சுவடிமூலந் தேச்சிவிடுபாரே. 100

வே று.

ஏழதிலேமாதுகுறி யறியச்சொன்னேன்
எட்டதிலேவிட்டகுறை தோணச்சொன்னேன்
நாளதிலேதிருநாளைப் பார்க்கச்சொன்னேன்
நாட்டிவன்றுஞடிநின்ற காலைச்சொன்னேன்
சூழுகின்றகருவியெல்லா முறுதியாலே
சுட்டுவிட்டதுறையறிந்து பார்க்கச்சொன்னேன்
வேளையென்றநயனத்தை தூண்டிக்காட்டி
வெட்டவெளியாகவுமே சொன்னேன்கேளே. 101

வே று.

ஆதிபதிசுயம்பில் ஆதியெடுமெழுகில்
பூதனில்நிரம்பி வீதிவருவாளே. 102

காலுதலைநீரை நாலதிலேசேறு
ஓலமிடுமாது வாலரசமாமே. 103

சுட்டிபலதொழிலாள் கெட்டியவளெழிலாள்
விட்டகுறையறிவா ளெட்டியவள்தானே. 104

பிள்ளைதின்னும்பேய்ச்சி கள்ளியவளாச்சி
வுள்ளபடினூச்சி வெள்ளியெனலாமே. 105

வெள்ளியிறுஞ்சிவப்பி தள்ளிவனதுவப்பி
வுள்ளபடிகருப்பி மெள்ளவருவாளே. 106

கடிதடத்தினுள்ள படியிடத்தில்விள்ள
துடிதுடித்தமாது வடியவிட்டதறியே. 107

அறியிலவளுனையே குறியபழந்தனையே
செறியவிவள்தனையே பிரியவகைதனியே. 108

பத்தினியுமாகு முத்தமியைச்சேரு
பெத்தவவளுகில் வுத்தமுலைப்பாலே. 109

பாலுமுளதாகில் யாலயனுமாவைப்
பாலனையும்வெல்ல பாலவிஷம்போமே. 110

வேறு.

ஆமிந்தப்படினுமே யானேம்பாரு
வகத்திலகங்கண்டறிவை யறிந்துபாரு
காமிந்தபட்சணியைக் கண்டுகொண்டோம்

காதாந்தகுருவாகி வருளைப்பெற்றோம்
ஓமிந்தப்படிபார்த்து பார்ப்போர்தன்னை
வுச்சரித்துபூரணமாங் குப்பத்துள்ளே
போமிந்தப்பூரணத்தைப் போகாமற்றான்
போதறிவானுட்கொண்டா லறிவார்பாரே. 111

பாரடாதண்டகத்தி னறிவாஞ்சூட்சம்
பகரரிதுகொங்கணர்தன் பட்சணியைப்பாரு
ஆரடாயதையறிவா ரிதனைப்பாரு
வன்னாலுமிந்நாலு மொன்றாய்ப்போச்சு
தேரடாமனந்தேறி யறிவார்பாரு
ஜெகஜாலவித்தையெல்லாம் பட்சணியேயாகும்
யேறடாவெளியேறி யின்னாலேநீ
யென்னைப்போலறிந்துகொள்வா ரொருத்தரில்லை
சீரடாவைந்தான நாலாங்காலை
சீரறிந்துகொண்டவனே சித்தனாமே. 112

வேறு.

வேகமதுவிதியே பாகமதிற்சேரு
நீதமதுபாரு வாதிகுருநீயே. 113

நீயெனதுபிள்ளை நானுனதுதந்தை
தேனிலதுவின்பந் தானுமதுவாமே. 114

ஆமெனுமெழுத்தை வோமெனவும்போது
காகமதுதாமு மாமனதுதானே. 115

கஞ்சமலரணையே பஞ்சமிலேனிணையே
செஞ்சொல்மொழியலேமேல் நெஞ்சிலிதுவரையே. 116

ஆறுவரைமேலே கூறுமொழிபாரு
ஓதுமதுபாலு மேறில்விளையாடே. 117

வெள்ளியிருகாலை வுள்ளேயிடுநாளை
தெள்ளியெனுமாசி வள்ளலெனுமாமே. 118

தேசியதுமாலை நேசியதிநாலே
பூசிவிடுமேலே வாசிதனிலேறே. 119

நெஞ்சாரப்பொய்யை அஞ்சாமற்சொன்னேன்
துஞ்சாமற்கேளு மிஞ்சாமற்பாரே. 120

வேறு.

என்னுணையிதைவிட்டு விடாதேசொன்னேன்
யேகாந்தவிந்தாலே தன்னைக்கட்டு
முன்னுணைசத்தியமாய் விண்டேன்பாரு
மூவுலகத்தோர்க்கேராது யென்னைக்காண
சொன்னாலுந்தெரியாது மனையாட்டிவாழ்க்கை
சுகபோகத்தாலறிய மாட்டாயானால்

உன்னுணையுனக்குநாட் டொழிந்தபேச்சை
  முழுமூடாமறந்துவிட்டா லின்னங்கேளே. 121

கேளாதபாவியா ருனக்குத்தந்தை
  கேவலமாய்விட்டுவிட்டா லுன்னைத்தானே
பாழானசேதிசொல்ல சற்றேகேளு
  பச்சைமால்நீயாவாய் பத்தும்பாரு
மாளாமல்மாண்டயிட மம்மாவம்மா
  மதிகெட்டுவலைபாலே சும்மாய்வீணே
பேழானவேழறிந்து யேழைபார்த்து
  யென்னைப்போலுண்டுவெளி யேறுவாயே. 122

ஏறுவாயறிவாலே தேறிக்கொள்ள
  யேகவுபநிடதமான சோதியாலே
தேருவாய்கண்டகண்ட தறிவாய்க்கொள்ள
  சிந்தித்தபொருள்வாக்கு மருளேயாகும்
ஆறுமொருதலமதிலே யேறச்சொன்னேன்
  அதின்பிறகேமால்கொண்ட தரிவாற்பாரு
ஊருவாய்மூடுதற்கு மூடியுண்டோ
  உச்சரித்துப்பட்சணியைத் தன்னைப்பாரே. 123

வேறு.

நேத்திரத்தின்வழியேபார்த்திருக்குமொளியே
சூத்திரத்திற்கதிரோன் தோற்றும்வெளிபாரே. 124

வேறு.

தோற்றுவதுகதிர்கோடி காந்திவீசுஞ்
சுழிமுனையில்கண்ணோட்ட மேற்றிப்பாரு
பார்த்திடவேசுதிர்கோடி பிரமைதோணும்
பகலிரவுமற்றவிடம் பதிவாய்ப்போகும்
ஆற்றமுனக்கிப்பதியில் மனந்தான்போக்கி
மகத்தானமாய்கையென வொதவிப்போச்சு
பார்த்தவிடம்பரவெளியாய்த் தோணலாச்சு
பகாரிதுயித்தனையு முணர்வித்தானே. 125

வேறு.

விந்துதித்தவாதி வந்துதித்தபோதம்
யெந்தவிதத்தாடுமோ யந்தவிதத்தோடுமே. 126

ஓடுமதுபோது நாதனிலைவானில்
தேடுபொருள்வேதந் தானிமுறைகாணல். 127

ஆடுவதுதானே நாதனெளிபாரு
கூடுவதுயாணு மாடுமவள்பாரே. 128

சுச்சுருகியாக கெச்சையிலேயேறு
பச்சைவண்ணரூபி திருபட்சணியுமுற்றே. 129

வேறு.

திருமகள்பதியிலாதி தருவருமாகமேகி
அருவுருவாகிமுற்ற வகத்தியனென்றோர்நாமும்
கருவதுகாட்டியீசன் கையினிலணைந்துவையன்
பருவமுமிதுவேயென்றுபட் சணியுரைத்தேன்முற்றே.

தண்டலையாதிளுகத் தண்டகமோதும்போது
வண்டருமுனிவர்போற்ற வகத்தியனென்றேநாமம்
கொண்டதுடனீசன்வந்து குருமுனியென்றேகூறி
பண்டுளநாதியெண்பால் பட்சணியென்றேமுற்றே.

பட்சணிநந்திமூலர் பாடலும்நம்மைப்பார்த்து
பட்சணியாடினார்கள் பகிரண்டதண்டகத்தில்
நிட்சயமிந்நூல்தன்னில் நிகழ்த்தினேமேகமொன்று
யச்சமில்லையாபாரா யாதியாங்காப்புமுற்றே. 133

முற்றிலும்நூறுங்கூட்டி முப்பத்திரண்டும்பாரு
முற்றிடமதுவாய்காணும் மூப்பெனதுரிதிதோணுங்
கற்றவரென்னூல்தன்னை கைவிடார்கருவைக்காண்பார்
செத்தபேரில்லையின்னூற் செப்பவுமுத்தியாமே. 134

அகஸ்தியர் தண்டகபக்ஷிணி-134

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

இருபத்திநான்காவது,

அகஸ்தியமகாமுனிவர் சரக்குசுத்தியென்னும்

கன்மசூத்திரம் - 150.

காப்பு.

சீரணிகொன்றைசூடுஞ் சிவனிருபாதம்போற்றி
வாரணமுகத்தோன்பாதம் வணங்கிநூறைம்பான்சொ
பூரணஞானமாலை சரஸ்வதிபாதம்போற்றி [ல்லப்
காரணமானசெஞ்சொல் கன்மசூத்திரந்தான்காப்பே.

கன்மநிவர்த்தி செய்ய.

ஆதியாயுலகில்வாழும் மனிதர்செய்கன்மாகன்மஞ்
சோதியாம்சூத்திரத்திற் சுருக்கியானுரைக்கக்கேளீர்
வாதியாயுலகில்வாழ்ந்து வயித்தியஞ்செய்யவென்றால்
நீதியாமனிதர்செய்யுங் கன்மத்தைநிவர்த்திசெய்யே.

சண்டாளர் செய்கை.

கன்மத்தை நிவர்த்திசெய்வான் கனமான வாதியா கில், வன்மத்தின் வறுமையானோர் வயித்தியஞ்செய்ய மாட்டார், தன்மத்தில் மனஞ்செல்லாது சண்டாள

நீசத்தோர்கள், குன்மத்தில் அழுந்தமாதர் கூடெழுந்
தேகுவாரே. 3

வாறுகேள் முன்னூலாய்ந்து வடமொழி தமிழாய்ச்
செய்தேன், நூறுபத் தன்பதுக்குள் நிகருள்ள
நூலொன்றில்லை, வீறுள்ள வினைகளோட்ட வெகுசுருக்
குடனேதானுங், கூடகேள் பொதிகைவாழுங் குறு
முனி கூறலுற்றேன். 4

தன்மஞ்செய்யாதவர்.

கன்மந்தான் மிருந்தால்செய்யுங் காரியமேதோவென்
னில், குன்மந்தான் முதலாயுள்ள வியாதிகள் கூடிக்
கொள்ளும், வன்மந்தா னுறுப்பில்தோஷம் வந்திடும்
வறுமைசூழுந், தன்மந்தா னில்லைமுடர் சமைந்தும்பின்
னரகந்தானே. 5

நரகம் விலக்கு.

நரகந்தானகலுஞ்சூட்சம் நாங்களுறைக்கமாட்டார்
நரகந்தானகலுஞ்சூட்சம் நவிலுவோநரகமத்தில்
நரகந்தானகலுஞ்சூட்சம் நவிலுவேநன்ருய்க்கேளு
நரகந்தானகலுஞ்சூட்சம் நாட்டினில்நவிலொண்ணுதே.

ஒண்ணுன நாதாக்க ளுறுதியாய்ச் சொன்னசூட்சம்,
மெண்ணுன மாதாக்க ளுரைசெய்யா தொழிந்தசூட்சம்,
ஒண்ணுன சிவனுரன்று வுமையவட் குரைத்தசூட்சம்,

ஒண்ணான சூட்சங்கண்டா லொழிந்திடும் வினைகள் தானே. 7

நூல்களை ஆராய்ந்து பார்க்க.

வினையொழி சூட்சந்தன்னை விபரமாய்க் காணவேணும், வினையொழி சூட்சந்தன்னைக் கருத்தினாற் காணவேணும், வினையொழி சூட்சந்தன்னை மெய்யினாற் காணவேணும், வினையொழி சூட்சங்காண நூல்களை விரைந்துபாரே. 8

பாருநீபூரணத்தி நூல்கள் பறபலவுந்தானே [ரு
காருநீகொங்கணவர்சொன்ன கடைக்காண்டமதனைப்பா
சீருடன்பிறவிதீறச் செப்பினேன்சூட்சந்தன்னை
யாருமேஅறியச்சொன்னேன் மறிந்தவன்ஞானியாமே.

பிரணவக்கவசம்.

ஞானமாஞ்சூட்சந்தன்னை நவிலுவேநாதவிந்து
மோனமாம்பிரணவத்தை முழுதுமேவளையக்கட்டி
வானமாமளவுதன்னை வளைத்துநீசத்தியோடே
யேனமாம்கடிவேயேறிக் கலையினில்சூலமிட்டே. 10

இட்டிடுஞ் சூலத்துக்கு யிருபுற மெழுத்தைக்கேளு, விட்டதோரெழுத்தினோடே விடாதயிந்திரண்டுஞ்சேர்த்து, பட்டதோர் சூலத்தின்மேற் பகர்ந்திடச் சத்தி

யிட்டு, யட்டமா மேகசூட்ச மாவென்று வறிந்து கொள்ளே. 11

அறிந்திந்தச்சூட்சந்தன்னை யரித்தகடன்னிற்றேறி
செரிந்திடுமெண்கோணமிட்டு திக்குபாங்கரையவைத்து
பிரிந்திடுவாசல்நாலு வளையிரண்டென்றுபேசி
பரிந்திடுங்கணேசன்கந்தன் பத்திரக்காளிப்பேரே. 12

பாருநீவீரபாகு தேவரும்பரிவதாலல்
சேருநல்வாசல்விட்டுச் செப்புறேன்தரையில்கேளி
காருநீதூரமாகக் கருதியென்விரல்தாழ்வாக
வோடுமேகுளிகைசூழ்வா ரொருநான்குங்கும்பமாமே.

கும்பம்ஸ்தாபிக்க.

கும்பத்தினிறையத்தண்ணீர் சேரவேகந்தமிட்டு
அம்பிற்றவாடைசுற்றி யதன்மேல்மஞ்சளப்பி
யின்பமாவிலையுஞ்சாற்றி யெலுமிச்சம்பழமுந்தேங்காய்
நம்புவாய்மஞ்சள்பூசி வாயிலினடுவேவையே. 14

வைத்துநீ யஷ்டகும்பம் வகையெல்லாம் பகையாய்த் தானே, வைத்துநீ யெட்டுதிக்கும் வகையதாய்ப் பின்பு கேளு, பத்துநீ செந்நெல்தன்னைப் பரப்பியே சூட்ச மிட்டு, முத்தியே கொடுக்கவென்று முறையுடன் பதிக்க முக்கியம். 15

உருசெபிக்க.

முக்கியமாகவென்றால் முறையதுசொல்லக்கேளு
சக்கியவாதிவாரங் காலையில்ஸ்நானஞ்செய்து
சிக்கியவோமமெக்கியஞ் சிறக்கவேகலக்கந்தீரு
முக்கியமாகச்சூட்ச முருவதுதாக்கிடாயே. 16

தாக்கியசக்கரத்திற் கும்பந்தான்சுத்திவைத்து [ச
நோக்கியவெழுத்திேனாடே நுய்யவோரெழுத்தாஞ்சூட்
மாக்கியவெழித்தினாலே வகன்றிடும்வினைகளெல்லாம்
பாக்கியமாகச்சொன்னேம் பகர்ந்திடிற்பாவம்போமே.

கன்மந்தீர அட்சரமெழுதிகட்ட.

போச்சதுநோயாளிக்குப் பிடித்திட்டவினைகளெல்லா
மாச்சுதுவறிந்தானை லப்பனேமனதில்வைத்து
ஏச்சுதுநோய்களென்று யேங்கிநீதிரியவேண்டாங்
காச்சுதுநோயாளிக்குக் கட்டிடசன்மம்போமே. 18

கன்மமேபோகவென்றாற் கடும்பிணியாளர்தம்மை
நின்மமாஞ்சரீரசுத்தி செய்துமேநிஷ்டையாக [செய்து
கன்மமேமுன்னேவைத்து நான்சொன்ன முறையைச்
நின்மலநீறுசாத்தி சூட்சத்தில்நிவர்த்தியாமே. 19

நிவர்த்தியாஞ்சூட்சத்துக்கு நிறைந்திடத்தீபதூபஞ்
சவிர்த்தியசாந்துபுட்பம் புழுகுடன்சுகந்தஞ்சாற்றி

யவித்தியமாகும்வண்ண மாறொடுதாயைப்போற்றி
யுவற்றியபாவந்தீரென் றுண்மையாயிருந்திடாயே. 20

இருந்திடும்வினைகளெல்லா மேகிடுமருந்துசித்தி
யறிந்திடும்பிணிகளெல்லா மகன்றிடுமகன்றனக்கே
தெரிந்திடுமாலட்சஞ்சொல் வுண்மையுமுண்மையாமே
கருந்திடுங்கசடருக்கு காரணங்காட்டொண்ணாதே. 21

சரக்குசுத்தி.

ஒண்ணானசரக்குசுத்தி யொருவருமுரைக்கவில்லை
கண்ணானசரக்குக்கெல்லாங் கன்மமுந்தீராவிட்டால்
பண்ணானமருந்திற்சேர்த்துப் பருகிடபிணியாளர்க்கு
நண்ணானசெந்தூரங்க ளூட்படும்நண்ணாகாதே. 22

லிங்கம்.

நண்ணானசரக்குசுத்தி நவிலுவோம்லிங்கத்துக்குப்
பண்ணானபழச்சாறோடே பருகியபாலுங்கூட்டி
சண்ணாகமேனிச்சாறு மூன்றையுஞ்சமனாய்ச்சேர்த்து
சுண்ணாகலிங்கத்துக்குச் சுறுக்கிடச்சுத்தியாமே. 23

வீரம்.

ஆச்சுதுவீரத்துக்கு வடைவுடன்சொல்லக்கேளு
பாச்சுதுயிளநீர்விட்டுப் பண்பாகயவித்துப்போட்டு
வூச்சுதுகடிகைமூன்று வுற்பனங்கண்டுகொள்ளு
காச்சுதுயிளநீருள்ளே கழஞ்சிநற்பூரஞ்சேரே. 24

பூரம்.

சேர்ந்திடுபூரத்திற்கு வெற்றிலைமிளகுகூட்டி
காய்ந்திடுகியாழஞ்செய்து கியாழத்தில்மூணுநாள்வை
வாய்ந்திடுகிழியாய்கட்டி வைத்திடுசுத்தியாச்சு
யாய்ந்திடுவெள்ளைசுத்தி வப்பனேயறையக்கேளே. 25

வெள்ளைப்பாஷாணம்.

அறையுறே னமுரிக்குள்ளே யிளகலா யறைத்துப் போட்டு, வரையுரேன் படிதாநென்று வற்றவே நன்றாய்க்காய்ச்சி, வுறையுறேன் கிழியைவாங்கிக் கழுவியே யுலர்த்திக்கொள்ளு, முறையுறேன் கெவுரிதத்தி முறையது பகரக்கேளே. 26

கெவுரிக்குதிரைப்பல்லி.

கேளதுபண்ணிப்பாலில் கிழியதுவாகக்கட்டி
ஆனதுகடிகையொன்று வலித்திடுநல்லசுத்தி
சாளதுகுதிரைப்பல்லி சுத்தியின்குணத்தைக்கேளு
நாளதுகடிகைமூன்று நாவினிலுமிழ்நீராலே. 27

மனோசிலை.

உமிநீரிலூரப்போடு வுலர்த்திடச்சுத்தியாச்சு
ஆமினிசிலையின்சுத்தி யப்பனேவறிந்துகொள்ளு
தாமினிக்காடிநாழி தண்ணிலேகடியைப்போட்டு
ஆமினிகடிகைமூன்று வலித்திடச்சுத்தியாமே. 28

பவளம்.

ஆமிதுபவளசுத்தி யாவின்மோரிருநாழிக்குள்
காமினிக்கிழியாய்க்கட்டித் தாக்கிடுகடிகைமூன்று
வோமிதுவுலர்த்திப்போடு வுத்தமம்நல்லசுத்தி
தாமிதுவரிதாரத்தின் சுத்தியைக்கருதக்கேளே. 29

அரிதாரம்.

கருதியவமுரிநாழி கல்சுன்னக்கலசமாகும்
பருகியேமேனிச்சாறு படியதுகால்தானாகும்
கருதிச்சேர்கடிகையொன்று கிழிதனைசுருக்காய்காச்சி
சுருதியேகலத்தில்சுத்தி சேர்த்திட்டுவுலர்த்திடாயே.

சலாசத்து கல்நார்.

உலர்த்தியேசலாசத்துக்கு வூறல்தான்போகக்கேளு, தலர்த்தியே பழச்சாறுதன்னில் காய்ச்சியே யுலர்த்திப் பின்பு, நலர்த்திய வெருக்கம்பாலி லூறவே நாளும் ரெண்டு, கலத்தியே கழுவிப்போடு கல்நாரின் சுத்தி வண்மை. 31

கெருடபச்சை.

வண்மையாங்கழுநைதநீரில் வாட்டிடுகடிகைமூன்று
கன்மையாம்பின்கொடுத்துக் கழுவியோரவியில்போடு
பண்மையாங்கெருடப்பச்சைப் பாங்கினைப்பகரக்கேளு
தண்மையாம்பயருபோலே தட்டியேகிழியைகாட்டே.

சீனக்காரம்.

கட்டியேகுமரிச்சாற்றில் கடிகைமுப்பதுவேகாய்ச்சி
யூட்டியேகழுவிப்பின்புவுலர்த்தியேவைத்துக்கொள்ளு
கட்டியுஞ்சீனக்கார சுத்தியின்சிறப்பைக்கேளு
ஆட்டியேயாவின்பாலி லூறவேயதிகசுத்தி. 33

பொரிக்காரம்.

சுத்தியாம்பொரிக்காரத்து சுத்திதான்சொல்லக்கேளு
புத்தியாய்க்கிழியாய்கட்டியெருமைசாணச்சாற்றில்(கிப்
வைத்துமேகொதிக்கும்போது வண்மைசேர்கிழியமுக்
பத்தியாங்கழுவைக்க தகையிலைபகரக்கேளே. 34

குக்கில்-குந்தரிக்கம்-காரம்.

பகருவேனெருமைமோரில் பண்பதாயூரப்போடு
தகருவேன்குந்திரிக்கஞ்சுற்றி சாற்றுவேன் சாராயத்தி
சருகுவேயூரப்போடு வொருநாளில்சுத்தியாச்சு [ல்
கருகுவேனகாரத்துக்கு மூத்திரத்தில்மூன்றுநாளே.

கெந்தி.

மூன்றுநாள்தானவிக்க முக்கியமந்தகந்தி
தாண்டவமாடுங்கெந்தி சத்தியின்சார்புகேளு
ஏன்றஆவெண்ணெய்விட்டு யிரும்பினிலுருகிப்பாலில்
ஆன்றயீரஞ்சுதிரஞ்சாய்க்க வதிகமாய்ச்சுத்தியாச்சே.

ரசம்.

ஆச்சுதுரசத்தின்சுத்தி யறையுறேனடைவாய்த்தானே
போச்சுதுபுகைபூரந்தான் மஞ்சளுஞ்செங்கல்தூளும்
பாச்சிதுபொடியிரும்பு போட்டுநீயரைத்துப்போடு
வாச்சுதுமேனிச்சாறுந் தேனும்பிரண்டையுமாய்மத்தி.

மத்தித்துப்பின்புகேளு மருவியயிஞ்சிச்சாறு
கொத்திணுவாரைப்பட்டை குறுகியகியாழந்தன்னில்
சித்திரமூலச்சாறு சேர்த்தரை திரிபலாதி
வத்தியகியாழந்தன்னில் மத்தித்தவளமைகேளே. 38

கேளுநீவமரியோடு கிளர்ந்திடுமத்தியத்தி
நாளினில்நாகப்பட்டை நன்றாகக்கியாழஞ்செய்து
வாளினில்வெவ்வேறாக வர்த்திக்கவணிகமாகும்
நாளினில்மதுரசூத மஃதும்வெவ்வேறதாமே. 39

ஆமினிவகைவகைக்கு யளவதாய்க்கொண்டுவந்து
தாமினிவொவ்வொன்றாகச்சலத்தினிற்கழுவிப்போட்டு
வோமினிவாலேசூத மூறுகாணிந்தசுத்தி
நாமினிமுடிதாரத்தின் சுத்தியைநவிலக்கேளே. 40

முடிதாரத்தின்.

கேளுநீபனையின்கள்ளு கெடியதாய்படிநாலுக்குள்
வாளுநீகிழியாய்க்கட்டி வைத்தேதறிவளமையாகும்

வாளிதுகழுவிவைக்க வண்மையாய்நல்லசுத்தி
யாளிதுதாரசிங்கி யதினுடசுத்திகேளே. 41

தாரசிங்கி.

அதினுடசுத்தியென்ன யாட்டுநீர்தன்னிற்காய்ச்சு
வதனமாங்கொட்டிநாலு வரிசையைவளமாய்க்கேளு
சதனமாமுலைப்பாலோடு சுத்தவெள்ளாட்டுப்பாலும்
பதனமாயொவ்வொன்றுக்கு நாழிகைபத்துபத்தே. ()

தொட்டிபாஷாணம்.

பத்துபத்தாகவூறிப் பார்த்திடஞ்சுத்தியாமுத்து
முத்தானதொட்டிபாஷாண முறையைக்கேளு
சத்துச்சத்தாகவெட்டி தாநெருக்கிழியாய்க்கட்டி
கொத்துக்கொத்தாகநெல்லி லவித்திடுகுறியைப்பாரே.

மடல்துத்தம்.

குறியென்ன கழுவிப்போடு கூறிய மடலின்சுத்தி, நறுவெண்ணை யதனிற்போட்டு நாளுரெண்டூறிவாங்கி, தெரிபடா தயிருக்குள்ளே செறித்திடு நாளொன்றுந் தான், பிறிவென்ன குமரிச்சாற்றில் மஞ்சளின் சாற்றி லோர்நாள். 44

துருசி.

நாளொருநாளாம்பூரங் கழுவியேயுலர்த்திப்போடு
பாழொருநல்லசுத்தி பச்சையின்துரிசைக்கேளு

வாமொருபசுவினீரில் வைத்தெரிபடிநாலுக்குள்
சீருடன்கழுவிவெய்யில் சிறப்புடனுலரவையே. 45

சாத்திரபேதி.

வைத்திடசுத்தியாச்சு மருவியசாஸ்திரபேதி
சைத்திடுநாரத்தங்காய் சாற்றினிலூரக்கண்டு
பத்திடகழுவிப்போட்டு பார்த்திடநல்லசுத்தி
நத்திடுமஞ்சனக்கல் சுத்தியைநவிலக்கேளே. 46

அஞ்சனக்கல்-நாகம்.

கேளப்பாபுளியினுரைச் சாற்றினிலூரப்போட்டு
நாளப்பாசென்றபின்பு நல்லதோர்சுத்தியாச்சு
வாளப்பாநாகசுத்தி கருவியேகேளுகேளு
தாளப்பாநல்லெண்ணெய்க்குள் தாமொருநாள் தானுகும்.

தாம்பரம்.

நாளதாய்பழச்சாறுக்குள் நாழிகையறுபதாகும்
வேளதாய்க்கழுவிப்போட்டு வெய்யிலிலுலர்த்திச்சுத்தி
கோளதாய்தாம்பிரசுத்தி கூறுவோமின்னங்கேளு
வேளதாயமுரியென்று விளம்பியபழச்சாறென்றே. 48

சாறுடன்சாரங்கூட்டி தாளகந்தானுங்கூட்டி
வீறுடன்கலக்கியேதான் வெய்யிலில்பத்துநாள்வை
நீருடன்கழுவிப்போட்டு நிசமதாய்ச்சுத்தியாச்சு
யாருடாநாகசுத்தி வறையுறேனறிந்துகொள்ளே. 49

நாகம்.

கொள்ளவேவமுரிதன்னிற் கூட்டிடுகல்லுச்சுன்னம்
முள்ளதுபழச்சாறேதா னுறவிடுவுருவாய்ச்சேர்த்து
வல்லதுநாகந்தன்னை யாட்டுநெய்தனிலுருக்கு
வுள்ளதுபத்துசாய்க்க நற்சுத்தியாகும்பாரே. 50

பாருநீகாந்தஞ்சுத்தி பகருவேன்கரணஞ்சாற்றில்
சீருடன்காச்சித்தேய்க்க சிறப்புடனேழுகாச்சி
வாருநீகழுவிவைக்க வண்மையாய்நல்லசுத்தி
பாருநீகாரீயத்தின் சுத்தியையறிவாய்கேளே. 51

கருவங்கம்.

அறிவது வெள்ளாட்டுநீ ரதினுடன் பிரண்டையின் வேர், சிறிவது யரைத்துப்போட்டு சிறக்கநல் லெண்ணெய்க்குத்தி, குறியுட னுருக்கிச் சாய்க்கக் குணமுடன் நீறுமாகு, மறிவது நல்லசுத்தி ஆச்சுது வழகுள்ளோர்க்கே. 52

பொன்னிமிளை அப்பிரேகம்.

உள்ளபொன் னிமிளைசுத்தி யுரைக்கிறே னுணர்வாய்க் கேளு, கள்ளவாங் கடிகைக்குள்ளே காச்சிடுமூன்று நாள்தான், வள்ளலேநல்லசுத்தி வண்மையாமப்பிரேகத்தை, வுள்ளது சொன்னேங்காடி தன்னிலே வூரப்போடே. 53

கல்மதம் - நேர்வாளம்.

போட்டதுபத்துநாள் தான் புகல்கிறேன்நல்லசுத்தி
யாட்டதுகல்மதத்தே வமுரியில்கழுவிப்போடு
தீட்டதுநல்லசுத்தி நேர்வாளஞ்சுத்திகேளு
கூட்டதுமேதிச்சாணி குழம்பினிற்கரைக்கநன்றே. 54

நன்றதுகிழியாய்க்கட்டி யெரித்துமேநன்றாய்க்கேளு, உண்டது வுலர்த்திக்கொட்டை யுடையதுநஞ்சைப்போக்கு, சென்றது காடிமோரு பழச்சாறு சேர்த்துக்கொண்டு, பண்டகு பருப்பைபோட்டு பத்துநாள் தன்னில் வாங்கே. 55

செங்கோட்டை-சிவதைவேர்.

வாங்கியே யுலர்த்திவைக்க வளமையாஞ் சுத்தியாச்சு
வோங்கிடு செங்கோட்டைசுத்தி வுச்சத்தி லூரப்போடு
வாங்கிநாளொன்றுசென்று லுலர்த்தியே வைத்திடாயே
வாங்குடன் சிவதைசுத்தி வகையுட னவித்துப்பாலில்.

பாலினிலமுக்கருவேர் பண்பதாய்ச்சுத்தியாகு, மூலிகையானதெல்லா வம்முறைப்படியேசுத்தி, ஆலிங்கபாஷாணங்க ளறுபத்திநாலுஞ்சுற்றி, யேலவேசொல்லிப் போட்டோ மின்னமுஞ்சொல்லுவோமே. 57

அறுபத்திஞலு சரக்குசுத்தி.

சொல்லுவோமின்னங்கேளு சூட்சமாமேகவாக
நல்லதோர்சரக்குசுத்தி விபரத்தைவிரித்துக்கேளு
நல்லதோர்மேனிச்சாற்றில் நவின்றதக்காளிச்சாறு
வல்லதோர்கையான்சாறா மத்தைபின்சாறுதானே. 58

சாறுதான்பழச்சாற்றோடே தன்னுடனமுரிகூட்டி
வாறுதான்காடிகூட்டி வைத்திட்டுமருந்துகேளு
வீறுதானுப்புச்சுண்ணம் வெடியுப்புதாரஞ்சீமை
கூறுதான்பலமொன்ருகக் கூட்டிநீவைத்திடாயே. 59

கூட்டியேவைத்துக்கொண்டு சரக்கறுபத்திஞலும்
நாட்டியேகிழியாய்க்கட்டி நலமுடன்மண்டலம்வை
தாட்டியாய்ச்சுத்திசெய்து சரக்கறுபத்திஞலு
நாட்டினிற்சுத்திசெய்யா வயித்தியம்நன்ருகாதே. 60

அஷ்டலோக மாரணம்.

நன்ருகவஷ்டலோக மாரணம்நவிலக்கேளு
பன்ஞனவஷ்டலோகம் பாச்சிடுகாரசாவி
வென்ருகவீரம்பூரம் வெள்ளையும்வெடியுப்போடு
வொன்ருகச்சமனுய்ச்சேர்த்து வடித்தரைகெந்திசூதம்.

சூதமாமருந்தையெல்லாஞ் சூட்டிடுசமனுய்நீயும்
வாதமாம்பழச்சாறிட்டு மத்தித்துப்பின்புகேளு

வேதபாமஷ்டலோக விதமெல்லாந்தகடாய்த்தட்டி
யேதமாமிதுகட்கெல்லா மிடைக்கிடைமருந்தைபூசு.

பூசியேபுலரவைத்துப் புதுசட்டிதனிற்பரப்பி
வாசிமேற்சட்டிமூடி மண்ணையுஞ்சீலைசெய்து
பேசியேகெசபுடஞ்செய் பெருமையாம்பற்பமாகு
மாசியேலோகமெல்லாம் வகையெல்லாமாகும்பாரே. 63

பாருநீலோகபற்பம் படிவெவ்வேருகச்
சீருடன்செய்துக்கொண்டு திடமுடன்செந்தூரங்கள்
ஆரினிசெய்யும்போது வடைவுடன்கூட்டியாட்ட
பாருநீபத்துக்கெல்லா மிதுவெனவிதனைப்பாச்சே. 64

பாச்சுவாய்குளிகைக்கெல்லாம் பரிவுடன்லோகபற்ப
மாச்சியர்முன்னேரெல்லா மறைந்திட்டபற்பங்கூட்டச்
சாட்சியாய்சொன்னதெல்லாஞ் சகலத்துக்கிதுவேகூட்டு
வாச்சுதுவயித்தியோர்க்கு வண்மையாமிந்தநூலே. 65

நூலினியாருஞ்சொன்னேர் நுணுக்கமாமிந்தப்போக்கு
கால்வழியறியமாட்டார் காசினிவயித்தியோர்கள்
பாலினிவெண்மைபோலே பாடினேன்பலநூலெல்லாம்
நால்வரைநாலும்பார்த்தால் நல்லதோர்விபரமாமே. 66

லோகச்செந்தூரம்.

விபரமாயஷ்டலோகம் விபரத்தைச்சொல்வேன்கேளு
யபரமாய்லோகபற்ப மதனிடைகெந்திகூட்டி

சிபரமாவீரங்கால்தான் சேர்த்துநீபழச்சாற்றாலே
வுபரமாய்ச்சாமமாட்டி யுலர்த்தியோர்வில்லைதட்டே. 67
தட்டியேரவியிற்காய்ந்தால் தகைமையாயோட்டில்வை
அட்டியேவோடுமூடி வப்பனேசீலைசெய்து [த்து
மூட்டியேகனபுடத்தில் மூட்டியேயாறக்கண்டு [வே.
செட்டியேவெடுத்துபார்த்தால் சிவந்திடுவெருக்கம்பூ
பூவதாஞ்செந்தூரத்தைப் பணவிடைபுசிக்கத்தேனில்
நாவதாம்பத்துநாளில் நன்றாகத்தீரும்நோய்கள்
சாவதாம்பாண்டுரோகம் சார்ந்தகாமாலைபித்தம்
பாவதாம்குன்மம்வாய்வு பறந்திடுபகரக்கேளே. 69
பறந்திடும்நீர்தோஷங்கள் மகோதரம்பாரிசவாய்வு
பிறந்திடும்நீராம்பல்தா னின்னமும்முடக்குவாய்வு [ள்
செறிந்திடுவாதபித்த சிலேஷ்டமத்தாலுண்டாம்நோய்க
அறிந்திடும்கெற்பவாயு யறுவகைசூலைபோமே. 70

காந்தச்செந்தூரம்.

சூலைபோங்கெற்பமுண்டாஞ் சுகமுளசெந்தூரந்தான்
ஆலயமாகச்சொல்வோங் காந்தச்செந்தூரந்தன்னைச்
சாலவேலோகம்போலே சார்வுசெந்தூரஞ்செய்ய
வாலையாங்தேனிலேகால் மண்டலமருந்தக்கேளே. 71
அருந்தவேமஞ்சாங்கோடு நீரிழிவுடனேமாறும்
திருந்தவேக்ஷயங்களீளை காசமுஞ்சிரசில்தோஷம்

பொருந்தியகிராணிதோஷம் பித்தமும்போகுஞ்சொன்
மிருந்திடும்வாயுவெல்லா மேகுமேயிதனைக்கண்டால். 72

காரியபற்பம்.

கண்டதோர்காரியத்தின் பற்பத்தைக்கருதிக்கேளு
யென்றதோர்பற்பத்துக்கு யிடைக்கிடைலிங்கங்கூட்டி
விண்டதோர்பழச்சாற்றாலே சாமமேயரைத்துவில்லை
யொண்பவேயுலரவைத்து வோட்டுமேலோடுமூடே. 73
மூடியேசீலைசெய்து முழப்புடமாறிப்பின்பு [டாற்
நாடியேபொடித்துவைத்து நல்லதோர்தேனிற்கொண்
கூடியேகிரந்திசூலை பதினெட்டுகுஷ்டந்தீரு
மோடியேபிரமேகங்க ளொழிந்திடுமுண்மைதானே. 74

வங்கபற்பம்.

உண்மையாய்வங்கபற்ப மிறுதியைச்சொல்லக்கேளு
வண்மையாமீயம்போலே வைத்திடுசெந்தூரந்தான்
தண்மையாயனுபானங்கள் தானணிந்துண்பாளுகில்
கன்மமாமுடலிலுள்ள வியாதிகள்காணுதெண்ணே. 75

தாம்பிரபற்பம்.

எண்ணவேதாம்பிரத்தி லிடைக்கிடைகெந்திகூட்டி
யுண்ணவேயெருக்கம்பாலி லூரவைத்துலரவைத்து
துண்ணவேயோட்டில்வைத்து துலங்கவேயோடுமூடி
மண்ணதுசீலைசெய்து கெசபுடமாடிப்போடே. 76

போட்டெடுயாரினபின் கல்மயில்கழுத்தாம்வர்னம்
நாட்டிடுமேதனிற்கொள்ளப் பணவிடைநயந்துப்பாரு
காட்டிடுபத்துநாளிற் கடுகியகுன்மமெட்டும்
ஊட்டிடுஞ்சகலநோயு மோட்டெடுத்தோடும்பாரே. 77

வெள்ளிபுற்பம்.

ஓட்டிடும்வெப்புபாவை நீராம்பல்மகோதரங்கள்
கூட்டிடுந்திரண்டவாய்வு சூலைந்தோடுங்கூர்மைகேளு
வாட்டிடுவெள்ளிபற்ப மதனிடகெந்திகூட்டி
காட்டிடுபழச்சாற்றாலே நயந்தரைச்சாமம்பாரே. 78

நாலினில்வில்லைசெய்து ரவியினிலூரப்போடு
ஆலினியிலையைப்போலேயடையைத்தான்வைத்துமூடி
பாலினில்சீலைசெய்து வைத்திடுகெசபுடந்தான் [மே.
பாலினில்முத்தைப்போலே பவளம்போல்சிவந்துபோ

சிவந்திடுஞ் செந்தூரத்தைப் பணவிடை தின்பீரா
கில், சிவந்திடும் நோய்களுக்கு வனுபான மறிந்துசெய்
யில், சிவந்திடும் நோய்களெல்லாங் கடலிலே யோடிப்
போகும், சிவந்தலைந் தேறுதற்குச் சூட்சத்தைப் பகர்ந்
திட்டேனே. 80

தங்கபற்பம்.

இட்டதோர்தங்கபற்ப மிடைக்கிடைகெந்திகூட்டி
திட்டமாய்சூதங்கூட்டி சிவந்திடப்பழச்சாறூட்டி

வட்டமாய்வில்லைசெய்து ரவியினில்வைத்துலர்த்தி
பட்டமாய்யோட்டில்வைத்து மறுபடியோடுமூடே. 81

மூடியேசீலைமண்செய் முக்கியங்கெசபுடத்தில்
வாடியேமயங்கவேண்டாம் வயித்தியர்களேகேளுங்கள்
நாடியேசெந்தூரந்தான் பணவிடைநல்குவீரேல்
கூடியேசன்னிவாதங் குலைகுலைந்தேகுமன்றே. 82

ஏகுமேசுரங்களெல்லா மிளைந்திடுமீளைகாசம்
போகுமேமேகசூலை புண்புரைசிலந்திகுஷ்ட
மாகுமேகுன்மவாய்வு வனலேழுவரட்சிகாந்தல்
வாகுமேக்ஷயரோகங்கள் பித்தமும்வாங்குமன்றே. 83

லோககுளிகை.

வாங்கிடுஞ் செந்தூரத்தின் வரிசைக ளெல்லாஞ் சொன்னேன், பாங்குடன் குளிகைசெய்யும் வரிசைதான் பகரக்கேளு, வோங்கிய தங்கம்வங்க முறுதியா மீயம்வெள்ளி, தீங்கலா பிரமலோகஞ் செய்திடு செந்தூரந்தான். 84

தானிதுவரைக்கழஞ்சி செந்தூரஞ்சரியாய்த்தூக்கி
பானறதாரங்கெந்தி மனோசிலைவீரஞ்சூத
மானதோர்லிங்கங்கார மதுவகைகழஞ்சியொன்று
நானிதுகல்வத்திட்டும் பழச்சாற்றில்சாமமொன்றே. ()

ஒண்ணெனவாட்டிமத்திக் கயருபோலுருட்டிநீளம்
பண்ணதுபூசைசெய்து பரிவுடன்நிழலிற்காய்ந்தால்
அண்ணதுசெப்பில்வைத்து ஆடெல்லாமடக்கேளு
நண்ணதுநாட்டிலுள்ள நாடகமாடுவோமே. 86

ஆட்டுவதென்னவென்று லடைவுடனிஞ்சிச்சாற்றில்
கூட்டியேமுலைப்பாலோடு கொடுத்திடச்சன்னியேறு
நாட்டினில்சுரங்களேது நவின்றிடும்வாதமேது
வாட்டிடுசிலேஷ்மமேது மயங்கியபித்தமேதே. 87

ஏதென்றுயிளைகாச மிளைப்புடன்க்ஷயங்கள்மேகம்
வாதென்றுவந்தகுன்மம் வாய்வுடன்வரட்சிகாந்தல்
மாதாக்கள்கெர்ப்பரோக மசனமாம்வாந்திவிக்கல்
ஊதுகாமாலைபாண்டு வுள்மூலமுளையுமெண்ணே. 88

உளதுசெய்கிராணிசூலை யுறுதிநீரிழிவுகுஷ்டம்
களவுசெய்கண்ணோயோடு கடிவிஷநோய்கட்பின்னு
மளவிடாநோய்களெல்லா மகன்றிடுமிதனைக்கண்டால்
தளவிதையரிந்துசெய்தால் தரணியில்நோய்நில்லாதே.

நில்லாதுநோய்களென்ற நிச்சயமெதிறுலென்றால்
வல்லாதவஷ்டலோக மாரணம்பண்ணுதாலே
சொல்லாதமாரணத்தை செந்தூரச்செய்கையாலே
சொல்லாதசூட்சந்தன்னைச் சொல்லியவுறுதியாலே. 90

சொல்லியசூட்சந்தன்னைச் சோதனையாகக்கண்டால்
சொல்லியகன்மமெல்லாந் துலைந்திடுஞ்சூட்சமாக
சொல்லியசூட்சமெல்லாஞ் சோதியதாகச்சொன்னேன்
சொல்லியநூலுக்கெல்லாஞ் சுருதியாமிந்தநூலே. 91

நூலெல்லாங் கண்டுதேர்ந்தால் நுணுக்கங்கள் பலவுந்
சாலவேசரக்குசுத்திசாற்றியகன்மசூத்திரம்(தோணுஞ்
ஏலவேயஷ்டலோக மாரணமியம்பினேம்நாம்
பாலதுபோலேயல்லோ பலமிதுமிந்நூலன்றே. 92

முந்நூறுமுப்பத்தாறு முதுமொழிகன்மசூத்திரம்
முந்நூறும்நூற்றைறம்பது முறையுடன்முடிவதாகு
முந்நூல்தானுயிரத் திருநூறுமறுநூருகு
முந்நூல்தானுயிரத்தை யதிகமாய்மொழிந்தவாறே. 93

வாறுகேள் முன்னூலாய்ந்து வடமொழி தமிழாற் செய்தேன், வாறுகேள் வாதம்யோகம் ஞானமும்வகை யாய்சொன்னேன், வாறுகேளாயிரத்தில் வயித்தியமதி கஞ்சொன்னேன், வாறுகே ளின்னூலெல்லாம் வகை யுட னுய்ந்துபாரே. 94

பாய்ந்துநீமுன்னூலெல்லா மறிந்துநீபார்த்தாயானல்
தோய்ந்திடும்வாதம்ஞானம் வயித்தியம்லோகபற்ப

மாய்ந்திடுலோகத்தோற்கு பிணியில்லைமரணமில்லை
பாய்ந்திட்டபாலேநீதான் பாவத்தைநிவர்த்தியாமே. ()

பாபத்தைநிவர்த்திசெய்து வயித்தியம்பரிந்துசெய்நீ
சாபத்துநிவர்த்திதன்னைச் சாற்றினேமுன்னூருள்ளே
வாபத்துக்குதவிசெய்யு மறிவுள்ளவயித்தியோரே
சீவத்திலுருதியாகச் சிவபூசைதிருந்தசெய்யே. 96

செய்வதுவயித்தியந்தான் வடுகனைசிறந்துபூசி
கைவருமஷ்டகன்மம் சிதம்பரம்கருதிப்பாரு
வுய்வதுவெல்லாஞ்சுற்றி நாடியினுறுதியாலே
கைவதுன்னுடலில்வந்த களவதும்நாடியாலே. 97

நாடிதானறியவேணும் நயத்தினைக்காணவேணும்
வாடியேமயங்கவேண்டா மருந்தினுகமத்தைக்கேளு
கூடியசிதம்பரத்தைக் குணமுடனெழுதிகட்டி
நீடியவஷ்டகன்மஞ் செய்திடநிவர்த்திகேளே. 98

கடுக்காய் லேகியம்.

கேளுநீகடுக்காய்நூறு பலமதுகியாழத்துக்கு
வாளுநீயிடித்துத்தாண்டி வைத்திடுநாழிக்குள்ளே
தாளுநீ தூணிவெல்லஞ் சலமதுசரியாய்விட்டு
யாளுநீயெட்டொன்ருக வதுதனைவடித்துவாங்கே. 99

வாங்கியகியாழத்துக்கு மருந்துநீமருவிக்கேளு
வோங்கியசிவனுதயிஞ்சி வுத்தமமிளகுவோமம்

பாங்குள்ளகடுக்காய்திப்பிலி * பஞ்சதாரையுமேலாக
வாங்கிதையரைத்துப்போட்டு வாவின்நெய்ப்படிதானே.

ஆமிதுகியாழத்துக்குப் பலமதுவரைத்துப்போடு
வாமிதுபாகுபோலே வற்றியபோதுநெய்யை
வோமிதுவிட்டுக்கிண்டி வுருதியாம்லேகியத்தை
தாமிதுபதனம்பண்ணிப் புன்னைக்காயளவுதானே. 101

அளவதாயுருட்டிக்கொள்ள வக்கினிமந்தஞ்சூலை
குளவதாமலசலங்கள் கூடியவாய்வுபத்து
களவதாமூலமாறுங் கடியதாய்தீருமென்று
பழுதிலாமுனிவன்சொன்ன பரிகரிபரிந்துபாரே. 102

வேறு நெல்லிக்காய் லேகியம்.

பாருநீநெல்லிக்காய் கியாழந்தன்னில்
பரிவாகப்போடுதற்கு விபரங்கேளு
தாறுநீபலம்நூறு நெல்லிக்காய்க்குத்
தூணிநீர்விட்டுமே வற்றக்காய்ச்சி
வாருநீயெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
வகையாகச்சட்டியிலே வைத்துக்கேளு
சீருடனேமருந்துவகை செப்புவேன்கேள்
சீரானதிப்பிலியு மிளகுமாமே. 103

* பஞ்சதாரையென்பது சர்க்கரை.

வே று.

சுக்குடனேமமூலம் கிரும்புவகைச்சோளமேளம்
குக்கிலும்வாய்விளங்கஞ் சீரகங்கொத்தமல்லி
வுக்குவாய்விளங்கமொன்று கூறியநீர்மதுரமுந்தான்
சர்க்கரைபலமும்பத்து தானதுகரைத்துக்கொள்ளே.

கரைத்திடுமருந்தையெல்லாங் கியாழத்தில்கரைத்து காச்சி, வுரைத்திடும் பாகுசேரி லொருபடி நெய்யை விட்டு, கரைத்திடு கிண்டிகிண்டி நேர்மெழுகதுபோல் வாங்கி, யரைத்திடு பதனம்பண்ணி பாக்களவாய் நீ கொள்ளே. 105

பாக்களவாகக்கொள்ள பகரவைமண்டலங்
கேக்குள்ளேமேகவஸ்தி சுரமுடனழலைகாந்தி
போக்குள்ளகிராணிவாய்வு பொருமலுமிருமலோடு
சீக்குள்ளக்ஷயமுமீளை சிலேஷ்பனமாண்டுபோமே. ()

தாணிக்காய் லேகியம்.

போமதுதாணிக்காயின் லேகியம்புகலக்கேளு
வாமதுபலந்தாறூறு வலித்ததைத்தூணிநீரில்
வேமதுவெட்டொன்றுக்கி விடையமுஞ்சாதிக்காயும்
தாமதுவபினிகஞ்சா தான்பலமொன்றதாமே. 107

ஒன்றெனமருந்தையெல்லா முரவாகத்தூளுசெய்து
நன்றதானசீனியது பலமதுநவிலக்கேளு

கண்டனகியாழுந்தன்னில் கரைத்துப்பாகதிலேசேரில்
வென்றதுசூரணத்தை வேகமாய்யூத்திக்கிண்டே. 108

கிண்டியே மெழுகுபோலே பதத்தினி லிறக்கிவைத்து, மண்டலங்கொள்வீராகில் வயிற்றினில் பொருமல் வாய்வு, அண்டிய கடுப்புரெத்த மஸ்திசுரங் கிராணி மூலம், பண்டுள்ள வாயுவேரிடு வுஷ்ணமும் பறந்து போமே. 109

சுக்குலேகியம்.

பறந்திடு மென்றுசொன்னேம் பகர்சுக்கு லேகியங் கேள், சிறந்திடு மிந்தலேகியம் குணந்தனை யென்ன சொல்வேன், உரைத்திடுஞ் சுக்குநூறு பலமதுவுகந்து வாங்கி, யரைத்திடு சலந்தான்தூணி யதிலிட்டு வெட்டொன்றாக. 110

ஆக்கியே பனையின்வெல்ல மதனிடை பலந்தான் பத்து, தாக்கியே கரைத்துக்கொண்டு தானதுபாகுசேரில், நோக்கியே யிதனுக்குள்ளே நுகர்ந்ததைச் சொல்லக்கேளு, தூக்கியே படிதானேமங் கருதின்வேப்பிலையின் தூளே. 111

தூள்வகைரெண்டுங்கூட்டி தூவியேகிண்டிகிண்டி
ஆளதுஆவினெய்தான் அரைப்படிகூடவிட்டு

கூளதுபோலேவாங்கிக் கொள்வதுபுன்னைக்காயாம்
நாளதுநாற்பதுக்குள் நவில்கிறேன்தீருநோய்கள். 112

தீரும்நோய் கிருணிமூலந் தசவாய்வு வதிசாரங்கள், வாருநீ கடுப்புரத்தம் பாரிசவாயுதீருஞ், சேருநீ பொருமல்மந்தஞ் செரியாமை யுள்ளேப்பங்கேள், ஆகுமே யறியச்சொன்னேன் மகன்றிடுமறிந்துகொள்ளே. 113

மிளகுலேகியம்.

அறிந்துகொள் மிளகுலேகிய மதில்நூறு பலந்தான் வாங்கி, சொறிந்துகொள் தூணிநீரில் சிக்கென வெட்டொன்றாக்கி, பரிந்திடு கற்கண்டப்பா பலமது பத்துப் போட்டு, முறிந்திடக் கிண்டிக் காச்சிப் பாகுபோல் வாங்குமுன்னே. 114

முன்னதுவரத்தையக்கிரு சீரகமதுகிரும்பு
வன்னதுவேலங்கோஷ்ட மதிமாமதுரந்தேற்றான்
பன்னதுவாய்விளங்கம் பத்திரிநருக்கமூலஞ்
சொன்னதுவகையொன்றுக்குப்பலமதாய்தூக்கிடாயே.

தூக்கியே பொடித்துக்கொண்டு பாகினில் தூவிக் கிண்டு, ஆத்தியே நறுநெய்நாழி யதிற்பாதி தேனுமாகும், பாக்கியே மெழுகுவென்னும் பதத்தினி லிதனை வாங்கி, நோக்கியே வைத்துக்கொண்டு நுணுக்கத்தைச் சொல்லக்கேளே. 116

சொல்லக்கேள் தீரும்நோய்கள் சிலேஷ்பனந்தொண் ணூற்றாறும், வெல்லக்கேள் பொருமல்வாய்வு வக்கினி மந்தத்தோடு, நல்லாய்க்கேள் சூடுகாந்தல் நலமுடன் சுரமுமஸ்தி, வல்லபசிலேஷ்பங்களீளை வாய்வது வாங் குந்தானே. 117

வாங்குதிப் பிலிதாநூறு பலமது தூணிநீரில், வாங் கியே யெட்டொன்றாக்கி மருந்தினை யுரைக்கக்கேளு, பாங்குகற் கண்டுபத்து பலமது பாகுசெய்து, வாங்கு சுக் கொடுகடுக்கா யரத்தை வக்கிராகார வோமம். 118

சீரக லேகியம்.

ஓமமுஞ்சீரகந்தா னுற்றதோர்கொத்தமல்லி
சாமமேவெட்பாலோடி செண்பகமபூவுங்கோஷ்டம்
நாமமேவகையொன்றுக்கு நலமுடன்பலந்தான்வாங்கி
பாகமேயிடித்துத்தூளாம் பாகினில்கண்டுவாரே. 119

வார்த்திடுசெய்யுந்தேனும் வகைவகையுரியுழக்கு
சார்த்திடுமெழுகுபோலே தானதுவாங்கிவைத்து
கார்த்திடுதாணிக்காயி னளவாகக்கருதியுண்ண
மாய்த்திடும்பிணிகளெல்லா மண்டலந்தன்னிற்கேளே.

தன்னியசிலேஷ்பனந்தான் தட்டழிந்தோடிப்போகு
மன்னியவாதம்போகு மதிசாரகிருமல்போகு

முன்னியவாய்வுதீரு முப்பிசமாந்தந்தீரும்
பன்னியயீளைகாசம் பயப்படும்பாருபாரே. 121

பாருமுக்கடுகுஞ் சொன்னேன் பகர்திரிபலையுஞ் சொன்னேன், ஞறுவெள் ளுள்ளிப்போக்கை யறையுமேற ளைங்காயத்தைச், சீறுடன் பலம்நூறப்பா செலமது தூணிக்காய்ந்து, வாகுவேவெயட்டொன்ருக்கி வடித்திடு மருந்துகேளே. 122

மருந்துவைங்காயஞ்சுக்கு வால்மிளகுமிந்துப்பு
திருந்தியயேலமோமந் திப்பிலிமிளகுசீரகம்
விருந்தியதிரிபலைவெட்பாலை விடையமும்பலமதாக
பொருந்தியவாய்விளங்கம் வேட்டுஞ்சீனிபோடே. 123

போட்டிடுசீனிதானும் புகழுடன்பாகுசெய்து
மாட்டிடுசூரணத்தை வார்த்திடுபசுவின்நெய்யால்
நாட்டியேபடிகால்கும் நவின்றிடுமருந்தொன்ருகக்
காட்டிடுமெழுகுபோலே கட்டிடுபுன்னைக்காயே. 124

காயதுவாகவுண்டால் கழன்றிடும்வியாதியெல்லாம்
நோயதுவாய்வுவாதம் நொடியினிற்பறந்துபோகும்
வாயதுகுன்மமென்று மகன்றிடுமின்னஞ்சொல்வேன்
நீயதுகண்டுகொள்ளு நிச்சயஞ்சொல்லக்கேளே. 125

கடுகுலேகியம்.

சொல்லியகடுகுநூறு பலமதுதூக்கிக்கொண்டு
நல்லதுதூணிநீரில் நவிலுவேனெட்டொன்றாக்கி
தள்ளியகருப்புக்கட்டித் தான்பலம்பத்துசேர்த்து
வல்லிமையபூசைசெய்து வதிலிடுமருந்துகேளே. 126

கேழ்ப்பதுவோமஞ்சுக்கு திப்பிலிகிரும்புபாகும்
காற்பதுகொத்தமல்லி சீரகம்நவிலக்கேளு
தாற்பதுவாய்விளங்க மஞ்சளும்விடையந்தானும்(ட்டே
வேற்படவகையொன்றுக்குப் பலமொன்றுவறுத்துக்கூ

கூட்டியேபொடித்துத்தூளாய் குலவியபாகில்சேர்த்து
காட்டியநல்லெண்ணெய்தான் கால்படிகலந்துகிண்டி
நாட்டியேமெழுகுபோலநயம்படவழித்துவைத்து(ளே
தீட்டியேபுன்னைக்காய்பிரமாண மருந்திடச்சிகிச்சைகே

சிகிச்சையா மூலரோகம் வாய்வுடன் திரட்சிதானுஞ், சிகிச்சையாம் புளித்தேப்பங்கள் செரியாமை பொரு மல்தானும், மகிழ்ட்சியாங் குன்மம்வாய்வு பதருமல் சலங்கள்ரெத்தம், வெகிட்சியாம் புழுக்கள்தீரும் வெந் தயம் பரிந்துகொள்ளே. 129

வெந்திய லேகியம்.

பரிந்தவெந் தயந்தானப்பா பலமதுநூறுவாங்கி, பரிந் திடு செலந்தான்தூணி யதில்விட்டு யெட்டொன்றாக்

கித், தெரிந்திடும் பஞ்சதாரை சிறந்திடப் பலந்தான் பத்து, திருந்திடக் கரைத்துப் பாகாய் சேர்த்துமே மருந்துகாணே. 130

காணதிமதுரங்கோஷ்டம் கசகசாசிரகந்தான்
பூணதிவிடயமோமஞ் சாதிக்காய்கிருாம்புவோடு
தாணவேகஞ்சாசரக்கு குமேருசாணிபலமாய்த்தூக்கி
லூணவேபொடித்துக்கொண்டு வுறவிடுபாங்கில்தானே.

பாங்கினில்நறுநெய்நாழி யாலதும்விட்டுக்கிண்டி
வாங்குநீமெழுகுபோலே வழித்துநீவைத்துக்கொண்டு
வக்கினிகடுப்புக்கெல்லா மூட்டிடுகழஞ்சிவீத
மக்கினிக்கிருணியென்ற வகையெல்லாமகன்றுபோமே.

ஓம லேகியம்.

அகன்றிடு மோமலேகிய மறைகிறேன் பலம்பத் தப்பா, புகன்றிடுஞ் சலந்தான் தூணி புகட்டியே யெட் டொன்றாக்கி, பகன்றிடுஞ் சர்க்கரையும் பலம்பத்து வாங்கிவந்து, நிகன்றிடும் பாகுஞ்செய்து நிச்சய மருந் துகேளே. 133

சொல்லக்கே ளமுக்கிருவேர் குக்கிலுஞ் சீனப்பா வும், நல்லக்கேள் கார்க்காலோடு நாட்டிட வகைபலந் தான், அல்லக்கேள் சூரணத்தை யப்பனே வதனிற்

பாச்சு, வெல்லக்கேள் நறுநெய்நாழி விட்டதில் கிண்டி
வாங்கே. 134

வாங்கியேகழஞ்சுவீத மண்டலங்கொள்வீராகி
லோங்கிடும்பறங்கிசூலை வுலர்த்திடுஞ்சிரங்குகுஷ்டந்
தாங்கியகிரந்திபுண்கள் சார்ந்திடுசில்விஷங்கள்
ஈங்கிஷமானவாய்வு வாதமுமேகுமன்றே. 135

ஏகுமேகாயந்தன்னை யியம்புறேமின்னங்கேளு
பாகுசேர்சோமனுதி பலமதுயிருபத்தைந்து
வாகுமேதூணிநீரில் வாட்டியேயெட்டொன்றாக்கி
யாகுமேசீனிபத்தும் பலமதுவிதனிற்பாச்சே. 136

பெருங்காய லேகியம்.

பாச்சியேபாகுசெய்து பரிந்திடுமருந்துகேளு
வாச்சியேவெள்வெங்காயங் கடுகுடன்மிளகுஞ்சுக்கு
வாச்சியேதிப்பிலியோமம் சீரகம்மதுரங்கோஷ்ட
மாச்சியேபலமொன்றாக வாவினெய்ப்படிகால்வாரே. 137

பாலதுவார்த்துக்கிண்டி காய்ந்துமேமெழுகதானல்
சாலவேவழித்துவைத்துத் தான்தினங்கழஞ்சிவீதம்
ஏலவேகொள்வீரானு லியம்புரோந்தீரும்நோயை
வோலமாய்வாய்வுவாத மோடிடுமுண்மைதானே. 138

உண்மையா மருந்துகொண்டால் பத்தியமுறைக்கக்
கேளு, கன்மநன் மிளகுமஞ்சள் சீரகங்கருதிக்கொள்ளு,

தண்மையாங் கறிவகைகள் சாற்றுரோந் தரணியோர்க்கு, வண்மையா முருங்கைபிஞ்சு மாகுந்தான் ஆகுமாமே

பிஞ்சொடுவாழைக்காயும் பிசகில்லாசிறுநல்கீரை
யஞ்சியேபொன்னுங்காணி யவரையின்பிஞ்சுமத்தி
துஞ்சிடுந்தூதளங்காய் துவரைநெல்லிக்காயோடு
றெஞ்சியமுசுட்டைக்கீரை கொண்டிடகுணமதாமே.

குணமதாம் பால்நெய்மோரு குறுமயி லுடும்புகாடை
பணமதாய் வெள்ளாட்டுவற்றல் பகர்ந்திடு கவுரிதாரியுங்
கணமதா முடும்புமுள்ளான் கடல்மீனில் சுதும்புகிழங்கா
நிணமதாமாமைவிராலும் நீந்திடுமுளுவைத்தானே. [ன்

உளுவையுஞ் சுளுதிருக்கை நெத்திலி யுறுதியாகும், பழுதிலா விதுகளெல்லாம் பகர்ந்திட்டோம் பொதுவாய்த்தானே, யெழுதியநோய்கள்கண்டு யேய்த்துக்கொள்ளின்னதென்று, கொழுகிய பத்தியத்தைக் கூறினோங் கூட்டிக்கொள்ளே. 142

லோக குளிகை.

கொளவதுலோகபற்பங் கூறியவகைவகைக்கு
யளவதுயிடைக்குக்கெந்தி யதிலிடுகழஞ்சிவீதந்
தளவதுகுமரிச்சாற்றால் தானரைத்துண்டைசெய்து
நளவதுசெப்புக்கிண்ண மதிலிட்டுரவியில்வையே. 143

ரவிதனில்வைத்தபின்பு நாழிகைபதினென்றால்
கவியவே தீப்படுத்துக் கனலதுபுகையுங்காணு
மவியவேகண்டெடுத்து வப்புறம்நெற்குள்வைத்து
புவியிலேபத்துநாள்சென் றெடுத்துநீபுதுமைகேளே.

புதுமைகே ளதுதப்பாமல் போட்டுவை வெவ்வே றாக, யெதுமையா நோய்கட்கெல்லா மினங்கண்டு கருதிப்பார்த்து, மதுமையா மதுபானங்க ளதற்கும்வெவ்வேறதாக, புதுமையாம் பற்பங்கள்தான் பாச்சிடு வியாதிகண்டே. 145

கண்டுகொ ளஷ்டகன்ம வாரணங் கடந்தமந்திரம், கண்டுகொள் கன்மசூத்திரம் பகர்ந்திடு மிதுவுமொப்பு, யென்றுசொல் மனுஷர்பேரி லெதிர்த்திடும் வியாதியெல்லா, முண்டுதூ மூன்றுபேர்க்கு முறைந்திடுந் தேகந்தானே. 146

தேகந்தான் வலுத்துப்போச்சு தேசத்தின் வயித்தியோரே, ஆகமே வருந்துதென்று தன்மத்தை யகன்றிடாதே, பாகமே யறிந்துசெய்தால் பலித்திடுங் கருவும்வேண்டாம், நாகமே யணிந்தமூர்த்தி நவின்றதை நாம்சொன்னோமே. 147

மேலதாம்லோகபற்ப மிருந்ததோர்சொர்னபற்பஞ்
சாலவேரெண்டுமொன்றாய்ச் சமனிடையாகத்தூக்கி

பாலதாம்வீரம்லிங்கம் பாச்சிடைக்கிடையதாக
வாலிப்பாமுமிழ்நீராலே மத்தித்துவில்லேதட்டே. 148

தட்டிய வில்லேதன்னைக் காய்ந்தபின் வோட்டில்வை த்து, வட்டமா யோடுமூடி வகையுடன் சீலேசெய்து, திட்டமாய்க் குக்கிடத்தில் சிவந்துமே நீறிப்போகு, மெட்டமாம் வெள்ளிசெம்பி லேழுரை யிதுசொன் னேமே. 149

சொன்னது தொகைதானூற்று வைம்பது சூட்சமா கு, முன்னமே சொன்னநூலில் முக்கிய மிந்நூல்சூட் சம், வன்னமே வாலுலோக மரணமாமதிசூட்ச, முன் னமே சொன்னனூற்றி யைம்பது சூத்திரமுற்றே. 150

அகஸ்தியர் கன்மசூத்திரம்-150

முற்றிற்று.

சிவமயம்.

இருபத்தைந்தாவது,

அகஸ்தியமகாமுனிவர்

கருக்கிடை சூத்திரம்-36.

தாம்பிரபற்பம்.

பாரப்பாசெம்பினுட வெள்ளைகேளு
  பரிவானதாம்பிரத்தை குகையில்வைத்து
சேரப்பாமதியுப்பு பலமேபோடு
  சேர்த்துருகும்போதினிலே மருந்துகேளு
சாரப்பாவண்டமது பலந்தானிரண்டு
  கனத்தநவாச்சாரமதி லிரண்டுபோடு
சீரப்பாகல்வத்தில் தூளதாக்கி
  சிறந்தபொடிவெங்கார மறைதான்போடே. 1

போட்டதனைபொடித்துநன்றாய்ப் பொடியைத்தூவு
  புகழானசெம்பினிட லூரல்போகுந்
தாட்டிகமாய்பின்பெடுத்து வங்கக்குத்தி
  தனியோட்டிலூதிடவே களிம்புபோகும்
மாட்டதனைகுகையிலொரு பலம்போடப்பா
  வளமாகக்கண்விட்டு வுருகும்போது

நாட்டியதோர்சுன்னத்தில் தாளகத்தைவைத்து
நலமாகபதினைந்து தரமேநீற்றே. 2
நீற்றினபின்வாங்கியதை யெடுத்துக்கொண்டு
நிறுத்திடுவாய்பலமொன்று சாரங்கால்தான்
போற்றியிடைபழச்சாற்று லரைத்துக்கொண்டு
புகழாகப்பயறளவு வுண்டைசெய்து
நேற்றியாய்க்குடிக்கையிலே சத்தைவாங்கும்
நேரானசெம்பதுதான் வெங்கலம்போலாகும்
மாற்றியதையரைப்பலந்தான் கல்வத்திட்டு
மாற்றியிதைப்பொடித்திடுவாய் தூளாய்க்காணே. 3
காணப்பாயிந்திடைக்கு வீரம்போடு
கடுகவேசாமமொன்று யரைத்தாயானல்
தோணப்பாசெலமுண்டாய் மெழுகுபோலத்
துடியானசூதமரைப் பலமேபோடு
வாணப்பாசெம்பிடைக்குச் சூடன்போடு
யரைக்கும்போததில்வெள்ளை யரைக்காற்போடு
நீணப்பாசூடனிடை வுரவும்போடு
நிலைக்கவேயரைத்துநன்றாய் வில்லைதட்டே. 4
வில்லைதனையுலர்த்தியபின் குகைக்குள்வைத்து
மேல்மூடிசீலைசெய்து புடத்தைப்போடு
வில்லையதுகெசபுடத்தில் வெள்ளையாகும்

விளங்கியதோர் தாம்பிரத்தின் வெள்ளையப்பா
வில்லையது பதனமாய் வைத்துக்கொண்டால்
மேகமொடுபதினெட்டுக் குஷ்டந்தீரும்
வில்லையினால்வாயுவெல்லா மொழிந்துபோகும்
விளங்கியதோர்பித்தமெல்லாம் பறந்துபோமே. 5

பறந்துபோமனுபான மறிந்துகொண்டால்
பற்பத்திற்குறைவொன்று மில்லையப்பா
யிறந்துபோம்வியாதியெல்லா மென்னசொல்வே
னெடுத்திட்டசெம்பினுட வெள்ளைவேகம்
கறந்தபால்சாதத்திற் கூட்டச்சொல்லு
கருப்புகட்டிபோட்டுமே காச்சிக்கொண்டு
அறந்தானேதன்மத்துக் காகச்சொன்னேன்
அப்பனேநாகத்தின் வெள்ளைகேளே. 6

நாகபற்பம்.

கேளப்பாசுன்னமொடு காரஞ்சேர்த்து
கெடியாகவமுரிவிட்டு தண்ணீராக்கி
வாளப்பாநாலுபல மதற்குள்ளே தான்
மைந்தனேநாகத்தை யுருக்கிச்சாய்ப்பாய்
வேளப்பாயிரண்டுபத்து விசையேசாய்ப்பாய்
மீறுகின்றநாகமதி னூறல்போகும்

மாளப்பாபின்பெடுத்துப் பழச்சாற்றில்சாய்ப்பாய்
வப்பனேநாகமது சுத்தியாச்சே. 7

ஆச்சப்பாயீரஞ்சு திரமேசாய்ப்பாய்
யப்பனேகுகையிலிட்டு வுருக்கிப்பின்பு
வாச்சப்பாசுத்திசெய்த தாளகந்தான்
வரிசையாய்பழச்சாற்று லரைத்துக்கொண்டு
காரப்பாபத்திரமாய் ஆரவிட்டு
கனமுடன்குன்றியிடை வில்லைசெய்து
காச்சப்பாரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
கனக்கவேநாகமொரு பலத்தில்தாக்கே. 8

தாக்கப்பாதாளகத்தி லுண்டைதன்னை
தயவாகவொவ்வொன்றாய்க் கொடுத்தபின்பு
வாச்சப்பாநாகமது தெரிக்கும்பாரு
மைந்தனேயின்னுகம் பலமதொன்று
ரீக்கப்பாகல்வத்திற் பொடிக்கத்தூளாம்
நேராகவீரமதிற் பாதிபோடு
தூக்கப்பாசூதமதிற் கால்தான்போடு
துடியானவுவருப்பு யரைக்காற்போடே. 9

போடப்பாநவாச்சார மரைக்காற்போடு
புகழ்ந்ததொருமருந்திடைக்குச் சூடன்போடு
வாடப்பாயெருக்கம்பால் வெண்கருவும்விட்டு

வரைத்திடுவாய்சாம மிரண்டுவில்லைதட்டு
போடப்பாவுலர்ந்தபின்பு சுன்னச்சிலை
போத்தியேசுண்ணும்புக் குள்ளேவைத்து
சாடப்பாகெசபுடமாய் தீயைப்போக்கி
தவளநிறமாவெந்து வெள்ளையாமே. 10

வெள்ளையதாகுமது விரிந்ததப்பா
வியாதிக்குமனுபான மறிந்துபோடு
பிள்ளையடாபெருவதன்றி குன்றியிடைபோடு
பேரானவாதமென்ற தெண்பதுக்குங்
கொள்ளையடாபித்தமது ஞாற்பதுவும்போகும்
கூறுவேன்சேத்துமநோய் தொண்ணூற்றாறுங்
கள்ளரைப்போற்பயந்தோடும் நாகங்கண்டாற்
கருத்துள்ளதாதிகளே கண்டிடீரே. 11

ஜெயநீர்.

கண்டாயேயின்னமொரு வயித்தியஞ்சொல்வேன்
கண்கெட்டவாதிகளே கருதிக்கேளே
வுண்டானசேதியிது மகத்தானசாபம்
உத்தமனேபூநீறு பலந்தானென்று
கண்டானசாரமது பலந்தானென்று
சாமமொன்றுவரைத்து பீங்கானிலிட்டு

பண்டானவமுரிவுப்பு காற்பலமேபோட்டு
பதருமல்பனியில்வைக்கச் செயநீராமே. 12

லோகபற்பம்.

செயநீருலரைத்திடவே மருந்துகேளு
திடமாகக்காரமொன்று சாரமொன்று
செயநீராந்தாரமொன்று வீரமொன்று
செப்புகிறேன்கர்ப்பூர மைந்துகூட்டி
செயநீராலரைத்திடவே சாமமொன்று
திரண்டல்லோமெழுகாக மூன்றுபங்குசெய்து
தயவாகவரப்பொடியை பழச்சாற்றிற்போட்டு
தனையெடுப்பாய்நாலுநாள்பின் கழுவிவாங்கே. 13

வாங்கியிந்தவரப்பொடிதா னொன்றும்சேர்த்து
மைந்தனேயொருபங்கு மருந்துக்காக
வோங்கியேபிசைந்தொன்றாய்க் குகைக்குள்ளிட்டு
வுத்தமனேமேல்மூடிச் சீலைசெய்து
நீங்காமற்குகையுருக நன்றாயூது
நிலைத்தொருமணியாக நிற்கும்பாரு
சாங்கமாய்நெருக்குமிந்த மணிதானையா
தயவாகபின்புமொரு பங்கும்சேரே. 14

சேர்த்துமேலூதிடுவாய் மறுக்காலுந்தான்
சிதருமல்கைமுறையா யறைக்கும்போது

நாட்டியேபின்பெடுத்து வுருக்கும்போது
நலமான தங்கம்போற் கண்விட்டாடுந்
தாட்டிகமாயம்மணியைக் கல்வத்திட்டு
சவ்வீரஞ்சரியிடையா யரைக்கும்போது
மூட்டுமடாகண்டைக்குப் பாதிசூத
முறவானசாரங்காரச் சூடனென்றே. 15

சூடனொடுமருந்தைந்து முறவாயாட்டச்
சுகமாகவெள்ளையுடன் வரமும்போடு
நாடவேமெழுகாகும் வில்லைதட்டு
ரவிமுகத்திலுலர்ந்தபின்பு சுன்னச்சூலை
யூடவேசுத்தியுடன் சுண்ணம்பில்வைத்து
வுத்தமனேகெசபுடமாய்க் கனலைமூட்டி
வாடவேவேண்டாங்காண் வயித்தியோரே
மகத்தான தவளநிற மாகும்பாரே. 16

பாரப்பாலோகவெள்ளை வேகமெத்த
பாய்ச்சப்பாவனுபான மறிந்துபோடு
சேரப்பாபாண்டுவகை யெல்லாம்போகுஞ்
செகமறியமேகமென்ற தெல்லாம்போகும்
காரப்பாசோகையொடு குன்மம்போகும்
காமாலைசோகையொடு விழிவாய்ப்போகும்

வேரப்பாபித்தத்தினுல் சோபம்போகும்
விளங்குகின்றசேத்துமந்தான் பறந்துபோமே. 17

காந்தபற்பம்.

பறந்துவிடுகாந்தத்தை யிப்படியேசெய்யிற்
பரிவாகக்காந்தமது வெள்ளையாகும்
பிறந்துவிடும்நோய்களெல்லா மெங்கேபோகும்
மெடுத்திட்டாற்காந்தவெள்ளை வேகமெத்த
மறந்துநீபோகாதே கைமுறைதானப்பா
வளமானலோகத்தின் செந்தூரங்கேளு
அறந்தழுக்கிற்சுத்திசெய்து லோகந்தன்னை
வப்பனேபலமொன்று கல்வத்தாட்டே. 18

லோகசெந்தூரம்.

ஆட்டுதற்குசுத்திசெய்த கெந்திதன்னை
யப்பனேபலமொன்று கூடப்போட்டு
ஆட்டுதற்குபழச்சாற்றுல் சாமமொன்று
வரைத்திடுவாய்வில்லைதட்டி யுலரப்போடு
ஆட்டுதற்குமுப்பதெருக் குள்ளேபோடு
வளமாகலோகசெந் தூரமாகும்
ஆட்டுதற்குசெந்தூரங் கண்டிடைக்கி
வப்பனேகெந்தகத்தைத் தூக்குதூக்கே. 19

தூக்கியேபழச்சாற்றாற் சாமமொன்று
துவளவரைபூநீறுங் காலுஞ்சேர்த்து
தாக்கியேயரைத்தபின்பு வில்லைசெய்து
சாதகமாயுலர்ந்தபின்பு புடத்திற்போடு
வாக்கிலேசெந்தூர லோகமப்பா
மைந்தனேயரைப்பணந்தா னனுபானத்தில்
ஆக்கியேயந்த வியாதிக்குத்தான்
அனுபானந்தனையறிந்து லோகம்போடே. 20

போடவேவாயுவொடு பித்தரோகம்
புகழானசேத்துமத்தால் வந்தநோயு
மோடவேசெய்யுமிதில் வெளிதாமையா
வுரையார்கள்நாதாக்கள் சுளுகிதென்று
நாடவேலோகச் செந்தூரந்தன்னில்
நலமாகவொருகளஞ்சி யெடுத்துக்கொண்டு
நீடவேலிங்கமொரு கழஞ்சிகூட்டி
நிலையானவீரமொரு கழஞ்சிநாலுங்கூட்டே. 21

கூட்டியேபழச்சாற்று லரைக்கும்போது
கொடியதொருகெந்தகந்தான் கழஞ்சிபோடு
வாட்டியேயிரண்டெருவிற் புடத்தைப்போடு
வளமாகவாரினபின் னெடுத்துப்பாரு
காட்டிலேயிருந்தசித்தர் மேய்ப்பாரப்பா

காரப்பாசெந்தூரங் கண்டுகொள்ளே
வீட்டிலேயிருந்தவர்க்குக் கொடுக்கநன்று
வெளியிலேயிருந்தவரும் கொள்ளநன்றே. 22

கொள்ளாதசெந்தூரந் தனக்குப்பாதி
கூட்டுவாய்லிங்கத்தை முலைப்பாலாலே
விள்ளாமலொருசாம மரைத்தபின்பு
விரல்நீளமுண்டைசெய்து வுலர்த்திப்போடு
தள்ளாதசன்னிவகை யெல்லாம்போகுந்
தாதுவிர்த்தியுண்டாகுஞ் சாதிலிங்க
முள்ளபடிவாதிகளே சொன்னேன்கேளு
வாதத்தில்வாதமது வொழிந்துபோமே. 23

காந்தச்செந்தூரம்.

ஒழிந்துபோங்காந்தத்தை யிப்படியேசெய்யில்
வுனக்கொப்பார்சொல்வயித்திய னீசனப்பா
மொழிந்துபோங்காந்தமே செந்தூரமாகி
வுத்தமனேசாதிலிங்கங் கூடச்சேரில்
வொழிந்துபோம்பாண்டு காமாலைரோகம்
முன்மூலமொன்பதுவும் பறந்துபோகு
மொழிந்துபோம்வாதபித்தம் ஐயங்காணு
முசத்தியப்பாகாந்தத்தின் சிகப்புத்தானே. 24

தங்கச்செந்தூரம்.

தானென்றயேமமது வெள்ளையாகச்
சாற்றுகிறேன் தங்கமொரு பலத்தகட்டில்
வேனென்றநாகத்தின் வெள்ளை தானும்
விளங்கவேகாற்பலந்தா னிறுத்துக்கொண்டு
வானென்றவீரமொரு களஞ்சிகூட்டி
மைந்தனேபுழுகுமரைக் களஞ்சி கூட்டி
கானென்றவெண்கருவா லரைத்துக்கொண்டு
கனக்கவேபூசிடுவாய் பரித்தகட்டின்மேலே. 25

மேலிட்டமருந்துகளுந் தங்கந்தன்னை
விருப்பமாயண்டநீர் கீழ்மேலிட்டு
பாலிட்டவெள்ளையைப்போற் தங்கம்நீறும்
பரிவாககெசபுடமாய்த் தீயைமூட்ட
மேலிட்டயேமமது நொறுக்கிநிற்கு
மென்மக்காள் கல்வத்தி லரைக்கத்தூளாம்
தாலிட்டதங்கதளந் தனக்குப்பாதி
மாட்டுவாய்பூரமது பலமுங்காலே. 26

பூரத்தினிடையோடு புனுகுதன்னை
புகழாகவண்டரியம் புனுகுவேகம்
பூரணத்தினிடையோடு ரசத்தைதன்னை
போதத்தாலிவ்வளவுஞ் சேர்த்துப்போடு

வீரத்தால்தங்கமது வெள்ளியாகும்
வீணல்லகெசபுடத்திற் போடுபோடு
தீதற்றவண்டநீர் கீழ்மேலிட்டு
தீப்போடுதங்கமது தவளமாமே. 27

தவளமென் றயேமத்திற் சரியாய்லிங்கஞ்
சாதித்துமுலைப்பாலா லரைத்துக்கொண்டு
தவளமதுவில்லைசெய்து வுலரப்போடு
சாந்தமாயோரெருவிற் புடத்தைப்போடு
தவளமென்றபரியங்கே செந்தூரமாகும்
சன்னியென்றமூலமெல்லாம் பறந்துபோகும்
தவளமென்றதங்கத்தின் செந்தூரத்தை
சாதகமாய்வாதிகளே செய்துபாரே. 28

பாரப்பாசந்திரோ தயந்தானிந்த
பரிவெள்ளைலிங்கத்திற் சேர்த்தபோதே
பாரப்பாபூபதியா னிதற்குயீடோ
பலபலசெந்தூரவகை யிதற்குயீடோ
பாரப்பாயிதையெடுத்து வெள்ளிச்செம்பில்
பத்திலொன்றுகொடுத்திடவே யேழுமாகும்
பாரப்பாகுன்றியிடை யனுபானத்தில்
பண்பாகக்கொடுத்திடநோய் பறந்துபோமே. 29

பூபதி.

போமப்பாசெகந்தனிலே நோய்கள்போக
பூபதிக்குமருந்தொன்று சொல்லக்கேளு
நாமப்பாவொளிக்கறியோம் தங்கவெள்ளை
லோகவெள்ளைகாந்தவெள்ளை நாகவெள்ளை
தாமப்பாசெம்புவெள்ளை யஞ்சுமொக்கச்
சரியிடையாய்க்கழஞ்சிரெண்டு வீதந்தூக்கி
காமப்பால்விட்டரைப்பாய் கழஞ்சுபத்து
காட்டப்பாவறுக்கையிலே முத்துப்போடே. 30
போடப்பாபவழமொடு வயிரம்போடு
புஷ்பராகம்போடு பச்சைபோடு
நாடப்பாசிவந்தமணி ரத்தினம்போடு
நலமாகவகையொன்று மரைக்கழஞ்சிபோடு
தேடப்பாகெந்தகமோ கழஞ்சிநாலு
செயமானமுப்பூவுங் கழஞ்சிநாலு
ஊடப்பாசூதமது கழஞ்சியெட்டு
வுத்தமனேதாளகந்தான் கழஞ்சியொன்றே. 31
ஒன்றிடுவாய்மனோசிலைதான் வெள்ளையொன்று
வுறவானதுரிசொன்று துத்தமொன்று
நன்றெனவேசாரமொன்று சீனமொன்று
நலமானவீரமொன்று பூரமொன்று

சென்றதொருபொற்றிலையின் சாற்றாலாட்டி
திறமாகசாமமொன்று வரைத்தபின்பு
தன்றிடவேயம்முரிவிட்டு சுருக்குதாக்க
சம்பழத்தின்சாற்றாலே சாமமாட்டே. 32

சாமமொன்றுவரைத்திடுவாய் சாற்றைவிட்டு
சாதனையாயரைத்தபின்பு வில்லைசெய்து
காமமென்றபுதுக்கலசத் துள்ளேவைத்து
நலமாகமேல்மூடிச் சீலைசெய்து
மோனென்றவைம்பதொரு புடத்தைப்போடு
வொன்றுமங்கேபுகையாமற் கட்டிநீறுஞ்
சேமென்றபுடமாறி யெடுத்துப்பாரு
செந்தூரமருணநிற மாகும்பாரே. 33

பாருநீசெந்தூரங் கண்டிடைக்கி
பாதிலிங்கமுலைப்பாலா லாட்டியேதான்
பாருநீவிரல்நீளங் கம்பிசெய்து
பரிவாகவுலர்த்தியதை பதனமாய்வை
காருநீகுருபதத்தை மூலம்பாரு
கைலைவாழ்வைரவனை பூசைபண்ணி
சேருநீதேவியைத்தான் தியானம்பண்ணு
சிறக்குமிந்தபூபதிக்கு சிவமொப்பென்னே. 34

சிவமானபூபதியை யனுபானத்திற்
திறமாகவரிசியிடை கொடுத்தார்கேளு
சவமாகப்போனாலுந் தாதுவுண்டாய்
சாதுரியபிராணன்வரும் விழித்துப்பார்ப்பான்
நலமானபிரமலபி யிவ்வளவேயாகில்
யாசித்துபேசிவிட்டு மரணமாவான்
தவமானவாதிகட்கு பூபதியைச்சொன்னேன்
சாஸ்திரபடிவயித்தியஞ்செய் தன்மமாமே. 35

ஆமப்பாயிந்தபடி வயித்தியம்பாரு
மஷ்டதிசைமெச்சவுன்னை வாழ்த்தும்லோகம்
நாமப்பாவயித்தியன் மருந்தையெல்லாம்
நலமாகக்குறுக்கிவைத்தேன் முப்பத்தாறில்
வாமப்பாயிந்தவகை மருந்தெல்லாம்வைத்தால்
வாய்க்குமடாவுந்தனுக்கு யிந்தபாகம்
தாமப்பாயெட்டிரண்டு மிருபத்தைந்து
தடையறவேயுருவேற்றச் சித்தியாமே. 36

அகஸ்தியர் கருக்கிடைசூத்திரம்-36

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

இருபத்தாறுவது,

அகஸ்தியமகாமுனிவர்

குருநூல்முப்பூ - 50.

காப்பு - வெண்பா.

வானும்புவியு மதியுங்கதிரொளியும்
தேனுந்தெளிந்த சிவகுருவே-தானுந்தான்
நான்மறையுமாராய்ந்து நன்னூலாயைம்பதையுந்
தானருளுங்குஞ்சரத்தின் தாள்.

வேறு.

மயமானமுப்பூவின் மார்க்கந்தன்னை
வயித்தியத்திலாக்கியே விரித்துச்சொல்வேன்
செயமானகணபதியுங் கந்தன்றானுஞ்
சிவனோடேவுமையாள் பார்வதியுங்கூட
நயமாகயெப்போது முன்னேநின்று
நாடியேமுப்பூவை நயந்துகேட்க
வயமாகச்சொல்லுகிறேனைம்பதுக்குள்
வயித்தியரேயிப்பொருளை வணங்குவேனே. 1

வணங்குவதுயெதையென்றூர் குருவின்பாதம்
வாலையொடுசிவன்பாதம் நிர்வாணிபாதம்
வணங்குவதையாரையென்றற் கணபதியுங்கந்தன்
வாகாகப்பூசிக்க வரிசையாகும்
வணங்குவதுவைம்பதுக்குள் முப்பூவப்பா
வாதத்துக்காகிரது வயித்தியத்திற்காகும்
வணங்குவதுவைம்பதையும் வணங்கவேணும்
வயித்தியத்திற்கிதுவுயிர்காண் வாதிகேளே. 2

வாதியென்றுலிந்தமுறை யறியவேண்டும்
வாதந்தானேதிசெய்ய வயித்தியமேதப்பா
ஆதியென்றவயித்தியந்தான் பிரம்மவித்தை
யாத்துமாவைரட்சித்தா லவனேசித்தன்
நீதியென்றதர்மமது நிலைக்கவேணும்
நீனிலத்திலுயிர்களுக்கு மிரங்கவேணும்
ஓதியதோர்கன்மத்தில் தர்மமாகி
வுத்தமனேவயித்தியத்துக் குறுதிகாணே. 3

உறுதியாமொருநூற்றி னன்பதுக்குள்
உரைத்ததொருலோகமா மணிதைக்கேளு
உறுதியென்றமுப்பூவின் சுண்ணம்வேணும்
யில்லாவிட்டாலொன்றுமில்லை யுடைந்துநீரும்
உறுதியென்றவைம்பதையும் விட்டபேர்க்கு

வுலகத்தில்வயித்தியந்தா னுண்டோயில்லை
உறுதியென்றமுப்பூவை நிறுத்திக்கொண்டு
ஓகோகோலோகமெல்லா மோகநீறே. 4

நீற்றுவகையறிந்தவனே வயித்தியனாகும்
நிலைத்ததொருவாதியென்றால் நீற்றுவன்பார்
சாற்றுகின்றமுப்பூவை யறியவேணும்
சாதகமாய்க்கைமுறைகள் தப்பாவண்ணம்
பார்த்துரைத்துசுத்திமுறை காணவேணும்
பருவமாய்க்குருமுடிக்குப் போகவேணும்
சாத்திரத்தின்முறையறிந்து குருவைச்சேர்ந்தால்
தவறாதுபொருளொன்றுஞ் சார்ந்துபாரே. 5

பாரடாமுன்னுரைத்த முப்பூவெல்லாம்
பரிவானசித்தருக்குஞ் சிவயோகிக்குஞ்
சேரடாவைம்பதுக்குள் சொன்னேன்முப்பூ
செகத்திலுள்ளமானிடர்க்குச் செய்யவேண்டி
யூரடாவேறுகொண்டா லுத்தருக்கு
உறுதியாய்திரேகமது பெலத்துப்போச்சு
ஆரடாயென்னைப்போற் சொல்லப்போறார்
ஆச்சரியமுப்பூவி னருமைபாரே. 6

பாரென்றவுவருப்பைக் கொண்டுவந்து
பரிவாகசுத்தஜலந் தன்னிலிட்டு

சீருடனேகலக்கியே தெளியவைத்து
தெளிவாகக்காய்ச்சிநன்றாய் வற்றினுக்கால்
நீரிலேமறுபடியும் விட்டுக்கிண்டி
நிலையாகத்தெளியவைத்து யிறுத்துக்கொண்டு
வாரமுடன்காய்ச்சியே வற்றவைத்து
வாகாகயிப்படியே காய்ச்சுகாய்ச்சே. 7

காய்ச்சுகின்றமுறைக்கெல்லாஞ் சுத்தஜலம்விட்டு
கலக்கியேதெளியவைத்து காச்சுகாச்சு
ஆச்சிந்தபூவதுதான் வெளுத்துப்போகும்
அப்புறத்தேதவைத்துயினி வறையக்கேளும்
வாச்சுதொருகரியுப்பை வாரிக்கொண்டு
மானிடர்கள்கூட்டுமுப்பில் மார்க்கங்கேளு
பாச்சிந்தபடிசுத்த ஜெலத்தைவிட்டு
பரிவாகத்தெளிவிருத்து பத்துமுறைகாச்சே. 8

முறையாகநிலவுப்பைச் சொல்லக்கேளு
மூதண்டபிர்மாண்ட விந்தும்பின்னே
அறையானபூமியுட நாதமாச்சு
யாதியுப்புசிவமென்று யிதற்கேபேரு
மறைவாகவொளித்துவைத்தார் நூல்களெல்லா
மார்க்கமெல்லாஞ்சொல்லுகிறேன் வரிசையாக

நிறையாககல்லுப்பால் வளர்ந்ததப்பா
நீற்றியேதின்பவர்க்கு சுண்ணும்பாச்சே. 9
சுண்ணமென்றுலோகத்தோர் கட்டுநீற்றி
சுகமாகதாய்போலத் தின்பார்கேளு
சுண்ணும்புக்கல்லென்று யிதற்கேபேரு
சுந்தரவிபூதியு மிதற்கேபேரு
யெண்ணமுள்ளசுண்ணமப்பா காரச்சுண்ண
மியல்பானகல்லுப்பு சுண்ணமாச்சு
தண்ணியிலேபோட்டவுடன் நீறிப்போச்சு
சவுக்காரகுருவாச்சு சார்ந்துபாரே. 10
சார்வாகயிதைமறைத்தார் சித்தரெல்லாஞ்
சமுசயங்களில்லையப்பா வெளியாய்ச்சொன்னேன்
சீரானகல்லதுதான் துய்யவெள்ளை
செகத்திலிந்தகல்லுதான் மெத்தவுண்டு
நீருனகல்லொன்று மாகாதப்பா
நாமலவாம்வெள்ளைக்கல் பிர்மகற்பம்
சார்வாகயிதையெடுத்து வழுரிக்குள்ளே
யப்பனேயுவர்மண்ணைக் கரைத்துகொள்ளே. 11
கொள்ளவேயதிலிந்தக் கல்லைப்போட்டு
குறையவேகாய்ச்சிவிடு கட்டிபோகும்
வெள்ளையாய்ச்சுண்ணக்கல் கட்டிப்போச்சு

வேதாந்தமூர்த்தியென்று மிதற்கேபேரு
கல்லென்றகல்லதனை வண்டநீரால்
கருவாகயறைத்ததனை வில்லையாக்கி
வுள்ளபடிசொல்லுகிறே னுலையிலூத
வுத்தமனேசுண்ணும்பா முறைத்துவூதே. 12
ஊதிடவேசுண்ணமுமாஞ் சலத்தைவாங்கு
வோகோகோகொதித்துவற்றி நீறிப்போகும்
வாதிடவேபீங்கானில் வைத்துநீற்று
வளமாகஜலம்போலே நிறையவிட்டு
யாதியாமண்டலமதனை வைத்தாயானல்
அதின்மேலேவுப்புவந்து படரும்பாரு
சோதியாமுப்புதனை வழித்துவாங்கி
சுகமாகபலமொன்று தூக்கிக்கொள்ளே. 13
தூக்கியேவகையொன்று பலமொன்றாக
சுகமாகச்சூடனெரு பலமுங்கூட்டி
நோக்கியவண்டநீர் விட்டுஆட்டி
நுணுக்கமாய்வில்லைசெய்து வூறவைத்து
தாக்கியேவெந்தபின்பு வோடுமூடி
சாதகமாய்ச்சீலைமண்ணுஞ் சாத்திக்கொண்டு
பாக்கியேமுழப்புடத்தில் நீறிப்போகும்
பண்பானவிதையெடுத்து பகறக்கேளே. 14

கேளப்பாவீரமொரு களஞ்சிகூட்டி
கிருபையுள்ளபுழுகதிலே களஞ்சிகூட்டி
நாளப்பாபூரமொரு களஞ்சிகூட்டி
காட்டிலுள்ளசந்தபளச்சார் விட்டுஆட்டி
தாளப்பாவில்லைசெய்து ரவியில்போடு
சாதகமாய்முழப்புடத்திற் போட்டுவாங்கி
வேளப்பாசுண்ணமது கடுங்காரமாச்சு
வெகுசுருக்குப்பூனீறு குருவிதன்றே. 15

குருவேதோமுறையேதோ வென்பார்மாண்பர்
கூறியதோர்நூல்காணார்க் குருட்டுவாதி
தருவானமுப்பூவை பாரார்மாண்பர்
தாரணியில்மனிதர்களை மயக்குவார்பார்
உருவானகல்லுப்பை யறியமாட்டார்
உலுத்தருக்குவாதமது வுண்டோயில்லை
தெருவோடேயலைகிறதோர் நாயைப்போலே
சென்மித்தவாதருக்கு வாதமேதோ. 16

ஏதென்றுபோகாமற் சொல்லக்கேளு
யெடுத்ததொருதுறைக்கெல்லா மெளிதேயாகும்
வாதென்றபேர்களெல்லா மயங்கிப்போக
வயித்தியத்தின்றிரவுகோல் மார்மேலாணி

தூறெதன்றசெந்தூரம் வைப்புக்கெல்லாந்
துடியானபூநீறு சொல்லிப்போட்டேன்
காணென்றவுபதேசங் குருதான்சொல்வார்
கைகண்டவுருவாச்சு கருதிப்பாரே. 17

பாரப்பாயிதிலேவோர் களஞ்சிவாங்கி
பாச்சியேலோகத்தை நீற்றிப்போகும்.
வாரப்பாவொருநூற்றி லன்பதுக்குள்
வைத்ததொருமர்மந்தான் முப்பூவாலே
சீரப்பாகுருவைவிட்டுச் செந்தூரத்தால்
சிவக்காதுயிடையில்லை செயமாகாதே
ஊரப்பாயிக்கருவை வெளிக்கவில்லை
யொருகோடிநூலுக்கு ளொளித்தார்சித்தர். 18

சித்தாகவேணுமென்று லின்னூல்பாரு
சிறப்பானமுப்பூவுக் கின்னூல்பாரு
பத்தாகவாதத்துக் கின்னூல்பாரு
பாரிலுள்ளோர்க்கின்னூலைப் பகரவேண்டாம்
பாகானமுப்பூவை விடுக்கலாகா
பாவிகட்குச்செந்தூரம் பகரலாகா
போக்கானகன்மத்தை நிவர்த்திசெய்து
புவியதனில்வயித்தியஞ்செய் புண்ணியமாமே. 19

ஆமிந்தவகையெல்லாந் தெரியச்சொன்னே
 மப்பனேயுருக்கினதைச் சொல்லவில்லை
நாமிந்தவகையெல்லாஞ் சொன்னேமப்பா
 நரசென்மமானதெல்லா மதிகசென்மம்
ஓமிந்தசீவசெந்தச் சிவனார்நீற்றி
 வுலகத்திலுண்டாக்கி சிருஷ்டிசெய்தார்
வாமிந்தசித்துக்கள் நடக்கையாலே
 வந்துதடாநோய்களென்ற வறுமைதானே. 20

தானென்றநோய்களினால் செத்துப்போனால்
 தாரணியில்மனிதருண்டோ தாயேசொல்வாள்
வானென்றசிவனைக்கேள் மைந்தாவென்று
 வாய்சொல்லமாதாவே நீயேசொல்லு
தேனென்றமனோன்மணியாள் சிவனைக்கேட்டு
 செகத்தினிலேமனிதரைநீ சிருஷ்டிசெய்தாய்
நோயென்றுவியாதிகளை யுடனேவிட்டு
 ஓகோகோமரணத்தா லுய்வதேதோ. 21

உய்வதினால்வெகுபாவ மென்றுபோற்றி
 வுமையவள்தானவர்பாதம் பணிந்துகேட்க
செய்வதென்னவவரவர்கள் கன்மத்தாலே
 தீவினைகளாலெடுக்கச் சடலத்தோர்கள்

நல்வினையாலுய்யாம லடியேனுக்கு
நல்வாக்குத்தந்தருளி நல்கவேணும்
மைவிழிசேருமையாளே வுலகத்தோர்கள்
வயித்தியரேமருந்தொன்று வகைசொல்வீரே. ()

வகையானமூலிகையுங் காரசாரம்
வளமானவுபரசமும் பாஷாணங்கள்
தகையானநவரத்தின மண்டலோகம்
தனிற்சீவசெந்துமுதல் தரணியோர்கள்
வகையானநோய்கட்கு மருந்திதென்று
மகத்தானமேகமெல்லா மாண்டுபோக
தகையாமற்றுனெனக்கு உபதேசித்தாள்
சாற்றினேன்வயித்திய மிரண்டுலட்சங்காணே. 23

காணப்பாபத்துவா யிரமுஞ்சொன்னேன்
கனமானவாயிரத் தைந்துநூல்தான்
பூணப்பாவருநூறு மிருநூறோடு
புகழானமூன்றுபத்து மைந்துமாகத்
தோணப்பாகன்மசூத் திரமுந்நூறு
துறையானவன்பதுக்குள் சுருக்கிப்போட்டேன்
வீணப்பாமற்றதெல்லா மிந்நூல்விட்டால்
வேறுனமுப்பூவின் வீதிதானே. 24

வீதியாய்ச்சொல்லுகிறே னுருக்கினத்தை
வெட்டவெளியாகவுந்தான் விபரமாக
யாதியாமுப்பூவிற் காரஞ்சேர்த்து
வழுகானகாந்தத்தை யிடைக்கிடையேசேர்த்து
பூதியாமுலைப்பாலால் விட்டூட்டு
புகழானகுகைக்குள்ளே வைத்துமூடி
வூத்தானகுகையதனி லுருக்கிநீற்று
வோகோகோவொருமணியா யுருகிப்போமே. 25

போமென்றயிரும்பினுட பொடியைவாங்கி
புகழானவைந்திடைக்கி குருவைப்போட்டு
தாமப்பாமுலைப்பாலில் சாமமாட்டி
சாதகமாய்க்குகைக்குள்ளே வைத்துமூடி
நாமென்றதாக்குகையி லுருக்கியாட்டி
நலமானவொருமணியாய் நிற்கும்பாரு
வானென்றவப்பிரேக நவநீதத்தை
மாட்டியேயிடைக்கிடைமுன் மருந்துகூட்டே. 26

கூட்டியேமுலைப்பாலால் சாமமாட்டி
குகைக்குள்ளே வாரியிட்டுமூடிக்கொண்டு
நாட்டியதோர்குகையிலிட் டுறுக்கித்தீரு
நலமாகவொருமணியாய் நாட்டிப்பாரு

மூட்டோடேவாங்கிவைத்துப் பின்புகேளு
முனையானகெருடபச்சைக் கல்லுவாங்கி
யாட்டியேகுளிக்கல்லிற் பொடித்துக்கொண்டு
வழுகாகவைந்திடைக்கி மருந்துகூட்டே. 27

மருந்தென்னகருவிதனைச் சேர்த்துக்கொண்டு
வளமானமுலைப்பாலி லாட்டியாட்டு
குருந்தென்னகுகையிலிட்டுச் சில்லுபோட்டு
கூறுதுவூதிடவே மணியுமாகும்
விருந்தென்னகல்நாரை வாங்கியேதான்
விருதானகுருக்கூட்டி விரைந்துஆட்டி
யருந்துகின்றபாலாலே யாட்டித்திரு
வப்பனேயுலையில்வைத்து மூட்டிவூதே. 28

மூட்டியேயுறுக்கிடவே மணியுமாகு
மூதண்டசகஸ்திரமாம் வேதிகேளு
தாட்டியேயிடைக்கிடைதான் குருவைச்சேர்த்து
சாதகமாய்முலைப்பாலா லாட்டித்திரு
ஆட்டியேகுகையில்வைத்து மாட்டிவூது
வப்பனேவொருமணியாய் நிற்கும்பாரு
தேட்டியேடங்கணத்தைச் சேர்த்துக்கொண்டு
திடமாயிடைக்கிடைதான் குருவைக்கூட்டே. 29

குருவதனைகூட்டியென்ன பொடித்துக்கொண்டு
கூசாமல்மூலைப்பாலால் விட்டுஆட்டே
திருவானகுகையில்வைத்து மூடிக்கொண்டு
திறமாகவாறவிட்டுத் திரளுமட்டும்
பருவமுடன்வகைபார்த்துக் குகைக்குளிட்டு
பாங்காகமூன்றுமுறை குறுக்கிவூதி
மருவாகமணியாக வாங்கிக்கொண்டு
வளமானவண்டத்தோல் வாங்கிடாயே. 30

வாங்கியேசவ்வுதன்னைத் தள்ளிப்போட்டு
மருந்தென்னகுருதன்னை யிடைக்கிடையேகூட்டி
வாங்கியேமூலைப்பாலை விட்டுவிட்டு
வளமாகக்குகையில்வைத்து வாங்கிவூது
யேங்கியேமணியாக யிறங்கிப்போகும்
யின்னமொருசேதியுண்டு யியம்பக்கேளு
தூங்கியேதிரியாதே சொல்லக்கேளு
துடியானசங்கதனைப் பொடியாய்த்தூக்கே. 31

தூக்கியேயிடைக்கிடைதான் குருவைச்சேர்த்து
துலங்கவேமூலைப்பாலை விட்டுஆட்டி
தாக்கியேகுகையில்வைத் துருக்கியாட்டு
வப்பனேயொருமணியா யாகும்பாரு

நோக்கியேசிலாசத்து சொல்லக்கேளு
நுணுக்கியேயிடைக்கிடைதான்குருவைப்போட்டு
தாக்கியேமுலைப்பாலை விட்டுஆட்டி
சாதகமாய்க்குகையில்வைத்து சார்வாய்வூதே. 32

சார்வாகவூதவொரு மணியாய்நிற்கும்
தருவானநவரத்தினஞ் சொல்லக்கேளு
யாறுனவொன்பதையும் வெவ்வேறாக
வந்தந்தயிடைக்கிடைதான் குருவைச்சேர்த்து
பேறுகவரைத்ததனைக் குகையில்வைத்து
பெருமைபெறவூதிடவே மணியுமாகும்
கார்வாகமணிதருட வஸ்திதன்னை
கலந்ததனைப்பொடியாக்கிகருக்கிடைதான்காணே.

காணந்தயிடைக்கிடைதான் முலைப்பால்விட்டு
கலந்தரைத்துக்குகையில்வைத்து காடாவூது
பூணந்தாக்குகையில் வுருக்கித்திரு
புகழாகவொருமணியாய் நிற்கும்பாரு
காணந்ததலையினுட கொம்பைவாங்கி
கனமாகசீவியதை தூக்கிக்கொண்டு
வூணந்தயிடைக்கிடைதான் குருவைவிட்டு
வுறப்பர்கமுலைப்பாலா லாட்டிவாங்கே. 34

வாங்கியேகுகையில்வைத்து வருக்கத்தீரு
வளமாகக்குகையினுள்ளே கண்விட்டாயே
பாங்கியேவாமையுடல் தன்னைவாங்கி
பாங்காகயிடித்ததனை நொருக்கிக்கொண்டு
தாங்கியேகுருவதனைச் சமனாய்ச்சேர்த்து
சார்வாகமுலைப்பாலா லதனையாட்டி
நீங்கியேகுகையிலிட்டு யுருக்கியூது
நேராகவுருக்கினத்தின் நீதிகேளே. 35

நீதியாயுருக்கினத்தின் மணியையெல்லாம்
நிசமாகயிடைக்கிடைதான் கெந்திசேர்த்து
சேதியாயுடைத்ததனைப் பொடியாய்ப்பண்ணி
திட்டமாயரைத்திடுவாய் நாலுசாமம்
பாதியாய்வில்லைசெய்து வைத்துக்கொள்ளு
வழகானபழச்சாற்று லாட்டித்தீரு
வாதியாய்வந்தவனை வெளியில்வைத்து
வரிசையாய்மூன்றுநா ளாட்டிப்போடே. 36

போட்டதொருவில்லைதனை யோட்டில்வைத்து
புகழாகமேலோடு கொண்டுமூடி
நாட்டமாய்க்கவசித்து கெஜபுடத்தில்
நன்றாகச்செந்தூர மருணன்போலே

முட்டவேசெப்புதனிற் பதனஞ்செய்து
முக்கியமாய்த்தீருநோய் புகலக்கேளு
நீட்டவேயெங்கெதந்த நோய்கள்குஷ்டம்
நினைவானவனுபான மறிந்துசெய்யே. 37

செய்யவேயிரும்பதனைத் தேனிற்கொள்ள
செகத்திலுள்ளபாண்டுவகை யெல்லாந்தீரும்
பையவேகாந்தத்தை தேனிற்கொள்ள
மகத்தானவாயுவொடு பாண்டுபோகும்
உய்யவேயிப்பாகஞ் சஞ்சீவி
லுகந்தாக்கால்நீரிழிவு மோடிப்போகும்
நையவேகருடனைத்தான் தேனிற்கொள்ள
நாடாதுகணரோகம் நாடிப்பாரே. 38

பாருநீகல்நாரை சர்க்கரையிற்கொள்ள
பாரிலுள்ளரோகமது சேத்துமந்தீருஞ்
சேரவேசகஸ்திரபேதி பாலிற்கொள்ள
சேரானகுஷ்டநோய் சிதறிப்போகும்
வாருநீடங்கணத்தை யிஞ்சிச்சாற்றில்
பருகிடவேவாதசுரஞ் சன்னிபோகுஞ்
சீரவேவண்டத்தை தூதுவேளையிற்கொள்ள
சயமொடுகாசமிளைப்பு தீரும்யீளே. 39

யீளைபோஞ்சங்குசுன்னம் பனைவெல்லத்தில்
யிட்டாக்கால்வாயுவெல்லா மிறந்துபோகும்
வாளாகும்பித்தமெல்லா மாண்டுபோகும்
மைந்தனேயனுபானத் தறிந்துசெய்தால்
காளையாய்சலாசத்துச் செந்தூரத்தை
கடுக்காயிற்றின்றிடவே மகோதரங்கள்
பேளையாம்பெருவயர் நீராம்பல்போகும்
பெரிதானரத்தினத்தின் பெருமைகேளே. 40

பெருமையுள்ளமாணிக்கஞ் சாதிக்காயிற்கொள்ள
பெரும்பாடுயெலும்புருக்கிப் பிரிந்துபோகு
மருமையென்றபச்சைதன்னை கற்கண்டிற்கொள்ள
வஸ்திசுரம்வெட்டைமுத லகன்றுபோகுந்
தருமையென்றவயிரத்தை சீனிற்கொள்ள
சலகழிச்சல்நீரிழிவுச் சாராதோடும்
ஒருமையென்றவைடூரியம் பாலிற்கொள்ள
உள்வரட்சிகனரோக மோடிப்போமே. 41

போகுமேகோமேதகம் நெய்யிற்கொள்ள
புகழானயீளையொடு சயரோகம்போம்
வாகுசேர்தலைக்கொம்பைத் தேனிற்கொள்ள
மைந்தனேகண்துலங்கு மயக்கந்தீரு

மாகுமிந்தநீலத்தை திரிகடுகிற்கொள்ள
வாச்சரியகுஷ்டமெல்லா மகன்றுபோகும்
மோகமாமுத்ததனைத் தின்பாயாகில்
மூர்க்கமாந்தம்பனத்தின் முறையைக்கேளே. 42

முறையானபவளத்தை முலைப்பாலிற்கொள்ள
முக்கியமாந்திரேகமது வலுத்துப்போகு
மறையானபித்தமெல்லா மாய்ந்துபோகு
மகத்தானமேகமெல்லா மாண்டுபோகு
துரையானவப்பிரகஞ் சீனிற்கொள்ள
துன்பஞ்செய்சயரோகந் துலைந்துபோகுந்
துரையானகஸ்தூரி தின்பாயானால்
சுரஞ்சன்னியகன்றுபோஞ் சுகமிதாமே. 43

சுகமானவாமைசத்து தின்பாயானால்
சோர்வில்லாசன்னியொடு சூலைதீரு
மகத்தானவகைக்கெல்லா மனுபானங்க
ளறிந்துகொண்டாற் றனகலும்நோய்கள்கேளு
தவமானசெந்தூர யினங்கள்தோறுந்
தான்கருக்காற்களஞ்சிதனைத் தாக்கிக்கொண்டு
முகமானகுழிக்கல்லி லொக்கவிட்டு
முலைப்பாலாலாட்டிவிடு சாமமொன்றே. 44

ஒன்றானசாமமது வரைத்துவாங்கி
வுருட்டிவிடுகுன்றியிடை வுலர்த்திக்கொண்டு
நன்றாகவேயரைத்து யிஞ்சிச்சாற்றில்
நலமாகக்கொண்டிடவே ஜன்னிதீரும்
பண்டானவலியைந்தும் துறந்துபோகும்
படுபாவியானசுரம் கண்ணிற்காணு
வுண்டானசேதியெல்லாஞ் சொல்லிப்போட்டேன்
ஒழிக்கறியோமொளிக்கவில்லை வுலகத்தோர்க்கே.

உலகத்தோர்பிழைக்கவென்று கருவைச்சொன்னேன்
வுவப்பாகவயித்தியத்தை வூணிச்சொன்னேன்
நிலைகெட்டமாந்தருக்கே சொன்னேனில்லை
நிலைதவறுமனிதர்கட்கு நிகழ்த்தினேன்யான்
வலைகட்டிமீன்பிடிக்குந் தன்மைபோலே
வையகத்தில்நோய்களுக்கு வலையிதாகுஞ்
சிலையுமெத்தத்திரேகமடா மனிதர்திரேகம்
செய்கையறியாம லிவர்செத்தார்பாரே. 46

பாருநீபலநூல்கள் நன்றாய்ப்பார்த்து
செயமானமருந்தினுட குணப்பாகங்கள்
தேருநீகுணங்குறிகள் நன்றாய்த்தேர்ந்து
செயமானமருந்தினுட குணப்பாகங்கள்

சேருநீசாதகமுஞ் சாத்திரமுங்கண்டு
செயமானநோயினுட குணமுஞ்செய்கை
வாருநீகன்மத்தை நிவர்த்திசெய்து
வளமானமுப்பூவின் மார்க்கஞ்செய்யே. 47

செய்யவேகுருவதனை முடிக்கவேண்டுஞ்
செந்தூரமானதெல்லாஞ் செய்யவேண்டும்
ஐய்யவேபிணியெல்லாந் தீர்க்கவேண்டும்
நாட்டிலுள்ளபேர்களெல்லாம் வணங்கவேண்டும்
துய்யவேதியானங்க ளுரைக்கவேண்டும்
துறவானபூசைமுறை யறியவேண்டும்
பையவேகோபத்தை நீக்கவேண்டும்
பண்டிதரேயிந்தமுறை பகருங்காலே. 48

காலானவயித்தியத்தை வுறுதியாகக்
கைமுறைகள் தப்பாமற் கருவாய்ச்செய்தால்
பாலானநிறமுடைய பிரமனுவான்
பண்டிதரிற்றன்வந்திரி பகவானுவான்
சேலானமச்சமுனி யெண்ணூறும்பார்த்தாற்
சிந்தையிலேகலக்கமறச் சித்தனுவான்
நாலானமணிபெற்று பிரமன்சொன்ன
நலமுடையமுனிமொழிந்தார் நாடிமுற்றே. 49

அகஸ்தியர் குருநூல்முப்பூ-50

சிவமயம்.

இருபத்தேழாவது,

அகஸ்தியமகாமுனிவர்

முப்பூ - 30.

ஆதிபராபரத்தினுட கிருபைபோற்றி
　　யடிமுடியாமைங்கோலம் நந்திகாப்பு
நீதியாம்வாரணத்தின் முகவன்காப்பு
　　நின்மலமாஞ்சதாசிவத்தின் வடிவேகாப்பு
பாதிமதியணிந்தசிவன் பாதங்காப்பு
　　பத்திமுத்திசித்தி வயிரவனேகாப்பு
ஓதியதோர்வாணியின்தன் பாதங்காப்பு
　　வோங்காரமூலவட்டத் தொளிகாப்பாமே. 1

ஓங்காரமூலவட்டக் கணேசன்பாதம்
　　வொளிவெளியாமனோன்மணி நாதாக்கள்பாதம்
நாங்காரசாரமதை மூன்றுபத்தில்
　　நயங்காணும்புலத்தியனே ஞானமாலை
தேங்காரநாதவிந்தாற் சமைந்தவிந்து
　　சிவமென்றுஞ்சத்தியென்றும் பேருமாச்சு
வாங்காரமாணுவமு மடங்கிற்றுறு
　　லகாரவடிமுடியுங் காப்புத்தானே. 2

காப்பானவடிமுடியும் நடுமூன்றுந்தான்
கருக்காடுவெளிக்காடு வெளிக்காடாகும்
காப்பானவளர்காட்டிற் குடிசைகட்டி
சங்கையாயிருந்தவரைக் கண்டதுண்டே
பூப்பாடுவாராது மாதுனுதம்
பொங்கிவருமப்புமுப்பு சரியாய்க்காணும்
வாப்பாடுகட்டினல் வருமேதசமாந்தீட்சை
வகுத்தபடிகுருமுடித்து வாதம்பாரே. 3

பாரப்பாகுருமுடிக்குங் காலஞ்சொல்வேன்
பங்குனியுஞ்சித்திரையு மகரகும்பம்
வேரப்பாவெடுப்பாக குருவந்தநாளில்
வியன்படையே கதிர்தாண்டிமதியில்நிற்கும்
சீரப்பாவமுர்தபட்சங் தசமியென்று
திதிபார்த்து சாகாக்கால்முடியுமென்று
ஊரப்பாவாயிரத்தெட் டிதழாமென்று
வுச்சிமலைமீதிருந்து பூவைவாங்கே. 4

பூவானபூவிலொரு விபரங்கேளு
பொங்கிவரும்பஞ்சவர்ண மாதுநாதம்
நாவானதசையாமல் தசையாடாமல்
நாவானகேசரியில் மனத்தைவூணி
தாவானயிடந்தேடி கண்டுபோற்றி

சதுர்முகனுமாலயனுங் காணப்பாதம்
மாலானமானனிரங் கொண்டோரெல்லாம்
மவுனமனோன்மணியாகி வாழ்ந்திட்டாரே. 5

வாழ்ந்திட்டவக்கினியும் வாய்வுங்கூடி
வசமற்றபூமியின்கீ ழண்டமாச்சு
தாழ்ந்திட்டவக்கினியும் வாய்வுங்கூடி
சமரசமாய்நடுவான பிண்டமாச்சு
சார்ந்திட்டவிரண்டுக்கும் பிலமேதென்றால்
தருவானமண்ணோடே தண்ணீராச்சு
ஆழ்ந்திட்டுபார்த்தாலே வாதிகாண்பான்
அரியென்றும்ஸ்ரீயென்றும் நடுவின்பேரே. 6

நடுவானபூமியுட ளுதம்வாங்கி
நல்லவிதுநீர்கரைத்து ரவியிற்போடு
விடுகாதேயிப்படியே பத்துமுறைகாச்சு
யிந்துவிடநீராலே கட்டிப்போகும்
விடுவானோவாதியகன் சிவத்தைத்தானும்
விழியொளியாஞ்சத்திஎன்ற பூரணத்தைமைந்தா
நடுபாதிமூன்றிலொன்று சிவத்தைச்சேர்க்க
பரிவானரவிமதியி லுவப்புண்டாச்சே. 7

உப்பானவுப்புகரு நாமங்கேளு
வுகமையுள்ளவெடியுப்பு வேண்டும்போது

அப்பானமேகத்திற் பிறந்தவுப்பு
வளர்காட்டிற்குடியிருப்பார் காணாரில்லை
செப்பாதனுதகிரி சோதித்தோர
சிவனையொளிகாக்குமிந்த தேவியுப்பு
துப்பாகக்கர்ப்பமுள்ள மும்மாதவீடு
துரியம்விட்டுத்தீபவெளி காணுவாரே. 8

காணுதுகாணுமடா யிந்த நூலிற்
கண்டவர்பொல்லார்கள் வெளியிற்போடார்
தோணுதுபூரணத்தைத் தோற்றிவைக்குஞ்
சொரூபமுள்ளவாயிரத்தெண் சாஸ்திரவித்தை
நாணுதுவொன்றுக்குங் காரசாரம் [சாரும்
நஞ்சுகொண்டுசெத்தவன்போற் சரக்கெல்லாஞ்
பேணுதவுலகத்தில் தசமாந்தீட்சை
பெலத்தபுத்தி யறிவதனுற்பேணிப்பாரே. 9

அறிவானபூரணமே வர்த்தமாகு
வைந்துமூன்றுமெட்டிரண்டுங் கண்டபோதே
குறியானகுறியறிவாய் மைந்தாசொன்னேன்
கூடுமப்போதேகமுட னேகமாகும்
சரியானபனிரெண்டும் பதினாருள்ளே
சத்திசிவமிரண்டுமொன்றாய் நிற்குமப்பா

பரிவானபரதேசி யிதுவேயாகும்
பதியுடையவமிர்தகலை யாணமுண்ணே. 10

கலையானபதினறில் நாலும்பாழாங்
கண்டுதடாசூரியன்றன் பனிரெண்டில்நாலு
துலையாகப்பிரந்ததிலே யெட்டுநின்று
சோமகலைசூரியகலை யாயிற்றப்பா
அலையானவாரிகுண லமர்ந்தமண்ணு
ஆதியென்றுமந்தமென்று மமைந்தகுண்டம்
வலையானசிவகலைதா னேதென்றக்கால்
வாங்குவதும்விடுகுவதும் வழக்கந்தானே. 11

வழக்கமாய்சிங்குவையை மடித்துவைத்து
வாய்மூடிகுடியுமே யறியொட்டாமல்
முழக்கமாய்நாடிநாம் பதையாடாமல்
மூலமுதலாறுதலஞ் சிரசேகண்டாய்
பழக்கமற்றுநெற்றிவுச்ச மாகப்பிரமம்
புரம்பாகவாசியதாம் சமாதிநில்லு
பழக்கமாயஸ்தமதை நெருக்கிடாமல்
பார்க்கிலதுயிருகண்ணு மாடாமல்நில்லே. 12

நில்லென்றால்வேதாந்தம் நிற்குமோசொல்
நிர்மூடமடையருக்கு வருமோவாதம்
சொல்லென்றாற்பெரியோர்கள் சொல்லுவாரே

சொர்க்கமெள்ளவேயறவென்றால் யேறலாமே
அல்லென்றபகவனை யறிந்துசொன்ன
வறிவுதங்குமனநிலைக்கு மாசானவான்
வல்லென்றுசண்டையிட்டு தர்க்கம்பேசும்
வாய்வீணர்தங்களுடன் வாய்பேசாதே. 13

பேசாதேவுலகத்தில் கர்ப்பகோடி
பேச்சரிந்துபேசலாம் பழியேசெய்வான்
கூசாமல்நூலிருந்தாற் கொடுங்கோளென்பான்
கொடுக்காட்டாதந்தநூ லுனக்கேனென்பான்
ஆசானைப்போலவவன் சரியாய்ச்சொல்வான்
அகஸ்தியன்மேலாணையில்லை யென்றுபோடு
தேசாதிவழக்கமெல்லாம் பாஷாண்டிமெத்த
சிவஞானமுப்பதையும் பதனம்பண்ணே. 14

முப்பதுபோல்வொருநூலுஞ் சொல்லாதப்பா
முன்சொன்னவாதமிரு னூறும்பாரு
செப்பதுபோற்பாடிவைத்தேன் பன்னிரண்டின்
சிவயோகநிகண்டிலே நூறுஞ்சொன்னேன்
ஒப்புவமையில்லாத தவக்கியானஞ்சொன்னேன்
வுத்தமரைக்கிட்டவைத்து வுண்மைகேளு
தப்புமொழிசொல்லவில்லை முப்பதிலேமைந்தா
சகலகலைக்கியானமெல்லாம் பாடினேனே. 15

பாடினேன்கலைக்கியானம் பாடும்போது
பரமசிவன் தன்னோடே ரிஷிகள்சொன்னார்
நாடினேனனவரைப் பூசைபண்ணி
நல்வசனங்கேட்டிந்த நூலைச்சொன்னேன்
ஓடிநீர்சொல்வதென்ன வென்றுகேட்டால்
வுண்மைபெற்றசித்தருக்கா மென்றதாலே
நாடினேன் தாய்சொல்லப் பாடிப்போட்டேன்
நல்லோர்களிந்தநூல் விடுகாதேண்ணே. 16

விடுகாதேயண்டமதி ரேட்டைவாங்கி
மேகாந்தகோதையைநீ வாங்கிப்போட்டு
விடுகாதேமுப்பத்தி ரண்டுதீட்சை
யுத்தமனேபஞ்சீகரண முடிந்தபோது
நடுகாதேயடிமுடி நடுமூன்றுப்பும்
நாதவிந்துபிண்டமென்ற பேருமாச்சு
சுடுகாதேநீர்நெருப்பு காற்றுமாச்சு
சோமசூரியாக்கினி யென்னும்பேரே. 17

பேரானவழலைமுறை நன்றாய்க்கேளு
பெரிதானவகாரமென்ற கல்லைவாங்கி
வூரானகல்லுரலில் மாவதாக்கி
யுத்தமனேசுத்தஜலந் தன்னிற்போட்டு
சோாகக்கரைத்திருநீ மறுநாளிற்றான்

திருவையொத்தரவிமுகத்தி லுப்பதாக்கி
நேராகயிந்தவண்ணம் பத்துமுறைகலக்கி
நேர்மையொத்த ரவிமுகத்தில்வைத்திடாயே. ()
வைத்திட்டவுப்புக்கு நாமங்கேளு
வாசமுற்றபூநீரென் றிதற்குப்பேரு
மித்திட்டவழலையென்று யிதற்குப்பேரு
மேலானவுவர்ப்புவென் றிதற்குப்பேரு
சுத்திட்டலிங்கமென்று மாதியென்றுஞ்
சுடரென்றுமாலுப்பு வென்றும்பாரே. 19
பேரானவுவர்க்கடுக லிங்கமென்றும்
பெரிதானசிவரூப முடியென்றும்பேர்
ஊரானவெள்ளைக்கல் லென்றும்பேரு
வுருவானவகாரமென்றும் பேருமாச்சு
சாரானசரக்கென்றுஞ் சாரமென்றுஞ்
சிவருத்திரசன்மார்க்கக் கர்த்தாவென்றும்
பேரானவாசியென்று மலமுமென்றும்
பெருமையுற்றவகாரமென்றும் பேருமாச்சு. 20
ஆச்சப்பாவரன்ரூபம் வெள்ளையாச்சு
வவள்ரூபஞ்சிவப்பான வடிவமாச்சு
நீச்சப்பாவதனுப்பு நீலவர்ணம்
நிலையானநடுவாச்சு வேறேயில்லை

மூச்சப்பாதுதொன்று மவர்கள்கோடி
மூடர்களேயொன்றல்ல மூன்றுமாச்சு
பேச்சப்பாசொல்லுகிறேன் சத்திநாமம்
பெருமையுள்ளவிங்தென்று ரவியின்பேரே. 21

ரவியானநடுமூலஞ் சொல்லக்கேளு
நாலானசிகாரமென்று சிவமாமென்றும்
புவியானசிவனென்றும் பால்தயிராமென்றும்
பொருளானகெங்கையென்றுஞ் சயிலமென்றுங்
குவியானஷசிநீரென்றுஞ் செயநீரென்றுங்
குருவானஅப்பென்றும் தம்பனநீரென்றுந்
தவியானபிரணவத்தி நீரேயென்றுஞ்
சமூத்திரத்தினறுவகைநீ ரென்றும்பேரே. 22

பேரானசடாதார வமிர்தமென்றும்
பெரிதானவமுரிநீ ரென்றும்பேராம்
ஊரானகண்ணீரு முண்ணுப்பாலென்றும்
உலகமெல்லாம்படைத்தளித்த வுமிநீரென்றும்
வாறான ஆதியுட னுமங்கேளு
வளமையுள்ளவெடியுப்பு சத்தமென்றும்
நேறானகமலமென்றும் சிப்பியென்றும்
நிலையானவாகாசப் பிறவியாச்சே. 23

ஆச்சப்பாகும்பிடுங்கல் லென்றும்பேரா
மதிகாரபாவையென்றும் ரவிதானென்றும்
நீச்சப்பாவெள்ளைக்கல் கும்பமென்றும்
நிலையானவானைக்கல் மவுனியென்றும்
பேச்சப்பாவழலையென்றும் ஞானியென்றும்
பிலமானஆயிரத்தெண் கமலமென்றும்
நீச்சப்பாகாமப்பால் கானற்பாலென்றும்
நெய்மஞ்சள்கருவென்றும் நடுவின்பேரே. 24

நடுவானவாகாச கெர்ப்பமென்றும்
நல்லதண்ணீர்பச்சையென்றுங் கல்லுப்பென்றும்
நடுவானமேகமென்றுஞ் சுண்ணமென்றும்
நஞ்சென்றும்பிஞ்சென்று மூமையென்றும்
வடுவில்லாகாந்தியென்று மாதியென்றும்
மாலென்றுஞ்சத்தியென்றுஞ் சிவந்தானென்றும்
துடுக்கென்றுந்துருவென்றும் பேருமாச்சு
சுகாதீதபூரணமென் றிதற்குப்பேரே. 25

பேரானசத்தியுப்பு வொன்றுகூட்டி
பெருமையுள்ளவிந்துப்பு வதற்குப்பாதி
சீரானசுழியுப்பு யிரண்டுங்கூட்டி
சிவகெங்கைவிட்டாட்டி சாமம்நாலு
நேராகவாட்டியபின் வில்லைதட்டி

நிலைத்ததொருமெருவடுக்கி புடத்தைப்போடு
பாரானபரிதகட்டில் பூசிக்காய்ச்சி
பண்புடனேபுடம்போடச் சுண்ணமாமே. 26

ஆமப்பாமுப்பூவை யேழுமுறைநீயும்
அக்கினியிற்சுட்டெடுத்து வாயிரத்தின்படியே
ஓமப்பாசொல்லிவைத்த காமியத்தைப்போலே
ஓட்டினேனின்னமொரு நூல்தானுண்டோ
வாமப்பால்கொண்டவர்க்கே யெய்துமெய்தும்
மறுசென்மமெடுத்தாலு மவர்க்கேயெய்தும்
சோமப்பால்சூரியன்பால் கொள்வதற்கு
சுளுவாகவின்னமொன்று சொல்கிறேனே. 27

சொல்லுகிறேன்பிரிவுதான் கம்மியுப்பு
சுருக்கானவுப்புவல்லோ பாரையுப்பு
கல்லுகிறேனக்கினிதான் கல்லுப்பாகும்
காடுகின்றவாயுவதே யிந்துப்பாகும்
கல்லுகின்றவாகாசம் வழலையுப்பு
வேதாந்தமனோன்மணியா ளின்றவுப்பு
சொல்லுகிறேன்சரக்குகளை யென்றுசொல்லி
குலைபாவிகாத்திருந்து குடிகொண்டானே. 28

கொண்டவனையம்பலத்தி லாட்டஞ்செய்து
கூடுவிட்டுமறுகூடு நடனஞ்செய்தாய்

கண்டதைநீற்றவென்றாற் கனகசுன்னங்
களஞ்சிகாலிடைக்கிடை யெட்டுசாரஞ்சேரு
நின்றயிடைதன்னேராய் சாரஞ்சேர்த்து
நிசியென்றவெண்கருவா லைந்துவில்லை
கண்டகனிரெண்டிடமே ரவியில்வைப்பாய்
சுளுவாகப்புடமிடவே சுண்ணமாமே. 29

ஆமப்பாயிதுநீற்றால் துருசுவெள்ளை
யவ்வெள்ளைசுண்ணத்தால் ரசத்தைநீற்றி
ஓமப்பாபரிதகட்டிற் பூசிப்பாரு
ஓகோகோசொர்னமது சுண்ணமாச்சு
நாமப்பாசொல்லுகிறேன் தாம்பரத்திற்கிய
நாட்டோர்க்குப்பிழைப்பதற்கு வழியுமுண்டாங்
காட்டப்பாயதையெடுத்து வெள்ளிக்கிய
கனகமாங்கருமூன்று பத்துமுற்றே. 30

அகஸ்தியர் முப்பூ-30

முற்றிற்று.

சிவமயம்.

இருபத்தெட்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்,

வாதசூத்திரம் - 12.

காரமென்றாற்பல்லியுடன் கல்லோகாரம்
காரத்திற்கடுங்கார வேறதென்றாற்
சாரமென்றாற்சாரமது பூமிநாதஞ்
சாதகமாய்ச்சொல்லாதே யெழுஞ்சுத்தி
வாரமென்றசிறுநீரா லேழுஞ்சுத்தி
மகத்தானவஸ்துவினாற் சுத்தியாச்சு
தீரவென்றால்சேதியுட னமுரிநீரிற்
சிறப்பாகயேழுசுத்தி செய்துபாரே. 1

பாரென்றுவாயிசொன்ன படியேபார்த்தேன்
பாங்கானகறைநாளிற் சலத்திற்கொஞ்சம்
சீராகயெடுத்துவொரு பீங்கானுள்ளே
சிறப்பாகவிட்டொருநாள் ரவியில்வைத்து
கூராகரவியில்வைத்த நீறும்வற்றுங்
குறிப்பறிந்துபதமாகக் கருவாய்ச்செய்ய
காறுனநூற்றிலேகால் தலையாய்த்தானே
கட்டாகச்சொல்லிவிட்டேன் கருச்சேராமே. 2

சேராமற்சொன்னதென்று லிங்கப்போக்கு
திறமுடையமூலிகையை முன்னேவைத்து
பாராமற்செய்துகொண்டு சுத்திசேரப்பா
பாங்காகச்சுருக்கிடுநீ சுத்தியாச்சு
வீராகசுத்தியது செய்தபின்பு
விளங்கியதோர்கட்டதுவே முன்பின்னாகக்
கூறாகச்செய்ததொரு லிங்கந்தன்னை
குணமாகச்செய்துகொண்டு கூட்டியாட்டே. 3

ஆட்டியதோர்வங்கமதை லிங்கம்போற்செய்து
யடலாகயுருக்கியொன்றாய் மணியாய்வாங்கிக்
கூட்டியதோர்மணியதனை வெள்ளிஎழுக்
குணமானசெம்பதுதான் மூன்றுஞ்சேர்த்து
நீட்டிடவேபத்துக்கொன்று முப்புசேர்த்து
நிலையாகசிட்டிவிட்டு புடத்தைப்போடு
தாட்டிகமாய்வெண்ணீறு போலநிற்குந்
தன்மையுடனுணர்வினு லறிவாய்தானே. 4

தானென்றவுப்பதுதான் செயநீரிலாட்டி
தாரத்தாற்கவசமது போடுபோடு
தேனென்றகல்லுப்புஞ் சாரஞ்சேர்க்க
செயநீராலிரத்தவர்ன மாகுமாகு
மானென்றகல்வத்தி லாட்டியப்பா

மகிழ்வாகப்புடம்போட செந்தூரமாகும்
ஊனென்றசரக்கெல்லா மிதினாற்சாகு
முத்தமனேதுரிசிட்டு சமாதிவையே. 5
வையப்பாவறுபதுநாள் சமாதிதன்னில்
வைத்திருந்துமறுபடியு மெடுக்கும்போது
செய்யப்பாபராசத்தி வடுகனுக்குந்
திறமானவஸ்துசுத்தி பூசைசெய்து
மெய்யப்பாசமாதிதன்னை திறந்துவாங்கு
மெய்க்கவேதுருசுநன்றாய் ரவியிற்போடே. 6
போட்டிடவேதுருசதுவும் வெளுக்குமப்பா
பூரணமாமெத்தவெள்ளை யாகுமாகும்
காட்டிடவேதின்னாது காரசாரங்
காண்பித்தாற்கண்டறிக்குங்கருவைச்சொன்னேன்
நீட்டிடவேதுரிசின்மேற் காரமேற்ற
நிசமாகச்சொல்லுகிறே னினைவாய்க்கேளு
பூட்டிடவேமுன்னுப்பு வீரம்பூரம்
புனுகுடனேவுரம்வண்டு வெடியுப்புகூடே. 7
கூடனுடன்முன்றுரிசிற் சரக்கெல்லாஞ்சேர்த்து
சுருக்காகமுந்நீரி லரைத்துநன்றாய்ப்
பாடமாய்வில்லைதட்டி புடத்திற்போட
பாங்காகவைந்துநாள் குகையில்வைத்து

தேடவேதுருத்தியா லூதுவூது
திறமாககுகைபழுத்தாற் சுண்ணமப்பா
நாடவேயிச்சுண்ண மெடுத்துக்கொண்டு
நாட்டுவாய்சூதமொன்றி லறிந்துபோடே. 8

போட்டவுடன்சூதமெங்கே விரைந்துபோகும்
புகழானநாகமெங்கே கரைந்துபோகுங்
காட்டினார்பாஷாணங் கட்டிப்போகும்
கலந்திட்டால்தாரகமும் மயமுமாகு
மூட்டினால்மனோசிலையும் வெந்துபோகு
மூறண்டவீரமது வடங்கிநிற்கு
மாட்டினேனிதுகொண்டு சரக்கையெல்லா
மப்பனேமேலுக்கு வழிசொல்வேனே. 9

வேதையரிதல்.

சொல்லுவேனகமொடு சூதஞ்சேர்த்து
சுகமாகவுருக்கையிலே களங்கமாகும்
வெல்லவேநாகத்தைக் கொடுக்கவாங்கும்
விறையாமற்கொதியைநீ கொடுக்கவாங்கும்
அல்லவேலோகத்தி லொருமாப்போடு
வளமானகளங்கத்தை வாங்கிக்கொண்டு
நல்லவேசெம்புவெள்ளி யொருமாவீதம்
நாட்டினேமாத்தெட்டு நவின்றிட்டேனே. 10

நாட்டுவாய்நீகளங்கத்தை சேர்த்துருக்க
நதாந்தவழலைநீ யெடுத்துக்கொண்டு
மாட்டுவாய்முருக்கம்பூ கீழ்மேலிட்டு
மகத்தானபொன்னும்பூ யிப்படியேபோடு
காட்டுவாய்பூநீரை கீழ்மேலிட்டு
கலக்கவொருசெங்கல்லைத்தான் குடைந்துவுள்ளே
வீட்டுவாய்நீகளுங்கத்தை பதனமாக
மேலேயொருசெங்கல்லை மூடிப்போடே. 11

செந்தூரங்கொடுப்பதற்கு சொல்லக்கேளு
செயம்பெற்றவீரமொடு பூரங்கூட்டி
மந்தரமாஞ்சரக்கிரண்டும் பொடித்துக்கூட்டி
வப்பனேகூடவிட்டுக் கலந்துக்கொண்டு
தந்தரமாய்வெள்ளியொன்றி லொருமாப்போடு
தாரணியில்வயதுபதி னாறுமாகும்
நந்திபதியாத்தாளைப் பூசித்தாக்கால்
நாடுவாள்வேதையிட்டு நடத்திப்பாரே. 12

அகஸ்தியர் வாதசூத்திரம்-12

முற்றிற்று.

சிவமயம்.

இருபத்தொன்பதாவது,

அகஸ்தியமகாமுனிவர்

வழலை சூத்திரம்-12.

தாயானவுன்மனையாள் பாதம்போற்றி
சாஸ்திரமோராயிரத்தி யிருநூற்றுக்குள்
தோயாதகருவொன்று மில்லையில்லை
சொல்லடக்கமாயுரைத்தேன் வழலையொன்று
காயாருமிதைக்குருக்கி யிருநூறுஞ்சொன்னேன்
கனியானவிந்தநூல்பன் னிரண்டிற்குள்
வாயாரச்சொல்லுகிறேன் வகாரமார்க்க
மதியிரவிவண்டபிண்டம் வண்மைகேளே. 1

வளமையென்றவண்டமல்ல முட்டையல்ல.
மானிடர்கள்மண்டையல்ல சுவாசமல்ல
அளையானரோமமல்ல கண்ணீரல்ல
யீசன்விந்துசூதமென்பா ரதுவுமல்ல
தழையானமூலிகையு மதுவுமல்ல
தானிலையாமுப்பூவின் சத்துமல்ல
குழையானசுக்கிலத்தின் கூறுமல்ல
கொடியதொருசுண்ணாம்புக் கூட்டந்தள்ளே. 2

தள்ளப்பாசவ்வீரத் துருசுமல்ல
சவுக்காரநவலோகச் சத்துமல்ல
விள்ளப்பாவணுல்ல நீயுமல்ல
வெடியுப்புகரியுப்பு விஷநீரல்ல
கொள்ளப்பாமதுவல்ல மலந்தானல்ல
கோசமல்லவஸ்தியல்ல குருவண்டல்ல
யெள்ளப்பாவஸ்துவல்ல சிறுநீரல்ல
யேதென்றுற்பஞ்சபூ தியத்திலொன்றே. 3

பூதமென்றவைந்துக்குள் நடுவாய்நின்று
பூரணமேதேய்வாச்சு புலத்தியாகேள்
வேதமடாவட்சரத்தில் வகாரமாச்சு
மேலானவாகாச வன்னியாச்சு
கோதமென்றவெடியுப்பு ரசமுமாச்சு
கலமான தலையாச்சு முடியுமாச்சு
ஓதவென்றுல்ரவியாச்சு சுழியுமாச்சு
வுவட்டுமண்ணில்புகுந்திருந்த வுப்புமாச்சே. 4

உப்பானவாகாசம் வன்னிபீசம்
ஓகோகோசமாதிநிலை யப்பாஅண்டம்
அப்பானதேகத்திற் பிறந்தவன்னி
வாசைகொண்டுபிரிதிவியி லடங்கிநிற்குஞ்
செப்பாதேவண்ணனை சோதித்தோர்க்கு

சீவன்வெளியாக்குமிந்த தேவியுப்பு
துப்பானபிண்டத்திற் சேரும்போது
சொர்னவித்தைகைவசமாய்த் தோற்றும்பாரே.
பாரப்பாபிண்டத்தை சொல்லவென்றாற்
பாபமில்லைசாபமில்லை பாணமில்லை
பேரப்பாபெண்ணில்லை பெண்ணாற்பெற்ற
பிள்ளையில்லைகருவில்லை பீசமில்லை
கூறப்பாமங்கையர்கள் தூரமானாற்
குருதியில்லைகும்பிடுங்கள் குணமீடில்லை
வாரப்பாபலசீவ செந்துமில்லை
மதுவில்லைவலமில்லை வகையாய்க்கேளே. 6
வகையானமண்ணென்று மதிதானென்று
விஷக்காற்றுத்தணலென்றும் ரவிசூடென்றுந்
தகையாரவேழுவகை தோற்றத்துக்குந்
தாயென்றும்யோனியென்றுஞ் சத்தியென்றுந்
திகையாதேமனமுருகி வருந்திடாதே
ஜெகமயக்கத்துள்ளுழன்று பிணமாகாதே
பகையாதேகொடியவெள்ளை காரியென்றும்
பகையில்லாவுவர்நிலத்தைப் பகருவாரே. 7
வாரானமண்ணல்லோ பிண்டமாச்சு
வன்னியல்லோபூமியின்கீ ழண்டமாச்சு

கூறுனவக்கினியும் வாய்வுங்கூடிக்
குடியிருந்தவுவர்நிலத்தைப் பெண்ணென்பார்கள்
நீரான தண்ணியுடன் மண்ணுங்கூட்டி
நின்றதிறுற்பெண்ணைச்சு நீயேயாறுற்
பேரானயிவ்விரண்டுஞ் சேர்ந்தபோது
பெரிதானவாதசித்தி பெலத்துப்போச்சே. 8

போச்சப்பாவாணுக்கு வொன்றேதீட்சை
பேசாதேபெண்தனக் கிரண்டேதீட்சை
நீச்சப்பாபூரணநூல் தன்னிற்சொன்ன
நிஜமாகச்சொல்லிவைத்தேன் முப்பத்தொன்றில்
வாச்சப்பாமதிபாக மிரவிபாகம்
வருடபதமாதபத மிடைபாகங்க
ளேச்சப்பாசொல்லவில்லை கைப்பாகங்க
ளித்தனையுங்குருதன்ன லிசைந்துகொள்ளே. 9

இசையவேகன்னிக்குத் தலைதானென்று
யிரட்டிப்புவேணுமடா தண்ணீருக்கு
அசையாதேமண்ணுக்குக் கலைதானுலு
வாறுகலைவாயுவுக் கதிகம்வேண்டாம்
பசையில்லாவாகாசங் கலந்துகொள்ளும்
பருவமாமிந்தமுறை யாடமாட்டார்

திசையானபூரீரை சிறுநீர்தன்னிற்
றெளிவிருத்துதீயெரித்துத் தியங்குவாரே. 10
தியங்காமல்மேஷமடா பெண்ணுக்காச்சு
செப்புகிறேன்மீனமடா வாணுக்காச்சு
மயங்காதேகாலையிலே மாலைசேரு
மத்தியானந்தன்னிலே யொன்றாய்ச்சேருஞ்
சுயங்காமல்திதிபதி லைந்தென்பார்கள்
சூட்சமுங்காணார்கள் துடர்ந்துயேறும்
நயங்காணும்புலத்தியனே யிந்தமார்க்கம்
ஞானசித்தியோகசித்தி நல்குந்தானே. 11
தானென்றவண்டபிண்டங் குருவேசெய்ய
தவம்வேணும்சிவம்வேணுந் தயவுவேணும்
மானென்றவல்லியுமை யாளுங்காண
மதிவேணும்விதிவேணும் வைராக்கியம்வேணும்
நானென்றவாணவத்தை யொடுக்கவேணும்
நலமானசிவயோகம் நாட்டவேணுந்
தேனென்றசர்க்குருவை காக்கவேணுஞ்
சித்தியாய்ப்பனிரண்டுஞ் சிறக்கமுற்றே. 12

அகஸ்தியர் வழலைசூத்திரம்-12

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

முப்பதாவது,

அகஸ்தியமகாமுனிவர்

தீக்ஷை பாடல்-5.

ஆதியந்தமாய்நிறைந்த தீட்சைமார்க்க
மருள்செய்தேன்புத்திரனே சொல்லக்கேளு
சோதியந்தத்துள்ளிருக்குஞ் சுடரேபோற்றி
சொல்லுகிறேன்வகாரமுடன் வுகாரம்போடு
வேதியென்றகமலத்திற் பொருளேயாகும்
வேதாந்தமுடிந்துதா னெட்டிரண்டுஞ்
சாதியென்றதீட்சையது யறிந்துபாரும்
சத்தியந்தானுந்தனுக்குத் தருகுவாரே. 1

வாறுகேளெட்டிரண்டு கூட்டவைந்தும்
வந்துதடாவுந்தனுக்கு மகிழ்ந்துபாரு
கூறுகேளப்பனுட முப்பும்போச்சு
கோடிதானசுருக்கமது காணப்போகா
நீறுகேள்தாளகத்தை மேவிப்பாரு
நிலைத்துதடாதீட்சையது பத்துப்பாரு

மாறுகேள்வொன்றிரண்டுஞ் செபித்தாயானு
லாச்சரியமூலகமெல்லா மதற்குள்ளாச்சே. 2

ஆச்சென்றுபிண்டமது வண்டமெல்லா
மாச்சரியங்கண்மணியே யென்னசொல்வேன்
வாச்சென்றவண்டத்தை நோக்கிப்பாரு
வாருதிபோல்ரவிமதியுந் தோணுந்தோணும்
நீச்சென்றகுருநிஷ்டைக் குள்ளேபுக்கி
நிலைத்துதடாகாயமதில் ரூபமில்லை
ஆச்சென்றுவுபாயமெல்லாம் துறவிற்புக்கு
மடங்கிற்றுபார்த்துக்கொள் ளுண்மைதானே. 3

தானென்றவிம்முறையை யறியலாச்சு
தாயென்பார்சனங்களென்பார் தள்ளுதள்ளு
கோனென்றால்வருமோதான் குவிந்துபாரு
கூறவொண்ணுயிக்கருவைப் பேசலாகா
வானென்றபெரியோரைக் கண்டுதேறு
வணங்கியேயனுதினமு மகிழ்ச்சியாக
பானென்றயிப்பொருளை யீசன்றானும்
பார்ப்பதற்குத்தானுரைத்தார் பரிட்சையென்றே

என்றெனவேபொருளதுதான் ரவியேபுக்கு
மெடுத்துரைக்கப்போதுமது யென்னசொல்வே

னன்றெனவேபொருளைந்து பாட்டுக்குள்ளே
நன்றாகத்தோணவே சொல்லிவிட்டே
னென்றனபொருளதுதா னுற்றுப்பாரு
ஓகோகோயென்னசொல்வே னுகமைமெத்த
இன்றயதான்புதுமையா ரைந்தெழுத்தைக்கா
ரிப்படியென்றன்னுக்குட் களைந்துபாரே. 5

அகஸ்தியர் தீட்சை பாடல்-5

முற்றிற்று.

உ

சிவமயம்.

முப்பத்தோருவது,

அகஸ்திய மகாமுனிவர்

சோதிமணி சூத்திரம்-8.

காப்பு.

நல்லதொருகணபதியின் பாதம்போற்றி
நவகோணமதிலுறைமணிதன் பாதம்போற்றி
யல்லல்தவிர்த்தருகோண குகன்றாள்போற்றி
வன்பத்தோரட்சரத் துடையோன்போற்றி
சொல்லுகிறேனுந்தனுக்கு வகாரவுண்மை
சோதிமணிசூத்திரமோ ரெட்டுமப்பா
தெள்ளுமணிபுலத்தியனே பேரானந்தஞ்
சித்தாந்தமுறையெல்லாந் தெளியத்தானே.

நூல்.

திரிபுடைதன்வட்டத்துள் சிங்-அங்-உங்கென்று
திரும்பவேஐயுங்கிலியும் அங்கென்றோது
சரிதையொடுகிரியையது ஞானமப்பா
தப்பாதுஉங்கிலியும் சவ்வென்றோது
பரிசமொடுபூரணத்தி லியங்கும்வாய்வு
பார்க்கையிலேலலும்சிவாய வசியென்றோது

துரியமடாதுரியத்தி லப்புமுப்புஞ்
சூட்டுகிறேன்பாறையுப்பு சொல்கிறேனே. 1
சொல்லுகிறேன்பாறையுப்பு யெடுத்துக்கொண்டு
சூட்சமாய்தாளகத்தி லரைத்துவப்பா
வில்லைதான்பிடித்ததனை வோட்டில்வைத்து
மேல்கீழுங்கவசமிட்டு வுப்பைப்பூசி
யெல்லையிலாகாட்டெருவில் முழப்புடந்தான்
யியல்பாகபோட்டுநீ யெடுத்துப்பாரு
சொல்லியதோர்தாளகத்தி லீயமெய்துஞ்
சூட்சமாய்வாதவித்தை சொல்கிறேனே. 2
சொல்லுகிறேன்றாளகத்தி லீயமானால்
சுருக்கமாய்க்காரீயந் தன்னிலூட்டி
வல்லமைதானில்லையடா காரீயந்தான்
மகத்தானபதினாறு மாற்றுமாகு
மெல்லையற்றயீசனுக்கு மெட்டாமூல
மேகாட்சர-அம்-உம்-எம்-மிரையுமிட்டு
தொல்லையில்லைவாதமடா சுருக்கஞ்சொன்னேன்
றுறையோடேசெய்தாக்காற் றுலங்குந்தானே. 3
தானென்றவகாரத்துக் கெழுத்துஞ்சொன்னேன்
தப்பாமற்கேளடா தேய்வைமூட்டு
மோனமுடமௌனமென்று மாத்தாளென்று

மருகோணவீடுதான் உகாரமென்றும்
போனென்றநாகத்தை வாங்குவாங்கு
பரிவாகத்தவம்பண்ண பூரம்போடு
தேனென்றவோங்காரத் துள்ளேபுக்கு
சிவயமசியென்றுதான் திறந்திட்டேனே. 4

திறந்திட்டேனகாரத்துக் காதியென்ன
சிவசிவாயமிர்தமதிக் கெட்டாக்கற்ப
முறைந்திட்டேன்கற்பமது நாளொன்றுக்கு
வுத்தமனேமஞ்சாடி களஞ்சிகூட்டு
திறந்திட்டேனிப்படியே செய்துவந்தால்
யோகிக்குவயதுசொல்ல முடியாதப்பா
வறைந்திட்டேனப்படியே யோகத்திற்கு
வாய்க்கடங்காமவுனத்துக் காகும்பாரே. 5

அவ்வாகிஉவ்வாகி அகாரமாகி
ஐம்பத்தோரெழுத்துக்கு ஆதியாகி
யவ்வாகிநாலிரண்டுந் தன்னுள்ளாகி
நடுவில்நின்றலிங்கமது அட்சரமுமாகி
உவ்வாகிவோர்நிலையாய் ஸ்தம்பமாகி
ஓம்நமசிவாயமென்று வகையிலோதி
நவ்வாகிசிவ்வாகி அவ்வுமாகி
நாட்டமாஜயுங்கிலியை நாட்டுநாட்டே. 6

காட்டாதசித்தரியை கீழேசீறு
நலமாகவுள்ளரையில் சுழியும்போடு
ஊட்டப்பாமதியமுர்த முரங்குமப்பா
உண்டுண்டுபோகத்தி லுரைந்துநில்லு
பாட்டாலும்நமசி வாயமென்றும்
பரிவாகநின்று ஐயுங்கிலியுஞ்சொல்லி
கூட்டாயோகத்துக் கிதுவேசித்த
குண்டலியைக்கண்டுகொண்டு குறியைப்பாரே. 7

குறியான அகாரமே சிகாரமாச்சு
குதமில்லாமுதலெழுத்து மிதனுள்ளாச்சு
அறியாதபொருளது தா னிதனுள்ளாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப்புயிதனுள்ளாச்சு
வழியாகவிதுமூன்றுஞ் செய்தோர்சித்தர்
வழியறியாமூடனென்ற கதைபோலாகும்
ஒளியாகுஞ்சோதிமணி யிதுவேயாகு
முயர்வைத்தநாகமணி கிரீடந்தானே. 8

அகஸ்தியர் சோதிமணி சூத்திரம்-8

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

முப்பத்திரண்டாவது,

அகஸ்திய மகாமுனிவர்

திருமந்திரம்-8

உறையற்றதொன்றை செய்யுமூமைகாள்
கரையற்றதொன்றைக் கறைகாணலாகுமோ
திரையற்றநீர்போற் சிந்தைதெளிவார்க்குப்
புறையற்றிருந்தான் புரிசடையோனே. 1

மாட்சியாவது மாதவமுற்றிட
மாட்சியாவது மனமேதெளிந்திட
மாட்சியாவது மன்னுயிரிருந்திட
மாட்சியாவது மாண்டிடமுத்தியே. 2

தான்வரையற்றபின் ஆரைவரைவது
தானவனானபின் னாரைவரைவது
காமனைவென்றகண் ணாரையுகப்பதும்
தூயமொழிவாசஞ் சொல்லுமென்றீசரே. 3

மனம்விரிந்து குவிந்துமாதவம்
மனம்விரிந்து குவிந்ததுமன்னுயிர்
மனம்விரிந்து குவிந்ததுவாயுவாம்
மனம்விரிந்துரை மாட்டிடமுத்தியே. 4

வேறு.

சோதியானதுருசியைச் சொல்லவொண்ணுதுப்
பாதியானதுருசியைப் பேசவொண்ணுது
ஆதியான்சொன்ன வரும்பொருடன்னை
வீதியாய்ச்சொன்னுல் விண்ணிடிவீழுமே. 5

விண்ணிடிவீழும் வெளிவிட்டபேர்க்குத்
தன்னடிதாளுய்த் தனக்குச்சரியாய்க்
கண்ணடிகண்ணுய்க் கற்றுணர்ந்தோர்க்குப்
பொன்னடிமூலம் பொருள்சொல்லலாமே. 6

சொல்லாரணமாஞ் சுருதிமுடிந்திட
மெல்லாருங்காண வெடுத்தேவுரைத்தவன்
பொல்லாதசென்மம் புகுந்துபுலையனு
யெல்லாநரகத்துக் கேகலாங்காணுமே. 7

வெண்பா.

சொல்லாரணமாஞ் சுருதிமுடிந்திட
வெல்லார்க்குஞ்சொன் னுலெழுநரகம்
ஆனாக்கிச்சொன்னு லவனேயிவனுகும்
பாழாக்கிப்போட்டகுரு பாழ். 8

அகஸ்தியர் திருமந்திரம்-8

முற்றிற்று.

சிவமயம்.

முப்பத்திமூன்ருவது,

அகஸ்திய மகாமுனிவர்

அண்டைக்கல்

முப்புசூண்ணம்-16.

ஆதியந்தம்நடுவான சோதிபாதம்
அனுதினமும்நெஞ்சில்வைத்து வருளைப்போற்றி
சோதிமயமானதொரு துரியம்பார்த்துத்
துரியத்திலாடுகின்ற சிவனைப்போற்றி
வாதிநின்றமால்போற்றுங் கணேசன்பாத
மருள்பெற்றும்ஈசனிட வடியைப்போற்றி
சோதிமயவிந்துவிலே துலங்குமாந்தர்
துரியவெளிபதியெனவே தொழுதிட்டேனே. 1

தொழுதிட்டபதிகேளுஞ் சொல்வேனப்பா
துரியாதீதங்கடந்து துரியமாகும்
வழுந்திட்டபொன்னிறமாய்க் காணுங்காணும்
வடிவானஅரனங்கே நிர்த்தமாகும்
முழுந்திட்டமூலத்தின் மேலேயப்பா
முகிழ்ந்துநின்றகுயவனிட வீட்டைப்பாட

வழுந்திட்டாலாவதென்ன மாடேசொல்லு
மப்பதியையறிந்துநிற்கக் கருவைக்கேளே. 2
கருவேதோகுருவேதோ வென்பார்மாண்பர்
கண்டுபதிதெரிசிக்கான் நாடாறு நும்
உருவேதுவென்றாக்கால் விந்துநாதம்
உற்றுப்பாருன்னுடம்பு வேறுமுண்டோ
தருவேதுயிதைவிட்டாற் பொருள்தானேது
தாரணியில்யோகமுதல் ஞானமேது
உருவேதுசமரசமே வறிவதாகு
முற்பனமாம்பிறவியது மொழிந்துபோமே. 3
போமப்பாயிப்பதியின் கூறுகண்டு
போக்கோடேநிறமறிந்து கருவைவாங்கு
ஆமப்பாயிவராலே குற்றமாகு
மணியணியாய்வகுத்ததுவுங் குயவனாகும்
நாமப்பாகருவிரண்டு பொருமேயாதி
ஆதியந்தமானதுவு மிதுவேயாகும்
வேமப்பாவேகாத தலையுமாகும்
விளங்குகிறசாகாத காலுமாமே. 4
சாகாதகாலதுவே யறுகோணந்தான்
தனிவேகாத்தலையதுவே மூலமாகும்
கோகாதபுனலதுவே பரவெளிதானப்பா

போக்கோடேயிதுமூன்றும் புதுமைமெத்த
போகாதபிரமகற்பங் கல்லுச்சுண்ணம்
புலனுடையகூறல்லா லெவருமில்லை
வேகாமல்வெந்துநின்ற சவுக்காரந்தான்
விளங்கியதோர்மாவாகும் விந்துபாரே. 5

விந்துநின்றநிலைகண்டு நாதங்கண்டு
வெளிகாணப்பிரமமென்ற கல்லைக்கண்டு
விந்துநின்றநிலையிதுதான் பேயாகேளும்
வெறும்வாயை மெல்வதுபோற்கண்டுகொண்டு
வந்தவிதம்போனவித மிரண்டுங்கண்டாய்
மகத்தானசுண்ணக்கல் வெளியதாகும்
வெந்துநின்றசவுக்காரக் கட்டியோடே
மேவியேமருகிருக்கும் வேளைக்கல்லே. 6

கல்லென்றசுண்ணக்கல் காரமெத்த
கடுவெள்ளையாய்ப்பார்த்து வாங்கிவந்து
சொல்லென்றால்ரவியினுப்பு சுண்ணநீருஞ்
சுகமான அமுரிபடி யெட்டிற்போட்டு
மங்கநீயக்றத்துவதை வெளியேவைத்து
மகத்தானதெளிவிறுத்து பாண்டத்திட்டு
னில்லென்றகல்லுப்பை பாண்டத்திட்டு
நோரகயெறித்திடுவாய் சாமம்நாலே. 7

28

நாலானசாமந்தா னெரித்தபின்பு
நலமானரவியிட்டுக் காய்ந்தபின்பு
சேலானநாதவுப்பு வதனிற்பாதி
செப்பரியசெயவீரம் நாலுக்கொன்று
மாலானவான்கார மிரண்டுதானும்
மாட்டையிலேஎட்டிலொன்றாய் மாட்டிக்கொண்டு
மேலானகுளிக்கல்விற் போட்டுமைந்தை
விரவியேவெண்கருப்பச் சாமமாட்டே. 8

சாமந்தானரைத்தபின்பு வில்லைதட்டி
சாதகமாய்ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
ஏமந்தானுச்சுதப்பா யிந்தவில்லை
யெடுத்தொருவோட்டிலிட்டு சீலைசெய்து
ஊமந்தான்றெருவிற் புடத்தைப்போடு
வுத்தமனேபுடமாறி யெடுத்துக்கொண்டு
வாமந்தான்வெடியுப்பு நீரினாலே
மாட்டியேயறைத்ததொரு வில்லைசெய்யே. 9

வில்லைசெய்துசீலைமண்ணுஞ் சாத்திக்கொண்டு
வேண்டியதோரன்பதெருக் குள்ளேபோடு
தொல்லையிலேவிழுகாதே தொழில்பாரப்பா
சூடாநீயெடுத்துமே கல்வத்திட்டு
யெல்லையிலேபூநீறும் நவாச்சாரந்தா

னேத்தியரைநாலுசாம மெடுத்துப்பின்பு
மல்லையிலேபனிமுகத்தில் நீருண்டாகு
மாட்டியரைகல்லுப்பு மாண்டவாரே. 10

வாராகயெடுத்ததனை வில்லைசெய்து
மைத்தனேகுக்கிடமாம் புடமேபோடு
பேராகஆூரவிட் டெடுத்துக்கொண்டு
பேசாதேபூநீரை விட்டுஆட்டே
நேராகசாமமட்டு மாட்டித்தீரு
நிலைத்ததொருவில்லையைத்தான் ரவியிற்போடு
கூறுகவோட்டில்வைத்துப் பூநீர்ச்சாலைக்
கொள்கியேயெண்படிதருக் குள்ளேபோடு. 11

போட்டதொருசுண்ணமதாய் நீறிப்போச்சு
புகழாகயெடுத்ததனைக் கல்வத்திட்டு
ஆட்டினபின்கடுங்கார நீரைவிட்டு
வப்பனேவாட்டிடுவாய் சாமமொன்று
நீட்டபின்புவஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
நேராகப்பூநீரிற் சீலைசுத்தி
மூட்டபின்புரவிக்குள்ளே காயப்போடு
முசியாமனுமியோட்டி லூதிப்போடே. 12

போட்டபின்புசுண்ணமென்ன வழலையாச்சு
பொற்பிரவியுண்டாச்சு பொருளுண்டாச்சு

நீட்டபின்புவண்டாண்டம் நீறிப்போச்சு
நிலையாதவாதமிப்பால் நிலைக்கலாச்சு
காட்டபின்புகன்னியுயிர் நாதத்தாலே
கல்லுப்பேசுண்ணமதாய் கருவுமாச்சு
கூட்டியிதின்துறையறிந்து கூட்டினுக்கால்
குறையாதுதங்கவனம் வேதைத்தானே. 13

தானென்றகற்சுண்ணம் பலந்தான்ரெண்டு
தண்மையுள்ள செயசாரம்பலந்தான்ரெண்டு
வானென்றபூரமொன்று கூட்டிக்கொண்டு
வுத்தமனேகல்வத்தி லாட்டுஆட்டு
வேனென்றுயிளகியது குளம்பாய்நிற்கும்
விருதானபீங்கானில் விட்டுக்கொண்டு
தானென்றபனிமுகத்தி லிருந்ததண்ணீர்
மைந்தனேவீரத்திற் காசுபோடே. 14

போட்டபின்புசெயநீர் வழலையப்பா
புதுமையுள்ளகல்லுப்பை நீராலாட்டி
காட்டுடையவில்லைதட்டி ரவியிற்சாய்த்து
நல்லதொருஅஞ்சுண்ணக் குகையிலூதி
மூட்டதொருசுண்ணும்பாம் வீரங்கூட்டி
முக்யமுள்ளவால்நீரால் மத்தித்தேதான்
தாட்டிகமாய்ச்சூடனுக்கு அங்கிபூட்டி

தடையறவேமூன்றுநாட் காயவைத்து
கட்டுநீயஞ்சுண்ணக் குகையிலூது
கூச்சமில்லேசுண்ணம்பாய் பொருமுந்தானே. 15

தானென்றபூநீரை செயநீர்பண்ணி
தடையறவேசரக்கெல்லாங் கட்டிக்கொள்ளு
வூனென்றவுடலைவிட்டு வெளியைப்பார்த்து
வுளமகிழ்ந்துபோகாதே யுலுத்தாசொன்னேன்
தேனென்றமனோன்மணியே பூரணந்தான்
சிவனொடுங்கும்பராபரமே கருவதாகும்
நானென்றுவகம்படைத்தால் தலைதெறித்துப்போகும்
நல்லதொருகற்சுண்ணத் துப்புமுற்றே. 16

அண்டைக்கல் முப்புசுண்ணம்-16

முற்றிற்று.

சிவமயம்.

முப்பத்திரண்காவது,

அகஸ்திய மகாமுனிவர்

ஞானம்-6.

பாரப்பாசிவன்விட்டுப் போகும்போது
பாழ்த்தபிணமகிடக்குதென்பார்உயிர்போச்சென்பார்
ஆரப்பாவறிந்தவர்களாறுமில்லை [ர்
ஆகாயசிவத்துடனே வேறுமென்பார்
காரப்பாதீயுடனே தீச்சேருமென்பார்
கருவறியாமானிடர்கள் கூட்டமப்பா
சேரப்பாகாமிகள்தா னென்றாய்ச்சேர்த்து
தீயவழிதனைத்தேடி போவார்மாடே. 1

மாடுதானானாலும் வொருபோக்குண்டு
மனிதனுக்குஅவ்வளவுந் தெரியாதப்பா
காடுமெத்தநரகமென்பார் சொர்க்கமென்பார்
நல்வினையோதீவினையோ யெண்ணமாட்டார்
ஆடுகின்றதேவதைகளப்பாகேளு
அரியதந்தையிளஞ்சேரு மென்றுந்தோணூர்

சாடுமெத்தபெண்களைத்தான் குறிப்பாயெண்ணி
தளமானதீயில்விழத் தியங்கினாரே. 2

தயங்காமறப்பிழைப்பதற்கு யிந்தஞானம்
சார்வாகப்பாராட்டு ஞானம்வேறே
மயங்குதற்குஞானம்பார் முன்னோர்கூடி
மாட்டினோர்கதைகாவியப் புராணமென்றும்
இயலானரசந்தனிலே யீப்புகுந்தாற்போலும்
இசைந்திட்டசாஸ்திரங்க ளாரென்றேதான்
வரையானபயன்பெறவே வியாசர்தானு
மாட்டினார்சிவனார்தன் வுத்திரவினாலே. 3

உத்தரந்தானிப்படியே புராணங்காட்டி
லோகத்தில்பாரதம்போல் கதையுண்டாக்கி
கர்த்தாவெத்தானென்று தோணவொட்டாமல்
கபடநாடகமாக வேதஞ்சேர்த்து
சித்தாகவழியாக சேர்ந்தோர்க்கெல்லாஞ்
சதியாகவெகுதர்க்கம் பொருள்போற்பாடி
பத்தாகசைவர்க்கு வொப்பிணையுஞ்செய்து
பாடினார்சாஸ்திரத்தைப் பாடினாரே. 4

பாடினதோர்வகையேது சொல்லக்கேளு
பாதகபுராணமென்ற சோதியப்பா

நீடியதோரிராவணந்தான் பிறக்கவென்றும்
நிலையான தசரதன்கை வெல்லவென்று
நீடியதோராசனென்றும் முனிவரென்றும்
அருள்பெற்றவர்களென்றும் தேவரென்றும்
ஆடியதோரிராக்கரென்று மனிதரென்றும்
பாடினார்நாள்தோறும் வகையாய்த்தானே. 5

கழிந்திடுவார்பாவத்தா லென்றுசொல்லும்
கட்டியநால்வேத மாறுசாஸ்திரமு
மழிந்திடவேசொன்னதல்லால் வேறொன்றுமில்லை
யதர்மமென்றுந்தர்மமென்று மிரண்டுண்டாக்கி
மொழிந்திடுவாரென்றுசொல்லி பிரப்புண்டென்றும்
வுத்தமனாய்ப்பிறப்பனென்று முலகத்தோர்கள்
தெளிந்திடுவோர்குருக்களென்றுஞ் சீஷனென்றுஞ்
சீவனத்துக்கங்கேயல்லோ தெளிந்துகாணே. 6

அகஸ்தியர் ஞானம்-6

முற்றிற்று.

சிவமயம்.

முப்பத்தைந்தாவது,

அகஸ்தியமகாமுனிவர்

சிவகுளிகை - 8.

பாரப்பாசித்தரெல்லாஞ் சொன்னமார்க்கம்
பாங்கானவயித்தியரே யிந்நூல்பாரு
பாரப்பாமாந்தமது பிணிகட்கெல்லாம்
பகறினேன்குளிகையொன்று பண்பாய்க்கேளு
சேரப்பாபதினெட்டு பேருங்கூடி
திறமாகக்கோர்வையாய்ப் பாடினார்கள்
ஆரப்பாவதைக்குறிக்கி யொருகுளிகைக்குள்ளே
அப்பனேசிவகலையாய்ப் பாடினேமே. 1

பாடினவராரென்றாற் பொதிகைக்குள்ளே
பரமசிவன்மகனுடைய சீஷனப்பா
ஆடியேகுளிகையுட கருவைக்கேளு
வப்பனேசுருக்கியே துருசாய்ச்சொன்னேன்
தேடியேதிரியாதே கருமேனிவேரும்
ஜெயமரிஷிதிருநீற்றுப் பச்சைவேறும்
வாடியேயலையாதே சிறுபூளைவேறு
மைந்தனேவாடாதே சிறுபொறுமிதானே. 2

தானென்னகாட்டிலே மொச்சவேறு
 சாதவெள்ளைச்சாரணையின் வேறுதானுந்
தேனென்றசெப்பரிய வேலிவேறுஞ் ரத்தாமணி
 ஜெயமானவமுக்கரா வடக்குவேறும்
மானென்றகுளிமுட்டான் சல்லிவேறும்
 மைந்தனேகுட்டிவிளா மேற்குவேறும்
வேனென்றவேறுவகை பதினொன்றுக்கும்
 விளம்புகிறேன்கடைமருந்தின் விபரங்கேளே. 3

கேளடாபெருங்காயம் வசம்புகூட
 கெடியானசிற்றரத்தை வெள்ளைப்பூண்டு
ஆளடாதிப்பிலி கிரும்புதானு
 மப்பனேசாதிபத்திரி யிஞ்சிதானும்
சேரடாகடைமருந் திரண்டுபங்கு
 செயமானவேறுவகை யொன்றாய்க்கொள்ளு
வாரடானதின்குரு வொன்றாய்க்கூட்டி
 மாட்டியேகுட்டிவிளாஞ் சாருவாரே. 4

வார்த்துநீயரையடா வரைச்சாமந்தான்
 மைந்தனேகுழம்பதுபோ லாகுமுன்னே
பரித்துநீவேலியின்றன் சாருவிட்டுப்
 பாங்காகயரைச்சாம மரைத்துக்கொள்ளு

சேர்த்துமேகுன்றிக்கா யளவுசெய்து
திறமாக அங்-உங்-சிங்-மங்-ஓம்நமவென்று
போற்றியேயெடுத்தாக்கால் சித்தியாகும்
புத்திரனேவஷ்டமா சித்தியார்ச்சே. 5

ஆச்சப்பாசிவகுளிகை வொன்றுசொன்னேன்
அப்பனே நூல்களிலே சொல்லவில்லை
காச்சப்பாகுளிகையுட கருவைச்சொன்னால்
காணாமலோடுமடா பிணிகளெல்லாம்
போச்சப்பாபிணிகள்முலைப் பாலிலீந்தால்
பேரானமுப்பத்திரண்டு தோஷம்போகும்
ஆச்சப்பாமாந்தமொடு பதினொன்றுபோகு
மப்பனேவேலியுட சாற்றிற்போமே. 6

போமடாமுட்டுதோஷ மொன்பதுக்கும்
புகழாகயிஞ்சிவேர் சாற்றினோடும்
வாமடாபுள்தோஷம் பதினெட்டுக்கும்
வாகானவென்னீரி லீந்தாற்போகும்
தாமடாபொதிகைமுனி சொன்னமார்க்கந்
தப்பாதுவொருநாளும் வீண்போகாது
ஆமடாசிவகுளிகை யிதுதானென்று
வப்பனேபார்த்தவர்க்கு சித்தியாமே. 7

கேளப்பாயெங்களுட குளிகைக்கெல்லாங்
கிருபையாய்நொச்சியிலை சாற்றிலோடும்
வானப்பாகண்ணியொடு பிருமலுக்கு
மைந்தனேவேலியுட சாற்றிற்போகும்
வானப்பரகரப்பானுக் கெல்லாமைந்தா
வளமானஅமுக்கரா சாற்றிற்போகும்
ஆளப்பாகுழந்தைகட்கு வந்தநோய்க
ளப்பனேயக்குளிகையி லடக்கமாமே. 8

அகஸ்தியர் சிவகுளிகை-8

முற்றிற்று.

சிவமயம்

முப்பத்தாறுவது,

அகஸ்தியமகாமுனிவர்

ஞானம் - 8.

சோதியென்னும்பராபரையாள் தேவிபாதம்
சொற்பெரியநாதாக்கள் பாதம்போற்றி
நீதியெனுமெனையாண்ட நந்திபாதம்
நின்னகத்தில்வைத்துயான் தொழுதிரைஞ்சும்
பாதிமதிதரித்தசிவன் நின்றமார்க்கம்
பார்மக்காளுன்னுள்ளே பரிந்துகாட்ட
வாதியென்னும்நின்றபர மூலத்துள்ளே
ஆத்மாவாய்நின்றகண பதியேகாப்பாம். 1

கணபதியாய்நின்றபர மூலத்துள்ளே
கணங்கொள்ளாநின்றெழுத்தை கருதிக்கேளு
தனபதியாம்பீசத்துள் ஓங்காரவட்டந்
தனித்துநின்றபீடமதுதான் சார்ந்துபாரு
இனபதியாய்நின்றதொரு பீசந்தானும்
யெழும்புகின்றநந்தியது யதுவேயாகும்
மனமதியாய்நினைவையெட்டிக் குறித்துப்பாரு
மைந்தனேநந்திமயிர்ப் பாதியாமே. 2

பாதியென் றகந்தியது சிவமேயாகும்
பாரியத்தின்மையத்தில் மண்ணேயாகும்
சோதியெனநின் றதொரு வமிர்தந்தன்னை
சொன்னவினியென்னாலே முடியாதப்பா
பாதியென் றபராபரையாள் சொன்னதெல்லாம்
பகருகிறேன்புலத்தியனே பண்பாய்க்கேளு
வீதியென் றமுச்சந்தி யெனக்குமைந்தா
விதமானயெட்டங்குலத் துள்ளேகேளே. 3

கேளப்பாவமிர்தமது நின்றதானம்
கெடியானசமண்டுதான் தாரையைப்போல்
நாளப்பாவதிலிருந் தைந்தினுள்ளே
நமனுடையமுடிவதுவே வுயிருமாகும்
பாழப்பாவொன் றுமில்லை ஞானமார்க்கம்
பாடினதிலித்தொழிலை மறைத்தாரையா
தேளப்பாகொட்டுதல்போ லமிர்தந்தன்னை
சிந்தாமலுண்பதற்கு வகையைக்கேளே. 4

வகையென்னவிரண்டுவிழி மருட்டிப்புள்ளே
மைந்தனே அண்ணாக்கி லுண்ணாக்கையோட்டு
தகையொன் றுமில்லாமல் மூலத்தீசற்றும்
சனத்திலேகந்தியுட வழியிற்செல்லும்

பகையில்லாமுதுகினுட தண்டினுள்ளே
பரிவானநந்தியது நேரிலோடும்
திகைத்துநின்றுகண்டதோ ரமிர்தந்தன்னை
சிறந்துநின்றநந்திக்குத் துறையாமெண்ணே. 5

யெண்ணவேநந்தியுட னியம்புங்காலை
யிசைந்தநந்திசுழிமுனையில் நாட்டிப்பாரு
வுண்ணவேவாயுவுடன் தேய்வுங்கூட்டி
யிசைந்தநந்தியதுவழியே யமர்ந்துபோகும்
பண்ணவேயமிர்தமது தலைகீழாகும்
படீரென்றுகொட்டிவிடுஞ் சிவமேமிஞ்சும்
கண்ணவேநந்திக்கி வலுவைத்தேட
கனமானவாசியைத்தான் வெளியோட்டாதே. 6

ஓட்டாதவாசியைத்தான் வெளிபீசத்துள்ளே
யுள்ளிருத்தியழுத்தியே வைத்துக்கொண்டு
தேட்டாதஞானவெளித் தெகட்டுமப்பா
சிவசிவாவொருவருக்கும் வெளிவிடாதே
யாட்டானநந்தியுட நிலையைப்பற்றி
யானுமுன்னேயமிர்தத்தில் செல்லவைக்கும்
பாட்டானநாசிமுனை குறியையுற்று
பார்க்கையிலேயமிர்தமது சொரியும்பாரே. 7

பாரப்பாசெடலத்தில் நந்திபாதம்
பற்றிக்கொள்கெட்டலைந்து போகவேண்டாம்
பாரப்பாவாத்மாவே சூட்சப்பாவை
யப்பனேயதிலிருக்கும் விபரமெல்லாம்
சேரப்பாவொன்றுமில்லை வீடுமாகுஞ்
சிறந்துநின்றநந்தியது பரமேயாகும்
வீரப்பாவொன்றுமில்லை நந்திகண்டால்
மெய்ஞ்ஞானபோதகமு மிரதமுற்றே. 8

அகஸ்தியர் ஞானம்-8

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

முப்பத்தேழாவது,

அகஸ்தியமகாமுனிவர்

ஞானசக்கிஷம்-5.

பரந்தானேவெளியாச்சு வொளியுமாச்சு
பாய்கின்றவாய்வாச்சு வன்னியாச்சு
வுரந்தானேபுனலாச்சு மண்ணுமாச்சு
வுடலானசீவசெந்து வுதிக்கலாச்சு
மரந்தானேபூமிமுத லுண்டாகலாச்சு
மார்க்கமென்றநாலுவகை யோனியாச்சு
சிறந்தானயேழுவகை தோற்றமாச்சு
தெளிந்தரியபூரணத்தின் செயல்தானென்றே. 1

ஒன்றல்லோவெவ்வேறாய்ப் பிரிந்துதப்பா
வொடுங்குமதுவொன்றினிலே லூணிப்போச்சு
ஒன்றல்லோவிரண்டல்ல யேதோவென்னில்
வுற்றுப்பார்மனந்தானே யிதற்குமூலம்
ஒன்றல்லோவித்துவினி லடக்கம்போல
ஓகோகோபூரணத்தி னுண்மைதானே. 2

தானென்றுவசியமுத லெட்டுவித்தை
சாதனங்கள்தனக்கெல்லாம் வொன்றேசூட்சம்

மானென்றயோகமுதல் ஞானத்துக்கு
மாராட்டமில்லையடா வொன்றேசூட்சந்
தேனென்றசரிதையொடு கிரியைமார்க்கஞ்
செப்புவதுக்காதியென்ன வொன்றேசூட்சம்
நானென்றவாணுவத்தை நீக்கிப்போடு
ஞானமென்றமனதல்லோ வாதியாமே. 3

ஆதியாம்ஞானத்துக் காதிசூட்ச
மாசையற்றவறிவல்லோ வாதிமூலம்
சோதியென்றயோகத்துக் காதிசூட்சஞ்
சொற்பெரியநாக்குநுனி தொட்டால்சூட்சம்
வாதியென்றவாதத்துக் காதிசூட்ச
மகத்தானபூவழலை வைத்தால்சூட்சம்
பேதியென்றகிரியைக்கி யாதிசூட்சம்
பிறப்பறுக்குமமிர்தநாதம் பேசுநூலே. 4

பேசுவதேசரியைக்கு நீதிசூட்சம்
பிண்டவுப்புஅண்டவுப்பு யிரண்டும்பார்த்து
கூசவேவேண்டாமையா நிலையில்நில்லு
கூறினேன்புருவமையம் நாதகீதம்
ஆசையதுகொள்ளாத பெண்ணைநீக்கு
ஆர்கண்டுசொல்வார்க ளிந்தமார்க்கம்
ஓசையற்றமணிபூர கத்தின்ஞானம்
உரைத்துவிட்டோங்கக்கிஷ மைந்துமுற்றே. 5

அகஸ்தியர் ஞானகக்கிஷம்-5

முற்றிற்று.

சிவமயம்.

முப்பத்தெட்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்

வகாரசூத்திரம் - 13.

ஆதியென்றபூரணத்தா யருளைப்போற்றி
யறையுறேனுயிரத் திருநூறுள்ளே
சோதியென்றவாதத்தின் சூட்சந்தன்னை [ன்
சுருக்கமுடன்பதின்மூன்றில் குருவைச்சொல்வே
பேதியிலேபேதிப்பார் சுத்தபேதி
பெருமையினிமாணாக்கா பேசிக்கேளு
சாதியிலேவாதமது வைத்ததுவுந்தான்
சாற்றுகிறேன்வெளியாறு சாற்றக்கேளே. 1

சாற்றுகிறேனுலகுக்கு பத்துமட்டுஞ்
சதிரானபெரியோர்க்கு வறுபத்தினாலு
போற்றுகிறேன்ஞானிகட்கு வாயிரந்தானாகும்
மைந்தனேசொல்லிவிட்டே னருஞ்சொல்லார்
தேற்றுகிறேனிப்படியே வாதமாச்சு
செகசாலகுருவினுட திறத்தைக்கேளே. 2

கேளப்பாரேசகத்தில் பழக்கம்பண்ணு
கெடியானபூரகத்தி லமர்ந்துவாங்கு

மூளப்பாரும்பகத்தி லங்கென்றூணு
முனையானசுழினைபற்றி முட்டிப்பாரு
நாளப்பாமனோன்மணியைக் கண்டத்தூணு
நலமானவாசனையி லகிரிபெற்று
வாளப்பாதன்மயமாஞ் சோதிகண்டால்
வாதமெல்லாமுந்தனுக்குச் சித்தியாச்சே. 3

சித்திக்கவேணுமென்றால் மூலம்பாரு
திரிகோணவரைதனிலே யெழுத்தையூணு
முத்திக்குப்பாதையது வரிந்துயேறு
மூதண்டக்குருவினிட முறையைக்கேளு
சுத்திக்கச்சாரமது பஞ்சாட்சரஞ்
சாதகமாயகாரமது வைந்துகாரஞ்
சித்திக்குமுப்பதிலே யைந்துமாச்சு
திறமானபதினைந்து வுப்புமாமே. 4

ஆகுமென்றகெந்தியொன்று தாறமொன்று
வழகானவீரமொன்று கௌரியொன்று
வேகமென்றசூதமொன்று பச்சையொன்று
விதமானசரியிடையே தங்கமேத்து
போகமென்றவலதுகையில் நீரைவாங்கி
புகழாகதுருசதற்குச் சுருக்கையேற்று

மாகமென்றசெம்புவெள்ளி ரெண்டில்தாக்கு
மகத்தானவாதமெல்லா மலைபோலாமே. 5

ஆசானையறிந்திடவே குருவைக்கேளு
யடைவானயெட்டுவகை பரிசம்பாரு
வேசாகபரிசகுணம் யெட்டுண்டப்பா
விளம்புகிறேன்மாணுக்கா நன்றாய்க்கேளு
காசானவாதியென்றால் நெத்திகுதங்
கழுத்திலேசாய்வாகுங் கண்டுபாரு
ஓசையுடனிடமுதுகில் மருளைப்பாரு
வுத்தமனேயின்னமொரு குறியைச்சொல்வேன்.

சொல்லக்கேளிடக்கரத்தில் சங்குசக்ரச்
சுகமானவலக்காலில் மருளையாகும்
அல்லுகிறேன்துலாராசி யவனேயாகும்
ஆச்சரியம்பித்தரைப்போல் வார்த்தைசொல்வான்
மல்லுகிறேன்கடன்கேட்பார் நித்தம்நித்தம்
வசையோடேவாங்கியது கொடுப்பான்பாரு
கல்லவேயவன்மனது பணிகள்பூண
காசினியோர்போல்வாழக் கருதுவானே. 7

கருதப்பாவவர்பதத்தைப் பணிரெண்டாண்டு
கல்மனதாயிருந்தாலு முருகிப்போகு
மரிதப்பாவவர்மனது விள்ளார்விள்ளா

ராச்சரியஞ்செகசால வித்தைசெய்வார்
விருதப்பாயிடைஞ்சியே மருளுண்டாகு
மிதமாகப்பொருள்கொடுத்து வருளேக்காரு
பொருதப்பாவவர்மனது குறைவாராமல்
பொற்பூவால் பூசைபண்ணப்புகழ்ந்துகாரே. 8

காரணமாங்குருஸிருக்கு மனோன்மணியின்சித்தி
கனமான தினந்தோறும் காணுங்காணும்
பூரணமாம்வாதமுதல் ஞானசித்தி
புகழாகவவர்குறியைக் கண்டுகாரு
காரணர்க்குமகாரமது னகாரமேதான்
நன்றாகக்கண்டறிந்தோன் வாதஞானி
வாரணமாமுகத்தானை யீன்றயீசன்
வாகானநந்தியெனக் குரைத்தவாரே. 9

வாகானவுலகத்தில் சித்தர்கோடி
வாய்மையுடனுலகுதனில் பெரியோர்கோடி
கூரானமால்தனிலே சித்தர்கோடி
கோடிரிஷிகோடியுண்டு கூர்ந்துகாரு
தேரானசமுசார வாழ்க்கைமெத்த
தெளிந்ததொருஞானிகள் கோடியாகும்
பாரானகூடுவிட்டு சூட்சத்தூடி
பெருமையுடன்வாழ்வார்கள் கோடியாச்சே. 10

ஆச்சென்றுமவுனவித்தை யறிந்தபேர்க
ளம்புவியில்வெகுபேர்க ளறிந்துபாரு
மூச்சென்றுபிராணாயம் பண்ணலென்ன
முனையானசுழிமுனையிலே சென்றாலென்ன
வாச்சென்றுவஷ்டகர்ம முடித்தாலென்ன
மைந்தனேயதுவெல்லா மவுனமாக
வோச்சென்றுவிந்துவைத்தா னட்டிக்கொண்டு
வுத்தமனேமலைவிலகு மவுனம்போச்சே. 11
போச்சென்றுமவுனசித்தி வொளியைக்கண்டு
பெற்றதல்லோபேரென்று பேசினார்கள்
காச்சென்றுவதுவரையுங் கண்டமூர்த்தி [டார்
கன்மம்விட்டுயிரங்கியல்லோ கொங்கணரைக்கேட்
ஆச்சென்றுமவுனியல்லோ யிரங்கிவந்தார்
அப்பவுமேமவுனமென்று வறியமாட்டார்
ஓச்சென்றமவுனத்தை தெளிந்தபேர்கள்
ஓசிவனேமாணாக்கா தேர்ந்துபாரே. 12
பாங்கானமனோன்மணியின் சோதிகண்டால்
பலபலவாம்வாதமெல்லா மவர்க்கேசித்தி
தாங்காமலலாடத்தில் தூங்குதூங்கு
தாசர்களேமாயைவந்து கொல்லும்பாரு
தேங்காமல்மவுனத்தில் திகிரியேற்றி
தென்றிசையில்சஞ்சாரஞ் சமாதிமேவி
பூங்காருமதமடக்கி யைந்தும்போக்கி
பூலோகஞானியென்று வாழ்வாய்முற்றே. 13

அகஸ்தியர் வகாரசூத்திரம்-13 முற்றிற்று.

சிவமயம்.

முப்பத்தொன்பதாவது,

அகஸ்திய மகாமுனிவர்

குறிநூல் சூத்திரம் - 12.

கார்கொண்டமாமுகனைப் பணிந்துபோற்றிக்
கடந்துநின்றமூலவன்னிக் கப்பால்நின்ற
பூரணமாமனோன்மணித்தாய் பாதம்போற்றிப்
புகழானவேதாந்தச் சுருக்கஞ்சொல்வேன்
தோரணமாமண்டரண்ட மாலைபூண்ட
சோதிசதாசிவனையென்றன் கருத்தில்வைத்து
சாரணையாங்குளிகையொடு வாதம்ஞானம்
சாற்றுகிறேன்வெளியாகச் சாற்றுறேனே. 1

சாற்றுகிறேன்வாசியுட கருவின்மார்க்கஞ்
சார்வாகமானுக்கா நன்றாய்க்கேளு
ஆற்றுகிறேன்பனிரெண்டு நாலுஞ்சேர்த்து
வாதியந்தமத்திடத்தே யூணிநில்லு
வாற்றுகிறேன் தினமொன்றில் கால்தான்சேரு
வாகானஅகாரமொடு உகாரந்தானு
மேற்றியேயிப்படியே சோடசத்தில்சேர்த்து
மியலானசமாதிக்கு ளிருந்திடாயே. 2

இருக்கவேவாதமொடு ஞானஞ்சொன்னேன்
இறந்திறந்துபிறப்பதற்கோ வாதஞ்சொன்னார்
மருந்தவத்துரிஷிகள்சித்தர் பாதம்போற்றி
யறையுகிறேனுதியாய் நகாரந்தானும்
பொருந்தவேசனங்களவர் மாண்டுங்காணார்
பேய்வாதிகுளிகையென்பார்சாரணை தானென்பார்
மருந்திலேசிங்குவைப்பு பேர்காணார்கள்
மகத்தானவாதியென்றால் வர்ணங்காண்பான். 3

காணப்பாவுயிர்சரக்கு வாண்பெண்ணாகும்
கனமானவழலையுடச் சுண்ணமாகும்
தோணப்பாசூதமது கட்டிப்போகுந்
தொடுகுறிபோலாம்மென்ற மத்தங்காயி
காணப்பாமுப்பதுட ரெண்டுதீட்சை
யப்பனேகாடையிலே சாரணை தானுச்சு
பூணப்பாதம்பனத்துக் குளிகைசொல்வேன்
புகழானவித்துனுட தைலந்தானே. 4

தைலமதுபூப்புடத்தில் வாங்கிக்கொண்டு
சார்வாககாமமொன்று சுருக்குத்தீரு
தைலத்தால்குளிகையுமே தம்பனந்தானுச்சு
சார்வாகவாயில்வைத்து மவுனந்தாக்க
ஒயிலுடனேவாயிரத்தெட் டண்டந்தோணி

வுத்தமனேதேகமது வயிரம்போலாம்
கைலையிலேயீசனுமே நீயேயாச்சு
காணப்பாகுருவருளால் காணுங்காணே. 5

காணப்பாபுரியஷ்ட மெட்டினாலே
காசினியில்மாண்பல்லோ யிறந்தார்வீணே
ஊணப்பாபுருவமையத் தொளியினாலே
யுலகெல்லாநீயாக மனதில்காண்பாய்
காணுவாய்நமன்வாயில் மண்ணைப்போட்டு
னுதவிந்துசூதமுண்டு நண்ணியேறு
தாணுவாயிருக்கவென்றால் சூதந்தாக்கு
தவறாதுதவறாது சடம்போகாதே. 6

போகாமலிருக்கவென்றால் வாசான்றன்னை
பொற்பூவைச்சாற்றியல்லோ காக்கவேணும்
வேகாதகாலையல்லோ முன்னேகேளு
விளங்கியசாகரத்தலையை விரும்பிக்கேளு
வாகாகவசாரவித்தை கண்டோர்க்கையா
வலதுமுழுந்தாளிலொரு மருளைப்பாரு
வாகமுடன்கண்டமது சாய்வுகாணு
மப்பனேயின்னமொரு அங்கங்கேளே. 7

கேளப்பாயிடமுதுகில் மருளுங்காணுங்
கெடியானயிடதுகையில் சங்குசக்கிரம்

நாளப்பாயிதுகுறியை நன்றாய்ப்பாரு
நாடியிடஞசியிலே மருளைப்பாரு
கேளப்பாயிடமுதுகில் மருளைப்பாரு
வேதாந்தவாதியென்றால் யிக்குறிதப்பாது
ஆளப்பாயிப்படியே யடையாளங்கள்
ஆரையினிகண்டவரை யடுத்துக்காரே. 8

காரானகவுசிகனே கால்தூதன்
காத்தவரைப்பனிரெண்டு வருஷந்தானே
சீராகவவர்மனது வந்தபின்பு
செப்பினார்வித்தையெல்லாந் திறமாய்த்தானே
ஆரானவலைகடலைத் தாண்டிப்போக
யங்கிருந்தசினமேதன் பெண்ணினாலே
போரானவமிர்த கந்தகந்தான்தந்து
பெருமையுள்ளகுருவுனக்கு யீந்தான்பாரே. 9

ஈந்ததுதானேதேதோ சொல்லக்கேளு
யியலானகுருபாதங் காணிக்கையாக
வேந்தரிஷிசொன்னவுப தேசந்தானு
மேலாகவொண்ணுகோடி யாகத்தானுஞ்
சாந்தபடியானுமந்தப் படியேசெய்தேன்
சாதகமாயக்கியமா ரிஷிக்குத்தானு

மேந்திழையுநாமுமிரு வோருமாக
 பிருந்திட்டோம்பனிரெண்டு வருஷந்தானே. 10
தானென்றபன்னிரண்டு ஆண்டுபார்த்து
 சக்கரத்தினியல்பெல்லாஞ் சார்வாச்சொன்னார்
தேனென்றமந்திரங்க ளெல்லாஞ்சொன்னார்
 சிவன்மகனையினப்படுத்தி தெளிந்திட்டேனான்
பானென்றபரங்கிவைப்பு சொன்னார்வீரம்
 பாடினார்போகரப்பா பரிந்துபாரு
யேனென்றவாதமப்பா யெவர்களுக்கு
 மெளிதிலேயேறுதற்குத் துறையுமாமே. 11
துறையோடேவீரமொரு கழஞ்சிதூக்கு
 தூதற்குச்சொல்லாதே யுனக்குச்சொன்னேன்
முறையோடேவிந்துவென்ற சாரங்கூட்டி
 மூர்க்கமாயைந்துசுண்ணக் குகையிலூது
குறையாமல்வருணனைப்போல் சிவப்புமாகும்
 கூரறியநவலோகம் நூற்றுக்கொன்று
நிறையோடேயீந்திடவே மாற்றுமாகும்
 நீதியுடன்ஞானத்தைக் காணுமுற்றே. 12

அகஸ்தியர் குறிநூல்சூத்திரம்-12

முற்றிற்று.

சிவமயம்.

நாற்பதாவது,

அகஸ்தியமகாமுனிவர்

ஊத்துமுறை - 24.

பாரப்பாஊத்துமுறை வகையைக்கேளு
பக்குவமாயுருக்குமுறை துருத்தியொன்று
சேரப்பாசத்துவகை துருத்திநாலு
செயமானநீற்றினமோ ரெட்டுமைந்தா
தேரப்பாவரணவகை வுபசாரங்கள்
செய்மார்க்கங்குருமுன்னி லறிந்துகொண்டு
சேரப்பாகுருமுடித்து செந்தூரித்து
சிவசிவாகேசரியை தினமும்நோக்கே. 1

காலம்.

நோக்கடாஐப்பசிமுதல் மூன்றுமாதம்
நுண்மையுடனுருக்கினத்துக் காலமாகும்
வாக்கடாதைமுதலாய் மூன்றுமாதம்
மகத்தானசெயநீருக் காலமாகும்
தாக்கடாசித்திரைமுதல் மூன்றுமாதஞ்
சங்கையுடன்குருமுடிக்குங் காலமாகுந்

தூக்கடாஆடிமுதல் மூன்றுமாதஞ்
சுத்தமுடன்றிருவகசெந் தூரஞ்செய்யே. 2

நீ ற் றி ன ம்.

செய்யப்பாநீற்றினத்தின் கருவைக்கேளு
சிவசிவாபுனுகுரவி வீரம்பூரம்
மெய்யப்பாகுருவுண்டு சூதந்தாரம்
விதமானகார்முகியுஞ் சவுக்காரமுதலுஞ்
செய்யப்பாசற்குருவை யொன்பதிலுமைந்தா
திருவானநவலோகம் நீறிப்போகுங்
கையப்பாகைமுறையா யறிந்தாயானாற்
கசடற்றுவேதமுறை காணலாமே. 3

உ ரு க் கி ன ம்.

காணவேவுருக்கினத்துச் சரக்கைக்கேளு
காரமுஞ்சவ்வாது வெடிசாரவுப்பு
பேணவேகண்டதொரு மால்தேவிவெள்ளை
பிலமானரங்குடனே ஆமணக்கங்குன்றி
தோணவேதேனுடனே புறவினெச்சத்
தொகுத்தறிந்துகருமாணங் கண்டாயானா
லூணவேநவலோக முருகிப்போகு
முத்தமனேகண்டறிந்தோ ரனேகங்காணே. 4

நவலோக உபசரங்கள்.

காணவேநவலோக வுபசரங்கள்
கடிதானபாஷாண வகைகட்கெல்லாம்
பேணவேசெந்தூரஞ் செய்யநல்ல
பிலமானசரக்குவகை சொல்லக்கேளு
தோணவேமனோசிலை காரங்கெந்தி
சுத்தமுள்ளவப்பிரேகங் கெவுரிதுத்தம்
பூணவேவெடியுப்பு யிதுவெல்லாந்தான்
புத்தியுடன்செந்தூரத்தின் குருவைப்பாரே. 5

வரணவகை சரக்கு.

பாரப்பாவரணவகை சரக்கைக்கேளும்
பரிவானதங்கமொடு நாதசூதம்
நேரப்பாநிமிளையொடு கெந்தியுப்பு
நேரறிந்துகைபாக முறையாய்ப்பார்த்தார்
பேரப்பாஎடுத்ததொரு நவலோகங்கள்
பிலமானவகாரவகைக் கிதுவேயாகுஞ்
சாரப்பாசற்குருவின் பாதங்கண்டு
சங்கையுடன்சவுமியா காரத்தைப்பாரே. 6

சூதம்.

பாரடாசற்குருவின் கடாட்சத்தாலே
பதிவாககட்டியதோர் சூதந்தன்னில்

நேரடாகாரீயஞ் சரியாய்க்கூட்டி
நேர்மையுடனலிலொன்று தங்கஞ்சேர்த்து
தீரடாகெந்தியுமே நாலிலொன்று
செம்மையுடன்சூதமெட்டி லொன்றதாகுஞ்
சேரடாபொடியாக்கி குப்பிக்கேற்றி
சிவசிவாவாலுகையின் மேலேயேத்தே. 7

ஏத்துநன்றாய்த் தீமூட்டிமைந்தாநீதான்
இன்பமுடன்பதம்பார்த்து செந்தூரித்து
போற்றியேநவலோகம் நூற்றுக்கொன்று
பூட்டடாபன்னிரண்டு மாத்துமாகும்
பார்த்திபனேவேறுவகை சூதந்தானும்
பரிவாகப்பலமெட்டு யெடுத்துக்கொண்டு
சாத்தியதோர்சங்கமொரு பலமுங்கூட்டி
சங்கையுடன்தெளிவாக யுருக்கிப்பாரே. 8

பாரப்பாவுருக்கியதைப் பொடியாய்ச்செய்து
பார்த்திபனேபதினாலு பலந்தான்கெந்தி
நேரப்பாபொடிசெய்து கூட்டிநீயும்
நேர்மையுடன்குப்பியிலே நிறையைச்சேர்த்து
சேரப்பாவாலுகையி லேந்திமைந்தா
தீர்க்கமுடன்பதம்பார்த்து செந்தூரித்து

காரப்பாயிதையெடுத்து நூற்றுக்கொன்று
காட்டவேநவலோகங் கனகமாமே. 9

ஆமப்பாயிதின்பேர்தான் வாலச்சந்திரன்
அரகராகுன்றியிரு நேரங்கொண்டாற்
காமப்பாமண்டலந்தான் கொண்டாயானுற்
கலைமதிபோற்றேகமது காந்தியாகும்
போமப்பாபட்டையது வுரிந்துபோகும்
பூரணமாங்கண்கள்ரெண்டு மொளியாய்நிற்கும்
தோமப்பாவுடம்பிருகி வாலையாகுஞ்
சுத்தமுள்ளகர்ப்பமடா விந்துமார்க்கம்
போமப்பாவுண்போர்க்கு சோதிகாணும்
பேர்பெரியவேதாந்த சித்தராமே. 10

உபரச சத்து.

சித்தருடனுபரசத்தின் சத்துச்சொல்வேன்
செயமானநவாச்சாரம் விராகன்ரெண்டு
பத்தியுள்ளவீரமது விராகன்ரெண்டு
பதிவானமண்டத்தின் தம்பலமோபத்து
புத்தியுடனண்டநீர் விட்டுஆட்டி
பூரணமாய்க்குகையிலிட் டிருக்கச்சத்தாம்
வெற்றியுள்ளசத்து தாரகம்போலே
வேகமுடனுருகுமதைக் கண்டுபாரே. 11

30

துத்தசத்து.

பாரப்பா துத்தசத்து வேதைசொல்வேன்
பரிசமுதல்சந்தான தூபதீபம்
நேரப்பாசூதத்தைச் சமனதாக
நேர்மையுடன் கூட்டிநன்று யுருக்கிப்பாரு
சாரப்பாநாலிலொன்று தங்கஞ்சேர்த்து
கருணையுடனுருக்கியதை மணியாய்வாங்கி
தேரப்பாவைந்திடைக்கு கெந்திசேர்த்து
சிவசிவாபொடிசெய்து குப்பிக்கேத்தே. 12

ஏத்துநன்றாய்நாலுகையி லங்கிபூட்டி
யெடுத்துநீசிவந்தான் பதமும்பார்த்து
போற்றிநன்றாய்நவலோகம் நூற்றுக்கொன்று
பூட்டிணய்பதினறு மாத்துமாகு
மாற்றிநன்றாய்வீரமிட்டுச் செந்தூரித்து
மகத்தானசூதமிட் டரைத்துக்கொண்டு
தோற்றியதோர் நூலைவிட்டு திரித்துத்தானே
சுத்தமுள்ள நீர்தனிலே துவைத்திடாயே. 13

துவைத்ததொருதிரியெடுத்து தீபமேத்தி
சூழவேகடுதாசி கூடுகட்டிப்
பலித்ததொருநவலோகத் தகடுக்கேதான்
பத்தியதோர்திரியவித்து தூபங்காட்டில்

தவித்ததொருதகடெல்லாங் கறித்துப்போகுங்
    தண்மையுடன் தணல்காட்டத் தங்கமாகும்
சிவந்ததொருதாம்பிரமாம் வேதைமார்க்கஞ்
    சிரேட்டமுள்ளமாணுக்கா கண்டுகொள்ளே. 14

காந்தசத்து.

கண்டுபார்காந்தமது பலந்தானொன்று
    கட்டியதோர்சாரமது பலந்தானைந்து
விண்டுபார்சவ்வீரம் பலந்தானைந்து
    வெற்றியுள்ளவெங்காரஞ் சமனாய்ப்போடு
கொண்டதொருசெம்பினி லிட்டுத்தானுங்
    குறியாகத்தானுருட்டிக் குகையில்வைத்து
சென்றிடவேசெப்பிலிட் டுருக்கிப்பாரு
    சிவசிவாநாகம்போம் சத்துப்பாரே. 15

பாரப்பாநாகம்போற் காந்தமானால்
    பதிவாககாயசித்தி யோகசித்தி
நேரப்பாகண்டிடைக்கி ரசமுங்கூட்டி
    நிசமானசத்திடைக்கித் தங்கங்கூட்டி
சேரப்பாதானுருக்கி மணியாய்ச்செய்து
    தீர்க்கமுள்ளகெந்தகமுஞ் சமனாய்ச்செய்து
காரப்பாபொடிசெய்து குப்பிக்கேத்திக்
    கருணையுடன்வாலுகையிற் றீயைமூட்டே. 16

மூட்டிநன்றாய்செந்தூரப் பதத்தைப்பாரு
மோசங்கள்வாராமல் சலாகைப்போட்டு
நீட்டியதோர்சலாகைமுனைக் காப்புகண்டால்
நிலைத்ததொருசெந்தூரம் பதமாய்ச்செய்து
பூட்டியதோரீசான்யம் பூசைசெய்து
புகழாகக்குழகதைபின் னிரக்கிப்பாரு
ஆட்டியதோராருனைப் போலவாகு
மந்திசந்திபிரண்டுகுன்றி திண்ணுதிண்ணே. 17
திண்ணடாமண்டலத்திற் காயசித்தி
சிவசிவாஅருணைப்போற் றேகமாகும்
எண்ணடாசோதிவெகு காந்தியாகுங்
கலகலத்ததந்தமெல்லா மிறுகிப்போகும்
எண்ணடாகோடான கோடிபேர்க
ளிதையறிந்துகுருமுடிக்க திகைத்துநின்றார்
பொன்னடாபொன்னதனைக் காணவென்றுப்
பூட்டுகிறவகையதனைப் புகலக்கேளே. 18

காந்தசெந்தூரம்.

கேளடாகாந்தசத்து நாகமொன்று
கெடியானதங்கமொன்று ரசந்தானொன்று
நாளடாமூன்றுமொன்றா யுருக்கும்போது
நல்லதொருநாகமது மூன்றுபோடு

காலடாபகையமர்ந்து கட்டிப்போகுங்
கருணையுடனின்றுருகி மணியுமாகும்
ஆளடாயிந்திடைக்கி கெந்திகூட்டி
அப்பனேநாலுவித வைப்புஞ்சேரே. 19

சேரப்பாபொடித்தல்லோ குப்பிற்றுக்கி
திறமாகவாலுகையில் நீற்றிக்கொண்டு
நேரப்பாநவலோகம் நூற்றுக்கொன்று
நீட்டவேபன்னிரண்டு மாத்துமாகுந்
தேரப்பாமயங்காதே பொன்னைக்கார்த்து
தீர்க்கமுடன்குளிக்கல்லிட் டரைத்ததின்பின்
நீரப்பாதுருசுசத்து சமனாய்ச்சேர்த்து
நீற்றியதைபதமாக வெடுத்துப்பாரே. 20

பூநகரச்சத்து.

பாரப்பாபூநகரச் சத்துச்சொல்வேன்
பறிவாகபூமிவேர் தன்னைவாங்கி
சேரப்பாவுலர்த்திநன்றாய்ப் பொடியேசெய்து
செயமானசாரமது யிடைகளஞ்சி
காரப்பாசவ்வீர மிடைகளஞ்சி
கட்டானவெங்கார மிடைகளஞ்சி
தேரப்பாயிதுவெல்லாஞ் செயநீர்தன்னாற்
செம்மையுடன்வாத்துருட்டிக் குகையில்வையே.

வைத்துநன்றாய்சில்லிவிட்டு வுருக்கிப்பாரு
மார்க்கமுடன்மணிமணியாய்ச் சத்துவீழும்
வைத்தல்லோமணியெல்லா முருக்கிப்பார்க்க
மகத்தானவயிரம்போற் பளபளக்குங்
கைத்ததொருபூநாக சத்திற்றானுங்
கருணையுடன்காசிடைதா னுருட்டிமைந்தா
நைத்ததொருநாகமைந் திடையேபோட்டு
நல்லகருவிரண்டுமொன்றா யுருகும்பாரே. 22
பாரப்பாவப்படியே வுருக்கிப்பார்க்க
பதிவாகவோரிடைதா னாகமட்டுஞ்
சாரப்பாகட்டியதோர் நாகமொன்று
சங்கையுள்ளசூதமொன்று தங்கமொன்று
நேரப்பாயுருக்கியதை வாங்கிக்கொண்டு
நேராகக்கெந்தகமுங் கூட்டிமைந்தா
தேரப்பாகொடியாக்கி குப்பிக்கேந்தி
செழுமையுடன்வாலுகையி லேத்திடாயே. 23
எத்தியல்லோதீயெரித்து செந்திரித்தா
லென்னசொல்வேன் நவலோகநூற்றுக்கொன்று
சாத்தியல்லோதானுருக்கிப் பார்த்தால்மைந்தா
சங்கையுடன்பதினாறு மாத்துக்காணும்
கூற்றனைகாண்பதற் கஞ்சுவான்பார்
குருவருளால்பராசத்தி பாதந்தன்னைப்
போற்றியேயாரவைத்துப் பார்த்தாலுந்தான்
புண்ணியர்க்குரசவாதப் புகழுண்டாமே. 24

அகஸ்தியர் ஊத்துமுறை-24 முற்றிற்று.

சிவமயம்.

நாற்பத்தோருவது,

அகஸ்தியமகாமுனிவர்

கருணாவாகடம் - ௮.

குமரித்தயிலம்.

கருதியேநீகேளு புலத்தியனேஐயா
    கருவானகுமரியிட தயிலஞ்சொல்வேன்
பிருதானகுமரிச்சார் படிதானிரண்டு
    வெள்ளாவின்பாலதுதான் படிதானிரண்டு
சரியானநல்லெண்ணெய் படிதானிரண்டு
    சதிராகதிரிகடுகு திரிபலாதி
மருவானமாஞ்சிலொடு கோஷ்டம்சீரக
    மதுரமொடுசாந்து யேலமென்ன. 1
என்னவேபச்சிலை பூலாமூலம்
    யிதமானலவங்கபத்திரி பேயும்பட்டை
பன்னவேசெவ்வல்லி யக்கிறுகாரப்
    பருளானகஸ்தூரி லவங்கங்கெந்தம்
தின்னவேரோகணிசெண பகப்பூஆனை
    திப்பிலியும்மணசட்டி சோம்புமஞ்சள்
பன்னவேவகையொன்று பலமரைதான்வாங்கி
    பரிவாகஆவின்பால் விட்டுஆட்டே. 2

ஆட்டியேயெண்ணெய்பால் சாற்றினுள்ளே
அப்பனேயடுப்பேற்றி நலமதாக
முட்டியேமெழுகுபத மாகவேதான்
முதிராமல்வடித்ததனை சீசாவில்போட்டு
காட்டுவாய்தாளியதில் வைத்துமூடி
நலமாகமண்டலங்கால் சென்றபின்பு
தாஷ்டிகமாய்மண்டலந்தான் முழுகும்போது
சாதகமாய்த்தீரும்நோய்ச் சாற்றக்கேளே. 3

கேளுநீமேகமென்ற தெல்லாம்போகுங்
கெடியானஅஸ்திசுரம் வெட்டைபோகும்
தாளுநீபித்தமெல்லாஞ் சாந்தமாகுஞ்
சரீரத்தில்வரட்சிமுத லூரல்போகும்
வேளுநீகுன்மமெட்டும் பாண்டுபோகும்
வெளுப்பானதிரேகமெல்லாம் வண்டுபோலாம்
வாளுநீவயிர்த்தியர்க்காகச் சொன்னேனப்பா
மகத்தானமனமுடையோர் மகிழப்போமே. 4

கணத்தெண்ணெய்.

போமப்பாகணத்தெண்ணெய் சொல்லக்கேளு
புகழ்முத்துகொட்டையெண்ணெய்படி தானொன்று
நாமப்பாகையான்சார் காணிச்சாறு
நலமானகுமரிச்சா றுள்ளிச்சாறு

வேமப்பாகோவைச்சார் புளியாரைச்சார்
விதமானகற்பூர வல்லியின்சார்
தாமப்பாவகையொன்று சாறுபடிகால்
தப்பாதே யெண்ணெயிலேகூடவாரே. 5

வார்த்தப்பாசாதிக்காய் சாதிபத்திரி
மைந்தனேமாசிக்காய் கற்கடகசிங்கி
ஏத்தப்பாகோஷ்டமொடு அக்கிறுகாரம்
யிதமாகவிரண்டுபலம் வெந்தயந்தான்
காத்தப்பாலவங்கபத் திரியும்பட்டை
கருவானவெள்ளுள்ளி வகையொன்றுக்கு
சாத்தப்பாகழஞ்சிநிறை வாங்கியேதான்
தளமானஆவின்பால் விட்டுஆட்டே. 6

ஆட்டியேயெண்ணெயிலே கறைத்துவிட்டு
வப்பனேபால்படிவிட் டடுப்பிலேத்தி
காட்டியேமெழுகுபத மாகவாங்கி
நலமாகவடிகொண்டு கலகத்துள்ளே
கூட்டியேகோரோசினையுங் குங்குமப்பூ
குணமானசாதிக்காய் களஞ்சிவீதம்
ஆட்டியேபொடித்திட்டு களஞ்சிநிறையாக
வப்பனேகுடித்துவரச் சொல்லக்கேளே. 7

கேளடாகணவெட்டை கணசுரங்கள்
கெடியானமந்தமொடு வுப்பிசங்கள்
நாளடாயுலர்த்துநின்ற கணங்களெல்லாம்
நலமாகவாறுமடா கெர்ப்பவெட்டை
தாளடாகணம்பாண்டு வெளுத்ததேகம்
தளமானநீர்வடித்தல் விடாதசூடு
வேளடாவுளம்பூரு வூஷ்ணம்போகும்
வெகுசுறுக்குயிவ்வாறு பாடல்முற்றே. 8

அகஸ்தியர் கருணைவாகடம்-8

முற்றிற்று.

சிவமயம்.

சற்குருவேநம:

நாற்பத்திரண்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்

சித்தாதி யெண்ணெய்-8.

சீர்சிறந்தவுடல்தனிலே சுவுசைரோகஞ்
சிரசுகளிற்குடியிருந்த மற்றரோகஞ்
பார்தனிலேவிழுந்தெழுந்த சூலைரோகம்
பம்பரம்போலாடுகின்ற வீராம்பற்கூடி
நீரிழுந்தகற்கூடு நிர்மலத்தின்கட்டு
நேரானசொரியொடு ரணங்கள்தானும்
பேர்பெரியபெரும்பாடு நாவடைப்பு
பின்னுமொருகிரந்தியொடு மேகந்தானே. 1

தானென்றதலையிடிகள் வாயிற்பண்ணும்
தளும்புகின்றகண்ணெரிவும் ஊதுவாய்வும்
ஊரென்றுஉயிரெழுந்து குடிப்போகத்தான்
உத்தமனேயெண்ணெயொன்று யுரைக்கக்கேளு
வேனென்றகாயமொடு வுள்ளூர்வாளம்
விரும்பியேவெண்காரங் காட்டெருமைபாலும்

கானென்றகடுக்காயு மிந்துப்பாகும்
கருத்ததொருசீரகமுந் திப்பிலியுஞ்சேரே. 2
சேரேநீதினுசுக்கு வேர்களஞ்சி
சேகரமாம்வாளமொடு பலமொன்றாகும்
காரேநீவுள்ளிச்சார் கணக்காய்வாங்கு
கடுக்காயுமப்படியே வாங்குவாங்கு
நீரேநீசித்தண்ட வெண்ணெய்சேராகுஞ்
சிறப்பாகதேங்காய்ப்பால் சேரெட்டாகும்
வாதேநீவேலிப் பருத்திச்சாரு
வகையுடனேசேரெட்டு வாங்குவாங்கே. 3
வாங்குவாய்கண்டொரு சரக்கையெல்லாம்
வகைவகைக்கிவேர்களஞ்சி மைந்தாகேளும்
பாங்குடனேகலுக்குமிட்டு மைபோலாட்டி
பாலகனேபாண்டத்தில் பால்சார்வெண்ணெய்
தேங்கியசரக்கையெல்லாங் குழப்பிக்கொள்ளு
தியங்காமல்தேகமுள்ள விரகால்நீயும்
சாங்காயதீமூட்டு சட்டமாக
சம்பிரமுடன்வெந்திரக்க சரிசொல்வேனே. 4
சொல்லுவேனெண்ணெய்தனை தொட்டுப்பார்த்தால்
சுந்தரனே சுத்தசலம்போலிருக்கும்
மல்லுவென்பாண்ட மிறுத்துக்கொள்ளு

மைந்தனேவுண்பதற்குவோர்களஞ்சியெண்ணெய்
வெல்லுமேபறக்குமடா ரோகமெல்லாம்
வேகமென்றசிரங்குமுதல் மிரண்டுபோகும்
அல்லவேகொட்டிட்டால் பிசாசுபோகும்
அப்பனேயழலையென்ற தாகம்போமே. 5

போமேதான்விக்கல்சத்தி குன்மம்போகும்
புத்தியல்லபுலத்தியனே கவுசைபோகும்
போமேதான்கிரந்தியரை யாப்புபோகும்
பொல்லாதபொருமலொடு பயித்தியம்போகும்
போமேதான்சூலையொடு பறங்கிப்புண்ணும்
பொல்லாதவுட்கவுசை விக்கல்தானும்
போமேதான்நாவடையுங் கெர்ப்பசூலை
போகுமடாவலியுந்தான் பறந்துபோமே. 6

தானுமேகாதடைப்பு வயத்தல்ரோகம்
தங்காதுகண்ணெரிவு பூச்சிவெட்டு
யானுமேமயங்குமடா குன்மமெட்டும்
வகையெட்டுசூதகத்தின் வெட்டைபோகும்
நானுவேகிரந்தி மாமிசங்களெட்டு
நசித்திடவேகலங்குமடா பவுத்ரரோகம்
பாருமேயிந்நூலை சித்தர்கூடி
பட்சமுடன் மகிழவேபேரிட்டாரே. 7

பேரிட்டசித்தாதி யெண்ணெய்தன்னை
புலத்தியனேபூசைசெய்து பூரணமாய்வாங்கு
நேரிட்டசிறியோர்க்கும் பெரியோர்க்குமாகும்
நிலையாய்பத்தியங்கள் நீகூட்டாதே
வாரிட்டயிந்நூலை வெளிவிடாதே
வாங்காதேதோஷத்தை வாங்கிடாதே
காடிட்டபண்டிதங்கள் கருத்தாய்ப்பார்த்து
கண்டுகொள்ளுயிவ்வெட்டு கடாட்சமுற்றே. 8

அகஸ்தியர் சித்தாதியெண்ணெய்-8

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நாற்பத்துமூன்றுவது,

அகஸ்தியமகாமுனிவர்

தைலச்சுருக்கம்—5.

மனமகிழ்ந்துசெப்புகிறேன் புலத்தியனேமைந்தா
மகிமையுள்ளதைலத்தின் மார்க்கங்கேளு
கனமுடனேயெள்ளெண்ணெய் படியும்வாங்கு
காராவின்பால்படியு மாகுமாகும்
இனமுடனேசெவ்விளநீர் படியுஞ்சேரு
யியலுடனேபடிசாறு யிசைந்துவாங்கு
தனதானசீரகமுஞ் சந்தனமுமப்பா
தளஞ்சியனே முளகுடனே சாம்பிராணிகூட்டே.

கூட்டவேபச்சிலைக் கிச்சிலிக்கிழங்கு
குணமாகதினுசுக்குப் பலமுமைந்து
நீட்டவேகலுவத்தி லிட்டுநீயும்
நினைவாகமைபோலே ஆட்டிமைந்தா
கூட்டவேயெண்ணெய்யுடன் பாலுஞ்சாறுங்
கூசாமல்சர்க்கரையுமே குழப்பிக்கொள்ளு
தாட்டிகமாய்ப்பாண்டத்தில் விட்டுமைந்தா
தளும்பாமல்தீயெரிப்பாய் சாற்றினேனே. 2

சாற்றவேமெழுகுபத மாகும்போது
சட்டமுடன்மறுபாண்டமிறுத்துக்கொள்ளு
போற்றவேயித்தைல முழுகிவந்தாற்
பொல்லாதவிஷசன்னி புலம்பியோடும்
தோற்றியதோர்போமென்ற யிருபத்தொன்று
துடாராதுகாலெரிவு செவியின்குத்தல்
காத்துமேகாதலுடன் சர்வதோஷம்
கதறியேயோடுமடா சொரியும்போமே. 3

போமேதான்கண்ரோகம் படர்மேகங்கள்
போகாதநீர்குத்தல் புகைச்சல்போகுந்
தாமேதான்மயக்கமென்ற தெல்லாந்தீருந்
தளருமேகர்ப்பத்தின் சூடுபோகும்
வாமேனிதளராது மேனியெல்லாம்
வாய்விட்டுஅலருமடா வந்தரோகம்
காமேதான்கருவிற்கண்ட குற்றம்போகுங்
கசடறவேகள்ளிப்பூக் கிரந்திப்போமே. 4

போமடாகனவென்ற பீடைபோகும்
புண்ணியனேபித்த வாதங்கள்போகும்
ஆமடாபுலத்தியனே பண்டிதங்கள்
அறிவுடனேகுணங்குறிக ளறிவாய்ப்பார்த்து

வாமடா வடுகனுக்கும் பூசைசெய்து
வழங்குவாய்தைலமதை வழங்குவாய்நீ
யேமடாகுருபதத்தைப் போற்றியேநீ
யியலுடனேயென்னாளும் வாழ்குவாயே. 5

அகஸ்தியர் தைலச்சுருக்கம்-5

முற்றிற்று.

௨

சிவமயம்.

நாற்பத்துநான்காவது,

செந்தூரமுந்நூறுக்கு

சூத்திரம்-36.

செம்புவெள்ளை.

பாரப்பாசெம்பினிட வெள்ளைக்கேளு
பரிவானதாம்பிரத்தைக் குகையில்வைத்து
சேர்ப்பாபதினறு பலமேபோட
சேர்ந்துருகும்போதினிலே மருந்துகேளு
காரப்பாஅண்டமது பலமேரெண்டு
கட்டுநவாச்சாரமது பலமிரண்டு
சீரப்பாகல்வத்திற் றூளதாக்கிச்
சிறந்தபொடிமேற்கார மரைதான்போடே. 1

போட்டதனைபொடித்துநன்றாய் பொடியைத்தூவிப்
புகழானசெம்பினிட வூறல்போகும்
தாட்டிகமாய்ப்பின்னெடுத்து வங்கங்குத்தித்
தனியோட்டிலூதிவிடு களங்குபோலாம்
மாட்டிதனைக்குகையிலொரு புடம்போடப்பா
வூர்காகக்கண்விட்டு வுருக்கும்போது

காட்டியதோர்சுன்னத்திற் ருளகத்தைதனைவைத்து
நலமாகப்பதினைந்து தரமும்நீற்றே. 2

நீற்றினபின்வாங்கியதை யெடுத்துக்கொண்டு
நிறுத்திடுவாய்பலமொன்று சாரங்கால்தான்
போட்டுயிதைபழச்சாற்ற லரைத்துக்கொண்டு
புகழாகப்பயறளவு வுண்டைசெய்து
நேர்த்தியாய்கொடுக்கையிலே சத்துவாங்கு
நேரானசெம்பதுதான் வெங்கலம்போலாகும்
மாற்றியிதையரைப்பலந்தான் கல்வத்திட்டு
மாற்றியேபொடித்திடுவாய் தூளாய்க்கேளே. 3

காணப்பாயிந்திடைக்கு வீரம்போடு
கடுகவேசாமமொன்று அரைத்தாயானல்
தோணப்பாசலமுண்டாம் மெழுகுபோலாந்
துடியானசூதமரைப் பலமும்போடு
ஆணப்பாசெம்பிடைக்குச் சூடன்போடு
அரைக்கும்போதினில் வெள்ளையரைக்கால்போடு
நீணப்பாசூடனிடை பூரமும்போடு
நிலைக்கவேஅரைத்துநன்றாய் வில்லைதட்டே. 4

வில்லைதனையுலர்த்தியபின் குகைக்குள்வைத்து
மேல்மூடிச்சீலைசெய்து புடத்திற்போடு
வில்லையதுகெசபுடத்தில் வெள்ளையாகும்

விளங்கியதோர்தாம்பிரத்தின் வெள்ளேஐயா
வெள்ளையதுபதனமாய் வைத்துக்கொண்டால்
மேகமொடு பதினெட்டுக்குஷ்டந்தீரும்
வில்லையினல்வாய்வெல்லா மொழிந்துபோகும்
விளங்கியதோர்பித்தமெல்லாம் பறந்துபோமே.

பறந்துபோமனுபான மறிந்துகொண்டால்
பற்பத்திற்குரையொன்று மில்லையப்பா
இறந்துபோம்வியாதியெல்லா மென்னசொல்வே
னெடுத்திட்டசெம்பினிட வெள்ளைவேகம்
கறந்துபால்சோற்றின்மேல் குடிக்கச்சொல்லு
கருப்புட்டிபோட்டங்கே காச்சிக்கொண்டு
அறைந்தேனுன்கருமத்துக் காகவல்லோ
அப்பனேநாகத்தின் வெள்ளைக்கேளே. 6

நாகவெள்ளை.

கேளப்பாசுன்னமொடு சாரங்கூட்டி
கெடியாகஅமுரிவிட்டுத் தண்ணீராக்கி
வாளப்பாநாலுபல மதற்குள்ளேதான்
மைந்தனேநாகமதை யுருக்கிச்சாய்ப்பாய்
வேளப்பாரெண்டுபத்து விசையேசாய்ப்பாய்
மீறுகின்றநாகத்தி னூறல்போமே

வானப்பாபின்பெடுத்துப் பழச்சாற்றிற்சாய்ப்பாய்
மைந்தனேநாகமது சுத்தியாச்சே. 7

ஆச்சப்பாஈரைந்து தரமேசாய்ப்பாய்
அப்பனே குகையிலிட்டுருக்கிப்பின்பு
வாச்சப்பாசுத்திசெய்த தாளகந்தான்
வரிசையாய்களஞ்சிகொண்டு காரங்கால்தான்
நீச்சப்பாபழச்சாற்றி லரைத்துக்கொண்டு
நேசமுடன்குன்றியிடை யுண்டைசெய்து
காச்சப்பாரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
கனக்கவேகரகமொரு பலத்திற்றுக்கே. 8

தாக்கப்பாதாளகத்தி னுண்டைசெய்து
தயவாகவொவ்வொன்றாய்க் கொடுத்தபின்பு
வாக்கப்பாநாகமது தெரிக்கும்பாரு
மைந்தனேயிந்நாகம் பலமதொன்று
நீக்கப்பாகல்வத்திற் பொடிக்கத்தூளாம்
நேராகவீரத்திற் கால்தான்போடு
தூக்கப்பாசூதமதிற் கால்தான்போடு
துடியானவுவருப்பு அரைக்கால்போடே. 9

போடப்பாநவாச்சார மரைக்கால்போடு
புகழ்ந்தமருந்திடைக்குச் சூடன்போடு

ஆடப்பாயெருக்கம்பால் வெண்கருவும்விட்டு
யரைத்திடுவாய் யிருசாமம்வில்லைதட்டு
சூடப்பாவுலர்ந்தபின்பு சுன்னச்சீலை
சுற்றியேசுண்ணாம்புக் குள்ளே வைத்து
சாடப்பாகெசபுடமாய்த் தீயைப்போடு
தவளநிறமாகவரும் வெள்ளையாமே. 10

வெள்ளையாய்நாகமது விரிந்ததப்பா
வியாதிக்குவனுபான மறிந்துபோடு
பிள்ளையார்போதென்றாற் குன்றியிடையேபோடு
பேரானவாதமென்ற வெண்பதுந்தான்
கொள்ளையடாபித்தமது நாற்பதும்போம்
கூறுவேன்சேத்துமங்கள் தொண்ணூற்றாறு
கள்ளரைப்போல்பயந்தோடும் நாகங்கண்டால்
கருத்துள்ளவாதிகளே கண்டிடீரே. 11

அயலோகவெள்ளை.

கண்டாயேயின்னமொரு வயித்தியந்தான்
கண்கெட்டவாதிகளே கருதக்கேளு
வுண்டானசேதியிது மகத்தாம்பற்ப
முத்தமனேபூநீறு பலந்தானென்று
தண்டானசாரமது பலந்தானென்று
சாமமொன்றரைத்ததனைப் பீங்கானிலிட்டு

பண்டான அமுரியுப்புக் கால்பலமேபோடு
பதருமல்பனியில்வைக்கச் செயநீராமே. 12

செயநீரிலரைத்திடவே மருந்துகேளு
திடமாகக்காரமொன்று சாரமொன்று
செயநீரில்தாரமொன்று வீரமொன்று
செப்புகிறேன்சூடனென்று ஐந்துங்கூட்டி
செயநீரிலரைத்திடவே சாமமொன்று
திரண்டல்லோமெழுகாகு மூன்றுபங்காய்
தயவானஅறப்பொடியைப் பழச்சாற்றிற்போட்டுத்
தனையெடுப்பாய்நாலாநாள் கழுவிவாங்கே. 13

வாங்கியிந்தஅறப்பொடிதா னென்றுங்கூட்டி
மைந்தனேபங்குமொரு மருந்துகூட்டி
ஓங்கியேபிசைந்துவொன்றாய்க் குகைக்குள்ளிட்டு
வுத்தமனேமேல்மூடிச் சீலைசெய்து
நீங்காமற்குகையமூக நன்றாயூது
நிலைத்துமொருமணியாக நிற்கும்பாரு
சாங்கமாய்நொருங்குமிந்த மணிதனப்பா
தயவாகயின்னமொரு பங்குகூட்டே. 14

கூட்டியேயூதிடுவாய் மறுக்காலுந்தான்
குன்றாமல்கைமுறையால் மூன்றுபங்குமூது
நாட்டியேபின்பெடுத்து வுருக்கும்போது

நலமான தங்கம்போல் கண்விட்டாடுந்
தாட்டிகமாயிம்மணியைக் கல்வத்திலிட்டுச்
சவ்வீரஞ்சுரியிடையா யரைக்கும்போது
ஊட்டிடுவாய்கண்டிடைக்குப் பாதிசூத
முறவானசாரங்கால் சூடனென்றே. 15

சூடனொடுமருந்தைந்து முறவாயாட்டச்
சமமானவெள்ளையுர மொன்றுபோடு
நாடவேமெழுகாமே வில்லைதட்டு
ரவிமுகத்திலுலர்ந்தபின்பு சுண்ணச்சீலை
ஊடவேசுற்றியபின் சுண்ணாம்பில்வைத்து
வுத்தமனேகெசபுடமாய்க் கனலைமூட்டு
வாடவேவேண்டாங்காண் வைத்தியோரே
மகத்தானதவளநிற மாகும்பாரே. 16

பாரப்பாலோகவெள்ளை வேகமெத்த
பாய்ச்சலாமனுபான மறிந்துபோடு
சேரப்பாபாண்டுவகை யெல்லாம்போமே
செகமறியவேணுமென்ற தெல்லாம்போமே
காமப்பாவாயுவென்ற தெல்லாம்போமே
காமாலைசோகையொடு ஈளைபோமே
வேமப்பாபித்தத்தின் கோபம்போமே
விளங்குகின்றசேத்துமங்கள் பறந்துபோமே. 17

காந்தவெள்ளை-அயலோகச்செந்தூரம்.

பறந்துவிடுங்காந்தத்தை யிப்படியேசெய்யிற்
பரிகாரகாந்தமது வெள்ளையாமே
இறந்துவிடுநோய்களெல்லா மெங்கேபோமே
யெடுத்திட்டகாந்தவெள்ளை வேகமெத்த
மறந்துநீபோகாதே கைமுறைதானப்பா
வளமானலோகச் செந்தூரங்கேளு
அறந்தழைக்கச்சுத்திசெய்த லோகந்தன்னை
யப்பனேபலமொன்றாய் கல்வத்தாட்டே. 18

ஆட்டுதற்கேசுத்திசெய்த கெந்திதன்னை
யப்பனேபலமொன்று கூடப்போடு
ஆட்டுதற்கேபழச்சாற்றாற் சாமமொன்று
வரைந்திடுவாய்வில்லைதட்டி யுலரப்போட்டு
ஆட்டுதற்கேமுப்பதெருக் குள்ளேபோடு
அயலோகச்செந்தூர மாமேகண்டீர்
ஆட்டுதற்கேசெந்தூரம் கண்டிடைக்கு
வப்பனேகெந்தகத்தைத் தூக்குதூக்கே. 19

தூக்கியேபழச்சாற்றாற் சாமமொன்று
துவளவரைபூநீரும் காலுங்கூட்டி
தாக்கியேயரைத்தபின்பு வில்லைசெய்து
சாதகமாயுலர்ந்தபின்பு புடத்தைப்போடு

வாக்கிலேசெந்தூர லோகமப்பா
மைந்தனேயரைப்பணந்தா னனுபானத்தில்
ஆக்கியேயெந்த வியாதிக்குந்தான்
அனுபானமறிந்துகொண்டு லோகம்போடே. 20

அயலோகச் செந்தூரம்.

வேறுவிதம்.

போடவேவாய்வுபத்திர பித்தம்போகும்
புகழானசிலேற்பனத்தால் வந்தநோவு
ஊடவேசெய்யவிது வெளிதாமப்பா
வுரைப்பார்கள்நாதாக்கள் சுளுவிதென்று
நாடவேலோகச்செந் தூரந்தன்னில்
நலமாகவொருகழஞ்சு யெடுத்துக்கொண்டு
நீடவேலிங்கமொரு கழஞ்சுகூட்டி
நிலைபானவீரமொரு காலுங்கூட்டே. 21

கூட்டியேபழச்சாற்றி லரைக்கும்போது
கொடியதொருகெந்தகந்தான் கழஞ்சுபோடு
நாட்டியேசாமமொன்று யரைப்பாயப்பா
நலமாகவில்லைசெய்து யுலர்த்திக்கொண்டு
வாட்டவேயிரண்டெருவிற் புடத்தைப்போடு
வளமாகவூறினபின் னெடுத்துப்பாரு

காட்டிலேயிருந்தசித்தர் மெய்ப்பாரப்பா
கனத்ததொருசெந்தூரங் கண்கொள்ளாதே. 22

கொள்ளாதேசெந்தூரந் தனக்குப்பாதி
கூட்டுவாய்லிங்கமதை முலைப்பாலாலே
கிள்ளாமலொருசாம மரைத்துப்பின்பு
விரல்நீளமுண்டைசெய்து வுலர்த்திப்போடு
தள்ளாதேசன்னுவகை யெல்லாம்போமே
தாதுவிர்த்தியுண்டாமே சாதிலிங்க
முள்ளபடிவாதிகளே சொல்லக்கேளு
வுதரத்தில்வாதபித்த மொழிந்துபோமே. 23

காந்தச்செந்தூரம்.

ஒழிந்துபோங்காந்தத்தை யிப்படியேசெய்து
வொப்பார்தொல்லுலகத்தி லவனேயீசன்
ஒழிந்துபோங்காந்தமே செந்தூரமாகி
லுத்தமனேசாதிலிங்க மொக்கச்சேரில்
ஒழிந்துபோம்பாண்டுகா மாலைரோக
முள்மூலம்புறமூல மொழிந்துபோமே
ஒழிந்துபோம்வாதபித்த சிலேற்பனந்தா
னயர்த்தியப்பாகாந்தத்தின் சிவப்புத்தானே. 24

ஏமவெள்ளை.

தானென்றயேமமது வெள்ளையாகச்
சாற்றுகிறேன் தங்கமொரு பலத்தகட்டில்
வேனென்றநாகத்தின் வெள்ளை தானும்
விளங்கவேகாற்பலந்தா னிருத்துக்கொண்டு
வானென்றவீரமொரு கழஞ்சுகூட்டி
மைந்தனேபுனுகுமரைக் கழஞ்சிகூட்டி
கானென்றவெண்கருவா லரைத்துக்கொண்டு
கனக்கவேபூசிடுவாய் தகட்டின்மேலே. 25

மேலிட்டமருந்துள்ள தங்கந்தன்னை
விருப்பமாயண்டநீர் கீழ்மேலிட்டு
பாலிட்டவெள்ளையைப்போல் தங்கம்நீறும்
பரிவாககெசபுடந்தான் தீயைமூட்டு
மேலிட்டதங்கமது நெருங்கிநிற்கும்
மேன்மக்காள்கல்வத்தி லரைக்கத்தூளாம்
மாலிட்டதங்கத்துள் தன்னிற்பாதி
மாட்டுவாய்வீரமது பூரங்காலே. 26

பூரத்தினிடையோடு புனுகுதன்னை
புகழாகவிவ்வளவும் புனுகுவீதம்
பூரத்தினிடையோடு சூதந்தன்னை
புகழாகவிவ்வளவுங் கூட்டியாட்டு

பூரத்தால்தங்கமது வெள்ளையாமே
வீணல்லகெசபுடத்தில் போடுபோடு
சீரொத்தவண்டநீர் கீழ்மேலிட்டு
தீப்போடுதங்கமது தவளமாமே. 27

தவளமென்றயேமத்திற் சரியாய்லிங்கஞ்
சமரித்துமுலைப்பாலா லரைத்துக்கொண்டு
தவளமாம்வில்லைசெய்து வுலரப்போடு
சாதகமாயோரெருவிற் புடமுந்தீர்ந்தால்
தவளமென்றபரியங்கே செந்தூரமாமே
சன்னியென்றமூலமெல்லாம் பறந்துபோமே
தவளமென்ற தங்கத்தின்செந்தூரத்தைச்
சாதகமாய்வாதிகளே செய்துபாரே. 28

பாரையாசந்திரோ தயந்தானிந்த
பாரில்வெள்ளைலிங்கத்தை சேர்ந்தபோதே
பாரையாபூபதிக ளிதற்குமீடா
பலபலசெந்தூரவகை யிதற்குமீடோ
பாரையாயிதையெடுத்து வெள்ளிச்செம்பில்
பத்திலொன்றுகொடுத்துப்பா ரேழுமாற்றும்
பாரையாகுன்றியிடை யனுபானத்தில்
பண்பாகக்கொடுக்கநோய் பறந்துபோமே. 29

பூபதி.

போமடாசடலத்தில் நோய்களெல்லாம்
பூபதிதன்மருந்தொன்று சொல்லக்கேளு
நாமடாவொழிந்தறியோம் தங்கம்வெள்ளி
நாகவெள்ளைலோகவெள்ளை காந்தவெள்ளை
தாமடாசெம்புவெள்ளை யைந்துமொக்கச்
சரிபிடையாய்க்கழஞ்சிரண்டு வீதந்தூக்கி
காமப்பால்விட்டரைப்பாய்க் கழஞ்சுபத்து
காட்டப்பாயரைக்கையிலே முத்துப்போடே. 30

போடடாவயிரமொடு பவளம்போடு
புட்பராகம்போடு பச்சைபோடு
நாமடாசிவந்தமணி ரத்தினம்போடு
நலமாகவகையொன்றுக் கரைக்கழஞ்சு
தேடடாகெந்தகமோ கழஞ்சிநாலு
திறமானலிங்கமது கழஞ்சுயெட்டு
ஊடடாசூதமது கழஞ்சுயெட்டு
வுத்தமனேதாளகந்தான் கழஞ்சியொன்றே. 31

என்றிடுவாய்மனேசிலைதான் வெள்ளையொன்று
வுறவானதுருசொன்று மொன்றதாகும்
நன்றெனவேசாரமொன்று பூரமொன்று
நலமானவீரமொன்று பூரமொன்று

சென்றதொருபொற்றுயின் சாற்றாலாட்டி
திறமாகச்சாமமொன்றி லரைத்தபின்பு
துன்றிடவேஅமுரிவிட்டுச் சாமமொன்று
சுருக்காகச்சம்பழச்சார் சாமமொன்றே. 32

சாமமொன்றரைத்திடுவா யுப்புநீரால்
சாதகமாயரைத்தபின்பு வில்லைசெய்து
நாமமென்றபுதுக்கலசத் துள்ளேவைத்து
நலமாகமேல்மூடிச் சீலைசெய்து
ஓமமென்றஜம்பதெருப் புடத்திற்போடு
வொன்றுமங்கேபுகையாமற் கட்டிநீருஞ்
சேமமென்றுபுடமாவி யெடுத்துப்பாரு
செந்தூரமருணநிற மாகும்பாரே. 33

பாருநீசெந்தூரங் கண்டிடைக்குப்
பாதிலிங்கங்கூட்டிமுலைப் பாலாலாட்டி
பாருநீவிரல்நீளங் கம்பிசெய்து
பரிவாகவுலர்த்தியதைப் பதனம்பண்ணு
காருநீகுருபதத்தை மூலம்பாருங்
கயிலாசவயிரவனைப் பூசைபண்ணு
சேருநீதேவியைப் பூசைசெய்து
சேர்க்குமிந்தபூபதிக்குச் சிவமும்பண்ணே. 34

சிவமானபூபதியை யனுபானத்தில்
திரமாகயரிசியிடை கொடுத்தாற்கேளு
சதமாகப்போனாலும் தாதுவுண்டாஞ்
சாதுரியப்பிராணன்வரும் விழித்துப்பார்ப்பான்
அவமானபிரமலபி யவ்வளவேயாகில்
வாசித்துப்பேசிவிட்டு மரணமாவான்
தவமான்பூபதியைச் சொன்னேன்சொன்னேன்
சாதிக்கும்வயித்தியஞ்செய் தர்மமாமே. 35

ஆமடாயிந்திடவே வயித்தியம்பாரு
வஷ்டதிசைவொக்கவுன்னை வாழ்த்தும்லோகம்
நாமடாவயித்தியத்தில் மருந்தெல்லாந்தான்
நலமாகக்குறுக்கிவைத்தேன் முப்பத்தாரில்
வாமடாயிந்தமருந் தெல்லாம்வாய்ந்தால்
வயித்தியன்பேருரைக்கையிலே நோய்களெல்லாந்
தாமடாயெட்டிரண்டு மிருபத்தஞ்சுந்
தடையறவேஅரணை சித்தியாமே. 36

அகஸ்தியர் செந்தூரசூத்திரம்-36

முற்றிற்று.

சிவமயம்.

நாற்பத்தைந்தாவது,

அகஸ்தியமகாமுனிவர்

முப்புக் கெந்தகத் தயிலம்-16.

காணப்பாகெந்தகத்தின் தயிலஞ்சொன்னேன்
கைமுறையாய்க்கெந்தகமும் பலமும்பத்து
பூணப்பாகல்வத்தில் போட்டுக்கொண்டு
புகழாகவெள்ளை தாமரைப் பூச்சாற்றால்
தோணப்பாயிருபது நாளாட்டுஆட்டு
துடியானகழுஞ்சுவித்து பலமும்போடு
ஊணப்பாமூன்றுநா ளரைத்துவாங்கி
வுத்தமனேநன்றாக வுலர்த்திடாயே. 1

உலர்த்தியல்லோகுப்பியிலே போட்டுநீயு
முத்தமனேகுப்பிக்குஞ் சீலைசெய்து
கலர்த்தியல்லோகுப்பின்வாய்க் கம்பைவைத்து
கட்டியதோர்சட்டியிலேநடுவேவைத்து
மலர்த்தியல்லோவையாமற் கவிழ்த்துகூப்பி
வைத்தல்லோசட்டியுடதமருக்குள்ளே
தளர்த்தியல்லோசீலைசெய்து சந்துக்கெல்லாஞ்
சார்வாகக்குப்பியின்மேல் மணலைப்போடே. 2

போட்டல்லோமணல்மேலே புடத்தைப்போடு
புகழானகட்டியைத்தான் முக்கவரில்வைத்து
நீட்டியல்லோகுப்பியுட மூங்கிற்குள்ளே
நேராகபீங்கானில் வைப்பாயப்பா
மூட்டியல்லோதைலமெல்லாம் பீங்கானில்வீழும்
முறையாகவிழுகுமட்டும் புடத்தைப்போடு
ஆட்டையிலேதைலத்தில் சவுக்காரம்போடு
வப்பினல்துரிசியின்மேல் வெள்ளையாமே. 3

வெள்ளையென்றதுரிசியதிற் சூதத்தில்மூட்டு
விரவியேகுப்பியதில் தைலம்வைக்க
சள்ளையென்றரத்தமது கட்டிப்போகும்
சரக்கெல்லாமிப்படியே கட்டுங்கட்டும்
கொள்ளையென்றவொவ்வொன்றிற் கோடிவேதை
கூட்டலாஞ்செந்தூரங் களங்கங்கோடி
அள்ளையென்றதங்கமிட்டுச் சூதங்கட்ட
வறுபத்திநால்முகமு மாடுந்தானே. 4

தானென்றசெம்புவகை நறுக்கிக்கொண்டு
சாதகமாய்குகையிலிட்டு வுறுகும்போது
கானென்றதயிலமது மூன்றுதுளிகுத்த
கடுங்குளிப்புகட்டிரவி சிகப்புமெத்த

ஊனென்றசெம்பினிட வூறல்போச்சு
வுத்தமனேசெம்பொன்னே யாச்சுயாச்சு
தேனென்றசெம்பிரண்டு தங்கமொன்று
தெளிவானவெள்ளியதி லேழுங்கூட்டே. 5

கூட்டியல்லோவுருக்கிடவே யொன்றுமாகுங்
குறையாமல்வெட்டரையே காணுங்காணும்
நீட்டியல்லோ தினந்தோறுந் தயிலந்தானும்
நினைவாகமண்டலமே கொண்டாயானா
லாட்டியல்லோநோய்களெல்லா மகன்றுபோகும்
வப்பனேவிந்துமெத்த வமிர்தமாகும்
பூட்டியல்லோயிதினோடே செயரசமுங்கண்டாற்
பொன்போலேகாயமது சித்தியாமே. 6

வேறுவிதத்தயிலம்.

ஆட்டானகெந்தகத்தின் தைலஞ்சொல்வே
னப்பனேகெந்தகந்தான் பலமும்பத்து
நீட்டானகற்பூர வுப்புத்தானும்
நிறுத்தல்லோ பலமிரண்டரையுங்கூட்டு
மூட்டானசவுக்கார வெண்ணெய்போடே
மோகமிலாரெண்டரைப் பலமுங்கூட்டு
கூட்டானவிதுகளெல்லாந் திராவகத்தைவிட்டு
குமரவாதினமொன்று வில்லைகட்டே. 7

கட்டடாவில்லையது போலேநீயுங்
காயவைத்துக்குப்பியிலே கடுகப்போடு
மட்டடாபூப்புடத்தில் தைலம்வாங்கு
மகத்தானகெந்தியுட தைலமாச்சு
பட்டடாதைலத்தின் வேதைசொல்வேன்
பருவமுடன்யேமரசம் வாலைரசமாக்கி
விட்டடாயித்தைல வாலைரசத்துள்ளே
விதமாகமத்திக்கத் தயிர்போலாமே. 8

ஆமிந்தத்தயிலந்தான் கருத்துநிற்கும்
அப்பனேதிராவகத்தை விட்டுஆட்ட
ஓமிந்தசூதமது சிவமாய்ப்போகும்
வுத்தமனேவாலைரசந் தண்ணீரென்பார்
சேமிந்தவாலைரசந் தண்ணீர்விட்டு
செம்பானகாசுகளை போட்டுரொம்ப
வாமிந்தகாசுகளை சட்டியிலேபோட்டு
மருவியதையடுப்பேத்தி தீயைமூட்டே. 9

மூட்டியல்லோவறுக்கையிலே சிவந்தாற்காசு
மூதண்டகெந்தகத்தின் தயிலஞ்சூதம்
பூட்டியல்லோபுனுகுசட்டம் ரெண்டுமூன்று
புகழாகவெட்டியதிற் கூடப்போட்டு

நீட்டியல்லோவறுக்கையிலே காசுதானும்
நேராகக்கருக்குமடா பாருபாரு
ஊட்டியல்லோதைலத்தை குத்திகுத்தி
யுத்தமனேநன்றாய் வறுத்திடாயே. 10

வறுத்தபின்புயிறக்கியல்லோ ஆத்திக்காசை
மைந்தனேபின்பொருக்கா லடுப்பிலேத்தி
கருத்தபின்புகாசுக்குள் தைலங்குத்தி
கலங்காமற்சற்றேயடா வறுப்பாநீயும்
பெருத்தபின்புயிப்படியே மூன்றுதிரஞ்செய்து
புகழாகக்காசெடுத்து நருக்கிப்பாரு
மருத்தபின்புகாசடா பொன்காசுமாச்சு
மைந்தனேதசமாற்றங் கெந்தியாட்டே. 11

ஆட்டினகாசையெல்லாங் கோணியிலேபோட்டு
வப்பனேகாசோடு கிராசக்கல்லுமிட்டு
நீட்டானபாறையிலே யடித்தாயானால்
நேராகக்காசெல்லாஞ் சோதிபோலாம்
பூட்டானகாசெல்லாம் பொற்காசாகும்
புதுமையுடசெம்பெல்லாம் பொன்மயமாயாச்சு
ஆட்டானவேதையிது கெந்தகத்தின்வேதை
வுத்தமனேரசத்தண்ணீர் வேதைகேளே. 12

கேளப்பாவெடியுப்பு கம்பிதானுங்
    கெடியானரசத்தண்ணீர் தனில்துவைத்து
நாளப்பாதினந்தோறுந் தோய்ச்சுதோய்ச்சு
    நலமாகக்காயவைப்பாய் பட்சமொன்று
சூளப்பாயிதையெடுத்து மேலேபூசு
    சொல்லுகிறேன்திராவகத்திற் பூநீர்வெள்ளை
ஆளப்பாசங்குநீர் கூடக்கூட்டி
    யறைத்தல்லோவெடியுப்பு கம்பிக்கப்பே. 13

வெடியுப்பு சுண்ணம்.

அப்பியல்லோகாயவைத்து தினந்தான்மைந்தா
    வப்பனேகிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து
வொப்பியல்லோகனலெரிப்பா யாறவாற
    வுத்தமனேசட்டியைத்தா னிறக்கிநீயும்
செப்பியல்லோகனலெரிப்பா யாறவாற
    சிவசிவாவெடியுப்பு மெலும்புபோலாந்
தப்பியல்லோதீயெரிக்கிற் கருகிநிற்குஞ்
    சாதகமாய்த்தீயாத்தி யெடுத்துப்பாரே. 14

ஏறடாவெடியுப்புக் கம்பியைத்தான் [போச்சு
    யென்னசொல்வேன் புலத்தியனேயெலும்பாய்
தேரடாவெடியுப்புக் கம்பித்தானுஞ்
    சிவக்கவினிக்கருச்சொல்வே னன்றாய்கேளு

ஆரடாதங்கமென்ற சுண்ணத்தோடே
வப்பனேபீசமிட்டு வறைத்துப்பூசு
கூரடாரவியிலிட்டுக் காய்ந்துதானுற்
கொடுஞ்செகப்புகொடுஞ்செகப் புவப்புத்தானே.

தானென்றசிவந்தவுப்பு காரீயத்துள்ளே
சாதகமாய்ப்பத்திலொன்று யிட்டாயானுல்
வேனென்ற வெண்கலம்போ விருக்குமப்பா
வேதாந்ததுரிசிட்டு வதிலேவூதி
கோளென்றபொன்னுகும் பத்துமாற்று
கொள்ளையடாவாதமெல்லா முப்புக்குள்ளே
தேனென்றமொழியாட்குச் சிவந்தான்சொன்னுர்
செயற்கையெல்லாஞ் சூத்திரமாம்செப்பினேனே

அகஸ்தியர்முப்புக்கெந்தகத்தயிலம்-16

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நாற்பத்தாறுவது,

அகஸ்திய மகாமுனிவர்

காவியச் சுருக்கம் – 1.

ஆதியந்தமாதார மகண்டநாதம்
அடுத்துநின்றநிராதாரந் துரத்துக்கப்பாற்
சோதியந்தகாரமடா பிரமன்வீடு
சுடரொளியாமகாரமடா மாலின்வீடு
நீதிபெருஞானமொழி சிகாரமப்பா
நிற்குணத்தின்ருத்திரனும் நிலைத்தோர்பாரு
மாதியெனும்வகாரத்தால் மயேசன்றனும்
வம்புத்தியரிவுமதி விவேகமுள்ளோன்

சாதியெனுமுயர்வாழ்க்கை யகாரபீடஞ்
சதாசிவனுங்கொலுவிருந்தார் நிற்குணத்தின்
ஓதியந்தபெரியோர்கள் ஓம்-நம-சி-வ-ய-மென்று
வுற்பனமாய்ஸ்தம்பித்து வொருநிலையாய்நின்றார்
சாருதியாமாயிரத்தைச் சுருக்கியானுன்
சடாட்சரப்பொருளாக்கி வொன்றிற்சொன்னேம்
காருதிபோற்புலத்தியனே மைந்தாநீயுங்
கடப்பிள்ளையுந்தனுக்கு வாச்சுதப்பா

சீருலகத்திருந்தாலு மெய்ஞ்ஞானம்போலச்
சிக்காதுவொருவருக்குஞ் சீஷாகேளு
மாறுபடாபிள்ளையென்றால் விந்தைகட்டி
மலையேறிக்குகைதனிலே கற்பமுண்ணு
ஊருபதிமனையாள்பெண் மாய்கைவிட்டு
ஒருமனமாய்ஞானம்வழி உண்டுதேரு
பாடுபடவேண்டாம்நீ சரிதைவிட்டு
பண்பானகிரிகையிலே பாடிப்பாடி
பேறுபெறவேணுமென்றால் மவுனவாழ்க்கைப்
பெறவேணும்சிவயோகம் பெற்றால்மோட்சம்
வாருமென்றவாயுவடா ஞானமப்பா
மைந்தனேவொன்றல்லோ மகத்தாம்வித்தை
தாருமாறகவல்லோ தீட்சைபெற்றார்
சாராதுவொருநாளுஞ் சாபம்போட்டோம்
ஆறவரைகடந்துசரா சரங்கள்தாண்டி
அருளினேம்ஆயிரத்தின் சுருக்கமுற்றே. 1

அகஸ்தியர் காவியச்சுருக்கம்-1

முற்றிற்று.

சிவமயம்.

நாற்பத்தேழாவது,

அகஸ்திய மகாமுனிவர்

முப்பு தீக்ஷைசூத்திரம்-16.

பூரணமாம்புங்கவன்றன் பாதம்போற்றி
புகழுவேசிவகாமி யாத்தாள்பாதம்
காரணமாமறிவில்நின்று மனத்தைப்போற்றி
கந்தனுக்குக்கருணைபெறச் சீஷனுதி
வாரணமாமுகத்தோனைப் பணிந்துபோற்றி
வல்லமையாயிந்நூலின் பொருளைக்காணச்
சீரணமாய்ப்போகாமற் றெளிந்துசொல்வேன்
சித்தர்பதமனதில்வைப்பா யொன்றுங்காப்பே. 1

ஒன்றானமுப்புவின் தீட்சைமார்க்கம்
ஒளித்தாரோஓகோகோ பூரணமேயாகும்
நன்றானசிவதீட்சை கெங்கையொன்று
நல்லதொருசத்திக்கு சிறுநீரைந்து
சென்றிடுங்கல்லுப்புச் சுன்னமேழு
செய்தபின்புமூன்றுமொன்றாய்ச் சேகரித்து
வென்றிடும்வெகுசுருக்குச் சிறுநீர்தேசி
வெளியாச்சுவாதமது சோடசம்பாரே. 2

பாருநீசோடத்தின் குருதான்மக்காள்
பகரார்கள்நாதாக்கள் பாடல்தோறும்
சேருநீசித்தரிடஞ் சேராவிட்டால்
செய்வதென்னயிந்நூலைத் தேடிப்பாரு
காரடாமேருவிலே வைத்தவாறு
கண்மணியேகழறுதே கருவைச்சொன்னேன்
ஆரடாயென்னைப்போற் சொல்லப்போரா
ராச்சரியமிந்நூலின் பெருமைதானே. 3

பெருமைதனைப்பாடிவிட்டார் சட்டைநாதர்
பிசகாமலெவ்வளவுந் தப்பில்லாமல்
அருமையென்றநூலதனைக் களித்தாரையோ
ஆகாகாதிருமூலநாதாக்களெல்லாம்
உருமையென்றவாதத்தை வெளியிற்போட்டாற்
உத்தமனேநவகோடிசித்தராச்சுக்
கருவதனையொளியாமல் முன்பின்னுகை
கைமுறைகொங்கணவா நூல்நாலுபத்தே. 4

பத்தாகும்நாற்பதிலே நன்றாய்ச்சொன்னார்
பரியாசமாகவுந்தான் பாடிப்போட்டார்
வித்தாகும்வெகுசுறுக்கு யிந்நூல்பார்த்தால்
வேதாந்தவாதமது தெண்டம்பண்ணுங்
கொத்தாகக்கனிந்தபழம் போலாமிந்நூற்

கூறினேன்குகைதோறு மொளித்துவைத்தார்
சித்தாகும்பூரண மிந்நூலிரண்டும்
தெளிவாகும்வழலைமுறை பதினாறுங்காணே. 5

கருவிடையம்.

காணவேதீட்சைசொன்ன முப்பூவுக்கு
கருவிடயஞ்சொல்லுகிறேன் பூவொன்றப்பா
பூணவேயிரண்டுபடிநீறைவார்த்து
புகழவேகலக்கிவைக்க வுப்பாய்ப்போகுந்
தோணவேபதின்மூன்று மாச்சுப்பாரு
துகையானவுப்புகோ சமன்தான்மூன்று
மூணவேகுருவாச்சுக் கருவிதுகாண்மைந்தா
முழுதுமேகண்டுநீ முறையையேற்றே. 6

எத்துவதுக்கிந்நூலை வைத்துக்கொண்டு
யியல்பாகபதினெண்மர் சூத்திரத்தைப்பார்த்து
நாற்றிசையுங்கீர்த்திபெற அவர்முறைப்படிக்கு
நன்றாகஅவ்வகைநீற்று சுண்ணஞ்செய்தாற்
போற்றுமேமாற்றதுவு மேருக்கொக்கும்
புத்திசொன்னேனவர்கள் வழலைமுறைபோக்கு
தோற்றுமற்சித்திசொல்வார் சிவத்தைபோல்வார்
சுகமாகசுட்டகல்லுச் சிவன்தான்பாரே. 7

கல்லதுதான் துய்யவெள்ளை யாகுமைந்தா
கடுமிரவியுப்பாகு மதியன்கட்டும்
அல்லதுதான்காட்டாதே மலைபோற்காணும்
மதியிருக்கிமூவர்க்காட்டில் முத்தர்வாழ்வார்
நல்லதுதானென்னசெய்வேன் வாரிக்குள்ளே
நயமாகவுறைந்திருக்குங் கல்லுப்பெங்கே
சொல்லியதுவேநாடிவிட்டா லொன்றுமில்லை
சுகமானநடுமுடியை விட்டாற்போச்சே. 8

போச்சென்றுமலையாவ தொன்றுசொல்வேன்
புகழ்பெறவேயம்பதுக்குள் முப்பூவித்தை
வாச்சுதுதான்பொன்னாகு முருகியாடும்
அப்பனேசெந்தூரம் நோய்களோடும்
வாச்சுதேயித்தியந்தா னென்னசொல்வேன்
வரிசையாய்ப்பாடிவிட்டே னெனதுமக்காள்
காச்சுதேவுலகத்திற் கிட்டாதையா
கருவடக்கமில்லை வெளியாதிபாரே. 9

சித்தர் செய்கை.

ஆதியிலேதிருமூலர் வாதந்தேடி
யதிசயமாம்பலபலசாத் திரத்தைக்கண்டு
வீதியிலேவாராமல் மனதடக்கி
வேதாந்தசாஸ்திரத்தை யாராய்ந்துபார்த்துச்

சோதியிலேமனமுருகி அமிர்தமுண்டு
தொடுகுறிபோலாதார மாறும்பார்த்து
வாதியென்றுபிறகல்லோ தனித்திருந்து
வதிசயமாய்க்கற்பமுண்ண காயசித்தியாச்சே. 10

காயசித்திசெய்தல்லோ யேறிச்சென்று
கயிலைபதினுதனையுங் கண்டுபோற்று
மாயசித்திகுளிகையல்லோ சிறமாய்ச்செய்து
மலைதொடுத்துவண்டமுதல் செயமேபார்த்தார்
தேயமொருமட்குணமாஞ் சிதம்பரத்திற்
செகமுழுதுமாண்டதொரு சோழனப்பா
நேயமுடன்கனகத்தால் கடேசன்வார்த்தால்
நிசமாகச்செம்பொருகா சிட்டிட்டாரே. 11

இட்டிட்டார்கனகமது செம்பாய்ப்போச்சு
யியல்பானகெந்தகத்தின் மகிமையப்பா
பொட்டிட்டாப்போலெனவே தொழில்கள்சொல்வார்
பொருள்காணுமவர்நூலைப் புகுந்துபாரு
மட்டிட்டதொழிற்செய்து கர்ப்பங்கொண்டு
மலையேறிவந்துபெரி யோரைக்காரு
வெட்டிட்டகிணறதுபோ லூற்றக்காணும்
வெளியாகும்பதினெண்பே ரிந்தநூல்தேடி. 12

தேடியேபார்த்தவுடன் சித்தியாகுந்
தெளிவாகுஞ்சட்டைமுனி நூலைப்பாரு
வோடியேதிரிந்தலைந்து யோகம்பாரு
வொளிகண்டால்வெளியாச்சு ஞானந்தோயும்
பாடியதோர்சுந்தரந்தன் நூலைப்பார்த்தாற்
பதிவாகும்வாலவித்தை வெளியாய்ப்போகும்
காடுசெடியலைவானேன் வகாரமொன்று
கருதிப்பார்கைகண்ட தொழில்தான்பாரே. 13

வெடியுப்பு செயநீறு.

தானானவெடியுப்புச் செயநீர்கேளு
சாதகமாய்ப்பலம்பத்து நிருத்துக்கொண்டு
வேனானசோடசமாங் குருபுநீறு
விளங்கியகாசைந்தாகுங் கல்லுப்பைந்து
கோனானநவாச்சார மன்னபேதி
கொடியதொருஅப்பிரேகந் துருசுசீனம்
வானானசூடன்வெள்ளை வெண்காரம்பூரம்
வரிசையுடனிந்துப்புக் கடல்நுரைதான்கூட்டே.

கூட்டுவதுவீரமுடன் காசைந்துசேரு
குறிப்புடனேதுகைபெற்றப் பூரணமும்பாரு
ஆட்டுவதுபுளியெட்டுக் கொருக்காயெட்டு
அழகானயீரலென்ற சதையுமெட்டு

பூட்டுவதிற்பழச்சாற்றிற் கரைத்துக்கொண்டு
புகழாகமுறையோடே யேழுநாளாட்டுத்
தீட்டுவதுவில்லைதட்டிக் கலையத்துள்ளே
சிறப்பாககற்சுண்ணம் பூசியாற்றே. 15

ஆறினபின்வில்லைவைத்துச் சீலைசெய்து
அடைவாக நூற்றெருவிற் புடத்தைப்போடு
தேறியபின்னுலிலொன்று சாரங்கூட்டி
சிறப்பாகவாட்டியதை வழித்துப்பீங்கான்
கூறினபின்னீராச்சு வீரம்பூரங்
கூடவிட்டுச் சரக்குகளிற் றடவிவாட்டி
மாறினபின்சரிகையைந்து சுருக்குத்தாக்க
மாண்டுபோம் நவலோகம்பொன்னும்பாரே. 16

அகஸ்தியர் முப்புதீக்ஷைசூத்திரம்-17

முற்றிற்று.

சிவமயம்.

நாற்பத்தெட்டாவது,

அகஸ்திய மகாமுனிவர்,

வகாரச் சூத்திரம்–10.

பாரப்பாவாதியென்றாற் பூசைவேணும்
பரிவானசிவன்வேணுந் தியானம்வேணும்
நேரப்பாவாசியென்றால் யோகம்வேணும்
நெடுகவேலெட்சயத்தை நிறுத்தவேணும்
காரப்பாகுருபதத்தைக் கார்க்கவேணுங்
கைகாட்டிதொழில்முறையை யறியவேணும்
காரப்பாசாஸ்திரஞ் சூத்திரமுங்கண்டு
சார்வாகக்காத்திருந்து வாதம்பாரே. 1

பாரப்பாவாதத்தி லட்சங்காப்பு
பாடினேனதைக்குறிக்கி யிருநூற்றுக்கு
ளாரப்பாஆதிகுரு வழலைமார்க்க
மடைவாகச்சொல்லிவிட்டேன் முப்பூவைத்தா
னேரப்பாமுன்னூற்றி லடக்கிவிட்டே
னேர்மையென்னவைம்பதிலே நிஜமாய்ப்பாரு
ஆரப்பாயதையடக்கி பதினாறுக்கு
ளாச்சரியம்பதின்மூன்றும் பத்தும்பாரே. 2

33

பாரப்பாவங்கங்கே சொன்னதெல்லாம்
பரிவாகக்கண்டிருந்து முடிக்கவேணுந்
தீரப்பாகருக்கிடையுங் குருக்கிடையுங்கண்டு
திடமாகச்செய்தாக்கால் முப்பூவாகும்
ஆரப்பாயென்னைப்போற் சொல்லப்போரார்
வாச்சரியமானிடர்க்கு நோய்தான்தீர
யேரப்பாவண்டோட்டைச் சுத்திசெய்த
மேதினியிற்கற்சுண்ண முவருங்கூட்டே. 3

கூட்டியேயமுரியுடன் கலக்கிக்கொண்டு
குமரவேகாச்சிவிடச் சுத்தியாச்சு
ஆட்டியேபடிக்கமோ டுப்புங்கூட்டி
வழகானவுகாரமுடன் சாரஞ்சேர்த்து
தீட்டியேவெள்ளையொடு வீரந்தானுந்
திடமாகச்சரியிடையாய்த் தூக்கிக்கொண்டு
காட்டியேகல்வத்தில் விட்டுஆட்டக்
கலங்காதேவெள்ளெருக்கம் பாலைவாரே. 4

வார்த்துநீயரைத்திடுவாய் மைபோலாக்கி
வாகாகவில்லைசெய்து காயப்போடு
சேர்த்துநீயோட்டில்வைத்து வோடுமூடி
திடமுறவேகெஜபுடத்தில் நீறிப்போகும்
பார்த்துநீவேதத்தை விட்டுஆட்டிப்

பாதையால்வில்லைசெய்து ரவியிற்போடு
சாத்துநீயோட்டில்வைத்து யோடுமூடிச்
சதிராகமுன்போலே புடத்தைப்போடே. 5
போடப்பாசூட்சத்திற் குருவுமாச்சு
பொல்லாதபிள்ளைகட்குச் சொல்லவேண்டாம்
ஆடப்பாகண்டத்திற் சாரங்கூட்டி
யப்பனேசெலமாகுஞ் செலத்தைவிட்டுத்
தேடப்பாநாகத்தை யுருக்கிச்சாய்க்க
திடமாகநாகமது கட்டிப்போமே
சூடப்பாசெம்புவெள்ளி களஞ்சிக்குந்தான்
சுகமாகவெட்டிலொன்றாய்த் தாக்குதாக்கே. 6
தாக்கியேபார்த்தாக்கா லேழரையுங்காணும்
தயவாகவங்கத்தைக் குத்தியூது
நோக்கியேயிதைக்கண்டு செலவுசெய்து
நுணுக்கமாய்முப்பூவைப் பிறகுபாரு
ஆக்கியேசூட்சத்தில் முப்பூவாகும்
மல்லாட்டால்முப்பூவில் நன்மையில்லை
தூக்கியேயிதையெடுத்து வைத்துக்கொண்டு
துயராலேசெயநீரா லெல்லாங்கட்டே. 7
கட்டியேதனித்தனியே வேதைபாரு
கசடருக்குச்சொல்லாதே காயம்பாழாம்

நிஷ்டையிலேயிருந்துக்கொண்டு தியானம்பண்ணு
நினைவுதப்பியிருந்தாக்கா லெல்லாம்போகும்
கட்டையிலேவாலையைப் பூசைபண்ணு
கண்மூக்குமத்தியிலே கருதிப்பாரு
முட்டையிலேதலைகவிழ்ந்து குனியவேண்டா
மூர்க்கமுள்ளமுப்பூவின் முறையைப்பாரே. 8

பார்க்கையிலேசட்டைமுனி மகன்தானப்பா
பரிவாகக்கண்டறிந்து பார்த்துக்கொண்டேன்
சேர்க்கையிலேசூத்திரத்தின் செயநீர்க்குள்ளே
செயலாகக்கல்லுப்பை வைத்துஆட்டு
நாற்கமலத்தாயாராம் பதியைக்கண்டு
நளினமுடன்சதாசிவத்தின் குறியில்நின்று
நேர்க்கையிலேதிரிகோணத் தயிலத்தைக்குத்தி
நேர்மையாயூதிடவே கட்டிப்போமே. 9

போமடாகரியோட்டி லூதும்போது
போக்காகக்கண்விட்டு ஆடுமாடும்
ஆமடாகல்லுப்பைக் கட்டிவூத
ஆகாகாவயிரமணி போலேயாடும்
நாமடாவாணுவத்தால் வெளியில்விட்டேன்
காட்டாதேகள்ளரென்ற மானிடர்க்குத்
தாமடாயிதுவெல்லா மறிந்துக்கொண்டு
தாரணியில்விள்ளாதே யடக்குமுற்றே. 10

அகஸ்தியர் வகாரசூத்திரம்-10

முற்றிற்று.

சிவமயம்.

நாற்பத்தொன்பதாவது,

அகஸ்திய மகாமுனிவர்,

ஞானோபதேசம்–14.

ஆதியந்தமில்லாதசின் மயத்தின்பாதம
அகண்டபரிபூரணமா மாத்தாள்பாதம்
சோதிநிறமாகிநின்ற கணேசன்பாதஞ்
சொல்தனக்கெட்டாத சுடரின்பாதம்
வீதியென்றபராபரத்தி நந்திபாதம்
வேதாந்தசாஸ்திரத்தின் வெளியின்மார்க்கஞ்
சோதியெனுமென்றதனி னடனஞ்செய்யுஞ்
சுடரொளியின்பாதமது காப்புத்தானே. 1

தானென்றஞானிக்கி குளிகையொன்று
சாற்றுகிறேன்புலத்தியனே சார்ந்துகேளு
தேனென்றகண்மணியே யுனக்காய்ச்சொன்னேன்
சேர்ந்துநின்றவாசியல்லோ மூலியாகும்
மானென்றஅக்கினியே பீடமாகும்
மக்களேரசமணியின் மார்க்கத்தாலே
ஊனென்றரசமதனை மணிபோற்செய்தால்
உத்தமனேகெவுனத்தி லோடலாமே. 2

ஓடலாம்பராசத்தி னடியிற்குள்ளே
ஓகோகோசொக்கிவிக்கு மணியின்மார்க்கங்
காடெல்லாந்திரிந்தலைந்து ரசத்தைவாங்கி
கட்டியொருமணியாகச் செய்யவன்றே
காடெல்லாமாயிரத்தோ ருலுத்தமாண்பர்
நாடாதேயவரிடத்தில் நரகமாவாய்
பாடெல்லாம்பட்டல்லோ விந்தைக்கட்ட
பரப்பிர்மமணியாகும் பாருபாரே. 3

பாரப்பாவிந்துவைத்தான் மணியாய்ச்செய்ய
பாடுகிறேன்புலத்தியனே வையாகேளு
வீரப்பாவுன்னிடத்தில் வாசிதன்னை
விதமாஸ்தம்பத்துள் ளடக்கியேத்து
காரப்பாவாசிதன்னை ஸ்தம்பனமேசெய்ய
காட்டுகிறேன்கபாலத்தில் கண்டுகொள்ளு
வீரப்பாநுணிநாக்கை அண்ணாக்கில்மோதி
விளங்கிநின்றமாதனையு லடைத்துப்பாரே. 4

அடைக்கையிலேகும்மென்று யிருட்டுகாணும்
அலைத்துவிடும் திரேகத்தைமலைக்கவேண்டாம்
உடைக்கையிலேயவ்விடத்தில் சத்தங்காணும்
ஓடுகின்றசுடரொளியுங் கதிரும்வீசும்
படைக்கையிலேவிழியிரண்டு மறைக்கண்பாரு

பருமூக்குசுழிமீதிர் குறிப்பாய்பாரு
கடைக்கையிலேகாதிரண்டு மசைவுகாணுங்
கண்டத்தில்வாசல்கத வடைக்கும்பாரே. 5
பாரப்பாவடைத்துவிடும் வாசலேழும்
பண்பானவாசியது கீழேநோக்குஞ்
சேரப்பாவாசியது யிருக்கும்போது
சிவ்வென்றேசுழிமுனையை யழித்துக்கொள்ளு
ஆரப்பாலிங்கவட்டம் அபானவாயல்
அடைக்குமடாநந்தியுட வேகந்தானே. 6
தானென்றவாசியது பீஜஞ்சொல்லுஞ்
சரிவரவேசென்றபின்பு சொல்லக்கேளு
மானென்றகபாலமெல்லாம் விம்மலாகும்
மயங்காமறகவனத்தா லுள்ளேசெல்லுந்
தேனென்றதிடர்கம்பங் கொதிப்புக்கொள்ளுஞ்
சொல்லவென்றால் மனமங்கேமயக்கங்காணும்
ஓமென்றமனத்தாலே கும்பத்தோடே
ஓதுங்கிபீஜத்தில் மனத்தையூணே. 7
ஊணவேவாசியது மேலேநோக்கு
முட்புகுந்துதண்டுவழி யோடும்பாரு
காணவேசுடர்கம்பம் நரம்புஒன்று
காணதுக்கள் அஞ்சுமாம்

வேணதுவேயதுவழியே வாசியோடி
வேகமடாகமலத்தின் அண்டத்துள்ளே
யாணவேவமுர்தத்தில் வாசிநிற்கும்
வப்பவல்லோவக்கினியு மதிகமாமே. 8

அதிகமென்ற அக்கினியோகதிரோகோடி
ஐயையோகண்ணிமைக்கு ளடங்குமோசொல்
கதிகமென்றவிந்துவைத்தான் காசிதானும்
பம்பரம்போற்சுத்தியல்லோ மணிபோற்பண்ணு
பதிகமென்றவிந்துமணி சாரணையோசெய்ய
காட்டுகிறேன்புலத்தியனே கருதிக்கேளு
உதகமென்றநுனிநாக்கை யணுப்போல்நீக்கி
வுருண்டுவருமணியுடனே வாசிபாரே. 9

பாரப்பாவிந்துமணி வாசிகூடப்
படீரென்றுயிறக்கிவிடும் பீஜத்துள்ளே
காரப்பாநந்தியுட வழியிற்செல்லுங்
காணுதற்குட்சுழலுண்டு சிக்கிக்கொள்ளும்
பாரப்பாவவ்விடத்தி னக்கினியின்வீடு
வப்பவல்லோ அண்ணாக்கிற்றிறந்துமூடுஞ்
சேரப்பாணுருதிறந்து வுட்சிவந்து
சிவசிவாவுருகிநிற்குஞ் சாரணையாயெண்ணே. 10

எண்ணவே நூற்றெட்டுச் சாரணையேபாரு
 பேருமடாவண்டத்தில் மணியின்வேக
முண்ணவேமுனைநாக்கை அரைவாசிவாங்கு
 மோடிவருங்கபாலத்தில் மணிதானப்பா
கண்ணவேபிண்டத்தில் அணையைவைத்து
 கபாலமதைபெருவாசல் மூடும்போது
நண்ணவேசடலத்தை உயரத்தூக்கும்
 நாவிரண்டுவரைவரைக்குஞ் சேர்க்கும்பாரே. 11

சேர்க்கவே அண்டமுதற் றிசைகளெட்டுஞ்
 சுழன்றுவரும்நிமிஷத்தில் மணியின்வேகம்
தாக்கவேமுன்போலே கதவைமூடே
 க்ஷணத்திலேகம்பநுனி மேலேசெல்லும்
சீக்கவேகதவிநுனி சற்றேறீக்கி
 சிறப்பாகநாடிவரு மணிதானப்பா
கார்க்கவேரசமணியின் மார்க்கஞ்சொன்னேன்
 கண்டுகொள்ளுபதினலின் காட்சியாமே. 12

ஆமென்றரசமணியின் வேகத்தாலே
 அண்டர்களுமுனிவர்களு மயங்கினர்கள்
தேனென்றயிம்முறையைச் சொன்னேன்யானுஞ்
 சிவஞானிமவுனிக்கிச் சொன்னதல்லால்
ஊனுண்டுபிறந்திறக்கு மாண்பருக்கு

முலுத்தருக்கு யிம்முறையைச்சொன்னையானல்
காணென் றகழுதையுட செனனமாகிக்
கடைப்பிறப்பாய்பிறந்திடுவாய் கருதிப்பாரே. 13

பார்க்கையிலேயிம்முறையைச் சொன்னையானல்
பாழானநரகமெய்தும் பாருபாரு
கார்க்கையிலேசீஷனுட மனதைக்கண்டு
கைமுறையாய்ச் சொல்லிவிடுஞானமார்க்கம்
யேர்க்கவேரசமணியின் மார்க்கந்தானு
மேன்மக்காள்சொல்லிவிட்டேனெழும்புமார்க்கஞ்
சேர்க்கவேயிம்முறையை யுனக்குச்சொல்வேன்
செழுங்கருணைபதினுலு தீர்க்கமுற்றே. 14

அகஸ்தியர் ஞானோபதேசம்-14

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐம்பதாவது,

அகஸ்திய மகாமுனிவர்

பாலவாகடம் - 20.

காரணமேகுருவாகத் தன்னைப்போற்றி
போதரவாயறிவுடனே மிருந்துபாரு
சுண்ணமாம்வாயுவினால் நீரசங்களாக்கி
கனமானரசமதுதான் சுரோணிதங்களாகி
தாரணமாய்சுரோணிதம் சுக்கிலங்களாகித்
தழைத்துதப்பாவுலகத்திற் றையல்தேடி
வாரணிபுங்கொங்கைமைய லின்னாள்வந்து
மகிழ்ந்திருந்துவொருமணியாய் வாங்கினாளே. 1

வாங்கினாள்வைத்திழிக்க யிடமங்கேது
மயினினுபோற் சுழியுண்டுவதிலேசிக்கி
தேங்கினாள்நாதவிந்தா லிரண்டுங்கூடு
திரண்டுதப்பாகுமிழிபோல் பிண்டமாச்சு
தூங்கினாள்மிகுந்தாசை யகாரங்கொண்டு
மதித்திருந்தாள்சனனத்தா லினிப்பினாலே
யேங்கினாள்புசிப்பதற்கும்பி லிறப்பதற்கும்
யிதமானவக்கொசித்தனினிப்பாய்த்தானே. 2

பொசிப்பதினுல்வாதமுடன் பித்தம்பொங்கி
புகழாகபிண்டத்தை வளைத்துதப்பா
புசிப்பதினுற்கூட்டேறி நீரருந்தி
புகையானசேற்றுமந் தானுமாகி
கசிப்பதினுல்மூவருமே கூடிக்கொண்டு
கருவோடேயாவியுமே கலந்துபோச்சு
முசிப்பதினுல்முந்நூறுஞ் சென்றபின்பு
மூதண்டலோகத்தி லுதித்தவாறே, 3

உதித்ததொருபிள்ளைக்கு வியாதிகண்டால்
வுண்மையுடன்சொல்லுகிறேன் தன்மமாக
பதித்திருக்கும்நாடிகளைப் பார்க்கும்போது
பரிவுடனேதோணுமல் கலங்கிப்போகும்
கிதித்திருக்குங்குணங்களைத்தான் சொல்லக்கேளு
கருவுடனேகிரந்தியுட னிரண்டுபாரு
மதித்ததொருகரப்பானுங் கனகவெப்பு
வசனமதுபோலுமூலை வஞ்சியாரே. 4

வஞ்சியரேகருவாகச் சார்ந்துபாரு
வண்மையுடன்வாயுவந்து வுடலைப்பற்றி
மிஞ்சியேமலஞ்சிக்கிக் கரிகிக்கொண்டு
மிகுந்தசலமிரண்டுமே கட்டிக்கொண்டு
அஞ்சியேவலறியழுந் தேங்கித்தேங்கி

யன்னையென்றுமிகுதிப்பெறத் தேடுமப்பா
உஞ்சியதுவுண்ணுது மிரண்டுபார்க்கும்
வுளமாந்தக்குணமிதுவென் றுகந்துகொள்ளே. 5

கொள்ளடாவியாதியென்றுற் கொஞ்சமல்ல
கொடுங்காரமேற்றுதற்கு வகையைக்கேளு
விள்ளடாநிலவேம்பு சிவயோகிவேறும்
விரவானநிம்மைவேர் வுள்ளிகாயம்
கள்ளமல்லவொன்றுக்கு கழஞ்சிசேர்த்து
கருத்துறவேயெண்ணெயரைப் படியில்வெந்து
வுள்ளதொருகாசிடையாய் யுள்ளேவாரு
வொருமித்தவுளமாந்த மோடிப்போமே. 6

ஓடிப்போமலபேதி நீரைப்போலே
வொருநிறமாயிருக்காது பிள்ளைதேகந்
தேடியேதிகைத்ததுபோல் சோங்கிக்கொண்டு
சிலவிழிகள்மேனோக்காய்ச் சொருகிக்கொள்ளும்
வாடியதோரன்னைமுகம் பாராதப்பா
மைந்தனேசலமாந்தம் மலத்தில்காணும்
வாடியதோரிராட்சதனுஞ் சிறையில்வைத்த
வெம்பியதோர்வேள்விழியாள்மீ துரையும்வேறு.
வியாசன்முதல்யோகிக்கு நிரைப்பதான
துன்பமறகரிக்கிடுவாய் கழஞ்சுவீதம்

தூக்கிடுசேர்யெண்ணைசார் மெழுகதாகத்
தென்புடனேயெரியிடுவாய் மெழுகதாகந்
தினமுமொருகாசிடையாய்க் குலுக்கிடாயே. 8

குலுக்கிடுவாய்முலைப்பாலில் மூன்றுநாள்தான்
கூப்பிட்டேயோடிவிடுஞ் சலமாந்தங்கள்
அலக்கமறும்பிள்ளைமாந் துளிர்போலாகும்
மதைவிட்டுயின்னமொரு வடைவுகேளு
கலக்கமறதிப்பலியு மிளகுதூளும்
கனமானயிந்திலையில் விட்டவியில்வைத்து
நலக்காமல்திரிபொழுது வார்ப்பாயப்பா
நாடிவந்தசலமாந்தம் நடுங்கிப்போமே. 9

நடுங்கியதோர்பித்தமது கோபங்கொண்டு
நல்லதொருவாய்வைப்பற்றி யழுத்திக்கொள்ளும்
கடித்திருந்தபிள்ளைக்குக் கதித்தசூடுங்
கனகனப்புமென்னேரங் கைவிடாது
வொடுங்கியேவாயுலர்ந்து தண்ணீர்கேழ்க்கும்
உத்தமனேமலபேதி வழும்பாய்வீழ்கும்
மடங்கியேஊண்கழனிற் கோலபானவாசல்
மாளாதேயெப்போதும் வருகும்பாரே. 10

பாருநீயிக்குணத்தால் கணங்களென்று
பருவமாய்க்கண்டால்நீ புத்திரனேயையா

சாருதார்க்குமுள்வேருஞ் சித்திரபாலை
    சார்ந்தெருக்கன்காந்திவேர் பொன்னப்பூவேர்
பேரரசன்மதிமயக்கம் பூண்டவேரும்
    போதரவாய்ப்பட்டைவகை பலமேதூக்க
பினியதோர்மெழுகதுபோ லெண்ணெயிற்றான்
    வெந்தபின்புபீங்கானி லிருத்துவையே. 11

இருத்திட்டயெண்ணெய்க்குப் பொடியைச்சொல்வேன்
    யேலஞ்சீரகமதுதான் பலமேவாங்கு
வருத்திடித்துப்பொடித்திடுவாய் மயினம்போலே
    வாரியெண்ணெய்மேல் தூவிகுலிக்கிவைப்பாய்
நிறுத்துவொருகாசிடையாய் மூன்றுநாள்தான்
    நேராகமுலைப்பாலைக் கலந்துவாரு
நிறுத்திவிடுமபானத்தால் சொரிந்தரெத்தம்
    நீர்த்துளியாய்க்கணங்களெல்லாந்துறந்துபோமே.

துரப்புமிருங்கக்கலுடன் சுவாசந்தோற்றும்
    தூக்கமதுபிடியாது தொங்கிக்காயும்
யெரப்புடனேவிக்கலுடன் விலாவிற்பள்ளம்
    யேந்துகொங்கைபிடியாது வீங்கிறைப்போல்
வேருப்பார்கள்சிறுவன்மேல் விதியேதென்பார்
    வேறேநீமனந்தவிக்க வேண்டாமப்பா

வுறப்பானகுணங்களிது தானுங்கண்டால்
வோகோகோசுழிமாந்த மென்றுசொல்லே. 13
சொல்லுதற்குசாலேதுளாய் தொடருந்தும்பி
தொகைக்கும்முட்டியிலேயுடனே குறிக்குநாதா
வல்லியுடன்சிட்டியுமே வைந்துங்கூட்டி
வாகானயிலேகளெல்லாஞ் சாறுவாங்கிச்
செல்லுமோசாதிக்காதிப் பிலியுங்காயஞ்
செல்கடுகுரோகணி கோரோசனையுங்கூட்டி
நல்லக்கமலாக்கினியில் மெழுகதாக்கி
நழுகவினைகாசிடையாய் நாட்டிடாயே. 14
நாட்டியேவஸ்தியிலே சூடுகொண்டு
நல்லுடம்பின்மேற்குளிர்ந்து சுரங்கள்காயு
மோடியதோர்சுவாசத்தா லனல்புடைக்கும்
வுதடுகளும்வெடித்துவாய்ப் புண்ணுகும்நெஞ்சு
தேடுயென்னையழுகவப்பா துயரமெத்த
தேம்பிவாய்த்திறப்பதற்கு வருத்தமென்ன
வாடுமேசிறுவனுக்குத் தேகமெல்லாம்
வெளுப்புடனே பேதியாக்கிராமாந்தமொன்றே.
மாந்தமிதுகாணில்முன குமரிச்சார்வேர்
வாங்குவதுவெண்ணெச்சா ருள்ளிச்சாறுஞ்
சேந்தருங்காரைப்புல் துத்திவேர்தோல்

செப்மெழுருபோலரைப்பாய் பலமதாக
வாய்ந்ததொருவெந்தயமும் பலமதாக
வறுத்தரைத்துயேமமாய்க் கலக்கிக்கொண்டு
சாந்தமாய்தீயெரித்து மெழுகதாக்கி
சாதகமாய்ப்புண்வாய்க்கித் தாக்கிடாயே. 16
தாக்கிடுவாய்முன்போல மூன்றுநாள்தான்
தடவிவிடுபுண்சூடு தணிந்துபோகும்
துவக்கிடுமேமலபேதி பச்சென்றேதான்
தோய்ந்ததயிர்போல்நிறமாய் வயிறுவுப்பி
துக்கமிகும்பாலருந்துங் கக்குங்காயஞ்
சொருகிவிழிகால்கைகள் சில்லிட்டேகும்
எக்கயிலேதலைபிரட்டல் குணங்கள்கண்டால்
யியலானபிரகலையென் றியம்பினேமே. 17
இயம்பாறைகோழிகுறை சனகிவெள்ளை
யியலவைதுமபையிட்டுயிலி யிடுகாலுள்ள
சுயமாகயிலைகளெல்லாஞ் சாருவாங்கி
சூட்டதிலேயெண்ணெய்ச்சார் சமமதாக
வரமுள்ளிகரியவணி ரிஷிமூலந்தான்
வகைக்கழஞ்சிசேர்த்திட்டுத் தீயைமூடி
நயம்பாகுமுன்போலே காசிடையேவூறு
நாள்மூன்றில்பிரகனையும் நாடாதோட்டும். 18

ஓடுமப்பாவாயுவென்ற நாற்பத்தெட்டும்
மூடலெங்குங்கணகணத்துச் சூடுண்டாகும்
வாடுமேசதைகளெல்லாங் குலுக்கிக்கொட்டும்
நலமுழிகால்கைகள்பதை பதைக்குமப்பா
தேடுநீபாருவது மாங்கையொன்று
செல்வனேவாதநீர் கலந்துக்கொண்டு
பாடுதற்குவாயில்லைத் தாளைப்பற்றும்
பருந்துடும்போமிருப்பதுபோல் திரேகங்காயுங்
கூடுமேயசைந்து வலிக்குமப்பா
கோமகச்சன்னிமாங்கையுட கொடுமைதானே. 19

கொடுமையென்றுசொல்லாதே வதிகட்கெல்லாம்
சோதவீந்துதூருடின் வேம்பின்பட்டை
கடுமையில்லாகாற்றிசையின் கிழங்குமுள்ளி
தருகெருடன்தவசிவேர் சிவமூலிவேர்
படுமைபடாசிலதண்ட முசுரண்டங்கள்
பதனமாநெய்வகை பலமேனுக்கு
கடுமையுள்ளமுட்டிக்காய்ச் சாறுநாழி
கனவேம்பின்கியாழமது நாழிகூட்டே. 20

கூட்டிவெள்ளைக்கா ரணைவேர்கொத்தான்
கோதையரேயேழுவகை யிரண்டதாக

ஈட்டினரும்வாமணக்கெண்ணெய் நாழிசேர்த்து
    யேளசீரகமிரண்டு கடுகுரோகணி
வாய்த்திட்டுவகைபலமிரண்டு பொடித்துப்போடுத்
    தணலெரித்துமெழுகாக்கிக் காசிடையேவாரு
மூட்டோடேவோடிவிடும் மலியைந்துந்தான்
    மூன்றுநாள்பத்தியமாய் முனைந்துமுற்றே. 21

அகஸ்தியர் பாலவாகடம்-20

முற்றிற்று.

கடவுள் துணை.

ஐன்பத்தோருவது,

அகஸ்திய மகாமுனிவர்

ஞானம் - 30.

திருவிருத்தம்.

மெய்ஞ்ஞானகுருபரனைப் பூசைபண்ணு
விதைந்துசற்குருவை நிதமும்போற்று
கையாறமனமாற ஞானஞ்சொல்லு
சுாரமாங்குருபதத்தைக் கருதிப்பாரு
வையமெல்லாங்கொண்டாட கருவைச்சொல்வேன்
மதிகெட்டுவிள்ளாதே மகிழ்ந்திடாதே
பொய்யாதவுபதேச குருவைப்போற்றி
புகழாகபனிரெண்டு வருஷங்காரே. 1

காய்த்தாக்காலோரெழுத்து வழியுஞ்சொல்வார்
கருச்சொல்வார்குருச்சொல்வார் களங்கமற்று
பார்த்தாக்காற்சித்திமுத்தி யிரண்டுஞ்சொல்வார்
பரிவாகவாலேமூன் றெழுத்துஞ்சொல்வார்
சேர்த்தாக்காலெட்டோடே யிரண்டுஞ்சொல்வார்
சிவஞ்சொல்வார்நாலுக்கு மிடமுஞ்சொல்வார்

பூத்தாக்காலாயிரத்தெட் டிதழின்வாசி
பூங்கமலத்திருவடியைப் பூசைசெய்யே. 2

பூசையென்னமானிலமே பூசையாகும்
புருவமையத்தொனிகண்டா லதுவேபோது
மாசையென்ன அற்றவிடங் கடந்தஞானம்
அம்பரத்தைதசெய்யதுவே யூசையாகும்
ஓசையெனவாசிவைத்து மூலத்தூணி
வுயர்ந்துநின்றசிலம்பொலியே ஆசையாச்சு
ஊசையென்னபலவகையு முற்றுப்பார்த்தால்
பகட்டாத சொரூபத்தாற் பணியநன்றே. 3

நன்றானரேசகத்தை முன்னேகேளு
நலமானபூரகத்தை வாங்கிக்கொள்ளு
வொன்றானகும்பகத்தை யுற்றுப்பாரு
யுண்மையென்னவிடங்கேளு வுறுதிக்கேளு
பன்றாகபழகுவதுக் கடிகைகேளு
பதிவுசொன்னால்மூன்றுக்கும் வடிவுகேளு
குன்றானமூன்றுக்குங்குறிகுணங்கள் சொன்னால்
குருவுக்குவுடலாவிபொருள் தத்தம்பண்ணே. 4

பண்ணிநின்றவுடலாகு முயிர்தானாகும்
பகருகின்றபொருளாகு வுற்றாராரு
நண்ணிநின்றகுருவாரு பரந்தானாரு

நலமானவகார மாறும்பாரு
கண்ணில்நின்றவொளிபாரு வெளியைப்பாரு
காலடங்கிவாடுகின்ற கருவைப்பாரு
விண்ணில்நின்றுபொருள்சொன்ன குருவைப்போற்றி
வேதாந்தஞ்சித்தாந்த மிரண்டும்பாரே. 5

வேதாந்தசித்தாந்த மிரண்டுமென்ன
மேன்மையுள்ளபெரியோர்க்கு மெல்லாமொன்று
நாதாந்தநடனவொளி கண்டபேர்க்கு
நானென்றவகம்போச்சு மெல்லாம்போச்சு
போதாந்தம்பொக்கிஷமாம் வாமபூசை
பூசித்துக்கும்பித்து வுள்ளேரேசி
கீதாந்தவெளியேழும் நாதங்கேட்கும்
கிருபைதருமுனற்றிய மனத்தைக்கட்டே. 6

மனந்தானேபுத்தியாங் காரஞ்சிசித்தம்
மதியிரவியண்டபிண்ட மானவாறும்
மனந்தானேசத்திசிவ மாய்கைஞானம்
வாசிபார்தேசிபர பிரமம்யாவும்
மனந்தானேநாதவிந்து அரூபரூபம்
வழிகனல்விண்புனல் பண்புனல்மண்ணானவாறும்
மனந்தானேவுதிக்குமிட மொடுங்குமிடமிரண்டும்
வகைசொல்லுஞ்சற்குருவை வணங்கிகேளே. 7

கேளப்பாவங்கென்று வுள்ளேரேசி
கெடியாகசிங்கென்று வுள்ளேபூசி
ஆளப்பாஅங்கென்று வுள்ளேகும்பி
ஐம்-ஓம்-சிம்யமமென்று தியானஞ்செய்வாய்
சூளப்பாசுழிமுனைகண் ணொளியையேற்ற
சொல்லுகிறேன்அம்-உம்-சிம்-வம்-ஓமென்று
வாளப்பா-ஓம்-ஐயுங்-கிலியுங்-சவ்வுங்-வாசி
வாலையாமும்பறையே சிவாவென்றென்னே. 8

என்னவேரேசகந்தான் முப்பத்திரண்டு
யியலானபூரகந்தான் பதினாறு
முன்னவேகும்பகமே யறுபத்துநாலு
முயர்ந்துநின்றபிராணயங் குருசொற்கேட்டு
பின்னின்றுதசநாடி தாரணையேயானாற்
பிலமறிந்துசையோக நிலையைப்பற்றி
கண்ணில்நின்றயிடமறிந்து வாமபூசை
கருவானசிவயோகங் காணலாச்சே. 9

ஆமென்றும்ஓமென்றும் வங்-யங்-ஓம்-ய-வ-சி-ம-நவெ
ன்று, மைந்தெழுத்தைமாறிவுச்சரிக்கவேணும்
வாமென்றயிடைகலையில்-சிங்-வங்-யங்
நங்-மங்-ஓம்ந-ம-ய-வ-சி-யென்று
வளமையுடன்சிகாரமதை யறியவேணுங்

தூமென்றசுழிமுனைக்கி-ஓம்-மங்-நங்-யங்-வங்-சிங்
ஓம்-சி-வ-ய-ந-ம-வென்று
சூட்சயமாய்நகாரத்தை யறியவேணும்
தாமென்றமவுனத்தால் தியானஞ்செய்து
சதாசிவமாஞ்சுழிமுனையி னொளியைப்பாரே. 10

பார்க்கையிலே பவளவொளி பச்சைநீலம்
பருவானபொன்பசுமை வெண்மையைந்தும்
சேர்க்கையிலேசூரிய னுதயம்போல
செகசோதிபூரணத்தின் காந்திதானும்
ஆர்க்கையிலேகொடுத்தபொருள் வாங்குமாப்போல்
ஐந்துருவுமொன்றான வடியேதோணுங்
கார்ப்பதுதான் திருவடியே சரணமென்று
காத்தவர்க்குத்தீங்கில்லை கருணைதானே. 11

கருணைதருமக்கினியாதித்தன் சந்திரன்
கலந்தொன்றாய்நின்றது பூரணமேயாகும்
பொருள்நயமாயறிபவனே புண்ணியவானும்
புகழ்சொன்னசற்குருதேவ யாசானுகும்
அருள்கிரணசோதியுதாமதிக்குமேலே
வாயிரத்தெட்டிதழ்மேலே யமிர்தகர்ப்பந்
திருவறிந்துவுண்டவனே சிவயோகியாகுஞ்
சிவசிவாகாலறிந்தோன் சித்தனாமே. 12

சாகாதகாலைநன்றாய் காணவேணும்
தணல்வேகாதலையறிந்து கூடவேணும்
போகாதபுனலறிந்து வுண்ணவேணும்
பொருளறிந்தசற்குருவை போற்றவேணும்
வாகாகமூன்றரையுந் தன்னுக்குள்ளே
வகைதெரியலட்சியத்தை வணங்கிக்கேளு
ஆகாதுவொன்றுமில்லை யெல்லாமாகும்
அதைதரியாமிலாப்பொருளாகுஞ் சகலசித்தே. 13

சித்தென்னசிற்றின்பம் பேரின்பமென்ன
செல்காலம்நிகழ்காலம் வருங்காலமென்ன
சித்தென்னசித்தினுட வானந்தமென்ன
சடமென்னபொருளென்ன வுயிர்தானென்ன
வித்தென்னமரமென்ன வேர்தானென்ன
வெள்ளியென்னதங்கமென்ன லோகமென்ன
பத்தென்னயெட்டென்ன யிரண்டுமென்ன
பரமரகசியமான விந்தைக்கட்டே. 14

விந்துகட்டசுழிமுனைகண் ணொளியைப்பாரு
வழிரேகையைப்பாரு சுழியைப்பாரு
அந்தவட்டத்தோங்கார மதனைப்பாரு
ஐந்துபஞ்சாட்சரத்தைப்பாரு
விந்துவிட்டுப்போகாதே விந்தைக்கட்டு

விதானையாயதோமுகத்தி லிருந்துபாரு
விந்தைவிட்டால்யோகிகட்குச் சலனம்விந்து
விடாமலேவேதாந்தக் கயிற்றிற்கட்டே. 15

கட்டுவதுமூன்றோடே றைந்தைச்சேரு
கலந்தெட்டுந்தன்னோடே யிரண்டைச்சேரு
ஒட்டுவதுசத்துடனே வொன்றைச்சேரு
வுறுதியாய்ச்சேர்ந்தபின்பு வொக்கச்சேரு
முட்டுவதுதுலாசந்தா னடங்கிற்றால்
மூலையோடுசுழியாணி யாதாரந்தோணும்
சட்டமுடன்லட்சதீக்ஷை நன்றாய்க்கேளு
சாரமரிபூரண நூல்தன்னைப்பாரே. 16

நூல்பாருகொங்கணவர் கடைக்காண்டத்தின்
நுணுக்கமெல்லாமதிற்றோணும் பூசைதீட்சை
பால்சீனிபழந்தேன்கற்கண்டு வைந்துமாகும்
பால்திரட்டுயுண்டுருசி போலேகாணும்
மூலகுருமந்திரமு மமிர்தந்தன்னில்
மூட்டினார்நியாயவகை யெல்லாஞ்சொன்னார்
கால்பாருதலைபாரு புனலைப்பாரு
கண்காதுமூக்கிதுவாய்க் கண்டவரே. 17

கண்டத்தில்நின்றசித் தரியைப்பாரு
கண்புருவத்திடைவெளியி னொளியைப்பாரு

அண்டத்தில்வெளிதோன்றும் நடுவேநின்று
அங்குமிங்குமெங்குநின்ற வடவைப்பாரு
சண்டமாருதம்போன்ற காலினாலே
தட்டிவிடுயகரஅல் வலகரனைப்பற்றி
துண்டத்தின்முனைபாரு குண்டலியைப்பாரு
சுதமானமூலவாதாரம்பாரே. 18

ஆதாரமூலவட்டத் தம்பம்பாரு
அறிமுகவனட்சரத்தைக் கண்டுதேரு
வேதாவிமாலுடையயெழுத்தைக் கண்டால்
வெட்டவெளியாங்காரக் கம்பந்தோணும்
சூதாகமானிடற்கு யென்றும்வாசிச்
சூட்சமா-யங்-வங்-கென்றுந்தியானி
பாதாரமேகெதிலும் அங்கென்றாணு
பதியிலேவங்கங்கே யெழுத்தைநாட்டே. 19

நாட்டப்பாபாழ்வெளியில் பசும்பொன்பச்சை
நாடியிடைபின்கலையுஞ் சுழியேசுத்து
வோட்டப்பாநந்திகம்பத் தொளியைப்பாரு
ஓங்காரமுங்கொண்ட சிங்-வங்-கென்று
ஈட்டப்பா-யம்-மம்-மென்றெண்ணி
யியங்குகின்றமூலத்தின் படியைநாட்டி

ஆட்டப்பாவைங்கோண மேலேவட்டம்
அதன்மேலேநாலிதழி னெழுத்தைமூட்டே. 20
மூட்டியேவாசிவைத்து பிராணாஞ்செய்ய
மூலகணபதியும் வல்லபையுஞ்சித்தி
சூட்டியேஅத்தியடி மூலங்கண்டாற்
சொல்வதென்னசகலசித்து மதின்மேற்பாரு
பூட்டியேபிருதிவப்பா சுவாதிஷ்டானம்
பொன்னிறமாம்நாற்கோண மிதழாருக்கும்
தாஷ்டிகமாய்வாசிவத்து ஓம்-நம் மென்று
சாதகமாய்ப்பிராணயங் தாக்கநன்றே. 21
நன்றானநான்முகனுஞ் சரஸ்வதியுங்காணும்
நாடோறுஞ்சந்துஷ்டி நினைக்கலாகும்
னன்றனும்நடமெத்த வாலைபூச
வந்திசந்திவுச்சியிலு மடைவாகச்செய்து
ஒன்றானபிரமநிறம் பொன்னதாகும்
ஓகோகோகுவலையத்தோர் காணார்மாண்பர்
மன்றானமணிபூரகம் பிறைபோல்நிற்கும்
விட்டத்தின்பத்திபத்திதழ்தான மாயனாமே. 22
மாயனும்பூரகந்தான் மயங்குவாண
ராமச்சீதாலட்சுமியுமாலும்பாரு
ஆயனும்பச்சைமா கமலமேனி

மாயனொடு அரனைப்போற் காந்தியாகும்
தூயமாம்புரியவட்டம் வாசிதேசி
யுயிர்க்குசுகமாந்தி ஆலம்பொசிப்பாய்
ஞாயமாம் ஓம்-வம்-மம்-உமாவென்று
நாட்டமாம்பிராணய வாசியாமே. 23

வாசித்துங்கெணசித்தும் வரவேசெய்தார்
பரிசையாய்நினைத்ததெல்லாஞ் சித்தியாகும்
பத்திமுத்தியாய்மனதில் செபிக்கவேணும்
உரிசையாயுணர்வுபற்று வதற்குமேலே
ருத்திரனார்முக்கோண வட்டமேலே
சரிதையாய்ப்பனிரெண்டு யிதழேநிற்கும்
சத்துருத்திரிருத்திரனார் தன்னைக்காணே. 24

தன்னைத்தான்காணவேஅம்-உம்-ஓம்-ஆம்மென்று
சார்வாகவாசியொடு ரேசியாகே
உன்னைத்தானறிவிக்குஞ் சங்காரகர்த்தன்
வுருக்காட்டுஞ்சுரிநாமம் பசுமைநீலம்
அன்னந்தான் அனுகதமாஞ் சுழித்தவீடு
வறிவானநினைவுக்குள் ளக்கம்பீடம்
பின்னைத்தானிதுவன்றி வேறேயுண்டோ
புரிதுசொல்லக்கூடாது சின்மயமாமென்றே. 25

சின்மயத்தின்செயலறிவார் சித்தர்முத்தர்
தேசிகரும்நவமுனிக ரிஷிகளாகும்
பொன்மயத்தின்செயலறிவார் வாதிசமுசாரி
விழிராசர்வசியமுதல் யோகிசித்தர்
மின்மயத்தின்விசுத்தியறு கோணம்நிறங்கருப்பு
மேல்வட்டமீரெட்டு யிதழ்மேயாகும்
தன்மயத்தின்ரூபவமா மகேஸ்பரனும்
மகேஸ்பரியாளம்பிகையின் ரூபங்கேளே. 26

அம்வகையையறிவதற்குஅம்-உம்-ஓம்-வம்-யம்மென்று
அழகானகால்மடக்கி யோகஞ்செய்ய
தம்பிகையாம்பதியின்கோடி யீசன்காந்தி
தாய்காந்திஅருணவொளி கோடிக்கொம்பாம்
நம்பினபேர்க்கெந்நாளு மழியாசித்தி
நவகோடிநாதாக்கள் தெரிசனையேயாகும்
உம்பரொடுவிளையாட கெளனசித்தி
யுயர்ந்துநின்றகாயசித்தி யுருதியாமே. 27

உறுதியாம்ஆக்கினை சக்ரவட்டம்
உள்ளரண்டிதழாகுங் கருப்புவண்ணம்
சோதியாமாகாயம் மனுக்கிரகந்தோற்றும்
புகழாக-இம்-உம்-ஓம்-ஆம்மென்று
திருவாலெட்சியத்தால் யோகஞ்செய்ய

செய்யவேசதாசிவனுந் தெரிசிப்பார்பார்
அறுதியாமனோன்மணியா ளம்மையாஞ்சித்தி
ஆஸிரவிமென்னுமிரமதிபோலொளியாங்காணே.
ஒளியதுகாணிரண்டுமொன்றுய்ச் சேருசேரு
வுற்றுப்பார்புருவத்தி லூணிப்பாரு
அறியாதகாயமப்பா வனந்தவரைமாட்டும்
மந்திடந்தான்சகலசித்துக் காதிபீடம்
வெளிகாணசதாசிவந்தான் மின்னல்கோடி
வெளிச்சம்போல்கண் கூசும்பார்க்கப்போகா
வழிகாணமுத்திதனில் துவாதசந்தான்
மகாசொர்க்கமுத்தியுமா மஷ்டசித்தே. 29
அஷ்டசித்தாமெட்டெட்டுஞ் சித்தியாகு
மடிமுடியாமிரண்டுக்கும் வழிதானீது
விட்டெழுத்துதொட்டெழுத்தும் விடாதெழுத்தும்
வேதாந்தசற்குருவை வணங்கிக்கேளு
சட்டமிட்டவாதார மிம்மட்டமாச்சு
சண்முகமாதாரக் கருவைக்கேளு
திட்டமுடன்மனவுறுதி சின்மயத்தைவெல்லுந்
திருச்சிற்றம்பலம்போற்ற ஞானமுற்றே. 30
திருச்சிற்றம்பலமென்னு முண்மைஞானஞ்
சித்தாந்தமுத்தர்மா தேசிவாசி

அரூபசிற்றம்பலமறிந்தா லகண்டசோதி
அய்யரையுமூப்பரானு மங்கேதோணும்
பொருள்சிற்றம்பலங்காட்டி புதுமைகாட்டி
புருவமையத்தொளிகாட்டி வெளியுங்காட்டி
ஒருசிற்றம்பலங்காட்டி யுயிருங்காட்டி
வொருக்காலுமழியாத பதவிமுற்றே. 31

அகஸ்தியர் ஞானம்-30

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐன்பத்திரண்டாவது,

அகஸ்திய மகாமுனிவர்,

கேசரி குரு நூல் - 54.

காப்பு.

சீர்பதிஞானதேவி திருமகள்சோதிகாப்பு
ஆர்தனில்கொன்றைதும்பை யணிந்தநல்வருளேகாப்பு
பார்தனில்வேதஞான கிரிகையும்பாடவேண்டிக்
கார்முகில்மேனியான கணபதிகாப்புதானே. 1

ஆதியாங்கடவுளாணை யநுதினமனதில்வைத்து [ன்று
சோதியாங்குருவின்தீட்சை சொற்பொருள்விளக்கவெ
நீதியாம்பூமிதன்னில் நேர்நிரையறிவோர்க்கெல்லாங்
கோதிலாஞானதேகி குமரனுங்காப்பதாமே. 2

நூலின் வரலாறு.

அரியானமுதலெழுத்தை யறியமாட்டார்
அப்பாலும்நகார பட்டணத்தைக்காணார்
அரியானமுதலெழுத்தை சிவமுஞ்சுத்தி
ஆச்சரியம்நகாரமடா பூமியாச்சு
சரியானபதினெட்டு மெழுத்துக்களெல்லாம்
தானந்தவாதியென நின்றதாலே

விரியாமல்விரித்தப்பா பிரமமாகி
வேதாந்தசாஸ்திரமாய் விளங்குந்தானே. 3

தானதுவேதானுகத் தனித்துக்கொண்டு
தான்செய்யுந்தொழில்தானே தானுமென்று
தானேனும்நீயெனவே தன்னைத்தானே
தான்பார்த்துதீட்சைசிலே தன்னைக்காண
தானதுவேதானதுவாய் நின்றநாதன்
சங்கற்பசங்கற்ப மறிந்தேகொள்ள
நானதுதாங்குறியாங் குறித்தபேர்க்கு
நாதாந்தபேரருளா யேறுவானே. 4

எறியேநமைக்காண வேணுமென்று
யிருதயத்தில்நினைக்கையிலே கண்ணிற்றோன்றுங்
கூறுவோமுபதேசம் பொருளேயாகுங்
கூப்பிடுவோமெய்ச்சித்தா வென்றுசொல்லு
ஆறியேசனுமாதி முதலாயெட்டும்
ஆட்டிடவும்ரிஷிமூலம் நதியின்மூலங்
கூறியேகாயாச மவற்கேயீந்து
குறியறியாதிருவிருத்த பதியைத்தானே. 5

திதிதலத்தில்மதியொடுங்கி வளருஞ்சூட்சம்
பக்கமதிவிருபக்கம் வாரமேழிற்
பதிதலத்திலீரெட்டு யிதழுமொன்றாய்ப்

பதினாறாய்ச்சோடசமாய் வளர்ந்துதேய்ந்து
திதிபிளத்துக்கதிர்நாளிற் பௌரணையேயானாற்
றினமறிந்துபிடகலையைக் கதிரிற்சேரு
கதிமுத்திக்காயசித்திக் கிதுவேதீட்சை
கருதியன்னகஸ்தியனுங் கருவைத்தானே. 6

கருத்தரித்துள்வளர்ந்துவெளி பேறுங்காலங்
கருவாளிநீயானாற் கருவைப்பாரு
உருப்படுத்தியுனைவளர்த்த அருமைத்தானே
உற்றுப்பாருன்மனதி லறிவாய்நீயும்
கருத்துள்வைத்துப்பருதிமல் கதிரிற்சேர்ந்த
கலவையறிந்துருதிபெற்றக் காயசித்தி
திருத்தமரவுட்புகுந்து கண்டால்மத்தி
தேறுவதுதிண்ணமிது சித்தியாமே. 7

சித்தாதிபதினெட்டுஞ் சேருசித்தா
சிறுத்துமதிபெருத்துவளர் பதியைக்கண்டு
அத்தர்திருநடந்தான் பதியைப்போற்று
ஆதியிரோதாயினுட மாய்கைநீக்கி
முத்தர்பரிபூரணமாய்த் தாயைப்போற்றி
மூலமுதலாறுவரை யண்டர்கண்டோர்
இத்தகமையறிந்தசித்தர்க் கெல்லாநாமே
யேகரிஷியானோப்பா ரறிவாற்றானே. 8

அறிவுகுருநாதனருள் பெற்றோர்க்கெல்லாம்
அத்தீட்சங்காணும்வினை யகன்றுபோகு
மறிவுகுருநாதனென்பா ருலகத்தோர்கள்
அகத்தியனுமென்பேரின் றீட்சைகாணூர்
அறிவுகுருநாதனென்று நீயேபாரு
ஆதிமுதலந்தம்வரை நீங்கைதோனும்
நெரியில்சகலரிஷிசூலம் ரெண்டுப்பார்த்தால்
நின்றபதிநீயறிவாய் நாமேயெண்ணே. 9

என்னுடையபிள்ளையென்று லறிவான்தீட்சை
யெத்தொழிலுங்கற்றறிவான் சித்தனுவான்
என்னுடையபேர்சொல்வான் தன்னைப்பார்ப்பான்
ஏறியேகரைதாண்டி கண்டமேவி
என்னுடையபொதிகைதனி லென்னைக்காண்பா
னெல்லோர்க்குங்குருவாவா னென்னைத்தானுந்
தன்னுடையகுருவென்பான் தாயைப்போற்றி
சதகோடிசித்துமெடுத் தாடுவானே. 10

ஆடுவான்சித்தரெல்லாங் கண்டுமெச்சும்
அகண்டபரிபூரணமா யறிவிலேறி
பாடுவான்சாஸ்திரங்க ளனேகங்கோடி
பதியானத்திருநடனப் பதியில்நின்று
நாடுவான்சுழிமுனையில் நாட்டமுற்றும்

நாதாந்தகருணைபெற வடிவாற்கண்டு
கூடுவாநம்மோடே தன்னைக்கூடி
குருபுத்திரனவதுவுந் திண்ணந்தானே. 11
திண்ணமதுபூரண நூல் தன்னைப்பாரு
தீட்சைசெய்துயிருநூறும் நன்றாய்ப்பாரு
எண்ணரியசாத்திரங்க ளநேகமுண்டு
யென்னுடையயெட்சணியை நன்றாய்ப்பாரு
தண்ணுபொருளாகினின் சத்தியாட்டை
வுற்றுப்பார்தண்டகத்தின் கருவைப்பாரு
எண்ணுமிந்தநூல்பார்த்து தன்னைப்பார்த்து
யென்னுடையமரமென்று யறிவில்லில்லை. 12
அறிவிருந்தபதியில் நாமிருந்தோம்பாரு
அதீதமாய்நின்றதுவும் நாமேசொன்னோம்
நெறியிருந்தநிஷ்டைநாடி நீயேகாண
நீவாசியோர்கொள்ள வாசிசொல்வோம்
குறியறிந்துதொடுகுறியிற் சுக்கிலத்தின்வாசல்
குருவிருந்தபுருவமதைத் தொனியைப்பார்த்து
அறிவானவாமவகையறிந்து பிலத்துக்கொண்டா
ளானந்தவாச்சரியம் பெருவாயென்னேன். 13
என்பொருட்டாற்சித்தரெல்லா மறிந்துகொண்டா
ரெட்டெட்டாங்காலொன்றிற் காட்சிகண்டார்

என்பொருட்டாநீயெட்டு ரெண்டுந்தோண
 யிந்நூலின்கருத்தோண நன்றாய்ச்சொன்னேன்
என்பொருட்டாலுனக்குமிது வறிவால்தோண
 ஏழுசத்தசாகரமு மப்புமுப்பு
என்பொருட்டாற்கண்டுகொண்டு நாமேநீயாம்
 இருப்பதற்குக்குறியறியச் சொன்னேன்கேளே.

கேளேழுத்தனுக்கோடி தீர்த்தமாடி
 கெதிபெறவுந்திருமாலை கண்டுபோற்றி
நாளேழுதினமதிலே வாரம்வைத்து
 நாம்வருவோம்நடுச்சாமம் வந்தேயுன்னை
கேட்டேழுகிரிசுத்தி லெரியேமூட்டி
 கேசரித்திலேத்திடுவோம் பொதிகைதன்னில்
மீனவுமேயிருத்தியிந்த வுலகுதன்னில்
 வித்தைஎல்லாமறிந்துகொள்ள தொழிலிதானே.

தொழிலெல்லாமனுபவித்துக் குறியுஞ்சொன்னேஞ்
 சொற்பொருளையுட்குறித்துப் போதவேதான்
வழியெல்லாமிதுவழியாய்க் காணவேண்டும்
 மகாசித்தனென்றுபே ரெடுக்கவேணும்
அழியாதசிறுபிள்ளை வாலைதேவி
 யடங்காதகன்னியடா வாமிசாமி

தெளிவானமனத்தெளிவா மவளைப்போற்று
செகமெலாம்வளர்த்தவள்தான் சிவமதாமே. 16

சிவசத்தியானசிவ மேகரூபஞ்
சேருமிடைப்பிங்கலையாஞ் சோடசமும்பாரு
நவசத்திசித்தர்பதி னெட்டுமாகி
நடுவிருந்தாள்சத்தியமாய் நாமேகண்டோம்
கவசத்தில்மூன்று பேருமொன்றாய்க்
காலொன்றாய்க்கால்தலையாய்க்கண்டோங்கண்டோ
ம், தவசத்திதீட்சைபெற வம்வாவென்று
தர்ப்பனமாயறிந்துணர்ந்தோர்க் கமிர்தமாமே. 17

அமிர்தரசவல்லிதிரு ஞானதேவி
அதிரூபஅகளங்கி அபிராமிவாமி
அமிர்தகுணசகலகலைக் கியானதேவி
அடங்காதமாயையிந்திர சாலிமோடி
குமுர்தவொளிநாதாந்த நாதரூபி
குமரிதிருசூலிசிறு வாலைதேவி
சமரசமாயவளையல்லோ பூசைபண்ணி
தானிருக்கமாய்கையெல்லாந் தவிர்ந்துபோமே.18

போமென்றுநாமுறைத்தோ மவனைநாமும்
போக்கருந்துகண்டுகொண்டோம் பின்னுங்கேளு
நாமென்றுமவையென்று மில்லைபாரு

நாதாந்தசித்தனென்று பேருங்கொண்டு
ஓமென்றுவெளியேறு வந்தசூட்சம்
ஒருவருக்குந்தெரியாது வுனக்கேசொன்னேம்
ஆமென்றுகண்டுகொண்டா லவனேசித்தன்
ஆரறியப்போரார்க ளறிவாய்த்தானே. 19

தானெனவேஞானத்தின் கிரியைசொல்வோந்
தவிராதுபத்தியாய்ச் சொல்லக்கேளு
பாவெனவேபெண்வடிவா மவட்குநாம
மகத்தானகேசரியாளெனக்குச் சொன்னாள்
தானெனவேஅறிவதனாற் கண்டுகொண்டு
தெளிவாயுனக்குமிது சொல்லக்கேளு
தேனெனவேசோதிப்பால் சிரங்கைதாங்கி
சிவசத்திமூலமது யிரண்டுஞ்சேரே. 20

சேர்த்தபின்புபூரமொடு புனுகுசேரு
சேர்முக்கால்விராகனிடை கண்டுசேரு
சேர்த்தபின்புகமலப்பா ளாக்கிற்பாதி
திடமானகாந்தமது விராகன்சேரு
சேர்த்தபின்புஅரிதாரம் லிங்கமிரண்டுஞ்
சேருமறைவிராகனிடை சேர்த்துக்கொண்டு
சேர்த்தபின்புநவமூல மிதுவேயாச்சு
செகசோதியதுவாச்சி சொல்லக்கேளே. 21

சொல்லக்கேள் நவமூலம்ஏகமூலம்
சேரவொன்றுவாராது கண்டுசோதி
சொல்லக்கேள்கடைசரக்கு வைந்துமொன்றுஞ்
சோதனையாய்க்கல்வத்தி லாட்டிக்கொண்டு
சொல்லக்கேளேரண்டத் தெண்ணைவிட்டு
சோதிதிருவிளக்கேற்றி மையைச்செய்து
சொல்லக்கேளாரவைத்து செம்புதன்னில்
சோதித்துபார்ப்பவர்க்குச் சொல்லக்கேளே. 22

கேளடாதாம்பரம் பதிணுருக்குட்
கெட்டியாயிந்தமையைக் காலேயீய
கேளடாமாதத்தேழு தப்பாதையா
கேசரியாள்சொன்னமொழி நாமேசொன்னேம்
கேளடாதாம்பரம் பதிணுருக்குட்
கிருபையாயிந்தமையி லரையேயீய
கேளடாபதிணுரு மாத்தேகாணும்
கெட்டியடாயட்டியில்லை பாருபாரே. 23

பாரடாதாம்பரம் பதிணுருக்குட்
பகருகிறேன்மையதிலே முக்காலீயம்
பாரடாமுப்பத் திரண்டுமாத்து
பரன்சோதியஷயறே தப்பாதையா
பாரடாதாம்பரம் பதிணுருக்குட்

பழமைமொழிமையொன்று யீந்தாயானல்
பாரடாபரஞ்சோதி யிதுவேயாகும்
பகரிரனுமாத்தில்லைத் தங்கந்தானே. 24

தங்கத்தால்பரப்பிரம சோதித்தாயை
தானிழுத்துப்பாடுதற்கு தாவுமுண்டோ
மங்கத்தாய்காலாக்க வானதிந்த
னம்மாலேபேருபெற்றோ ரனந்தங்கோடி
லிங்கத்தாய்பஞ்சலிங்கம் வொன்றாய்க்கண்டு
நிரைநேராய்க்கண்டத்தாய் பொதிகையானன்
தங்கத்தாளாதியிலே நம்மைக்கூவி
தான்பொதிகையாமெனவே யிருத்தினளே. 25

இருத்தினளென்னசொல்லப் போரேனையா
ஏகாந்தமானதிரு விளையாட்டாட
வருத்தினள் தனதனென்று மயங்கிவிட்டேன்
மனதுகந்துபெண்மயக்கந் தவிழ்ந்தாள்பின்னும்
திருத்தினள்பொதிகைமுனி யென்றேநாமஞ்
செப்பியேதிருவாயா லழைத்தாள்கேளு
கருத்தினல்மவுனம்வைத்து பார்த்தோர்க்கெல்லாங்
கைகண்டமையெனவே கருதினேனே. 26

கருதினேன்கைகண்ட மையாவென்று
கரைக்கண்டதில்லை யென்றுமையின்போக்கு

கருதினோனுருகியிந்த மையினாலே
காலனையும்வெல்லுதற்குக் கருத்தானூன்றி
கருதினோன்சொன்ன கருவைத்தானுங்
கண்டுணர்ந்துகொண்டவர்க ளண்டமெச்ச
கருதினேனேமனில்லை யென்றேசொல்லி
கறைகண்டாரறியவுமே கருதினேனே. 27

கருக்குருவாய்நின்றகரு வெடுத்துச்சொன்னேங்
கருவறியார்பிரபஞ்சக் கழுதைமாண்பர்
திருக்கருத்துத்திருத்தானே பற்றிக்கொள்ள
செகத்திலேயறியாம லலைந்துகெட்டார்
அருக்கலைந்துமூலமுமாய்க் கட்டியொன்று
யதின்சாற்றில்நிலதமிட வசியமாகும்
உருக்குமிதுமனுவெடுத்தார் மனத்தையெல்லாம்
உச்சிதமாயரன்முடியிற் றரித்ததாமே. 28

ஆமென்றவசியமது வுறுதிமெத்த
வவரவர்கள்சொன்னார்கள் வசியப்போக்கு
நாமென்றவசியமிது நாமேசொன்னேம்
நாதாக்களறிவார்கள் மற்றோர்காணார்
ஓமென்றவசியத்தாற் றிலர்தம்போட்டு
வுலகத்திலுள்ளோர்க ளுன்னைக்கண்டால்

ஓமென்றுதன்மையுடன் மயல்விளைந்து
வுன்பேச்சைத்தட்டார்களுலகத்தோரே. 29
உலகமதிலரசனொடு மனுக்களெல்லாம்
உன்னுடையசீஷரைப்போல் வணங்கிக்கொள்வர்
திலதமதுசிவனறிய வண்மைசொன்னோம்
தீர்க்கமதுதிடமெத்த உறுதிமெத்த
கலவிவிழிமாதரதி மோகஞ்செய்வார்
கடிதடத்தின்படுகுழியி லீயவேண்டாம்
தலமுழுதுமுனதுகை வசமேயாகுந்
தவராதுசத்தியமே சொன்னோம்பாரே. 30
சொன்னமொழியெவ்வளவுந் தப்போயில்லை
சோதித்தோமிதுவுறுதி யின்னங்கேளு
சொன்னமறைவேதனொடு மாலும்மெச்ச
சொல்லுகிறோமறைப்பு வித்தையையாகேளு
வின்னமதுமொருநாளு மில்லைசொன்னோ
மெய்யானமையினுட வுண்மைகேளு
சொன்னமொழிகுளிகரியி னுதிரத்தாலே
சூட்சமாயரைத்துநீ திலர்தம்போடே. 31
போடுநீமறையோனை மவுனம்வைத்து
போடயிலேதியானமதை சொல்லக்கேளு
நாடுநீங்கன்று யிறுத்திப்போடு

நாதாந்தபேரொளியின் மையைப்பாரு
நாடுநகர்பூமியிலே சீவசெந்து
நாதாக்களானாலும் காணமாட்டார்
தேடுபொருளிதற்குநிக ரொவ்வாதென்று
செப்பினேனென்னைப்பார்த் துன்னைத்தானே.

உன்னைத்தான்காணரிது வுலகத்தோர்கள்
ஒருவருக்குந்தெரியாது வுண்மைசொன்னே
மென்னைத்தான்கண்டாலு முன்னைக்காணு
ரென்பேச்சுபொய்யாது நிசமேசொன்னேந்
தன்னைத்தானறிந்தசில யோகத்தார்கள்
தபோதனர்கள்பெரியோர்கள் தானேமெச்ச
வுன்னைத்தான்மறைத்தகரு வித்தைதன்னை
வுற்றுப்பார்த்தறிவாலே னூலைப்பாரே. 33

பாரென்று நூல்பார்த்துக் கொண்டாயானால்
பரமர்திருஅடிமுடியைக் கண்டுகொள்வாய்
பாரென்றசொல்லரிது தீட்சைகண்டு
பகருகின்றகருவறிந்து நம்மைக்கண்டு
பாரென்றபொதிகைதனி லறிவாலேறி
பலம்பெற்றுக்கதிபெறவு மிருக்கச்சொன்னோம்
ஆரென்றுபொதிகைதனை யறியப்போறு
ரையனேநீயறிவா லறிவாற்றுனே. 34

அறிவாய்நீமரப்புவித்தை யதனைச்சொன்னே
மஞ்சனத்தின்கருச் சொல்வோமையாகேளு
அறிவாய்நீயஞ்சனமா யிருந்தமைதான்
ஆருக்குந்தோற்றாது அருமையாகும்
அறிவாய்நீயஞ்சனமா யிருந்தோநாமும்
அகத்திலேகண்டறிவாய்க் கண்டோம்பாரு
அறிவாய்நீமைபோக்கு வநேகமுண்டு
ஆச்சரியமிந்தமையை யறிந்துபாரே. 35

அறிந்துபார்மைதனை சிமிளில்வைத்து
அனுமதிஅனுமாரை யறிவாற்கண்டு
அறிந்துபாரஞ்சன தேவிமைந்தன்
ஆகமத்தின்அடிபணிந்து மவுனம்வைத்து
அறிந்துபாருள்ளங்கை யடக்கமாக
ஆதிமுதல்பாதாள வரையும்பாரு
அறிந்துபார்பூமியின்கண் ணுள்ளதெல்லாம்
ஆத்தாள்தன்கிருபைகொண் டறிந்துபாரே. 36

பாதாளமுதலான மேற்போக்கெல்லாம்
பார்க்கையிலேவெட்டவெளி யாகத்தோணும்
வேதாளபூதமொடு பிசாசுக்கெல்லாம்
வேறுமொருமந்திரங்கள் தியானம்வேண்டாம்
தாதாவேயென்றுசொல்லித் தனங்கள்வைத்த

தலமதிலேபோயிருந்து தனக்குத்தானே
தாதாவேயெனக்கேட்கப் பொன்னைக்காத்த
தனங்கள்பூதகேதவதைக ளீயும்பாரே. 37

ஈவதுவேணுமென்று கேட்டதெல்லா
மிருதயத்திநினைநீயு மிக்கவேண்டாந்
தாயெனதுமைவசமா யிருந்துசூட்சந்
தன்னைப்பார்த்தென்னைப்பார்த் துனக்குச்சொன்
ளேம், பாயுமதுபுலிபோல பதுங்கிக்கொண்டு
பக்கத்தில்திரோதாதி நின்ருள்பாரு
ஆயிமதியிடையாகி யுன்னைக்கொல்ல
ஆகாகாயெமனுனு ளிவள்தான்பாரே. 38

அவளானதிழிவுமையா னருளினலே
ஆகாசம்பூமியிலே நடக்குஞ்சேதி
தவமானபெரியோர்கள் தன்மத்தோர்கள்
தான்செய்யுந்தொழில்களெல்லாம் தானேதோணு
ம், நவமானமையருமை மெத்தநன்று
நாதாந்தம்வேதாந்தம் பார்ப்போர்க்கெல்லாஞ்
சிவமாகிசிவகுருவாய் நின்றமையை
செப்பினேன்சற்புத்திர னுைல்பாரே. 39

பாரிந்தமையொன்றில் வசியம்வாதம்
பகருகின்றயஞ்சனமு மரப்புஞ்சொன்னேம்

ஆரிந்தமைபோக்கை யறியப்போறார்
அதீதமடாநாலுவித்தை யொன்றிற்சொன்னேன்
வாரிந்தபடிபார்த்து மையைப்பாரு
மகத்தானபொருளறிவாற் கண்டுகொள்ளு
பாரிந்தப்படியேநாம் பார்த்துக்கொண்டு
பாடினேஞ்சாஸ்திரமாய் னூலைத்தானே. 40

நூல்பார்த்துப்பின்கலையி லிடையைச்சேர்க்க
நூறுதிரஞ்சொன்னாலு மறியமாட்டார்
கால்பார்த்துமூலத்தி லிருத்தியூதி
கனிவானவமுர்தத்தைக் கொள்ளமாட்டார்
சேல்பார்த்துபிழைக்கவகை யறிவதெப்போ
சிவதீட்சையின்னமொரு சேதிகேளு
மால்பூத்தவுந்திதிரு வைந்தெழுத்தை
மவுனத்தால்தியானத்தைச் செய்யக்கேளே. 41

கேளடாசிவாலயங்க ளனேகமுண்டு
கேளதிலேவேறுவகை லிங்கமுண்டு
கேளடாதெய்வலிங்கக் கோவிற்சென்று
கிருபைதான்சோதியடா வாதினாளில்
கேளடாதசமிமுன் னன்றாய்ப்பார்த்து
கேளந்தவதினாலே மையைநீயுங்

கேளடாலிங்கமதா யுருவஞ்செய்து
கிருபையதின்பெருமைதனை சொல்லக்கேளே.

சொல்லக்கேள்மையான லிங்கந்தன்னை
சுயம்பாகமுளைத்தலிங்க மெதிரேவைத்து
சொல்லக்கேள்தியானித்து தீட்சைதன்னை
சுகமதுவேசீக்கிரமாய் முடிக்கவேணுஞ்
சொல்லக்கேளென்னுனை திரந்தான்பேச்சு
சொல்லையிலேகருவறிந்துக் கொண்டாயானல்
சொல்லக்கேளத்தொழினு முனக்கேசித்தி
சொரூபநிலையின்னமுமே யறியக்கேளே. 43

கேளந்தசொரூபசித்தி நீயேகாண்க
கிருபையதுகாமமாகி வுன்னுள்மேவி
கேளிந்தவுலகமெல்லா நாமேயாகிக்
கெதிமுத்திப்பெருமவர்க்கு நாமேயானேம்
கேளேதான்சொரூபநிலை யார்க்குந்தோணு
கேசரமாயோரறிவா யிருந்தேன்கேளு
கேளேதானூல்சொன்ன வறிவாற்கண்டு
கிரிகையென்றவித்ததனைக் கண்டுபாரே. 44

கண்டுபார்தியானமே வலுக்கச்சித்தி
கருவானபூமிமுத லறியச்சொன்னேன்

கண்டுபார்மவுனத்தா லார்தானென்ன
கண்டஅப்புலிங்கமது கண்ணிற்றோற்றுங்
கண்டுபார்சுயம்புலிங்க மெங்கேபோச்சு
கரியோனும்வேதவனு மறியானென்று
கண்டுபாரென்னாலே குருவாய்ச்சொல்லுங்
கருவெல்லாம்வெளிதோணக் காட்டுந்தானே. 45

தானென்றசொரூபமது தெய்வலிங்கந்
தனைப்பாராரொருவருக்குந் தோணாதையா
ஏனென்றாலிமைய தன்மேற் போக்குசெய்த
யேகாந்தத்தெய்வுதனில் வாய்வோடொக்க
தானென்றுசெய்தொழிலி லுருக்கம்வைத்து
தான்செய்ததொழிலதனால் கண்ணிற்காண
நானென்றவாண்பிள்ளை களுக்குநன்றாய்
நான்சொன்னகருவறிந்து கண்டுகொள்ளே. 46

கண்டுகொள்ள நீயுமொரு சித்தன்சித்தன்
கண்காணத்தெரியவென்று லுமையேயென்று
பண்டுதிருவுமையெழுத் துருதிகண்டு
பதினாறுவுருவேற மார்க்கமாகும்
அண்டர்பிரான்சடாதார னருளினாலே
ஆகாசமுட்டிநின்று வெளியேவீசும்

கண்டுபார்பிரபையொளி யென்னசொல்வேன்
காத்தமுடிபூரணத்தின் காட்சிபாரே. 47
பாருமொருபூரணமே சோதிசோதி
பரஞ்சுடராய்க்கதிர்கோடி கோடாகோடி
தேரில்வருசித்திரம்போல் நியமைனாட்டு
செப்பரிதுசதா கோடாகோடி
மேருவதுவணுவாகு மணுவும்வேறும்
மெய்யானமையறுமை சித்தர்க்கெல்லாஞ்
சீருறுதிகாலுறுதி வாசியேற்றந்
திறமடாசிவயோகி யாவர்பாரே. 48
சிவயோகிமவுனகுரு யோகியாகி
செகமெல்லாம்நீயாகி யருளேமீறி
தவயோகிநவமூல மொன்றுக்கண்டு
சதாகோடிவித்தைகளை க்ஷணத்திலாடி
பவயோகம்பசாசுகளை யடித்துத்தள்ளி
பரப்பிரமவெளியேறி யறிவிலேறி
தவயோகிசகலகலைக் கியானதேகி
சாயுச்சியபதமாகி யிருப்பாயென்னே. 49
இருப்பாய்நீயென்றுறுதி சொன்னோம்நாமும்
யென்மனமறிந்தவுண்மை யின்னூல்தன்னில்
விருப்பமாயுரைத்ததுவு மறிவாயென்று

விளம்பிறேமூலகத்தோ ரறியமாட்டார்
திருப்பணிகள்கல்லாலே கட்டிவைப்பார்
செம்புருக்கித்தங்கமதை சேர்ப்போமென்பார்
துருப்பிடித்துருவங்லே சேரத்தங்கத்
தொக்கியேவாய்வுக்கு முனக்கிந்தப்பேரே. 50

இந்தாபார்நாமுமத வானையேறி
ஏழையைப்போல் வந்தோம்பாருன்னைத்தேடி
முந்தாணுளிருபேருங் கலந்துபேசி
மூலமடாமூடரிதை யறியமாட்டார்
யெந்தனதுபொதிகைதனில் வந்தாயானல்
யெமனில்லைநமனில்லை யென்றுதானே
சந்தமாவாவதெப்போ வறிவதெப்போ
சண்டாளமனந்தவிர்ந்தா லென்னசெய்வாய். 51

என்றென்றுமறியாத பதியேவாய்க்கு
மோகாந்தத்தனிப்பொருளைக் கலந்துகொள்வாய்
மன்றென்னும்நீரிரங்கி கால்வாயென்றும்
வானென்றதைந்துமொன்றாய் கலந்துகட்டி
நன்றென்றுஞ்செடமெடுத்தால் நெஞ்சிலேந்தே
நாட்டியொன்றாய்மூலத்தில் நின்றாயானல்
வென்றென்றதவ்விடத்தில் நாமேவந்து
மேவியேயுனைதூக்கிக் கொள்வோம்பாரே. 52

கொள்ளவென்றுலிந்நூல்தா னன்பத்திறுன்குங்
குறியறியசொன்ஞலுங் காணமாட்டாய்
தள்ளென்றுமாய்கையெல்லா மறிந்துத்தள்ளி
தன்னைப்பார்த்தறிவாலே தன்னைக்கண்டு
யென்னென்றதன்வசமா யிருந்தசூட்சம்
யென்வசமாய்க்கலந்தேறி யறிவாய்ப்பாரே. 53

அறிவால்நீவன்பத்தி நான்கேதீட்சை
ஆதிமுதலந்தம்வரை மூலஞ்சொன்னேங்
குறியானதிதுகுறியின் கருவைக்கண்டு
குருபாதமுட்கொள்ளக் குறியுஞ்சொன்னேம்
அறிவாய்நீயென்றுனக்கு வுறுதிசொல்லி
ஆணையிட்டுகொடுத்தகுறி யறியநீயும்
அறிவாய்நீயென்றுனக்கு வருமையாக
அன்பாகயிருந்தனடா யன்பத்திறுன்கே. 54

அகஸ்தியர் கேசரிகுருநூல் - 54

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐம்பத்திமூன்ருவது,

அகஸ்திய மகாமுனிவர்

பச்சைவெட்டு

வைத்தியசூத்திரம் - 16.

அரிதாரம்பிருதிவி யாகிநிற்கும்
 மானதொருசவ்வீரம் அப்பதாகும்
பெரிதானகெவுரியோ தேயுவாகும்
 பின்னுமெனும்வெள்ளையோ வாயுவாகும்
அரிதானலிங்கலிமா ஆகாசமாகும்
 அருந்தியபச்சையுடன் மாட்டலாகும்
தெரியாதவயித்தியரே யிந்நூலப்பா
 சித்தரப்பாசொன்னவித்தை செகத்திற்பாரே. 1

செகத்திலுள்ளவயித்தியரே செப்பக்கேளு
 திறமானஅரிதாரக் கட்டிவாங்கி
சுகத்திலேசுண்ணாம்புக் குள்ளேவைத்து
 சுத்தியதைசெய்துநீ ரெடுத்துக்கொண்டு
யிகத்திலேமணிதருக்கு ஈளைகாசம்
 ஏலிகடிகள்விஷபாக பித்தபாண்டு

மகத்தானகுளிர்காச்சல் மகோதரங்கள்
வருகின்றநோய்களுக்கு வையேசுக்கில். 2

சுக்கானசவ்வீரக் கட்டிவாங்கிச்
சுவாசமொடுகாசம் நீராமைவீக்கம்
மெக்கானகுன்மமெட்டு மிளைப்புஈளை,
மிக்கதொருநெஞ்சடைப்பு மிளகிற்கொள்ள
தொக்காகுஞ்சூலையொடு வயிற்றிற்கெண்டை
தோலாகசீரிழிவு நீராமைக்குஞ்
சிக்காதகொடிவேலி பேரறத்தை
திறமாகஅரையுண்டை செய்யப்போமே. 3

போமடாகெவுரியுட போக்கைச்சொல்வேன்
புகழானதோஷமொடு சுரத்துக்கெல்லாம்
தாமடாசுக்கனிட தண்ணீர்தன்னில்
தரியாதே நெல்கிடைக்குமேலதாக
நாமடாசொரிகிரந்தி அரிகிரந்திமேகம்
நயமாகவயிற்றுவலி சூலைக்கெல்லாம்
ஓமடாகருப்புகட்டி தன்னிலேதா
னொருகோடிநோய்களெல்லா மொழியும்பாரே. 4

பாரென்னவெள்ளை பாஷாணந்தன்னைப்
பாங்காகயெருக்கம்பால் விட்டுஆட்டி
சீரென்றசிறுபயறு அளவுவுண்டை

திறமானபெருவயறு வுள்மாந்தைக்கும்
சாரென்றவேப்பிலைச்சா றுள்மாந்தைக்கும்
க்ஷணத்திலேகொம்மட்டிக்குத் தீருமென்றே
வேறென்றசோகைக்கு மிப்படியேசெய்ய
வெகுகாலநோய்களெல்லா மிரண்டுபோமே. 5

போகுமே லிங்கமடா சன்னிதோஷம் பொருக்காத நெஞ்சடைப்பு மூர்ச்சைதீரும், தாகுமே வயிற்றெறிவு வயிற்றிலூதல் தனியிஞ்சிச் சாற்றிலிடத் தவிர்ந்து போகும், காகுமே சூலையொடு பித்தங்காமாலை விஷபாகம் வலிகுன்மஞ் சோகையெல்லாம், பாகமாம் கொடிவேலிச் சாற்றிற்செய்யப் பறக்குமடா யின்னம்வெகு ரோகந்தானே. 6

காந்தநாலு கெந்திசமன் கறுப்பஞ்சாறும் விட்டரைத்து வோர்சட்டி தனிற்றடவி, ஓடுமூடி யொரு சட்டி பாந்தமாகச் செய்துபாங் காய்ப்புடத்திற் போட்டெடுத்து, வாந்தமாகப் பின்னுமொரு வளமாய்முன் போற் வகையாக சீலைமண் செய்துகொள்ளே. 7

செய்முறை சொல்லுகிறேன் சீருய்ச்செந்தூரத் துடனே, வையகந்தி சரிசமனுய் வாகாகப்பிளச் சாற்றுலரைத்து, உய்யும்படிமுன் போலேவொரு சட்டிலிட்டு

மேல்மூடி, செய்யுமே சீலைசெய்து திறமாய்ப்புடமே போட்டுவெடே.

போட்டு வெடுத்துச் செந்தூரம் போகும்வெள்ளை நீரடைப்பு, நீட்டுசோகை பாண்டுடனே நீராமபலுமே வயிற்றுவலி, மூட்டுந்தேனில் திரிகடுகு மூன்றுநாள் தான் கொடுத்திடவே, வாட்டமடாதே கொன்றுவிடும் வரகாஞ்சித்தர் செந்தூரத்தே. 9

சாதிலிங்கம் நாலுடனே சமனுவாரைக் கரிநாலு, ஆதி சிலையை யாராக்கி யதிலேயுருட்டி யாறுதரம், தினு சுஞ்சு மண்டைக்குத்து தொடர்ந்தேயேகு மேகமெல் லாம், வாதமாய்க்கூட்டி யோடிவிடும் மகத்தான சித்தர் புகையிதுவே. 10

எருக்கன்வே ரிளகவைத்து யியல்பாய்லிங்க மதிற் சேர்த்து, புரட்டிரவியிற் காய்ந்தெடுத்துப் பொருத்தச் சுக்கான் றனிற்கூட்ட, வருத்தமான பிளவைகளும் வயற்றிற்கட்டி தலைகுத்து, யிருக்கத்துடனே யோடி விடு மியல்பாஞ்சித்தர் புகையிதுவே. 11

ஆவாரம்கரி யேநாலு வதிலுடன்லிங்க மூன்று, தேடரும் வீரமொன்று தேவாதிலிங்கம் ரெண்டு, தா வாதை யரைத்துச்சுக்கான் தன்னிலே வைத்துக்

கொள்ளு, போவதே சூலையுண்கள் பொய்யல்ல சித்தர்
சொன்னார். 12

ஆலத்திற்பூரம்நாலு வதினுடன்காந்தமூன்று (று
கோலப்பாஷாணம்ரெண்டு கொடியதோர்கெவுரியொன்
சாலவேகொடிவேலிவேர் சவ்வீரமரை தான்கூட்டி
மூலமாய்மூன்றுவில்லை முடித்துக்காயவைத்திடுமே. 13

எடுத்துவில்லை முதலாக யியல்பாம் புளியஞ் சிராயிற் கட்டு, வடிப்பமாக புல்மூடியில் வைத்தேதீயிற் புடம் போடு, அரைத்தவில்லை பொடித்தெடுத்து ஆசனத் திற் பிடித்திடவே, தோடுத்தபுண்கள் புரைவிலகும் சொன்னார்சித்தர் புகையிதுவே. 14

தாரமும்ரசமுங்கெந்தி சரியதாய்த்தூளேசெய்து
பாரமாஞ்சீலைதன்னிற் பற்றியேதிரித்துருட்டி(வார்த்து
வீரமாம்விளக்கிற்போட்டு வேப்பெண்ணெய்தன்னை
கோரமாந்திரிகைவைத்து கொம்மகைமுகத்திலேற்றே.

ஏற்றிடிற்சன்னிதீரு மேலும்படிகுட்டந்தீரும்
பார்த்திடிற்பரங்கிதீரும் பரவைசூனியமும்தீரும்
கோத்திடிற்கண்டமாலை குன்மங்கள்முதலாய்தீரும்
ஏற்றிடில்வியாதிக்கெல்லா மேழுநாள்பத்தியமாமே. 16

அகஸ்தியர் வயித்திய சூத்திரம்-16

முற்றிற்று.

உ

கணபதி துணை.

ஐம்பத்திநான்காவது,

காசிபமுனிவர்

கரியநாதக் குழம்பு-10.

சுருதிதனில்சொன்னபடிக் கரியநாத
சுத்தமுள்ளகுழம்பதனை புகலக்கேளு
நிருதியைப்போல்பிரகாச மகாரோகயை
நீக்கிவிடுங்கண்டறிந்து செய்யநன்று
கருதியதோர்காரீய ரசமும்நேராய்
கணக்குடனேவகைக்குவொரு பலமதாக
பொருதிவிடவுருக்கிநன்றாய் சேர்த்துக்கொண்டு
பின்பதனில்பெருங்காயங் கூடச்சேரே. 1

பெருங்காயம்நாபியொடு காந்தங்கெந்தி
பேசரியநெரிவிஷமுங் கரியசீரகமுஞ்சுக்கு
திருத்தவேதான்திப்பிலியும் வாய்விளங்கம்
தென்புடனேவகைக்குவொரு பலமதாக
விருந்ததுபோல்சுத்திசெய்து வொக்கக்கூட்டி
வியல்புடனேநேர்வாள மிடையேசேர்த்து
வருந்தவேவுத்தமத தாளிசாற்றால்
வயணமுடனொருசாம மரைப்பீர்தானே. 2

அரைத்தபின்புதேங்காய்ப்பால் விட்டுநன்றாய்
அதிவிதமாயொருசாம மரைத்தபின்னர்
உரைத்தபின்புதேங்காயின் வோட்டைசுட்டு
வுயர்பெறவேமுன்பாலி லுரைத்துமைபோல்
விரைத்துவிடக்கலக்கமற்றும் விட்டுவாட்டு
வினவுடனேயெடுத்துநல்ல சிமிளில்வைத்து
கரைத்துவிடாதபடிக்குப் பார்த்துமேலாய்
கண்ணுள்ளேபதனமிடு பகர்வதாமே. 3

பகர்வுடனேசன்னிபதி மூன்றுக்குந்தான்
பாச்சிவிடுபயரளவு யிஞ்சிச்சாற்றில்
சுகம்பெறவேகுமறகண்ட வலிக்கித்தானும்
சுகுணமுடன்தேனதிலே நீட்டிப்பாரு
தகமையுடன்சுரங்கள்முத லானத்திற்கு
தப்பாமல்சுக்கு கியாழத்திலீவாய்
அகமகிழநாய்கடிக்கி விஷத்துக்கெல்லாம்
அன்பானசம்பழத்தின் சாற்றில்தானே. 4

சாற்றிவிடுகுன்றியிடை கண்ணிலிட்டு
சர்வபரம்பரையருளால் நீங்கிப்போகும்
போற்றியேகுளிர்சுரத்துக் கப்பால்நீயும்
பிரபலிக்கக்கொடுவேலிக் கியாழத்திலீவாய்
மாற்றிவிடுமனந்தநோ யணுகிடாமல்

மறவாமலனுபானந் தெரிந்துசெய்வாய்
யேற்றியேசொல்தவிராம லிணங்கினோர்க்கு
யெப்போதுங்குறைகளணு காதுபாரே. 5

இதற்கு பத்தியம்.

பாரப்பாமிளகுநீர் சாதமூட்டு
பிரியமுடன்வுப்புதனை வறுத்துக்கூட்டு
போதுமாகோதுமையின் கஞ்சியூட்டு
பெலக்கவேதான்வென்னீரைக் குடிக்கச்சொல்லு
நேரப்பாகடுகுநல் லெண்ணெயாகா
நிதானித்துப்பண்டிதத்தை நேர்ந்துபாரு
ஆரப்பாஅறிவார்க ளாசான்சொல்ல
அகமகிழக்கற்றுரைத்தால் பெரியோர்தானே. 6

சரக்கு சுத்தி.

நேர்வாளம் எருமைச்சாணியில் நெரிவிடம் சாணத்தில் சம்பழச்சாத்தி லூரப்போடவும். காந்தத்தை கொல்லனுலையில் காய்ச்சி கோமியத்தில் துவைக்கவும். கெந்தியைச் சட்டியிலிட்டு வெள்ளாட்டுக்கொழுப்பிட்டு வுருக்கி பசுவின் பாலில் வூற்றவும். இரதத்தைக் கற்கண்டிட்டு வரைக்கவும். காரீயத்தைக் கற்றாழைமடலின் ரசத்தி லுருக்கிச் சாய்க்கவும். இப்படியாகச் செய்த சரக்கைக் கூட்டிக்கொள்ளவும். 7

ஜன்னி 13-க்குக் கலிக்கம். வேறுவிருத்தம்.

பெரியதோர் கலிக்கமெல்லாம் பேர்பெறச்சொல்லி ஞர்கள், சிறியநற் கலிக்கமொன்று செப்புவேன் கேளு கேளு, அரியவே நேர்வாளத்தை அடவுடன் சுத்தி செய்து, குறியவோர் பருப்பில்கொஞ்சங் குணமுட னுரைப்பீர்தாமே.

உரைத்திடுசம் பழத்தின்சாற்றி லூற்றகனமாறியே தான், வுரைவுடன் சன்னிக்கேதான் வியல்புடன் கண் ணில்தீட்டு, மறைத்திடுங் குணத்தைமாற்றும் மலரிடுஞ் சீறல்போகும், திறையெலாம் அகலுமப்பா சீர்பெற அறிவீர்தாமே. 8

8-கம்மார் வெற்றிலைச் சாற்றிலு முறைக்கலாம்.

ஆக்கிருணம்.

அறிவுடன் விறட்டிதன்னி லடவுட னெருக்கம்பாலே, குறியவே வூட்டிவூட்டிக் குலாவவோ ரவியிற்போடு, பிரியமாய் வைத்துநாள்தான் பெறமுற யூட்டியேதான், நெறியுடல் புடத்தைப்போட்டு நிலைக்கவே யெரிப்பீர் தானே. 9

எடுத்துநற் பற்பந்தன்னை யிணக்கமாய் சிமிழில் வைத்து, அடுத்திடுஞ் சன்னிதோஷம் அதிபித்த தலை நோயிற்கும், தொடுத்திடு ரேணுவாகத் துரிதமாய் நாசிக்கேற்ற, சடுத்தம தானநோயைச் சாதித்து விறட் டுந்தானே. 10

கரியநாதக் குழம்பு - 10 முற்றிற்று.

கடவுள் துணை.

ஐம்பத்தைந்தாவது,

யூகிமகாமுனிவர் அருளிச்செய்த

சிலோதிரி மாத்திரை-3.

செப்புதற்குலகுவாகச் சொல்லக்கேளு
சேர்ந்ததொருவாளமது பலமொன்று
ஒப்புதற்குரசகற்பூரம் பலங்காலப்பா
வோதரியஅழிஞ்சிபட்டை பலங்காலப்பா
தப்பாமல்கல்வத்தி லிட்டுக்கொண்டு
தயவாகமுலைப்பாலா லொருசாமமாட்டு
மெப்புடவேவகையானச் சாறதனலப்பா
மேன்மையொருசாமமரைத் தெடுப்பீர்தாமே. 1

அரைத்துப்பதமாக்கியேதான் யெடுத்துக்கொண்டு
அடவுடனேதுவரையதின் நிறையதாக
குறைத்துமேவிடாமலே வுண்டைசெய்து
குணமுடனேபாணியினி லடைத்துவைத்து
மறைத்துமிகசெய்கின்ற மாத்திரையப்பா
மாராமல்காறுதே கொடுப்பீராகில்
விரைத்துப்பயிர்தழைத்ததுபோல் தேகமாகி
வியாதியதுநீங்கியேதான் வின்பமாமே. 2

இதற்கு பத்தியம்.

இன்பமுள்ளபத்தியுந்தான் மிளகுநீர்சாதம்
இணையுடனேசேர்த்துவரக்குணமதாகும்
தென்புடனேதிரம்நீங்கிக் குணமதாகும்
தெய்வத்தால்சீரதுவே சிறக்குமப்பா
முன்பாகவையார்பதந் தோத்தரித்து
முயற்சியுடனவிழ்தமது கொடுக்கவேணும்
பண்புபெற்றுநியாயவழி சாதியேதான்
பாத்தியமுறுங்கைகூட்டும் பரிவாய்த்தானே. 3

இதற்கு ஸ்நானம் ஓமந்தேய்த்து சீயக்கா யிட்டு வெந்நீரில் தலைமுழுகவும்.

சிலோதிரி மாத்திரை-3

முற்றிற்று.

சிவமயம்.

ஐம்பத்திநான்காவது,

அகஸ்தியமகாமுனிவர்

சுத்தஞானம்-9.

பன்னிரண்டுகாலான புரவியப்பா
  பாங்காகமூலவெளி தன்னில்நிற்கும்
நன்னயமாய்வாசிதனி லேறிக்கொண்டு
  நாட்டியந்தநடுவீடு தன்னிற்சென்றால்
முன்னின்றமுப்பாழுக் கப்பாலேறி
  முகப்புண்டுமுச்சந்தி வந்துகூடும்
சின்னஞ்சிறுவாசல்கடந் தப்பாற்சென்றால்
  சிதம்பரமுங்கண்டுமுத்தி சித்தியாமே. 1

பன்னிரண்டுபேரான ரூத்திரற்கு
  பதியாகநின்றபொருள் பகரக்கேளு
விதிமுறையாய்ச்சுழிநடுவே முளைத்தெழுந்து
  விளங்கிநின்றஓங்கார ஸ்தம்பத்துச்சி
அதிவிதங்காணுகாயம் ஆதாரபீடம்
  அமர்ந்தபராபரத்திநிலை யறியவேண்டி
நிதமானதிருச்சிற்றம் பலத்தைக்கண்டு
  நெரிசிக்கஅவர்க்குமுத்தி சித்தியாமே. 2

பத்துதிக்கும்பதினாறு கோணந்தானும்
பாங்கானபலகோடி யண்டமெல்லாம்
சுத்தநின்றனுங்கருவிக் காதியான
சொல்லறியதத்துவத்தின் தொகுதிமுத்தி
அத்திமுதலெறும்புகடை தானாய்நின்ற
அதிகபொருளிதனையறிந் துண்பாராகில்
சித்தமதில்திருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசிக்கவவர்க்குமுத்தி சித்தியாமே. 3

ஒன்பதெனும்வாசலது உலகந்தன்னில்
உணர்வார்கள்எல்லோரும் வந்துகாண்பார்
அன்புடையஒருவாசல் ஒருவர்காண்பார்
அடுத்தடுத்தவாசல்கடந் தம்பாற்றாண்டி
வன்புடையமயிர்ப்பால மீதிலேறி
மனதுதுணிந்துருகிநின்ற மகிழ்வினோடு
தென்பாகதிருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசிக்கஅவர்க்குமுத்தி சித்தியாமே. 4

எட்டெழுத்தாயிரண்டெழுத்தா யேகமாகி
யியங்கிநிற்கும்பெருந்[illegible]னை யெவருங்காணார்
கெட்டெழுத்தின்வட்டெழுத்தின் மேலேநிற்கும்
நிலையறிந்துவுரைத்தி[illegible]வார் குருவுமாகும்

விட்டிடமுந்தொட்டிடமும் அறிந்தாயானால்
விளங்கிநின்றஅகாரமுதல் உகாரங்காணுந்
திட்டமதில்திருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசிக்கஅவர்க்குமுத்தி சித்தியாமே. 5

ஏழானவுபாதியென்று வெளிதேயல்ல
யிதுகடக்கும்வாறதுதா னியம்பக்கேளு
வேளானமன்மதனை காலால்நீக்கி
விளங்கிநின்றங்கிதனை மேலேயேற்று
கோளானகருவியெல்லாம் வீரிட்டோடும்
கூறுவதுமேலான குறிப்புங்காணும்
தேளானபசியடங்க அமிர்தமுண்டு
திருநடனங்காணமுத்தி சித்தியாமே. 6

ஆரானகோட்டைக்குள் மூலவட்டம்
அதினாலுகொத்தளமே சுவாதிட்டானம்
கூரானகோணமது கொத்தலிங்கன்
கூறியபிறைமோட்டை கொத்தளமேபத்து
வீரானவனாகதமே கொத்தளமீராறு
விசுத்தியறுகோணங் கொத்தளமீரெட்டு
தோராதவட்டமிரு கொத்தளந்தான்மேலே
சிதம்பரமுங்காணமுத்தி சித்தியாமே. 7

ஐந்தானவெழுத்ததுதான் விபரங்கேளு
அப்பனேபிரிதிவுக்கு நங்கென்றோர்சொல்
சிந்தையதாய்அப்புவுக்கு மங்கென்றோர்சொல்
சாதகமாய்த்தேயுவிலே சிங்கென்றோர்சொல்
நிந்தையாய்வாய்வுக்கு வங்கென்றோர்சொல்
விளங்குகின்றஆகாயம் யங்கென்றோர்சொல்
சிந்தையில்வகைதெளிந்து சொன்னையானல்
சிதம்பரமுங்காணமுத்தி சித்தியாமே. 8

நாலானவேதத்தின் முடிவில்நிற்கும்
நாதாந்தப்பேரொளியைக் காணவேண்டி
மூலதளம்மூளைத்தெழுந்த வகாரமேலே
முட்டிநின்றகம்பத்தின் முடிவிலேறி
காலனைமறுப்பதற்கு மேலேஞக்கு
காரணமும்பூரணமுங் கலந்துதோணுஞ்
சீலமதாய்த்திருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசித்தவர்க்குமுத்தி சித்தியாமே. 9

அகஸ்தியர் சுத்தஞானம்-9

முற்றிற்று.

சிவமயம்.

ஐம்பத்தைந்தாவது,

அகஸ்தியமகாமுனிவர்

ஞானம் - 13.

கர்ப்பமென்னவெகுதூரம் போகவேண்டாம்
கனமலையில்குவடுகளி லலையவேண்டாம்
கர்ப்பமென்னநாகமது வொருதலையில்நின்று
சாகாதகால்கண்டு முனையிலேறி
நிர்ப்பமென்றுமனமுறுத்து மனதில்நின்று
நிஜமானகருநெல்லி வெண்சாறைகாணும்
சொற்பமென்றுவிட்டுவிட்டா லலைந்துபோவாய்
துரியமென்றபராபரத்திற் சென்றுகூடே. 1

கூடப்பாதுரியமென்ற வாலைவீடு
கூறியநாதாக்கள் மயேஸ்வரமேயென்பார்
நாடப்பாஅவள்தனையே பூசைபண்ணு
நந்திசொல்லுசிங்காரந் தோணுந்தோணும்
மூடப்பாசிகாரவரை யெல்லாந்தோணும்
ஊமையென்றஅமிர்தவெள்ளம் வூறலாகும்
தேடப்பாமிதுதேடு காரியமாகுஞ்
செகத்திலேயிதுவல்லோ சித்தியாதே. 2

ஆமென்றபூரணந்தான் சுழிமுனையிற்பாரு
அழகானவிந்துநில் சந்திரனிற்பாரு
ஓமென்றரீங்காரம் புருவமையம்பாரு
வுத்தமனேவில்லென்ற வீட்டிற்காணும்
வாமென்றஅவள்பாதம் பூசைபண்ணு
மற்றொன்றுபூசையல்ல மக்காள்சொன்னேன்
பானென்றபரமனல்லோ முதலெழுத்தாம்
பாடினேன்வேதாந்தம் பாடினேனே. 3

பாடுகிறபொருளெல்லாம் பதிலேயாகும்
பதியில்நிற்குமக்ஷரந்தான் அகாரமாகும்
நாடுகின்றபரமனது ஓங்காரமாகும்
நலம்பெரியபசுதானே உகாரமாகும்
நீடுகின்றசுழிமுனையே தாரையாகும்
நின்றதொருயிடகலையே நாதவிந்தாம்
மூடுகின்றஓங்கார வித்தையாகும்
வெளியானஅரியெழுத்தை வூணிப்பாரே. 4

ஊணியதோர்ஓங்காரம் மேலுமுண்டு
உத்தமனேகீழுண்டு வூணிப்பாரு
ஆணியம்நடுநாடி நடுவேமூட்டும்
ஆச்சரியமெழுத்தெல்லாம் அடங்கிநிற்கும்

யேணியாயிருக்குமடா அஞ்சவீடு
யேகாந்தமாகி யெழுத்தைப்பாரு
தோணிபோற்காணுமடா அந்தவீடு
சொல்லாதேயொருவருக்குந் துரந்திட்டேனே. 5

துறந்திட்டேன்மேல்மூலங் கீழ்மூலம்பாரு
துயரமாய்நடுநிலையை யூணிப்பாரு
அரைந்திட்டேன்நடுமூலம் கடுநாடிப்பார்
அப்பவல்லோவரைதாக்கும் தாரைகாணும்
உரைந்திட்டஐவருந்தான் நடனங்காணும்
ஒளிவெளியும்சிலம்பொலியு மொன்றாய்க்காணு
னிறைந்திட்டபூரணமு மிதுதானப்பா
நிஜமானபேரொளிதா னிலைத்துப்பாரே. 6

சும்மாநீபார்க்கையிலே மனத்தையப்பா
சுழிமுனையிலோட்டியங்கே காலைப்பாரு
அம்மாநீதேவியென்று அடங்கிப்பாரு
அப்பவல்லோகாயசித்தி யோகசித்தி
உம்மாவும்அம்மாவும் அதிலேகாணும்
ஒருமனதாய்ச்சுழிமுனையில் மனத்தையூணு
நம்மாலேஆனதெல்லாஞ் சொன்னோமப்பா
நாதாக்களிதையாரும் பாடார்காணே. 7

காணுகின்றஓங்கார வட்டஞ்சுத்து
கனலெழும்பிகண்ணிலே கடுப்புற்றேன்றும்
பூணுகின்றயிடகலையில் பாம்போலாடும்
பொல்லாததேகமென்று லுருகிப்போகும்
ஆணுவங்களானதெல்லா மொழிந்துபோகும்
அத்துவிததுரியாஷ்ட மாடிநிற்கும்
வூணியதோரெழுத்தையெல்லாந் தேவியாகுங்
ஓங்காரக்கம்பமென்ற வுணர்வுதானே. 8

உணரவென்றுற்சந்திரனி லேறிப்பாரு
ஓடியங்கேதலையென்ற வெழுத்தில்நில்லு
அணுவென்றால்மணியாகுஞ் சிவனேயுச்சி
அகாரமென்னபதியுமென்ன சூட்சமாகுங்
கணுவென்னவிற்புருவ மகண்டவீதி
கயிலாயமென்றதென்ன பரத்தின்வீடு
துணுவென்னசூரியன்றன் னெருப்பைக்கண்டு
தூணென்றபிடரியிலே தூங்குதூங்கே. 9

மூவெழுத்தும்ஈரெழுத்து மாகிநின்ற
மூலமதையறிந்துரைப்போர் குருவுமாகும்
ஊவெழுத்துக்குள்ளேதா னிருக்குதப்பா
உணர்வதுவேகண்டறிந்தோ னவனேயாசான்
யாவருக்குந்தெரியாது வறிந்தோமென்று
அவரவர்கள்சொல்வார்க ளறியாமூடர்
தேவரொடுமாலயனுந் தேடிக்காணார்
திருநடனங்காணமுத்தி சித்தியாமே. 10

ஈரெழுத்துமோரெழுத்து மாகியங்கே
  யியங்கிநிற்குமசைவையப்பா மூலத்துள்ளே
வேரெழுத்தும்வித்தெழுத்து மிரண்டுங்கொண்டு
  வித்திலேமுளைத்தெழுந்து விளங்கிநிற்கும்
சீரெழுத்தையூணிநல்ல வாசியேறி
  தெருவீதிகடந்தமணி மண்டபத்து
தாளரத்துட்பொருளாம் பரத்தைநோக்கி
  சார்ந்தவர்க்குசித்திமுத்தி தருகுந்தானே. 11
ஏகமெனுமோரெழுத்தின் பயனைப்பார்த்து
  யெடுத்துரைத்துமிவ்வுலகி லெவருமில்லை
ஆகமங்கள்நூல்கள்பல கற்றுக்கொண்டு
  அறிந்தோமென்பார் மவுனவித்தைஅவனையும்
வேகாத்தலைசாகாக்கால் விரைந்துகேளு
  அதையெடுத்துரைப்பவரே ஆசானாகும்
தோகமதிலோரெழுத்தைக் காண்போன்ஞானி
  திருநடனங்காணமுத்தி சித்தியாமே. 12
குருவானுயுமைபாக னெனக்குத்தந்த
  கூரறியஞானமது பத்தின்மூன்றும்
பொருளாகச்சொல்லிவிட்டே னப்பாநீங்கள்
  பொருளறிந்தாற்பூரணமும் பொருந்திகாணும்
அறியார்களிந்நூலைப் பழித்தபேர்க
  ளருநரகிற்பிசாசெனவே யடைந்துவாழ்வார்
அருளாகஆராய்ந்து பார்க்கும்பேர்கள்
  ஆகாயம்நின்றநிலை யறியலாமே. 13

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐம்பத்தாறுவது,

அகஸ்தியமகாமுனிவர்

அடுக்குநிலைபோதம் - 10.

சொல்லிறந்தவிடமெங்கே முப்பாழெங்கே
துவாரபாலகரெங்கே முதற்பாழெங்கே
நல்லசங்குநதியெங்கே வைகுந்தமெங்கே
நாரணனும்ஆலிலைமேற் படுத்ததெங்கே
அல்லல்படுமைம்பூத மொடுக்கமெங்கே
ஆறஞ்சுபிதழ்ரெண்டு முளைத்ததெங்கே
சொல்லவல்லாருண்டானா லவரைநாமுந்
தொழுதுகுருவெனப்பணிந்து வணங்கலாமே. 1

உந்தியெனுநிலையெங்கே அறுகோணமெங்கே
ஓங்காரநிலையெங்கே வுற்றவிடமெங்கே
மந்திரமுஞ்சாத்திரமும் பிறந்ததெங்கே
மறைநாலும்விரித்தவயன் தானுமெங்கே
முந்திவருங்கணபதியும் பிறந்ததெங்கே
முக்கோணமுனையெங்கே யடிதானெங்கே
இந்தவகைபொருளறிந்து சொல்வார்தம்மை
இறையவனென்றேகருதி யியம்பலாமே. 2

பற்பதத்தில்பொங்கிவரும் வழிதானெங்கே
  பரிந்துமுறைகொண்டுநின்ற அறிவுமெங்கே
உற்பனமாங்கருநின்று விளைந்ததெங்கே
  யொருபாதந்தாக்கிநின்ற வடையாளமெங்கே
தற்பரமாயாகிநின்ற நிலைதானெங்கே
  சர்வவுயிராயெடுத்த சிவனுமெங்கே
இப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
  இறையவனென்றேகருதி யியம்பலாமே. 3

அடிமுடியுநடுவான நிலையுமெங்கே
  அறுசுவையுங்கொண்டொளித்த விடமுமெங்கே
வடியானவைந்துதலை மாணிக்கமெங்கே
  வரையானவூமையெனு மெழுத்துமெங்கே
இடமாகஆடிநின்ற பாதமெங்கே
  இச்சையுடன்பேசிநின்ற வெழுத்துமெங்கே
யடைவாகப்பொருளறிந்து சொல்வார்தம்மை
  யடிதொழுதுகுருவென்று நம்பலாமே. 4

சற்குருவுஞ்சகநிதியு மானதெங்கே
  சாகாதமாலெங்கே வேகாத்தலையெங்கே
முப்பொருளுமொருபொருளாய் நின்றதெங்கே
  முனையெங்கேதலையெங்கே முகமுமெங்கே
நற்கலமாயிரத்தெட் டிதழுமெங்கே

நாலுகையொருபாத மானதெங்கே
இப்பொருளையறிந்துறைக்கும் பெரியோர்தம்மை
யிறையவனென்றேகருதி யியம்பலாமே. 5

நஞ்சணிந்தமுகமதுதா னைந்துமெங்கே
ஞானக்கண்மற்றக்கண் மூன்றுமெங்கே
அஞ்சவுயிரதனைக்கொடுக்கும் யேமமெங்கே
வாயிரங்கண்ணிந்திரனார் தானுமெங்கே
பஞ்சறிவாய்நின்றபரா சத்தியெங்கே
பதினாலுலோகமெனு மதுதானெங்கே
வஞ்சமறப்பொருளறிந்து சொல்வாராகில்
வணங்கிகுருபரனென்று வாழ்த்தலாமே. 6

நகைபிறந்தவிடமெங்கே நினைப்புமெங்கே
நரகமேழாநரக மானதெங்கே
திகைத்துமறந்திடமெங்கே நினைப்புமெங்கே
தீராதகுறைவரைந்து சூழ்ந்ததெங்கே
பகைத்தவிடந்தானெங்கே ஒழுக்கமெங்கே
பகலிரவுயிருந்தவிடந் தானுமெங்கே
வகைப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
வணங்கிகுருபரனென்று வாழ்த்தலாமே. 7

ஆறுகால்முகமாறு மானதெங்கே
அறுபத்துநாலுகலை நின்றதெங்கே

சீறுகால்பணிரெண்டிற் கழிந்ததெங்கே
செதித்திடமுஞ்சாகாதிருந் திடமுமெங்கே
பூருவநீயிருந்துவந்த புறந்தானெங்கே
புந்திதனிலன்பத்தோ ரட்சரமுமெங்கே
வேறுபொருளிறைந்துள்ள படியேசொல்வார்
மெல்லடியிலேபணிந்து மெலியலாமே. 8

ஆதிகதிர்சந்திரனும் பிறந்ததெங்கே
அவரொடுங்கிநிற்குமது விடமுமெங்கே
சாதிபலவொன்றாகக் கண்டதெங்கே
சத்திசிவமெனபிரி யாததெங்கே
ஓதியுணார்ந்தேபூசை மறந்ததெங்கே
வுச்சிட்டனிட்டத்த விடமுமெங்கே
சோதிபோல்ஞானமொழி பெற்றபேர்கள்
சொல்லியதெல்லாமுடலிற் சொல்லுவாரே. 9

இருள்பிறந்தவிடமெங்கே ஒடுங்கிடமுமெங்கே
யிரண்டுதிருச்சங்குநின்ற விடமுமெங்கே
அருள்பிறந்துபாடிநின்ற விடமுமெங்கே
அறுத்தடைந்தவாசலொன்று கண்டதெங்கே
திருபிறந்தவிடமெங்கே ஏழுகிணறுமெங்கே
திருக்கணத்திலிருக்கின்ற ஏத்தமெங்கே
விருப்பமுடனசிக்குநிலை போதகத்தை
விளம்பினேமெய்ஞ்ஞான அறிவுள்ளோர்க்கே. 10

அகஸ்தியர் அடுக்குநிலைபோதம்-10

முற்றிற்று.

சிவமயம்.

ஐம்பத்தேழாவது,

அகஸ்தியமகாமுனிவர்

வாதச்சுருக்கம் - 6.

சித்தாதி ஆதியிலே பதினெண்பேரும்
சிவனறியதேவியுட வரத்தினாலே
கர்த்தாவின்சிவனுடைய திருக்கூத்தப்பா
காரணமாம்சிவமுனிவர் பாருபாரு
சித்தானசாஸ்திரங்கள் கோடானகோடி
விளம்பினேனிந்நூலில் விரைந்துபாரு
அத்தாதியானவர்க்கு மெய்துமெய்தும்
அல்லாட்டம்வேறாது அறிந்துபாரே. 1

பாரப்பாசுந்தரமே அய்யாகேளு
பகர்பெரியவாதநூல் பனிரண்டுலக்ஷம்
சேரப்பாசூஸ்திரமாம் கோடானகோடி
செப்பினேன்காவியத்தா யிரமும்பாரு
வாரப்பாமுகத்தான வாமமாறு
வாசிபோலாருக்குந் தெரியாதப்பா

காரப்பாவாதமடா சுழியில்நிற்கும்
கனமானமனந்தாக்கில் பலிக்கும்பாரே. 2

பார்க்கையிலேவுப்பினிட மார்க்கங்கேளு
பாங்கானவுப்பதனை யெடுத்துவாநீ
சேர்க்கையிலேஅல்லேதான் வீரம்பூரம்
சிரக்கவேஅண்டோடு நீரைவாரு
கார்க்கையிலேகாட்டிலுள்ள தில்லைப்பாலை
கனகமதாய்ச்சொரிந்துவிடு அதற்குமேலே
மார்க்கவொருபுடம்போட்டு முன்னம்போல
வார்த்திடாய்நீரதனை வார்த்திடாயே. 3

வார்த்தெடுத்துமுன்போலே புடமுந்தீர்த்து
வளமாகச்சிமினியிலே வைத்துநீதான்
கோர்த்துமெத்தகண்டருட மேலேபூசி
குணமாகப்புடம்ரெண்டில் போட்டாயானால்
பார்த்திபனேகண்டாது சுண்ணமாகும்
பாங்காகக்கட்டிவிடு மகத்தானவேதை
கார்த்துமெத்தசிவனுடைய ரத்தவித்தில்
கட்டுமடாபுடம்ரெண்டில் போடுபோடே. 4

போடப்பாவனிகரமே சுண்ணமாகும்
பொடியானசரக்கெல்லாங் கட்டுங்கட்டுப்

கோடப்பாகோடாலி போலேசுண்ணங்
கூறினேன்சுந்தரமே குவிந்துகேளு
ஆடப்பாமகிமையெல்லாங் காவியத்தில்
மைந்தனேகாவியத்தை மகிழ்ந்துபாரு
நாடப்பாவிந்நூலை வெளியில்போட்டேன்
கொள்ளையாம்வாதமது கொள்ளைதானே. 5

வகாரமடா ஆறுக்குள் ஒளிக்கவில்லை
மைந்தனேசமுத்திரத்து வுப்புஆதி
சிகாரமடாவேதைகளோ கோட்டாகோடி
செகமதிலேயிதைவிட்டால் சாபமாகும்
மகாரமடாயிந்நூலே அண்டபிண்டம்
ஆகுந்தானறியவே வெளியில்தந்தேன்
நகாரமடாசுந்தரமே இந்நூல்போலே
நாட்டார்கள்வாதத்தின் செய்கைமுற்றே. 6

அகஸ்தியர் வாதச்சுருக்கம்-6

முற்றிற்று.

சிவமயம்.

ஐம்பெத்தட்டாவது,

அகஸ்தியமகாமுனிவர்

வழலைச்சுருக்கம்–7.

வாதமென்றாலுப்புவித்தை யறியவேணும்
வாய்ப்பேசினால்வருமோ வாதந்தானும்
வேதமென்னவறிவுகொண்டு நிலைக்கவேணும்
வெஞ்சினங்கள்பேசினால் வருமோஞானம்
காதமென்றால்வெகுதூரம் போகவேணும்
கண்மூடியிருந்துவிட்டால் நடந்ததெங்கே
நாதமென்றால்வாசிகொண்டு ஊதவேணும்
நாய்போலேதிரிந்தாக்கால் நலமாகாதே. 1

நலமானஆயியுட நாதந்தானே
நல்லதண்ணீர்பட்டக்கால் சிவந்துபோகும்
மலையானமஞ்சள்பட ரத்தமாகும்
மயக்கமில்லைதேவியுட நாதமாச்சு
குலமறியாசண்டாள ருலகினுள்ளே
கோதையுடயோனியினால் வடிந்தரத்தம்
பிலமாகவாதத்துக் காதியென்று
பேசுவார்வீணரெல்லாம் பேசுவாரே. 2

பேசுவார்பூநீரே சாரம்சாரம்
பிலமானபீசனுப்பே காரம்காரம்
கூசாமல்ரெண்டுக்கும் நிலமேதெய்வம்
குடியிருப்புஓரிடத்திற் குறித்துப்பார்க்க
தேசமெல்லாம்போனாலுந் தெரியாதப்பா
சிவயோகவாழ்க்கைவந்தால் சித்தியாகும்
வீசுவார்குறிப்பறிந்தோ மென்றுசொல்லி
மிலேச்சர்களேபாராதே குருவைத்தேடே. 3

குருமுடிக்கும்காலமல்லோ மீனம்மேஷம்
கொண்டாட்டமாகவே குறித்துச்சொன்னார்
கருவெடுக்குங்காலத்தை குறித்துச்சொல்லி
காட்டாமல்சூஸ்திரங்கள் கட்டிப்போட்டார்
பொருள்முடிக்கப்போறதெப்போ உப்பில்லாமல்
பூநீற்றைமாத்திரமே பொசிக்கிலென்ன
இருவகைக்கும்தீவுக்கு நாள்மூன்றும்பண்ணு
எட்டிரண்டும்பாசமறிந் தெடுத்துக்கொள்ளே. 4

எடுத்தக்கால்தீக்ஷைக்கு ஆதியென்ன
ஏகாந்தபிரணவநீ ரூட்டவேணும்
குடித்தக்கால்பூதபஞ்சீ காணம்பாகம்
கூட்டினலப்போதே குருவுமாகும்

பிடித்தக்கால்நில்லாத சூதராஜன்
  புலிகண்டஆடதுபோல் பொசுங்கிப்போகும்
படித்தக்கால்என்னவுண்டு வுன்பூருயம்
  பாருமல்சுட்டதெல்லாம் பாழ்கண்டீரே. 5

பாழாகப்போகாமல் ஈசனுப்பே
  பதினாறுகலைமதியில் பாடம்பண்ணு
பேழ்மையாய்ப்போகாமல் தேவியுப்பை
  ஈராறுசூரியனில் ரெட்டித்தேறு
கோளாகப்போகாம லிவைகள்ரெண்டுங்
  குற்றமில்லாசுத்தஜலம் குளிரத்தாக்கு
நாளாகவிதிப்படியே மாறிமாறி
  நாளொன்றுக்கிருநேரம் நயந்துசெய்யே. 6

செய்யயிலேயிடைபாகம் சிதறிடாதே
  தீக்ஷையிலேமுதல்தீட்சை மறந்திடாதே
செய்வதிலேவுப்பெடுக்கும் நாள்விடாதே
  குருமுடிக்கும்காலமதைக் கோறிடாதே
பொய்வசனசீஷர்களைச் சேர்ந்திடாதே
  பூவையர்களாசையிலே புக்கிடாதே
மாய்வதிலேமருந்துதனைப் பேதியாதே
  தொண்டாகவேயிருந்து தொழிலைச்செய்யே. 7

அகஸ்தியர் வழலைச்சுருக்கம்-7

முற்றிற்று.

சிவமயம்.

ஐம்பத்தொன்பதாவது,

அகஸ்தியமகாமுனிவர்

ஞானச்சுருக்கம்-15.

பூரணமேதெய்வமென்று வுரைத்தீரையா
பூரணத்தையின்னதென்ப் புகலவேணும்
காரணத்தைச்சொல்லுகிறே னினைவாய்க்கேளு
கலையானபதினாறு பூரணந்தான்
மாரணமாவுலகத்தோர் மதிமயங்கி
மதிகெட்டுப்பூரணத்தை யிழந்தாரையோ
வாரணத்திலூணிப்பூ ரணத்தைப்பார்க்கில்
வாசியென்றசிவயோக வாழ்க்கையாச்சே. 1

ஆச்சப்பாவிந்தமுறை பதினெண்பேரும்
அயன்மாலுமரனோடு தெய்வமெல்லா
மூச்சப்பா தெய்வமென்று அறியச்சொன்னார்
முனியோர்கள்ரிஷியோர்க ளிப்படியேசொன்னார்
பேச்சப்பாபேசாம லிந்நூல்பார்த்து
போரானபூரணத்தை நினைவாய்க்காரு
ஆச்சப்பாபூரணத்தை காக்கும்பேர்கள்
வாசிதருமையத்தில் வாழ்ந்தார்தானே. 2

காலென்றபெரியோர்க ளுலகத்துள்ளே
தாயானபூரணத்தை யறிந்தபின்பு
ஊனென்றவுடலைநம்பி யிருந்தபேர்க்கு
ஒருநான்குவேதமென்றும் நூலாறென்றுந்
தேனென்றபதினெட்டு புராணமென்றும்
தேவனென்றும்தேவியென்றும் ரவிதானென்றும்
நானென்றும்நீயென்றும் ஜாதியென்றும்
நாட்டினாருலகத்தோர் பிழைக்கத்தானே. 3

பிழைப்பதற்குநூல்பலது சொல்லாவிட்டால்
பூரணத்தையறியாம லிறப்பாரென்று
உழைப்பதற்குநூல்கட்டிப் போடாவிட்டால்
உலகத்தில்புத்திகெட் டலைவாரென்று
கழைப்பதற்குச்சாதியென்றும் பந்துவென்றும்
தந்தைதாய்பிள்ளையென்றும் பாரியென்றும்
அழைப்பதற்குச்சொன்னதல்லால் கெதியொன்றில்லை
அப்பனேயறிந்தவர்கள் பாடினாரே. 4

பாடினாரிக்கதைதான் சொல்லாவிட்டால்
பரிபாஷையறிவார்கள் உலகமூடர்
சாடுவார்பலபலநூல் பார்த்துப்பார்த்து
தனைமறந்துபடுகுழியில் வீழ்வார்சாவார்

வாடுவார்நாமமென்றும் ரூபமென்றும்
வையகத்திற்கற்செம்பைத் தெய்வமென்றும்
நாடுவார்பூரணத்தை யறியாமூடர்
நாய்போலேகுலைத்தல்லால் வழிகாணாரே. 5

காணாமலலைந்தார்கள் கோடாகோடி
காரணத்தையறிந்தோர்கள் கோடாகோடி
வாணாமாய்த்ததினை லறியப்போமோ
வாய்ஞானம்பேசுவது யேதுக்காகும்
கோணாமல்சுழிமுனையில் மனத்தைவைத்து
குருபாதமிருநான்கி னுன்கைச்சேர்த்து
நாணாமலொருநினைவாய் காக்கும்போது
நாலுமெட்டுமொன்றாக நாட்டியூதே. 6

ஊதியதோர்சூத்தறிந்தா லவனேசித்தன்
உத்தமனேபதினாறு பதியேயாகும்
வாதிகளேயிதினாலும் பதியின்பாதம்
வகைநாலுமுயிராகு மார்க்கங்கண்டு
சோதிபரிபூரணமே யிதுமூன்றுந்தான்
தூங்காமற்றூங்கியங்கே கார்க்கும்போது
ஆதியென்றபராபரையு மாகுமொன்று
மண்ணுக்குவட்டத்து ளடங்கும்பாரே. 7

பாரப்பாவுதயத்தி லெழுந்திருந்து
  பதராமல்சுழிமுனையில் மனதைவைத்து
காரப்பாபரிதிமதி யிரண்டுமாகி
  கருவானசுழிமுனையி லூதும்போது
தீரப்பாஅங்கென்று அண்ணாக்குள்நின்று
  தியங்காமல்தெளிவித்த வுகமைதானே. 8

உகமையின்னஞ்சொல்லுகிறேன் உலகத்துள்ளே
  ஓடாதேஒளியாதே நலிபேசாதே
பகைபண்ணிக்கொள்ளாதே வீண்சொல்லாதே
  பரப்பிலேதிரியாதே மலையேறாதே
நகையாதேசினவாதே வுறங்கிடாதே
  நழுகாதேசுழிவிட்டுப் பின்வாங்காதே
ஜெகமுழுதும்பரிபூரண வஸ்துவென்றும்
  தெளிந்தபின்புவுலகத்தோ டொத்துவாழே. 9

வாழாமலுலகம்விட்டு பலவேஷம்பூண்டு
  வயர்பிழைக்கவாய்ஞானம் பேசிப்பேசி
தாழ்வானகுடிதோறு மிறப்பார்மட்டி
  தனையறியாச்சண்டாள முழுமடப்பா
பாழானபாவியுட சொற்கேளாதே
  பதறாதேவயர்பிழைக்க மயங்கிடாதே

கேளாதபேச்செல்லாங் கேட்டுக்கேட்டு
கெடுக்காதேயுட லுயிரொன் றுரைத்திடாதே. 10

உடலுயிரும்பூரணமு மூன்றுமொன்று
உலகத்தில்சிறிதுஜெனம் வெவ்வேறென்பார்
உடலுயிரும்பூரணமு மேதென்றாக்கால்
உத்தமனேபதினாறு பொருள்தானாகும்
உடலுயிரும்பூரணமு மயன்மாலீசன்
உலகத்தோரறியாமல் மயங்கிப்போனார்
உடலுயிரும்பூரணமும் அடிமுடியுமுச்சி
உதித்தகலையறிந்துணர்ந்து பதியதனில்நில்லே. 11

பதியின்னவிடமென்று குருவின்சொல்லை
பாப்பிலேவிடுகாதே தலைரெண்டாகும்
விதியின்னவிடமென்று சொல்லக்கேளு
விண்ணானவுண்ணாக்கி லண்ணாக்கப்பா
மதிரவியும்பூரணமும் கண்வாய்மூக்கு
மகத்தானசெவியோடு பரிசமெட்டும்
பதியவட்குசுழிமுனையென் றிதற்கேபேராம்
பகருவார்சொர்க்கமென்றுங் கைலாசமென்றே. 12

கைலாசம்வைகுந்தம் தெய்வலோகம்
காசிகன்னியாகுமரி சேதுமென்றும்
மயலாகுமேகமென்றும் நாதமென்றும்
மாய்கையென்றுமின்னலென்று மொடுக்கமென்றும்

துயிலாதவாடையென்றுஞ் சூட்சமென்றும்
சொல்லாதவிடமென்று மொடுக்கமென்றும்
தையலாளடிநடுவு முடிதானென்றும்
தாயானவஸ்துவென்றும் பதியின்பேரே. 13

பேர்சொன்னேனூர்சொன்னேனிடமுஞ்சொன்னேன்
பின்கலையுமிடகலையுமொடுக்கஞ்சொன்னேன்
பாருலகில்பலநூலின் மார்க்கஞ்சொன்னேன்
பலபேர்கள்நடத்துகின்ற தொழிலுஞ்சொன்னேன்
சீருலகிலின்னதென்று தொட்டுச்சொன்னேன்
சித்தானசித்தெல்லாஞ் சுருக்கிச்சொன்னேன் [ன்
நேர்சொன்னேன்வழிசொன்னேன் நிலையுஞ்சொன்னே
நின்னுடம்பையின்னதென்று பிரித்துச்சொன்னேன்.

பிரித்துரைத்தசூத்திரமீ ரெட்டுக்குள்ளே
பிசகாமலொவ்வொன்றாய்த் தெளிந்துபார்க்கில்
விரித்துரைத்தநூலினுட மார்க்கந்தோணும்
விள்ளாதேயிந்நூலி லிருக்குதென்று
கருத்துடனேயறிந்துகொள்ளு கலைமாறாதே
காரியத்தைநினைவாலே கருதிக்கொள்ளு
பருதியென்றசோதியெல்லாஞ் சுருக்கிச்சொன்னேன்
சூத்திரம்போற்பதினாறுந் தொகுத்தேன்முற்றே. 15

அகஸ்தியர் ஞானச்சுருக்கம்-15

முற்றிற்று.

சிவமயம்.

அறுபதாவது,

அகஸ்தியமகாமுனிவர்

காரணசூத்திரம்-48.

நாடியதோர்பூரணமாம் வேதாந்தத்தில்
நடனதிருசூத்திரத்தைப் பாடுதற்கு
ஆடியதோர்கணபதியுங் கந்தன்காப்பு
அருள்பெருகுஞ்சித்தர்முதல் ரிஷிகள்காப்பு
கூடியதோர்ஞானமருள் வாலையாலே
கூறுகிறேன்அகாரமுட்டி சிறீங்காரத்தால்
பாடியதோர்பலநூல்கள் பொய்யாய்ப்போகப்
பாலாகுமெந்தனுட நூலதாமே. 1

தானானஞானமது பத்துநூறு
தனைக்குறுக்கிஒருநூறு சார்ந்துசொன்னேன்
தேனானவாதமது லட்சங்காப்பு
செப்பினேனிரண்டுகாண்டந் திறமாய்த்தானும்
பானானவிதைக்குறுக்கி யிருநூறுஞ்சொன்னேன்
பாங்கானவயித்தியத்தில் ரெண்டுலட்சம்
கோனானயிதைக்குறுக்கி லட்சம்சொன்னேன்
கூறியதில்படுபாதி கூறினேனே. 2

கூறினேன்வயித்தியத்தில் சூஸ்திரந்தான்
　கொட்டினேன் கருமறையில் கொஞ்சமப்பா
ஆறினேன்அதிலடக்கி மூன்றுநூறு
　அழகானசூஸ்திரமா யடக்கிப்பாடி
தேறினேன் வயித்தியத்தில்கருக்குருவுஞ் சொன்னேன்
　செவிடனுக்குங்குருடனுக்குந் தெரியவென்றே
பீறியேவாதிசெய்யும் வயித்தியந்தான்
　விளம்பினேன்ஞானசூத் திரந்தான்பாரே. 3

பாரப்பாயிருனூற்றுப் பதினருள்ளே
　பலனெல்லாமிதில்சூட்சம் பரிவாய்ச்சொன்னேன்
ஆரப்பாயிந்தநூல் நாற்பத்தெட்டும்
　ஆடலாம்வாதமொடு ஞானவரைசித்தி
காரப்பாயிந்தநூல் வெளியில்போட்டேன்
　காரணமாங்குருவருளை காணப்பெற்றீர்
சேரப்பாபூரணத்தின் வாசியாலே
　செகச்சாலம்கூடிநின்ற தேவியாமே. 4

ஆமப்பாவாதமது சொல்லக்கேளு
　அரனெனக்குவுபதேசம் அகாரத்தாலே
தாமப்பா அரிதாரக் கட்டுச்சொல்வேன்
　தனித்திருந்தமஞ்சளுடன் கருவுநீர்தான்

வேமப்பாகொடிக்கள்ளிச் சாறுவிட்டு
விரைந்துநன்ருய்ரேசித்துத் தாரம்போட்டு
காமப்பாசொல்லிவிட்டேன் தாரக்கட்டி
நாலுபலகெரிபுடத்தில் நாரல்தானே. 5

நாரலடாமலப்பிணியும் பூநீறுமொன்ருய்
நலமாகமேல்கவசம் நன்ருய்பண்ணு
பாரலடாமேலாகுந் தாரந்தன்னை
பாச்சடாவெள்ளிசெம்பில் பருக்குகந்தங்
கூறுவதுகெந்தகத்தின் போக்குதன்னை
குழிக்கள்ளியில்காரமிட்டு நாத்தம்போட்டு
தோலடாகாட்டுள்ளி தைலத்தாலே
சிக்கெனவேஅரைத்தந்த உள்ளியில்வையே. 6

வைத்ததொருகெந்தகத்தின் மேலேமுன்போல்
வரிசைபெறக்கவசமது வலுக்கப்பூசி
தைத்ததொருதிருவாணி பூசையாலே
நான்சொல்லமுடியாது வேதையாகும்
கைத்தமென்றபாஷாணக் கட்டுக்கேளு
கடுசுருக்கால்பூவழலை சூட்சாசூட்சம்
சத்தமென்றஉப்புடனே சாரஞ்சேர்க்க
சலமாகுமிதனுள்ளேபூரங்கேளே. 7

கேளுநீ துரிசியறி தாரங்காரம்
　கெடியானமருந்தையுஞ் சமனாயாட்டி
நாளுமேபாஷாணந் தனக்கேபூசி
　நாயகியைத்தொழுதுபுடம் நன்றாய்நீயும்
பாறுமேபாஷாண மாகும்மாகும்
　வாய்திறக்கப்போகாது மவுனம்போலாம்
தாளுமேபூரணத்தில் சூத்திரந்தான்
　சாடிவிட்டேனிந்தநூற் கொவ்வாவாறே. 8

வானமதியமூர்த மண்டையோடு
　வளருகின்றசத்தமுப்புச் சாரந்தாரம்
வீறானவெடியுப்புச் சீனக்காரம்
　விள்ளுகிறேன்நாதரிஷி விள்ளாதெல்லாம்
பாழானபூநீறு அண்டத்தோடு
　பாச்சிநன்றாயரைத்துருட்டிப் பின்புகேளு
கூறானநாகமதை ஆடாதோடை
　குமரிகள்ளிதிருகள்ளி சாற்றில்சாயே. 9

சாய்க்கவேநாகமது வெள்ளிபோலாந்
　தானரைத்தமருந்ததனை நாகதர்ப்பி
மேய்க்கவேபுடம்போடு நாகங்கட்டும்
　மேவியதோர்கொதிசவ் வீரஞ்சேர்த்தே

மாய்க்கவேமனோசிலையும் லிங்கங்கட்டி
வாளவரையெலுமிச்சம் பழச்சாற்றாலே
காய்க்கவேசெம்பிலிட வேதைகாணும்
கரைசொல்லமுடியாது காணுங்காணே. 10

காணப்பாவயித்தியந்தான் கெர்ப்பரோகம்
கடுஞ்சுருக்கார்தீருதற்குக் கடுகுமஞ்சள்
தோணப்பாயிந்துப்பு கடுக்காய்வீழி
தாய்வேளைநிலவாகை தானேயுள்ளி
பாரப்பாவெண்காரம் ஆமணக்கிலையும்
பரிவாகமூன்றுபலம் வகையொன்றுக்கு
தோணப்பாவிளக்கெண்ணெய்ப் படிதானென்று
சொல்கிறேன்கொடிகள்ளிப்பால் களஞ்சிதனில்வாரே.

வார்த்துநீயெறித்தெண்ணெக் கொடுக்கக்கேளு
மாதவிடாய்மூன்றுநாள் முழுகும்போது
கார்த்துவரப்பத்தியந்தா னென்றுமாகா
கடினவென்றவாயுவறுங் கெர்ப்பமுண்டாம்
சாற்றுவேன்சதாசிவத்தி னாணையிந்தச்
சண்டாளகசடறுக்கச் சாற்றவேண்டாம்
குற்றமேதருகுமடா சித்தியாதே
கொடுஞ்சுருக்காம்அண்டமுதல் புவனம்போமே. 12

வேமடாதிரிகோண சிகாரபீசம்
விளம்புகிறேன்சிவாயகம வென்றபோது
காமமடாயிச்சியாதே மோகத்தாலே
கருணைதரும்பூரணத்தில் கலந்தேயாளும்
நாமமடாஉரைத்ததல்லால் வேறேனூலில்
நன்றாகசொல்லவில்லை நாடியாட
தர்மமடாபெருனூலில் சாரஞ்சொன்னேன்
சரியானசெம்புசுத்தி சார்வுகேளே. 13

கேளுநீபுளியிலையை பழச்சாற்றாலாட்டி
கெடியாகவழித்ததனை செம்பில்பூசி
வாளுமேகற்றாழை மடலில்வைத்து
வரிசையாய்முழுப்புடத்தில் வர்னமாகும்
ஆளுமேபூரணத்தில் தேவிரூபம்
அரகராசெம்புசுத்தி யானவாறும்
நாறுமேவேதையுட இந்தச்செம்பை
நாவுறைகள்சொல்லாதே நாட்டுள்ளோர்க்கே. 14

நாட்டிலுள்ளவாதிக்கி யின்னூல்கிட்டா
நண்பருக்கும்சிவயோகி ஞானயோகி
வீட்டிலுள்ளபூரணத்தின் யோகிக்கேதான்
விளம்பினேன்வேதாந்தச் சுழினையோர்க்கும்

பாட்டிலுள்ளகுருவான துரிசிபோக்கை
பாடறிந்துயென்னாலே சற்றேசொல்வேன்
கூட்டிலுள்ளவெண்மலந்தான் குரும்பிவெள்ளை
கூடவேகெந்திரசம் அண்டந்தானே. 15

அண்டத்தின்தலையோடு நாகம்வங்கம்
அனைத்திடவேநவாசாரம் வெடியுப்போடு
பண்டத்தின்தீபமடா புழுகுநாபி
பாலமிர்தமுமிநீரா லாட்டியாட்டி
பிண்டத்தின்மருந்தெல்லாம் நிறையாய்வாங்கி
பேசாதேபுழுகுவொரு பணவிடைதானாகும்
லண்டருக்குமேல்பூசி அண்டாவேகங்
கதிரவன்றன்முகங்காட்டு மூன்றுநாளே. 16

மூன்றுநாள்காய்ந்தபின்பு கூடன்தூசில்
மூர்க்கமுடன்வைத்தெரித்தால் குருவேயாகும்
நான்கானகுவடியை நித்தம்போற்று
நாடகத்தைஆடுகிற வரிசைக்கெல்லாம்
தான்தானேநின்றாடும் ஆதிமூர்த்தி
சகலசரக்கறுபத்து நாலுமாகும்
தேன்போலேயித்தொழிலை உலகத்தோர்க்கு
செப்பாதேசாபம்வரும் வாதியோரே. 17

வாதியென்றால்முப்பூவையறி யன்பத்துள்ளே
வரிசைபெறச்சொல்லிவிட்டேன் மகிழ்ந்துபாரு
ஆதியென்றபூரணமாஞ் சூத்திரத்தில் [னேன்
அடக்கினதோர்பொருள்களெல்லா மன்பாய்ச்சொன்
தேரினதோர்சூத்திரந்தான் நாற்பத்தெட்டில்
திறமாகப்பாடிவிட்டேன் தெளிவாமிந்நூல்
ஜாதியென்றபிரமகுல ராஜயோகி
சாற்றுகிறேன்புலத்தியனே தர்மமாமே. 18

தர்மமாமெந்தனுட லேகியந்தான்
திரிகடுகுநெல்லியுடன் ஓமம்ஏலம்
வர்மமாம்வால்மிளகு மதுரமிஞ்சி
வகையானநாற்களஞ்சி பொடியாய்ச்செய்து
கர்மமெல்லாந்தீருமடா சீனிகூட்டி
களஞ்சிதின்னமேலுளைச்சல் மேகம்ரெத்தம்விக்கல்
பர்வதம்போலிறப்பிளைப்பு யிருமலீளைகூடு
பறக்குமடாமந்தார காசந்தானும்
கர்மமடாபால்நாழி தேனுரியாய்த்
திறமாகக்காய்ச்சியதைப் பதமாய்க்கிண்டே. 19

பதமானசிதம்பரத்தின் நடனங்கண்டு
பாரைவலையெட்டெழுத்தால் மவுனயோகம்
இதமானஓரெழுத்தே யேறிற்றானல்

இழுக்குமடா அதிகமென்ற சுழினையேறும்
பதமாகிமேல்கடந்து அப்பால்சென்றால்
சதகோடிரவியினுட பிரகாசந்தான்
பரவாகும்அகாரமது உகாரம்ரெண்டு
பதியிருந்தமகாரமொன்று மூன்றும்பாரே. 20

பாரப்பாபால்வடிதான் உரிதான்வாங்கி
பரிவாகமுதலியுடப் பூலாலாட்டி
ஆரப்பாகுடித்திடுநீ வெட்டைபோகும்
அரையாப்புமருந்துவகை யரையக்கேளு
சீரப்பாஒருசிரங்கை வெள்ளியுள்ளி
சேர்த்திடவேநத்தைசூரிவேர் பிடிதானென்று
வாரப்பாநல்லெண்ணெய்ப்படி யரைக்கால்விட்டு
வளமாகமருந்தைநன்றாய்க் கூட்டிக்கொள்ளே. 21

கொள்ளவேஅரையாப்புத் தெரித்துப்போகும்
குடம்போலேதிரண்டதொரு கரப்பான்தீரும்
அள்ளவேவிப்புருதி கிரந்திபுண்கள்
மாறுதற்குஇன்னமொரு சூட்சந்தன்னை
விள்ளவேபொடுதலைக்கு மப்படியேதீரும்
விதமானவுப்பினுட செந்தூரந்தான்
பள்ளவேதுரிசிநீர் விந்திலிட்டு
பார்க்கவேயிருபதுநாள் படருந்தானே. 22

தானான இந்துப்பில் சூதம்வீரம்
சாதிலிங்கங்கெந்தியொடு மனோசிலையுங்கூட்டி
யானான துரிசிநீர் விட்டுஆட்டி
பதமாகவில்லைசெய்து ரவியிற்போட்டு
தேனானசெந்தூரங் கண்கொள்ளாது
சிகப்பென்றாலருணநிற மதற்கொவ்வாது
மானானநவலோகம் வேதையாக
மாட்டுவாய்துரிசினுட குருவைத்தானே. 23

குருவான துருசானங் காலினாலே
குஷ்டமுடன்கரப்பான் நீர்ச்சூலைபாண்டு
அருவானதேங்காயைத் திரிகிப்பாலில்
அரைத்துநீர்நாத்தமொடு சீனிரெண்டும்
பருவமாய்பால்கலக்கி யெரித்துக்கொண்டு
பழையதுநீவெங்காயம் உண்டுமேலே
கருவானநெய்யதனைக் குடித்தாயானால்
காதடைப்புமூக்கடைப்பு கடலோடும்பாரே. 24

பாரப்பா்வைரவனார் பூசைதன்னைப்
பாவனையாமறுகோணம் முக்கோணத்தில்
சேரப்பாவங்கென்று வுள்ளேயிட்டுத்
திறமாகஅறுகோணத் துள்ளேகேளு
வீரப்பாகொண்டெழுத்த மூன்றெழுத்தை

விருப்பமுடன் ஓம்நமச்சி வாயமென்று
ஆரப்பாபீசங்கள் வாசல்தோறும்
அடைத்திடவேவைரவனுர் நாமங்காணே. 25

காணவேவைரவனுர் தியானம்பண்ண
கடுஞ்சுருக்கும்பூரணத்தில் கலந்துஆடுந்
தோணவேதனித்தவே விள்ளவேண்டாம்
சொல்லாததுனிருக்கு தென்றுநீயும்
பாருவிசதாசிவத்தன் ரவிமதியுமொன்றாய்
பார்க்கவேதணலாக நீறிப்போவாய்
வேணபுலித்தோலுடுத்துஞ் சிவன்தன்னை
விடுபட்டமதவானை வீதிதானே. 26

வீதியாமதனை செந்தூரத்தை
வில்லாதருட்சமெல்லாம் வெளியில்விட்டேன்
ஆதியான்துரிசினுட குருவென்றப்பா
அதில்பாதிவீரமனே சிலைதான்சத்தி
பாதியாம்லிங்கமொடு காரம்சாரம்
பலமாகச்சூதமுப்பு இணங்கன்பூரம்
சாதியாம்புழுகோடு ரோசனையுங்கூட்டி
தானரைத்துவில்லைசெய்து ரவியிற்போடே. 27

போடுநீகாடையென்ற புடத்திலேதான்
பூசைசெய்துஆயிக்குந் தியானம்பண்ணி

சோடுநீசெந்தூரம் உலகங்கொள்ளாது
சுகமானதேவியுட வர்ணம்போலாச்சு
நாடுநீசெம்புரெண்டு வெள்ளியொன்று
நல்லதங்கமாவினிடையும் குகையில்தாக்க
ஆடுநீபொன்மாத்து இருபதாகும்
அறிந்துகொள்ளும்வாதிகளே அடவாய்த்தானே. 28

தானானபூரணகுத் திரத்திற்சொன்ன
சாபமதுதீருமடா தாயினாலே
தேனானஇந்தநூல் சூட்சமாக
திறந்தப்பாபாடிவிட்டேன் சிவன்தன்னாலும்
மானாகத்தீராது பூரணசாபம்
பலித்தாலுங்கைகூட மாட்டாதப்பா
நான்நன்றாய்ச்சொல்லிவிட்டேன் சாபகோபம்
நாடிநின்றசூத்திரத்தைப் பார்வையாமே. 29

ஆமேகேள்சூடுவு காந்தல்விக்கல்
கிறுகிறுப்புவாந்தியொடு கண்கடுப்புதீர
தாமேநீகொள்கிரும்பு அதிமதுரம்ஏலம்
சாதிக்காய்மிளகோடு சீனிசேர்த்து
பாமேகேள்பால்தனிலே மெழுகுகோலம்
பதங்கண்டெடுத்துநீ கொள்ளச்சொல்லு

தாமேதாநோயெல்லாம் தீருமென்றே
சாஸ்திரமாய்சூஸ்திரத்தில் சார்ந்துகாணே. 30
காணுநீதிலர்தவகை தாரமஞ்சள்
கானகத்தின்சந்தணமும் வழலைசேர்த்து
வேணுமென்றநேரமதில் திலர்தம்போடு
விளங்கவுந்தான்மன்மதன்போல் வசியமாகும்
தோணுநீகோரோசனை புழுகுபூரம்
துடியாததிலர்தமிடப் பெண்போகந்தான்
காணவேதுருசான சூத்திரத்தை
கறந்தபடிசொல்லிவிட்டேன் சூக்ஷம்பாரே. 31
பாருமேஅஷ்டலேகியங் கடுகுலமம்
பரிவானகாயமிந்து சீரகந்தான்
தேறுமேதிரிகடுகு கருஞ்சீரகமும்
சிறக்கவேயிடித்துதைவேளை யிஞ்சிச்சாறும்பாலும்
வாருமேபதத்தில்வெந்து இறக்கிக்கொண்டு
வகையானமண்டலந்தான் இருநேரங்கொண்டு
பாருமேவயறுதல் புளித்தஏப்பம்
பரிவானதிசைவாய்வுங் கண்டேயோடும். 32
ஓடுமேயின்னமொரு சூக்ஷந்தன்னை
உரைக்கிறேன்காவேழும் ஆடப்போகா
ஆடுமேவாதிகளே பித்தனால்

அகப்பட்டபேர்தமக்குஞ் சொர்க்கமோக்ஷம்
நாடுமேபூரணத்தில் அகார-உகார-மகார-மூன்றும்
நடுச்சுழியில்முக்கோண நாதாந்தத்தில்
தேவியேசதாசிவத்தின் கூத்துங்காணும்
சிலம்பொலியாஞ்சிதம்பரமுந் தீட்சைபாரே. 33

தீக்ஷையிலேயிருநூறும் நன்றாய்ச்சொன்னேன்
திறமானபூரணசூத் திரமுஞ்சொன்னேன்
காச்சையிலேலேகியங்கள் நூற்றன்பதுவுஞ் சொன்னே[ன்
கருணைபெறபற்பங்கள் முப்பத்தஞ்சும்
பாச்சையிலேவழலையுட வேதையாகும்
பரமாகஅன்பதிலே வழலைபோக்கு
நீச்சையிலேகடுநீச்சு முன்னூறப்பா
நிஜமானகாரணமா மின்னூல்காணே. 34

இன்னூலேசித்தருக்காம் சிவயோகிக்காம்
என்னைப்பெற்றதேவியுட பூசையோர்க்காம்
நன்னூலேயிதைப்போலே சூக்ஷமில்லை
நாட்டிலுள்ளவயித்தியர்க்காம் நன்றாமின்னூல்
தன்னூலேகொங்கணவன் ஆயிரத்தில்
தாண்டினனண்டரண்ட முப்பூவாலே
பன்னூலேமச்சமுனி சட்டைநாதர்
பரமானகருவூரார் நந்தியாமே. 35

நந்தியொடுஇடைக்காட்டர் புண்ணாக்கீசர்
நலமானபிரமரிஷி பூனைக்கண்ணர்
சந்தியிலேயாடிவிட்டார் முன்பின்னாக
தயவானகூலமுனி கமலமுனியிவர்கள்
மூந்தியதோர்வழலையைத்தான் மயக்கங்கொண்டு
உழலுவாருலகத்தில் வாதியோர்கள்
அந்தியிலேசந்திரன்பூ வுதித்தாற்போலே
ஆடிவிடவின்னாலின் ஆட்டைக்கேளே. 36

கேளுமேமஞ்சளது பலந்தான்ரெண்டு
கிருபையதோர்மண்கட்டி பச்சைப்பூரம்
வாளுமேலாமச்சு சந்தனமுங்கோஷ்டம்
வளமானசாம்பிராணி யோடேயேலம்
நாறுமேகஸ்தூரி பூலாக்கிழங்கு
நாறுகின்றகாந்தையொடு துளசிபச்சை
ஆறுமேநாவுருவி செம்பருத்திப்பூவும்
ஆவின்கோரோசனையோ டொக்கக்கூட்டே. 37

கூட்டியேசரியிடையா யிடித்துத்தூளை
குங்குமப்பூதனைச்சேர்த்து அடைத்துக்கொண்டு
தாட்டியேபோட்டிடவே பூமிநாதம்
நன்றாகசத்தெடுத்து பூசிச்சொல்ல
காட்டியேயுள்ளபொருள் தந்துவுன்னை

நல்லதிகமோகமும் வசியமாகும்
மாட்டிடவேயிதுவாடை தோணுமப்பா
மாதர்களையழைத்தாக்கால் புணற்செய்யாதே. 38

செய்யாதசத்துருக்கள் பூதமொடுபேய்கள்
சேனையதிராசாக்கள் உலகமெல்லாம்
கையாரதன்வசமே பணிவார்பெண்கள்
காலில்விழச்செய்யுமிந்த வாடைவேகம்
நய்யாதமாந்தரிக மிதற்கொவ்வாது
நலமானஒட்டயமு மிதற்கொவ்வாது
தையென்றஅம்புதான் நேரஞ்செல்லும்
சார்வாகபண்ணிவைக்கும் பரமூலிவாங்கே. 39

பரமூலிவாங்குவது கிடையாவிட்டால்
பாங்கானவித்தையெல்லா மாளுமாளும்
தரவேநீசிற்பறையில் மூடிக்கையில்
தன்னகம்போய்கருந்தும்பைச் சாறுவாங்கி
வரம்நீதாதேவியென்று கேட்டபோது
வடருங்கல்லாணையிட மருவச்சேனை
தாவுநீசொல்லுவென்று கேட்டபோது
தும்மியதுச்சரீறெனவே துலங்குங்காணே. 40

காணுதநிமித்தியந்தான் தண்ணீருள்ளே
காகாத்தாவென்றுசொல்லிக் கடாக்ஷமாச்ச

மானனீயறிந்துகொண்டு செய்வாயானால்
மகிழ்ந்துன்னைநானழைப்பேன் மயங்காதேநீ
தோனைதபேர்களுக்குங் கிட்டாமூலி
திறவுகோல்போலாகுஞ் சூட்சஞ்சொன்னேன்
தானனீயிருந்து பாருபாரு
சாயுச்சியபதமருள்வார் தாயுமீசன். 41

தாயைவிட்டால்வாதத்தில் வர்ணமேது
சாரம்விட்டால்செயநீர்க்குக் காரமேது
வாயுவிநீர்விட்டாக்கால் போகமேது
வரிசைரசங்கெந்திவிட்டால் சிவப்பங்கேது
நோயென்றவீரம்விட்டால் குருவங்கேது
நோக்காததாரம்விட்டால் களங்கமேது
நீநன்றுயிக்கருவைப் பாருபாரு
நிகரில்லைவாதத்திற் காதியாமே. 42

ஆமேநீபால்படியில் மருந்துகேளு
அதிமதுரஞ்சுக்கோடு திப்பிலியுஞ்சீனி
தாமேநீகாய்ச்சிவிட்டு குடித்தாயானல்
கனக்கடுப்புவீக்கமடா வுலேச்சல்பித்தம்
வாமேநீயமூர்தமது ஊரும்ஊரும்
மகிழ்யின்னம்வாதமது சூத்திரந்தான்

நாமேநீ துரிசுலிங்கம் கெந்திகாரம்
களங்கானவரைப்பொடியில் பிசறிக்கிண்டே. 43
கிண்டியபின்னவுரி தன்னை யரைத்துப்பூசி
கருகிடென்னூதுகுகை செம்பாமப்பா
வண்டியறதங்கமொன்று கெந்திரூதம்
வளரவரைச்செந்தூர மருணம்போலாம்
வெண்டியாய்ச்செம்புவதில் நூறுதொந்தம்
மேலானவெள்ளியிலே நூறுதொந்தம்
பண்டிதத்தின்வயித்தியறே யிந்தப்போக்கு
பாருநீமற்றதெல்லா மத்தின்பாகம். 44
பாகமாய்செந்தூர மநுபானத்தில்
பாரிந்தநோய்களெல்லாம் பறந்துபோகும்
தேகமேவச்சிரமிட்ட காயமாகும்
சிவனிவனும்ரிஷிகளெல்லாம் ஏவல்செய்வார்
ஆகமென்றபூரணசூத் திரத்தைப்பாடி
அடக்கிவிட்டேனப்பா கேளுமோக
வாதமொடுவயித்தியமுந் தனக்குத்தோணு
முன்பின்னாய்சொல்லிவைத்தேன் முறையைப்பாரே.
பாரப்பாகெவுனத்தில் கூட்டுமூலம்
பத்துடண்டொருஅளவு நறுக்கிவைத்து
சோப்பாவெள்ளீயங் கட்டியாகச்

சீலைசுற்றி னூறெருவிற் புடத்தைப்போடு
காரப்பாவயிரவனைத் தியானஞ்செய்து
கனலாறியெடுத்துப்பார் பற்பமாகும்
ஆரப்பாமேகவெட்டை வாய்வுசூலை
அகலுமேபொன்னாக இன்னங்கேளே. 46

கேளடாசீனமொன்று தாய்பேர்சாமஞ்
சிவந்தரெண்டுமூன்றுமொன்றாய் பொடித்துக்கொண்டு
வாயடாகட்டுவெள்ளை யெருமைப்பாலால்
மகிழரைத்துதுட்டுக்குப் பூசிக்கொண்டு
ஊளடாஅதின்மூலம் பொதிவுசெய்து
கெடியாகநூறெருவிற் பற்பமாகும்
தூளடாசெய்துகொண்டு சிமிளில்வைத்து
சூட்டுவாய்பிணியனைத்துந் தீருந்தாமே. 47

தானென்றலிங்கசெந் தூரஞ்சொன்னேன்
தாம்பிரப்பொடிவெண்கருவா லரைத்துப்பூசி
மானென்றதேன்வளகில் மூலைப்பால்மேலே
மடல்துத்தம்எருக்கம்பா லதற்குமேலே
காளென்றசாம்பிராணி கூடன்ரெண்டு
காற்சீலைமண்செய்து காடைமூன்று
வேனென்றஜாதிலிங்கம் வெகுநோய்க்காகும்
விளம்புநாற்பத்தெட்டு சூத்திரந்தான்முற்றே. 48

அகஸ்தியர் காரணைசூத்திரம்-48

முற்றிற்று.

அறுபத்தோருவது,

அகஸ்தியமகாமுனிவர்

ரசகுளிகை க-14.

ஆதியந்தமில்லாத சின்மயத்தின்பாதம்
  அகண்டபரிபூரணமாம் ஆத்தாள்பாதம்
சோதிநிறமாகிநின்ற கணேசன்பாதம்
  சொல்தனக்குமெட்டாத சூக்ஷாசூக்ஷம்
வீதியென்றபராபரத்தில் நந்திபாதம்
  வேதாந்தசாஸ்திரத்தின் வெளியின்மார்க்கம்
சோதியெனும்அம்பரத்தில் நடனஞ்செய்த
  சுடரொளியின்பாதமது காப்புதானே. 1

தானென்றஞானிக்குக் குளிகையொன்று
  சாற்றுகிறேன்புலத்தியனே சார்ந்துகேளு
தேனென்றவித்துவல்லோ ரசமுமாகும்
  திரண்டுமணியாவதற்கு வகையைக்கேளு
மானென்றஅக்கினியை புடமுமாகும்
  மக்களேரசமணியின் மார்க்கத்தாலே
ஊனென்றசடத்திலே மணிபோல்செய்து
  உத்தமனேகெவுனத்தில் ஓடலாமே. 2

ஓடலாம்பராபரத்தி னடியிற்குள்ளே
ஓகோகோசொக்குவிக்கும் மணியின்மார்க்கம்
காடெல்லாந்திரிந்தலைந்து ரசத்தைவாங்கி
கட்டியொருமணியாகச் செய்வேனென்று
நாடெல்லாமலைவார்கள் உலுத்தமாண்பர்
நாடென்றவவனிடத்தில் நரகமெய்தும்
பாடெல்லாம்பட்டல்லோ வித்தைக்கண்டால்
பரப்பிரமமணியாகும் பாருபாரே. 3

பாரப்பாவிந்துவைத்தான் மணியாய்ச்செய்ய
பாடுகிறேன்புலத்தியனே ஐயாகேளு
வீரப்பாவுன்னிடத்தில் வாசிதன்னை
திரமாகப்பீஜத்துள் அடக்கியேத்து
காரப்பாவாசிதனைத் தம்பனஞ்செய்து
காட்டுகிறேன்கபாலத்தில் கண்டுகொள்ளு
வீரப்பாநுனிநாக்கை அண்ணாக்கில்மோதி
விளங்குகிறதாமதனை யடைத்துப்பாரே. 4

அடைக்கையிலேகும்மென்று இருட்டிக்காணும்
அலைத்துவிடும்தேகமதை மலைக்கவேண்டாம்
உடைக்கையிலேயவ்விடத்தில் சத்தங்காணும்
ஓங்கிநின்றசுடரொளியுங் கதிரும்வீசும்
படைக்கையிலேவிழிரெண்டு மறைக்கண்பாரு

பருமூக்கின்கழிமீதில் குறிப்பையூணு
கடைக்கையிலேகாதுரெண்டு கசைவுகாணும்
கண்டத்திலெழுவாசல் கதவடைக்கும்பாரே. 5
பாரப்பாஅடைத்துவிடும் வாசலேழும்
பண்பானவாசியது கீழேநோக்கும்
சேரப்பாவாசியது இறங்கும்போது
சிவ்வென்றுசுழிவயற்றை யழுத்திக்கொள்ளும்
காரப்பாநந்தியுட பீடமாகும்
கமறவிடவாசியைத்தான் சுழித்துக்கொள்ளும்
ஆரப்பாலிங்கவட்டம் அபானவாசல்
அடைக்குமடாநந்தியுட வேகந்தானே. 6
தானென்றவாசியது பீஜத்திற்செல்லும்
சரிசரவேசென்றபின்பு சொல்லக்கேளு
மானென்றகபாலமெல்லாம் விம்மல்வாங்கு
மயங்காமல்கெவுனத்தில் உள்ளேசெல்லும்
தேனென்றசுடர்க்கம்பம் கொதிப்புக்கொள்ளும்
சொல்லவென்றால்மயக்கமது காணும்காணும்
ஊனென்றமவுனத்தால் கம்பத்தோரம்
ஒதுங்கிநீபீஜத்தில் மநதையூணே. 7
ஊணவேவாசியது மேலேநோக்கும்
உள்புகுந்துதண்டுவெளி யோடும்பாரு

காணவேசுடர்கம்பங் காண்பதொன்று
காணதற்குள் அஞ்சுதமர் கண்போல்நிற்கும்
ஏணவேஅதுவழியே வாசியேறி
ஏகுமடாகமலத்தி லண்டத்துள்ளே
ஆணவேஅமுர்தத்தில் வாசிசிக்கும்
அப்பவல்லோஅக்கினியும் அதிகமாமே. 8

அதிகமென்றஅக்கினியோ கதிரோகோடி
ஐயையோகண்ணிமைக்குள் அடங்குமோசொல்
பதிகமென்றவிந்துவைத்தான் வாசிதானும்
பம்பரம்போல்சுத்தியல்லோ மணிபோல்பண்ணும்
அதிகமென்றவிந்துமணி சாரணையேசெய்ய
ஆட்டுகிறேன்புலத்தியனே கருதிக்கேளு
அதிகமென்றநுனிநாக்கை யணுப்போல்நீக்கி
உருண்டுவருமணியுடனே வாசிப்பாரே. 9

ப்ராப்பாவிந்துமணி வாசிகூட
படீரென்றேபிரங்கிவிடும் பீசத்துள்ளே
காரப்பாகத்திபிட வழியிற்செல்லும்
காணதற்குள்சுழுண்டுமணி சிக்கிக்கொள்ளும்
ஆரப்பாஅவ்விடத்தில் அக்கினியின்வீடு
அப்பவல்லோஅண்ணாக்கைத் திறந்துமூடி

சேரப்பானூறுதிறம் திறந்துமூடி
சிவந்துருகிவலமாகும் சாரணையாமெண்ணே. 10

எண்ணவேனூற்றெட்டு சாரணையுமாகும்
ஏகுமடாஅண்டத்தின் மணியின்வேகம்
உண்ணவேமுனைநாக்கை அரைவாசிவாங்க
ஓடிவருங்கபாலத்தில் மதிதானப்பா
கண்டவுடனவ்விடத்தில் மணியைவைத்து
கபாலவரைபெறுவாசல் மூடும்போது
நண்ணவேஜடலத்தை யுயரத்தூக்கி
நாலுரெண்டுவரைவரைக்கும் சொக்கும்பாரே. 11

சொக்கவேஅண்டமுதல் திசைகளெட்டும்
சுழண்டுவரும்நிமிஷத்தில் மணியின்வேகம்
தாக்கவேமுன்போலக் கதவைமூட
க்ஷணத்திலேநம்பநுனி மேலேசொல்லும்
சீக்கலேகதவுநுனி சற்றேறணீக்கி
க்ஷணத்திலேயோடிவரு மணிதானப்பா
காக்கவேரசமணியின் மார்க்கஞ்சொன்னேன்
கண்டுகொள்இந்தனூல் தன்னிலாமே. 12

ஆமென்றரசமணியின் வேகத்தாலே
அண்டர்களுமுனிவர்களும் மயங்கினார்கள்

தேனென்றஇம்முறையைச் சொன்னேன்யானும்
சிவஞானிமவுனிக்கும் சொன்னதல்லால்
ஊனென்றுதிறந்திருக்கும் உலுத்தருக்கும்
உற்பனமாயிம்முறையைச் சொன்னயானல்
கானென்றகழுதையுட ஜென்மமாகி
கடைபிறப்பாய்பிறந்திடுவார் கருதிப்பாரே. 13

பார்க்கவேயிம்முறையைச் சொன்னயானல்
பாழானநரகமெய்தும் பாருபாரு
பார்க்கவேசிஷனுட மனதைக்கண்டு
பக்குமுறையாய்சொல்லிவிடு ஞானமார்க்கம்
ஏர்க்கவோசமணியின் மார்க்கந்தானும்
எண்மக்காள்சொல்லிவிட்டேன் மோகமார்க்கம்
சேர்க்கவேயிம்முறையை யுனக்குச்சொன்னேன்
செழுங்கருணைபதினாலில் கடாக்ஷமுற்றே. 14

அகஸ்தியர் ரசகுளிகை-14

முற்றிற்று.

சிவமயம்.

அறுபத்திரண்டாவது,

போகநாயனார் அருளிச்செய்த

பூஜாவிதி - 37.

பராசத்தி பூசை.

பாரப்பாவாலைதனைத் தியானஞ்செய்யப்
பாங்கானநவகோண மிட்டுச்சூழ
சேரப்பாவிருவளைய வாசல்நாலு
சிகாரமுதரீங்கார மிட்டுநன்றாய்க்
காரப்பாகீழ்வாசல் கணபதியும்கந்தன்
கருணையுள்ளசெய்வீர வாகுதேவர்
ஆரப்பாஅரைகள்முதல் கிழக்குத்தொட்டு
அகாரமுடன்உகாரசவ் வகாரம்போடே. 1

சவ்வூடேஓங்கிலீங் காரமிட்டுத்
தடுத்துநின்றமயேஸ்வரியை நடுவேவைத்து
செவ்வேதான்முழ்மூலச் சூலம்போட்டு
சிகாரங்காரமதிற் சிறக்கப்போட்டு
யவ்வவ்வுகாரமடி கீழேயிட்டு
வாலீலூவென்றமுடி மேலேபோட்டு

வவ்வோடேயிருபுறமும் சக்கரங்கள்போட்டு
வாலைதனைநடுவீட்டில் மதித்திடாயே. 2

மதித்திருந்தவாலையிட வலபாகத்தில்
மயேசுரனும்விந்துவதில் வளையம்போட்டு
விதித்திருந்தமூல ஓங்காரம்தன்னை
வீறுகவிடப்புறத்தே மேவிப்போட்டு
சதித்திருந்தவடுகனொடு துர்க்கைகாளி
சாமுண்டிமாலினியும் வாரகிதானும்
விதித்திருந்தஉன்மனையும் புவனைதானும்
வீறுகவாசலிலே வைத்துப்போற்றே. 3

போற்றென்றால்கெந்தைக்கு நந்தியீசர்
புகழாகவிந்தமுறை யெனக்குச்சொன்னார்
ஆற்றென்றும்கொங்கணர்க்கு யானுஞ்சொன்னேன்
அப்படியேகண்டவர்க்கு கொங்கணர்தான்சொன்னார்
சேற்றென்றுபூரணத்தின் விசாலம்போல
இயல்பாகச்சித்தரெல்லா மிப்படியேசெய்வார்
மாற்றென்றசமயோக மெனமுறைதானிற்கும்
வாதகமேருவென்று நாமஞ்சொல்லும்
காற்றென்றுவாலைதனை நித்தநித்தம்
கருணைமறவாமல்நீ பூசைசெய்யே. 4

பூசையதுசெய்வதற்கு வாதஞ்சித்தி
பூண்டிருந்தால்காயசித்தி யோகசித்தி
ஆசையென்றுபேரின்ப ஞானமெய்தும்
அண்டபகிரண்டமெல்லா மடியிற்போற்று
மாசையென்றபலவிதங்க ளெல்லாம்வீழு
மாறுவிதமறியாமல் மாண்டார்சுவாமி
காசையென்றும்தேடுகின்ற சண்டாளர்க்கு
காணுதுகெதியில்லை கடினந்தானே. ௫

காணுதுநின்றுதைத்த வாலைதன்னைக்
கண்மூச்சுமத்தியிலே கருதிப்பாரு
தோணுதுமற்றொன்று குருக்கள்பேதம்
சொற்பேதம்பொருட்பேதம் துறையோர்பேதம்
பூணுதுவேதமொடு சாத்திரங்கள்பேதம்
பொற்பதுமைபோலிருக்கும் பொறுக்கள்வாடி
கோணுதுநின்றவரே குருவைக்காண்பார்
குருக்காணானைக்கண்ட குருடராமே. ௬

ஆமப்பாயிதுவல்லோ தசதீட்சையென்று
அறிவுடையபெரியோர்க ளறிவிப்பார்காண்
ஓமப்பாமூலமென்ற மந்திரத்தைக்கேளு
ஒருமொழியாய்மூலகுரு வுபதேசித்தார்

வேமப்பாஜயென்றுங் கிலியுமென்று
வீறுடையசவ்வென்று மூலமூன்றுஞ்
சாமப்பாசஞ்சிதம் பிரார்த்தகாமியன்
தலைமாறிஜலையிலே வரைந்திடாயே. 7

வரைந்தமூன்றெழுத்துத் தலைதூக்காக
வாள்கடுகுவெந்தயமு மோமங்கூட
விரைந்துள்ளிகாயமிவை யைந்துநோய்
மீறுமற்சாமமரைத் தகட்டிற்பூசி
நிரைந்தபகையாரென்ன நாமஞ்சொல்ல
நிமிஷத்திற்றணல்காட்ட நீறிப்போகும்
மரைந்தபரைசிவனும் வெல்லப்போகா
பாரித்தில்பொறிபோலே பகற்றுந்தானே. 8

தானென்றவிப்பொருளை விஞ்சைஎன்றுசொல்வார்
தவமாகுமவமாகுஞ் சராசரங்களாகும்
தேனென்றமதுவாகு மாறுதல்காணுஞ்
சித்தியுடன்குளிகைநன்ருய் சிக்கிக்கொள்ளும்
கோனென்றபுவனையைப் பூசைபண்ணக்
குறியாகச்சொல்லுகிறேன் குவிந்துகேளு
பாலென்றமதுவோபார் பலகாரங்கள்
பாங்கானசித்தியொன்று படைத்திடாயே. 9

படைத்தெல்லோபதியவொரு காட்டிகூட்டி
பராபரமாஞ்சடத்தைமுன்னே சுத்திசெய்து
அடைத்தல்லோபத்திரங்க ளைந்துவைத்து
அப்பனேதூபமொடு தீபமேற்றி
முறைத்தல்லோகந்தபுட்பத்தா லர்ச்சனைகள்செய்து
முறையோடேசித்தரிட சாபம்தீர்த்து
விடைத்தல்லோபோகாமல் மனதிடத்தைக்கொண்டு
வீறுகபூசித்துப் புசித்திடாயே. 10

புசித்தவுடன்சொக்கிவிடும் பூரணத்திலன்பு
பொல்லாதபாவியென்றால் மாய்கைமூடும்
படுத்தல்லோசெத்தார்க ளுலகத்தோர்கள்
பசியாதுவாலைதனைப் பணிவோர்க்கென்று
நிசித்தல்லோஈராறு சமயத்தோர்கள்
நிதியற்றார்கதியற்றார் நிர்மூடமானால்
கசிந்தாக்கால்தணிந்தாக்கால் எல்லாசித்தி
கனியாட்டாலொன்றுமில்லை கண்டுபாரே. 11

கண்டுகண்டுமனந்தேறி நிலையில்நிற்கக்
காரணமும்பூரணமும் கலந்துபோகும்
மொண்டுமொண்டுஇளைப்பாறி யனைத்தும்விட்டு
மூலமுதநாள்வரைக்கும் முடிவிலேறி

தண்டுமுண்டுசெய்யாமல் மூன்றெழுத்தைபோற்றிச்
சச்சிதானந்தமென் றறிவில்நின்று
தொண்டுசெய்யப்பரையுனது வசமேயாவாள்
துரியம்விட்டுஅதிகமதிற் றொடர்ந்துகூடே. 12

கூடியங்கேயவரவரைக் கண்டுபேசு
கூசாமலனவரதம் குழறியாடு
தேடியெங்குமிந்தமுறை கிட்டாதப்பா
தேவிமுதல்சிவனங்கே திருநடனஞ்செய்வார்
நாடிநின் றுவாடாதே யென்றுதாய்பூசி
நல்லவர்க்குமெய்துமடா கன்மிக்கில்லை
பாடியிந்தமதின்மூன்று பாட்டுக்குள்ளே
பரபூசைசிவபூசை பணிந்திடாயே. 13

அஷ்டாங்கபூசை.

பணிந்துநின்றஅஷ்டாங்க முறையைக்கேளு
பண்பாகப்பெரியோர்கள் முன்பின்னைச்சொன்னார்
பணிந்துநின்றபிராணயாமம் முதலாயுள்ள
அளப்பரியவபிவிர்த்தி யாகாரந்தானும்
தணிந்திட்டபூரகமுஞ் சகத்திநூடே
தாளாதகும்பகமு மூன்றுமொன்றாய்க்
கணிந்திட்டயிடைபின்கலை சுழிமுனையிளேடு
கலந்துநின்றவித்திலொரு கருவைக்கேளே. 14

கருவென்னசையோகன் காமவித்தை
காலூர்களுலகத்தில் கன்மயோகி
கருவென்னகால்வேளை யுணரும்போது
ஓங்காரம்நின்றிடத்தே வித்தைபாய்ச்ச
வருவென்னவாவென்று வாங்கிக்கொண்டு
வாய்பேசாமூலத்தோ வனத்தைவைத்து
தருவென்னநீயென்ன விரண்டுமொன்று
தடையாரவேகேட்டதெல்லாந் தருகும்தானே. 15

தானென்றமாதர்களைச் சம்போகித்தேன்
தாரணியில்போகரென்று பேருங்கொண்டேன்
ஊனென்றயோகமென்ன சையோகமப்பா
ஒருமனதாமொருநினைவா யுரைத்துக்கொண்டு
கோனென்றசராசரங்கள் மாறியோடும்
குறிப்பறிந்துநெறியறிந்து கூடுகூடு
வேனென்றசந்திரனில் பூரணந்தானால்
வெகுகாமிவெகுபோகி பிராணனுமே. 16

பிராணனுமென்றென்றுஞ் சாகாதப்பா
போரானசயனத்தில் யோகங்கேளு
பிராணனுஞ்சாகாத்திற் சரிந்தாயானாற்
பின்னுமில்லைமுன்னுமில்லை சுழியிதேற்றம்

பிராணனென்றகல்வியிலே சையோகித்தார்
பிரியமிட்டுநீங்காது பேருமெத்த
பிராணனும்நந்தலொடு எழுதல்தானும்
பிறந்துநின்றசாய்தலொடு சரிதனாலே. 17

காலென்றகல்வியிலே யோகம்நாலு
நல்லவர்களறிவார்கள் வீணர்காணார்
காலென்றவிரண்டாலே காலைக்கட்டிக்
கனியாதுகாயமப்பா கல்லுகல்லு
பாலென்றுங்கொள்ளாட்டால் காலடிபோலாகும்
மயங்கினாக்கிலிடை வந்துமீளும்
பாலென்றசுந்தானும் பாலையுண்டு
பதையாமற்றிகையாமல் பாய்ந்துயேறே. 18

பாய்ந்தேறியிருக்கவென்றால் குளிகைகேளு
பாதரைநாதஞ்சிவ்விந்து இரண்டுங்கூட்டி
வாய்ந்தடியில்விழிமடவார் விந்திலோர்நாள்
வளமாகமந்தித்து வைத்துப்பின்னுஞ்
சாய்ந்தலொடுவழுதலொடு மணிதனுக்கு
தவறாமல்மணிதனுக்குப் பூசிபூசி
காய்ந்தபின்புகாடையொரு புடத்தைப்போடு
கானமாமணிக்கெவுனக் குளிகையாமே. 19

ஆகுமிந்தமணிதனுக்குச் சாரணையேகேளு
ஆயிரத்தொண்மூலியொடு சரக்கோடெட்டி
ஓமிந்தகரத்தில்வைத்துப் புடமேசெய்தால்
ஓகோகோசடத்தோடே வுயரத்தூக்கும்
தாமிந்தவரையாறுள் ளெந்துபாயும்
தாயானவன்மனையைத் தாண்டியோடும்
வோமிந்தஅண்டபகி ரண்டத்தப்பால்
போய்மீளும்பூரணத்தில் பொருந்துந்தானே. 20

தானென்றஞானத்தில் கருவைக்கேளு
தப்பாதுநானுரைத்த தத்வஞானம்
ஊனென்றசடத்திற்கு ளிந்திரியம்பத்து
உற்பனமாம்காணமொடு பதினலுந்தான்
கானென்றசெடியொன்று தள்ளிப்போட்டு
காரணமாஞ்சித்தத்தே முளைமூலத்தே
மேனென்றுசயனித்து நித்திரையேசெய்தால்
வினையில்லைசிவஞானம் விளங்குந்தானே. 21

விளங்குகின்றமுன்னுரைத்த மணியைமைந்தா
வீறுகைஅப்பிரக மாதர்விந்தில்
கலங்கிதென்று அரைத்திந்த மணிக்குப்பூசிக்
கண்விடாச்சட்டியிலே கல்லுப்புட்டு

முளங்குகின்றஉப்பின்மேல் மணியைவைத்து
முன்போலேயதின்மேலே உப்பையிட்டு
தளங்குதென்றுஅடுப்பேற்றிச் சீலைமண்செய்து
தர்ப்பதத்தையர்ச்சித்து எரித்திடாயே. 22

எரித்தெடுத்தசெந்தூர முருக்கம்பூப்போல்
இருக்குமடாபணவிடைதான் தேனிற்கொள்ளு
எரித்தசெந்தூரமண்டலந் தானுமுண்டால்
ஈரெட்டுவயதாவான் மௌனமாய்நின்று
எரித்தசெந்தூரமது மகிமைமெத்த
யெடுத்துரைப்பேனுந்தனுக்காய் கண்ணேகேளு
மெரித்தெடுத்தசெந்தூர மொருபாலீய
இருநூறுதாம்பிறந்தான் சொர்னமாமே. 23

ஆமப்பாயிப்பொருளால் ஒவகுகோடிகால
மாடினேனுடினேன் மாதர்களைமேவி
காமப்பாயுகமென்று லெத்தனையோகாணே
னொருமனதாய்ச்சுழுத்தியொடு துரியங்காணல்
காமப்பாதவசிருந்தோம் யோகஞ்செய்தோம்
நாதாக்களிக்குருவை நாடிக்காணூர்
வேமப்பாஅடியோடு முடிகள்தானும்
வேதாந்தங்கடந்தவிடம் விளைந்துகூடே. 24

கூடியந்தநாகபற்பம் கொள்ளுமைந்தா
கோளில்லைநாளில்லை குறையுமில்லை
ஆடியந்தஅம்பலத்தை நித்தம்நித்தம்
ஆயியிடஆட்டெல்லா மறியலாகும்
தேடியந்தவிருவரிட நிலையுங்கண்டால்
சிவமென்னபரமென்ன தேகந்தேகம்
வாடிநின்றுதேடாதே தன்னைப்பாரு
வடிவென்னவிந்துவிட வடிவுதானே. 25

வடிவென்னவாலையுட நாடிமூன்று
மணிபுதருமத்தியிலே வளைத்துமூடி
வடிவென்னயினமன்றில் நிட்களங்கமாக
மகத்தானசோதியுடன் கலந்துநிற்கும்
கடிவென்னஈராறு சமையம்விட்டு
சத்துநின்றபூசையொடு தியானம்விட்டு
முடிவென்னஒன்றுமில்லை எல்லாமையா
முன்னின்றநீயல்லாப் பொருள்காணேனே. 26

பொருள்கோணச்சக்கரத்தில் ஞானயோகம்
பூட்டினேனட்டாங்கம் பிரிந்துசொன்னேன்
அருள்காணவழியொன்று மிதுவேகாணும்
ஆயிக்குமெட்டாது அறிவிற்காணும்

இருள்காணுஞ்சமையத்தில் சோர்ச்சேர்க்கை
யென்றுநின்றறிவா லறிவெல்லாமொன்ருய்
வெருளாமற்பூரணத்தி லிலக்கியஞ்செய்து
மேற்கொள்வாய்பானத்தின் பெருமைகேளே. 27

பானத்தின் பெருமை.

பானமென்றும்வஸ்துவென்று மமிர்தமென்றும்
பாங்கானமதுவென்று காமதூரமென்றும்
ஈனமுறுக்கனென்றுஞ் செயநீரென்றும்
இயல்பாகச்சாருயம் வெரிநீரென்றும்
கானறுதேனென்றுங் கன்மமென்றும்
கரையற்றலகிரியென்று மனவேதியென்று
மோனமுறுவாயுவென்றும் புகைநீரென்றும்
மூச்சற்றமதியமிர்த தீநீர்தானே. 28

தீநீறும்திராவகமுஞ் செயநீரென்றுந்
திறமாகத்தீர்த்தமென்றுந் தண்ணீரென்றுந்
தாய்நீராய்முத்திதனைக் கெடுப்பாரென்றுஞ்
சாயுச்சியமோக்ஷத்தைத் தருவாரென்றுந்
தோய்நீராம்பூதங்கட் குயிர்த்தானென்றும்
துரியத்தில்நடம்புரிந்த சோதியென்று

மாயிநீராயண்டபகி ரண்டத்தப்பால்
ஆதிவிந்துந்தொடர்ந்துநின்ற மூலங்காணே. 29

மூலமென்றபானத்தின் மகிமைதன்னை
மொழிந்திடவுநாவுமுண்டோ பாவுமுண்டோ
ஆலமுண்டசிவன்தேவி தனையழைத்து
அறுபத்துநாலுசித்து அடியாராட
கோலமென்றவிதமேது என்றுகேட்கக்
கோமளையுமாருடனே கூர்ந்துசொல்வாள்
ஞாலமென்றபிரபஞ்ச பெரியோரெல்லாம்
நாதாந்தப்பிரணவத்தைப் பூசித்தாரே. 30

பூசித்தார்சத்திதன் பாதமென்று
போற்றினாகையாற் சித்தியாச்சு
ஆச்சிந்தபொருளெல்லாம் மானத்தாலே
யாடலாம்பாடலாம் மண்டரண்டம்
வாச்சிந்தவாமமென்ற பெண்தானப்பா
வாதமாம்போகமாம் ஞானமாகும்
நேச்சிந்தகாயசித்தம் குளிகைசெய்து
நோகளைந்துவிதம் நடந்தபேச்சே. 31

பேச்சென்றபேச்செல்லாம் வஸ்துவாலே
பேசாதமவுனமெல்லாம் வஸ்துவாலே

நாச்சென்றபூரணமாம் வஸ்துவாலே
  நீங்காதவைம்பூதம் வஸ்துவாலே
பாச்சென்றபஞ்சகத்தாள் வஸ்துவாலே
  பரமரிஷிதேவரெல்லாம் வஸ்துவாலே
மூச்சென்றசித்தர்களு முனிவருந்தான்
  முடிமூலமென்றவஸ்து வுள்முடிவுதானே. 32

முடியாதகருமமெல்லாம் முடிக்கும்பான
  முக்காலமுக்குணத்தின் முதலாம்பாகம்
அடியார்கள்நினைத்தபடி நல்கும்பானம்
  ஆதிவஸ்துமனாதிவஸ்து ரண்டுபானம்
விடியாதகங்குல்பக லாகும்பானம்
  வேதாந்தப்பெரியோர்கள் விளங்கும்பானம். 33

கூறியதோர்பானத்தால் பதங்களாச்சு
  கோடானகோடிபேர் கொண்டபானம்
ஆறியதோர்காமுகரைக் கதிகொடுத்து
  மாளானநரகத்தில் மாட்டும்பானம்
தேடியதோர்கேட்டெல்லாம் பானம்பானம்
  தெரியாமலுலகத்தோர் திகைத்தபானம்
மீறியதோர்கணபதியு முருகன்தானும்
  வெற்றியுயிரவிமதியும் விள்ளக்கேளே. 34

விள்ளுவேன்மன்மதனும் அஷ்டபாலர்
வேளசுராசன் விசுவாமித்திரர்
விள்ளுவேன்விஷ்ணுவும் வசிஷ்டர்தாமும்
வியாக்கிரபாதாளமுதல் பதினெண்பேரும்
விள்ளுவேனகத்தியருஞ் சைவர்தாமும்
வேதாந்தபெரியோரும் வேதியோரும்
விள்ளுவேனீரேழு லோகத்தாரும்
மென்கமலஅர்ச்சனையாம் மேலானரே. 35

மேலானஅர்ச்சனையாம் பானத்தாலே
மேதினியுளெட்டெட்டுத் தொழிலுநன்றாய்
காலாலேகடந்துசென்றால் போகலாகும்
காலைவிட்டுத்தலையாலே நடந்தாராகில்
சேலேதுவலுவேது அப்படிதானையா
திறமாகக்காலாகும் வாமம்வாமம்
ஆலாலவிஷமுண்ட யீசனப்போ
அறம்பாவமிரண்டுக்கு மாளென்றாரே. 36

ஆளில்லையென்றுசொன்னார் பெரியோர்தம்மை
அழைப்பித்துயாவருந்த னருள்சேராமல்
பாழ்புனலகரியொடு நாற்றமாய்கை
பாசமுடன்குரோதமத லோபமோகம்

விளாதஅகங்காரம் களவுகாமம்
வெண்சமருங்குலைமுதலாய் வினையுண்டாக்கி
மாளாமல்மாளவென்று சாபம்நல்கி
மானிலத்திலீசருக்கா மென்றிட்டாரே. 37

போகநாயனார் பூஜாவிதி-37

முற்றிற்று.

உ

சிவமயம்.

அறுபத்திமூன்றுவது,

போகநாயனார்

சூடலைசூத்திரம்-6.

வங்கென்றவெழுத்துக்கு வகாரமாகும்
வரவழைக்கும்வித்தையெல்லா மவத்திலாடும்
அங்கென்றவெழுத்துக்கு பூமிபீடம்
ஆவியுடபதங்காண மறிவிற்சேர்க்குஞ்
சிங்கென்றவெழுத்துக்கு விடங்கண்டந்தான்
றேகமதுநிட்சயமா யாகுஞ்சொன்னேன்
உங்கென்றுவுண்டவர்க் கெல்லாம்சித்தி
வுத்தமியாள்பதமறிய வுரைத்திட்டேனே. 1

இட்டமுடனின்னமொன்று சொல்லக்கேளு
யின்பமாய்ச்சட்டமுனி நூறும்பாரு
விட்டகுறைவந்ததென்றாற் பற்பமுண்ணு
வேதாந்தமூர்த்தியென்று விழுதுவாங்கி
அட்டியென்னுஞ்சொல்லாதே யாட்பார்க்காதே
யகங்காரமாய்கையிலே வழிந்திடாதே
வெட்டவெளியாகுமடா வறிந்தபேர்க்கு
மெஞ்ஞானங்கண்டவற்கு வெளியுமாமே. 2

வெளியாகவெளிக்குள்ளே யிருந்தமூலி
வேகமாய்க்கைகொண்டு தைலம்வாங்கி
பழியாதகாசிடைதான் கொண்டாயானாற்
பறக்குமடாநாற்றிசையும் பயந்துபோகு
மழியாதேசுமப்பா ஆத்தாள்சொன்னு
ளன்றல்லோசித்தரெல்லா மழைத்துக்கொள்வார்
வெளியானவெளிக்குள்ளே மெய்யோகாண்பாய்
வேதாந்தசாரமெல்லாம் வெளியாய்ப்போமே. 3

போக்குடனேபூசையைத்தான் சொல்லக்கேளு
புத்தியுள்ளசீடருக்கும் புகழுண்டாக
நாக்குடனேபேசாதே வட்டம்போட்டு
நாயகியாள்முக்கோணம் நடுவேநாட்டு
ஆக்கமுடன்சூலமிட்டு வதுக்குள்நீதா
னையனேஓமென்று மொழிந்திடாயே
மூர்க்கமுள்ளவட்டமுக மிருந்துகொண்டு
முத்திதரவேணுமென்று மொழிந்திடாயே. 4

மொழிந்திடவேவலக்கரத்தில் கடத்தைவாங்கி
மோனத்தாற்சாபத்தை நிவர்த்திசெய்து
தெளிந்திடவேவேணுமென்று தாய்பாதத்திற்
றிவ்வியமுள்ளபத்திரமோ ரைந்தும்சாத்தி
குளிர்ந்திருந்தவண்ணமோ டன்னசுத்தி

கொள்கியதோர் அடைக்கிலையும் பாக்கும்வைத்து
பளிங்கொளிபோல்நின் றவட்கு பழமுந்தேங்காய்
பாலோடுதேன்கரும்பும் பூசிப்பாயே. 5

பூசிப்பாய்த்தூபமொடு தீபங்காட்டி
போகருடயெட்டெழுத்தை வர்ச்சனையேசெய்து
நேசிப்பாயுபசார மனேகஞ்செய்து
நிஷ்டையுள்ளதாய்தந்தை நினைவிற்கொண்டு
பாசிப்பாய்சாஸ்திரங்கள் கோடாகோடி
மனோன்மணியே மாதாவேமா தங்கினீலி
பூசிப்பாய்மந்திரங்க ளனந்தங்கோடி
உத்தமியாள்பாதமது வுகந்ததானால்
ஆசிப்பாயதின்பிறகு ஆத்தாள்தந்தை
வன்பானபூரணத்தி னருள்தான்முற்றே. 6

போகர் சுடலைசூத்திரம்-6

முற்றிற்று.

அறுபத்திஞன்காவது,

போகநாயஞர்,

மூக்கோண சக்கரமகிமை-10.

காணவேமூலமது அண்டம்போலக் காரணமாய்த் திரிகோணமாகநிற்கும், பூணவே மூன்றின்மேல் வளைய மாகும் பிரம்பாக மிதழதுதா ஞலுமாகும், காணவே நாற்கமலத் தட்சரத்தைக்கேளு நலமான வயனமசிரீ யாகு, மூணவே முக்கோணத் துள்ளொலி வோங்கார முயற்சியாயதற்குள்ளே யகாரமாமே. 1

அகாரத்தின் மேலாகக் கணேசனிற்பார் ஆதியொரு கோணத்தின் உகாரம் நிற்கும், உகாரத்தில் வல்லபை யாள் சத்திநிற்பாள் ஒடுங்கியதோர் முனையொன்றில் கதலிப்பூவாய், எகாரமாய் முகங்கீழ்குண் டலியாஞ்சத்தி பெண்பாம்பு போலுருட்டிச் சீறிக்கொண்டு, சிகாரமா ய்ச் சுழிமுனையோ டுருவிநிற்பாள் துரியாதீதமென்ற அவத்தைதானே. 2

அவத்தைக்கு மிருப்பிடமு மூலமாகும் அழகான கத லிப்பூ வெட்டிதழாய்நிற்கும், நவத்தைக்கும் நந்தியனுள் வாயில்நிற்பாள் நற்சிவமாஞ் சிகாரத்தில் கோடியானும்,

வவத்தைக்கும் வாய்திரவான் மலராய்மூடும் மைந்தனே யெட்டிதழி லெட்டுசத்தி, பவத்தைக்குச் சத்தியெட் டின்மேலேதென்றால் பாங்கான அணிமாவும் லகிமாத் தானே. 3

தானானலகிமாவும் கிரிமாவோடு தங்குயீசுரசத்து சத் தில்சத்தி, பூணைபிராசத்தி பிரகாமிசத்தி பேரெட்டுத் தேவதையுந் தனத்தில்நின்று, ஏனையிதழாலே மூடிக் கொள்வார் ஏத்தமாம் நந்தியைத்தான் காணாமல், வானானவஸ்துவைநீ பானம்பண்ணி வங்கென்றுவாங் கியே கும்பிட்டுதே. 4

ஊதிறென்வசத்தி லகிரியாதே உலாவுவாரிதழெல் லாந் திறந்துவிட்டு, போதிலாயிசொன்ன யேவல் கேளு பூந்துபார் நந்திகண்டால் யோகமாகும், வாதி லல் பத்தான வருவித்துக்கும் வாசலையே திறவாமல் மூடிக்கொள்வா, னேதிலிதுக்குள்ளே வாசிமாட்டி யிடத்தோடி வங்கென்று உள்ளேவாங்கே. 5

வாங்கியே நந்திதனில் சிங்கென்றுகும்பி வலத்தோ டில் சிங்கென்று உள்ளேவாங்கி, தாங்கியே வங்கென்று யிழுத்துக்கும்பி தனமான தெளிவாறும் வெளியாய் காணும், ஓங்கியே மாணிக்க வொளியே ரோன்றும் உத்தமனே மூலத்தி னுண்மைகாணுந், தேங்கியே வல்

லையாஞ் சத்திதானுஞ் சிறந்திருந்தாள் பச்சைநிற மாகத்தானே. 6

பச்சைநிறம் வல்லபையைப் பணிந்துபோற்றி பாங்கான ஆறுக்கும் பருவஞ்சொன்னல், மொச்சையாய் மூலமது சித்தியானல் மூவுலகுஞ் சஞ்சரித்து திரியலாகும், கச்சைநிறக் காயமுமோ கனிந்துமின்னுங் கசடகன்று ஆறுதலந் தன்னில்தோன்றும், துச்சைநிற வாதமது சொன்னபடிகேட்குந் துரியத்தின் சூட்சமெல்லாந் தோன்றும்பாரே. 7

பாரென்றுபுரியட்ட நாலில்சேர்க்கும் பளிச்சென்று மூலத்தில் சோதிகாணும், காரென்ற தீபவொளி கண்ணைகூசுங் கணபதிதான் கண்முன்னே நிர்த்தஞ்செய்வார், ஊரென்றயோகத்துக் குறுதிசொல்வார் உற்பனமாம் வாதத்தி னுண்மைசொல்வார், நேரென்ற சதாசிவத்தி னிலையுஞ்சொல்வார் நீச்சென்று விட்டாக்கால் யோகம்போச்சே. 8

போச்சென்றுவிடுகாதே மூலந்தன்னைப் போகையிலு மிருக்கையிலு மனத்தையூனு, பேச்சென்ற பிரசத்தங் கேளாபக்கம் புறத்திருந்து லட்சியத்தைப் பூட்டிவாங்கு, மாச்சென்று வாசியைநீ தவறுட்டாதே மனந்தன்னை மூலத்தில் மருவிச்சேர்க்கும், வேச்சென்று கடினம்

போல் முன்னேகாணும் விடுகாதே மாச்சலாய் விரைந்து உன்னே. 9

உன்னியே பழுகுமட்டும் கடுசாய்க்காணு முட்புகுந்து பார்த்துவந்தா லுறுதிகூடும், வன்னியே துலங்கமட்டு மனச்சலேக்கு மாசற்ற வொளிவுகண்டால் மகிழ்ச்சியாகும், பின்னியே பின்கலேயி லிடையில் கூடும் போரான சுழினைதன்னில் நெட்டிட்டேறும், நன்னியே நமன்வெகுண்டு அப்பாற்போவார் ளுளெல்லாங் கடிகையுமாய் நாட்டமாமே. 10

போகர் முக்கோணசக்கரமகிமை-10

முற்றிற்று.

உ

சிவமயம்.

அறுபத்தைந்தாவது,

போகமுனிவர்

பரங்கிபாஷாண வைப்பு - 8.

கூட்டியேமும்முறைதான் செய்தாயானால்
கொடுசிவப்பாய்சவ்வீர மிருக்கும்பாரு
நீட்டியேசிறுவிஷமும் பலமுமஞ்சு
நெடியானஅலரிவேர் பட்டைபலம்பத்து
வாட்டியேகெந்தகந்தான் பலமும்ரெண்டு
முட்டையாமஞ்சளென்ற கருவாலாட்டி
மூட்டியேவில்லைபண்ணிப் புடத்தைலம்வாங்கி
வகையானவீரத்தில் சுருக்குப்போடே. 1

போட்டுடனேமெழுகான பதத்தில்வாங்கிப்
போரானரேக்குசுற்றிவைக்கத் தின்னுப்போடும்
நீட்டுடனேவுள்ளுக்கு நாலுதங்கம்
நிகழாமல்சுற்றிவைக்கத் தின்னுப்போடும்
மூட்டுடனேஆயிரத்துக் கொன்றேயீய
முசியாதேபதினாறு மாற்றுமாகும்
மாட்டுடனேவுபசாரங்க ளீயமாகு
மாசற்றவீரத்தை யொளித்தார்பாரே. 2

ஒளித்தாரேநாதாக்க ளென்றுசொல்லி
உத்தமித்தாய்பாதத்துக் குண்மையாக
அளித்தாரேலோகத்தோர் பிழைக்கவென்று
ஆச்சரியம்வீரம்விட்டால் வாதம்போச்சு
களித்தாரேமுன்சொன்ன வீரமெல்லாங்
காரமிடும்வயித்தியத்துக் காகுஞ்சொன்னேன்
களித்தாயேயமமொன்றுங் காணுநேங்கிக்
கணங்களாய்க்கெட்டலைந்து மாள்வான்றானே. 3

மாளாமல்பரங்கியென்ற பாஷாணத்தை
மகிழ்வாகவைக்கிறதோர் முறையைக்கேளு
தாளாமல்சூதமொரு பலந்தான்பத்து
சாதகமாய்க்கல்லுப்புப் பலந்தானெட்டு
மீளாமல்வெள்ளையென்ற பாஷாணமைந்து
விரவியேகல்வத்திற் பொடித்துக்கொண்டு
கேளாமல்திராவகத்தா லெட்டுநாளாட்டிக்
கெடியாகப்பொடிபண்ணி மேருக்கேற்றே. 4

மேருக்கேயேற்றியபின் வாலுகையில்வைத்து
விதமாகத்தீயிடுங்கள் பனிரண்டுசாமம்
பேருக்கேபதங்கமது யிறங்கியேறும்
பெருந்தேங்காய்போலிருக்கும் பாஷாணந்தான்
பேருக்கேமுன்போல மருந்துகூட்டிப்

பேசாதேதிராவகத்தை விட்டுஆட்டிப்
பாருக்கேபொடிபண்ணி மேருக்கேற்றிப்
பக்குவமாய்வாலுகையில் பதித்திடாயே. 5

பதித்திட்டுப்பனிரெண்டு சாமந்தீயை
பகல்முழுதுமெரியிட்டு ஆறிப்போட்டு
விதித்திட்டபக்குவத்தி லிறக்கிப்பாரு
மேலோடுதள்ளியே பொடியாய்ப்பண்ணு
மதித்திட்டமுன்போல மருந்துகூட்டி
மறவாதேமூன்றுதரந் திறந்தாயானல்
கதித்திட்டுபறங்கியென்ற பாஷாணமாகும்
கண்ணிமைக்குள்ரசிதவித்தை யாகும்பாரே. 6

பாரப்பாபரங்கியென்ற பாஷாணந்தான்
பலமெடுத்துஅயச்சட்டிக் குள்ளேவைத்து
நேரப்பாதுண்டிப்பால் நாலுசாமம்
நீந்தாதேசுருக்கிடவே மெழுகாய்ப்போகும்
தூரப்பாயிரும்புசெம்பில் நூற்றுக்கொன்று
துடியானரசிதமது பதினறும்
சீரப்பாசரக்கெல்லாங் கட்டிப்போகும்
சிறுபிள்ளைபாடுமிந்த வாதந்தானே. 7

வாதமென்றால்கொஞ்சத்தில் கிடைக்குமோதான்
மகத்தானயோகிமுதல் ரிஷிகள்சித்தர்

நீதமென்றபஞ்சகர்த்தா ளிவர்களெல்லாம்
நேர்ப்பாகர்ப்பையிலுந் தப்பிப்போகும்
வேதமென்றஅந்தரத்தின் முடிவுகேழ்க்கும்
விரைந்தமஞேன்மணித்தாயார் சொல்லயானும்
பாதமென்றன்சிரசில்வைத்துக் கேட்டுக்கேட்டுப்
பரிவாகப்பிள்ளேகட்கா வுரைசெய்தேனே. 8

போகர் பரங்கிபாஷாணவைப்பு-8

முற்றிற்று.

சிவமயம்.

அறுபத்தாறுவது,

போகமுனிவர்

காத்தாடி வித்தை-9.

தானானபிரமகோடி வித்தைசெய்தேன்
தாக்கானகாத்தாடி வித்தைவித்தை
மானானவித்தையிலு மதிகவித்தை
மாணாக்கன்புகலுகிறேன் மகிமைகேளு
வேனானபட்டமது கெஜமோபத்து
வேகமுடன்நீளமது கெஜமோபத்து
பானானவட்டமது நடுவட்டந்தான்
பாங்குடனேவுள்வட்ட முழுந்தான்ரெண்டே. 1

இரண்டானபக்கவட்ட மூன்றேயாகு
மெழிலானநெடுவட்டம் நாலேயாகு
முரண்டானவெளிவட்டம் சக்கரம்போல்
முகத்தினுள்வட்டம் கமலமாகும்
திரண்டானகற்றோரம் கம்பியப்பா
திரளானகம்பிகளில் காதுரண்டாம்
உருண்டானநடுக்கம்பில் சூட்சாதாரம்
வுத்தமனேபுரம்வட்ட வளையமாமே. 2

வளையுடனேஒவ்வொன்றில் கொலுசுமாகும்
 வரிகளிலேகாந்தமது சத்தேயாகும்
களையுடனேநாரென்ற பட்டேயாகும்
 கம்பிகளில்தையல்களை வோட்டவேணும்
துளையானகொலுசுகளில் குண்டேயாகும்
 தோருதகயிறுகளில் சூட்சமாட்டு
முளையுடனேபூமிதனில் கயிறைமாட்டி
 மூர்க்கமுடன்பறக்குகையில் கயிறைத்தட்டே. 3

தட்டையிலேகாத்தாடி தான்பறந்து
 சந்திரனார்மண்டலத்தி னளவுமட்டும்
நெட்டையிலேதான்பறந்து நின்றுவாடும்
 நிலையானசூட்சத்தின் சூட்சத்தாலே
முட்டையிலேவுள்ளிருந்த கருவைப்போலு
 மோங்குடனேநின்றாடும் நெடுநேரந்தான்
சட்டையிலேநாற்பட்டுக் காற்றைக்கொண்டு
 சடுதியிலேதானெடுக்கும் பான்மைபாரே. 4

பான்மையாம்வாதமது மேலேதாரம்
 பற்றுகையில்காத்தாடி மேலேநோக்கும்
வான்மையுடனடுக்கம்பி வட்டந்தன்னில்
 வாளானசூட்சாதி சூட்சந்தன்னை
மேன்மையுடன்கயிர்மாட்டி சுறுக்கும்போது

மெல்லெனவேகாத்தாடி யிறங்கலாகும்
தான்மையுடன்சுக்கானின் சூட்சமப்பா
தாரணியிலாரறிவார் விசுவர்தானே. 5

விசுவனும்வேத கம்மாளசித்தன்
வேணபடிசெய்துமல்லோ சூட்சங்காண்பான்
பசுவுடனேகண்சேர்ந்த கதையைப்போல
கருத்தறியார்முழுமூடர் காண்பரோதான்
முசுருடையயிரும்பதனில் காந்தஞ்சேர்த்து
முடித்தார்கள்காத்தாடி விஞ்ஞைவித்தை
நசுருண்டாய்சூக்ஷாதி சூக்ஷமார்க்கம்
நாமுரைத்தபடியாருங் கண்டிடாரே. 6

கண்டபடிகருத்துடைய சித்தர்தாமுங்
காசினியில்செய்தவருங் கண்டோரில்லை
கண்டபடிகாத்தாடி சூக்ஷாசூக்ஷங்
கயிர்நிற்கும்வழியறியார் துறையுங்காணர்
கண்டபடிகருவூரார் செய்துபார்த்தார்
கருத்திலேயவர்தனக்குந் தோன்றவில்லை
கண்டபடியெந்தனிட புத்தியாலே
காத்தாடியான்முடித்தே னவனியோர்க்கே. 7

முடித்தேனேசீனமென்ற பதியில்தானும்
முன்னையாககாத்தாடி யடிவாரத்தில்

படித்தளமாந்தோணியது மிகபோல்கட்டி
பாங்கானமாருகைபோல் தானமைத்து
குடித்தெனமாஆசனங்கள் பதினாயிரம்பேர்
குடியிடையில்தானேத்திக் கொண்டுசென்று
நடிப்புடனேதேவாதி தேவர்தானும்
நாணமுற்றுப்பார்த்திடவே நடத்தினேனே. 8

நடத்தினேன்சீனபதி சனங்களெல்லாம்
நலமுடனேகாத்தாடி தன்னிற்கொண்டு
திடத்துடனேசீனபதி மூன்றுகாதம்
திறமையுடன்சுத்திவந்தேன் சித்தர்மெய்ச்ச
வடத்திடமாய்சூத்திரக் கயிர்திரட்டி
வாகுடனேசீனபதி யிறக்கிவிட்டேன்
திடத்துடனேசீனபதி தனங்களெல்லாஞ்
சந்தோஷத்தென்பேரி லன்புற்றாரே. 9

போகர் காத்தாடிவித்தை-9

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அறுபத்தேழாவது,

போகமுனிவர்

நேத்திரரோகத்தயிலம்-9.

உறுதியாயின்னமொன்று பாகம்பாரு
வுண்மையாயிருக்கிறே னுறுதியாக
நிறுதியாய்நெல்லிக்காய்ச் சார்தானுழி
நீடானகையானின் சாருனுழி
பறுதியாமுசுக்கைச்சார் னாழியாகும்
பாங்கானவெள்ளருகுஞ் சீர்தானுழி
முறுதியாம்யெள்ளெண்ணெய் படிதானென்று
துடிப்புடனேயாவின்பால் படிதானென்றே. 1

ஒன்றுனஇளநீரு படிதானென்று
வுத்தமனேயிதிற்சேர்க்க மருந்துகேளு
பன்றுனகற்கவகை கடுக்காய்த்தான்றி
பாங்கானசந்தனமு மகிலுங்கூட்டி
தன்றுனவிலாமிச்சு வெட்டிவேறு
தாக்கானசந்தனமு மகிலுங்கூட்டி
நன்றுனநன்னரி கோரைதானும்
குறிப்பானபச்சிலையு மொக்கச்சேரே. 2

சேர்க்கவேவதிமதுரம் தேவதாரம்
சிறப்பானகச்சோலம் சீரங்கூட்டி
பார்க்கவேமுட்டியுடன் சாம்பிராணி
பாகமுடன்ஏலக்காய் கோஷ்டந்தானும்
தீர்க்கமுடன்வலம்புரியு மிடம்புரியுமாகும்
திறமானசீரகமு மொக்கக்கூட்டி
ஏர்க்கவேசடாமாஞ்சி பூலாதானும்
மெழிலானதண்ணிவிட்டான் கிழங்குமாமே. 3

கிழங்கானசரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி
கெணிதமுடன்வகைவகைக்குப் பலந்தான்காலாம்
தழங்கானசரக்கெல்லாம் வொன்றாய்க்கூட்டித்
தயவாகதேங்காய்ப்பால் தன்னாலாட்டி
வழங்கானயெண்ணெய்தனில் கலக்கியப்பா
வாகுடனேமெழுகுபதம் தன்னிற்காய்ச்சி
பழங்கமுடன்கணபதியைப் போற்றியேதான்
பாகமுடன்சிவப்பதாய் காய்ச்சிடாயே. 4

காய்ச்சவேயெண்ணெய்தனை வடித்துக்கொண்டு
கலங்காமல்சீசாவி லடைத்துமைந்தா
பாய்ச்சலுடன்வாரத்தி லிரண்டுமுறையப்பா
பாலகனேமுழுகிவர பலனைக்கேளு
தீச்சலென்றபிடரி [illegible] சன்னிபாதம்

திகழானமயக்கமுதல் காணுதோடும்
மாய்ச்சலுடநேத்திரத்தின் ரோகம்போகும்
மகத்தானவொருதலைநோய் யேகும்பாரே. 5
ஏகுமேகபாலவலி சன்னிபாதம்
யெழிலானகலைகளப்பு யெல்லாமாறும்
போகுமேமந்தார காசமாகும்
பொடிவானகண்கூச்சம் புழுவெட்டும்போம்
சாகுமேகண்ணில்நீர் வடிதலும்போம்
சார்பானகுூறக்கம்மல் சன்னலாகும்
பாகுடனேயித்தயிலங் கொள்ளும்போது
பறக்குமடாநேத்திரநோ யகலும்பாரே. 6
அகலுமேபத்தியமோ வரையக்கேளு
அப்பனேகரப்பென்ற பதார்த்தந்தள்ளு
நிகலவேபகல்நித்திரைக் கொள்ளலாகா
நீடூழிநாள்வரைக்கும் போகமாகா
தகலவேசீதளமாம் பண்டமாகா
தாக்கானபுளிபுகையு மதிகமாகா
புகலவேகாலாங்கி நாதர்பாதம்
புகழுடனேயான்வணங்கி புகன்றிட்டேனே. 7
புகன்றிட்டேன்தயிலமது யென்னசொல்வேன்
புகழானசந்தனுதி யிதற்கொவ்வாது

தகன்றிட்டசாஸ்திரத்தி லனேகமுண்டு
தக்கவேயாருந்தான் சொல்லவில்லை
அகன்றிட்டசாஸ்திரத்தி லனேகமுண்டு
அப்பனேயான்சொன்ன கவிபோலல்ல
பகன்றிட்டநாதாக்கள் முனிவர்தாமும்
பாடினார்கோர்வைகளு மனந்தமுண்டே. 8

உண்டானசாத்திரங்க ளனேகமுண்டு
உத்தமனேயென்போலே யாருஞ்சொல்லார்
திண்டானபோகர்க்கே ழாயிரந்தான்
திரட்டினேன்சத்தகாண்டந் திறமதாக
பண்டானசீசபத்தி யுலகத்தாற்கும்
பலபலவாயோதிவைத்தேன் பான்மையாக
சண்டாளமானதொரு தேசத்தார்க்குச்
சாற்றினால்பாவம்வரு மென்தனாலே. 9

போகர் நேத்திரரோகத்தயிலம்-9

முற்றிற்று.

கடவுள் துணை.

அறுபத்தெட்டாவது,

போகமுனிவர்

பொம்மைகாகிதம் ஓட்டம்–7.

நாமானமையொன்று சொல்லக்கேளு
சார்பானகாயிதத்தில் தங்கவர்ணம்
காமானமஞ்சளென்ற கோபிதன்னால்
களரவிடுவிளாம்பிசினிச் சமானமாக
பூமான்போலோருருவம் யெழுதியப்பா
பொங்கமுடனவ்வருவில் தூவக்கேளு
தேமானதொருசரக்கு சொல்லுவேன்கேள்
வித்தகனேமேன்மையுடன் செய்துபாரே. 1

செய்யவேசாரமது பலமொன்றாகும்
சேர்மானங்கெந்தியொரு பலமொன்றாகும்
துய்யவேசாரமது பலமொன்றாகும்
துப்புறவாம்வெண்வங்கம் பலமொன்றாகும்
கையவேகாரமது சீனங்காலா
நாட்டமுடன்கல்வமதில் பொடித்துநன்றாய்
யெய்யவேபொடியாக்கி கும்பிக்கிட்டு
யென்மகனேகல்லாலே சீலைபோடே. 2

போடவேசீலையது வளுவாய்ச்செய்து
பொங்கமுடன்தளவாயாரு சட்டிதன்னில்
கூடவேமணலதனை பாதிகொட்டி
குப்புறவாய்புட்டிநடு மையம்வைத்து
மூடவேமணலதனை மேலேகொட்டி
முக்கியமாய்சட்டிகொண்டு மேலேமூடி
நீடவேசீலையது வளுவாய்ச்செய்து
நினைவாகாவிதனிலே காயப்போடே. 3

காய்ந்தபின்புவாலுகையா மெந்திரத்தில்
கருவாகத்தீமூட்டி யெட்டுசாமந்
தோய்ந்திடவேதானெரிப்பாய் மைந்தாகேளு
தோற்றமுடன்பதங்கமது யேறிநிற்கும்
மாய்ந்திடவேசொர்ணமென்ற பதங்கந்தானும்
மகத்தானபதங்கத்தை யெடுத்துக்கொண்டு
வாய்ந்திடவேமுன்சொன்ன வர்ணந்தன்னில்
மார்க்கமுடன்றான்தேய்க்க சொலிப்புண்டாமே. 4

சொலிக்கவேயெளவர்ன மானலுந்தான்
சூட்சமுடன்முன்னெழுதி மேலேதூவு
பலிக்கவேபிசினியது பதங்கந்தன்னை
பாகமுடன்தானிழுக்கும் பண்பைப்பாரு
ஒலிக்கவேசெகசோதி யென்னசொல்வே

னுத்தமனேரூபலா வர்ணந்தோற்றும்
கெலிக்கவேபதங்கமது சொர்னமென்பார்
பேரானவெள்வங்கக் கூத்துதானே. 5

கூத்தானகாகிதங்கள் வர்ணபேதங்
கூறுவேன்மாணுக்கன் பிழைக்கவென்று
ஈர்த்தானவெள்வங்கஞ் சூதன்தானும்
நாயகனேவரிதாரம் மடல்துத்தந்தான்
காத்தானலிங்கமுடன் செங்கால்பச்சை
கருவானநாகமொடு கெந்திதானுந்
தூத்தானசாரமுடன் மதியுப்போடு
துடியானகண்டரொடு பேதியாமே. 6

பேதியாம்வரப்பொடியாம் பச்சைலோபி
பேரானதாரமுடன் சங்கால்பச்சை
சோதியாமித்தனையும் வர்ணபேதம்
தோராதரூபமது வதிகங்காட்டும்
வாதியாங்கண்டறிவார் சரக்கின்பேதம்
வகையுடனேமற்றவர்கள் காணமாட்டார்
நீதியாமித்தனையு மாறுதாரம்
நிலையானவர்ணத்துக் குறுதியாமே. 7

போகர் பொம்மைகாகிதங்கள் ஓட்டம்-7
முற்றிற்று.

சிவமயம்.

அறுபத்தொன்பதாவது,

போகமுனிவர்,

சூதமுனி நாடி - 30.

வாதமதுமுன்னெழுந்து தாழ்ந்துசற்றே
  மயிலத்போல்நடைநடந்து மங்குமாகில்
சேதமதுஇல்லையெண்பத் தாறுமாண்டிற்
  செப்பவர்மரணமென்று தீர்க்கமாக
நாதமதுகுறைந்துவிடில் போலேகண்டால்
  நாளெட்டில்மரணமென்று நவிலலாகும்
பேதமதுஇல்லையிது பிசகிடாமல்
  பெரியவனுஞ்சூதமுனி பேசுங்காலே. 1

காலானபித்தமது துடியேகண்டு
  கனலெழுந்துவந்திடில் சீதமாச்சு
மாலாகிலும்பார்க்க மருந்துமில்லை
  மரணமதுமூன்றுதிங்கள் வரிசையாகும்
நாலானபித்தமது தொங்கத்தொங்கி
  நடைநடந்துபாம்பதுபோல் நடக்குமாகில்
மேலானபதின்மூன்றாந் திங்கள்தன்னில்
  வீற்றிருந்தசூடழியும் விரும்பிப்பாரே. 2

பாரப்பாவபித்தியனே மாணநாடி
பாங்குடனேசொல்லுகிறேன் பாரின்மீது
சேரப்பாசிதமது சிலேத்துமமாகும்
சிதறியேயாமைபோல் நடந்துதானல்
கூரப்பாசாவுபதி னொன்றுமாண்டில்
குறையில்லைகண்டதுபோல் நடந்துதானல்
பாரப்பாநாள்வந்து தென்றுசொல்லி
மருந்துகளையருந்தாம லிருந்திடரே. 3

இருந்திடவேயின்னமொரு குறிதான்கேளு
இயல்பானவாதமது கீழேநோக்கி
வருந்திடவேமேலேகி நடக்குமாகி
லப்பனேயன்பதுநா ளாகுமென்ன
மரிந்திடவேபித்தமது தொங்கிச்சற்றே
நுனிநாக்குஅசைவதுபோ லசையுமாகில்
சுரந்திடவேவீக்கமது கழிச்சலாக்கி
சோர்வுடனேவைகுந்தஞ் சேர்க்குந்தானே. 4

ஆமடாகண்சிவந்து சுழித்துவாங்கி
யறிவுகெட்டுமதிமயங்கி யோசைகுன்றிற்
போமடாஆறுநாள் சீவன்போகும்
போதமதுநின்றுசற்றே பேசுமாகில்
நாமடாபித்தமது விழவேயில்லை

நம்பரிதுவம்பிவரும் நாடாதேகேள்
சாமடாமூன்றுநாள் சீவன்போகும்
சக்கரமுமறுதியென்று சாற்றலாமே. 5

சாற்றுகிறேன்வாதபித்த சிலேத்துமமூன்றுஞ்
சாவானதசநாடி பத்துண்டென்றும்
ஏற்றுகிறேனோர்விரலுக் கிரண்டுநாடி
யியலானஐவிரற்குப் பத்துநாடி
மாற்றுகிறேன்தற்சனியாம் விரலுக்குத்தான்
வகுத்தறிவீர்பிராணனொடு அபானன்றானும்
போற்றுகிறேன்தற்சனியாம் விரலுக்குத்தான்
புகழ்பெரியவபானனொடு வியானனுமே. 6

ஆகுமேமத்திமையாம் விரலிற்றானே
அடுத்துநின்றகூர்மனோ நோக்காதானும்
போகுமேஅனுமியெனும் விரலிற்றானும்
புகழ்பெரியசமானனொடு கிரிகான்றான்
ஏகுமேகனிஷ்டக விரலில்தானே
யியல்பானதேவனொடு தனஞ்செயன்றான்
தாகுமேயிப்படியே விரலில்தானுந்
தானிருக்குந்தனஞ்சயன்றான் சமானனுமே. 7

தனஞ்செயனுந்தசவாய்வு பத்தேயாகுஞ்
சாற்றுகிறேன்தசநாடி முன்போலேதான்

தனஞ்செயனுமிடையினெடும் பிங்கலையுமாகும்
காட்டிநின்றசுழிமுனையுங் குறையுமாகும்
தனஞ்சயனும்புருடனங்காந் தாரனோடு
தனித்துநின்றஅசுவினி அலம்புருடனுகுந்
தனஞ்செயனுஞ்சங்கிலியுங் குமுதனோடு
வகுத்துநின்றதசநாடி பத்ததாமே. 8

பத்தாகும்வாதபித்த சிலேத்துமமூன்றும்
பக்குவங்கள்தப்பியே பதறுமாகில்
வத்தாதசீதமது வந்துதோன்றில்
வறட்சியுடன்விக்கலது குளிர்ச்சிமேவும்
எத்தாதஇளைப்புடனே பேச்சுமில்லை
பிதமானவாதமது விழுந்துதென்றால்
அத்தமவர்க்கிருபத்தோர் நாளில்சாவா
ராதியந்தம்பித்தமதைப் பிரிந்துபாரே. 9

பிரிந்துபார்பித்தமது அசைவுநின்றால்
பேசரிதுமரணமது நிமிஷமாகும்
தெரிந்துபார்சிலேத்துமமது வசைவுநின்றால்
தேகம்விட்டேகிவிடு மிருபதாநாள்
வறிந்துபார்நாடியது முப்பதுந்தான்
வாகாகச்சொல்லிவிட்டே னுந்தனுக்காய்

குறிந்துபார்பித்தமொடு வாதங்கூடில்
குறிசொல்வேனேழிரண்டிற் குறைந்துபோமே. 10
குறைந்துபோம்வாதமொடு சீதங்கூடிற்
கூட்டியேமாற்றிவிடுஞ் சயத்தைதானும்
நிறைந்துபோங்கபயிளை யிறைப்புமாகும்
நெஞ்சடைக்குங்காதடைக்கும் நிலைமையில்லை
மறந்துபோம்பித்தமதில் வாதஞ்சேரில்
வலிகுன்மம்வாந்தியுமாம் அன்னந்தள்ளும்
உறைந்துபோமின்னமொரு குறியைச்சொல்வேன்
உயிர்நிலைக்குவிரதநிலை உரைக்கிறேனே. 11
உரைக்கிறேன்சீதத்தில் வாதங்கூடி
துதிரவலிகொண்டுமிக வுடம்புவீங்கும்
நிமைக்கிறேன்தத்தமது வசைவுகண்டால்
நெஞ்சுவலிப்புறவலிப்பு நெஞ்சுக்குத்து
மறைக்கிறேநீரேழில் மரணமாவார்
மண்டைதனிலெரியெழும்பி வழியைப்பார்க்கும்"
அறைக்கிறதோர்மருந்துதனைச் செல்லவொட்டார்
வாக்கரிதுகொள்ளுமடா வதின்பேர்கேளே. 12
கேளப்பாமூன்றுமிக வசைவுநின்று
கெடியானரவிமூன்றில் துடிப்புகாண்கில்
காளப்பாசிசுனத்திற் சூடுகொள்ளும்

நலமானமூத்திரமுஞ் சிறுத்துப்போகுந்
தாளப்பாபிராணவலி யெரிவுகுத்துச்
சரீரத்தில்வெயர்வெழும்பி வாயுவாகுஞ்
சூளப்பாமூலமது வெளியிற்காணுஞ்
சுரங்காணுஞ்சதியோடு சோபங்காணும். 13

சோபமேயப்பமது கலந்துகாணுஞ்
சோதியங்களில்லையது துணிந்துமெய்தும்
தாபமொடுவிக்கல்வந்தால் நீறைக்கட்டிச்
சஞ்சலத்தையுண்டாக்கு மலமுங்கட்டும்
வாதமுடன்தேகமது கூடும்போது
வந்துவிடுமிழுப்புடனே யிருப்பதானால்
பூதமதுகூடுவிட்டு எகிறிப்பாயும்
பொய்யல்லகூதமுனி புகழ்ந்திட்டேனே. 14

புகழ்ந்திட்டேன்சன்னியெல்லா மூன்றுக்குள்ளே
பூட்டினேன்சிலேற்பனத்தைப் புகழ்ந்துகேளு
இகழ்ந்திட்டேன்வாதபித்தம் பார்க்கவேண்டா
மினிதானசடலமெல்லாங் குளிர்ச்சியாகு
மகிழ்ந்திட்டேன்சிலேற்பத்தைப் பிரித்துபார்க்கில்
மதித்தெழுந்துதுயரதுபோல் பொங்கித்தண்டால்
தகழ்ந்திட்டவிசைபோச்சு ஆவிபோச்சு
தப்பாதுஎழுபதுநாள் தான்சொன்னோமே. 15

சொன்னதிஞல்நாடியெல்லாங் காணூர்காணூர்
சூட்சமாய்நிலையறிந்து சொல்லவேணும்
இன்னதினலாகாது யென்றேயெண்ணி
இருமாந்துதிரிந்தார்கள் காணூர்காணூர்
முன்னதிஞல்வாதநிலை பார்க்கவேணும்
முறைப்படியேதொந்தநிலை யறியவேணும்
பின்னதனல்வேறென்றும் பார்க்கவேண்டும்
பிரிந்துவரும்நாடியெல்லாம் போக்கேளே. 16

கேளப்பாமூலத்தி லெழுந்தவாய்வு
விகிதருமாய்ச்சொல்லுகிறேன் குணத்தைக்கேளு
நாளப்பாதினந்தோறும் வாய்வுமீறில்
நலமுடனேவலமிருகு மசனஞ்செல்லாச்
சூளப்பாகுடல்பொருமி வலியாய்க்காணும்
தொத்துமிகவாதபித்தங் கடினமாகுங்
கேளப்பாதேகமெல்லாம் புண்போலேகும்
சிக்கெனவேவலங்கழியுஞ் சீரைப்பாரே. 17

பாரப்பாமூலமதி லெழுந்தவாயு
பாங்குடனேதீருமது பதிஞேர்நாளில்
சீறப்பாதவறுமல் மருந்துசெய்தால்
தீருமதுவாதபித்த மிதிலேவாங்கும்
ஆரப்பாயிதையறிந்து செய்யாவிட்டால்

அண்டத்தில்சூடேறும் வாய்வுமீருந்
தாரப்பாகிராணியைப்போற் குணமேகண்டு
தவறுமன்பத்தோர் நாளில்தானே. 18

தானென்றக்ஷயமிருமல் நாடிகாணச்
சாற்றுகிறேன்பித்தமதில் சீதங்கூடிக்
கோனென்றசிரசுதனில் நீரேகொள்ளுங்
குத்துடனேயிருமல்களுங் கோழைகாணுந்
தேனென்றஇளைப்புவரு மிரத்தங்காணுந்
தீராதமாதமாறும் செப்பலாகு
மூனென்றவுடம்புதனில் தீராரோக
முறைக்கிறேனின்னதென்று முந்திமுந்தி. 19

முந்தியதோர்பாதமுடன் புறங்கால்வீச
முகத்திலேவீக்கமது கண்டுதானாற்
பிந்தியதோர்கழிச்சலுடன் கிருணியாகும்
பேசரிதுதீராது சத்தியமாகுஞ்
சித்தியதோர்வாந்தியுடன் விக்கல்கண்டால்
தீராதுதீராது திண்ணமாகும்
அத்தியதோர்க்ஷயமிருமல் சலக்கிருணி
ஆறுலுந்தீராது அசாத்தியந்தானே. 20

அசாத்தியந்தான்சொல்லுகிறேன் ராசாங்கத்தி
லறிந்திடவேயின்னமொன்று மடைவாய்க்கேளு

அசாத்தியந்தாநீர்கோவை சத்தியேகுன்மம்
மானதொருவலிகுன்மம் யோனிப்புத்து
அசாத்தியந்தான்குறைநோவு நாக்கில்புத்து
அண்டத்தில்பவுத்திரமுந் தொண்டைத்தூதும்
அசாத்தியந்தான்முதல்கிறுக்கு உளவிச்சோடு
ஆனாலுந்தீராது அறிந்துதானே. 21

தானென்றசலக்கழிச்சல் மதமதப்புத்
தலைதனிலேவைத்தெழுந்த பிளவைத்தானுங்
கானென்றருத்திரவலிகாசி கண்டமாலை
கன்னத்திற்புத்துடனே குமரகண்டன்
தேனென்றமாவாதஞ் சன்னிவாதஞ்
சேத்துமசயமுளமாந்தை சுரமாந்தைகவிசை
ஊனென்றுஉயிரழிக்கு மளவுபோகா
துள்ளபடிசொன்னோம்நாம் வாதநிலைப்பாரே. 22

வாதமதுகீழ்நோக் காதிருந்து
மயக்கத்திற்சேராதே யனல்தாழாதே
பேதமதுசெய்யாமற் பிலத்திருந்தாற்
பிராணனங்கேலபித்திருக்கும் பிசகோவில்லை
நீதமதுதப்பியே ஐயத்தோடே
நீர்வாதஞ்சேர்ந்துகீழ் நேரேயோடில்

தீதானவியாதியெல்லாஞ் செனிப்பித்தோடுஞ்
சீருடையவாதநிலை நாடித்தேறே. 23

நாடியுடவிதங்களெல்லாம் வாதவீட்டில்
நாடலாமல்லயாதே நலமாய்பாரு
தேடிவரும்நோய்களெல்லாம் ராசாவைத்தான்
சேர்ந்துநின்றூர்கனுமானஞ் செப்பவேண்டாம்
சாடிவரும்பித்தமது ராசன்கீழே
சமைந்திருப்பான்தைரியவா.னவனத்தனல்ல
கொடியகவமுண்டவர்க்குக் குற்றஞ்செய்தார்
கொடுமைசெய்தசீதத்தை அழைப்பாரென்றே. 24

அழைத்துடனே அனுபவிப்பான் பித்தராச
னதுகேட்பான்சீதமது அம்புபோலே
களைத்துடனேவந்திழுப்பான் கயிறுகட்டிக்
கண்ணெல்லாமுழிபிரளக் கபந்தான்வந்து
வளைத்துடனே அக்கினியும் விந்துகண்ணீர்
மண்ணுங்கரைந்துவிடும் வகைதான்பாரு
இளைத்துடனேகூடுவிட் டேகும்பாரு
இன்னமொருகுறியதனை யியம்புவோமே. 25

இயம்புகிறேன்வாதமொடு பித்தங்கூடி
யினிப்பானதித்திப்பென் றறியலாகும்
நயம்பெறவேசிலேற்பனமுங் கூடிற்றூனல்

நாட்டலாங்குடிலையென்றே நாட்டலாகுஞ்
சுயம்பெறவேபித்தமது வீழ்ந்துபோகுற்
சொல்லரிதுபேசாதே சுருக்கதாகும்
இயம்புகிறேன்கபம்வீழ்ந்தா லாகுமாதம்
இனிதானசடலமது ஏகும்பாரே. 26

சடலமதுயேகிவிடும் வகைதான்கேளு
சாற்றுகிறேன்வாதத்தில் நிலையைப்பாரு
உடலமதுநடுங்கி வுரைந்துதானால்
ஒன்பதாமாதத்திற் சாவாரென்றுஞ்
சடலமதுகலங்கிவிடும் பித்தாசன்
சகித்திருந்துவீடுவிட்டே கபத்திற்சென்றால்
நடலமதுகுறைந்துவிடு மறுபதாநாளில்
நாடுவிட்டுகாடுபுகும் நடையைப்பாரே. 27

நடையதுவேயறிந்தக்கா லாறுதாரம்
நாள்தனிலேயறிவார்கள் ஞானவார்
விடைதனிலேஏறிவரும் சிவனார்சொல்ல
வேதாந்தசூதமுனி வெளியிற்போட்டேன்
கடைதனிலேயின்னமொரு சூட்சஞ்சொல்வேன்
கருத்தறியநாளதுவே நீளதாகி
யிடைதனிலேயேழாநாள் சாவாரென்றும்
இனிதானசூதமுனி யியம்பினாரே. 28

இயம்பினார்நாடியெல்லா மிந்தநூலில்
இடைபிங்கலையுஞ் சுழிமுனையுமாகும்
இயம்பினார்நாடியெல்லா மிந்தநூலில்
இடுக்கங்களொன் றுமில்லை யிருக்கலாகும்
இயம்பினார்குடிலமது தோன்றிற்சித
மெழும்பினார்பனியளவு மெய் துக்தானே. 29

தானென்றநாடிநிலை யறியவேணுஞ்
சதாகாலஞ்சரித்திரத்தைப் பார்க்கவேணும்
ஊனென்றதத்துவங்கள் சரீரக்கூறும்
உற்றுணர்ந்து பஞ்சபாதகங்கள்நீக்கி
தேனென்றமனோன்மணியாள் பாதந்தன்னைத்
தினந்தோறுமாறுமல் சேவித்தேற்றி
நானென்றபுவனங்கள் மாய்கையற்று
நல்லபரிகாரஞ்செய் நாடிமுற்றே. 30

சூதமுனி நாடி-30

முற்றிற்று.

கணபதிதுணை.

அறுபத்தொன்பதாவது,

சூ த ம கா மு னி வ ர்

ரா ஜா ங் க நா டி — 25.

வாதமது முன்னெழுந்து தாழ்ந்துசற்றே மயிலது போல் நடைநடந்து மங்குமாகில், சேதமதுஇல்லையெண் பத் தாறுமாண்டிற் செப்பலா மரணமென்று தீர்க்கமாக, நாதமது குறைந்துவிடில் போலேகண்டால் நாளெட்டில் மரணமென்று நவிலலாகும், பேதமதுயில்லையிது பிச கிடாமல் பெரியவனுஞ்சூதமுனி பேசுங்காலே. 1

காலானபித்தமது துடியேகண்டு கனமெழுந்து வந் திடுகில் சீதமாச்சு, மாலாகி னும்பார்க்க மருந்துமில்லை மரணமது மூன்றுதிங்கள் வரிசையாகும், காலானபித்த மது வெங்கத்தொங்கி நடைநடந்து பாம்பதுபோல் நட க்குமாகில், மேலானபதிமூன்றாந் திங்கள்தன்னில் வீற் றிருந்தகூடழியும் விரும்பிப்பாரே. 2

பாரப்பா வயித்தியனே மரணநாடி பாங்குடனே சொ ல்லுகிறேன் பாரின்மீது, சேரப்பா சீதமது சிலேற்பன மாகுஞ் சிதறியேயாமைபோல் நடந்துதானால், கூறப்பா சாவுபதி னென்றுமாண்டிர் குறைவில்லை கண்டதுபோல்

நடந்துதானல், மாறப்பா நாள்வந்து தென்றுசொல்லி மருந்துகளையருந்தாம லிருந்திடரே. 3

இருந்திடவே யின்னமொரு குறிதான்கேளு இயல் பானவாதமது கீழேநோக்கி, மருந்திடவே மேலேறி நடக்குமாகி லப்பனேயன்பதுநா ளாகுமென்ன, மறிந் திடவே பித்தமது தொங்கிச்சற்றே மணிநான்கு அசை வதுபோ லசையுமாகில், சுரந்திடவே வீக்கமது கழிச் சலாகிச் சோர்வுடனே வைகுந்தஞ் சுகமதாமே. 4

ஆமடாகண்சிவந்து சுழித்துவாங்கி யளவுகெட்டு மதி மயங்கி யோசைகுன்றிப், போமப்பா ஆறுநாள் சீவன் போகும் வாதமதுநின்றுசற்றே பேசுமாகில், நாமடா பித்தமது வீழவில்லை நம்பரிதுவம்புவரும் நாடாதே கேள், சாமமடா மூன்றுநாள் சீவன்போகுஞ் சக்கரமு மருதியென்றே சாற்றலாமே. 5

சாற்றுகிறேன் வாதபித்த சிலேற்பனமூன்று சகிதங் கள் தப்பியே கொள்ளுமாகில், வாழ்த்துகிறேன் சீத மது வந்துதோன்றி வறட்சியொடு விக்கல்வருங் குளிர் ச்சியாகு, மேற்றுகிறேன் இளப்புவரும் பேச்சேயில்லை யிதமாகவாதமது வீழ்ந்துதென்றல், ஆற்றுகிறேன் இரு பத்தொன் றுநாள்சாவான் ஆதியந்தம் பித்தமதை அறி ந்துபாரே. 6

அறிந்துபாராராஜாங்க மைந்துமுள்ளே அறியாத பிள்ளைகளும் நாடிகாண்பார், பிரிந்துபார்பித்தமது அசைவு நின்றால் பேசரிதுபோகமது மரணமாகும், தெரிந்துபார் சிலேற்பனமும் அசைவுநின்றால் திரேகமதுயேகிவிடும் இருபதாநாள், குறிந்துபார் தத்தமொடு வாதங்கூடி குறி சொல்வார் யேழாண்டில் குரைந்துபோமே. 7

குறைந்துபோம் வாதமொடு சீதங்கூடில் கூட்டியே மாட்டிவிடும் க்ஷாரத்தைத்தானும், நிறைந்துபோம் கபவேளை யிளப்புமாகும் நெஞ்சடைப்பு காதடைப்பு நிலையேயில்லை, வரைந்துபோம் பித்தமதில் வாதஞ்சேரில் வலியகுன்மம் வாந்தியொடு அன்னந்தள்ளும், உரைந்துபோம் இன்னமொரு குறியைச்சொல்வேன் உயிர்நிலைக்கு வாதநிலை உரைக்கிறேனே. 8

உரைக்கிறேன் வாதத்தில் சீதங்கூடில் உதிரவலி கொண்டுமிக உடம்புவீங்கும், மறைக்கவில்லை பதினைவில் மரணமாகும் மண்டைதனில் வெறியெழும்பித் தறவழிபைப்பாற்கும், கரைக்கின்ற புளிபோல கண்ணே சொல்வேன் கண்டுசொல்வாய் ராஜாங்க நாடிக்குள்ளே, அறைக்கிற மருந்துதனைச் சொல்லவொட்டா தாக்கரித்துக் கொள்ளுமடா அதின்பேர்கேளே. 9

கேளப்பா மூன்றுமிக அசைவுநின்றால் கெடியாக விரல்மூன்றின் துடிப்புக்காணில், நாளப்பா சனஆசனத் தில் சூடுகொள்ளும் நலமான மூத்திரமுஞ் சிறுத்துப் போகும், தாளப்பா பூரணவலி எரிவுகுத்துந் தனசிரத் தில் வேர்வெழும்பி வாயுமாகும், சூளப்பா மூலமிக வெ ளியில்காணுஞ் சுரங்காணுஞ் சதியோடு சோகங்காணும்.

சோகமது ஏப்பமது வந்துகாணும் சோத்தியங்க ளில்லையது சுகமேஆகும், தாகமொடு விக்கல்வந்தால் நீரைக்கட்டிச் சஞ்சலத்தை யுண்டாக்கு மலத்தைக்கட் டும், வாதமொடு சீதமது வந்துகூடும் வந்திடுமிளைப்புட னே பிருபதாநாள், போகுமது கூடும்விட்டே யேகிப் போகும் பொய்யல்ல ராஜாங்கப் புகழ்ந்திட்டேனே. 11

புகழ்ந்திட்டேன் சன்னியென்ற மூன்றுக்குள்ளே பூட்டினேன் சிலேற்பனத்தைப் புகழ்ந்துப்பாரு. இழந் திட்டேன் வாதபித்தம் பார்க்கவேண்டாம் இனிதான சடலமெல்லாங் குளிர்ச்சியாகும், மகிழ்ந்திட்டேன் சிலேற்பனத்தைப் பிரிந்துபார்க்கில் மதித்தெழுந்து துடிப் போலே யேகிக்கண்டால், தாழ்ந்திட்டால் விசைபோச்சு ஆவிபோச்சு தப்பாது ஒன்பதுநாள் தான்சொன்னேனே.

சொன்னதினால் நாடியெல்லாங் காணார்காணார் சூட்ச மாய் நிலையறிந்து சொல்லவேணும், என்னதினாலாகாது

எண்ணூஎண்ணு இருதயத்தில் வைத்தாக்காற் காணுங் காணும், அன்னமொழி போலுடைய வாத்தாள்பாதம் வந்தித்து சிந்தித்து வரைகிறேன்கேள், பின்னதினால் வேறொன்றும் பார்க்கவேண்டாம் பிரிந்துவரும் நாடி யெல்லாம் பேசக்கேளே. 13

கேளப்பா மூலத்தி லெழுந்தவாய்வு கோபிதமாய்ச் சொல்லுகிறேன் குணத்தைக்கேளு, நாளப்பா தினந் தோறும் வாய்வுபிறந்து நலமுடனே மலமிருக்கும் கடின மாகும், சூளப்பா குடலெரியும் வலியேகாணுந் தெந்தங்க ளுண்டான கடினமாகும், தேளப்பா மலமீதில் தேரை காணுஞ் சிக்கெனவே வெல்லாங்கழியுஞ் சீரைப்பாரே. ()

பாரப்பா மூலத்தி லெழுந்தவாய்வு பாங்குடனே தீரு மது பதினாறுநாள், தீரப்பா தவிராமல் மருந்துசெய்தால் தீருமது வாதபித்தம் அதிலேவாங்கும், ஆரப்பா யிதை யறிந்து செய்யாவிட்டால் அண்டத்தில் சூடேறும் வாய் வுமீறும், காரப்பா கிராணிபோல் குணமேகண்டு தட்டு மது மன்பதோர் நாளில்தானே. 15

தானென்ற க்ஷயமிருமல் நாடிகாணச் சாற்றுகிறேன த்தமதிற் சீதங்காட்டிற், கோனென்ற சிரசதனில் நீரைக் கொள்ளுங் குத்துடனே யிருமல்வருங் கோழைகாணுங், தேனென்ற யிளைப்புவரும் ரத்தங்காணும் தீராது ஆறு

மதில் செப்பலாகும், ஊனென்ற உடம்புதனில் தீராரோ
கம் உறைக்கிறேன் இன்னமொன்று முந்திமுந்தி. 16

முந்தியதோர் பாதமதுபுரங்கால்பீச முகத்திலே வீக்க
மது கண்டதாலும், பிந்தியதோர் கழிச்சலது கிருணியா
கும் பேசரிது தீராது திண்ணமாக, சுந்தரனே வதிமோக
சையோகத்தால் சூடெழும்பி வந்தநோய்கள் சொல்லொ
ணாது, அநித்தியந்தான் சொல்லுகிறேன் ராஜாங்கத்தில்
அறிந்திடவே யின்னதென்று அடைவாய்க்கேளு. 17

அசாத்தியந்தான் நீர்க்கோவை சத்திகுன்மம் ஆன
தொரு வலிகுன்மம் யோனிப்புத்து, அசாத்தியந்தான்
குறைவான லிங்கப்புத்து, ஆனதொரு தொண்டைதனில்
தூறுமாகும், அசாத்தியந்தான் முசல்கிறுக்கு உள்வீச்
சோடு ஆராலுந்தீராது அறிந்துதானே. 18

தானென்று சலக்கழிச்சல் யோனிப்புத்து தலைதனிலு
தித்தெழுந்த பிளவைதானுங், கானென்ற உதிரவலி காச
நோவு கண்டித்த மேகமறி கண்டந்தீரா ரோகங், தேனெ
ன்றகொடிதனிலே பவுத்திரங்கள் தீராது இன்னமொன்று
சொல்லக்கேளு, மானென்ற உளமாந்தை யிவைகளெல்
லாம் மகாவதை பண்ணுமடா வாதநாடி. 19

நாடியுட விதங்களெல்லாம் வாதவீட்டில் நாட்டாம
லில்லையதை நலமாய்ப்பாரு, தேடிவரும் நோய்களெல்

லாம் ராஜாவைத்தான் சேர்ந்துநின்றால் காணுமடா செப் பலாகும், ஆடிவரும் பித்தமது ராஜன்கீழே அமர்ந்திருப் பான் தைரியவா னவனைப்பார்த்தாற், கோடிகளா மூண்டு மவர்க் குற்றஞ்செய்வோர்க் குணமாகுஞ் சீதமதை யழைப்பாய்நன்றே. 20

அழைத்துடனே யனுபவிப்பான் பித்தராஜன் அது கேட்பான் க்ஷயமான ராஜன்தானும், தழைத்துடனே யெழுந்திருப்பா னவன்றனக்கேதான் கண்மூடி முருக்கு முன்னே பிழைக்காமல்வந்து, வழைத்துடனே அக்கினி யும் விந்துதன்னில் வந்துமண்ணுங் கரைத்துவிடும் வகை தான்பாரு, இழைத்துடனே கூடுவிட்டு யேகும்பாரு இன்னமொரு குறியதனை யியம்பக்கேளே. 21

இயம்புகிறேன் வாதமுடன் சீதங்கூடில் இயல்பாக தொந்திப்பென் றறியலாகும், நயம்பெறவே சிலேற்பன மும் கூடித்தானால் நாட்டலாங் குடிலமென்று நாட்டலா கும், சுயம்பெறவே கபம்விழுந்தால் ஆறுமாதம் சொல்ல ரிது பேசரிது சுறுக்கதாகும், இயம்புகின்ற பித்தமது விளைந்துதானால் இனிதான சடலமது யேகுந்தானே. 22

சடலமது யேகிவிடு மகனேகேளு சாற்றுகிறேன் வாதத்தி லையஞ்சேர, உடலமது நடுநடுங்கி விரைவில் காணும் உத்தமனே நான்காமாத மரணமாவார், ஜடல

மது கலங்கிவிடும் பித்தராஜன் சகித்திருந்து வீடுவிட்டு கபத்திற் சேர்ந்தால், நடலமது குறைந்துவிடு இருபதா நாள் நாடுவிட்டுக் காடுபுகும் நடையைப்பாரே. 23

நடையதுவே யறிந்தாக்கா லாறுதாரம் நாள்தனிலே யறிவார்கள் நாதனுவார், விடைதனிலே யேறிவரும் சிவனுர்சொல்ல வேதாந்தராஜமுனி வெளியில்போட்டார், கடைதனிலே பின்னமொரு சூட்சஞ்சொல்வேன் கருத்தறியும் நாவதுவே வுலரதாகும், இடைதனிலே யேழுநாள் சாவானென்று இனிதான ராஜமுனி இயம்பினுரே.

இயம்பினுர் நாடியெல்லாம் இந்நூற்குள்ளே இருபத்தஞ் சல்லாமல் வேறேயில்லை, இயம்பினுர் நாடியெல்லாம் தெளிவாய்க்காண எளிதல்ல நாடிகுண மறியுந்தன்மை, இயம்பினுர் நாடியெல்லாம் வகையாய்க்கண்டு இதமாக மானிடரின் கூறுசொல்ல, இயம்பினுர் நாடிகள் தொண்ணூற்றூறு இயல்பறிந்து குணமுரைப்பாய் நாடிமுற்றே.

ராஜாங்கநாடி 25 முற்றிற்று.

சிவமயம்.

சுந்தரானந்தர்

பூஜாவிதி-37.

ஆதிபராபரமான மூலமேதீ
அறுமுகவனிருபதத்தை யன்பாய்போற்றி
நீடுநடுவீதிதனில் நின்றசோதி
விளங்கிநின்றசரஸ்வதியாள் பாதம்போற்றி
பாதியிறைவிமலரவி மருமைமால்தன்
பார்தனிலேவச்சுதன்றன் பாதம்போற்றி
சோதிமயமாகிநின்ற பூசைதன்னை
சொல்லுகிறேன் கணபதிதன் பாதங்காப்பு. 1

கேளடாஅறுகோணந் தன்னைநன்றாய்க்
கீறுவேனுறுமுகன் பாதம்போற்றி
தாளடாயிடைரேகைக் குறுக்கேகீறி
சாற்றுகிறேனொருநெல்லு நீளமப்பா
வாளடாபின்கலையின் ரேகைகீழே
வயணமா னுநெல்லுநீளங்கீறு
நீளடாசுழிமுனையின் ரேகைகீறி
நிகழ்த்துகிறேன் மூன்றுநெல்லுநீளங்கீறே. 2

கீறியேயிடையினுட ரேகைரெண்டும்
கீழாகபின்கலையின் மையங்கூட்டி
ஆறியசுழிமுனையும் ரேகையின்தா
ளாச்சரியம்கீழ்வாங்கி மேலேயேந்தித்
தூறியேசுழிமுனையின் ரேகைமுனைரெண்டிற்
றிறமாகப்பாய்ச்சியபின் கலையைக்கேளு
மாறியேயிரண்டுநெல்லு நடுவேநிற்க
மைந்தனேயிரண்டுநெல்லுங் கடாசிநிற்க. 3

கடாசிநெல்லும்நடுநெல்லும் பொருந்துமுனைமேல்
கடினமில்லையென்றொருநெல் மேலேவைத்து
துட்சியுடன்நெல்நுணியின் விரலைஊன்ற
சுகமாகப்பின்கலையின் கீழேவாங்கி
நட்சியென்றுசுழிமுனைமேற் பொருந்திவைத்து
நன்றாககீழ்வாங்கி நிற்கரேகை
விட்சியடாபின்கலையின் ரேகையென்று
விதமாகவதையுமிப் படியேகீறே.

இப்படியேவாங்கியே சுழியின்கீழே
யிதமாகமூன்றுரேகை நடுவிலேற்றி
இப்படியேஅதின்சரியாய் வாங்கிக்கொண்டு
யியம்புகிறேநுனிரண்டு மொன்றாய்ச்சேர்த்தால்
இப்படியேஆனந்த னிர்த்தஞ்செய்வாள்

இதுக்கீடுவுலகமெல்லாம் நலமோயில்லை
யிப்படியேகீறின லிங்கோணஞ்சூழத்
திருக்கும்நடுக்கோணமென்றே யியம்பக்கேளே. 5
இயம்புகிறேனடுவீட்டிற் கிடையவீட்டி
லென்மகனேமஞ்சலிடு பின்கலையின்கேளு
நயம்புகிறேன்பச்சையடா தாளாம்வீட்டில்
நன்றாகவெள்ளையிடு மூன்றுமாச்சு
தயம்புகிறேன்மேல்மூன்றின் சிகப்புக்கேண்பின்
தயவாகத்தாள்கருப்பாய்ச் சாற்றிக்கொண்டு
வயம்புகிறேன்பஞ்சபாண மைந்துமாக
வாகாகவட்சரத்தை வரையக்கேளே. 6
கேளப்பாமேல்மூன்றி னடுக்கோணத்திற்
கிருபையுடன்றீங்கிலியும் ஓம்யென்றுநாட்டு
நாளப்பாநாட்டினபின் தாளாம்வீட்டில்
நன்றாகநவ்வீட்டுப் பின்கலையிற்கேளு
வேளப்பாமகாரமிட்டுத் தாள்மூன்றிற்றன்
வெகுசுருக்குநடுவிலே சிகாரம்போடு
ஆளப்பாவதுக்கிடையில் வகாரம்நாட்டு
அதினுடையபின்கலையில் யகாரம்போடே. 7
போடுவாய்நடுவுடைய பிரகாரந்தன்னில்
புகழுகிறேன் அங்கென்று முங்கென்றுந்தா

ளுடனேமங்கென்று மூட்டேயின்ன
மாச்சரியம்லாலீலூ. வென்றுநாட்டு
ஈடுகிறநடுக்கோணந் தனக்குப்பின்பு
யியம்புகிறேன்வைங்கோணந் தன்னைச்சுத்தி
ஆட்டெல்லாமிதினாட்டு கைலாசமூர்த்தி
அடியேனுக்குரைத்தபடி அறையுறேனே. 8

அறையுறேன் பானுவைப்போல் விருத்தமிரண்டு
அப்பனே அன்பத்தி னொன்றையுந்தா
னறையுரேநாட்டியபின் நால்வாசலிட்டு
வாசாகவாசலிரு வீதியாக
நிறையுரேன்மூன்றேகைச் சதிரமாக
நினைவாகவருந்தியபின் தானங்கேளு
நிறையுறேநால்வாச லன்பதாகத்
தீர்க்கமாய்க்கொடிக்கம்பம் போலேநாட்டே. 9

நாட்டியே நுணியிலே சூலம்போட்டு
[illegible]லமாகச்சிங்கென்று மங்கென்றிட்டு
ஆட்டியேபின்னமொரு சேதிதன்னை
யப்பனேசொல்லிவிட மறந்துபோனேன்
துட்டியேஅட்சரங்க ளிட்டதெல்லாஞ்
சுகமானயதின்தாழே சிகாரமிட்டு

மாட்டியேஅட்சரத்தை சுத்திவாங்கி
வளையத்தினிடைதனிலே சிங்குவாங்கே. 10
வங்கென்றுமிருபுறமும் வைத்தபின்பு
வாகாகயிருமூலை நாசிற்கேளு
சிங்கென்றுங்கணபதியும் வீரபத்திரன்
திரமானதட்சிணா மூர்த்தியோடு
வங்கென்றுஞ்சுப்பிர மணியரோடும்
வாகாகஉள்மூலை வைத்துப்பூசி
அங்கங்கேயவர்களையும் வைத்துப்பூசி
அப்பனேவெளிமூலை னாலிற்கேளே. 11
கேளப்பாவயிரவனுஞ் சண்டிகேசன்
கிருபையுள்ளகெந்திரனுங் கந்தனைத்தா
னாளப்பாவைத்துநே மித்தபின்பு
நலமானஅஷ்டகெஜ மஷ்டனாகம்
வாளப்பாஅஷ்டசித்தி அஷ்டபாலாள்
வரிசையுடனவர்களுட பீசம்போடு
ஙாளப்பாயிவர்களுட பீசம்போடு
நவிலுகிறேனென்னுடைய தீட்சைபாரே. 12
பாரடாஎன்னைப்போ லாருஞ்சொல்லார்
பரிவாகசொன்னதென்ன குருவேசொல்வார்
வீரடாகாயாதி பிராணாயத்தோடு

விதமாககற்பங்கள் கொள்ளுமார்க்கந்
தூரடாபுவனையுட ஆட்டத்தோடு
சுகமாகதீச்சையொன்று சொன்னேன்பாரு
பாரடாயிவ்வளவும் வெளியாய்ச்சொன்னேன்
ஆச்சரியஞ்சித்தர்சொல் லில்லைதானே. 13

தானென்றயெந்நூலைப் பார்த்துஈசன்
தப்பாமற்போடுநடு கோணத்திற்கேள்
வேனென்றஉகாரமிட்டுச் சுழித்துத்தாழ
உத்தமமாக்கழித்துசுத்தி வளைத்துக்கொண்டு
லூனென்றசிங்குவங்கு ளுட்டிளுக்கா
லப்பனேவுலகமெல்லா மிதுவேயாச்சு
தேனென்றசத்திசிவ மிதுவேயாச்சு
சிதம்பரத்தின்மூலமெல்லா மிதுதானுச்சே. 14

எந்திரதகட்டின் பிரமாணமும் பூசைவிபரமும்.

ஆச்சப்பாயின்னங்கேள் நடுக்கோணத்தி
லாதிசிவன்சாம்பவியைப் பகித்துப்பின்பு
பேச்சப்பாயினியேது வொன்றுமில்லை
பெருமைமெத்ததாயைநீ நேமஞ்செய்ய
பாச்சப்பாகடந்துதான் கனகம்நன்று
பண்பாகயில்லாவிட்டாற் செம்பாற்செய்து

பாச்சப்பாவாகாது யெட்டுவிரல்நீளம்
விதமான அகலமது அளவுதானே. 15
தானேதான்செய்துகொண்டு நடுக்கோணத்தில்
தயவாகப்பணவிடைத் தங்கத்தைவார்த்து
வேனேதானட்சரங்க ளழுத்திப்பின்பு
விவரமாய்நேமஞ்செய்ய வித்தைகேளு
தானேதான்நேமமடம் வடக்குமுகமாய்ச்
செய்துகொண்டுவேற்கட்டும் விதானஞ்செய்து
மானேதானுற்காலி காட்டிற்போட்டு
மவுனமுடன்மெத்தைவிறித் தொழுகுபோடே. 16
ஓழுகுமேலைமையாநீ நேமஞ்செய்ய
ஓதுகிறேன்என்மகனே வுறுதியாகச்
சீழுகிலேநாலுவித சாதியுண்டு
செப்புகிறேன்பதுமினிதான் சித்தினிநன்றாய்
மழுகிகேசநிகினிசத் தினிதானப்பா
வகாரகபத்மினியே மெத்தனன்று
குழுகிலேசித்தினி ரண்டாம்பட்சங்
குறிப்பானசங்கினி அத்தினிதான்காணே. 17
காணடாஅக்கினிதான் தாமஷமாகுங்
கருவானநாலுவகை சாதிக்குள்ளே
பூணடாசங்கினிதான் கிரிகைக்காணும்

புதுமையுள்ள அக்கினிதான் சரிதைநேமம்
நாண்டாசித்தினிதான் யோகநேமம்
நன்றாகப்பதுமினியே ஞானநேமம்
ஆண்டாகிடைத்தாக்கா யிப்படியேபண்ணு
அரகாரகிடைபாட்டா லொன்றென்றெண்ணே. 18

எண்ணினலொன்றாச்சி உலகமெல்லா
மினிஷ்டைபண்ணுகிற வரிசைகேளு
அண்ணினுறுவகை சாதிக்குள்ளே
அகப்பட்டபெண்களுக்கு ஸ்நானஞ்செய்து
நண்ணினல்தேகமெடில் நீர்விட்டாடி
நன்றாகப்புனுகுசந்தனஞ் சவ்வாதும்
பன்னீராற்குளுப்பியே தேகமெல்லாம்
பண்பாகமுழுகியே பட்டுக்கட்டே. 19

கட்டியபின்மெத்தையின்மேற் குனியவைத்து
கருத்தியேயேறுசிந்தை வையாமற்றான்
தட்டியுடன்ஒருமனதாம் மவுனமுன்னத்
தனமானஅம்பிகையே தாயேதேவி
காட்டியேசாம்பவியே உமையேயென்று
நன்றாகாபூரணி காரணியேநீலி
வாட்டியதோர்வல்லமையே பிரமன்பாரி
வரிசையுள்ளசரஸ்வதி லட்சுமியேயெண்ணே. 20

யெண்ணவேருத்திரியே மாயோன்மாரி
யென்தாயேமயேஸ்பரியே மனோன்மணியே
யுண்ணவேலட்சுமியாந் தேவியம்மா
ளுரிமையுடன்றுளபமதி லிருந்ததேவி
யெண்ணவேவேணுமடா சிந்தைதன்னி
லிதமாகஅவ்விடத்தில் செலுத்தவேணுங்
கண்ணவேநவரத்தின முடிகிரீடங்
காதிற்குண்டலமணிந்து மஞ்சத்தின்மேலே. 21

மஞ்சமதிலரனிருக்கு மஞ்சத்தின்தாழ்
மகத்தானதேவரொடு முனிவர்சூழத்
தஞ்சத்திலரன்மடியி லிருந்ததாயே
சச்சிதானந்தர்ருள் பெற்றதாயே
கஞ்சத்தினுரைமாதே காரணியேதேவி
கருணைபெருஞ்சச்சிதானந்ததாயே
துஞ்சத்திலாதார சத்தியென்றுஞ்
சுருக்காகவொருமனதாய்க் கூவுகூவே. 22

சுருக்காககூவியபின் சொல்லக்கேளு
சுகமானதேன்நெய்யுஞ் சக்கரையினோடு
பருக்காகக்கருப்பஞ்சார் மாம்பழத்தினோடு
மைந்தனேவஸ்துவரைப் படியும்விட்டு
பருக்காகபொரிகாரச் சுண்ணம்போடு

பசுந்தனைபால்புனுகுடனே பூரஞ்சேர்த்து
உருக்காகதற்சனையிற் றேய்த்துக்கொண்டு
உத்தமனேதிரிகோணத் துரைக்கச்செய்யே. 23

செய்யவேகரிகரணங் காமாலைஊருந்
தேனெனவேவஸ்துவைத்தான் காதில்வாங்கு
வெய்யவேவிடலைபழந் தாழம்பூத்தான்
விடத்தலைவேர்பிண்டகனி தேனூலாட்டி
பையவேஉந்தியிலே தடவிக்கொண்டு
பராபரைக்கிளரிகரணஞ் செய்யும்போது
மையவேஆரோடும் நாற்காலிக்குள்ளே
வாங்கிவைத்துநியமமுதல் தூபங்காட்டே. 24

காட்டியேயறவுவிடம் நீர்விட்டாடி
கமகமென்றுசுகந்தபரி மளங்கள்தூவி
கூட்டியேதுவாலையிட்டு பட்டுவஸ்திரங்
குணமாகக்கட்டியபின் பாதநேமம்
நீட்டியேசொல்லுகிறே னின்றுநன்றாய்
நினைவாகஅவளுக்கே ஆபரணந்தரித்து
ஆட்டியேதாயுடைய பெருவிரல்தன்னி
லன்பாகமனதைவைத்து அப்பாகேளே. 25

கேளடாசொல்லுகிறே னினைவாயப்பா
கெடியானபீங்கானில் போதந்தன்னை

ஆளடாநீயெடுத்து தாய்கைக்கீய்ந்து
அவள்கொங்கைநடுவைத்து சொல்லிப்பின்பு
நாளடாவஸ்துவினிட சாபம்நீங்கி
நன்றாகஉனக்குதந்தால் வாங்கிக்கொண்டு
மூளடாவாலையுட மந்திரத்தையுன்னி
முன்குருவுக்குதந்தபின்பு வாலைக்கீய்ந்தே. 26

ஈயடாஅவள்தனக்கு யீந்தசேடம்
யென்மகனேமிச்சமெல்லாம் உண்டாயாகில்
தூயடாவலதுகையிரத் தேகமாச்சு
சுகமாகப்பாங்குபெறக் கொண்டாலையா
வாயடாவங்கென்று போச்சுமுண்டால்
மருவினதால்சதாசிவத்தின் நேமமாச்சு
மையடாயினிவேரை நேமமில்லை
மைந்தனேயின்னேமம் ஆதியாமே. 27

ஆமப்பாயவள்நேமம் முன்பேசெய்ய
அன்னமொடுபலகாரம் வைத்தபின்பு
நாமப்பாசொன்னபடி ஒளிகாணக்கேளு
நன்றாகப்புருவமையம் பார்க்கச்சொல்லு
தாமப்பாநவகோணத் தகடுதன்னை
தப்பாமல்கடிதலத்தில் வைத்துப்பூவால்

காமப்பாலற்றபின்பு சுத்தநீராற்
கலியாணிபெருவிரலில் மனத்தைவையே. 28

வையடாஒருநினைவாய் பலநினைவைவிட்டு
மகாரத்தைஓதிடவே வரிசைகேளு
பொய்யடாசொல்லவில்லை யோகதீட்சை
புகட்டினேன் தனியிருந்து லட்சந்தீரு
மெய்யடாவுருவேற மட்டுங்கேளு
விதமாகயிடக்கண்ணில் உகாரம்நாட்டி
நெய்யடாபுருவமத்தில் நிலையைநாட்டி
நீயடாவலக்கண்ணில் அகாரம்நாட்டே. 29

நாட்டியேமவுனமுன்னி தீட்சையோடு
நன்றாகபுருவமையம் பார்க்கப்பார்க்க
கூட்டியேபருவமட்டு நன்றாய்த்தானே
கூர்ந்துபார்கோடிரவி கோடிபானு
மாட்டியேஒளிகாணு வொளியிற்சென்று
மைந்தனேயீராறு தலமுங்காணுந்
தாட்டியேதலங்கண்ட போதுதானே
சகலசித்தியாகுமடா சார்ந்துபாரே. 30

பாரப்பாயோகசித்தி குளிகைசித்தி
பண்பாகவாதசித்தி காயசித்தி
ஆரப்பா அஷ்டகன்மம் சித்தியாகு

மாச்சரியத்தாயுடைய பெருமையாலே
கூரப்பாஅவள்முன் வைத்திருந்தஅன்னங்
கொடுமையுள்ள கரிபதார்த்தங்களெல்லாம்
வாரப்பாதள்ளி முறப்பின்வர்க்கம்
வயணமாயொருமனதாய் பொசித்திடாயே. 31

பொசித்தல்லோதகடதிலே மாளச்சிந்து
புதுமையுள்ளதூபமுதல் தீபங்காட்டி
வசித்தல்லோவசியென்று தகடெடுத்து
மைந்தனேதினனேமம் செய்யக்கேளு
நசித்தல்லோமுன்செபித்த தீட்சைதன்னை
கருவாகநூற்றெட்டு உருச்செபித்து
பொசித்தல்லோபுராணத்தி லன்புவைத்து
புதுமையுடன்யென்மகனே வணங்குவாயே. 32

பூசிக்கும்போதுஒரு முறைமைகேளு
புதுமையுள்ளஉலகமெல்லா மகண்டபோது
ஆசிக்குமுபசாரஞ் செய்துநிற்பா
ளண்பாகப்பெண்கள்வந்து அணுகவென்பார்
நாசிக்கும்அவர்களைநீ யணுகவேண்டாம்
நன்றாகத்தாய்சொன்ன படியேசொன்னேன்
வாசிக்கும்பூசைசெய்யா விட்டாலாகா
வாயாதுகாயசித்தி வாயாதென்னே. 33

வாயாதுதேவருக்கும் ரிஷிகளுக்கும்
மைந்தனேமும்மூர்த்தி தனக்குங்கூட
வாயாதுபூசையினி யுனக்குமைந்தா
விட்டகுறையாயல்லோ வாய்த்துதப்பா
வாயாதுஒருநாளு மனிதர்க்கையா
மகத்தானபூசையிது கிரிகைபூசை
வாயாதுயென்றுசொல்லி விட்டிடாதே
மரவாமல்சிவயோகி மருவிப்பாரே. 34

மருவிப்பாரிப்பூசை முன்னேசெய்து
வகையாகக்கிருபைதன்னை யேகாந்தம்பார்த்து
உருவிப்பாரிதற்கெல்லா முன்னேசெய்ய
ஓகோகோசரிதையுட விபரங்கேளு
கருதிப்பார்சித்தர்சொன்ன தீட்சைமார்க்கங்
கருணையுடனுருச்செபித்தால் சரிதையாகுந்
தருவிப்பாரவன்பிறகு கிரிகைபூசை
தப்பாமற்செய்தபின்பு யோகம்பாரே. 35

யோகத்தைப்பார்த்தபின்பு கற்பமுன்னு
வெகுசுறுக்காயறுசுவையுங் களத்திப்போடு
போகத்தைக்கைவிட்டு யோகம்பாரு
பொலிவானசாம்பலது நித்திரையேவேண்டாம்

பாகொத்தகொங்கணரு மென்னுடையதந்தை
  பாடினரிறுநூறுந்தா னென்றுபோல
சேகொத்தஅம்முறைக்குங் கற்பங்கொண்டு
  செகசாலமார்க்கமெல்லாஞ் சோத்தள்ளே. 36

தள்ளியேவலேகளிலே செல்வதற்குச்
  சாரணைக்கியேத்ததொரு குளிகைபண்ணி
அள்ளியேமலேகளிலே நடந்துதெட்ச
  ணயமூர்த்திபொதிகைதனிற் கண்டுசேவி
மள்ளியேநானிருப்பேன் மகேந்திரத்தில்
  மைந்தனேவந்தென்னைக் கண்டுசேவி
வள்ளிதனேயுனக்களிப்பேன் வாழ்வேயீவேன்
  மகத்தானநவகோணம் பூசைமுற்றே. 37

சுந்தரானந்தர் பூஜாவிதி-37

முற்றிற்று.

உ

எழுபத்தோராவது,

சுப்பிரமணியர் ஞானம்-33.

காப்பு.

ஒழியாதசுழிமுனையி லொடுங்கிநல்ல
உற்றகலைவாசிசிவ யோகத்தேகி
வழியானதுறையறிந்து மவுனங்கொண்டு
மகத்தானஆண்டவரை முடிமேற்சென்று
தெளிவானஓங்கார வடிவேல்கொண்டு
தெளிந்துமனதறிவாலே தன்னைக்கண்டு
வெளியானபரவெளியில் தன்னைக்கண்டு
வேதாந்தசத்திசித்தி ஆதிகாப்பே. 1

நூல்.

ஆதியிலேபராபரத்திற் பிறந்தசத்தம்
அருவுருவாய்நின்றபர சிவமுமாகி
சோதியென்றசிவனுடைய மாயாசத்தியாகித்
தொல்லுலகிலெழுவகையாந் தோற்றமாகி
நீதியென்றஅறிவதனல் தானாய்நின்ற
நிறைந்தபரிபூரணமாய் நிஷ்களமுமாகி
சாதியென்றசத்திசிவ மருள்தன்னாலே
சண்முகனுங்கணபதியுந் தானுண்டாச்சே. 2

உண்டானசத்திசிவம் யோகமாகி
உளங்கனிந்துபூரணமாய் நிற்கும்போது
குண்டானமாங்கனியைக் கையில்வாங்கி
குமானுடன்கணபதியைக் குணமாய்ப்பார்த்து
நன்ருகக்கிரிவலமாய் வந்தபேர்க்கு
நல்லகனிதானீவோ மென்றுசொன்ஞர்
பன்ருனகனியறிந்து குமரன்ருனும்
பாய்ந்துமயிலேறிகிரி வலஞ்சென்ருரே. 3

சென்றபின்புகணபதியு மாலோசித்து
தீர்க்கமுள்ளமேருகிரி நீர்தானென்று
கண்டவுடன்சிவனுமையாள் பாதந்தன்னைக்
கருத்துடனேசுற்றிவந்து கனியைவாங்கிக்
கொண்டுவந்தசிவனுமையைத் தியானஞ்செய்து
குறியறிந்துநெறிதமக்குள் திருவைப்போற்றி
தின்றுருசிகண்டறிந்து நிற்கும்போது
தீர்க்கமுள்ளகணபதியை வாவென்ருரே. 4

வாவென்றுயெடுத்தணைத்து அருட்பாலீந்து
மகத்தானஐவருக்கும் பீடமாகி
ஆவென்றுமூலமதிற் காசாய்நின்று
ஐந்தெழுத்திற்குபிரான ஆதியாகி
கூவென்றசத்துசித்த சுத்தமாகிக்

குவிந்தெழுந்தவாதிகுரு தேசியாகி
பூவென்றவாயிரத்தெண் மலருக்குள்ளே
பொருந்திமனவறிவாலே யிருந்துவாழே. 5

இருந்துவாழென் றுரைத்த வேளைதன்னில்
ஏகாந்தமயில்வீர னெதிரில்வந்து
அருந்தவமாய்நின் றநிலை தன்னைப்பார்த்து
அருமையுள்ளகண்மணியே வாவென்றேதான்
வருந்தியேமாங்கனியொன் றீந்துநல்ல
மகத்தானஅண்டரண்ட வரைகள்சுற்றி
திருந்தியேதீர்க்காயுள் பெற்றுவாழ்ந்து
தீர்க்கமுடன்மலைக்கா யிருந்துவாழே. 6

வாழென்றுசொன்னவுடன் மயில்வீரன்தான்
மகத்தானசிவசத்தி பதமேற்கொண்டு
சூவென்றுமயிலேறி கயிலாசத்தை
யாவலுடன்சுற்றிவரும் போதிலேதான்
சூழென்றுஇமயகிரி வடபாகத்திற்
சுத்திசித்தமானதபோ தனர்கள்கண்டு
தாள்பணிந்துவணக்கமதாய் நிற்கும்போது
தபோதனர்கள்ரிஷிகளுமே தான்வந்தாரே. 7

வந்தவரைத்தான்பார்க்க வரையில்நிற்க
மகத்தானசற்குருவென் றடிபணிந்து

இந்தமலைச்சாரலிலே வெகுநாளாக
 இன்பமுடன்றவஞ்செய்து வாழ்ந்தோமையா
அந்தரமாய்ராட்சதர்க ளண்டிவந்து
 அலங்கோலஞ்செய்துமே துரத்துகின்றார்
சுந்தரமாயிருந்துதவங் காருமென்று
 சுத்தசித்தமாய்தவத்தைத் துடங்கினரே. 8

துடங்கிமனதடங்கிநிலை தன்னைக்காத்து
 சுத்தமுடனின்றுவிளை யாடும்போது
அடங்கிமனமடங்காத அசுராள்தானும்
 அஞ்சாமலழும்புசெய்ய முகத்தைப்பார்த்து
திடங்கொண்டுமயிலேறி செவ்வேல்கொண்டு
 சிவந்துவருமசுரர்களை மாளவென்று
படங்குவித்துவேல்முனையைத் தியானம்பண்ணி
 பாயவிடஅசுரர்கிளை பறந்துபோச்சே. 9

பறந்துபோய்பலவிதமாய் ரூபங்கொண்டு
 பந்திபந்தியாயசுரர் மறைந்துவந்தார்
சிறந்துவந்தசேனைகளை நன்றாய்ப்பார்த்து
 தீர்க்கமுள்ளமயிலேறித் தெளிந்துநின்று
அறந்தழைக்கவேணுமென்று ஸ்தூலசூட்சம்
 அரூபமென்னுங்காரணமாய் ரூபங்கொண்டு

நிறந்தரமாய்தந்தவொரு அசுராள்தன்னை
நிர்த்தூளிசெய்துதவ நிலைகொண்டாரே. 10
நிலைகொண்டுநின்றசெயங் கொண்டசிந்தை
நேர்மையுடன்தவஞ்செய்யு முனிவர்கண்டு
கலைகொண்டுமனந்தெளிந்து மகிழ்ச்சியாகி
கானமயில்வீரனடி கருதிப்போற்றி
தலைகொண்டுதாள்பணிந்து அருட்கண்பெற்று
தபோதனரும்ரிஷிகளுமே தான்பணிந்து
சிலைகொண்டுநின்றுவடி வேலர்தன்னைத்
தெரிசித்துஅவரவர்கள் பதிசென்றாரே. 11
பதிதேடியவரவர்கள் செல்லும்போது
பத்தியுள்ளஅகத்தியமா முனிவர்வந்து
விதியறிந்துஅசுரர்களை மாளவென்று
வெற்றியுள்ளவடிவேலைத் தியானம்பண்ணி
நெறியறிந்துஸ்தூலமுடன் சூட்சமாகி
கிருபையுள்ளகாரணமாய் ரூபங்கொண்டு
சதியறிந்துசங்காரஞ் செய்தீரையா
சண்முகமேயென்குருவே சரணந்தானே. 12
சரணமென்றஅகஸ்தியமா முனியைப்பார்த்து
சண்முகமாய்நின்ற வடிவேலர்தானுங்
திரணமதாய்த்தானறிந்து நீயாரென்ன

திருவடியைப்பூசைசெய்யுஞ் சேயனென்றார்
காணமந்தக்காணமதாய் வந்ததேதோ
கருணையுடன்வாருமென்று கடாட்சம்நல்கி
தருணமறிந்துதவுவது தருமமென்று
சங்கையுடன்தான்வந்த வகைசொல்வீரே. 13

சொல்லென்றுமயில்வீரன் கேட்கவந்த
சோதிமயமானதொரு அகஸ்தியர்சொல்வார்
சல்லென்றுவந்ததொரு அசுராள்தன்னை
சண்முகமாய்நின்றவடி வேலுங்கொண்டு
சொல்லென்றுசங்காரஞ் செய்தீரந்த
திருவுருவாய்நின்ற காரணத்தைக்காட்டி
உஃளென்றஆகார ஸ்தூலசூட்சம்
உண்மையென்றகாரணமு முறைசெய்வீரே. 14

உரைசெய்வீரென்றுசொன்ன வுறுதிகேட்டு
உண்மையென்று மயில்வீரன்உறுதியாகி
உரைசெய்துஎக்கியங்கள் தானுண்டாக்கி
நேமமுடன்அகத்தியமா முனிவர்சென்று
அறையறிந்துஅருகிருத்தி வோமக்குண்டம்
ஆதியென்றமந்திரத்தி லக்கினியுண்டாக்கி
புரையறிந்துமந்திரங்கள் செபிக்கும்போது
பூரணமாய்கும்பமதில் தானுண்டாச்சே. 15

9 †

உண்டானபூரணமாய்க் கும்பம்வாங்கி
    உண்மையென்றமாமுனிக்கு அபிஷேகித்து
நன்றான நவக்கிரக மொன்பதுக்கும்
    நலமான அனுக்கிரக நிலையுங்காட்டி
குன்றான அனுக்கிரக வாசல்காண்க
    குவித்துமன தறிவதனால் வின்னென்றானே. 16

வின்னென்றுவிசையுடனே முனைநாவிண்ண
    மெய்ஞ்ஞானவாசலது திறக்குமப்போ
கன்னென்றகபாலவழிக் குள்ளேநின்று
    கலையறிந்துவாசியினால் கமலநோக்கி
புன்னென்றுமூலமதில் வங்கென்றுபூரி
    யுறுதியென்றசமாதியிலே சிங்கென்றுரேசி
என்னென்றுமிப்படியே கொண்டுநன்றாய்
    யோகமுள்ளதசதீட்சை யுண்மைகேளே. 17

உண்மையுடன்சுழிமுனையில் வின்னென்றாணி
    உறுதியுடன்ஆதார தீட்சைகேளு
நன்மையுடன்ஓங்ரீங் அங்உங்கென்று
    நாட்டமுடன்பதினாறு உருவேசெய்தால்
தண்மையுடன்கணபதியும் பிரகாசிப்பார்
    தானமென்றசுழிமுனையில் தன்னைப்பார்த்து

நுண்மையுடன் ஓம் நமசிவாயமென்றால்
நோக்குமுன்னேபிரமந் தரிசனமுமாமே. 18

ஆமப்பாநமசிவாய நமவென்று
அதின்பிறகுவயநமசி வயநமசிவாவென்றும்
தாமப்பா தலைகாலாய் மாறிக்கொண்டு
சங்கையுடன்கால்தலையால் மாறிக்கொள்ளு
ஆமப்பாநமசிவாய நமசிவயநமவென்றும்
அதன்பிறகுசிவயநம சிவயநமவென்று
ஓமப்பாநமசிவய வென்றுமாற
உண்மையென்றஆதாரஞ் சித்தியாமே. 19

சித்தமுடனைந்தெழுத்தை மைந்தாநீயும்
செம்மையுடன்தலைகாலால் கால்தலையாய்மாற
சுத்தமுடன்ஆதார தேவதைகள்வந்து
சொன்னபடியிருதயத்தில் சுகமாய்நின்று
பத்தியுடனிப்படியே தியானம்பண்ணிப்
பதிவாகவிபூதியுந் தளமாய்ப்பூசி
நித்தியமுமிப்படியே செய்துநின்றால்
நிலையில்லாத்தூலசடம் நிலைக்கும்பாரே. 20

பாரப்பாமலையறிந்து நிலையில்நின்று
பத்தியுடனாதார சூட்சங்கேளு
நேரப்பாஓம்கிலி அங்கென்றோது

நிலையறிந்துஅங்கிலி நங்கென்றோது
காரப்பாமங்கிலி சிங்கென்றோது
கருணையுடன்சிங்கிலி வங்கென்றோது
சாரப்பாவங்கிலி யங்கென்றோது
சலுதியாய்அங்கிலி மங்கென்றோதே. 21

ஓதியபின்யங்கிலி உங்கென்றோது
உண்மையுடன்அங்கிலி அங்கென்றோது
நீதியுடன் அங்கிலி மங்கென்றோது
நிலையறிந்துமங்கிலி ரீங்கென்றோது
ஆதியுடன்ரீங்கிலி ஓமென்றோது
அப்பனேதலைகாலாய் மாறியோது
சோதியுடன்சுழிமுனையில் மனக்கண்சாற்றி
சுத்தமுடன்விபூதியைநீ தரித்துக்கொள்ளே. 22

கொள்ளப்பாவிபூதியைநீ தரித்துக்கொண்டு
கூர்மையுடன்கால்தலையால் மாறிக்கொண்டு
சொல்லப்பாஅங்கிலி ரீங்கென்றோது
சுத்தமுடன்ரீங்கிலி மங்கென்றோது
வில்லப்பாமங்கிலி யங்கென்றோது
விபரமதாய்த்தோற்றுமடா செய்கையாவும்
உள்ளப்பாமங்கிலி சிங்கென்றோது
உத்தமனேசிங்கிலி மங்கென்றோதே. 23

ஓதியபின்னங்கிலி சிங்கென்றோது
உத்தமமேசிங்கிலி மங்கென்றோது
நீதியுடன்மங்கிலி நங்கென்றோது
நிலையறிந்துநல்லி யங்கென்றோது
சோதியுடன்மங்கிலி ஓமென்றோது
சுத்தமுடனீராறு தவமுஞ்சித்தி
வீதியென்றஆதார மேலாதாரம்
விண்ணடங்கிகண்ணடங்கி மேவிநில்லே. 24

நில்லப்பாகண்ணடங்கி விண்ணென்றாணி
நீயறிந்துபிராணாயஞ் செய்தால்மைந்தா
கல்லப்பாதிரேகமது மதுகாலனேது
காலனென்னும் வியாதியெல்லாங்காணுதோடும்
உள்ளப்பாவாசியது வுறுதியாகும்
ஓதுகின்றமந்திரமுஞ் சித்தியாகும்
சொல்லப்பாஸ்தூலமுடன் சூட்சுமஞ்சொன்னேன்
தூலங்கிநின்றஸ்தூலத்தின் சுருக்கங்கேளே. 25

சுருக்கமுடன்ஆதார தூலசூட்சஞ்
சொன்னபடிபிராணாயஞ் செய்துக்கொண்டு
உருக்கமுடன்செபதபங்கள் பூசையாலும்
உண்மையாயுனக்குள்ளே கண்டுதேறி
பெருக்கமுடன்தானிருந்து சீவான்மாவே

பிரணவமாய்நின்றபரம் நின்றுமாகி
நெருக்கியந்தஅண்டவெளிக் குள்ளேசென்று
நேமமுடன்பிராணயம் நினைவாய்ச்செய்யே. 26

செய்யப்பாபிராணயம் நினைவாய்ச்செய்ய
சிவசிவாகருமானஞ் செப்பக்கேளு
பொய்யப்பாபோகாது பிராணயவாய்வு
பொருந்திநின்றுவிளையாடும் புதுமைகேளு
பையப்பாசுழிமுனையில் வின்னென்றாணி
பதிவாகமூலமதில் வங்கென்றுபூரி
மெய்யப்பாசுழிநிலை சிங்கென்றுரேசி
வேகமுடன்கண்டமதில் அங்கென்றுகும்பே. 27

அங்கென்றுகண்டமதில் கும்பித்தேதான்
அசையாதுவாசிதிரு வாசிதானும்
செங்கமலமானசுழி பிண்டத்தேறும்
திரும்பியந்தபிண்டமதில் சென்றுவாழும்
சங்கையுடன்தன்னகத்தில் தானேதானாய்
தன்மையுடன்நின்றுவிளை யாடுவாசி
மங்களமாய்ச்சுழிமுனையில் வின்னென்றாணி
மார்க்கமுடன்இகபரமா யிருந்துதானே. 28

காணவேசத்தியவள் தியானம்பாரு
கருவாகச்சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளு

பூணவேயுரைத்திடுவாய். அங்கிங்கென்று
புத்தியுடன்பதினாறு வுருவேசெய்து
தோணவேவிபூதிது ளிதமேபூச்சு
சுத்தமுடன்பராசத்தி னிர்த்தஞ்செய்வாள்
ஊணவேயிப்படியே தியானம்பண்ணி
வுண்மையுடன்பிராணய வுறுதிபாரே. 29

உறுதியுள்ள அகத்தியமா முனியேகேளு
வுண்மையுள்ளசத்தியைநீ தியானம்பண்ணி
பருதிமதிசுடரொளிபோல் பஞ்சகர்த்தன்
பதியறிந்துபிராணயம் பதிவாய்ச்செய்து
சுருதிபொருளானதொரு பொதிகைமேவி
சுகசீவபிராணகலை வாசியேறி
கருதிமனமொன்றாகி சுழியில்நின்று
கலகமற்றஅமிர்தபானங் கைக்கொள்வாயே. 30

பானமென்றமதியமிர்த பானங்கொள்ள
பரப்பிரமமானசுழி வழியுங்காட்டி
தானமென்றஆதார மேலாதாரந்
தனையறியும்பிராணயச் சங்கைசொல்லி
ஞானமென்னநிலைகாட்டி மூலங்காட்டி
நாதாந்தஆறுமுக நிலையுங்காட்டி

மோனமென்றவடிவேலின் முனையுங்காட்டி
முனையறிந்துகலைநிறுத்தி முடிமேல்நில்லே. 31
நில்லப்பாசதுரகிரி முடியிற்சென்று
நிலையானபொதிகையிலே வாசமாகி
உள்ளப்பாதானாகி விண்ணென்றாணி
உன்மனதில்நினைத்தவொரு மந்திரந்தன்னை
சொல்லப்பாதியானமுடன் செபிக்கும்போது
சுத்தமுடன்சித்திக்கும் சும்மாய்நின்று
சொல்லப்பா அஷ்டாங்க யோகத்தேகிச்
சிவாயகுருபாதமதில் தெளிவாய்நில்லே. 32
தெளிவானதெளிவதனால் தன்னைக்கண்டு
தீர்க்கமுடனிருந்துதவஞ் செய்யவென்று
மழியாதவனுக்கிரக வா[illegible]மீந்து
மார்க்கமுடன்மயில்வீரன் வடிவேல்கொண்டு
அழியாதஆண்டவரை முடிமேற்சென்று
அஷ்டகிரிபர்வதத்திற் கரசுமாகி
ஒளிவாகிஅண்டவெளி யெங்குந்தானாய்
ஓங்காரவடிவேலை யுவந்தான்முற்றே. 33

சுப்பிரமணியர் ஞானம்-33

முற்றிற்று.

உ

சிவமயம்.

எழுபத்திரண்டாவது,

மச்சமுனி

சூத்திரம்.—௨௰௰.

காப்பு.

ஆதிவேதாந்தமனோன் மணியேகாப்பு
வருளானமுப்பாழாம் வெளியேகாப்பு
சோதியிலேமுளைத்தெழுந்த சுடரேகாப்பு
சுத்தவெளிக்கப்புறத்தில் சுடராய்நின்ற
வாதியென்றுபேர்படைத்த பொருளுக்கெல்லாம்
வகையாகச்சுருக்கமொரு பதினைந்துக்குள்
நீதியுடன்சொல்லுகிறே னறிவுள்ளோர்க்கு
நிலையாகநாதவிந்துக் கருதிப்பூணே.

நூல்.

பூணப்பாஓங்கார முயிர்தானச்சு
புகழானசூதமது வுயிர்தானச்சு
காணப்பாஅகாரமது பொருந்தப்பாரு
கனமானநாதமது பொருந்தப்பாரு
தோணப்பாயிப்படியே வாதவித்தை
சொல்லிவிட்டேன்சூட்சத்தை யாருஞ்சொல்வார்

கோணப்பாசெகத்திலே பிழைப்புமானால்
கோடிதரம்வதைத்தாலுங் கூடாதோடும். 1
ஓடுமதுநொச்சிவெள்ளைப் பலமேவொண்ணு
உறவானதங்கமது விராகனென்று
நாடியதோர்வட்சரந்தான் பலமேபோடு
நலமானகெந்தியுந்தான் பலமேபோடு
தேடியதோர்சவ்வீரம் பலமேபோடு
திடமானவெண்காரம் பலமேபோடு
ஆடியதோர்ஐந்துசுண்ண செயநீராலே
அரகராஒருசாமம் ஆட்டுவாயே. 2
ஆட்டியேவில்லைசெய்து ரவியில்போட்டு
ஆணுப்புபெண்ணுப்பு கீழ்மேலிட்டு
காட்டாவின்முட்டை ஐந்துபுடமுந்தீரு
கன்னெப்பினப்பெடுத்து செயநீராட்டு
பூட்டாகஒருசாமம் ஆட்டிப்பின்பு
புகழாகவில்லைசெய்து ரவியில்வைத்து
தேட்டானசங்கதிபோற் செந்தூரந்தான்
திறமானவெள்ளியிலே நூற்றுக்கொன்றே. 3
உண்டானகெந்திசெம்பு செப்பக்கேளு
ஓதுகிறேன்கெந்தியின்கால் பலமேயொன்று
நன்றானவறிநெல்லிச் சாற்றாலாட்டி

நலமாகவில்லைசெய்து செயநீராலாட்டி
பண்டாகவைத்துசுன்னச் செயநீராலே
பதராமற்கொச்சிவெள்ளைக் கவசங்கட்டி
தண்டானபச்சைவெள்ளை மேலேயப்பி
தயவாககெந்தியொன்று வெள்ளையெட்டே. 4

எட்டிலேயிருக்கின்ற சோதியாலே
யெழுப்பியந்தவுலைதனிலே வைத்தூது
மட்டிலேநில்லாது சாமமொன்று
வகையோடேயெடுத்ததனை யரைத்துக்கொண்டு
கெட்டியாயஞ்சிலொன்று செம்புதானுங்
கெடியாகதங்கத்திற் பாச்சுபாச்சு
சட்டமாய்பத்துக்கு ஒன்றேயாச்சு
சாதகமாம்பின்பெடுத்து புடத்திற்போடே. 5

போடதிலேயணுவளவு தப்பிற்ருனல்
போய்விடும்போட்டசரக் கெல்லாந்தானும்
போடதிலேதீயணுவு மிஞ்சிற்ருனல்
புகழானவேதையென்ற சரக்குப்போகும்
போடதிலேதீட்சையது யெழுத்தில்லாவிட்டால்
பொருளானவாதமெல்லாம் வீணாய்ப்போகும்
போடதிலேபோச்சென்று விட்டுவிட்டால்
புண்ணியமாந்தவமெல்லாங் கூடாவாரே. 6

ஆராதகோபத்தைத் தீரவிட்டால்
வாதமென்றபேச்சுமொரு காதம்போகுந்
தீராதபிராணய மில்லாப்பாவி
திரிலோகஞ்சென்றாலும் வாதங்காணான்
கூரானகுருவோடே யெதிர்த்தகோபி
கோடிதவஞ்செய்தாலும் ஞானங்காணான்
தேரானசாக்கதிலு மட்டியானால்
திரணமுந்தான்பாயாது திண்ணந்தானே. 7

திண்ணமுள்ளயேமவித்தை யிடக்கண்பாரு
திறமாகவெள்ளிதனை வலக்கண்பாரு
வணக்கமுள்ளவாலைபுர மகாரம்போடு
வாமத்தின்பக்கமது வகாரமாச்சு
எண்ணமுள்ளமேல்வீட்டிற் சிங்கென்றானு
ஏகாந்தந்தோன்றுமடா எட்டிப்பாரு
கண்ணிமையுங்கொட்டாமல் பார்த்தாயானால்
காணுமடாவைந்தெழுத்துத் தீபம்பாரே. 8

பாரிலேவங்காளப் பச்சையப்பா
பரிவாகசமமாகப் பலமுந்தூக்கி
நேரிலேமனோசிலையும் பலமுந்தூக்கி
நெடிதானனிணங்கன்தான் பலமுந்தூக்கி
சீரிலேவக்காந்தான் பலமுந்தூக்கி

சிறப்பானகொஞ்சிவெள்ளை பலமுந்தூக்கி
காரிலேகால்கண்டத் தப்பிப்போகும்
கனமானவைந்துசுண்ணம் செயநீராலே. 9

ஆலமென்றசாக்கதுதா னருணாகா
மழகாகவைந்தெருவிற் புடமுந்தீரும்
கோபமென்றவமுரியுப்பு நாதத்தாலே
கொள்ளையப்பாவாதமது உயிரதாகுஞ்
சீலமென்றநாதத்தை யறியாதார்க்கு
செகமெல்லாந்திரிந்தாலும் வாதங்காணு
ஞாலமுடன்செந்தூரந் தன்னைத்தாக்கி
யுத்தமனேவெள்ளியிலே நூற்றுக்கொண்றே. 10

ஒன்றாகமனந்தன்னை நிறுத்தவேணு
மொருமனதாய்குருபதத்தைக் கார்க்கவேணும்
பன்றாகப்பிராணயஞ் செய்யவேணும்
பரிவாகத்தெரிசனையே பார்க்கவேணும்
ஈன்றாகவிப்படியே பதினென்றுந்தான்
நலமாகசெப்பினதோ ரருளைப்போற்றி
நன்றாகப்பார்த்துணர்ந்து வருவீர்மக்காள்
நயமானபிரகாச முண்டாம்பாரே. 11

மச்சமுனி சூத்திரம்-11
முற்றிற்று.

௨

கணபதி துணை.

எழுபத்திமூன்றாவது,

மச்சமுனி

சன்னிகியாழம் - 7.

பூரணமாய்நின்றபரா சத்திபாதம்
போற்றிசெய்தேனுன்னடியே பாதங்காப்பு
காரணமாய்மானிடர்கள் பிழைக்கவேண்டி
கர்த்தாவைமனுகேட்டு மருந்துசொன்னேன்
காரணமாய்நாதாக்கள் பதினெண்பேரும்
கட்டிவைத்தாரதின்பிறகு நூல்களெல்லாம்
வாரணமாயென்தாயார் உபதேசித்தாள்
வைத்தியந்தானெட்டினிலே பாடினேன்பார். 1

பாரடாவென்குருவின் கிருபையாலே
பாடிவைத்தார்நூல்களிலே வநேகமுண்டு
ஆரடாதக்ஷணா மூர்த்திதானும்
அப்பனேபிணிகளுக்கு எட்டுச்சொன்னார்
சேரடாகொங்கணவ ரெட்டுக்குள்ளே
திறமானபார்வையெல்லாம் பாடிவைத்தார்
வாரடாநந்தீசர் யெட்டுக்குள்ளே
வடித்திட்டாரெட்டுக்குள் கேளுகேளே. 2

கேளப்பாமானிடரே யின்னங்கேளு
   கிருபையாய்திருமூலர் எட்டும்பாரு
மாளப்பாகருவூரார் எட்டும்பாரு
   மைந்தனேசட்டமுனி எட்டும்பாரு
நாளப்பாபோகருட எட்டும்பார்த்தால்
   நலமாகத்தோணுமடா வைத்தியந்தான்
வாளப்பாபெருநூலில் னுழையவேண்டாம்
   வடிவாகயிருக்குமே எட்டுந்தானே, 3

தானென்றகன்றிபடல் பற்படாகம்
   தப்பாதேசித்திமுதல் சித்தாமுட்டி
வானென்றவாசனைவேர் வளத்திதானும்
   வளமானயமுதவல்லி வகைக்கிபணந்தான்கேளு
கோனென்றவசம்புசுக்கு மிளகும்கூட்டி
   கோபித்ததிப்பிலியும் தேசிதானும்
ஆனென்றவகைவகைக்கி கழஞ்சியொன்று
   யஞ்சதையும்படிதண்ணீர் விட்டுகாய்ச்சே. 4

காய்ச்சியேஓங்கிலியும் ஓம்சிவாய
   கனக்கவேமனோன்மணிதாய் நாமஞ்சொல்லி
மாய்ச்சியேதிருநீற்றில் உபதேசித்து
   மைந்தனேகியாழத்தில் போட்டாயானல்
பாய்ச்சியேசாபமது நிவர்த்தியாச்சு

பலிக்குமடாவெகுசுருக்காய் பலிக்கும்பாரு
வாய்ச்சுதேயரைச்சிரங்கை கொண்டாயானால்
வலுமானபுத்திவலி யெல்லாம்போமே. 5
போகுமடாவயத்திருவு குன்மங்காய்ச்சல்
பொல்லாதவளவற்ற சன்னியெல்லாஞ்
சாகுமடாசன்னியென்ற தெல்லாம்போகும்
தப்பாதேமூலிகையின் கியாழத்தாலே
பாகமாய்தேனதிலே கூட்டிக்கொண்டால்
பறக்குமடாசகலசன்னி கண்டசென்னி
வாகமாய்மானிடரே வைத்தியோரே
மாட்டடாகியாழத்தை வழியாய்ப்பாரே. 6
பாரப்பாசித்தர்கள் சன்னிக்கெல்லாம்
பாடினார்கியாழங்கள் சுருக்கமாக
ஆரப்பாபாடினதை குறுக்கித்தானும்
அப்பனேசுருக்கமாய் எட்டுச்சொன்னேஞ்
சேரப்பாவயித்தியரே செய்துபார்த்து
திரமானசாபத்தை நிவர்த்திபண்ணி
வாரப்பாயிச்சாபஞ் சுருக்கியப்பா
மைந்தனேதிட்சையது சொன்னேன்கேளே. 7
கேளப்பாபதினெண்பேர் பாடினார்கள்
கிருபையாலவனிடத்தே யிருத்திவைத்தார்

நாளப்பாநோயறிந்து செய்தாயானால்
நலமாகவுனைப்போலே வைத்தியரில்லை
மாளப்பாபெருநூலி லலையவேண்டாம்
மைந்தனேசிறுநூலி லூணிப்பாரு
வாளப்பாமானிடரே சுருக்கஞ்சொன்னேன்
வகைதுகையாய்மச்சமுனி பாடல்முற்றே. 8

மச்சமுனி சன்னி யேழம்-8

முற்றிற்று.

உ

சிவமயம்.

எழுபத்திநான்காவது,

திருமூலர்

கிரந்தி யெண்ணெய் - 8.

காப்பு.

தாதாவேகந்தி தயவாயுரைத்தமொழி
மாதாவேயெந்தாய் மனோன்மணியின்னருள்போற்றி
ஆதாரமான அறுமுகத்தோன்பாதம்
வேதாந்தபூரணமாய்ப் பொருளதுவுங்காப்பாமே.

நூல்.

ஆமென்றநாதாக்கள் மானிடர்க்கு
அறியவேவைத்தியங்க ளனேகங்கோடி
தாமென்றகோர்வைநூல் கிட்டாதென்று
சாதகமாய்சுருக்கிதுண்டாய் பாடினார்கள்
கோனென்றுமிப்படியும் தெரியாதென்று
குறுக்கிவைத்தாரதன்பின்பு யெட்டுதானும்
வானென்றவொருவனெட்டில் சிக்காதப்பா
மைந்தனேபதினெண்பேர் எட்டும்பாரே. 1

பாருநீவெள்ளருகு சித்திரமூலம்
பண்பாகிலக்குமிழி சங்கங்குப்பி

ஆருமேமலைவேம்பு செக்குப்பூடு
அன்பானபூவரசம் பட்டைஇலைப்பழுப்பு
கூறினேன்காய்ப்பூவு மைந்துதானும்
குருவானவச்சுத்தி லத்திவெள்ளம்
பாரினிலேஇவைகளையே சமனாய்ச்சேர்த்து
பண்பாகவுரல்தனிலே யிடித்துவுண்ணே. 2

உண்ணனபசுக்களிட அமுரிநீறு
உத்தமனேயிரண்டுவெள்ள மிடாவில்விட்டு
பண்ணுகமூன் றுநா ளூறவிட்டு
பரிவாகப்பிசைந்துவடி கட்டிக்கொண்டு
கண்ணான ஆமணக்கன் னெண்ணெய்படிரெண்டு
கருவானசாறுபடி யிரண்டதாக
உண்ணனமிளகுசுக்கு வெள்ளைப்பூண்டு
உத்தமனேபறங்கியுட பட்டைதானே. 3

தானென்றவகைக்குநிறை மூன்றதாகும்
சாதகமாய்ப்பொடியிட்டு மெழுகுபதமாக்கி
ஆமென்று-ராங்-உரீங்-உங் கங்லும்-நமசிவாயவென்று
அப்பனேஆயிரத்தெட் டுருதானேதி
கோமென்றவுருவேற சித்தியாகும்
கூறுகயெண்ணெயில்நீர் போட்டாயானல்

வாமென்றவெண்ணெயுட சாபம்நீங்கும்
    மைந்தனேகாழ்சிரங்குதை யெண்ணெய்தொல்லோ. 4
கொள்ளவேகிரந்திகுஷ்டம் குலைபுண்கள்
    கூறுனவெட்டைமுதல் மேகமெல்லாம்
தள்ளவேயனையுரப்பு பிரமியங்கள்
    சாதகமாய்சாக்கட்டு யெல்லாம்போகும்
மெள்ளவேயெண்ணெயடா மூன்றுநாளும்
    வெந்நீருஞ்சோறுமடா கூட்டவேணும்
உள்ளபடிசொன்னனடா மறுபத்தியமூன்றதாகும்
    உத்தமனேஏழுநாள் தண்ணீர்வாரே. 5
வாரப்பாயின்னமொரு சூட்சமாக
    மைந்தனேசுருக்கத்தி லெண்ணெய்சொல்வேன்
சேரப்பாவாசியுட மூலத்தாலுங்
    திரமானகாரமிட்டு அமுரியில்லூரப்போட்டு
சாமப்பாபிசைந்துதா நாலுபடிநீரில்
    சாதகமாம்வெள்ளருகு சாறுநாழி
மாரப்பாகஞ்சிச்சார் நாழியாகும்
    மைந்தனேகுப்பிச்சார் படியுடைதான்பாரே. 6
பாரப்பாமிளகுசுக்கு வெள்ளைப்பூண்டு
    பொங்கமாய்வகைக்குபல மூன்றதாகும்
காரானபரங்கிப்பட்டை காசிடைதான்பத்து

கருவாகபொடிபண்ணி யெண்ணெய்படிரெண்டு
யீரானமெழுகுபதம் ஒருவிரகில்தானும்
விவரமாய்நாளொன்றுக் கால்படிதான்கொள்ளு
வேராகமுன்றுநாள் கொண்டாயானால்
வெகுசுருக்குதைலத்தின் சுருக்குத்தானே. 7

தானைஇதுகளுக்கு சித்தியாக
சாதகமாய்சிவாயநமா அங்ரீங்-உரீங்ரீயென்று
கோனைவிநாயகனைப் பூசைபண்ணி
குருவென்றுயெண்ணெய் வைத்துக்கொள்ளுகொள்ளு
வீணைவீணனுக்கு கொடாதேயப்பா
விருதாவாய்போகுமென்றன் குருநாதன்சொன்னார்
தானைமேகத்தில் பிறந்தரோகம்
சதாகுருவின்யெண்ணெயிலே தீருமுற்றே. 8

திருமூலர் கிரந்தியெண்ணெய்-8

முற்றிற்று.

சிவமயம்.

எழுபத்தைந்தாவது,

திருமூலர்

நாதாந்தக்குறிப்பு - 11.

அடியாகியண்டரண்டத் தப்பாலாகி
அகாரமென்னுமெழுத்ததுவே பாதமாகி
முடியாகிநடுவாகி மூலந்தன்னில்
முப்பொருளுந்தானுகி முதலுமாகி
படியாகிமுப்பாழற்று படிக்குமப்பாற்
படிகடந்தபரஞ்சோதிப் பதியுமாகி
அடியாகிமூலமதே அகாரமாகி
அவனவளாய்நின்றநிலை யணுவதாமே. 1

அணுவாகியவனவளா யல்லாமாகி
அடிநடுவுமுடியாகி யகண்டமாகிப்
பொதுவாகிப்பல்லுயிர்க ளனைத்துக்கெல்லாம்
புகலிடமாயெப்பொருட்கு மூலமாகி
மதுவாகிவண்டாகிச் சுவையுமாகி
மலராகிமணமாகி மதிக்கவொண்ணு
அதுவாகிஅகாரத்தே மூலமாகி
அண்டமெல்லாந்தாங்கிநின்ற பம்பரமூலமாமே. 2

மூலமெனுமாதார வட்டந்தானே
முச்சுடருமுக்கோண மூன்றுநாடி
சீலமெனுஞ்சிவலிங்க பாதத்தீர்த்தந்
திருவடியுந்திருமேனி நடனமாகும்
கோலமுடனண்டமெல்லாந் தாங்கிக்கொண்ட
கொழுந்துவிட்டகம்பமதாய் மேலேநோக்கி
ஆலமுண்டகண்டமெல்லாந் தானாய்நின்ற
அகாரமுதலவ்வெழுத்தை அறிந்துபாரே. 3

அறிந்ததுவுந்தற்பரமே யகாரமாகும்
அறிவுடையஉகாரமே சிற்பரமதாகும்
பிரிந்ததுவுமுலகமெலாஞ் சமயந்தானாகும்
பேதமெனுங்கருவுவகை யெல்லாமாகும்
அறிந்ததுவும்அகாரமென்னும் பாதந்தன்னை
அடிமுடியென்றனுதினமு மறிந்துநோக்கே. 4

நோக்கமுடன்மூலமென்னும் பாதந்தன்னை
னுட்பொருளாஞ்சிற்பரத்தி னூடேநோக்குந்
தீர்க்கமுடனாதார வகையுந்தாண்டித்
திருநயனம்நாசிநெற்றி நடுவேபார்த்து
போக்கறிந்துயிர்ந்தனிலை நோக்கவல்லாற்
புரிசடையோஅரனுடைய புதல்வராவார்

ஆக்கமுடனதுசுடர்போற் றுலங்குவைத்தானே
அதுதினமுநோக்கியிருப்பா ராசானுமே. 5

ஆசானுமீசானு மொன்றேயாகு
மிவனவளுமொன்றாகும் அதுதானாகும்
பேசாதமந்திரமு மிதுவேயாகும்
பேரொளியின்வடிவாகும் பேருமாகும்
நேசாருங்கலைகளெல்லாந் தானேயாகும்
நிலையானஓங்கார பீடமாகும்
மீசானையாசானைக் காணும்பேர்க்கு
மின்பமுடன்கைலாச மெய்தலாமே. 6

எய்தரியபரசிவத்தை மூலந்தன்னி
லிருசுடருமுதித்தொடங்கு மிடமேயென்று
மெய்தொழியுஞ்சுழிமுனையே கம்பமாகி
மெய்ப்பொருளாஞ்சோதியென மேவிநிற்கும்
மிவ்வகையேமூலமெனும் பாதந்தன்னை
யிருநேரமற்றிடத்தே யிரஞ்சிகாணே. 7

காண்பதுதான்பேரொளியின் காட்சியாகுங்
காணரியபொருளாகுங் காட்டும்போது
ஆண்பெண்ணும்அலியாகி அடியுமாகி
அப்பாலுக்கப்பாலா யமர்ந்தசோதி
விண்பயிலும்வேதமெல்லாந் தேடிக்காணு

வெறும்பாழதாகியே வெளிநின்றாற்
செண்பயிலுஞ்செகசோதி மூலந்தன்னை
தேடறியபாதமென்றே தெளிந்துநோக்கே. 8

தெளிவரியபாதமது அகாரமாகி
சிற்பாமுந்தற்பறமுந் தானேயாகி
அறிவறியசோதியது தானேயாகி
அடிநடுவுமுடியாகி யமர்ந்துநின்று
மொருவுற்றியமுத்தாகி மூலமாகி
முச்சுடருந்தானுகி முடிந்தசோதி
சுழிமுனையிலேமுனையாகிக் கோபமாகி
சொல்லரியவெழுத்தென்றே தொழுதுப்பாரீர். 9

தொகுப்பதுதான்மந்திரங்கள் கருவிநூல்கள்
சொல்லரியதத்துவங்கள் தன்னையெல்லாம்
வகுத்துடனேவித்தையெல்லாங் கண்டுநீங்கி
வாகானஉடலுயிரை வகையாற்கண்டுப்
பகுப்புடனேசோாமற் பாதந்தன்னைப்
பரகதிக்குவழியெனவே பற்றிக்கொண்டு
விகர்ப்பமில்லாமூலமதில் நின்றசோதி
மேலானபாதமென்றே மேவினில்லே. 10

மேவியதோர்சர்க்குருவின் பாதந்தன்னை
மெய்ஞ்ஞானமென்றதனை மேவிக்கொண்டு

ஆவியுடல்காயமெல்லா மறிந்துபார்த்து
அந்தகனார்வடிவென்றே அறிந்துகொண்டு
பாவவினைகளானதெல்லாம் விட்டுநீங்கிப்
பகலிரவுமற்றிடத்தே கருத்தைவைத்துச்
சிவனையுஞ்சிவந்தனையு மொன்றாய்த்தானே
திருமூலப்பாதமென்றே திடமாகக்காணே. 11

திருமூலர் நாதாந்தக்குறிப்பு-11

முற்றிற்று.

உ

சிவமயம்.

எழுபத்தாறுவது,

கொங்கணர்

முக்காண்ட சூத்திரம் - 17.

செப்புகிறேன்மனத்தாலே தலமுமாச்சு
சோவிழலாவதுவு மனமேயாச்சு
ஒப்புகிறேன்மாயமெல்லா மனமேயாச்சு
ஓகோகோசஞ்சலந்தான் மனமேயாச்சு
அப்புநீருப்பதுபோல் மனமேயாச்சு
அகண்டத்திசென்றதன்று லதுதான்போச்சு
செப்புகிறேன்மனம்விட்டால் மௌனம்போச்சு
கொள்கையிந்தநூல்விட்டால் மௌனம்போச்சே. 1

போச்சென்றுவிடுகாதே மௌனமார்க்கம்
புகழ்நாயனுன்னையுமே புத்தியுள்ளாயென்று
மூச்சென்றுபிராணைய முன்னேசொன்னர்
முதிர்ந்தபின்புசெப்புகிறேன் முயந்துகேளு
வாச்சுதென்றமூலத்தில் அகாரமீசன்
மருவிநின்றஉகாரமது சத்தியாச்சு
கூச்சென்றுயிரண்டுமொன்றாய்க் கூட்டினால்தான்
குறியொத்தமௌனமது கூட்டுகூட்டே. 2

கூட்டப்பாமூலத்தை முந்திமுந்தி
குறையாமற்பளிச்சென்று லிங்கங்காணும்
நீட்டப்பாலிங்கமது நந்திநந்தி
நேராக்கொளிதழும் விரிந்துகாணும்
ஊட்டப்பாயிதையொட்டிச் சுழிமுனையினூடே
ஓகோகோ அணுகத்தில் மௌனமட்டும்
தோட்டப்பா அசைந்துநின்ற மௌனத்தாலே
சோமசடை அசைந்தாட நடனம்பாரே. 3

பாரப்பா இதையொட்டி அக்கினியினுள்ளே
பாங்காகமௌனத்தைத் தாக்குநன்றாய்
நேரப்பாசதாசிவனும் நிர்த்தஞ்செய்வார்
நிலையானசிவகாமி நின்றுபார்ப்பாள்
காரப்பா அவ்விடத்தை நிலைத்துநித்தங்
காத்தாக்காற்பலாபலத்தைக் காணலாகுஞ்
சேரப்பாவிதையொட்டி அறிவுமூலஞ்
சேர்ந்தோர்கள்வரிசையினஞ் செப்புவேனே. 4

செப்புகிறேனறிவுக்குள் மௌனமூன்று
சேர்ந்தமனந்தேறமட்டுந் திரமாய்நில்லு
செப்புகிறேன் அன்னமென்று லளித்தோன்மைந்தர்
சேர்கிறதும்வளர்கிறது மிதுக்கும்பாரு
செப்புகிறேனறிவுடனே மூலங்கண்டால்

தேகமில்லைகற்பூர தேகமாச்சு
செப்புகிறேன் ஆலயத்துள் சிவன்முன்வந்து
திரட்டியன்னங்கொடுக்கையிலே வுண்ணலாமே. 5
உண்ணலாமென்றுசொல்லி அன்னருண்டார்
ஓகோகோயானுமிந்தப் படியேயுண்டேன்
கண்ணலார்மனம்படைத்த மானுக்காகேள்
கறையேறப்போறதெப்போ கலந்துநீங்கள்
மண்ணுசைவிட்டல்லோ மகிபாகேளு
மார்க்கமாமம்பாளி னுட்டம்பாரு
விண்ணெல்லாம்வெளியாச்சு வுலாவலாச்சு
விறைந்தேறமௌனமென்ற யேணிதானே. 6
தானென்றயேணிவித்தை பத்தாந்தீட்சை
சாதகமாயுலகத்தோர் காணூர்காணூர்
பானென்றமதுவையுண்பார் பூசைசெய்வார்
பலபலவாய்மந்திரத்தை செபிப்பாரப்பா
கோனென்றகுருகாணூர் பொருளுங்காணூர்
குவிந்தவிடஞ்சுகங்காணூர் குருட்டுவாமீ
வானென்றயிடமெல்லாம் வாமபீடம்
வாங்கையிலேஆனந்த அறிவுங்காணே. 7
அறிவானதேதென்னில் மைந்தாகேளு
ஆருமல்ல ஆருமல்ல ஆத்தாளேத்தான்

யறிவாதவதுகடந்தால் கண்டமப்பா
  பெயரென்னசொல்லுவேன் பேணிக்கூடு
மறிவாகக்கூடாவிட்டால் வாதசித்தில்
  மயங்கியல்லோவெகுசனங்கள் மாண்டுபோனார்
நெறியாகச்சொல்லிவந்தேன் கண்டத்தோரும்
  நோகயிகட்சியில்லை மௌனந்தானே. 8

மௌனமுனிஅறிவினோர்க்குள் நிதமுந்தாண்ட
  மகத்தானஅண்டமுத லறிவிற்சேர்க்கு
மௌனமுனிமௌனத்தே மௌனமுண்டு
  மகத்தானசொல்லங்கே மௌனமுண்ண
மௌனமுண்ணமௌனமாகு மாசியற்ற
  மௌனமதுவந்துதோன்று மௌனமுண்ணு
மௌனமுண்ணும்வரிசையிது மக்காள்கேளு
  வாய்மூடவோங்கிநிற்கு மார்க்கங்காணே. 9

காணப்பாமௌனத்தி லடைந்தபேர்கள்
  கைக்கெட்டாதீபம்போ லொளியைக்காணும்
பூணப்பாஅறிவினுள்ளே அடைந்தபேர்கள்
  புகழாகாவிபோலக் கோடாகோடி
வணப்பாஅண்டத்தி லடைந்தபேர்க
  ளொருகோடிரவிமதியும் வன்னிபோலாக்

தோணப்பாதொந்திகொண்ட னுதாக்கள்கோடி
சொற்பெரியபூரணத்தின் சோதிதானே. 10

தானென்றபூரணத்தின் சோதியைத்தானோக்க
சமாதியுள்ளிருந்துறைத்த பெலத்தினாலே
வானென்றவெளியெல்லாம் நாதமாகி
வாய்திறந்துபோகாதே நசியமப்பா
சோனென்றயெனையீன்ற னுயன்சொன்னார்
சொல்லியந்தப்படிசென்று யானுங்கண்டேன்
ஊனென்றஉடம்பெடுக்கு மானுக்காகேள்
உண்ணியுண்ணிஉரைத்துநிற்க மோங்கிடீரே. 11

ஓங்கிடீர்மயங்கிடீர் மௌனம்பூட்டில்
ஒகோமயக்கமில்லை நிரூதாயில்லை
தேங்கிடீர்தேங்கிடீர் மௌனமுண்ண
சித்தியில்லைசுத்தியில்லை சேரவொன்றாய்
வாங்கிடீர்மௌனவிதி மாயசித்தி
மணிபோலநாதமங்கே சப்திக்கும்பார்
தூங்கிடீர் தூங்கிடீர் நாதாந்தத்துள்
சுத்தசைதன்னியத்திற் றூக்கங்காணே. 12

காணப்பாயிதைவிட்டு யோகம்பார்த்தாற்
கயையறசமுத்திரத்தின் தவளைபோலாம்
ஊணப்பாயிதைவிட்டு ஞானம்பார்த்தா

லுத்தமனேமனக்குறங்கு யிழுத்துக்கண் ணுந்
தோணப்பாயிதிலேலே அகண்டந்தோறுஞ்
சொல்லிவந்தேன்சொல்லிவந்தேன் மௌனமுண்டு
தூணப்பாகுருவாகு மௌனயோகஞ்
சூட்சத்தையறியாவிட்டால் ஞானம்போச்சே. 13

போச்சென்றுயிந்தபடி அடியேன்சொன்னேன்
புகழுற்றபெரியோரே கோபம்வேண்டாம்
வாச்சென்றுமுக்காண்ட மடியேன்சொன்ன
அரும்பொருளின்தப்புக்கா மடியின்மேலே
யாச்சென்றுகோபம்வந்தால் மைந்தனென்று
மகத்தானகருணையினால் மாற்றுமாற்றம்
வோச்சென்றுயின்னூலா லுறைத்தகர்மம்
ஓங்கியதோர்மனிதர்க்குங் குருவுக்காச்சே. 14

குருபதத்தைபோற்றியிரு பதியிலேறிக்
கூருகப்பதியினுள் மூவரையும்போற்றி
கருவூராருரைத்தநித்தை அனுதினந்துதித்து
கலைகண்டபெரியோர்கள் பாதம்போற்றி
திருவுரைத்தயின்னூலைப் பார்த்தோரெல்லாஞ்
சிவயோகமுறைப்படியே சித்தியாக
பறவுகின்றநாளொன்றில் பராபரமுமாவார்
பாடியதோர்முக்காண்டம் பதினேழுமுற்றே. 15

கொங்கணர் முக்காண்ட சூத்திரம்-15
முற்றிற்று.

௨

கணபதி துணை.

எழுபத்தேழாவது,

கொங்கணர்

பூஜாவிதி - 15.

உரைத்தமனமொன்றாகி உற்றுப்பார்த்தா
லொன்றும்பொய்போகாதென் றுமையாள்சொன்ன
விரைந்துமனம்பொய்யென்று எண்ணினக்கால் [ள்
மெய்யானவார்த்தையெல்லாம் விழலாய்ப்போகு
மாத்தியென்றசிறுபிள்ளை ஆயிபாத
மறவாமற்பூசைபண்ண வருங்காண்ஞானம்
யெறைச்சியென்றால்மதுவென்று லென்னயாகு
மெழுபிறப்புங்காய்செனம மெடுப்பாய்காணே. 1

எடுப்பார்கள்பூசையைத்தான் தூஷித்தோர்க்கு
யிறக்கத்திற்பெருவயிறு யீளைகாணுந்
தொடுப்பார்கள்பேய்பிடிக்கும் பித்துக்கொள்ளும்
சோறுசோறென்றலைந்து சோறுவார்கள்
கொடுப்பதற்குயாருமற்று மதியுங்கெட்டு
கூடிநின்றகுடும்பமெல்லாம் கொள்ளைப்போகும்
கெடுப்பார்கள்நின்றலைவா ரென்றுதேவி
நிட்சயமாய்சாபமிட்டாள் நிசந்தான்காணே. 2

காணப்பாஉட்சமைய மாறுமுண்டு
கடந்தபின்புபிறசமைய மாறுமுண்டு
பேணப்பாபனிரெண்டுக் கவளேதெய்வம்
போக்கறியாப்புலவர்களோ மெத்தவுண்டு
வீணப்பாகுற்றமென்பார் நீறுபூசி
வெகுசுத்தம்நாங்களென்பார் சைவமாகி
தோணப்பாயிதினாலே வருவதேது
தோஷம்வந்துசுத்துமிந்த முறைசொன்னாளே. 3

சொன்னாளோசிறுபிள்ளை வயதோகொஞ்சம்
சொற்திறமாய்பேசறியாள் மௌனியப்பா
யெங்காளோவெவ்விதமோ யானுங்காணே
னிப்படியேசிறுபெண்ணா யிருந்தாளாத்தாள்
தன்னாளோவயசுமத்து சந்திரனார்வீட்டில்
தாயார்க்குக்குடியிருப்புத் தாங்கிப்பாரு
வன்னாளோகவிகோடி பாடிவைப்பாள்
வாலையடாசித்தருக்குத் தெய்வந்தானே. 4

தெய்வமல்லோகுலதெய்வஞ் சித்தர்க்கெல்லாஞ்
சிறுபிள்ளையானுடைய தேவிதேவி
வையமடாநாங்களெல்லாம் நகைப்பாளாத்தாள்
மணிவீட்டைப்போலேயல்லோ வண்டமெல்லா
மெய்வமடாவிளையளிப்பா ளுடையிற்குள்ளே

குறையாமற்படைத்திடுவாள் கூர்ந்துபாரு
சைவமடாகடுஞ்சவம் பாணம்வேணும்
சதாநித்தமானந்த சுத்திதானே. 5

சுத்தியல்லோ நூறுபங்கு சிவன்றனென்று
சார்வாகயிருந்துகொண்டு வுலகமெல்லா
முத்தியல்லோகொடுத்தாண்டு ரட்சித்தார்கள்
மோசமில்லேஉன்னுள்ளே முட்டிப்பாரு
பத்தியல்லோகண்டுமெச்சி வார்த்தைசொல்வார்
பாரடாசதாநித்த மனத்தையூன்றி
அத்தியல்லோயவள்வார்த்தை கேட்டாயானு
லறுபத்துநாலுசித்து மாடலாமே. 6

ஆடியதோர்பாட்டெல்லாஞ் சொல்லக்கேளு
அண்டமுதலாயளவு மளித்துகண்ணி
ஓடியதோர்சிறுவீடு போலேயாத்தாள்
வொருநிமைக்குள்படைத்தளிப்பாள் பாருபாரு
நீடியதோரெட்டெட்டுஞ் சித்தியாச்சு
நிராமயமாய்பரையனுட கூறுமாச்சு
கூடியதோர்புவனமுத லிவ்வேளயாச்சு
குறும்பரேசிவமென்று உன்னிப்பாரே. 7

உன்னிடத்திலிவத்தியது மூமைமந்தா
டத்துநின்றமனமல்லோ மனோன்மணித்தாய்

தன்னிடத்தில்மாயமெச்சு பாசந்தீர்ந்து
 தாசகமாய்ப்பதியுள்ளே தாய்தான்சேர்ப்பாள்
பன்னிதத்தில்நினைத்ததொரு சமத்தில்வைத்து
 பரத்துக்குழுக்குமென்று பணிந்துநோக்கு
அன்னகத்திலாயிவந் தென்னைப்பெற்று
 ளவளவர்க்குத் தாயாகிநிற்பாள்பாரே. 8

தாயானபூரணியே அகண்டரூப
 சச்சிதானந்தவெள்ளச் சார்பினுளே
பேயானபிள்ளையைநீ பெத்திட்டாக்காற்
 பேய்பிள்ளையென்றுதள்ளப் பேச்சுண்டோசொல்
ஓயானவாகாய வாய்வுதன்னி
 லதித்தஜலம்பூமியுரு வெடுத்தாய்நீதான்
மாயானமாயமென்றுங் கருவியென்றும்
 வைத்தாய்நீவாசனையாய் வைத்தாய்நீயே. 9

நீயென்றும்நானென்றும் ரெண்டாய்க்கண்டாய்
 நிட்சயமாய்பிறவியோர்க் காச்சுதென்பாள்
தாயென்றும்பிள்ளையென்றும் சொன்னாளாத்தாள்
 சர்வசங்கத்தியாகி சங்காசாரியானேன்
காயென்றும்வித்துயென்றுஞ் சொன்னேமானல்
 கடியதொருமாம்போலே பிறவியாச்சு

ருய்வன்றிவேதாந்த மௌனம்நின்றேன்
ஓகோகோவொருநாளும் பிறவார்தாமே. 10

பிறவாதனெறிவேணு மென்பார்கோடி பேரானகாய
த்தைவேணு மென்பார்கோடி, மறவாக குளிகையிட்
டாடவேணு மென்பார்கோடி மகத்தான மதியமுர்தம்
வேணு மென்பார்கோடி, திருவாதசை யோகம்வேணு
மென்பார்கோடி திருட்டுவித்தை திலதவித்தைவேணு
மென்பார்கோடி, உறவாக ரிஷிகளுட னிருக்கவேணு
மென்பார்கோடி, உத்தமியே யவரவர்க்கு கொடுப்பாய்
நீயே. 11

கொடுத்தல்லோ அவரவர்க்கு முன்னாய்நின்று குளிர்ந்த
பின்பு நல்வினையுந் தீவினையுமானேம், அடுத்தல்லோ யுனைப்
போற்றி யெத்தனையோசென்ம மனந்தவனை யெடுத்தல்
லோ யுனைப்பணியச்சேர்க்கும், தறித்தல்லோ யாட்கொ
ண்டாய் விட்டகுறையாலே தாயேநான்பிறக்கரிது யென்
பாரில்லை, மடுத்தல்லோ மோகத்திற்கா முகனாய்ச்சென்று
வஸ்துவென்ற சத்தியிலே மயங்கினேரே. 12

மயங்கினர்தியங்கினர் சையோகத்தில்
மனமாகாயத்துடனே வாய்வுதப்பி
தியங்கினர்லாகிரிமிஞ்சி வாந்தியாகி
சிற்றின்பமோகத்திற் சோக்கேட்டார்

துயங்கினூர்சரணமென்ற ஆலிங்கனத்தாலே
சுத்தினூர்பத்தினூர் பார்த்துப்பார்த்து
முயங்கினூரிதுவல்லோ முத்தியென்றூர்
மூடரைநாமுலகத்தில் வாமிதானே. 13
வாமியென்றநாமமது ஆருக்காச்சு
வன்பரியடண்டிருந்த ரிஷிகட்காச்சு
வாமியென்றநாமமது ஆருக்காச்சு
மருவிநின்றசித்தயோகி தமக்குமாச்சு
வாமியென்றநாமமது சித்தர்க்காச்சு
மகத்தானமெய்ஞ்ஞானி பெரியோர்க்காச்சு
வாமியென்றநாமமது ஆருக்காச்சு
வாதிக்காமத்தவர்க்குப் பசுவென்றநாமந்தானே. 14
தானென்றதத்துவத்தை யறிந்தானுகில்
தவசியிவனறியாவிட்டால் வாதியல்ல
வானென்றவனந்தனிலே சென்றுசித்தர்
காலடியைகாணுவிட்டால் கழுதைமேய்க்க
கோனென்றகுருவறிந்தோ னவனேயாசான்
குருவறியானவன்பேயன் வயர்பிழைக்க
ஓனென்றபெண்ணுசை விட்டோன்யோகி
ஓகோகோயிடுகாட்டி லுதித்தோனுமே. 15

கொங்கணர் பூஜாவிதி-15 முற்றிற்று.

உ

கடவுள் துணை.

எழுபத்தெட்டாவது,

கொங்கணர்

முக்காண்ட திருமந்திரம்-8.

உரையற்றதொன்றை வுரைசெய்மூமைகாள்
கரையற்றதொன்றை கரைகாணலாகுமே
திரையற்றநீர்போற் சிந்தைதெளிவோர்க்கு
புரையற்றருந்தான் புரிசடையோனே. 1

மாட்சிமையாவது மாதவமுற்றிடம்
மாட்சிமையாவது மனமேதெளிந்திடும்
மாட்சிமையாவது மன்னுயிரிருந்திடும்
மாட்சிமையாவது மாண்டிடமுத்தியே. 2

தான்வகையற்றபின் ஞாவரைவது
தானவனானபின் ஞாநினைவது
காமனைவென்றகண் ஞாரையுகப்பது
தூய்மொழிவாசகஞ் சொல்லுமொன்றீசரே. 3

மனம்விரிந்துகுவிந்தது மாதவம்
மனம்விரிந்துகுவிந்தது மன்னுயிர்
மனம்விரிந்துகுவிந்தது வாயுவாம்
மனம்விரிந்துரை மாண்டிடம்முத்தியே. 4

வேறு.

சோதியான துரிசையைச் சொல்லொணு
பேதியானகுரிசையைப் பேசொணு
ஆதிதான்சொன்ன அரும்பொருள் தன்னை
வீதியாய்ச்சொன்னல் விண்ணிடிவீழுமே. 5

விண்ணிடிவீழும் வெளியிட்டபேர்க்கு
தன்னடிதானய்த் தனக்குச்சரியாய்
கண்ணடிகண்ணய்க் கற்றுணர்ந்தோர்க்கு
பொன்னடிமூலம் பொருள்சொல்லலாமே. 6

சொல்லலாரணமாஞ் சுருதிமுடிந்திடம்
எல்லாருங்காண வெடுத்தேவுரைத்தவன்
பொல்லாதசென்மம் புகுந்துபுலையனய்
எல்லாநகரத்துக் கேகுவார்காணுமே. 7

வெண்பா.

சொல்லாராணமாஞ் சுருதிமுடிந்திடம்
எல்லார்க்குஞ்சொன்ன லெழுநரகம்—நல்லாம்
ஆளாக்கிச்சொன்ன லவனேயிவனகும்
போழாக்கிப்போட்டகுருப் பால். 8

முக்காண்ட திருமந்திரம்-8

முற்றிற்று.

கடவுள் துணை.

எழுபத்தொன்பதாவது,

கொங்கணர்

கருக்குளிகை - 8.

பாடுகிறேன்பார்வைக்கு ஐங்கரனேகாப்பு
பரிவானசின்மயத்தின் பாதங்காப்பு
நாடுகிறேன்சித்தருட பாதங்காப்பு
நாதாந்தமனோன்மணித்தாய் பாதங்காப்பு
தேடுகிறேனெனைப்போலே நூல்கள்தோறுஞ்
செப்பார்கள்பார்வைக்குச் சித்தாப்பா
சூடுகிறேன்பார்வையொரு நூல்கள்முன்னே
சுருக்கியேசொல்லுகிறேன் கேளுகேளே. 1

கேளடாநாதாக்கள் சொன்னமார்க்கங்
கிருபையாய்நூல்களிலே அநேகமுண்டு
ஆளடாஅதைக்குறுக்கி குளிகைக்குள்ளே
அப்பனேஉயிர்க்கிணையாய்ப் பாடிப்போட்டேன்
நாளடாசூனியங்கள் பில்லிக்கெல்லாம்
நலமானபார்வையென்ற தெல்லாத்துக்கும்

வாளடாகருக்குளிகை யாகத்தாளு
  மைந்தனேசூட்சத்தில் பாடினேனே. 2

பாடினேனுறென்றால் செம்பொன்னாதி
  பாங்கானமுனிவனடா ஐயாகேளு
நாடினேன்மனமுழுங்கி மூதண்டகன்னி
  நலமானமந்தபெருச் சாளிதானுந்
தேடினேன்செக்காத்தி மூலிகானுந்
  ஜெயமானமுசல்காது முட்டைநாறி
வாடியேமலைக்காதே நாமச்சுள்ளி
  மைந்தனேயின்னமுண்டு பின்னுங்கேளே. 3

கேளப்பாகுக்குடாராய் மூலிதானும்
  கிருபையாய்அப்பைவைத் தனையுங்கூட
நாளப்பாமரமென்று யெண்ணவேண்டாம்
  நலமானதோதகத்தி கனையுங்கூட்டி
சாளப்பரபிரப்பங்காய்த் தனையுஞ்சேர்த்து
  நாடியேபதினொன்று வகையைத்தானும்
கூளப்பாமயினம்போ லாட்டிநீயும்
  குருபார்த்துசாருநீ வாருவாரே. 4

வார்த்துமேவையடா சாமந்தானு
  மைந்தனேமெழுகதுபோ லாகும்பாரு

பார்த்துநீகல்வத்தி லரைக்கும்போது
பதையாமலொருமனதா யரைக்கவேணுஞ்
சேர்த்துமேயரைத்தபின் சிவாயநமஅம்உம்மென்று
செப்பவேஅங்கிலியும் உரீமசியென்றுசொல்லி
வாழ்த்தியேபயாளவு குளிகைசெய்து
மைந்தனேவுருவேற குளிகையாச்சே. 5

ஆச்சப்பாகுளிகையது வொன்றுசொன்னேன்
அப்பனேநூல்களிலே சொல்லவில்லை
காச்சப்பாகுளிகையின்தன் பேர்சொன்னக்கால்
காணுமேவோடுமடா பில்லியெல்லாம்
போச்சப்பாசூனியங்கள் பார்வையெல்லாம்
போகுமடாமபயமெனக் கதறிக்கொண்டு
ஆச்சப்பாபார்வையினால் வந்ததோஷ
மாண்டேதான்போகுமடா புகலக்கேளே. 6

புகலவேகோரமென்ற வகைகட்கெல்லாம்
போடடாவொருகுளிகை வுரைத்துப்போடு
நிகழுகிறேன்மற்றவகை யெல்லாத்திற்கும்
நிசமாகக்கையிலே குளிகைகொள்ளு
தகளுகிறேன்குளிகையி லிருந்துதென்றால்
சாடியேபோகுமடா பதினெட்டுந்தான்

அகலுகிறேன் தீட்சைநீ வோதிக்கொண்டு
அப்பனேநீகொடுமெய் யாகும்பாரே. 7

பாரடா தீட்சைநீ கொள்ளாவிட்டால்
பாங்கானகுளிகையது பலிக்காதப்பா
ஆரடாவுண்மைதனை யறிந்துக்கொண்டு
அப்பனே தீட்சைபெற்று வுருக்களேற்றி
சோரடாகருக்குளிகை சித்திகாணும்
திறமாகநூல்களிலே சொல்லவில்லை
வாரடாகருக்குளிகை யெட்டுக்குள்ளே
மைந்தனேயடக்கியே யுரைத்திட்டேனே. 8

கொங்கணமுனிவர் கருக்குளிகை-8

முற்றிற்று.

சிவமயம்.

எண்பதாவது,

நந்தீசர்

குளிகை - 8.

சீர்பெருகுமநோன்மணியே மாதாவென்றும்
சிவபிரானென்பிதா வென்றுமவர்சீஷனென்றும்
கார்பெருகுந்திருமூலர் பிள்ளையென்றும்
கைலாசபோகர்தான் தமையனென்றும்
பேர்பெருகும்சின்மயத்தின் கருணையாலே
பேசிவைத்தாள்சரஸ்வதியென் னாவில்தானும்
ஏர்பெருகுமெய்ஞ்ஞானப் பொருளைநாதி
யெடுத்துரைக்கக்கணபதியுங் காப்புத்தானே. 1

தானென்றவிஷக்காரி கண்டபேரும்
சாதமாய்சிற்பரியும் துருசுமாகுங்
கோனென்றநிம்பவிரை சிலையுங்கூட்டி
கூராகக்காயமது கூடச்சேர்த்து
தேனென்றமகாவிந்து பாலாலாட்டி
சிறக்கவேகுளிகையது செய்துக்கொண்டு
வானென்றவொருகுளிகை விஷத்துக்கெல்லா
மைந்தனேகுடுத்தாக்கா லோடிப்போமே. 2

போகுமேகடுகுவேர் துங்கிவேரும்
புகழானவூர்ச்சாளி தலையுங்கூட
சாகுமேநற்சுள்ளி நற்கன்னிதானும்
சாதகமாய்நாறியது முசற்காதுதானும்
ஏகுமேஅப்பைதுரு அமுரிதானும்
இருள்வனத்திசளிப்பூச்சி நாயக்தானும்
வாகுமேபழச்சாற்றில் குளிகைசெய்தால்
மைந்தனேபில்லியது போகும்பாரே. 3

பாரப்பாநீறுபச்சை கூறுவெள்ளி
பாங்கானகாறுமொச்சை மேனிதானும்
ஆரப்பாகாவளையின் சிற்றரத்தை
அப்பனேகடைக்காயம் வசம்புதானும்
வேரப்பாவேலிபருத் திறளைசார்வார்த்து
விட்டரைத்துக்குளிகைதனை செய்துக்கொண்டு
வாரப்பாபிள்ளைபிணி நூற்றெட்டுந்தான்
மைந்தனேகுளிகைகொள்ளப் புகலக்கேளே. 4

புகலுகிறேன்எலிகடிகள் பதினெட்டுக்கும்
பொல்லாதனலிப்புலியின் சீலந்தானும்
நிகலுகிறேன்கதிர்வாசந் தன்னிலப்பா
நிலையாகஅதைபெடுத்து குளிகைபண்ணி

தகலுகிறேன்நாகவல்லிக் குள்ளேவைத்து
சாப்பிட்டாலெலிகடிகள் சாடிப்போகும்
அகலுகிறேன்குளிகையது வெல்லாஞ்சித்தி
அறிந்தவனேவயித்தியர்தா னாகுவானே. 5

ஆகுமேநெல்லிவித்து கிளாக்காய்வித்து
அப்பனேஅகண்டப்பால் விட்டுஆட்டி
தாகுமேகுளிகையது பதனம்பண்ணி
தப்பாமலொருகுளிகை யுரைத்துப்போட்டார்
போகுமேதேள்கொடுக்கு விஷங்களெல்லாம்
பூரான்செய்யான்கருந்தேள் விஷங்கள்போகும்
வாகுமேகடிப்பெருப்புந் தீருந்தீரும்
மைந்தனேபனிரெண்டு குளிகைகேளே. 6

கேளப்பாவசிகரந்தான் லோகத்துக்குங்
கிருபையாய்ஸ்திரீகளுக்குஞ் சொல்லக்கேளு
நாளப்பாவேகாக்கொல்லு தாமணியுங்கூட்டி
நலமானபிரமனிட நசனத்தாலும்
தாளப்பாபசுவின்பால் விட்டுஆட்டி
சாதகமாம்சிவயநம அங்கிலியும்உரீசியவென்று
வாளப்பாசொல்லியே திலர்தமிட்டால்
மைந்தனேஸ்திரீகளுமே வசியமாச்சே. 7

ஆச்சப்பாபரங்கிலவ கிரிதானும்
அப்பனேஅகிலியது மூணுங்கூட்டி
மூச்சப்பாகருங்கழுத்து குருவிதானு
மூன்றாகவேகிழித்து வரிந்துபோடு
வாச்சப்பாநெய்யிலே பொரித்துத்தானு
மைந்தனேகுளிகையது செய்துக்கொண்டு
நாச்சப்பாநிலர்தமிட வெல்லாஞ்சித்தி
நலமாகநந்தியுட பாடல்முற்றே. 8

நந்தீசர் குளிகை-8 முற்றிற்று.

உ

கடவுள் துணை.

எண்பத்தோராவது,

பதஞ்சலிமகாமுனிவ ரருளிச்செய்த

வாதசூத்திரம்-21.

பூமலியன்கண்ணுடன் பாதம்போற்றி
புகலுவேன்வாதத்தின் திறவுகோலை
நாமுறைப்போம்நான்கு பாடற்குள்ளே
நலமானவாதவித்தை ஞானமார்க்கஞ்
சோமனுற்றவேணியனு ருபதேசத்தால்
துறையறியும்பதஞ்சலிதன் சூத்திரத்துக்குள்ளே
ஏமவித்தைக்காதியென்ற வஸ்துவப்பை
யிதையறியமாட்டாம லேங்கினரே. 1

ஏங்கினர்வஸ்துவப்பைக் கண்டாற்போல
யிதினாலேயிருக்குதென்பார் எறுதானென்பார்
பாங்கியர்கள்தீட்டுமென்பார் விந்தாமென்பார்
பனிரெண்டும்பதினாறும் பருவமென்பார்
தாங்கிவளர்த்திட்டதலைப் பிள்ளையென்பார்
சமாதியிலேவைத்திருக்குந் தலையோடென்பார்
தூங்கையிலேசொற்பனத்தி லாயிவந்து
சொன்னதென்பார்பூடென்பார் சுசியென்பாரே. 2

சுசியென்பார்கோழிமுட்டைக் கிளிஞ்சிரெண்டுஞ்
சுத்தஜலமானுக்கால் தொழிலாமென்றுந்
தகையென்னபுளிதானே பலமாமென்றுஞ்
சாரமொன்றுமூத்திரமே தப்பாமென்றுங்
குகையென்னசெவிநஞ்சங் கண்ணீரென்றுங்
கோசமென்றும்பூசமென்றுங் குருவண்டென்றுந்
திகையாதேசடத்திலேயஞ் சாபமென்றுஞ்
சிகையென்றும்பூநாகத் தெளிவென்பாரே. 3

தெளிந்தவர்போற்சித்தர்சொன்ன சூத்திரத்திற்
சிக்கறுத்துப்பாராமல் செகத்துள்ளோர்கள்
அளந்தியதிலுத்திபண்ணி பாராமற்றான்
அவரவர்கள்நினைத்தபடி சுட்டிப்பார்த்து
இளந்தைசொல்லாமென்று சொற்கள்நூல்வைத்து
இல்லாமேனல்லாமென் றிருந்தார்கோடி
களிந்தபிணம்போல்மெலிந்து சிலதுபேர்கள்
கானகத்துமலையிடத்துக் கருதினாரே. 4

கருதினார்சிலதுபேர் குருதான்வந்து
காட்டுவாரென்றுசொல்லி சூஸ்திரத்தை
புருவியேகிழித்தெரிந்து வீண்வாய்ப்பேசி
உழன்றுதவிப்பார்களதி லனந்தம்பேர்கள்
மருகினார்சிலதுபேர் வாதவித்தை

வந்தவர்போற்சொல்லியவர் பிழைப்போமென்று
உருகினார்யோகிதண்டுங் காயாசங்கள்
யோகநிஷ்டைபெற்றவர்போ லுருக்கொள்வாரே. 5
கொள்ளுவார்செபமாலை கையிலேந்தி
குறடுமிட்டுநடைநடப்பர் குகையிற்கார்ப்பார்
விள்ளுவார்மாதரொடு யோகம்ஞானம்
வேதாந்தஅதீதமும் விசாரித்தோர்போல்
துள்ளுவாருபதேசம் செய்வோமென்பார்
சூதமணிகட்டுகிறேன் தொழிற்பாயென்பார்
தள்ளுவார்பொருளாசை நமக்கேதென்பார்
சவுக்காரகுருமுடிக்கத் தனமென்பாரே. 6
தனமென்னவாலைமனோன் மணிதானென்பார்
சாராயம்புசிக்கத் தண்ணீரென்பார்
கனமென்னகாந்தசத்து கிண்ணம்பண்ணி
கற்பமென்றுபெண்ணாசைக் கடந்தோமென்பார்
மனமென்னவாய்பிரட்டாங் கைப்பிரட்டால்
வாதவித்தைப்போற்காட்டி மயங்கச்செய்வார்
தினமிந்தப்படிதானே யுலகத்துள்ளே
சீவனங்கள்செய்வார்கள் சிலதுபேரே. 7
சிலதுபேர்பிரம்மவித்தை பொய்யென்பார்கள்
சித்திசுத்தியானவரை தெரியப்போமோ

தொலையாதபூமியிலே அறிவுகொண்டு
சோதித்தார்கோடியிலே ஒருவனுண்டு
அலகமிடாநற்சீட னறிந்துகொண்டால்
கர்த்தமயமிழுப்பதுபோல் கலந்துகொள்வார்
மலையென்னஉலகமென்ன மனந்தானென்ன
மௌனவித்தைஅறிந்திருக்கும் வகையாளர்க்கே. 8

வகையறிந்தபெரியோர்கள் மலையிலுண்டு
வையகத்தில்செகத்திலுண்டு வாழ்ந்தாலுந்தான்
பகையனுகாருறவுகொள்ளா ருலகாசாரம்
பந்தம்விடாகர்மானு பவத்துட்சிக்கார்
செகம்விளையாட்டதிலிருக்கார் சினந்துபேசார்
சிவமயவிகற்பமுறார் திறந்துசொல்வார்
அகமுறையாசீவபர மாத்மாவெல்லாம்
அவராகிநிறைந்திருப்பார் ஆசான்றானே. 9

ஆசானைகண்டபேர்க்கும் ஞானப்பேர்க்கும்
அப்போதேயோகத்துக் கருளுண்டாகும்
பேசாதேமௌனமென்ற பிரமவித்தை
பிடரிவழிகண்திறந்து பிரகாசிக்கும்
பூசாரவஸ்துவுப்பு வண்ணிபீசம்
புதைத்தவிடந்தனைக்காட்டிப் பொருளுஞ்சேரும்

சோதிபாதமுதல் நடுவுந்தோசலாறுங்
கெவுனமென்றகுளிகையடா கிடைக்கும்பாரே. 10
கிடைக்குமோயிந்நூற்று முதநூலையா
கெட்டியாய்ப்புதைத்துறைத்தேன் சூஸ்திரத்துள்
முடிகனலும்அடிப்புனலும் நடுக்கால்மூன்று
மோசமில்லைபாடிவிட்டே னிருநூற்சங்கம்
கொடைக்கொருவனென்பதுபோ லிந்தநூலிற்
கூட்டுவேன்வஸ்துப்பின் கூறியொன்றைத்தான்
உடைக்கவென்றாலக்கினியின் பூவுக்குள்ளே
உகர்விடம்வஸ்துவுப்பென் றுரையலாமே. 11
அடையார்களாகியென்ற வஸ்துவுப்பை
ஆகாகாஅவனியிலே கலங்கினார்கள்
வரையாமற்றிரந்தாரே நந்திதேவர்
வாய்ப்பூச்சிக்கடக்கிவிட்டார் மற்றோரெல்லாம்
உரையாமற்போனாரே வுலகத்தோர்க்கு
ஓகோகோநாதாக்கள் மறைத்துச்சொன்னார்
கரைகாணவிருட்சிகமாம் வன்னிபீசம்
காண்பதற்குயெவ்வனமுங் கண்டுபாரே. 12
பாரையாகாலத்தை முன்பின்னாகப்
பாடினாதைத்தெளிந்து பார்க்கவேணும்
நேரையாவஸ்துவுப்பைக் காணவென்றால்

நிலமறியவேணுமதில் நிஜமும்வேணும்
துரையாசந்திரனுக் கைந்துதீட்சை
சுயமானசூரியனுக் கைந்துதீட்சை
பேரய்யாஅக்கினிக்கோர் தீட்சையொன்றாற்
பின்றசவாம்தீட்சையொன்றுப் பேசினாரே. 13

பேசினதிலொன்றுமில்லை யோகதீட்சை
பெரியோர்களுட்கருவை புதைத்தாரந்த
சூட்சணைதானறியவென்று லகாரமிட்டும்
சுழித்திருக்கும்உகாரமல்லோ ஏகதீட்சை
பூசைவிதிமாந்தாக்கால் முப்புசத்திப்
பூரணமுமாகாது பொய்யாய்ப்போகும்
காசினியோரிதைவிட்டு ஆசைபூண்டு
கரிசுட்டுக்காணமற் கலங்கினாரே. 14

கலங்காமல்வன்னிக்கு நாலுகாலு
கதிரவனுக்கொருநான்கு காலுமாகும்
துலங்கினார்சோமனிலே யிரண்டுகாலு
துகைபார்க்கபத்துக்கால் தோன்றலாச்சு
மயங்கினார்விடைதப்பி குருவைச்செய்தால்
வாய்க்குமோபூதமைந்தும் காணவாழ்க்கை
துலங்கினேமுன்னூலிற் கண்டுபாரு
துருசுகுருஆவதற்கு துரைசொன்னேமே. 15

சொன்னதென்னபிரிதிவுக்கு தீக்காலொன்று
சுகமானவுப்பினுக்கு தீக்கால்ரெண்டு
பின்னமெல்லாதேயுவுக்கு தீக்கால்மூன்று
பிலமானவாய்வினுக்கு தீக்கால்நாலு
நன்னயமாயாகாச மைந்துதீக்கால்
ஞாதுறுநாலுக்குமிந்த ஞாயஞ்சேர்க்க
பின்னமில்லாதீட்சைக்கு பிலன்தானுச்சு
மேலானவாதவித்தை வெளியாய்ப்போச்சே. 16

போச்சிந்தபூதத்தை பிறிந்துபார்க்க
போகர்சொன்னார்பூவழலை புலன்சொல்லாம
லேச்சித்தவகையாறே பார்த்துப்பார்த்து
யெடுபட்டுப்போனார்க ளுலகவாதி
ஆச்சிந்தப்படிதானே செயநீர்வைப்பார்
ஆதியென்றசுத்தகெங்கை யாற்றைக்காணான்
மூச்சிந்தப்படிதானே யோகத்துக்கு
மூலமடியிதைவிட்டால் மூடனாமே. 17

மூடாமலொன்பதுவா சலையும்விட்டு
மூத்திரப்பாதைவழி மூச்சைவிட்டு
சூடானமேகத்தில் வியாதிபூண்டு
தூங்கியல்லோமாண்டார்கள் தொழும்பரெல்லாம்
ஆடாமற்சேகரமா மாணுபத்தில்

அறிவுக்குள்ளாயிருந்து அலைகளெல்லாம்
ஓடாமற்சுழிமுனையை புரையிலூட்டி
வுயிரடக்கும்பெரியோர்க ளுண்மைதானே. 18

உண்மையென்றகுண்டலியே பிராணவாய்வு
ஓங்காரபிண்டத்தி லுதித்தவான்மா
மென்மையென்றவாதாகத் திருந்தவாறு
மேலெழுத்துங்கீழெழுத்து மானவாறும்
தன்மையென்றவிந்துவிலே நின்றவாறுஞ்
சாஸ்திரவிதழ்சாகரத்தில் சார்ந்தவாறும்
கன்மையென்றசுருங்குவங்கி னிறைந்தவாறுங்
கண்மூக்குமத்தியிலே கண்டுபாரே. 19

கண்டுபார்பிராணைய மாகுமார்க்கங்
காட்சிபெற்றாலாகுங் கற்பூரதேகம்
இரண்டல்லமூன்றல்ல ஒன்றுமல்ல
நின்றவிடமெல்லாம்நீ நிறைந்துகொள்வாய்
கண்டமடித்துண்ணாக்கிற் கும்பகத்திற்
கால்நிறுத்தின்சடத்தை காக்கவேணும்
மண்டலத்தில்வஸ்துவுப்பை காணவென்றால்
மணம்பார்த்துமணம்பார்த்து வாழ்குவீரே. 20

வாளுமேகடுவெழுத்தை யகாரந்தன்னில்
ளூட்டிவைத்தால்தலையெழுத்து பிரகாசிக்கு

மீளவேதண்டெழுத்து ஓடாதையா
விட்டெழுத்துந்தொட்டெழுத்தும் மேல்கீழாச்சே
தாளவேவேண்டாங்கா ணன்பத்தொன்றும்
தலையெழுத்துக்குள்ளாகிக் கிரந்துபோச்சு
கோளுமேவாராது மாவியாவாம்
கூறியவாதத்திறவு கோல்தான்முற்றே. 21

பதஞ்சலியார் வாதசூத்திரம்-21

முற்றிற்று.

சிவமயம்.

எண்பத்திரண்டாவது,

கொங்கணர் முப்பு - 4.

சொல்லும்பூநீர் நூடியாமொருபலம்
புல்லுமேபடி காரமிருபலம்
வெல்லுமாமதி யுப்புமிருபலம்
கொல்லுமேகரி யுப்புசமனெடே. 1

உடுத்துமண்டக்கல் சுண்ணமிருபலம்
பொடித்துமேயொன்ருய்க் கூடவேமாட்டு
தொடுத்துவெண்கரு வாலாலரைத்திடு
சுடுத்துமேயில்லைப் பாங்காயுலர்த்திடே. 2

உலர்த்திக்குக்குட மெழிலாகம்போட்டு
அலர்த்துமேசுண்ண மாகவேதானெடு
புலத்தியாசொன்ன போக்கதுவாகவே
உலத்திடாமல் எருக்கன்பால்போட்டிடே. 3

போட்டிடச்செயநீ ராகும்பாலெல்லாம்
மாட்டிடுவறு பத்துமுபாசம்
மாட்டிடச்சுண்ணம் கடினமகாவேதை
பூட்டினர்கொங்க ணையர்புகன்றதே. 4

கொங்கணர் முப்பு 4 முற்றிற்று.

சிவமயம்.

எண்பத்திமூன்றாவது,

கைலாச சட்டமுனி நாயனா ரருளிச்செய்த

சூத்திரம் - 52.

சோதியெனுந்துய்யவெளிக் குருவேயையா
 சொற்பெரியகைலாச மயமேஞானந்
தாதியேஞானத்திற் கேதுமார்க்கந்
 தாதாவேயென்றுரைத்தா லார்தான்காண்பார்
வாதியெனப்பேர்கொண்ட சுந்தரமேயையா
 வரிசையுடன்அட்சரமே வழலைமார்க்கம்
நீதியாய்ச்சொல்லுகிறே னினைவாய்த்தானு
 நிகண்டுபனிரண்டுநூல் நிலைத்திட்டோர்க்கே. 1

நிலைத்திடவேநிகண்டுக்கு சொச்சசூத்திரம்
 நேர்பாகக்கருக்குருவும் பொருளுந்தோண
மலைத்திட்டேனெண்ணாதே முப்பூவின்மார்க்கம்
 வகைபெறவேசொல்லுகிறேன் மனதுகூர்ந்து
கலைத்திட்டார்திருமூலர் தீட்சையிருநூறுங்
 கருவென்றுகிழித்தாரே யென்றுசொல்லு
உலைத்திடப்போகாதெனவே நிகண்டுகொஞ்ச
 முறுதியாய்ச்சொல்லுகிறே னுண்மைதானே. 2

வேறு.

பூதலமாம் புகழ்கின்றசுக்கில
மாதைவிடைநீர் மாகியசுண்ணந்தான்
சோதியினாலால் சுகப்படச்செய்தார்
வேதைமுழுங்கும் விளங்குங்கதிரிலே. 3

கதிரவன்வண்ணன் கங்கைகிளிசியா
முதிரம்பிறந்தோன் சங்காரவாசன்
மதியுடன்சேர்ந்து மருவிக்கலந்துபின்
கதியரிணங்கிக் கந்தனுமாமே. 4

கந்தனேயாகுஞ் சீனங்கலந்தபின்
சந்தமாய்விண்ணோன் தாணிக்குறைதம்
வெந்தவர்மாவி சாத்தையுண்டவன்
அமர்ந்தவர்கலி காலனுமாமே. 5

காலனேயென்றுமே கணவன்வெக்காரியாம்
பால்சுத்தவெள்ளை சிவமானபூரணம்
வாலைப்பிராய பெண்ணைமருவுவன்
காலவன்சத்தியன் தன்பேரைக்கேட்டிடே. 6

போரானபூரணம் பாரிற்பிறந்தவன்
காராளசத்திமனோன் மணியாங்காரி
சீரானபெண்ணாள் திருநாமஞ்செப்பக்கேள்
போரானசிரோன்மணி பேரிடுஞ்சாரியே. 7

சாரியிதென் றுந்தணித்த கல்லுப்பென் றும்
பாரியினுப்புடன் மாமதிரூடனும்
சேரவேநாலாய் சேரகையென்று
மாரிப்பிறப்புக்கு பினுப்பே. 8

வழலையினுப்பென்று மாளிலையுப்பென்றும்
வழலைக்கிச்சாரமா மதியுப்பென்றும்
நிழலைக்கடத்து வேரேகாந்திட்டேன்
களவில்லைசொன்னேன் கைகண்டவாதமே. 9

வாதம்பிறக்கும் பாறையினுப்பாலே
நாதம்பிறக்கும் நல்லகல்லுப்பாலே
போதம்பிறக்கும் பூரணன்றன்னாலே
வேதம்பிறக்கும் வெய்யுப்புகூடே. 10

சூரச்சிப்பியின் சுண்ணஞ்சேர்த்திட
சீதமிணங்காமற் சீனஞ்சேர்த்திடில்
வீரமேவிளங்கும் வேக்தனுமாயிடுந்
தோடாமார்க்கந் துறையறிவோர்க்கே. 11

வேறு.

அறிவானசபையென்று பஞ்சபூத
மாகியேமிகச்செய்யும் புரியஷ்டத்தால்
குறியானபூரணமாம் விந்துநாதங்
கொள்கையாய்மேருவில் பேருண்டாகி

பிரியாமலொன்றாகிச் சடலமாகி
பெருமையுற்றுச்சவுக்கார பிறவிக்கப்பால்
வறியாதபேருக்கு வாதமேது
மகத்தானவழலைசெய்யும் வகையைக்கேளே. 12

வேறு.

கேளாயமுரி கெடியாப்பதினாறு
வாளாயுவட்சாரம் வளமாய்ப்பதினெட்டு
கேளாகல்சுன்னங் கொட்டும்படிரெண்டு
நாளாய்கல்லுப்பு நாட்டும்படியொன்றே. 13

ஒன்றாய்த்தெளியவை யுறவாகக்காய்ச்சி
நன்றாய்க்குழப்பும் பருவத்தில்நிறைகேளு
சென்றேயடிமுடிக் குள்ளேயிணங்கனைக்
கொண்டேயெடுத்துக் குழப்பிடுமெண்ணைக்கே. 14

எண்ணெயரைப்படி யிணங்கனரைப்படி
ஒன்றாய்க்கரைத் தூர்விடுமெண்ணைக்கு
கண்ணிவீரமும் பூரமும்வெள்ளையும்
தண்ணான்சீனமும் தான்வகைக்கொன்றே. 15

வகைவீதங்காசிடை வகையெண்ணெய்க்குள்
தகையாமல்சொன்னேன் சத்தியமாமது
வகையாய்வழலையில் அப்பனேவார்த்திடும்
சுகமாய்ப்பதத்தில் தோன்றிடுமுண்டையே. 16

உண்டைவிளாங்காய் போலேயுருட்டிடுங்
கண்டிடுங்கொங்கணர் கடைக்காண்டஞ்சூத்திரம்
விண்டேயுறைத்தார் மேவிக்கலந்துபார்
சண்டாளந்தீர சாற்றினூர்சத்தியம். 17

சத்தியுட்சாரந் தான்புகலக்கேளு
முத்தியாய்ச்சொன்ன முகதீட்சைப்பூநீர்
பத்தியொருநூறு பத்தாமிணங்கனுஞ்
சித்தித்தசூடனுஞ் சேர்க்கின்றகல்லுப்பே. 18

கல்லுப்புதாள கடப்பாரையுடன்
முள்ளங்கிமுத்தி சிப்பியின்சுன்னமும்
சொல்லவேபத்து சேர்க்கயுபச்சாரம்
வல்லவர்காண்பார் மற்றோரறிவாரே. 19

அரியார்கற்சுன்ன மாதிகளஞ்சிதான்
பிரியாதவூமையி லகப்பட்டசுன்னங்கேள்
தறியாங்கிளிஞ்சிதான் பலம்பத்துக்கு
வெறியாமுவர்ப்பு வீரமும்பூரமே. 20

பூரத்துடனே புகழ்சுன்னங்கல்லுப்பு
தாரணமிணங்கனுங் கடுஞ்சார்துத்தமுந்
தாரந்துருசுடன் தான்வகைக்கொன்றுசேர்
கூரங்களஞ்சியாங் குறித்திடுமண்டமே. 21

அண்டத்தின்சுண்ணப் பத்துக்களஞ்சிதான்
சண்டவேயதற்கப் பாலால்வெண்கரு
கொண்டேயரைத்துக் கூறுங்கிளிஞ்சிக்குள்
கண்டெனப்பூசிக் கனபுடம்பாச்சிடே. 22

பாச்சுங்கிளிஞ்சி சுண்ணம்பலித்தது
வாச்சுதுநவாசாரம் வழலைசவுக்காரம்
பேச்சினியேது பிரப்புக்கருக்குரு
வாச்சுதேசுந்தார் வாதிமுப்பூவிதே. 23

முப்பூவின்தீட்சை முப்பத்திரண்டு
செப்பமாய்கொங்கணர் செப்பினார்கைமுறை
தப்பிலாவண்ணஞ் சாற்றினார்கண்டிடு
வைப்பாகவிந்து நாதத்திலேறியே. 24

நாதமுப்பூவைனய நாதவிந்தேயுற
வாதக்கடுங்காரம் வாதமென்றேகருச்
சாதினைமுப்பத் திரண்டுசரக்கெல்லாம்
வேதைகள்கண்டது மெய்யற்றவாதமே. 25

வேறு.

வாதமென்றகருவழலைக் கென்னமார்க்கம்
மகத்தானஉவச்சார முப்பூதீட்சை
கோதாவேசொன்னேனா னுலகத்தோர்க்கு
குளிகைசெய்யுஞ்சித்தரெல்லா மினைத்துயேங்க

போதமனக்கொங்கணர்தான் மூதற்கர்ண்டசூத்ரம்
போதித்தார்முப்பூவின் தீட்சையெல்லாம்
சாதிக்கபதினெண்பேர் சூத்திரமும்பாரு
சடையறவேசுந்தரமே தாக்கிக்காணே. 26

வேறு.

மாணவேயண்டங் கருவொடுசுன்னங்கேள்
பூணவேமுட்டைக்குள் மேற்பூச்சுப்பூசி
தோணவேகாந்த சூட்ன் துருசியும்
பாணியினங்கள் படிகியிந்துப்பே. 27

இந்துப்புரவி னுப்பொடுக்ல்லுப்பு
சுந்தரமேகேள் துத்தமும்வீரமுஞ்
சந்தித்தபூரமுஞ் சாரமுங்காரமுஞ்
சந்தேகந்தீரச் சாற்றுங்களஞ்சியே. 28

களஞ்சியதொன்று வகையொன்றுக்கப்பா
பளஞ்சார்வெருக்கம் பால்வார்த்தரைத்திடு
பிளம்பிறமுட்டை இருபதுமேற்பூசு
வளம்பெறக்காய்ந்தபின் மாட்டாய்கவசமே. 29

கவசமுவருப்பு கற்சுன்னமெட்டொன்று
அவசம்வாரம் வண்டத்தின்மேற்கட்டு
சிவபூசைசெய்து திறமாய்முழுப்புடம்
நவகண்டஅண்டம் நற்சுன்னமாமே. 30

ஆமேயின்ன மடங்குங்கிழஞ்சியை
காமேயடக்கமாய் நாட்டினேஞ்சுந்தரா
வமேவிளைந்து யுவற்புவைக்கொல்லவே
வேமடாகாத விந்துக்குள்ளேறிடே. 31

ஏறிட்டுக்கொல்லும் யெடுத்தசாக்கெல்லாம்
கூறிட்டுப்பாதி கூறுயினங்களை
தேறிட்டுச்சாற்றில் தோயவேவைக்க
மாறிட்டுவிந்து மெழுகுமிதாகுமே. 32

தெளிந்திருமண்ட முருக்கச்சின்வட்டுக்கு
தெளிந்திடுஞ்சீனம் வெடியுப்பிடைகூட்டி
தெளிந்திடுவெண்கரு சேர்த்தேயரைத்திடு
தெளிந்திடுவில்லை செய்திட்டுலர்த்திடே. 33

உலர்த்தியேவில்லை புடமுங்குக்குடமாய்
தலத்தியேசுன்னத்தில் தானேபுடம்போடு
கலத்தியண்டங் கடுஞ்சுன்னமாமிது
விலத்தியேவெண்கரு வெட்டங்கரைத்திடே. 34

அரைத்திடுவில்லை யடவானகுக்குட
மரைத்திடும்பத்துப் புடம்போடுஅண்டந்தான்
துறைக்குருவாகும் சொன்னதைநீறுக்கும்
தரைக்குள்ளடங்காத தண்டத்தின்சுன்னமே. 35

சுண்ணத்திறைலே சேறுங்கிளிஞ்சிதான்
சுண்ணங்கொடூரம் துடியாமல்வழலேக்கி
சுண்ணமதுவிட்டால் கற்சுண்ணமேது
திண்ணக்கருவைத் திறந்துவிட்டேனே. 36

துறந்தேனேவாசி சூட்சத்தைச்சொல்லக்கேள்
இறந்துவிடாம வியம்புகிறேன்சுந்தரா
மறந்துவிடாதே மகத்தானகுண்டலி
சிறந்தலங்காரியாம் செப்புகிறேன்மூலமே. 37

மூலமுக்கோணத்தில் மூர்க்கமாய்றீங்காரஞ்
சாலத்திரிகோணம் தன்மேல்மகாரமா
வாலேயிடத்தே வழங்குமுகாரந்தான்
கோலத்தின்பிங்கலே கொள்கைஅகாரமே. 38

அகாரமுக்கோணத்தில் குண்டலியாத்தாள்
றிகாரத்தின்மேலே யிருக்கின்றவல்லபை
விகாரத்திறைலே விபசாரியானவள்
சகாரம்பகட்டுந் தப்பாதிருந்தாளே. 39

இருந்தாள்முக்கோண மியலறுகோணத்துள்
ளிருந்தாளிருகோண மென்பாள்சடாதரி
யருந்தவமான அட்சரத்துள்ளாய்
பொருந்தவேபஞ்ச பூதங்கணின்றதே. 40

நின்றதுயாதி யந்தமுதலாக
நின்றதுநிச்சயம் நினைவில்லைத்தேபார்
நின்றவடிவை நினைவாலறிந்துபார்
சென்றிடுமோரா தாரமுந்தோணுமே. 41

தோணுமேயோகம் வாசிசுழிமுனை
காணுமோகண்டிப்பிற் கணபதிநீயாச்சு
பூணுமேவல்லபை போக்கிஷந்தானுச்சு
யாணுமேபோச்சு வதிகாரிநீயாச்சு. 42

நீயாச்சுசுந்தரா நிலைத்திடுயோகத்தை
மாயாச்சுவல்லபை தானுங்கணேசனு
மாயாவிகார மாண்டுதேமாய்கை
தோயாதசித்தந் தொலையாமனம்பாரே. 43

மனத்தாலேலட்சிய மாட்டினுல்வாசியாம்
மனத்தாலேலட்சியம் மாட்டினுல்யோகமாம்
மனத்தாலேலட்சியம் மாட்டினுல்ஞானமாம்
மனத்தாலேலட்சியம் மாட்டினுல்பூசையே. 44

பூசிப்பதாரை புகழானநந்தியை
பூசிப்பதாரை புகழானசந்தியை
பூசிப்பதாரை பொருளாங்கணேசனை
பூசிப்பதாரை பூட்டுங்கணேசனே. 45

கணேசனேதாராய் கேவலம்லட்சியம்
மணமானமட்டு மார்க்கங்கொண்டேதான்
குணமானநாற்பத்து முக்கோணசக்கரம்
குணமாயறிந்திடுங் கூறும்பறையிதே. 46

பறையானபறையும் பாலிக்கலட்சியந்
திறையானதாக்கின் சொல்லுஞ்சதாசிவத்
தரைகண்டபோது வளரும்பெரியதே
கரைகாணலட்சியம் காட்டுமலத்தையே. 47

அவத்தையின்சூட்சுமம் போலயறிந்திடு
சிவத்தையறிந்து சிவாக்கினைசெய்திடு
தவத்தையறியார் சடலத்தைரட்சிக்க
சவத்தைப்போலாவர் தன்தேகம்வேறாகவே. 48

வேறாகப்பூசினி விள்வோர்குருவென்பார்
கூறுதுகாணூர் கூறினேன்கொச்சத்தில்
தேறவேசொன்னேன் சிந்துநீகூற
பேறதினாலே பிறக்கும்மௌனமே. 49

மௌனத்தின்மூலமும் வாசியின்மூலமும்
மௌனத்தின்பஞ்ச பூதத்தின்மூலமும்
மௌனத்தின்சாக்கிர லட்சியமூலமும்
மௌனத்தின்சத்தி சிவபூசைமார்க்கமே. 50

மார்க்கமாய்ரோமன் மச்சமுனிசூத்திரம்
சேரவேகுருமுனி செப்பினூறிதில்தாம்
பார்க்கத்தெரிசனம் பத்திமுத்தியுஞ்
சேர்க்கவேபாரு தெளிவுநூலாமே. 51

வே று.

ஆமப்பாசுந்தரமே வையாகேளு
யண்டத்தின்சுண்ணமொடு வாசிமூலம்
நாமப்பாநிகண்டுபனி ரெண்டுநூறு
நலமாகச்சொன்னேன் சூத்திரத்தை
வாமப்பாரெண்டுகாண்டம் வாதத்துக்கு
மகத்தானசூத்திரமிரு நூறுஞ்சொன்னேன்
தாமப்பாசூத்திரமும் நிகண்டுகொஞ்சஞ்
சாத்திரமும்பார்த்தவர்க்கு முத்தியாமே. 52

சட்டமுனி சூத்திரம்-52

முற்றிற்று.

சிவமயம்.

எண்பத்திநான்காவது,

கைலாச சட்டமுனிநாயனா ரருளிச்செய்த

கற்பவிதி - 100.

பாடுகிறேன்காயகற்ப மைங்கரனேகாப்பு
 பரிதானசின்மயத்தின் பாதங்காப்பு
நாடுகிறேன்சித்தருட பாதங்காப்பு
 நாதாந்தமனோன்மணித்தாய் பாதங்காப்பு
தேடுகிறேனென்றாலு மென்னூல்போலச்
 செப்பார்கள்காயசித்தி சித்தரப்பா
சூடுகிறேன்காயசித்திக் காதியந்தஞ்
 சொல்லுகிறேனன்றாகக் கேளுகேளே. 1

உள் வழலை.

கேளப்பாமுந்திமுந்தி வழலைமார்க்கங்
 கெடியானவாங்கிறதோர் வரிசைசொல்வேன்
நீளப்பாபெருவிரலிற் கரிசாலஞ்சாறு
 நெய்யோடேமத்தித்துப் பூசிக்கொண்டு
சூளப்பாஅண்ணாக்கில் விரலையோட்டி
 சுழட்டையிலேகபாலத்திற் கபமெல்லாம்வீழும்

காளப்பாநாலுதயத்திற் செய்வாயாகில்
நலமானகுணத்தையினிச் சொல்லுகிறேனே. 2

சொல்லுகிறேன்வாருதிபோற் கபீர்வீழுஞ்
சோதிக்கலண்ணைக்கிற் குறியைக்கேளு
வெல்லுகிறேன்சுழிமுனையின் ராகுகேது
மைந்தனேசங்கோடு சக்கரம்போல்நிற்கும்
அல்லுகிறேனிதின்பேரு ரவிமதிதானென்பா
ராச்சரியமிடைபின்று யமர்ந்தநாக்கு
சொல்லுகிறேனென்றுசொல் ஜனங்களைத்தான்
கூட்டியல்லோகபத்தையுள்ளே வளர்க்குந்தானே. 3

தானென்றபிதைமடக்கி விறலையேற்றச்
சாதகமாய்ச்சுழிமுனைதான் விறலிற்றட்டுங்
கோனென்றசுழிமுனையே திறந்துதானல்
குறிசொல்வேனமுர்தமங்கே குமிழிவாயு
மூனென்றஅமிர்தமடா சுந்தரமேயையா
உற்றுப்பாரிளந்தேங்காய்ப் போலேகாணுந்
தேனென்றஅமுர்தமுண்டாற் காயசித்தியாகுஞ்
செப்பாமற்சித்தரெல்லா மறைந்திட்டாரோ. 4

மறைத்திட்டாரமுதத்தை விழுங்கிக்கொள்ள
மைந்தனேவிஷமதுதான் கண்டத்தில்நிற்கும்
நிறைத்திட்டதட்சிணையு மத்திமையுங்கூட்டி

நோகக்கண்டத்தே அமைத்தூட்டு
உரைத்திட்டவிஷங்களெல்லாங் கக்கிவீழு
முத்தமனேபித்தமென்பா ருலகமோடு
கரைத்திட்டகரைகண்டாற் சின்மயந்தான்சொன்னார்
காயசித்திக்கின்னமொரு மார்க்கங்கேளே. 5

கேளப்பாஆமணக்கி னெண்ணெய்யோடு
கொடியானகுமரிச்சார் கூடக்கூட்டி
நாளப்பாதட்சணையிற் றேய்த்துக்கொண்டு
நலமானபாவையைப்போ லிருந்துகொண்டு
நீளப்பாஅபானத்திற் சுத்தியாட்ட
நேரான துர்மலங்க ளெல்லாம்போகுஞ்
சூளப்பாஇதைமறைத்துக் காயசித்தி
சொன்னார்கள் துரந்துவிட்டேன் வழலைமுறைதானே.

சித்திக்கக்காயமுந்தல் வாதந்தானுஞ்
செப்புகிறேன்வாலையுட மூன்றெழுத்தைக்கேளு
பத்திக்கக்குருவினுட வுபதேசங்கேட்டு
பண்பாகத்தேவியைத்தான் பூசைபண்ணி
ஒத்திக்கமேனோக்கி தாரகத்தைப்பார்த்து
உண்டிடுவார்கற்பத்தை யுடனேசித்தி
மத்திக்கவாலையுட மூன்றெழுத்தைவிட்டால்
மண்ணூச்சுசித்தியெல்லா மனதிற்காணே. 7

காணப்பாவாலையுட மூன்றெழுத்தைகாட்டு
கைமுறையாய்ப்பூமியொன்று ஆகாயமொன்று
தோணப்பாபிரபஞ்ச மூன்றுய்நின்று
சுகபோகசித்திகளை யீயும்பாரு
ஊணப்பாசொல்லார்கள் வாலைதீட்சை
ஒருகோடிதனமீயுஞ் சொல்லார்சொல்லார்
வீணப்பாதேவியுட தீட்சைவிட்டால்
வெறும்பொய்யாம்நூல்முதலாய் சித்திபோமே. 8

வாலை.

போகாமற்சிவனுடைய சக்கரத்தின்மையம்
புகழானதேவியுடன் சக்கரத்தைவைத்து
வாகாமற்சிவசத்தி சமாதிபூசை
மைந்தனேதசதீட்சை கேட்கவேணுஞ்
சாகாமலிருத்திவைப்பா எவனுங்கூடி
சவுசஷ்டிவித்தையெல்லா மவனுக்குள்ளாம்
வேகாமல்வேகுதடா தீவினைகளெல்லா
மேனேக்கிக்கத்தமுண்டு யேறுயேறே. 9

நூல்பெருமை.

ஏறுமென்றபலநூலிற் கோடாகோடி
யென்னைமெச்சுங்கொங்கணர்தான் பாடிப்போட்டார்
தேறுமென்றுகண்டுகொண்டு கோரக்கர்சொன்னூர்

சிவமானமூலகுரு உண்டுபாரென்றார்
கூறுமென்றுசிலநூலிற் கண்டுகொள்ளுமென்பார்
கூறுதமச்சமுனி அறிந்துபாரென்றால்
மாறுகின்றமடபதியாஞ் சித்தரெல்லாம்
வைத்தாரேகாயசித்தி மாண்டார்காணே. 10

காணப்பாகாயகற்பங் கொள்ளுவோர்க்குக்
கைமுறையாய்க்காட்டுகிற வரிசையில்லை
தோணப்பாகொள்ளையிலே மயக்கந்தாகஞ்
சொற்பெரியஉடனேவு வருத்தமானால்
வீணப்பாவென்றுவிட்டோர் கோடாகோடி
விதியளவேமதியளவே வினையோகாணேன்
ஊணப்பாவென்றுசொன்ன நூலின்தொன்மை
வொருமொழியாய்க்குருசொல்லாத் தோஷந்தானே. ()

தானென்றபடிநூலிற் பாடிவிட்டாரப்பா
சட்டமுனிநூல்பாரு வென்றேகோடி
நானென்றகாடுபோற் காயசித்திமாதங்
கைமுறையாய்ப்பாடாமல் மறைத்தாரையோ
ஏனென்றுகேட்டாக்காற் சுந்தரானந்தர்
யெல்லாருங்காயசித்தி யாவாரென்று
கோனென்றஆதிமூத லொன்பதுபேர்சித்தர்
கோடியாய்நவகோடி சித்தராச்சே. 12

ஆச்சப்பாகவகோடி கோடாகோடி
யாச்சுதென் றுசித்தரெல்லாம் பேசிக்கொண்டு
போச்சப்பாகாயசித்தி மறைத்துச்சொன்னார்
போக்கறியாருலகத்தோர் நின் றுகேட்டார்
ஏச்சப்பாவாதசித்தி லாதியென் றகருவை
எழுப்பாமல்வழலையைத்தா னிழுக்கச்சொல்லி
காச்சப்பாமடுகீச்சு காயசித்தியாகக்
கண்டோடியென்னாலே யொளித்தார்பாரே. 13

பாருமெந்தனாலோடு கண்டுகொண்டு
பார்த்தோர்க்குப்பரிசமுதல் சந்தானவேதை
காருகண்டாயவர்பதத்தை பன்னிரண்டாண்டு
கருணையுடன்கைகொடுத்தார் கண்டுபாரு
மாறுகொண்டுதிருடாதே வாயாடாதே
மயக்கமொடுவல்லமைகள் செய்திடாதே
போருகொண்டுவாங்காதே பொய்சொல்லாதே
புத்திகெட்டசித்தர்களே புகலக்கேளே. 14

கேளப்பாயென்னாலே வைத்திருந்தோர்பாதங்
கெடியாகதொழுதிரஞ்சி வாங்கஈன் று
நாடப்பாயில்லாவிட்டாற் கேட்டதனமீந்து
நலமாகவாங்குவது யிரண்டாம்பட்சந்
தாளப்பாயென்னாற்குச் சரினாலில்லை

சாதகமாய்க்கொடுப்பதற்கு சிலநாளுமொவ்வா
சூளப்பானால்கொடுத்தேன் மனதுநொந்தாற்
சுத்தபாழாகுமென்று சகித்திட்டேனே. 15

இட்டதொருசாபத்தாற் பயந்துசித்த
ரென்னுலைவாங்கையிலே குளிகையீவார்
பட்டதொருதனங்கேட்டார் கோடியீவார்
பரிவாகத்தொண்டுசெய்து வாங்குவார்கள்
திட்டமுடன்வாங்கையிலே பூசைசெய்வார்
செகத்தோர்க்குக்கிட்டினால் சித்தராவார்
மட்டமருங்குழலாளுஞ் சிவனும்வந்து
வசனிப்பார்காயசித்தி வரிசைகேளே. 16

வரிசையுடன்கடுக்காய்க்குச் சுந்தரானந்தர்
மாதத்தைச்சொல்லுகிறே னானியாடி
உரிசையுடவெல்லத்தோ டொக்கக்கொள்ளு
வுத்தமனே ஆவணிக்கும் புரட்டாசிக்கும்
பரிசையுடனிந்துப்பு வுடனேகொள்ளு
பாங்கான அற்பிசிக்குங் கார்த்திகைக்கும்
தரிசையுடன்சர்க்கரையிற் கூட்டிக்கொள்ளு
சாதகமாய்மார்கழிக்குந் தைக்குங்கேளே. 17

கேளப்பாசுக்கினுட கியாழத்திற்கொள்ளு
கெடியானமாசியொடு பங்குனிக்குத்தேனும்

நீளப்பாசித்திரைக்கும் வைகாசிக்கும்
நிலையான அமுரியிலே கொண்டுயேறு
தூளப்புரசெய்யும்போற் கடுக்காய்நன்று
சுகமானசெங்கக்கால் மெத்தநன்று
தாளப்பாகடுக்காயை நன்னயமாய்ச்செய்து
சாதகமாய்வயதறிந்து சாப்பிட்டாரே. 18

ஏறியபின்மிளகுதன்னைக் கணக்காய்ப்பார்த்து
யெடுத்தல்லோபீங்கானில் வைத்துக்கொண்டு
மாரியபின்னமுரியிலே முறித்துக்கொண்டு
வாகாகவைத்தால் தினமுமேற்றி
கூறியதன்னூறுமட்டாய்க் கொண்டுதள்ளு
கொள்ளையிலேவெட்டைசற்றே மீறிற்றானல்
தேறியபின்னறுகுடனே மிளகுகாய்ச்சி
சிறுகவதிலெண்ணையிட்டு திரமாய்க்கொள்ளே. 19

கரத்தை.

கொண்டபின்புகரத்தையைத்தான் சூரணமேசெய்து
கூட்டியல்லோசர்க்கரையி னுலுக்கென்று
தண்டவதுதேனோடு கழஞ்சிகொள்ளு
சாதகமாய்மண்டலத்தில் வாசியேறி
ஒண்டவதுகிடமற்று வாதமோடு
முத்தனேபித்தமெல்லாம் கீழேபோக்கும்

கண்டிதமாய்க்கொண்டுமௌனந் தீர்ந்தபின்பு
கற்பத்தின்வரிசையெல்லாஞ் சொல்லுகிறேனே. 20

சொல்லுகிறேன்பொற்சீந்தி யானுல்நன்று
துலங்காதுகிடையாவிட்டால் நல்லசீந்தி
அல்லலுற்றோர்மேற்றோலை யுரித்துப்போடு
யடித்தண்டாய்க்கொண்டுவந்து கிழித்துப்போட்டு
நல்லுறவேயுலர்ந்தபின் பிடித்துத்தூளாய்
நலமாகநாலிலொன்று சக்கரையுங்கூட்டி
ஒல்லுறவேதினந்தோறுங் கழஞ்சிகொள்ளு
ஓராதமண்டலமு முண்டுதேறே. 21

சேரப்பாசுரதோஷ மெல்லாம்போகுஞ்
செகமறியமேகமென்ற தெல்லாம்போகும்
வாறப்பாகபாலத்தில் வெட்டைபோகும்
வற்றிநின்றததுவெல்லா மருவியூரும்
வேறப்பாஅஸ்திசுரம் வெட்டைபோகும்
மெய்நிறைந்தநாடியெல்லா மமுர்தமாகும்
பேரப்பாசீந்திச்சார் வேறேயில்லைப்
பேரேஅமுர்தசஞ் சீவியாமே. 22

ஆமப்பாயிதுகடந்து நூறுண்டின்வேம்பை
யப்பனேபட்டையைத்தான் வெட்டிவந்து
ஓமப்பாமேற்பரணை சீவிப்போட்டு

உத்தமனேகிழலுலர்த்தி யுலர்ந்தபின்பு
தாமப்பாயிடித்துநன்ருய்ச் சூரணமேசெய்து
சாதகமாய்க்கருங்குன்றுச் சாறுவார்த்து
தேமப்பாயேழுதிரம் பாவனைசெய்து
திறமாகநிழலுலர்த்தா யுலர்த்திடாயே. 23

உலர்ந்தபின்புயெட்டிலொன்று கற்கண்டுகூட்டி
உத்தமனேயிருகழஞ்சி யிருநேரங்கொள்ளு
மலர்ந்துநின்றலையாமல் மண்டலந்தான்கொள்ளு
மைந்தனேவயிரம்போ லிருக்குந்தேகங்
கலந்துநின்றநாடியெல்லா மிருகுமேறி
கண்துலக்கமுண்டாகி அழுந்துந்தேகம்
நலந்திகழும்நரைதிரைகள் பிலமுங்கெட்டு
நமனுக்குநமனுவான் நன்ருய்ப்பாரே. 24

பாரப்பாயிதுகடந்து பின்புநீதான்
பரிவானகரிசாலைக் குப்பைமேனி
சேரப்பாசிறியதொரு செருப்படையினேடு
தெளிவாகசமன்கூட்டிச் சூரணமேசெய்து
வாரப்பாதேனதிலே கிண்டிவைத்து
மைந்தனேதினங்கழஞ்சி கொண்டுவாநீ
தாரப்பாயிருபதுநாள் கொண்டாயாஞற்
றறையிலுள்ளதோஷமெல்லாஞ் சாடிப்போமே. 25

வாக்குண்டாதல்.

சாடுமேசுயம்பாட வாக்கில்வாலை
சகலநூல்கருவெல்லாந் தானேதோன்றும்
வாடுமேதேகமெல்லாம் பொன்னிறம்போலாகு
மன்மதன்போற்கண்ணிரண்டுஞ் சிவப்பதோடித்
தேடுமேபெண்மேலே மோகமப்பா
தெளிந்துகொண்டுமாயத்தில் சிக்கவேண்டாம்
ஓடுமேசேத்துமந்தான் கீழேநோக்கு
முதாத்தில்வாயுவெலா மொழிந்துபோமே. 26

சிவனார் வேம்பு.

போனபின்புயின்னுமொரு கற்பங்கேளு
புகழ்ந்துநின்றசிவனார்தன் வேம்பினோடு
ஆனபின்புவாலுழுவை வித்துங்கூட்டி
யப்பனேசமனாகக் கூட்டிக்கொண்டு
தானபின்புயிதையிடித்துப் புடத்திற்றைலஞ்
சாதகமாய்வாங்கியல்லோ வடித்துக்கொண்டு
ஏனபின்புசீரகமுஞ் சர்க்கரையும்போட்டு
யிதமாகக்கலக்கியதை வைத்துக்கொள்ளே. 27
வைத்ததொருதைலத்தை தினந்தோறுமைந்தா
வாகாகக்காற்கழஞ்சி கொண்டுவாநீ
நைத்ததொருமண்டலமே யுண்டாயானல்

நலமானதந்துவெல்லாஞ் சுத்தியாகுங்
கைத்தமொழிபித்தமறுங் கபத்தைச்சாடுங்
கனகம்போற்றேகமுமாங் கண்டுகொள்ளு
மெய்த்ததொருசரஸ்வதியாள் நிர்த்தஞ்செய்வாள்
வேதாந்தசாரமெல்லாம் வெளியாய்ப்போமே. 28

தூதுவளை.

போமப்பாயிதைவிட்டு கற்பஞ்சொல்வேன்
புகழானதூதுவளை யிலையினோடு
ஓமப்பாதக்கோலஞ் சாதிக்காயு
முத்தமனேவாலுழுவை வித்துங்கூட்டி
சேமப்பாகொடிவேலி வேரினோடு
சேர்ந்துநின்றநிலைப்பனையின் கிழங்குகூட்டி
தாமப்பாகொன்றையுட பூவினோடு
சாதகமாயைங்கோல வித்துங்கூட்டே. 29

கூட்டியல்லோயிதுவெல்லாஞ் சமபாகமாகக்
குமிறிடித்துச்சூரணமாய் செய்துகொண்டு
ஆட்டியல்லோமுட்பன்றி நெய்யினோடு
அப்பனேகாசிடைதான் றினமுங்கொள்ளு
பூட்டியல்லோமண்டலமுங் கடந்துதானாற்
பொற்சடையோன்றேகமும் பொய்யேயில்லை

காட்டியல்லோமூலகுரு யிந்தகற்பங்
கைமுறையாகவுந்தான் பாடினரே. 30
பாடினதோர்கற்பத்தை கடந்தபின்பு
பார்மைந்தாயணத்தின் கற்பஞ்சொல்வே
ணீடினதோர்கருங்கோழி காவலுடன்போடு
நிலையாகவளர்த்ததின் முட்டையெல்லாம்
மூடினதோர்கல்லுப்புக் குள்ளேவைத்து
வுத்தமனேகல்லுப்பு மேலேமூடித்
தேடினதோரிரண்டுதிங்கள் கடந்தபின்பு
சிவசிவா அண்டமெல்லாங் கட்டிப்போச்சே. 31

அண்ட கற்பம்.

கட்டியதோரண்டமெல்லா மெடுத்துக்கொண்டு
கைமுறையாய்கெருடனுட கிழங்குச்சாற்றில்
மட்டியதோரண்டமிட் டிரண்டுசாமம்
வாகாகயெடுத்தெரித்து வைத்துக்கொண்டு
தட்டியல்லோமேலோடு தள்ளிப்போட்டுச்
சாதகமாய்த்தினமொன்று அண்டமொன்று
துட்டியல்லோயிரண்டாகிப் பேர்பாதிகொள்ளு
துயர்தீருஞ்சுகமாகக் கொள்ளுகொள்ளே. 32
கொள்ளப்பாயிருபதுநாள் காயந்தானுங்
குறுகாதுகெடுகாது கற்றாணுகும்

விள்ளப்பாசுக்கிலத்தைக் கட்டிநிற்கு
மேலேற்றுமல்லாது கீழோடாது
துள்ளப்பாயடங்கிற்றுக் காமவித்தை
சுகபோகஞ்செய்தாலும் விந்துவீழா
தள்ளப்பாவிவ்வளவிற் சுன்னமாகச்
சட்டைபோஞ்சட்டைபோஞ் சாதித்தேறே. 33

தாம்பூலச் சுன்னம்.

சாதிக்கஇவ்வளவும் பத்தியத்தைக்கேளுந்
தாம்பூலந்தின்பதற்குச் சுன்னஞ்சொல்வேன்
ஓதிக்கக்கற்பூரச் சிலையைவாங்கி
வுத்தமனேவெண்கருவா லரைத்துக்கட்டிப்
பேதிக்கக்கரியோட்டி லூதுவூது
போனசுண்ணாம்பாம் பின்னுங்கேளு
வாதிக்கக்கன்னுரை யிப்படியேயூது
மகத்தானயண்டத்தோ லூதிடாயே. 34

ஊதிடவேசுன்னமா மொவ்வொன்றப்பா
வுத்தமனேபழுத்தருந்து வெற்றிலையிற்பூசிக்
கோதிடவேகொட்டைப்பாக் கதனைச்சீவி
குமரவேதாம்பூலந் தின்னநன்று
ஓதிடவேமுன்சாற்றை யுமிழ்ந்துப்போட்டு
உண்டபின்புதாம்பூலந் தின்றுதுப்பு

வாதிடவேசேற்றுமத்தை யறுத்துப்போடு
மகத்தானயுபசாந்தின் சுன்னந்தானே. 35

தலைமுழுக.

தானென்றதலைமுழுக வரிசைகேளு
சாதகமாம்மிளகோடு கடுக்காய்மஞ்சள்
வெனென்றவேப்பரிசி நெல்லிக்காயு
மீராதசமபாகம் நிறுத்துக்கொண்டு
கோனென்றயாவின்பால் விட்டுஆட்டிக்
குமரவேமுழுகிவர பட்சந்தோறும்
ஊனென்றநெய்வார்த்து வாரந்தோறு
முத்தமனேபசும்பயர்க்காய்ப் பாகம்புண்ணே. 36

அன்னத்திலுப்புக்கூட்ட.

பண்ணப்பாயன்னத்தி லுப்பொடுங்க
பாடுகிறேனுதாக்கள் பாடாதெல்லாம்
கண்ணப்பாயண்டமைந்து கல்வத்திட்டுக்
கல்லுப்புபலம்பத்து மதிலேபோடு
விண்ணப்பாவெடியுப்பு பலந்தானைந்து
மேவியதோர்நவாச்சாரம் பலந்தான்ரண்டு
எண்ணப்பாசீதமது பலந்தான்மூன்று
வொக்கநன்றுயரைத்துலர்த்த மெழுகுமாமே. 37

மெழுகெடுத்துப்பாறையுப்பை யுடைத்துப்பூசி
வெய்யலிலேயுலரவைத்துக் காய்ந்தபின்பு
உழுகெடுத்தவஷாத்தை கீழ்மேலிட்டு
ஓட்டிலேமூடிநன்றாய்ப் புடத்தைப்போடு
நழுகெடுத்துப்போகாது உப்புகட்டும்
நலமாகவுடைத்தவாய் வயிரமின்னும்
தழுகெடுத்தவுப்பையல்லோ கரிசோத்திலிட்டு
சாப்பிடவேமிகநன்று சாப்பிடாயே. 38

வேதையாகும் உப்பு.

சாப்பிட்டாலிந்தவுப்புச் சட்டையெல்லாந்தள்ளும்
தாமதிக்கவுருவமைந்த மாதிற்கப்பா
கூப்பிட்டாலுன்மனத்தாய் வாவாவென்பாள்
கூசாதேகட்டோடே மேலேயேற்றும்
வேப்பிட்டயமுரியிலே யிறங்காதுப்பு
யிதுவுமொருகற்பமுமா யிருக்குந்தோஷ
வாய்ப்பட்டகொழுப்பாலே பச்சையுப்பைத்தின்றால்
வாய்த்திருத்திசித்தி மண்ணைப்போமே. 39

உப்புச் சுன்னம்.

போமென்றவுப்புக்கும் சாரமேற்றி
புகழாகவூதிடவே சுன்னமாகுந்
தோமென்றசுன்னத்திற் சாரஞ்சேர்க்கச்

சலமாகுமிதுக்குள்ளே வீரம்போட்டு
ஆமென்றசரக்கையெல்லாந் தோய்த்துவாட்ட
அசையாதுஅசையாது மணிபோலாடும்
நாமென்றநவலோகத் துள்ளேயிந்தால்
நாலாறுமாற்றாகும் நயந்துகாணே. 40

காணப்பாயிதையெடுத்து செலவுசெய்துகொண்டு
கனமானகற்பகத்தைத் தின்றுயேறு
வீணப்பாகெடுக்காதே கெதியில்லையென்று
வேதாந்தவாலையைத்தான் நித்தம்பூசி
தோணியப்பாயெந்தனைப்போற் சொன்னாரில்லை
சொன்னதினால்சித்தரென்மேல் பகையுமாச்சு
ஊணப்பாயிதைவிட்டு கற்பஞ்சொல்வே
னுத்தமனேவெகுசுருக்கா யுறைத்துப்பாரே. 41

செயநீர்.

பாரப்பாயறப்பொடியை பழச்சாற்றிலிட்டு
பாங்காகவூறவைத்து மூன்றுநாள்தான்
நேரப்பாவுருஞ்சியதைக் கழுவிப்போட்டு
நிருத்தல்லோபலமைந்து யெடுத்துக்கொண்டு
தாரப்பாபலமொன்றுக் கட்டியதோருப்பு
தன்னோடேஅரைப்பலந்தான் வீரம்போட்டுச்

சேரப்பாவெண்காரம் பலமும்ரெண்டு
திறமானசாரமது பலமுங்காலே. 42

அயச்செம்பு.

காலோடுயரைப்பலந்தான் துருசுபோட்டு
கைமுறையாயரைப்பலந்தான் துத்தம்போட்டுச்
செயலோடுசூதமதிற் காற்பலமும்போட்டுத்
திறமானவெடியுப்பு நீராலாட்டிச்
சாலோடுசாரநீர் விட்டுஆட்டிச்
சாதகமாயிருசாம மிரண்டுநீரு
மேலோடுயெரியபலம் பருப்புத்தானு
மெச்சவேயிரண்டுபலங் கூட்டுபோடே. 43

போட்டரைத்துயைந்துபங்காய் பகுந்துகொண்டு
புகழாகவொருபங்கு அறப்பொடியிற்கூட்டி
நீட்டதனைகுகையிலிட்டுச் சில்லுபோட்டு
நோராகக்குகையினுள்ளே வுருகயாட்டு
மீட்டிதனையரைத்தெடுத்து நொறுக்கிக்கொண்டு
மீளவொருபங்கெடுத்து யுருக்கிநீயும்
பூட்டதனையிப்படியே யைந்துபங்கும்
புகழாகயுருக்கியே யாடும்பாரே. 44

பாரப்பாயிந்தவைந்துக் கிடையேதங்கம்
பாச்சியொருமணியாக வுறுக்கிவாங்கி

நேரப்பாயிதிலேயொரு கழஞ்சிபோடு
நிலைக்கவொருகுகையிலிட்டு வுருக்கும்போது
தூரப்பாநாகமொரு கழஞ்சிபோடு
சுகமாகவாங்கியது ஆடும்போது
காரப்பாகாரீயங் கழஞ்சிபோடு
கண்திரந்துஅப்பனே பிரளுந்தானே. 45

தாளுக்கண்திறந்து பிரளும்போது
தாக்கதிலேமுக்கழஞ்சி லிங்கத்தானுங்
தேளுகக்களங்காகு மிதனைவாங்கிச்
செம்பிரண்டுவெள்ளியெட்டுச் சிறக்கவூட்டி
கோளுனகளங்கையொன்று குடுத்தாயாளுற்
குறையாதுயேழரைதான் கூர்ந்துபாரு
பாளுனலோகமங்கே பொன்னுமாளுற்
பண்பாகக்காயசித்தி சொல்லக்கேளே. 46

காயசித்தி அயச்செந்தூரம்.

கேளப்பாவுருகினதோ ரிரும்பிடைக்குத்தங்கம்
கெடியாகவைத்துருக்கி யெடுத்துக்கொண்டு
தாளப்பாயிதிற்பாதி சூதங்கூட்டிச்
சாதகமாய்ச்சூதத்தி லிரட்டிப்புகெந்தி
நீளப்பாயிதிற்கூட்டிப் பொற்றலையின்சாற்றால்
நிலைக்கவரைத்தொருசாமம் வில்லைசெய்து

நாளப்பாலூட்டிவிட்டுச் சீலைசெய்து
  நலமாகலகுபுடமாய் போட்டிடாயே. 47
போட்டிடுவாய்புடந்தோறுங் கெந்திகெந்தி
  புகழாகவெளிமட்டும் பிறகுசும்மாய்
காட்டிடுவாய்பின்புபுடங் கனமாய்நீயுங்
  கலக்கமதுசெந்தூர மாகட்டுமம்மா
ஆட்டிடுவாய்செந்தூர மானபின்பு
  அப்பனேகால்கழஞ்சு சர்க்கரையிற்கொள்ளு
கூட்டிடுவாய்காயமது இருப்புத்தூளாய்
  செயலோடுமண்டலந்தான் கொண்டுதேரே. 48

காந்தகற்பம்.

தேறியபின்காந்தமென்ற கற்பங்கேளு
  ஜகமறியப்பயிர்காந்த முருளைக்காந்த
மாறியதிலூசியெட்டிப் பிடிக்குங்காந்த
  மைந்தனே அரக்காந்தம்பலமொன்றாகும்
ஆரியதோரிதுநாலி லாகநன்று
  அப்பனேகிடையாவிட்டால் நீதான்கேளு
கூரியதோளூசிதனைப் பிடிக்குங்காந்தங்
  கொண்டுவந்துசுறிக்கிநன்றாய் புடத்தைப்போடு. 49
போடப்பாவெள்ளாட்டு ரத்தத்துள்ளே
  பூட்டியல்லோவெள்ளாட்டின் கொழுப்புப்போட்டு

நீடப்பாவதின்றேலிற் கட்டிநன்றாய்
நிலையானநெற்குழியிற் கூடவைத்து
ஊடப்பாநாலுதிங்க ளானபின்பு
உத்தம்னேயிதையெடுத்து வுருக்கிக்கொள்ளு
கூடப்பாயிவ்விடைக்குப் பாதிகாரங்
குறையாமற்சாரமைந்து காந்தம்பத்தே. 50

பத்தோடுதுரிசிரண்டு பலமுங்கூட்டிப்
பாங்கானசாரமதைப் பலமும்போட்டுக்
கொத்தோடுசொன்னமீ துளந்துமொச்சை
குறையாமற்கோதும்பை குன்றுமணிகொள்ளு
சித்தோடுபுறுரெத்தஞ் சர்க்கரைதேன்வெண்ணெ
சிறப்பாகவகையொன்று பலமதொன்று
நத்தோடுஆட்டுரத்தம் விட்டுஆட்டி
நலமாகயைந்துபங்கு கூறுசெய்யே. 51

செய்தபின்புகாந்தத்தி லொருகூறுகூட்டி
திரளநன்றாய்த்தரக்குலையி லூட்டியாட்டுப்
பைதபின்பதையெடுத்து வூதிப்போட்டுப்
பாங்காகப்பின்னுமொரு பங்குகூட்டி
நைதபின்புமுன்போலே யுருக்கியாட்டி
நலமாகயைந்துபங்கு முடைத்துவூது

செய்தபின்புநாதமது சத்தாய்நிற்குங்
காயசித்தியிதின்பெருமை காட்டுவேனே. 52
சாட்டுகிறேன்காந்தசத்து பலந்தானிரண்டு
கனமிகமில்லாத்தங்கம் பலந்தானொன்று
ஊட்டறவேயிரண்டுமொன்றா யுருக்கிவாங்கி
வுத்தமனேசூதமதிற் பலந்தானொன்று
நீட்டுறவேகெந்தகமும் பலந்தானாலு
நேரவிதைபொற்றலையின் சாற்றாலாட்டி
மூட்டுறவேவில்லைதட்டி யோட்டில்மூடி
மூதண்டமனல்மரவிற் புடத்தைப்போடே. 53
போடப்பாயிப்படியே பதினொன்றுபுடந்தான்
புகழாகவிதையெடுத்து வரைத்துக்கட்டி
நீடப்பாவோட்டிலிட்டுச் சீலைசெய்து
நேர்ப்பாகவெளிப்புடமா யேற்றிப்போடு
ஊடப்பாசெந்தூர மாகுமட்டு
முத்தமனேபுடம்போட்டுத் தீர்ந்துவாங்கி
தேடப்பாயிரண்டுபணந் தூக்கந்தானுந்
தினந்தோறுமண்டலந்தான் தின்றுபாரே. 54
ஏறையிலேகாயமெல்லாஞ் சிவந்துமின்னு
மெழுந்ததொருநறைகளெல்லா முதிர்ந்துபோகுந்
தேறையிலேகண்ணிரண்டுஞ் சிவந்துமின்னுஞ்

சிறுபிள்ளைமுகம்போலே சிவந்துகாணும்
நாறையிலேவுடம்பெல்லாம் கஸ்தூரிவீசும்
நலமானதந்தமெல்லா மிருகியேருங்
கூறையிலேகாந்தத்துச் சுருக்கிமெத்த
கோரக்கர்சித்தியெல்லா மிதற்குள்ளாச்சே. 55

சூ த ம ணி.

ஆச்சப்பாகாந்தத்தால் வேதைசொல்வே
னண்டரண்டந்தாண்டியப்போ மண்கொட்டாது
ஓச்சப்பாயதின்வேறை சித்தர்மெச்ச
மூட்டுகிறவரிசைசொல்வேன் சுந்தரானந்தர்
பாச்சப்பாகாந்தசத்தின் சமனாய்த்தங்கம்
பாங்காகவார்த்திடித்து வுலர்த்திப்போட்டு
ஓச்சப்பாயுருக்கையிலே நாகமிட்டசூத
மூட்டியொருமணியாக வாங்குவாங்கே. 56

வாங்கியந்தமணியிடைக்கி கெந்தகந்தான்கூட்டி
மருவியதோர்மணிக்கும் மனோசிலையுங்கூட்டி
ஓங்கியிதைபொடியாக்கி குப்பிக்கேற்றி
வுத்தமனேவாலுகையி லெறித்துயேறு
காங்கியதுசெந்தூரம் பதைத்துக்கேளு
சதாகிட்டாற்காய்ப்பாரு மடியிலேதான்

போங்கியிந்தபதத்தோடே செந்தூரம்வாங்கி
புகழாகத்தேவியைத்தான் பூசைபண்ணே. 57
பூசைபண்ணுமவள்பதமுஞ் சிவனுடையபதமும்
புகழ்பெரியயீசனவர் நிர்வாணிபதமும்
பூசைபண்ணிவஸ்துவைநீ பானம்பண்ணி
போக்கோடேதாரகத்தில் நின்றுபாரு
பூசைபண்ணமறந்தக்காற் காயசித்தி
பொய்யூட்டும்வேதையெல்லாம் பொய்யாப்போகும்
பூசைபண்ணத்தேவியுட பத்துதீட்சை
புகழாகக்கேட்டவரே சித்தராமே. 58

வாதசித்தி.

ஆமப்பாகாந்தமென்ற செந்தூரத்தை
யறைகிறேன்வேதமுக மாடங்கேளு
ஓமப்பாசெம்பதிலே நூற்றுக்கொன்று
வுத்தமனேவெள்ளியிலே எண்பதுக்கொன்று
தேமப்பாகுடவனிலே யன்பதுக்கொன்று
திறமானயிரும்பதிலே முப்பதுக்கொன்று
தாமப்பாதாராவிலே பத்துக்கொன்று
தாக்கிப்பார்சரிமாற்று தப்பாவாறே. 59

வாறானபூநாகங் குளக்கரையில்தோறு
மண்தின்றுகக்கியல்லோ புத்தாய்நிற்குந்

தாரானபுத்தெடுத்துத் தண்ணீர்வார்த்துச்
சமரசமாயறித்திறுத்து யடியிற்பார்க்க
வீருகபளபளப்பாய் மின்னிக்கொண்டு
விளங்கியதோர்சத்தெல்லாங் கீழ்நிற்கும்
பூருனதிதுவெல்லாம் வழித்துக்கொண்டு
குமூரவேகாரமிட் டுருக்கிடாயே. 60

உருக்கியதுமணிபோல வெடுத்துக்கொண்டு
வுத்தமனேகருவளியல் சவ்வீரங்கார
மருக்கியதுநாலுக்கு வொன்றுகூட்டி
மைந்தனேகுகையிலிட்டு நன்றுயோது
செருக்கியதுமணிபோல சத்தாய்நிற்குஞ்
சிவசிவாபூனுக சுத்தியாச்சு
சுருக்கியிதைச்சொல்லாம லெடுக்கச்சொன்ன
கருத்துக்கேசித்தரெல்லா மெச்சினுரே. 61

மெச்சினதோர்சத்துருக்கு நாலிலொன்று
மேலானதங்கத்தை யிட்டுயாட்டி
நச்சினதோர்கற்சூத மிடைக்கிடையேகூட்டி
நன்றுகஅரைத்திதனை பொடிபோலாக்கி
கய்ச்சினதோர்கெந்தகத்தைச் சமனுய்க்கூட்டிக்
கற்றுழம்பாலாலே அரைத்துக்கட்டி

ஒச்சினதோர்வில்லையைத்தான் ஓட்டில்வைத்துமூடி
வுத்தமனேமணல்மறவிற் புடந்தான்பத்தே. 62

பூநாகசெந்தூரம்.

பத்தானபுடமிட்டு மேருக்கேற்றிப்
பாங்காகப்புடம்பத்துத் தீர்ந்தபின்பு
முத்தானகற்றாழும் பாலாலாட்டி
முதிராமலொருவில்லை யாகக்கட்டி
அத்தானவெளியிலே புடமேற்றிப்போடு
அரகாபூநாகஞ் செந்தூரமாச்சே
சிற்றுகவேணுமென்றாற் றினமிரண்டுபணந்தான்
தேன்கூட்டிச்சக்கரையிற் கூட்டிக்கொள்ளே. 63

கொள்ளப்பாயிருபதுநாள் சட்டையொன்றுபோகுங்
கூப்பிட்டார்சித்தரெல்லாம் வார்த்தைசொல்வார்
விள்ளப்பாலவரோடே குளிகைமார்க்கம்
வேதாந்தத்திருமூலர் மார்க்கமென்றால்
பிள்ளப்பாகம்முடைய வர்க்கமென்று
வோடுகிறகுளிகையைத்தான் கையிலீந்து
நள்ளப்பாயாருடைய வர்க்கமென்றால்
நலம்பெரியசட்டமுனி வர்க்கமென்னே. 64

நூற்பெருமை.

என்னவேயென்னுடைய நாமஞ்சொல்லி
வெடுத்ததனைச்சித்தரெல்லா மியல்பாய்ப்பேசி
மன்னவேசட்டைமுனி நாலுக்குள்ளே
வாமமென்னவென்றுசொல்லிக் கேட்டாராகில்
தன்னவேசனகாதி மூவரோடு
சபையாகக்கயிலாயத் திருக்கும்போது
பன்னவேகொங்கணரென் னூலைவைத்துப்
படியுங்கோளென்றுசொல்லிப் பகுத்திட்டீரே. 65

பகுத்திட்ட நூலெடுத்து மச்சமுனிதானும்
பாடினார்சபையெல்லாம் கேட்டுமெச்ச
வகுத்திட்டவாதத்தி லாயிரத்திலொன்று
மைந்தனேகாயசித்துக் கிதுதானூறு
நகுத்திட்டநிகண்டதுவும் பன்னிரண்டுநூறு
நவமானஞானமதில் ரண்டுநூறு
ஒகுத்திட்டலாறுபத் தைந்துநூறு
மொழிப்பில்லைசித்தருக்கா மென்றார்காணே. 66

காணப்பாயிதன்பிறகு யிருநூறுபாட்டு
கைம்முறையாய்தீட்சைவிதிப் பாடியதைப்பார்த்து
ஊணப்பாதீட்சைவிதி சத்திமார்க்கம்
உத்தமனேபூசைவிதி சிவசத்திமார்க்கம்

தோணப்பாவெட்டவெளி யாகச்சொன்னேன்
சொன்னதொருயிருநூறு பாட்டும்பார்த்து
ஆணப்பாயாணவத்தாற் சொன்னாரென்று
யரைட்சணத்திலென்னையங்கே யழையென்றாரே. 67

அழைத்துயென்னைமச்சமுனி கூட்டிப்போனா
ரப்பவல்லோஜனகாதி சித்தரெல்லாம்
குழைத்தகுருவலக்காதில் சொல்லுந்தீட்சை
கொழுப்போடாபாடினது வென்றுகேட்டுத்
துழைத்தகுருசித்தருக்கு நீரானீரோ
சொற்பெரியபூரணத்தைத் தள்ளினீரோ
பிழைத்தகுருவானாரோ சித்தரெல்லாம்
பிடும்போடாபாடினது வெனச்சொன்னாரே. 68

சொன்னமொழிகேட்டசந்து நிற்கும்போது
துடியானமூலகுரு யிருநூறும்வாங்கிப்
புன்னநல்லபாழென்றுக் கிழித்துப்போட்டார்
பாடினதோரிருபத்து யைந்துநூறுங்
கன்னநல்லசித்தருக்கா மென்றுசொல்லி
கைகொடுத்துகுறைக்குள்ளே வையுமென்றார்
இன்னபடிகண்டமுனி நூல்தான்சித்த
ரிருபத்துயைனூறு யிதுதான்பாரே. 69

கருப்புஅமைய செங்கோட்ட மகிமை.

பாரென்றுகைக்கொடுக்கச் சித்தர்மெச்சிப்
பாங்கானவெவுனத்தே யரைத்துப்போவார்
காரென்றுகறுப்பாக்கி மூலிகையைத்தானுஞ்
சாதகமாயதின்பிறகு வண்ணகற்பம்
நேரென்றுபூமியிலே குழியைவெட்டி
நினைவாகசெங்கோட்டை வெட்டிப்போட்டுத்
தூரென்றுமுழவுயரம் பரப்பிக்கீழே
சுகமாகமண்வெட்டி மேலேபோடே. 70

போட்டதின்மேல்நீர்விட்டுக் காயாமற்கட்டும்
புகழாகமூன்றுதிங்க ளழுகிப்போகும்
நீட்டதிலேகிறுவகைக் கொத்திப்பார்த்து
நேராகமண்கறுத்த பதத்தைக்கண்டு
மூட்டதிலேமுழுக்கொட்டை போட்டாயானல்
மூதண்டமாறுதிங்கள் பொருமிநிற்குங்
காட்டதிலேஜலம்விட்டு மேலேகிண்டிக்
காயாமலேழுதிங்கட் சேருமாமே. 71

ஆமப்பாவெட்டினதோர் கொட்டையானு
லசைவில்லமூன்றுதிங்கள் வித்தெல்லாம்போடு
ஓமப்பாலொட்டாதே கொட்டையானு
லோரெட்டுத்திங்களிலே வித்தெல்லாம்போடு

சேமப்பாவித்தென்ன் தெளிப்பதென்றாற்
செப்புகிறேன்நீலியொடு க்ரிசாலைகாந்தை
தாமப்பாபொற்றலையும் வல்லாரையோடு
சாதகமாய்ச்சிறியதொரு செருப்படையும்போடே.
போடப்பாகுமரிக்கண் ணேடுதானும்
புகழானநிலப்பனையுங் கொல்லங்கோவை
நீடப்பாதிருமேனி வீழிவீழி
நிலையானமுறமசைக்கி சிவனார்வேம்பு
ஓடப்பாகொடிவேலி யிதுகளெல்லாம்
ஒவ்வொன்றாய்வரிசையுடன் பயிரேசெய்து
கூடப்பாதேவிபதம் பூசைபண்ணி
சுணங்கலாய்மறந்துவிட்டாற் பயிராகாதே. 73

அவுரிமுதலான கற்பமூலிகை உற்பத்தியின்விதி.

பயிரானமூலிகைதான் முதற்றாத்திற்கேளு
பாங்காகக்கால்வாசி கருப்பேயோடும்
பயிரானமறுமாத்தி லறைவாசிகறுக்கும்
பாரப்பாமறுதிரத்தில் முக்கால்வாசி
முயிரானமறுதாத்தில் முழுவாசிகறுக்கும்
மோசமில்லைக்கறுப்பாகு முன்பெரியோர்செய்தாற்
மயிராகுங்கறுப்பதற்குச் சேர்தினையேசொல்வேன்
மைந்தனேமனமகிழக் கண்டிடாயே. 74

கண்டுகொள்ளச் சோதினைதான் கொக்கிரகுதாலுங்
கைமுறையாய் முக்கரப்பின் பன்னீர்க்குள்ளே
கண்டுமெள்ளப் பிரட்டியதைத் தேய்த்துப்பார்த்தாற்
சாதகமாய்க் காகத்தி னிறமேயாகும்
ஒன்றுகொள்ளக் கழுவியதைத் தேய்த்தாலும்போகா
துண்டவர்க்கு மயிர்க்கறுக்குஞ் சமுசயமோசொல்வீ
பண்டுகொள்ளக் கால்கறுப்பை முன்னேகொள்ளு [ர்
பாங்கான யரைக்கறுப்பை பின்னேகொள்ளே. 75

கொள்ளப்பாவதின்பிறகு முக்கால்வர்ணங்
கூசாதேமுழுக்கறுப்பைச் சண்ணித்தின்று
முள்ளப்பாகட்டையென்று கழன்றுபோகும்
உத்தமனேரோமமெல்லாந் தும்பிபோலா
மெள்ளப்பாமுந்திமுந்தி வல்லாரைகொள்ளு
விழுங்கியபின்காந்தைகொள்ளு கரிசாலைகொள்ளு
நள்ளப்பாகுமரிகொள்ளு வோமங்கொள்ளு
நலமாகச்சேரும்படி வீருக்கொள்ளே. 76

மச்சமுனி முதலானோர் உண்ட கற்பவிதி.

வீழிகொண்டமச்சமுனி யூழிகாலம்
வேதாந்தசமாதியிலே யிருந்துமுண்டார்
ஆழிகொண்டகமலமுனி கொடுவேலிகொண்டு
வடங்காதசமாதியிலே வுகந்துநின்றார்

வாழிகொண்டபிரம்மமுனி செறுப்படையையுண்டு
வாகாமல்சமாதியிலே யிருந்துபோனார்
சூழிகொண்டவாசமுனி பொற்றலையைக்கண்டு
சுகமாகசமாதியிலே யிருந்திட்டாரே. 77

இருந்திட்டார்கஞ்சாவைக் கோரக்கர்தானும்
ஏழுயுகங்கடந்தபின் பெழுந்திருந்தார்
அருந்திட்டகரிசாலை கொங்கணர்தானுண்டு
யாச்சரியம்நாலுயுகம் வாதம்பார்த்தார்
பெருத்திட்டதிருமேனி சொரூபானந்தர்
பேணியுண்டுசமாதியிலே பிரண்டுநின்றார்
பொருந்திட்டகொல்லனுட கோவையுண்டு
போகமுனிகோடிவரை யிருந்திட்டாரே. 78

கருநெல்லி உற்பத்திவிதி.

இருந்திட்டமலைதோறுஞ் சுந்தரானந்தர்
யெல்லோருங்கருப்பமதாய் செய்தமார்க்கம்
பருந்திட்டகுழிவெட்டி யிரண்டாள்மட்டும்
பாங்காகவதினிறையச் செங்கொட்டைப்போட்டு
வருந்திட்டமண்போட்டு வதின்மேலையா
வைத்தாரேகருநெல்லி கருத்தநொச்சி
கருந்திட்டகஞ்சாவுங் கொடிவேலியோடு
கைமுறையாய்வைத்தார்கள் கருத்துப்போச்சே. 79

பொய்யாமை.

கருத்திருந்தமூலிகைதான் குகைதோறும்நிற்கும்
கைமுறையாயிதுகள்ரண்டுங் கடந்தபின்பு
ஒருத்திருந்தகுளிகையிட் டோடிச்சென்று
வுத்தமனே அவரவரைக் கேட்டுவுண்ணு
மறுத்திருந்துதிருடாதே பொய்சொல்லாதே
வாயாடித்திரியாதே நமக்குக்கொஞ்சம்
பொருத்திருந்தசட்டமுனி பிள்ளைகள்தானென்றூற்
போகுமுன்னேகைகொடுத்து புகழ்செய்வாரே. 80

சாதிவிருக்ஷ முதலானதுகளின் பாலுண்ணல்.

புகழானயிதின்பிறகு முட்பனியையுண்ணு
மொக்கோடேசோதியொடு சணங்கமுண்ணு
தகளாதேரோகத்தின் விருட்சந்தானுஞ்
சாதகமாய்ச்சேர்ந்தோடு பாலையுண்ணு
துகளாகச்சுரபிவிருட்சஞ் சோமவிருக்ஷஞ்
சொற்பெரியயெருமை விருட்சமுண்ணு
இகளாமலுன்மனையைக் கண்டுதேறி
யிவளுடையநாடத்தின் கற்பங்கேளே. 81

கெந்தகபானம் நாதகற்பம்.

கேளப்பாஅண்டத்தைப் பணம்போற்பொத்துக்
கெடியானவீரமொடு கற்பூரஞ்சாரம்

தாளப்பாவெடியுப்பு சவுக்காரஞ்சுன்னஞ்
சாதகமாய்வகையொன்று பலந்தானென்று
நாளப்பாபொடிசெய்து நாலண்டத்தில்
நலமாகப்பொட்டிகளை வெயிலில்வைக்கச்
சீளப்பாகொடியதொரு வேகம்போலச்
சினத்திலேயிரண்டுக்குச் சிவமுமாச்சே. 82

ஆச்சப்பாகெந்தகந்தான் பலமேபத்து
யப்பனேகல்வத்தி லிட்டுக்கொண்டு
ஓச்சப்பாஅண்டத்தி னீர்தான்விட்டு
வுத்தமனேயண்டங்கள் தண்ணீர்பண்ணி
ஆச்சப்பாகெந்தகத்தில் மூன்றுவிட்டு
அரைத்தபின்புவெண்காரம் பலந்தான்தூக்கி
தோப்பாகமுழியதை யிதிலேபோட்டு
திறமாகவொருநாள்தா னரைத்துக்கட்டே. 83

கட்டியதோர்வில்லைதனை யாமையோட்டிற்
கடுகவைத்துவாலுகையி லேற்றிநல்ல
ஒட்டியதோர்தீயெரிப்பாய் தினந்தானென்று
வுரவாகக்கட்டியோங் கெந்திகெந்தி
மட்டியதோர்கெந்திக்குப் பாதிசூதம்
மாட்டியல்லோபொடியாக்கி வைத்துக்கொண்டு

நெட்டியதோர்பூநாகங் கழுவிப்போட்டு
நேராகப்பீங்கானிற் பிரிந்துபோடே. 84

போட்டதிலேசவுக்காரச் சுன்னஞ்சாரம்
புகழானவெடியுப்பு மூனுங்கேளு
நீட்டதிலேவகைக்குவொரு காசுதூக்கி
நேராகப்பொடிசெய்து அதிலேபோட்டு
மூட்டதிலேதுள்ளியது தண்ணீராகும்
மோந்துமந்தத்தண்ணீரை கெந்தகத்திலிட்டு
ஆட்டத்திலேமூன்று மெழுகுபோலே
மப்புறத்தேவாங்கிவைத்து யறையக்கேளே. 85

தங்கச் செம்பு.

கேளப்பாதங்கமது குகையிலிட்டுக்
கெடியானசெம்பதிலே நாலிலொன்றுபோட்டு
நீளப்பாவுருகையிலே மெழுகுதானும்
நேர்ப்பாகம்பணம்போலே வெடுத்துப்போட்டு
தாளப்பாதங்கமிடை யிட்டபின்பு
சாதகமாய்ச்சோதித் தெடுத்துநன்றாய்
நாளப்பாகுகையிலிட் டுருக்கிக்கொண்டு
நலமாகமுன்போலே செம்புகூட்டே. 86

கெந்திச் செம்பு.

கூட்டியல்லோமுன்போலே யுருக்கிக்கொண்டு
குறையாமல்முன்போலே மெழுகுபோடு
நீட்டியல்லோயிதையெடுத்து சோதித்துவாங்கி
நேராகமுன்போலே செம்புகூட்டி
ஆட்டியல்லோவுருக்கையிலே மெழுகுபோடு
யப்பனேயிப்படியே முறைகள்தோறும்
பூட்டியல்லோபத்துதரந் தீர்த்தாயானாற்
பொன்னிற்கும்செம்பெல்லாம் போகும்பாரே. 87

பாரப்பாகுகைதோறுஞ் சோதித்துவாங்கி
பதறாமலெடுத்தல்லோ முறித்துக்கொண்டு
நேரப்பாவோட்டிலிட் டுருக்கிக்கொண்டு
நிலைத்தங்கம்விராகனுக்கு பணமதிகநிற்கும்
தாரப்பாதங்கமது செம்பேயாச்சு
சாதகமாய்க்கெந்தகத்தின் செம்பினாலே
ஊரலப்பாகொள்ளாது செம்பின்வேதை
யோட்டிவைக்கஆண்பிள்ளை யுண்டோசொல்லே. 88

ஆபரணமணியும்விதி,

சொல்லியதோர்செம்பதனாற் குளிகைபண்ணு
சுகமாகவேடங்கள் பண்ணுபண்ணு

சொல்லியதோர்செம்பதனுற் குண்டலங்கள்பண்ணு
துடியானமோதிரமு மாத்திரையும்பண்ணு
சொல்லியதோர்செம்பதனுல் வளையல்பண்ணு
துலங்கியதோரருட்சட்டிற் குவளைபண்ணு
சொல்லியதோர்சித்தரெல்லா மிப்படியேசெய்து
சுகமாகவாபரணம் பண்ணினுரே. 89

கெந்திமெழுகு.

பண்ணியதோர்கெந்தகத்தின் பெருமைதன்னை
பணவிடைதானிரண்டுதிங்கள் தின்ருயானுல்
உண்ணியதோர்மண்டலத்தி லசட்டைதானு
முத்தமனேதளமாகத் தள்ளிப்போடும்
நண்ணியதோர்மேனிதன்னைப் பார்க்கும்போது
நலமாகஅருணனைப்போற் காணுங்காணும்
புண்ணியமேசெய்தவர்க் கித்தனையுமெய்தும்
பொய்சொல்லும்பாவிகட்கு யெல்லாம்பொய்யே. 90

நூல் பொய்யென்று இகழ்ந்தவர் பெருஞ்சாபம்.

பொய்யாகுநூல்கொடுத்த குருவைப்பார்த்து
புகழாமற்றூஷித்தாற் போகும்பாழாய்ப்
பொய்யாகுங்காயசித்தி வாதமுதலென்ருற்
போக்கோடேகோடிசென்மம் புலையனுவான்
பொய்யாகுந்தேவியுட வாதமென்ருற்

புகழாகயிகத்திலே பெருவயறுமாவான்
பொய்யாகுமுலகத்தே சித்தருண்டோவென்றாற்
போசனமுங்கிடையாது புலையனாமே. 91

வாலை அருள்கிடைப்பது.

ஆமப்பாமுன்னெடுத்த தங்கச்செம்பை
யடித்துநன்றாய்த்தகடாக்கி யதிலேகேளு
ஓமப்பாவாலைரசக் கெந்திகூட்டி
யுரவாகத்தகடுகொண்டு மூடிக்கட்டிச்
சேமப்பாவப்பிரேகத் தகட்டில்வைத்து
திறமாகத்தகடுகொண்டு மூடிக்கட்டித்
தேமப்பாவோட்டிலிட்டு வோடுமூடி
தீக்கொளுத்திக்கனபுடமாய் சிறக்கச்செய்யே. 92

செய்யயிலேதேவியைநீ பூசைபண்ணு
திறமாகச்சமாதியிலே யிருந்துபாரு
மையிலேதாரகத்தில் தேவிநின்று
வாய்த்துதடாவாய்த்துதடா காயசித்தி
கையிலேவாதசித்தி கெளனசித்தி
கைமுறையாய்பலித்துதடா மைந்தாவென்பார்
கொய்யயிலேயாதுதலம் வெளியாய்க்காட்டி
கூப்பிட்டுசக்கரத்தின் குறிசொல்வாளே. 93

சொல்லியதோர்புடமாறிக் குளிர்ந்தபின்பு
சுகமாகப்பூசித்து யெடுத்துப்பாரு
மல்லியதோர்பொடியாக நெருங்கிநிற்கும்
மைந்தனேயிதையெடுத்து வைத்துக்கொண்டு
ஒல்லியதோர்பொழுதுக்கே குன்றியுண்ணு
ஓங்கியதோர்மண்டலத்தி லொளியேமீறுஞ்
சல்லியதோரிருட்டறையி லிருக்கும்போது
சந்திரசூரியனே யென்பார்காணே. 94

பூசைசெய்யு முறை.

காணப்பாபூசைசெய்ய முறையைக்கேளு
கைமுறையாய்ச்சுவடிவைத்துப் பூசைசெய்வார்
பூணப்பாசிலபேர்தான் தீபம்வைத்துப்
புகழாகபூசைசெய்வார் பெண்ணைவைத்தும்
நாளப்பாசக்கரத்தைப் பூசைசெய்வார்
நம்முடையபூசையென்ன மேருபோலே
ஓணப்பாநாற்பத்து முக்கோணம்வைத்து
உத்தமனேபூசைசெய்வார் சித்தர்தானே. 95
தானென்றமேருவைத்தான் பூசைசெய்வார்
சாபமிட்டாலண்டரண்டம் தீயாவேகுந்
தேனென்றமேருவுக்கு தசதீட்சைவேணுஞ்
சிறுபிள்ளையாமொருவர் தீண்டப்போகா

வாரனென்றமேருவைத்தான் பூசைசெய்தோம்
வாய்திறந்துஉபதேசஞ் சொன்னாகிற்
கோனென்றவாதசித்தி கெளனசித்தி
கொள்ளையிட்டானவன்சீஷன் கூறினனே. 96

கூறியதோர்வாலையுட மூன்றெழுத்தைக்கேளு
குறியறிந்துபூசைசெய்து பின்புகேளு
மாறியதோர்திரிபுரையி னெட்டெழுத்தைக்கேளு
திறமாகபுவனையைநீ பூசைபண்ண
தேரியதோர்புவனையுட யெழுத்தைக்கேளு
திறமாகபுவனையைநீ பூசைபண்ணு
ஆறியதோர்யாமலையி னாறெழுத்தைக்கேளு
யவளுடையபதம்போற்றி பூசைபண்ணே. 97

பண்ணியபின்யாமலையி னைந்தெழுத்தைக்கேளு
பண்பாகதீட்சையைந்து முடிந்தபின்பு
விண்ணியதோர்வாசியென்ற யோகத்துக்கு
மைந்தனேவைத்து பிராணயாமந்தீரு
கண்ணியதோரித்தனையு மறிந்திருந்தார்
காயசித்திவிக்கினங்க ளில்லையில்லை
உண்ணியதோருலகமென்ன சித்தரென்ன
வுத்தமனேவிட்டகுறை யெடுக்குங்காணே. 98

காயசித்திசெய்ய வயதினளவுகூறல்.

காணப்பாகாயசித்தி பண்ணும்போது
காட்டுகிறேன்வாலையிலே தின்றாராகிற்
பூணப்பாவாலையைப்போ லிருந்துவாழ்வார்
புகழாகயௌவனத்தே தின்றாராகிற்
ஊணப்பாயவ்வண்ண மொன்றும்வாழ்வார்
வுத்தமனேமுப்பதிலே தின்றாராகில்
தோணப்பாமுப்பதுபோ லென்றும்வாழ்வார்
சுகமாயையம்பதிலே தின்றாற்கேளே. 99

கேளப்பாயைம்பதுபோய் பதினாறுகும்
கெடியானவெண்பதிலே தின்றாரகில்
வாளப்பாயிருப்பதுபோ லென்னாளுந்தான்
வாங்காமல்நின்றுவிடும் வளர்த்திகூடா
நாளப்பாயிதின்மேலே வளர்த்திடிஞ்சில்
நரம்பெல்லாந்தளர்ந்துபோங் கடினம்பாரு
வேளப்பாயெரித்தசிவன் சொன்னமார்க்கம்
வெவ்வேறும்சித்தர்சொன்ன வித்தைபாரே. 100

நூலினருமை.

பாரப்பாகாயசித்தி செய்யுமார்க்கம்
பஞ்சிட்டுப்பாரம்வைத்துப் போலேசொன்னேன்

ஏரப்பாசித்தர்சொன்ன கற்பத்துக்கு
மென்னுடையநூலுக்கு மிசைந்துபாரு
தூரப்பாதொட்டல்லோ முடிவரைக்குஞ்சொன்னேன்
சொல்லாதேவொளித்திட்டார் சித்தரெல்லாங்
காரப்பாகுருபதத்தைக் கார்த்தார்சத்தி
காயசித்திபாடியதோர் காட்சிமுற்றே.

சட்டமுனி கற்பவிதி-100

முற்றிற்று.

சிவமயம்.

எண்பத்தைந்தாவது,

உரோமரிஷி சூத்திரம்-100.

மூலவட்டமானகுரு பாதங்காப்பு
முத்திக்குவித்தான முதலேகாப்பு
மேலவட்டமானபரப் பிரமங்காப்பு
வேதாந்தங்கடந்துநின்ற மெய்யேகாப்பு
காலவட்டந்தங்கிமதி யமிர்தப்பாலைக்
கண்டுபசியாற்றிமனக் கவடுநீக்கி
ஞாலவட்டஞ்சித்தாடும் பெரியோர்பாதம்
நம்பினதாலுரோமனென்பேர் நாயன்றானே. 1

தானாகமுன்னுரைத்த ஐந்நூற்குள்ளே
தவறாமல்பாடிவிட்டேன் யோகமார்க்கம்
தானாகும்வாதத்துக் காதியுப்பைச்
சமுசயங்களில்லாமல் சொல்லிவைத்தேன்
தானாகும்வழலையென்ற உப்பின்வித்தை
தன்னுக்குள் தன்னினத்தைத் தாக்கும்பாரு
தானானகருவுண்டு சுத்தகெங்கைச்
சலமதனைமறைத்துவைத்தேன் தன்மைபாரே. 2

பாருநீவழலையென்ற வுப்புமூன்றும்
பரிபாஷையில்லையடா கைபாகங்கள்
சேருநீபூதபஞ்ச தரணமான
தீட்சையுடபாகநன்றாய் செப்பிப்போட்டேன்
காருநீசுத்தகெங்கை மறைப்பேதென்றால்
கருவறியுஞ்சித்தருக்காய் பயந்துவிட்டேன்
சேருநீஐநூற்றின் பொருளையாய்ந்து
செப்பிவைத்தஐம்பதுக்குள் தெளிவுபாரே. 3

தெளிவென்றாலதின்சூட்சங் காணப்போமே
சேகரமாய்ப்பதினாறு சேர்த்துப்பாரு
குளிவென்னமுந்நூல்தா னூறும்பாரு
குளிதெரியுஞ்சூத்திரமோ ராருகாண்டம்
தெளிவில்லையென்னூற்கு நந்திசொன்ன
நிகண்டல்லால்பன்னிரண்டும் நிகரொவ்வாது
களியினுடபோக்குமச்ச முனியென்னூற்றில்
கபடாகக்காட்டிவைத்தார் கருத்தோணாதே. 4

தோணாமல்பாடிவிட்டார் சித்தரெல்லாஞ்
சூத்திரங்களறியவென்றால் குருதான்வேணும்
வீணாகப்போகாது அதிகபுத்தி
வினையாளர்காண்பதல்லால் மற்றோர்க்கேது
கோணாமல்தோணுமடா இந்தநூலில்

கொட்டினேன்வயித்தியமும் வாதயோகம்
காணுமலலையாதே நினைவாய்ப்பாரு
கைபாகமைந்நூற்றிற் கண்டிடாயே. 5
கண்டதென்னஉலகத்தில் வயித்தியமையா
கைகண்டபலன்காணுஞ் சரிதைமார்க்கம்
விண்டனப்பாநீற்றினைத்துக் காதிசிங்கி
விட்டுவிட்டால்வைத்தியமும் வீணாய்ப்போகுந்
தொண்டுபண்ணிகுருவினுட பாதம்போற்றி
சொல்லுவாரில்லாவிட்டா லென்னூல்சொல்லும்
சண்டையிட்டுப்பேசாதே தியங்கிமார்க்கஞ்
சாற்றினேன்பொதிகைமுனி தயவுதானே. 6
தயவுவைத்துச்சொல்லவில்லை வெகுவாய்ச்சொன்னார்
தனையறிந்துகொங்கணவர் சரக்குவைப்பில்
நயமிகுத்துச்சொல்வதுபோல் நிமிளையொன்று
நாட்டினார்துருசுக்குக் குருதானென்று
சுயம்வாக்குநன்றாக நடக்கும்வாக்குச்
சொல்லதிலேநடுங்காரத் துறையொளித்தார்
செயமிகுந்தபோகரிஷி னூலிற்சொன்ன
திருஷ்டாந்தங்களுக்கிடையுந் திறம்போகாதே. 7
திறம்போகாதென்றால் குப்பிக்கேற்றி
தீயெரிக்கச்செல்லாறல் தீநீர்தள்ளி

குறுப்பாடினாப்போலே குரைத்தாரையா
குறுக்குவழிசெல்வதிலே மோசமாகும்
அறந்தழைக்குந்திருமூல ராயிரத்தில்
அவையடக்கம்சிங்கிவித்தை யார்க்குந்தோணாப்
பரம்பரையாம்வந்தசித்தர் பாதம்போற்றிப்
பாடுகிறேன்சிங்கிவித்தை பலிக்குந்தானே. 8

பலிக்கவென்றால்சிங்கிக்கு நாதபேதம்
பாடினாதனாலே ஆவதென்ன
கலக்குகின்றதங்கசித்தி லிங்கஞ்சேர்த்து
கலந்ததனாற்சிங்கியென்ன பேருமாச்சு
வலிக்கவென்றாலிதின்பெருமை வெகுசாயுண்டு
வாதமுண்டுவயித்தியமுண்டு வழிபாடுண்டு
மெலிக்குடையசிங்கியொரு பலந்தான்வாங்கி
விருதானகல்வத்தில் பொடித்திடாயே. 9

பொடித்திட்டுப்பீங்கானில் பழச்சாறாட்டிப்
பொடிமணலாய்ரவிமுகத்தில் வைத்துக்கொண்டு
ஒடித்திட்டருச்சியினால் கிண்டிக்கிண்டி
ஓரேழுதினம்ரவியில் வைத்தபோது
குடித்திட்டபொடிகளெல்லா மாடைப்போலே
குணமாகக்காட்டுமடா பழச்சாறுவேகர்

தடித்திட்டபழச்சாறு முன்விடும்போது
சார்வாகப்படியரைதான் தாக்குவாயே. 10

தாக்குவதாலவிரூடு மெத்தவானல்
சாரெல்லாமோரேழு தினத்தில்வற்றும்
மார்க்கமாம்ரவிமதியின்முகங் கண்டாற்சாரு
வற்றுமட்டுங்காய்ந்து வெண்மையாகும்பாரு
தீர்க்கமாம்சூரந்தசிங்கி பலந்தானென்று
சீனமென்றவெள்ளியொன்று பூரமொன்று
கார்க்கவேசாரமொன்று கெவுரியொன்று
கண்டுபார்நாலுங் கழஞ்சிதானே. 11

கழஞ்சானதிவைநாலுஞ் சிங்கிலியிலேசேரு
கல்வத்திலிவையைந்தும் பொடித்துக்கொண்டு
விளைஞ்சானசவுக்காரமொன்று திராவகத்தில்
வெள்ளையொன்றுகிளிஞ்சிநீறு சங்குச்சுன்னம்
நளைஞ்சல்லோபொடித்திடுவாய் விராகன்ரெண்டு
நுண்மையாய்மொளமொளனக்கொதிக்குந்தண்ணீர்
கிளிஞ்சல்லோகுருச்சுக்கால் படியாந்தண்ணீர்
கெணாதன்தனக்குவிட்டுக் கிளறியாட்டே. 12

ஆட்டுவாய்சேர்த்தசரக் கெல்லாமாள
ஐயனேதிராவகந்தான் வேகமெத்த
மூட்டுவாயிருசாம மரைத்துக்கொண்டு

மூசியாமல்மயினபத மாக்கிப்போடு
கேட்டுவாய்கும்பிடுத லண்டத்தோருங்
கெடிபெற்றசுண்ணமப்பா ஆதிகொண்டு
பூட்டுவாய்திராவகத்தில் குழைந்துநீயும்
புத்தியுடன்குப்பிக்குள் பூசுபூசே. 13

பூசியேகாயவைத்து மயின்மெல்லாம்
புகழானகுப்பியை திட்டம்போடு
தேசியெனுமதிகனத்த தாழியொன்றில்
சிறுமணலாயரைவரசி மட்டுங்கொட்டி
வாசியென்றகுப்பியினில் நடுவேவைத்து
வளப்பக்கல்கொண்டுகுப்பி வாயைமூடு
தோசிகளேயினிமேலுந் தெரிந்திடாதே
சுருதிமனோன்மணித்தாயைத் தொழுதுபோற்றே. 14

போற்றுவதுமுத்தீயு மூன்றுசாமம்
பொங்காமல்வெடியாமல் பூண்டுபாரு
ஆற்றிவிடுகும்பமது நாளில்தானு
மப்பனேபதங்கமென்ற குருத்தாணியா
நீற்றினத்துப்பிதுவாகி துருசுக்காதி
நீரூட்டால்சுட்டலைந் துருட்டுவாதி
சாஸ்திரந்தானென்னசெய்யும் புத்தியில்லாச்
சண்டாளர்பொய்யெனவே தள்ளுவாரே. 15

தள்ளுவதுமவள்பேரிற் குற்றமில்லை
சவுக்காரவழலைதான் மறைத்ததாலே
வெள்ளையென்றசிவனுப்பை மறைத்ததாலே
வெடியுப்புகட்டுவது விள்ளாதாலே
கொள்ளியென்றபூநீர்தான் போனதாலே
குடதிசையிற்கல்லுப்பு காணுதாலே
துள்ளியென்றசுத்தஜல தீட்சைமார்க்கஞ்
சொல்லாமல்போனதினால் தோணுதென்றே. 16

தோணுகின்றசித்தர்கள்தான் கூடிக்கொண்டு
சூட்சகாரணத்தாலே உப்புமார்க்கம்
காணுகின்றபலபாஷை நாமத்தாலுங்
கபடாகமுன்பின்னு யுகமையாலும்
வேணுமென்றேஅவரவர்கள் நூல்கள்தோறும்
விளம்பினார்பூராய மெத்தமெத்த
ஊணுகின்றஉப்பல்லால் வேறொன்றில்லை
யொளித்தென்னவழலையொன்றுந்தீட்சையொன்றே.

தீட்சையென்றும்வழலையென்றுஞ் சூட்சமாகச்
செப்பினார்பாரதி உலகவாதி
மாச்சலுண்டுமனம்புண்ணாய் சாஸ்திரத்தை
மனம்வெறுத்தாற்புத்திபண்ணி வருத்தினாக்கால்
நீச்சென்றகடுநீச்சு நீஞ்சலாகும்

நெட்டிலேதிரியாதே அடுத்துப்பாரு
வாச்சுதேவழலையென்ற உப்புதானும்
வகையானசரக்குகளின் மார்க்கந்தானே. 18

தானென்னசிங்கியல்லோ குருந்தனுச்சு
தாரணியில்லாதமுந்தக் குருவிலாச்சு
ஏனென்றகுருவாலே வயித்தியந்தா
னிலக்குண்டோ ஆனாலு மிசைந்துகேளு
கோனென்றதாம்பிரத்தைத் தகடுதட்டி
குருவிலொருபணம்பூசிக் குகைக்குள்மூடி
கானென்றகுக்கிடத்தில் நீறுப்போடு
களிப்புற்றசெம்புநிறங் காட்டொண்ணுதே. 19

ஒண்ணனபற்பத்தைத் தேனில்கொள்ள
ஓடுகின்றமேகமெல்லா மொடுங்கிப்போகுங்
கண்ணனசுக்கிலத்தைக் கட்டிக்கொள்ளுங்
காயபலமுண்டாகுங் கனகம்போலே
வெண்ணையொருகழஞ்சிக்குப் பணந்தான்பற்பம்
விரவினல்தைலமதை விளங்கிப்போடும்
புண்ணியமேசெய்தவருக் கட்டிக்கொள்ளும்
புசுண்டனுக்குமெந்தனுக்கும் வாதுண்டாச்சே. 20

வாதுவந்ததெதினலே யெந்நூற்குள்ளே
மார்க்கமெல்லாம்பாடிவிட்டேன் மனிதர்க்காகச்

சாதுவென்றதிருமூல ரெங்தனூலைத்
தம்முடைய்குகைக்குள்ளே மறைத்துபோட்டார்
ஏதுவென்றஅதற்கீடா யைம்பதுண்டா
ளிகத்திலேசொல்லிவைத்தே னேறுமார்க்கஞ்
சூதுகொண்டுபார்த்திருந்தால் தோயுந்தோயும்
சொர்னமதைச்சுத்திசெய்து துட்டாவாங்கே. 21

வாங்கியந்தக்குருவிலொரு பணந்தான்பூசி
வான்பிரமியிலையரைத்துக் கவசங்கட்டிப்
பாங்குபெறக்குக்குடத்தில் போட்டாயானால்
பசலைநிறம்போகாமல் பற்பமாகுங்
தூக்கியேதிரியாதே திருபலாதி
சூரணத்திற்கொடுத்துவிடு மண்டலந்தான்
காங்கைக்ஷயரோகமத்தி மூலச்சூடும்
கிறுணிகுன்மம்பீலிகையுங் கடலிற்போமே. 22

கடல்போகும்வெள்ளியொரு பணந்தான்பூசிக்
கானகத்திநீராலே சுத்திபண்ணித்
திடமானகுருவிலொரு பணந்தான்பூசித்
திருமேனிதனையரைத்து கவசங்கட்டிப்
புடமேதுகுக்குடத்தில் நீறிப்போகும்
பூசைதனைமறவாதே புண்ணியந்தா

னுடலெடுத்தால் காமவினைக்கீடாகாதே
உறுதிபற்பத்தனுபான முறைக்கிறேனே. 23

உறைக்கிறேன் சஞ்சீவிலேகியத்தி
லுண்டுவரமண்டலத்தில் கண்ணோவில்லை
யுறைக்கிறேன்குடல்வாத மேற்றதில்லை
யெலும்புருக்கிப்பெரும்பிளவை யெப்போதுமில்லை
நரைக்கிறரோமமில்லை பித்தமில்லை
நாவில்வருரோகமெந்த நாளுமில்லை
திறைக்கிறதோருடலில்லை மேகமில்லை
சிவசிவாவிதன்பெருமை செப்பொணாதே. 24

செப்புவேன் அயத்தகடு லேசாய்த்தட்டி
சிறுநீரிலாதபழச் சாற்றிலாதல்
துப்புறவாய்செய்துகொண்டு தகட்டின்மேலே
துருசிகுருவானசூட்சந் தன்னைச்செய்து
அப்படியேபணவிடைதா னெடுத்துப்பூசி
ஆமணக்கினிலையரைத்துக் கவசங்கட்டி
உற்பனமாய்க்குக்குடத்தில் நீரிற்போட்டு
வோகோகோவிதன்பெருமை யுறுதிதானே. 25

உறுதியென்றலோகபற்ப மண்டலந்தான்
உத்தமனேகரிசாலை லேகியத்தில்
பருதிமதிரெண்டிலுமே கொண்டாயானால்

பாண்டுவொடுமூலமெல்லாம் பறந்துபோச்சு
குருதியென்றதாதுபுஷ்டி யூறலாச்சு
குணக்கேடுசெய்கின்ற சோகைபோச்சு
சுருதியிந்தப்படியேதான் கிரந்தம்செய்ய
சோகைகாமலையெல்லாந் தோற்றுபோச்சே. 26

போச்சென்றுவிடுக்காதே கருவங்கத்தை
புளிப்பானமோரிலே சுத்திசெய்து
ஆச்சென்றகுருவினிலே பணந்தான் தூக்கி
அருளானவங்கத்துக் கப்பிப்போட்டு
காச்சென்றகருஞ்சீகை யரைத்துக்கொண்டு
கவசமிடுகருவங்கக் கட்டிப்போகும்
மூச்சொன்றுமோடாது குக்கிடத்தில்
முழுவெள்ளையாகுமடா மூர்க்கமென்னே. 27

மூர்க்கமிந்தநீறுலே களங்குசெய்தால்
முன்பின்னுயஞ்சாறு மாற்றுக்காணுஞ்
சேர்க்கையடாபறங்கியடா பட்டைத்தூளி
தின்னுவரமண்டலத்தில் தீரும்நோய்கள்
நீர்க்குழியில்புண்ணுறும் வெட்டைதீரும்
நீர்செரிப்புக்காலெரிவு நின்றுபோகும்
ஊர்க்குளுனக்கீடாரோ ரொருவரில்லை
உத்தமனேவங்கத்தி னுண்மைதானே. 28

உண்மையிந்தப்படிதானே வெள்வங்கத்தை
உண்டுபண்ணிமண்டலமே கொண்டாயானால்
பண்மையிந்தநீருலே மேகமெல்லாம்
பறக்குமடாஉலகத்தில் பண்டிதந்தான்
தண்மையல்லோவேணமடா தேகரோகந்
தாதுவறியாதவர்க்கு மருந்தேதுக்கு
வண்மையினூர்செய்துநெடு நாள்பழக்கம்
வந்தல்லோவிம்மூன்றும் வாய்க்குந்தானே. 29

வாய்க்கவேசிறுநாகந் துத்தநாகம்
வாங்கிவந்துகண்டுயினி லுறுக்கியேதான்
காய்க்கவேயிலுப்பைநெய்யில் சுத்தியாச்சு
தகடுஒருவிரல்கனமாய்த் தட்டிக்கொண்டு
சீக்கிரமாய்குருவிலொரு பணந்தான் தூக்கி
சேர்த்துவிடுநாதத்தின் சீறல்போகும்
பேய்க்குமட்டிக்காயரைத்து கவசங்கட்டிப்
போசாதேபத்தில்வைத்து பேணிச்செய்யே. 30

செய்யவேநாகபற்பந் தெளிவுமெத்த
திரிகடுகுலேகியத்தில் மண்டலந்தான்கொள்ள
அய்யமில்லைநாசமில்லை மூலத்துள்ளே
ஆணிமுளையில்லையடா மேகத்தாலே
குய்யமதில்பிறந்துபவுத் திரங்கள்புற்று

குன்மமில்லைபித்தமில்லை தாதுபுஷ்டி
தையலரைக்கைவசமு மாக்கும்பற்பம்
தாரணியில்சொல்லிவிட்டேன் தனதுபாரே. 31
தனதானபூமியிலே உப்போமெத்த
தன்னிலேமூன் றுவுப்பு சவுக்காரந்தான்
மனதானபேய்க்குரங்கு வேனென்றெண்ணி
மாணுவார்தினமுடிந்த மார்க்கம்பாரார்
கனமானபொன்னென்று பணிதிவேறே
கம்மாளன்தான்செய்த கதையைப்போலே
சினமானதேசாதி பாஷைமெத்த
செப்புவார்வார்த்தையெல்லாந் திரட்டினுரே. 32
திரட்டினுருப்புக்கு வெகுநாமங்கள்
தேசாதிவழக்கமல்லோ சித்தர்சொன்னூர்
மருட்டினுரென்றுசொல்லி உலகமாடு
மதிமயங்கப்பலநூலின் வகைதோணுமல்
உருட்டினதேயல்லாமல் ருய்க்குத்தேங்கா
யுடைக்கறியுமோவிதுதா னுண்மைஅய்யா
குருட்டுநாயீசனுக்குத் தாவுகின்ற
குணமாச்சுஆனைகண்ட குருடர்தானே. 33
குருடனுக்குபால்நிறந்தான் கொக்குபோலே
கொண்டுவந்துகாட்டஅவன் தடவிப்பார்த்து

புருட்டாசிக்குழந்தைவித்தை விழுங்கினுக்கால்
பிழைக்குமோவென்றுசொன்ன புதுமைபோலும்
கெருடனுக்குஈப்பறவை காட்டினாப்போல்
கிஞ்சியமாம்புத்தியுள்ளோர் வேறுண்டென்பார்
திருடனுக்குத்தோணாது வழிலேமார்க்கந்
திராய்த்தகடுலேசாக செய்திடாயே. 34

செய்திட்டதகடுதன்னைப் பழங்காடிக்குள்
திரமாகக்காய்ச்சியதிற் தோய்க்கச்சுத்தி
மெய்த்திட்டமாய்க்குருவி லொருபணந்தான் தூக்கி
விரவிவிடுதகடுகட்டி மேலுங்கீழுங்
கைதிட்டமாஞ்சிலையி னொச்சிவேரைக்
கல்வத்திலரைத்தெடுத்து கவசஞ்செய்து
வைத்திட்டகுக்குடத்தில் பற்பமாகும்
மாசலத்திலிருந்தமுறை மகிமைதானே. 35

மகிமையென்றவெண்கலம் பித்தளைபிரண்டும்
வாங்கிவந்துலேசாகத் தட்டிக்கொண்டு
பகலவனைக்கோல்பழுக்க வெதுப்பித்தேசிப்
பழச்சாற்றில்தேய்த்திடவே சுத்தியாகும்
சகலகுருவானதிலே பணந்தான் துருசித்
தடவிவிடுஞ்சகத்தின் தகட்டின்மேலே

குகைமுறையாய்க்குக்குடத்தில் போடும்போது
குறுநீற்றுப்பற்பமென்ன குணந்தான்காணே. 36
குணமானபற்பத்தைத் தேனிற்கொள்ளக்
குன்மம்பீலிகையெல்லாங் குடியோடிப்போகும்
க்ஷணநேரமாலு மோடுங்காமம்
சன்னதமாம்தாதுவிர்த்தி தானேயுண்டாம்
பணமானதென்னசெய்யும் பாதாளத்தில்
பாயுமென்றசொல்போலே இந்தபற்ப
மணமாகுநரைதிரையு மாறிப்போகும்
மகத்தானகுருவென்று மதிக்கலாமே. 37
மதிக்கலாமப்பிரேகம் நிமிளைரெண்டு
மகிமைமெத்த வுபாசகத்தில்
துதிக்கலாங்கோசலத்தில் சுத்திசெய்து
சுருதிபெற்றகுருவிலொரு பணந்தான்தூக்கி
விதிக்கலாமிருபுறமுந் தடவிக்கொண்டு
வெண்குன்றிமணிவேரைக் கவசங்கட்டிக்
கதிக்கவேகுக்கிடமாய்ப் போட்டபோது
கனமானபற்பமிது கண்டுகொள்ளே. 38
கொள்ளடா அமுதாதிலேகியத்தில்
கொண்டவர்மண்டலத்தில் தீருநோய்கள்
கள்ளடாபோலிருக்கு மஞ்சள்கழிச்சல்

காந்தல்பாரதாப நீரிழிவுதீரும்
விள்ளடாபோகாது நீர்ச்சிறுத்து
மேலேறுஞ்சூலைமுதல் வீக்கந்தீருந்
தள்ளடாபெண்மாய்கை மூன்றுதிங்கள்
சதித்துவிடுதேகமென சவிக்கியமாமே. 39

ஆகுமேசூதமொரு பலந்தான்வாங்கி
அரைத்துவிடுசெங்கல்தூள் மஞ்சள்தூளில்
போகுமேயெலிகாரன் கெந்தியீயம்
போக்கிவிட்டாலதுதானே பிறந்தசுத்தி
யேகுமேசுதம்பீங் கானிலிட்டே
எடுத்தகுருவதிலொருதான் பணந்தான்போடு
வேகுமேகிறுகிறுத்துப் பொங்கிமிக்க
விரைந்துவிடுஞ்சூதபற்பம் வியாதிக்காமே. 40

வியாதிபோய்வழிக்கியரா தாளிதன்னில்
விருதானபற்பமதை மண்டந்தான்
பயாதியுடன்குணம்பார்த்துக் கொண்டாயானால்
பறக்குமேமேகமிரு பதுந்தானப்பா
கயாதிகுணம்வாயில்வந்து கட்டினுக்கால்
துற்றிவிடத்தனைவேறு கொப்பளிப்பாய்
தயானீயேயென்று செகமுன்னைவாழ்த்துஞ்
சாதிலிங்கபற்பத்தைச் சாற்றுவேனே. 41

சாற்றுவேன்சாதிலிங்கங் கழஞ்சிநாலு
 தனிசுரசங்கொளுந்தாரை சாற்றுவாங்கி
ஊற்றிடுகலசமதி லிங்கந்தன்னை
 உச்சிதமாய்த்தோளாந்திர மாகதூக்கிப்
பார்த்திருக்கத்தீயெரிப்பாய் சாறுவார்த்து
 பதங்கண்டுஇறக்கிவிடு சத்தியாச்சு
தீர்த்துவிடுகுருவிலொரு பணந்தானையா
 சிறுநெருஞ்சிக்கவசமிட்டுப் புடஞ்செய்வாயே. 42

வாய்க்கொள்ளைப்பேசினல் வருமோவாதம்
 வாசிதனைச்சிலவழித்தால் வருமோயோகம்
காயில்லாபழமாமோ வேதமார்க்கங்
 காலடக்கமில்லாட்டால் ஞானமாமோ
தாயில்லாப்பிள்ளையுண்டோ உலகவாசந்
 தழுவுகின்றகுறிபோலே சமாதிதானுஞ்
சேயனுக்குச்சொன்னதிஞ லொன்றுமில்லை
 பிடரிவழிமார்க்கத்தைப் பேசொண்ணுதே. 43

பேசினதுமுன்னுரைத்த ஐந்நூற்குள்ளே
 பேசிவைத்தேனதிஞலே மறைந்தசித்தர்
காசினியில்சட்டைமுனி தீட்சைக்குள்ளே
 கறுப்புமில்லாமல்வெளி காணச்சொன்னர்
மோசமென்றுதிருமூலர் கிழித்துப்போட்டார்

மூலகுருதர்க்கமெல்லா மோசக்காரர்
பாஷையினுல்பாடிவைத்தார் நூல்கள்தோறும்
பற்றிநின்றுபார்த்தாலும் பனிரெண்டாண்டே 44
ஆண்டுபனிரெண்டுக்கும் வேறேசித்த
மாகாமல்சேகரித்துப் பலநூலெல்லாம்
பூண்டிருந்துப்பார்த்தால் குருத்தானுகிப்
புத்தியெனுமறிவதினா லேதுசெய்யுந்
தூண்டுவதுசொர்க்கபத மடைந்தாப்போலே
சுளிக்கிலேயிதுதோற்றுந் தோற்றுமப்பா
மாண்டதினுல்பலனென்ன ஞானமென்ன
மாணமடைந்தாற்போலே மனிதர்வாழ்வே. 45
மனிதரெல்லாமரண மடைந்தார்களென்று
மனதிரங்கிஇந்நூற்றில் வழியாய்ச்சொன்னேன்
சனியனைப்போல்சித்தரெல்லாங் கூடிக்கொண்டு
சமாதிக்குளடங்கிவிட்டார் சட்டைநாதர்
கனிவுவந்துசொன்னதையுங் கிழித்தாரையோ
கன்ருவிகன்ருவி யென்னசொல்வேன்
அனீதமாய்ப்போகுதையோ மனிதர்வாழ்க்கை
ஆனாலும்புத்தியில்லை சண்டாளர்க்கே. 46
சண்டாளர்பெரியோரை அடுத்துக்காரு
சாஸ்திரத்தில்விநயம்வைத்துத் தாக்கிப்பாரு

பெண்டாட்டிப்பிள்ளையுட கழுத்தைக்கட்டிப்
 பிதற்றுகிறாய்போனவுயிர் கொடுப்பாளோசொல்
திண்டாட்டம்பண்ணாதே யுனக்கேபுண்ணியஞ்
 சேரடாவளையினுள்ளே சாரப்பாம்பைக்
கண்டாக்கால்சந்திரனு மொடுக்கமாவான்
 கவசமிடசாதிலிங்க பற்பமாச்சே. 47

ஆச்சப்பாலிங்கபற்பஞ் சூடுமெத்த
 ஆவின்பால்சருக்கரையாச் சேர்த்துக்கொண்டு
தோச்சுண்ணமண்டலத்தில் மேகவெட்டை
 சூலையொடுசன்னியெழு தோஷந்தீருந்
தீச்செய்யாமல்லாண்டு மூலத்துள்ளே
 சிக்கிநின்றவாயுவெல்லாந் தீருந்தீரும்
காச்சல்குளிரண்டுமாறல் கண்டமாலை
 கன்னத்தில்சுழியெழுதல் கடந்துபோமே. 48

கடந்துபோமிக்குருவில் வீரம்பூரங்
 கானத்திப்புழுகோடு சேருமாகில்
துடந்துபோஞ்சரக்கெல்லா மணிபோலாடுஞ்
 சுகமானஉபசரங்க ளீசமாகும்
படர்ந்துமணிகளங்காகுஞ் செந்தூரித்துப்
 பாச்சினல்வேதையென்ற பரிசுமாகும்

விடந்தானேசிங்கமவ லோகத்துக்கு
வீரனென்றுசித்தரெல்லாம் விளம்பினாரே. 49

விளம்பினேன்சிங்கியினால் செந்தூரபற்பம்
வேணபடிசெய்துகொண்டு உலகத்துள்ளே
பழம்பிணிகள்கொண்டவர்க்கே மருந்தேயீந்து
பரிகாரஞ்செய்துவரப் பாவம்போச்சே
தளம்பெல்லோதிரியாதே கியாழகற்பந்
தயிலசூரணகிருதஞ் சகலத்துக்கும்
உளம்பிமிக்கவிக்குருவில் காணிசேரில்
உசிதமடாதுருசுகுரு உறைக்கிறேனே. 50

உரைத்தவகையேதென்றால் குருதானென்று
உயர்ந்திட்டவீரமொன்று பூரமொன்று
துரைத்தனத்தார்பூசுகின்ற புழுகதொன்று
சுருக்காகமத்திக்க துருசுகப்பி
யெரித்துஅண்டத்தின் சுன்னத்துள்ளே
என்மகனேகொடுஞ்சுன்ன மிதுக்குப்பாதி
விரித்துசுன்னஞ்செய்ததுபோல் சவுக்காரத்தை
மிளகளவண்டத்துடனே கூட்டியாட்டே. 51

ஆட்டிவிடுஅண்டநீர்த் தெளிவினாலே
அடைதட்டிசுன்னத்தி லெரித்துவாங்கு
பாட்டிலென்னபலியாதே வுற்றுப்பார்த்தால்

பலிக்குமையா அக்குருத்தான் பட்டபோதே
ஊட்டிவிக்கும்ரசமதிலே கட்டிப்போச்சு
ஒருகாற்றுகிலும்நிசமாய்க் காணலாச்சு
வீட்டிலிருந்தாயிழையைக் கொஞ்சிக்கொஞ்சி
விளையாடவோவுரைத்தேன் விளக்குமாறே. 52

மாறடா துருசுக்கு சவுக்காரத்தை
வளமானகெந்திக்குப் பூசியூது
நீறடா சுண்ணும்பு மிந்தச்சுன்னம்
நேரானசூதகத்தை மணிபோலாட்டுங்
கூறடா இம்மணிக்குப் பாரையுப்பைக்
கொண்டுவந்துக்கவசமிட புடந்தான்பத்து
தீரடாச்சவ்வாது காரமிட்டு
சேர்ந்திருக்கமணியென்ன சிவத்தின்கூறே. 53

சிவத்துடன் தங்கமொன்று காரமொன்று
சேர்த்துருக்கிச்செந்தூரம் செய்தாலையா
அபத்தமில்லைகாவிக்கு நிலைக்குஞ்செம்பொன்
அலையாதேசாண்வயிறு அகலமோடா
குவித்திருக்கவேணுமோ மலைபோல்தங்கம்
கொண்டமனையாட்டியர்க்கோ கூத்தியார்க்கோ
தவத்தைஅனுசரிப்பார்க்குச் சொன்னவாதந்
தலைதெரித்துப்போகாதே சாரத்தாட்டே. 54

சாரத்திற்குருப்பூசி யூதுவூது
   தந்தம்போல்கட்டுமடா தவசிசுன்னம்
வீரத்திலேரிணுல் மெழுகாய்ப்போகும்
   வேதைசொல்லவேணுமோ விருதாமாடே
தூரத்திலலையாதே அடுத்துப்பாரு
   சுணையானவெடியுப்பு சுன்னஞ்சுன்னங்
காரத்தைக்கண்டாலு மாங்காரந்தான்
   கட்டுமடாவில்லாட்டால் கடினந்தானே. 55

கடினமென் றுந்தள்ளாதே துருசுசுன்னங்
   கண்டதிணுல்சித்தரெல்லாஞ் சொல்லிவைத்தார்
படினமதுக்கேதென்றால் வழலையாதி
   பண்ணிட்டால்சிங்கியிலே பலிக்குஞ்சுன்னஞ்
துடிமிகுந்தகண்டதிணுல் சுத்தராஜன்
   துடியடங்கியுன்னிடமாய்த் தொண்டுசெய்வான்
அடியிருக்கும்நடுமுடிக்கும் பேரேதென்றால்
   அறைகிறேன்சுளுக்கமெள்ள வறிந்திட்டாயே. 56

அறிந்துகொண்டுவழலைசவுக் காரஞ்செய்யில்
   அடிமுடியைத்தடியடியா யனந்தஞ்செய்தார்
விரிந்துதையா அதிணுலே வண்ணான்சீலை
   வெளுப்பதற்குச்செய்தாரே கேள்வியுண்டோ
தெரிந்துமூன்றுள்பாங்குசெய்யும் போதிலேநோ

சிற்றறிவால்மயங்கிவிட்டார் திரம்போதாது
எறிந்துவிட்டார்சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
ஈசனுப்பைநந்திமுன்னு வியம்பினாரே. 57

இயம்புகின்றவகையேது ஆதியுப்பு
ஈசனுப்புரெண்டுமென்ன ஒன்றேயாச்சு
சுயம்புலிங்கமென்றுபேர் ஆன்மியென்றுஞ்
சுசாதிகப்படிகரவிற் சுடர்தானென்றும்
நயப்பிலக்குஞ்சுகனார் விந்தமென்றும்
ஞானதிஷ்டிக்காரசொல் லாரேயென்றும்
பயப்பிடிக்கச்சொன்னதல்லால் வேறொன்றில்லை
பற்றிப்பாரவர்கடுக்கப் பளிங்குதானே. 58

பளிங்கென்னசிவரூப முடிதானுச்சு
பராபரையால்ரூபமல்லோ சிவப்புமாச்சு
விளங்கியல்லோசொல்லுகிறேன் நிலவானுப்பு
வேதனுப்புநடுவாச்சு வேறேயில்லை
முளங்கியல்லோநூறென்று மவர்கள்கோடி
மூடர்களேஒன்றல்லோ மூன்றுமாச்சு
உளங்கருக்காச்சொல்லுகிறேன் சத்தியுப்பை
உவரென்றுமிந்தென்னும் ரவிதானென்றே. 59

ரவியென்றுங்காலென்று மூத்தமென்றும்
ராசியென்றும்பூமியுட நாதமென்றும்

புளியென்றும்பூவென்றும் யோகியென்றும்
புல்லென்றும்பொலிந்தமணல் பொடிதானென்றும்
குளியென்றுந்தாவென்றும் வந்தாளென்றுங்
குருதியென்றுஞ்சுட்டகள கூத்தனென்றுந்
தளியென்றமுப்பென்றுங் காரமென்றுஞ்
சத்தியென்றும்வளையலென்றுஞ் சாற்றுவாரே. 60

சாற்றுவார்வழலென்றும் வண்ணனென்றுஞ்
சவுக்காரந்தானென்றுஞ் சாரமென்றும்
பூத்துமலர்சுரோணிதமாம் புஷ்டியென்றும்
புலம்பத்தாவிடமென்றும் பூநீரென்றுங்
கார்த்திகையில்மேகஜெல வித்தனென்றுங்
கருவென்றும்பங்குனிக் கதிர்தானென்றும்
நீற்றினத்துக்காதியென்று மண்டமென்றும்
நிசமானமூலமென்று மடியின்பேரே. 61

அடிதானேநடுவிற்கு மாதியாதி
ஆகாசபிரமகெற்பத் தமூர்தமென்றும்
கடிதானபச்சையென்றுங் கம்பியென்றும்
கல்லென்றுங்கானலென்றுங் கம்பியென்றும்
வெடியோசைக்காரியென்றும் வில்தானென்றும்
மேகமென்றுஞ்சுன்னமென்றும் விஷ்ணுவென்றும்

குடியானவிடமென்றுங் குசத்தியென்றுங்
கூறையில்லாச்சுவரென்றுங் கூறுவாரே. 62
கூறுவார்கூர்மையொன்று வணங்கியென்றுங்
கூச்சமற்றபேரெல்லாம் கடுதானுச்சு
வேறுவிதமொன்றுமில்லை சாத்திரங்கள்
மெய்யாகப்பாடிவைத்தார் விண்தானல்லால்
ஏறுதற்குத்திட்டையொன்று மறைத்துப்போட்டார்
இதினாலேசவுக்கார மெளிதாய்ப்போச்சு
நாறுகின்றமண்ணோடே நீருஞ்சேர்த்தால்
நாமென்னசொல்லுவது நாட்டுள்ளோரே. 63
உள்ளமென்றுமனந்தானே அறிவதாச்சு
ஓகோகோஉங்கள்மனங் கெடுதலாச்சு
கள்ளமனம்போவதெப்போ மண்ணுந்தண்ணீர்
காண்பதெப்போகண்டாலுங் கங்கைதீட்சை
வெள்ளமென்றபாலருந்தி யேறலெப்போ
மேலானகுருபாதஞ் சேர்வதெப்போ
பிள்ளைகளேயுங்கள்புத்தி மூடத்தாலே
பிழைத்தறியநான்சும்மா புலம்பினேனே. 64
புலம்பிட்டேனென்றுசொல்லி வுலகத்தோர்கள்
புத்தியறிந்தவர்போலே பரியாசங்கள்
குலம்புழுக்கைபயல்களெல்லாங் கூடிக்கொண்டு

குருவுரைத்தசாத்திரங்கள் பொய்யென்பார்கள்
சிலம்புபோலிருக்குமென்பாய் சொன்னவித்தை
தேவடியாள்மக்களுக்குச் சித்தியாமோ
தலம்பிலக்கவந்தடுத்த மகனேயுந்தன்
தனக்காகச்சொல்லுகிறேன் கங்கைதானே. 65

கங்கைநதியாடினுல் வினைபோமென்றுங்
காசினியோர்சொல்லுவது கேட்டிலாயோ
அங்கல்லோதீட்சைவிதிக் கந்தசாங்கம்
அடையாளமேதென்ருல் பிண்டமண்டம்
வங்கணமாமண்டபிண்டஞ் சேர்ந்தபோதே
மண்ணல்லோபொன்னுச்சு மற்றுமுண்டோ
வுங்கையில்கருமுடித்துக் கொடுத்திருக்க
வுங்கள்புத்திவழிநெடுக விளம்பப்போச்சே. 66

போச்சென்றுவிடுகாதே துருசுசுன்னம்
புகழானசிவயோக தீட்சைக்குள்ளே
ஆச்சென்றுதிருமூலர் சொல்லிவைத்தார்
அந்தமுறைப்படிகாரமே சாற்றிக்கொள்ளு
நீச்சென்றகுருசுவித்தை கடுநீச்சையா
நெறியானசித்தர்களும் நிகழ்த்தப்போகா
மூச்சென்றகாரத்தின் முடித்தான்காணேன்
முடித்தவிடங்கண்டவரே மூர்த்தியாமே. 67

மூர்த்தியாஞ்சாகரத்தைக் கட்டும்பூர
மோசமில்லைசாரத்தால் துருசுசுன்னங்
கீர்த்தியென்னதுருசாலே சொர்னமாச்சு
கெவுனமென்றகுளிகையது கைக்குள்ளாச்சு
வார்த்தையினால்பகட்டுவ தேதுக்காச்சு
மனங்குவிந்துழைத்தாக்கால் வாராதுண்டோ
கார்த்திகையாக்கனன்புதைப் புதையலெல்லாங்
கம்மாளனெடுத்தடித்த கண்ணாடி தானே. 68

கண்ணாடிசிலமுடித்தா னுப்பினாலே
கருவதனையறியாமல் மாண்டுபோனார்
விண்ணாடிப்பாராத குற்றம்குற்றம்
வெறுமண்ணாய்ப்போச்சுதவன் வித்தையெல்லாம்
ஒண்ணானமவுனமென்ற யோகம்விட்டால்
ஒருபோதுஞ்சித்தியில்லை வாதந்தானும்
பெண்ணார்தன்னாசையது வந்துவிட்டால்
பேரின்பமுத்திவழி பேசுவேனே. 69

பேசுவேனிடகலையே சந்திரகாண்டம்
பின்கலைதானாதித்த னாதியாச்சு
நேசமதாய்நடுவிருந்த சுடர்தானிங்கே
நீங்காமலொன்றான லதுதான்முத்தி
காதலாய்ப்பார்த்தோர்க்கு இதுதான்மோட்சங்

காணாதபேர்க்கென்ன காமதேகஞ்
சோதனையாயிடகலையி லேறவாங்கி
சுழிமுனையில்கும்பித்துச் சொக்குவீரே. 70
சொக்குவீரேசகத்தை செய்யவேதான்
சூரியனுஞ்சந்திரனு மொன்றாய்ப்போகும்
அக்கினியால்மதியமுர்தங் கக்குங்கக்கும்
அப்பனேநோய்களெல்லாம் வெந்துபோச்சு
பக்குவத்தில்தேகமெங்கே சித்தியாச்சு
பதினாறுநின்னிரண்டு இருபத்தெட்டு
முக்கியமாயிதுவெல்லா மடக்கியாட்ட
முளைத்தபதினறிதழில் வாங்குவாங்கே. 71
வாங்கியந்தபனிரெண்டு னுள்ளேரேகி
வன்னிநின்றவிடமல்லோ ரவியின்வாழ்க்கை
யோங்கியிந்தரெண்டிடமு மறிந்தோன்யோகி
உற்றபராமாடிதானே பதினாருகுந்
தாங்கிநின்றகாலடிதான் பன்னிரண்டு
சார்வானபதினறில் மெள்ளவாங்கி
யேங்கினத்தப்பன்னிரண்டில் நிறுத்துயூகி
எழுந்தபுரியட்டமடங் கித்துப்பாரே. 72
பாரையாகுதிரைமட்டும் பாய்ச்சல்போச்சு
பரப்பிலேவிடுக்காதே சுத்தந்தன்னை

நோய்யாரெண்டிதழி னடுவேவைத்து
நிரைந்தசதாசிவனுரைத் தியானப்பண்ணு
கூரையாஅங்குலந்தா னுலுஞ்சென்று
குறிக்குள்ளே தானடக்கிக் கொண்டுதையா
ஆரையாவுனக்கீடு சொல்லப்போறேன்
அருமையுள்ளவென்மகனென் றழைக்கலாமே. 73

அழைப்பதுவுநல்லபிள்ளை யானால்நன்று
ஆகாதசீடர்களைச் சேர்ந்தால்தோஷம்
பிழைப்பதற்குவழிசொன்னால் பார்க்கமாட்டான்
பெண்டாட்டிமனங்குளிரப் பேதமாடு
உழைப்பதற்குச்செனன மெடுத்தானேயல்லால்
உடலதுதான்கெதிபெறவே யொன்றுங்காணான்
இளப்பமிவன்பேச்சையடிக் கடிதானுகு
மேதுக்குச்சொல்லுகிறோ மினிமேல்தானே. 74

மேலென்னவிருக்கையிலும் நடக்கும்போது
வேறுரையாலகாரங்கள் விடாமலேற்று
காலென்னவெட்டென்ன வெல்லாமொன்று
கலமான அஷ்டாங்க மப்பியாசித்துக்
காலென்னபிராணய முன்னேசெய்யில்
கணக்காகப்பூரகமாங் கும்பகம்காலு

கோலென்னரேசகந்தா னென்றுமூன்று
குறையாமற்சுரபூசங் கூட்டித்தீரே. 75
கூட்டியேபழகினபின் சுரபீசத்தில்
குறையாமல்சாதித்தால் பிரமானந்தங்
காட்டிவிக்குமலடுவிழிக் குறியினாலே
கண்மூக்குமத்தியிலே கண்டுபாரு
மூட்டிவிக்குமாதார மாறுந்தானே
மூலவட்டகணபதிநான் முகத்தோன்மாயன்
தாட்டிகமாமணிப்பூரங் கையன்வட்டந்
தணலானரூத்திரனும் தணலுமாமே. 76
தணலாகும்விசுத்தியறு கோணவட்டஞ்
சதாசிவனார்வட்டமல்லோ குருபீடந்தான்
மலையாளபதியிதிலே குறித்துப்பார்க்க
மதியமுதல்கரிகொண்டு தூங்குந்தூங்குங்
கனலேறிக்கொண்டிருந்தா லெல்லாமுண்டு
காற்றைவெளிவிட்டாக்கால் கருமத்தீதான்
புனலூறும்வழிப்பாதை யிந்தமார்க்கம்
பொல்லாததுரோகிக்குப் பொய்யாமென்றே. 77
பொய்யாதுசிங்கியிலே காரஞ்சுன்னம்
போடடாதுருசுக்கு பொய்யாப்போச்சு
எய்யாமற்சிங்கிக்கு காரமேற்றி

யெரியாட்டால்நவலோகத் தேறிடாது
கையாரக்கண்டதிந்த வித்தைபோலக்
காட்டுகிறேனுன்மனதில் கவலைவேண்டாம்
வையாதேயென்மகனே யுனக்குப்புண்யம்
மாமுனிவர்சாபம்வரும் வழியிதாமே. 78

வழிவுண்டுகல்லானை யாறுக்குள்ளே
வாகாகவிந்துப்பு கம்பியாச்சு
கழிவானவெடியுப்பு வேகமெத்த
சுத்தஜலதீக்ஷைவிட்டா லொன்றுமில்லை
பழியாகசாகுதடா நாதம்வற்றிப்
பாழானஉடம்பிரண்டு முயிருமொன்றாய்
கழியாகுங்கும்பிடுதல் கண்ணீராலே
கட்டுமடாமுப்பூவுங் கட்டுந்தானே. 79

கட்டுகிறேமென்றுசொல்லி சிறிதுபேர்கள்
கண்மூக்குமத்தியிலோ ரெழுத்தைவைத்து
பட்டினியேதானிருந்து சாமநேரம்
பார்க்கின்றபோதுபளிச் சென்றுமின்னி
முட்டுமடாபசுக்கொடுமை யாலேதிட்டான்
முழிமுழிப்பார்நயனஞ் சிவந்துபோகச்
சுட்டிகளேயிதிலே ஆவதுண்டோ
சோமப்பாலுண்டோமென்று சொல்லுவாரே. 80

வாறுனமதியமுகம் பீறிட்டோடி
வழியின்றிச்சிறிதுசன மாண்டாரையா
நீரேதுநீர்குடிக்க வாறங்கேது
நினைவுகெட்டதோஷிகளே நிறுத்திப்பார்க்க
கூறுனசந்திரனி னுலேமிச்சங்
குடிக்கிறதும்பிடிக்கிறது மதுதானையா
சீரானமேல்வாசல் தமருக்குள்ளே
சிங்குவைநலங்குலமுஞ் செலுத்திடாயே. 81

செலுத்துவதுடண்ணுக்கி தண்ணுக்கையா
சென்றேறிப்பிடரிவலித் தியானந்தானு
மலுத்ததடாநானுமுனக் கமுதமாச்சு
மவுனமென்றநிருவிகற்ப வாழ்க்கையாச்சு
சொலித்திருக்கும் பனிரெண்டில்நிறுத்தியூது
சோடசமாம்சந்திரகலை தேய்ந்துபோச்சு
பலிக்குதடாயோகசித்தி ஞானசித்தி
பருவமாய்நாடிவைத்துப் பழக்கம்பண்ணே. 82

பழக்கஞ்செய்நாள்தனிலே நோய்வாருமல்
பாடிவைத்தேலிந்நூலில் பற்பமெல்லாம்
விளக்கமல்லோகொண்டத்தி விடித்தல்நன்று
வீணுசைகொள்ளாதே பெண்கள்மேலே
வழக்கமல்லோபசிதாகம் பிராணதாகம்

வஞ்சகக்கூற்றிற்றனிலே மயங்கவேண்டாம்
பிளக்குமடாஉன்சிரசு வெளியாகிவிட்டால்
பிணியாளனுமிருப்பாம் பேணிப்பாரே. 83
பேணிக்கொள்ளாமல்வெகு பேர்கள்தானும்
பேதமையினுல்மயங்கி யிறந்துபோனுர்
காணிக்கொத்ததினுலே கோடிக்காச்சு
கலேகுறையுநாள்குறையுங் கறுத்தொனுதோ
வீணுக்கோசொல்லுகிறே னிந்தயோக
மிஞ்சாதேகுறையாதே விட்டிடாதே
தோணிக்கொள்ளாதோடா புத்திமானே
தொட்டல்லோகாட்டுயிந்தச் சுருதிநூலே. 84
நூலிலேநந்திசொன்னுர் முன்னூருக்குள்
நுண்ணியமாய்கொங்கணவ ரைந்நூறுக்குள்
மாலிமையாய்ச்சொல்லிவைத்தார் பொதிகைநாதன்
வளமானவாயிரத்திருநூறுக்குள்ளே
பாலிலேநெய்பிரித்தாப் போலேஐயா
பாடிவைத்தார்சித்தரெல்லாம் பாருபாரு
நாலிலேதிருமூலர் பதினுறுக்குள்
ஞானமுண்டுகாலாங்கி நவின்றிட்டாரே. 85
நவிலாமலிருக்கவில்லே சூத்திரங்கள்
நாதாக்கள்பாடிவைத்தோர் மறைப்புமெத்த

புலியாளர்க்கைந்நூறு சொன்னேனதைப்
புதைத்தாரேதிருமூலர் பொருள்களாலே
சலியாமல்சட்டமுனி சொன்னதீட்சை
சாங்கமாய்க்கோள்சொல்லிக் கிழித்தாரையா
குலியாமல்பலபலவா யோகமார்க்கங்
கொட்டினுமர்மத்தைக் குறைத்திட்டாரே. 86

குறைத்தாரேயென்றுசொல்லி மயங்கவேண்டாம்
கூர்ந்துபாரேதேனுங் கூடிக்கொள்ளும்
இரைத்தாரைக்காராத பள்ளமுண்டோ
வொன்றுசொன்னூர் மச்சமுனியிருனூருக்குள்
சிரித்தாரேமூலகுரு ஆஆவென்று
திட்டந்தான்பேச்சருமை செய்துநன்று
வுரைத்தாரென்றதிசயித்தா ரானதாலே
உங்களுக்குச்சொன்னதிந்த வுகமைதானே. 87

உகமையென்றதொன்றுமில்லை வழலைக்காதி
உலராதிவுப்பாதி உண்மையாக்கு
வகையாதற்கேதென்றால் தீட்சையாதி
வாய்திறந்துசொல்லிவிட்டேன் உள்ளசேதி
பகமைபண்ணிக்கொள்ளாதே உலகத்தோரைப்
பழியாதவிடாசரிஷி பண்ணுங்கூற்று

சகமுழுதுநீயல்லால் வேறேயுண்டோ
 தம்பியுந்தன்குண்டியிடம் தன்னைமூடே. 88
மூடாமல்சிறிதுசன முகபாடம்பண்ணி
 முழுதுமவன்வந்ததுபோல் பிரசங்கித்து
வீடேதுவுடலேது யோகமேது
 வீண்பேச்சாசொல்லியல்லோ மாண்டுபோனார்
காடேறிமலையேறி நதிகளாடிக்
 காய்கிழங்குசருகுதின்று காமத்தீயால்
சூடேறிமாண்டவர்கள் கோடாகோடி
 சொரூபமுத்திபெற்றவர்கள் சுருக்கமாச்சே. 89
சுரூபமுத்திக்கடையாள மேதென்றக்கால்
 சுடர்போலேகாணுமடா தூலதேகம்
அரூபமுத்தியிடமல்லோ பிரமஞான
 மபரோட்சமென்றுசொல்லுஞ் சிரவணந்தான்
பருப்பதத்தைஅசைப்பனெனச் சிற்றெறும்பின்
 பழங்கதைபோலாச்சுதிந்த யோகவீட்டால்
வெருங்கடத்திலீப்புகுந்த வாறுபோலே
 வேதாந்தமறியாத மிலேச்சர்தானே. 90
மிலேச்சனென்றுசொன்னமொழி யேதென்றக்கால்
 விபரீதபுத்தியினால் விண்ணைப்பார்த்து
மலைச்சல்லோபோனார்கள் வேறேயெண்ணி

வாய்பிலுக்கா னூல்படித்து மாண்பரெல்லாங்
குலைச்சதல்லால்நிருவிகற்பங் காணுரையா
குருக்களென்பார்சாராயக் கோஷ்டியாலே
பலிச்சதில்லைமேனோக்கிப் பார்க்கும்வித்தை
பண்பெல்லாமைந்நூற்றிற் பாடினேனே. 91

பாடுகிறேன்மணியொளியாம் நாக்கின்கீழே
பலநரம்புபிடித்திருக்குங் கேளுகேளு
கூடுபற்றிக்கூடியே யிருந்தாப்போலக்
குணமில்லாகூற்றுவ னின்றான்பாரு
நாடுகின்றகருவினு லறுக்கும்போது
நாக்குநரம்பற்றுமணி குறுகிப்போகும்
பாடுபட்டுண்ணுக்குநுனி தடித்துப்போனல்
பரியாசமாச்சுதிந்த யோகம்பாரே. 92

யோகமில்லான்ஞானமென்ன வீண்வீணையா
வூடுருவிப்பாயாவிட்டா லென்னசொல்வேன்
நாகமல்லோசந்திரனைக் கவ்விணுப்போல்
நான்முகன்றன்சூட்சமெல்லாம் நாவிலாச்சு
சாகவல்லோபடைத்தவிதி தன்னைத்தாண்டி
சட்டைமுனிகரிசாலை சாறேயென்றார்
சோகமதுபோலாகி நெடுநாள்செல்லுஞ்
சூட்சமுண்டுதெளிவாகச் சொல்லுறேனே. 93

சொல்லவென்றுலெனக்குப்பின் கூடாதையா
சொல்லவென்றுற்சொல்லுகிறேன் சூட்சமாக
வெல்லவென்றுல்கானகத்தில் கடலாமூலி
வெகுசுருக்குதோத்திரத்திற் பிசினியுண்டு
செல்லடாபின்புரெண்டு கற்பந்தானுஞ்
செப்புமதுமூலரெண்ணு யிரத்தில்பாரு
அல்லவடாரோமரிஷி யென்றுலுந்தான்
அடுத்தவர்க்குரகசியமா யருளுவோமே. 94

ஓமென்றகெட்டபுத்தி மாணுக்காகேள்
வுலகத்தில்மானிடர்க்கு ஆண்டுநூறு
ஆமென்றுயிருபத்தோ ராயிரத்து
அறுநூறுசுவாசமல்லோ வொருநாளைக்குப்
போமென்றுபோனதிஞல் நாள்குறைந்துபோச்சு
போகவிட்டால்போறதில்லை புத்திதானே
தாமொன்றுநினைக்கையிலே தெய்வமொன்று
தானினைத்ததன்மையல்லோ விதிகள்தானே. 95

விதியல்லோமதியாச்சு வேறேயுண்டோ
வேதாந்தப்பொருளறிந்த மெய்யுள்ளோரே
சதியல்லோபண்ணிநீர் விதியைத்தாண்ட
தாள்ளாமலுள்ளுடைந்து சாகுறீர்கள்
நிதியல்லோசவுக்கார சுன்னஞ்சுன்னம்

நோமல்போகுதடா நிஷ்களத்தின்
பதியல்லோகெந்தியாகும் மோட்சமாகும்
பரலோகஞ்சாதகமாம் படைத்தவாரே. 96

படைத்திட்டசவுக்காரத் தெண்ணெவாங்கி
பாடினார்சித்தரெல்லாம் பாஷையாலே
உடைத்தல்லோசொல்லுகிறேன் கருமானத்தை
ஊஆஓவென்றெழுத்து கங்கையாச்சு
மடத்தனமாய்த்திரியாதே அதுதானுதம்
பாங்கியல்லோசவுக்கார வழலைத்தோய்த்து
புடத்திலிட்டுயெறிந்துவிட சுண்ணம்பாகிப்
பொன்மேருமாருச்சு புத்திபாரே. 97

புத்தியுடன்பூரவுப்பு சொல்லக்கேளு
பூநீறுபலமொன்று பூரமொன்று
சுத்திபண்ணிபூநீற்றைக் கல்வத்திட்டு
துடியானபூரமதைக் கூடச்சேர்த்து
பொற்றிபெறக்கும்பிடுகல் சுண்ணநீரால்
விரைவியொருபீங்கானி லடைத்துக்கொண்டு
சத்தியம்போல்சீலைமண்ணே ரேழுஞ்செய்து
தனிப்புடமாய்ரண்டுமுழத் தாவுசெய்யே. 98

தாவுள்ளகுழிதனிலே பீங்கானிட்டுச்
சருகுசுட்டசுண்ணைம்பு வதின்மேலேகொட்டி

காவலிட்டுகுழிமூன்று திங்களப்பா
கடந்தெடுத்தால்விளைந்துநிற்கும் கற்பூரந்தான்
பூவெல்லாந்தானெடுத்து அண்டநீரில்
பொடித்திட்டுரவியில்வைக்க வுப்பேயாகும்
ஊவல்லோஆவுக்கு வுயிருமாச்சு
உத்திபண்ணிப்பார்க்கவுங் கற்பூரமாமே. 99

உப்பல்லோபிண்டத்தில் சேர்ந்தபோது
வுடலுயிருமொன்றாகித் தண்ணீராச்சு
அப்பல்லோமுப்பூவுக் காணியாணி
அதைவிட்டால்கட்டாது வழலைமார்க்கஞ்.
செப்பல்லோவைந்துக்கு மூடலாச்சு
தீட்சணமாயிந்தநூல் தெளிவோமெத்த
முப்பொருளுமொன்றாகி நின்றசோதி
மூலவட்டகுருவருளால் மொழிதான்முற்றே. 100

உரோமரிஷி சூத்திரம்-100

முற்றிற்று.

சிவமயம்.

எண்பத்தாராவது,

உரோமரிஷி

கருமானச் சுருக்கம்-50.

மூலாதாரத்தெளிவாய் வெளியாய்ரூபி
முக்கோணவட்டமதில் முளைத்ததேவி
மேலானபாதமது போற்றியேத்தி
மெய்ஞ்ஞானசித்திமுதல் வாதஞ்சொல்வேன்
ஆலாலமுண்டதோ ரையர்பாத
மருளான்பார்வதித்தா யருளைப்போற்றி
சாலோகசாரூப சாமீபந்தான்
சாயுச்சியமண்டர்பதந் தானேகாப்பு. 1

காப்பானதீட்சையது பத்துங்கண்டு
தூருவானரேசகத்தின் குறியைப்பார்த்து
மேப்பானபூரகமுங் குறியுங்கண்டு
மேன்மையுள்ளகும்பகமுஞ் சித்துங்கண்டு
வாப்பானஆறுவறை யகண்டங்கண்டு
வாகானவாதசித்தி முழுதுங்கண்டு
கோப்பானபதினெண்பேர் பாதம்போற்றி
குறியானஞானமது கூறுவேனே. 2

கூறுவேன்வாலையுட சாபந்தீர்த்து
குற்றமில்லாசித்தருட வசையுந்தீர்த்து
ஆரவேதீட்சையது பின்னேசொல்லி
அப்பனேகடுஞ்சுருக்கு பிராணயந்தான்
தேரவேதேவியுட பூசைவிட்டால்
தெருமண்ணாய்ப்போகுமடா சித்தியெல்லாம்
போரானபரையின்பதந் தெரிசித்தாலும்
பேதமில்லைபூசையப்பா பெருமைகேளே. 3

கேளப்பாமுக்கோண முன்னேயிட்டு
கெடியானசட்கோணம் பின்னேயிட்டு
நாளப்பாநவகோணஞ் செய்யநன்று
நலமானநாற்பத்து முக்கோணங்கடினமெத்த
தோளப்பாயிப்படியே செய்யாவிட்டாற்
சுளுவானபூசையொன்று சொல்லக்கேளு
மீளப்பாபலகையின்மேல் புட்பம்போட்டு
மூலமுதல்தாயைநீ பணிந்துசெய்யே. 4

செய்தபின்புபெண்ணைவைத்துப் பூசைபண்ணி
திறமாகக்கடத்தையவள் கையிலீந்து
செய்தபின்புகுருநாதன் கடத்தைவாங்கி
தெரிவையர்க்குமுன்னீந்து ஜெபத்தைபண்ணு
செய்தபின்புதாம்பூல மடைக்காயீந்து

தெரிவையர் தன்பாதமதை பிடித்துக்கொள்ளு
செய்தவர்கள்சித்தியப்பா மாணுக்காகேள்
சித்தானசித்தியெல்லாஞ் சித்தியாச்சே. 5

ஆச்சப்பாஜந்துவகை தீட்சைபெற்றால்
அடவானரேசகந்தா னெழும்பும்பாரு
மூச்சப்பாஆளுயா மெழும்பும்பாரு
முக்கியமாய்வழிநடக்கத் தானேசொல்லு
நீச்சப்பாவெகுதூரம் நடந்தாலுந்தான்
நிலத்தில்கால்பாவாது ரேசிரேசி
கூச்சப்பாகும்பகத்தில் சிங்கென்றாணி
குறிப்பாகசுழிமுனையில் நிறுத்தியாட்டே. 6

ஆட்டானவீரமொன்று சூடனென்று
அடவானகாரமொன்று சூதமொன்று
மூட்டானகெவுரியொன்று கெந்தியொன்று
முனையானகொச்சியொன்று முத்தியொன்று
கூட்டானபரியிடையே கனஞ்சிதுக்கு
குணமானவைத்துசுண்ண செயநீராலே
வாட்டாகபில்லைதட்டி யுலரப்போடு
வகையோடுகெவுரியினால் குகையைச்செய்யே. 7

செய்யப்பாசெயநீரால் கெவுரியாட்டு
திறமாகக்குகைசெய்து குகைக்குள்வைத்து

பையப்பாமூன்றெருவிற் புடமூந்திரு
பாங்காகச்செந்தூரம் ரவியுமாச்சு
தையப்பாசெம்பதுக்கு நூற்றுக்கொன்று
தாக்கிடவேதங்கமது வாகுமாகும்
வையகத்திற்காட்டாதே தோஷந்தோஷம்
வகையோடேதீட்சைகொண்டு மலையிலேறே. 8

ஏறினவர்க்கல்லவப்பா பலந்தானுண்டு
இகத்திலுள்ளமாண்பருக்கு யேதுமில்லை
ஆறுதற்கைந்துவகை தீட்சையில்லான்
அழகானரேசகத்தி லமரொட்டாது
மாறுகின்றவயிரவன்றன் சாபந்தீர்ந்து
மகத்தானகுருபதத்தை வணங்கிப்போற்று
பார்தனிலேயுரையாமல் மவுனங்கொண்டு
பக்குவமாயிந்நூலைப் பதனம்பண்ணே. 9

பண்ணுனதெரிசனைதான் வகையாய்க்கேளு
பண்பாகவுதயத்தி லந்துநாழி
நன்றாகரெண்டெழுத்துங் குலத்தில்தூக்கி
நயந்தனைநீவெகுவாக வெடுத்துப்பாரு
விண்ணோடுகடந்துவிடுஞ் சோதியப்பா
விள்ளார்கள்மகத்தான பெரியோரையா

அண்ணலெனுமாண்மைக்குச் சரநூல்சொன்னார்
அக்குறியுமிக்குறியு மொக்கும்பாரே. 10
சேர்த்தபின்புஓரெழுத்தைச் சுழிணைவைத்து
திருப்பிவிடுபூரகத்தின் சுவாசஞ்சேரும்
ஏற்றபின்புகும்பகத்தில் கடிகையொன்று
இதமாகனிருத்தியதை பழக்கம்பண்ணு
நாற்றிசையும்புகைபோக விடங்கள்பார்த்து
நாட்டிவிடுமேனோக்கி திரும்புமட்டும்
வாய்த்தபின்புயெய்திடமுஞ் செய்யநன்று
வகையுடனேகுருபாதம் வணங்கிக்காரே. 11
காரானயிருள்தனிலே நடந்தாலென்ன
கருமேகயிரவதிலே சென்றாலென்ன
சீரானஅறைவீட்டி லிருந்தாலென்ன
திரமாகரவிமதியெப் போதுங்காணும்
பாரானவுலகத்திற் கண்டோர்விள்ளார்
பாங்காகபனிரெண்டு வருஷங்காரு
தீராதமூடருக்கும் அறிவிலார்க்கும்
திறம்பார்த்துஆசானுஞ் செப்புவாரே. 12
செய்கையிலேகண்குறியு முகக்குறியும்பாரு
சுகமாகயிடைக்கையிலே சங்கும்பாரு
அப்பயிலேநெற்றியிலே ரேகைபாரு

அடவாகவையைப்போற் காணுங்காணும்
சுந்திரம்போல்பிரகாசஞ் சொலிக்கும்பாரு
சொரூபநிலைக்கண்ணுக்குக் குறியாய்த்தோணுஞ்
செப்பயிலேயிக்குறிகள் தப்பித்தாலல்
சிவசிவாபிராணையஞ் சித்தியாமே. 13

சித்திசெய்யும்பராபரியை திங்கள்தோறுஞ்
சித்திசெய்வோர்மானதமாம் பூசைசெய்வீர்
பத்திசெய்துதொண்டுபணி ஏறுவோர்க்கு
பாங்காகபெண்ணைவைத்துப் பூசைசெய்வார்
வெற்றிபெறயிப்படியே வுலகத்தோர்கள்
வெருகோடிமாணுக்கர் மலையில்வந்தோர்
சித்திசெய்யும்வச்சிராதி லேகியந்தான்
தினந்தோறுங்கொண்டவனே திரவாணச்சே. 14

வச்சிராதி லேகியம்.

ஆச்சப்பாவுடலிலுள்ள மந்தவாய்வு
மகத்தானகுன்மமெட்டு மேகச்சூலை
மூச்சப்பாவுள்மூலம் புறமூலந்தான்
ஓய்ந்துயிருமுன்னூற் றிருபத்தைந்து
போச்சப்பாயிப்படியே அயனுங்கொண்டாற்
பொற்கம்பிபோலிருக்குந் தாதுவிர்த்தி

போச்சப்பாலேகியத்தின் விபரமெல்லாம்
பெருமையுடன்பேசுகிறேன் வகையாய்க்கேளே. 15
கேளப்பாஜாதிக்காய் பலந்தானொன்று
கெடியானஏலமது பலந்தான்ரெண்டு
நாளப்பாவால்மிளகு பலந்தானொன்று
நலமானலவுங்கப்பூ பலந்தானொன்று
நீளப்பாசீரகந்தான் பலந்தானைந்து
நியமானக்கொடிவேலி பலந்தான்ரெண்டு
நாளப்பாகோஷ்டமது பலந்தான்ரெண்டு
நலமானஅதிமதுரம் பலந்தானைந்தே. 16
அஞ்சாதேஅக்கிராரம் பலந்தானொன்று
அடவானபறங்கின்வேர் பலந்தான்பத்து
துஞ்சானகுங்குமப்பூ அரைக்கால்போடு
சுகமானகோரோசனை பலந்தான்காலே
மிஞ்சாதோவியில்வைத்து யிடித்துக்கொண்டு
வியனாகத்திருத்தியதை யிடித்துக்கொண்டு
மஞ்சானபசுவினெய் யுலையாய்வைத்து
வகையோடேமெழுகுபோல் தூவிக்கிண்டே. 17
கிண்டையிலேபழச்சாற்றில் சக்கரையைப்போட்டு
கிருபையுடன் கிண்டையிலேவார்த்துவார்த்து
பண்டாரும்பதமாக யிளகொட்டாமல்

பதருமற்கலசத்தில் வைத்துக்கொண்டு
வண்டாரும்பூங்குழலாள் மாதுபூசை
வகையோடேசெய்தபின்பு வுண்டுவாநீ
தண்டாருந்தாய்தந்தை மறந்தாயானல்
தவறிவிடும்வித்தையெல்லாஞ் சாற்றுறேனே. 18

சந்தனுதித் தைலம்.

சாற்றுவேன்சந்தனத்தின் தைலமப்பா
தப்பாமற்செய்வார்க்கு யெல்லாம்சித்தி
ஆற்றுகிறேனதிமதுர மக்கிராகாரம்
அழகானகோஷ்டமது தேவதாரம்
போற்றுகிறேன்சந்தணமுஞ் சுக்குயேலம்
புகழாகச்சரியிடையாய் வாங்குவாங்கு
காட்டியேபிராயம்வேர் வில்வவேரும்
கனமானபத்திரிவேர் வெட்டிவேரும்
வாட்டியேகியாழத்து வைத்துக்கொண்டு
வகையாகச்சாறுவகைப் பகருவேனே. 19
பகரவேபழச்சாறு சேர்தானென்று
பழமானதென்னம்பால் சேர்தானென்று
பகருவேன்ஆவின்பால் சேர்தானென்று
பாங்காகபசுவினெய் சேர்தானேர்து
தகரவேமுசுமுசுக்கை சேர்தானென்று

தவறாமல்தெல்லிப்பால் சேர்தானென்று
நுகரவேயிவ்வளவுங் கூட்டிக்கொண்டு
நுண்ணிமையாய்கியாழத்து னுள்ளேகொள்ளே. 20

கொண்டபின்புஅடுப்பேத்தித் தணலைமூட்டி
கொழும்புடனேபக்குவத்தில் பொடியைத்தூவி
பிண்டியனலெடுத்தாக்கால் முறிந்துபோகும்
விழித்திருந்துகமலத்தீ யாகப்பாரு
கண்டபின்புதைலத்தை யிருத்துக்கொண்டு
கன்னியுடபூசையைநீ கனமாய்ச்செய்து
மண்டலந்தான்மூன்றுமட்டும் முழுகினோற்கு
மகத்தான்பிணிகளெல்லா மாறிப்போமே. 21

மாறுமேநாட்சென்ற வுதிரமேகம்
மகத்தானவுள்மூலந் தானேஓடும்
தூறுசினம்பெருநோயு மகோதரந்தான்
சூலையுடன்பித்தமெல்லாந் தொலைந்துபோகும்
ஏறுகின்றரேசகந்தான் செய்வோமப்பா
என்னசொல்வேன் ஆரோக்கியம்யேறும்யேறும்
மாறுகின்றவுலகத்தோ றுண்டானதாலே
மகத்தானபிணியெல்லா மயங்கிப்போமே. 22

போகமதுசெய்திந்த அமிழ்தங்கொண்டால்
புத்திகெட்ட மானிடர்க்குவிணையப்போகும்

போகமதுசெய்வதற்கு மனமுண்டானால்
 பிர்மாவைரவிகலையில் தன்னிற்சேரு
போகமதுதிங்களுக்கோர் தினமுமாகும்
 புண்ணியனேவிந்துவைநீ நிறுத்திக்கொள்ளு
போகமதுபூரகத்தி லிருத்தியாடு
 கூவையுடவித்துவெல்லா முனக்கேயாச்சே. 23

ஆச்சிந்தப்படிசெய்வா ருலகஞானி
 ஆடிடுவான்பின்னுமப்பா வுலகத்துள்ளே
போச்சிந்தப்படியப்பா வுலகத்துள்ளே
 போகக்கோடான கோடியுண்டு
மூச்சிந்தப்படிகண்டோர் பிள்ளாரையா
 முனையாகப்பன்னிரண்டு வருஷங்காரு
பாச்சிந்தப்படியப்பா மலையில்வாழ்வோர்
 பாவையரைக்கூடார்கள் பகர்ந்திட்டேனே. 24

இட்டமுடன்குருபதத்தைத் தொண்டுபண்ணி
 யினிதாகவாழ்ந்தவனே சீஷனாரும்
நஷ்டமதுகுருவுக்கு நினைத்தானானால்
 நம்பாமல்மனம்வேறாய் நிற்பார்பாரு
அஷ்டகர்மங்கோகர்ண மாடினாலும்
 அப்பனேநாள்வரட்டு மென்பார்மேலோர்

19 †

கட்டளையாலவர்மனது வரவேவேணுங்
கார்க்கையிலேமன திரங்கி கடாட்சிப்பாரே. 25

பாரிலேசித்துண்டு ஞானமுண்டு
பண்ணிவிட்டகுறையோர்க்கு எதிரேகாண்பார்
பாரிலேதுலாராகி கன்னிராசி
பண்பில்லாப்பாவிகட்கு யெதிர்தோணாது
நேரிலேவந்தாலு மறந்துபோகும்
நிலையோடயாத்தாளும் நிலைத்திடாது
சீரிலேயுதித்தவர்க்குச் சுத்தியாகுஞ்
சிறப்பானவாதமெல்லாஞ் சித்தியாமே. 26

ஆச்சிந்தப்படிசொல்லி மறைப்பார்மேலோர்
ஆகடியஞ்செய்யாதே அவமாய்ப்போகும்
போச்சிந்தப்படியப்பா வுலகவாதி
முறையாகவுலகத்தில் ஒத்துவாழ்வார்
வாச்சிந்தவிட்டகுறை யானோனால்
பண்பாகக்காத்தவர்க்குப் பலிதமாகும்
வாச்சிந்தவுலகத்து மானிடர்க்கு
வச்சிரத்தின்பாரையுப்பா மரணந்தானே. 27

தானென்றமுப்பூவின் முறையினாலே
தாணியெல்லாம் பொன்னாக்கதெரிந்துபாரு
பானென்றபெண்ணைவிட்டால் வித்தையெல்லாம்

பாழாச்சுபாழாச்சு பகுந்துபாரு
கானென்றகர்ப்பூர வுப்பினாலே
காடெல்லாமலையெல்லாம் பொன்னாய்ப்போகும்
மானென்றமனோன்மணித்தா யருளும்வேண்டும்
மகத்தானபூசையிலே வருந்துவாயே. 28

வருந்துவாயாத்தாளை தினந்தோருந்தான்
வகையோடேகுருவினுட முறையைக்கண்டு
திருந்தவேநூல்பார்த்துத் தேரவேணுந்
தேங்குவாநூல்பாரான் திருடன்தானும்
அருந்தவேவாதத்தை முன்னேகேழ்ப்பான்
ஆகாதகாமியென்றே யகலப்பாரும்
வருந்தியேகாத்தபின்பு குறிகள்கண்டு
வாதமென்றவார்த்தையைநீ பின்னேபோச்சே. 29

பேசுவதுயாருக்கு மைந்தாகேளு
போனகுலத்தோர்க்குங் கன்னியோர்க்கும்
வீசியதோர்தனுசோனு மீனத்தோனும்
வியனானமேஷத்தோர்க்கு விரைந்துகூறு
ஆசானுமுன்சொன்னத் துலாமுங்கன்னி
அரைவாசிப்பின்மூன்று மறைத்திட்டார்கள்
தேசுடையதாய்பூசை செய்யாவிட்டால்
தெட்டியவன்பறிந்திடுவான் தெரிந்துகொள்ளே. 30

கொள்ளப்பாமூலாதா ரத்தினுள்ளே
குறிப்பானரேசகந்தான் பத்துஞ்செய்கை
பிள்ளையாருள்ளங்கை நெல்லிக்காய்போல்
பேசுகிறேனுள்ளதெல்லாம் பெருமைகேளு
அள்ளியிடுமூலத்தில் ஓங்காரந்தான்
அடவாகக்கொண்டெழுப்பு மாதியாச்சு
நள்ளியிடுஞ்சுவாதிஷ்டா னத்தில்தானே
நண்ணிவைத்தநகாரமதை நன்றாய்ப்பாரே. 31

பாங்கானமணிப்பூ ரகத்திற்கேளு
பண்பானமகாரமுமே யடங்கும்பாரு
ஆங்கானஅனாகதத்தில் சிகாரம்வைத்து
அசையாமல்விசுத்தியிலே வகாரம்பார்த்து
நீங்கானஆக்கினையில் யகாரமாச்சு
நிருத்தியபின்னைந்தையு மடைத்துக்கொண்டு
தூங்கானநவவாசல் கண்டுகொண்டு
துரையானரேசகத்தில் நேசிப்பாரே. 32.

பாயாமல்மனத்துள்ளே அங்கென்றாணி
பதியானவங்கென்று சிங்கென்றாணி
ஓயாமல்மேனோக்கி ஓட்டிடாது
உயராதுசந்திரகலை தேயும்பாரு
தாயானமாதாவைப் பூசைபண்ணு

தவராமல்பூரகத்திற் சாருசாரு
மாயானகாலன்வந்தா லோடிப்போவான்
மகத்தானபூரகத்தின் வறையிற்ருனே. 34
தானென்றகும்பகத்தில் கலையைவைத்து
தவருமல்விண்ணேக்கி யிருந்துப்பாறு
கோனென்றவெளியெல்லாம் நீயாய்க்காணும்
கோமகளுங்கூப்பிட்டால் வாவாவென்பாள்
மானென்றப்பெண்மாயை மறைத்துப்போடு
மகத்தானகுருவினிட வழியிற்காரே. 35
கார்மேகம்போலெழும்பும்மாய்கையெல்லாம்
கனமானரேசகத்தாற் கலந்துபோகும்
தார்பூணத்தாய்பூசை மறந்தாயானல்
தவறிவிடும்வித்தைமுதல் ஞானமெல்லாம்
சீர்மேவும்அரியேது அயன்ருனேது
சிறப்பானசிவமெல்லா மொன்றேயாச்சு
ஆர்மேவுமாகாசம் ஆணேயாச்சு
அழகானபிரிதீவு பெண்ணேயாச்சு. 36
ஆச்சப்பாஆணென்று பெண்தானென்றும்
அழியாதமாண்பருக்கு வெவ்வேருகும்
கூச்சப்பாபூதமைந்து மெங்குமாச்சு
குவலயத்துள்ளறியாத மூடருக்கு

எச்சப்பாபறையனென்றும் பறச்சியென்று
மெளிதாகப்பேசிடுவா ரறிவில்லார்கள்
பாச்சப்பாபூசையென்றால் தேவிபூசை
பறையனென்றுமறையனென்று மதிற்றேணுதே. 37

ஒன்றானபூசையப்பா தொண்ணூற்றெட்டு
ஓதுகின்றசாதியருக் கொன்றேயாகும்
பற்றானபூசையறை பழித்தபேர்க்குப்
பரகெதியுங்கிட்டாது பாருபாரு
கண்ணாடிக்குள்ளிருக்குஞ் சோதிபோலக்
கனகசபைதிருநடனங் காணமாட்டார்
அண்ணாடம்நித்தியசாமம் ஜெபங்களாலே
அலைந்தலைந்துதிரிவார்க ளசடர்தானே. 38

தாமென்றஆணவத்தைப் போக்கமாட்டார்
தருகுதப்பாகோபத்தைத் தள்ளமாட்டார்
ஓமென்றஓங்கார மொழிக்கமாட்டார்
உகந்தகுருபாதமது வணங்கமாட்டார்
வாமென்றவாமமது அவனுக்கேது
வகையறியாமானிடர்கள் பிறந்துமண்மேல்
தாமென்றகர்மத்தி லெல்லாம்போச்சு
தவமானமனோன்மணியின் சகாயத்தாலே. 39

தாலமென்றபூமிதனிற் பிறந்தாற்கேளு
தாமென்றுந்தவமென்றுஞ் செய்யவேணும்
கோலமென்றதானமது செய்தபேர்க்கு
குவலயத்தில்மறுபிறவிக் கொள்ளுங்கொள்ளு
சீலமதுபிறவிக்குச் செய்தானையா
செல்மணிதருயிருந்து திறமாய்வாழ்வோர்
பாலமெனுந்தீட்சையுள்ளோர் தவங்கள்செய்வோர்
பரலோகசித்தரென்றும் பகரலாச்சே. 40

அஞ்ஞானம்.

ஆச்சப்பாஅஞ்ஞானத்தைப் போட்டுப்பார்த்து
அளவற்றதிரவியந்தா னிருந்ததென்றும்
மூச்சப்பாநெடுநாள்கள் சென்றதானால்
முக்கியமாய்த்தெய்வமுதல் பூதங்காக்கும்
போச்சப்பா அதையெடுக்கச் சுளுவாய்க்கேளு
பேரானபொன்னினுட வழலைவாங்கு
காச்சப்பாவழலையுப்புக் காணுமுன்னே
காதவழியோடிவிடும் பூதந்தானே. 41
தானென்றவழலையது வாங்குவாங்கு
சஞ்சாரக்கிரியையுடன் வாங்குவாங்கு
கோனென்றஅஞ்சனத்தி லெழுத்தைகாட்டிக்
கூட்டியல்லோநாவாலே வாங்கிக்கொண்டு

வேனென்றகழுதைபின்பால் கூடச்சேர்த்து
விதமாகவுருகளஞ்சி வுப்பில்தாக்கி
தேனென்றதிரிவாங்கி யெண்ணெய்விட்டுத்
தீபமிடவோடிவிடுந் திடமாய்ப்பாரே. 42

பார்க்கையிலேதேவியுடப் பூசைபண்ணி
பதினைந்துநாளளவும் வழலைவாங்கி
யேர்க்கையிலேதனமெல்லா மெடுத்துக்கொண்டு
இதமாகத்தேவியுட பூசைபண்ணி
கார்க்கையிலேயெந்தனுக்கு வுபதேசிப்பாள்
கருணையுடன்பணிந்தவளை வழலைவாங்கு
சேர்க்கையிலேவேதாந்தக் குறியைக்கண்டோர்
மேதினியிக்குறியோர்க்கு வெளிப்படாதே. 43

என்னசொல்வேன்வேதாந்த வெழுத்தினாலே
இதமானபொருள்முதலா யுருவங்கண்டால்
மன்னுபுவியோர்வேறே மந்திரத்தால்
மாட்டாதுமாட்டாது மயங்கிப்போகுந்
துன்னுபுகழ்பவழமது துணியில்வாங்கி
முன்புசொன்னவழலையிலே கூடச்சேர்த்து
பண்ணியதோராஞ்சனத் தைந்தப்பா
பாவைமுறந்தனில்வைத்து வாங்குவாங்கே. 44

வாங்கியே அலைவீசும் வையகத்துள்
வகையானதனகோடி கிடாரங்கோடி
தாங்கியேயிதையெடுத்து யோகம்பார்த்து
தயவாகக்காயசித்தி கற்பங்கொள்ள
ஏங்கியேதிரிந்தாக்கா லென்னவுண்டு
ஏரப்பாவுழுதல்லோ விரைக்கவேணுந்
தாங்கியேகருவில்லான் குருவுமில்லான்
காலிழியோன்வீட்டிருந்த வழுதைதானே. 45

தானென்றவாதமது வேணுமென்றால்
சதாநித்தியம்நூலதனைப் பாருபாரு
பானென்றமணமிருந்தா லெடுத்துப்போடு
பதறாமற்பூசைபண்ணிப் பணிந்துநில்லு
கோவென்றகுவலயத்தின் வெகுபேரப்பா
குறையாமற்பூசையினாற் சித்தர்வாழ்வு
ஊனென்றஉலகத்தில் வாதிமார்க்கம்
உத்தகுறிநன்றாக உறைக்கிறேனே. 46

உரைக்கிறேனுலகத்து வாதிவாய்வை
உணர்வாகக்குருமுடித்து பதனம்பண்ணி
யுறைக்கிறேனென்றுசொல்லி சோறுகேட்பான்
ஏழையென்பான்கடன்படுவான் யிரந்துதிரிவான்
தூக்கவேபணிபூணு ணுடைசாத்தான்

நீணிலத்துமானிடரோ டொத்துவாழ்வான்
சிரக்கவேயவர்பாதம் பூசைபண்ணி
செம்பொன்னுற்பூச்சொரிந்து திறமாய்க்காரே. 47

காரப்பாபன்னிரண்டு வருடமட்டுங்
கல்நெஞ்சாயிருந்தாலுங் கரைந்துபோகும்
நேரப்பாபணங்கேட்டால் எடுத்துப்போடு
நெறிபார்த்துப்பின்பல்லோ பொருளைச்சொல்வார்
ஏரப்பாமுதலல்லோ வினையுண்டாகும்
ஏரில்லானுழுதுண்ட வஸ்துவாச்சு
ஆரப்பாயிவ்வளவு நுணுக்கஞ்செய்வார்
ஆசானைக்கண்டல்லோ போற்றுவாயே. 48

போற்றுவாய்பூவுலகில் ஞானிகட்கு
புகழாகவாதமது வந்ததென்றால்
நேர்த்தியாய்ப்பணிபூணுன் கடனும்வாங்கி
நீணிலத்தில்மானிடர்போல் வாழ்க்கைசெய்வன்
வார்த்தையாற்பிரட்டுவான் மானிடர்க்கு
வழக்கமதுவருமென்று மதுக்களுண்ணுன்
தேற்றியேபணங்கேட்பா னெளியனென்பான்
திரமாகயவர்பாதந் திருத்திவாழே. 49

வாழ்ந்திதொருரோமர்சொன்ன அம்பதுந்தான்
வகையோடேபடித்தவர்கள் யோகியாவார்

ஆய்ந்ததொருரிஷியாவார் சித்தராவார்
 அழகானஞானியுமா யீசனுவார்
போழ்ந்ததொருமாணுக்கன் சொன்னநூலை
 புகழ்ந்துபொதிகைமேல்முனிவன் திருத்தக்கொண்டு
ஏழ்ந்திதுவுமுலகுக்கு வேணுமென்று
 இயம்பினேம்அன்பத்து ஒன்றுமுற்றே. 50

உரோமரிஷி கருமானச்சுருக்கம்-50

முற்றிற்று.

சிவமயம்.

எண்பத்தேழாவது,

உரோமரிஷி

முப்புசூத்திரம் - 30.

மூலவட்டமானகுரு பரந்தாள்காப்பு
முத்திக்குவித்தான முதலேகாப்பு
மேலவட்டமானபரப் பிரமன்காப்பு
வேதாந்தங்கடந்துநின்ற மெய்யேகாப்பு
காலவட்டந்தங்கிமதி யமுர்தப்பாலைக்
கண்டுபசியகற்றிமனக் கவடுநீக்கி
ஞானவட்டஞ்சித்தாடும் பெரியோர்பாதம்
நம்பினதாலுரோமனென்பேர் நாயந்தானே. 1

தானேனென்முன்னுரைத்த ஐந்நூற்றுள்ளே
தவறாமல்பாடிவிட்டேன் யோகமார்க்கந்
தானானவாதத்துக் காதியுப்பைச்
சமுசயங்களில்லாமற் சொல்லிவைத்தேன்
தானாகும்வழலையென்ற வுப்புவித்தை
தன்னுக்குடன்னினத்தைத் தாக்கும்பாரு
தானானகருவுண்டு சத்தங்கெங்கை
சலமதனைமறைத்துவைத்த தன்மைபாரே. 2

பாருநீவழலையென்ற வுப்புமூன்றும்
பரிபாஷையில்லாமற் கைபாகங்கள்
சேருநீபூதபஞ்ச காரணமாக
தீட்சையுடபாகம்நன்றாய்ச் செப்பிப்போட்டேன்
காருநீசுத்தகங்கை மறைப்பேதென்றாற்
கருவறிந்தேன்சித்தருக்காய் பயந்துவிட்டேன்
தேருநீஒருநூற்றின் பொருளாராய்ந்து
செப்பிவைத்தேனன்பதுக்குள் தெளிவாய்ப்பாரே. 3

தெளிவதென்ன அதின்சூட்சங்காணப்போமோ
சேகரமாம்பதினாறுள் சேர்த்துப்பாரு
குருவென்னயிந்நூல்தா னூறும்பாரு
குறிதெரியுஞ்சூத்திரங் கண்டாயானால்
நெரியில்லைஇந்நூற்கு நந்திசொன்ன
நிகண்டல்லால்மற்றொன்று நிகரொவ்வாது
கறியினுடபோக்குமச்ச முனியெண்ணூற்பார்
கட்டாகக்கூட்டிவைத்தார் கருத்தோணாது. 4

தோணமல்பாடிவிட்டார் சித்தரெல்லாஞ்
சூத்திரங்களறியவென்றாற் குருதான்வேணும்
வீணாகப்போகாது அதீதபுத்தி
வினையவானல்லாது மற்றோர்க்கேது
கோணமற்றோனுமடா யிந்நூலில்

கொட்டினேன்வயித்தியமும் வாதயோகம்
காணமல்தலையாலே நினைவாய்ப்பாரு
கைபாகமைந்நூற்றிற் கண்கண்டாயே. 5

கண்டதென்னஉலகத்தில் வயித்தியம்போக்கு
கைகண்டபலன்காணுஞ் சரிதைமார்க்கம்
விண்டன்பாய்நூற்றினத்தை காதிரஞ்சி
விட்டுவிட்டால்வைத்தியமும் வீணாய்ப்போகும்
தொண்டுபண்ணிகுருவினுட பாதம்போற்றி
சொல்லுவாரில்லாவிட்டா லென்னூற்சொல்லும்
சண்டையிட்டுப்பேசாதே சிங்கிமார்க்கஞ்
சாற்றினர்பொதிகைமுனி தயவாய்த்தானே. 6

தயவுவைத்துச்சொல்லவில்லை லகுவாய்ச்சொன்னால்
தானறிந்துகொங்கணவர் சாக்குவைப்பில்
நயமிருந்துசொல்வதுபோல் நிமிளையென்று
னூட்டினர்துருசுக்குக் குருதானென்றுஞ்
சுயம்படானன்றாகக் கண்டம்வைத்து
சொன்னதிலேகடுங்காரத் துரையொளித்தார்
செயமிருந்தபோகரிஷி னூற்றிற்சொன்ன
திட்டாந்திரக்கருக்கிடையுந் திரம்போதாதே. 7

திரம்போதாதேதென்ன குப்பிக்கேத்தி
தீயெரிக்கசொல்லாமற் றீயிற்றள்ளிக்

குறம்பாடினுப்போலே மறைத்தாரப்பா
குருக்குவழிகுருக்குவழி மோசமாகும்
அறந்தழைக்குந்திருமூலர் மூவாயிரத்தில்
அவையடக்கம்சிங்கிவித்தை யார்க்குந்தோணு
பரம்பரையாய்வந்தசித்தர் பாதம்போற்றி
பாடுகின்றேன்சிறங்கிவித்தைப் பலிக்கத்தானே. 8

பலிக்கவென்றாற்சிறங்கிக்கி னுடபேதம்
பாடினுதனுலே யாவதென்ன
கலிக்கின்றவங்கத்தி லிங்கஞ்சேர்த்து
கலங்கினுற்சிறங்கியென்ற பேருமாச்சு
கவனிக்கவென்றால்தன் பெருமைவெகுசாயுண்டு
வாதமுண்டுவயித்தியமுண்டு வழிபாடுண்டு
மெலுக்குடையசிரங்கியொரு பலந்தான்வாங்கி
விரிவானகல்வத்திற் பொடித்திடாயே. 9

பொடித்திட்டபிங்கானிற் பழச்சாறூற்றி
பொடிமணலில்ரவிமுகத்தில் வைத்துக்கொண்டு
ஒடித்திட்டசூழ்ச்சியினுற் கிண்டக்கிண்டி
ஓரேழுநாள்ரவியின் வைத்தாயானுல்
குடித்திட்டபொடிகளெல்லா மாண்டபோல
குணமாகக்கட்டுமடா பழச்சார்வேகந்

தடித்திட்டபழச்சார்முன் விடும்போது
சார்வாகப்படியரைத்தான் விட்டுதாக்கே. 10
தாக்குவாய்ரவிசூடு மெத்தவாறு
சாரல்லாமோரேழு தினத்தில்வற்றும்
மார்க்கமாய்ரவிமுகங் கண்டால்சற்று
வற்றுமட்டுங்காய்ந்ததுவே வெண்மையாகும்
தீர்க்கமாய்காந்தசிரங்கி பலந்தானொன்று
சீனமென்றவெள்ளையொன்று பூரமொன்று
தாக்கவேசாரமொன்று கவுரியொன்று
கண்டுசாரிதினலுங் கழஞ்சிதானே. 11
கழஞ்சாகு திவைநாலுஞ் சிரங்கியிலேசேரு
கல்லுத்திலிவையைந்தும் பொடித்துக்கொண்டு
விளைந்தசவுக்காரமென்றுந் திராவகத்தில்
வெள்ளையென்றகிளிஞ்சிநீற் சாரசுண்ணம்
வளஞ்சல்லோபொடித்திடுவாய் விருகனிரண்டு
வன்னிமை யாய்மொளுமொளென்ன
கிளிஞ்சல்லோகுருவாச்சு கால்படியாந்திநீர்
கெணைதன்றனைவிட்டுக் கிண்டியாட்டே 12
ஆட்டுவாய்சேர்த்தசாரக் கெல்லாமாடு
வப்பனே திராவகத்தான் வேகமெத்த
மூட்டுவாய்பிருசாம மரைத்துக்கொண்டு

முசியாமல்மயனபத மாக்கிப்போடு
கேட்டுவாய்குப்பிக்கல் லண்டத்தோடுங்
கெடியாகச்சுண்ணம்பா றாற்றிக்கொண்டு
யூட்டுவாய்திராவகத்தில் குழைத்துநீயும்
புத்தியுடன்குப்பிக்குள் பூசுபூசே. 13

பூசியேகாயவைத்து திட்டம்போட்டு
புகழாகக்குப்பியரைத் திட்டம்போடு
தேசியென்னுமடிகனத்த தாளியொன்றிற்
சிறுமணலாயரைவாசி மட்டுங்கொட்டி
வாசியென்றகுப்பிநடு வைத்துமங்கே
வலப்பாலைக்கொண்டுகுப்பி வாயைமூடி
தேசிகனேயினிமேலுந் தெரிந்திடாதோ
சொரூபமனோன்மணித்தாயைத் தொழுதுபோற்று. ()

போற்றுவதுமுத்தீயு மூன்றுசாமம்
பொங்காமல்வெளியாமாற் பூண்டுபாரு
ஆற்றவிடுங்குப்பிமறு னாளிற்பாரு
அப்பனேபுதங்கமென்ற கருத்தானப்பா
நீற்றினத்துக்கிதுவாதி துருசுக்காதி
னீத்தாட்டாற்சுட்டலைந்த குருட்டுவாதி
சாத்திரந்தானென்னசெய்யும் புத்தியில்லாச்
சண்டாளர்பொய்யெனவே தள்ளுவாரே. 15

தள்ளினதுஅவன்பேரில் குற்றமில்லை
சவுக்காரவழலையைத்தான் மறைத்ததாலே
வெள்ளையென்றசிவனுப்பை வுள்ளத்தாலே
வெடியுப்புகட்டுவது மறியாததாலே
கொள்ளியென்றபூனீறாய்ப் போனதாலே
குடதிசையில்கல்லுப்பு காணாததாலே
துள்ளியென்றசுத்தஜல தீட்சைமார்க்கஞ்
சொல்லாமல்போனதினால் தோணாதென்றே. 16

தோணுகின்றசித்தர்கள்தான் கூடிக்கொண்டு
சூட்சங்களிந்நூலில் முப்புமார்க்கங்
காணுகின்றபரிபாஷை நாமத்தாலுங்
கபடாகமுன்பின்னா யுரைத்ததாலும்
வேணுமென்றஅவரவர்கள் நூல்கள்தோறும்
விளம்பினார்பூராய மாகமெத்த
ஊதுகின்றவுப்பல்லால் வேறொன்றில்லை
வொளித்தென்னவழலையொன்று தீட்சையொன்று.

தீட்சையென்றவழலையென்றுஞ் சூட்சமாக
செப்பிவைத்தா ரதனாலேயுலகவாதி
மாச்சலின்றிமனம்புண்ணாய் சாத்திரத்தை
மனம்வெறுத்துபயந்தெரியா வருந்தினக்கால்
நீச்சலென்றகடுநீச்சு நீச்சலாகும்

நெட்டிலேதிரியாமல் முட்டிப்பாரு
வாச்சுதேவழலையென்ற வுப்புதானு
வகையானசரக்குணர்ந்த மார்க்கந்தானே. 18
தானென்றசிரங்கியல்லோ ருத்திராணுச்சு
தாரணியில்வாதமிந்த குருவிலாச்சு
யேனென்றகுருவாலே வைத்தியந்தான்
யென்னசொல்வேனென்பிள்ளா யிசைந்துகேளு
கோனென்றதாம்பரத்தைத் தகடுதட்டி
குருவிலொருபணம்பூசி குகைக்குள்வைத்து
கானென்றகுக்கிடத்தில் நீறிப்போகுங்
களிம்பற்றுசெம்புநிறங் காட்டொண்ணுதே. 19
ஒண்ணுனபற்பத்தை தேனிற்கொள்ள
புறத்திருந்தமேகமெல்லா மோடிப்போகும்
கண்ணுனசுக்கிலத்தை கட்டிக்கொள்ளுங்
காயபெலமுண்டாக்குங் கனகம்போலே
வெண்ணெயொடுகளஞ்சி பணந்தான்பற்பம்
விரவிஞல்தைலமதை விழுங்கிப்போடும்
புண்ணியமேசெய்தவர்க்கு யிந்நூல்கிட்டும்
புசுண்டனுக்குமெந்தனுக்கும் வாதுண்டாச்சே. 20
வாதுவந்தநெதிஞலே ஐந்நூற்றுள்ளே
மார்க்கமெல்லாம்பாடிவிட்டேன் மனிதர்க்காக

சாதுவென்றதிருமூலர் யெந்தநூலை
தம்முடையகுகைக்குள்ளே மறைத்துப்போட்டார்
பேதுவென்றுயதற்கீடா யன்பதுந்தான்
பிகத்திலேசொல்லிவைத்தே னியன்றமாத்திரம்
சூதுகொண்டுபார்த்தாலே தோயுந்தோயுஞ்
சொர்னமதைசுத்திசெய்து கட்டாய்வாங்கே. 21

வாங்கியபின்குருவிலொரு பணந்தான்பூசி
வான்பிரமியிலையரைத்துக் கவசங்கட்டி
பாங்குபெறக்குக்குடத்திற் போட்டாயானல்
பசுமைநிறம்போகாது பற்பமாகுந்
தூங்கியேதிரியாதே திரிபலாதி
சூரணத்திற்கொண்டுவிடு மண்டலந்தான்
சாங்கைசயரோகமது மேகமூலம்
கிரணிகுன்மம்பீலிகையுங் கடலிற்போமே. 22

கடல்போகும்வெள்ளியொருக் கட்டிவாங்கி
கனத்தமதினீராலே சுத்திசெய்து
திடமானகுருவிலொரு பணந்தான்பூசி
திருமேனிதனையரைத்துக் கவசங்கட்டி
புடமேத்திருக்குக்குடத்தில் நீரிப்போகும்
பூசைதனைமறவாதே புண்ணியந்தான்

உடலெடுத்தால்கன் மவினைக் கிடங்கொடாதே
உறுதிபற்பத்தனுபான முறைக்கின்றேனே. 23
உறைக்கின்றேன்சஞ்சீவி லேகியத்தில்
உண்டுவாமண்டலந்தான் கண்ணேயில்லை
எரைக்கின்றகுடல்வாத மெத்தயில்லை
எலும்புருக்கிப்படர்மேக மெப்போதுமில்லை
நறைக்கிறரோகமில்லை பித்தமில்லை
நாவில்வருரோகமெத்த ஞளுமில்லை
திறக்கிறதோருடல்தனிலே மேகமில்லை
சிவசிவாயிதன்பெருமை செப்பொணதே. 24
செப்பவேஅயத்தகடு லேசாய்த்தட்டி
சிறுநீரிலாதலப்பழச் சாற்றிற்சுத்தி
துப்பரவாய்செய்துகொண்டு தகட்டின்மேலே
துருசுக்குருவான சூட்சந்தன்னை
அப்பனேபணவிடைதா னெடுத்துப்பூசி
ஆமணக்குயிலைபறித்துக் கவசங்கட்டி
உற்பனமாம்குக்கிடத்தில் நீறிப்போகும்
ஓகோகோயிதின்பெருமை உறுதிதானே. 25
உறுதியென்றலோகபற்பம் மண்டலந்தான்
உத்தமனேகரிசாலை லேகியத்திற்
பறுதிமதிபிரண்டதுவே கொண்டாயானுற்

பாண்டுவொடுமூலமெல்லாம் பறந்துபோகும்
குறுதியென்றதாதுபுஷ்டி யூரலாச்சு
குணக்கேடுசெப்புகின்ற சோலிபோச்சு
சுருதியிந்தப்படிதானே பார்த்துசெய்ய
சோகைகாமாலையெல்லாந் தொலைந்துபோச்சே. 26

போச்சென்றுவிடுகாதே கருவங்கத்தை
புளிப்பானமோரிலே சுத்திசெய்து
ஆச்சென்றுகுருவினிலே பணந்தான் தூக்கி
அருளானவங்கத்துக் கப்பிப்போடு
காச்சென்றகுருஞ்சியைநீ யரைத்துக்கொண்டு
கவசமிடுகருவங்கங் கட்டிப்போகும்
மூச்சொன்றுமோடாது குக்குடத்தில்
முழுவெள்ளையாகுமடா மூர்க்கமென்ன. 27

மூர்க்கமிந்தநீராலே களங்குசெய்தால்
முன்பின்னுயைந்தாறு மாற்றுங்காணுஞ்
சாக்கையடாபரங்கியென்னும் பட்டைச்சாற்றில்
தின்றுவாமண்டலத்திற் றீரும்நோய்கள்
நீர்க்குழிபிறப்புண்ணுறும் வெட்டைதீரும்
நீர்சொறிப்புங்காலெரிவு னின்றுபோகும்
ஊர்க்குள்ளேவுனக்கீடு வொருவரில்லை
வுத்தமனேவங்கத்தி னுண்மைதானே. 28

உண்மையிந்தப்படிதானே வெள்வங்கத்தை
வுண்டுபண்ணிமண்டலமே கொண்டாயானால்
பண்மையிந்த நீராலேமேகமெல்லாம்
பறக்குமடாவுலகத்திற் பண்டிதந்தான்
தண்மையல்லோவேணுமடா தேகரோகந்
தத்துவமறியாதவர்க்கு மருந்தேதுக்கு
வண்மையினால்செய்துநெடு நாள்பழக்கம்
வந்தல்லோயிம்மருந்து வாய்க்குந்தானே. 29

வாய்க்கவேசிறுநாகந் துத்தம்வாங்கி
வந்துமேகரண்டியினி லுருக்கியேதான்
சாய்க்கவேயிலுப்பைநெய்யில் சுத்தியாக்கி
நடுவிலொருவிரல்கனமாய்த் தடித்துக்கொண்டு
சீக்கிரமாய்க்குருவிலொரு பணந்தான்றூக்கி
சேர்த்துவிடுநாகத்தின் சீரல்போகும்
பேய்க்குமட்டிக்காயரைத்துக் கவசங்கட்டி
பேசாமற்குக்குடத்தில் நீறுமூற்றே. 30

உரோமரிஷி முப்புசூத்திரம்-30

முற்றிற்று.

சிவமயம்.

எண்பத்தெட்டாவது,

உரோமரிஷி

வகாரசூத்திரம் - 16.

தந்திமுகத்தான் சதங்கைத்தாள்பாதங்காப்பு
சகலபொருளாகிநின்ற தாயார்காப்பு
முந்தியுரையென்முதனூ லைம்பதுக்குள்
மூலமுதற்றிரிகோண வாசிவாதஞ்
சந்தரன்போலறிவுடைய மக்களுக்குத்
தொடுகுறியுமிடுநலமுந் தோணுந்தோணும்
இந்தமுறைபதினாறுஞ் சொன்னேனுரோம
ரிஷிநூலுக்கெதிர்நூலொன் றில்லைதானே. 1

தானென்றமூலமதி லாறுவீடு
சாகரத்தின்கோட்டையிலே சார்ந்துநிற்கு
மூனென்றவளையமடா திரிகோணந்தான்
உற்றுப்பார்பவளநிறம் போலிருக்கும்
வானென்றவீட்டினுள்ளே கணேசன்றானும்
வல்லபையும்வீற்றிருப்பான் முனைபோலையா
நானென்றுமிவரையல்லோ பூசைபண்ணி
நலமாகசிவயோக நலம்பெற்றேனே. 2

பெற்றசுழிமுனை தானே விந்துநாதம்
பேதமில்லைமேல்மூலத் தடையாளந்தான்
உற்றதிரிகோணமதிற் சீவாத்மாவுக்கு
ஓரெழுத்துமீரெழுத்துங் கீழ்மேலையா
பற்றிநின்றரவிமேலே மதிதானிற்கும்
பதிநடந்தவாகாசம் பிரமபீடம்
முத்தியறிந்தவன்யோகி ஞானியாவான்
முனைமூக்குமத்தியிலே மூட்டுமூட்டே. 3

மூட்டுவதுவோரிதழ்தா மரையினாலே
முக்கோணவளையத்தி னூடுதாக்கி
நீட்டுவதுஅங்குலந்தா னலுசென்றால்
நீங்காமல்ரவிமதியு மொன்றாய்ப்போகும்
கோட்டைவிட்டுக்குதியாது வுடலுய்யாது
குறுகாதுநெடுகாது பொறிசெல்லாது
காட்டிலென்னநாட்டிலென்ன யிந்தயோகம்
கண்டவர்க்குமவுனமுத்தி கைக்குள்ளாச்சே. 4

ஆச்சப்பாயிந்தகுறை நவ்வேசிவ்வாய்
ஆதித்தமண்டலத்துக் கப்பாற்சென்றால்
மூச்சப்பாமேலடங்கும் கீழ்நோக்காது
முனைமூக்குப்பிடரிவழிக் குள்ளேயேறும்
நீச்சப்பாசுழியிலொரு மயிர்ப்பாலந்தான்

நினைவுகொண்டுதாண்டாமற் கெட்டுப்போனார்
பேச்சப்பாபேசினதால் வருமோயோகம்
பிராணயஞானமெல்லாம் பிசகுந்தானே. 5

பிசகாதுஅபானத்தில் மலமேகுற்றம்
பேசுகின்றவுதானத்தில் நாடிகுற்றம்
விசையானகண்டத்திற் கபமேகுற்றம்
மேல்மூலவளையிலொரு மீனகுற்றம்
மசையானமனதுக்கக் கியானங்குற்றம்
மையைந்துபோக்கிலிட்டா லாமேஞானம்
பசியாதுஞானத்திற் பிரகாசித்தாற்
பானமல்லோபதினாறும் பானுகொள்ளே. 6

கொள்ளையிலேகாரமறந் துண்ணவேணுங்
கோளானவியாதிகண்டு தீர்க்கவேணுந்
தள்ளாமல்ரேசகபூ ரகமாங்கும்பந்
தவறாமற்சாதித்துச் சாரவேணு
மெள்ளளவுமனதுபிச காமல்மூல
வேணியிலேகால்நிறுத்தி யேறவேணு
முள்ளபடியானுரைக்குஞ் சிவயோகத்தில்
ஓமத்திற்கேமதிப்பா யுணர்வாயூட்டே. 7

ஊட்டறியாமடையர் கஷாயங்கொண்டு
வொடியானம்விபூதி யுத்தளமாய்பூசி

சேட்டையாய்பலவிதநூல் கற்றுக்கொண்டு
சிவயோகம்வந்ததுபோல் திரிவாரையா
சாட்டியில்லாபம்பரங்கொண் டாட்டலாமோ
தண்ணீரென்றெண்ணெயுண்டால் தாகம்போமோ
வேட்டைபெரிதென்றுபெரு நாயைக்காட்டி
வேடிக்கைபார்க்கும்வெகு வீணர்காணே. 8

காணுதுபசுவுக்கு ஞானயோகம்
கருத்தறிந்துகொண்டாலுங் கைகூடாது
தோணுதுசற்குரு முன்னுகவந்து
சொன்னலுந்தெரியாது தோசிதோசி
வீணுகவென்மீதிற் சொல்லவேண்டாம்
வெட்டவெளியைந்நூற்றின் விபரமெல்லாம்
பூணுதேபோனலு மென்மேற்குற்றம்
பிசகாமற்சொல்லிவைத்தேன் பொருத்திடீரே. 9

பொருத்தமிலாப்பிள்ளைகட்குப் பொருந்தாதப்பா
புதைத்தாலும்பிழைப்பார்கள் பொறியுள்ளோர்கள்
அறுத்தாலுமறைக்கீரை தழையுமாப்போல்
அவரவர்கள்தன்குணத்தின் படிதானுகும்
கருத்துடனேகற்பகத்தைச் சார்ந்தாலுந்தான்
காஞ்சிரங்காயீந்தகதை கடக்கப்போமே

பெருக்கமிலாப்பழத்தினுக்கு ஆர்தானீயும்
பிடித்துவந்துவிட்டனரோ பேணிப்பாரே. 10

போரானசாகரமே பிரமவித்து
பேசுமறைமாற்றுவிக்கு மோகமுண்டு
பூரானகுலமிதுக்கு வசந்தகாலம்
நிமிடத்திலிடிமழையுங் காற்றுமாச்சு
கூரானமூன்றுவித மானதாலே
குமுறுகின்றவக்கினியே யீசன்விந்து
போரானவாயுவதே மாலின்விந்து
பிரமாவின்விந்துமழை பெய்தலாமே. 11

வகாரம்.

ஆமையாஈசன்விந்து இடியாய்வீழு
மக்கினிமண்ணூடுருவிச் சலத்தைக்கோர்க்கும்
ஓமையாபாறையுப்பு மீன்போற்றோன்று
முத்தமனேமண்ணெடுத்துப் பூவாய்நிற்குஞ்
சாவையாமழைக்காலக் காற்றுச்சென்று
சக்கரத்தின்நீர்கிரட்டித் தண்ணீர்கள்ளாய்
நாமையாசொல்லிவிட்டோம் பாறையுப்பாய்
நளமிரதப்பூர்வத்தி னடத்தைதானே. 12

நடத்தைபிந்தவாயுவங்கி அப்புமூன்று
நாதமென்றசாகரத்தி னீராலாச்சு

திடத்திலேயெழுபிறப்பு யோனியாச்சு
சித்தர்களெல்லாமிதனைச் செய்யலாச்சு
உடைத்துவிட்டேனிம்மூன்றுக் கொன்றேயாதி
வுகாரமல்லோபூமியொன்று வூணிப்பாரார்
மகத்தையகலங்களெனக் கட்டிக்கொண்டு
வாழ்ந்திருக்கும்வீணருக்கு வகைதோணுதே. 13
வகையறியாரக்கினியி னுப்பைக்காணார்
வாய்விருப்புக்கண்ணீரான் மார்க்கங்காணார்
தொகையறியார்தீட்சையினிற் சுழியுங்காணார்
துருசுகொண்டுசூதத்தைக் கட்டச்சொல்வார்
வகையறியார்காலபரு வங்கள்காணார்
பாசாணக்கட்டென்று பணந்தாவெனன்பார்
குகையறியார்குடுகுடுக்கை கொண்டாவென்பார்
குருபூசைக்கிருபதுபொன் கொடுவென்பாரே. 14

நாதவிந்துவாலை.

கொடுப்பதற்கிந்நூலறிந்தோர் தன்னைக்கொண்டு
கோடிதனமானாலுங் கொடுத்துவாங்கு
பிடிப்பகற்றுவகையதனிற் கண்டுபாரு
பிய்த்தெறிந்துபோடாதே பிசகாய்போமே
இடிப்புகுந்தவுவர்நிலத்தை நன்றாய்ப்பாரு
இரண்டுமொன்றாய்ச்சேர்க்கவொரு கடலையாறு

அடிகனத்தபானையல்லோ தீய்க்குநிற்கு
மவள்நினைந்துமழைபிடிகாற் றுகாதென்றே. 15

ஆகாதோவேலையிலே கண்டாற்சிப்பிக்
காகாசவித்துவல்லோ முத்தாய்ப்போச்சு
சாகாதோயிந்நீரி லானைக்கல்லு
சத்தியுவர்ச்சூடனங்கே சற்றேபோடே
மேகாதோஇனயினமுஞ் சேர்ந்தாலையா
வெண்கிளிஞ்சிற்கேநீர் விட்டாற்கொல்லும்
போகாதோகுருமுடிக்கும் பாகமெல்லாம்
பூட்டறிந்துபார்த்தவர்க்குப் பொருள்தான்முற்றே. ()

உரோமரிஷி வகாரசூத்திரம்-16

முற்றிற்று.

உ

சிவமயம்.

எண்பத்தொண்பதாவது,

உரோமரிஷி

வகாரச் சூத்திரம்-27.

காப்பு.

ஓம்மூலத்தந்திமுகவன் சரணமிகத்தொழுது
ஆம்மூலநந்தீசர் சரணடியான்றொழுது
தாம்பூலம்பராபரைசரசுவதி யெந்தன்வாக்கினின்று
ஓம்மூலஞ்சூஸ்திரக்காப்புதொழு திரைஞ்சுவோற்கே.

நூல்.

மயமானசூஸ்திரத்தி லுப்புமார்க்கம்
வாதத்திலாதியதாய் விரித்துச்சொல்ல
செயமாகக்குருநந்தி யுபதேசித்தார்
சிவனோடுபார்வதியும் நாவாணிதானும்
நயமாகயெப்பொழுது முன்னேநின்று
நாடியேசூஸ்திரத்தை நயந்துபார்க்க
வயமாகச்சொல்லுகிறே னிருபத்தைந்தில்
வாதியரேயிந்நூலை வணங்கிக்கேளே. 1

கேளடாகரியுப்பைக் கட்டத்தாலுங்
கணபதியின்தேவியருள் பதத்தைப்போற்றி
ஊடாதிரிந்தலையு முலுத்தருக்கு
வொளித்துவைத்தாரென்னாலே கைக்கொடாதே
வாளடாதீட்சணமாங் கபந்தமோடு
வளமானதக்காளை முசுமுசுக்கை
ஆளடாவகைக்கொன்று சாறுபடிகால்தா
னதிற்சொல்வேன்கறியுப்புக் கால்தான்பாரே. 2

பாரடாசொரூபந்தா னிசந்தான்சொன்னேன்
பரிவாகயென்னாலேப் பழித்தாரானல்
ஊடாநாயைப்போற் றிரிந்தலைவாறையா
ருயர்தலைவெடிக்கும்நந்தி சாபமப்பா
காரடாகுருபதத்தைக் காத்தார்சொல்வார்
கண்டித்தநூல்தன்னைக் கருதிவாங்கி
ஊடாவருவார்க ளனேகம்பேர்க
ளுத்தமர்க்குக்கொடுக்கவுந்தான் வேணும்பாரே. 3

பாரப்பாயிதைவிட்டு வுப்பைச்சொல்வேன்
பருமணியாய்கரியுப்பை கலந்துக்கொண்டு
தீரப்பாதீட்சணமாங் கபந்தச்சாறுஞ்
சிறக்கவிடுநாழியப்பா வுப்பிலேதான்
காரப்பாவிதனிலே மூன்றுநாள்தான்

கடுரவியில்வைத்தபின்பு தாளிச்சாறு
வாரப்பாமுன்போல விட்டுநீயும்
வளமாகவற்றினபி னின்னங்கேளே. 4
இன்னமப்பாமுசுமுசுக்கைச் சாறுநாழி
யிணக்கமுடன்விட்டதோ யின்னஞ்சொல்வேன்
வண்மையாயிப்படியே வகையொன்றுக்கு
வளமாகக்காய்ந்தபின்பு ஒன்பதாநாள்
அன்னமடாவரக்காம்பால் நாழிவிட்டு
யதின்பிறகுவதினுடைய கட்டைவெட்டி
தின்னமதாய்த்தோண்டிதனி லுப்பைவிட்டுத்
திடமாகமேருவதாய் மூடக்கேளே. 5
கேளடாயெருக்கிலையை யரைத்துப்பூசி
கிருபையுடனுப்பிட்டுப் பாலுமிட்டு
ஆளடாமுன்னிலேதான் மேலேபூசி
யதின்மேலேசில்லிட்டுச் சீலெசெய்து
வாளடாயீசானம் திருவாணிபூசை
வளமாகவாலையுடன் கணபதியின்பூசை
நாளடாசெய்தபின்பு முழுப்புடந்தான்போடு
நயமானவுப்பதுவுங் கட்டுந்தானே. 6
தானென்றவுப்பதுவு மூலகத்தோர்க்கு
தங்காதுசித்தருக்கா யிந்நூலப்பா

வானென்றபசங்களுக்கு கொடுக்கவேண்டாம்
வளர்நந்திக்குருசாபம் பலிக்கும்பாரு
தேனென்றமனோன்மணியாள் சிவனைக்கேட்டு
திரமாகயெந்தனுக்கு வுபதேசித்தாள்
பேனென்றரவிகோடி காந்திமட்டும்
பஞ்சுபோலெரித்திடுவாய் பாழ்போகாமே. 7

போகாமற்சொல்லுகிறே னிந்தவுப்பிற்
பொய்யல்லமெய்யாக யினிமேல்நாதம்
வாகாமலிரண்டையுந்தான் கூட்டிக்கொண்டு
வயிரவர்க்குப்பூசைபண்ணி புடத்தைப்போடு
ஆகும்பார்செந்தூர மருணன்போலா
மதினுடனேவீரமொடு தங்கஞ்சேர்த்து
நோகாமற்செந்தூரங் களஞ்சிசெம்பி
னைக்கியிட்டுவெளியேழு சேர்த்திடாயே. 8

சேர்த்தபின்புமாத்தேது வெட்டரைதானப்பா
செகமென்றசெம்பதுவுந் தங்கமாகும்
மாத்தென்றமற்றநூல் சொல்லாதுப்பு
யடக்கிவிட்டேன்சுருக்கமதா யிருபத்தைந்திற்
கூத்தென்றபேருக்குக் கொடுக்கவேண்டாம்
கொடுத்தாக்கால்பெறுவயிறு குத்திருமல்வாயு

வாதமென்றநரகத்தில் வீழ்வார்சொன்னேன்
வயதெல்லாங்குறைநோயாச் சாபந்தானே. 9
சாபந்தான்தீராது யார்வந்தாலுஞ்
சற்குருவாம்நந்தியருள் பதம்பெற்றாலும்
அபலமாய்ப்போக்காதே யின்னூல்தன்னை
யாராய்ந்துபார்த்தவர்க்கே வாதந்தங்கும்
நிபமானநூல்தன்னை யொன்றுசொல்லி
நிமிஷத்தில்சித்தியா முப்பின்மார்க்கம்
சமமாகப்போகாதே பேணிப்பாரு
சண்டாளனுக்காற் சாவான்பாரே. 10
சாகாமலிருக்கவென்றாற் றாயைப்போற்றி
சரணமென்றுநந்தியடி தெண்டம்பண்ணு
வேகாமல்நின்றதொரு தலையைக்கேளு
விதமாகச்சாகாத காலைக்கேளு
வாகானவிரண்டையுந்தா னருஞ்சொல்வார்
மகத்தானநந்திகுரு வுபதேசிப்பார்
போகாமற்பரிவாசி யம்மென்றேற்றிப்
பொறிவழியேலலாடத்தைப் புகழ்ந்துபாரே. 11
பார்த்தபின்புவெளியேது வெளியாய்ப்போகும்
பரமானநந்தியைப்போல் தெரிசனமுமுண்டாம்
கார்த்தபின்புபின்னமொரு சிமிட்டிச்சொல்வேன்

கரைகண்டநாதியப்பா வுபதேசித்தார்
நாத்தமென்றகெந்தகத்தில் மெழுகைக்கேளு
நன்றாகக்கரந்தையுட சாறுவிட்டு
நீச்சென்றரசமிட்டு விரமிட்டுத்
தீர்க்கமனோசிலையிட் டாட்டுவாயே. 12

ஆட்டியதோர்தங்கமப்பா கூடச்சேர்த்து
வழகானவூர்க்குருவி புடந்தான்போடு
வாட்டியப்பாசெந்தூரங் கண்கொள்ளாது
வளமானசிதம்பரத்திற் கொடுத்தார்கேளு
வெட்டியதோர்வெள்ளியப்பா பொன்போலாகும்
விளங்கவெள்ளிசேர்ந்திடவே வாயதாகு
மூட்டியதோர்மூட்டெல்லா மிதினுடையமூட்டு
மூதண்டங்கிழித்தாடு மூடந்தானே. 13

தானனபின்னமொரு சிமிட்டுச்சொல்வேன்
தனிச்செம்புகட்டுதற்கு வகையைக்கேளு
தேனனமனோன்மணியாள் சிறந்தரூபி
சிரக்கரைத்துத்தகட்டின்மேற் பூசிப்போடு
கானனசீலைசெய்து புடத்தைப்போடு
களிப்பற்றுசெம்பதுதான் கனகமாகும்
மானகைப்படியே யைந்துதிரம்பார்
வளமாகப்போட்டிடவே வளஞ்சொல்வேனே. 14

சொல்லுகிறேன்கேளடா சொரூபானந்தா
சூட்சமாய்செம்புசுத்திச் சொல்லொணாது
வெல்லுமப்பாமூன்றுபின் செந்தூரத்தை
விதமாகசெம்பிலே விரைந்தூட்டி
சொல்லுமடாவெள்ளியிலே செம்பையூட்டி
சிவந்துருகிலெடுத்துப்பா ராறுமாற்று
கொல்லுமடாபுடம்போடத் தங்கமாச்சு
கொடிதானநவலோகம் பொன்னுமாமே. 15

ஆமப்பாயித்தொழிலை சொல்லவேண்டா
மழகானநூல்தன்னை கொடுக்கவேண்டாம்
நாமப்பாசொல்லுகிறேன் சொரூபானந்தா
நாய்போலத்திரியாதே நயந்துபாரு
வேமப்பாபூநீற்றின் குருவைச்சொல்வேன்
விரிந்தண்டங்கிருந்தாடச் சித்தர்மெச்ச
ஆமப்பாயகத்தீச மூர்த்திசொன்ன
வழகானபூரணசூஸ் திரந்தான்பாரே. 16

பாரப்பாபூரணசூஸ் திரந்தான்கேளு
பாடினார்சவுக்கார வைப்புத்தானும்
பாரப்பாகைமுறைகள் சொல்லவில்லை
யாச்சரியமாய்வழலை சொன்னார்நந்தி
சீரப்பாசவுக்கார வைப்புசொன்னார்

திறமானவெண்ணையமு கழளச்சொன்னர்
வேரப்பாமாதமொன்று காய்தானென்று
வெட்டவெளியாகவுந்தான் விளம்புறேனே. 17
வெளியாகத்தோணுமடா யிந்தநூலில்
வேருவிதமொன்றில்லை வண்ணாறி
யளியாதபூநீறு நிலவுபோடு
யனலுரைத்தகெங்கையுப்பு வழுரிநீரில்
மொளியாகவைந்துதரங் காய்ச்சிப்பின்பு
மோசமேவாராம லெழுதிரங்காய்ச்சி
களியானமெழுகுபதம் வரும்போதப்பா
கடைமருந்தைசொல்லுகிறேன் கருதிக்கேளே. 18
கேளப்பாவீரமுடன் சாமவெள்ளை
கிருபையுடன்வெடியுப்பு ஊசியுப்பு
வாளப்பாசீனமொரு புழுகோடொக்க
வளமாகயறத்தூபி துணிக்கிப்போடு
ஆளப்பாயண்டம்போ லுருட்டிக்கொண்டு
அப்பனேரவிதனிலே காய்ந்தபின்பு
தூளப்பாகடுங்கார மேற்றியேற்றி
துறியுள்ளசுண்ணம்பிற் புடத்தைப்போடே. 19
போட்டபின்புவழலைதன்னை தங்கச்செம்பிற்
புகழாகவைத்துமேற் கொண்டாற்கேளு

யிட்டதொருவறுபத்து நாலுபேரு
மிறைப்பார்கள்பாம்பதனைக் கண்டாலையா
மேட்டியாய்ச்சொல்லாதே வழலைவைப்பு
மேன்மக்கள்சாபமது வந்துதீருங்
காட்டிலேதிரிந்தாலு மெலியாய்ப்போவாய்
கண்குருடுகால்முடங்கள் செவிகேளாதே. 20

கேளாதேபோனுக்கா லிந்தநூலை
கிழித்துதான்விட்டெரிவார் கிளைகளெல்லாம்
பாளாகுந்தலைமுறைகள் குருடுநொண்டி
பறையனும்நாய்போலே படுவாய்நீதான்
வாளடாயிந்நூலைக் கொடுக்கவேண்டாம்
வாய்க்குமொருசாபமப்பா தீர்க்கச்சொல்வேன்
நாளானசப்பாணி குலேநோயப்பா
நாற்குத்துக்ஷயரோக நாடுந்தானே. 21

தானென்றயின்னமொரு சிமிட்டுச்சொல்வேன்
தங்கமொடுவீரமப்பா லிங்கஞ்சூதம்
வேனென்றபாஷாணஞ் சிலைபினேடு
யிதமானகெந்திதங்கந் துருசுசுண்ணம்
நானன்றுய்ச்சொல்லுகிறேன் காசிடைதானப்பா
நல்மாகப்பழச்சாற்று லரைத்துருட்டு

ஏனென்றபுடம்போடச் செந்தூரந்தா
னென்னாலேமுடியாது யிந்தப்போக்கே. 22
போக்கானசெய்தியொன்று சொல்லக்கேளு
புகழானச்செம்பிலிட மாற்றுபத்தாந்
தாக்கானயண்டரண்டம் விரிந்தேயாடு
மறுபத்துநால்வர்க்குச் செந்தூரந்தான்
வாக்கானரகசியமா மிந்தப்போக்கு
வளம்விட்டாலினமதுவே முடியாதப்பா
நீக்கானசூஸ்திரத்தை வைத்துக்கொண்டு
நிலையில்லாத்துரையில்லா வேதையாமே. 23
வேதையின்னஞ்சொல்லுகிறேன் துரிசுநீறு
வெள்ளப்பாஷாணமுடன் வீரம்பூரம்
பாதையென்றகெந்தியொடு அண்டநீறு
பரமானசூதமப்பா வங்கத்தோடு
மேதையென்றகருவோடே பாலையூட்டி
விதமாகவைத்திருந்தாற் சலமதாகும்
காதையிதைவிட்டரைத்து துருசுக்கப்பி
கடுவெயிலில்வைத்திடவே சுண்ணம்பாமே. 24
ஆமப்பாயூக்குருவிற் சூதங்கூட்டு
மாணுணைநந்தீச ருபதேசித்தார்
நாமப்பாசொல்லிவிட்டோஞ் சொரூபானந்தர்

நன்றானயிந்நூல்தான் சுருக்கமப்பா
காமப்பாலிரைத்தவனை யடுக்கவேண்டாங்
கைமுறைகள்காட்டாதே கருச்சொல்லாதே
ஆமப்பாமுன்சாபம் வந்துதீரு
மருளானசூஸ்திரந்தா னிருபத்தைந்தே. 25

அஞ்சானநந்தீச ரெந்தனுக்கு
வருளினாரென்மகனே ரோமரிஷியென்றுங்
கஞ்சமலர்த்திருப்புயனே சொரூபானந்தர்
கடாட்சித்தாரெந்தனுக்கு யானுஞ்சொன்னேன்
வஞ்சகமாய்த்திரியாதே கருவைவிட்டு
வானமென்றபொறிவந்து நீறிப்போவான்
தஞ்சமெனவந்தடைந்து பணிந்தபேர்க்கு
தயவுசெய்வார்சூஸ்திரந்தான் முடிவுமுற்றே. 26

உரோமரிஷி வகார சூத்திரம்-27

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

தொண்ணூறாவது,

கவுபாலசித்தர் அருளிச்செய்த

ஆணிக்கோர்வை-52.

காப்பு வெண்பா.

சித்தானமாத்து செகத்தோரறிந்திடவே
கொத்தானநல்ல கோர்வைசொல்ல—வித்தான
ஆரணராந்தேவமுனி யற்புதபொற்பாதங்கள்
காரணமாயென்நாளுங் காப்பு.

நூல்.

பூவகத்தில்வேறு பொருளும்பிறிவதில்லை
நாவகத்தார்பாட நாட்டம்பிறிதில்லை
தீவகம்போலவந்தென் சிந்தைகுடிகொண்ட
வேவுமனத்திருளும் விளங்கவிடைகொடுத்தேன்
காவும்பலசமயக் கட்டளையைக்கட்டறுத்தேன்.
மூவுலகுமுப்பொருளு முத்திவழியுமறந்தேன்
ஆவலறுமூவாசை யில்லாகடற்கடந்தேன்
தாவுமன்னைதந்தை சற்குருவுந்தெய்வமுமாந்
தேவமுனிதன் றிருவடிக்கேயாளானேன். 1

காப்பாளசித்தாதி சித்தேபோற்றி
காரணமாமெய்ஞ்ஞானங் கதிரேபோற்றி
தாப்பான அறிவுகண்ட சொரூபம்போற்றி
சங்கற்பவிகற்பமில்லா தவமேபோற்றி
மாப்பானசகலகலை வித்தேபோற்றி
மயக்கமெல்லாங்கட்டறுத்த வாழ்வேபோற்றி
கோப்பானவிருடியர்போற் குன்றேபோற்றி
குறைதீரதேவமுனி குருவேபோற்றி. 2

குருவானவேதமுனி நூல்பாராமல்
குருடரைப்போலேன்மயங்கி குறுகிப்போறீர்
கருவானகருமறைத்த சாஸ்திரத்தாற்
காணுமோசிறிதுவித்தை காணமாட்டீர்
மருவானதேவமுனி சுருக்கத்துள்ளே
வைத்திருக்குங்கருவையெல்லாம் வகையாய்ப்பாரு
திருவானகருவதனைக் கண்டாயானாற்
சித்தியெல்லாமெளியில்வந்து சேரும்பாரே. 3

சேரப்பாகோடான கோடிசித்தர்
சித்தியெல்லாம்பெற்றிருந்து மதிமயக்கங்கொண்டு
வாரப்பாருலகத்தில் நூல்செய்யாமல்
வகையோடாலகோகோ மாய்ந்துபோனார்
சீரப்பாதிருமூலர் முதலாயுள்ள

சித்தர்பதினெண்மர்களும் பலன்றெரிந்து
நேரப்பாசாஸ்திரங்கள் செய்துவைத்து
நிலையானசீஷவர்க்கம் நிறுத்திட்டாரே. 4
நிறுத்தியதோர்சாஸ்திரத்தின் றுகைகேளாம
னெறிமயங்கிப்போனவர்கள் கோடாகோடி
மறைத்திருக்குஞ்சாக்கினுட மர்மங்காணுர்
மயங்கியேதிரிந்தவர்கள் கணக்கோயில்லை
உறைப்பதற்கரிதான மண்டபிண்டம்
ஓகோகோவதினுட்பங் கண்டுதேறுர்
சுறுக்கியதோரதைப்போலே மறைத்திடாமல்
சொல்லுவேனுணிக்கோர்வை சொல்லுவேனே. 5
சொல்லப்பாமுந்திமுந்தி காரியங்குருவால்
சூட்சமாய்லபியதனை யறிந்துக்கொண்டு
வெல்லப்பாபலபலசாத் திரங்கள்பார்த்து
வெறுத்துதடாபின்புவா கடனூல்பார்த்தே
மெல்லப்பாயதிலிருக்குஞ் சரக்கைப்பார்த்து
வித்தானவாதத்தில் விருப்பங்கொண்டு
கல்லப்பாசித்தாதி னூல்கள்பார்த்து
கண்ணிருந்துந்தெரியாமற் கலங்கினேனே. 6
கலங்கியேசித்தர்களைக் காணவேண்டி
கவலையுடன்வெகுகாலங் கருதித்தேடி

குலுங்கியே தீவு தீவாந்தரங்கள்
கொடியவனங்குன்றுமலை குகைகடோறுங்
கலங்கியேவெகுகாலந் தேடித்தேடி
சித்தரிடவித்தையப்பா செப்பக்கூடா
புலங்கியேசித்தருக்கு வித்தாமந்தப்
பொருளானபொதிகைமுனி பலன்கண்டோனே. 7

பொதிகைமலைகண்டோமே போனோமென்பார்
போக்கறியார்நீக்கறியார் புலையமாந்தர்
பொதிகைமலைவழியெங்கே குகைதானெங்கே
போபோவொன்றுமறி யார்கள்மூடர்
பொதிகைமலையார்கண்டார் புண்ணியோர்கள்
பொருந்தியேயம்மலையால் குருவைக்கண்டார்
பொதிகைமலைநிலைகொண்டு புலனைக்கண்டு
பொருந்துசித்தர்மகிமைகண்டு பூரித்தேனே. 8

பூரித்துவங்கிருந்து சித்தரோடு
பூராயமாய்ப்பழகி புலனைப்பார்த்து
வேறித்தமாத்திரத்தை வெளியேவிட்டு
வித்தானசாஸ்திரத்தை பார்த்துக்கொண்டு
பாரித்தனொடிவேதை சிடிக்கைவேதை
பலசாதிவேதையெல்லாம் பண்ணிக்கொண்டு

சீருற்றதேவமுனி யருளாற்சித்தர் [மோ.
சிறந்திருக்குஞ் செருக்கையென்றாற் சொல்லப்போ
சொல்லுவதுதேவமுனி அருமையான
தீவாமுந்தேவமுனி தோத்திரந்தான்
புல்லுவதுந்தேவமுனி சாஸ்திரந்தான்
புகலுவதுந்தேவமுனி சூத்திரந்தான்
வெல்லுவதுதேவமுனி சுருக்கமப்பா
விளம்புவதுங்காரணம்நீ கண்டுதானே
புல்லுவதுந்தேவமுனி நிஷ்டையப்பா
பூசிப்பாய்தேவமுனி னூலைத்தானே. 10

தானென்றதேவமுனி யாரோவென்று
தவஞ்செய்துகேட்டாலுஞ் சித்தர்சொல்வார்
வேனென்றமனோலயமாஞ் சித்தருக்கு
வெகுகாலந்தொண்டுசெய்தேன் பிறகுசொன்னார்
மானென்றதேவமுனி யிடமுமைந்தா
மனிதரென்றபிணங்களெல்லாங் காணமாட்டார்
கானென்றதேவமுனி யிடமுமைந்தா
கால்வழியும்நூல்வழியுங் கண்டுகேளே. 11

கேளப்பாசித்தரென்று லவரேசித்தர்
கெடியானஆதிகுரு சித்தரப்பா
ஆளப்பாவந்தகுரு சரபானந்தர்

வனந்தசாபானந்த ரருந்தவத்தில்
வேளப்பாதேவமுனி யென்றுசொல்லி
மேலானமுனியுமவ தரித்தாரப்பா
சூளப்பாவவர்பெருமை யின்னதென்று
சொல்லவென்னுல்முடியாது சூட்சம்பாரே. 12

சூட்சமதாய்ச்சொல்லுகிறே னின்னங்கேளு
சொர்ணகிரியென்றுமொரு கிரிதானுண்டு
ஆட்சியாங்தேவமுனி யதிலிருப்ப
தரிதானசித்தரெல்லா மங்கேநாட்டங்
காட்சியாநீயவரைக் காணவென்றுல்
கவனமாங்குளிகைதனைக் கண்டந்தாக்கி
தீட்சையாற்போவென்றுற் குளிகையீந்து
க்ஷணத்திலேசொர்ணகிரி முடிகண்டேனே. 13

கண்டுகொண்டேனவருடைய திருப்பாதத்தை
கண்ணிலொற்றியென்சிரசிற் கருத்தில்வைத்தேன்
கண்டுகொண்டேனவருடைய கொலுவையப்பா
கரையடங்காவானந்தக் காட்சிகொண்டேன்
கண்டுகொண்டேனவருடைய பெருமையப்பா
காணவென்றுல்வெகுகடினங் கருத்தால்காணு
கண்டுகொண்டேன்தேவமுனி யெந்தாயென்று
கைகட்டியேனின்று கருதினேனே. 14

கருதுகின்றதவசிகளி னூலைநம்பி
கதறியேசிலகாலங் கழித்தேனென்றால்
ஓதுகின்றசித்தருட னூல்களாய்ந்து
வுண்மையுடன்வெகுகால மொழிந்தேனெந்தாய்
அருதுகின்றபொதிகைசித்த ரருளினாலே
யடியேனுந்திருவடியை யடைந்தேன்யானும்
வருந்துகின்றவுனதுதிரு வடியல்லாமல்
வகையறியேன்யென்றுகண்ணீர் ததும்பினேனே. 15

ததும்பியதோர்கண்ணீர்தா னாறுயோட
தார்குழந்தைபிள்ளையைப்போற் றயங்கிவாடி
வெதும்பியதோர்நெஞ்சுருக்கித் தேம்பியிந்த
மெல்லடியில்விழுந்தழுத மெலிவைக்கண்டு
புலம்பியதோரெனையடுத்து நிலைகொள்ளாமற்
போனவர்கள்மெத்தவடா யதிலேநீதான்
யெதும்பியதோர்சித்தமுத்தி யுனக்கேயாச்சு
யெழுந்திரென்றுதேவமுனி யியம்பினாரே. 16

எழுந்துநின்றுகைகட்டி வாய்புதைத்து
யெதிர்நின்றவடியேனை யிருக்கச்சொல்லி
கொழுந்திருந்துபூரண கடாட்சந்தந்து
குருவானதேவமுனி கூறலானார்
அழுந்திருந்துநினைத்து வந்தமார்க்க

மறிவனடாயந்தவித்தை யாருங்காணார்
தொழுதிருந்துவதுவுனக்குச் சித்திபாகும்
தோதகமாம்பிரம்மவித்தை சைகைகேளே. 17

சைகையால்பிரமவித்தை கிடைத்துதென்றாற்
சாதகமாம்புத்தியுள்ள தன்மைவேணும்
மெய்மயக்கும்போதைவஸ்து விலக்கவேணும்
வீறானவகங்கார மெடுக்கவேணும்
மைவிழியார்கலவி யகற்றவேணும்
வருமைகுடிகொண்டவர்போல் வாழ்த்தவேணுஞ்
செய்துபிள்ளைபூச்சியைபோற் றிரியவேணுஞ்
சிறந்தகுருபராபரியை விளங்கவேணும். 18

வேணுமடாயித்தனையுஞ் சித்தர்க்கென்று
விளங்கவேயடியனுக்கு விபரஞ்சொல்லி
காணுமடாசுயதரும லங்கனென்ற
கவுபாலனென்றெனக்குப் பேருந்தந்து
தோணுமடாயிந்த ரகசியமுனக்குத்
தேவாவென்றேயழைத்தேன் சிரசைத்தொட்டு
பூணுமடாபிரமவித்தை முதலாயுள்ள
பூரணமாய்வித்தையெல்லாம் போதித்தாரே. 19

போதித்தயென்மகனே கவுபாலாநீ
புகன்றயிந்தபிர்மவித்தை பலனைக்கொண்டு

மேதித்ததிரிபுவன கோலமட்டும்
வித்தானசாபசித்தாய் விளங்கமட்டுந்
பேதித்ததேவமுனி வாக்கமுன்றுற்
செழித்தவென் றுமிகவுமருள் செய்திட்டார்காண்
ஆதித்தனென்மனதி லுதித்தவாற்போ
லகத்திருளெலாமகற்றி யாட்கொண்டாரே. 20

ஆட்கொண்டனென்னப்பா னென்னையாண்ட
ஆண்டவனார்தேவமுனி யருளினாலே
தாட்கொண்டதாதுவைப்பு வுபசரங்கள்
சரக்குகளுஞ்சத்துருமித் துருவுங்கண்டேன்
வாட்கொண்டசராசரங்கள் முப்பூவழலை
வர்ணமாஞ்செந்தூரம் வகையுங்கண்டேன்
சாட்கொண்டமற்றவித்தை யென்னவித்தை
வித்தானயேமவித்தை வெளிகண்டேனே. 21

கண்டாடுஞ்சரக்குவறு பத்துனாலுங்
கனத்தவுபாசமதுநூற் றிருபத்தாறுஞ்
சென்றாடும்வித்தைகண்டு காட்டமாட்டார்
செந்தூரஞ்சுன்னமுதற் செய்யமாட்டார்
உண்டானவுப்புவகை யிருபத்தைந்து
முலோகங்கள்பதினாறு முளவைக்காணார்

வொன்றனசித்தரெல்லா மறைத்துவைத்தா
   ருளவானமாதாணி வுண்மைகேளே. 22
உண்மையாம்பொன்வெள்ளி யாணிக்கோர்வை
   ஓகோகோவாணியது யிருபத்தேழு
தன்மையொடுமேல்வெட்டு வுள்வெட்டென்றுஞ்
   சாதாவிமென்றதுதான் வகைமூன்றப்பா
என்மையதிற்பதினெட்டு மேல்வெட்டாகு
   மேடாணியன்வெட்டு வொன்றுசாதா
குண்மையதின்குறிப்பதனை சொல்லக்கேளு
   குத்துவெட்டுகாய்ப்புள்ள சாதாவாமே. 23
ஆமென்றுயிருந்ததைத்துக் குறிப்பினாலே
   யடவாகமாற்றனை யறியவேணும்
ஓமென்றுமேல்வெட்டு முன்னேசொன்னே
   ஞெருமாத்துஆணியின்மே லொருகுத்தாகும்
ஓமென்றதொண்ணூரைமாத் தாணிதண்ணி
   லொருகுத்துமொருவெட்டு மிருக்குமென்று
தாமென்றயெனையடிமை கொண்டநாதன்
   சற்குருவாங்தேவமுனி யுரைத்தவாறே. 24
உரைக்கக்கேளிரண்டுமாத் தாணிமேலே
   வுத்துப்பாரிரண்டுகுத் திருக்குமப்பா
பிறைக்கக்கேளிரண்டரைமாத் தாணிமேலே

பிரண்டுகுத்துமொருவெட்டு மிருக்கும்பாரு
முரைக்கக்கேள்மூன்றுமாத் தாணிமேலே
வரிசையாய்மூன்றுகுத்து வைத்திருக்கும்
முரைக்கக்கேள்சகலகலை ஞானமூர்த்தி
முத்தரெங்கள்தேவமுனி மொழிந்திட்டாரே. 25

மொழியைக்கேள்மூன்றரைமாத் தாணிமேலே
மூன்றுகுத்துமொருவெட்டு மிருக்குமப்பா
பிழியக்கேள்நாலுமாத் தாணிமேலே
பிரண்டுசாய்ப்பிருக்குமடா யேமாறுதே
கழியக்கேள்நாலரைமாத் தாணிமேலே
நாலுகுத்துமொருவெட்டும் நன்றாய்ப்பாரு
செழியக்கேள்சித்தாதி சித்தரெங்கள்
தேவமுனியெனக்குரைத்த செயலிதாமே. 26

செயலானஅஞ்சிமாத் தாணிமேலே
சிறந்திருக்குமைந்துகுத்துத் தெளிவாய்ப்பாரு
அயலானவைந்தரைமாத் தாணிமேலே
யைந்துகுத்துமொருவெட்டு மறிந்துகொள்ளு
மியலானஆறுமாத் தாணிமேலே
யேங்கவேநாலுமெட்டு மிருக்குமென்று
புயலானசுவர்ணகிரி வாசரெங்கள்
புராதனராந்தேவமுனி புகன்றிட்டாரே. 27

புகலவேஆறேகால் மாத்தாணிக்குப்
புள்ளடியுமொருசாய்ப்பு முண்டுபாரு
அகலவேஆறரைமாத் தாணிமேலே
புள்ளடிமாத்திரமிருக்கு முணப்பாரு
புகலவேயாறேமுக்கால் மாத்தாணிக்குள்
புள்ளடியுமொருவெட்டும் பொருந்துமென்றுங்
குகலவேசனகர்கோத் திரத்தில்வந்த
குணமுடையார்தேவமுனி புகன்றார்தானே. 28

தானென்றயேழுமாத் தாணிமேலே
சதிராகமுணுவெட்டுத் தங்கிநிற்கும்
ஊனென்றயேழேகால் மாத்தாணிக்கு
வொருசாய்ப்பாயிருக்குமடா யுரைத்துப்பாரு
யேனென்றயேழரைமாத் தாணிமேலே
யிரண்டுமெட்டுமிருக்குமென்று மெந்தனுக்கு
சீரென்றபரமகுரு ஞதரெங்கள்
தேவமுனியெனக்குவுப தேசித்தாரே. 29

தேசித்தேயேழேமுக்கா லாணிமேலே
சிறந்தவொருவெட்டிருக்குந் தெளிவாய்க்காணு
யோசித்தபிந்தவெட்டு மேல்வெட்டாச்சு
யிதற்குமேல்வுள்வெட்டு யியம்பக்கேளு

வாசித்தயெட்டுமாத் தாணிக்குள்ளே
வரியாகவிரண்டுசாய்ப்பா யிருக்குமென்று
பூசித்துயென்னப்ப னென்னையாண்ட
புகழானதேவமுனி புகன்றவாரே. 30

வாரானயெட்டேகால் மாத்தாணிக்கு
வண்மையாயொருசாய்ப்பு யிருக்கும்பாரு
போரானயெட்டரைமரத் தாணிக்குள்ளே
பேசுகிறேன்புள்ளடியொன் றிருக்கும்பாரு
சீரானயெட்டேமுக்கால் மாத்தாணிக்குள்
சிறந்தவைந்துவெட்டதுவு மிருக்கும்பாரு
தோராதசித்தரையுந் தேற்றுமெங்கள்
தெய்வமுனிவனுக்கிரகஞ் செய்திட்டாரே. 31

செய்திட்டவொன்பதுமாத் தாணிக்குள்ளே
செம்மையாய்நாலுவெட்டு மிருக்குமப்பா
மொய்திட்டவொன்பதேகால் மாத்தாணிக்கு
மூன்றுவெட்டுமிருக்குமதை வூணிப்பாரு
யெய்திட்டவொன்பதை மாத்தாணிக்கு
விரண்டுவெட்டிருக்குமது வெடுத்துப்பாரு
வெய்திட்டதேவமுனி யெனக்குநன்றாய்
விபரமாயெடுத்துரைத்தார் மேலுங்கேளே. 32

மேலானவொன்பதேழுக்கால் மாத்தாணிக்கு
வெட்டொன்றேயிருக்குமது வுள்வெட்டாச்சு
மேலானபத்துமாத் தாணியென்றும்
வெறுஞ்சாதாவாயிருக்குந் தங்கந்தங்கம்
மேலானமாத்துபத் தரையுமாகு
மேலுண்டுமதற்காணி யில்லையப்பா
மேலானபத்தரையுங் காணவென்றால்
மெய்கண்டதேவமுனி நூலைப்பாரே. 33

நூலுரைத்ததேவமுனி யாதிநூனி
னுட்பமாயெனுக்குரைத்த னுணுக்கத்தோடே
மேலுரைத்தலாணியது யிருபத்தேழு
மேல்வட்டமுள்வெட்டும் விளங்கச்சொன்னேன்
மாலுத்தவுலகத்தோர்க் ககப்படாமல்
மகத்தானசித்தரெல்லா மறைத்தாரந்த
ஆலுரைத்தஆணிசெய்யும் வகைதான்சொல்வே
னப்பனேயதனையும்நீ யடவாய்க்கொள்ளே. 34

கொள்ளப்பாவுலகத்தி லாணிசெய்வோர்க்
கொழுஞ்சரிகைசெம்புவெள்ளி பொன்னுங்கொண்டு
விள்ளப்பாயினமறிந்து செய்திட்டாலு
மேதினியோர்க்கதிலதிக லாபமில்லை
தெள்ளப்பாதேவமுனி வர்க்கத்தோர்கள்

செய்யுமந்தஆணியைப்போற் செய்தாயானால்
உள்ளப்பாயிதிலதிக லாபமுண்டு
வுண்மையாய்ச்சொல்லுகிறே னுணர்வாய்க்கேளே.

ஆணிசெய்யும் வகை.

காணப்பாஆணிசெய்யும் வகையேதென்றால்
கருவாகச்சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளு
ஊணப்பாயிந்தநூற் சாரங்கட்டு
வுறுதியாய்ச்செம்பினுட வீரல்போக்கி
யேனப்பாவந்தசெம்பில் வெள்ளியோடு
யினங்கண்டுயிடைகண்டு சேர்வைகண்டு
ஆனப்பாவொருமாத்து ஆணிதொட்டு
ஆறுமாத்தாணிமட்டு மடவாய்ச்செய்யே. 36

செய்யப்பாவாறுமாத் தாணிமேலே
செப்பினேனென்பதே முக்கால்மட்டு
முய்யப்பாசுத்திசெய்த செம்புதன்னோ
டொக்கவேவெள்ளியொடு தங்கங்கூட்டி
செய்யப்பாசேர்வையுட னினமுங்கண்டு
சேர்த்துவிடுஆணியது யிருபத்தேழு
மெய்யப்பாதேவமுனி யெந்தனுக்கு
விபரமாயெடுத்துரைத்த விதியிதாமே. 3'

உறைகல்லின் விபரம்.

ஆமென்றபொன்வெள்ளி மாத்துதன்னை
யறிவதற்குச்சித்தரெல்லா மாலோசித்து
ஏமென்றநதிமலைகள் பரிசோதித்து
இசைந்தகருவயிரக்கல் லெடுத்துக்கொண்டார்
ஓமென்றபொன்வெள்ளி யுறைப்பதாலே
வுரைகல்லென் றுலகத்திற் பேருண்டாச்சு
தேனென்றகருவயிரக் கல்லின்சோதி
தேவமுனிதாமுரைத்த நூலைப்பாரே. 38

மெழுகுவுண்டை விபரம்.

நூலானவுறைகல்லின் வகையைச்சொன்னே
னேக்குகின்றமெழுகுண்டை நுட்பங்கேளு
மேலானசிரட்டைசரி தேங்காயெண்ணெய்
மெழுகுடனேசேர்த்துருக்கி வுண்டைசெய்து
மாலானவுரைக்கல்லி லொத்திப்பார்த்தால்
மாத்தினுடபேதமெல்லாம் வகுத்துக்காட்டுஞ்
சேலானசித்தசா பானந்தரீன்ற
தேவமுனியெனக்குரைத்தார் தெளிவாய்த்தானே. 39
தானென்றபாமகுரு ஞதரான
சற்குருவாங்தேவமுனி ஞதரெங்கள்
தேனென்றதிலர்தமுனி யறிவானந்தர்

சித்தர்மெய்ப்போதரொடு லோகானந்தர்
கானென்றகவுபால றுனுஞ்சொன்ன
குணமான அறிவினா லதனைப்பாரு
ஆனென்றஅறிவினா லதனைப்பார்த்து
ஆராதாரச்சாக்கி னருமைதானே. 40

ஆராதாரச்சரக்கு விபரம்.

அருமையடா ஆராதா ரச்சரக்கா
லப்பனேயண்டபிண்ட மனைத்துமாச்சு
அருமையடாயிதின்பெருமை யென்னசொல்வேன்
ஆஆஆசத்திசிவம் ஆறிற்காண்பான்
அருமையடாசித்தர்செய்கை சொல்லொண்ணுது
யடுத்தவர்க்குப்பணிசெய்து யறியவேணும்
அருமையடாதுரிசிவெடி யுப்புகார
மருஞ்சாரங்கரியுப்புச் சீனந்தானே. 41

சீனமொடுசொன்னசரக் காறுதன்னிற்
சிடிக்கையினுலொன்ருேடொன்று கட்டிப்போகுந்
தானமொடுநினைத்தடுதல்லாம் பற்பமாகுஞ்
சரக்கெல்லாங்கடுங்காரச் சுன்னமாகும்
வானமொடுகளகமெல்லா மிதனுலாகு
மகத்தானசெந்தூர மாகும்பாரு

தீனமொடுசெயநீருந் தீநீராகுந்
திருவகங்களிதிலனந்தஞ் செய்யலாமே. 42
ஆகுமடாசித்தர்சொன்ன நூல்களாய்ந்த
வறிவுடையோர்செய்துகொள்ளும் வேதைதன்னில்
ஆகுமடாதிரைசவுடு களிம்புவூரல்
சவளையொடுநழுகலிது வெல்லாமாறும்
போகுமடாவென்றுசொன்ன வூட்டகாய்ப்பு
புடநயப்புகாகாப்பு பொருந்திநிற்கும்
ஆகுமடாயித்தனையு மாறுதார
வறுசாக்கால்மகனேநீ ஆய்ந்துபாரே. 43

வழலை மார்க்கம்.

பாரப்பாரசவாதங் காணவென்றுற்
படுகெந்தினல்சாசங் கட்டவேணும்
காரப்பாயிதையறிந்து செந்தூரத்தாற்
காட்டுமுன்னேபூரணமாம் பரிசவேதி
சேரப்பாவதுகளெல்லா மறிவுகொண்டு
சிவயோகிக்காகுமடா செகத்தோர்க்காக
சாரப்பாவதில்மயங்கி திரியவேண்டாம்
சமுசாரிக்கானதொரு ஆதிசொல்வேன். 44
ஆதியென்றமூலமப்பா சொல்லக்கேளும்
யாருக்குந்தெரியாது வழலைமார்க்கம்

பாதிமதியீந்தாலே ரவியைக்கட்டி
பண்பானசரக்கெல்லாஞ் சுன்னம்பண்ணு
சேதியென்றபச்சையிட்டு வேதையாகு
சிறப்பாகவழுரையா மாணிக்கொக்கும்
நீதியாயிதைதொட்டு சீனமேசெய்து
நிர்மலமாம்வேதையெல்லாஞ் செய்துபாரே. 45

செய்யப்பாயின்னமொரு சிடிக்கைவேதை
செயமானயீந்தாலே துருசுகட்டி
எய்யப்பாசெயரசத்திற் கொடுத்தாயானு
லெட்டரையாமணிக்கு யெளிதில்வேதை
பொய்யப்பாசொல்லவில்லை சித்தரெல்லாம்
பூட்டிவைத்தபெரும்பூட்டை வுரைத்துக்காட்டி
மெய்யப்பாபெரும்பாதை தனிலேவிட்டேன்
வேறுவழிபோகாமல் மேவிப்பாரே. 46

பாரப்பாயீந்ததனை யெடுத்துக்கொண்டு
பக்குவமாய்ச்சாரத்திற் கவசம்பூட்டி
சீரப்பாபுடம்போடக் கட்டிப்போகுஞ்
சிவப்பானசெம்புதனிற் கொடுத்தாயானல்
தோப்பாகளிம்பூரல் விட்டுப்போகும்
தெளிவானரசத்ததிலே கொடுத்துப்பாரு

நேரப்பாயேழரையா மாணிக்கொக்கும்
நிர்மயமாமிதினுடைய கருவைக்காணே. 47
காணப்பாயீந்தாலே கட்டிக்கொண்ட
கருவானசாரமதைப் பொடியாய்ச்செய்து
பாணப்பாசிறுநீரை விட்டரைத்து
யப்பனேநாதத்திற் கிருசமீய்ந்தாற்
பூணப்பாகிருசத்தால் நாகங்கட்டும்
புகழானசெம்பதனிற் கொடுத்தாயானல்
தோணப்பாவொன்பதரை யாணிக்கொக்குஞ்
செம்பொன்மகமேருவுந் திரணமாமே. 48

ரசிதமார்க்கம்.

வாச்சுதடாமெய்யான யேமவேதை
யப்பனேசெப்புகிறேன் ரசிதமார்க்கம்
வாச்சுதடாவோகோகோ விந்தினலே
வலுமையுள்ளவீரனீ கட்டியப்பா
நீச்சுதடாசெம்பினுக்குக் கீழ்மேலேற்
நிறையானகுக்கிடத்தில் நீறிப்போகுந்
தாச்சுதடாயிதரசத்தில் வெள்வெங்காந்தான்
ருக்கினர்சித்தவித்தை சித்திகொள்ளே. 49
கொள்ளப்பாவுண்மையிது வெக்றூலப்பா
கோடினூல்பார்த்தாலுங் குணத்தைக்காணூர்

பொள்ளப்பாயென்னூலும் புராதனூலும்
　புத்தியென்றதிராசுதனில் நிறுத்துப்பாரு
அள்ளப்பாசித்தரெல்லா மறைத்துவைத்த
　மூலமெல்லாமெடுத்ததிலே மூட்டிவைத்தேன்
முள்ளப்பாயென்னூலை யறிந்துப்பார்த்தா
　லானந்தவூஞ்சலில்வைத் தாட்டும்பாரே. 50

வாட்டுகின்றயென்னூலை யறிந்துகேழ்ப்பா
　ரவர்மனதையின்னதென் றறிந்துபார்த்து
காட்டுகின்றபரம்பரையாஞ் சித்தருக்குஞ்
　சன்மார்க்கஞானியர்க்குந் தடைசொல்லாதே
பூட்டுகின்றமனோன்மணியைப் பூசைசெய்ய
　புத்திகெட்டபசங்களுக்குப் புலனில்லார்க்கும்
பூட்டுகின்றசாஸ்திரத்தின் பெருமைகாணார்
　குருட்டுயென்றமெந்நூலைக் கொடுத்திடாதே. 51

கொடுத்திட்டசித்தாதி சித்தரெங்கள்
　குலதெய்வமாகவே குறியுங்காட்டி
அடுத்திட்டனென்னப்ப னென்னையாண்ட
　வாண்டவனார்தேவமுனி யருளினாலே
எடுத்திட்டேன்லோகவுப காரமாக
　யிசைத்ததொருநல்லாணிக் கோர்வைனூலை
முடித்திட்டேன்பாடலுமோ ரைம்பத்தொன்று
　மொழிந்தகவுபாலசித்தன் முடித்திட்டேனே. 52

கவுபாலசித்தர் ஆணிக்கோர்வை-51

முற்றிற்று.

உ

சிவமயம்.

தொண்ணூற்றேழாவது,

திருவள்ளுவர் அருளிச்செய்த

நாதாந்தத் திறவுகோல்-97.

இருவொளிவெளிமூன்றாகி யிலங்குமுப்பாழுக்கப்பாற்
பெருவெளிகைலைமீதே பேரொளியாகியெங்கும்
குருவழிகுலத்துக்கெல்லாங் கோதிலாஞானமானம்
திருவருளுருவமான திருவடிநெஞ்சில்வைப்பாம். 1

முப்பாழுமூன்றுமாய்கை முப்பதிமூன்றுவட்ட
மப்பாழுமிப்புறத்து மானந்தமயமாய்நின்று
தப்பாமலுலகுக்கெல்லாந் தானவனானசோதி
வைப்பாகவெந்தனுச்சி வட்டத்தேவதைத்தநாதன். 2

வெளியொளியிருள்மூன்றற்ற வெறும்பாழதானவீட்டிற்
கனிதருமுச்சிஞானக் கண்ணிலேகருத்துவைத்து
மொளிதருமுச்சிஞான முற்றிரைமெய்த்ததாகி
வழிவழியுச்சிவட்டம் வாள்பதிபாசஞானம். 3

மூலமாம்நடுவுமுச்சி முப்பதிமுப்பாழென்று
ஞானமுமப்புவன்னி நாடியதகமைதேறார்

சீலமாமானுஞ்சத்தி சிவபதஞ்சிற்பரத்தில்
தோலமேமூன்றில்நின்ற முடிச்சதுவுச்சிதானே. 4

உச்சியினிடமாய்நின்ற வுதையமாஞ்சோதிபாத
நச்சியேயிருப்பானந்த நாதாந்தவெளியிலேதான்
வச்சிரவெளியானந்த வாசியாலடர்ந்தவன்னி
குக்கியாலுச்சத்தானைக் குருவினாற்றெறிந்துகொள்ளே.

உச்சியாம்வட்டந்தன்னி லுருவியேயாராதாரம்
நச்சிவஞானசோதி நாதன்றன்பாதந்தன்னில்
உச்சிவநிஷ்களத்தே னிர்மலன்வடிவதாகு
முச்சிமேல்வைத்திருப்பார் வுயர்குருபுத்திரர்தாமே. 6

முப்பத்திமாய்கையாலே மூவுலகெல்லாந்தோன்றி
முப்பதிமூன்றுபாழில் மூவருந்தொழிலால்நின்று
முப்பதிமூன்றுவட்ட முச்சுடர்மூர்த்தியாகி
முப்பதிதானேயெங்கு முடிந்ததுசோதிபாதம். 7

முப்பாழுமூன்றுநாடிமூலமுநடுமுடியாம், முப்பாழு மூன்றுவட்ட முச்சதுமூன்றுமாகும், முப்பாழேமுத்தியாகி முடிச்சுதா மூலத்துள்ளே, முப்பாழே பெரும்பாழான முறைமையைக் கருவாற்காணே. 8

மூலமேவுச்சியாகு முச்சியினடுவேமூலம்
மூலமேசாதியாகு முப்பொருளொடுக்கமங்கே

மூலமேபகலிருவாய் முடிந்ததுமூலநாடி
மூலமேமுச்சிதன்னை மூடியேதிறந்துபாரே. 9

மூடியுந்திறந்துபார்க்கில் முப்பொருளுதயமாகு
மூடியுந்திறந்துபார்க்கில் முச்சுடருதையமாகு
மூடியுந்திறந்துபார்க்கில் முப்பதமுதையமாகும்
மூடியுந்திறந்துபார்க்கில் மூன்றுமுப்பாழதாமே. 10

முத்தியேமுப்பாழாகு மூவருந்தேவராகு
முத்தியேமூலமாகி முப்பொருள்தானாய்நிற்கு
முத்தியேநாடிமூன்றால் முறிந்திடப்பொருள்பாழாகு
முத்தியுஞ்சித்திரண்டு முடித்திடமூலமாமே. 11

மூலமேமேல்கீழாகி முடிநடுமுப்பாழாகி
யேலமேமூலமாகி யிருந்ததுவெளிபாழாகுஞ்
சீலமாமுச்சமீதே திருவடிநடனமாகு
மூலமாஞ்சோதியாகு முடிந்திடந்தானேமுத்தி. 12

பசுபதி பாசம்.

பதிபசுபாசமான பாவகமுப்பாலாகும்
பதிபசுபாசமான பாவகமுத்தியாகும்
பதிபதிபாசமான பாவகமூவருகும்
பதிபசுபாசமூன்றும் பராபரத்தடக்கந்தானே. 13

மும்மலமூன்றுநாடி முக்குணிமுத்திமுப்பாழ்
மும்மலங்கெட்டதாலே முப்பாழுமதுவேயாகு

23 †

மும்மலமயக்கத்தாலே மூவர்முத்தொழிலதாகி
மும்மலங்காமியத்தே மூவரும்பிறந்தவாரே. 14

நாசியும்நயனமுச்சி நடுவிலேநடனமாடும்
வாசியைத்தேசியாக்கி வழியுச்சிமீதேயேறி
தேசிகனுகவந்த திருவடிதிடமதாக
நாசியினடுவேபார்த்தால்நாதாந்தந்தோன்றுந்தானே. 15

உச்சியும்நாக்குங்கண்ட முகமுடனுந்திலிங்கம்
நச்சியமூலநாடி நடுவதாம்நாட்டமூன்ருய்
வச்சிரமூலமான வழிசுழிவீதிதானே
உச்சியாமுணர்வுமூல முருவியொன்ருகிநிற்கும். 16

மூலமாஞ்சோதிநாடி மூலாதிபாதமாகி
மாலயன்தேவர்க்கெட்டா மலரடியுச்சிமூலஞ்
சீலமாம்பிரணவத்தே சிவலிங்கரூபமாகி
மூலமுமேலுமொன்ருய் முடிந்திடச்சோதிபாதம். 17

வேறு.

முப்பாழேமுச்சுடராய் திசைமூன்ருகி
மும்மலமுமுடிச்சாகி மூலமாகி
முப்பாழேவெளியொளியு மிருள்மூன்ருகி
முடிந்தபடியுச்சியெனு மூலமாகு
முப்பாழுந்தானுன பெரும்பால்தன்னில்
மூலமாம்நாதாந்த முதலதாகு

முப்பாழுந்தாண்டியதோர் பெரும்பாழ்தன்னில்
மூலமாம்நாதாந்த நூலைப்பாரே. 18

இதையமதில்நடமாடும் பாதந்தன்னை
யிடைபின்தான் சுழிமுனையாயிடைவிடாமல்
ஒதையமதினுதித்தகலை பகலிராவோ
டுயர்பாதந்தூக்கியொரு பாதந்தன்னிற்
பதவிதரும்நாதவிந்து பாதமிரண்டாய்
பார்விசும்புமொன்றாகிப் பார்த்தபாத
மிதயமதில்நடமாடுங் கமலபாத
மெந்தைகுருபாதமது வேகபாதம். 19

அக்கினியாந்திரைசுழினை முடிச்சுணீங்கி
ஆதாரநிராதாரத் தடுக்கும்நீங்கி
திக்கரியதிசையெட்டு மூலகீரேழுந்
திக்குகளும்பதினாறு தெருவுநீங்கி
மிக்கினியதத்துவங்கள் கருவுநீங்கி
மேல்கீழும்நடுபக்க மேருநீங்கி
மக்கினியுந்திரையலுக்கு மகண்டசோதி
அகாரமாய்ப்பொருளென்றே அறிவார்நல்லோர். 20

ஆமெனவும்ஊமெனவும் அவ்வுமோவ்வாய்
அக்கினியின்திரையறுக்கு மருளுமாகி

ஆமெனவேகண்டவெளி யிருளாய்த்தோன்றி
யணுவணுவாமப்பாலுக் கப்பாலாகி
ஊமெனவேயுயிராக வுலகமெல்லாம்
முண்மைதனையாவர்க்கு முரைக்கொணாதே. 21

உச்சிவெளிநயனநடு னாசிமூல
மொன்றாகிநடம்புரியு முண்மைதன்னை
வச்சிரமாமணிச்சோதி நடனமென்று
மனமூலமாகவே மனத்தினோக்கி
அச்சமறக்கூத்தாடும் கண்டசோதி
யானந்தபராபரமா மனாதிமூல
நிச்சிவமாநிட்களத்தே நினைத்தபேர்க்கு
நித்தசுத்தபடிகமதாய் நிற்குந்தானே. 22

வெளிமூலமாவதுவே திரையதாகி
வெளிக்குள்நின் றவித்ததுவே சிவமதாகி
ஒளிமூலசத்திபா னாதவிந்து
காட்சியாஞ்சதாசிவமா மயேசனாதி
யளிமூலமாலயனோ டாணுமாகி
யைம்பூதமன்னமதி லெல்லாமாகி
வெளிமூலங்கடந்துநின்ற சோதிமூலம்
வேறொன்றுமில்லாத வெறும்பாழாமே. 23

வேறு.

மேலாதாரைந்தடுக்குநிலைமேல் கீழ்நடுவாய்மேவினின்று
நாலாகலைக்குமெட்டாமல் நாதாந்தத்தேநடுவாகி
மூலாதாரச்சுடர்மூன்றாய் மூச்சுமுனையில்முடிந்துநின்ற
காலாதாரச்சுழிமுனையைக் கடந்தேபார்காரணமே. 24

மேல்கீழ்ந்திடுவாய்மேவிநின்று மேலாம்பதமாமெய்ப்பொருளாய், கால்மேல்தலைகீழாய்நின்று கருத்தாய்கருத்துக்குட்பொருளாய், மேல்மேலுருகிவெளியுருதிமேலாம்பதத்தைக்கடந்துநின்று, கால்மேலானகாரணத்தைக் கருதியிருப்பார்காரணரே. 25

அவ்வாவுவ்வாயம்பரமா மமர்ந்துநின்றவாசிதனை [தே
யொவ்வாயொளிவாய்வெளியாகி யெங்குஞ்சோதிமூலத்
யவ்வாயகண்டவெளியாகி யனாதிமூலப்பாதமதாச்
சவ்வாய்நின்றதம்வரத்தை சகலம்பிறந்துதன்னையே. 26

வோதங்கடந்தபொருள்முடியிற் பொருந்தியிருக்குமாத்மாவை, நீதங்கடந்தநிலைபாத்தன் நிறைபரமாத்மாவாகி, பேறங்கடந்தவமுதான பெரும்பாழ்வெளியே பேதமின்றி, நாகங்கடந்தநாதாந்த னானேதானாய்நாடிடுமே. 27

திரைவெளியாஞ்சிவமறவாந் திருவாஞ்சத்திமன்மாரும், நிரையாங்குடிலைக்கதிர்நாதம் நிலையாஞ்சோமன்வித்தாகுங், கரையம்புலனேயைவருமாய் கறந்துவாதிமார்க்

கருவியுஞ்சாய்ப், பரைதான்பண்டைப்படிபார்த்தாற் பர
மாத்மாவாய்நிற்குமதே. 28

பரமாத்மாவாம்பராபரத்தே பரமசீவாத்துமாத்தோன்
றி, நரவாத்துமாவாத்துமா தோன்றுநாலாயோனிபலவு
யிரா, யிரவாத்துமாக்களாய்த்தோன்றி யிறந்தேபிறந்து
யிருவருமாய், பரமாத்துமாவாய்நின்றபடி பரமகுருவா
ய்ப்பார்ப்பதுமே. 29

ஐயுங்கிலியுஞ்சவ்வாகி யமர்ந்தேநிற்குமுப்பாழை
மெய்யும்பொருளிற்றூன்கூட்டி மேலாம்பதத்தேதாளுடி
பொய்யாம்பொருளாமாதாரம் புண்மயக்கந்தான்கடந்து
ஐயுங்கிலியுந்தற்பரத்தே நிற்பாரறிவையுடையோனே. ()

வே று.

நடமாடுந்திருவடியை யிதையந்தன்னி
ளுகயிடையின்கலையாச் சுழுனையாகி
நடமாடுந்திருவடியை யுச்சிமேலே
ளுதாந்தக்கூத்தெனவே வேதமோடும்
நடமாடுந்திருவடியை புருவமத்தில்
நாடினின்றுபூரணமாய் நவின்றுநிற்கில்
நடமாடுந்திருவடியை பிராணவாயு
நாசிமுனைமீதினின்றே நடக்குந்தானே. 31

நாசிமுனைமீதேறி நடக்கும்பாதம்
நடுவெளியாங்கமலமுச்சி ஞானத்துள்ளே
மாசிலாவடிவுசிவ லிங்கமாதி
மாசற்றபளிங்கொளியாய் வதிர்ந்தசோதி
ஊசிமுனைமீதினிலே யண்டமெல்லா
வோங்கிநின்றவாறெருக்கு முச்சிமூலம்
வாசியெனுந்திருவடித்தா மரையேயுச்சி
வருயுருவிநாதாந்த வடிவதாமே. 32

வேறு.

மூலமுநடுவுமொன்றாய் முந்திடமூலநாடி
சீலமாந்தடமாமந்த சோதியாஞ்சுழினைவீதி
சாலவுமதனைப்பற்றி தங்கிடுவாறேயாகிற்
கோலமாய்நாதனுந்தங் குண்டலித்துணையினேரே. 33

ஆதியினானசோதி அடிநடுமுடியுமாகி
மாரியாய்ப்பானுய்நின்று மண்டலமூன்றுமாமே
யேறியுமிரங்குபாதை யேகமாமூலபாதஞ்
சாரியாய்வேகநாதன் றனையுணர்ந்திருந்தவாரே. 34

மூலமுமுடியுமொன்றாய் மூச்சினையடக்கியுச்சி
மூலமாம்வெளியுருவில் நாதாந்தசோதிதானுங்
கோலமேகண்டுநித்தங் குறியதாய்க்குரித்தபேர்க்கு
காலங்கள்கழித்தசோதி கடவுளேதானுய்நிற்பர். 35

மூலமுமேலாமொன்றே முச்சுடர்முடிச்சுமொன்றே
காலமுங்கணக்குமொன்றே கருதியபொருளுமொன்றே
ஞாலமும்விசும்புமொன்றே நாடியின்வடிவுமொன்றே
சீலமுங்கருமமொன்றும் நின்றதுசோதிமூலம். 36

நயனத்தைமூடிஞசி நுனியிலேநாடிபார்த்தால்
மயமற்றவரூபமாகி மாசிலாவடிவுமொன்றுஞ்
செயமுற்றமூலபாதந் திருநடம்வீட்டாகும்
பயனற்றவுச்சிமூலம் பதியிலேபதிந்துநில்லே. 37

நாசியும்புருவநெற்றி நடுவிலேநாடிப்பார்த்தால்
வீசவேவெள்ளிமுத்து விளங்குமுன்சிவப்புபச்சை
பேசியவருமமெல்லாம் பிரணவந்தன்னிற்றேன்றும்
மாசிலாவடிவமுச்சி மானிலாதன்னிற்பாரே. 38

வேறு.

நாசிநுனியேயடியாகு நயனமிடையேநடுவாகி
வாசியுதித்துயிடமூச்சி மலரேமுடியாய்நின்றமுனி
பேசியேயிருந்தபிரணவத்தை பிரியாதுச்சிமூலத்தே
நேசித்திருப்பார்திருவடியில் நினைப்புமறப்புமிரண்டு. 39

வேறு.

நிராதாரநிஷ்களத்தே நின்றதோர்மூலம்
பராபரப்பதியதாகிப் பரந்தனுதாந்தசோதி

தாரதாத்துச்சியிலே தாண்டவமானமூர்த்தி
புராதனப்பதியதான பொருளினைபோற்றிகாணே. 40

வேறு.

உச்சிப்புருவநடுவாகி யொன்றாய்நின்றமூலத்தே, பச்சைப்பழவம்பளிங்கொளியாய் பதிந்தேநின்றபாதமதை, நச்சியிருப்பார் பெரியோர்கள் நாதாந்தத்திற்பேரொளியாய், வைச்சகுறிகாணிரவுபகல் மறவாதிருப்பார் மனந்தனிலே. 41

வேறு.

மனமேமூலம்வன்னிகதிர் மதியாய்நின்றுமாறிபொன்றாய், நினவேவுச்சிமூலமதாய் நின்றேயியங்குந்திருவடிதான், தினமேஞேக்கியிருந்தவர்கள் திடமாஞ்சிவமோகத்தவரே, மனமேமாய்கைதனைநீக்கி மதியாஞேக்கிமாற்றிடுமே. 42

சோதிபராபரமூர்த்தி யுச்சிமீதே
சொல்லிவந்தபொருளாகிற் சுடர்கள்மூன்றாய்
வீதிநடுவெளிமூல பாதமாகி
விருட்களைந்தபதிமுப்பாழ்க் கப்பால்நின்று
ஆதியந்தமில்லாத பொருளதாகி
ஐவருந்தானுகி யகண்டமாகி

நீதிநெறிநிலைகடந்த மூலபாதம்
நின்றியங்குந்திருவடியி னிலைமைதானே. 43
திரைகடந்தவெளிமூலஞ் சோதினடி
திருமூலமுச்சுடராய் திருவெட்டாகி
கறைகடந்தகாரணமாய்க் கடவுளுதா
காணரியபேரொளியாய்க் கலந்துநின்று
யுறைகடந்தபொருளாகி யுலகுக்கெல்லா
மேனொளியாம்வேறொளியி னுண்மையாகி
விரைகடந்தவித்தாகி விளைந்தசோதி
வெறும்பாழாம்வீட்டினிலே விளங்கிப்பாரே. 44
காதிரண்டுகண்ணிரண்டு நாசிரண்டு
கையிரண்டுகாலிரண்டுங் கலந்தேயொன்றாய்
மீதிரண்டும்தடமாகி மாறியெங்கும்
வீணைதாண்டிவழியுச்சி வீட்டைத்தானே
சாதிரெண்டும்வகையாக்கிச் சாரமயமாக்கி
சாக்கிராதித்தாவதே சமைந்தமூர்த்தி
சோதிரண்டுவகையாக வடிமுடியாய்ச்
சூட்சமதாய்நின்றபடி சொல்லொணாதே. 45
அடிமூலநடுமூல மாடுமூலம்
அகாரஉகாரமிரண்டு மானமூல
முடிமூலநடுமூல முத்திமூல

மூன்றுவட்டமுப்பாழா மூலமாகிற்
படிமூலமாகியதோ ராருதாரம்
படிகடந்தபேரொளியாய் பரமூலம்
வடிமூலமாகியதோ ரகாரந்தன்னை
அத்தனார்வடிவென்றே யறிவார்நல்லோர். 46

அவ்வெழுத்தேயுச்சிவட்ட மாகிநிற்கு
மாகியதோருகாரநடு நயனமாகும்
ஒவ்வெழுத்தேனுசினுனி புருவமாகு
மோங்காரம்றீங்கார மிரண்டுமாகி
இவ்வெழுத்தேயண்டமெல்லாந் தானாய்நின்று
யிருசுடரின்வகையாகி யேகமான
அவ்வெழுத்தேயடிமுடியாகி யமர்ந்தசோதி
அத்தனார்வடிவுநட மானவாறே. 47

பரையாகுமூலத்தே பராபரந்தான்
பதியிருக்கும்நாதாந்தப் பாழாம்வீட்டில்
நிரையாகிநிற்குமைந்த சோதிமூலம்
நின்றியங்குஞ்சுழியுச்சி நெற்றிநோராய்த்
திரையாகுமக்கினியைக் கதவாய்மூடித்
திறவுகோல்சுழிமுனைக்குத் திறவுகோலால்
நிரையாகுங்கதவுதனைத் திறந்துபார்த்தால்
நிர்த்தசுத்தப்படிகமதாய் நிற்குந்தானே. 48

ஆயிரத்தெட்டிதழ்கமலத் தருணபீடத்
தானந்தமயமாகி அகாரமாகி
மாயிரத்தெட்டிதழ்நடுவே சோதிமூல
மானுமையுமிருக்குமா சனமதாமே. 49

ஆசனமாமுச்சிவெளி யருணபீட
மாதாரங்கடந்துநின்ற அகாரமீரே
நேசமாமனுதினமும் நினைவதாக
நேசிப்பார்நாதாந்த நிலைபெற்றோர்கள்
பாசமலமூன்றினுள்ளே மயங்கிப்பின்னும்
பரஞானநிலைபறியாப் பாவிமார்கள்
மோசமெனும்மலத்தே பிறந்திறந்து
மூடர்கடாயிந்நரகில் மூழ்குவாரே. 50

மூலாதாரமென்னுஞ் சுழினைநாட்டி
முதுகுதண்டாமிசிதெளி மூலமீதே
மேலாகிமீதான பதியுமாகி
மின்னெழுந்துமனமறைந்த மேன்மைபோல
நாலாயவேதமுத லுரைக்குமெட்டா
நாதாந்தசோதியென நவின்றுநிற்கு
மேலாகும்பரமான வீட்டைத்தானே
மேவிநிற்பார்மெஞ்ஞான மேன்மையோரே. 51

வே று.

நாட்டியவட்டமுச்சி நடுமுடிமூலபாதந்
தேடியமுன்னோரெல்லாந் திடமிதுமுத்தியென்று
பாடியபாதந்தன்னை நுனிநாசிநெற்றிதன்னிற்
கூடியேயொன்றாய் குறியினைக்குறிப்பாரே. 52

அறியாதமுத்துஞான மறிவிப்பானுசானல்லால்
ஒழியாதபாதஞான வுண்மையுமொழியொருது
தெளிவாகக்குருவின்பக்கத் தெளிந்தவர்தேவராவார்
மொழியாதமுத்தியுண்டா முப்பொருட்டலைவராகும்.

முத்திக்குவித்தாய்நின்று மூர்த்திநாதச்சோதி
சித்திக்குச்சித்தியான திருவடிமூலபாதம்
பித்தினுக்கெல்லாஞானம் வித்ததாஞ்சோதிமூலம்
மத்திக்குமத்தியான வடிவினையகாரமாமே. 54

அகாரமாமுச்சிவட்ட மானந்தமயமாய்நின்ற
வகாரமாமுந்திகீழே யோங்காரமூலமூன்றும்
நகாரமெழுத்தஞ்சாலே நாடொணுமூலபாதம்
இகாரமாஞ்சுழினைநாடி யாயிரத்தெட்டாமூலம். 55

மூலமுமுத்தியொன்றாய் முடிந்திடமுத்தியாகுங்
கோலமாமூலநாடி குண்டலித்துணையினேரே
சாலியேயுருவியொன்றாய் சாக்கிரத்தீதங்கடந்து
மேலதாஞ்சோதிபாத மேலுச்சிவெளியதாமே. 56

வே று.

மேலாதாரவெளியுச்சிமேலுங்கடந்துமெய்ப்பொருளாய்
காலாகலைக்குமெட்டாமனதாந்தத்தேநடுவாகி
சீலாம்பரவுச்சிவெளி சிவமாய்லிங்கச்செயலாகி
மேலாதாரவெளிமூல மேலாம்பதமாய்மேவியதே. 57

வே று.

ஆதாரத்தடுக்குநிலை யோரஞ்சாகு
மருவெளியாய்நிராதார மாதமாவாகு
மீதானவெளியுச்சி சிவமதாகு
மிக்கதிரைமாய்கையதை மிகவேயுன்னி
நாதானவயடைவதற்கு ஞதனமே
நடுனாடிசுழிமுனையை ஞட்டமாகும்
வேதாவுமாரியனும் விண்ணோர்தானும்
விளங்கரியபேரொளியாய் மேவுந்தானே. 58

வே று.

சுழிமூலமானசோதி துரைகடந்தருவுருவாய்
யொளிமூலமாகிநின்ற யுண்மையாமூச்சிமூலம்
வெளிமூலமாகிநின்று வேதாந்தச்சிவத்துக்கப்பால்
அளிமூலமாராதாரத் தடுக்கொளிகடந்தமூலம். 59
வொளியதைத்திரையதாக்கி வேதாந்தச்சிவமதான
யொளிவதேயறிவதாக்கி யோங்காரமானசத்தி

களியதாம்நாதவிந்து கதிர்மதியிரண்டுமாகி
யளியதாம்பூதமஞ்ச மாதாரத்தேவராமே. 60

இகபரமிரண்டுக்கப்பா லேகமாம்வென்றும்பாழான்
யாமனைப்பரமாத்மாவாய் பாழ்வெளிப்பதியதாகி
பரமனிற்பராபரந்தான் பரவெளிதானேதானாய்
பரமுதற்பரமாய்தோன்றி பாரெல்லாம்படைத்தவாரே.

சத்தியேமனமதாகி சகலமுந்தானேயாகி
பத்தியாயறிவுமாகி பரசிவனிரண்டுமாகி
முத்தியாஞ்சுடர்கள்மூன்றாய் மூலமாய்வன்னியாகி
அத்தியேதிரையதாகி ஆதாரசுழினையாமே. 62

அதுவவனவன்முன்னென்று மானதோர்குறிகள்மூன்றி
மறுவவனவனேயன்றி யாதாரம்வேறுமுண்டோ
அதுவவனவன்றாண்பிண்ட மாகியுமொன்றதாகிப் [றே.
பொதுவதாய்நின்றசோதிப் பொருளினைகுருவாய்போற்

முப்பொருள்மூன்றுவட்ட முத்தியாம்பொருளதாகு
முப்பொருள்மூலநாடி முடிச்சதுமூன்றுக்கப்பால்
முப்பொருள்பதியிற்சாரில் மூன்றுமுப்பாழதாகு
முப்பொருளுணர்ந்தபோதே மூர்த்தியாந்தலையாமே. ()

முத்தியாஞ்சுடர்கள்மூன்றை முப்பாழதாக்கிப்பின்னு
முத்தியுமடைக்தொன்றாகி மூலமாஞ்சோதிபாத

முத்திக்குவித்தாய்நின்ற முப்பொருள் தலைமையான
முத்தியையடைந்தபேரே மூவர்க்குமதிகமாவார். 65

ஆறுகும்முப்பத்தாறுக் கப்பாலானாதிமூலம்
கூறுதகுறியதாகி குருபதந்தெய்வமூன்றாய்
பேறுதமூவர்பாதம் பேரொளிதானாய்நின்ற
ஆறாறுக்கப்பால்நின்ற ஆதியாஞ்சோதிமூலம். 66

ஒருவழியாகிநின்ற வொண்பொருளுக்குவட்டம்
கருவழிக்கீழாய்நின்று கான்மாறியாடிநிற்கும்
வெளிதடத்திற்சென்று பேரொளிமூலந்தன்னை
குருவழிக்குறியினாலே குறிப்புடனேக்குவீரே. 67

மேல்தலைகீழாய்நின்ற மேன்மையாமுச்சிவட்டம்
கால்தலைமேலாய்நின்ற காரணங்காணமாட்டார்
கால்தலையுடையோன்மற்ற நாரணன்றேடிக்காணார்
கால்தலைகண்டபேரே காட்சியாமுத்திதாமே. 68

காட்சியாமுத்திதன்னைக் காரணக்குருவினாலே
சூட்சியாங்கண்டபேரே சூதானமுத்தராகு
மாட்சியாமதினாமூல மாறாலுங்குருக்குமப்பாற்
காட்சியாஞ்சோதிமூலங் கண்டவர்காணத்தோரார். 69

காரணக்குருவாய்நின்ற காட்சிநாதாந்தச்சோதி
பூரணமாகவெங்கும் புறைவறக்கலந்துநின்ற

நாரணன்தேவர்க்கெட்டா னாதாந்தச்சோதிமூலம்
ஆரணங்கடந்துநின்ற வருள்ஞானசோதியாமே. 70

உச்சிக்குங்கீழ்மேலாகி யுருவருவுபாயமாகி
நச்சிவமானமூர்த்தி நாதாந்தச்சோதிமூலம்
பச்சையாய்பவழமுத்தாய்ப் பளிங்கொளிவன்னமாய
உச்சிக்கீழ்மேலாய்நின்ற யுண்மையாயுணர்வார்முன்னே

வேறு.

நாடியதோர்பின்கலையாஞ் சுழினைநாடி
நடுநாசிபுருவமுச்சி நடுவாய்நின்று
ஆடியதோர்திருனடந்தா னகாரமாகு
மானந்தபரவெளியா யமர்ந்தமுத்தி
கூடிருந்தநெற்றிநடு வாகநோக்கிக்
குண்டலியாம்பாதமலர் தந்தசோதி
தேடியதோர்திருவடிதான் மூலமுச்சித்
திருவுந்திதற்பரத்தே சேருந்தானே. 72

திறையாகுங்குண்டலிதான் திறப்பதற்கு
திருவதினால்சுழினையெனுங் குச்சியாலே
பறையாகுங்குடிலைசத்தி திரையைநீக்கி
பராபரத்தேசென்றமுத்தி பதித்தேநிற்கிற்
கரையாகுந்தெரிசனங்கள் பதினாறெல்லாங்
கட்டறுத்துத்திரைகடந்து கயிலைமீதே

வுரையாகும்பயமில்லாச் சோதிபாத
 முற்றுணர்ந்துகண்டவர்க்கே யாதிமுத்தி. 73
பெரும்பாழைசுழினைவழி தடத்தேசென்று
 பேரொளியாஞானமுத்தி பெறுவார்க்கெல்லாந்
திரும்பாருஞ்சுழியதுவே மூலபாதந்
 திருவடியேமனத்துள்ளே திறமாய்க்கொண்டு
கரும்பாதைக்கருவழிக ளெல்லாமாற்றி
 கயிலாயவழிநடந்தார் காட்சிமோட்சம்
சுரும்பாகுங்குழலுமையாள் பங்கனெங்கோன்
 சூட்சாதிபாதமலர் சூடுங்காலே. 74
அண்டபகிரண்டமுச்சி வெளிக்குமப்பா
 லானந்தபராபரனு ரமர்ந்தவீடு
மண்டலங்கள்மூன்றுமதி கதிரும்வுன்னி
 மனமாதிமூலத்தே மருவிநிற்கும்
மண்டகுருநாதாந்தச் சோதிபாதங்
 கரைக்டந்தவுச்சிவெளி கயிலைதன்னி
லண்டமெல்லாம்போற்றிநிற்கு மகாரந்தன்னை
 லனுதியாஞ்சோதியென்றே யறிவார்நல்லோர். 75

வேறு.

அகாரமுமகாரந்தானு மானதோர்மகாரந்தானும், ஒகாரமாய்பிரணவத்தே யோங்காரரூபமாகி, நகாரமாமஞ்சே

மூத்தி னுதாந்தரூபமாகி, சிகாரமாஞ்சிற்பரத்தின் செய லெல்லாந் தானுய்நின்றார். 76

முச்சிய மூலாதார மோங்கிய கடவுள்நாடி, குச்சியாந் திறவுகோலைக் குருவினுற் கொடுக்கவாங்கி, வச்சிரவன் னியாய வலுவதாங்கதவுதன்னை, குச்சியாற் றிறந்துகொ ண்டு குருவினுலருளைக்கூட்டே. 77

பிண்டத்தில் மூலமான பிரணவந் தன்னைத்தானே, அண்டத்தின் மூலத்தோடே யடிமுடியொன்றாய்க்கூ ட்டி, கண்டத்தில் மேலேநின்ற கலைபதினாறதாகக், கொண்டித்தைக் குருவினுலே கூர்மையாம் தெளிந்து பாரே. 78

கழுத்தின்மேற் கலையீரெண்டாம் காதுடற்கண்ணு மூக்கு, மழுத்தமா முகமஞ்சாகி வுருவமஞ்செழுத்து மாகி, பழுத்ததோ ரெழுத்ததான பராபரப்பொருளை யுன்னி, யெழுத்திலா வெழுத்தைத்தானே யேகமாயேற் றிக்காணே. 79

நடுவடி மூன்றொன்றான நாசியா நயனமுச்சி, கடு வெளிக் கப்பால்நின்ற காரணசோதிதன்னை, அருமையா யாசான்பக்க லறிந்தவ ரருட்பெற்றோர்கள், கொடுங்கை யாங் குணத்தைநீக்கி குருவருடன்னைப் போற்றே. 80

வெளிமூல மாகிநின்று வேதாந்தங் கடந்தசோதி, வொளிமூல மாகிநின்று வோங்கிய மூலாதார, மணிமூல மாராதார மடுக்கெலாங் கடந்துநின்று, வெளிமூல மான சோதி விரிந்தது பதியமாமே. 81

அகாரமே வலமதாகு மாகியயிடம் உகாரம், ஒகாரமே நடுவதாகி ஓங்கியவுச்சிதன்னில்,நகாரமா மூச்சிமூன்றும் நாடிய வெட்டெழுத்தாய், அகாரமா மூச்சிமூல மட்டாங்க யோகமாமே. 82

அகாரத்தையுச்சியாக ஆனதோருகாரந்தன்னை, சிகாரத்தி னயனமாக்கி சிறந்தவோங் காரந்தன்னை, நகாரத்தின் வடிவாய்நின்ற நாசியினுயரதாக்கி, அகாரத்தின்வடிவைநோக்க வத்தனுர்வடிவுதாமே. 83

நகாரமேநாசியாகும் நாடியமகாரம்நாலாஞ்
சிகாரமேநயனமாகுஞ் செடமதுவகாரமாகும்
யகாரமேசெவியாய்நின்று யஞ்செழுத்தரூபமாக
ஓங்காரப்பிரணவத்தே யுதித்தவரொடுங்கிநிற்பார். 84

ஓம்நமோநமசிவாயவென் றோதியமந்திரத்தை
ஓம்நமோமூன்றினுள்ளே யோங்காரரூபமாக
ஓம்நமோநாராயணவென் றோதியமந்திரத்தை [ணே.
ஓம்நமோசுவாசந்தன்னி லொழிவொளி யொன்றாய்க்கா

மீதாரமதியாய்நின்று மீதிலேசோதிநாதர்
ஆதாரமூன்றுக்கெல்லா மருவுருவாகிநின்று
வேதாவுமறியுந்தேட வெறும்பாழதாகிநின்ற
நாதாவுமண்டமீதே ஞானமாநடனஞ்செய்வார். 86

அண்டத்தின்வடிவாய்நின்ற வாகாரமெட்டெழுத்தை
கண்டத்தின்மேலேநோக்கிக் கருதுவார்கருவைச்சார
பிண்டத்தின்வடிவாய்நின்ற பிரணவமெட்டெழுத்தாய்
கொண்டத்தைக்குறித்தபேர்கள் குடிலைபிற்சார்வர்தாமே

தூலமாங்கண்ணைமூடி சூட்சமாங்கண்திறந்து
மூலமாமுச்சிமீதே முடியடியொன்றாய்க்கண்டால்
சீலமாஞானசோதி சிலம்பொலித்திருக்கூத்தானே
கோதமேகாணலாகுங் குறியறக்குறித்துப்பாரே. 88

அறிவெனுஞானந்தன்னை யானந்தமயமாயுச்சிக் [றும்
குறியிலேகுறித்தபேர்க்குக் கோதிலாச்சோதித்தோன்
நெறியிலேயமர்ந்துநின்ற நினைவிலேநிலையதாகி
யறிவிலேயறிவைபற்றி யானந்தமாகிநில்லே. 89

ஆனந்தமாகிநின்ற அகாரமாமுச்சிவட்டம்
வானந்தவடிவினுள்ளே வாழ்பதிசோதிமூல
மோனந்தமாகிநின்ற முத்திக்குவித்துமாகி
தானந்தமாகியெங்குந் தானவனாகிநிற்பார். 90

தானவனைகிநின்ற தாலமாமுச்சிமூலம்
வானவர்தேவர்காணா மதிவதாஞ்சோதிபாதம்
மானதோரகாரமண்ட மாகாயவீட்டுக்கப்பால்
ஞானவானேக்குமந்த ஞட்டமும்வட்டமாமே. 91

வேறு.

பதினறுதெரிசனமுஞ் சுழினைவீதி
பாதையிலேசெல்லாது பாத்தேநிற்கும்
பதினறும்பரந்தனிலே தோன்றுமல்லாற்
பராபரத்திற்செல்லாது பாத்தேநிற்கும்
பதினறுமோரெழுத்தா யுச்சிமீதே
, ஊர்விசும்புந்தானைகி பாத்தேநிற்கும்
பதினறுதரிசனங் கடந்துஞான
பாதமதைக்குருவருளாற் பற்றிநில்லே. 92

குருலிங்கசங்கமு மொன்றாய்நின்ற
குறியதனைச்சுழிமுனையிற் குறித்துக்கொண்டு
குருலிங்கசங்கமாஞ் சோதிமூலங்
கூறரியப்பளிங்கொளியாய்க் குருவுமாகி
குருலிங்கசங்கமே யகாரமாகிக்
கோதிலாநாதாந்தக் கூத்துமாகி
குருலிங்கசங்கமாய்ப் பொருள்கள்மூன்றுங்
கோதிலாநாதாந்தக் கோலமாமே. 93

பிண்டரண்டவேறுபீட பிரணமாகிப்பேரொளிதான்,
அண்டரண்ட மெண்டிசைப் பிறத்தாகி வானந்தத்தே,
தொண்டாகித்தொண்டின் றெழுதில்மூன்றாகித்துரியமற்
றுங், கொண்டாடியுச்சியின்மேற் கொண்டகோலங்
கோலமதே. 94

உச்சித்துளைவழிமுடிந்திறையை யுருவியொன்றாய்
நச்சிவமானநாதாந்தக்கூத்தி னடனமதாய்
விச்சின்விரிசுடர்மூன்றுமொன்றாகி வியாக்கிரமத்தே
வக்கிரமானசெகசோதிபாதத்தில் வாழ்ந்திடுமே. 95

மாறாத்தியானந்திருவடித்தாமரை மனத்தினுள்ளே
கூறாத்தியானம்வதிறெழுத்துக் குருவருளா
வாறாதாரங்கடந்தானந்தமான அகாரத்தாலே
நீறாகுமென்றதிருவடித்தாமரை நேசித்தரே. 96

செகமாய்கைநீக்கிப்பின் சிற்பரமாய்கைசெயலறிய
யகமாய்கையாகியவானவம்மூல மானதெல்லாம்
சுகமானதுக்கசடசுந்தரமான சுடர்சத்தியாம்.
மகமானபேரொளிபாதாரவிந்தத்தை வுன்னிநில்லே. 97

திருவள்ளுவர் நாதாந்தத்திறவுகோல்-97

முற்றிற்று.

சிவமயம்.

தொண்ணூற்றிரண்டாவது,

கருவூரார் பூஜாவிதி-30.

காப்பு.

தெளிவுதனில்தெளிவுதரு மருளுங்காணும்
சேனகதிலேசிவமையஞ் சேரத்தோணும்
வழியதனில்நல்லவழி ஞானங்கூடு
மகத்தான்வேதாந்தஞ் சித்திகாட்டும்
ஒளிவுதனிலொளிவுதரு முறுதிசொல்வா
ருற்பனத்திலுற்பனமா யுறுதிதோணும்
வெளியதனில்வெளியாகி நாதத்துள்ளே
விளங்கிநின்றவாலைபெண் ணுதிகாப்பே.

நூல்.

ஆதியந்தம்வாலையவ ளிருந்தவீடு
ஆச்சரியம்மெத்தமெத்த வதுதான்பாரு
சோதியந்தநடுவீதி பீடமாகிற்
சொகுசுபெறவீற்றிருந்தாள் துறைப்பெண்ணுத்தாள்
வீதியந்தஆறுதெரு மமர்ந்தவீடு
விளையாடிநின்றதிரு மாளிகண்டாய்

பாதிமதிசூடியே யிருந்தகாமி
    பத்துவயதாகுமிந்த வாமிதானே. 1
வாமியிவள்வாலைவைத்துப் பூசைபண்ண
    மதியுனக்குவேணுமடா வதிகமாக
காமியிவள்வெகுகாமி சிவகாமிரூபி
    காணரிதுசிறுபிள்ளை கன்னிகன்னி
ஆமிவளையறிந்தவர்கள் சித்தர்சித்தர்
    அறிந்தாலுமனதடக்க மறியவேணும்
நாமிவளைப்பூசைபண்ண நினைந்தவாறு
    நாட்டியேசொல்லவென்றால் நகைப்பார்காணே. 2
காணப்பாயிவளுடைய கற்புமெத்த
    கண்டவர்க்குப்பெண்ணரசு நானேயென்பாள்
ஊணப்பாவமிர்தமிவ ளூட்டிவைப்பா
    ளுன்வீட்டுக்குள்ளிருந்து மேலேயேற
பூணப்பாமனமுரைந்து வாவாவென்பாள்
    புத்திரனேயென்மகனே யென்றுசொல்லி
வேணப்பாவேணதெல்லாந் தருவெனென்பாள்
    வேதாந்தசூட்சமெல்லாம் விளங்குந்தானே. 3
தானென்றவாலையிவள் ரூபங்காணச்
    சமர்த்துண்டோ வாண்பிள்ளைத் தானுமுண்டோ
பானென்றவர்மத்துக் குள்ளேயப்பா

பராபரையால்பலகோடி விதமுமாடி
தேனென்றமொழிச்சியிவள் சித்தர்க்கெல்லாஞ்
சிறுபிள்ளைபத்துவய துள்ளதேவி
ஊனென்றவுடலுக்குள் நடுவுமாகி
யுத்தமியாள்வீற்றிருந்த வுண்மைதானே. 4

உண்மையிவள்நாணமில்லா திருந்தவீடு
ஊருக்குள்நடுவீதி உற்றுப்பாரு
செம்மையாய்க்கண்டவர்க ளுண்டோவப்பா
செகசாலவித்தையிவ ளாடும்வித்தை
உண்மையடாபஞ்சவர்ன மாகிநின்ற
உலகுதனிலலைந்தவர்கள் கோடாகோடி
நின்மயமாய்க்கண்டவர்கள் சொல்லாரப்பா
னேசமுடனெனக்குரைத்த நிசமுங்கண்டே. 5

கண்டதொருபூரணத்தின் மகிமைகேளு
கால்மேலுந்தலைமாடும் நடுவுமாகி
அண்டரொடுமுனிவர்களுங் கண்டுபோற்ற
ஆதவனுமம்புலியு மதிலேநின்று
தொண்டுபண்ணுமைவர்களில் நாலுபேர்கள்
சுகம்பெறலாமென்றுசொன்ன வாசல்நாலு
கொண்டவர்கள்கண்டுவந்த தொண்ணூற்றாறு
கொள்கையெனக்காட்டிருந்த குறிப்பைப்பாரே. 6

பார்த்தவர்கள்செய்தொழிலு மனதுவேறாய்ப்
பலநூலைப்படித்துபடு குழியில்வீழ்வார்
ஏற்றபடிமனம்போனாற் புத்திபோச்சு
ஏழைமதிபோகாதே யென்தாய்பாதம்
போற்றுதற்குஐவரையு மனதிலொன்றாய்ப்
புத்திசித்தமோர்நிலையில் நிறுத்திவாசம்
பூத்தமலரெடுத்துதிருப் பாதம்போற்றப்
பொறியைந்துங்கருவிகா ணதிபோமே. 7

போச்சுதடாமனமாய்கை வீறுபோச்சு
பொறியைந்துங்கருவிகா ணதிபோச்சு
ஏச்சுதடாவென்றுமன மிறக்கலாச்சு
உனக்கொருவரிணையில்லை யென்றபேச்சு
வாச்சுதடாகனமடங்கா வங்கென்றோர்சொல்
வாய்பேசாமவுனத்தை யதிலேசேர்க்க
காச்சுதடாபூத்தமலர் கருத்தையூணி
கனியாகும்கனியைக் கண்டுகொள்ளே. 8

கொள்ளுதற்குஇன்னமொரு குறிப்பைக்கேளு
கோடையிடியின்முழங்குங் கண்ணைமூடி
விள்ளுதற்குமனமடங்கா பூதங்காணும்
விள்ளாதேயுள்ளபடி சிங்கென்றோர்சொல்
விள்ளவுமேயுபாயமதாய் நடுவேநில்லு

வேகமெல்லாமொடுங்குமடா சத்தம்போச்சு
கள்ளரைப்போல்மயங்காதே மவுனத்துனு
கண்ணைநீதிறக்காதே கருதிப்பாரே. 9

பாரேதுபுனலேது அனலுமேது
பாங்கானகாலேது வெளியுமாகும்
காரேதுபூவேது வாசமேது
நல்லபுட்பந்தானேது பூசையேது
ஊரேதுபேரேது சினமுமேது
ஓகோகோவதிசயந்தா னென்னசொல்வேன்
ஆரேதுகுளமேது கோயிலேது
ஆதிவல்லையறிவினு லறியலாமே. 10

ஆமெனவும்ஊமெனவு ரெண்டுங்கூட்டி
யப்பனேஓமென்ற மூன்றுமொன்றாய்
காமெனவுந்தாமெனவு மொன்றேயாகும்
நல்லவர்களறிவார்கள் காமிகாணுர்
வாமம்வைத்துபூசைபண்ணி யிந்தமார்க்கம்
வந்தவர்க்குச்சத்திசிறு பிள்ளைவாலை
சோமந்தியமிர்தமுண்ண வாவாவென்பாள்
சுகமுனக்குபரமசுக மருள்செய்வாளே. 11

செய்குவார்பூசையது செய்யும்போது
செய்குறிகள்தவறாமல் நடக்கவேணும்

உய்குவாய்பெண்ணரவங் கடியரவண்ணம்
  ஊமையென்றநடுத்தீயை யதிகங்கொண்டால்
பைகுவாயரைநிமிஷம் புசிங்கிப்போகும்
  பங்கமுனக்கில்லையடா அங்கமீதில்
ஐகுவாயுள்ளடங்கிப் பேச்சைவிட்டு
  அழைத்திடவேயஞ்சுமது கொஞ்சுங்காணே. 12

காணுதகாக்ஷியெல்லாங் கண்ணிற்காணும்
  கலங்காதேமெய்மயக்க மெத்தவாகும்
பூணுதபணிபூண்டு சிறுபெண்ணுகப்
  போதமெனும்பொருள்பறிக்க வருவாள்கண்டாய்
வாணுளையடக்கியிவள் ரூபங்கண்டு
  மயங்காதேமவுனத்தில் நில்லுநில்லு
கோணுதமுக்கோணக் குறியைப்பாரு
  கூசாதகண்கூசுங் கூசுங்காணே. 13

கூச்சமற்றுப்பார்க்கையிலே யிருள்போல்மூடுங்
  கொள்ளிகொண்டுகொளுத்தியதை வெளிச்சம்போடு
வாச்சமர்த்துப்பேசாதே மவுனத்தூணு
  வாவென்றேநீயும் வருந்திக்கூவி
சூட்சமதுவிருந்தவிடஞ் சொல்லலாமோ
  சொல்வதற்குவாய்விட்டுச் சொல்லலாமே

தாய்சமர்த்துப்பாராதே தாயைப்போற்று
சற்குருபோலுற்பனத்தைத் தாய்சொல்வாளே. 14

சொல்வதற்குயிவளையல்லால் சுகம்வேறுண்டோ
சூட்சமில்லாயிவளைவிடச் சூட்சமுண்டோ
நல்லவர்க்குநடுவில்வினை யாடும்வல்லி
நாதவிந்துஓங்கார நிலையுங்காட்டி
வல்லார்க்கும்வல்லவளாய் நானேயென்பாள்
வரம்வாக்குவேண்டுதெல்லாம் நானேயென்பாள்
புல்லருக்குஆயுதமும் புல்லேயாகும்
புத்திகெட்டலோபிகட்கு புகலொண்ணுதே. 15

புகலுவார்வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசிசாஸ்திரங்கள் மிகவுங்கற்று
அகலுவார்பெண்ணுசை விட்டோமென்று
அறிவுகெட்டுஊர்தோறுஞ் சுற்றிச்சுற்றி
சகலமுமேவந்தவர்போல் வேஷம்பூண்டு
சடைமுடியுங்காஷாயந் தன்னைச்சாற்றி
இகலுமனமடங்காமல் நினைவுகேடாய்
எண்ணமெல்லாம்பெண்ணுசை பூசைதானே. 16

பூசையதுசெய்வமென்று கூட்டங்கூடி
புத்திகெட்டுகைமுறையின் போக்கைவிட்டு

* பாசையதுமிகப்பேசிப் பாட்டும்பாடிப்
படிப்பார்கள்மந்திரத்தின் பயனைக்காணார்
ஆசையதுபெண்ணாசை மயக்கத்தாலே
யங்கிருந்தவர்மத்தை பங்குபோட்டுப்
பேசையிலேமனம்வேறாய் நினைப்பான்பாவி
பிரட்டிருந்தால்நினைவுதப்பிப் பேசுவானே. 17

பேச்சென்றால்வாய்சமர்த்தாய்ப் பேசிப்பேசி
பின்னுமுன்னும்பாராமல் மதமேமீறி
நீச்சென்றும்நிலைப்பென்று மேதுங்காணார்
நிர்மூடரனேகவித சாலங்கற்று
ஆச்சென்றவதனாலே யாவதேது
ஆத்தாளைப்பூசித்தோ னவனேசித்தன்
மூச்சென்னசெய்யுமடா நரகிற்றள்ளும்
மோசமதுபோகாதே மூக்கால்பாரே. 18

மூக்காலும்பொருந்துமென்று சொன்னபோதே
மோட்சமில்லைசூட்சமது மொழிந்துகூடுந்
தக்காமற்போனபே ரநேகமுண்டு
சமர்த்தரிந்தாலவன்காமி யவனேசித்தன்
எக்காலம்நடந்திருநீ காலுமுன்னி

---

* பாசை-பாஷையெனக்கொள்க.

யிருந்தடங்கியுள்ளிருந்து வெளியிற்போன
அக்காலைகாணும லலைந்தேயோடி
அழிந்துகெட்டுப்போவார்க ளறிந்துகொள்ளே. 19

அறிந்தகுறியடையாளங் காணவேணு
மக்குறியிற்சொக்கிமனந் தேறவேணு
மறிந்தவன்போலடங்கிமன மிறக்கவேணும்
மலகையதுவழிபாதை யறியவேணும்
மறைந்தவரைநிறைந்தவரை நீர்தான்காண
மயக்கத்தைகண்டுநீயு மதிக்கவேணும்
நிறைந்தமதிகுறித்தவகை யறியவேணும்
நிச்சயத்தையறிந்தார்க்கு முத்திதானே. 20

முத்திதருமென்றுமனம் புத்தியற்று
மோசமதுபோகாதே பாசங்கையில்
சித்தமதில்சந்திரனை நிறுத்திக்கொண்டு
செந்தீயினுன்தீயை நடுவில்வாங்கி
சத்தியுடன்ஆதியந்த மனதில்வைத்துச்
சொல்லாதமந்திரத்தின் தீயைமூட்டி
நித்தியமாலர்ச்சனைசெய் பாதம்போற்றி
நீயுமதிமதியுமதி லதிகமாமே. 21

மதிபெருகுங்கெதிபெருகும் வாதம்வாத
மருந்தாதேயந்தமுறை யாகாதப்பா

நிதிபெருகுமிவள்குறியே வாதமாகும்
நிர்மூடரறியாமல் வகாரம்பேசி
நதிகள்தனையறியாமல் வகாரம்பேசி
நானேநானென்றுவாய் மதங்கள்பேசி
உரியபொருளுள்ளதெல்லாஞ் சுட்டுசுட்டு
உட்பொருளைபாராம லழிந்திட்டாரே. 22

இட்டகுறிநாதவிந்து ரூபங்காண
யியலறியாச்சண்டாளர் சுட்டுமாய்வார்
விட்டகுறைவந்ததென்றால் தானேயெய்தும்
விதியில்லார்க்கெத்தனைதான் வருந்தினாலும்
பட்டுமனமாய்வதல்லால் வேறொன்றில்லை
யறிவில்லார்க்குறைத்துமனம் பாழ்போகாதே
திட்டமாய்பாணம்வைத்துத் தேவிபூசை
சீர்பெற்றோர்பதினெட்டுச் சித்தர்தாமே. 23

எட்டிரண்டுமொன்றுமது வாலையென்பா
ரிதுதானேபரிதிமதி சுழினையென்பார்
ஒட்டிமுழிந்தெழுந்ததுவே முக்கோணமென்பார்
உதித்தெழுந்தமூன்றெழுத்தை யறியாரையோ
கொட்டுமொருதேளுருவாய் நிற்கும்பாரு
கூட்டமிட்டுப்பாராதே குறிகள்தோணும்

சுட்டசுடுகாடுமது மொளியுமாகும்
சொல்லுதற்குவாய்விலங்காய்ச் சூட்சந்தானே. 24
சூட்சமிவள்வாசமது நிலைத்தவீடு
சொல்லுதற்குளங்குமாம் நிறைந்தவீடு
தேசமதில்பொய்விளங்கு மிந்தவீடு
சித்தாந்தசித்தரவர்க் கேகும்வீடு
ஓசைமணிப்பூரமதி லுதிக்கும்வீடு
ஓகோகோவதிசயங்க ளுள்ளவீடு
ஆசுகவிமதுரமது பொழியும்வீடு
அவனவளுங்கூடிவிளை யாடும்வீடே. 25
வீடுமதுதலையாச லதுமேல்வாசல்
தெளிவானசுழிக்கதவு அடைக்கும்வாசல்
தேடுகிறமூவருமே வணங்கும்வாசல்
திறமானபன்னிருவர் காக்கும்வாசல்
ஆடுகிறபுலியாகி நின்றவாசல்
அரகராசிவசிவா வாசிவாசல்
கூடுகிறமுக்கோணப் பாங்கலாகிக்
குருகுமறுபெருகுமதி கூறொண்ணாதே. 26
ஒண்ணுகிரண்டாகி விளைவுமாகி
வுத்தமியாளுட்கருத்தை யறியப்போமோ
திண்ணுதவிடக்கெடுத்துத் தின்னச்சொன்னாள்

செத்தசபம்போலிருந்து செபிக்கச்சொன்னான்
பண்ணாதேபணக்கோட்டி பண்ணிவைத்தால்
பார்த்திருந்துகழுத்தறுக்கப் பார்த்தாள்பாவி
எண்ணாதுமெண்ணிமன மேங்கினாளும்
எனக்கபயமேதெனவே யெழுந்திட்டேனே. 27

எழுந்துமேயிழுத்துமடி பிடித்துக்கொண்டு
யேகாந்தவெட்டவெளி யாகிநின்று
கொழுந்துவிட்டுவளர்ந்தெரியு மனலைமூட்டிக்
குடிகோசத்துருப்போல் கூச்சலிட்டாள்
அழுதேனேமுந்தியினி இந்தவூரில்
அரகராதுணையெனக்கு யாருமில்லை
யெழுந்திட்டாரெல்லோரு மோடிப்போனார்
என்னசெய்வேன்தனித்திருந்து யேங்கினேனே. 28

ஏங்கினேன்மூடழிந்தே னென்கூடுமற்றேன்
என்னையுந்தான்கண்டவர்கள் சீசீயென்ன
தூங்கினேன்காலறிந்து மடக்கமாட்டேன்
துணையெனக்குயாருமில்லை சூழ்ச்சியாக
வாங்கினேன்காலறிந்து மடக்கவேண்டி
வகையாகவெனக்கொருத்தி யுறுதிசொன்னாள்
தேங்கினேன்முன்னுமவள் பின்னுமாகத்
திடமெனக்குச்சொன்னதிந்த தெளிவுதானே. 29

தெளிவதற்குச்சூட்சமிது தெளிவாய்ப்பாரு
சிவனிருந்துவிளையாடுந் தெருவைப்பாரு
மொழிவதற்குஞாலைவிட வேறொன்றில்லை
முன்னாதியந்தமொடு நடுவுஞ்சொன்னோம்
கழிப்பதற்குள்சுழியிருந்த சூட்சஞ்சொன்னோம்
சொல்லாதமவுனமுதற் கருவுஞ்சொன்னோம்
ஒளிபிறக்குமுறுதியிந்த வுறுதிசொன்னோம்
உற்பணமாய்ப்பார்த்தவர்கள் சித்தர்தானே. 30

கருவூரார் பூஜாவிதி-30

முற்றிற்று.

சிவமயம்.

தொண்ணூற்றுமூன்ருவது,

இராமதேவர் பூஜாவிதி-10.

ஆதியென்றமணிவிளக்கை யறியவேணும்
அகண்டபரிபூரணத்தைக் காணவேணுஞ்
சோதியென்றதுய்யவெளி மார்க்கமெல்லாஞ்
சுகம்பெறவேமனோன்மணியி னுத்தாள்தன்னை
நீதியென்றபராஞ்சோதி ஆயிபாதம்
நிற்குணத்தினின்றநிலை யாருங்காணார்
வேதியென்றவேதாந்தத் துள்ளேநின்று
விளங்குவதும்பூசையிது வீண்போகாதே. 1

போகாமல்நின்றதோ ரையர்நீதான்
பூரணத்தினுனகலை ஐந்தும்பெற்று
ஆகாமலானந்த வல்லியாலே
அடிமுடியிநடுவாகி வாறுக்குள்ளே
வாகாமல்வாலையுட மூலத்தாலே
வழிதோன்றிமூன்றெழுத்தை யுரைக்கவேணும்
சாகாமல்சாகுமடா யிந்தமூலஞ்
சதுர்வட்டம்நடுகோண முக்கோணமாமே. 2

முக்கோணமூலசுழி தற்கோணமாகி
    முதலானமூலமணி காலைதன்னில்
நாற்கோணநாலுவரை நயந்துகார்க்க
    நாயகியாள்பரஞ்சோதி நாட்டமுற்றுத்
தீக்கோணதிக்குதிசை யிருந்தமாயம்
    தெரிந்திடவேவுரைத்திட்டேன் விபரமாக
தாக்கோணவிட்டகுறை வந்ததென்றால்
    தனியிருந்துபார்த்தவனே சித்தனாமே. 3

சித்தானமூன்றெழுத்து செயலானசோதி
    சிவவரும்ஐயுங்கிலியும் சவ்வுமாகி
முத்தானலக்ஷமுரு செபிக்கச்சித்தி
    முற்றிடுமேயெதிரியென்ற பேய்கட்குந்தான்
வித்தானவித்தையடா முட்டாடும்பாரு
    விரிவானமுகக்கருவும் மூன்றுகேளு
சத்தான அதன்கருவும் சீலைதனில்வைத்து
    சதிரானவிதுவிபர மறியக்கேளே. 4

கேளப்பாபெலிகொடுத்து பூசைசெய்து
    கிருபையுள்ளவுருவேற்றி திட்டமாக
வாளப்பாசுடுகாட்டின் சாம்பல்தன்னில்
    வளமாகபுதைத்துவிடு நடுசாமம்பார்த்து
ஆளப்பாஅடியற்று மரணமாகி

ஆண்டிருந்தவசுமலை தான்குலைந்து
காணப்பாகண்மணியே வீழ்வான்பாவி
கறைதெரியச்சொல்லுகிறே னின்னும்பாரே. 5
இன்னமின்னங் கண்முன்சோதனையுமாகு
மீடேறவேணுமென்று விதனிற்சூட்சம்
அன்னமின்னுவகிற்கட்டை தேவதாரம்
அறிவுடையமுனைசீவி சிங்களத்தையோதி
வன்னமின்னார்பேர்சொல்லி நசியென்றுதானும்
வலுவானநூற்றெட்டு வுருவும்போடு
சன்னபின்னமரத்தடியி லிருந்துகொண்டு
சதிராகஆணிகொண் டடித்திடாயே. 6
அடித்தமுனைபிடுங்கியேவைத் திறுக்கிப்போடு
ஆனந்தவுருகுலைந்து பட்டுப்போகுந்
தொடுத்தமுதல்நாலாநாள் கண்டுதானுந்
தொகைமுடிந்துவாச்சுதடா விந்தப்போக்கு
விடுத்தபின்புவிஷமேறி கருவிப்போகும்
விரித்துரைத்தேன்பூட்டிதுவே வீண்போகாது
தடுத்துவிடுநகாரத்தி லடித்துப்பாரு
தட்டழிந்துஉயிர்முதலாய்ச் சேதமாமே. 7
ஆமப்பாஅடிதரித்த சிங்களத்தினால்
அதிசயங்காண்கண்டவர்க்கு வடைக்கலம்போகும்

வீமப்பாவெளிதிறந்து சொன்னேன்பாரு
விளையாட்டுயில்லையடா விந்தப்போக்கு
சோமப்பாசுத்தியுடன் தலையும்மூழ்கி
சுருக்கெனவேதியானிப்பா யாத்தாள்மூலம்
தாமப்பாசத்தியமே சொன்னோம்பாரு
தவறுதுராமனுட வாக்கியந்தானே. 8

தானென்றமூலமுடன் சித்திபண்ணு
தனதாகநூற்றெட்டுக் குள்ளேசித்தி
ஆனென்றஅண்டர்பதி யெட்டுமாடும்
அறுபத்துநால்மூலி யெல்லாமாடும்
கோனென்றகோடிசித்து க்ஷணத்திலாடுங்
குணமாகரேவதிநாட் செய்யனன்று
வானென்றவஷ்டமியில் செய்யனன்று
வளர்பிறையில்செய்பவனே யோகியாமே. 9

யோகிகளாயாவதற்கு வுனக்குச்சொன்னேன்
ஓகோகோமுன்னுரைத்த மூலத்தாலே
யோகிகளாயேகாந்த வல்லியாட்கு
யேட்டிலேயெழுதினதால் யெல்லாமாச்சே
தாதிகள்தாயுடைய கிருபையாலே
தவமாகுமவமாகும் சுபமுண்டாகு
மோகிகளாய்மூலசுழி பூசாவிதிபத்தாலே
முத்திபெறசித்திவிளை பத்துமுற்றே. 10

இராமதேவர் பூஜாவிதி-10

முற்றிற்று.

சிவமயம்.

தொண்ணூற்று நான்காவது,

நந்தீசர் வயித்தியம்–32.

சென்னமாம் மனிதர்தாமுஞ் சென்மிக்கும் வரலா றுந்தான், பின்னுமாம் சுக்கிலத்திற் பிராணவாய்வது தான்சென்று, தின்னமா மபானவாய்வு சென்றது கெர்ப்பமுத்தி, உன்னுமாம் ரெத்தசூத மதுவுதான் வாய்வு வளர்க்கும். 1

சூழ்ந்ததுசுக்கிலத்திற் சுரோணிதங்கலக்குமென்று
பூந்திடும்வியாதிமூண்டும் பொருந்தியகுமிழிபோல
ஏந்திடுந்திரளுமேனி ஈரலுந்தனிலுலர்க்கு [றும்.
மாய்ந்தநாளிருபத்தஞ்சில் அங்குருமுளைப்போல் தோன்

முந்தியதிங்கள்தன்னில் முளைத்ததுகட்டியாகும்
பிந்தியதிங்கள்தன்னில் பிடரிதோல்முதுகுமாகும்
உந்திக்குமூன்றாந்திங்கள் வுடல்அரைக்காலதாகும்
முந்திக்குநாலாந்திங்க ளுத்ததோர்மூக்குண்டாமே. 3

அஞ்செனும்திங்கள்தன்னி லாகிடும்செவிநரம்பும்
பொருந்திடுமாறாந்திங்கள் பொதிந்திடுநகமேசெய்து
உஞ்சியசலமலங்கள் ஒத்ததோர்நரம்புமுண்டாம்
தஞ்சமாந்திங்கள்ஏழில் பின்வருங்குணங்கள்கேளே. 4

கரம்புடனுடிசைந்து நண்ணியகுடல்கள்தொப்புள்
பரந்தகால்கரங்களுண்டாய்ப் பத்திரஎட்டாந்திங்கள்
சிரந்தனில்மயிருமுண்டாய் சிக்கெனப்பிலமுமுண்டாய்
துரந்தஅன்னசாரம் தொப்புளில்சலம்பெருக்கும். 5

ஒன்பதாந்திங்கள்தன்னில் வுணர்த்தியமறிவுமுண்டாய்
வன்புறுகெர்ப்பந்தன்னில்வருத்தநோய்பிலமுமுண்டாய்
தம்பிரான்தனைநினைந்து தவமுறுநியாயநின்று
அன்புடன்கையெடுத்தே அரும்பதமருள்வாயெங்கும்.

ஆகவேபத்துமாதம் ஆதித்தன் அருளினாலே
சீர்பெருமபானவாயு சிரமதுகீழதாக [லாம்
பார்தனிற்கொணர்ந்துதள்ளும் பயின்றுமுன்னறிவதெல்
சேறவேமறதியாகி திகைத்துநொந்தமருமன்றே. 7

கெற்பஸ்தானங்கள்செய்ய கெணந்தனிற்சரங்கள்நாசி
விற்பனப்பிராணவாய்வு வலத்தினிலோடிலாணும்
கற்பெனயிடத்திலோடிச் சிறந்ததுபெண்ணேயாகும்
உற்கரவுதையுமாகில் அலியிலாக்குருடூஊமை. 8

இப்படிச்சடலமான திதில்விடுமன்னந்தண்ணீர்
மூப்பதுநாழிகைத்தான் மூன்றுகூறுனபின்பு
மெய்ப்படியிரண்டுகூறும் போய்ச்சலமலங்களாகி
செப்புமோர்கதிரின்ரத்தம் சேர்ந்துடல்தனைவளர்க்கும்.

முயன்றெழு ரத்தந்தன்னில் மூன்றறைக் கோடிரோமம், துயங்தெழுந் துவாரந்தாமும் துப்புறப்பட்டதென்ன, துயந்தமோர் சடலந்தன்னில் உப்பிரு பலமதென்ன, துயன்றெழும் பித்துக்குச் சீயெட்டும் முரியதாமே. 10

செய்யதாமரையுள்வேதா செப்பியவியாதிக்கெல்லாம்
பையவேபடைத்தமெய்யிற் பத்தியநாம்புசோறி [ஞோர்
துய்யவென்பிறைச்சிமற்றுந் தொகுத்தனர்தெரிந்துமுன்
ஐம்மதக்கலகஞ்சொன்ஞர் அயங்காதியாதமென்றே. 11

அங்குலந் தொண்ணூற்ருறும் அவரவர் கையால்மெய்தான், இங்கதிற் குறையாதாமும் இறைச்சிநூற் றறுபற்றைந்து, மங்குகள் பலமாமென்பார் பாவைசேர் ரெண்டுகண்ணுங், கங்ருல்போ லழகுமாதே களஞ்சிரண் டாகுங்கண்டாய். 12

கண்ணுறுநாசிமூக்கு கழஞ்சிஞற்கழஞ்சிநாக்கு
நண்ணுறுகன்னஞ்சேர நாற்களஞ்சாகுமென்க [கள்
நுண்ணிறையெலும்பதெல்லாம் நூற்றெருபலமென்பார்
எண்ணுறுமீரலான தெண்பலமெண்ணலாமே. 13

எண்ணுமுப்பலமேமூளை யினிற்கிறுகுடலினீளம்
முண்ணுமுப்பத்திரண்டு முழமெனச்சொல்லலாகும்
பண்ணுமுன் தாமரைக்காய் பலம்அஞ்சுஎண்ணலாகும்
பண்ணுஞர்க்களஞ்சிபித்த யைம்புரம்பார்வைகண்டாய்.

பாய்ந்தழுக்கைமுன்னூழி பத்துமூவுழக்கிரத்தம்
ஆழ்ந்தநாளுழினூறும் அறிவுநோய்குறியாமாண்பர்
ஏய்ந்தந்தாரெழுபத்திரா யிரமவைவெலும்பைப்பின்னி
தேய்ந்தெனவியாதியாக திறமுடன்விளங்குந்தானே. ()

செந்தமிழ்நூலையாய்ந்து செப்புவேன்புவியிலிந்த
மந்திரத்துதித்தஞான மகாமுனிமகிழ்ந்துயீசன்
தந்தனம்பதத்தைநாடித் தவருமாமுனிவர்கூற
அந்தரத்தீசர்போற்ற அருளியவடநூலாமே. 16

வடநூலதனை மிகவாய்ந்து மகிழ்ந்தேவ முனிரிஷிகளுடன், திடமாயிதனைக் கலைபகுத்துச் செய்யும்புவியி லுளவோற்கு, அடவாய்த்தானும் பிணிமுறையும் அங்கக்குறியும் சாத்தியமும், வடமாநயன விதிநூலை வகையாய் வழுத்த வாறிடுவே. 17

வாரிதுஆறதென்றும் வகையிதுதன்னையிந்தப்
பேருமேலஞ்ஞானநீதிப் பெருகியவுலகுள்ளோர்க்கு
கூறிதாவாரிலொன்றுக் குணமிதிரானநூலை
மீரிடவிதனைநீயு வியம்பிடயிருந்துகேளே. 18

அறிந்தேகொள் நாடிதானும் ஆண்பாலில் வலப்பக்கந்தான், செறிந்தேமாந்தர்க் கிடக்கை ஜென்மித்து விட்டபின்னும், குறிந்தேவந்தனிடக்கையாற் கூடமூன்றுவிரல்

வைத்து, தெளிந்தே வாதமருள்பித்தம் சேட்பக்குண
மும் தான்பாரே. 19

பாரேநாடி அறிந்துணர்ந்து பரமன்செயலும் பிணிமு
றையும், நீரோடும் சலமலமும் நிறமுங்குணமும் முகக்
குறியும், நாரேயிளங் குழல்மடவீர் காலதிரேகம் வயனி
ளமை, நேரேயறியு முகநாடி நெறிவும் தெளிவும் சொல்
வாமே. 20

சொல்லியவுந்திதன்னில் செழித்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி யெழுபத்திராயிரத்தில்
வல்லவர்வகுத்துச்சொன்ன வளம்பெறுநாடிபத்து
நல்லதோர்நாடிமூன்றும் நயந்துநீயறிவாய்ப்பாரே. 21

கைதனைப்பிடித்துநீயுங் கடவுளைக்கருத்திலுன்னி
உய்வதோரல்லவென்று வுத்தறிநாடிபார்க்க
பையவேதொட்டுதொட்டு படைப்பதுகண்டபோதே
மெய்தனிற்குணங்கள்கண்டு மேவிநீவிளம்புவாயே. 22

விளம்பியேவாகடத்தில் விரிந்தனவிதங்களெல்லாம்
தெளிந்ததிவ்வாதபித்த சேஷ்பனங்கொள்கையோடு
வம்பலில்ஜன்னிதோஷம் தானுறுவாரதெல்லாம்
ளம்பெறத்தெளிந்துயிர்ந்து மனதிறைற்கருதுவாயே. 23

கரிமுகனடியைவாழ்த்திக் கைதனில்நாடிகாண்கில்
பெருவிரலிடையேதொட்டுப்பிடித்தடிநடுவேதொட்டால்
ஒருவிரல்ஓடிவாத மறுவிரல்பித்தமோதும்
திருவிரல்மூன்றுமோடி சிலேட்டுமநாடிகாணே. 24

அங்கையைமுறிக்கிநெட்டி அடவுடன்மேலேவாங்கி
செங்கையால்பகுத்துநாடி மெள்ளவேயோடுமாகில்
மங்கையேவாதமென்று வனத்திறுலுரைத்திடாயே. 25

உத்தறிநாடிநொந்து வுயர்ந்ததுப்பதறியோடும்
பித்தமாம்நாடியென்றே பிசகறவறிந்துக்கொள்மின்
மெத்தவேயிரண்டொடுங்கி விறகெனத்தெறிக்குமாகில்
சுத்தமாசிலேற்பமென்று சொல்லுமெய்ஞ்ஞாலமீதே. ()

ஞாலமேயுடலந்தன்னில் நயப்பிணியில்லாதார்க்கு
காலமேவாதமோடும் கடும்பகல்பித்தமோடும்
மாலையிலையமோடும் மென்னவேமகிழ்ந்துநாளும்
சாலவேவைத்தியோர்கள் தாமிதுதெளிவார்தாமே. 27

தெளிந்தவர்கைக்குள்நாடி செய்யவெள்ளரிக்காய்தின்ன
குளிர்ந்திடில்வாதமாகும் குலவியவறையோடென்ன
விளங்கியமேனிதானும் வெச்சனில்வளம்பெறத்து
மையவேயவரைப்பூண்டு வழுத்திடுஞ்சேஷ்பமென்றே.()

சேஷ்பமுமுதித்தபோது இத்திப்புநாவிற்றோன்றும்
மேஷ்டியாய்க்கசப்புமீற பெருத்ததுபித்தமாகும்
ஏஷ்டியபுளிப்புமீற எழுந்ததுவாதமென்க
நாஷ்டமுத்திதனையெல்லாம் நயம்பெறநாடிச்செப்பே. ()

செப்புமாம்தன்னியவாதம் தீயதுக்காற்றைப்போல
பித்தமாமுற்பவித்துச் சிவனதுஜடலந்தன்னில்
ஒத்தபல்நீலமொத்து வுடற்கரிவுப்பதாகும்
நெற்புறயிதனையெல்லாம் நிலையறயறிவர்தாமே. 30

சித்திரைவைகாசிக்குஞ் செழுங்கதிருதையந்தன்னில்
அந்தமாம்ஆனிஆடி அற்பசிக்கார்த்திகைக்கும்
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதைமாசிக்கும்
அத்தகன்கிழக்குமேற்கு விழிக்கின்றனோந்தானே. 31

தானதுபங்குனிக்கும் தனதுநல்லாவணிக்கும்
வானமாம்புரட்டாசிக்கும் அர்த்தராத்திரியிற்பார்க்க
தேனெனமூன்றுநாடித் தெளியவேகாணுமென்று
கானமாமுனிவர்சொன்னார் கருதியேகண்டுபாரே. 32

நந்தீசர் வயித்தியம்-32

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

தொண்ணூற்று ஐந்தாவது,

நந்தீசர் முப்பு

பிரணவச் சூத்திரம்-37.

அம்புலியாடுங்கண்டன் யானைக்குஞ்சரத்தான்நேத்தி
வம்புலிமாதுமெத்த வள்ளலேலெம்மான்றன்னை
கொம்புலிஎழுதுங்குன்றை குடங்கையாமோதகத்தின்
சம்புலிங்கீசன்தந்த சரணமென்பணிகுவேனே. 1

பணிந்துமே நந்திஎன்போன் பகர்ந்தது முன்னூரைத் தள்ளி, கனிந்தனன் அன்பதுக்குள் காட்டிய விரிவைத் தள்ளித், துணிந்தன வாயைவிட்டுச் சொல்லினேன் முப் பத்தஞ்சில், மணிந்தநல் சதாசிவமும்சத்தி மகிழ்ந்திட விண்டுபாரே. 2

பார்த்திட விண்டேன் பொல்லாப் பாவியாம் சிவத் தின்கூவை, கார்த்திட மிதப்பதாகக் கழன்றிட்டேன் வாய்க்கெட்டாமல், சார்ந்திட்டேன் சண்டீசநாதர் தா லறமானமூல, மார்த்திட்டே னுந்தனுக்காய் சொன்ன மறைப்புள்ள நந்திநூலே. 3

நந்திநூல்நாலாமூன்றும் நவின்றனெனன்பன்னிரெண்டில்
அந்தமாமுடியைக்காண அளித்தஅன்னூருஞானச்

கந்தமாமூலமான காரணமாப்பிரத்தில்
பந்தமேவிட்டுஞானப் பதம்பெறுவோர்க்குத்தாமே. 4

தாமெனஎந்நூல்காணச் சாத்துவோர்சத்தநாதா
யாமெனச்சூக்ஷங்கண்டாய் வாதமானந்தியென்று
நாமெனநூல்கள்தோறும் நாட்டியேவாருசூட்சம்
சாமுனங்காணவேணும் சண்டிசர்நந்திவாழ்வே. 5

வேறு.

வாழையென்றால் பொல்லாத வார்த்தையப்பா வாயடக்கம் வேணுமையா பற்பம்வேணும், தாழையடா குலம்வெந்த வாளதாகும் தப்பாது சாபமெத்த சண்டீசனுதா, மோழைபடுங் குடிகெடுக்கும் வுள்ளொணாது மொழியவொண்ணு வொருவருக்கும் மூழகுங்காணாது, பாழையிட பிடமறியா வாழைநாமம் பகருகிறேன் அதின்பெருமை யுந்தனுக்கே. 6

பயமெனவே நாவடக்கி கேளுகேளு பச்சைகள்ளிசெவ்வந்தி பதாக்குப்பி, மயமெனவே வெள்ளையம்மா மஞ்சளத்தான் மகிமையடா ஐவரிட மகிமைமெத்த, சுயமெனவே யவர்வாழும் காட்டிலெங்கும், துலங்குமப்பா மங்களங்கள் சுபமேயாகும், நயமெனவே யவர்களில்லாதநாடு நாதாந்ததேவிமார் நடனங்கேளே. 7

26 †

கேளப்பா பச்சைகன்னி மூலிகாமம் பிரித்திட்டார் நாதாக்கள் அநேககாமம், நாளப்பா செவ்வந்திக் குமரியா தே நடத்திட்டான் போகமவன் நடுக்கமாக, மீளப்பா மாரணமும் முடித்துவேதை மூலமென்ற தொழிலுக்கு மாதியாச்சு, பாரப்பா யவளாட்டம் மெத்தவுண்டு பஞ்ச கன்னிக் கிளையவளாம் மூத்தாள்பின்னே. 8

பின்னென்ற கருப்பியடா கண்ணுகண்ணு பேசுமடா வாயில்லை பிறந்தாளாத்தாள், பண்ணென்ற பாருக்கு ளவளுந்தித்து மாய்ந்தவர்கள் கோடியுண்டு மறப்பைக்கா ணுர், சொர்னகிரி யான்முடியில் வாழுமங்கை சொல்ல வடா அவள்பெருமை சொக்கிப்போகும், என்னென்று சொல்வனப்பா மனம்வேறுச்சு எடுத்திட்டேன் எமனுல கம் எனக்கேயாச்சே. 9

ஆச்சென்ற கும்பமுனி வெள்ளையம்மாள் அடிப்பிண டம் அண்டமுடன் அவளைப்பற்றி, தோச்சப்பா காவி யத்தில் பகர்ந்ததர்மம் தொல்லுலகோர் காணுர்கள் து லங்கப்பூட்டை, பேச்சென்று வெள்ளையுப்பாய் நாதநீ ரூய் பிரட்டியால் முடித்துவைத்தாள் மூன்றினுலே, காச்சப்பா பழுத்தேறிக் கசிந்துவிட்டார் கனகமென்ற யகத்தீசன் கருவதாமே. 10

தாமென்ற கனமந்திரி வடமைல்தன்னில் தானிருந்தான் மஞ்சள்கன்னிக் கருவினாலே, போமென்ற வாகடத்துக் காரியாச்சுப் பொல்லாத பலரோய்க்கும் பூரணமேயாச்சு, நாதமென்ற பிண்டகரு அண்டமாகும் ஞானிலத்திலுதித்தநல்ல மூலியாகி, நாமென்றேசொல்லவில்லை ஆத்தாள்பாதம் நம்பியுன்க் குரைத்திடவே நயந்துகேளே. 11

கேளப்பா சண்டீச முனியேநீதான் கெர்விந்தால் வாயதுதான் கெடுதியாகும், தாளப்பா வாதிகிரி விண்டேனையா சண்டாளர்க்கு வாய்க்காது சாதிதேதும், நாமப்பா பெறுதல்போ மனதையேத்தி நாவடக்கி மவுன்முற்றால் நடனமாகும், பாரப்பா போவதில்லை உனக்குரைத்தேன் பாராபரிதன் பாதந்தான் பகருவேனே. 12

பகருவேன் பஞ்சகன்னி தன்னில்பங்கை பச்சைசிறந்தாள்மகிழும் பதுமரூபி, சிகருமொரு கருணைவை கடுத்தநாமம் சிதம்பரமே நாளாகும் தீபமாகும், பகருகிறேன் அவள்வாழ்வை உனக்குள்ளாக சத்தியமேநில்லபாக சுகமதாகும், உகருகின்ற யிதன்பெருமை விண்டையானால் ஓகோகோ முடிசாய்ந்து உதவார்தாமே. 13

தாமென்ற கருவாழை யாகுமெத்த தப்பாது உயரமில்லை சாற்றலாகும், வாமென்ற ஆதிரண்ட அண்டமாா

கும் மகத்தான அதின்பிண்டம் பிண்டமாகும், நா மென்ற தினதசைதோல் நரம்பு நிணமேயாகும் நால் இலத்தண்டு காய்றுலேயாகும், வேமென்ற வேதைக் கும் ஆதிமூலம் வின்மயமா வின்ளாதே விளம்புவேனே.

விளம்புகிறேன் கன்னிக்கோ வயதுகேளு இன்ப முள்ள வெட்டுத் திங்களுக்குள், களம்புகின்ற வயதாயுங் கருவுதிக்குங் கண்மணியே கண்டறிந்து யெட்டில் மாய்த்து, நயம்பெறவே வண்டத்தை யெடுத்துச்சீவி நாயகமே டுருதியுடன் யிடித்துப்பாண்டம், விளம் பெறவே மேல்மூடி ரவியில்வைத்து மகத்தான தேவியை நீ தியானிப்பாயே. 15

தியானிப்பாய் நாள்மூன்றில் பூர்க்குமுப்பு நலமாக வழித்தெடுத்துப் பதனம்பண்ணி, தியானிப்பா யண்ட திப்பி பண்டிதாக கிளம்பிடுவாய் திரிகடுகு சுக்கேலமஞ் சள், மியானிப்பாய் அண்டதிப்பிக் கிடைநாலாகவ் அ விடையா மிம்மருந்தே அரைத்துநீயும், நியானிப்பாய் ரசம்விட்டே யர்ட்டிமைபோல் நிழலுலர்த்தி மீளவே நிலத்தோற்கியே. 16

அண்டக் குளிகை.

ஈன்றிடுவாய் ஜன்னிமுதல் பலதோஷத்துக் கிம்மருந் தை நலத்துடனே சிறந்துஊட்ட, மாய்ந்திடுமே பத்தி

யங்கள் பதமேயல்லா மற்றொன்று மில்லை வுப்பின் மகிமைகேளு, சாய்ந்திடவே உப்பாலே யப்பாலெல்லாம் சாயுமே காந்தகிரித் தங்கமாகும், பாய்ந்திடுமே யுப்பாலே மூலியெல்லாம் பதப்படங்கி யாடுமிந்தப் பாருளோர்க்கே. 17

பாருள்ளோர் காணுதப் பொருளைக்கேளு பாழ்போக அண்டத்தின் சிரத்தைகொண்டு, நீருள்ள புளித்தமரம் க்ாயிஞேடே நீமகனே சீவிபிட்ட சிரத்தைச்சேர்த்து, காருதியே கல்லுரலில் இடித்துச்சட்டி களிம்புடனே கதிரதனை காணுமல், வாருள்ள மதியோனை யதனில் வைக்க மகத்தான ஜயநீறும் வருகும்பாரே. 18

பாரப்பா ஜெயநீரின் பெருமைமெத்த பாஷாணத் துரிசிவங்கம் சாரங்கட்டும், ஆரப்பா கைம்முறையாய்க் கிராசமிட்டு அப்பனேறவியிலிடத் தீயாம்பாரே, காரப்பா மான்கட்டி கல்லாதானுல் கண்மணியே யதின்தலைப் பிண்டத்தாலே, தாரப்பா கெற்பவிதி வேளைகண்டு தாய்த் தலையைத் தரித்துபிண்டம் கீணிப்போடே. 19

கீணியே பிண்டத்தை யெடுத்துமெத்த கிருபையுடனதைகசித்து மொத்தைபண்ணி, ஊணியே முன்சரக்கை யதற்குள்வைத்து உத்தமனே பிண்டத்தை சீலைசெய்து, ஆணியே கவமாக சீலையீரம் அப்பனே கோளியிடப்

புடத்தைப்போடே, பாணிபோ ஊைபாரை பூநீராம் பூர்க்கும் பக்குவமாம் முப்பூவே நில்லைதானே. 20

பரம்நீயாம் வேதைபலம் பத்துக்கொன்றும் பரிகொள்வ தாம்பகர்ந்திசொன்ன, சரம்நீயும் யோகவான் நீயேயாவாய்ச் சண்டாளர்க்குரையாதே தப்பிப்போகும், அரன்நீயே ஆதிகுரு வாகச்சொன்னே னகிலத்தி லதியர்களிம் மூலிமார்க்கம், கரமணியே சரணமெனப் பணிந்தோதிவிட்டேன் சண்டீசா நாவிழந்து சாத்தினேனே.

சாத்தினதோர் முனிவரெல்லா மிம்மூலி கொண்டுதானறிந்து கருவழலை யென்றோதிவிட்டார், மாத்தினதோர் யாவருமென் னூலைத்தேர்ந்து மறைப்பரியாக் கேட்டவரோ வழலையென்று, கூத்தியா ராசையினால் பெண்டைநீக்கும் குடிகேடகேடரப்பா வழலையென்று, நேத்திரங்க ளுள்ளவனே காண்பானிந்த நிசமான கருவாழை வழலைதானே. 22

வழலையென்ற செயநீரி லிங்கமாகும் வாழுவென்ற மெழுகாகும் சுடரில்காட்ட, மழலையென்றச் சூதமது ஜெயநீரில்காட்ட மாட்டுவார் லிங்கத்தில் சுடரிலேறும், தழலையென்ற மும்மூர்த்தி சத்தியாலே னடங்கிமெழுகாச்சு சதமும் பொன்னும், கடலையென்ற நவமூப்பூ

அதற்குள்ளாச்சுக் கனகமிதுக் கொவ்வாது கருத்தாய்ச் செப்பே. 23

செய்வதோ ரிம்முறையைப் பாகமாகச் செயலான புத்தியுடன் செய்வாயானால், வையகத்தி லுனைக்காண் போ ரில்லைகண்டாய் மாதவனும் யாதவனும் மறலிகூட, கைவனெனச் சிவசமயங் கைகாட்டாமல் காரணசாதா கன பூரணமே சார்ந்துநிற்கும், வயமேற நாபிவீடு மங் கேயாச்சு மகத்தான நந்தியென வாதமாச்சே. 24

ஆச்சென்று மகிழாதே யின்னங்கேளு அப்பனே நா லாகும் சாதிவாழை, போச்சென்ற மஞ்சளிட வாழ்வே ஒன்றும், புவிமீது வழங்குதப்பா போதுமாந்தக், காச் சென்ற காய்பழமும் அண்டம்பிண்டம் கதிரிலையும் கரி யாச்சு காணுசூட்சம், மாச்சென்ற பலநோய்க்கும் வாய் வுமாகும் மகத்தான சராசர மதனுலாச்சே. 25

மதமான பொன்வெள்ளித் துலக்கிவைக்கு மாடபடி காரவங்கே விளைவுகாணூர், சதமான மஞ்சளிட வாழை தண்டில் தானுச்சு கறிவுப்பு காரசாரம், பிதமறியா மூடர் களோ மூலிதேடி விடுபட்டுக் கெட்டாரோ டிணங்க வேண்டாம், பதமிகமா யானுரைத்த வாக்குப் பொய்த் தால் பாழாச்சு பரலோகம் பந்துபோச்சே. 26

போச்சென்று யெண்ணுதே சவுமியத்தில் புகன்றிட்ட கும்பமுனிப் பொருளேக்காணுர், வாச்சென்ற ஞானகா வியத்தில்விள்ளும் வகையாகும் ப்ரபாஷையாய்க் காண டம்பாரு, மாச்சென்ற யெந்நூலே மறைப்பொன்றல்லோ மறைந்துசொன்னுர் நூல்தோறும் மனதை விண்டேன், தாச்சப்பா ஐந்துவகை சாதிவாழை தள்ளிவிட்டு மஞ்ச ளென வாழைத்தானே. 27

தானென்ற மானிடரோ சாதிநாலு தப்பாது சித்தினி யாம் பத்மினி அத்தினி சங்கினியாம்நாலு, மானென்ற வாழையிலே சாதிநாலு மைந்தனே கருவாழைச் சித்தி னியேயாகும், பானென்ற வெள்வாழை சங்கினியேயா கும் பத்மினியாம் செவ்வாழை பச்சைவாழை, யேனெ ன்ற அஸ்தினியே யாகுங்கண்டாய் இதையடக்க சாதி உள்ளோர்க் கிணங்குமாமே. 28

ஆமேதான் சித்தினிக்குச் சித்தினியோன் காண்பாள் அப்பனே பற்பினிக்கு பற்பினியேகாண்பான், வாமே தான் சங்கினிக்குச் சங்கினியோன் காண்பான் நாமே தான் சொல்லிவிட்டோம் முன்னேசொன்ன, நலமாகப் படிநடக்கும் நாடிப்பாரு, ஓம்நமசி வாயவென்ற மூல மோத வோங்குமப்பா நால்ஜாதிக் குண்மைதானே. 29

தானென்ற அண்டத்தில் யெட்டெட்டுங்கட்டு சமத்தாக முன்னூரை எதிலுங்காணூர், வேனென்ற இந்தப் பத் தஞ்சில்சொன்ன விஷமான முங்கைபுரிந்தேனேயோ, கானென்ற வயர்வளர்க்க வெளிவிடுப்பது நந்திகுல மழியுங்காணே, நானென்று நீயென்று மறியவொண்ணு நாதாந்த ரகசியத்தை நவின்றிடாதே. 30

நவின்றிட்டால் சாதிதப்பி பலியாதோடும் தான்வருத்த மெத்தவுண்டு தவரும்நூலு, புவின்றிடல் சாதிகண்டு யாதிமன்னன் புணர்-இ-உ-வா வென்று நூற்றெட்டு மோதி, நவின்றிடவே இதனைச்சாதி கட்டுக் கட்டாகும் வகைத்தொழிலைக் கண்டுகொள்ளு, நவின்றிட்டால் பரலோகம் சித்தியாகும் பகருகிறேன் வாழையுட பருவங் காணே. 31

காணவே கருவாழை நான்குஜாணும் களங்கமில்லா வெள்வாழை முழமேநாலாம், வூணவே செவ்வாழை முழமேபத்தாம் வணக்கமுள்ள பச்சையுட வாழைமூணும், பூணவே முழமூணும் சாதிவாழைப் பிரித்திந்தப் படியாகும் வேதைகோடி, காணவே யற்றவர்க்குத் துலங்குமிந்த நால்சாதிக் கண்டவனே நாதனமே. 32

நாதனும்என் னூல்வாக்கின் படிநடந்தால் நாயகனுப் பரமபதம் னூடாம்காணி, வாதமாம் அண்டத்தைக் கிருஷ் ணபட்சம் வளர்பிறையும் தேய்நாளில் சோமநாளாம், பூதமாம் வெள்ளியோன் புகன்றவேளைப் பொழிசோ னைக் கண்டதலை பூட்டிவாணை, சாதனும் சதாசிவமே சத்தியென்று தாக்கிடுவாம் பிண்டவெள்ளி சமயம் பார்த்தே. 33

பார்த்தெரிந்த தலைப்பிண்டம் பூவிரியாதப்போ பாச் செடுப்பாய் தலைவெட்டி பதனம்பண்ணு, காத்திருப்பாய் அவளுடலைக் கண்டத்துண்டாய் கனமான பாண்டத் தில் குருதியோடே, சேர்த்திடுவாய் மதுபாண்டம் யவள் ரோம னிணத்தையெல்லாம் சிவசிவாகன்னிமற மாண்டு பையோர, பேர்த்திடுவாய் அண்டமென்ற காட்டைதன் னை பிறிட்ட மேலறத்த மயில்தாக்கே. 34

தாக்கிடுவாய் அண்டத்தோல் சீவிக்காட்டி தன்மை யுள்ள முட்டையைநீ யபானத்திட்டு, வாங்கிடுவாய் அண்டசிறம் வுப்புக்கூட்டும் வகையான யிலைநறம்பு வியாதிபோக்கும், சாக்கிடுமே அண்டத்தில் வேதைமுன் னா னுரைத்தபடி நீநடந்தா லடங்கிப்போச்சு, தேக்கிடு வாய் பிண்டத்தில் எல்லாநீரும் பிழிந்தகலை கவசமிட்டும் பூட்டுக்காணே. 35

காணுவாயிதினாலே யெல்லாமாளும் கன்னிவுன்னை விட்டிடையாள் கருத்துவேணும், பூணுவான் மொழிந் தனந்தி மதிகையப்பா நூத்தில்பிரி வாக்கினாலும் வகை பிரிந்தநூலை, உண்ணுவா யதில்தேர்ந்து வெளியிடாதே ஓகோகோ உனக்காக உரைத்தேன் தப்பூ, நாணுவா யெண்சாணும் ஒருசாணும் நாட்டினால் னந்திகுரு சாதிப் போமே. 36

போச்சுதென்றும் வாச்சுதென்றும் பொங்கவேண் டாம் பொய்யரையாய் புகலாதே புத்திகெட்டு, காச்சு தென்றும் பூசினியின் கொடிபோல்தாங்கு கண்டறினீ நந்திமதி கைம்பாநூறி, மாச்சுதனக் கதனாலே வசனித் தேயான் வாயடக்கு சண்டீசா வறுமைபோக்கும், பாச் சுதுனக் கிதனாலே னந்திவாய்வு பறம்பொருளை பெத்து மிகப் பலித்துவாழே. 37

நந்தீசர் முப்புபிரணவச்சூத்திரம்-37

முற்றிற்று.

உ

கணபதி துணை.

தொண்ணூற்றி ஆறுவது,

சகலவிஷத்துக்கும்

நந்தீசர் குளிகை - 8.

சீர்பெருகுமனோன்மணியே மாதாவென்றும்
சிவபிரானென்பிதாவென்று மவர்சீஷனென்றும்
கார்பெருகுந்திருமூலர் பிள்ளையென்றுங்
கைலாசபோகர்தான் றமையனென்றும்
பேர்பெருகும்சின்மயத்தின் கருணையாலே
பேசிவைத்தாள்சரஸ்வதியென் னாவில்தானும்
ஏர்பெருகுமெய்ஞ்ஞான பொருளைநந்தி
யெடுத்துரைக்கக்கணபதியுங் காப்புத்தானே. 1

தானென்றவிஷக்காறி கண்டபேயும்
சாதகமாய்சிற்பரியும் துருசுமாகும்
கோனென்றநிம்பவிரை சிலையுங்கூட்டி
கூராகக்காயமது பாலாலாட்டி
தேனென்றமகாவிந்து பாலாலாட்டி
சிக்கவேகுளிகையது செய்துக்கொண்டு
வானென்றவொருகுளிகை விஷத்துக்கெல்லா
மைந்தனேகுடுத்தாக்கா லோடிப்போமே. 2

போகுமேகருவேருந் துங்கிவேரும்
புகலானவூர்க்காளி தனையுங்கூட
சாகுமேநற்சுள்ளி நற்கன்னிதானும்
சாதகமாய்நாறியது முசக்காதுதானும்
ஏகுமேஅப்பைதுரு வழுறிதானும்
இருள்வளத்திகளிப்பூச்சு க்ாயந்தானும்
வாகுமேபழச்சாற்றிற் குளிகைசெய்தால்
மைந்தனேபில்லியது போகும்பாரே. 3

பாரப்பாநீறுபச்சை கூறுவெள்ளி
பாங்கானகாறுமொச்சை மேனிதானும்
ஆரப்பாகாவளையின் சிற்றரத்தை
அப்பனேகடைக்காயம் வசம்புதானும்
வேரப்பாவேலிப்பருத்தி தனைச்சாறுவார்த்து
விட்டரைத்துக்குளிகைதனை செய்துக்கொண்டு
வாரப்பாபிள்ளைபிணி நூற்றெட்டுந்தான்
மைந்தனேகுளிகைகொள்ளப் புகலக்கேளே. 4

புகலுகிறேன்எலிகடிகள் பதினெட்டுக்கும்
பொல்லாதஎலிபுலியின் சீலந்தானும்
நிகலுகிறேன்கதிர்வாதம் தன்னிலப்பா
நிலையாகஅதையெடுத்து குளிகைபண்ணி

தகலுகிறேன்நாகவல்லிக் குள்ளேவைத்து
சாப்பிட்டாலென்கடிகள் சாடிப்போகும்
அகலுகிறேன்குளிகையது வெல்லாஞ்சித்து
அறிந்தவனேவயித்தியர்தா னருவானே. 5

ஆகுமேநெல்லிவித்து கிளாக்காய்வித்து
அப்பனேஅகண்டப்பால் விட்டுஆட்டி
தாகுமேகுளிகையது பதனம்பண்ணி
தப்பாமலொருகுளிகை யுரைத்துப்போட்டால்
போகுமேதேள்கொடுக்கு விஷங்களெல்லாம்
பூரான்செய்யான்கருந்தேள் விஷங்கள்போகும்
வாகுமேகடிப்பெருப்புத் தீரும்தீரும்
மைந்தனேபன்னிரண்டு குளிகைகேளே. 6

கேளப்பாவசீகரந்தான் லோகத்துக்குங்
கிருபையாய்ஸ்திரீகளுக்குஞ் சொல்லக்கேளு
நாளப்பாவேகாக்கொல்லி பிராமணியுங்கூட்டி
நலமானபிராமனிட நசனத்தந்தும்
தாளப்பாபசுவின்பால் விட்டுஆட்டி
சாதகமாம்சிவயநம அங்-கிலியும்ஊரீம்சீயவென்று
வாளப்பாசொல்லுமே திலர்தமிட்டால்
மைந்தனுமேஸ்திரீகளுமே வசியமாச்சே. 7

ஆச்சப்பாபரங்கிதில வகிரிதானும்
அப்பனேஅகிலிது மூணுங்கூட்டி
மூச்சப்பாகருங்கழுத்து குருவிதானு
மூன்றுகவேகினித்து வறிந்துபோடு
வாச்சப்பாநெய்யிலே பொரித்துத்தானு
மைந்தனேகுளிகையது செய்துக்கொண்டு
நாச்சப்பாதிலர்தமிட வெல்லாஞ்சித்தி
நலமாகநந்தியுட பாடல்முற்றே. 8

நந்தீசர் குளிகை-8

முற்றிற்று.

௨

கடவுள் துணை.

தொண்ணூற்றி ஏழாவது,

நந்தீஸ்வரர் பூஜாவிதி-12.

கேளப்பா ஓம்ஸ்ரீரீ கங்கென்றுந்தான் கெடியாக மூலத்தில் கும்பித்தாக்கால், வாளப்பா பழந்தேங்கா யவல்வடைகள் தோசை, வளமாக விக்கினற்குப் புஷ்ப பரிமளங்கள்சாத்தி, நாளப்பா மனதடங்கித் தோத்திரஞ் செய்து நலமான விக்கினரைப் பூசித்தாக்கால், ஆளப்பா யாசீர்வாத மிடுவாரையா அப்பனே விக்கினரைப் பூசை செய்யே. 1

செய்யப்பா விக்கினர்தன் பூசைசொன்னேன் செய மான ஷண்முகவன் பூசைகேளு, வையப்பா சங்கவங்கங் சரவணயாவென்று வளமாக அனுகதப் பூசைபண்ணு, மையப்பா புஷ்பபரி மளங்கள்கொண்டு மைந்தனே தூய நைவேத்தியங்காட்டி, கையப்பா கனகசபை யதிலேபூசி கண்மணியே சண்முகத்தை வரங்கள்கேளே. 2

காணப்பா ஆதார பூசைசொன்னேன் கண்மணியே சிவபூசை சொல்லக்கேளு, வாணப்பா நமசிவய சிங் ஆம் மென்று வளமாகப் பூரணத்தி லிருந்துக்கொண்டு

ஆணப்பா தூபதீப நைவேத்தியத்தோடு அப்பனே சதாசிவத்தை தோத்திரஞ்செய்நீ, மாணப்பா நீகேட்ட தெல்லா மீவார் மைந்தனே சிவத்தினிட மகிமைக் காணே. 3

தானான சிவத்தினிட பூசைசொன்னேன் தண்மை யுள்ள சத்தியுட பூசைகேளு, வானான யிம்மென்றுங் கும்பகத்தில் வாங்கி வளமாக வொருமன தாகநின்று, ஆனான கதம்பகஸ்தூரி புஷ்பம்வைத்து அப்பனே பால் பழங்கள் வஸ்துவைத்து, மானான தேவியைத்தான் தோத்தரித்து மைந்தனே சாஷ்டாங்கஞ் சரணம் பண்ணே. 4

பண்ணப்பா யென்னவம்மா வென்றுகேளு பலவித மாய் நீயெடுத்ததெல்லாமெய்யாம், அண்ணப்பாயென்று மவள் சொன்னாற்போதும் அப்பனே யடபாத்திற் பலிக்கும்பாரு, வண்ணப்பா சத்தியுட பூசைசொன் னேன் வளமான சிவத்தினுட பூசைசொன்னேன், கண் ணப்பா விஷ்ணுபூசை சொல்லக்கேளு கண்மணியே மங்-நங்-சிங்கென்றேத்தே, 5

ஏத்தப்பா புஷ்பபரி மளங்கள்சாத்தி என்மகனே கதம்பகஸ் தூரிசாத்து, வாத்தப்பா சங்கீதத்துடனே

பூசி வளமான விஷ்ணுவுக்குப் பூசிப்பூசி, போற்றப்பா மனதடங்கிப் பத்தியாரப் போற்றவே விஷ்ணுவவர் கேட்டதெல்லாம், ஆற்றப்பா விஷ்ணுவின் பூசைசொன் னேன் அரகரா கெஜமுகவன் பூசைகேளே. 6

ரேசகபூசை.

பாரப்பா ரேசகத்தின் பூசைகேளு பண்பான ரேசகத் தின் ஆமென்றேத்தி, ஆரப்பா நைவேத்தியங் கும்பகஞ் செய்து அப்பனே ரேசகத்தில் மனதைநாட்டு, வாரப்பா மனமதுதான் ரேசகமேயாச்சு வளமான ரேசகந்தான் வசியமாச்சு, நாரப்பா ரேசகத்தின் பூசைசொன்னேன் நலமான பூரகத்தின் பூசைகேளே. 7

பூரகபூசை.

கேளப்பாமணிபூர கத்தில்மைந்தா கெடியாக யிம் மென்று கும்பித்தேத்து, வளமான பூரகத்திற் றோத்தி ரம்பண்ணி வாளப்பா வேண்டிய வரங்கள்கேளு, வள மாக விஷ்ணுவரமீவார்பாரு, ஆளப்பா பூரகத்தின் பூசை சொன்னேன் அப்பனே கும்பகத்தின் பூசையாமே. 8

கும்பகபூசை.

ஆமப்பா கும்பகத்துள் உம்மென்றுநாடி அப்பனே யுன்மனதைக் கும்பகத்தில்வைத்து, வாமப்பா பூசைநை

வேத்தியஞ்செய்து வளமான கும்பத்தை மனதால் வேண்டு, காமப்பா கும்பத்தை வரங்கள்கேளு கண்மணி யே வேண்டுவர மீவாரையா, காமப்பா சூரியன்றன் பூசைக்கேளு நலமாக மங்-சிங் கென்றுசொல்லே. 9

சூரியன் பூசை.

சொல்லப்பா சூரியனிற் கும்பகமேசெய்து சொற் பெரிய பூசைகை வேத்தியஞ்செய்து, அல்லப்பா சாஷ் டாங்க சரணஞ்செய்து அப்பனே தோத்திரஞ்செய் கும் பகத்தை, மல்லப்பா அஷ்டசௌ பாக்கியமீவார் அகத்தி யன்று கும்பகத்தில் வரங்களீவார், வவ்லப்பா சூரியன் றன் பூசைசொன்னேன் வளமான சந்திரன்றன் பூசை கேளே. 10

சந்திரன் பூசை.

கேளப்பா யங்-நங்-கென்றுகும்பி கெடியாகப் பால் பழங்கள் பாயாசம்வைத்து, ஆளப்பா தூபதீபம்கைவேத் தியஞ்செய்து அப்பனே சந்திரனைத் தோத்தரித்து, வாளப்பா சோடசமாய்ச் சந்திரனும்நின்று வளமான சந்திரனை வரங்கள்கேளு, நாளப்பாவேணவா மீவாரையா நலமான சந்திரன்றன் மகிமைப்பாரே. 11

சனி பூசை.

பாரப்பா சனிபூசை சொல்லக்கேளு பண்பான வங் கென்றுஞ் சிங்கென்றுந்தான், நாரப்பா மேருவிலே குந் திக்கொண்டு நலமாகத் தோத்தரித்துப் பூசைசெய்நீ, வாரப்பா தூபனை வேத்தியத்தோடு வளமாக தோத்தரி த்து பானஞ்செய்து, ஆரப்பா வேணவரங் கேட்டுக் கொண்டு அப்பனே யட்சணத்தி லீவார்காணே. 12

நந்திஸ்வரர் பூஜாவிதி-12

முற்றிற்று.

சிவமயம்.

தொண்ணூற்றி எட்டாவது,

நந்தீஸ்வரர்

பிரணவசூத்திரம்-15.

அடியவர்கட் கடியனாகி ஐம்புல னைந்திலொன்றாய், படிமிசை யாவற்றுக்கும் பரம்பொரு ளொன்றென்றாகி, வடிவினில் வடிவதாகி வான்புவிக் கோர்வித்தாகி, கடகரி முகமதானக் கற்பகக்கனியைப்போற்றும். 1

போற்றினு னுவடங்கிப் புஜண்டர்தன் னருளினாலே, சாத்திஎஙந் நூல்கள்சூட்சம் தான்விள்ளு தற்காயிந்த, மாத்திக்கு மாணிபோலும் மறைப்புள்ள நூலின்பூட்டே, வீத்திடும் திறவுகோலாம் விண்டிட்டேன் சண்டேசர் காணு. 2

காணுதற் குனைத்தபூட்டைக் கண்டுணர் என்னூல் தோறும், வானுவின் னுள்ளமட்டும் வருத்தாலும் வாருது சிந்தை, பானுவை நம்பிக்காட்டில் பரிகொடுத் தவர்போலாகும், காணுநா வடக்கப்புத்தி நற்குணமுடை யோர் காண்பார். 3

காண்பதற் கின்றுல்வேணும் கருத்துக்கென் முன்னூற்ரேடு, மூன்றதைப் பார்த்துத் தேர்ந்துப் பூட்டுக்குமிதுதான்சாறு, வாண்பதற் கென்னவேணும் வகுத்த நல்மூலியஞ்சி, பூண்பதற் கொன்றைநீக்கிப் பொலிவுரும் நாலுங்காண்பாம். 4

பாய்ந்திட மூலிஒன்றைப் பகுத்தநன் னூத்திலொன்றே, வாய்ந்திடவாகாதப்பா வாய்ச்சிடு நெருப்பேயாகும், மாய்ந்தவற் பிறந்தாப்போலாம் மக்களே கருவாழைகாண்போன், சாய்ந்தநூல் படிக்கான்பாரும் மாத்துள்ளோர்க் குறைப்பேன் கேளே. 5

கேளுநான்குரைத்தவாழைக் கின்பமாம்பச்சைவாழை
மாளுமுன்ரேன்றில்மைந்த மாமகக்கருப்பத்தாள்காண்
வேளுநல்வெள்ளைச்செவ்வி யிருள்விருவர்ஜாதிகண்டு
சூளுநல்லிருவராலே துலைக்கிடவிருவைக்காணே. 6

வேறு.

காணுவாயானுரைத்த சூக்ஷமப்பா கண்மணியே சண்டீசர் கற்பிக்கக்காணூர், பூணுவாய் யிருசாதி தன்னிலொன்றைப் புண்ணியவாநீயாகில்புகலக்கேளு, ஆணுவாயண்டமென்ற கட்டைதன்னை உத்தியுடதனப்பேத்து

சீவித்தள்ளி, நாலுவாயதையிருபிளவாய்பிளந்துமைந்தா
நடுவிருக்கு வலமுடக்கு கருவைக்கேளே. 7

கருவென்ற வெண்கருவைப் பேத்தெடுத்துக் கசக்கி
யதைப் பாண்டத்தில் கல்சுண்ணம் பலம்போட்டு, உரு
வென்ற பானத்தைப் படிகாலப்பா உத்தமனே சுயம்
பான பாலேவிட்டு, தகும்பான சாரமோ பலமைந்தையா
தப்பாமல் பொடித்திட்டு சாத்திலாட்டி, வெரும்பான
றவிதனிலே வைத்தாயானால் விளம்பிவரும் செயநீரின்
பெருமைபாரே. 8

பாரப்பா ஜெயநீரை யிருத்துக்கொண்டு பாங்கான கல்
லுப்புக் கட்டிஒன்றை, தீரப்பாசெயநீரில் கிராசமிட்டால்
கிளைத்துவரு மைந்திலப்பா கதிரோன்போலாம், தூரப்பா
அந்தஉப்பை மாய்க்கவென்றால் சொல்லவும்வாய்க் கூசு
தப்பா சுந்தரியாள் சாபம், மாறவப்பா தலைப்பிண்டங்
கொய்துரித்து மைந்தனே மைந்தனேற் சித்துரெத்த
தீனத்தில்தீரே. 9

தீரப்பா கட்டியுப்பை நடுவில்வைத்து செய்மகனே
கன்னியிடக் குருதிசீலே, வீரப்பா கவசமிட்டு கெணபுட
மேபோட விளைந்துகதி ரவன்போலாம் விளைகள்போச்சு,
ஆரப்பா என்போலே விள்ளப்போறார் ஐயையோ வின்

டனப்பா ஆடுஆடு, காரப்பா செந்தூரத் தாலேவித்தை கணக்கிட்டு எள்ளளவாய் காட்டியாட்டே. 10

ஆடுவாய் செந்தூரத் தனுபானங்கேள் அப்பனே சண்டீசர் செயநீர்வண்டில், கூட்டுவாய் காரசாரங் கெந்தி வெள்ளை குமறலென்ற துரிசியுடன் வெடியுப்பாகு, காட்டுவாய் பொடித்தத்து கலக்கிக்காட்டு கதிரவனில் மாள்வதுக் கிண்டிக்கிண்டிப், பாடுவாய் நவநாளில் ராப்பகலுமிரண்டுங் காட்டபதமாச்சு வழலையென்ற அண்டந் தானே. 11

தானென்ற அண்டநல்ல வழலையாலே தாக்கப்பா களஞ்சிறமம் மாண்டுபோகும், நானென்ற யென்பேறைவிளச்செந்தூரத்தை நாட்டுவாய் எள்ளிதான் களஞ்சிகுதம், மானென்ற சூதசெந்தூரத்தைத் தாட்டுவாய் கம்மிச் சுடரில்காட்ட, பானென்ற பருத்தியுனக் காச்சுதப்போ பதருதே மெழுகுகளாய் பத்துக்கொன்றே. 12

ஒன்றான மெழுகையப்பா வெளிவிடாதே உன்குலமும் என்குலமும் வொளிந்துப்போகும், பன்றான லிங்கமப்பா பிந்தபாகம் பலிக்குமப்பா மாத்துபத் தரைக்கு மேலே, கன்றான சூதத்தில் ஏழதாகுங் கலந்திடுவாய் சூதமெழுக் கயத்துமாகும், நன்றான லிங்கமெழுத் தாமரத்தில் நாட்டினால் சொர்னமலை னந்திக்காணே. 13

காணுவாய்ச் செம்பைசெயநீரில் கிருசமிட்டு கணக்
குடனே சுத்திசெய்பாம லிங்கத்திநீ, காணுவாய்ப் பொ
டிபைசெய நீரின்தாக்கி நாலாநாள் பின்பதனில் நாணு
வாயரைத்துவில்லை, தட்டிரவியிற்காட்டி உத்தமனே புட
மிட்டுக் குறிக்கையிலேத்தி, காணுவாய்ச் சிவகாமிபாதந்
தன்னை கண்டிடுவாய் சூதத்தால் சோமனுச்சே. 14

சோமநா மவனுநீ சுந்தரியும்நீயே சொற்பெரியத் துரி
சிவெள்ளை வங்கத்தோடே, மாநாம அண்டமுட்டை
தீபஞ்சுதமலிங்கம் கற்காரசாரம் வங்கத்தோடெட் டெட்
டுக்கும், காமநாமசெயநீரில் காட்டிவிட்டப்படி பிண்டத்
தலையால்நீத்தி நாமம்புவிமீது மாந்தாநோக்கு நல்குவா
ளள்ளிடையாம்தேன் வெண்ணெநெய்யே. 15

செய்தானுலையுடுத்த மானமாகும் நீக்கிவிட்டா லென்
றுமில்லை நிலைவைவேணு, பொய்யாதென் னூலினது பெ
ருமைகண்ட புசண்டமுனி சாபமெத்த புகலவேண்டாம்,
கைபாகம்காட்டி படியேயீந்தால் கனமென்றே மேரு
வுனக் கணுவாய்போச்சு, அய்யர்சண்டீசர்நா விழுந்து
விண்டேன் அரசன்சத்திப் பாதந்தா ளுடிவாழே. 16

நந்தீஸ்வரர் பிரணவச்சூத்திரம்-16
முற்றிற்று.

சிவமயம்.

தொண்ணூற்றி ஒன்பதாவது,

நந்தீஸ்வரர்

பிரணவச்சூத்திரம்-12.

ஓங்காரப் பிரணவமே மூலம்சாக்ஷி வுத்தமனே சண்டீச ரம்மர்சாட்சி, பாங்கான சிவமூன்றும் சத்திசாட்சி பிராட்டியான் நூல்பலவும் சாட்சிசாட்சி, தூங்கான மூலவட்ட நந்திசாட்சி சொல்லிவிட்டேன் மணம்விண்டு மறையேசாட்சி, தீங்கான நூல்பலவும் குமரிசாட்சி செப்பினேன் பனிரெண்டுந் தச்சாட்சிக்காணே. 1

காணப்பா முன்னமே முந்நூறுஞ் சொன்னேன் கக்கமற குரிக்கியதை யன்பதாக்கி, பூணப்பா முப்பத்தி அஞ்சிலோதி பூட்டறியப் பதினஞ்சில் ஓதிக்காணுன், தோணப்பா ஐந்நூறும் முன்னூறுந்தான் தொகையுடனே இருநூறும் கைத்தாளங்கண்டு, வேணப்பா ஆயிரமுங் கண்டுதேறு விஷமுனக்கு யிதுவாகும் வெளிவீசாதே. 2

வெளிவீசா நந்தீசர் வர்தமென்றும் விளம்பிவைத்த ஓசைஎங்கும் வெளிவிடாதே, களிம்பில்லா செம்பதற்கு களிம்பெங்காச்சு கண்ணில்லா கசடனால்களிம்பேயாச்சு,

துளிம்பில்லாச் சூதமது ஓட்டமாச்சு சண்டாளர் நூல் பார்த்தும் தான்காணுரே, அளிம்பில்லா என்னுலின் பலருந்தேர்ந்தோர்க் காகுமென்று யின்னூலி லரிவாய்ப் பாரே. 3

பாரப்பா சண்டீசர் மூலிமார்க்கம் பகர்ந்திட்டே நூல் முழுதும் பார்த்துமிந்த, சீரப்பா பனிரண்டில் தேர்ந்து தேரு சிவசிவா சொல்லிவிட்டேன் சிவமேசாட்சி, நாணப்பா பூரணத்தின் வாறுபோலே நாயகமேஉரைத்த படி வாறுசெய்து, காரப்பா சிவசத்தி பீடந்தன்னை கண் மணியே துலங்குநந்திக் காதியாமே. 4

ஆதியென்ற மூலியிட அண்டந்தன்னை அப்பனே செவ் வந்தி முட்டைகொண்டு, மாதியென்ற கத்தியினுல் சிர மேவீசி மைந்தனே அதையுடைத்து மஞ்சள்போக்க, வாதியென்ற வக்கினியே யாறலும் வெள்ளை அண்டத் தை நசித்துப்பாண்டம், சாதியென்ற விரிவான பாண் டத்திட்டு சாந்தகுணமுள்ளவனே யதில் சத்தக்கேளே.

கேளப்பா முவ்வழலைநாமம்மெத்தக் கொடியானபலச் சுன்னம் பலமேரெண்டு, மாளப்பா சாரமது பலமோ ரைந்து மகத்தான துரிசியது பலமோமூன்று வாளப்பா படிகாரம் பலமோரெண்டு வளமான வெள்ளையது மதுக்

கும்பாதி, நீளப்பா கம்பியுப்பு பலமோவஞ்சு நிஜமான கல்லுப்பு ரெட்டிதூட்டே. 6

ஊட்டுவாய் வாழையடி தன்னிலூறும் உனக்குரைத் தேன் உண்மையடா சாட்டள்ளிவெள்ளி, கூட்டுவாய் யண்டத்துக் குருவதப்பா கும்பமுனி நூல்பலவு மரைத்த முனி, ஆட்டுவாய் சமூலியதை கொண்டுநீதான் அண் டத்தி னிடையாகக் கூட்டியாட்டு, ஈட்டுவாய் சமூலத் தை கலக்கிநன்றாய் மைந்தனே ரவிமுகத்தில் காட்டிப் பாரே. 7

பாரப்பா தப்பாமல் நாளேழுக்குள் பகலிரவில் கலக்கி வைக்கப் பானங்கேளு, சாரப்பாகபானமது சுத்திகங்கை சாய்த்திரக்கிப் படியொன்றில் சாத்தைக்கேளு, தீரப்பா கன்னியிட தலைப்பிணத்தை திரமையுடன் தலைவெட்டி சிறத்தைக்கல்லில், நீரப்பா செவ்வந்தி பிள்ளைதன்னி நீ மகனே சிரத்துநீர் பாதிகூட்டே. 8

கூட்டுவாய் பாணமது படிஒண்ணரையாகும் கும் பிட்டு மாதாவை குருவேநந்து, மாட்டுவாய் நவநாளின் காலையப்பா மைந்தனே திரந்துவிட்டேன் நந்திவாழ்வை, மாட்டுவாய் சிவசத்தி மாடத்தென்று மைந்தனே விள் ளாதே வொளித்துவையே. 9

வைத்தசெய நீரதனைப் பதனம்பண்ணு வாகான சாதி லிங்கம் பலமேகொண்டு, கைத்ததனை ஜெயநீரில் பொடித்துப்போட்டு தப்பாமல் என்மகனே உப்பில்கேளு, கைத்தவனும் நீதேர்ந்து பார்ப்பானால் கனகமென்ற உப்பிலப்பா பலமுங்காட்டு, நைத்ததனை மெழுகாக்கி அயக்கொம்பாலாட்டி நலமான கெணத்தெண்ணை சுடரில்வாட்டே. 10

வாட்டையிலே கனகமது உனக்குக்காணும் வளமான சுடரிலது மெழுகதாகும், பூட்டிஉனக் கென்ன வகை வேணுமப்பா புண்ணியனே மெழுகினிட போக்கைப்பாரு, மாட்ட ஒருச் செம்பதுவும் பலத்தைக்கொண்டு மாய்த்திடுவாய் ஜெயநீரில் வெட்டைமூன்றி, கூட்டமிட்ட முன்செயநீரில் கண்ணிவிட்ட குடியளவு செம்பதனை குகையிட்டுதே. 11

ஊதையிலே அருணனைப்போல் ஆகும்பாரு உயர்ந்த சதாசிவத்திலொரு வுவர்பருப்பாய், வாதையிலே வேதை மிகு வாகுமப்பா வளமான நந்திகண்ட திதுவேயாகும், வேதையிதுக் கொவ்வாது மாத்துமாகும், விண்டனப்பா ஆயிரமாத்ததிகமாகும், கோதைமல ரடிவணங்க வெளியில்கொட்டிக் கும்பிட்டுன் னுத்தானை கொண்டுவாழே.

நந்தீசுரர் பிரணவ சூத்திரம்-12 முற்றிற்று.

சிவமயம்.

நூறுவது,

நந்தீசுரர்

பூர்வ முப்பு சூத்திரம்—12.

ஆமப்பா பின்நூல்தான் பெருமைமெத்த அப்பனே நந்தியான் சொல்வேன்கேளு, வாமப்பா தேவிக்கு சதா சிவன்தான் சொன்னார் வளமாக வெந்தனுக்குத் தேவி சொன்னாள், நாமப்பா தன்வந்திரி யுந்தனுக்கு நலமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு, காமப்பா முப்புவடா பூத்திருக்கும் கசடர்களே யுழுமண்ணைக் கருவவென்றே.

என்றதொரு வுவர்மண்ணு கருவுமாமோ வென்மக் கான் கோழிமுட்டை கருவதாமோ, வன்றதொரு தழை களைத்தான் வாதஞ்செய்வார் வளமான தழைகளிலே வகாரமேது, நன்றதொரு வுழுமண்ணில் காரமேது நல மான கோழியண்டங் காரமேது, அன்றதொரு வமுரி யென்ற மூத்திரத்தைச்செய்வார் அசடர்களே மூத்திரத் தில் காரமாமே. 2

ஏதடா பூர்வமுப்புச் சொல்லக்கேளு யென்மகனே தலைப்பிண்ட மேலேமைந்தா, வாதடாந் தாசமுப்பு

பூர்க்கும் வளமான முப்பூவை யென்னசொல்வேன், ஆதடா அரன்முப்பு அயன்மால் முப்பு அப்பனே யிவர்மூவ ரமர்ந்தமுப்பு, நாதடா பூர்வமுப்பு மிதுதான் மைந்தா நலமான முப்பூவைக் காணுகாணே. 3

காணப்பா ஆதியிலே பூத்தமாவுங் கண்மணியே யாதி மண் ணுவர்ப்புமாகும், வாணப்பா வகாரத்தில் நகார முப்பு வளமான பிரமனொடு விஷ்ணுருத்திரன், மானமப் பா யிவர்மூவ ரமர்ந்தவுப்பு மகத்தான பரமாக நின்ற வுப்பு, ஆணப்பா வெட்டிரண்டும் பத்தாய்நின்ற வன் பான மனோன்மணியாள் வாலையாச்சே. 4

ஆச்சப்பா வாலையென்ற நவரசந்தான் அன்பான நவ ரசந்தான் வாலையுப்பூ, வாச்சப்பா வாலையவள் முப்பூவா கும், நீச்சப்பா கொடியண்டச் சுன்னமாகும் நேரான வேதையிலே கோடாகோடி, மாச்சப்பா வுன்னைவிட வேறுமுண்டோ மகத்தான சாஸ்திரந்தான் மனிதன் தானே. 5

சிவமுப்பு விபரம்.

ஒண்ணாத சிவமுப்பைச் சொல்லக்கேளு உத்தமனே அண்டத்தின் தோலைப்போக்கி மண்ணாத அண்டத்தை எடுத்துக்கொண்டு வளமான கல்லுரலில் போட்டுக்கொ ண்டு, அண்ணாத யெஃவுலக்கை தன்னலாட்டி அப்பனே

முச்சாமம் ஆட்டுவாய்நீ, கண்ணுத புளிபோல நிற்கு மையா கண்மணியே வழித்தெடுத்து பாண்டத்திட்டே.

இட்டந்தப் பனிநீரைப் படிதான்வார்த்து இயல்பாக வடுப்பேற்றிக் கொதிக்கக்காச்சி, வட்டந்தக் காச்சையி லே பூநீறிட்டு வளமாக யெறித்திடவே யெண்ணெய்கக் கும், மட்டந்தப் பாண்டத்தை யிறக்கிக்கொண்டு மகத் தான அகலமுள்ள பீங்கான்வாங்கி, சட்டந்தப் பீங் கானி லூதிப்பார்க்க கண்மணியே சவக்காரம் போலா மென்னே. 7

என்னவே செம்மோடை பூமியேகி யென்மகனே பா திசெய்து பூவணங்கள்வைத்து, வன்னவே மேடைதனில் பீங்கான்வைத்து வளமான பூர்வமுப்பு தெளித்துபோடு, தன்னவே தூபனைவேத் தியஞ்செய்து கண்மணியைப் பூசித்து நாற்பதுநாள்நில்லு, மன்னவே யரும்பிட்டுப் பூர்க்கும்பாரு மகத்தான பூவெடுத்து பதனம்பண்ணே.

சத்திமுப்பு.

பண்ணவே குப்பிதனி லடக்கம்பண்ணு பண்பான முப்பூவை ரேசகமாய்பூசி, அண்ணவே வெள்ளையது கொடிய வெண்மை யாகரா யிதன்பெருமை யார்சொல் வார்கள், தண்ணவே சிவமுப்பு நன்றாய்ச் சொன்னேன் வளமான சத்தியுட முப்புகேளு, மண்ணவே முதற்பிண்

ணஞ் சமூலம்வாங்கி மகத்தான கல்லுரலி லிட்டுக்
கொள்ளே. 9

கேளப்பா யெஃகுலக்கை தன்னுற்சாடு கெடியான
சுத்தஜலங் கூடவாரு, வாளப்பா பூமியுட வுவர்ப்புபோ
ட்டு வளமாக நாற்சாம மிடித்துவாங்கி, ஆளப்பா மை
யான புளிபோலாகும் அப்பனே புளியெடுத்து பாண்
டத்திட்டு, நாளப்பா சொல்லாமல் சுத்தஜலம்வார்த்து
நலமான வடுப்பேற்றிக் கொதிக்கக் காச்சே. 10

காச்சப்பா நாற்சாமங் காச்சினுக்கால் கனலெழும்பி
யெண்ணெயது கழன்றுபோகும், வாச்சப்பா யிறக்கிய
தைப் பீங்கானிலூற்றி வளமான பூர்வமுப்பைக் கழுஞ்சு
தூவ, நாச்சப்பா மூன்றுமடை யிறக்கிக்கொண்டு நல
மாகப்பூசித்து வைத்திடாய்நீ, ஆச்சப்பா தேவிக்கு நாற்
பதுநாள்பூசி அப்பனே மண்டலஞ்சென் றெடுத்துப்
பாரே. 11

பாரப்பா நாற்பதுநாட் குள்ளேமைந்தா பணமான
வெண்சாரை யிரைச்சல்சாணும், ஆரப்பா மண்டலத்தி
லெடுத்தாயானால் அப்பனே வெகுகோடி காந்திவீசும்,
நாரப்பா சத்திமுப்பு யென்னசொல்வேன் நலமாக சத்தி
பூசை பண்ணிப்பாரு, பாரப்பா சத்திமுப்பு பதனம்பண்
ணு வளமான முப்பூவை பூசைபண்ணே. 12

நந்தீசுரர் பூர்வமுப்பு சூத்திரம்-12

முற்றிற்று.

சிவமயம்.

நூற்றி ஓராவது,

நந்தீசர் திருவாய்மலர்ந்தருளிய

ஞானம் — 100.

பாரப்பாகணபதியின் கந்தன்பாதம்
பதிவாகயென்நாளும் தலைமேல்வைத்து
ஆரப்பாகுருஸ்திர சாஸ்திரமுஞ்சொன்னார்
அணுத்தொடுத்து மேருவரையறைவேன்கேளு
நேரப்பாயென்னைப்போ லாருஞ்சொல்லார்
நிகழ்த்தியேஇந்நூலைக் கண்ணில்காட்டார்
ஆரப்பாஅவனியிலே கொடுக்கப்போறார்
ஆச்சரியமிந்நூலைத் தெளிந்துபாரே. 1

நூல்.

தெளிந்துபார்சீஷவர்க்க மறிந்துசேரு
திறமானகள்ளுண்டு கபட்டுமாண்பர்
ஒளிந்துபார்த்தவன்மனதை நூறுதாஞ்சோதி
உள்ளன்புமவனினைப்பி முறுதிப்பாரு
களிந்துபார்கள்ளுடனே கஞ்சாகொண்டால்
கண்ணிலேவிழியாமல் கழிவாய்த்தள்ளு

குளிந்துபார்குருநிலையு மறிவுங்கண்டால்
குணமுடையோனென்றுசொல்லி குருகுலித்தே. 2

வித்தானஅகாரமதை முன்னேசொல்லு
விதமானமகாரத்தை பின்னேகாட்டு
சித்தானவகாரமதை திறக்கவென்றால்
திடம்பார்த்துஉபதேசப் பொருளையீவாய்
முத்தானமுத்தனென்றால் மவுனஞ்சொல்லு
முனையிலுள்ளளவெழுத்தைந்தும் நிறுத்துக்காட்டு
பித்தானபித்தனென்று லகலத்தள்ளி
பிசகாமலுன்மனதை யுள்ளேவையே. 3

வையப்பாசமாதியிலே சிகாரத்தையூட்டு
வாங்கியேஉகாரமதை பின்னேநாட்டு
பொய்யப்பாசொல்லவில்லை தீபஒளிகாணும்
பிணங்காமல்சிலம்பொலியுங் காணலாகும்
ஐயப்பாயிவையெல்லாஞ் சித்தர்பாடார்
அரனெனக்குச்சொன்னவித்தை யானுஞ்சொன்னே [ன்
ஜையப்பாசெவிரண்டுந் தாள்திறந்துபோகுஞ்
சச்சிதானந்தவெளி சாரலாமே. 4

சாரலாம்யோகமது ஞானம்பார்த்தால்
தப்பாதுஅறிவங்கே பாகதியில்பத்தும்
காலாமனமதுவுங் குவிந்துநின்றால்

குற்றமற்றவாசியது நினைத்துப்போகும்
ரூப்பாயிந்தமுறை சொல்லப்போறார்
ஆருக்குங்கிடையாது அதீதவித்தை
ஊரெல்லாந்திரிந்தாலுங் காணமாட்டாய்
உற்பனமாயென்னுடைய நூலைப்பாரே. 5

நூல்பார்த்துக்கால்பார்த்து நுணுக்கம்பார்த்து
நுண்மையாயகாரவரை யறிந்துசேர்ந்து
மால்பார்த்துருசிபார்த்துப் பரத்தைக்கண்டு
பதறாமல்மனதையங்கே மூட்டிக்கொண்டு
சேல்பார்த்துக்கொங்கணவர் நூலைப்பார்த்து
திறமாகச்சிதம்பரத்தின் நடனங்கண்டு
வால்பார்த்துதலையிருந்த விடத்தைப்பற்றி
மைந்தனேவாசியிலே வருவாய்நீயே. 6

நீயானசேதிதனை சொல்லக்கேளு
நிலையானஅரனெதிரில் ரிஷபமானேன்
தாயானஉமையவளுக் கருளுமுன்னே
தானாகஅரனெனக்கு உபதேசித்தார்
காயானபழமானேன் முன்பூசைபெற்றேன்
கருணையுள்ளஅட்டபால் கறக்குமுன்னே
சேயானேன்சிவனுக்கும் உமைக்குமுன்னே
தீபவொளிகண்டிட்டேன் திறம்பெற்றேனே. 7

திறம்பெற்றேன்பொன்முசுட்டை கொண்டுவந்து
தீர்க்கமாயறைத்துவடி குகையாய்ச்செய்து
அறம்பெற்றசெம்புதனை குகைக்குள்வைத்து
அப்பனேகுகைமூடி முழப்புடத்திற்போட்டால்
நிறம்பெற்றபெரியோர்கள் கண்டவித்தை
நிலையாகவுந்தனுக்கு நிகழ்த்தலுற்றேன்
சிறந்தருளும்ஞானமுதல் யோகம்வாதஞ்
சித்தர்சொன்னமறைப்புகளைத் திறந்திட்டேனே. 8

திறந்திட்டேன் அரப்பொடியைக்கொண்டுவந்து
சிவமூலிச்சாறுவிட்டுப் பசுமையாக்கி
கறந்திட்டபாலைவிட்டுப் பதமேபார்த்துக்
களிம்பற்றஉடனெடுத்துச் சுத்திசெய்து
நிறைந்திட்டகைதோணி யரைத்துவட்டில்
நிமிஷத்திற்காடையென்னும் புடமேபோட
உரைந்திட்டசெம்புதான் பதனம்பண்ணு
உண்மையடாஒருவருக்கும் வெளிவிடாதே. 9

வெளிவிடாதடக்கிவைத்தே யென்பேர்சொல்லி
விதமாகவெட்டிலொன்று ஈந்தாயானால்
தளிவிடாவெட்டரையுந் தப்பாதப்பா
க்ஷணத்திலேசிவப்பது தானப்பாபாரு
அளிவிடாதிந்தமுறை சித்தர்சொல்வார்

அப்பனேசுந்தரா னந்தர்சொன்னார்
ஒளிவிடா நூற்றிலேயுற்றுப்பாரு
உள்ளுளேயொருவருக்கு முறைத்திடாதே. 10

கருவங்க பற்பம்.

உரைத்திடாகருவங்கந் தனையெடுத்து
உத்தமனேதகடுதட்டிச் சுருட்டிவைத்து
விரைத்திடாவெள்ளாவி கிழங்குதன்னை
விதமாகஅரைத்துவட்டல் குகையுஞ்செய்து
கரைத்திடாக்குகைக்குள்ளே வங்கம்வைத்து
கல்மிஷங்களில்லாமல் சீலைசெய்து
புரைத்திடாக்காடையென்ற புடத்திற்போடப்
புகையற்றநீறதுதான் புகழ்ந்துபாரே. 11

பாரப்பாவங்கநீர் சிமிளில்வைத்து
பக்குவமாய்கணபதியைப் பூசைசெய்து
ஆரப்பாகந்தனது நாமஞ்சாற்றி
அரதேசிபரதேசிக் கன்னமீந்து
ஊரப்பாஊரிலுள்ள மனிதருக்கு
உத்தமனேகுற்றமது வந்துதானல்
தீரப்பாமஞ்சாடி நீரெடுத்து
திட்டமாய்வெல்லத்தில் தின்றுபாரே. 12

தின்றுபார்குன்மமெங்கே மேகமெங்கே
திடம்பெற்றசூலையெங்கே வாதமெங்கே
கன்றுபார்கரப்பனெங்கே வாதமெங்கே
கழன்றுபோமுதிரத்தின் நோய்களெல்லாம்
வென்றுபாரவரவர்கள் சொன்னாற்போல
வெறும்பேச்சிதென்றுநீ விட்டாயானால்
கொன்றுபார்பாரதிலே மாண்டுபோவாய்
குன்மமதுகொன்றுவிடுங் குறியிதாமே. 13

வெள்வங்க பற்பம்.

குறிவானவெள்வங்கந் தனையெடுத்து
குறியாகத்தகடுகட்டி ஈச்சிறகுபோல
நெறியானசிவப்பாலிக் கிழங்குதன்னை
நிசமாகஅரைத்துவட்டில் குகைக்குள்வைத்து
அமுர்தமென்றரசமதனை யெடுத்துக்கொண்டு
ஆவின்பால்விட்டரைத்துப் புடமேபோட
குமுர்தமென்றசிந்தூரம் பதனம்பண்ணி
கூட்டியேசிவன்வேம்புத் தயிலந்தன்னில்
நிமிர்தமென்றபணவிடையே தின்றுபாரு
நிட்சயமாய்பறங்கியரை யாப்புபோச்சு
தமுர்தமென்றதாமரைமுள் நாபிமுள்போச்சு
தப்பாதுஇந்தமுறை செய்துபாரே. 14

பாரப்பா இந்தமுறை செய்தாயானால்
பாரிலேயழுன்றலையும் வயித்தியன்வந்து
ஆரப்பாசரணமென்று பணிவான்பாரு
அவனைநீதள்ளிவிடு தோஷம்தோஷம்
நீரப்பாவயித்தியமுறை தனக்கேகேளு
நிச்சயமாய்ச்சொன்னுக்கால் கோடிக்கொன்று
காரப்பாவயித்தியன்றன் முறையைக்கேளு
கருவென்னும்வித்தையெல்லாங் காட்டுவேனே. 15

காட்டுவேனடுக்கதுதான் செப்புத்துண்டு
கடினமடாமுயிர்செம்பு திரிமூர்த்திமூலம்
ஆட்டுவேனிரண்டான செம்புதானும்
அமுர்தகங்கைகுமுர்தகங்கை ஆகாசமூலி
கரியானமண்ணரைத்து சீலைசெய்து
கருவாகக்காடையென்ற புடத்திற்போட்டு
உரியானநீறதனை யெடுத்துநீயும்
உற்பனமாய்பதனமதாய் வைத்துக்கொள்ளே. 16

கொள்ளப்பாநீறதனை குன்றிவீதம்
குணமானசர்க்கரையில் கொண்டாயானல்
எள்ளப்பாதேகத்தில் ரோகமெல்லாம்
இணங்காமலோடிவிடும் ஈசனாணை
தள்ளப்பாமனதிலுள்ள அழுக்கையெல்வாம்

தர்மத்தைநெகிழாமல் சார்ந்துநில்லு
உள்ளப்பாயிதலொடு இரக்கம்வேணும்
உண்டானரோகமெல்லா மோடிப்போமே. 17

ஓடிப்போம்வாசியென்னும் ரசத்தைக்கட்ட
ஒருமூலிசொல்லுகிறே னுருதிகேளு
தேடிப்போய்திருகுகள்ளி தன்னைப்பாரு
திறமாகவயதுசென்ற கள்ளியாக
கூடிப்போயம்மூட்டில் குடைந்துநீயுங்
குழியாகரசமதனை வார்த்துமூடி
ஆடிப்போய்மண்டலமே சென்றுதானால்
அதையெடுத்துநீபாரு அமுர்தமாமே. 18

மூட்டுவேன்மூன்றாவ தென்னவென்றால்
மூலமதுசிறுமூலங் கணேசன்மூலம்
நாட்டுவேன்நாலாவ தென்னவென்றால்
நாரணனும்நாரணனு மிருந்தார்பாறே. 19

பாரப்பாஐந்தாவ தென்னவென்றால்
பராபரையின்பூரணமா மந்தவட்டம்
ஊரப்பாவரையென்ற சாரணையேநாதன்
உன்னுளேயைபதுதான் உமையாள்பாதம்
ஆரப்பாகுளிகையெல்லா மனந்தமூலம்
அழகானசெந்தூரம் பற்பமெல்லாம்

சேரப்பாதயிலவகை குழம்புதானும்
திறமானசிதம்பரத்தின் பூசையாமே. 20
பூசையென்னசிவன்பூசை பரையின்பூசை
சொல்லறியகாதாக்கள் சொன்னபூசை
பூசையென்றுபோகாது ஞானம்பாரு
பதரூமலென்னுடைய நூறும்பாரு
ஆசையென்னமகாரமதை மூட்டிப்பாரு
அப்பனேசிலம்பொலியுங் கேழ்க்கும்பாரே
காசையென்னதேடாதே தர்மத்தோடே
கசட்டறுத்துசாஸ்திரங்கள் களித்துக்கேளே. 21
கேள்ப்பா அகாரமது அதீதவித்தை
கெடியானமகாரமது பரையின்வித்தை
தேளப்பாகொட்டினது போலேகாணும்
சிசாரமடாசொல்லுகிறேன் சினத்திலேறும்
ஆளப்பாவகாரவித்தை யோகத்துக்கெல்லாம்
அளவிறந்தவித்தையெல்லா மாடும்பாரு
கேளப்பாவாராது இந்தநூற்றைக்
கொடுக்காதேஒருவருக்குங் குருவிணை. 22
குருவாணைஉமையாணை சாரையிணை
குற்றமற்றசிவணை கணேசனை
கருவாணைஉபதேசக் கண்ணணை

காட்டாதேயிந்நூலை யொருவருக்கும்
உருவாணையொருவித்தை தப்பாதப்பா
உண்மையாய்சொல்லிவிட்டே னுனக்குமைந்தா
தருவானமச்சமுனி நூறும்பார்த்துத்
தாண்டிநில்லவரையொக்கக் கடந்துநில்லே. 23

நில்லென்றுசித்தரெல்லாம் சொன்னாற்போலே
நிசமல்லவென்றுநீ விட்டிடாதே
கல்லென்றுதேகமது தங்கம்போலாங்
கற்பமதுதின்றுவரக் கபடில்லாமல்
நல்லதென்றுமனதுவைத்தா லுண்மையாகும்
நாயகனேகருவிடமாய் நாடிநின்று
புல்லரைப்போலலையாதே கர்மியாவாய்
புத்தியுள்ளகண்மணியே புகலக்கேளே. 24

கேளப்பாஎன்னுடைய உபதேசங்கேள்
கெடியானவித்தையெல்லாம் பலிக்கும்பாரு
ஆளப்பாகுருவினது பதம்பூசித்து
அவருக்குமனதுவர நடந்துக்கொள்ளு
நூளப்பாசாஸ்திரத்தை யொருவர்க்கீந்தால்
துன்பம்வந்துலபிக்குமடா சித்தியாக
நாளப்பாதலையதுதான் தெறித்துப்போகும்
நலமானசித்தர்கள் தூஷிப்பாரே. 25

சித்தரெல்லாம்பழிப்பார்கள் மடசித்தனென்று
தினந்தோறுங்கோபிப்பார் சாபமேயீதும்
முத்தனென்றசொல்வேனு முபதேசங்கத்தால்
மூடனென்றுசொல்லாமல் முதியோனென்பார்
உத்தமமாஞ்சாஸ்திர சூஸ்திரமுமெய்தும்
ஊமைவெள்ளமுண்ணலா மூடனேபாரு
கத்தனென்றுபோரகு முலகத்துள்ளே
கல்மிஷங்கள்வாராது கண்டுபாரே. 26

பாரப்பாஉகாரமது விந்துவாகும்
பாங்கானமகாரமது சத்தியாகும்
ஆரப்பாஅகாரமது மூலமாகும்
அப்பனேசிகாரமது வன்னியாகும்
சீரப்பாவகாரமது வாசியாகும்
திரமானஓங்காரம் நடுமையாகும்
ஊரப்பாஊமையென்ற வெள்ளங்கொண்டான்
உடலதுவுமழுத்தமாய் யிலக்கும்பாரு. 27

யிலக்குமடாவங்கென்று இடகலையில்மூட்டி
பிசகாமல்சிங்கென்று நடுவேமூட்டு
தலக்குமடாசுழிமுனையி லங்கென்னூறு
தப்பாதுரேசித்தும் பூசித்துநில்லு
துலக்குமடாஓங்காரங் கொண்டுயேறு

சொல்லாதேகயிலாசக் தேகமாகும்
கலக்குமடாயிம்முட்டு நல்லமுட்டு
கனமானவாசியிலே யிருந்துபாரே. 28

இருந்துபார்பெரியோர்கள் பாதங்கண்டு
இடைகலையும்பின்கலையு மிரண்டுங்கட்டி
பாந்துபார்சுழிமுனையை நடுவேமூட்டிச்
சொல்லாதேஅங்கென்று சுழிலேறி
திரந்துபார்மூலமென்று மெழுத்தைநாடி
சிகாரமென்றவாலையிலே மகிழ்ந்துநின்று
தெரிந்துபார்சிகாரமென்ற ஐந்தெழுத்துந்
தெரிசிப்பாய்சிகாரவரை தெரிசிப்பாரே. 29

தெரிசிப்பாய்யெட்டெழுத்தாம் மொன்றதாகத்
தீபவொளிகாணுமடா க்ஷணத்திலேதான்
வரிசிப்பாய்மூன்றெழுத்தும் ஒடுங்கிநிற்கும்
மகத்தானசித்தரெல்லா மெழுத்தைச்சொல்லார்
பரிசிப்பாய்சிங்குவங் கிரண்டுஞ்சொல்லார்
பாங்கானகுண்டலியும் யோகம்பாரு
அரிசிப்பாய்அரியெழுத்து சோதியாகும்
அக்கினியின்சுரூபமதை யறைகிறேனே. 30

அறைகிறேனறுகம்வேறு பலந்தானென்று
அப்பனேமிளகதுதான் நூற்றெட்டாகு

பறைகிறேன்சீரகந்தா முக்கழஞ்சு
பாங்காகமூன் றுமொன்றாய் நறுக்கிவிட்டு
நிறைகிறேன்மூன் றுபடி வெள்ளநீரில்
நோகமுக்கலவாய் முழுகிப்பின்பு
குறைகிறேன்வெருகடி தெண்ணெயிட்டுக்
கூசாமல்குடித்துவிடு குணமுண்டாமே. 31

உண்டானகுணமதுதான் சொல்லக்கேளு
உஷ்ணசத்தின்காந்தவமெல்லா மோடிப்போகுங்
பண்டானமேகமது பறந்துபோகும்
பாரப்பாகண்குளிருந் திரேகம்பொன்னாந்
துண்டானதேகமது இருக்கிக்காணுஞ்
சொல்லாதஆனந்தத் துலக்கமாகுந்
தண்டானஇந்திரியிலே தாதுநிற்கும்
தப்பாதுஇந்தமுறை சார்ந்துபாரே. 32

ஆரோக்கியத்தைலம்.

சார்ந்துபர்ர்தலேமுழுக்கு விபரங்கேளு
தப்பாதுநெல்லியொடு மிளகுமஞ்சள்
கூர்ந்துபார்வேப்பரிசி கடுக்காயோடு
குறையாமல்முரியிலே குளிரப்போட்டு
ஆர்ந்துபாராவின்பால் விட்டரைத்து
அப்பனேஅக்கினியில் வைத்துவாங்கித்

தேய்த்துபார்சிரசிலே சீராய்தேய்த்துத்
திரமாகசுவடுவென்னீர் முழுகுவாயே. 33

முழுகிவரமண்டலத்தில் தேகங்கல்லாம்
முக்கியவாதபித்தம் நிலையில்நிற்கும்
கழுகிவராவின்னெய் கூட்டிவாநீ
கமலனெக்கண்குளிரும் விந்துகட்டும்
புழுகிவரப்பிண்ணாக்கார் ஞானம்நூற்றிற்
புகழ்பெறவேகற்பமுறை யாடிவைத்தார்
தழுவிவாமுறைகள் தவறாமல்செய்தால்
தங்கமடாதேகமது நோய்வாராது. 34

சாரணைமூலி.

வாராதுசாரணைவேர் பலந்தான்ரெண்டு
மைந்தனேகொண்டுவந்து துண்டாய்வெட்டி
வோாகும்வெள்ளாட்டுப் பாலாலூட்டி
வெதும்பிவைத்துநிழலுலர்த்தி சூரணமேசெய்து
ஆறுகுந்திப்பிலியின் பொடியுங்கூட்டி
அதிலிஞ்சிச்சாறூட்டிக் குழம்பதாக்கிச்
சீரகச்சீனிலே கழஞ்சுசேர்த்து
தின்றுவரவாயுவுடன் குன்மம்போச்சே. 35

போச்சப்பாமேகமொடு சூலைவாதம்
போகாதகுத்துளைச்சல் பாண்டுபோச்சு

ஆச்சப்பாயின்னாலே வெளிவிடாதே
ஆச்சரியஞ்சிவன்சொல்ல யானுங்கேட்டேன்
மூச்சப்பாஅற்றிடத்தே சீவன்முத்தி
முக்கியமடாயிதுயோக மதீதயோகம்
காச்சப்பாகாலரை யாருஞ்சொல்வார்
கணக்கறிந்துரோமரிஷி காட்டினாரே. 36

யோகம்.

காட்டினார்முதல்வீடு சந்திரன்வீடு
கட்டாகநடுவீடு ஆதித்தன்வீடு
மூட்டினார்ஒடுக்கமது சூரியன்வீடு
முக்கியமடாமூன்றுக்கும் பிலமேதென்றால்
நாட்டினார்சுழிமுனையு மிடைபின்கலைமூன்று
நன்றாகவித்தையறிந்து வாசித்துப்பார்த்து
பூட்டினாற்பூட்டெல்லாம் பூரணத்தில்
புகழ்பெறவேசித்தரெல்லாம் புகழ்ந்திட்டாரே. 37

வாழ்ந்திட்டார்பொதிகையிலே அகாரங்கொண்டு
வாழ்வானமச்சமுனி உகாரங்கொண்டு
தாழ்ந்திட்டார்கோரக்கர் வகாரங்கொண்டு
தருவானகருவூரார் மகாரங்கொண்டு
வீழ்ந்திட்டார்கமலமுனி சிகாரங்கொண்டு
விதமானசுந்தரரும் நகாரங்கொண்டு

போழ்ந்திட்டார்போகருமே யகாரவித்தை
பொன்பூட்டிவிட்டாப்போல் புகழ்ந்திட்டாரே. 38

தாம்பிரபற்பம்.

புகழ்ந்திட்டசிவந்தகொடி வேலிதன்னை
பொன்போலேகொண்டுவந்து அரைத்துருட்டி
அகழ்ந்திட்டகுகைபிடித்து செப்புவைத்து
அப்பனேகுகைமூடி சீலைசெய்து
திகழ்ந்திட்டபுடம்போட நீறிப்போச்சி
பொன்போலேயெடுத்துநீ பதனம்பண்ணு
நகழ்ந்திட்டயெட்டிலொன்று ஈய்ந்தாயானல்
நல்லதொருபொன்மாற்று ஆறுமாச்சே. 39

தங்கபற்பம்.

ஆச்சப்பாதங்கபற்பஞ் சொல்லக்கேளு
அரகாரகவழ்தும்பை யகப்பட்டாக்கால்
பேச்சப்பாபேசாதே பிடுங்கிவந்து
பிசகாமலரைத்துருட்டி குகைபிடித்து
நீச்சப்பாதங்கமதைத் தகடுகட்டி
நிமிஷத்தில்குகையில்வைத்து சீலைசெய்து
போச்சப்பாகாடையென்ற புடத்திற்போடப்
புனிதமாய்நீறுமடா யெடுத்துவையே. 40

வையப்பாசிமிளியிலே பதனம்பண்ணி
வைத்துக்கொள் ளொருவருக்குங்கொடுத்திடாதே
எய்யப்பாயெந்தெந்த நோய்வந்தாலும்
இட்டுவிடுகுன்றியிதை யனுபானத்தில்
தையப்பாதேகமது சொர்னமாகும்
தப்பாது ஆவினது நெய்யிற்கொண்டால்
பொய்யப்பாசொல்லவில்லை அரனெனக்குப்
பூட்டினூர்செவியிலுப தேசந்தானே. 41

உபதேசம்வேணுமென்று யானுங்கேட்டேன்
உண்மையாஎனக்கருளுந் தந்தாரீசன்
அவதேசமரனெனக்குச் சொல்லவில்லை
ஐயனேகருக்கிடையுங் குறுக்கிடையுஞ்சொன்ஞர்
குவதேசக்குகைகாட்டி ஆறுதலங்காட்டி
குண்டலியின்தீபமதைத் திறந்துகாட்டிப்
பவதேசப்பச்சிலையுந் தொட்டுக்காட்டிப்
பாத்தினதுவடிவெல்லாம் வெளியிட்டாரே. 42

வெளியிட்டாரெந்தனுக்கு அரன்ருனப்போ
வெட்டவெளியாகவே யானுஞ்சொன்னேன்
களிவிட்டார்சித்தரெல்லா மொளித்துப்போட்டார்
தயவாகயின்னூலை வெளிவிடாதே
அளிவாகஞானமதை வெளிவிட்டாக்கால்

அந்தரமாமிடிவிழுந்து தலைதெரிக்கும்
விளிவிட்டார்பாதைக்கு யிதுதானென்று
வைத்துக்கொண்டெந்தனது பேர்சொல்வாயே. 43

சொல்லியேமலைதோறும் திரிந்தாயானால்
சுறுக்காகசித்தர்வந்து உன்னைக்கேழ்ப்பார்
நல்லியேபசிதீர்ப்பார் குகைகாண்பிப்பார்
நாட்டமாயிறவரிந்த வுத்தையீவார்
அல்லியேஅவர்புத்தி உன்னைக்கேழ்ப்பார்
ஆதரிப்பாருபதேசங் காதிலீவார்
புல்லியேமனமறிந்து பொருளைத்தந்து
போவென்றுபாதையிலே விடுவார்பாரே. 44

கடலாடிகற்பம்.

தாரென்றுஒருமூலி சொல்லக்கேளு
பக்குவமாய்க்கடலாட கருத்திருந்தால்
ஆரென்றுஅம்மூலி சமூலம்வாங்கி
அரைத்துருட்டிவெண்ணெயிலே கொண்டாயானால்
நேரப்பாவயதுதா னிறுனூராகும்
நிச்சயமாய்வித்தையெல்லாங் கைக்குள்ளாகும்
ஊரப்பாயிருந்தாலென் காட்டில்வாழ்ந்தென்
உறுதியாய்கற்பமுண்டு அறிந்துதேறே. 45

குழந்தைகளுக்கு மாதளைநெய்.

தேறவேபின்னமொரு கருவைக்கேளு
சிவனெனக்குச்சொன்னபடி சொல்வேனப்பா
ஆறவேமாதளையின் சமூலம்வாங்கி
அமுர்தசர்க்கரைசேர்த்துக் குழம்பதாக்கி
ஊறவேஆவின்னெய் கூடச்சேர்த்து
உறப்பாகப்பக்குவமாய் கிண்டிவைத்து
கூறவேஜாதிக்காய் பத்திரியுங்கூட்டி
கூடவேஏலரிசி கூர்ந்துபோடே. 46

போட்டதனையனலில்வைத்து வெதுப்பிநீதான்
புனிதமுடன்மெழுகுபதம் வடித்துக்கொண்டு
நாட்டதனைகுழந்தைகட்குக் கரண்டிகொண்டால்
நகமூமடாநோய்களெல்லா மண்டலத்திய்
பூட்டதனையொளியாமல் மறப்பையெல்லாம்
புத்தியாய்ச்சொல்லிவிட்டேன் புகழ்ந்துபாரு
தேட்டதனைத்தேடாதே நெய்யைத்தேடு
திறந்துவிட்டேன்குழந்தைகட்கு இதுநெய்யாமே. 47

நெய்யதனைக்குழந்தைகள்தான் கொண்டுதானல்
நோரானகனரோகம் பதினெட்டும்போம்
பொய்யதனைச்சொல்லவில்லை தோஷம்போகும்
புதுமையுள்ளவயிற்றிரைச்சல் போகும்போகும்

பையவேமதலைகட்குங் கொடுக்கலாகும்
பருவமுள்ளகுழந்தைகட்குங் கொடுக்கலாகும்
உய்யிதனையொளியாமற் சொல்லிவிட்டேன்
ஒருவருக்குஞ்சொல்லாம லொளித்துவையே. 48

பொன்னாவாரை சூரணம்.

வையப்பாபொன்னிறு வரையின்மூலம்
வரிசையாய்க்கொண்டுவந்து நிழலுலர்த்தி
கையப்பாசூரணத்து வண்டுகட்டி
கனத்ததொருசிறுதேனில் கொண்டாயானால்
எய்யப்பாயீளையொடு இருமல்போச்சு
இதமானசொற்சிறங்கு தழுவணையும்போச்சு
நையப்பாமண்டலமே கொண்டுவந்தால்
நகழுமடாதேமல்தழு தவணையும்போமே. 49

போதுமதுதான்புரைசூலை கிரந்திரோகம்
புண்புரைகள்வண்டுகடி பிரிந்துபோகும்
ஆமதுதானரையாப்பு குடியேபோகும்
அகத்திலுள்ளநோய்களெல்லா மகன்றுபோகும்
நாமதுதான்வெளியாகச் சொல்லிவிட்டோம்
நாதாக்கள் நூல்தோறு மொளித்தார்பாரு
தாமதுதானல்லோர்க்குக் கொடுத்தாயானால்
தப்பாதுஇந்தமுறை சாந்துபாரே. 50

மவுனம்.

பாரப்பாமகாரமது யோகவித்தை
பதிவானமவுனமதை சொல்லக்கேளு
ஆரப்பாஅகாரமது நாதவித்தை
அதீதமாம்உகாரவித்தை யறிந்துபாரு
சீரப்பாவகாரவித்தை வாசியோகஞ்
சிதம்பரத்தின்சிலம்பொலியுங் காதிற்போட்டோம்
காரப்பாசகாரமது சோதிவெளியாகும்
கட்டாமலிருந்த விடத்தைப்பார்த்தே. 51

நத்தைச்சூரி மூலிகை.

பார்த்தொருசூரிவேர் கொண்டுவந்து
பசுமையாயரைத்ததனை யாவின்பாலில்
சேர்த்ததனைபாகமாய் கலக்கிக்கொள்ள
செயமாச்சுஉடம்புக்கு வலுவுமாச்சு
பூத்ததனைபூதகணம் பிடித்துதானல்
பொடியாகப்பறந்துவிடும் பேய்களெல்லாம்
ஆர்த்ததனைகிராணியொடு கழிச்சல்போகும்
அப்பனேயிதையறிந்து உள்ளேகொள்ளே. 52

கொடுப்பை நெய்.

கொள்ளப்பாகொடுப்பைதனை கொண்டுவந்து
குமுறவேயறைத்ததனை மிளகுசேர்த்து

அள்ளவேசீரகமுங் கூடப்போட்டு
ஆவிநெய்யரைப்படியில் வெந்திரித்து
மெள்ளவேதான்குடிக்க மேகம்போச்சு
வெட்டையொடுசொறிசிரங்கு வெண்டுபோச்சு
கள்ளமேசொல்லவில்லை மெய்யேசொன்னேன்
கல்மிஷங்களில்லையடா கண்டுபாரே. 53

கண்டுபாரிடகலையா வாசியென்பார்
கனத்ததொருபின்கலையா நாதமென்பார்
விண்டுபாரிடகலையை விந்துவென்பார்
விள்ளாதேசத்தியைத்தான் பரமமென்பார்
உண்டுபார்சுழிவட்ட முளையென்பார்
ஊமையென்னுமட்சரத்தை மவுனமென்பார்
கொண்டுபாரிந்தவித்தை சித்தர்பாட்டால்
கொங்கணவர்ஞானத்தைக் கூர்ந்துபாரே. 54

கூர்ந்துபாரெட்டும்ரெண்டும் அகாரமாகுங்
குறிப்பானஅரியெழுத்து ராஜாவாகும்
தேர்ந்துபார்வகாரமது குண்டலியின்யோகம்
சிறப்பானநாதவிந்து வாசியாகும்
ஆர்ந்துபார்அவ்வும்உவ்வும் வெளியில்நிற்கும்
ஆச்சரியம்குருவருளால் காணவேணும்

தீர்ந்துபாருன்மனது பூரணத்தில்வந்தால்
தீபவொளிசிலம்பொலியைக் காணலாமே. 55

காணலாம்பராபரமே என்றுகேழ்க்கில்
காட்சியிருளற்றவிடம் பரமதாகுந்
தோணலாஞ்சுழிமுனைதான் யெவிடமென்றால்
சோதிவெளிவட்டமென்றுஞ் சொல்லலாகும்
ஆணவமாணுவந்தா னேதோவென்னில்
அறைகிறேனணுவமுங் குரோதமாகும்
வீணதென்றெண்ணாதே வேமத்துண்மை
வெளியாகச்சொல்லுகிறேன் விரைந்துபாரே. 56

பாரப்பாசாக்கிரந்தான் லலாடமாகும்
பதிவானசொற்பனந்தான் சுழித்திக்கண்டம்
நேரப்பாசுழுத்தியது யண்டமார்பு
நின்றஅப்புப்பிரகாசம் நிறைந்தசோதி
ஆப்பாவதுயேது பசுவேதென்றால்
அறைகிறேனக்கினியின் பூதியோகம்
சீரப்பாஅட்சரந்தான் சிறுமூலவட்டம்
சிவனுமையுமாகுமென்று செப்பலாமே. 57

செப்பலாம்பூசையது சத்திபூசை
சிலமடையர்வஸ்துவைத்துப் பூசைசெய்வார்
அம்பலம்பலகாரம் பழங்கள்வைத்து

அதற்கிசைந்தயிறைச்சிமுட்டை வண்டதோசை
தும்பலாயிவைகளெல்லாங் குவித்துவைத்து
குறிப்பாகமதுவைத்துப் பெண்ணும்வைப்பார்
மெய்ப்பாலாமிதுவெலா மாத்தாளேர்க்காள்
வீணரப்பாசெய்தொழிலை விரும்பிடாதே. 58

விரும்பாதேவீணர்கள்தான் பூசையென்று
விருதாவாய்த்திரிவார்தன் மெய்த்திடாதே
சுரும்பாதேசத்தியென்பான் பெண்மேலாசை
சுற்றிடுவான்காவியப்பா பாழாய்ப்போவான்
அரும்பாதேயவன்முகத்தில் விழித்திடாதே
அப்பனேபாவியென்று தள்ளுதள்ளு
குரும்பாதேகுருத்துரோகங் கொண்டுப்போவான்
கொள்ளாதநோய்வந்து கொல்லும்பாரே. 59

கொல்லுமடாநோய்வந்து க்ஷணத்திலேதான்
கோபிப்பான்சண்டாளன் குணக்கேடென்றன்
செல்லுமடாஅவன்குலமும் நாசமாகிச்
சிதறுமடாஅவன்தனமும் வீடும்பாழாம்
வெல்லுமடாபெரியோர்கள் சாபமெய்தும்
விசையாகப்பஞ்சமா பாபமெய்தும்
மல்லுமடாஉலகத்தோர் பழிப்பாரப்பா
மாய்கையிலேவிழுந்தவனும் மாளுவானே. 60

மாளாமலின்னமொரு மருந்துகேளு
வாசிசிவயோகத்தில் மனதைவைத்து
ஆளாமல்மனமுறைத்து பூரணத்தில்நின்று
அசையாதுபாசமற்ற லவனேயோகி
வாழாமல்வாழலாம் வாசிவீட்டில்
மவுனமென்றமகாரத்தை பூதப்பற்றும்
தாழாமல்நாதவிந்து தன்னைக்கண்டால்
தருவானஎட்டெழுத்து மாறெழுத்துமாமே. 61

எட்டெழுத்துமைந்தெழுத்து மாத்தாள்பூசை
இன்பமுற்றமூன்றெழுத்து சிவத்தின்பூசை
தொட்டெழுத்துந்துடறெழுத்து மயேஸ்பரியின்பூசை
துகளில்லாமூன்றெழுத்து வாலைபூசை
விட்டெழுத்தும்விடாதெழுத்தும் பரையின்பூசை
மெய்ஞ்ஞானஓரெழுத்து குருவின்பூசை
வட்டெழுத்தின்வடிவுதனை யாருஞ்சொல்வார்
மைந்தனே துரியமென்ற வரையில்நில்லே. 62

நில்லென்றுகொங்கணர் கடைக்காண்டத்தில்
நிறுத்திவைத்துஆறுவரை தாண்டச்சொன்னார்
அல்லென்றுபோகர்தான் முப்பத்தாறில்
ஆச்சரியயோகவரை யன்பாய்ச்சொன்னார்
பல்லென்றசத்தத்துக் கெழுத்தைச்சொன்னார்

பதருமலண்ணுக்கு முண்ணுக்கென்றார்
வெல்லென்றுசட்டைமுனி ஞானம்நூற்றில்
விவரமாய்ச்சொல்லிவிட்டா றறிந்துபாரே. 63

அமுர்தசஞ்சீவித்தைலம்.

அறிந்துபார் தூதுவளை பலந்தானெட்டு
அப்பனேஅமுக்கரு பலந்தானாலு
பிறந்துபார்கத்திரியுஞ் சமூலமப்பா
பிணங்காமலாவரையும் பலந்தானாறு
மறிந்துபார்கோரக்கர் பலந்தான்மூன்று
மைந்தனேகுறிஞ்சாவும் பலந்தான்பத்து
தெறிந்துபார்நீருள்ளி பலந்தான்ரெண்டு
நிமிஷத்திலறுகம்வேர் பலந்தான்பத்தே. 64

பத்தானகுறுந்தொட்டி பலமோரெண்டு
பாரப்பாசாரணைவேர் பலமோமூன்று
கொத்தானஅமுதவல்லி பலந்தானைந்து
கூறுடனேயிவையெல்லாம் தூணிநீரில்
பத்தாகவெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கி
மைந்தனேயதனெடைக்கு ஆவிநெய்யை
சித்தாகவிட்டுமே கலக்கிப்போட்டுத்
திரும்பவேமருந்துவகை சேரக்கேளே. 65

கேளப்பாஇஞ்சியது பலந்தானாறு
கெடியாகவெயிலுலர்த்திச் சூரணித்து
நாளப்பாசாதிக்காய் பலந்தானாறு
நல்லதொருசீரகந்தான் பலந்தானென்று
ஆலப்பாபத்திரியும் பலந்தான்ரெண்டு
அதற்கானஅதிவிடையம் பலந்தானென்று
தூளப்பாயிவையெல்லாந் தூளாய்ச்செய்து
துரிதமுடன்பொடியெல்லாம் பதனம்பண்ணே. 66

பண்ணியேகுரோசானி கழஞ்சிரண்டு
பாங்கானவால்மிளகு கழஞ்சிரண்டு
அண்ணியேலவங்கமது கழஞ்சிரண்டு
அழகானஏலரிசி கழஞ்சிரண்டு
நண்ணியேநல்மிளகு கழஞ்சிரண்டு
நலமானபச்சையது கழஞ்சிரண்டு
உண்ணியேகூகைநீர் கழஞ்சிரண்டு
உற்பனமாய்தூளாக்கி நெய்யில்சேரே. 67

சேர்த்துநீதணலெரித்து மெழுகதானால்
சிறப்பாகசெய்பாகங் கைபாகத்தில்
ஆர்த்துநீவடித்திறுத்து பீங்கானில்வைத்து
அப்பனேதூபமொடு தீபஞ்செய்து

போர்த்துநீயரன்பேரைப் புகழ்ந்துபோற்றி
புனிதமாய்க்குப்பியிலே யடைத்துக்கொண்டு
காத்துமேபோகாமல் பதனஞ்செய்து
கைகண்டவித்தையிது முழுகுவாயே. 68

முழுகிவரப்பித்தமெங்கே மேகமெங்கே
முக்கியமாய்க்கண்ணிளெளித் துலக்கிக்காணும்
தழுகிவரதேகமது யிருக்கிப்போகும்
க்ஷணத்திலேநோய்களெல்லாந் தவிடதாகும்
புழுகுவரப்புண்கரப்பன் சூலைகட்டு
புகைத்திருமல்மறுத்திடும் பாண்டுரோகம்
அழுகிவரச்சொறிசிரங்கு ஆறுப்புண்கள்
அகத்திலுள்ளவிஷக்கடிக ளகன்றுபோமே. 69

போமப்பாவாதபித்த சிலேட்டுமங்கள்
பிசகாமல்நிலையில்நிற்கு மலையவேண்டாம்
ஆமப்பாவருஷமொன்றில் தேகம்பொன்போ
லாகுமடாஅரனெனக்கு உபதேசித்தார்
ாமப்பாஉந்தனுக்குச் சொன்னேன்மைந்தா
நல்லதொருநெய்யென்று நவின்றுயானல்
சாமப்பாநோய்களெல்லாம் க்ஷணத்தில்தானே
தவறுமலிக்தறூல் திட்டம்பாரே. 70

வங்கவெள்ளி.

பாரப்பாயின்னமொரு தந்திரந்தான்சொல்வேன்
பாங்கானதிருகுகள்ளி பாலைவாங்கி
சேரப்பாவெள்வங்கம் கழஞ்சிதானும்
நிலைக்குமடாகரண்டியிலே வைத்துருக்கி
ஆரப்பாஉருகியதில் நூறுதாஞ்சாய்த்தால்
அழகானவெள்ளியது மாற்றுப்பத்து
ஊரப்பாயிருந்துக்கொண்டு வில்வித்தைசெய்து
உண்ணலாம்பத்துக்கொன் நீயலாமே. 71

செம்புசுத்தி.

ஆமப்பாஅறுகன்வேர் கீரிமூலி
அழகானமேனியது ரெண்டுங்கூட்டி
நாமப்பாஅறுநீரா லரைத்துருட்டி
நலம்பெறவேகுகைபிடித்துச் செம்பைவைத்து
வேமப்பாசீலைமண் செய்துநீயும்
விள்ளாமற்கெஜபுடமே போட்டாயானால்
சாமப்பாசெம்பதுதான் சுத்தியாச்சு
க்ஷணத்திலேசெம்பதனைப் பதனம்பண்ணு. 72
பண்ணவேசெம்பதுதா னூறல்போச்சு
பளபளத்தேயிருக்குமடா பாருநீதான்
நண்ணவேவெள்ளியிலே நூற்றுக்கொன்று

நாட்டினால்மாற்ருது நன்ருய்காணும்
உண்மைவேயொருவருக்கும் வெளிவிடாதே
ஊமைபோலிருந்துநீ யொளித்துத்தின்னு
தின்னவேதர்மத்தை மறந்திடாதே
திரவியங்கள்தேடாதே திட்டம்பாரே. 73

பாரப்பாபூரணந்தான் கனமேயாகும்
பதிவானகேசரியுந் தாயும்நின்ருல்
ஆரப்பாஅகாரமொடு உகாரஞ்சொன்னேன்
ஆச்சரியமென்னாலே கற்கவேணுங்
காரப்பாவருஷமொன்று குருவின்பாதங்
கள்ளிறங்கிக்குடியாமல் குருவைக்கண்டு
நேரப்பாதவமகிமை யுள்ளோர்பாதம்
நிலையாகக்காத்திருந்தா லுனக்குப்பேரே. 74

பேரென்றுசொல்வதுதான் ஞானம்பாரு
பேசரியஞானந்தான் பெற்றபேரு
வாரென்றகாயசித்தி யானபேரு
மகத்தானஞானசித்தி வந்தபேரு
நூலென்றபூரணநூல் பார்த்தபோது
நுணுக்கமாய்ச்சிவயோகம் பெற்றபேரு
ஊரென்றஅமிர்தநிலை யறிந்தபேரு
ஒருமனதாய்வாதசித்த வந்தபேரே. 75

சித்தியென்னபூசையென்ன நாணமென்ன
திடம்பெரியஎழுத்தென்ன அக்ஷரந்தானென்ன
முத்தியென்னமின்ஞல் நின்றதென்ன
மூலையென்றசிவமென்ன மூர்ச்சையென்ன
சத்தியென்றசிவமென்ன தவப்பேரென்ன
சக்கரத்தின்னெழுத்தென்ன குருதானென்ன
பத்தியென்னபரமமென்ன பாசமென்ன
பாங்கானகுண்டலியின் விபரங்கேளே. 76

விபரங்கேள்குருச்சொல்லை தட்டாகாகா
வீணர்களோடென்ஞரு மிணங்கலாகா
கவரமென்னபாசமென்ன கள்குடிக்கலாகா
கஞ்சாவின்வெறியாகா ஆலிங்கனமுமாகா
தவரமென்னபொய்கொலை களவுமாகா
சண்டாளமனிதாது சேர்க்கையாகா
உவரமென்னஉறுதியா யிருக்கவேணும்
ஊமையென்றஅக்ஷரத்தி லிருக்கப்போரம். 77

பேரென்றுசொல்லுவது குருவின்பேரு
பெரியோர்கள்ஊமைநிலை பெற்றபேரு
வாரென்றஅஷ்டசித்தி பெற்றபேரு
வகையானசிவயோகம் பெற்றபேரு
ஊரென்றமலையினுச்சி யிருந்தபேரு

உள்ளொளியைத் தன்னொளியானபேரு
சாரென்றஅமுர்தநிலை யறிந்தபேரு
அப்பனேஅஷ்டசித்தி யானபேரே. 78

அட்டசித்தியோகவரை யேறவேணும்
அகமகிழ்ந்துஞானவரை காணவேணும்
திட்டமுடன்சிவயோகஞ் செய்யவேணும்
சிவசத்திரண்டுமொன்ருய்ப் பார்க்கவேணும்
சட்டசத்திசடத்தையங்கே நிறுத்தவேணுஞ்
சாகாதகால்கண்டு நிலைக்கவேணுஞ்
துட்டசித்தியவரிடத்தி லிருக்குமானல்
தூரப்போவென்றுசொல்லி துணிந்துசொல்லே. 79

சொல்லப்பாதுஷ்டர்களை துறத்துவாய்நீ
சுழிமுனையில்நின்றுகொண்டு உற்றுப்பாரு
வெல்லப்பாயெழுத்தையெல்லா மூட்டிக்கொண்டு
வெளிவிடாதிருந்துநீ யோகம்பண்ணு
கல்லப்பாஉன்திரேக முறத்துப்போகும்
கபடில்லாதுன்மனது பரத்துக்கெய்துஞ்
சொல்லப்பாசிதம்பரத்தின் பூசைநேர்மை
சிவனுரைத்தார்சொல்லுகிறேன் விவரந்தானே. 80

சிதம்பரத்தின் பூசை.

மூலமென்னுந்தரையி லிருபத்தஞ்சாய்
வீசிடுவாய்மகாரமுதல் யகாரந்தொட்டு
அரவமென்னஐந்தெழுத்து மாறிமாறி
அப்பனேயடைந்திடுவாய் நெறியில்நின்று
பவரமென்னஉயிரெழுத்து பகுந்தேமூட்டிப்
பத்தியாய்செபித்துவிடு விபரமாகத்
தவரவென்னமேல்மூலம் உள்மூலந்தான்
தானெழிதியடைந்திடுவாய் சத்திதானே. 81

சத்திதனைவரவழைத்து உயிரெழுத்தைமூட்டித்
தானெழுதிகும்பமுதல் வைத்துப்பூசி
சுத்திதான்வந்ததென்றாய் சோதனைகளுண்டு
திறமாகசிதம்பரமுங் கைக்குள்ளாச்சு
முத்திதான்வந்ததப்போ நோய்கள்போகும்
நொடிக்குமுன்னேபசாசெல்லா மாண்டுபோகும்
பத்தியாயிருந்துக்கொண்டு சேவித்தாரானால்
பஞ்சுபோல்பறக்குமடா நோய்கள்தானே. 82

அயச்செம்பு.

தானனகுதம்பையிலே தனைப்பறிந்து
சட்டமாயரைத்ததனைக் குகையேசெய்து
ஏனனஅரப்பொடியை யதனுள்வைத்து

இதமாகச்சீலைசெய்து கெசப்புடமேபோட்டால்
ஊனையிரும்பதுதா னுருக்கிச்செம்பாம்
உன்னைபொய்சொல்ல வில்லைமைந்தா
தேனைசெம்பதனை பதனம்பண்ணு
செப்புகிறேனதனுடைய வளமைபாரே. 83

பாரென்றுகும்பமுனி நூற்றிற்சொன்னார்
பதிவாகரசவாதம் பத்தும்வைத்தார்
நூரென்றும்வேரென்றுஞ் சொன்னாரில்லை
சுத்தவெளியாகநான் பாடிப்போட்டேன்
ஆரென்றகருவறிந்தோன் விட்டகுறைக்காரன்
அவன்கொண்டுபோவான்காண் மாற்றென்றூறு
சாரென்றநிலையறிந்தே னவனேயாவாம்
சாகாதகால்கண்டோன் சாத்திரவானே. 84

பாத்திரத்தைசொல்லுதற்கு மனதுவேணுஞ்
சண்டாளமாகாது தவறாகாது
நேத்திரமேபிரியாமல் நிலையில்நின்று
நிலைபெற்றபெரியோர்கள் நாமஞ்சொல்லி
சூஸ்திரத்தையுரைத்துமே குருவைவாழ்த்திச்
சூட்டினேருரோமரிஷி ஞானம்நூற்றிற்
பாத்திரமேயுரைப்பமென்று பாடப்போட்டார்
பாத்தினதுவடிவுகண் டிருந்திட்டாரே. 85

இருந்திட்டார்திருமூலர் வரையிலேறி
ஏகாந்தசூட்சமதை யறிந்துபார்த்து
வருந்திட்டார்கொங்கணவ ராருந்தாண்டி
மகத்தானஅறிவங்கே மனத்திலுன்னி
பொருந்திட்டபோகருமே ஞானம்நூற்றிற்
பூட்டினூடக்கமெல்லாங் கண்டுதேறி
குறைந்திட்டகுண்டலியின் யோகம்பார்த்து
குறிப்பறிந்துமனத்தையங்கே நிறுத்தினரே. 86

நாவற்பட்டை சூரணம்.

நிறுத்தினல்வெண்ணாவற் பட்டைதன்னை
சோகக்கொண்டுவந்து நிழலுலர்த்தி
துறுத்தினற்சூரணித்து சுடுகைக்குள்ளே
சூரணத்தைப்பதனமாய் வைத்துக்கொண்டு
வறுத்தினர்வயிற்றளைச்சல் கிராணிமூலம்
வல்பிணிகள்கடுப்பிரத்தம் வந்துதானல்
வெறுத்தினர்வெள்ளாட்டுப் பாலிலேதான்
வெறுகடிதான்கொண்டாக்கால் வியாதிபோமே. 87

வியாதிபோம்வயிற்றளைச்சல் கடுப்பிரத்தம்
மீளாதகிராணியொடு சுரமுமாறும்
அயதியாயிருந்தாக்கால் சடமேபோகும்
அப்பனேஅதையறிந்து மருந்துசெய்தால்

துயதியாய்ப்போகாது ரோகம்போகும்
சொன்னபடிகேழ்க்குமடா நோய்களெல்லாம்
கயதியாய்க்கைமருந்து கைக்குள்ளாகி
கபடாகச்சொல்லவில்லை யறிந்துபாரே. 88

பாரப்பாநீர்முள்ளி பிடுங்கிவந்து
பக்குவமாய்வித்திருத்துக் கடைந்துகொண்டு
ஆரப்பாகடுகுள்ளி மஞ்சள்தேறு
மறைத்துஅதிற்கலக்கியே அடுப்பில்வைத்து
வாரப்பாமெழுகதுபோ லானபோது
வாங்கியேகீழ்வைத்து வரிசையாக
பாரப்பாபாண்டுவகை சோகைக்கெல்லாம்
பண்பாகக்கொடுத்துவிடப் பறந்துபோமே. 89

போச்சப்பாநீர்கட்டு நீரினேற்றம்
புகழானமகோதரங்கள் பித்தப்பாண்டு
ஆச்சப்பாநீர்செறிப்பு நாசமாகும்
அப்பனேயின்னமொரு வரிசைக்கேளு
காச்சப்பாகால்வாதம் பிடித்தபேர்க்கு
கைகண்டவித்தையாம் மருந்துசொல்வேன்
நீச்சப்பாமயங்காதே நடுத்தரமாய்த்தேங்காய்
நிமிஷத்தில்மண்துளைத்து நீர்விட்டுக்கேளே. 90

கேளப்பாகண் துளைத்து சலத்தைநீக்கி
  கெடியாகத்திருகுகள்ளிப் பாலைவாங்கி
ஆளப்பா அதினுள்ளே செலுத்திப்போட்டு
  அழகாககாஞ்சிரையின் ஆப்பறைத்து
மூளப்பாபுளிவிறகு கொண்டுமூடி
  முக்கியமாய்த்தேங்காய்தான் வெந்தபோது
கேளப்பாதேங்காயை யெடுத்துநீயுங்
  கெடியாகஒருசாம மறைத்துவையே. 91

வைத்துநீகுழம்புதனை யரையின்கீழே
  மைந்தனேபூசிடுவாய் காலைதன்னில்
அத்துமேஅந்திக்கு வெந்நீர்விட்டால்
  அப்பனேஅரைவாதங் கால்வாதம்போகும்
எய்த்துநீதிரியாதே ஈசன்சொன்னார்
  இதுமருந்துஆச்சரிய மிணங்கிச்செய்நீ
பொய்த்துமேபோகாது விந்தவித்தை
  புத்திகெட்டுஅலையாதே செய்துபாரே. 92

பாரப்பாசரியையென்ன கிரியையென்ன
  பகர்ந்துநின்றயோகமென்ன ஞானமென்ன
ஆரப்பாமவுனமென்ன சூட்சமென்ன
  ஆகாதயெழுத்தென்ன ஐம்பூதமென்ன.

நேரப்பாசரியையென்ன அரும்பதாகும்
நேரானகிரியையது பூவதாகுஞ்
சீரப்பாயோகமது காயதாகுஞ்
சேர்ந்துநின்றஞானமது பழமதாமே. 93

பழமானமவுனமது ஆயிபாதம்
பாங்கானசூட்சமது அக்கினியின்பீசம்
குளமானவச்சிவட்டம் ஆத்தாள்வீடு
குண்டலியேமவுனதுசதி யிருந்தவீடு
தளமானஆறுதலம் ஆறுவீடு
சதுரமாய்மூலமுதல் அக்கினியோடாறு
நலமானரசம்போலே நடுநாடியாக
நாரணனுந்தேவனுமா யிருந்தார்பாரே. 94

பாரப்பாநேர்மூலம் பரையின்வீடு
பகருகின்றநடுமூலம் பரையின்வீடு
ஆரப்பாஅடிமூலம் கணேசன்வீடு
ஆச்சரியமுடிமூலம் ஓங்காரவட்டஞ்
சீரப்பாயிவையெல்லாம் சித்தர்பாடல்
சீஷனேஉந்தனுக்கு சிறந்திட்டேனுன்
காரப்பாகுருபதத்தை யடுத்துக்காரு
காரணமாங்குருவாலே தெரிந்துக்கொள்ளே. 95

கருங்கோழி.

கொள்ளப்பாசதைகறுத்த கோழியாகுங்
   கூர்மையாய்ப்பார்த்ததனைக் கொண்டுவந்து
மெள்ளப்பாகொடிவேலி வேரரைத்து
   மேன்மையாய்ஓமமது உழக்கரைத்து
தள்ளப்பாகோழியின்றன் குடலைநீக்கித்
   தப்பாமல்குன்மருந்தை வைத்துத்தைத்து
அள்ளப்பாபாண்டத்தில் வெள்ளநீர்விட்டு
   அதன்மீதில்கோழியேநீ அழுத்திவையே. 96

வையப்பாஒருவிறகி லெரித்து
   வளமாகவெந்தபின்பு தின்றாயானால்
உய்யப்பாஉதிரத்தின் மலமுளைபோச்சு
   உண்ணமல்சொறையைத்தான் நிறுத்திப்போடு
ஐயப்பாஅகத்திலுள்ள நோய்களெல்லாம்
   அகன்றுபோம்மேகமது அணுகாதோடும்
தையப்பாஉள்மூலம் புறமூலம்போக்குந்
   தப்பாதுஉன்னுடைய நூலைப்பாரே. 97

நூல்கோர்வை.

நூல்பார்த்தாலிந்தமுறை யொருவருக்கும்
   நுணுக்கமாய்ச்சொல்லாதே பாவமெய்துஞ்
சேல்பார்த்துயோகமுறை ஞானம்பார்த்து

செயலனைத்துமனதில்வைத்துக் கருமத்தோடே
போல்கார்த்துபோகாது ஞானம்பார்த்து
புத்தியாய்பிழைத்திருப்பாய் பிள்ளாய்நீதான்
கால்பார்த்துமதியிரவி தன்னைக்கண்டு
கருணையுடன்நூலாய்ந்தால் கசடுபோமே. 98

போவதற்குவழிசொல்வேன் தேகத்துக்குள்ளே
புத்தியாய்ச்சொல்லுகிறேன் பிழைக்கவென்றால்
ஆவதற்குநல்மிளகு நெல்லியாகும்
அப்பனேவெண்சாரை அமுரியாகும்
காவலுக்குப்போகாதே கவிபாடாதே
கைகண்டவித்தையிது நடுவேவாங்கி
தூவதுக்குமிளகதுதான் வாறேபோட்டுச்
சுகம்பெறவேமென்றுதின்று சுகத்தைப்பாரே. 99

சுகமதுதான்பிணியில்லை வாய்வுமில்லை
சுக்கிலத்தில்சூடில்லை அனலேறாது
அகமதுதான் தாதுக்குப் பிலமுண்டாகும்
அப்பனேபத்தியத்தோ டிருந்தேயுண்ணு
பகமதுதான்புளியுப்பு புகையுமாகும்
பண்பாகநல்லெண்ணெய் தள்ளிப்போடு
தகமதுதான்காலையிலே கொள்ளுவாய்நீ
தப்பாதுஇம்மூலி தவறாட்டாதே. 100

ஒட்டாதமருந்துகளை தள்ளச்சொன்னேன்
ஒருமனதாயோகத்தி லிருக்கச்சொன்னேன்
எட்டாதகருக்கிடையுங் குருக்கிடையுஞ்சொன்னேன்
என்னைப்போலிருந்துவிட கற்பஞ்சொன்னேன்
தட்டாதசேதியெல்லாந் தட்டச்சொன்னேன்
தாதுநிலையறிந்துன்னைப் பிழைக்கச்சொன்னேன்
மட்டாகஉள்மூலம் பிறமூலஞ்சொன்னேன்
மைந்தனேஉந்தனுக்கு வகைசொன்னேனே. 101

வகைசொன்னேன் வாதத்தைதிறந்துசொன்னேன்
மைந்தனேவயித்தியத்தை நன்றாய்ச்சொன்னேன்
குகைசொன்னேன் குகையிலிடகுருவுஞ்சொன்னேன்
கோணாமல்மனதையங்கே நிறுத்தச்சொன்னேன்
தொகைசொன்னேன் சூட்சாதிசூட்சஞ்சொன்னேன்
சொர்க்கபதம்பெறுவதற்கு வழியுஞ்சொன்னேன்
தகைசொன்னேன் ஞானமொடுயோகஞ்சொன்னேன்
சத்திசிவம்நின்றதொரு நிலைசொன்னேனே. 102

சொன்னேனுனுந்தனுக்கா யிந்தநூறு
சுணங்கனுக்குஞ்சவுங்கனுக்குங் கொடுத்திடாதே
முன்னேநான்சொன்னதெல்லா மனதில்வைத்து
மூர்க்கருடன்சேராதே பொய்பேசாதே
பின்னேநீதிரியாதே பிணங்கிடாதே
பேசாதேயொருவருக்கு மிந்தநூலை
தன்னேதானுன்னைவந்து சரணஞ்செய்வார்
சண்டாளர்க்கீயாதே நூறுமுற்றே. 103

ல

சிவமயம்.

நூற்றிரண்டாவது,

நந்தீசர்

திராவகம்—II.

காணப்பா யிந்நூலின் தான் பத்துக்குள்ளே கணக்காகத் திராவகங்கள் காட்டுகிறேன்கேள், வாணப்பா சரியை கிரியையோக கருமஞ்செய்வார் வளமான சிவயோகி தர்மஞ்செய்வான், மாணப்பா மடையர்களே யறிவாய்க்கேளு மகத்தான சிவயோகி புத்திவானும், ஆணப்பா ரேசகத்தைக் கட்டினோர்கள் அல்லலற்ற சிவயோகி யவன் தான்பாரே. 1

சங்குதிராவகம்.

பாரப்பா திராவகந்தான் சொல்லக்கேளு பண்பான சங்குதிரா வகந்தான் சொல்வேன், ஆரப்பா சங்கது தான் பலமேபத்து அப்பனே யுடைத்ததனைத் தூளாய்ப் பண்ணி, வாரப்பா வூசிநீர்தனைத்தெளித்து வளமான வாலையிற்றான் போட்டுக்கொண்டு, காரப்பா வாலையின்கீழ் தீயைமூட்டிக் கண்மணியே தீபம்போலெரித்திடாயே. 2

எரியவே தமர்வாயில் பீங்கான்வைத்து யென் மகனே சிறுதீயா லெரித்திட்டாக்கால், வரியவே திரா வகந்தான் பீங்கானில்வீழும் வளமான திராவகத்தைச் சீசாவில் வைநீ, அரியவே தேவிக்கும் ருத்திரர்க்கும் அப்பனே பூசைபண்ணி நைவேத்தியஞ்செய்து, மரி யவே சோடசமாய்ப் பூரணத்தில்நின்று மைந்தனே திராவகத்தை பதனம்பண்ணே. 3

வெடியுப்புத் திராவகம்.

பண்ணடா வெடியுப்பு திராவகந்தான் கேளு பண் பான வெடியுப்பு பலமோபத்து, அண்ணடா ரோமநீர் தெளித்துலர்த்தி அப்பனே வாலைதனி லிட்டுக்கொண்டு, வளமானதமர்வாயில் பீங்கான்வைக்க, கண்ணடா காக ரென்று திராவகந்தான்வீழுங் கண்மணியே திராவகத் தைச் சீசாவில்வையே. 4

கல்லுப்புத் திராவகம்.

வையடா பூசித்துப் பதனம்பண்ணு வளமான திராவ கத்தை யென்ன சொல்வேன், கையடா கல்லுப்புத்திரா வகந்தான்கேளு கண்மணியே கல்லுப்பு பலமோபத்து, ஐயடா சுத்தஜலம் வார்த்தரைத்து அழகான வாலையிற்று னிட்டுக்கொண்டு, மையடா தீமூட்டித் தீபம்போலே மைந்தனே தமர்பீங்கான் வைத்துக்கேளே. 5

சீனியுப்புத் திராவகம்.

கேளடா திராவகந்தான் கதிர்போல்வீழுங் கெடி யான கல்லுப்பு திராவகந்தான் மைந்தா, வாளடா பூசித் துப் பதனம்பண்ணு வளமான திராவகத்தை யென்ன சொல்வேன், நாளடா சீனியுப்புத் திராவகந்தான்கேளு நலமான சீனியுப்பு பலமோபத்து, ஆளடா ரோமநீர் வார்த்தரைத்து அப்பனே வாலைதனிற் போடுபேரடே. 6

கறியுப்புத் திராவகம்.

போடவே தீபம்போல் தீதான்மூட்டி புகழான கதிர் வாயில் பீங்கான்வைத்து, ஆடவே கதிர்போலே திரா வகந்தான்வீழும், அப்பனே திராவகத்தைச் சீசாவி லூற்றி, வாடவே பூசித்து பதனம்பண்ணு வளமான திராவகம்போ லெதுதானுண்டு, காடவே கறியுப்பு திரா வகந்தான்கேளு நலமான கறியுப்புப் பலந்தானெட்டே.

எட்டவே முத்துநீர் வாத்திடித்து என்மகனே வாலை தனிற் போட்டுக்கொண்டு, கட்டவே தீமூட்டி யெரித் திட்டாக்கால் கண்மணியே திராவகந்தான் கதிர்போல் வீழும், மட்டவே பீங்கானைவைத்தாயானல் மைந்தனே திராவகந்தான் பிறங்கும்பாரு, வட்டவே சீசாவிற் பத னம்பண்ணு வளமான கல்லுப்புத் திராவகமுமாச்சே.

இந்துப்புத்திராவகம்.

ஆச்சடா யிந்துப்புத் திராவகங்கேளு அப்பனே யிந்துப்பு பலமோபத்து, வாச்சடா புளிச்செயநீர் வார்த்திடித்து வளமாக வாலையிற்றான் போட்டுக்கொண்டு, காச்சடா தீமூட்டிப் பீங்கான்வைத்துக் கனமான நால்நாழி யெரித்தாற்கேளு, நாச்சடா திராவகந்தான் கதிர்போலவீழும் நலமான திராவகத்தைப் பதனம் பண்ணே. 9

வளையலுப்புத் திராவகம்.

பண்ணடா வளையலுப்புத் திராவகந்தான்கேளு பண்பான வளையலுப்பு பலமோபத்து, அண்ணடா ஐங்கோலச் செயநீர்விட்டு அப்பனே யிடித்ததுவும் வாலையிற்றான்போட்டு, கண்ணடா தீமூட்டி பீங்கான்வைத்து கண்மணியே திராவகந்தான் வீழும்பாரு, வண்ணடா திராவகத்தை பதனம்பண்ணு வளமான தேவிக்குப் பூசைசெய்யே. 10

பண்ணப்பா திராவகத்தால் நீறும்போக்கு பண்பான சரக்குவறுபத்துநாலும், அண்ணப்பா நவரத்தினம் நவலோகங்கள் அப்பனே மலைக்குகைகள் நீறாய்ப்போகும், கண்ணப்பா அதரணத்துக் கிதுதான்வேணுங் கண்மணியே திராவகத்தின் பெருமைமெத்த, மண்ணப்பா மனங்களித்து வுனக்குச் சொன்னேன், வளமான தன்வந்திரி பாருபாரே. 11

நந்தீசர் திராவகம்-11 முற்றிற்று.

உ

சிவமயம்.

நூற்றிமூன்றுவது,

தெட்சணாமூர்த்தியருளிய

பட்சணி-110.

காப்பு.

ஆதியந்தநடுவிருந்த சோதிகாப்பு
அண்டபரிபூரணமே அறிவேகாப்பு
நீதிகலைவானகுரு கந்தன்காப்பு
நிறஞ்சனமாய்நிற்குண வதீதங்காப்பு
பாதியாந்தனிகனலும் காலன்றான்
பட்சணியேனிச்செயமாம் பாதங்காப்பு
வீதியாம்பட்சனிச்செயமாம் விலங்குஞ்சித்தி
விக்னேஸ்வரபிள்ளையார் காப்புத்தானே. 1

ஆதியந்தம்நடுவிருந்த பரமெஞ்ஞானம்
அகன்றபரிபூரணமே அதீததாது
சாதியந்தமாகவுமே நிறஞ்சன்மாய்நின்ற
சூட்சமடாபட்சணியின் சூட்சம்தானும்
ஊதியந்தமாகமுறு வென்றேயாத்தாள்
நாட்டினுள்சகலசித்து மாறியாட

வீதியந்தபுரியட்டம் நாலுமொன்றும்
வெளியானசவுக்காரம் திறவுகோலே. 2

திறமானபட்சணிக ளெல்லாம்பார்த்து
சீரறிந்துபொருளறிந்தாற் சறிநின்றுமே
வாமானதீக்கருவை யறிந்தாற்கேளு
மானிலந்தானுனக்கீடோ மீசன்வேறு
குறமானதேவதைகள் யேவல்கேழ்க்குங்
கோடிகோடியண்டவரை யடங்குமேவல்
உரமானமகாரமது னமசிவாயாகும்
ஓகோகோஉலகமெல்லாம் வசியமாமே. 3

வசியமாம்ஆறுவகை ககனமாகும்
மானிலத்திலரசெல்லாம் வசியமாகும்
வசியமானசெகவசியம் ஸ்ரீவசியமாகும்
மகத்தானபுருஷரெல்லாம் வசியமாகும்
வசியமாஞ்சத்துருக்கள் வசியமாகும்
வாரணங்கள்மிருகமெல்லாம் வசியமாகும்
வசியமாம்பிரவிமுன்னாள் வடவேர்வாங்கி
மைந்தனேகவுதும்பை வேறும்வாங்கே. 4

வேறிரண்டும்பச்சைபட் டதனில்வைத்து
மேலானஆவின்புல் லுருவியோடு
கூறிரண்டுகுங்குமப்பூ கஸ்தூரிமஞ்சள்

குணமாகமூன்றுமறைப் பலமேசேர்த்து
மாரிரண்டுமூன்றையுந்தான் பொடியாய்ச்செய்து
மைந்தனேமுதல்தூக தன்னிலிட்டுச்
சேறிரண்டுவேறையுந்தான் நடுவேவைத்துத்
திறியாக்கித்துப்புரத்தி லிட்டுத்தானே. 5

இட்டுமேகாருவின் நெய்யைவார்த்து
யிதமானசிரசோட்டில் மையெரித்துவாங்கி
கிட்டுமேபுனுகுடன் ஜவ்வாதுசேர்த்து
கிருபையுள்ளமையதனை மத்தித்தேதான்
கட்டுமேமந்திரந்தான் சொல்லக்கேளு
கருணையுடன் ஓம்ஸ்ரீயும்றீயும்மென்று
நட்டுமேநறுவசம் பண்ணவாயா
நலமானநறுவசம்பன் மோகமாயா
வெட்டுமேகாமதேவாயா நமாவென்று
விதமானஅன்னூறு உருத்தான்ஓதே. 6

ஆயுத்தம்பனம் செம்பருத்து.

ஓதிடமுன்சொன்னதெல்லாம் வசியமாகும்
உத்தமனேஓமென்று திலர்தம்போடு
வாதிடமுன்வந்தபடை மாறியோடும்
மானிலத்துராசரெல்லாம் வசியமாகச்

சாதியுடன்சாத்திரமன் கைபாணமாற
சதிருனபீறங்கு வெடிகுண்டுமாறம்
சூதிடாயின்னமொரு சூட்சஞ்சொல்வேன்
சுறுக்கடாசெம்பருத்தி வடக்குவேறே. 7

செம்பருத்துநாயகருக் காப்புக்கட்டி
திறமாகநவசாபம் நிவர்த்திசெய்து
உம்பருக்குமறியாத கணேசன்மூலம்
உம்மெனவுஅம்மெனவும் ஒருலட்சந்தான்
நம்பருத்துப்பன்றியாடு கோழிமூன்றும்
ரெத்தபலிபூட்டிமறு கின்மையன்று
தம்பருக்குஞ்சொல்லாதே பொங்கல்தூபம்
மாட்டியேதியானத்தில் வேரைவாங்கே. 8

வாங்கியந்தவேறதனைப் பஞ்சலோகம்
மகிமையாய்த்தகடதிலே பொதித்துக்கொண்டு
தாங்கியந்தகுளிசமதைக் கறத்திலேந்தி
தம்பனந்தான்நூற்றிருப்த் தெட்டும்ஓதி
ஓங்கியந்தக்குளிசமதைச் சிரசில்கட்ட
ஓகோகோமுன்சொல்லாம் முண்மையாகும்
தேங்கியந்தமாதரெல்லாம் வசியமாக
செப்புகிறேன்மையொன்று தேர்ந்துக்கொள்ளே. 9

ஸ்ரீ வசியம்.

தேர்ந்துநீகுளங்கள்குட்டை தன்னிற்பார்த்து
திறலாகஅட்டைபத்து பிடித்துவந்து
கூர்ந்துகேள்தாமரையின் நூலேசுத்தி
குறியாகத்திரியதனை விளக்கிலிட்டு
சார்ந்துநீநெய்வார்த்துத் தீபம்யேற்றி
தருவானசிரசோட்டில் மையெறித்து
வாங்குழைந்துநீபுனுகுடன் சவ்வாதுசேர்த்து
உறவானமோகினியைச் சேவிப்பாயே. 10

சேவிப்பாய்-ஓம் ஸ்ரீயும்-இறியு-மென்று
சிறக்கவேஓம்கிலி ஓம்-மென்றுசொல்லி
பாவிப்பாய்சர்வ மோகினிவாயென்று
பகர்ந்துநீயாயிரத் தெட்டுருவுமானல்
ஆவிப்பாயபானமொடு பலகாரங்கள்
ஆத்தாட்கும்வடுகனுக்கும் பூசைசெய்து
தாவிப்பாய்சங்காரத்திப் பேரைச்சொல்லி
சமர்த்தாகப்பணவிடைதான் திலர்தம்போடே. 11

திலர்தமிட்டுமந்திரத்தால் வாவாவென்று
செப்பிடவேஸ்ரீவசியம் யென்னசொல்வேன்
குலமளிந்துமறமெளிந்து முறையுமின்றி
குடிகெடுத்தகாமவெறி கொண்டேபின்பு

வலகளிந்துஉலகத்துள் மாதரெல்லாம்
உன்னடியில்வணங்குவார் கண்ணில்லாதே
நிலவறமாய்ச்சொல்லிவிட்டேன் கருச்சொல்லாதே
நிகரில்லாவசியமொன்று நேத்தியாமே. 12

வசியம்முள்ளெலி.

நேத்தியடாவசியமென்ன சொல்வேன்மைந்தா
நிகருண்டோமுள்ளெலியின் பெருமைமெத்த
நேத்தியடாஉலகத்தில் சொன்னருண்டோ
நிசமாகச்சித்தரெல்லாம் மறைத்துவைத்தார்
நேத்தியடாசொல்லுகிறேன் முதற்பதந்தான்
நோரதகருநாளில் நீதான்கேளு
நோர்த்தியடாமுள்ளெலியொன் றெடுத்துவந்து
நிசமாகத்தலைகீழாய் கட்டித்தூக்கே. 13

தூக்கியேசாபங்கள் நிவர்த்திசெய்யச்
சூட்டுவாய்மண்டலந்தான் தினம்நூறப்பா
நீக்கியேவெள்ளைத்தா மரக்கிழங்கு
கிழவுலர்த்திசமனாக நிறுத்துக்கொண்டு
தாக்கியேரெண்டையுந்தா னிடித்துத்தூளாய்ச்
சாதகமாம்பிந்திரமாம் கோவைப்பூச்சி
ஆக்கியேகளஞ்சியொன்று இரும்புக்கூட்டி
ஆதியாம்முதற்கருவுந் தொட்டுத்தானே. 14

தொட்டந்தப்பொடியைமுதற் றூசிலூட்டி
சுகமாகத்திரிக்காயதனை வாங்கிக்கொண்டு
நட்டந்தகரம்பசுவின் னெய்யைவிட்டு
நலமாஅகிலத்திற் றீபமேற்றி
பிட்டந்தசெஞ்சூலைச் சட்டிதூரில்
பிதமாகபொற்சிலையின் சாத்தைபூசிக்
கட்டந்தவாய்மூடி மையைவாங்கி
கருணைபெரும்புனுகுரோ சனையுங்காணே. 15

மோகனமை.

காணவேவகைக்கொரு களஞ்சிகூட்டி
கருதியேமதித்துக் கனிந்துநீயும்
வேணவேஆயிபதம் வைத்துப்போற்றி
மேலானவடுகனுக்கு பூசைபண்ணு
தோணவேவசியத்தி லெட்சமுற்று
மூட்டிசுகாதீதம்பை யெடுத்திலர்தந்தீட்டு
பேணவேபூவுலகும் வசமாய்பாரு
போகயின்னமொரு சேதிக்கேளே. 16
கேளப்பாமோகனந்தான் அதிகசூட்சங்
கெடியாகமையொன்றுச் சொல்லக்கேளு
நாளப்பாகிரும்புமொரு கழஞ்சிதானும்
நலமானமுன்மூச்சிக் களஞ்சிக்கூட்டு

நீளப்பாயிந்திரமாங் கோவப்பூச்சி
நிறுத்தியொருகளஞ்சியதிற் கூட்டிமைந்தா
சூளப்பாதிகைபூச்சி களஞ்சிபூரஞ்
சுகம்பெறவேஒன்ருகித் தூளாய்ப்பண்ணே. 17

பண்ணப்பாமுத்துச லூட்டிமைந்தா
பருவமுடன்திரியாக்கி திருத்திக்கொண்டு
விண்ணப்பாவிளக்கிவிடக் காரயெண்ணெய்
விட்டதிலேபாலத்தால் விளக்கைமூடி
கண்ணப்பாமையிறங்கும் போதுவுன்னை
ஆவினமான்வடுகனுக்கும் பூசைபண்ணு
யெண்ணப்பாமோகனத்தை லெட்சமோது
பிதமாகமைவாங்கிச் சிமிளில்வையே. 18

கருவசியம்வெல்லுழி.

வையப்பாபுனுகுடனே சவ்வாதுதானும்
மத்தித்துரோசனையும் கூட்டிமத்தி
மெய்யப்பாமைச்சிமிளைத் திறந்துக்கொண்டு
விறையவேஒமென்று திலர்தம்போடு
உய்யப்பாஉலகமெல்லாம் மோகமாகும்
ஓகோகோபுருடரெல்லாம் மோகமாகுஞ்
செய்யப்பாதேவரெல்லாம் வசியமாகும்
சிவன்முத்ற்றேவியுமே மோகமாகும். 19

மோகனமாய்வசியமடா யின்னமொன்று
முக்கியமடாசொல்லுகிறேன் குருவிபார்த்து
ஆகமாம்வல்லூருன் குருவிபார்த்து
அப்பனேபித்துடனே ஆதிகாரந்
தாகமாங்கள்ளியொன்று சேர்த்தரைத்து
சமூலந்தான்முதற்றூசு தன்னிலூட்டு
வேகமாந்திரியதனை விளக்கிலிட்டு
விதமாஞ்சித்திறண்டகத் தெண்ணெய்வாரே. 20

தம்பனமனுகூலம்.

வாறென்னகபால ஓடதனால்மூடி
மையெறித்துஆயிபதம் வைத்துப்போற்றுச்
சீரென்னபுனுகுகோ ரோசனையுங்கூட்டி
சிவசிவவசியந்தான் லெட்சமோதி
பேறென்னவாவென்று திலர்தண்டீட்ட
பேருலகிற்றடகருத்தின் வசியமாகும்
கூரேஸ்ரீகளுடைப் பேரைச்சொல்லிக்
கொண்டுநீதிலர்தமிட வசியமாமே. 21

வசியமாம்பின்னமொரு வித்தைமைந்தா
மானிலத்திலதிகமடா தம்பனத்தில்
வசியமாம்திலக்கூகை யூமன்காடை
வகையானபொற்கையான் விஷ்ணுகாந்தி

வசிதமாங்கட்டுகொடி மூலியைந்து
விறலியேதூளாக யிடித்துக்கொண்டு
உசிதமாம்முதற்கருவுங் கொஞ்சந்தொட்டு
உறவாகமுதற்றாசி லூட்டித்தானே. 22

ஊட்டியேதிரியதனை யகலிலிட்டு
உத்தமனேசிரசோடு கருத்துநீயும்
நாட்டியேநல்லெண்ணெய் யெறித்துவாங்கு
நலமானபுனுகு கோரோசனையால்மாற்றி
காட்டியேதம்பனந்தான் லெட்சமோதி
தயவாகதூபதீபம் வைத்துப்போற்றி
காட்டியேவடமாலை வடுகனுக்கு
கருணைதரவேணுமென்று தோத்திரஞ்செய்யே. 23

செய்யவேடங்கிங் கென்றுந்தானும்
தீர்த்தவேதம்பனத்தின் மூலந்தானும்
உய்யவேலெட்சமுறுத் தியானமோதி
உரவாகப்பணவிடைதான் திலர்தம்போடே
நொய்யவேஉலகமெல்லா மடங்கிப்போகும்
நோக்கறியவெளியடங்குய்யன் சபையடங்கும்
பையவேகாலடங்குஞ் செலமடங்கும்
பசாசுமுதற்பூதமெல்லாம் அடங்கிப்போமே. 24

தம்பன அடக்கு.

அடங்குமேபூதத்திற் றெய்வமெல்லாம்
ஆச்சரியம்ஆயுதங்க ளாடாதொன் றுந்
துடங்குமேஅரசரெல்லா மடங்குவார்கள்
தொக்கானபொறியடங்கும் புலனடங்குந்
தடங்குமேபித்தொழிலைத் தொடுத்துபாரு
தாணிமுதலெல்லாமுன் வசியமாகும்
அடங்குமொருதம்பனந்தா னின்னஞ்சொல்வேன்
மைந்தனேவிசிதமடா வறிந்துபாரே. 25

பாரப்பாகதிர்பூசந் தன்னிலன்பாய்
பகருவேனமுக்குரு தனித்துநின்றால்
நேரப்பாபஞ்சிறால் காப்புக்கட்டி
நித்தியமும்நவசாபம் பதினொன்றோதி
கூரப்பாவியின்மைக் கொண்டுசென்று
கோழிமுதலாடுபன்றி பலிகொடுத்து
சீரப்பாபொங்கலிட்டு நிர்வாணங்கொண்டு
சிரக்கவேகலங்கொம்பாய்க் கெல்லுகெல்லே. 26

கெல்லவேமேல்நோக்கி வானைப்பார்த்து
கிருபையாய்நட்சத்திரம் விளங்கும்போது
மெல்லவேமூலத்தில் மேலேற்றாமல்
வியனாகப்பிடுங்கிவந்து கரத்திலேந்தி

யல்லவேசொல்லுகிறேன் தம்பனந்தான்
அலையாமலெட்சமுரு அறைந்துநீயும்
சொல்லவேஅழிஞ்சல்நார் குளிசமாடி
தோத்திரஞ்செய்துயிபதம் வைத்துப்போற்றே. 27

போற்றியேவயிரவன்தான் தியானமோதி
பூரணநூல்விதியாக லெட்சந்தானும்
தூக்கியேதூபமிட்டு தீபங்காட்டி
தோத்தரிப்பான்சேடன்முடி தாங்குமென்று
தேற்றியேசிரசதனிற் குளிசங்கட்டு
தேவறென்னவுனக்கீடோ செப்பக்கூடா
நாத்திசையும்உன்னைவெல்லப் போகாதப்பா
நமனேதுகோடியண்டங் கட்டுந்தானே. 28

கட்டுமடா நாகபாசனந்தானீடோ
கக்கிஷமாம்புவனையுரு வெல்லாங்கட்டு
கட்டுமடாதொட்டியத்தின் கருவைக்கட்டு
கருவைக்கேள்சல்லியத்தி னுருவைக்காட்டு
கட்டுமடாஅண்டரண்டங் கட்டுக்குள்ளாங்
காலடியில்தம்பனமா டெட்டுங்கட்டுங்
கட்டுமடாபீரங்கி வல்லயங்கத்தி
கனமானபடைவீடு கட்டும்பாரே. 29

காட்டுமடாதேவர்முனி பணஞ்செல்லாது
கருதிப்பார்சிவனுமையுங் கட்டுக்குள்ளாய்
நாட்டினார்துரும்பானை யிழுக்கப்போமே
நானிலத்திலீசனுமை நீதான்வேறு
தேட்டுப்பாரிதைவிட்டாற் தொழிலுமுண்டோ
சிவசிவாதம்பனத்தின் செய்கைசெய்கை
ஓட்டினாலுலகமெல்லாந் தம்பிக்கும்பார்
ஒருவருக்குஞ்சொல்லாதே கருவைத்தானே. 30

தம்பன மத்தைச்சூரி.

தாளுகையின்னமொரு வித்தைக்கேளு
தம்பனந்தான்முக்கியமடா சாந்துபாரு
வேளுகும்மத்தைச் சூரிக்கிதானும்
வெள்ளியன்றுகாப்பணிந்து பொங்கலிட்டு
கேளுகுஞ்சுத்தவெள்ளைச் சாவலொன்று
கொண்டுவந்துபெலிகொடுத்து தூபங்காட்டி
தேளுகுந்தம்பனந்தான் மூலந்தானுந்
தீர்க்கமடாலெட்சமுரு நங்கென்றோதே. 31

ஓமந்தமூலிகைக்கிச் சாபமில்லை
உரவாகவேற்றுமல் தானுமைந்தா
கூதந்தவோர்பிடிங்கி குளிசமாடிச்
சுயம்பெறவேநங்கென்று சிரசில்கட்டு

வாதந்தமுப்பத்திரெண்டு வாளும்வாங்கி
வெற்றிடினுமயிற்றது பேதேதந்த
மாகவுமேகிடாயில் கட்டிப்பூட்டி
வெட்டிப்பாருலகினிற் புதுமையாமே. 32

வாடை.

புதுமையாயின்னமொரு வாடைச்சொல்வேன்
பூதலத்தில்மாதரெல்லாம் வசியமாக
புதுமையாங்கொச்சிமஞ்சள் வங்காளபச்சை
பொக்கமுக்குருவும் வெட்டிவேறும்
புதுமையாஞ்சந்தனம் மஞ்சிட்டியேலம்
புகலமருள்ஊமத்தம்விரை லவுங்கப்பட்டை
புதுமையாம்பச்சைகற்பூரம் நாகப்பூவும்
பூலாங்கிழங்குபுனிசு பாக்குமென்னே. 33
யென்னவோராமிச்சம் வேறினோடு
யியலானவில்வவேர் புறந்தோய்த்தானும்
கன்னவேவகைக்கிஒரு பலந்தான்தூக்கி
கருணேபெறவேயிடித்து வடிகொண்டுநீயும்
யுண்ணவேவகைவகைக்குப் பத்துதானும்
வுறமாகவேருலர்த்தி தூளாய்ச்செய்து
வண்ணமாமுன்பொடியிற் சேர்த்துக்கொண்டு
மைந்தனேஆதித்த வாரநாளே. 34

பாரமாய்ச்செத்தவள் தன் ஊனைவாங்கி
வாமனுகப்பித்துமதின் கொழுப்புத்தானும்
பாரமாய்க்கொண்டுவந்து பதனமாக
திராவகமாய்ப்பொடியெடுத்து ரவியில்வைத்து
மாம்பித்தானுங் கொழுப்புத்தானுந்
துலங்கஅதின்மேல்நெகிழ்ந்து வைக்கும்போது
வீரமாயிளகியது ரேகித்தாக்கால்
விரவிநன்றாய்குளாய்தனிலே யுடைத்துக்கொள்ளே. ()

பிண்ட வாடை.

கொள்ளுமேஆயிபதம் வைத்துப்போற்றி
குருவாகமோகினியை லெட்சம்சேவி
விள்ளுமேவாடையிலே ராபணந்தான்வாடை
மேல்நோக்கப்பூசிடுவாய் காத்துவாடை
தள்ளுமேவாடைபட்ட மாதரெல்லாம்
தள்ளாதுமதிமயங்கித் தளர்ந்துநிற்பார்
நள்ளுமேஉன்னவல் லாறுங்கேழ்ப்பார்
நன்றாகச்சொல்லிவிட்டேன் வாடைதானே. 36

வாடையிலேயின்னமொரு வாடைமைந்தா
மானிலத்திலதிகமடா வகையாய்ச்சொல்வேன்
சாடையிலேமூன்றுதிங்கள் ஐந்துக்குள்ளே
தலைப்பிண்டம்வாங்கியொரு பாண்டத்திட்டு

மூடையிலேதிகைப்பூட்டு பூச்சித்தானும்
முக்கியமாய்பதினாறு பிடித்துப்போடு
நாடையிலேபச்சப்பாம்பு ஒன்றுபோடு
நலமானஆவின்பால் படிதானென்றே. 37

ஒன்றானவஸ்துஒரு படிதான்விட்டு
உத்தமனேஅமிரிபடி வூமத்தஞ்சாறும்
நன்றாகப்படியொன்று பேய்க்கருப்கஞ்சாறும்
நலமானமுறைவகைக்குச் சாறுபடிதான்விட்டு
வண்டானஅடுப்போத வேடுகட்டி
பக்குவமாய்ச்சீலைசெய்து சரக்கையெல்லாம்
மன்றாகவேமேலே வைத்துமூடி
மைந்தனேவைத்தமட்டும் வன்னிமூட்டே. 38

மூட்டியேபதமாக யெடுத்துக்கொண்டு
முக்கியமாஞ்சரக்கையெல்லாம் நிழலுலர்த்தி
நாட்டியேகல்வத்தி லிட்டுத்தூளாய்
நயமாகச்சட்டிவடிக் கொண்டுநீயுங்
காட்டியேதேவிமுன்னே வைத்துப்போற்று
கருணைதரவேணுமென்று கருத்திலூன்றி
நீட்டியேமோகந்தான் வாலையோடு
நிசமாக்கிலெட்சமுறு நேர்ந்துக்கொள்ளே. 39

நேறவேஉலகமுந்தான் வசமாய்ப்போச்சு
நீணிலத்திலரசருந்தான் வசமேயாச்சு
கூரவேபூரீகளுந்தான் வசமாய்ப்போச்சு
கொதித்துலருஞ்சத்துருக்கள் வசமேயாச்சு
தேரவேபசாசமுதல் விடங்கள்போச்சு
செகச்சாலவித்தையெல்லாம் யிதுக்குள்ளாச்சு
லாறவேதேவதைக ளெல்லாமுன்னை
வணங்குமடாவாடவித்தை மயக்கந்தானே. 40

மயங்காமல்சொல்லிவிட்டேன் வெளியாய்வாடை
மாட்டினேன்சித்தையெல்லாம் சுருக்காய்சொன்னார்
தயங்காமல்சகலத்துக்கும் மூலமந்திரஞ்
சாத்தினேன்அகாரமொடு உகாரந்தானும்
நயங்காமல்மகாரமொடு மூன்றெழுத்தினோடே
கருணையுடன்குறீங் கிலீங்லுமென்று
மன்றுசெவியியங்காமலெட்ச முருவேசெய்து
யென்னசொல்வேன்மவுனதி வாலையாச்சே.' 41

வாலையிலேமூன்றெழுத்தும் வகையாய்ச்சொன்னேன்
வரிசையாய்பின்னுமொரு சூட்சங்கேளு
காலையிலேமாலையுச்சி வேளைமூன்றும்
கருத்தறியஓம்மென்று லெட்சம்வுருத்தாவூது
வேலையிலேவடமுகமாய் யிருந்துநீயும்

வேகமாய்சிவஞ்சேவிக்க ஆசனத்திருந்து
சாலையிலேகிருஷ்ண ஆசனத்திலிருந்து
சார்வாகக்காலைசந்தி பார்த்துவாழே. 42

பிண்டக்குரு.

பாத்துமொருமண்டலந்தான் மவுனமாக
பத்தியுடன்வருந்தியுரு வேறும்போது
நீற்றுமொருஅண்டமெல்லாஞ் சுடரைப்போலும்
நிர்மையாங்கதிர்மதியோ நிகரொவ்வாது
தேத்துமதுபச்சவர்னம் விழியேகூசும்
திறமதாலட்சுமியு மாலுங்காண்பாய்
ஆத்துமொருநிஷத்துக் குள்ளேமைந்தா
அஷ்டசித்திசவுபாக்கிய மருளுவாரே. 43

அருளுவார்வுன்திரேகங் காந்தியென்ன
யாதவனுஞ்சந்திரனும் ஒவ்வாதையா
அருளுவார்தேவருனக் கீடோசொல்லு
அருளும்உன்னைவெல்லப் போகாதென்றும்
அருளுவாரெத்திசையும் வுன்னைப்போற்றி
அடியின்கீழ்வணங்கிநிற்பா ரதீதமாக
அருளுவார்கவலெட்சம் தோளுமாட
அறையிறேன்திருவுருவாய் தீதந்தூனே. 44

அதீதந்தானென்னவென்றால் சொல்லக்கேளு
ஆச்சரியம்ஆதியென்ற பிண்டம்வாங்கி
அதீதந்தான்வசம்புள்ளி கடுக்காயம்
அடவாகும்வெந்தயங் கஸ்தூரிமஞ்சள்
அதீதந்தான்சவ்வாதுடனே புனுகுபூரம்
ஆகவொன்றுச்சமனாக நிறுத்துக்கொண்டு
அதீதந்தான்பேய்ப்பீர்க்க மத்தஞ்சாறு
ஆவிநெய்யுஞ்சரிசமனா யாட்டுவாயே. 45

ஆட்டவேகுளம்புபோ லாகும்பாரு
ஆகாசபிண்டத்திற் றோய்த்துதோய்த்து
நாட்டவேயிருமூன்று வேளைமைந்தா
நலம்பெறவேதோய்த்துநன்றாய் நிழலுலர்த்தி
மூட்டவேமண்டலந்தா னுலர்ந்தபின்பு
முக்கியமடாசொல்லுகிறேன் கேளுகேளு
காட்டவேசுக்கிரன்தன் வாரந்தன்னில்
கடுநிசியில்நடுச்சாமங் கருவைக்கேளே. 46

கருவானவுருவெடுத்து மயானமேவி
கதிபெறவேவடமுகமா யிருந்துநீயும்
உருவானபிண்டவகை முன்னேவைத்து
உருதியுடன்ருத்திரனை தியானத்தாலும்

திருவானமங்கென்றும் ரங்றீங்கென்றும்
ஓம்சிவாநந்தகமாவென்ற உருலெட்சமோதி
தருவானபலவகைகள் உபசாரமாக
சட்டமுடன்வெடித்துவொரு சத்திவையே. 47

சூரியாம்சோடச உபசாரத்தோடே
தோத்திரஞ்செய்ருத்திரன் ருத்திரியுமாச்சு
யெற்றிசையும்போற்றுமடா கருவின்சூட்சம்
யென்னசொல்வேனாடிவித்தை யிதுதான்பாரு
புத்தியாயின்னமொரு சூட்சங்கேளு
பொலிவாகும்அஷ்டகன்மங் குடிகொண்டாடும்
உத்தியமாமீஸ்வரி வாலையாதி
ஓகோகோஅட்டாங்க வாலையாமே. 48

வாலையென்றசிறுபிள்ளை வயசோபத்து
வடிதென்னமதியிரவி ஒவ்வாதாத்தாள்
காலையென்னநடுவீதி கமலத்துள்ளே
கருணைபெறவீற்றிருந்தாள் காட்சியாட்சி
மாலையெனுமுப்பாதித் தாவடங்தொட்டாட்டம்
மயேஸ்பரனும்ருத்திரனும் சிவனும்போற்ற
பாலையென்னகரும்புரசம் பாலுமீடோ
பகருமொளியிவளுடைய பரிசுதானே. 49

பரிசுகேளட்டாங்க வாலைமார்க்கம்
பத்துமடக்கும்மென்றே அஷ்டகன்மந்
துரிசுகேள் ஓம்ஐயும் கிலியுஞ்சவ்வுஞ்
சுருக்கணைல்லறீங்கென்று சொன்னலைப்போ
துருஞ்சிரசுகெளிதைபால் சூட்சமூலஞ்
செப்பினதோர்சிதம்பரத்துக் கிதுவேமூலம்
பெரிசுகேளஷ்டாங்க மதைவிட்டாக்கால்
பேசாதசித்திரமா யிருந்துபோமே. 50

சித்திரமாயிருந்துவிட்டா லேதுண்டாகும்
தீர்க்கமென்னசித்தரென்ன திறமையென்ன
சித்திரமாய்நாட்டிவைத்தால் சித்தனுவாய்
உருவளிந்தால்ஞானமென்ன ஒக்கம்போச்சு
அத்திரமாய்ச்சடமிருந்தா லெல்லாமாச்சு
யாதவனுமாபதியும் சுழிணையாச்சு
தந்திரமாயெந்தனிட னூலைப்பாரு
நளினம்நயவிசிதமடா நாட்டிப்பாரே. 51

நாட்டமாயட்டாங்கம் செய்யவென்றால்
நலம்பெறவேஐங்காயம் முதற்கருவுங்கூட்டி
யீட்டமாயேந்திரத்தில் தொழிலைக்கீறி
யிருபுறமும்வாலையுட யெழுத்தைமாறி
யாட்டமாயெந்தெந்த கருமத்துக்கும்

அந்தந்தவஸ்துவிட்டு அறைத்துப்பூசி
வாட்டமிலாகற்பூர தீபமேற்றி
மயங்காமல்மூலமென்ற பரிவால்வாட்ட. 52
வாட்டவேஅண்டாண்டம் நீறிப்போகும்
மானிலத்தில்எதிராளி யுண்டோசொல்லு
காட்டவேகண்காளி யேவல்துர்க்கை
கன்னிதொட்டுகாசிவரை ஓடிப்போகும்
நீட்டவேமயானத்துக் காதிபீடம்
நிகருண்டோஅட்டாங்கம் நிலைக்கப்போமோ
மூட்டவேமயானத்தில் முன்னேசொன்ன
முக்கியமுள்ளகருவுருவை நோக்குவாயே. 53
நோக்குவாய்நிர்வாண ரூபங்கொண்டு
ருத்திரசிவம்சொன்னபடி முடிந்தாற்கேளு
தாக்கமாய்பதினைந்து நாளுக்குள்ளே
தவறாமல்நிஷ்டகலை முடித்துக்கொண்டு
ஊக்கமாய்த்திருவுருங்கை வசமேசெய்து
ஒருவருக்குந்தெரியாம லில்லமேவி
யாக்கமாய்பூசித்து பதனம்பண்ணும்
அரகராஅதீதமதி செய்கைகேளே. 54
செய்கையாந்திருவுருவா டெட்டெட்டாடும்
திரிலோகபுவன்முந்த னேவல்கேழ்க்குஞ்

செய்கையாம்சத்துருக்க ளடிபிற்றாவ
சிவனுமையும்தேவர்களும் வார்த்தைச்சொல்வார்
செய்கையாலுனக்கீடு உண்டோயில்லை
சிதம்பரமாஞானதேகஞ் சித்தியாச்சு
செய்கையாம்யெதுவேனுங் கருமஞ்செய்ய
சிவசிவாதிருவுருமுன் காட்டிமூடே. 55

காய்த்தைலம்.

மூட்டவேகலப்பாசா ணந்தானீடோ
முக்கியமடாசுரபாண மிதற்கீடாமோ
நாட்டவேகாயதனைக் கொண்டுவந்து
நலமாகநிழலுலர்த்தி தயிலம்வாங்கி
சூட்டவேதயிலத்திற் புனுகுபூரம்
துறையானவீரமுடன் சட்டஞ்சேர்த்து
நீட்டவேசரக்கெல்லாந் தோய்த்துவாட்ட
நிசமாகக்கட்டியது மெழுகுமாமே. 56

மெழுகாகும்ரவியில்வைக்க உப்புமாகும்
வேதையாம்கோடிவா விரிந்தேயாடும்
மழுகாதசாலவித்தை யிதனாலாடும்
நாட்டவேதொடுகருவும் மிதனாலாடும்
அழுகாதசரக்கெண்ணெய் துரிசைதோய்த்து
அப்பனேரெண்டெட்ருவில் புடத்தைப்போடு

வழுவாமல்கட்டியது வெளுப்புமாகு
மகத்தானமதயானைப் பட்டுப்போமே. 57
பட்டுப்போஞ்சூதமொரு பானைதன்னிற்
பாச்சதுவேதுரிசிநீர் களஞ்சிபோடு
வட்டுப்போலுருகியது வெள்ளையாகும்
மாத்தென்னமுன்னூறு மாத்துமாகும்
தொட்டுப்போயிந்தவெள்ளி செம்புநூறச்
செயமாகவூர்களஞ்சி குடுத்தால்மாத்து
விட்டுப்போமாயிரத்துக் கோடும்பாரு
மேலானவேதையடா சூதப்போக்கே. 58
சூதவித்தைக்கோடிவரை தொந்தமென்று
சுருக்கடாவேதையிட்டால் மலைப்பொன்னாகும்
வாதவித்தைசெய்யாதே சூட்சம்பாரு
மானிலத்திற்பெறநீதி யீடோசொல்லு
வேதவித்தையாகுமொரு சூட்சங்கேளு
விளங்கவூஞ்சனத்தை விகற்பமாக
போதவித்தையாகுமடா புவியிலுள்ள
பொருளெல்லாமுந்தனுட பொருள்தான்பாரு. 59

அஞ்சனம்.

பொருட்டாகவேணுமென்றால் சொல்லக்கேளு
போதமாம்பிரதேசி தண்ணிரோடு

யிருட்டாததங்குமினி தேவாங்குபித்தும்
யிந்திரகோபப்பூச்கிப் பன்றிகொம்பு
வெருட்டானபச்சோந்திச் சிறப்பூநாகம்
விதமானசாதிக்கா யெட்டும்நோய்
தெருட்டாமலுலர்த்திமுதற் கருவுங்கூட்டிச்
சிவந்ததொருதுாசினிலே யாட்டியூட்டே. 60

ஊட்டியேகாரெள்ளின் யெண்ணைவிட்டு
உற்பனமாந்திரியதனை யகலிலிட்டு
மூட்டியேபத்தவைத்துக் கபாலஓட்டில்
மூக்கியமாய்பாதாள மூலிச்சாறு
தீட்டியேதூரதனில் மையைவாங்கு
சித்தமதாய்தாய்பதத்தைப் பூசித்தேதான்
காட்டியேஅஞ்சன தேவிதன்னை
றங்கெனவும்றீங்கெனவும் நயந்துக்கொள்ளே. 61

நயந்துகொள்ளும் அஞ்சனதேவிமாயி
நன்மைதரவேணுமென்று கருத்திலூணி
வியந்துகொள்ளும் மையெடுத்துக்கரத்திலேந்தி
விதமானகம்பளியை மூட்டிப்பாரு
அயந்துகொள்ளும்விருமாறஞ் சொல்லக்கேளு
ஆச்சரியம்கல்தேரை தேசிப்பித்துங்

கயந்துகொள்ளுங்குளியானை சமன்றான்கொண்டு
கருவானமுன்தயிலந் தன்னாலாட்டே. 62
தன்னாலேயாட்டிமுதல் தூசிலூட்டி
சரவாகவேவுலர்த்தி காயவைத்து
முன்னாலேசிற்றாமை ஓட்டினுள்ளே
முரவிட்டுக்கண்சட்டித் தூரில்மைந்தா
பண்ணாலேபேய்பீர்க்கின் சாத்தையூட்டி
பத்தவைத்துமையெடுத்து வைத்துக்கொண்டு
சொன்னாலேஅம்மென்ற திலர்தம்போட
சுகாதீதஉறுமாத்தஞ் சூட்சந்தானே. 63
சூட்சமாய்கண்டுகொள்ள மாரஞ்சொன்னேன்
சுகாதீதஞ்சிவனாலுங் காணாதாகும்
ஆச்சப்பாயிந்தவித்தை யல்லாதுண்டா
ஆகாதேதேகமது காணவென்றால்
பேச்சரியாமல்காட்டி மையைத்தீர்த்தும்
பேருலகுபதினாலும் உன்னைக்காணுஞ்
சூட்சமாயிப்படித்தான் கருவார்சொல்வார்
சூட்சாதிசூட்சமென்றே சூட்சந்தானே. 64
சூட்சமடாசொல்லுகிறேன் முன்னேசொன்ன
சூதவெள்ளியிடையாகத் தங்கஞ்சேர்த்து
கூச்சமடாநாகவிந்து சமந்தான்சேர்த்து

கூறறியசிறியசிறுநாகங் கெந்திதானும்
மிச்சமடாசமனுக நிறுத்துக்கொண்டு
வேருளாலொருசாமங் கல்வத்தாட்டி
மோட்சமாதேகசித்திக் கைக்குள்ளாச்சு
முதிரவேமருவன்ற கும்பிக்கேற்றே. 65

யேத்தியேவாலுகையில் தீயைமூட்டி
யென்னசொல்வேன்செந்தூரம் யியம்பக்கேளு
சாத்தியேமுச்சாமங் கமலவன்னி
தான்மூட்டிமுத்தீயு மெரித்தபின்னை
ஆத்தியேவடுகனுக்கும் ஆத்தாளுக்கும்
அடவாகசோடச வுபசாரத்தோடு
யேத்தியெசெந்தூர மெடுத்துப்பாரு
புணையுண்டோசெம்முருக்கம் பூவொவ்வாதே. 66

ஒவ்வாதேசெந்தூரம் பணவிடையேதூக்கி
வுருதிபெறயிருபோது தேனிலுண்ண
கவ்வாதுநிறைதிரையுங் தேகம்பொன்னுல்
கருதிரைக்கேள்வயதீரெட் டென்றுமாகுந்
தவ்வாதுநவலோகம் நூற்றுக்கொண்டு
தாங்கினுல்முந்நூறு பத்துமாகும்
மவ்வாதுதேகம் நடுக்கத்தியோடு
மாசாரசெந்தூர மருத்துவந்தான். 67

மருத்துவந்தான்சொல்லுகிறேன் உன்னைப்போல
மானிலத்தில்சித்தருண்டோ ஆருமீடோ
சாத்திரந்தான்கோடியுண்டு சூத்திரத்தைப்போல
சாத்துமேசகலசித்து மதீதமாக
அகத்துள்ளேபுரியட்டம் பூரணமுமொன்று
யாக்கிவைக்கும்நிற்குண அதீதந்தோணும்
நகத்துள்ளேதொழில்கண்டாச் செகமெல்லாம்
நாதாந்தபட்சணியை நாட்டினேனே. 68

நாட்டினால்ஒவ்வொன்றில் கோடிதந்தம்
நந்திசர்பட்சணியி லதீதஞ்சொன்னார்
மூட்டினால்தேவரொடு கணங்களீடோ
மூவுலகம்உனக்கீடுச் சொல்லப்போமோ
நாட்டினால்அஷ்டதிக்கும் விஜயம்செய்ய
நாதாந்தபட்சணியின் கருவைப்பாரு
மேட்டிமையாய்திரிந்துவிட்டா லேதுண்டாகும்
வீணிலேதிரியாதின் னூலைப்பாரே. 69

இந்நூல்போல்யெந்தெந்த நூல்பார்த்தாலும்
யினிக்குமேகரும்புரசங் கச்சுப்போகும்
மின்னாதேஒருவருடன் வீண்பேசாதே
மேதினியாள்ராசனிவ நீதியல்லான்
தன்னாலேயீன்றமட்டுஞ் சேனைகூட்டி

தரணிவாழ்மனுநீதான் தன்பேர்வந்தால்
முன்றாலேயுடைத்தவன்தன் சேனையெல்லா
முடிகியேமடிந்துவிட குடந்தான்பாரே. 70

சேனைபடை.

மாறுறும்படியேழுங் கொள்ளாமற்றான்
படைகூடிவந்தாலும் செயமுமாகச்
சீறுறும்பின்வதனைத் தேர்ந்துக்கொண்டு
சிங்கம்போல்அவன்சேனை முகத்தைநோக்கி
யேறுறும்கருவதனை யியம்பக்கேளு
யிதமாககாமமோ கினியைவாழ்த்திச்
சாறுறுந்துணிவாலே வளையமாடிச்
சமத்தானமுன்தைலங் கறுத்தொட்டுணே. 71

ஊணவேசெம்முள்ளு வெண்கொளுஞ்சி
உறவாகசிறுசின்னி மூலந்தானும்
வேணவேமுன்னாளிற் கன்னிச்சாம்பல்
வேகாதகுடத்தைப்பார் சூளைசாம்பல்
தோணவேபுத்துமண்ணுங் கலந்துகொண்டு
துகையென்னவறுகோண மூலந்தானும்
பேணவேகுடத்தினிலே வளையம்போடு
பெருகவேசோடச வுபசாரத்தோடே. 72

சாஞ்சான்வஸ்துவொடு சுத்திவைத்துத்
தயவாகருத்திரத்தியான மூன்றுலெட்சம்
போஞ்சான்சறக்கோண குடத்தைக்கண்ணுற்
பெதனமுடன்சாடனத்தால் நோக்கிப்பார்த்து
கூரஞ்சானய்யனொடு துர்க்கைகாளிகோவில்
வலமாககுடங்கொண்டு சுத்திவந்து
சீரஞ்சான்தன்சேனை முன்னேநின்று
செயிக்கவந்தயெதிருளி படையைநோக்கே. 73

நோக்கவேமூன்றடிதான் முன்னேவாங்கி
நோகாமலங்குமத்தை புடைத்துப்போடு
தாக்கவேமூன்றுலட்ச முருத்தான்கொண்ட
சமத்தானகுடத்திலிந்த தீதமாகப்
பாக்கவேருத்திரகணங் கோடாகோடி
பாறேழுங்கொள்ளாமல் நடந்துநாடி
நீக்குமேநினைக்குமுன்னே சேனையெல்லாம்
நிமைக்குமுன்னேதூளாக்கிப் போடுந்தானே. 74

போதுமேகோட்டைகெடி காரமெல்லாம்
புதுமையாய்கிழாறு கொண்டுபோச்சுக்
கோடுமேமதயானை நீயேயாச்சுக்
குறியானமூவுலகுன் வசமேயாச்சு
காடுமேகிரகமுச்சி யிருந்துதாறு

லார்சறிக்கஞ்செய்யுமடா சித்தனுக
வாடுமேதேகமெல்லாங் காந்திகாணும்
வரிசையுடன்சட்டையெல்லாந் தள்ளும்பாரே. 75
தள்ளுமேமுன்சொன்ன ரசசெந்தூரம்
சார்வாகவருடமொன்று சார்ந்துக்கொண்டால்
விள்ளுமேபதகநடு மகத்தியோடு
மேலானபூரணத்தை மேலேயேற்றுத்
தள்ளுமேஆருவரை கடந்துசெல்லும்
சச்சிதானந்தவறை தாண்டிநிற்கும்
துள்ளியேயிந்திரிய மியங்கிடாதே
தோகையறைப்புகலாமே துரியத்தேரே. 76
தேறவேசிவனுமையின் னூலைப்பார்த்து
சித்ததிகமிச்சமென்றார் சித்தரெல்லாங்
கூறவேவுனக்காகச் சொல்வேன்சூட்சம்
கொட்டினேன்கருமறைப் பில்லாமலேதான்
ஆறவேபுத்திவந்தா லெல்லாமாச்சு
அம்பலத்தையறியாட்டால் மடையனுச்சு
சாறவேசெந்தூரம் பத்தியமாய்க்கேளு
சாவில்லைகாலன்மே னில்லைத்தானே. 77
பில்லையென்றுபோகாம லிந்திரசாலம்
பியம்புகிறேன்சகலசித்துங் கருத்தொட்டாட

தொல்லையென்றுபோகாதே மதனரூபி
சுகாதீதமாங்குமறி மூலத்தோடே
பில்லையடாநிசமிதுபார் சமன்தான்கொண்டு
யிதம்பெறவேநிழலுலர்த்தித் தைலம்வாங்கி
யில்லையடாமுன்தைலம் மயானச்சாம்பல்
அதீதந்தான்சாலவித்தை யறிந்துகொள்ளே. 78

கொள்ளவேயின்னமொரு சூட்சங்கேளு
கூறுசன்னிசுரதோஷங் கிரகசங்கை
மெல்லவேயேவலொடு சுணங்கள்காணி
விட்ப்பூடம்பேயுடனே துஷ்டகாளி
கன்னமேயில்லையடா வலியஞ்சுந்தான்
கடிதானசாமுண்டி பிடாரிதானுந்
தள்ளுமேஅடங்காத துஷ்டரெல்லாம்
தன்னோட்டுசாதனந்தான் சார்ந்துகொள்ளே. 79

சார்ந்துக்கேள்வேம்பின்மேற் காக்கைக்கூடுஞ்
சார்வானகழுதைவோரி பன்றிவேட்டை
சார்ந்துக்கேள்முச்சந்தி மண்ணுமூஞ்சூர்
தனிவீட்டின்புகையூரல் சலனத்துரும்பு
சார்ந்துகேள்சுராஞ்சூரை யாமையோடு
தயவானபேய்ப்பீர்க்குக் கவுதும்பைக்காயே

சார்ந்துகேள்யிவையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து
சாறித்துசூரணித்து செம்மானத்தண்ணீர். 80
தண்ணீரைவிட்டரைத்து முத்துசிலுட்டி
சறவாகவேவுலர்த்திக் காயப்போட்டு
கண்ணீர்போல்தேயுசுட வூணித்தோய்ந்து
காரணமுட்சாறினந்தா னூற்றெட்டோது
சொன்னீர்மையில்லையடா திரியைவாங்கி
கொளுத்துவாய்புகை கண்டாலெல்லாம்
ஓடும்நன்னீர்மைசூட்ச உட்சாடந்தான்பாரு
நலமாய்முன்சொன்னதெல்லாம் ஓடிப்போமே. 81
ஓடுமடாஅஞ்சனங்கள் பார்க்கும்போது
ஓங்காளிஅய்யன் துர்க்காளிவந்தால்
காட்டுமடாயித்திரியில் தீபமேத்தி
தான்காட்டமறைந்தோடும் எதிர்நில்லாது
நாடுமடாயின்னமொரு வித்தைப்பாரு
நாட்டினேன்விசிதமடா நன்றாய்க்கேளு
கூடுமடாஉலகமதில்கே ளாடை
கொள்ளாமலவள்வந்துவிட குறிசொல்வேனே. 82

விளைதமாடை யவிழ.

குறியென்னமாயவன்றன் பிறந்தவாருங்
கூறுவேன்சனிக்கிழமை யன்னைத்தன்னிற்

குறியென்னமாயவன்றன் மூலிதன்னை
குணமாகவணங்கிநின்றுச் சாபம்நீக்கி
குறியென்னமாயனுட தியானந்தானுங்
கூறுவேன்பூரகந்தான் நூற்றெட்டோதி
குறியென்னசெவ்வாயி னிரவில்பொங்கல்
கொள்கையாப்பெலிதூப தீபங்காட்டே. 83

காட்டடாவேறதனை கெல்லிமைந்தா
கருணைபெறனுணிமூலங் கைதான்போட்டு
மூட்டடார்ஆகாச வெளிதான்பார்த்து
முதிர்ந்தவெள்ளிவிழுகையிலே மூலத்தோடே
நாட்டடாஅறிவாலே வேரைவாங்கி
நலம்பெறுமுச்சாடனந்தான் லெட்சமோதி
பூட்டடாயேந்திரத்தில் பொதிந்துக்கொண்டு
உறவாகஉன்னிடுப்பிற் கட்டிக்கொள்ளே. 84

உன்னிடுப்பிற்கட்டிடவே உரைப்பேன்றானு
முக்கிவெக்கித்தலைகவிழ்ந்தே ஓட்டந்தானுந்
தன்னடப்பாயவளுடைய தடத்தில்நின்று
தன்துசைதூக்க அவடுசைதூக்கும்
உன்னியவளெடுத்தெடுத்து உடுத்தினாலும்
ஒருவரெடுத்துடுத்தியே கட்டினாலும்

மின்னிதுயிலரையிலே தரியாதப்பா
வேரினுடமுக்கியம்பார் விசிதமாமே. 85

குடைபிடி.

விசிதமடாயின்னமொரு வித்தைபாரு
மேதினியிலதிகமடா விரும்பிக்கேளு
விசிதமடாதூசுகுடைப் பிடித்துவந்தால்
மேலானதேவனென்பா ரிசைந்துளோர்கள்
விசிதமடாகாமவல்லித் தைலத்தோடே
வியனுனபூமத்தின் சாம்பல்தானும்
விசிதமடாகருத்தொட்டு தூசிதன்னில்
வடுமுந்திநால்மூலை மைந்தாகேளே, 86
மைந்தனேகருங்காளி தியானஞ்சொல்லி
வானேக்கிவிரித்திடவே விரிந்துகொள்ளு
மைந்தனேயில்லையடா உனக்குத்தானே
ஆதவன்போற்குடைபிடித்து வரவேகண்டோர்
மெய்யேதான்மாமுனியோ ரிஷியோவென்று
விள்ளுவாருன்காலி லேவல்கேழ்ப்பார்
வையந்தான்கொள்ளாதே கருக்களெல்லாம்
மாட்டினேன்வெளியாக மைந்தாபாரே. 87
பாரப்பாயின்னமொரு சூட்சங்கேளு
பாடுகிறேன்நாதாக்கள் பாடாதெல்லாம்

33 †

வேப்பாதம்பனமொன் றதீதமப்பா
 மேலானஅமுக்கருச் சூரிவித்து
காரப்பாரெண்டையுந்தான் கருத்தொட்டாட்டி
 கருணைபெறவேணுமென்று தைலம்பூசி
பேரப்பாதம்பனந்தான் றூற்றெட்டோதி
 பிரியமுடன்ஆறையுந்தான் சமைக்கச்சொல்லே. 88

சமைக்கவுவான்மனையிலிட்டு நறுக்கினாலுஞ்
 சதிரானகத்திகொண்டு வீசினாலும்
அமைக்கருவையாகுமடா வதீதம்பாரு
 ஆயுதங்கள்முனைகொாறுகி முறிந்துப்போகும்
கமைக்கருவல்மெய்யெங்கும் பூசிக்கொண்டு
 கட்டுமந்திவாள்கையிலே பிடித்துக்கொண்டு
நிமைக்குமுன்னேசாரியந்தான் சேனையெல்லாம்
 நீவெட்டித்துணித்திடுமுன் வெட்டேறாதே. 89

ஏறாதுவெட்டுவாள் குண்டேறாது
 எதிராளிபாணமொன்றுஞ் செல்லாதப்பா
பாராதுதேவருனக் கீடோமைந்தா
 பஞ்சபட்சியறிந்தாக்கால் வெல்லப்போமோ
தீராதுபிறவிபிணி நோய்தான்பாரு
 தீர்ந்துவிடச்சிவயோகத் திருந்துதேரு

வாறுதுமெய்ஞ்ஞானம் வந்தால்மைந்தா
மவுனசிவயோகியடா சித்தனுமே. 90

சித்தனைச்செமித்திருந்தால் வாய்க்குமெல்லாஞ்
செடமிருந்துபோனுக்கா லேதுண்டாகும்
முத்தனுயிருந்தாக்கால் சினத்தைப்போக்கி
முனைதீர்ந்துமுப்பாழுக் கப்பால்சென்று
நிர்த்தனும்நடராச சேர்வைகண்டு
நிலைத்துபுத்திதவறுமல் நின்றாய்நீயே
சுத்தனும்பிராணயச் சூட்சத்தாலே
சுகாதீதம்உள்ளடங்குந் துரியமாமே. 91

துரிதமாய்க்கருக்களெல்லாம் விறைந்துபாரு
சூத்திரத்தில்சேர்த்துவிட்டேன் மணிகளாக
விரியதாயின்னூலைப் பாடியானும்
போண்டஞ்சித்தகணங் கீர்த்தியாச்சு
அறியாமலின்னூலை பதனம்பண்ணு
ஆர்தனக்குகண்ணிலே காட்டவேண்டாம்
தெரியாமல்பசுக்கையில் கொடுத்திடாதே
சிவயோகிஆனுலின் னூலில்வாயே. 92

நூலிலேவெகுகோடி நூல்களுண்டு
நுணுக்கங்கள்மெத்தவுண்டு காணமாட்டார்
ஞலிலேசாணத்தின் காலைக்கண்டு

நாதாந்தபட்சணியை தெரியச்சொன்னேன்
பாவிலேதெளிவாகும் பாலாமென்னுல்
பார்ப்போர்க்குவெட்டவெளி நேத்திரம்பாரு
சாலிலேநெய்யிருக்க வெண்ணெய்தேடித்
தானலேவார்சண்டாள பிசத்தோடே. 93

சண்டாளபிசத்தோர் செனனவாசந்
தான்போமோஅவருடனே சாறம்போமோ
வண்டாரும்பூங்கூந்தல் மாதராசை
மனதிலேநினைத்தாலுஞ் ஞானமாமோ
தண்டாமற்பசுபதியாம் பாசந்தன்னிற்
சச்சிதானந்தவரைச் சார்ந்துநின்று
தொண்டாகஅடியாற்கு அடிமையாகி
சொற்குருவின்சார்வறிந்து சோதித்தேரே. 94

சன்னித்தோஷங்களுக்கு
களிக்கம்.

சோதித்தேன்சூட்சாதி சூட்சமெல்லாம்
சூட்டினேன்கருவடக்க மில்லாமல்தான்
சாதித்தேன்வெளிதிறந்து பட்சணியின்மார்க்கம்
நாட்டினேன்பாலார்க்குங் கருத்தான்வேணு
வீதித்தேன்சகலகருச் சூட்சமெல்லாம்
விள்ளாதேஅசடருக்குச் சொன்னல்தோஷம்

போதித்தேன்உலகமெல்லாம் பொய்யாய்ப்போக
பூவுலகும்மூவுலகும் வசமேயாச்சே. 95
ஆச்சென்றுவர்தசன்னி சுரங்கள்போக
அடங்காதபேயுடனே பூதம்போக
போச்சென்றுவிஷமனைத்து மாண்டுபோக
புகலக்கேள்செம்பருந்தின் கண்ணுமித்தும்
வீச்சென்றுதிசைமயங்கிக் கிறிப்பித்து
வெள்ளெருசிங்கிலித்துச் சிரியாநங்கை
மூச்சென்றதலைசுருளி பங்கம்பாளை
முதிர்மூலமுறைமைக்கி மூலந்தானே. 96
மூலந்தானிவ்வளவுஞ் சமனாய்க்கொண்டு
முயன்மிளகுதுரிசுடனே காந்தந்தானும்
ஆலந்தான்வகைவகைக்கிக் களஞ்சியொன்று
அடவியில்வாழ்பன்றியுட பித்துங்கூட்டி
சீலந்தான்பேய்நீக்கன் தயிலத்தாட்டி
செயமாகநிழலுலர்த்தி சமனாய்வாங்கி
ஓலந்தானிட்டுவந்தோர் கிதுவேமைந்தா
உசிதமாய்வெத்திலைச்சார் தனிலுறைத்தே. 97
உரைத்துமிளகிற்பாதி யிருக்குண்ணுக்கும்
முட்டினல்முன்சொன்ன தெல்லாமோடும்
விரைத்துவிடுங்குளிகை கண்டபோதே

விஷம்போச்சுசுரம்போச்சு தோஷம்போச்சு
அறைத்துவரும்பேய்பூதம் மோடிப்போச்சு
ஆச்சரியம்பூபதியும் யிதற்கொவ்வாது
நிறைத்துவிட்டேன் பட்சணியினதீதமெத்த
நேத்தியடாநெஞ்சிலுன்னிப் பாருபாரே. 98

நெஞ்சானதொருமனதாய் நிலைக்கவேணும்
நேருனபூரணத்தை நோக்கவேணும்
பஞ்சானவட்சரந்தா னிருக்கவேணும்
பட்சணியைஅதீதமுற்றுப் பார்க்கவேணும்
துஞ்சாமல்செந்தூர முண்ணவேணும்
சொல்லறியப்பிராணயச் சூட்சம்வேணும்
அஞ்சாமலட்டாங்கஞ் சித்திவேணும்
மருளாகும்பொருளதுதா னவனுமாமே. 99

தானவனுயிருக்கவே ஞானம்வேணும்
தயங்காமல்யோகசித்தி யாகவேணும்
மாயியவள்யிருந்தசிவ காமிவாலை
மகத்துவந்தான் எவருங்காணவேணும்
ஆனவளாயிருந்தகருத் தறியவேணும்
அதீதந்தான்சிலம்பொலியைக் கேழ்க்கவேணும்
தேனவளாயமுர்தவள்ளி சூடவேணும்
சிவக்கியானதீபநுனி யதீதம்பாரே. 100

பாரப்பாயின் னூல்போல் நூலோயில்லை
பகல்பேரலேகருவையெல்லாந் தெரியச்சொன்னேன்
சீரப்பாசாத்திர மாயிரந்தான்சொன்னேன்
திருஷ்டியடாபார்ப்போர்க்குச் சூத்திரந்தான்
கூரப்பாஅதைகுருக்கி முன் னூறுள்ளே
கொட்டினேனதைக்குருக்கி யிருநூறுக
பாறப்பாஅதைக்குறுக்கி நூருய்ச்சொன்னேன்
சமர்த்தாகயிவ்வளவுஞ் சார்ந்துபாரே. 101

சார்ந்துபார்கருக்கிடையுங் குறுக்கிடையுஞ்சொன்னேன்
சாரறியபணியைப் போலேயுண்டா
கூர்ந்துபார்கருக்கவெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
குவலையத்திலுனைப்போலார் சித்தருண்டோ
நேர்ந்துபார்நிட்டைவிதி யோகமார்க்கம்
நினவறிந்துகாலறிந்து அறிவில்நின்று
தேர்ந்துபார்சிவதீட்சை சத்திதீட்சை
திரம்பெற்றால்மெய்ஞ்ஞானி சித்தாமே. 102

சித்தனுஞ்சகலசித்துங் கைக்குள்ளாகுந்
திரிலோகபுவனமுந்த னேவல்கேட்கும்
ஒத்தனுயிருந்தாக்கால் லெல்லாமாச்சு
தோலைவலைக்குள்ளாறு லெல்லாம்போச்சு
கர்த்தனும்சிதம்பரமும் புவனவாலை

கருத்தாலேசிறுமைதொட்டு ஞானமாச்சு
அத்தனுஞ்சிவனுமைபி நீதானுச்சு
யாதவனுஞ்சந்திரனுஞ் சுளினையாச்சு. 103
ஆச்சடாதீட்சையிதிற் பத்துங்கூட்டி
ஆகாகாயகூஷ மொன்றேயாச்சு
போச்சடாபிதைவிட்டால் பொருள்தானுண்டோ
பேசாதேமவுனமுத் ததீதம்பாரே
வாச்சடாபிடைபின்னுஞ் சுளினையூடை
மதிபிரவிகாந்திவென் கண்ணேகூசு
மூச்சடாவுள்ளடங்கும் பேச்சடங்கும்
மும்மூலம்நடுவணையே சுளுனைதாக்கே. 104
தாக்கப்பாமூலமுத லாறுவீடு
சார்வறிந்துநிருதார மாறும்பாரு
நோக்கப்பாஅந்தந்த வரையினுள்ளே
நுணுக்கமாய்வரவாதன் மூலந்தானு
ஆக்கயாம்பஞ்சகர்த்தா ளெல்லாமாச்சு
வாக்கையாப்பேசாதே யோகம்பாரு
வாழ்வென்னசிவயோக வாழ்வுதானே. 105
சிவயோகமெஞ்ஞானி வாழ்வேயாகும்
தீர்க்கமடாகாயசித்தி க்ஷணத்திலாகும்
அவயோகமறையோகஞ் செய்யாதாகீ

ஆச்சரியமாச்சரிய யோகந்தான்பாரு
தவயோககுண்டலியே சத்திசித்தி
சார்ந்தறியலெட்சம் பூரணந்தானுச்சு
நவமூலம்அணுவளவாய் மேறுவாச்சு
லட்செயமேஅதீதமடா மோட்சமாமே. 106

மோட்சமிந்தபட்சணியார் கொடுக்கப்போறூர்
முன்னூரில்சொல்லிவிட்டான் சூட்சமெல்லாம்
ஆச்சரியமின்னூல்தா னூர்க்குக்கிட்டும்
அனுபோகியானுக்கா லொழுக்கம்பாரு
பேச்சரியபேச்சைமெத்தப் பிடித்துப்பேசும்
பெரியோரைத்தர்க்கமிடும் பேசாறேடே
கூச்சமின்றிச்சங்கார்த்தம் பண்ணவேண்டாம்
குணமானபிள்ளைவந்தால் கைக்கொள்வாயே. 107

கொள்ளுவாய்பிள்ளையுட மனசோதித்து
கூறுதவறுதுபுத்தி யில்லாவிட்டால்
தள்ளுவாயவனுடன்வாய் பேசவேண்டாம்
தவறுதபுத்தியடா நெறியில்நின்றால்
விள்ளுவாய்பக்ஷணியை யடித்துக்காட்டி
மேலானகருக்கிடை குருக்கிடையுஞ்சொல்லி
துள்ளுவாய்சுண்ணம்பு மஞ்சள்தானும்
தொடுகுறிப்போல்சூட்சமெல்லாஞ் சூட்டிச்சொல்லே

சொல்லடாயினமறிந்து சிவத்தின்யோகஞ்
சூட்டடாசகலகலை சேதியெல்லாம்
கல்லடாகாயசித்தி யோகமார்க்கம்
கருவென்னசவுக்கார மாதியாதி
யல்லடாபசுக்களிக்கின் னூலையீய்ந்தா
லந்தமாயிடிவிழுந்து தலைவெடிக்குமாசை
வெல்லடாநவகோடி சித்துமாடும்
வேதாந்தபட்சணி யதீதமுற்றே. 110

தெட்சணாமூர்த்தி பட்சணி-110

முற்றிற்று.

நூற்றிமூன்றாவது,

தேரையர் அருளிச்செய்த

வயித்தியம் - 100.

சிறப்புப்பாயிரம்.

ஸ்துதி - கலிவிருத்தம்.

திருவிநாயகன் றென்கயிலாசத்தில்
அருமையாயெனக் கன்றுரைத்தபறி
மறுமையில்லாவைத்ய நூற்சொல்லக்
குருமுனிபாதங் கொண்டுதுதிசெய்வாம். 1

(நூற் பயன்)

செய்யும்வாதமுஞ் சேஷ்மமும்பித்தமும்
நையும்மாக்க லமுடனின்னமும்
கையுநெல்லிக் கனிபோல்மருந்தெல்லாம்
ஐயன்தேரைய னன்கானநூறிதே. 2

நூறுக்குள்ளே நொடிப்பேன்வியாதியை
ஆர்சொல்வார்க ளிங்கத்திலுள்ளதை
மீறுகின்றசுரங்கள் தனைமிகக்
கூறுசெய்யுங் குறுமொழிபார்த்திடே. 3

1. குருமுனி-அகஸ்தியன்.

வாத பித்த சிலேஷ்ம சுரங்களின் தொகுப்பு.

பார்த்துவாதசுரம் பத்துபன்னிரண்
டேற்றவன்னி சுரிமோரிருபதுஞ்
சேத்துமத்தின் சுரமிருபத்துரண்
டாட்டவேண்டி யறிவுதனைச்சொல்வேன். 4

அறுபத்திநாலுசுரத்திற்கும் பூபதிக்குளிகை.

செல்லுஞ்சூதங் கந்திவாளந்தன்னுடன்
தெல்லுதிரிகடு குந்திரிபாலையுங்
கொல்லுங்காக்கணத் தின்விரையோர்வகை
நல்லக்கள்ளுடன் நற்கையான்பாதியே. 5

பாதிரண்டுமே பாகுபதத்தினிற்
சோதியாம்அடுப் பேற்றியரித்தபின்
நீதியானக் கியாழமதுவிட்டுக்
கோதிலாதரைத் துக்குன்றியாக்கிடே. 6

ஆக்குஇஞ்சி ரசமறுபத்துநாள்
போக்குமூன்றுநாள் பொல்லாதசன்னியும்

---

4. வன்னி நெருப்பு அதேபித்தம்.

5. திரிகடுகு-சுக்கு-மிளகு. திப்பிலி-திரிபாலை. கடுக்காய்-தான்றிக்காய், நெல்லிக்காய். கள்-தேன்.

கையான்-பொற்கையாந்தகரை.

நீக்குமெய்ச்சுரம் நீங்கிடும்பூபதி
போக்குமாகும்பெரியதோர் வீக்கம்போம். 7

போகும்வீக்கமும் பொல்லாதகுன்மமும்
ஏகுமெய்விட்டு எல்லாச்சுரங்களும்
தாகமாக தவிக்கும்வியாதிக்கு
நாகமாகும்நற் பூபதியாமிதே. 8

பூபதிக்கும் புருஷர்க்கும்பூவைக்கு
கோபமான கொடுஞ்சுரங்கண்டிடில்
ஆபத்துக்குத வன்றெனக்கிட்டாதால்
தீபம்நோக்கிநீ சிம்மெனமூட்டிடே. 9

மூட்டிப்பார்நீ மூவிரண்டாறுபேர்
நாட்டுவாய்குளிகை யரைப்பொன்றுநாள்
நீட்டியோதி நிலையில்லாமாந்தர்தன்
நாட்டுமேநோய்க்கு நமனிதுவாகுமே. 10

சுகவிரோசனம் வாயு 80-க்குங் கிருமி விழவும் மருந்து.

ஆக்குதிரிபாலையாங் திரிகடுகுடன்
வாக்கும்த்தக்காசு வாயுவிளங்கமும்

8. நாகம்-சர்ப்பம். 9. பூவைக்கு-ஸ்திரீக்கு.

தூக்குஓமஞ் சோமனுப்புரோகணி
நாக்குவிடயம் நறுக்குமூலமொன்றே. 11

ஒன்றப்பாபல மொவ்வோர்வகைக்கிது
நன்றப்பாநில வகைசிவேதைவோ
அன்றப்பாபடியாரை யாமணக்கெண்ணெய்
நன்றப்பாலேகியம் போலதிரட்டிதே. 12

திரட்டிச்சீனி சிறுகவாயிலிட்டு
உறுட்டுலேகியம் ஓர்கழஞ்சுள்ளுக்கு
மருட்டுபத்துவிசைபலம் பேதியாம்
கருட்டுங்கச்சி வளமாகக்கொண்டிடே. 13

கொண்டிடுவேம் பிர்க்கக்கியாழத்தில்
அண்டிடும்பூச்சு யப்பங்தெரிக்திடும்
மண்டிடுங்குடல்வாயு அபானமால்
புண்டிடும்பேதி பூபதியாமிதே. 14

மூக்கிலிரத்தத்திற்கு-நசிகநெய்.

ஆமிதுயேல மரிசிபலமரைத்
தாமிதுஆவி நெய்யிலோர்பாக்கள
வாமிதுகுழப்பி யொறுமூன்றுநாட்
போமிதுபிழிய மூக்கின்ரத்தமே. 15

14. அபானமால்-அபானவாயு.

கீறிப்பூச்சுக்கு மருந்து.

ரத்தக்காச்சுக் கட்டிக்களிப்பாகுடன்
முத்தமொர்கடுக் காய்கையோர்பலம்
நித்தமூன்றுநாள் நீரரைத்திக்கொள
செத்துக்கீறியபுழுச் செரிந்தோடுமே. 16

கல்லெரிப்புக்கு.

ஓடும்வெளவா லுரைத்தமரத்தடி
நாடுசக்கை நலமாயரைத்துபின்
நாடுமுள்ளிக்கா யாகவுருட்டிநீ
போடுமூன்றுநாட் போய்விடுங்கல்லுமே. 17

மாந்தஞ்சவலைக்கு.

கல்லவங்கங்கறி மஞ்சள்ஓமம்
வெல்லுந்திரிபலா தித்திரிகடுகுடன்
நல்லசீரகம்நற் கண்டாமையோடு
புல்லுந்தாளிச்ச பத்திரியுள்ளியே. 18

உள்ளியோர்வகைக் கேயரைக்காபலம்
மெல்லவேவறுத்தே வென்னீர்விட்டரை

17. முள்ளிக்காய்-கண்டங்கத்திரிக்காயளவு.

18. கண்டுபரங்கி-ஆமையோடு. உள்ளி-வெண்காயம்.

கள்ளமின்றிக் கருங்குன்றியாக்கித்தாய்
குண்டபாலி லரைத்துகொடுத்திடே. 19

கொடுத்திடாயொரு குன்றியோர்வேளைக்கு
குடுத்தநாளிரு போதொருமூன்றுநாட்
கடுத்துமாந்தங் கழங்குஞ்சவலையும்
மடித்துமந்திர மசியென்றோதிடே. 20

இராமபாணக் குளிகை.

ஓதுகந்தி யிரதலவங்கமுஞ்
சாதுகாவிச் சலியாமலோர்வகை
மீதுதொட்டிப் பாஷாணம்நெருஞ்சிசாற்
கோதுபுளியிலைச் சாற்றுனூற்றிடே
ஆட்டிஇரு சாமமும்அப்பனே
நீட்டிமாத்திரை நிழலிலுலர்த்திப்பின்
சூட்டுக்கும்சில சுரங்களறுபடும்
மூட்டுமந்திர முன்சொன்னதாகுமே. 21

குளிர் சுரக்குளிகை.

ஆகுந்துத்தஞ் சதுர்பாஷானன்றி
யேகும்வாள மிருவகைவேதியான்
ருகுமோறி லறைத்துப்பற்றள
வீழுஞ்சீத சுரங்களும்நீங்குமே. 22

துத்தம் (4) பாஷாணம் (3) வாளம் (2) வேதிதி சாத்திரபேதி.

மேகம் 1-க்கு காரீயச்செந்தூரம்.

நீங்குதாங்கா ரீயஞ்சமனெடை
வாங்குசூரியச்சார் விட்டரைத்தேயதை
ஓங்குமோட்டில்வைத்தே யோடுகூடியே
தேங்குசீலைத் திறமாகச்சுற்றிடே. 23

சுற்றிக்குஞ்சரஞ் சூதுசெய்யாமலே
நற்றிவேந்தமத நன்றுயெடுத்துப்பார்
அத்திமாமுதற் கன்பாய்த்துதிசெய்ய
எத்துமேக மிருபத்தொன்றுமே. 24

ஒன்றுகாரீயச் செந்தூரம்ஓர்பணம்
நன்றதாக நறுனெய்யிலீந்திடில்
பன்றுடனிச்சா பத்தியமாகவே
மன்றில்பாதியில் மாநோய்பறக்குமே. 25

தொடை வாதத்திற்கு.

பறக்குமல்லிகை பாங்குடனேயிலை
புறக்கும்ஆமணக் கெண்ணெயுலவாக
சிறக்கவேவறுத்திவ் விதங்கட்டிடில்
எரிக்குமோதொடை வாதமும்வாங்குமே. 26

23. சூரி-நத்தைச்சூரி. 24. குஞ்சரம்-கஜபுடம்.

இரத்தசீழ் மூலத்திற்கு.

ஏங்குபூவந்திச்சக்கை யெண்ணுறுபலன்
ஆங்குஓமம் அழிஞ்சில்விரைசுக்கு
நீங்குகீழ்க்காய் நெல்லிவேர்புராணியும்
பாங்குநீசெவ்வல்லிக் கொடிபார்த்திடே. 27

பார்த்திடாதி விடையம்பற்பாடகம்
நேர்த்திடாபறங்கிப் பட்டைச்சாதிக்காய்
வார்த்திடாபதிரெண்டு வெள்ளாட்டுப்பால்
சார்த்திடாயெடுத்துப் பிரகாரியே. 28

ஆர்த்தேகிழ லாதருலர்த்தியே
சேரித்தேபிடித் தேவடிசெய்துடன்
நேரித்தைப்பணவெட்டு நெய்தேனொடு
பாரித்தைக்கொட்டைப் பாக்களவீந்திடே. 29

உண்டிடர்பிரு போதரைமண்டலங்
கண்டுமூலக் கிறுணிசீழ்மூலமும்
அண்டும்வயி றிரத்தக்கழிச்சலும்
மண்டும்ஆவி நெய்யமுதாக்கிடே. 30

---

27. பூவந்தி-மணிப்புங்கு.

தந்தக்கடுப்புக்கு.

பாக்குஞ்சுக்குத்தோல் தாதைசீவியே
பாக்குடனுக்குள் வைத்துசுவைத்திடில்
வீக்கம்நீங்கும் வெருந்தந்தமாகும்நீர்
வாய்க்குட்கொப்பளிக்க கடுப்பஞ்சுமே. 31

அஞ்சுவாத மடக்கித்தழுதாழைக்
குஞ்சும்நொச்சி கொடுத்துதுவேதுதான்
மிஞ்சுநீரில் மிளகருணையின்வேர்
கொஞ்சமாயரைத்தே குழம்பேற்றிடே. 32

ஏற்றும்போதுஇரங்கும்பல் வாய்வெல்லாம்
பூற்றவீக்கமும் பூதமுதங்களும்
காற்றுபோலடித்தே கறைக்குமிது
மாற்றுஞ்சஞ்சீவி மானிடர்தங்கட்கே. 33.

தாம்பூர பற்பம்.

தங்கட்கேயொரு தாம்பூரநீற்றயான்
இங்கவென்று சிரித்தாற்றளியே
அங்கமாயரைத் ததன்மீதப்பியே
கங்கையைத்தரித் தோன்பாதமெண்ணியே. 34

---

31. சுவைத்தல்-மெல்லல்.
32. குஞ்சும்-குன்றி.

எண்ணியோர் கஜமேபுடம்பற்பமாஞ்
சண்ணுலோர்பணந்தான் கொடுமேகம்போம்
மண்ணில்ஆவிநெய்யா லறைமண்டலம்
எண்ணெணவீரிய மிதுவாகுமே. 35

ஜாதிலிங்கக் கட்டு.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

ஆகுமேவாதமென்று அலைகுவார்மடையரப்பா
சாகுவாதன்மேல்வீழ்ந்து சலித்துஐம்புலனும்வாடி
நாமமேயணிந்தோர்பாதம் நண்ணியெந்நேரம்வந்து
யோகத்தைகைவிடாமல் ஊங்கிநேர்வாதஞ்செய்வர். 36

செய்குவோர்லிங்கங்கட்ட சேதியொன்றுரைக்கக்கேளீர்
வெய்குபூவரசம்பட்டை யென்னவர்வணங்கும்வேம்பு
நையவேயுலர்த்திநன்றாய் நற்குழிப்பதமேசெய்து
பையவேதயிலம்வாங்கி பாங்குடன்சுருக்குத்தாக்கே. ()

தாக்குவாயிரண்டுநாள்தான் தங்கமும்பொன்னுமாகும்
நோக்குவாய்ஆவிபாதம் நொடிக்குமுன்வாதமாகும்
நீக்கியநினைவுமாந்தர் நீங்கிடாசுரத்திற்கிந்தால்
பாக்கியவானேயாவான் பாரத்திடுஞ்சன்னியெல்லாம். 38

---

35. கஜபுடம்-முழுபுடம்.

எல்லையில்லாகமொன்று இரதமிழ்வெடையாய்தூக்கி
நல்லதோர்கலசத்திட்டு நலமுள்ளபூரம்பிடாவில்
சில்லாகபொடித்துப்போட்டு சீலைமண்மூன்றுசெய்து
கொல்லுலையேற்றிசாமங் கொடுந்தணலெரித்திடாயே.

எரித்திடும்இரண்டுசாமம் என்னசொல்வேன்சிந்தூரம்
உருத்திராபணந்தன்னை ஒருபணந்தேனிற்கொள்ள
வருத்தமோரடைப்புமூன்றுவாங்கிடும்கணங்களெல்லாம்
பறித்திடும்இதற்குபத்தியம் பாரினிற்கடினந்தானே. 40

பீனிசத்தலைவலிக்கு சௌரித்தயிலம்.

பார்தனிற் சௌரிச்சாறோர் படியினலாவின்பாலும், நேரதா யடுப்பிலேற்றி நெடியமால் தனைத்துதித்தே, ஓத வேகியாழஞ்செய்து சினத்தினில் மிளகோர்சேரை, ஆரு முன் அறைத்துப்போட்டு அதன்பின். நல்லெண்ணை வாறே. 41

வார்த்துமே தயிலந்தன்னை வடித்தபின் முழ்கிவந்தால், காற்றிசை யறியச்சொல்வேன் நாமிவை செய்துபார்த் தோம், பேர்த்திடு வியாதியெல்லாம் பெரியபீனசங்கள்

39. பிடா-பானை.
42. காற்றிசை-நான்திசை.

போகும், மாற்றுமேயதிகமாகும் மண்டைநோய் யதுவுந்
தீரும். 42

பித்தத்திற்குழுழ்க கீழ்க்காய்நெல்லித்தைலம்.

தீருமேபித்தம்போக திருவுளங்கீழ்க்காய்நெல்லி
வேருமேபிடிங்கிவக்து வெண்சலம்படியாறிட்டு
பாருநீபடியோரிரண்டிற் படமுடநாழியாலும்
சீருடன்மிளகோர்சேரை சிறக்கனள்ளெண்ணைவாரே. 43

எண்ணையைமுழ்கிவந்தால் இயல்புடன் தீரும்நோய்கள்
நண்ணியபித்தத்தாலே நரைத்திடுந்தலைகருக்கும்
மண்ணியவன்னியோர் நாற்பதும்சோம்பல்தீரும்
திண்ணமாஞ்சித்தர்மெச்சும் செகமகிழ்தைலந்தானே. 44

க்ஷணத்தில் தாளகபற்பம்.

வேறு.

செகத்துட்செப்புச் சிமிள்தனில்
சிறக்கநிம்ப இலையுடன்
வறுத்துச்செய்வாய் மூன்றுதான்
வளமாய்த்தும்பி யோர்புடம். 45

---

43. நாழி-ஒருபடி.
44. வன்னியோர்நாற்பது பித்தம்-4.
45. தும்பியோர்புடம்-கெஜபுடம்.

பணிந்துதேனிலோர்பணம் பாரிலுள்ளமாந்தர்கள்
அணிந்தகாசமெட்டையும் அறுத்திடும்க்ஷயத்தையும்
துணிந்ததோர்கபமெலாஞ் சோதிகண்டஇருளென
பணிந்துஓதுயிருமல்தான் பருத்ததாலேயோடிடும். 46

பயித்தியம்பிடித்தவர்க்கு முழுக்காட்டமருந்து.

ஓடுபேயன்தனைக்கொணர்ந் துபாயமாகதலைசிரை
காடுநெற்றிதனிலிருந்து தணிந்தவுச்சிமாட்டுமே
வாடுகொண்டுசீறிநல்ல வாடிதானபலகரை
காடுதன்னந்தேய்த்தசேர் சம்பழச்சாறிட்டிடே. 47

இட்டமாயரக்கிமூன்று யிடைவிடாமல்நற்சலம்
சட்டமாகநூறுதாழி தளர்ந்தமூசிதானிடில்
எட்டியேமுன்றுளிவ்வதந் தோகெதிடில்
பட்டுப்போம்வியாதியும் பரக்கும்பேயும்பித்தமே. 48

பித்தத்திற்கு சிதம்பரச்சக்கரம்.

பித்தமேபரந்திடப் பேயனுக்கைம்பத்தொன்
றத்தனைத்துதிசெய்து அவன்கையிலிருக்கிட
செத்தமாதர்கூடிலுஞ் சவங்கள்வந்துநேரினும்
அற்றுப்போம்வியாதியும் அரன்றனாணையுண்மையே. 49

---

46. சோதி-சூரியன்.

47. சிம்பழம்-எலுமிச்சம்பழம்.

உண்மையானஐம்பதுஒன் றுந் தியானசக்கரம்
திண்மையானபேயுமில்லை தீநகரில்தீதில்லை
நன்மையாமனேகநோயு நாடும்போதுகட்டிடில்
மண்மையானபலகரைக்கு வாய்த்தசுண்ணங்காட்டுமே.

பலகரை பற்பம்.

காட்டுவோங்கலசத்துள் கலந்துங்காடியரைபடி
நாட்டுவாய்க்குசீலைசெய்து வண்மையாதபோட்டது
தீட்டுவாய்ரவியில்வைத்து தினகரனைபோற்றியே
மூட்டுபாண்டமேல்குவித்து முன்னுபின்னுந்தீயிடே. ()
தீயெரித்துபின்பெடுத்து சீலையைத்திறந்துபார்
மாயுமேபலகரை மன்றில்நீறுபோலதாம்
தாய்பதந்துதித்தெடுத்து தவிக்கில்புண்ணுகீய்ந்திடில்
நோய்மிகுந்தமேகப்புண் நொடிக்குமுன்பரக்குமே. 52

சுயாக்கினித் தைலம்.

பரக்குஞ்சூதமோர்பலம் பணிந்தகெந்தியவ்விடை
நறுக்குந்தாரமோர்பலம் நன்மையானசிலையுடன்
சிறக்கக்காடிவிட்டரைத் தேயுருட்டிச்சீலையில்
வெறுக்கும்வேப்பெண்ணெய்யை வைத்தெரித்துத்திடே.

51. கலசத்துள்-சிறுபாண்டத்துள்.
53. சூதம்-இரசம். கெந்தி-கெல்லிக்கெந்தகம்.
தாரம்-அரிதாரம். சீலை-மனோசிலை.

வே று.

ஏற்றியதீபத்தி லிறக்கும்மெண்ணெயை
நாற்றிசையோர்கொள்ளும் நாகவல்லியில்
மாற்றிடும்வியாதியை மருந்தின்வேகந்தான்
சாற்றிடும்பத்தியம் சம்மதமாகுமே. 54

ஆகுந்தோல்வாத மங்கைவாதமும்
ஏகுமேகால்முழங் காலின்வாதமும்
போகுமெய்நடுக்கலும் புலியின்மீதொரு
போகுமேவாதமும் பரந்துபோகுமே. 55

பாம்புகடிதீர மருந்து.

பறந்ததோர்பானுவை பணியுந்தீண்டுநாள்
சிறந்ததோர்சின்னியை தேடிக்காப்பிட்டு
இரண்டுமணிதரை யெழுப்பவேண்டிநீ
அறைந்திடும்பூசைக ளதிகமாகவே. 56

ஆகவேவாரண மறுத்தபின்வடஞ்
சாகவேநசிமசி சலித்திடாமல்நீ
போகவேயுருலட்சம் புரிந்தபின்பணி
ஏகவேபார்த்திதை இறக்கநான்றரோ. 57

---

56. பானு-சூரியன். சர்ப்பம்-அல்லது சூரியகிரணம்.
57. வாரணம்-கோழி.

கன்றுடன்குளி சஞ்செய்பாவாதியே
இன்றுடன்மடிந்தா லெவ்விருக்கினுங்
கன்றுடன்சுடலையாங் காடுபுக்கினுஞ்
சென்றுடல்விஷமெனாஞ் செய்கைகாட்டவே. 58

காட்டுவாய்முகத்தினிற் காலவரைக்குமே
நீட்டுவாய்க்குளிசத்தை மூன்றுவிசையுமே
கூட்டுவாய்மந்திரம் சொல்லியபடியெல்லாம்
ஓட்டுவான்விஷத்தையு முகத்தெழுப்புவானே. 59

குலைவாய்வுக்கு யெண்ணெய்.

வானத்தாவிய வல்லியசெம்பகம்
தானத்தைப்பிடித் தரித்தவுட்கடல்
ஆனத்தைப்போக்கி யதனையோசூல்
மோனத்திலிடித்துத் தூளாகமோதுவாய். 60

மோதுவாய்முத்தெண்ணெய் மொண்டுஓர்படி
மீதுவார்செருப்படை மிருந்தகழர்க்கொடி
காதுவாய்மாதளை தாமரைப்படி
ஓதுவாய்வுள்ளிச் சாறோர்நிரையரோ, 61

---

58. நாகவல்லி-பாம்புபிடாரன்.

60. செம்பகம்-செம்போர்த்து-அதேகள்ளிக்காய்.

நிரைத்துமதுரமும் நிசவிளக்கமும்
மரைவில்வால்மிளகொடு மாருஞ்சந்தனங்
கரைவதுநெருஞ்சின்முள் கசகசாவொடு
துரையொருபலமாய்த் தூக்கியேபோடுவாய். 62

போடுசெவ்விளநீர் பொருந்துவிட்டதில்
நாடுவாயெரியிடு நன்றதாகவே
சூடடனெண்ணெயிற் சுருக்குத்தங்கினால்
பாடுவோமெண்ணெயைப் பதமதாகவே. 63

பதனமாயெண்ணெயைப் பாலனேவடித்
தீதனமாயேழுநாள் தினமுங்கொண்டிடில்
வதனமுஞ்சோதியாய் வரயில்நாரல்போங்
கதியும்பத்தியங் கால்நிறுத்திடே. 64

நிறுத்தும்போதினில் நீட்டிக்காலத்தின்மேகம்
கருத்தகுஷ்டமுங் காங்கைநீர்சுருக்குடனெரிவும்
பெருத்தசூலையும் பேசிடாவாய்ப்பெரும்பாடு
அருத்திடுமிதுஆறுநாள் முறைமுறையறிவீர். 65

அறிவிரின்னமும் அப்பனேபழையநோயதற்கு
தெரியும்பத்தியந் தான்புளிபுகையுப்புவதனை

62. விளங்கம்-வாய்விளங்கம்.
64. கால்-வாயு பதார்த்தங்களை நீக்கலென்பது.

நெறியுடனிருத்தியோ ரேழுநாளானபின்
சரியதாகவேநீபுசிப்பாய் பல்நோய்போமே. 66

நேத்திரவாயுவுக்கு.

போகும்நேத்திர வாய்வதுபொருந்திடில்
ஏகவல்லியின்சாற்றினிற் சுக்குரைத்ததனை
பாகமாயெடுத்தோர் பணந்தெறித்திடப்பதுங்கி
நாகும்வாய்வுக ளென்றும்வாராதுநீறேற்றம். 67

வெட்டுக்காயத்திற்கு.

ஏற்றமாகுஞ்சோறிருக்குங் கற்றாழையையெடுத்து
சாற்றமானதைசரித்திடுங் காயத்தில்சரியாய்
மாற்றமூன்றுநாள்மருகியே கட்டுவீராகில்
ஆற்றுங்காயத்தைஅங்கண ஞானமெய்யறிவீர். 68

கெர்ப்ப அபாயத்துக்கு எண்ணெய்.

அறிவீர்மங்கையாரவர்கள் தங்கருப்பத்தாலரி
திரிகிற்குமால்சீக்கிரம் வாங்குமுத்தெண்ணெய்
உறுதியோமெனுமுத்த மடங்கடமெனவும்
பருகபூசவேபாலன் பிறப்பான்பார்தனிலே. 69

சுகவிரோசனம் (வண்ணக்கலே.)

அறையவிரோசனமாகும் படிக்கெணக்கல்
குறுமுனியனுரைத்தபடி பிரியமுடன்

68. சோறிருக்குங்கற்றாழை-சோற்றுக்கற்றாழை,

வெள்ளிக்குங்கிலியம் பலம்,

போரய்க்கள்ளியில்வைத்து சீராய்புதைத்துமே
யடுத்துமண்டலஞ்சென்று மேன்மையாயெடுத்து
அருளிப்பூவில்,
புற்றும்புகைபிடிக்க இத்தேசமன்னர்கள்
பாங்காயோர்தரமோர் நீங்காமல்பேதியாய்
பாருமிதுசோதனையை நீருமே. 71

பெரும்பாட்டுக்கு.

பெண்ணேயுங்களுக்கெல்லாம் நண்ணைச்சொல்லுவேமு
பெரும்பாடுண்டாயிடுவ இரும்பானசங்கின்மூலம் [றை
பேதையதைக்கொணர்ந்து வாகையால்தோல்சீவி
பெரியதுணியில்வைத்து உரியக்கினைபோல்கட்டி
பேசும்வேப்பெண்ணெய்தனில் வைத்தால்மேல்
கூசும்பாரெண்ணெயதில்,
கிளம்பக்கிளம்ப எடுத்தளம்பாமல்வெந்தபின்பு
உளம்பார்த்துக்கொண்டிட அழகாந்தேகமுன்போல்
என்றுமுண்டோ வியாதியுனக்கினிமேல். 72

இரத்தபிரிமியத்திற்கு.

அல்லவேமாந்தருக்கு தொல்வினையானரத்தம்
ஆகும்பிரமியன்வாசாக வந்திடில்

---

72. சங்கின்மூலம்—சங்கன்வேர்.

அன்பானதேங்காய்ப்பால் அதனெடைபுங்கம்பால்
அசையா ஓரிதழ்மூலம் விசையாயெடுத்தரைத்து
அப்பவேகொடுத்துமூன்று நாளைக்குப்பால்தடுத்து,
அவனை-வெகு,
ரூபாரபாக்காற் சாரந்தள்ளி
ரோபத்தியஞ் செய்தால்
தீருதவெள்ளையும் போம்
அரணைபிடித்துண்மை யறிவீரே. 73

பெண் ருதுவாக.

அன்பாயுங்களுக்கொரு தென்புசொல்லுகிறேன்
புத்திஅரசன்சொன்ன ரெனக்கன்றுதிறஞ்சொன்னேன்
உனக்கின்றுஅடவிகானந்தன்னை திடமாயடுப்பிலேத்தி
இதுவெந்தநீரைமூன்று நீவேளையீய்ந்துபாரே,
அதிசயங்களாகும் இருள்களுமேயாகும்
வல்வினையெல்லாஞ்சாகும் (பிடித்தபேய்கள்)
நாகமெழுதிகட்டு,
அன்னையென்பா ரனைவோருமுன்னையே. 74

நேர்வாளசுத்தி.

ஐயாவயித்தியரே மெய்யாவாளச்சுத்தி
ஆர்க்குந்தெரியமனை வோர்க்குமுரைக்கக்கேளு

---

73. ஓரிதழ்மூலம்-ஓரிதழ்த்தாமரை.

அதனைசாணிதனில் விதனசுத்திசெய்து
அன்றேதோலெடுத்து இன்றேபசுவின்பாலில்
அடுப்பினிலேற்றி (சூடுகொண்டால்)
எடுத்துநீயாற்றி (வெய்யலில்வைத்து)
ஆவிநெய்யதனைவிட்டு அவுழ்தம்வறுத்துக்கொள்ளு
அழகானமருந்துக்கு தளகர்த்தனுமிது
அதுவேநேர்வாள மறிகுவீரே. 75

ஆணுக்குப் பெண் இடுமருந்து.

பாரும்வேசியரெல்லாம் பண்பாய்பிழைக்கவேண்டி
பாங்காயிடுமருந்து பார்தனில்மாந்தருக்கு
பச்சைஒணான்பிடித்து பிச்சிமிகவேயெடுத்து
பரமாய்ஆடையொட்டித் திறமாய் சிணுங்கிவேறும்
பால்நங்கைவேறும் ஈசுரமூலி
கோல் கொங்குவேரும் உன் நாதத்தால்
பரிவாய்சாமம்ஆட்டி பிரியமோகினிமூட்டி
பால்அன்னந்தனிலிட போர்வந்துசுடு
காடேறினுமவளை கைவிடான். 76

---

75. சாணினம்-சாணியெனமருவியது.

76. சிணுங்கி-தொட்டாச்சிணுங்கி. நங்கை - சிறியா நங்கை. ஈசுரமூலி-தளைச்சுருளி. கொங்கைவேர்-கறுஞ் சரை. நாதம்-இரத்தம்.

ஆண்பித்து-தம்பனம்.

மன்னர்மாதர்களைச் சின்னபின்னஞ்செய்ய
மகத்தானவேருண்டு ஜலத்திலதனைக்கண்டு
மங்கலமாகவேசிங்காரசோடசோபசாரமாயுச்சரித்தபடி
மடங்கியேயெடுத்து தகடுதனிலடக்கி உட்கொடுத்
தரையிற்கட்டி அஞ்சாதபெண்களைநெஞ்சுக்கொஞ்சாமீயும்
ஆணவத்தால்காம பாணமதனையோடு
அடிபணிவாரென்னேரம் அருமைமாதர். 77

ஸ்திரீபித்து தம்பனம் ஆண்பிரிய.

தங்கமானகிளியே அங்கிதமன்பர்கள்
தயவாயுந்தனைக்கொண்டு சுயமாய்பொருள்கொடுத்தால்
தவசியதாகவே அவசியமாயிருள்
தங்கியநாளதனில் ஓங்கிசுடுகாடேறி
தாரணஞ்செய்தவ வேருக்கு வாரணஞ்செய்து.

உச்சாடனம்.

தானேயுபதேசித்து மானேயதனைக்காட்டு
ஏனையிதுவென்றெண்ணி நானேபோகிறேன்பிரான்
யாகியேயென்று முதல்நாடிடான். 78

77. மகத்தானவேர் பிரணவ மூதன் முளைக்கொடி.

78. அவசியம்-அகத்தியம். இருள்தங்கினாள். அமாவாசை. வாரணஞ்செய்து-கோழிபலியிட்டு.

சுரத்திற்கு பாஷாணக்கட்டு.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

அன்னமேபாஷாணத்தை யடவுடன்கட்டவேண்டி
இன்னமும்பலம்ஒன்றாக எடுத்துவோர்பாண்டத்திட்டு
வன்னியச்சாறிரண்டு வாருடனதனைவைத்து
மன்றுநாள்நாற்பதானால் மைந்தனேயெடுத்திடாயே.

எடுத்ததையடுப்பிலேற்றி யெரித்திடுயிரண்டுசாமம்
வடுப்படாகட்டிதன்னை வாங்கிநீகழுவிப்பின்பு
தடுத்தகற்றாழைவேறில் கட்டியைதனித்துமூடி
தொடுத்திடுங்கஜபுடந்தான் துயராறுங்கட்டியாமே. 80

கட்டியை சுரத்திற்கீய்ந்தால் கலங்கும் வல்வினைகளெல்லாம், மட்டிலா வகாரமாகும் வன்னிக்குமிதுவேயாகும், பட்டுப்போம் வியாதியெல்லாம் பலபலமுறைகளானேனும், திட்டமாயிதனைக்கேட்பார் தேரையனென்றபோதே. 81

தோடனை யடக்கவேண்டும் புண்ணிய, விசாகனேறும், ஆதளையதனைதாக்கு அப்போதே யிறுக்கிப்போவான், நீதியாய்சிவலோகத்தில் நீயதுகொடுத்தாயாகில், சோதியேழரையுமாகுந் துயராறுமாற்றுமாகும்.

---

81. வகாரம்-இரசிதவித்தை. வன்னி-நெருப்பு.
82. ஆதளை-காட்டாமணக்கு.
இறுகிப்போவான் கட்டிப்போகும்.

அஞ்ஞானம்.

ஆமையின்கண்ணெடுத்து அப்பனே தூசிநேடு, சேமமாகிய ரண்டெண்ணெய்ச் சேர்த்ததைக் கருகிக் கொண்டு, ஊமையின் கையிற்போடு உலகெலாந்தெரியு மங்கே, நாமுமே வருவோங்கண்டாய் நற்பொருளது வுங்கிட்டும். 83

இரசக் கட்டு.

கிட்டுங்கள்தேரை தன்னை கெர்வமில்லாமல்வாங்கி
ஓட்டுமேபுவனந்தைத்து ஒருகழஞ்சிரத்தம்விட்டு
கெட்டிமேல்வாயுந்தைத்து வேனிமானேந்திமூலி
வட்டமாய்கிண்ணஞ்செய்து வைத்திடுதேரை தன்னை.

தன்னையேசீலைசெய்து சதுரங்கபுடத்திற்போடு
வன்னியாலிரத்தங்கட்டும் வாதங்களனேகமாகும்
சென்னியிற்கட்டும்போது ஜெகதலமெல்லாந்தாண்டும்
நன்னயஅமிர்தஞ்சிந்தும் நறைதிரையற்றுப்போமே.

---

83. தூசி-சீலை.

84. புவனம்-ஆசனவாய்-இரத்தம்-ரசம். மானேந்திமூலி-ஈசுரமூலி.

85. சதுரங்கபுடம்-கஜபுடம். அல்லது நாலெனக் கொள்க. சென்னி-சிரசு.

இரசச்சிந்தூரம்.

அற்றதோர்தேங்காய்தன்னை அதிகமாயிருதுண்டாக்கி
பத்தியாயருகுழேலி பாங்குள்ளசிரட்டைகப்பி
சித்தமாய்வழலைச்சேர்த்து சீக்கிரமாசத்தைவார்த்து
எத்திசையறியச்சொன்னேம் ஏழுமண்சிலைசெய்யே.86

செய்திடுந்தேங்காய்தன்னை சிறப்புள்ளபுடத்திற்போடு
எய்துநீஆறவிட்டு எடுத்திடுவென்னசொல்வேன்
வையகந்தனிலேசுத்தி வைத்துநீசுட்டியிட்டு
பொய்யதிலேற்றும்போது புகழ்கின்றநாதம்வாறே.

கொட்டாங்கச்சிக்கி அப்பி வழலை முப்பு.

நாதம்வார்த்தெரிக்கும்போது நன்றதாயுருகியோடும்
ஊதமேல்நெருப்பதன்னை ஒருபலம்பசுவின்வெண்ணை
சீதமாங்கௌரியோடு கிஞ்சுகபுனுகும்போடு
சோதியாம்வழலைபோட துவிதத்திற்கதிகந்தானே. 88

துவிதமாஞ்சிந்தூரத்தை தோத்தரித்ததனைவைத்து
அவிதமாநவலோகங்க ளடவுடனிருக்கும்போது

---

86. அருகுழேலி-வெள்ளெருகு. சிரட்டக்கப்பி.
87. பொய்-அடுப்பு. நாதம்-சுத்தசலம்.
88. கௌரி-கௌரிப்பாஷாணம்.
கிஞ்சுகம்-சிகப்பு துவிதம்-இரண்டு.

பவிதமாயதுபோவிட்டால் பார்க்குமுன்ஏமமாகும் [மே
வலியுடையோர்க்குவாய்க்கும் நாம்சொல்லு முறையிதா

முறையிது தவங்கூத்தாடி முன்னிது துவும்போது,
கறைதனில்மூழ்ந்தகாலுங் கையொடிந்ததுவும்போதும்,
துறைசபைக் கேகும்போது சுருக்குட குணம்போல்
நெற்றிப், பிறைதனில்திலதம்போட்டுப் பேசிடவழக்கு
நன்றே. 90

நன்றிடுவாதமெல்லாம் நடுக்குஞ்சிந்தூரத்தாலே
ஒன்றுநாற்பதுவாம்வன்னி ஓடிடும்புவியைவிட்டு
சென்றிடுந்தொண்ணூற்றூறு சேஷ்மமுமகலுமித்தை
மன்றுளோர்வருஷமுண்டால் மாதவர்க்கதிகமாமே. ()

ஆமேயிக்கலியுகத்தில் ஐயிருவருஷந்தன்னில்
தாமேவிசேஷம்வியாதி தரணியில்மாந்தர்க்காகும்
போமிதால்வாந்திபேதி பொங்குமேஅனேகமாக
நாமிதுபோகச்சொல்வோம்நாரணன் தங்கைபாதம். 92

நாரணன் தங்கைதன்னை நமஸ்கரியிதுவும்போகும்
வாரணமுகவன்சொன்ன வங்கசிந்தூரங்கொள்ளு
காரணமுவைந்தாலும் கருங்குஷ்டமதுவுண்டாகும்
பூரணகும்பம்பண்ணி புதனையேபோற்றிசெய்யே. 93

89. ஏமம் பொன்.

90. நாற்பதுவாம்வன்னி பித்தம்நாற்பது.

93. வாரணமுகவன் விநாயகன்.

செய்துதாம் பூரங்கொள்ளு சென்றிடும் வியாதி யெல்லாம், பெய்துமோ ரிருபதானல் ஏகமாம் வாது நோய்தான், கொய்து முப்புலியும் நன்ருய்க் கொடுத் திடும் பூசைநன்ருய், மைதிரி புரையின்பாத மனதினி லிருத்திக்கொள்ளே. 94

கொள்ளுவாயோகந்தன்னைக் கோவெலிஅவுரியோடும்
எள்ளளவாகவேதான் எடுத்தொருமூன்றுநாளும்
உள்ளுக்குக்கொடுப்பாய்சுக்கில ஓடுமேவாதமெல்லாம்
கள்ளமேயில்லையிந்தக் காரியமாயன்சொன்னார். 95

நரம்புசிலந்திக்கு மருந்து.

மாயன்சொல் லின்னங்கேளு மானிடர் தனக்கு யின்னம், நேயனார் சிலந்திகண்டால் நேரிடும் வகையே தென்னில், தோயவிரோசனந்தான் தொடுக்குமோர் விசையோவெல்லாம், காரம்போல் அரிப்பெடுக்குங் கைகண்ட மருந்துகேளீர். 96

கண்டதோர் அமுக்கருவேர் கருணைவேர் இஞ்சி வேரும், பண்டுமாபோல்அரைத்து பதத்தினில் அவித் தெடுத்து, புண்டுமேல் நாட்டந்தீரும் போதும்புண் மூன்றுநாளில், தொண்டன்நீ எனக்குப்போடு தேரை யன் முறைதப்பாதே. 97

---

97. புண்டு நரம்புச்சிலந்தியின்புண்.

பெறுவயிறு நீக்கத்திற்கு.

தப்புஞ்சாரணைகொழுந்து சரியிடைவுப்புகூட்டி
துப்புறஆவின்பாலில் துரிதமாய்க்கொண்டாயானால்
அப்போதேவாங்கும்பேதி லடிவயர்சுழியுமின்னம்(யும்.
உப்பில்லாக்கஞ்சிகொள்ளு மொடுங்குபெறுவயிறுந்தே

வசியம்.

தேய்ந்து போகாமல் மாந்தர் செழிப்புடனிருக்க வேண்டி, ஆய்ந்தபுல் லுருவிவாங்கி அதனை தேனதிற் குழப்பி, காய்ந்திடும் பானுவுக்குங் கடுகிய சுக்கிரர்க்கும் சாய்ந்திடா திலதம்போட க்ஷணத்தினில் வசியமாவார்.

ஆமேஅம்புலிவியாழம் அப்பனேநெய்யிற்போட்டு
தாமேசெய்வாய்புதற்கு தாழ்வில்லாபாலிற்போடு
காமந்தன்தயிரிற்போடு நன்றதாய்வசியமோரில் (ரே.
சோமன்போல்ஒளியுமாகுந் துரைகள்தான்வசமாவா

வசமதாய் இந்தநூறும் வாகுடன் பார்த்தபேர்கள், நிசமுள்ள வயித்தியராவார் நெடும்புவி யுள்ளோரெல்லாம் திசைமுக னருளால்சொன்ன தேரையன் மருந்துகொண்டோர், புஜபலமிகவுண்டாகி புவிதனில் வாழ்வார்தாமே. 101

தேரையர் அருளிச்செய்த வயித்தியம் முற்றிற்று.

---

99. பானு-சூரியன் அதே ஆதிவாரம்.
100. அம்புலி-சந்திரன் அதே திங்கட்கிழமை.
புதற்கு-புதனுக்கு. மந்தன்-சனிக்கிழமை.
101. திசைமுகன் பிரமன்.

உ

கணபதி துணை.

நூற்றைந்தாவது

ஜனகமகாமுனி

பிரமதண்டி எண்ணெய்-11.

வகையானயெண்ணெய்தனைப் புகலக்கேளு
வனந்தணிதீர்வதற்கு சூட்சமாகும்
குகையானபிரமதண்டிச் சமூலமாக
துரிதமாயிடித்தசாறு படியதொன்று
நகையாதேவெந்தயமும் நற்சீரகந்தான்
நலம்பெறவே அதிமதுரம் பலமுமைந்து
பகையாமலிடித்துநன்றாய்க் கலந்துபின்னர்
பகர்வுடனேவிளக்கெண்ணெய்சேர்ப்பீர்தானே.

எண்ணெயதுமுக்கால்தான் படியதாகும்
யேற்கனவேமிகக்கூட்டி யடுப்பிலேற்றி
திண்ணமதுதீர்ந்திடவே தீபம்போலே
தீர்க்கமதாயெரித்திறக்கிப் புனத்தங்காமல்
வண்ணமுறவேயெடுத்து யிருத்தோர்பீங்கான்
வகையானபாண்டத்தி லூற்றியேதான்
அண்ணலெனமனதில்வைத்துப் பிணியாளர்க்கு
வன்புடனேசிறுகரண்டி யளவதாமே. 2

அளவெடைதான்கொடுத்திடவே யிதில்சேர்கின்ற
அடங்காதகைகாலின் பிடிப்புநோய்கள்
தளும்பிநிற்கும்வாதமொடு மேகவெள்ளை
தயங்கியநோய்த்தங்காமல் நீங்கிப்போகும்
குளம்பியதுமேற்கொண்டு யேறிடாது
குணமானஆசானு லறிந்தவித்தை
களங்கமறுந்தேகத்தின் பிணியைமாற்றி
கனத்தயிர்ந்தவியாதியெல்லாம் போகுந்தானே.

தானென்றமூலியிது ரெணத்தையாற்றும்
தப்பாதுதப்பாது பிடிப்பனைத்தும்போகும்
நானென்றுபேசுவதேன் பெரியோர்சொல்லால்
நானறிந்தவிதப்படியின்றெனவேசொன்னேன்
தேனென்றுசொல்லதுபோல் பேசுகின்ற
யிசைவானமூலியென செப்பலாகும்
காவென்றவரிசையுடன் செய்தபேர்க்கு
கருதியசொற்றவறுமல் நடக்குந்தானே. 4

நடத்தினதோர்பெண்ணென்றால் பெலமதாக
நன்றாகபேதித்து நோயைத்தீர்க்கும்
சடத்தினிலேகான்சென்று யிருக்குகின்ற
சலிப்பானவியாதிகளைக் கண்டித்தாலும்

படத்தினிலேயெழுதிவைத்த பான்மைபோல
பருவமதாய்செப்புதுபா ரிந்தநூலில்
இடத்தையறிந்தேயுணர்ந்தால் விண்டுநிற்கும்
இயல்பானதொழிலறிவேன் மார்க்கந்தானே. 5

மார்க்கமுள்ளசாத்திரத்தைப் படித்தபேர்கள்
மனதுகந்துதேர்ந்துநின்று மகிழ்வாய்செய்வார்
சேர்க்கையுள்ளவிலக்கணமாய் மருந்திசைத்து
யேற்றிடவேசொன்னதனு லாபமென்ன
தீர்க்கமுடன்வெளிப்படையா யிருந்தால்நன்றும்
செய்வதற்குலகுவாகுஞ் செழிப்பதாகும்
ஆர்க்குமிதுவுதவுகின்ற வாருக்கொள்ளு
அறிந்துதொழிலேற்றுவது அதீதந்தானே. 6

பத்தியம்.

ஏற்றியதோரெண்ணெய்விதப் பத்தியங்கேளு
எழிலானவாட்டிரைச்சித் துவரையாகும்
ஆற்றியதோர்சிறுபயரு வுள்ளானுகும்
அன்பானகத்திரிக்காய் பிஞ்சதாகும்
மாற்றியதோர்வெண்டைக்காய் பிஞ்சிதானும்
மணமறியமிளகின்றா லிட்டுப்புசிக்கலாகும்
சாற்றியதோர்அரைக்கீரை யுண்ணலாகும்
சாதமதில்பாலிட்டு மருந்தலாமே. 7

வெள்ளைப்பூண்டு கடுகு தள்ளவும்.
புளியைச்சுட்டு உப்புவறுத்துக்கூட்டவும்.

அருந்தினவர்தங்களுக்குச் சொன்னநோய்கள்
அணுகாதுகடும்பத்தியமா யிருந்தால்நன்று
திருந்தவேதானப்படியே ஆயிசொல்ல
திறந்துவிட்டேனொளியாமல் மறைத்திடாமல்
மருந்துவகையானதிலே யிதுவோர்மூலி
மகாபெரியோர்பார்த்துணர்ந்த வித்தையப்பா
பெருந்தபத்தோர்புகன்றதனை வாராய்ந்துமேலாய்
பேசினதென்றேவுனக்குள் பேணிப்பாரே. 8

இதற்கு ஸ்நானஞ்செய்ய அலங்கிர்த எண்ணெய்.

பேணியேவிளம்புகிறேன் ஆதண்டைவேரும்
பிரியமுள்ளபட்டையொடு நன்னாரிவேரும்
வணியேசடாமாஞ்சி வில்வவேரும்
உண்மையுடன்றனெடுப்பாய் பலம்ரெண்டாக
ஆணியாம்வுரலிலிட்டு யிடித்துநன்றாய்
அகண்டவொருபாண்டத்தில் போட்டுக்கொண்டு
காணியாம்யெள்ளெண்ணெய் வரைபடிதான்விட்டு
கவனமாயெரித்திறக்கச் சாரம்போடே. 9

சாரமதுவொருகளஞ்சிப் பொடித்துக்கூட்டு
சபாசெனவேஆயிபதம் பூசித்தேதான்

காரமுள்ளதேகநிலை யறிந்துப்பார்த்துக்
கருணையுடன் றலைமுழுகச் சொல்லுசொல்லு
தீரமுடன்சிறுபயறு சீக்காய்த்தேய்த்து
செழிக்கவேவெந்நீரால் ஸ்நானமாக்கி
பாரமில்லாவூட்டிறைச்சி வற்றல்கூட்டி
பகர்வுடனேபுசித்திடவே அதிவிதமுமாமே. 10

கியாழம்.

புசித்தபின்போர்பாகமதைப் புகலக்கேளு
பேர்பெரியமிளகதுதான் பலந்தானென்று
சுசிகரத்தின்சீரகமும் பலமுங்கால்தான்
சுருக்காகக்கியாழமிட்டுக் குடிக்கச்சொல்லு
வசிகரமருந்தினை லெடுத்தவேகம்
வணங்கியேதேகமது நிரையதாகும்
பசியெடுக்கும்நடப்பதற்கு குடுப்பதாகும்
பண்புடனேசெய்தொழிலின் பாகந்தானே. 11

ஸ்நானஞ்செய்த ஐந்து நாளைக்குப்பின்பு காலையில் லொருதரம் இந்தக்கியாழம் குடிக்கவும் யெண்ணெய் வேண்டுமானால் கூட்டிக்கொள்ளவும்.

ஜனகர் பிரமதண்டி யெண்ணெய்-11

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நாற்றுறுவது

குதம்பை சித்தர்

சந்திரோதயக் குளிகை—9.

நாட்டமுடன் குளிகையொன்று நவிலக்கேளு
நலமானபெரியோர்க ளறிந்துசெய்வார்
தேட்டமுடனேயதனை யகற்றியேதான்
திரேகமந்தகுணப்படுத்தும் செவ்வையாக
வாட்டமில்லாரசகர்ப்பூரம் பலமுங்கால்தான்
வனமானகுங்குமப்பூ பலமதொன்று
தாட்டிகமதானதிரு பச்சைபூரம்
தவராமற்சேர்ப்பீர்மிகப் பலங்காலாமே. 1

பலங்கால்தான்லவங்கப்பூ லவங்கப்பட்டை
பரிவானகோஷ்டமது கால்தானப்பா
நலங்காமல்வன்னிகொர்ப்ப மரைக்காலாகும்
நவமானசரக்கனைத்தும் வொன்றாய்ச்சேர்ந்து
தலமானதலமறிந்து பெரியோர்செய்த
தவறாதபாகமென்றே மனதில்வைத்து
பெலமானகல்வத்திற் போட்டரைத்துப்
பேர்பெறவேங்கியாழம்வைத்து வரைப்பீர்தானே.

கியாழம்.

தானனசந்தனந்தான் பலமுமைந்து
தயையானலவுங்கப்பூ முத்தக்காசு
தோனனமாஞ்சிசிறு காகப்பூவும்
குணம்பெறவேயிது நாலும் வகைக்கோர்காசு
தேனனசட்டிதனி லிடித்துப்போட்டு
தீர்க்கமதாய்நன்றாகக் கியாழமிட்டுப்
பானனப்பதம்பார்த்து வரைத்தரைத்து
பகர்வுடனேரெண்டுநா ளரைப்பீர்தானே. 3

அரைப்புப்பாகம்.

நாள்தவறிப்போகாம லாட்டியாட்டி
நயனமதிலிட்டெடுத்து மைபோல்பாரு
ஆள்சிறந்துபெலமாக வரைத்தபோது
அம்மம்மாவென்னசொல்வேன் பிசினிபோலாம்
துள்ளெடுத்துப்பெருகாம லிணக்கமாக
துரியமுடன்றனெடுத்து வுருட்டிக்கொண்டு
வாள்கொடுத்தவரசரைப்போல் குளிகைசெய்ய
வயணமுடன்விளம்புகிறேன் மகிழ்ந்துகேளே. 4

வியாதிகள் தீருங்குணங்கள்.

மகிழ்ந்துவரக்குளிகைசெய்வீர் குன்றிபோமே
மாத்திரையாகவேதான் வுருட்டிக்கொண்டு

புகழ்வாகப்பரணிதனி லடைத்துமேலாய்
புண்ணியர்க்குக்கிடைத்ததென்றே கடவுள்பாதம்
அகமகிழப்பூசைசெய்து வைத்தான்பாக
அடவுடனே திரிகடுகுத் தேனிலாதல்
இகழாமல்துளசிரசந் தன்னிலேற்ற
இசைந்தசுரம்சன்னியெல்லாமேங்கிப்போமே. 5

ஏங்கிவிடுமயக்கமொடு சிரசில்நிற்கும்
இசைவிலாவாதபித்தந் தனையேநீக்கும்
தாங்கிவரும்பாரித்த நோய்கள்மற்ற
தலைவலித்தலாயாச மெல்லாம்போகும்
பூங்கியசொற்றவராதல் வனந்தநோயை
வோட்டிவிக்குஞ்சீதளங்க ளணுகிடாமல்
நீங்கியேபோவதற்குச் சந்தேகமில்லை
நிதானித்துவனுபானத்தோ டறிந்துசெய்வீர். 6

ஐயத்தை சமாதானப்படுத்தும் பத்தியம்.

அறிந்திதற்குப்பத்தியத்தைக் கேட்பீர்மிக்க
அன்பானவாட்டிறைச்சி முருங்கைப்பிஞ்சாம்
முறிந்துவிடாகத்தரிக்காய் பிஞ்சதாகும்
முழுதுவரைமிளகுநீர் சாதமாகும்
தெரிந்தபடிநிதானித்து வியாதிதன்னை
தெளிவுடனேபகர்ந்துமிக்க கொடுப்பீராகில்

செரியிந்தக்குணங்கள்முத லானதெல்லாம்
சொல்லாமல்நீங்கும்அப்பா திறமைபாரே. 7

ஸ்நானஞ்செய்ய யெண்ணெய்.

அப்பனேஸ்நானமது செய்வதற்கு
அதிவினமாய்விளம்புகிறேன் வினவாய்கேளு
தப்பிதங்கள்சொல்லவில்லை நல்லெண்ணெய்தன்னில்
தனிந்தகரியசீரகமும் கஸ்தூரிமஞ்சள்
ஒப்பனையாய்வகைக்குவொரு பலமும்போடு
ஒல்கியசொற்றவராமல் பாருபாரு
செப்பினேன்அறுகன்வேர் பலந்தான்சேர்த்து
செழிப்புடனேயெரித்திரக்கிஸ்நானஞ்செய்யே. 8

இறக்கியிதில்சாரமது விராகனிடையேபோடு
இன்பமுடன்முழுகவேதான் குணமாந்தேகம்
சிறக்கவேசீயக்காய் வெந்நீர்விட்டு
சிதராமல்செய்துமிகத் தேர்ந்துபார்ப்பீர்
மறவாமல்பத்தியமா யசனமுண்டு
மற்றயெந்தநாளில்பலக் கறிகாய்களுண்டு
அறந்தழைக்கவாத்தாளைப் பூசைபண்ணு
அனுதினமும்நல்வழியில் நிலைப்பீர்தானே. 9

குதம்பைசித்தர் சந்திரோதயக்குளிகை-9

முற்றிற்று.

சிவமயம்.

நூற்றுவெழாவது,

கண்ணானந்தர்

கெருடன்கிழங்கெண்ணெய் - 10.

தொழிலானதொழிலொன்று விளம்பக்கேளு
தொந்திதனைசெய்தவர்க்கு மெத்தநன்று
வழியானகெருடனிடக் கிழங்குதன்னை
வயணமுடன்கண்ணிலிடு மைபோற்செய்து
அழியாமல்நிழலில்வைத்து வுலர்ந்தபின்பு
அடவுடனேபனிரெண்டு பலந்தான் தூக்கி
விழியதனால்பார்த்துநன்றாய் வினவதாக
வியல்புடனேகடைசரக்கை கூட்டுவீரே. 1

கடைச்சரக்காம் வாய்விளங்கம் வாலுளுவையோடு
கனமான திரிகடுகு சீரகமுமொக்க
நடையாகவகைக்குவொரு பலமதாக
நாடியேயிடித்ததனைச் சேர்த்துக்கொள்ளு
தடையறவேஅண்டதொரு பாண்டத்திட்டு [சேர்த்து
தனியானவிளக்கெண்ணெய் வரைப்படிதான்
இடையானவெங்காய மிடித்துக்கூட்டி
இன்பமுடன்வடுப்பேற்றி யெரிப்பீர்தாமே. 2

வெங்காயம் 12-பலம் போடவும்.

அடுப்பேற்றி தீயதனை மெதுவதாக்கி
அமர்ந்துமெள்ளப்பார்த்திறக்கு புனல்தங்காமல்
அடுப்பேற்றியனல்மெத்த மீறிநின்றால்
காய்ந்தபதம்சரியாக வரமாட்டாது
எடுத்துவிடுகைவரிசை நிதானங்கொண்டு
ஏற்கெனவேவடித்திறுத்து வைத்துக்கொண்டு
தொடுத்தபொல்லாகிரந்திகுட்டம் கரிமேகங்கள்
துலையாதவெள்ளையறை யாப்புக்கென்றே. 3

அரையாப்புமேகரணம் விஷபாகங்கள்
அலைவானமேகத்தி னூறல்வெப்பு
திறையானப்புழுவெட்டு மலத்திற்சிக்கல்
தோராயமானதொரு நோய்களெல்லாம்
மறைவாகப்பதுங்கிவிடும் நேர்ந்துபாரு
மலக்கட்டுவயிற்றிறைச்சல் வுள்ரணங்கள்
குறையாமல்தீர்க்குமப்பா அறிந்துசெய்யில்
கோடானகோடிபிணி யகன்றுபோமே. 4

முதலாவது கெருடன் கிழங்கையும் கட்டுச்சரக்கை யும் கியாழம்வைத்து காய்ச்சியபின்பு யிருந்து எண் ணெயில் சேர்த்துப் பதமாகக்கூட்டிச் செய்யவும் அல்லது ஒவ்வொன்றாகக்கூட்டிக் காய்ச்சிக்கொள்ளவும்.

இதற்குப் பத்தியம்.

பிணியதற்குப்பத்தியத்தில் வைத்துயேற்று
பிழையாகச்செய்வதனால் தர்மமாகும்
அனியாயவார்த்தைசொல்லிப் பணத்தைக்கேட்டு
அவர்சிலவுக்கேற்றபடி செய்துக்கொண்டால்
மணியானவொளிமீதில் நின்றதாய்த்தான்
மனமகிழ்ச்சியாகாமல் சிரிப்பாளப்பா
கணிதமுடன்கடும்பத்திய மாகவைத்து
கடந்தபின்புயிச்சாபத்தியமா யிருக்கச்செய்யே.

சிறுபயறு நெய் சம்பாவரிசிசேர்த்து சமைத்து
வுண்ணவும் கிச்சடி செய்து புசிக்கவும்.

இதற்கு ஸ்நானஞ்செய்ய எண்ணெய்.

பத்தியத்தில்பிசகாம லிருக்கச்சொல்லி
பரிவுடனேமண்டலமென் றிசைந்துசொல்லு
சுத்தியுடனிருந்துசெபஞ் செய்யச்சொல்லு
சோம்பல்தனில்நாடாமல் விழித்திருக்கச்சொல்லு
மெத்தநடையாகாது பிணியாளர்க்கு
விதனமுறும்பண்டிதர்மேல் பழிசொல்லவேண்டாம்
நித்தமுந்தான்காலைதனில் செபத்தில்நின்று
நிதானித்துதொழில்களெல்லா முடிப்பீர்தாமே. 6

ஆமென்றவிலாமிச்சன்வேர் பலமதொன்று
அரியதிருவெட்டிவேர் பலமதொன்று
நாமென்றவில்வையுடவேர் பலமதொன்று
நன்மையுள்ளசதாப்பூவும் பலமதொன்று
தேனென்றகோஷ்டமொடு அருகன்வேறும்
சிறந்ததொருபூலாவின் கிழங்குசீந்தல்
காவெனன்றசடாமாஞ்சி கற்கடம்நெல்லி
கவித்தவற்றசீரகமும் வகைக்கோர்காலே. 7

வகைக்குவகைப்பார்த்தெடுத்து யிடித்தபின்னர்
வளமானசந்தனத்தூள் பலமும்ரெண்டு
துகையாகமறுதேக்கு பலமுங்கால்தான்
துணையாகவொன்றாகக் கூட்டியேதான்
பகையாகயெள்ளெண்ணெய் வறைப்படியிற்றானும்
பரிவுடனேசேர்த்துமிக யெரித்துவாகா
தகையாமலிறக்கிவைத்து வடித்தபின்பு
தனிமையுள்ளசீனியது விராகன்போடே. 8

போட்டபின்புதலைமுழுக வரிசைகேளு
போன்றயெண்ணெய்த்தேய்த்து நன்றாய்மேலிற்
வாட்டமறசீயக்காய் வெந்நீரிட்டு [றேய்த்து
வயணமுடன்ஸ்நானமது வானபின்பு
தேட்டமதாய்வாட்டிறைச்சி துவரைசேர்த்து

தென்புடனேகறிசமைத்து அசனஞ்செய்ய
ஆட்டமிட்டநோயனைத்து மகன்றுதப்பா
வறிவானபண்டிதர்கள் வுண்மைதானே. 9

மண்டலம் அல்லது அரைமண்டலம் 10-நாள். அல்லது 5-நாள் எண்ணெய் குடிக்கச்சொல்லவும் பத்தியமாக நடக்கச் சொல்லவும்.

வேறு விருத்தம்.

உண்மையாயிருந்தால் ஒதுங்கிடும்நோயது
உண்மையாயிருந்தால் ஒருபோதுந்தப்பாது
உண்மையாயிருந்தால் வோதலாம்வேதமும்
உண்மையாயிருந்தால் ஒருவரால்கார்க்குமே. 10

கெருடன் கிழங்கெண்ணெய்-10

முற்றிற்று.

கடவுள் துணை.

நூற்றிஎட்டாவது,

பாம்பாட்டிசித்தர் சிரோன்மணி

பூபதிமாத்திரை-9.

செல்வமுள்ளசிரோண்மணியின் பூபதிதானப்பா
சீர்பெறவேசொல்லுகிறேன் விபரமாக
கல்வியுள்ளோர்படித்தறிந்து செய்வதற்கு
கருணையுடன்வியாதிகளை தீர்ப்பதாகும்
தொல்வினையையகற்றிவிட சுவாமிபாதந்
தோத்தரித்துவிளம்புகிறேன் நன்றாய்க்கேளு
வல்வினையையகற்றிநிற்க மருந்தின்பாகம்
வயணமுடனேயறிவீர் வழக்கந்தானே. 1

வழக்கமாய்விடுகாமல் சரக்கைப்பார்த்து
வதிசயம்போல்பார்த்தெடுத்து நிறுக்கவேணும்
பழக்கமாயனுதினமும் பண்பதாகும்
பலாபலத்தின்காரியத்தை யுணரவேணும்
முழக்கமிட்டுத்திரிந்தலைந்த லாபமுண்டு
மூடருடன்சேராம லறிவைத்தேற்றி

அழக்குழக்குயெனச்செப்புங் கதையைநீக்கு
ஆசைவைத்துப்புத்தியதி லன்பாய்நில்லே. 2

அன்பானலிங்கமது பலமும்ரெண்டு
ஆச்சரியங்கெந்தியது பலமுமொன்று
நண்பானகல்வத்தி லரைத்துமைபோல்
நலமாகயிஞ்சிச்சா றாற்றியேதான்
பண்பாகப்பின்புமிதை நன்றயாட்டி
பேர்பெறவேவழித்தெடுத்து கரண்டிதன்னில்
ஒண்பாகவிட்டடுப்பி லெரியவாங்கு
வுலவியதோர்நீர்களெல்லாம் வற்றற்றனே. 3

வற்றியபின்கல்வத்திற் போட்டுக்கொண்டு
வருணமுடன்சக்யனத்தூள் கியாழம்வார்த்து
கவரியேதான்முச்சாமம் நன்றயாட்டு
கனலெழும்பசிவப்பேறும் பவழம்போலாம்
தவறிவிடாதேபார்த்து வழித்தெடுத்து
தயங்காமல்குன்றியைப்போ லுருட்டிக்கொண்டு
நலமானபூபதியைக் குழலில்வைத்து
நன்மையுடன்வானந்தாய் பாதம்போற்றே. 4

போற்றியேதீபமொடு தூபங்காட்டி
பொலிவாகச்சிந்தித்து நிற்கவொன்று

யேற்றியேதொழுதபின்பு பிணியாளர்க்கு
யெடுத்ததனிலோருருண்டை கொடுப்பீராகில்
மாற்றிவிக்கும்சன்னிவிறுக் குளிர்சுரங்கள்
மடக்குகின்றமாரடைப்பு மூர்ச்சையாவும்
தூற்றியசொல்தவறாமல் வயிற்றுநோயும்
தூரமெனவகன்றுவிடுந் துரிதந்தானே. 5

அனுபானம்.

துரிதமுடன் திரிகடுகு தேனில்சேர்த்து
தூயகறக்கொடுத்திடவே சொன்னநோய்கள்
பரிவுடனேநீங்குமப்பா பண்பதாக
பண்டிதற்குஇதுகளை நீ பாருபாரு
விரிவானமருந்திலே சொல்லவில்லை
விகிர்தமுடன்செய்தவர்க்கு மேன்மையாகும்
தெரிவிதமாயுணர்ந்துகொண்டால் யுண்மையாகும்
தெளிந்தவர்க்குசுகதவித பாகந்தானே. 6

பூபதிமாத்திரை அரைக்கின்ற சந்தனக்கியாழம்.

பாதமுடன்சந்தனத்தூள் பலந்தான்மூன்று
பண்பானலவங்கப்பூ பலந்தானொன்று
யோகமுடன்செண்பகப்பூ பலமுக்கால்தான்
யேகவொருசரக்கதனை யிடித்துக்காய்ச்சு

ஆகவேதான்பிதுதனியே நீரதனலப்பா
அம்மம்மாஅதட்டிமெல்ல வரைத்துக்கூட்டி
சோகவிதமணுகாது சொற்றவறிடாது
நுணுக்கமிதுகைகண்ட பூபதியாமே. 7

தண்ணீர்சுமாராய் விட்டுக்காச்சவும்.

கண்டபடிசொல்லாமல் சாத்திரத்தைப்பார்த்து
கருதியதோர்விதப்படின மாகச்சொன்னேன்
விண்டதிந்தஅவிழ்தமது மெய்யதாகும்
விரட்டுமப்பாஅனந்தவிட நோய்கள்தன்னை
தொண்டுசெய்துகைவரிசைக் கற்றுக்கொண்டேன்
தோயாதப்பொருளுணர்ந்து படித்துக்கொண்டேன்
மண்டலத்தில்பெரியோரைப் பணிந்துகாத்து
மனமிறங்கயான்மிகவே தொழுதிட்டேனே. 8

(பத்தியம்.)

தொழுதபடிபத்தியத்தை நன்றாய்க்கேளு
துலங்கவேகோதுமையின் கஞ்சியாகும்
வழுவாமல்மிளகுநீர் சாதமாகும்
வயணமுடனுண்பதற்கு ஆவின்பாலாகும்
முழுகவேதான்சீக்காய் வெந்நீராகும்
முயற்சியுடன்மற்றுநா ளெல்லாமாகும்
நழுவாகச்சொல்லவில்லை கண்டுபார்த்து
நடத்துவீர்வியாதிகண்டு நாட்டுவீரே. 9

சிரோன்மணி பூபதிமாத்திரை-9

முற்றிற்று.

கடவுள் துணை.

நூற்று ஒன்பதாவது,

பதஞ்சலியார்

வச்சிரகண்டி மாத்திரை—8.

நிலைமைபெற்றவச்சிரகண்டி மாத்திரையிதென்று
நிறையானபெரியோர்கள் செய்தபாகம்
சலியாமல்கர்த்தாவின் பதத்தைப்போற்றி
களிக்கவேவிளம்புகிறேன் மதிவல்லோர்முன்
சிலையானதேகத்தைத் தேற்றுதற்கு
சீலமுள்ளயிதுவுமொரு மாத்திரைதான்வேணும்
அலையாமல்செய்துவைத்துக் கொண்டால்நன்மை
யாகுமென்றேசெப்புகிந்த நூலிற்றானே. 1

செப்புதற்குலகுவாக யிருக்குமப்பா
செய்துவந்தாலப்பவல்லோ தெரியும்பாகம்
ஒப்புதற்குலிங்கமது விராகனெட்டு
வோதரியபூரமது விராகனொன்று
மெப்பியவீரமது வரைக்கால்விராகனாகும்
வினவுடனேதவறாமல் முடிக்கப்பாரு
தப்பிதங்களில்லையப்பா ரசச்செந்தூரம்
தயவாகவிராடனிடை ரெண்டதாமே. 2

இடைகள்கண்டுதப்பாமல் கல்வத்திட்டு
இணையாகசம்பழத்தின் சாற்றால்சாமம்
தடைகளன்றியிஞ்சியதை சீவிநன்றாய்
தானிடித்தசாறதனு லரைத்தோர்சாமம்
விடையிதற்குபேச்சுமுண்டோ சொல்லுதற்கு
விழுதிகொடிகட்டிநின்று வாடலாம்பார்
படையானநோய்களது தீர்வதற்கு
பகர்வுடனேசொல்லுகின்ற பாகங்கேளே. 3

பாகமுடன்மூன்றுபிடை மேகக்குடைச்சலுக்கு
பரிவுடனேவைந்துநாள் விரைவாதத்திற்கு
வேகமுள்ளசுரத்துக்கு மூன்றுவேளை
வினையானபுண்புரைக்கிப் பத்துநாள்தான்
தாகமுள்ளநடுக்கலுக்கு ரெண்டுநாள்தான்
தடங்கல்செய்துமூர்ச்சையது வாய்வுக்கப்பா
நோகவேதான்வலிக்குகின்ற கணுவாதத்திற்கு
நேர்மையுடன்சர்க்கரையில் கொடுத்துப்பாரே. 4

கொடுத்துவிடுவெள்ளையறை யாப்புத்தீர
குணமாகக்கண்டமாலைத் தோஷத்திற்கும்
அடுத்ததொருசன்னிபதி மூன்றுக்குந்தான்
அப்பனேசீக்கிரத்தில் கொடுத்துப்பாரு
எடுத்தகனப்பிணிகளெல்லாம் நீங்கிப்போகும்

இனமறிந்துவனுபானந் தன்னிலீய்ந்தால்
சடுத்தமிட்டவெகுநோய்க ளகலுமப்பா
சாதித்துநின்றவர்க்கு கருவிதானே. 5

பத்தியம்.

நின்றபடிசிறுபயறு முருங்கப்பிஞ்சாம்
நிதானித்தவாட்டிறைச்சி வற்றலாகும்
நன்றினவாய்முளகுநீர் துவரையாகும்
நலமானகாடையொடு வரைக்கீரையாகும்
ஒன்றியேதான்பால்கஞ்சி யாகுமாகும்
வொருமித்தகோதுமையின் கஞ்சியாகும்
வொன்றித்தசர்க்கரையும் துவரையாகும்
விளங்கயவபாத்தறிந்து கொடுக்கலாமே. 6

இதற்கு ஸ்நானயெண்ணெய்.

அறிந்தபடிசொல்லுகிற விவரங்கேளு
அன்பானநல்லெண்ணெய் படிகாலப்பா
செறிந்ததொருநுணப்பட்டை துளசிப்பட்டை
செவ்வையுள்ளவெள்ளுள்ளி மிளகுமஞ்சள்
சொரிந்ததொரு கரியவேப்பிலையினீர்க்கு
சுகிர்தமெனவகைக்குவொரு பலமதாக
திறந்தயிந்தமூலிகையை பிடித்துமைபோல்
தீர்க்கமுடன்யெண்ணெய்தனி லிட்டுக்காய்ச்சே. 7

காய்ச்சியேதலைக்கிட்டு சீக்காய்த்தேய்த்து
 களிக்கவேவெந்நீரில் ஸ்நானஞ்செய்ய
யேச்சிநின்றதேகத்தைக் குணமதாக்கு
 மெம்பிரான்றுணையதனால் குறையொன்றில்லை
ஆச்சுதேவதிசயமாக மிந்தப்போக்கு
 ஆரறிவார்பெரியோர்க்குத் தெரிந்தவித்தை
பூச்சியமாய்வைத்ததனைக் கொடுத்தபேர்க்கு
 புண்ணியமும்நன்மையது பொருந்தும்பாரே. 8

வச்சிரகண்டி மாத்திரை-8

முற்றிற்று.

நூற்றுப்பத்தாவது,

சூதமகாமுனி

மேகநாதக்குளிகை—5.

பொருந்தியதோர்மேகநாதக் குளிகைதன்னை
 பெரியோர்கள்முன்னிலையில் சொல்லுகிறேன்
கருதியதோர்வெண்காரம் சாதிலிங்கம்
 கனமானசிவதைவேர் வசம்புசுக்கு
நிருதியதுதசலவணம் வாய்விளங்கம்
 நேரானவோமமொடு பெருங்காயந்தான்
விருதியதோர்காட்டா மணக்கன்வேரும்
 வினவுடனேதானெடுப்பாய் பலமொன்றுமே. 1

பலமொன்றுபார்த்தெடுத்துக் கல்வத்திட்டு
 பண்புடனேதானரைத்து மைபோலாக்கி
பெலமானநேர்வாளம் சரக்கிடைநேர்தூக்கி
 பிரியமுடன்நேர்த்திதனில் சம்பழத்தின்சாற்றால்
கலனேகவிடாமலேதான் நன்றாயாட்டி
 கண்ணிலிடும்மயனமதாய்க் கருதிப்பாரு
நலமாகவழித்தெடுத்து குன்றியைப்போல்
 நயனமெனவுருட்டியொரு குழலில்வையே. 2

ஒரு குளிகை அல்லது இரண்டு குளிகை கொடுக்கவும்.

குழல்தனிலேவைத்துநம தாதியோடு
குணமானபராபரத்தைத் தியானஞ்செய்து
விழலானகுன்மமொடு குளிர்சுரங்கள்
விதித்தபொல்லாவயிற்றில் நிற்குந்திரைகள்வாதம்
உழலானபித்தநீர் சோகைபாண்டு
உதித்தவிதக்ஷயரோக வயிர்வலித்தல்
தழலானஅசீரணங்கள் சிலகனத்தநோயை
தப்பாமல்நீக்கிவிடுந் தணிந்துபாரே. 3

ஒரு குளிகை அல்லது மூன்று குளிகை நிதானத்துடன் பார்த்துக்கொடுக்கவும் பித்தநீர் கழன்றுவிழும்.

(பத்தியம்.)

தணிந்தபின்புமிளகுநீர் சாதமூட்டு
தயவாகவூடானின் கருவாடாகும்
செனித்ததொருவாழைக்கச்சல் கூட்டச்சொல்லு
சேதமின்றிநோய்களெல்லாம் பறந்துபோகும்
முனிவர்பெரியோர்களிதை முயர்ச்சியாக
மொழிந்தனர்கள்பரிகாச வார்த்தைபேசார்
கனிந்தபடிசெய்தவர்க்கு கைகண்டபாகம்
கருத்துடனேதெளிந்துகொண்டால் களிப்பர்தாமே.

ஆட்டிறைச்சி கூட்டினல் மெத்த நல்லது.

இதற்கு ஸ்நானம்.

களிப்பானநல்லெண்ணெய் படியரைக்கால்
  கணக்குடனேபாண்டத்தி லூற்றிக்கொண்டு
விளிப்பாகமிளகுகரிய சீரகங்கஸ்தூரிமஞ்சள்
  வினவுடனேவதிமதுரம் வகைவகைக்கி
துளிப்பாகப்பலமரைதான் பாலாலாட்டி
  துலங்கவேயொன்றாகக் கூட்டியேதான்
தெளிவாககாச்சியேதான் ஸ்நானஞ்செய்ய
  செய்தகர்மவினைகளெல்லாம் விட்டுப்போமே. 5

சீக்காய்தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவும்.
வியாதிகூறறிந்து குளிகையைக் கொடுக்கவும்.

மேகநாதக்குளிகை-5

முற்றிற்று.

சிவமயம்.

நூற்றிபதினோராவது,

வேதமுனிவர்

சூடாமணி மாத்திரை-8.

விட்டுப்போம்சகலரோ யானதெல்லாம்
விடாமழைபோல் தொடுத்தகனலானதெல்லாம்
மட்டுமிதமில்லாமல் சூடாமணியின்மாத்திரை
மகிழ்வாகப்புகலுகிறேன் கபடம்விட்டு
தொட்டுவிடவியாதியெல்லா மோடுதற்கு
சூட்டுகிறேன்படித்தோர்கள் மெச்சவேதான்
கட்டுவிதமுந்திரிகையி னுப்பைப்பூவும்
கருத்தறியதிப்பிலியும் பேரீச்சுதானே. 1

பேரீச்சுக்கோஷ்டமொடு முத்தக்காசு
பெருமையுள்ளவெட்டிவேர் பன்னீர்பூவும்
சாரிச்சுத்தாமரைப்பூ நன்னாரிவேர்
சரியானசந்தனத்தூள் வகைதானென்று
தாரிச்சிபலமொன்று யிடித்துநன்றாய்
தவறாமல்கல்வத்தில் போட்டபின்பு
நேரித்துலிங்கமொரு காசுமோடு
நிலையானபூரமொரு காசுபோடே. 2

போடப்பாவரிதாரம் காசுபோடு
புனிதமுறநாபியது வரைகாசுபோடு
ஆடப்பாதண்ணிவிட்டான் கிழங்கின்சாற்றால்
அகலாமல்ரெண்டுநா ளரைத்துக்கூட்டு
நீடப்பாகறிப்பான்சார் விட்டுநன்றாய்
நீங்காமல்மூன்றுநா ளரைத்துத்திரு
தேடப்பாவுளுந்திடைதான் வுண்டைசெய்து
தீர்க்கமுடன்நிழலுலர்த்தி பதனம்பண்ணே. 3

சுரக்குசுத்தியின் பாகம்.

வீரத்தைசம்பழச்சாத்திலொருநாளூரப்போடவும். ரசகற்பூரத்தை தேனினால் சுருக்கிட்டு எடுத்துக்கொள்ளவும். நாபியை வெள்ளாட்டின் கோமியத்தில் மூன்று நாளூரவைக்கவும். மேற்படி மிளகு எலுமிச்சஞ் சாறில் ஊரவைத்து யெடுத்து சேர்த்துக்கொள்ளவும். அரிதாரத்தை சுண்ணாம்புக் கல்லில் 15 தரம் நீத்தி நன்றாய்க் கழுவி சேர்த்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள்.

வேறுவிருத்தம்.

பதனமுடன்சுகிர்தமாக பண்புடன்சொல்லக்கேளு
விதனமுந்தீர[illegible]டி விளங்குமாத் திரையிலொன்று

நிதமுறக்கொடுத்துமேலாய் நேர்படப்பார்ப்பீராகில்
அதனமதானகர்ம விழுலதுவகலுந்தானே. 4

அகன்றிடுங்குளிர்சுரங்கள் அசாத்தியவிரணமூறல்
நகன்றிடும்சன்னிதோஷம் நாடாதுசன்னியாவும்
புகன்றிடுங்கண்சுழட்டல் பொல்லாதகிறுகிறுப்பு
இகன்றிடுங்குத்தல்பித்தம் யேங்கியேவலறிப்போமே.

அலறிய சன்னிவேர்வை யழுலது நீங்கிப்போகும்,
நலமுற வனுபானம்பார்த்து நாடியே கொடுப்பீரப்பா,
பலவித நோய்களெல்லாம் பறந்திடும் பறவைபோலே,
தலமதி லறிவுள்ளோர்க்குத் தான்றெரிந்த துரைத்த
தாமே. 6

இதற்கு பத்தியம்.

'அறிவினுற்பத்தியத்தைத்தானு மடவுடன்புகலவேணு
பிரியமாந்தெரிந்தவீதம்பேர்பெறச்சொல்லவேணும் (ம்
குறியவேஸ்நானஞ்செய்யக் குணமுடனுவலவேணும்
குறிகுணவிதத்தைக்கண்டு செப்புவீர்தினமுந்தானே.

சூடாமணி மாத்திரை-8
முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நூற்றிபனிரெண்டாவது,

கல்லுளிசித்தர்

ஜெய ரசகற்பூர மாத்திரை - 10.

பரிவானரசகற்பூரம் பலமதொன்று
பண்பாகதேனதிலே சுத்திசெய்து
குறியாகசம்பழத்தின் சாற்றினாலே
குணமாகசுருக்கிடுவாய் ரெண்டுசாமம்
தெரிவானமுலைப்பாலால் ரெண்டுசாமம்
தீர்க்கமுடன்செய்தபின்பு கல்வத்திட்டு
விரிவானவெண்மிளகு பலமதொன்று
விளங்கவேசேர்த்தரைக்க வழிசொல்வேனே. 1

சொல்லுகின்றசம்பழத்தின் சாற்றால்சாமம்
சுருக்காகவரைத்துபனிப் பயருபோமே
வெல்லுதற்குமணியணியா யுருட்டிக்கொண்டு
விவேகமுடன்நிழலில்வைத்து வுலரச்செய்து
நல்லுறவாய்குழல்தனிலே வடைத்துதேவ
நாதாந்தக்கடவுள் தனை தெண்டம்பண்ணி
பல்லுதிரவாய்வுபக்கச் சூலைகுத்தல்
பகர்வானகுளிர் தனக்குக் கொடுப்பீர்தானே. 2

கொடுத்துவிடுஅந்திசந்தி ரெண்டுவேளை
குறிப்புடனே திரிகடுகு தேனிற்றனும்
அடுத்துவரும்அப்பமுதல் குடைச்சலெல்லாம்
அணுகாமல்நீங்கிவிடு மறிந்துபாரு
அடுத்ததொழில்தப்பாது வெருசமர்த்து
யோர்க்கனவேசெய்துகுண மாக்குமப்பா
விடுத்தசொல்லைமனதில்வைத்து தெளிந்தபேர்க்கு
வினவியநற்பாகமது விளங்குந்தானே. 3

விடத்தாரிவேர் மாத்திரை யரைக்கும்போது
பலம் முக்காலிட்டு வரைத்துக்கொள்ளவும்.

மேற்படியாரியற்றிய கட்டுவாதிமெழுகு.

நற்பாகத்துடன்கேளு மிகவுமேதான்
நலமானசாதிக்காய் சாதிப்பத்திரி
பொற்பாதஅதிவிடையம் கூளாத்திக்காய்
பேர்பெரியவெட்பாலை சிறுநாகப்பூ
உதப்பாகலவங்கமொடு காட்டாத்திப்பூ
உயர்ந்தரொருசீனத்தின் பட்டைஓமம்
சிறப்பாகசிங்கிக்கு ரோசாணிசுக்கு
சிதாரதபுஸியன்றோல் காசுகட்டிதானே. 4

காசுகட்டிமையூரின் கஞ்சாவித்துக்
　கருதறியபெருங்காயம் அசமதாகம்
ஆசுகளில்லாத்திரு பேர்சொல்லாது
　அடவுடனேவகைக்கிங்கை பலமதாக
பேசுகிறேன் றீர்க்கமுடன் கேளுகேளு
　பிரபலிக்கவுரலிலிட்டு யிடித்துநன்றாய்
பூசுகின்றகல்வத்தில் போட்டுக்கொண்டு
　புகழுடனேசம்பழச்சார் தன்னாலாட்டே. 5

ஆட்டியபின்விளாவிலுட பிசினிதானும்
　அன்பாகப்பலமரைதா னதனிற்போடு
நீட்டியதோர்வபினிபது கால்பலந்தான்போடு
　நேர்ந்தரைப்பாய்வொருசாமம் நிலைமையாக
பூட்டிவிடுலிங்கமது பலமரைதானப்பா
　புனிதமுள்ளகெந்தகந்தான் பலமரையதாகும்
நாட்டமுடன்றேனதனுல் ரெண்டுசாமம்
　நலம்பெறவேயரைத்தபின்போர் பாகங்கேளே. 6

குங்குமப்பூ பலம்-¼ கோரோசனம் பலம்-¼ சேர்க்கவும்.

கேளப்பாமறுபடியும் திருத்தியேதான்
　கிருபைபெறவொருசாம மரைத்துக்கட்டு
காணப்பாயிப்படியே மூன்றுநாள்தான்

நலம்பெறவேவழித்தெடுத்து பரணிதன்னில்
கேளப்பாவாராம லடைத்துக்கொண்டு
குணம்பெறவேமனதில்வைத்து வினவதாக
கேளப்பாவானதொரு கிறுணிமந்தம்
தடங்கல்செய்யும் நோய்தனக்குகொடுப்பீர்தானே.

சுண்டக்காய்பிரமாணம் உண்டைசெய்து
கொடுக்கவும்.

தனத்தில்லாவியாதியது தீர்வதற்கு
தயவாகதேனிலிடு பயமோயில்லை
வினவாகசர்க்கரையில் கற்கண்டிலாதல்
விசிதமுடன்அதிவிடைய மொழுந்தன்னில்
சினமாறவருசியுட மொழுமாதல்
சேர்த்துவிடுநல்லோமம் கருக்கல்செய்து
பண்பாகநற்சீறகம் கால்பலந்தானப்பா
பகர்வுடனேமொழுமிட்டு கற்கண்டுசேரே. 8

இதற்கு ஸ்நானம்.

கற்கண்டுசர்க்கரையைப் பாலூற்றிக்கொள்வாய்
கருத்துடனேகொட்டியதைக் கூட்டியுண்ணு
கற்கண்டுகோதுமையைக் கஞ்சிசெய்து
நலம்பெறவேசீனியிட்டுக் கூட்டியுண்ணு

சற்குணமாய்வாழைகச்சல் பூச்செறுவும்
சமைத்துமிகக்கொடுத்தாலு மெத்தநன்று
பொற்கணமாய்வாட்டிரைச்சிக் காடையாகும்
பொருதியிதைப்பத்தியமாய் பார்த்துசெய்வீர். 9

பார்த்தபடிசொன்னதல்லால் மறைப்பொன்றில்லை
பதருமல்ஓமமிட்டு வென்னீர்தன்னில்
கார்த்துமிகத்தலைமுழுகி வசனஞ்செய்ய
கடவுளர்தன்கிருபையினால் சவுக்கியமாக
சேர்த்தயிந்தபாகமது மெத்தநன்மை
செழிப்பாகக்குணங்கொடுக்கும் தேகத்திற்கு
ஏர்த்தபடிபண்டிதர்க்கு சொனுவதாச்சு
யெடுத்ததொழில்பொய்யாது யிணக்கந்தானே. 10

ஜெய ரசகற்பூர மாத்திரை-10

முற்றிற்று.

உ

சிவமயம்.

நூற்றிபதின்மூன்றுவது,

கஞ்சமலைசித்தர்

இரசபதங்கம்-15.

குன்றுமல்ரசபதங்கம் கூறக்கேளு
  குறிப்பாகசொல்லுகிறேன் வினியதாக
நன்றாகசெங்கலுப்பு பிடித்துநன்றாய்
  நயம்பெறவேசட்டிக்குள் பாதியிட்டு
குன்றுமல்குகைதனையே நடுவில்வைத்து
  குணம்பெறவேரசமதனை வூற்றியேதான்
பன்றாகமேலுமிந்த வுப்பிட்டேதான்
  பதறுமல்மேல்சட்டி கவிழ்த்துமூடே. 1

குகைமுறை கெந்தி பற்பாடகம் சடாமாஞ்சி வெள்ளை வகைக்கி இருகழஞ்சி வெத்திலைச் சார்விட் டரைத்து அகல்போலே யிடித்து வைத்துக்கொள்ள வும். 2-பலம் ரசம்வூற்றி கையினாலமிழ்த்தி சட்டிக்கி வுப்புமறைய சீலமண் செய்யவும்.

மூடியேவகண்டதொரு வடுப்பின்மேலே
  முயற்சிபெறயேற்றிமெள்ளத் தீயைமூட்டு

வாடியேபோகாமல் இரவுபகலெரித்துநன்றாய்
வயணமுடனுறவைத்து லெடுத்துப்பார்க்க
தேடியதோர்மேல்சட்டி மேலேநிற்கும்
திறமானபதங்கமது படிகம்போலே
நாடியேவாலையினால் வழித்தெடுத்து
நன்மையுடன்பரணிதனி லடைத்துவையே. 2

எரிப்புசாமம் எட்டு.

அடைத்தயிந்தபதங்கமந்த பனைவெல்லத்தில்
அடைவுடனேவந்தரீசு யிடையதாக
நடையிடைதன் கைகாலின்குடைச்சல்மற்ற
நலமில்லாபாங்கிமுதல் சூலைவோடும்
தடையில்லாவாழைப் பழத்திலூட்டு
தவறாமல்கஞ்சி மிகவேயூட்டு
இடைமீறிவாய்பிடித்தால் கருவேலம்பட்டை
இணையாகவியாழமிட்டுகொப்பளிக்க வுகந்துசெய்யே.

ஏழுநாளல்லது யேழுவேளை பனைவெல்லத்தி லிடவும்.

அயச்செந்தூரம்.

உகந்தவொருஅயச்செந்தூரம் செப்பக்கேளு
வுண்மையுள்ளலாடமதை ராவியேதான்

இகழ்ந்துவிடாமற்படிக்கு பலந்தானைந்து
இன்பமுடன்சம்பழத்தின் சாற்றிலிட்டு
மிகபுகழ்வாய்மூன்றுநா ளானபின்பு
மேன்மையுடன்தண்ணீர்விட் டரைத்தெடுத்து
சுகம்பெறவேயெண்ணுமல் பட்டைச்சாற்றால்
சிதராமல்வைத்துபுடம் வரைத்துப்போடே. 4

புடமிடுவாய்நெல்லிக்காய் சாற்றிலப்பா
புகழ்ச்சியுடனுறுபுடந் தீர்த்துப்போடு
அடவுடனேபாத்திதனை யெடுத்துக்கொண்டு
அதிவிதமாய்வெற்றிலையின் சாற்றாலப்பா
திடமுடனேபத்துபுடந் தீர்த்தாயானால்
திவ்வியமதாய்க்கண்டுகொள்ளாற் சிவப்புமாகும்
கடவுள்பதந்தொழுதேற்றிக் குழலில்வைத்து
கனத்தபித்தவாய்வுதனைக் கொடுத்துப்பூட்டே. 5

எடுத்துபலசோகைவிக்கல் வாந்திப்பாண்டு
யெதிர்த்தகுணயெலும்புருகி யிளைத்தமேனி
அடுத்ததொருகழிச்சலன்ன திரேகம்யாவும்
அகண்டுவிடசெந்தூரந் தட்டிகேட்கும்
தொடுத்துவிடுவனுபான மறிந்துமேலாம்
துடர்ந்துசெய்தாலின்னம்வெகு நோய்கள்தன்னை

சடுத்தமிட்டுதீர்க்குமப்பா புத்திமாண்பர்
சமர்த்துடனேயித்தொழிலைச் செய்வதாரே. 6

தொழில்பார்த்துசுளுவாகச் செய்துகொண்டால்
தோற்றுதுபலவிதமாய் புத்திதானும்
விழியதனால்நோக்கிமெள்ள அறிவைத்தூண்டி
வியல்புடனேகைபாக மேற்றிநின்றால்
ஒழியாதுஅவிழ்தமதின் மார்க்கமப்பா
வோதுவாய்பலவிதமாய் பேசுவார்கள்
வழியிதுதான்லேசான முறையில்தேர்ந்து
விதித்தபடிபண்டிதத்தைப் பார்ப்பீர்தாமே. 7

இதற்கு பத்தியம்.

பார்த்திதனைநோயாள ருண்ணும்போது
பண்புடனேநெய்பாலும் வெண்ணையாகும்
நேர்ந்தபடிவாட்டிறைச்சி கிச்சடியுமாகும்
தித்தித்ததீவராட்சிப் பழமுமாகும்
யோர்த்தபடிகோதுமையின் ரொட்டியாகும்
இன்பமுடன்கொண்டவர்க்கு யேர்க்குமேர்க்கும்
சீர்த்துவமாதெரிந்துணர்ந்து பார்த்துநின்றால்
தெய்வச்செயல்சித்தபடி யாகுந்தானே. 8

ஸ்நானஞ்செய்ய எண்ணெய்.

வேறுவிருத்தம்.

ஆகியசொலேதோன்று அடவுடன்புகலக்கேளு
பாகியசந்தனாதி யெண்பெருந்தயிலந்தன்னை
பூகியசந்தனாதிபண் பெண்பெருந்தயிலந்தன்னை
யோகியாம்பெரியோர்சொன்ன வுச்சிதமொழிபிதாமே.

மொழிந்தசொல்தவறிடாமல் முனிந்துசேர்பாகங்கண்டு
அழிந்திடச்செய்யும்நோயை அகற்றியேநீக்கும்பாரு (ம்
செழுந்திடத்தேகந்தன்னைத் திறப்படப்போற்றிநிற்கு
முழுதும்சோர்வயணமாக வுயிர்படவுணர்வீர்தாமே. 10

படர்ந்ததுமனேகமென்னும் பார்ப்பதுவொன்றுதானே
தடமிதுவேறென்றெண்ணித் தவறிடாதிருத்தல்நன்று
அடவுடனேசெந்தூரத்தா லாடுமனந்தமார்க்கம்
சடமதுத்தெளிவுற்றோங்கி சகலமும்நன்மையாமே. 11

நன்மையாம் முனிவர்சொன்ன நடத்தையை வறிந்தமேலோர், இன்பமாய்க் கண்டுதேர்ந்து பிறவிதப் பாகமெய்ப, அன்புடன் செய்வோர்க்கெல்லா மதி விதக் குணமதாகும், வின்பமாய் மொழிந்த நியாய முறையிது நிசமதாமே. 12

முறையது சுளுவிதென்று மூத்தவ ரெனக்கு சொன்னார், விரைவுட னிந்நூல்யானும் விருப்பமா யெழுதினேன்யான், மறையவர் வகுத்த சொல்போல் மகிழநீவ கோர்க்கவேணும், குறையிது வணுகிடாது குணந்தரும் கனகமாமே. 13

அயச்செந்தூரத்தி லனேகவித நோய்தீர்ந்து குணமதாகும்.

இரசபதங்கம் - 13

முற்றிற்று.

கடவுள் துணை.

நூற்றிபதினாலாவது,

புலிப்பாணிசித்தர்

கற்ப முத்தொளிபற்பம்–9.

அழியாதபொருள் தனையே பணிந்துபண்பாய்
அதிவிதமாய்ப்புகலுகிறேன் கற்பத்தின்பற்பம்
தொழிலாகச்செய்தவர்க்குக் குறையொன்றில்லை
தோய்ந்தவர்க்குப்பதிகமுறும் பாகமப்பா
விழியானவிழியதுபோல் விறக்கமாக
விவேகமுடனுணர்ந்துமிகப் பார்க்கநன்று
பழியானகாரியத்தை வகலத்தள்ளி
பக்திவிசுவாசமுட னுகந்துசெய்யே. 1

செய்யக்கேள்கல்மதந்தான் பலந்தானொன்று
சிக்கிக்கல்னார்தான் பலமுமொன்று
துய்யதிருசலாசத்துப் பலந்தானொன்று
துரிதமுடனல்லசல மதனிற்போட்டு
அய்யமறகாய்ச்சியபின் கழுவியேதான்
அன்புடனேகல்வத்தில் போட்டபின்பு
உய்யவேகொங்கிலவன் பட்டைசாற்றால்
உயர்பெறவேயரைத்துநன்றாய் யெடுப்பீர்தானே. 2

எடுத்துமிகவில்லைசெய்து ரவியிற்போட்டு
ஏர்க்கனவேயெடுத்திதனை வகலில்வைத்து
கொடுத்தபடிசந்துவாய் சீலைசெய்து
துலங்கவேபதினைந்து யெருவிற்போடு
அடுத்ததொருமுச்சரக்கு மொன்றதாகி
அதிசயமாய்நீறியது வெண்மையாகும்
சடுத்தமில்லாமுத்ததுவும் பலமதொன்று
சுகிர்தமுள்ளபவழமது பலங்கால்தானே. 3

பலமதென்றவிதப்படினம் கல்வத்திட்டு
பண்புடனேபூலாவின் பழத்தின்சாற்றால்
கனலகலநெட்டங்க் மட்டுவாட்டி
கருத்துடனேவில்லைதட்டி ரவியிற்போட்டு
பலன்பெறவேவோட்டில்வைத்து முன்போலப்பா
பதராமல்புடந்தனிலே போடுபோடு
பெலப்படுத்தியிப்படியே வாறுதரம்போடு
பெருமையுள்ளபற்பமது தவளமாமே. 4

தவளமென்றபற்பமதை வெண்ணெய்தன்னில்
பரிவுடனேகாசிடைதான் கொடுப்பீராகில்
பவளமென்றநற்குணத்தால் வெள்ளைதன்னை
பத்துநாள்தன்னிலேதான் பகர்வாய்நீக்கும்

குவளையுள்ள நீரடைப்பை யகற்றிப்போடும்
குருவருளால்பேணிதன்னில் குளிர்ச்சியேறும்
சிவபறவகிருபையது நாடிநின்று
செய்தவர்க்குவெகுநன்மை யாகுந்தானே. 5

நன்மையுள்ளபேர்தனக்கு ஆகுமாகும்
நாடாதுகர்மவினை யெப்போதுந்தான்
புன்மைகுணம்நீக்கிவிட்டால் செவ்வையாகி
பூதலத்தில்பெருகிநிதம் வாழலாம்பார்
தின்மையொன்றுநினையாதே விகடமாக
திருவிரக்கப்பதமதனை மறந்திடாதே
உன்மனைத்தாய்காக்குகின்ற மொளியில்நின்று
வுற்றமதில்புகழ்ந்திருக்க வுறுதியாமே. 6

உறுதியுள்ளக்ஷயத்திற்கும் புண்புரைக்கு
மூலர்ந்தவுடலானபலநீர்க்கட்டுக்கும்
பொருதியேதான்நெய்யிலிடு தேனிலூட்டு
பொங்கமுடனீந்திடவே போகுங்காசம்
கருதியேபத்தியங்கள் பார்த்துக்கொள்ளு
களிக்கவேமனோரஞ்சித லேகியத்திற்றானும்
சுருதியேதான்கொடுப்பதன்றிப் பன்னீர்ப்பூவின்
சுகமானலேகியத்திற் கொடுப்பீர்தானே. 7

லேகியங்கள்ரட்சயானங்க ளிதனிற்சொல்லும்
நேர்மையறிந்தேகொடுக்க வியாதியெல்லாம்
ஆகியபேர்சிறந்தபடி நிச்சமதாகு
மம்மம்மாவாயிசொல்லா விரித்துசொன்னேன்
யூகியாய்த்தெரிந்தவர்க்கு வுண்மையாகும்
வுசிதமதையெவராலும் வுரைக்கப்போமோ
யோகிதபமுனிவருரைத் துணர்ந்தோருற்ற
வுயர்ந்தமொழிதவறாம லுரைத்ததென்றே. 8

உரைத்தபடியல்லாது வேறுமுண்டோ
உண்மையென்றுநினைத்தோர்க்கு உண்மையாக
மறைத்திதனில்யான்புகல யில்லையப்பா
மாபெரியோரறிவுகர்ந் துணர்ந்துகொள்வர்
குறைத்தமொழிபேசாம லிந்தநூலில்
குறிப்புடனேவொழியாம லவிழ்தந்தன்னை
அறைந்தவிதங்கண்டுணர்ந்து தெரிந்தபேர்க்கு
அதிசயிக்கஞானவழிக் கூட்டுந்தானே. 9

கற்ப முத்தொளிபற்பம்-9

முற்றிற்று.

சிவமயம்.

நூற்றிபதினைந்தாவது,

வேதாந்தசித்தர் நாகபற்பம் - 9.

வேறு - விருத்தம்.

கனமானநாகந்தன்னைக் களிக்கவேபற்பமாக
இனமாகப்புகலக்கேளு யேற்பனபலமுமைந்து
வினவாகயிலுப்பைநெய்யி லிதையுமேயுருக்கிச்சாய்த்து
தனமிகமகிழ்வதாகச் செய்முறையிருபதாமே. 1

இருபது திரந்தான் தீர்த்து வியல்புடன் சம்பழத்தின்சாற்றில், பெருகவே வுருக்கிச்சாய்ப்பாய் பெலப்படக் கசடுநீங்க, குருவது ஆவதற்குக் குணமுடன் கரண்டிதன்னில், வுருகவே வுருக்கிக் கீழ்க்கா நெல்லிவேரதனால் தாக்கே. 2

தாக்கியேகிண்டியாட்டித் தயவுடன்புகலக்கேளு
நோக்கியேசுத்திசெய்வீர் நூன்முறைரசமதன்னை
ஆக்கிடப்பெலத்தில்ரெண்டு பலமதுஎடுத்துக்கொண்டு
தேக்கிடநாகத்தில்தாக்கித்தெளிவுடனரைப்பீர்தானே.

கேளப்பாபனமட்டைச்சாற்றால் கிடியுரவரைத்து நன்றாய், யூளப்பாவில்லைதட்டி மேன்மையாய்க் காயவைத்து, நாளப்பா யோட்டில்வைத்து நலம்பெறச்

சீலைசெய்து, வாளப்பா நிதானமான வளர்கோழிப்
புடத்திற்போடே. 4

புடத்தினி லறிந்துபார்த்துப் பிசகென்றெரிந்தாற்
பின்னுந் திடத்துட னரைத்து முன்போற் சிறக்கவே
போடுபோடு, நடந்திடு வைந்திரமுமாக நலம்பெறப்
புடமுந்தீர்ந்தால், மடத்தினி லுள்ள சித்தர் மகிழ்வ
ரென் றெடுப்பீர் தாமே. 5

புடம் 5-திரம் அல்லது 7-திரம் போடவும்.

எடுத்துநற் பாணிதன்னி லெழிற்பெற வடைத்
துக்கொண்டு, அடுத்ததோர் பிணிகள்பார்த்து அடை
வுடன் கொடுக்கநன்று, தொடுத்திடும் க்ஷயங்கள் காசந்
தோன்றிடு மிருமல்வாந்தி, கொடுத்திடுங் கிராணி
தோஷ சுரமுத லணுகாதென்றே. 6

காணுதுபித்தவாய்வு கனத்திடுமதிசாரங்கள்
தோணுதுபவுத்திரங்கள் துயரறத்தீர்க்குமப்பா
வீணனென்றுநீங்கள் விரவுடன்பேசவேண்டாம்
கோணுதுவறிந்தபேர்க்கு குலமதுவாகுமென்றே. 7

ஆகியவியாதிதன்னை யடவுடனின்னங்கேளு
யோகியாய்நின்றபேர்க்கு யுற்றசொல்தவறிடாது

ஆயகடையைகண்டறிவினில் புக்கியேதான் [றே.
போகியென்றுணர்ந்திடாமல் போதிப்பார்சுபமேதான்

போதித்த நாகபற்பம் போடலாம் வியாதிகண்டு,
நீதிசொற் றவறிடாது நிலைபெறு மொழி தப்பாது,
வீதியா மனைதைத்தேற்ற விளங்குமாஞ் சோதிதானும்,
வாதியென்றேற்றுவீண்சொல் வாய்மையெந்திரம்போ
லாமே. 9

நாகபற்பம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நூற்றிபதிறுைவது,

ஞியான நாதாந்த சித்தர்

தாளகபற்பம்-6.

அதிசயித்ததாளகத்தின் பற்பந்தன்னை
அறிந்தவர்க்குச்சுருவாக்ச் சொல்லக்கேளு
துதிசெயிக்கத்தாளகந்தான் பலமொன்றப்பா
சுண்ணாம்புகல்லில்வைத்து இருபத்தைந்து
மதிப்புடனேதீத்தலதி யெடுத்துப்பாரு
மசடானவினைவிதங்கள் கண்டுபோகும்
சதியெனவேரசம்பட்டை வாகைமூலம்
சேர்ந்ததனை இவைமூன்றும் சாம்பலாக்கே. 1

மூன்றுமொருதுடையாக வெடுத்துக்கொண்டு
முனைபெறவேபுதுப்பாண்டந் தன்னிலேதான்
ஈன்றமொழிதவறாமல் சாம்பலிட்டு
இணையுடனேதாளகத்தை நடுவில்வைத்து
ஆன்றவுடன்மேலுமந்த சாம்பல்தன்னை
அடவுடனேயொட்டிசைந்து வழுக்கியேதான்
கான்றலுறவாய்தனக்குச் சீலமண்செய்து
கனக்குடனேயிருசாம மெரிப்பீர்தானே. 2

இருசாமங்கமலம்போல் தீபம்போட்டு
 யெடுத்தாற்றிப்பதருமல் பார்ப்பீராகில்
கருகாமல்தன்குலம்போல் நீறிநிற்கும்
 களிப்புடனேபற்பமதைப் பதனமாக
பெருகவேசிமிழ்தனிலே வைத்துக்கொண்டு
 பெரியக்ஷயமந்தாரக் காசத்திற்கும்
சுருக்கனுள்ளப்புமுத லிருமலுக்கும்
 சாதித்துதீர்க்கவிது கொடுப்பீர்தானே. 3

கொடுப்பதற்குஅனுபானம் புகலக்கேளு
 புகழ்பெறவேதிரிகடுகுத் தேனிலாதல்
அடுத்தசொல்லாம்முயல்நெய்யில் ரசாயனத்தில்
 ஆராய்ந்துபணவெடைதா னீய்வாராகில்
கடுத்தயெல்லாநோய்நீங்கும் பத்தியமாயுண்ண
 • கர்த்தாவின்துணையதென்றே கருதுவீர்கள்
தொடுத்ததொருபொய்யெனவே நினைக்கவேண்டாம்
 துயரகலச்செய்தவர்க்குத் துலங்குந்தானே. 4

(பத்தியம்.)

துலக்கமுள்ளவாட்டிறைச்சிக் காடையாகும்
 துணையானமுசல்கறியும் கிழங்காளுகும்
வலக்கல்லாபால்நெய்யும் கோதுமையாகும்
 கருணையுள்ளவாட்டுக்கால் சல்லியாகும்

பெலக்கவே தான்மிளகுநீர் சாதமுண்டு
பிரியமுடன்பார்த்துமெள்ள வுண்ணவே தான்
சிலக்கனத்தகடிவிஷங்க ளறிப்புமேகம்
சீக்கிரத்தில்நீங்கிவிடுந் திறமைதானே. 5

ஸ்நானஞ்செய்ய சந்தனாதித்தயிலம்.

நீங்கிவிடும்திற்சொன்ன பற்பத்தாலே
நிதானமுடன்பார்த்துணர்ந்து செய்வீராகில்
தாங்கியதோரவிழ்தத்தா லெல்லாநோயும்
தப்பாமல்தீருமப்பா சார்ந்துபாரு
யேங்கியேதிரியாமல் மனதைத்தேற்றி
யெப்போதும்தெய்வதுணை தன்னைத்தேடு
தூங்கியேயிருக்காமல் தியானம்செய்யில்
துலங்குமாம்வேதாந்த சுருதிதானே. 6

தாளக பற்பம்-6

முற்றிற்று.

சிவமயம்.

நூற்றிபதினேழாவது,

திருமூலநாயனார்

நாதாந்தக் குறிப்பு-11.

அடியாகியண்டாண்டத் தப்பாலாகி
அகாரமெனுமெழுத்ததுவே பாதமாகி
முடியாகிநடுவாகி மூலந்தன்னில்
முப்பொருளுந்தானாகி முதலுமாகிப்
படியாகிமுப்பாழற்று படிக்குமப்பாற்
படிகடந்தபரஞ்சோதிப் பதியுமாகி
அடியாகிமூலமதே அகாரமாகி
அவனருளால்நின்றநிலை யணுவதாமே. 1

அணுவாகியவனவளா யல்லாமாகி
அடிநடுவுமுடிவாகி யகண்டமாகி
பொதுவாகிப்பல்லுயிர்க ளனைத்துக்கெல்லாம்
புகலிடம்யெப்பொருட்கு மூலமாகி
மணுவாகிவண்டாகிச் சுவையுமாகி
மலராகிமணமாகி மதிக்கவொண்ணு
அவாருளகாரமதே மூலமாகி
அண்டமெல்லாந்தாங்கிநின்ற பம்பாமூலமே. 2

மூலமெனுமாதார வட்டந்தானே
முச்சுடருமுக்கோண மூன்றுநாடி
சீலமெனுஞ்சிவலிங்க பாதந்தீர்த்தந்
திருவடியுந்திருமேனி நடனமாகும்
கோலமுடனண்டமெல்லாந் தாங்கிக்கொண்டு
கொழுந்துவிட்டகம்பமதாய் மேலேநோக்கி
ஆலமுண்டரண்டமெல்லாந் தானாய்நின்ற
அகாரமுதல்வல்லெழுத்தை அறிந்துபாரே. 3

அறிந்ததுவுந்தற்பரமே யகாரமாகும்
அறிவுடையஉகாரமே சிற்பரமதாகும்
பிறிந்தறியுமுலகமெல்லாஞ் சமையந்தானும்
பேதமெனக்கருவிவகை யெல்லாமாகும்
அறிந்ததுவும்அகாரமெனும் பாதந்தன்னை
அடிமுடியென்றனுதினமு மறிந்துநோக்கே. 4

நோக்கமுடன்மூலமெனும் பாதந்தன்னை
நுட்பொருளாஞ்சிற்பறத்தி னூடேநோக்குந்
தீர்க்கமுடனாதார வகையுந்தாண்டித்
திருநயனம்நாசிநெற்றி நடுவேபார்த்துப்
போக்கறிந்துயிந்நிலை நோக்கவல்லார்
புரிசடையோன்றன்னுடைய புதல்வராவர்

ஆக்கமுடனருட்சுடர்போற் குருவைத்தானே
அறுதினமும்நோக்கிநிற்பா ராசானுமே. 5
ஆசானுமீசானு மொன்றேயாகும்
மவனவளுமொன்றாகும் அதுதானாகும்
பேசாதமந்திரமு மிதுவேயாகும்
பேரொளியின்வடிவாகும் பேருமாகும்
நேசாருங்கலைகளெல்லாந் தானேயாகும்
நிலையானஓங்கார பீடமாகும்
யீசானையாசானய் காணும்பேர்க்கு
யின்பமுடன்கைலாச மெய்தலாமே. 6
எய்தரியபரசிவத்தை மூலந்தன்னி
லிருசுடருமுதித்தொடுங்கு மிடமேயென்று
மெய்தொழியுஞ்சுழிமுனையே கம்பமாகி
• மெய்ப்பொருளாஞ்சோதியென மேவிநிற்கும்
யிவ்வகையேமூலமெனும் பாதந்தன்னை
யிருநேரமற்றிடத்தே யிறைஞ்சிக்காணே. 7
காண்பதுதான்பேரொளியின் காட்சியாகும்
காணரியபொருளாகுங் காட்டும்போது
ஆண்பெண்ணாய்அலியாகி அடியுமாகி
அப்பாலைக்கப்பாலா யமர்ந்தசோதி
வீண்பயிலும்வேதமெல்லாந் தேடிக்காணு

வெறும்பாழதாகியே மேவிநின்றார்
சேண்பயிலுஞ்செகசோதி மூலந்தன்னை
தேடரியபாதமென்றே தெளிந்துநோக்கே. 8

தெளிவரியபாதமது அகாரமாகி
சிற்பரமுந்தற்பரமுந் தானேயாகி
அளிவரியசோதியது தானேயாகி
அடிநடுவுமுடியாகி யமர்ந்துநின்று
மொருவரியமுதலாகி மூலமாகி
முச்சுடருந்தானாகி முடித்தசோதி
சுழியினிலேமுனையாகிக் கோபமாகிச்
சொல்லரியவெழுத்தென்றே தொகுத்துபாரீர். 9

தொகுப்பதுதான்மந்திரங்கள் கருவிநூல்கள்
சொல்லரியதத்துவங்கள் தன்னையெல்லாம்
வருத்துடனேயித்தையெல்லாங் கண்டுநீங்கி
வாகானஉடலுயிரை வரையாற்கண்டுப்
பகுப்புடனேசேராமற் பாதந்தன்னைப்
பரகதிக்குவழியெனவே பற்றிக்கொண்டு
விகர்ப்பமில்லாமூலமதில் நின்றசோதி
மேலானபாதமென்றே மேவிநில்லே. 10

மேவியதோர்சர்க்குருவின் பாதந்தன்னை
மெஞ்ஞானமென்றதனை மேவிக்கொண்டு

ஆவியுடல்காயமெல்லா மறிந்துபார்த்து
அத்தனார்வடிவன்றே அறிந்துகொண்டு
பாவினையனானதெல்லாம் விட்டுநீங்கிப்
பகலிரவுமற்றிடத்தே கருத்தைவைத்தாற்
சிவனையுஞ்சிவந்தனையு மொன்றாய்த்தானே
திருமூலர்பாதமென்றே இடமாய்க்காணே. 11

நாதாந்தக் குறிப்பு-11

முற்றிற்று.

உ

சிவமயம்.

நூற்றிபதினெட்டாவது,

புலிப்பாணிமுனிவர்

சிமிள் வித்தை - 25.

காப்பென்னசிமிள்வித்தை சொல்லக்கேளு
கருவாவுமணிக்கழுகின் கருவியாலே
தாப்பென்ன ஆண்கழுகு வெள்ளிநாளில்
தான்வதைத்துஉயிர்போன விடத்திலப்பா
ஆப்பென்ன ஆதித்த யதிபந்தன்னில்
அடைவாகமுப்பெலியும் பொங்கலிட்டு
சாப்பென்னவஸ்துவுடன் சுத்துவந்து
சார்வாகப்பூசைசெய்து சொல்லக்கேளே. 1

கேளுநீமுதுகெலும்பை அடுக்கடுக்காய்
கீறியேதானெடுத்து சுத்திசெய்து
ஆளேநீமுடியெட்டு சிமிள்தானெட்டு
அப்பனேபாக்குபோற் செய்துதிரு
நாளேநீ அதின்ஸ்த்தி நரம்பேபோக்க
நலமாகக்கயர்திரித்து சிமிளைக்கோறு
வாளேநீசிமிள்நடுவே துவாரம்போடு
மைந்தனேயிதின்பெருமை சொல்வேன்பாரே. 2

பாரேநீமுதற்சிமிள்தான் வசியமாகும்
பண்பாகமாரணந்தான் சிமிள்தானிரண்டு
வீறேநீமூன்றப்பா பேதஞ்சித்தி
விதமாகநான்கப்பா தன்மனமேசெய்யுஞ்
சீரேநீஐந்தப்பா விக்வேஷணந்தான்
சிறப்பானஆறப்பா உச்சாட்டிச்சீ
தீரேநீஏழப்பா மோகம்மோகம்
திறப்பானயெட்டப்பா அழைக்கும்பாரே. 3

பாரேநீவசியமப்பா (அங்) கெண்டூணு
பண்பானமோகமப்பா (மங்) கோநாட்டு
வீரேநீஅழைக்குமப்பா (வங்) காம்பாரு
விதமாகஸ்தம்பமப்பா (நங்) கையூணு
கூறேநீசாடனந்தான் (வங்) கேயப்பா
குணமானபேதமப்பா (யங்) கென்றோது
சூரேநீவேஷணந்தான் (நங்) கைச்சேரு
திறமானமாரணந்தான் (சிங்) கைக்காணே. 4

காணேநீஅந்தந்த அக்ஷரத்தை
கைமுறையாய்எழுதியல்லோ சிமிளிற்போடு
வீணேநீநினைத்தவன்போ கூடநாட்டு
விதமாகஅந்தந்த மூலிசேரு
காணேநீஐங்கோலக் கருவுஞ்சேரு

நாயகனேசிமிள்தோறும் போட்டுமூடு
ஊணேநீ அறுபத்து நாலுமூலி
உத்தமனேவெவ்வேறே வளையுமாமே. 5
ஆடேநீசிதேவி ராசருக்கு
அப்பனேநல்லூமத்தை பெண்ணுக்காகுங்
கூடேநீவெள்ளெருக்கு லோகமெல்லாங்
குணமானவெண்கரந்தை வசியஞ்செய்யும்
நாடேநீகருஞ்செம்பை சகலசித்தி
நயமானவெண்குன்றி மிருகமென்றுஞ்
சூடேநீபொற்கையான் தெய்வசித்தி
சுகமானசென்ணுயுருவி வசியமாமே. 6
ஆமேநீபொன்னூமத்தை பெண்கள்மோகம்
அடவானகஞ்சாதான் ஜனமோகந்தான்
தாமேநீமருலூமத்தை தெய்வமோகம்
தயவானருதுமோகம் முத்தக்காசு
வாமேநீமுரும்பதுவும் ராஜமோகம்
வளமானநன்னாரி செகத்தின்மோகம்
நாமேசேர்ஆல்விழுது ஸ்ரீகள்மோகம்
நயமானவெள்ளூமத்தை சருவமோகமெண்ணே. 7
எண்ணவேகட்டிக்கொடி சிலனஸ்தம்ப
மிகமானநிலம்புரண்டி ஆயுதமாட்டும்

பண்ணமேபாட்டையப்பா மலத்தின்ஸ்தம்பம்
பண்பானநீர்முள்ளி ஜலத்துக்காகும்
நண்ணவேசூரியப்பா சர்வஸ்தம்பம்
நலமானசத்திசா ரணையின்மூலம்
அண்ணவேஆயுதத்தை அடக்கிகொள்ளும்
அப்பனேபோகருட கடாக்ஷந்தானே. 8

தானென்றபூமிசக் கரையின்மூலம்
தயவானசுக்கிலத்தை தளரொட்டாது
கோவென்றபோகருட கடாக்ஷத்தாலே
கொற்றவனேபுலிப்பாணி யானுஞ்சொன்னேன்
நானென்றஆணவத்தை தள்ளுதள்ளு
நற்றவத்தால்பெரியோரை காணுகாணு
பானென்றதம்பனங்க ளெட்டுஞ்சொன்னேன்
பாங்கானசாடினத்தை பணிந்துகேளே. 9

கேளேநீகிணுப்பை முருகமெல்லாம்
கேட்டோடிசாடிக்குங் கிலிதம்பாரு
காளேநீஅறமுறித்தான் பூடுக்கெல்லாந்
தட்டளிந்துசாடிக்குந் தயவாய்ப்பாரு
பாளேநீமாஞ்செவித்தான் நாசஞ்சாகும்
பண்பானசுண்டியப்பா பரிசமாற்றும்

வாளே நீகண்டங்கத்திரி ராஜர்க்காகும்
வளமானதேள்கொடுக்கு விஷத்துக்காமே. 10

ஆமேநீகரந்தையப்பா வியாதிதீரும்
அடவானகொட்டக் கரந்தைமோகமாற்றும்
வாமேகேள்சாவடிந்தா னெட்டுமாச்சு
வளமானவேஷணத்தை சொல்லக்கேளு
நாமேநீகருத்துடைய காவேளைத்தான்
நயப்பாகராஜரைதான் வசியஞ்செய்யுந்
தாமேநீவெள்ளைக்கா வேளைதானப்பா
தயவாகதெய்வத்தின் வேஷணந்தானே. 11

தானென்றகாட்டாமணக்கு பூதவசியந்
தருகுமடாபூனையுளக் காலிகப்பா
கோனென்றபாரிசத்தை வசியஞ்செய்யும்
கொற்றவனேதிருகுகள்ளி சத்துருவசியம்
மானென்றதலைச்சுருளி ஸ்ரீகள்வசியம்
வளமானதன்னிமிட்டான் ராஜவசியம்
சேனென்றசெங்கத்தாரி சகலவசியம்
செயலானவேஷணத்தின் மூலியெட்டே. 12

எட்டானதுடரியப்பா மிருகமெல்லாம்
எழுந்தோடிவருகுமப்பா கண்டுபாரு

பட்டானவுள்ளோட்டி பிறதானோட்டி
பாங்கானபெண்களைத்தான் அழைக்கச்செய்யும்
கெட்டானசிறுமுன்னை தெய்வமப்பா
நிச்சயமாய்வோடிவரும் நிசந்தான்பாரு
உட்டானகுப்பமேனி மூலியப்பா
வுத்தமனேமிருகத்தை அழைக்கும்பாரே. 13

பாரேநீதலைச்சுருளி அரசருக்கு
பாங்கானசிறியாநங்கை பிசாசுக்காகுஞ்
சேரேநீஅழுகுகன்னி சகலமெல்லாஞ்
சீக்கிரத்தில்தானழைக்கும் கண்டுபாரு
வீரேநீஅழைப்புவகை மூலிஎட்டும்
விதமாகவெவ்வேறாய்ப் பிரித்துச்சொன்னேந்
தீரேநீபோகருட கடாக்ஷத்தாலே
திறமாகப்புலிப்பாணி விளம்பினேனே. 14

விளம்பவேகார்த்திகையின் கிழங்குதன்னை
விஷமானமாகுமடா கண்டுபாரு
தளம்பவேகாவியப்பா பிசாசுக்காகுந்
தயவாகவிருஷபந்தான் சொல்லக்கேளு
திளப்பவேசகலமுமா ரணமேசெய்யுங்
கேலமுடன்காஞ்சிரை நாலைமாறே

துளம்பவேஒடுமது மிருகமெல்லாம்
தொல்லுலகில்மரணமடா பின்னும்கேளே. 15

கேளேநீகொடிவேலி கிரிமியல்லோ
கேட்டோடிமாரணமாய்ப் போகும்பாரு
ஆளேநீநஞ்சுடைய புல்தானப்பா
அடைவானசிலவிஷங்கள் மரணமாகும்
கேளேநீமருந்தோன்றி பூதமெல்லாங்
கொடிதானமாரணமே செய்யும்போது
வாளேநீபோகருட கடாக்ஷத்தாலே
வளமாகபுலிப்பாணி பாடினேனே. 16

பாடியேகோழியென்ற அவரையப்பா
பண்பாகதெய்வமெல்லாம் பேதமாகும்
நாடியேகாட்டுசெம் பசளைதானும்
நணுகாமலோகமெல்லாம் பேதம்பேதங்
கூட்டியேவட்டமா துத்திதானுங்
குணமாகஅக்கினியை பேதம்பண்ணி
வாடியேசங்கம்வேர் பூதபேதம்
வளமானமாவிலிங்கந் தெய்வமென்னே. 17

என்னவேநீர்மேல் நெருப்புதானும்
மிதமாகத்தானுந்தா னெட்டுமூலி

அன்னவேமாரணமும் பேதமெட்டு
மடவாகச்சொல்லிவிட்டேன் பின்னுங்கேளு
இன்னமோர்வழியுரைப்பேன் சித்தியாகி
இயல்பாகஇருமனதாய் சிந்திப்பாய்நீ
பன்னவேஅறுபத்து நாலுமூலி
பாடுவித்தேன்போகருட கடாக்ஷந்தானே. 18

தானென்றமசானமதில் நடுசாமத்தில்
தயிரியமாய்ச்சென்றுநீ பூசைசெய்வாய்
வாவென்றருத்திரனார் சக்கரத்தைச்சொல்வேன்
வளமானமுக்கோண வட்டமிட்டு
காவென்றபன்னிரண்டு யிதழ்தான்போடு
கணக்கானயிதழ்தோறும் சூலம்நாட்டு
கோவென்றவானரையில் சொல்லக்கேளு
கொடிதானசிகாரமுட னுகாரந்தானே. 19

தானென்றஅகாரமுடன் சவ்வும்போடு
சார்வானருத்திரனு ருத்திரியுமாச்சி
தேவென்றமசானத்தில் லகிரிமைந்தா
சிமிளெட்டுமுடிவிட்டு திரந்துவைத்து
பாவென்றமுப்பெலியும் பொங்கலிட்டு
படையப்பாவஸ்துமுதல் சோத்திரேடு

ஆனெல் றசெவ்வலரி பூவிநேடு
அர்ச்சித்துதியானமது சொல்லக்கேளே. 20

கேளுநீவடமுகமாய் வெள்ளிநாற்கே
கணிதமுடன் தானிருந்து தியானமேது
சூளேநீ (யங்-யங்) மசானமூர்த்தி
சுகமாகவாவென்று லக்ஷம்ஓது
நாளேநீயிப்படியே செப்புமாகில்
நாயகனே துஷ்டகணம் மனந்தங்காணுங்
கேளேநீவாராம லின்னமொன்று
கொற்றவனேசொல்லுகிறே னறிந்துபாரே. 21

கேளேநீ (அங்-றங்-நங்-சிங்) கென்றேதி
கெணிதமாய்வலக்கரத்தில் மூன்றுதாந்தட்டி
தாளேநீஐந்நூறு வுருவமாக
ஓதிடவேபூதமெல்லாம் பரந்துஓடும்
சூளேபார்ஓடுமடா எதிர்நில்லாது
சுகமாகபாசமுதல் ராக்ஷருமோடும்
நாளேநீயிப்படியே செபித்தபோது
நாயகனேருத்திரன்றன் சித்தியாச்சே. 22

சித்தியநாள் அஷ்டசித்து மாடவென்றுற்
சிமிளெட்டுங்கருத்தோடுத் திறந்துமூடு

வெற்றிபெறதிசையெங்குஞ் சிமிள் தான்வித்தை
வெல்லலாமுனக்கெதிரி யில்லையெங்கும்
சத்தியினாலேயறிநீ வெளியிடாதே
பொல்லாதபாவிகட் கீந்திடாதே
சத்தியமாய்சொல்லுகிறேன் மைந்தாகேளு
சார்வாகபோகருட கடாக்ஷந்தானே. 23

தானென்றநூல்துகைதான் சொல்லக்கேளு
தயவானவயித்தியந்தா னானூறுள்ளே
தேனென்றசோதிடமுங் காலமப்பா
மைந்தனேகொக்கோக பலதிரட்டு
சூரனந்தானென்றசிதம்பரமும் தேவியப்பா
தனதாகசண்முகத்தின் பூசைவாடை
வானென்றமுன்னுலகத்தில் தெண்டபாணி
மன்னவரைப்பூசித்தார் பிரமன்றானே. 24

தானென்றதேவருக்குள் போகநாதன்
தயவினாற்புலிப்பாணி பூசித்தேன்பார்
கோனென்றபோகருமே மகிழ்ந்துமைந்தா
கொற்றவனேகாவணிகள் சிறிதுமீந்தார்
நானென்றஅவருடைய கடாக்ஷத்தாலே
நாமிருந்தோங்கிரிதனிலே யிருந்துவாழ்ந்து

தேனென்றசிமிள்வித்தை இருபத்தைந்தில்
திறமாகப்பாடிவைத்தேன் சித்திமுற்றே. 25

புலிப்பாணி சிமிள்வித்தை-25 முற்றிற்று.

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

சில்லரைக்கோர்வை

முற்றிற்று.
